
டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் வாழ்க்கை வரலாறு



ஆங்கில மூலம் : தனஞ்சய் கீர்

தமிழாக்கம் : க. முகிலன்

...ரியப் பொதுவுடைமைக் கட்சி

டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் வாழ்க்கை வரலாறு



டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்

தோற்றம்: 14-4-1891 மறைவு: 6-12-1956

டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் வாழ்க்கை வரலாறு

ஆங்கில மூலம் : தனஞ்சய் கீர்

தமிழாக்கம் : க. முகிலன்

வெளியீடு
மார்க்சிய பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி
சென்னை 5.

நூல் பற்றிய விவரம்

நூலின் பெயர் : டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் வாழ்க்கை வரலாறு

ஆசிரியர் : தனஞ்சய் கீர்

தமிழாக்கம் : க. முகிலன்

வெளியீட்டு நாள் : 12.6.1992

பொருள் : வாழ்க்கை வரலாறு

பதிப்பு : முதற்பதிப்பு

பதிப்புரிமை : மார்க்சிய பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி

★

விலை : ரூ. 240

★

பக்கங்கள் : 794 + 118 = 912

படிகள் : 1200

★

வெளியீடு : மார்க்சிய பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி
5, லால் பேகம் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை 600 005.
(தொலைபேசி 84 31 62)

ஒளி அச்சுக்கோவை : விக்னேஷ் பிரிண்ட்ஸ்,
சென்னை 600 035.

அச்சிட்டோர் : மனோ பிரிண்டர்ஸ்,
சென்னை 600 005.

வெளியீட்டாளர் உரை

பகலவன் மறையாத பெரும்பரப்பைத் தன் ஆளுகையின் கீழ் வைத்திருந்தது பிரிட்டிஷ் பேரரசு — 1930இல். அப்பேரரசில் பெரிய நாடு இந்தியா.

இந்தியாவின் அரசியல் சிக்கல் குறித்து, 1930-31இல், இலண்டனில் முதலாவது வட்டமேசை மாநாடு நடந்தது. தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்களின் தன்னிகரற்ற தலைவராக அம்மாநாட்டில் பங்கேற்றார் அம்பேத்கர். அதில் பங்கேற்ற பிரிட்டிஷார் — இந்தியர் உள்ளிட்ட 75 தலைவர்களில் முறையான உயர்கல்வி பெற்றிருந்த ஒரே ஒருவர் அம்பேத்கர் அவர்களே. அவர் ஓர் அறிவுச் சுரங்கம்!

''இந்தியாவின் நலனா? அம்பேத்கரின் நலனா?'' எனக் கேட்போருக்கு, ''இந்தியரின் நலனே என் மூச்சு'' என அவர் அறைந்தார். ஆனால், ''இந்தியாவின் நலன் பெரிதா?'', ''தீண்டப்படாத வகுப்பு மக்களின் நலன் பெரிதா?'' எனக் கேட்டபோது, ''தீண்டப்படாத வகுப்பு மக்களின் நலனே பெரிது'' என ஓங்கி உரைத்தார் அவர்.

இத்தகைய மாமேதை டாக்டர் அம்பேத்கரின் நூற்றாண்டு 14.4.1990இல் தொடங்கியது. அன்று தொடங்கி 1990 சூன் 3 வரையில், தமிழகத்தில் 47 ஊர்களில் அம்பேத்கர் நூற்றாண்டு விழாவை நடத்தியது மார்க்சிய பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி.

மா.பெ.பொ.க. அத்துடன் அமைதி கொள்ளாமல், அம்பேத்கர் எழுதியுள்ள பல நூல்களில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து நூற்றாண்டு நிறைவு விழா வெளியீடாக வெளியிடத் திட்டமிட்டது.

ஆயினும் அம்பேத்கர் அவர்களின் முழுமையான வரலாறு தமிழில் இன்றுவரை வெளிவரவில்லை என்பதால், முதன்மையாக அவருடைய வரலாற்றை வெளியிடுவதே சிறந்த பணியாகும் என்று மா.பெ.பொ.க. துணிந்தது.

அம்பேத்கரின் வரலாறு அவர் வாழ்ந்த காலத்தில் 1954இலேயே ஆங்கிலத்தில் மராட்டிய அறிஞர் தனஞ்சய் கீர் அவர்களால் எழுதப்பட்டு வெளியிடப்பட்டது. இவ்வரலாற்றாசிரியர், டாக்டர் அம்பேத்கர் அவர்களிடம், இந்நூலை எழுதி வெளியிடுவதற்கான

இன்றியமையாத அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் நேரி லேயே பெற்று, சிறந்த விரிவானதொன்றாக எழுதியுள்ளமையைக் குறித்துள்ளார். எனவே இதையே தமிழாக்கம் செய்து வெளியிட மா.பெ.பொ.க. முன்வந்தது.

இருபதாம் நூற்றாண்டில் இந்தியாவில் விளங்கிய பெருந்தலைவர்களில் குறிப்பிடத்தக்க கற்றறிந்த மேதையாவார் அம்பேத்கர். அன்னாரின் மேதைத் தன்மையையும், பல்துறை அறிவாண்மையையும், அச்சமற்ற அறிவு நேர்மையையும், போராட்ட வாழ்வையும், ஈட்டிய பெருஞ்சாதனைகளையும் நிரல்படக் கோத்து விளக்கியுள்ளார் தனஞ்சய் கீர். இத்தகைய சீரிய வரலாற்றை உருவாக்கித் தந்த தனஞ்சய் கீர் அவர்கட்கும், அவர்தம் குடும்பத்தார்க்கும், ஆங்கிலத்தில் இந் நூலை வெளியிட்டுள்ள பம்பாய் பாப்புலர் பிரகாஷன் நிறுவனத்தார்க்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்நூலை மொழிபெயர்த்திடுவதற்கு உரிய ஆலோசனைகளை வழங்கி, வெளியீட்டு விழாவில் நூலை வெளியிடவும் முன்வந்த அம்பேத்கர் நூல்வரிசைகளின் தலைமைப் பதிப்பாசிரியர் வசந்த் மூன் அவர்களுக்கும், இந்நூல் முழுவதையும் தமிழாக்கம் செய்தளித்த சோளிங்கபுரம் க. முகிலன் அவர்களுக்கும், இந்நூலை அச்சேற்றிட எல்லா வகையிலும் துணைநின்ற மார்க்சிய பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சித் தோழர்கள், அம்பேத்கர் அன்பர்கள், அம்பேத்கர் இயக்கங்களைச் சார்ந்த நண்பர்கள், பெரியார் தொண்டர்கள் மற்றும் படிகளைத் திருத்தி உதவிய தோழர்கள் வாலாசா வல்லவன், முனைவர் அரண முறுவல், எஸ். இராமச்சந்திரன், க. நாகராசன், ஆ. வெற்றி ஆகியோர்க்கும் மா.பெ.பொ.க. மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறது.

மொழிபெயர்ப்புப் பணி எவர்க்கும் துன்பமானது. இத்தகைய துன்பமான பணியைத் தம் சொந்த அலுவல் அழுத்தத்திற்கிடையிலும், மூச்சமுத்த நோய்த் துன்பத்திற்கு ஊடேயும் காலம் நேரம் கருதாது முயன்று, 22.11.90 முதல் 1992 மே முடிய பல நாள்கள் உழைத்து, படிப்போர் நெஞ்சைக் கவரும் தன்மையில் தமிழாக்கம் செய்து ''டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் வாழ்க்கை வரலாறு'' நூலைத் தமிழகத்துக்கு வழங்கியுள்ள க. முகிலன் அவர்களின் பணி மலைப்பை ஊட்டும் அதே நேரத்தில் தமிழர் அனைவர்க்கும் மகிழ்ச்சியை அளிக்கும் மாபெருந் தொண்டுமாகும். தலைவர்களின் வரலாறுகள் பலவற்றை முகிலன் எழுதிட முடியும் என்பதை, அம்பேத்கர் வரலாற்றின் இந்த மொழியாக்கம் மூலம் இவர் நிறுவி

யுள்ளார். இச்சாதனைக்கு உரியவரான க. முகிலன் அவர்களை மனமார மா.பெ.பொ.க. பாராட்டுகிறது.

இம்மொழிபெயர்ப்பில் எத்தகைய குறைபாடு காணப்பட்டாலும் தமிழாக்கம் செய்த க. முகிலனும், இத்தமிழாக்கத்தை மேற்பார்வை செய்த நானும், இந்நூலை வெளியிட்ட மா.பெ.பொ.கட்சியினரும் பொறுப்பாவோம். இதிலுள்ள குறைகளைச் சுட்டிக்காட்டினால், மனமகிழ்ச்சியுடன் ஏற்று, வருங்காலத்தில் திருத்திக்கொள்ள உறுதி கூறுகிறோம்.

இந்நூலினை லேசர் முறையில் அச்சுக்கோத்துத் தந்த சென்னை விக்னேஷ் லேசர் பிரிண்ட்ஸ் நிறுவனத்தார், எதிர்ப்படம் எடுத்துத் தந்த திருவல்லிக்கேணி சுந்தர் பிராசஸ் நிறுவனத்தார், மிகக் குறுகிய காலத்தில் அச்சிட்டுத் தந்த சென்னை திருவல்லிக்கேணி மனோ பிரிண்டர்ஸ் ஆஃப்செட் அச்சக உரிமையாளர் ஏ. மனோகர், குறித்த காலத்தில் நூல் கட்டடப் பணியைச் செய்து உதவிய திருவல்லிக் கேணி செந்தில் பைண்டிங் ஒர்க்ஸ் ஆகியோர்க்கும் மற்றும் பிறவகை களில் உதவி நல்கிய அனைவர்க்கும் மார்க்சிய பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறேன்.

சென்னை
6.6.1992

வே. ஆனைமுத்து
அமைப்புச் செயலாளர்
மார்க்சிய பெரியாரியப்
பொதுவுடைமைக் கட்சி

மொழிபெயர்ப்பாளர் குறிப்பு

அந்நிய ஆட்சியிடமிருந்து அரசியல் விடுதலை பெறுவது என்பது மட்டுமே மக்களின் அனைத்து அடிமைத்தளைகளையும் அறுத்தெறிந்துவிடாது; மக்களின் முழுமையான விடுதலைக்குச் சமூக விடுதலையும் முதன்மையாக வேண்டப்படுவதாகும்; காலங் காலமாக ஒடுக்கப்பட்டு நசுக்கப்பட்டுக் கிடக்கும் கோடிக்கணக்கான மக்களுக்கு முதலில் தேவைப்படுவது சமூக விடுதலையே என்று இந்திய நாட்டின் அகச்சூழலை நன்கறிந்து இதற்காக மகாராட்டிரத் தில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் மக்கள் இயக்கம் அமைத்துத் தன் வாழ்நாள் முழுவதும் தீரமுடன் போராடியவர் ஜோதிராவ் புலே *(1827-1890)*.

இருபதாம் நூற்றாண்டில் இந்தியத் துணைக்கண்டத்தில் சமூக நீதியையும் சமூக விடுதலையையும் தங்கள் இலட்சியமாகக் கொண்டு பெருவாழ்வு வாழ்ந்தவர்கள் பெரியார் ஈ.வெ. இராமசாமி யும் டாக்டர் பி.ஆர். அம்பேத்கரும் ஆவர். மனிதனின் சுதந்திர உணர்ச்சிக்கும், சமஉரிமையுடைய செயல்பாட்டிற்கும், சனநாயக நெறிமுறைக்கும் எதிராகத் தடையாக இருப்பவற்றை இவ்விரு தலைவர்களும் தம் இறுதிமூச்சுவரை ஈவிரக்கமின்றிக் கடுமையாகத் தாக்கினர். அதனால்தான் பெரியார் ஈ.வெ. இராமசாமியையும், டாக்டர் பி.ஆர். அம்பேத்கரையும் இந்துச் சனாதனிகளும், அரசியலில் பன்னெடுங்காலமாக மேலாதிக்கம் பெற்றுள்ள மேல் சாதியினரும், வகுப்புத்துவேஷிகள் என்றும் பிரிட்டிஷ் ஆட்சியின் கையாட்கள் என்றும் இன்றும் வசைபாடுகின்றனர்.

இந்திய நாட்டில் அய்ந்தில் ஒரு பகுதியினராக உள்ள தீண்டப்படாத வகுப்பு மக்களின் விடுதலைக்காகவும் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காகவும் நாற்பத்தைந்து ஆண்டுகள் அல்லும் பகலும் அயராது பாடுபட்ட, தீரமுடன் போராடிய, சாதனைகள் பல புரிந்த, மக்கள் தலைவராக விளங்கிய டாக்டர்.பி.ஆர். அம் பேத்கரின் முழுமையான வாழ்க்கை வரலாற்றைத் தமிழ் மக்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதே இந்நூலை வெளியிடுவதன் விழுமிய நோக்கமாகும்.

1954ஆம் ஆண்டு அக்டோபர் 28ஆம் நாள் பம்பாய்ப் புரந்தரர் அரங்கில் டாக்டர் பி.ஆர். அம்பேத்கருக்கு 60ஆவது

பிறந்த நாள் விழா நடத்தப்பட்டது. இவ்விழாவில் கலந்துகொண்டு அம்பேத்கர் உரையாற்றியபோது, 'என் வாழ்க்கையின் பழைய நினைவுகளையெல்லாம் தொகுத்து என் வாழ்க்கை வரலாற்றை எழுத வேண்டும் என்று எண்ணுகின்றேன்; முழுமையான தன்வரலாற்று நூலாக அது அமையாவிட்டாலும், குறைந்தது என் குழந்தைப் பருவத்து வாழ்க்கையையேனும் கட்டாயம் எழுத வேண்டும் என்று விரும்புகின்றேன். இன்று ஓர் உயர்நிலையை நான் அடைந்திருப்பதற்குக் காரணம் நான் கருவிலேயே திருவுடையவனாகப் பிறந்தேன் என்பதன்று; என்னுடைய வாழ்க்கையில் என்னென்ன மாற்றங்கள் ஏற்பட்டன? இவை எவ்வாறு ஏற்பட்டன? என்று உங்களுக்குக் கூற விரும்புகின்றேன்' என்று கூறினார்.

ஆனால் அதன்பின் இரண்டாண்டுகள் மட்டுமே அம்பேத்கர் வாழ்ந்ததால், தன்வரலாற்றை எழுதும் பணியை அம்பேத்கரால் தொடங்க இயலாது போயிற்று. ஆயினும் தன்வரலாற்றை எழுத வேண்டும் என்று அம்பேத்கர் கூறிய அந்த ஆண்டிலேயே, அய்ந்து மாதங்களுக்கு முன்னரே மராட்டியத்தைச் சேர்ந்த தனஞ்சய் கீர் என்பவரால் ஆங்கிலத்தில் எழுதி வெளியிடப்பட்டது இப்போது தமிழாக்கம் செய்யப்பட்டுள்ள இந்நூல்.

இருபதாம் நூற்றாண்டில் இந்தியத் துணைக் கண்டத்தில் பெருந்தலைவர்கள் பலர் வாழ்ந்தனர். அவர்களுள் முன்னணித் தலைவராக வாழ்ந்த அம்பேத்கரின் பெருவாழ்வோ ஒரு தன்மையில் மற்ற எல்லாத் தலைவர்களின் வாழ்வினையும் விஞ்சி நிற்கிறது. புழுப்பூச்சியாய், புன்மைத்தேரையாய், நாயினும் கீழாய்ச் சமூகத்தில் நடத்தப்பட்ட தீண்டப்படாத ஒரு வகுப்பில் தோன்றி உலகில் உள்ள எந்தவொரு தலைவருக்கும் சரிநிகர் சமானமாகத் தன் கடும் உழைப்பால், ஒப்பரிய ஆற்றலால் உயர்நிலை எய்தியவர் அம்பேத்கர்.

1920ஆம் ஆண்டு முதல் 1956 டிசம்பர் 6ஆம் நாள் தன் இறுதிமூச்சு அடங்கும்வரை இந்திய நாட்டில் சமூகம், அரசியல் தொடர்பாக நடந்த நிகழ்ச்சிகள், எடுக்கப்பட்ட முடிவுகள் முதலானவற்றின் பேரில் தன் முத்திரையை அழுத்தமாகப் பதித்த வரலாற்று நாயகர் அம்பேத்கர்.

சுயமரியாதைச் சுடரொளியாக, தன்னம்பிக்கையின் ஊற்றாக, அஞ்சாமையின் உறைவிடமாக, உயரிய கல்வியாளராக, சிறந்த பொருளியல் வல்லுநராக, ஆற்றல் மிக்க எழுத்தாளராக, பேராசிரியராக, வழக்கறிஞராக, மக்கள் தலைவராக, சட்ட மேதையாக,

சமத்துவவாதியாக, ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலை வீரராக வாழ்ந்த டாக்டர் பி.ஆர். அம்பேத்கரின் வாழ்க்கை வரலாற்றை ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம் செய்யும் பொறுப்பை எனக்கு நல்கிய மார்க்சிய பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்கு என் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மராட்டிய எழுத்தாளரான காண்டேகரின் கதைகளை என் கல்லூரிப் பருவத்தில் பலதடவை படித்து மகிழ்ந்திருக்கிறேன். பலமுறை விரும்பிப் படிக்கும் அளவிற்குக் காண்டேகரின் கதைகளை மராத்தி மூலத்திலிருந்து கா.ஸ்ரீ.ஸ்ரீ அவர்கள் தமிழாக்கித் தந்துள்ளார். 'மொழிபெயர்ப்பு என்றால் அது கா.ஸ்ரீ.ஸ்ரீயின் மொழிபெயர்ப்புபோல் இருக்க வேண்டும்' என்று எண்ணுவேன். இந்நூலை ஆங்கில மூலத்திலிருந்து என்னால் இயன்ற அளவில் தமிழில் நீரோட்டமான நடையில் மொழிபெயர்த்திட முயன்றுள் ளேன்.

தோழர் வே. ஆனைமுத்து அவர்கள் பல்வேறுபட்ட பணிகளுக்கு இடையிலும் பல நாட்களை ஒதுக்கித் தம் ஒப்பரிய உழைப்பை ஈந்து, என்னால் தமிழாக்கம் செய்யப்பட்ட இந்நூலின் கையெழுத்துப் படிகளை ஆங்கில மூலத்துடன் ஒப்பிட்டுச் செப்பம் செய்து செழுமையூட்டியமைக்கும், இந்நூல் தமிழாக்கம் செய்யப் படுவதற்கு மற்ற எல்லா வகையிலும் வழிகாட்டியமைக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மொழிநடை சற்றே தடைபடினும் பரவாயில்லை; ஆனால் ஆங்கில மூலத்தின் எந்தவொரு சொல்லின் பொருளும் சிறிதும் சிதையாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் இத்தமிழாக்கம் அமைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்திட விரும்புகின்றேன். ஆயினும் ஆங்கில மூலத்தில் அம்பேத்கர் கூறியுள்ளதாக, அயற்கூற்றாகச் சொல்லப்பட்டுள் ளவை சில இடங்களில் நேர்க்கூற்றாகத் தமிழாக்கத்தில் மாற்றப்பட் டுள்ளன — கருத்தின் எழுச்சிக்காகவும், தடைபடா மொழி நடைக்காகவும்!

சில அத்தியாயங்களின் தலைப்புகளும் அவற்றின் உள்ளடக்க மாக விளங்கும் செய்திகளின் அடிப்படையில் தமிழாக்கத்தில் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வரலாற்றின் ஆங்கில மூலத்தில் இடம் பெற்றிராத அம்பேத்கரின் வாழ்க்கைக் குறிப்புகளும் நிழற்படங்களும் இந்

நூலில் இணைக்கப்பட்டுள்ளன. வாழ்க்கைக் குறிப்பில் அம்பேத்கரின் வாழ்வோடும் கொள்கைகளோடும் தொடர்புடைய நிகழ்ச்சிகளும் இடம் பெற்றுள்ளன.

தோழர் ஆனைமுத்து அவர்களால் மேற்பார்வை செய்யப்பட்ட கையெழுத்துப் படிகளை நகல் எடுத்திட உதவிய மா. ஆண்டாள், வெ. சுப்பிரமணி, வ. சுகுணா ஆகியோர்க்கும், இவ்வாறு படியெடுக்கப்பட்டவற்றைப் படித்துச் சரிபார்த்த தோழர் சோ.சு. யுவராசனுக்கும், கடந்த இருபத்துநான்கு ஆண்டுகளாக நான் மேற்கொள்ளும் எல்லா முயற்சிகளிலும் எனக்கு ஊக்கமளித்து உற்ற துணையாக நிற்கும் என் வாழ்க்கைத் துணைவி அ. சரசுவதிக்கும் அச்சேறுமுன் மெய்ப்புகளைத் திருத்தி உதவிய தோழர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சோளிங்கபுரம் — க. முகிலன்
6.6.1992

தனஞ்சய் கீர் எழுதிய முதற்பதிப்பின் முன்னுரை

கற்றறிந்த அறிஞராகவும் இந்தியாவின் சிறந்த அரசியல் மேதையாகவும், சிறந்த தலைவராகவும், விடுதலை வீரராகவும், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் தலைமைச் சிற்பியாகவும் விளங்கிய டாக்டர் அம்பேத்கரின் முழுமையான - இதுநாள் வரையிலான நிகழ்ச்சிகளை உள்ளடக்கிய, அதிகாரப்பூர்வமான முதலாவது வாழ்க்கை வரலாற்று நூலை எழுதியிருப்பதில் பெருமகிழ்வும் பெருமிதமும் கொள்கின்றேன். அரசியல் சுதந்தி ரத்தை அடைந்துள்ள இந்தியாவைச் சமூகத் தளத்திலும் பொருளா தார நிலையிலும் சனநாயகம் உடையதாக ஆக்க வேண்டியது இப்போதுள்ள இன்றியமையாத தேவையாகும். மற்ற தலைவர் களின் வாழ்க்கையைவிட டாக்டர் அம்பேத்கரின் வாழ்வுதான் இக்குறிக்கோளை உள்ளடக்கியதாகத் திகழ்கிறது. ஒப்பரிய தியாகங் களும் எண்ணற்ற போராட்டங்களும் உயரிய மேதைமையும் கொண்டிலங்கிய அம்பேத்கருடைய வாழ்வின் பெரும்பகுதி பன்னெடுங்காலமாக அடிமைப்பட்டுக் கிடந்த ஆறு கோடி மக்களான தீண்டப்படாத வகுப்பினரின் விடுதலைக்காகவே அர்ப்பணிக்கப்பட்டது; ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வில் ஒரு புதிய அத்தியாயத்தை எழுதியது. இந்தியாவில் சமூகச் சனநாயகத் தையும் பொருளாதாரச் சனநாயகத்தையும் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகத் தீரமுடன் போராடிய தலைவரின் பெருமைமிகு வாழ்வு இது!

பெருஞ்சிறப்பு வாய்ந்த அம்பேத்கரின் வாழ்க்கை வரலாற்றை ஆய்வு செய்யும் நூல் இது. அவருடைய கருத்துகள் செயல்கள் பற்றியும், அவை எத்தகைய சூழலில் தோன்றின என்பது குறித்தும் திட்டவட்டமாகத் தெளிவுபடுத்திட நான் இந்நூலில் பெரிதும் முயன்றுள்ளேன். உண்மையில் அவர் எவ்வாறு வாழ்ந்தாரோ அவ்வாறான தன்மையிலேயே அவருடைய வரலாற்றை அமைத்து எழுதியுள்ளேன்.

இந்தியாவில் உள்ள ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களின் விதியைத் தீர்மானிப்பவராக - மீட்பராக - அம்பேத்கர் திகழ்ந்தார். எனவே இந்தியர் ஒவ்வொருவரும் அம்பேத்கரின் வாழ்வை,

பண்புநலன்களை, குறிக்கோள்களை அறிந்துகொள்ள வேண்டும். அவருடைய பகைவர்கள் அவரைப்பற்றித் திரித்துக் கூறுவது போலவோ அல்லது அவரைப் பக்தியுடன் பின்பற்றுவோர் அவரைத் தெய்வம்போல் உயர்த்திப் போற்றுவதுபோலவோ அல்லாமல் அவர் எத்தன்மையினராக வாழ்ந்தாரோ அதே தன்மையில் அவரை அறிந்துகொள்ள வேண்டும். இந்நூலைப் படிப்பவர்கள் அம்பேத்கருடைய சிந்தனையின் வளர்ச்சிப் போக்கினை அறிந்துகொள்வதற்காகவும், இந்நாட்டின் மக்கள்திரளில் ஒரு பகுதியினரான தீண்டப்படாத வகுப்பினரை இழிவுபடுத்திய பழைய கருத்துக்களையும் சமூக மதிப்புகளையும் வெறுப்புடனும் கடுமையாகவும் அம்பேத்கர் ஏன் எதிர்த்தார் என்பதைப் புரிந்து கொள்வதற்காகவும், அவற்றிற்கான நிகழ்ச்சிகளையும் உண்மை களையும் இந்நூலில் உரிய இடங்களில் சரியான தன்மையில் சுட்டிக்காட்டி எழுதியுள்ளேன். அவர் காலத்தில் வாழ்ந்த - அவருடன் முரண்பாடு கொண்டிருந்த பெருந்தலைவர்களின் கருத்துக்களையும் இந்நூலில் பொருத்திக் காட்டியுள்ளேன். இவ்வாறு நான் எழுதியுள்ளதில் அவர்களுடைய பெருஞ்சிறப்பைக் குறைத் துக் காட்ட வேண்டுமென்று கிஞ்சிற்றும் கருதியதில்லை. ஒவ்வொரு பெருந்தலைவரிடமும் இயல்பாய்ப் படிந்துவிட்ட வழுவும், குறைபாடும் இருக்கின்றன. ஒருவர் குறிப்பிட்ட துறையில் ஈடுபட்டுச் செயலாற்றும்போது - போராடும்போது, அத்துறையில் உள்ள பிற தலைவர்களுடன் மோத வேண்டிய நிலை ஏற்பட்டு விடுகிறது.

மற்றொரு கண்ணோட்டத்தில் இந்த வாழ்க்கை வரலாறு இன்றியமையாததாக இலங்குகிறது. சிந்தனையை ஈர்க்கின்ற, அறியும் அவாவைத் தூண்டுகின்ற தன்மையில் அமைந்துள்ள அம்பேத்கரின் வாழ்க்கை, மனிதரிடையே சுயமரியாதையும் சமூகத்தில் மனிதர்களுக்கிடையேயான உறவில் சமத்துவமும் தழைத்தோங்கிட வேண்டுமென்று விரும்புகின்ற ஒவ்வொருவரும் கற்க வேண்டிய உயர்ந்ததொரு பாடநூல்போல் விளங்குகிறது. மேலும் ஒடுக்கி அடக்கப்படுகின்ற, எத்தகைய உதவியும் கிடைக்காத, மிக மோசமான சூழ்நிலையிலும் ஒருவர் தன்னுடைய வெல்ல முடியாத ஆள்வினையுடைமையாலும், பெரும் தியாகத்தா லும் எந்த அளவிற்குச் சாதனைகளைப் படைக்க முடியும் என்பதற்கு எழுச்சிமிக்க எடுத்துக்காட்டான வாழ்வாக அம்பேத் கரின் வாழ்க்கை விளங்குகிறது. மற்றவர்களின் உதவியையோ புரத்தலையோ சார்ந்திருப்பதைவிட ஒருவர் தன்னுடைய சொந்த

முயற்சிகளை மட்டுமே நம்பிச் செயல்பட வேண்டும் என்பதற்கும் அம்பேத்கரின் வாழ்க்கை ஒரு பாடமாக இருக்கிறது. தணியாத அறிவு வேட்கை, வியப்பூட்டும் கடும் உழைப்பு, பின்வாங்குதலறியாக் குறிக்கோள் காரணமாகவே - சமூகத்தால் ஒதுக்கிவைக்கப்பட்ட, இழிவாகக் கருதப்பட்ட, தீண்டப்படாத வகுப்பில் தோன்றிய அம்பேத்கர் புகழின் உச்சிக்குச் சென்றார். வெறுத்து ஒதுக்கப்பட்ட சமூகத்தில் பிறந்த அவர் இந்நாட்டிற்கே சட்டத்தை வரைந்தளிக்கும் நிலைக்கு உயர்ந்தார். நசுக்கப்பட்டுக் கிடந்த தீண்டப்படாத வகுப்பு மக்களைச் சமூகத்தில் மற்ற மனிதர்களுக்குச் சமமானவர்களாக ஆக்குவதற்காக அம்பேத்கர் தீரமுடன் நடத்திய போராட்டங்கள் இந்திய நாட்டின் வரலாற்றிலும், மானுட விடுதலையின் வரலாற்றிலும் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட்ட ஓர் அத்தியாயமாகத் திகழும்.

டாக்டர் அம்பேத்கர் எனக்கு அளித்த பேட்டிகளுக்காகவும், சில நிகழ்ச்சிகள்பற்றிய என் அய்யங்களைத் தெளிவுபடுத்தியமைக்காகவும் அன்னாருக்கு நான் மிகுந்த நன்றிக்கடப்பாடு உடையவனாக உள்ளேன். கையெழுத்துப் படிகளையும் அச்சு மெய்ப்புகளையும் அன்புடன் படித்துத் திருத்திய என் நண்பர்களுக்கும், இந்நூலின் உருவாக்கத்தில் ஒவ்வொரு கட்டத்திலும் என்னை ஊக்குவித்த, என் வாழ்வின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டிருப்போர்க்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நூலை எழுதுவதற்கான ஆதாரங்களை எனக்கு அளித்தவர்களுக்கு என் நன்றியை உரித்தாக்குகின்றேன். இந்நூலில் ஆதாரமாக எடுத்தாளப்பட்டுள்ள நூல்களை எழுதிய ஆசிரியர்களுக்கும், பத்திரிக்கை ஆசிரியர்களுக்கும் அவற்றின் வெளியீட்டாளர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்நூலை உரிய காலத்தில் அழகிய முறையில் அச்சிட்டுக் கொடுத்த இந்தியா பிரிண்டிங் ஒர்க்ஸ் நிறுவனத்தாருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தனஞ்சய் கீர்

மாகிம், பம்பாய்
மே 16, 1954.

தனஞ்சய் கீர் எழுதிய மூன்றாம் பதிப்பின் முன்னுரை

டாக்டர். பி.ஆர். அம்பேத்கர் அவர்களின் முழுமையான வாழ்க்கை வரலாற்று நூலின் மூன்றாம் பதிப்பை வெளியிடுவதில் நான் பேருவகை அடைகிறேன். இந்த வாழ்க்கை வரலாற்று நூல் அம்பேத்கர் அவர்களுக்கு என்றும் அழியாத நினைவுச்சின்னமாக விளங்கும் என்ற பெயரைப் பெற்றுள்ளது. முன்னணியில் உள்ள இந்திய மற்றும் அயல்நாட்டுப் பத்திரிக்கைகளும், சிறந்த அறிஞர் களும் இந்த வாழ்க்கை வரலாற்று நூலின் முதல் பதிப்பைப் பாராட்டி வரவேற்றுள்ளனர்.

அதனால் இந்நூலை இன்றுவரையில் நடந்துள்ள நிகழ்ச்சிகளை யும் உள்ளடக்கியதாக ஆக்கிட விரும்பினேன். வரலாற்றின் நிகழ்வுப் போக்கில் நடந்த புதிய உண்மைகளையும் புதிய செய்திகளையும் பொருத்தமான இடங்களில் சேர்த்துள்ளேன். புதியதாக இணைக்கப்பட்டுள்ள செய்திகளில் - மராத்தி சமயப் புலவர்களாகவும் துறவிகளாகவும் இருந்தவர்கள் ஆற்றிய தொண்டு களும் அவர்களின் குறிக்கோள்கள் குறித்து டாக்டர் அம்பேத்கர் கொண்டிருந்த கருத்துகளும், அரசியலமைப்புச் சட்டத்தின் முக்கிய நோக்கங்கள்பற்றிய அம்பேத்கரின் எண்ணங்களும், அவருடைய மகன் குழந்தையாக இருந்தபோதே இறந்துவிட்டதால் அம்பேத்கர் அடைந்த ஆற்றொணாத் துயர நிகழ்ச்சியும் இடம் பெற்றுள்ளன.

இந்நூலின் முதற் பதிப்பிற்குச் சில செய்திகளை எனக்கு அளித்து உதவிய எஸ்.என். சிவதார்க்கருக்கும், சங்கரராவ் வத்வால் கருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இரண்டா வது பதிப்பிற்குச் சில செய்திகளைக் கொடுத்து உதவியமைக்காக வசந்தராவ் சித்ரே, நவல் பத்தேனா, எஸ்.எஸ். ரீஜ், என்.சி. ராட்டு ஆகியோர்க்கும் நான் நன்றிக் கடப்பாடுடையேன். திட்டவட்டமான இந்த வரலாற்று நூலை நான் வெளியிடுவதற்கு ஒப்பரிய வாய்ப்பினை நல்கிய வாசகர்களுக்கும், விமர்சகர்களுக்கும், வெளி யீட்டாளர்களுக்கும் என் நன்றியை உரித்தாக்குகின்றேன். என் நூல்கள்பால் ஆர்வம் காட்டிவரும் நூல் வெளியீட்டாளர் களுக்கு என் நன்றி.

தனஞ்சய் கீர்

பகேஸ்வர் பவன்,
திலிப் குப்தா சாலை,
மகீம், பம்பாய் 16.
மார்ச்சு 27, 1971.

BHIMRAO R. AMBEDKAR

DELHI 24th Feb. 1953

My dear Jadhav,

It is a long time ago that I got your letter. It has not been possible for me to reply to your earlier. In the first place I have been unwell. Dr. Malvankar had to be called here. He is still here attending to me.

I am never affected by the upsets & reverses of life. We as children always had complaints about the various wants we suffered from. But my father always used to tell us my dear boys you have at least a room to sleep in. But look at those who are sleeping on the roads without cover. If you look at them you will find yourselves happy. I have never forgotten his advice and that is why I am happy in all circumstances good or bad. You too can be happy if you cultivate this mental frame.

Most people are after carnal joy & engaged passionately in the satisfaction of bodily appetites. But there is such a thing as spiritual joy which comes as a result of good & selfless thoughts and good & selfless deeds. One may not have carnal joy but one can always have spiritual joy. I am happy because of it. Again as the Buddha has said —

आरोग्य परमा लाभा सन्तुट्ठी परमं धनं
विस्सास परमा ञाती निब्बाण परमं सुखं

The underlined portion is the most important. संतोष is परमं धनं. He who has no संतोष is always unhappy.

I thought of giving you my readings which I know most people do not like and that is because they have no religion and do not like it. I am glad I have been brought up in a different way by my father.

I hope you are keeping well.

Yours Sincerely

B.R.A.



(By courtesy of Mr. Vijay Surwade, Bombay).

அம்பேத்கர் ஜதாவுக்குத் தன் கைப்பட எழுதிய கடிதத்தின் நகல்

பொருளடக்கம்

வரிசை எண்	தலைப்பு	பக்கம்
	வெளியீட்டாளர் உரை	V
	மொழிபெயர்ப்பாளர் குறிப்பு	IX
	தனஞ்சய் கீர் முன்னுரை	XIII
	நிழற்படங்கள்	XVII
1.	2500 ஆண்டுகளாக	1
2.	இளமைப் பருவம்	11
3.	அயல் நாடுகளில் உயர் கல்வி	34
4.	தலைவராக உருவாதல்	70
5.	அடிமைத்தனத்திற்கு எதிராக	95
6.	தீண்டப்படாதார் விடுதலைப்போர்	124
7.	விடிவெள்ளி	152
8.	களப்பணிகள்	176
9.	உலக அறிஞர்களின் பார்வையில்	195
10.	காந்தியுடன் கொள்கை மோதல்	234
11.	பூனா ஒப்பந்தம்	279
12.	அரசியல் உரிமை முழக்கம்	314
13.	வைதிகத்தின் மேல் விழுந்த பேரிடி	353
14.	சமூக விடுதலைக்கான தீர்வு	388
15.	சுதந்திரத் தொழிற்கட்சி தொடக்கம்	416
16.	தொழிலாளர் தலைவர்	430
17.	கூட்டாட்சிக் கோட்பாடும் பாக்கிஸ்தான் பிரிவினையும்	466

18. உன்னதநிலைக்கு உயர்ந்தார் 497

19. தொழிலாளர் நல அமைச்சர் 521

20. அரசியலமைப்பு அவையில் ஆற்றிய அரும்பணி 561

21. அரசியலமைப்பின் தந்தை 584

22. பௌத்தத்தை நோக்கி... 621

23. அமைச்சர் பதவியைத் துறந்தார் 634

24. முதுமையில் 686

25. பௌத்த மறுமலர்ச்சி 721

26. இறுதிப்பயணம் 762

அடிக்குறிப்புகள் 795

வாழ்க்கைக் குறிப்புகள் 803

அம்பேத்கர் நூல்கள் 845

பெயர்க் குறிப்பு அகராதி 849

2500 ஆண்டுகளாக...

இந்தியாவில் இந்துத் தாழ்த்தப்பட்ட சாதி ஒன்றில் ஏழ்மைக் குடும்பத்தில் அம்பேத்கர் பிறந்தார். தீண்டப்படாதவர்களுள் வரையறுக்கப்பட்ட பல பிரிவுகள் உள்ளன. இந்துச் சமூக அமைப்பில் கடைநிலை மக்கள் இவர்களே. பல நூற்றாண்டுகளாகச் சாதி இந்துக்கள் இவர்களைத் தீண்டப்படாதவர்களாக ஒதுக்கி வைத்துள்ளனர். 1950இல் இந்திய அரசியலமைப்புச் சட்டம் தீண்டாமையை ஒழிப்பதற்கு வழிவகை செய்வதற்கு முன்னர்வரை 'தீண்டப்படாதவர்', 'அணுகக்கூடாதவர்', 'காணக்கூடாதவர்' என்ற முப்பிரிவினராகத் தீண்டப்படாதவர்கள் பிரிக்கப்பட்டிருந்தனர். முப்பது கோடி இந்துக்களில் தீண்டப்படாதவர்கள் ஆறு கோடி பேர். அதாவது இந்துஸ்தானத்தில் இவர்கள் இருபது விழுக்காட்டினராக இருக்கின்றனர். சுருங்கக் கூறுவதானால் ஒவ்வொரு அய்ந்தாவது இந்துவும் தீண்டப்படாத ஆணாகவோ, பெண்ணாகவோ, குழந்தையாகவோ இருக்கிறார்கள்.

தீண்டப்படாதவர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் பல வகையான பெயர்களால் குறிக்கப்படுகின்றனர். தீண்டப்படாதவர்கள் பறையர், பஞ்சமர், ஆதிசூத்திரர், அவர்ணஸ்தர், அந்திய ஜாஸ், நாமசூத்திரர் என்று அழைக்கப்படுகின்றனர். இவர்களுடைய சமூக இயலாமைகள் எண்ணற்றவை; இவை யனைத்தும் திட்டமிட்டுச் சுமத்தப்பட்டவை; கொடுமையானவை. இவர்கள் தொட்டால், இவர்களின் நிழல் பட்டால், குரல் கேட்டால் தீட்டாகிவிடுவோம் என்று சாதி இந்துக்கள் கருதுகின்றனர். எனவே ஒரு சாதி இந்து எதிரில் வரும்போது இவர்கள் வழிவிட்டு விலகி ஒதுங்கிட வேண்டும்.

இவர்கள் சில வகையான வீட்டு விலங்குகளை வளர்க்கக் கூடாது எனத் தடுக்கப்பட்டனர். குறிப்பிட்ட உலோகத்தாலான அணிகலன்களை மட்டுமே இவர்கள் அணிய வேண்டும். இவர்கள் எந்த வகை உணவை உண்ண வேண்டும்; எது போன்ற உடையை உடுத்த வேண்டும்; எவ்வகையான காலணிகளைப் பயன்படுத்த வேண்டும் என்று விதிக்கப்பட்டிருந்தது. கிராமங்களுக்கு வெளியில் அழுக்கான இருண்ட தூய்மையற்ற குடியிருப்புகளில் வாழுமாறு இவர்கள் கட்டாயப்படுத்தப்பட்டனர். புகை படிந்த, இருள் நிறைந்த, அசுத்தம் மிகுந்த குடிசைகளில் இவர்கள் வாழ்ந்தனர்.

தலையில் தலைப்பாகை, கையில் தடி, தோளில் ஒரு முரட்டுப் போர்வை; இடுப்பில் ஒரு கோவணம்; இதுதான் ஓர் ஆணின் கோலம். பெண்களுக்கோ முழங்கால் அளவுக்கும் எட்டாத முரட்டுச் சேலை மட்டுமே உடை.

இந்தத் தீண்டப்படாத வகுப்பு இந்துக்களுக்குப் பொதுக் கிணற்றைப் பயன்படுத்தும் உரிமை மறுக்கப்பட்டிருந்தது. எனவே எத்தகைய அழுக்கு நீர் எங்குக் கிடைத்தாலும் குடிக்க வேண்டிய அவல நிலைக்கு ஆளாக்கப்பட்டிருந்தனர். சாதி இந்துக்களின் பிள்ளைகள் படிக்கும் பள்ளிகளில் தீண்டப்படாத வகுப்பு மக்களின் குழந்தைகள் சேர்க்கப்படவில்லை. இவர்கள் இந்துக் கடவுள்களை வழிபடுகிறார்கள்; இந்துப் பண்டிகைகளைக் கொண் டாடுகிறார்கள்; ஆனால் இவர்களுக்கு இந்துக் கோயில் களின் கதவுகள் மூடப்பட்டிருந்தன. மயிர் மழிப்போரும், துணி வெளுப் போரும் இவர்களுக்கு ஊழியம் செய்ய மறுத்தனர்.

சாதி இந்துக்கள் எறும்புகளுக்குக்கூட விருப்புடன் சர்க்கரை யைத் தூவுகின்றனர்; வீட்டில் நாய், பூனை போன்றவற்றை வளர்க்கின்றனர். மற்ற மதத்துக்காரர்களை வீட்டிற்குள் அழைக்கின் றனர். ஆனால் தீண்டப்படாதவர்களுக்கு ஒரு சொட்டுத் தண்ணீர் தரவும் மறுக்கின்றனர்; எள் முனையளவுகூட இரக்கம் காட்டுவ தில்லை. தீண்டப்படாத வகுப்பு இந்துக்கள் மனிதத்தன்மை அற்ற முறையில் விலங்குகளை விட இழிவாக நடத்தப்படுகின்றனர். சிற்றூர்களிலும் சிறு நகரங்களிலும் இந் நிலையே இன்றும் நீடிக்கிறது. ஆனால் பெருநகரங்களில் இக்கொடுமை பெரும்பாலும் மறைந்துவருகிறது.

இவர்கள் படும் துன்பங்கள் இந்த அளவோடு நிற்கவில்லை. காலங்காலமாக இவர்கள் கல்லாதவர்கள்; தீண்டப்படாதவர்களாக இழிவாக நடத்தப்பட்டவர்கள். எனவே காவல்துறை, இராணுவம் உட்பட அனைத்துப் பொது ஊழியத் துறைகளிலும் இவர் களுக்கு வேலைவாய்ப்பு மறுக்கப்பட்டது. ஆதலால் பரம்பரைத் தொழில்க ளையே செய்துவருகின்றனர். தாழ்ந்த, இழிந்த தொழில்களாகக் கருதப்படும் தெருக்கூட்டுதல், மலம் அள்ளுதல், செருப்புத் தைத்தல் போன்றவற்றைச் சிலர் செய்கின்றனர். இறந்த மாடுகளின் தோலை உரித்தல், அவற்றைப் பதப்படுத்தல் போன்றவற்றைச் செய்கின்றனர். மூங்கில் வெட்டுதல், கரும்பு வெட்டுதல், புல் அறுத்தல் ஆகிய பணிகளை மேற்கொண்டுள்ளனர். வாய்ப்புக் கிடைத்த சிலர் குத்தகையாளர்களாக நிலத்தில் சாகுபடி செய்கின்ற னர்; பலர் விவசாயக் கூலிகளாக உள்ளனர். பெரும்பாலோர்

கிராமத்திற்குத் தொண்டூழியம் செய்பவர்கள். இவர்கள் தங்களுக்கு அளிக்கப்படும் உணவு, மற்றும் தானியத்தை மட்டுமே நம்பி வாழ்கின்றனர்; செத்த ஆடுமாடுகளை உண்கின்றனர். இவ்வாறாக இவர்களுக்குச் சமுதாய, மத மற்றும் குடிமை உரிமைகள் மறுக்கப்பட்டன. அதனால் இவர்களுடைய வாழ்க்கை நிலையை உயர்த்திக்கொள்ள வாய்ப்பே இல்லை. எனவே, தீண்டப்படாத இந்துக்களின் வாழ்க்கை மிகப் பழங் காலத்து வாழ்க்கையாகவே இருக்கிறது. சமூகத்திலிருந்து விலக்கி வைக்கப்பட்ட, கொஞ்சமும் போதாத, தூய்மையற்ற சூழலில் பல துன்பங்களுடன் இவர்கள் வாழ்க்கை தொடர்கிறது. சுருக்கமாகச் சொல்வதானால் இவர்கள் கடனில் பிறந்து கடனிலேயே மடிகிறார்கள்; தீண்டப்படாதவர்களா கவே பிறக்கிறார்கள்; தீண்டப்படாதவர்களாகவே வாழ்கிறார்கள்; தீண்டப்படாதவர்களாகவே இறக்கிறார்கள்.

II

தீண்டாமை எவ்வாறு தோன்றியது என்பது வரலாற்று வல்லுநர்களுக்குப் புரியாத புதிராகவே இருக்கிறது. ஆயினும் சாதியமைப்புபற்றிய பிறழ்வான உணர்ச்சியின் தீய விளைவே தீண்டாமை என்று பொதுவாகக் கருதப்படுகிறது. வேதக் காலத்து ஆரியர்களிடையே வருணப் பிரிவினை இல்லை. காலப் போக்கில் ஒருவருடைய இயல்பூக்கம், மனவிருப்பம், திறமை ஆகியவற்றின் அடிப்படையில் ஆரியர்களிடையே வேலைப் பிரிவினை ஏற்பட் டது. கல்வி கற்பதைத் தொழிலாக ஏற்றவர்கள் பிராமணர் என்றும், ஆட்சி செய்பவர் சத்திரியர் என்றும், வணிகத்தில் ஈடுபட்டவர் வைசியர் என்றும், இந்த மூன்று வருணத்தாருக்கும் தொண்டூழியம் செய்பவர்கள் சூத்திரர் என்றும் ஆயினர்.

செய்யும் தொழில் காரணமாக ஏற்பட்ட இப்பிரிவினைக் கொள்கை தொடர்ந்து நீண்ட காலம் நீடித்து நிலவவில்லை. இதனால் அறியாமை மிக்க இழிந்த உதவாக்கரையான பார்ப்பனன் ஒருவன்கூடக் கடவுளுக்கு அடுத்த நிலையில் வைத்து மதிக்கப்பட் டான். ஆனால், அதே நேரத்தில் தாழ்ந்த வகுப்பினன் ஒருவன் எவ்வளவுதான் உயர்ந்த தகுதிகளைப் பெற்றிருப்பினும் அவன் இழிந்த சூத்திரனாகவே நடத்தப்பட்டான். இதன் விளைவாகப் பழைய நால்வகைப் பிரிவினை என்பது ஒன்றோடொன்று கலக்க முடியாத அளவு இறுக்கம் பெற்றது. இதன் இழிந்த விளைவே இன்றைய நால்வருணத்தின் தோற்றம். இவ்வாறாக நிலைபெற்ற நால்வருணம் நான்கு சாதிகளாக வடிவெடுத்தது. இது நால்வகைப் பிரிவின் மூலத் தோற்றத்தையும் நோக்கத்தையும் சிதைத்துச் சீரழித்து

ஆதிக்கம் மிக்க கொடுமையான இன்றைய சாதி முறையை உருவாக்கியது. அதன்பின் வெவ்வேறுபட்ட தொழில்கள், பிரதேசப் பிரிவினைகள், பல்வேறுபட்ட வாழ்க்கை முறைகள், உணவுப் பழக்கங்கள், மூட நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் ஆகியவை முதன்மையான நால் வருணத்தை மேலும் கூறுபோட்டு மூன்று ஆயிரத்திற்கு மேற்பட்ட உள்சாதிகளை உருவாக்கின.

இந்தியாவின் ஆதிக் குடிமக்களுடன் இனக் கலப்பு ஏற்படக் கூடாது என்பதற்காக ஆரியர்கள் சாதி முறையை வகுத்தனர் என்றும் கருதப்படுகிறது. ஆரியரின் மேலாதிக்கத்தை ஏற்க விரும்பாத இந்திய ஆதிக்குடி மக்கள் ஆரியர்கள் மீது அவ்வப்போது திடீர்த் தாக்குதல்கள் நடத்தி அவர்களின் பெண்களையும், குழந்தைகளையும் கவர்ந்து சென்றும் கொள்ளையடித்தும் துன்புறுத்தினர். ஆயினும் காலப்போக்கில் இந்திய ஆதிக்குடி மக்கள் அடிமைகளாக ஆக்கப்பட்டனர். இவர்கள் கிராமத்திற்கு வந்துபோவது என்பதுகூட விதிமுறைக்கு உட்படுத்தப்பட்டது. இவர்கள்மீது துன்பமான கடமைகளும் தாங்கமுடியாத இயலாமைகளும் சுமத்தப்பட்டன. இறுதியில் இவர்கள் தீண்டப்படாதவராக ஒதுக்கப்பட்டனர்.

மூன்றாவதாக ஒரு கருத்தும் நிலவுகிறது. பண்டை நாளில் குலக் குழுவிலிருந்து பிரிந்த மக்களே[1] (Broken Men) இன்றைய தீண்டப்படாதவர்கள் என்றும், பின்னாளில் இவர்கள் புத்த மதத்தைத் தழுவினர் என்றும் கருதப்படுகிறது. இவர்கள் தாழ்வுற்றிருந்த காலத்தில் வேத இந்து தருமத்தை ஏற்க மறுத்தனர்; மாட்டிறைச்சி உண்பதையும் கைவிடவில்லை; எனவே இவர்களைத் தீண்டப்படாதவர்கள் என்று பிரித்து ஒதுக்கினார்கள்.

பிரித்தாளும் இந்தச் சாதிய முறைமை எதிர்ப்பு என்பதே இல்லாமல் தொடர்ந்ததா? உறுதியாக இல்லை; இழிவுபடுத்தி, தனிமைப்படுத்தி, செயலிழக்கச்செய்யும் இக்கொடிய தீண்டாமையிலிருந்து இந்துச் சமூகத்தை மீட்டெடுக்கத் தலைமுறை தலைமுறையாக இந்தியாவில் தோன்றிய எண்ணற்ற சிறந்த மனிதர்கள் முயற்சித்தனர். கிறிஸ்து பிறப்பதற்கு அய்ந்நூறு ஆண்டுகளுக்கு முன் அறிவும் ஆற்றலும் மிக்க, அரசக் குலத்தில் தோன்றிய புத்தர் இந்துச் சமூகத்தின் அடித்தளத்தையே ஆட்டங் காணும்படியாக அதிர வைத்தார். இவருடைய மதத்தில் தீண்டப்படாதவர்களைச் சேர்த்துக்கொண்டார். பதினோராம் நூற்றாண்டில் தீண்டப்படாத ஒருவரைத் தன் தொண்டராக ஏற்றுக் கொண்ட இராமானுசர் அவர் கட்டிய கோயில்களையும் மடங்களையும் தீண்டப்படாதவர்

களுக்குத் திறந்துவிட்டார். கர்நாடகத்தில் ஓர் அரசரின் அமைச்சராக இருந்த பசவர் தமக்குத் தோன்றிய வழியில் வருணாசிரமத்தைத் தகர்த்திட முயன்றார். இதன்பின் வந்த நூற்றாண்டுகளில் சக்கரதாரர், இரமணானந்தர், கபீர், சைத்தன்யர், ஏகநாதர், துகாராம், உரோகி தாசு, சொக்கமேளா ஆகியோர் புக்திப் பாதையில் சமத்துவத்தைப் பேணிட மேற்கொண்ட முயற்சிகளில் பெரும் அளவில் வெற்றி பெற்றனர்.

அடுத்து இராம் மோகன்ராய் மற்றும் அவர்களுடைய முன்னணித் தொண்டர்கள் தொடங்கிய சமூக, மதச்சீர்திருத்த இயக்க அலை வீசத் தொடங்கியது. ஆனால் இதில் முதன்மையான உயிரோட்டமான பங்களிப்பைச் செய்தவர் மகாத்மா புலே அவர்கள்தான். புலே 1848ஆம் ஆண்டு இந்தியாவில் தாழ்த்தப்பட்டவர்களுக்கென முதல் பள்ளியைப் பூனாவில் தொடங்கினார். பிற்போக்குச் சக்திகளாலும் உறவினர்களாலும் தான் இழிவுபடுத்தப் பட்ட போதிலும், ஏளனம் செய்யப்பட்ட போதிலும், புறக்கணிக் கப்பட்ட போதிலும், புலேவும் அவருடைய மாண்புமிகு மனைவியும் தீண்டப்படாத வகுப்பு மக்கள் கல்வி பெறவும் சமூக இயலாமைகளிலிருந்து விடுதலை அடையவும் வேண்டி, உயரிய முறையில் அயராது பாடுபட்டனர். வங்காளத்தில் சாசிதார் பந்தோபாத்தியா அவர்களும் இதே போன்று உழைத்தார். இந்தியச் சிற்றரசர்களில் ஒருவரான பரோடா மன்னர் சாயாஜிராவ் கெய்க்வாடு 1883இல் தாழ்த்தப்பட்டவர்களுக்கெனப் பள்ளிகளை நிறுவினார். இந்தப் பள்ளிகளில் இந்துக்கள் எவரும் ஆசிரியராக வேலை செய்ய முன்வராததால் முஸ்லிம் ஆசிரியர்களைக் கொண்டே இப்பள்ளிகளை நடத்த வேண்டியிருந்தது.[2]

நீடுதுயிலிலிருந்து விழித்துக்கொள்வதற்கான அறிகுறிகள் மராட்டியத்தில் தாழ்த்தப்பட்டோரிடையே தோன்றின. இவர்களிடையே தோன்றிய கோபால் பாபா வலங்கர் மகாத்மா புலேவின் தொண்டர். இவர் தீரம் வாய்ந்த பிரச்சாரகர். இவர் தீண்டாமையின் கொடுமைகளைக் களைந்திடக் கடுமையாக உழைத்தார்; சாதி இந்துக்களின் மனிதத் தன்மையற்ற போக்கினை உணர்த்திட முயன்றார். அஞ்சா நெஞ்சம் படைத்த ஆண்மை மிக்க தயானந்தர் தீண்டாமையை ஒழித்திட அரிய முயற்சிகள் செய்தார். தென்னிந்தியாவின் கோடியில் கர்னல் ஓல்காட் தீண்டப்படாதவர்களுக்காக ஒரு பள்ளியைத் தொடங்கமுயன்றார்.

III

இக் காலக்கட்டத்தில்தான் தங்கள் நாட்டில் அடிமை முறையை ஒழித்தனர் ஆங்கிலேயர்கள். இந்தியாவில் தீண்டப்படாதவர்களுக்கு நெடுங்காலமாக இழைக்கப்பட்டு வரும் துன்பங்கள்பற்றிய ஆங்கிலேயரின் கண்ணோட்டம் அவர்கள் தங்கள் நாட்டில் அடிமைமுறை பற்றிக் கொண்டிருந்த கருத்துக்கு மாறுபட்டு இருந்தது. ஆங்கிலேயர் ஆட்சி ஓர் அந்நிய ஏகாதிபத்திய ஆட்சியாகும். தீண்டாமைபற்றி ஆங்கிலேயர் கொண்டிருந்த நடுநிலைமை என்பது உண்மையில் சாதி இந்து ஆதிக்கவாதி களுக்கு அவர்கள் அளிக்கும் மறைமுக ஆதரவேயாகும். பிரிட்டானியர் சூழ்ச்சி மிக்க இனத்தவர். மராட்டியப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு ஆங்கிலேயர் தங்கள் ஆட்சியை நிலைப்படுத்திக்கொள்ள முயன்றனர். அவர்கள் மக்களைப் படிப்படியாகச் சுரண்டவும், மக்கள் அறிய முடியாத வகையில் அவர்களைச் சூறையாடவும் திட்டமிட்டு மென்மையாகக் கொள்ளை யிடவும் தொடங்கினர். தேர்ந்த அரசியல் மதிநுட்பத்துடன் ஆங்கிலேயர் செயல்பட்டனர். ஆட்சி மாற்றத்தால் அச்சமயம் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்த பார்ப்பனரின் நலன்களை ஓம்பிட முனைந்தனர். பார்ப்பனர்களின் மனங் குளிர வேண்டும் என்பதற்காக அவர்களுக்கு ஆங்கிலக் கல்வியை அளித்துப் புதிய அரசில் பதவிகள் அளிக்க பம்பாய் அரசு முனைந்தது.[3]

அக்காலத்தில் பெறற்கரிய புதையலாகக் கருதப்பட்ட இலக்கியமும் கல்வியும் பார்ப்பனர்களுக்கு மட்டுமே உரித்தாக விளங்கின. இவை இரண்டும் சாதி இந்துக்களுக்கு மறுக்கப்பட்டன. சத்தாராவின் அரசர்கூட இரவில்தான் கல்வி கற்க வேண்டும் என்கிற அளவிற்குப் பார்ப்பனர்களின் அதிகாரம் அச்சமூட்டுவதாய் இருந்தது.[4] 1821இல் பூனாவில் சமஸ்கிருதப் பள்ளி ஒன்றை மகாராட்டிர அரசு தொடங்கியது. இப்பள்ளியில் பார்ப்பனரைத் தவிரச் சாதி இந்துக்களும் சேர்த்துக்கொள்ளப்படுவதற்குப் பார்ப்பனர்கள் கடுமையான வெறுப்பையும் எதிர்ப்பையும் காட்டினார்கள். பெரும்பாலான பார்ப்பன ஆசிரியர்கள் பள்ளிகளிலிருந்து தங்கள் பதவியைத் தூக்கியெறிந்துவிட்டு வெளியேறினர்.[5] எனினும் சாதி இந்துக்கள் பயில்வதற்கான பள்ளிகள் பையப்பைய அரசினால் நிறுவப்பட்டன. இதனால் பார்ப்பனர் அல்லாதவர்களும், பின்தங்கிய வகுப்பு இந்துக்களும் கல்வியிலும் அரசு வேலைகளிலும் மெல்ல மெல்ல முன்னேறினர். இதற்கான பெருமை பிரிட்டிஷ் அரசையே சேரும்.

சாதி இந்துக்களுக்கே இந்த ஈனகதி என்றால் தீண்டப்படாத வகுப்பு மக்களின் நிலை எவ்வாறு இருந்திருக்கும்? அவர்கள் இந்தத் துறைகளில் இடம் பெறவேயில்லை. கல்வியில் இவர்கள் நெடுந்தூரம் பின்தங்கி இருந்தனர். தாழ்ந்த சாதியினருக்கு - குறிப்பாகத் தீண்டப்படாதவர்களுக்குக் கல்வி தருவதன்மூலம் பார்ப்பனர்களின் பகையைத் தேடிக்கொள்ள ஆங்கில ஆட்சி விரும்பவில்லை. அதனால் தாழ்த்தப்பட்டவர்க்குக் கல்வி அளிப்பதில் எப்போதும் நழுவல் போக்கும் திசை திருப்பல் முயற்சியுமே அரசிடம் இருந்தன. மேலும் அக்காலத்தில் ஆசிரியர்கள், பள்ளி ஆய்வாளர்கள், கல்வி அலுவலர்கள் ஆகிய அனைவருமே பார்ப்பனர்கள். வெகு மக்களுக்குக் கல்வி தருவது என்ற சிந்தனையையே இவர்களால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

கிறித்துவ மத நிறுவனங்கள் இந்தச் சூழ்நிலையைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டன. இவர்களுக்கு ஓர் உள் நோக்கம் இருப்பினும், தாழ்ந்த சாதியினருக்கும் தீண்டப்படாத வகுப்பு மக்களுக்கும் கல்வி வழங்கிடத் தொடங்கினர். தங்களுடைய பக்குவமான முறைகள், பரிவான தன்மைகள், எப்போதும் உதவிடத் தயாராக இருக்கும் குணம் ஆகியவற்றின்மூலம் தாழ்ந்த சாதியினர் மற்றும் தீண்டப்படாத வகுப்பு மக்களின் நன்மதிப்பைப் பெற்றனர். எனவே, பார்ப்பனர்களைவிட அந்நிய நாட்டினரான இவர்கள் மேலானவர்கள் என்று இவ்வகுப்பு மக்கள் கருதினர்.

தீண்டப்படாதவர்களுக்குக் கல்வி வழங்குவதற்குக் கெட்ட நோக்கங் கொண்ட எதிர்ப்பு இருந்தபோதிலும், இவர்களுக்குக் கல்வி தரப்பட வேண்டும் என்ற கோரிக்கை புதிய ஆட்சியாளர் காலத்தில் அவ்வப்போது தலைதூக்கிக் கொண்டேயிருந்தது. 1856இல் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியின்மூலம் இப்பிரச்சினை முன்னிடம் பெற்றது. தார்வார் என்ற ஊரில் அரசுப் பள்ளியின் தலைமை ஆசிரியர் தீண்டத்தகாத சாதிப் பையன் ஒருவனைப் பள்ளியில் சேர்த்திட மறுத்துவிட்டார். இப்பிரச்சினை பம்பாய் மாகாண அரசின் கவனத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டது. இறுதியில் 1858இல் பம்பாய் அரசு ஓர் ஆணை பிறப்பித்தது. அரசிடமிருந்து பகுதி நிதி உதவி பெறும் பள்ளியில் சாதி, இனம் காரணமாக ஒருவருக்கு அனுமதி மறுக்கப்பட்டால் அரசு தரும் நிதி உதவி நிறுத்தப்படும் என்றும், அரசின் முழு நிதியினால் நடத்தப்பெறும் பள்ளிகளில் எல்லாச் சாதியினரின் பிள்ளைகளையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் இந்த ஆணை அறிவித்தது.[6] ஆயினும் சாதி இந்துக்கள் தங்களின் மனப் போக்கை

மாற்றிக் கொள்ளாததனால் நீண்டகாலம் இந்த ஆணை நடைமுறைக்கு வரவில்லை. தீண்டப்படாதவர்களுக்கான கல்வி முயற்சிகளைத் தேவையற்ற போராட்டங்கள் என்றும் இவை உணர்வு வயப்பட்ட ஆங்கில அதிகாரிகளாலும் நடைமுறைக்கு உதவாத நம் நாட்டுச் சீர்திருத்தக்காரர்களாலும் தூண்டிவிடப்பட்டவை என்றும் சாதி இந்துக்களின் பிரதிநிதிகள் சாதித்தனர்.[7]

IV

மராட்டியத்தில் அரசியல், சமூகத் தளங்களில் இருந்த பேராதிக்கங்கொண்ட பிரச்சினைகளும் முரண்பாடுகளும் கல்வித் துறையில் இருந்த அளவைவிடச் சற்றும் குறைந்தவை அல்ல.

1890ஆம் ஆண்டுகள் மராட்டியத்தில் எதிர்ப்படும் அனைத்தையும் மிதித்து அழித்து வேகமாக முன்னேறிய ஒரு புதிய காலக்கட்டமாகத் திகழ்ந்தன. வலிமையும் திறமையும் முன்னேறிச் செலுத்தக்கூடிய சக்திகளும் சமூகத்தில் இயங்கின. சமூக அரசியல் போக்குகளில் ஒரு மறுமலர்ச்சி ஏற்படத் தொடங்கியது. சமூகச் சீர்திருத்தக்காரர்களுக்கும் ஆர்வமான அரசியல் போராட்டவாதிகளுக்கும் அந்த நாட்கள் ஒளி மிகுந்தவையாயிருந்தன. வாசுதேவ பல்வந்த் பாட்கேயின் புரட்சி அடங்கி ஒடுங்கியிருந்தது. அரசியலில் பிற்பட்ட நிலை என்பதோடு சாதிய முறை, தீண்டாமை, குழந்தை மணம், விதவை மறுமணம், பெண் விடுதலை ஆகியவையும் அன்றைய தலைவர்களின் கவனத்தை ஈர்த்தன. முதலில் நடைபெற வேண்டியது அரசியல் சீர்திருத்தமா? சமூகச் சீர்திருத்தமா? என்ற வாதம் கொழுந்துவிட்டு எரிந்தது. இந்த வாதத்தில் இரு கட்சிகளாகப் பிரிந்து நின்றவர்கள் தலைசிறந்த திறமையாளர்களாகவும், உயர்ந்த நோக்கம் கொண்டவர்களாகவும், ஈடு இணையற்ற தீரம் படைத்தவர்களாகவும், செல்வாக்கு மிக்கவர்களாகவும், கற்றறிந்த மேதைகளாகவும் விளங்கினர்.

ஆங்கிலேய அரசியல் வல்லுநர்களும், பத்திரிக்கை ஆசிரியர்களும், இந்தியர்கள் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடாமல் அவர்கள் ஆற்றல் முழுவதையும் சமூக ஏற்றத் தாழ்வுகளை அகற்றுவதற்கே செலவிட வேண்டும் என்று கூறினார்கள். இந்தியர்கள் எவ்வகையிலேனும் அரசியல் போராட்டத்தைத் தவிர்க்க வேண்டும் என்பதே அவ்வாறு கூறிய ஆங்கிலேயர்களின் உள் நோக்கம் ஆகும். இந்தியத் தலைவர்கள் இந்த நிலைமையை வேறு கோணத்தில் பார்த்தனர். ஒரே நேரத்தில் அரசியல்– சமூக விடுதலைக்கும் இந்தியத்தலைவர்கள் போராடினர்.

இவர்களில் தலைசிறந்து விளங்கியவர் ரானடே. பரந்து விரிந்த சமூக அமைப்பை உருவாக்குவதை உயிர்மூச்சாகக் கொண்டு தன் அறிவால், ஆற்றலால் புகழ் பெற்றவர் ரானடே. எவரையும் கவரக்கூடிய பண்பும், அறிவும் மிக்க ஆகர்கர் நாடு, சமூகம், தனிமனிதன் ஆகிய அனைத்தையும் புதுப்பித்துப் புத்துயிர் ஊட்ட வேண்டும் என விரும்பினார். விரிந்த மனம் கொண்ட சிறந்த கல்வியாளரான டாக்டர் பந்தர்கர் சமூகச் சீர்திருத்தவாதி களின் கருத்தைத் தீவிரமாகப் பிரச்சாரம் செய்தார்.

அரசியல் மாற்றத்தை முதன்மைப்படுத்திய அணியில் மிகத் தீவிரமும் பேராண்மையும், சிறந்த கல்வியறிவும் கொண்ட திலகர் முன் நின்றார். பழமைவாதப் பிரிவினர்க்கும் அச்சமயம் திலகரே தலைமை தாங்கினார். அரசியல் இயலாமைகள் அனைவருக்கும் பொதுவானவை; எனவே அரசியல் மாற்றமே முதல் தேவை என்று சமூகச் சீர்திருத்தங்களை ஓரங்கட்ட வேண்டும் என்ற உள் நோக்கத்துடன் பழமைவாதப் பிரிவினர் முழங்கினர்.

சிறந்த நீதிபதியும் அறிவாளியுமான திலாங் அரசியல் வேலைக ளுடனேயே கூட, குறைந்த அளவு எதிர்ப்புள்ள சமூகச் சீர்திருத்தப் பணிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று கூறினார். இருசாரரின் ஆய்வுக் கருத்துகளும் உண்மைக்கு மிகவும் புறம்பான வையல்ல. ஆனால் சமூகச் சீர்திருத்தவாதி களின் ஆய்வு மிகுதியும் நடைமுறை சார்ந்ததாயும் நேர்மையான தாகவும் இருந்தது. அதே நேரத்தில் அரசியல் மாற்றத்தை முதன்மைப்படுத்தியோரின் அணுகு முறை சரியானதாக இருப்பினும் திசை திருப்புவதாகவும் இருந்தது. அரசியல் இழிவுகளை அகற்றும்போது அத்துடனேயே சமூக இழிவுகளையும் அகற்றுவது இயலாத ஒன்று என்ற காரணத்திற்காக இவர்கள் சமூகச் சீர்திருத்தவாதிகளை எதிர்க்கவில்லை. சமூகத்திலும் மதத்திலும் இருக்கும் உயர்வு தாழ்வுகள் நீக்கப்பட்டுவிட்டால், இந்துச் சமூகத்தில் தாங்கள் அனுபவித்துவரும் சமூக மரியாதை, சிறப்பு உரிமைகள், அந்தஸ்து ஆகியவற்றை இழக்க நேரிடுமே என்ற அச்சத்தினால்தான் எதிர்த்தார்கள். எனவேதான் இந்துச் சமூகத்தை உண்மையான உறுதியான அடித்தளத்தின் மீது நிறுத்திட வேண்டும் என்று மேற்கொள்ளப்படும் எந்த முயற்சியையும் இவர்கள் கண்ணை மூடிக்கொண்டு எதிர்த்தனர்.

இக்காலக்கட்டத்திற்கு ஏழு ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியத் தேசியக் காங்கிரசு தொடங்கப்பட்டது. காங்கிரசு மாநாடுகள் இந்திய

ஆட்சி அவைகளையும் அரசுப் பதவிகளையும் இந்தியர் மயமாக்க வேண்டும் என்று ஆங்கில அரசுக்கு விண்ணப்பம் செய்வதுடன் முடிவுற்றன.

டாக்டர் பீமாராவ் ராம்ஜி அம்பேத்கர் தோன்றியபோது இந்தியாவிலும் மராட்டியத்திலும் நிலவிய சமூக அரசியல் மற்றும் அறிவார்ந்த நிலை இதுவேயாகும்.

இளமைப் பருவம்

அம்பேத்கரின் முன்னோர்கள் கொங்கணப் பகுதியிலிருந்து வந்தவர்கள். இந்தப் பகுதியிலிருந்துதான் திலகர், கார்வே, பரஞ்சிபை போன்ற சிறந்த அறிவாளிகளும் வீரஞ் செறிந்த மறவர்களும் தோன்றினர். அம்பேத்கரின் முன்னோர்களின் சொந்த ஊர் அம்பவாடே என்பதாகும். (மராட்டிய மாநிலத்தில்) இரத்தின கிரி மாவட்டத்தில் உள்ள மந்தன்காடு என்ற சிறிய நகரிலிருந்து அய்ந்து மைல் தொலைவில், அம்பவாடே அமைந்துள்ளது. இக்கிராமத்தில் இக்குடும்பம் ஓரளவு முக்கியத்துவம் பெற்றதாகத் திகழ்ந்தது. இக்கிராமத் தேவதையின் பல்லக்கினை வைத்திருக்கக் கூடிய தனிச்சிறப்பை இக்குடும்பம் பெற்றிருந்தது. இயல்பாகவே ஆண்டுதோறும் நடைபெறும் திருவிழாவின்போது கிராமத்தினரின் கவனத்தை ஈர்க்கும் நிகழ்ச்சியாக இந்தத் திருவிழா இக்குடும்பத்திற்கு அமையும்.[8] அம்பேத்கரின் பாட்டனார் மாலோஜி சக்பால் சிறந்த மகார் குடும்பத்தில் தோன்றியவர். இந்துச் சமூக அமைப்பில் இருந்த பல்வேறு தீண்டத்தகாத பிரிவுகளில் மகார்கள் சிறந்த வலுவான உடற்கட்டும், எதையும் புரிந்து ஒத்துப் போகக்கூடிய அறிவுத் திறனும், துணிவும் போர்க்குணமும் ஆண்மையும் மிகுந்த முன்னோடி வகுப்பாக விளங்கினர். சமூகத்தில் தங்களின் தாழ்நிலையைக் கூர்மையாக உணர்ந்திருந்தனர். அதனால் தங்கள் அடிமை நிலைபற்றிய எண்ணம் இவர்கள் உள்ளத்தை உறுத்திக் கொண்டேயிருந்தது.

மகார்கள்தான் மராட்டியத்தின் ஆதிக் குடிமக்கள் என்று சிலர் கருதுகின்றனர். மகாராஷ்டிரம் என்பது : மகார்+ராஷ்டிரம் = மகார்களின் அரசு என்று இதனை விளக்குகின்றனர். மகார் என்ற சொல்லின் தோற்றுவாய், மகா+அரி அதாவது பெரிய எதிரி என்பதாகும் என்றும் சிலர் கூறுகின்றனர். அய்ரோப்பியர் களுடன் முதன்முதலில் தொடர்புகொண்டவர்கள் மகார்கள்தான். கிழக்கு இந்தியக் கம்பெனியின் பம்பாய் இராணுவத்தில் மகார்கள் ஒரு பிரிவினராக இருந்தனர். இதேபோன்று பீகாரில் துசாத்களும், சென்னையில் பறையர்களும் கிழக்கிந்தியக் கம்பெனியின் பிராந்திய இராணுவப் பிரிவுகளில் இருந்தனர்.

மாலோஜி சக்பால் இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்றவராவார். அவருடைய பிள்ளைகளில் இருவர் மட்டுமே எஞ்சினர். ஒருவர் ராம்ஜி. இவர்தான் இந்த வரலாற்று நாயகரின் தந்தை. மற்றவர் மாலோஜி சக்பால் மகள் மீரா.

கபீரின் பக்திப் பாதையை இக்குடும்பம் பின்பற்றியது. இந்தப் பக்திச் சிந்தனை, மனிதனின் நல்லியல்புகளான கருணை, அன்பு மற்றும் கடவுளிடம் தன்னை ஒப்படைத்துக்கொள்ளுதல் ஆகியவற்றின்மூலமாக ஆறுதலையும் அமைதியையும் அளித்தது. கிருஷ்ணனிடமும் இராமனிடமும் இவர்கள் நல்லொழுக்கத்தையும், ஆன்ம நேயத்தையும் வேண்டினர்; கண்டறிந்தனர். பக்தி நெறியை நிறுவிய கபீர், சாதிக்கொடுமையைக் கடுமையாகச்சாடியவர். எனவே இவருடைய நெறியைப் பின்பற்றியவர்களிடம் சாதி முறையைத் தீவிரமாகப் பின்வற்றுவது என்பதில் பெரும் தளர்ச்சி ஏற்பட்டு மனித நேயமும் விரிந்த மானிட அன்பும் வளர்ந்தன. தீண்டப்படாத சில குடும்பங்கள் கபீர் பக்தி நெறியை மேற்கொண்டதற்கு இது ஒரு காரணம். கடவுளை வணங்கும் எல்லோரும் சாதி, பிறப்பு வேறுபாடு பாராட்டாமல் கடவுளின் பிள்ளை என்று கபீர் பக்தி நெறியினரால் கருதப்பட்டனர். இக்கருத்தை இவர்கள் ஆழ்ந்த உண்மையான ஈடுபாட்டுடன் நம்பினர். எனவே கபீருடன் இரண்டறக் கலந்து அவருடைய பின்வரும் பாடலைப் பாடினர்.

எவரையும் என்ன சாதி என்று கேட்காதே;
எல்லாச் சாதியினரும் கடவுள்முன் சமமானவர்களே;

ராம்ஜி சக்பால் அவர்களுக்குப் பதினான்கு குழந்தைகள். இந்த வரலாற்றின் நாயகர் பதினான்காவது குழந்தை. ராம்ஜி சக்பாலின் மனைவி கடமை உணர்ச்சி மிக்கவர்; பக்தியுணர்வு உள்ளவர்; மென்மையான இயல்பும் சுயமரியாதை உணர்வும் உடையவர்.

இந்த வரலாற்றின் கதாநாயகனின் பிறப்பு தொடர்பான கதை ஒன்று வழங்குகிறது. இது புதுமையானது. கௌதம புத்தர் தாயின் கருவறையில் இருந்தபோது அவருடைய தாய் கண்ட கனவுகள் போல இக்கதையும் முக்கியத்துவம் பெறுகிறது. ராம்ஜி சக்பாலின் சிற்றப்பா ஒருவர் சந்நியாசி ஆகி ஊரைவிட்டுச் சென்று பல ஆண்டுகள் கழித்து, ஒரு சாமியார் குழுவுடன் மோவ் நகரத்திற்கு வந்தார். மத்திய இந்தியாவில் உள்ள மோவ் நகரில் ராம்ஜி குடும்பம் அப்போது இருந்தது. ராம்ஜி குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பெண் துணி துவைப்பதற்காக ஆற்றங்கரைக்குச் சென்றார். வழியில் அங்கே அவர் கண்ட சாமியார் கூட்டத்தில் தன் உறவினர் இருப்பதைப் பார்த்தார்; அவரை அவர் அடையாளம் கண்டு பிடித்துவிட்டார். ராம்ஜி சக்பால் அந்தச் சாமியாரிடம் ஓடினார்; தன் வீட்டிற்கு வந்து தன் குடும்பத்தை வாழ்த்தியருள வேண்டும் என்று வேண்டினார். தாம் உலகப் பற்றினைத் துறந்துவிட்டதால் வீட்டிற்கு வர முடியாது என்று சாமியார் கூறிவிட்டார். ஆயினும்,

'உன் வீட்டில் ஒரு மகன் பிறப்பான், வரலாற்றில் அவன் தன் முத்திரையைப் பதிப்பான்' என்று அவர் அருள்வாக்கு கூறினார். இதை நம்பி மகிழ்ச்சியில் திளைத்த ராம்ஜி சக்பாலும் அவருடைய மனைவியும் மத ஆசாரங்களை மேலும் தீவிரமாகக் கடைப்பிடித்த னர். இவர்கள் வேண்டிய வரம் பலித்ததுபோல் மோவ் ஊரில் **1891** ஏப்ரல் **14**ஆம் நாள் ஒரு மகன் பிறந்தான். இம்மகவுக்குப் பீம் என்று பெற்றோர் பெயரிட்டனர். இந்தியாவின் வரலாற்றில் அனைவரின் கவனத்தையும் ஈர்க்கும் நிலையைப் பீம் எய்தினார்.

முர்பக்தர்கள் என்ற தீண்டப்படாத இந்துக் குடும்பத்திலிருந்து வந்தவர் பீமின் தாயார் பீமாபாய். பம்பாய் மாகாணத்தில் தாணா மாவட்டத்தில் முர்பாத் கிராமத்தில் பீமாபாய் பிறந்த குடும்பம் செல்வச் செழிப்புடன் இருந்தது. சிவந்த மேனி, அகன்ற நெற்றி, சுருண்ட குழல், ஒளிரும் பெரிய கருவிழிகள், சற்றே குட்டையான மூக்கு - மொத்தத்தில் எழிலார்ந்த தோற்றமுடையவர் பீமாபாய். பீமாபாயின் தந்தையும் ஆறு சிற்றப்பாக்களும் இராணுவத்தில் மேஜர்களாகவும் சுபேதார்களாகவும் இருந்தனர். இவர்களும் கபீரின் பக்தி நெறியினர். கபீரின் தத்துவத்தைப் பற்றிக் கூறிய ஆழ்ந்த விவாதங்களை இவர்கள் மேற்கொள்வார்கள்; படைப்பிரிவினரிடம் தத்துவ விசாரணை செய்வார்கள்.

இராணுவ வேலையிலிருந்து பீமின் தந்தை ஓய்வு பெற்றபோது பீம் இரண்டு வயது குழந்தை. மத்திய இந்தியாவிலிருந்து கொங்கணத்தில் தபோலி என்ற ஊரில் இவர்கள் குடியேறினர். பீமின் ஐந்தாவது வயதில் தபோலியில் அவரைப் பள்ளியில் சேர்த்தனர். அவருடைய அண்ணனுடன் அங்குத் தொடக்கக் கல்வியைக் கற்கத் தொடங்கினார். சுபேதார் ராம்ஜி சக்பால் தபோலியில் நீண்டகாலம் தங்க முடியவில்லை. பம்பாய்க்குக் குடியேறிச் சத்தாராவில் இராணுவக் குடியிருப்பு வளாகத்தில் ஒரு வேலையில் அமர்ந்தார்.

சத்தாராவில் இவர்கள் குடியேறியதும் குடும்பத்தில் ஒரு பெரும் துன்ப நிகழ்ச்சி நடந்தது. பீமாபாய் மறைவுற்றார். அவர் மதச் சிந்தனையும் சுயமரியாதையும் சொந்தக் காலில் நிற்கவேண் டும் என்ற எண்ணமும் உடையவராக வாழ்ந்தவர். அவருடைய சமாதி சத்தாராவில் இன்றும் இருக்கிறது. பீமாபாய் இறந்தபோது பீமின் வயது ஆறு. பீமாபாய் பெற்றெடுத்த பதினான்கு குழந்தைகளில் மூன்று மகன்களும் இரண்டு மகள்களுமே எஞ்சினர். மூத்த மகன் பலராம்; அதற்கு அடுத்த இளையவர் ஆனந்தராவ்; அதன்பின் மஞ்சுளா, துளசி என்ற இரு பெண்மக்கள்; கடைக்

குட்டியாகப் பீம் இருந்தார். பின்னாளில் தன்னைக் குறித்து, வேடிக்கையாகச் 'செம்மையாக உதைப்பவன்' எனப் பீம் குறிப்பிடுவது உண்டு. பெண்கள் இருவருக்கும் திருமணமாகிவிட்டி ருந்தது. சகோதரர்களை இவர்கள் மாறிமாறிப் பேணி வந்தனர். இத்துடன் ராம்ஜியின் சகோதரி மீராபாய் வீட்டு வேலைகளைக் கவனித்து வந்தார். இவர் முதுகில் சற்றே கூன் விழுந்த குள்ளமான தோற்றத்தினராயினும் மிகவும் சுறுசுறுப்பாக இயங்குவார்; உலக நடைமுறை அறிவு மிக்கவர். வீட்டில் பீம் பெஞ்சமின் போல் திகழ்ந்தார். தாயில்லாக் குழந்தை என்பதால் அத்தையின் அன்பும் செல்லமும் பரிவும் அதிகமாகப் பீமுக்குக் கிடைத்தன.

ராம்ஜி சக்பால் கடும் உழைப்பாளி; ஆழ்ந்த மதப் பக்தி உடையவர். தடிமனான உடல், கவர்ச்சியான தோற்றம், இரக்கக் குணம், ஈர்க்கும் உரையாடல் திறன், மதப் பக்தி, தாராளச்சிந்தனை ஆகிய இயல்புகள் ராம்ஜி சக்பால் அவர்களிடம் இருந்தன. காலையும் மாலையும் கடவுள் வழிபாடும் பூசையும் செய்வார். இந்த வழிபாட்டில் பிள்ளைகளும் கலந்துகொள்வார்கள். அருவி கொட்டுவதுபோல் இனிய பக்திப் பாடல்களும் ஆன்ம நேயப் பாடல்களும் இவருடைய இனிய குரலில் இசைமழையாகப் பொழியும். வழிபாட்டின்போது பூசைமுறைகளை முறையாகப் பின்பற்றுபவர். அதனால் தன் குழந்தைகள் இதில் சிறிது கவனக் குறைவுடன் இருந்தாலும் பொறுத்துக் கொள்ளமாட்டார். படிக்க வேண்டும் என்ற காரணங்காட்டி காலையில் பூசையைத் தவிர்க் கவோ அல்லது வேகமாக முடிக்கவோ அனுமதிக்கப்பட்டாலும் மாலையில் பிள்ளைகள் முழுமையாகப் பூசையில் கலந்துகொள்ள வேண்டும் என்ற கட்டாய நிலை இருந்தது. மாலையில் குழுவாகச் சேர்ந்து பக்திப் பாடல்களைப் பாடுவார்கள்.[9] இந்தக் கட்டாய வழிபாட்டு முறை தந்தையின் இறப்புவரை நீடித்தது.

நாட்டின் சிறந்த இதிகாசங்களான இராமாயணத்தையும் மகா பாரதத்தையும் பீமின் தந்தை படித்தார்; தன் பிள்ளைகளுக்குப் படித்துக் காட்டினார்; பக்தி நெறியில் ஈடுபாட்டை உண்டாக்குவதி லும் செயல் வேகத்தைத் தருவதிலும் ஈடு இணையற்ற இதிகாசங்களாக இவை இரண்டும் இருந்து வருகின்றன. ஒவ்வொரு தலைமுறையிலும் தோன்றிய தலைவர்களின் வாழ்க்கையை நெறிப்படுத்தியதிலும் உருவாக்கியதிலும் இராமாயணத்திற்கும் மகாபாரதத்திற்கும் பெரும் பங்கு உண்டு. மராத்திய சமய ஆச்சாரியர்களான மோரோபந்த் முத்தேசுவர் மற்றும் துக்காராம் ஆகியோரின் பக்திப் பாடல்களையும் ராம்ஜி சக்பால் பாடுவார். இப்பாடல்களிலிருந்து அவருடைய பிள்ளைகள் பல பயன்களைப்

பெற்றனர். இந்தப் பாடல்களில் தோய்ந்து படித்த தாலும் பாடியதாலும் இள வயதிலேயே மொழியைக் கையாளும் ஆற்றலும் இசையோடு பாடும் திறனும் இவர்களிடம் வளர்ந்தன. மோவில் வாழ்ந்தபோது இராணுவக் குடியிருப்பில் குடியிருந்தனர். இரவில் குறிப்பிட்ட நேரத்தில் வீட்டின் விளக்குகளை அணைத்து விட வேண்டும் என்ற கட்டாய விதி அக்குடியிருப்பில் இருந்தது. பக்திப் பாடல்களில் ஆழ்ந்த ஈடுபாடுகொண்டிருந்த ராம்ஜி சக்பால் இரவில் கதவுகளையும் சன்னல்களையும் மூடிவிட்டு மென்மை யான குரலில் பாடிக்கொண்டிருப்பார்.

பீமின் தந்தை தன் பிள்ளைகளுக்கு ஆன்மீக நெறியை ஊட்டுவதுடன் மட்டும் நின்று விடவில்லை; உலக நலன்கள் எல்லாம் தன் மகன்களுக்கு வாய்க்க வேண்டும் என்றும் கருதினார். இராணுவ ஆசிரியப் பயிற்சிப் பள்ளியில் பயின்று தன்னை ஆசிரியராகத் தகுதிப்படுத்திக்கொண்டார். இராணுவத்தில் பணி புரியும் ஆண்களுக்கு மட்டுமின்றி அவர்களின் வீட்டில் உள்ள குழந்தைகள், ஆண்கள், பெண்கள் எல்லாருக்குமே கல்வி கட்டாயம் என்று அப்போது இருந்தது. இராணுவப் பயிற்சிப் பள்ளியில் பதினான்கு ஆண்டுகள் ராம்ஜி சக்பால் தலைமை ஆசிரியராக இருந்தார். அங்குப் பிரிட்டிஷ் இரண்டாவது காலாட் படையில் சுபேதார்– மேஜர் என்ற நிலைக்கு உயர்ந்தார். ஆயினும் அவர் சுபேதார் ராம்ஜி என்றே அழைக்கப்பட்டார்.

பக்தி இலக்கியங்களைத் தொடர்ந்து படித்ததாலும் அன்றாடம் பக்திப் பாடல்களை உள்ளம் உருகப் பாடியதாலும் மராத்தி மொழியில் அவர் வல்லமை பெற்றார். அதனால் தன் மாணவர்க ளுக்கும் பிள்ளைகளுக்கும் எவ்வாறு மராத்திய மொழிச் சொற்க ளைக் கையாள வேண்டும் என்று கற்பித்தார். ஆங்கில மொழியையும் கற்றிருந்தார். எளிதில் புரியும்படியும் நம்பிக்கையூட் டும் வகையிலும் மொழிபெயர்ப்பு செய்வதற்குத் தன் மகன்களுக் குப் பயிற்சி தந்தார். இவருடைய மகன்களின் நலன் கருதி இவர் எழுதிய கணக்குபற்றிய குறிப்புச் சுவடி ஒன்றை வைத்திருந்தார். கோபாலகிருஷ்ண கோகலே எழுதிய கணக்கு (Arithmetic) நூலுக்கு வழிகாட்டியாக இச்சுவடி பயன்பட்டது.

ராம்ஜி சக்பால் அதி தீவிரமாக மதுக்குடியை வெறுத்தவர்; புலாலை ஒருபோதும் தொடாதவர். இவை இவருடைய தனிச்சிறப் பியல்புகள். விளையாட்டில் ஆர்வம் உடையவர். இவருடைய இளமைப் பருவத்தில் கிரிக்கெட், கால்பந்து விளையாடினார். எப்போதும் கலகலப்பாகவும் துணிச்சலுடனும் இருப்பது இவர்

இயல்பு, மதம், சமயத்தத்துவம் போன்றவை பற்றி விவாதம் செய்வதில் இவருக்கு மிக விருப்பம்; மகாத்மா' புலேவின் நண்பராகவும் அவருடைய நெறியைப் போற்றுபவராகவும் விளங்கினார். கடும் உழைப்பாளியான இவர் இவருடைய சமூகத்தைப் பாதிக்கக் கூடிய பிரச்சினைகளில் அதிக அளவில் ஆர்வம்கொண்டிருந்தார்.

1892இல் இந்திய அரசு இந்திய இராணுவத்தில் இனி மகார்களைச் சேர்க்கக்கூடாது என்ற ஆணையைப் பிறப்பித்தது. இந்த அநீதிக்கு எதிராகச் சுபேதார் ராம்ஜி சக்பால் முன்னின்று முனைப்புடன் செயல்பட்டார். அநீதியான இந்த ஆணையை அரசு திரும்பப் பெற வேண்டும் எனக் கோரும் விண்ணப்பத்தை எழுதுவதற்காக, எப்பொழுதும் உதவிடத் தயாராக இருக்கும் ரானடேவிடம் சென்றார். சில ஆண்டுகள் கழித்து இந்த விண்ணப்பத்தின் நகல் தன் தந்தை வைத்திருந்த காகிதக் கட்டுகளில் இருந்ததைப் பீம் கண்டறிந்தார். வளர்ச்சித் திட்டத்தின்கீழ்க் கட்டப்படவுள்ள கட்டடங்களில் தீண்டப்படாதவர்களுக்கும் இடம் தர வேண்டும் என்று கோரிப் பம்பாய் மாகாணக் கவர்னரிடம் ராம்ஜி சக்பால் தன் தள்ளாத வயதிலும் பேட்டி கண்டு வலியுறுத்தினார். இத்தகைய நல்ல குடும்பம் என்ற மரத்தில் இனிய கனிகள் தோன்றுவது இயல்பே! தன் தந்தையிடமிருந்து துன்பம் பாராமல் செயல்படும் திறன், எடுத்த செயலை முடிக்கும் உள்ள உரன், சமூகத்தின் நலன்பற்றிய ஆழ்ந்த ஈடுபாடு ஆகிய இயல்புகளைப் பீம் பெற்றிருப்பது வியப்புக்குரியதன்று.

II

சத்தாராவில் பீம் தொடக்கக் கல்வியை முடித்தார். உயர் நிலைப்பள்ளியில் தன் அண்ணனுடன் சேர்ந்து படித்துக் கொண்டிருந்தார். பள்ளிப் பருவத்தில் தீண்டாமையின் கொடுமை எத்தகையது என உணரும் வாய்ப்பு அவருக்கு விரைவிலேயே ஏற்பட்டது. கோடையில் ஒருநாள் இவரும் இவருடைய அண்ணனும் அக்காள் மகனும் கார்கானில் காசாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்த தந்தையிடம் செல்லப் புறப்பட்டனர். படாலி தொடர் வண்டி நிலையத்தில் இறங்கி அங்கிருந்து மசூர் வரை பயணம் செய்தனர். இவர்கள் எழுதியிருந்த கடிதம் உரிய காலத்தில் கிடைக்காததால் இவருடைய தந்தை இவர்களுக்காக மசூர் நிலையத்திற்கு வரவில்லை. அப்பா வருவார் என்று பல மணி நேரம் காத்திருந்து அலுத்துப் போனார்கள். மசூர் நிலைய அதிகாரி ஒரு சாதி இந்து. இவரிடம் கெஞ்சிக் கேட்டுக் கொண்டு ஒரு மாட்டு வண்டியை

வாடகைக்கு ஏற்பாடு செய்து கொண்டு கார்கானுக்குப் புறப்பட்டனர்.

வண்டி சிறிது தொலைவு சென்றதும், நல்ல உடை உடுத்திக் கொண்டு வண்டியில் அமர்ந்துள்ள இச் சிறுவர்கள் தீண்டப்படாத வர்கள் என்பதை, வண்டிக்காரன் அறிந்து பதறினான். சாதி இந்துவான வண்டிக்காரன் தீண்டப்படாத இந்தப் பையன்கள் வண்டியில் ஏறியதால் வண்டி தீட்டாகிவிட்டதே, மாடுகளின் புனிதத்தன்மையும் பாழாகிவிட்டதே என்று சினந்தான். குப்பைத் தொட்டியில் தூக்கி எறிவதுபோல் வண்டியைக் குடை கவிழ்த்து இச் சிறுவர்களைக் கீழே உருட்டி விட்டான். இந் நிலையில் இரண்டு மடங்கு வாடகை தருவதாகக் கூறி வண்டிக்காரனைச் சமாதானப்படுத்தினர். பீமின் அண்ணன் வண்டியை ஓட்டிட, பீமும் அக்காள் மகனும் வண்டியில் அமர்ந்திருக்க, வண்டிக்காரன் பின்னால் நடந்துவர இவர்களின் பயணம் தொடர்ந்தது. மாலையிலிருந்து நள்ளிரவுவரை இப்படிப் பயணம் செய்தனர். நீர் வேட்கையால் நாக்கில் இருந்த ஈரமும் உலர்ந்துவிட்டது. வழியில் எங்குமே இவர்களுக்குக் குடிக்கத் தண்ணீர் கிடைக்கவில்லை. வழியில் குடிக்கத் தண்ணீர் கேட்டபோதெல்லாம், போ, போ என்று விரட்டினர்; அல்லது அழுக்கான நீர் கிடக்கும் இடத்தைக் காட்டினர். பீமின் பிஞ்சு மனத்தில் முதன் முதலில் ஏற்பட்ட நெஞ்சைப் பிளக்கும் கடுமையான அதிர்ச்சி இது! தான் தீண்டப்படாத குடும்பத்தைச் சேர்ந்தவன் என்பதையும் அழுகிய வற்றை உண்ணவும் அழுக்கானவற்றைக் குடிக்கவும் வேண்டிய இழிநிலை தனக்கு இருப்பதையும் அன்றுதான் பீம் அறிந்தார்.[10]

இது நடந்த சில நாள்களில் இந்த அறிதல் மேலும் உறுதிப்பட்டது. கடுமையான நீர் வேட்கைக்கு ஆளான பீம் ஒரு நாள் பொதுக் குடிநீர் நிலையில் எவருக்கும் தெரியாமல் நீர் அருந்தினார். இவர் தண்ணீர் குடித்ததைக் கண்டுபிடித்துவிட்ட னர்; அதற்காக இவரை நையப்புடைத்தனர்.

வளரும் பருவத்து நெஞ்சில் மற்றொரு அதிரடி விழுந்தது. ஒரு நாவிதர் இவருக்கு முடிதிருத்த மறுத்துவிட்டார். நாவிதர் தன் கத்தி இவருடைய மயிரைத் தொட்டாலே தீட்டாகிவிடும் என்று கருதினார்; இதைவிட எருமை மாட்டுக்கு மயிர் மழிப்பது மேலானது; புனிதமானது என்று நாவிதர் கருதினார். இந்த நாவிதரும் பீமைப்போல் ஓர் இந்துவே; இந்திய நாட்டினரே. இதை எண்ணிய பீமின் மனம் நைந்தது. பீமின் சகோதரிகள் பீமுக்கு முடிதிருத்தினர்.

பீமின் உணர்ச்சிமிக்க உறுதி வாய்ந்த உள்ளத்தில் இத்தகைய சமூகக் கொடுமைகள் எத்தகைய அழுத்தமான அழியாத பாதிப்புகளை ஏற்படுத்தி இருக்கும்! இத்தகைய சமூக இயலாமைகளின் துன்பங்களை ஏற்றபோதிலும், இழிவாக நடத்தப்பட்ட நிலையிலும் அனுபவம் என்கிற பள்ளியில் இவற்றைப் பொறுமையுடன் எதிர்கொள்ளும் ஆற்றலை வளர்த்துக்கொண்டார். இவை இவர் மனத்தில் பசுமரத்தாணி போல் பதிந்தன. மனம் புண்படும்படியாக மறுக்கப்பட்ட நிகழ்ச்சிகள், இழிவாக நடத்தப்பட்ட கொடுமைகள் ஆகிய அனைத்தும் சேர்ந்து இந்து மதத்தின்மீது வெறுப்பை வளர்த்தன. இந்த வெறுப்பு இவர் உள்ளத்தில் கொழுந்துவிட்டெரிந்து கொண்டேயிருந்தது. இவ்வாறாகத் தன் சொந்த மதத்துக்காரர்களே மனிதத் தன்மையற்ற முறையிலும் மனம் புண்படும்படியான அவமானத் தன்மையிலும் நடத்தியதைப் பீம் தன் இளமையில் உணர்ந்தார். பீம் மட்டுமன்று; அவருடைய இனம் முழுவதும் பன்னெடுங்காலமாக இத்தகைய துன்பத்தில் உழன்றுகொண்டிருக்கிறது.

வளரும் மனிதனின் குறுவடிவமே சிறுவன். பீமின் இளம் பருவத்தின் சில நிகழ்ச்சிகள் இவருடைய இயல்பைப் புலப்படுத்துகின்றன. அச்சம் தவிர்ந்த ஆற்றல், குன்றாது எப்போதும் எதிர்த்துப் போராடத் தயாராக இருக்கின்ற குணம் பீமிடம் இருந்தது. இப்படித்தான் இருக்க வேண்டும், நடக்க வேண்டும் என்று விதிக்கின்ற எவரையும் எதையும் மறுக்கின்ற மனப்பான்மை உடையவர் பீம். இவருடைய எதிர்ப்பையோ சவாலையோ எதிர்கொள்ளாமல் இவர் செய்கின்ற செயலை எவராலும் தடுத்து நிறுத்திவிட முடியாது. கொட்டும் மழையில் குடை இல்லாமல் பள்ளிக்குச் செல்ல முடியுமா என்று அவருடன் படிக்கும் ஒரு பையன் சவால் விட்டான். இந்தக் கடும் சவாலை ஏற்றார். நெப்போலியனின் நெஞ்சத்தில் குடிகொண்டிருந்த 'வெல்ல முடியாதது எதுவுமில்லை' என்ற வீர உணர்ச்சியுடன் குளிர்க் காற்றோடு வீசியடித்துப் பெய்த மழையில் நனைந்தவாறே பள்ளிக்கு நடந்துசென்றார் பீம். அவருடைய சட்டையும் இடுப்பில் உடுத்தியிருந்த சிறிய துண்டும் நனைந்து சொட்டின. இந்தக் கோலத்துடனேயே வகுப்பறைக்குள் நுழைந்தார். பந்த்சே என்ற இவருடைய வகுப்பு ஆசிரியர் ஒரு பார்ப்பனர். இக் காட்சியைக் கண்டு அவர் மனம் நெகிழ்ந்தார். தன் மகனை அழைத்தார்; பீமைத் தன்னுடைய வீட்டிற்கு அழைத்துச்சென்று வெந்நீரில் குளிக்கச்செய்து உடுத்திக்கொள்ள துண்டு ஒன்று அளிக்குமாறும், பீமினுடைய ஈரத்துணிகளைக் காயப்போடுமாறும் கூறினார்.

இதனால் தனக்கு ஒருநாள் விடுமுறை கிடைத்துவிட்டது என்ற வெற்றிக் களிப்பில் துள்ளி மகிழ்ந்தார். பீமின் இந்தக் களிப்பு கண்ணீராக மாறியது. ஆசிரியரின் வீட்டிலிருந்து வகுப்பறைக்கு அழைத்து வந்தனர். சட்டையில்லாமல் வகுப்பில் அமர்ந்திட நேர்ந்தது.

இந்த உயர்நிலைப் பள்ளியில் மற்றொரு பார்ப்பன ஆசிரியர் இருந்தார். அவருடைய குடும்பப் பெயர் அம்பேத்கர். அவர் மனிதத் தன்மையும் இரக்கமும் மிக்கவர்; ஆனால் ஆசிரியப் பணியில் ஒழுங்கில்லாதவர். அவர் பீமிடம் மிகுந்த அன்பு கொண்டிருந்தார். அவர் கொண்டுவரும் உணவில் - சோறு, ரொட்டி, காய்கள் - ஒரு பகுதியை இடைவேளையின்போது பீமுக்குத் தருவார். இந்த ஆசிரியர்தான் மாணவர் வாழ்வில் புதிய பதிவை ஏற்படுத்தினார்.

பீமின் அப்பாவின் ஆதிக் குடும்பப் பெயர் சக்பால். ஆனால் பீமின் குடும்பப் பெயர் அம்பவடேகர். அம்பவடே என்பது இவருடைய சொந்த ஊர் என்பதால் அம்பவடேகர் என்ற குடும்பப் பெயர் ஏற்பட்டது. மராட்டியத்தில் குடும்பப் பெயர்கள் முன்னோர் களின் சொந்த ஊரையே அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

பீமிடம் ஆழ்ந்த அன்பு கொண்டிருந்ததால் இவருடைய ஆசிரியர் அம்பவடேகர் என்ற பீமின் குடும்பப் பெயரைத் தன் குடும்பப் பெயரான அம்பேத்கர் என்று பள்ளிப் பதிவேடுகளில் மாற்றிவிட்டார். பள்ளி நேரத்தில் இந்த ஆசிரியர் இவருடைய நேரத்தை வேறு வகையில் கழிப்பார். பள்ளிக்குப் பக்கத்தில் இருந்த புகையிலைக் கடையில் கணக்குப் பிள்ளையாக வேலை செய்வார். அவ் வேளையில் வகுப்பைக் கவனித்துக் கொள்ளுமாறு வளர்ந்த ஒரு முஸ்லிம் பையனைப் பொறுப்பாக்கி விடுவார். இருப்பினும் மாணவர்களின் படிப்பு பாழ்படுவதைச் சரி செய்திட முயல்வார். பள்ளி ஆண்டு ஆய்வின்போது ஆய்வாளரின் பின்னால் நின்று கொண்டு கணக்குகளுக்கான விடைகளைச் சைகைமூலம் காட்டி விடுவார்.

பள்ளி நாட்களில் தன்னைப் பரிவுடன் நடத்திய இந்த ஆசிரியரை அம்பேத்கர் நன்றியறிதலுடன் நினைத்திருந்தார். பின்னாளில் அம்பேத்கர் முதலாவது வட்ட மேசை மாநாட்டிற்குப் புறப்பட அணியமாக இருந்தபோது, இந்த ஆசிரியரிடமிருந்து ஒரு பாராட்டுக் கடிதம் வந்தது. இக் கடிதத்தைப் புதையல்போல் கருதிப் பெருமையுடன் வைத்திருந்தார். ஒரு நல்ல சொல் மூன்று

குளிர்காலம்வரை கதகதப்பாகி இன்பந்தரும் என்ற கூற்று உண்மையே!

இந்த அன்பும் அரவணைப்பும் பாலைவனத்தில் பசுஞ்சோலை போல் மட்டுமே கிடைத்தன. மற்றபடி இப்பாலையில் சுட்டெரிக்கும் வெயிலும் கடும் வெம்மையுமே உறுத்தின. பீமும் அவருடைய அண்ணனும் பள்ளிக்குச் செல்லும்போது சிறிய சாக்குத் துண்டு ஒன்றை எடுத்துச் செல்வார்கள்; வகுப்பின் மூலையில் இதைக் கீழே போட்டு அதன் மீது அமருவார்கள். இவர்களுடைய குறிப்பேடுகளை ஆசிரியர் தொடுவதுமில்லை. இவர்களைப் பாடம் ஒப்பிக்கச் சொன்னால் தீட்டாகிவிடுவோமோ என்ற அச்சத்தினால் சில ஆசிரியர்கள் இவர்களிடம் கேள்வியும் கேட்கமாட்டார்கள். இந்தப் பையன்களுக்கு நீர் வேட்கையெடுத்தால் இவர்களின் மேல் நோக்கித் திறந்த வாய்களில் புனலில் ஊற்றுவதுபோல் மற்றவர்கள் நீரை ஊற்றுவார்கள்.

பீம் நன்கு படித்தாரா? அதுவரையில் அவருக்குப் படிப்பில் குறைந்த அளவில்கூட ஆர்வம் இல்லாமலிருந்தது. அவருக்கு விருப்பமான பொழுதுபோக்குகளிலும் விளையாட்டுகளிலும் சுதந்திரமாக ஈடுபட்டிருந்தார். தோட்ட வேலையில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். தனக்குக் கிடைக்கும் ஒவ்வொரு காசுக்கும் புதிய செடிகளை வாங்குவார். இதில் இவருக்கு ஆர்வம் குறைந்ததும் ஆடு வளர்ப்பதிலும் மாடு மேய்ப்பதிலும் இறங்கினார். வீட்டில் இவரைக் காண்பதே அரிது. 'ஒருமுறை நான் சத்தாரா நிலையத்தில் கழுவும் துப்புரவு வேலை செய்தேன். என் செயலால் என் அத்தை மனம் வருந்தினார். என்பால் பேரன்புகொண்டிருந்ததால் என்னைத் தண்டிக்க அவள் மனம் துணியவில்லை' என்று அம்பேத்கர் பின்னாளில் கூறியுள்ளார்.

பீம் தன் ஒன்பதாம் வயதில் இரண்டாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தபோது 1901இல், பூனாவில் எம். ஜி. ரானடே இறந்தார். நாற்பது ஆண்டுகள் கழித்து, பூனாவில் ரானடேவின் நினைவுநாள் நிகழ்ச்சியில் பேசும்போது, தான் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோது ரானடே இறந்த அன்று ஒருநாள் விடுமுறை கிடைத்ததுபற்றியும், அப்போது ரானடேவைப்பற்றித் தனக்கு ஒன்றும் தெரியாது என்றும், அவர் செய்த தொண்டுபற்றி அறிந்திருக்கவில்லை என்றும் அம்பேத்கர் குறிப்பிட்டுக் கூறினார். மாணவனாக இருந்த பீம் அன்று கிடைத்த விடுமுறைக்காக மகிழ்ந்தார்.

பீமின் தந்தை மறுமணம் செய்துகொள்வதில்லை என்ற எண்ணத்துடன் இருந்தார். மறுமணம் செய்துகொண்டால் சிற்றன்னையால் தன் மக்கள் துன்புறும் நிலை ஏற்படும் என்று கருதினார். பின்னாளில் இந்த எண்ணத்தை மாற்றிக்கொண்டு மறுமணம் செய்துகொண்டார். தன் தாயின் இடத்திற்கு இன்னொரு பெண் வருவதைப் பீம் விரும்பவில்லை. தன் தாயின் அணிகலன்களைத் தன் சிற்றன்னை அணிவதை வெறுத்தார். இனி தந்தையைச் சார்ந்து வாழக்கூடாது, தானே சம்பாதித்து வாழ வேண்டும் என்று எண்ணினார். சத்தாராவிலிருந்து பம்பாயில் உள்ள | தொழிற்சாலைகளுக்குப் பையன்கள் சென்று வேலையில் சேர்ந்திருக்கிறார்கள் என்று தன் சகோதரிகள் கூறக் கேட்டிருந்தார். எனவே பம்பாயில் நூற்பாலையில் வேலைக்குச் செல்லுவது என்று முடிவுசெய்தார்.

ஆனால் பம்பாய்க்குச் செல்ல பணத்திற்கு என்ன செய்வது? தன் அத்தையுடன் இரவில் தூங்கும்போது அத்தையிடம் உள்ள பணத்தைத் திருடுவது என்று திட்டமிட்டார். 'தொடர்ந்து மூன்று இரவுகள் அத்தையின் இடுப்பில் செருகியிருந்த பணப்பையைத் திருட முயன்றேன்; ஆனால் முடியவில்லை. நான்காவது இரவு ஒரு வழியாக அந்தப் பை என் கைக்கு வந்தது. அதில் அரை அணா மட்டுமே இருப்பதைக் கண்டு ஏமாற்றமடைந்தேன். இந்த அரையணாவில் நான் எப்படிப் பம்பாய்க்குப் போக முடியும்? நான்கு இரவுகளும் திருடும் முயற்சியில் ஈடுபட்டபோது என் உடல் பயத்தால் நடுங்கியது. எனவே வெட்கக்கேடான அந்தத் தன்மையில் இனிப் பணத்தைச் சேர்ப்பதில்லை என்று முடிவெடுத்தேன். வேறொரு முடிவுக்கு வந்தேன். இந்த முடிவுதான் என் வாழ்வில் புதிய திருப்பத்தையே ஏற்படுத்தியது. பள்ளிக்குச் செல்லாமல் விளையாடித் திரிகின்ற போக்கினைக் கைவிட்டுவிட்டு இனிக் கடுமையாக உழைத்துப் படித்துத் தேர்வுகளில் வெற்றிபெற வேண்டும். அப்போதுதான் சுயமாகச் சம்பாதித்துத் தந்தையின் சார்பு இல்லாமல் வாழ முடியும் என்று முடிவு செய்தேன்' என அம்பேத்கர் குறிப்பிட்டுள்ளார்.[11] அந்த நாளிலிருந்து பொறுப்பற்ற பழக்கங்களையும் செயல்களையும் அறவே கைவிட்டார். படிப்பில் கருத்தூன்றிக் கடுமையாக உழைத்துப் படிக்கத் தொடங்கினார். இந்தப் பையன் சரியாகப் படிப்பதில்லையே என்று ஏமாற்றமடைந்திருந்த ஆசிரியர்கள் இவருடைய தந்தையிடம் சிறந்த கல்வியை இவருக்கு வழங்குமாறு அறிவுரை கூறினார்கள்.

III

அம்பேத்கர் குடும்பத்தில் மற்றொரு மாற்றம் நிகழ்ந்தது. சுபேதார் ராம்ஜி சக்பால் குழந்தைகளுடன் பம்பாய்க்குக் குடியேறி

னார். பம்பாயில் கீழ்பரேல் பகுதியில் தபாக் தொழிலாளர் குடிசைப் பகுதியில் ஓர் அறை மட்டுமே உடைய குடிசையில் இவர்கள் வாழ்ந்தனர். இது தொழிலாளர் வாழும் பகுதி. தவறான செயல்களில் ஈடுபடுவோர் வாழும் பகுதியின் சூழ்நிலையே அங்கு நிலவியது. திருமணமாகியிருந்த ராம்ஜியின் பெண்களும் பம்பாயில் வாழ்ந்தனர். இவருடைய மகன்களை மராத்தா உயர்நிலைப் பள்ளியில் சேர்த்தார். இப்பொழுது பீம் படிப்பில் நல்ல முன்னேற்றம் கண்டிருந்தார். அப்பாவின் துணையுடன் ஹோவர்ட்ஸ் ஆங்கிலப் பாடநூலைக் (Howard's English Reader) கற்றார். மற்றும் தர்க்கத்கரின் புகழ்பெற்ற மொழிபெயர்ப்பு பற்றிய மூன்று நூல்களையும் படித்தார். பீம் மொழிபெயர்ப்பில் நல்ல தேர்ச்சி பெற்றிருந்தார். இவர் வகுப்பில் இருந்த பெரும்பாலான மாணவர்களைக் காட்டிலும் ஆங்கிலத்தில் நல்ல புலமை பெற்றிருந் தார். இவருடைய தந்தை கற்பிக்கக் கையாண்ட மொழிபெயர்ப்பு முறையானது சரியான சொல்லை இவர் தேர்ந்தெடுக்கவும், இவருடைய சொல்வள அறிவு வளர்ச்சி பெறவும், இந்தியாவின் முன்னணி எழுத்தாளர்களில் ஒருவர் என்ற புகழ் நிலைக்குத் தன்னை உயர்த்திக்கொள்ளவும் அடித்தளமிட்டது என்று நன்றியறி தலுடன் கூறிப் பின்னாளில் தந்தையை நினைவுகூர்ந்தார்.

திலகர், சாவர்க்கர் போன்றே இளமையில் நூல்களைப் படிப்பதில் பீம் பேரார்வம் கொண்டிருந்தார். நூல்களை வாங்க வேண்டும் என்ற ஆர்வம் என்றுமே தணிந்ததில்லை. பாட நூல்களைப் படிப்பதைவிட மற்ற நூல்களைப் படிப்பதிலேயே பெருவிருப்பு கொண்டிருந்தார். எல்லா அறிவார்ந்த அரசியல்வாதிக ளும் சான்றோர்களும் இளமையில் இடைவிடாது விரும்பிப் படித்ததின்மூலம் தங்கள் எதிர்காலத் திறமைக்கும் ஆளுமைப் பண்புக்கும் அடித்தளம் அமைத்துக்கொண்டனர். பல்துறைபற்றி ஆழ்ந்து படித்தமையும், வரலாற்றுத் தொலைவுணர்வு நோக்கும் இவர்கள் வாழ்வில் பெருமையையும் செம்மையையும் சேர்த்தன. எதிர்காலத் திறமைக்கு அடித்தளமான அறிவை இவர்கள் தம் படிப்பால் திரட்டிக்கொண்டிருந்ததால், வகுப்பில் முதல்நிலை மாணவனாகத் திகழ வேண்டும் என்பதில் ஆர்வம் காட்டவில்லை. இங்கு ஒன்றை நாம் மனங்கொள்ள வேண்டும். திலகரும் சாவர்க்கரும் பார்ப்பனர்கள் என்பதால் படிக்க வேண்டும் என்ற இயல்பான விழைவு அவர்களுக்கு இருந்தது. படிப்பதற்குத் தேவையான நூல்களும் கிடைத்தன. தீண்டப்படாத - கல்வியறிவு இல்லாத சூழ்நிலையில் பீம் இருந்ததால் நிலைமை இதற்கு நேர் எதிராகவே இருந்தது. சாதாரண வசதி வாய்ப்பும், குறைந்த அளவில்

செல்வாக்கும் உடையவராக பீமின் தந்தை இருந்தபோதிலும் தன் மகன் படிப்பதற்காகப் புதிய புத்தகங்களை விருப்பமுடன் வாங்கிக் கொடுத்தார். நூல்கள் வாங்குவதற்காகத் தன் பெண்களிடம் சக்பால் கடனாகப் பணம் வாங்கினார். சில போழ்து அவர்களுடைய நகைகளை அடகு வைத்து நூல்களை வாங்கினார். குறைந்த அளவு ஓய்வு ஊதியமான அய்ம்பது ரூபாய் கைக்குக் கிடைத்ததும் இந்த நகைகளை மீட்டுக் கொடுப்பார். தன் மகன் சிறந்த படிப்பாளியாக உருவாக வேண்டும் என்று தீவிரமாக விரும்பினார். எனவே தன் மகன் கடுமையாக உழைத்துப் படிக்கிறானா என்பதை நாள்தோறும் கவனித்து வந்தார். இதனால் இவர் கண்டிப்புடன் நடந்துகொண்டார். இது பீம் மனத்தை அடிக்கடி சலிப்புறச் செய்தது.

அண்மைக் காலம்வரையில் பம்பாயில் புகழ்பெற்று விளங்கிய எல்பின்ஸ்டன் உயர்நிலைப் பள்ளியில் சில மாதங்கள் கழித்துப் பீம் சேர்ந்தார். இப்பொழுது பீம் நன்கு உழைத்துப் படித்தார். பரேலில் பழைய குடிசைப் பகுதியில் ஓரறை கொண்ட குடிசையில்தான் அப்போதும் இருந்தனர். படிப்பதற்கு எனத் தனி அறை இல்லை; பாடம் கற்பிக்கத் தனியாக ஆசிரியரை அமர்த்திடப் பண வசதியும் இல்லை. வீடு முழுவதும் தட்டுமுட்டுச் சாமான்கள் நிரம்பிக் கிடந்தன. புகை படிந்த, பொருள்கள் குவிந்த சிறிய வீடு. தலைக்கு மேலும் வீட்டின் ஒரு மூலையிலும் விறகுகள் குவிக்கப்பட்டிருந்தன. மற்றொரு மூலையில் அடுப்பு இருந்தது. சமையலறை, வரவேற்பறை, ஓய்வறை, படிப்பறை எல்லாம் அந்த ஓரறை வீடே!

தனக்கே உரிய தன்மையில் தன் மகன் படிப்பதற்கான வசதியை ஏற்படுத்திக் கொடுத்தார். தன் மகனை முன்னிரவிலேயே தூங்கச் சொல்லிவிடுவார். பீம் மெத்தையின் மீது தூங்குவார். அவர் தலைப்புறத்தில் சுவரையொட்டி தானியம் அரைக்கும் திருகை கிடக்கும். அவருடைய கால் புறத்தில் ஒரு பெண் ஆடு பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்கும். அவருடைய தந்தை விடியல் இரண்டு மணிவரை அமர்ந்திருப்பார். அதன்பின் தன் மகனை எழுப்பிப் படிக்கச்செய்துவிட்டுத் தூங்கச் செல்வார். கண்ணாடியும் இல்லாத மண்ணெண்ணெய் விளக்கின் காற்றில் அசையும் ஒளியில் காலைவரையில் பீம் படிப்பார். காலையில் சிறிது நேரம் தூங்கி எழுந்து குளித்துவிட்டுப் பள்ளிக்குச் செல்வார்.

இழிவுபடுத்தப்படாமல் இப்பள்ளியிலேனும் இவர் படித்திருப்பார் என்று கருத இடம் இருக்கிறது. இது ஒரு அரசுப்

பள்ளியாக இருந்தபோதிலும் சாதியக் கொடுமையிலிருந்து விடுபட வில்லை. இங்கும் அந்த வெறுப்பும் பகையும் இருந்தன. புறத்தேயிருந்த புண்படுத்தும் உலகின் குறு வடிவாகவே அப்பள்ளியும் இருந்தது. கரும் பலகையில் கணக்கு ஒன்றைப் போட்டுக்காட்டுமாறு ஒருநாள் பீமை ஆசிரியர் அழைத்தார். உடனே வகுப்பில் தடபுடவென ஓசை கேட்டது. வகுப்பில் நிறுத்தப்பட்டிருந்த கரும்பலகையின் பின்னால் தாம் கொண்டுவந்த உணவுத் தூக்கிகளைச் சாதி இந்து மாணவர்கள் வைப்பது வழக்கம். பீம் கரும்பலகை அருகில் நின்று அதில் எழுதுவதால் அவர்கள் உணவு தீட்டாகிவிடும் என்று அஞ்சி விழுந்தடித்துக்கொண்டு ஓடிச் சென்று அவரவர் உணவுத் தூக்கியை அங்கிருந்து எடுத்துத் தள்ளி வைத்தனர். அந்த உணவுத் தூக்கிகள் ஒன்றுடன் ஒன்று மோதிக்கொண்டதால் ஏற்பட்ட ஓசை இந்த மாணவர்களின் பெற்றோர்கள் வீட்டிலும் வீதியிலும் தாழ்த்தப்பட்டவர்களைப் பார்த்து இழிவாகப் பேசுவதைப் போல நெஞ்சத்தைக் கிழிப்பதாக இருந்தது. 'நீ படிப்பது வீண்' என்று ஒரு ஆசிரியர் பீமிடம் அடிக்கடி சொல்லிக்கொண்டிருந்தார். இது பீமின் உள்ளத்தை எரிச்சலுறச் செய்தது. ஒருநாள் வழக்கம்போல் அந்த ஆசிரியர், 'நீ படிப்பது பயனற்றது' என்று சொன்னபோது, பீம் சினத்துடன், 'உங்கள் வேலையை நீங்கள் பார்த்துக்கொண்டு போங்கள்' என்று கூறினார்.[12]

பகல் உணவைப் பீம் பள்ளியில் உண்பார். சில ரொட்டித் துண்டுகளும் காய்கறியும்தான் பகல் உணவு. கோட்டைப் பகுதிக்கு வேலைக்குப் போகும் அவருடைய குடிசைப் பகுதி ஆள் ஒருவர்தான் பள்ளிக்குப் பீமின் பகல் உணவைக் கொண்டுவந்து தருவார். தொழிலாளர் குடியிருப்பில் வாழ்ந்ததால் பீம் தொழிலாளர் களின் துன்பங்களை நன்கறிந்து இருந்தார். தொழிற்சாலையில் பணிபுரியும் அவருடைய உறவினர்கள் சில பேருக்குச் சில வேளைகளில் பீம் உணவு எடுத்துச் செல்வார். அப்போது தொழிற்சாலைகளில் உள்ள தொழிலாளர் நிலையை நேரில் கண்டார். பள்ளி மாணவன் என்ற முறையில் பீமுக்கு மகிழ்ச்சியான பொழுதுகளும் அமைந்தன. அப்பொழுது கிரிக்கெட், கால்பந்து விளையாடினார். இவர்தான் இக் குழுக் களுக்கு அடிக்கடி தலைவராக இருந்தார். விளையாட்டில் ஏற்பட்ட தோல்விகள் பெரும்பாலும் கைகலப்பிலேயே முடிந்தன. இவ்வாறு மூன்று ஆண்டுகள் கழிந்தன. பள்ளியில் தன் பாடங்களைப் படிப்பதிலும் நல்ல முன்னேற்றம் அடைந்திருந்தார். உழைத்து நன்கு படித்ததா லும், திறமையாகத் தேர்வுகளை எழுதும் ஆற்றலாலும் ஒவ்வொரு ஆண்டும் தேர்ச்சி பெற்று வந்தார்.

ஆயினும் மனம் புண்படும்படியான நிகழ்ச்சிகள் பள்ளி வாழ்க்கையில் தொடர்ந்தன. வாழ்நாள் முழுவதும் வெறுப்புடன் நினைக்கும்படியான நிகழ்ச்சி ஒன்றும் நடந்தது. இரண்டாவது மொழிப் பாடமாகச் சமசுகிருதத்தைப் பீமும் அவருடைய அண்ணனும் எடுத்துப் படித்திட அனுமதிக்கப்படவில்லை. சூத்திரர்களும் தீண்டப்படாதவர்களான ஆதி சூத்திரர்களும் படிக்கவோ, மற்றவர் படித்தால் பக்கத்தில் நின்று கேட்கவோ கூடாது என்று தடை விதிக்கப்பட்டிருந்த வேதங்களைக் கற்பதற்குச் சமசுகிருதமே திறவுகோல் போன்றதாகும். வேதங்களை நம்புபவன்தான் இந்து என்று, திலகர் போன்றே, பழமைவாதிகளிடம் செல்வாக்கு பெற்றிருந்த இந்துத் தலைவர்கள் கூறுகிறார்கள். ஆனால் எழுபது விழுக்காட்டு மக்களுக்கோ, வேதங்களைப் படிக்கவும் கேட்கவும் தடை விதித்துள்ளது இந்து மதம். ஆயினும் வேறு மதங்களைச் சேர்ந்த வெளிநாட்டினர் வேதங்களைப்பற்றி எழுதியுள்ள ஆய்வுக் கட்டுரைகளை இதே இந்துத் தலைவர்கள் நயம் பாராட்டியும் மெய்ப்பாட்டு அசைவுகளுடனும் படித்துப் பாராட்டுகின்றனர். பீமும் அவருடைய அண்ணனும் சமசுகிருதத்தைக் கற்க முடியாமல் ஒதுக்கப்பட்டனர். இதே போன்று சமசுகிருதத்தைப் பாடமாகப் படிக்க முடியாமல் பார்ப்பன ஆசிரியர்கள் டாக்டர் எம்.ஆர்.ஜெயகரைத் தடுத்தனர். பீம் அவர் விருப்பத்திற்கு மாறாகப் பெர்சியன் மொழியை எடுத்துப் படிக்க நேர்ந்தது. இந்து மதத்தைக் காப்பவர்கள் என்பவர்களால் இந்த இரண்டு இந்து மாணவர்களின் தொண்டையில் அவர்கள் விருப்பத்திற்கு மாறாக மற்றொரு நச்சு மாத்திரை திணிக்கப்பட்டது. இந்த இந்து மதக்காப்பாளர்கள், இவர்களுடைய இந்த மத வெறியை மற்ற மதங்களின் ஆதிக்கச் சக்திகளிடம் இதே தன்மையில் காட்டியிருந்தால் தமது சொந்த மண்ணிலேயே அவமானப்படும்படியாக நேர்ந்த நிலையைத் தவிர்த்திருக்கலாம்.

பின்னாளில் அம்பேத்கர் தமது சொந்த முயற்சியாலும், பண்டிதர்களின் துணைகொண்டும் சமசுகிருதத்தைக் கற்றார். இதில் புலமை பெற்றார். சமசுகிருதத்திற்குப் பெர்சியன் மொழி ஈடாகாது என்று அம்பேத்கர் கருதினார். "சமசுகிருதம் காவியங்களின் புதையல்; அரசியலுக்கு, தத்துவத்திற்கு, இலக்கணத்திற்கு இது தொட்டில்; நாடகங்களுக்கு, தர்க்க இயலுக்கு, திறனாய்வுக்கு இது ஒரு வீடு" என்று அம்பேத்கர் குறிப்பிட்டுள்ளார்.[13]

குறுகிய மனங்கொண்ட மத வெறியர்கள் சுமத்திய இழிவுகளும் ஏற்படுத்திய ஆழமான மனப் புண்களும் ஒரு புறம் இருக்க

வாழ்வில் உயர்நிலையை அடைதலே குறிக்கோள் என்று பீமின் தந்தை தொடர்ந்து ஊக்குவித்துக் கொண்டேயிருந்தார். இதே போன்று நல்ல மனம் படைத்தவர்களும் பீமை ஊக்குவித்தனர். இதனால் பீம் முறையாகப் படித்து வந்தார். 1907ஆம் ஆண்டு எல்பின்ஸ்டன் உயர்நிலைப் பள்ளியில் மெட்ரிகுலேசன் தேர்வில் தேர்ச்சி பெற்றார். இதற்குச் சிறிது காலத்திற்கு முன்பே பண நெருக்கடி காரணமாகத் தன் மூத்த மகன் ஆனந்தராவைப் பள்ளியிலிருந்து நிறுத்திவிட்டார். இவரை வேலையில் சேர்த்து இந்த வருவாயையும் துணையாகக்கொண்டு பீமை உயர் கல்வி கற்கச் செய்வது என்று முடிவு செய்திருந்தார். பீம் மொத்தம் 750 மதிப்பெண்களுக்கு 282 மதிப்பெண்கள் பெற்றிருந்தார். பெர்சியன் மொழிப் பாடத்தில்தான் அதிக மதிப்பெண் எடுத்திருந் தார். பீம் பெற்றிருந்த மதிப்பெண் சராசரியானதுதான். தம் வாழ்நாளில் பெரும் தலைவர்களாக உருவானவர்கள் கல்வி பயின்ற காலத்தில் பாட நூல்களைப் படிப்பதைவிட மற்ற நூல்களைப் படிப்பதிலேயே அதிக நாட்டம் கொண்டிருந்ததால் சராசரி மதிப்பெண்கள்தான் பெற்றனர்.

ஆயினும் தீண்டப்படாத மாணவன் ஒருவன் தேர்ச்சி பெற்று இவ்வளவு மதிப்பெண் பெற்றிருப்பது பெருஞ்சாதனையாகக் கருதப்பட்டது. எனவே இந்த நிகழ்ச்சி பீம் சமூகத்தினரால் ஒரு விழாவாக மகிழ்ச்சியுடன் கொண்டாடப்பட்டது. புகழ் பெற்றிருந்த சமூகச் சீர்திருத்தவாதியான எஸ்.கே.போலே தலைமையில் பம்பா யில் பீமுக்கு ஒரு பாராட்டுக் கூட்டம் நடத்தப்பட்டது. புகழ் பெற்ற மராத்தி எழுத்தாளரும் சமூக சீர்திருத்தவாதியுமான கிருஷ்ணாஜி அர்ஜுன் கெலுஸ்கர் இவ் விழாவில் கலந்து கொண்டார். இவர் வில்சன் உயர்நிலைப் பள்ளியின் உதவி ஆசிரியர். மாலைப் பொழுதுகளில் ஒரு பூங்காவில் கெலுஸ்கர் படிப்பது வழக்கம். பீமும் இதே பூங்காவுக்கு வந்து படிப்பார். அதனால் இருவர்க்கும் தொடர்பு ஏற்பட்டது. இச் சிறுவயதிலேயே இந்த அளவிற்கு ஆர்வமுடனும், முனைப்புடனும் படிக்கும் பீம் கெலுஸ்கரின் நெஞ்சத்தைக் கவர்ந்தார். எனவே கெலுஸ்கர் பீமுக்குப் படிக்கப் புத்தகங்கள் கொடுத்து வந்தார். இந்தப் பாராட்டு விழாவில் தான் எழுதிய "கௌதம புத்தரின் வரலாறு" என்ற நூலின் ஒரு படியைப் பீமுக்குப் பரிசாக வழங்கினார். பீமின் அருஞ் செயல்களைப் பாராட்டிப் பேசினார். கூட்டம் முடிந்தபின் சுபேதார் ராம்ஜி சக்பால் அவர்களிடம், 'உங்கள் மகன் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து உயர் கல்வி கற்கப் போகிறானா?' என்று கேட்டார். தனக்கு உள்ள இயலாமைகள் தடையாக இருந்த

போதிலும் எப்படியும் மேற்கொண்டு பீமைப் படிக்க வைப்பது என்று முடிவு செய்திருப்பதாகப் பீமின் தந்தை கூறினார்.

IV

மெட்ரிகுலேசன் தேர்வில் வெற்றிபெற்ற சில நாள்களிலேயே பீமராவுக்குத் திருமணம் நடைபெற்றது. அந்நாளில் குழந்தை மணமே வழக்கமாயிருந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பிறந்த பல தலைவர்களுக்கும் மெட்ரிகுலேசன் தேர்வில் தேர்ச்சி பெற்ற உடனேயே திருமணம் நடந்துள்ளது. இந்த வழக்கத்தின் காரணமாகவே சுபேதார் ராம்ஜியும் தன் மகனுக்குத் திருமணம் செய்திட விழைந்தார். தந்தையின் விருப்பத்தை மறுக்க இயலாமல் பீம் திருமணத்திற்கு இசைந்தார். தன் மகன் திருமணம்பற்றிப் பல நாட்களாக ராம்ஜி சக்பால் எண்ணிக்கொண்டிருந்ததால், சில பெண்களைப் பார்த்து வேண்டாம் என்று ஒதுக்கிவிட்டார். ஒருமுறை ஒரு பெண்ணைத் தேர்ந்தெடுத்து மணம் பேசிவிட்டார்; அதன்பின் மனம் மாறி அப்பெண் வேண்டாம் என்று கூறிவிட்டார். மணம் பேசி ஒப்புதல் தந்த பெண்ணை வேண்டாம் என்று மறுத்ததற்காகச் சாதிப் பஞ்சாயத்துக்கு அய்ந்து ரூபாய் அபராதம் செலுத்தினார். ஒரு புதுமையான இடத்தில் பீமின் திருமணம் நடந்தது. பம்பாயில் பைகுல்லா மார்க்கெட்டில் ஒரு திறந்த கொட்டகையில் பீமின் திருமணம் நடந்தது. இந்த அங்காடியில் பகல் வியாபாரம் முடிந்தபின், இரவில் மணமகனும் அவருடைய உறவினர்களும் அகன்றிருந்த மேல் கூரையில்லாத கொட்டகையின் ஒரு மூலையில் குழுமினர். மற்றொரு மூலையில் மணமகளும் அவருடைய உறவினர்களும் கூடினர். அவர்கள் இருந்த இடத்தில் சாக்கடை நீர் ஓடிக்கொண்டிருந்தது. பகலில் பொருட்களை வைத்து விற்கும் கல் மேடைகள் அவர்கள் அமர்வதற்குப் பெஞ்சுகளாயின. அந்த மார்க்கெட் முழுவதும் திருமணக் கூடமாயிற்று.

சடங்குகளுடனும் மகிழ்ச்சி ஆரவாரங்களுடனும் திருமணம் நடைபெற்றது. விடியற்காலை மீன் விற்கும் பெண்கள் வருவதற்கு முன் எல்லோரும் அங்கிருந்து கலைந்துசென்றனர். அப்போது பீமராவுக்கு வயது பதினேழு. அவர் மனைவி இராமிக்கு அகவை ஒன்பது. இவர் பெயர் ராமாபாய் என்று மாற்றப்பட்டது. இவர் தன்னடக்கமான நல்ல பெண். நல்லியல்புடைய ஓர் ஏழ்மையான குடும்பத்தில் இரண்டாவது மகளாகப் பிறந்தவர். இவர் தந்தையின் பெயர் பிக்கு வலங்கர். தபோலியில் சுமை தூக்கும் கூலியாகப் பணிபுரிந்துவந்த இவர் இத்திருமணத்திற்கு முன்பே இறந்து விட்டார்.

இக் காலக்கட்டத்தில் தீண்டப்படாதவர் பிரச்சினை மெல்ல மெல்லத் தலைதூக்கத் தொடங்கியது. மராட்டியத்தில் தீண்டப் படாதவரிடையே இருந்து சிவராம் ஜான்ப காம்பிளே தலைவராக உருவானார். இந்தியாவில் தீண்டப்படாதவர்களின் முதல் மாநாட்டை நடத்திய பெருமைக்குரியவர் இவரே. பூனாவில் 'சோம வான்ஷியா மித்திரா' என்ற மாத இதழை நடத்தினார். தீண்டப்படாத வர்களின் வாழ்வில் விழிப்பையும் உயர்வையும் உண்டாக்கக் கோரி பிரிட்டிசு அரசுக்கு 1910இல் விண்ணப்பம் விடுத்தார். தீண்டப்படாதவர்கள் அவர்களின் முன்னோரின் வாழ்க்கை நெறிக ளின்படி வாழ்ந்திட அனுமதிக்க வேண்டும் என்று கோரியிருந்தார்.

இதே காலத்தில் மராட்டிய சமூகத்திலிருந்து மற்றொரு தலைவர் தோன்றினார். அவர்தான் கர்ம வீரர் வி.ஆர்.ஷிண்டே. ஆக்ஸ் போர்டு பல்கலைக் கழகத்தில் சமூகவியல், மதங்களின் ஒப்பீடு ஆகியவற்றைப் பயின்றவர். இங்கிலாந்தில் கீழ்த்தட்டு வகுப்பு மக்களின் மேம்பாட்டிற்காகச் செயல்படும் தொண்டு நிறுவனங்கள் பற்றி நன்கு அறிந்திருந்தார். இந்தியாவிற்குத் திரும்பியபின், நாட்டுப்பற்று மிக்க இந்தச் சமூகச் சீர்திருத்தவாதி இந்தியா முழுவதும் சுற்றுப்பயணம் செய்தார். சர் நாராயணன் கணேஷ் சந்தவர்க்கர் துணையுடன் 1906இல் 'இந்திய ஒடுக்கப்பட்ட வகுப்புகள் கழகத்தை' அமைத்தார். தீண்டப்படாத மக்களின் விடியலுக்காக அமைப்பு ரீதியாக மேற்கொள்ளப்பட்ட முதல் முயற்சி இதுவே. விரைவில் இந்தியாவின் முக்கிய நகரங்களில் இதன் கிளைகள் தோன்றின. கோகலேவின் 'இந்தியச் சமூக ஊழியர்கள் சங்கமும்' தீண்டப்படாதவர்களுக்கு ஆதரவாக இருந்தது.

தன் தந்தையின் விழுமிய நோக்கத்தினால் ஊக்கம் பெற் றிருந்த பீமராவ் அம்பேத்கர் பம்பாயில் எல்பின்ஸ்டன் கல்லூரியில் சேர்ந்தார். ஒரு தீண்டப்படாதவருக்கு இது ஒரு புதிய அனுபவம்; புதிய வாழ்வு; முன் மாதிரியில்லாத ஒரு புதிய வாய்ப்பு. தொடக்கம் முதலே முனைப்புடன் படிக்கத் தொடங்கினார். ஆனால் உடல் நலிவு காரணமாக ஓராண்டு வீணாயிற்று. இவர் இடைநிலைக் கலைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற சமயத்தில் இவருடைய தந்தைக்குப் பெரும் பணமுடை ஏற்பட்டது. அந்நிலையில் கெலுஸ்கர் உற்றுழியுதவினார். உடனடியாகப் பரோடா மன்னரைச் சந்தித்தார். 'அவரிடம் சில நாட்களுக்கு முன் பம்பாய் டவுன் ஹால் கூட்டத்தில் உயர் கல்வி கற்பதற்குத் தகுதி வாய்ந்த சிறந்த தீண்டப்படாத மாணவனுக்கு உதவிடத் தயாராக இருப்பதாக

மன்னர் அறிவித்ததை அவருக்கு நினைவூட்டினார். சாயாஜிராவ் கெய்க்வாடு சொன்னதைச் செய்யும் ஒரு நல்ல சிற்றரசர். எனவே இந்த வாய்ப்பினை அவர் வரவேற்றார். பீமராவ் மன்னரைச் சந்திக்க அழைக்கப்பட்டார். இந்தப் பெரும் புரவலர் பீமராவிடம் சில கேள்விகள் கேட்டார். பீமராவின் விடைகள் மன நிறைவு தந்தன. மாதம் இருபத்தைந்து உருபாய் உதவித் தொகை வழங்குவதாகச் சிற்றரசர் கூறினார். தான் உண்மையான ஓர் ஆசிரியர் என்பதைக் கெலுஸ்கர் இதன்மூலம் நிரூபித்தார். தான் ஏற்கனவே அன்பளிப்புச் செய்த நூலின்மூலம் தன் மாணவன் சாதியக் கொடுமைகளுக்கு எதிராகத் தாக்குதல் தொடுக்குமாறு மறைமுகமாகத் தூண்டினார்; கல்வி உதவித்தொகையைப் பெற்றுத் தந்ததன்மூலம் தன் மாணவனின் வாழ்க்கைப் பாதை ஒளி மிக்கதாகவும் அறிவின் அடித்தளம் உறுதி மிக்கதாகவும் ஆக உதவினார்.

எல்பின்ஸ்டன் கல்லூரிப் பேராசிரியர் முல்லர், பீமுக்குக் கல்லூரிப் படிப்பின்போது உறுதுணையாக நின்றார். படிக்க நூல்கள் கொடுத்தார்; உடுத்திட உடைகள் தந்து உதவினார். ஆயினும் பீமின் உள்ளத்தை இந்தியாவில் எந்தப் பேராசிரியரும் ஈர்க்கவில்லை. இழிவுபடுத்தும் சூழ்நிலையும் ஒடுக்கப்பட்ட மக்களின் இரங்கத்தக்க நிலையும் இவருடைய உள்ளத்தை அமைதியிழக்கச்செய்தன. கல்லூரியின் உணவுக் கடை உரிமையா ளர் ஒரு பார்ப்பனர். அவர் பீமுக்குத் தண்ணீரோ தேநீரோ கூடத் தரமாட்டார்.

தேர்வில் வெற்றிபெற வேண்டும் என்ற நோக்கத்துடன் பீமராவ் அம்பேத்கர் இப்பொழுது படித்தார். படிப்பது என்பது இவருடைய வாழ்வில் இணையிலா இன்பம் தந்தது. படிப்பது வாழ்வின் ஒரு விழுமிய நோக்கத்திற்காக எனக் கொண்டார். சிறந்த வாழ்க்கை அமைவதற்கு வழி வகுத்துத் தருகின்ற வாய்ப்புகளை நன்கு பயன்படுத்தித் தன்னை உயர்த்திக்கொள்ள வேண்டும் என்று உறுதிபூண்டார். அறிவின் களஞ்சியமாக ஆதலே குறிக்கோளாகக்கொண்டு படித்தார். தன் அறிவின் திறனை வளர்த்தார்.

இந்நிலையில் சுபேதார் ராம்ஜி பம்பாயில் பரேலில் புதிய குடியிருப்புப் பகுதி எண்-1இல் குடியேறினார். இரண்டாவது மாடியில் எதிரெதிர் அமைந்திருந்த அறை எண் 50, 51 ஆகியவற்றில் வாழ்ந்தனர். அறை எண் 50 படிக்கும் அறையாகவும் வரவேற்பு அறையாகவும் இருந்தது, மற்றது வீட்டின் பிற

தேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டது. பீமராவ் அம்பேத்கர் அறை எண் 50இல் படிப்பார். வெளியில் அமர்ந்து கொண்டு தன் மகன் படிப்பதைக் கவனித்துக்கொண்டிருப்பார் ராம்ஜி. இறுதித் தேர்வு நெருங்கியதும் இன்னும் பீமராவ் தீவிரமாகப் படித்தார். 1912இல் பி.ஏ., தேர்வில் வெற்றி பெற்றார். பின்னாளில் அம்பேத்கர் நிறுவிய சித்தார்த்தர் கல்லூரியில் முதல்வராக இருந்த ஏ.பி. கஜேந்திர கட்கர் இத்தேர்வில் முதல் நிலை மாணவராகத் தேறினார்.

இக்காலக்கட்டத்தில் இந்தியக் குடிமக்களின் உரிமைகளைப் பிரிட்டிஷ் அரசு முற்றாக ஒடுக்கிட முனைந்தது. பேச்சுரிமை, கூட்டம் கூடும் உரிமை ஆகியவை மெல்லமெல்லப் பறிக்கப்பட்டன. இதைப்பற்றிய புகார்கள், எதிர்ப்புகள், கோரிக்கைகள் ஆகிய அனைத்தும் ஆட்சிக்கு எதிரான முணுமுணுப்புகள் என்று கூறிப் புறக்கணிக்கப்பட்டன. இந்த உரிமைகளுக்காகப் போராடியவர்கள் ஆட்சியைக் கவிழ்க்க முனையும் அரசத் துரோகிகள் என்று முத்திரை குத்தப்பட்டனர். இதனால் ஆட்சிக்கு எதிரான வெறுப்பு அலை தோன்றிச் சூறாவளியாகச் சுற்றிச் சுழன்று வீசியது. முன் எப்போதும் இல்லாத அளவில் அரசு எதிர்ப்பு உணர்ச்சி குமுறும் எரிமலையாயிற்று. அரசின் இத்தகைய ஒடுக்குமுறை அம்பேத்கரின் உள்ளத்திலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. மாண்டலே சிறைக்குத் திலகரை நாடு கடத்தியதால் மக்களுக்கு ஏற்பட்ட மனக் கொதிப்புக்குப் பழி வாங்கும் நோக்குடன் சாவர்க்கர் சகோதரர்களை அந்தமானுக்கு அனுப்பியது. மற்றும் பல தலைவர்களையும் பத்திரிகையாளர்களையும் சிறையில் அடைத்தது. நாட்டுப்பற்று கொழுந்துவிட்டெரிந்த தீரம் மிக்க இளைஞர்களைத் தூக்கிலிட்டது. இத்தகைய நிகழ்ச்சிகள் மராட்டியத்தின் அடித்தளமே ஆட்டங்காணு மாறு அதிரச்செய்தன. திலகரும் சாவர்க்கரும் நாடு கடத்தப்பட்ட பின் மராட்டியம் முழுவதும் ஒரு பிரளயம் ஏற்பட்டதுபோல் உணர்ச்சி பொங்கியது.

இந்த ஒடுக்குமுறைகளால் ஏற்பட்ட விளைவுகள் அம்பேத்கர் அவர்களின் நாட்டுப்பற்று மிக்க நெஞ்சத்தை எவ்வாறு பாதித்தன என்பதை, 'பிரிட்டிஷ் இந்தியாவில் மாகாண நிதியின் வளர்ச்சிக் கோட்பாடு' (The Evolution of Provincial Finance in British India) என்ற தாம் எழுதிய புகழ் பெற்ற வரலாற்று ஆய்வில் குறிப்பிட்டுள்ளார். 'அதிகாரம் ஒரு போதும் தானே தற்கொலை செய்துகொள்ளாது' என்று குறிப்பிட்டுவிட்டு, அந்தக் காலக்கட்டத்தில் பிரிட்டிஷ் அரசு மேற்கொண்ட ஒடுக்கு முறைகளைப்பற்றி பீமராவ் பின்வருமாறு விளக்கியுள்ளார்.

"அரசுக்கு எதிராகத் தோன்றக்கூடிய எதிர்ப்புகளைத் தடுப்பதற்கென நிர்வாகத்துறை பெற்றிருக்கிற குற்றவியல் சட்டம், தண்டனை விதிப்புச் சட்டம் ஆகிய அதிகாரங்களை ஆயுதமாகத் தரித்துக்கொண்டிருப்பது போதாதென்று, உலகில் வேறெங்கும் இல்லாத அளவிற்குப் புதிய ஒடுக்குமுறைச் சட்டங்களை உருவாக்கி இந்தியச் சட்டப் புத்தகத்தையே கறைபடியச் செய்து விட்டது" என்று இதில் குறிப்பிட்டுள்ளார். ஆளும் அதிகார வர்க்கம் பிற்போக்கானது, அடக்குமுறை மிக்கது, பொறுப்பற்றது என்று கண்டித்துள்ளார். 'கல்விக்கும் தொழிலுக்கும் பணத்தைச் செலவிடாமல் அரசு ஊழியத்திற்கே அதிகமாக அரசு செலவிடுகிறது என்று குற்றஞ் சாட்டினார். 1910ஆம் ஆண்டைய பத்திரிகைச் சட்டம் பத்திரிகைகளின் வாயைப் பூட்டியது. இதே தன்மையில் பொதுக்கூட்டம் நடத்துவதற்கும் தடை விதிக்கப்பட்டது. தனி மனிதச் சுதந்திரமும் விவாதிக்கும் உரிமையும் பறிக்கப்பட்டன என்று இக்கட்டுரையில் எழுதியுள்ளார். பீமராவ் அம்பேத்கர் போல, அந்நாளைய தலைவர்களில் எவரும், அன்றைய இந்திய வரலாற்றின் நிலையை இவ்வளவு பொருள் செறிந்த தன்மையில் எழுதவில்லை.

மின்ட்டோ-மார்லி சீர்திருத்தங்கள்பற்றிய பீமராவ் அம்பேத்கரின் கருத்துகள் குறிப்பிடத்தக்கவை. 1853ஆம் ஆண்டுச் சட்டம், 1909ஆம் ஆண்டுச் சட்டம் என்று பல்வேறு கட்டங்களில் சட்டங்கள் உருவாக்கப்பட்ட வரலாற்றைத் தன் ஆய்வில் குறிப்பிட்டுவிட்டு, பிரிட்டிஷ் அரசு தன் சூழ்ச்சித் திறத்தால் சட்டசபை சுதந்திரமாக இயங்கிட நடவடிக்கை எடுப்பதுபோல் போக்குக் காட்டிவிட்டு எவ்வாறு அதைச் செயலிழக்கச் செய்துவிடு கிறது என்றும் விளக்கியுள்ளார். நிர்வாக இயந்திரத்தின் மீது எவ்வித அதிகாரமும் செலுத்த முடியாததாகவும், நிர்வாக இயந்திரத்தை ஆக்கவும், இல்லாமல் செய்யவும் உரிய அதிகாரத்தைப் பெற்றிருக் காததனாலும் நாடாளுமன்ற முறையானது வெறும் அதிகாரமற்ற அமைப்பாக இருக்கிறது. முன்னேற்றத்திற்குத் தேவையான எந்த நடவடிக்கையையும் நிர்வாகம் மேற்கொள்வதில்லை. ஏனெனில் அரசு நிர்வாகம் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை. இந்த நிர்வாகத்தின் இயல்பு, நோக்கம், நலன்கள் ஆகியவை இந்தியச் சமுதாயத்தினை உந்திச் செலுத்தும் ஆற்றல்கள்பற்றிக் கவலைப்பட வில்லை. நிர்வாக இயந்திரமானது சமுதாயத்தை உந்தும் ஆற்றல்க ளின் தேவைகள் துன்பங்கள் விழைவுகள் பற்றிக் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை. அதற்கு மாறாக நிர்வாக இயந்திரத்தின் விருப்பங்கள் இந்த ஆற்றல்களுக்கு எதிராகவே நின்றன. எனவே

நிர்வாக இயந்திரம் மக்களுக்குக் கல்வியை வழங்கவில்லை. சுதேசிய உணர்ச்சிக்கு எதிராக நின்றது; சுதேசியம் எனத் தோன்றிய அனைத்தையும் முளையிலேயே கிள்ளியது. இதுதான் நிர்வாக இயந்திரத்தின் இயல்பாகும் என்று பிரிட்டிஷ் நிர்வாகத்தைப்பற்றி பீமராவ் அம்பேத்கர் குறிப்பிட்டுள்ளார்.

பட்டம் பெற்றபின் பீமராவ் அம்பேத்கர் தான் கல்வி கற்க உதவிய பரோடா மன்னர் ஆட்சியில், தன் தந்தையின் விருப்பத்திற்கு மாறாகப் பணியில் சேர்ந்தார். பரோடா அரசின் படைப்பிரிவில் லெஃப்டினெண்ட் பதவியில் நியமிக்கப்பட்டார். பிரிட்டிஷ் இந்திய அரசில் எல்லாப் பதவிகளிலும் வைதிகப் பார்ப்பனர்களே இருப்பதால், இதில் பணிபுரிவது சொல்லொணாத் தொல்லையும் துன்பமும் தருவதாகவே இருக்கும் என்பதை நன்கு உணர்ந்துதான் பரோடா மன்னர் ஆட்சியில் வேலையில் சேர்ந்தார்.

பீமராவ் அம்பேத்கர் பரோடா அரசில் பணியேற்ற 15ஆவது நாளில் 1913 சனவரி மாதத்தில், பம்பாயில் இவருடைய தந்தை மிகவும் நோய்வாய்ப்பட்டிருப்பதாகத் தந்தி வந்தது. தந்தையின் உடல் நலனைக் கவனிக்கவேண்டி பரோடாவிலிருந்து உடனேயே புறப்பட்டார். வழியில் சூரத் தொடர்வண்டி நிலையத்தில் தன் தந்தைக்காக இனிப்புகள் வாங்கிட இறங்கினார்; இவர் வாங்கிக் கொண்டு வருவதற்குள் தொடர்வண்டி புறப்பட்டுச் சென்று விட்டது. அடுத்த நாள் காலை பம்பாயை அடைந்தார். உயிருடன் போராடிக்கொண்டிருக்கும் தந்தையைக் கண்டதும் திகைத்து நின்றார். யாருக்காகத் தன் சிந்தனை, நம்பிக்கை, உழைப்பு ஆகிய எல்லாவற்றையும் கொடுத்தாரோ அந்த அன்பு மகனை அவருடைய கண்கள் தேடின. வலுவிழந்துவிட்ட தன் கையால் மகனின் முதுகை மெல்ல வருடினார். அடுத்த நொடியே அவரது தொண்டைக் குழியை மரண ஓலம் அடைத்தது. கண்கள் மூடின; கைகால்கள் செயலிழந்தன; இறுதி மூச்சு நின்றது. ஆற்றொணாத் துயரம் பீமைக் கவ்வியது. ஓவெனக் கதறிக்கதறித் துடித்து அழுதார். வீட்டில் இருந்த மற்றவர்களின் அழுகை ஒலியைவிட இவரின் ஒப்பாரியே பெரியதாக ஒலித்தது. 1913 பிப்ரவரி 2ஆம் நாள் பீமராவ் அம்பேத்கரின் வாழ்வில் துன்பமான நாளாக அமைந்து விட்டது.

தீண்டப்படாதவரான சுபேதார் ராம்ஜி மாலோஜி மறைந்து விட்டார். வாழ்வின் இறுதிவரை அவர் கடும் உழைப்பாளர்; தன் இன்ப நுகர்ச்சிகளில் மிகவும் அளவுடன் இருந்தவர். உயர்ந்த குறிக்கோளும் ஆழ்ந்த பக்தியும் மிக்கவர். அவர் நிறைவாழ்வு

வாழ்ந்து முதுமையில் இறந்தார். ஆனால் குடும்பம் வறுமையிலும் கடனிலும் இருந்தது. ஆயினும் அவர் தன்னிகரில்லாத் தனிப் பண்புகளைக் கொண்டிருந்தார். தன் இனத்திற்கும், நாட்டிற்கும், மானிடத்திற்கும் தன் மகன்மூலமாக வரப்போகிற அரிய செல் வத்தை அறிய வாய்ப்பில்லாதவராகவே மறைந்தார். உலக இன்ப நுகர்ச்சிகளுக்கு இரையாகாத உள்ள உரனைத் தன் மகனுக்கு ஊட்டியிருந்தார். தம் மகனுடைய சமகாலத் தலைவர்களிடம் மிக அரிதாகக் காணப்பட்ட ஆழ்ந்த ஆன்ம நேயத்தையும் உருவாக்கிய தந்தை இவர். தனக்குப் பின் போராடுவதற்கும், ஒரு புதிய உலகைச் சமைப்பதற்கும் தன் மகனை இவ்வுலகுக்கு விட்டுச் சென்றார்.

அயல்நாடுகளில் உயர் கல்வி

பீமராவ் அம்பேத்கர் இப்போது தன் சொந்தக் கால்களிலேயே நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டது. தணியாத அறிவு வேட்கையும் வாழ்வில் உயர வேண்டுமென்ற பேரவாவும் அவரை ஓய்வறியாத வராக ஆக்கின. பரோடாவில் வேலைக்கு மீண்டும் செல்ல அவர் மனம் விரும்பவில்லை. அங்கிருந்த சில நாட்களும் மகிழ்ச்சியான வையாக அமையவில்லை. 1913 சூன் மாதம் மற்றொரு வாய்ப்பு வந்தது. இக்கட்டத்தில் அமெரிக்காவில் உள்ள கொலம்பியாப் பல்கலைக்கழகத்தில் மேற்படிப்பு படிக்கச் சில மாணவர்களை அனுப்பிட பரோடா மன்னர் விரும்பினார். பம்பாயில் அரசரின் அரண்மனையில் மன்னரைச் சந்தித்துப் பீமராவ் தன் வரலாறு முழுவதையும் தெரிவித்தார். அவருடைய அரசு விளம்பரம் செய்துள்ளவற்றில் ஏதாவதொரு உதவித் தொகைக்கு விண்ணப்பிக் குமாறு அரசர் அறிவுறுத்தினார். அவ்வாறே பீமராவ் விண்ணப்பம் அனுப்பினார். பீமராவையும் மற்றும் மூன்று மாணவர்களையும் மேற்படிப்பிற்காக அனுப்புவது என்று அரசர் முடிவுசெய்தார். பீமராவ் பரோடாவிற்கு அழைக்கப்பட்டார். பரோடா அரசின் கல்வித் துறைத் துணை அமைச்சர் முன்னிலையில் 1913 சூன் 4ஆம் நாள், "குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களை நன்கு படிப்பேன் என்றும், படித்தபின் பரோடா அரசில் பத்தாண்டுகள் பணிபுரிவேன் என்றும்" ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்.

ஒரு இந்தியனுக்குக் கிடைத்த அரிய வாய்ப்பு இது; ஒரு தீண்டப்படாதவருக்கோ இது அளவிடற்கரிய பெரும் பேறு. உண்மையிலேயே ஒரு புதிய சகாப்தம் படைத்த நிகழ்ச்சி இது. ஒரு தீண்டப்படாதவர்-வெறுத்து ஒதுக்கப்படும் ஒரு மகார் அயல் நாட்டிற்குச் சென்று சிறப்பை வளர்த்துக்கொள்ளவும், நீடித்து நிற்கக்கூடியதும் மேன்மைப்படுத்தக்கூடியதுமான செல்வாக்கைப் பெறவும், அக்காலக் கட்டத்தின் அறிவுத் திறனைத் தனதாக்கிக் கொள்ளவும் வாய்ப்புப்பெறுவது என்பது ஒப்பற்ற நிகழ்ச்சியாகும். முதல் வரிசைக்குரிய இந்திய அரசியல் தலைவர்களில் - ஆபிரகாம் லிங்கனும், புக்கர் டி. வாஷிங்டனும் பிறந்த மண்ணில் முதன்முதலாகக் கல்வி கற்கச் சென்றவர் அம்பேத்கரேயாவார். 1930களின் முற்பகுதியில் தென் அமெரிக்கா வில் சோஷலிஸ்டு தலைவர் செயப்பிரகாச நாராயணன் படித்தார்.

1913 சூலை மூன்றாவது வாரத்தில் அம்பேத்கர் நியூயார்க் நகரை அடைந்தார். அங்குப் பல்கலைக்கழகத்தின் தங்கும் விடுதியான ஹார்ட்லி ஹாலில் ஒரு வாரம் தங்கினார். பெரும்பாலும் அரைகுறையாக வேகவைக்கப்பட்ட உணவு, மாட்டிறைச்சி இவற்றை இவர் விரும்பவில்லை. ஆகவே 554 மேற்கு எண்ணில் 114ஆவது தெருவில் இருந்த காஸ்மாபாலிடன் கிளப்பிற்கு இருப்பிடத்தை மாற்றிக்கொண்டார். இங்குச் சில இந்திய மாணவர் கள் தங்கியிருந்தனர். இதன்பின் பார்சி மாணவரான நேவல் பத்தானா என்பவருடன் லிவிங்ஸ்டோன் ஹால் விடுதியில் இருந்தார். நேவல் பத்தானா அம்பேத்கருடன் வாழ்நாள் முழுவதும் நட்புடன் இருந்தார்.

அயல்நாடான அமெரிக்காவில் அம்பேத்கரின் வாழ்க்கை தனித்தன்மை உடையதாகவும், நெகிழ்ச்சி மிக்க அனுபவம் உள்ளதாகவும் இருந்தது. அங்கு மாணவர்களோடும் மற்றவர் களோடும் அவர் சுதந்திரமாகப் பழக முடிந்தது. படிப்பதில், எழுதுவதில், நடப்பதில், குளிப்பதில், தங்குவதில் சம உரிமை கிடைத்தது. குறிப்பிட்ட நேரத்தில் உணவு கொள்வது, மேசையின் மேல் உண்பது, உணவுச் சிதறல் உடைமீது விழாமல் இருக்க ஒரு சிறிய துண்டு! கொலம்பியாப் பல்கலைக்கழகத்தின் வாழ்க்கை யில் இப்படிப் பல புதிய காட்சிகள்; அவருக்கு அது ஒரு புது உலகம்! அது அவருடைய அறிவின் பரப்பை மேலும் விரிவடையச்செய்தது; புதிய வாழ்வு மலர்ந்தது. புதிய அர்த்தத் தோடு அவருடைய புதுவாழ்வு பளிச்சிட்டது.

புத்துணர்ச்சியான இச்சூழலில் தன் தந்தையின் நண்பருக்கு அம்பேத்கர் ஒரு கடிதம் எழுதினார். இக்கடிதம் இவருடைய சிந்தனைப் போக்கைப் புலப்படுத்துகின்றது. தான் ஒடுக்கப்பட்ட மக்களின் நல்வாழ்வை உளமார விரும்புவதைத் தெளிவுபடுத்தி னார். மேலும் இம்மக்களின் நல்வாழ்வு கருதிப் பணிபுரியப் பலர் முன்வரவேண்டும் என்றும், இவ்வகுப்பிலிருந்தே இவர்கள் வர வேண்டும் என்றும் அவர் விரும்பினார். இவற்றை இக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். கிடைக்கின்ற ஒவ்வொரு வாய்ப்பையும் ஒடுக் கப்பட்ட சமூகத்தின் நலனுக்கே பயன்படுத்த வேண்டுமென்ற பேரவாவினை, அவர் எடுத்தாண்டு எழுதியுள்ள புகழ்மிக்க சேக்சுபியரின் வரிகள் புலப்படுத்துகின்றன. 'கடலலை மேலெழு வது கீழே வீழ்வதுபோல் மனித வாழ்விலும் உயர்ச்சியும் தாழ்ச்சியும் வருவது இயல்பு. வெள்ளத்தை எதிர்த்து நீந்திச் செல்பவனே வாழ்வில் வெற்றி பெறுவான்'.

(" There is a tide in the affairs of men,
Which, taken at the Flood, leads on the Fortune")

அதன்பின் அவருடைய சமூகத்தின் நலிவுகளுக்கான காரணங்களைக் கூறிவிட்டு அவற்றை நீக்குவதற்கான வழிமுறையையும் குறிப்பிடுகிறார். பெரும் விடுதலை வீரராக விளங்கப் போகிறார் என்பதற்கான அறிகுறிகள் இதில் இருப்பதைக் காணலாம். "குழந்தையைப் பெறுபவர்கள் பெற்றோர்களே - கர்மம் என்கிற எண்ணத்தை முழுவதுமாக விட்டுவிட வேண்டும். பெற்றோர்கள் தம் குழந்தைகளின் வருங்காலத்தை உருவாக்க இயலும். இதை நன்குணர்ந்து நாம் பின்பற்றினால் ஒளிமயமான காலத்தை விரைவில் பார்க்கலாம். ஆண்களோடு பெண்களுக்கும் கல்வி தந்தால் நம் முன்னேற்றம் விரைந்து வீறுகொள்ளும். பெண் கல்வியின் பயனை உங்கள் மகளுக்கு அளிப்பதிலிருந்தே இதை அறிந்துகொள்ளலாம் என்று எழுதியுள்ளார். "உங்களுக்கு அருகிலும் நெருக்கமாகவும் இருப்பவர்களுக்குக் கல்வியை வழங்குவதும் கல்வியின் நோக்கத்தைப்பற்றி விளக்குவதும் உங்கள் குறிக்கோளாக இருக்க வேண்டும்" என்று கூறி இந்த இருபது வயது இளைஞர் தன் கடிதத்தை முடிக்கிறார்.[14]

சுயமரியாதை, தன்னை நம்பிச் செயல்படல், அறியாமை காரணமாக விதியை நம்பி அடங்கிக் கிடந்து இது தவிர்க்க முடியாத தெய்வச் செயல் என்று கருதும் கையறு தத்துவத்திற்கு எதிரான புரட்சி ஆகியவற்றின் விதைகள் இக்கடிதத்தில் உள்ளன. திருப்பித் தாக்குதல், ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்துதல், எச்சரிக்கையுடனும் விழிப்புடனும் இருத்தல், ஆகியவைபற்றி அவர் எடுத்தாண்டுள்ள சேக்சுபியரின் வரிகள் புலப்படுத்துகின்றன.

இத்தகைய உணர்வுகளுக்கு ஆட்பட்ட அம்பேத்கரின் பார்வையும் எண்ணங்களும் உள்ளொளி பெற்றன. பெயரும் செல்வாக்கும் இல்லாத தான், வாழ்வில் தனக்கென ஒரு வழி அமைத்து முன்னேற வேண்டியிருப்பதை அம்பேத்கர் நன்கு அறிந்திருந்தார். இதை அடைந்திட தன்னிடம் பொதிந்திருந்த தகுதிகளை வளர்த்துக்கொள்வதே வழி என்று கருதினார். அரிய உழைப்பின்மூலமே இந்நிலையை எய்திட இயலும். சிறிது காலம் அவரது மனம் திசைமாறி இருந்தது. ஆனால் விரைவில் விழிப்புணர்வு பெற்றார்; தன் பொறுப்புகளை உணர்ந்தார். தளரா ஊக்கமுடன் முழுமையாக இனி படிப்பது என உறுதிபூண்டார். ஓய்வாக இருந்து இன்புற நேரமில்லை; செல்வர் வீட்டு மாணவர்களின் வழக்கமான

பல்கலைக்கழகக் களியாட்டங்களில் கலந்துகொள்ளவில்லை; நாடக அரங்கிற்குச் செல்ல வேண்டும் என்ற எண்ணம் அவர் உள்ளத்தில் தோன்றியதே இல்லை; சுற்றித் திரிந்து நேரத்தை வீணாக்கிய தில்லை; நியூயார்க் நகரத்துக் காட்சிகளைக் கண்டு களிப்பதில் பொழுதைப் போக்குவதுமில்லை. அவருக்குக் கடும் பசி எடுக்கும்; அதை இரண்டு ரொட்டித் துண்டுகள் ஒரு கறித்துண்டு அல்லது மீன் துண்டு ஒரு குவளை காப்பி இவற்றுடன் தணித்துக்கொள்வார். இதற்கே ஒரு டாலரும் பத்து சென்ட்டும் ஆகிவிடும். அவருக்குக் கிடைக்கும் உதவித் தொகையிலிருந்து மாதந்தோறும் ஒரு தொகையைச் செலுத்த வேண்டியிருந்தது. ஆகவே தன் செலவுக ளைச் சுருக்கிக்கொண்டார். தனக்குக் கிடைக்கும் ஒவ்வொரு மணி நேரத்தையும் எவ்வாறு படிப்பதற்காகப் பயன்படுத்தினார் என்று அவருடன் கல்லூரியில் படித்தவர்கள் பலரும் பிற்காலத்தில் பெருமையுடன் கூறி இருக்கின்றார்கள். வாழ்நாள் முழுவதும் படிப்பதையே பேரின்பமாகக்கொண்டிருந்தார். பல்கலைக்கழகத் தின் உயர்ந்த பட்டம் ஒன்றைப் பெறுவது மட்டும் இப்போது அவருடைய நோக்கமாக இருக்கவில்லை. அறிவியல், அரசியல், சமூகவியல், பொருளியல் ஆகிய அனைத்திலும் உயர் பட்டம் பெற வேண்டும் என விழைந்தார். இந்தியாவில் ஆங்கில மொழியுடன் பெர்சியன் மொழியையும் படித்து பி.ஏ., பட்டம் பெற்றிருந்தார். ஆனால் இப்பொழுதோ அரசியல், விஞ்ஞானம், நீதியியல், தத்துவம், மானிடவியல், சமூகவியல், பொருளாதாரம் ஆகியவற்றைப் பாடமாக எடுத்திருந்தார்.

பேராசிரியர் எட்வின் ஆர். ஏ. செலிக்மேன் அவர்களிடம் அம்பேத்கர் தன் மனத்தைப் பறிகொடுத்திருந்தார். இப் பேராசிரியர் லாலா லசபதிராயின் நண்பர். லாலா லசபதிராயைச் செலிக்மேனுக்கு அறிமுகப்படுத்தியவர் சிட்னிவெப் என்பவர். நீர் நிலையை நாடி ஓடும் வாத்துபோல் செலிக்மேன்பால் அம்பேத்கர் ஈர்க்கப்பட்டார். பேராசிரியரிடம் தனியான சிறப்பு அனுமதி பெற்று அவர் நடத்தும் எல்லா வகுப்புகளுக்கும் சென்று அமர்ந்து பாடம் கேட்டார். வகுப்பில் பாடம் நடத்தும் பக்கத்தின் தாளின் மூலையை மடித்துவிட்டுப் புத்தகத்தைக் கையில் வைத்துக்கொண்டு அருமை யாகக் கற்பிப்பார்; மாணவர்களுக்கு அன்புடன் வழி காட்டுவார். இதனால் அம்பேத்கரின் உள்ளத்தில் என்றும் அழியாத பதிவை ஏற்படுத்தினார். ஆராய்ச்சி செய்யும் நெறிமுறைகள்பற்றி அம்பேத் கர் கேட்டதற்கு, முழு ஈடுபாட்டுடன் இறங்கிச் செயல்படும்போது உங்களுக்கு உரிய வழியை நீங்களே உருவாக்கிக்கொள்வீர்கள் என்று விடை பகர்ந்தார்.

இவ்வாறாக அறிவுத்தேடலை (Dnyana Yadnya) இடையறாது மேற்கொண்டார். அம்பேத்கர் அன்றாடம் பதினெட்டு மணி நேரம் படித்தார். அறிவை அகழ்ந்து தேடல் இவ்வாறு பல மாதங்கள் தொடர்ந்தது. இரண்டு ஆண்டுகள் கடுமையாக உழைத்துப் படித்த பின் சிறப்பான மதிப்பிடற்கரிய இனிய வெற்றி கிட்டியது. 'பண்டைய இந்தியாவின் வாணிபம்' (Ancient Indian Commerce) என்ற ஆய்வுக் கட்டுரைக்காக 1915இல் எம்.ஏ., பட்டம் பெற்றார். 1916 மே மாதம் டாக்டர் கோல்டன் வெய்சர் நடத்திய மனித இன வரலாறுபற்றிய கருத்தரங்கில், 'இந்தியாவில் சாதிகள்: அவற்றின் இயக்கம் தோற்றம் வளர்ச்சி' என்ற ஆய்வுக் கட்டுரையைப் படித்தார். இந்த ஆய்வுக் கட்டுரையில் சாதிக்குள்ளேயே திருமணம் என்பதுதான் சாதிகளின் சாரம் என்று குறிப்பிட்டுள்ளார். சாதி என்பது தடுப்புச் சுவர்களுக்குள் வாழும் ஒரு வகுப்பே. இது மனுவுக்கு முன்பே இருந்தது. மடத்துணிச்சலான வெட்கங்கெட்ட மனு இவற்றைத் தொகுத்து விதிகளாக எழுதினார். அப்போது நடைமுறையிலிருந்த சாதி விதிகளைத்தான் மனு தொகுத்தார் என அம்பேத்கர் குறிப்பிட்டுள்ளார். சாதி என்பது ஒருமையில் ஒன்றுமில்லாதது; பன்மையில்தான் அதன் இருப்பும் இயக்கமும் இருக்கிறது என்று அம்பேத்கர் குறிப்பிட்டுள்ளார்.[15]

இது அவருடைய வெற்றி ஏணியின் முதல் படி! இரண்டாவது படியையும் விரைவிலேயே ஏறினார். ஒரே நேரத்தில் மற்றொரு ஆய்வுக் கட்டுரையையும் எழுதிக்கொண்டிருந்தார். "இந்தியாவின் ஆதாயப்பங்கு - ஒரு வரலாற்று ஆய்வுக் கண்ணோட்டம்" (National dividend of India: A Historic and Analytical study") என்ற கட்டுரையைப் பல நாட்கள் தன் முழுக் கவனத்தையும் கடும் உழைப்பையும் செலவிட்டு எழுதி முடித்தார். 1916 ஜூன் மாதம் இரண்டாவது வாரத்தில் இவ்வாய்வுக் கட்டுரையைக் கொலம்பியாப் பல்கலைக்கழகம் ஏற்றுக்கொண்டது. மேலும் விரிவுபடுத்தப்பட்ட இக்கட்டுரையை எட்டு ஆண்டுகள் கழித்து, "பிரிட்டிஷ் இந்தியாவில் மாகாண நிதியின் பரிணாம வரலாறு" (The evolution of provincial finance in British India) என்ற பெயரில் பி. எஸ். கிங் அண்டு சன்ஸ் கம்பெனி இங்கிலாந்தில் வெளியிட்டது. தேவையான எண்ணிக்கையில் இந்நூலின் படிகளைக் கொலம்பியாப் பல்கலைக்கழகத்திற்கு அம்பேத்கர் அளித்தார். இந்த ஆய்வுக் கட்டுரைக்காகத் தத்துவயியல் டாக்டர் (Doctor of Philosophy) என்ற பட்டத்தைக் கொலம்பியாப் பல்கலைக்கழகம் அதிகாரப்பூர்வமாக வழங்கியது.

கல்வி உலகில் அம்பேத்கர் ஈட்டிய அரிய வெற்றியைக் கலைத்துறையைச் சேர்ந்த பேராசிரியர்களும் மாணவர்களும் இணைந்து மனதாரப் பாராட்டி விருந்து அளித்துச் சிறப்பித்தனர். நீக்ரோக்களின் அடிமைத்தளையை அகற்றிடப் போராடிய அமெரிக்கர்களின் வழித்தோன்றல்களான இந்த அமெரிக்க இளைஞர்கள் ஆபிரகாம் லிங்கன் போன்று விழுமிய நோக்கும், புக்கர் டி. வாஷிங்டன் போன்று கடும் உழைப்பும் கொண்டுள்ள இளைஞர் அம்பேத்கரின் வெற்றியைக் கொண்டாடினர்.

'என் கல்விக்காக உதவியமைக்கு மனமார்ந்த நன்றி' என்று குறிப்பிட்டு, இந்நூலை, பரோடா மன்னர் மேதகு சாயாஜிராவ் கெய்க்வாடு அவர்களுக்குக் காணிக்கையாக்கினார். இந்த ஆய்வு நூலில் அன்றைய வளர்ச்சிவரையிலானவை இணைக்கப்பட்டுத் திருத்தம் செய்யப்பட்டது. மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள்பற்றி, குறிப்பாக அதன் நிதிபற்றிய மதிப்பீடு இந்நூலில் இணைக்கப்பட்டது. பொது நிதிபற்றி அம்பேத்கருக்கு முதல் பாடம் கற்பித்த எட்வின் ஆர்.ஏ. செலிக்மேன் அவர்களின் முன்னுரையுடன் ஆய்வு நூலில் அம்பேத்கர் எடுத்துக்கொண்டுள்ள பிரச்சினை உலகின் பல பகுதிகளிலும் உள்ளவர்களின் கவனத்தை ஈர்ப்பதாக உள்ளது என்று இப் பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார். அதில் "நான் அறிந்தவரையில் அடிப்படை ஆதாரமாக இருக்கின்ற கோட்பாடுகள் இந்த அளவிற்கு விரிவாக ஆராயப்பட்டதே இல்லை" என்று எழுதியுள்ளார். ஆங்கிலப் பேரரசின்கீழ் 1883ஆம் ஆண்டைய சட்டம் இயற்றப்பட்ட காலம்முதல் உருவான நிதிக் கொள்கைகளின் வளர்ச்சிபற்றிச் சுட்டிக்காட்டியுள்ளார். இந்நூலில் வரவுசெலவுபற்றிய பகுதிகள் மிகவும் மதிப்பு வாய்ந்தவை. மாகாண நிதிகளின் போக்கு, பெருக்கம் ஆகியவைபற்றி விளக்கிக் கற்பிக்கின்ற தன்மையில் இவை அமைந்துள்ளன. பகுதி பத்து முதல் பன்னிரண்டுவரை ஆர்வத்தைத் தூண்டி ஈர்த்து அழுத்தமான பதிவை ஏற்படுத்துவதாய் உள்ளன எனக் குறிப்பிடும் பேராசிரியர் செலிக்மேனின் முன்னுரையானது நாட்டுப்பற்று மிக்க அம்பேத்கரின் சிந்தனைகளின் பிழிவைக் காட்டுவதாக அமைந்துள்ளது. அம்பேத்கர் பிரிட்டிஷ் அதிகாரவர்க்க மனப்பான்மையை அம்பலப்படுத்தினார்; பேரரசின் திட்டங்களையும் நோக்கங்களையும் சாடினார். நாட்டில் உள்ள பிற்போக்குக் கும்பல்களைக் கண்டனம் செய்தார்.

பொருளாதார முன்னேற்றம் சிறிது ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்த ஆய்வு நூலில் அம்பேத்கர் ஒப்புக்கொள்கிறார். ஆனால் அமைதியும் ஒழுங்கும் இருப்பதால் மட்டும் மக்கள் மனநிறைவு

கொள்வதில்லை; ஏனெனில் அவர்கள் அறிவற்ற ஊமையர்கள் அல்லர் என்று குறிப்பிட்டுள்ளார். இந்தியாவின் கொள்கைகள் அனைத்தும் ஆங்கிலத் தொழில் முதலாளிகளின் நலன் கருதியவர்க ளாலும் ஆங்கிலேய உற்பத்தியாளர்களாலும் இயக்கப்படுகின்றன என்பது எல்லாரும் அறிந்த உண்மையாகும் என்று கூறுகிறார். எல்லா நாடுகளிலும் சமூக அடக்கு முறைகளுக்கும் அநீதிகளுக்கும் ஆளான ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்கள் இருக்கின்றனர். ஆனால் இதற்காக எந்த நாடும் அரசியல் அதிகாரம் பெறாமல் இருக்க வேண்டும் என்பதில்லை.

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் வரவு-செலவுத் திட்ட விவாதங் களின்போது மாகாணச் சட்டசபை, மத்திய சட்டசபை உறுப்பினர் களுக்கு உற்ற வழிகாட்டி நூலாக இந்நூல் திகழ்ந்தது. அதிகாரத்தில் இருந்தவர்களுக்குக் குறிப்பு நூலாகவும், பொருளாதார மாணவர் களுக்கு வழிகாட்டி நூலாகவும் இந்நூல் பயன்பட்டது. இந்நூல் வெளியிடப்பட்ட கொஞ்ச காலத்திலேயே ராயல் கமிஷன் முன் இந்திய நாணயச் செலாவணிபற்றிக் கருத்துக் கூறுமாறு அம்பேத்க ருக்கு அழைப்பு வந்தது. அந்த ராயல் கமிஷனின் உறுப்பினர் ஒவ்வொருவர் கையிலும் தான் எழுதிய நூல் இருப்பதைப் பார்த்து அம்பேத்கர் இறும்பூதெய்தியிருப்பார்.

நூல்களைப் படிப்பதில் அம்பேத்கர் கொண்டிருந்த வேட்கை என்றும் தணியாததாக இருந்தது. அவருடைய ஓய்வு நேரத்தில் பழைய புத்தகக் கடைகளை நாடிச் சென்றார். அங்குள்ள பழைய புத்தகங்களை அவருடைய கண்கள் நோட்டமிட்டுக்கொண்டிருக் கும். புத்தகப் பித்தனுக்கே உரிய மகிழ்ச்சியுடன் நியூயார்க் நகரில் இரண்டாயிரம் நூல்கள் வாங்கினார். இந்தப் புத்தகப் பெட்டிகளை இந்தியாவிற்கு எடுத்துச்செல்லும் பொறுப்பை நண்பர் ஒருவரிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்தார். ஆனால் அவருடைய நம்பிக்கை பொய்த்துவிட்டது. பின்னர் சில நூல்களை மட்டுமே இந்தியாவில் அந்த நண்பர் கொடுத்தார்.

அமெரிக்காவில் அம்பேத்கரின் நெஞ்சத்தை இரண்டு செய்திகள் பெரிதும் கவர்ந்தன. ஒன்று அமெரிக்காவின் அரசியலமைப்புச் சட்டம் - அதிலும் குறிப்பாக நீக்ரோக்களுக்குச் சுதந்திரம் வழங்குவதுபற்றிய பதினான்காவது திருத்தம் அவரைக் கவர்ந்தது. மற்றொன்று 1915இல் இறந்த புக்கர் டி. வாஷிங்டன் அவர்களின் வாழ்க்கை வரலாறு ஆகும். அவர் சிறந்த சீர்திருத்தக்காரர்; அமெரிக்க நீக்ரோ இன மக்களுக்குக் கல்வி அளிக்கப்படப்

போராடியவர். டஸ்கெஜீ (Tuskegee) நிறுவனத்தின் அமைப்பாளர்-தலைவர் அவரே. அறிவால், உணர்வால், உழைப்பால் எவ்வாறு உயர வேண்டும் என்று நீக்ரோக்களுக்கு அந்த நிறுவனம் கற்பித்தது. அதன்மூலம் பன்னெடுங்காலமாக நீக்ரோக்களின் உடலை, அறிவை உள்ளத்தைப் பிணைத்திருந்த அடிமைச் சங்கிலிகள் நொறுங்கின.

கொலம்பியாப் பல்கலைக்கழகத்தில் மிகவும் சிறப்பான முறையில் படிப்பை முடித்தபின் அம்பேத்கரின் கவனம் இலண்டன்மீது திரும்பியது. உலக அளவில் சிறந்த கல்வி பெறுவதற்கான இடமாக இலண்டன் இருந்தது. அங்கு எல்லா வகையான திறமையாளர்களும் முழுவளர்ச்சி பெற்றிட வாய்ப்பு உண்டு. 1916 சூன் மாதம் அமெரிக்காவைவிட்டுப் புறப்பட்டார். சில நாட்களுக்குப்பின் இலண்டன் நகரை அடைந்தார்.

முதல் உலகப் போர் இன்னும் முடியவில்லை. அச்சமயத்தில் அமெரிக்காவில் லாலா ஹர் தயாள் என்பவர் தலைமையில் இயங்கிய கதார் கட்சி, அமெரிக்காவில் உள்ள இந்தியர்கள் இந்தியாவிற்குச் சென்று அங்குள்ள பிரிட்டிஷ்காரர்களை விரட்டியடிக்க வேண்டும் என்று பிரச்சாரம் செய்துகொண்டிருந்தது. அம்பேத்கரும் அமெரிக்காவிலிருந்து அச்சமயம் வந்ததால் இவரும் இந்தியப் புரட்சிகரக் கட்சியைச் சார்ந்தவராக இருக்கக் கூடும் என்று பிரிட்டிஷ் அரசு கருதியது. ஆதலால் பிரிட்டிஷ் உளவுத் துறை அதிகாரிகள் அம்பேத்கரின் உடைகள், காலணிகள், மற்றும் பிற பொருட்களைத் துருவித்துருவி ஆய்வு செய்தனர். உண்மை என்னவென்றால் அம்பேத்கரின் பேராசிரியர் ஆர். ஏ. சேலிக்மேனுக்கு நியூயார்க்கில் இருந்தபோது நெருக்கமான நண்பராக இருந்த லாலா லஜபதி ராய், அம்பேத்கர் புரட்சிகர விடுதலை இயக்கத்தில் சேராவிட்டாலும், அரசியல் இயக்கத்தில் சேர வேண்டுமென வற்புறுத்தினார். ஆனால் அப் பெருந்தலைவரின் வேண்டுகோளை அம்பேத்கர் உறுதியுடன் மறுத்துவிட்டார். இதற்குப் பல காரணங்களைக் கூறினார். "நான் ஒரு மாணவன், படிப்பை முடிப்பதே எனக்கு முதன்மை; நான் படிப்பதற்கு வாய்ப்பை நல்கிய மன்னரின் நம்பிக்கைக்கு இரண்டகம் செய்ய விரும்பவில்லை" என்று லாலா லஜபதிரா யிடம் கூறினார்.

உடனடியாக 1916 அக்டோபர் மாதத்தில் சட்டம் பயிலுவதற்காகக் 'கிரேஸ் இன்' சட்டக் கல்லூரியில் சேர்ந்தார். பொருளாதாரம் மற்றும் அரசியல் விஞ்ஞானத்திற்கான இங்கிலாந்துக் கல்லூரியில்,

பொருளாதாரம்பற்றிப் படிப்பதற்காகச் சேர்ந்தார். இங்கிலாந்தில் அவருடைய கல்வியை மேலும் தொடர்ந்திட அனுமதி வழங்குமாறு பரோடா மன்னருக்கு வேண்டுதல் செய்திருந்தார். பொருளாதாரத்தில் அவர் மேற்கொண்ட படிப்பு அப்பொழுது மிகவும் வளர்ச்சி பெற்றிருந்தது. ஆகவே டி.எஸ்ஸி., பட்டம் பெறுவதற்குத் தயார் செய்வதற்காக இலண்டன் பேராசிரியர்கள் அம்பேத்கருக்கு அனுமதி தந்தனர். அம்பேத்கர் இதற்கான ஆய்வு வேலையைத் தொடங்கினார். ஆனால் இதற்கிடையில் கல்வி உதவித் தொகை பெறுவதற்கான காலம் முடிந்துவிட்டது என்று அவருக்குத் தெரிவிக்கப்பட்டது. ஆகவே பரோடாவின் திவான் அம்பேத்கரை இந்தியாவிற்குத் திரும்புமாறு தெரிவித்தார்.

இது ஒரு தாங்கமுடியாத பின்னடைவு. 'அளவான உணவு, அதிகமான படிப்பு' என்பதைக் குறிக்கோளாகக்கொண்டு அம்பேத்கர் படித்து வந்த போதிலும் இடையிலேயே படிப்பை நிறுத்திவிட்டுத் திரும்பிட நேர்ந்தது. ஆயினும் படிப்பை முடிக்க வேண்டும் என்ற பெருவிருப்பம் அவர் உள்ளத்தில் அடக்க முடியாதவாறு ஆர்த்தெழுந்தது. உதவியில்லா நிலையில் இந்தியாவிற்குத் திரும்பிட வேண்டியதுதான் என்று அவர் எண்ணியபோதிலும் அவர் உள்ளம் ஓர் உறுதி பூண்டது. பணத்திற்கு ஏதேனும் வழி செய்துகொண்டு மீண்டும் இலண்டனுக்கு வந்து படிப்பை எப்படியும் முடிப்பது என்று முடிவெடுத்தார். இதற்காகத் தாராள மனங்கொண்ட அவருடைய பேராசிரியர் எட்வின் கன்னான் அவர்களின் பரிந்துரை மூலமாக 1917 அக்டோபர் மாதத்திலிருந்து நான்கு ஆண்டுகள் முடிவதற்குள் மீண்டும் அவருடைய படிப்பைத் தொடருவதற்கான அனுமதியை இலண்டன் பல்கலைக் கழகத்திலிருந்து பெற்றுக்கொண்டார். அதன்பின் அவருடைய பொருட்களைப் பம்பாய்க்கு எடுத்துச் சென்று சேர்ப்பதற்காகத் தாமஸ்குக் அண்ட் சன்ஸ் கம்பெனியாரிடம் காப்புறுதி செய்தார். அப்பொருள்களில் பெரும்பகுதி புத்தகங்களே.

சூலை 27ஆம் நாள் அம்பேத்கர் போலிக்னேயில் தொடர் வண்டியில் ஏறினார்; மார்சைல்ஸ் துறைமுகத்தை அடைந்தார். அங்கிருந்து 'எஸ்.எஸ். கெய்சர்-இ-இந்து' என்ற கப்பலில் இந்தியாவிற்குப் பயணமானார். போரின் பேரழிவு அப்போது அதன் உச்சக்கட்டத்தில் இருந்தது. குண்டுகளும் நீர் மூழ்கிக் கப்பல்களும் தாக்கிடக்கூடிய பேரச்சத்திற்கிடையே பயணம் செய்வது மிகவும் ஆபத்தானதாக இருந்தது. இந்நிலையில் மத்தியத் தரைக்கடல் பகுதியில் ஒரு கப்பல் சுக்குநூறாகத் தாக்கி அழிக்கப்பட்டது.

இப் பயங்கரமான செய்தி இந்தியாவில் அம்பேத்கர் குடும்பத்திற்கு எட்டியது; அவர்கள் ஆறாத் துயரில் ஆழ்ந்தனர். அதன்பின் தந்திகள் பரிமாறிக்கொள்ளப்பட்டன; உண்மை நிலை தெளிவா யிற்று. பீமராவ் பயணம் செய்தது எஸ்.எஸ். கெய்சர்-இ-இந்து கப்பல். ஆனால் எதிரிகளின் கடுந் தாக்குதலுக்கு இரையானதோ அவருடைய பொருட்களை ஏற்றி வந்த கப்பல் என்பதை அறிந்து ஆறுதல் அடைந்தனர்.

II

அம்பேத்கர் 1917 ஆகஸ்டு 21ஆம் நாள் கொழும்பு வழியாகப் பம்பாய் அடைந்தார். பிரிட்டிஷ் அரசாங்கம் அப்போது கடுமை யான நெருக்கடிகளைச் சந்தித்துக்கொண்டிருந்தது. போரின் பின்ன டைவுகளால் மனந் தளர்ந்திருந்தது; ஹோம் ரூல் இயக்கத்தால் நெருக்குதலுக்குள்ளாகி இருந்தது; இந்தியப் புரட்சி கரச் சக்திகளின் தாக்குதலுக்கு ஆளாகியிருந்தது. எதிர்ப்பாளர்களை அமைதிப்படுத்த வும் ஆங்கிலேயரின் வளங்களைப் பெருக்கவும் வேண்டி அப்போது இந்தியாவிற்கான செயலாளராக இருந்த மாண்டேகு 1917 ஆகஸ்டு 20ஆம் நாள் இங்கிலாந்தில் மக்கள் அவையில் புகழ் பெற்ற ஓர் அறிக்கையை வெளியிட்டார். 'பிரிட்டிஷ் பேரரசின்கீழ் இந்தியாவில் பொறுப்பு வாய்ந்த அரசாங்கம் உருவாவதற்காக மெல்லமெல்லத் தன்னாட்சி அமைப்புகள் வளர்த் தெடுக்கப்பட வேண்டும் என்பதே அரசின் கொள்கை' என்று மாண்டேகு அந்த அறிக்கையில் அறிவித்தார்.

அதன்பின், இந்தியாவில் உள்ள பல்வேறு தரப்பட்ட அரசியல் கருத்துகளை ஆராய்வதற்காக மாண்டேகு இந்தியாவிற்கு வந்தார். பல்வேறு மக்கள் அமைப்புகள், பலதரப்பட்ட நோக்கங்கொண்ட அமைப்புகள், பலதரப்பட்ட கோரிக்கைகள் பிரிட்டிஷ் அரசை நோக்கி வெள்ளமெனப் பாய்ந்து வந்தன. 1917 நவம்பர்-டிசம்பர் மாதங்களில் இவர்கள் அனைவரும் தங்கள் அவல நிலைகளையும் கோரிக்கைகளையும் முன்வைத்தனர். இவ்வாறு கோரிக்கை வைத்த வர்களுள் இந்திய அரசியல் வரலாற்றில் தீண்டப்படாதவர்களின் பிரதிநிதிகளும் முதன் முதலாக இடம் பெற்றிருந்தனர். அப்பொழுது தான் அயல் நாட்டிலிருந்து வந்திருந்த அம்பேத்கர் இந்திய அரசியலில் அப்போது அறியப்படாத ஒருவராக இருந்தார். கோரிக்கைகளை முன்வைத்த பல சங்கங்களுள், சென்னை மாகாணத் தீண்டப்படாதவர்கள் சங்கமான "பஞ்சமர் கல்வி அபிவிருத்தி அபிமான சங்கமும்" பிரதிநிதிகளை அனுப்பியிருந்தது.

அரசியல் மாற்றம் இப்போது முதன்மையானது அன்று என அச்சங்கம் கூறியது. பார்ப்பன ஆதிக்க நுகத்தடியிலிருந்து தங்களை முதலில் விடுவிக்குமாறு கோரிக்கை வைத்தது. அரசு நிர்வாகத்தில் அதிகப் பங்கு கேட்கும் பார்ப்பனர்களின் கோரிக்கையானது தவளைகளுக்குப் பாதுகாவலனாக இருந்திட நாகப்பாம்பு உரிமை கேட்பது போன்றதாகும் எனக் குறிப்பிட்டது. அறுபது இலட்சம் ஆதித் திராவிட மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய "சென்னை ஆதித் திராவிட ஜன சங்கம்" தங்கள் வாழ்வின் முன்னேற்றத்தைத் தடுக்கின்ற-தங்களைத் தொழுநோயாளிகள்போல் கருதி வெறுக்கின்ற சாதி இந்துக்கள்மீது புகார் கூறியது. வங்காளத்திலிருந்து தீண்டப்படாதவர் சங்கம் அழுத்தமான முறையில் கோரிக்கைகளை முன்வைத்தது. ஒடுக்கப்பட்ட வகுப்புகள் கழகத்தின் சார்பில் மாண்டேகுவை சர் என்.ஜி. சந்தவர்க்கர் நேரில் கண்டு கோரிக்கைகளை முன்வைத்தார்.

அம்பேத்கர் பம்பாய் அடைந்தபின்னர் கல்வியில் அவர் பெற்றுள்ள அரிய சாதனைகளைப் பாராட்டுவதற்காகச் சம்பாஜி வக்மாரும் மற்றவர்களும் ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தனர். பம்பாய் மாகாண முதன்மை நீதிபதி ராவ்பகதூர் சுனிலால் சத்தால்வாத் இந்நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார். ஆனால் அம்பேத்கர் இந்நிகழ்ச்சியில் கலந்துகொள்ளவில்லை. அவருடைய தகுதியைப் பற்றி அவரே தன்னடக்கத்துடன் மதிப்பீடு செய்து கொண்டமையும், பாராட்டு மொழிகளை எதிர்கொள்வதில் கொண்டிருந்த தயக்கமும் இந்நிகழ்ச்சிக்கு அவர் செல்லாமைக்குக் காரணமாக இருக்கக்கூடும்.

கூட்டம் முடிந்தபின் பேச்சாளர்களில் சிலரும் ஆர்வலர்களில் சிலரும் அம்பேத்கரின் வீட்டிற்குச் சென்றனர். தன்னடக்கமும், துறவு மனப்பான்மையும் மிக்க அம்பேத்கர்மீது பாராட்டு மழை பொழிந்தனர்.

தாம் ஏற்கனவே செய்துகொண்ட ஒப்பந்தத்திற்கேற்றவாறு அம்பேத்கர் பரோடா செல்வதென முடிவுசெய்தார். அந்த நேரம் அவரிடம் பரோடா செல்வதற்கான வழிச்செலவுக்குக்கூடப் பணம் இல்லை. இருப்பினும் ஒரு நல்வாய்ப்பாக இவருடைய பொருட்களைக் கப்பல் பயணத்தில் இழந்ததற்காக, தாமஸ் குக் அண்ட் சன்ஸ் கம்பெனி காப்புறுதிப் பணத்தைக் கொடுத்தது. இப்பணத்தைப் பெற்றபோது அம்பேத்கரின் நெஞ்சில் இருவகை உணர்வுகள் மோதின. நியூயார்க்கிலும், இலண்டனிலும் வாங்கிய சிறந்த

புத்தகங்களை இழந்துவிட்ட மனத்துன்பம் ஒருபுறம். ஆனால் அதேநேரத்தில் இப்பணத்திலிருந்து ஒரு பகுதியை வீட்டுச் செலவுகளுக்காகத் தன் மனைவியிடம் கொடுத்துவிட்டு மீதிப் பணத்தைக் கொண்டு தொடர்வண்டியில் ஏறிப் பரோடா போகலாம் என்ற எண்ணம் மறுபுறம். செப்டம்பர் மாத நடுவில் பரோடா சென்றார். அம்பேத்கரைத் தொடர்வண்டி நிலையத்திற்குச் சென்று அழைத்து வருமாறு தன் பணியாளர்களிடம் அரசர் கூறியிருந்தார். ஆயினும் ஒரு மகாரை வரவேற்க யார் செல்வார்கள்? ஆகவே அவருக்கு வழிகாட்ட யாரும் வரவில்லை. மகார் இளைஞர் ஒருவர் பரோடாவிற்கு வரப்போகிறார் என்ற செய்தி நகரத்தில் நன்கு பரவியிருந்தது. அம்பேத்கருக்கும் அவருடன் வந்திருந்த மூத்த அண்ணனுக்கும் எந்த உணவு விடுதியிலும் தங்கும் விடுதியிலும் இடம் தர மறுத்துவிட்டனர். இறுதியில் பார்சிகளின் சத்திரம் ஒன்றில் தங்கினார். அதுவும் தன்னை யார் என்று அடையாளம் காட்டிக்கொள்ளாமல் தங்கியிருந்தார்.

ஒப்பந்தப்படி அம்பேத்கர் பரோடா அரசில் பத்து ஆண்டுகள் பணிபுரிய வேண்டும். பல்வேறு துறைகளில் அனுபவம் பெற்ற பின் அம்பேத்கரை நிதி அமைச்சராக அமர்த்திட அரசர் விரும்பினார். எனவே, மன்னரின் இராணுவச் செயலாளராக உடனடியாக நியமிக்கப்பட்டார். ஆனால் அங்கும் தீண்டப்படாத வர் என்று அவருடைய பிறவி காரணமாக ஒவ்வொரு நடப்புமே தலைகீழாகத் திரும்பியது. அவருடைய அலுவலகத்தில் வேலை செய்பவர்களாலும் ஏவலர்களாலும் தொழுநோயாளிபோல் அவர் நடத்தப்பட்டார். அலுவலகத் தாள்களையும் கோப்புகளையும் அவரிடம் நேரில் தருவது பாவம் என்று படிப்பறிவில்லாத ஏழை ஏவலர்கள் கருதினார்கள். கோப்புகளையும் தாள்களையும் அவரு டைய மேசைமீது வீசி எறிந்தனர். அவர் புறப்பட எழுந்ததும் அவர் போகும் நடைபாதையில் கிடந்த பாயைச் சுருட்டினர். அவருடைய அலுவலகத்தில் குடிநீர்கூட வைக்கப் படுவதில்லை. இப்படி இழிவு செய்து தண்டிக்கும் நடப்புகள் நெஞ்சத்தைப் பிழியும்போது நூலகத்தில் புகலிடம் தேடி அவர் ஆறுதல் பெறுவார். இவருக்கு மேல் இருந்த அலுவலர் அம்பேத்கருக்கு அலுவலகத்தில் வேலை இல்லாதபோது நூலகம் செல்ல அனுமதித்தார்.

இழிவுபடுத்தல் என்பது ஒருநாள் அதன் எல்லையை எட்டியது. கையில் தடிகளைத் தூக்கிக்கொண்டு வந்த ஒரு பார்சிகள் கும்பல் அம்பேத்கரை அழைத்து 'நீ யார்?' என்று கேட்டது.

நான் ஒரு இந்து என்று அவர் சொன்னார். 'நீ ஓர் இழிவான தீண்டப்படாதவன் என்பது எங்களுக்குத் தெரியும்' என்று கனல் கக்கக் கூறியது அக்கும்பல். எங்கள் சமூகத்திற்கான சத்திரத்தின் புனிதத்தை என்ன நினைத்துக்கொண்டு கெடுத்து விட்டாய், என்று கூறி, உடனடியாக வெளியேற வேண்டும் என்று கட்டளையிட்டது. அம்பேத்கர் தன்னைத் திடப்படுத்திக் கொண்டார். அங்கிருந்து வெளியேறுவதற்கு எட்டு மணி நேரம் காலக்கெடு தருமாறு அமைதியாகக் கேட்டார், இனியும் ஒரு இந்துவோ முஸ்லிமோ இந்நகரத்தில் அவருக்குத் தங்க இடம் தரமாட்டார். இந்நிலையைப் பற்றி எழுதி அரசருக்கு அனுப்பினார். மன்னரோ திவானைப் பார்க்குமாறு தகவல் அனுப்பினார். இது தொடர்பாகத் தன்னால் ஏதும் செய்ய இயலாது என்று திவான் கைவிரித்துவிட்டார். களைப்படைந்து, பசியுடன் சோர்ந்து ஒரு மரத்தடியில் அமர்ந்தார்; அவர் கண்களில் கண்ணீர் மடை திறந்த வெள்ளமாய்ப் பெருக்கெடுத்தோடியது.[16] வானமே கூரையாயிற்று; நிலமே இருப்பிடமாயிற்று. தான் சிறந்த படிப்பாளியாக இருந்த போதிலும், அறியாமை, மூடநம்பிக்கைகள், தீய வழக்கங்கள் எனும் சேற்றில் புரண்டுகொண்டு தன்னை எதிர்ப்பவர்களைவிட ஆயிரம் மடங்கு உயர்நிலையில் இருந்தபோதிலும் சாதி இந்துக்களின் பகையுணர்ச்சி களைக் குறைக்கவும் முடியவில்லையே என்பதை உணர்ந்தார். இதை எண்ணிப் பெரிதும் மனம் நொந்தார். ஆதரவற்ற நிலையில் துயருற்ற மனத்துடன் இருந்தார். இழிவுபடுத்தும் இச்சூழ்நிலையால் முற்றாக மனம் வெறுத்திருந்தார். 1917 நவம்பர் மாத நடுவில் அம்பேத்கர் பம்பாய்க்குத் திரும்பினார். அங்கு மீண்டும் கெலுஸ்கரை அணுகினார். அம்பேத்கர் நல்வாய்ப்புகளைப் பெறுவதற்குக் கெலுஸ்கர்தான் எப்பொழுதும் பெருந்துணையாக இருந்து வந்தார். தனக்கு ஏற்பட்ட பொறுத்துக்கொள்ள முடியாத இழிவுகள்பற்றி சாயாஜிராவ் கெய்க்வாடு அவர்களிடம் மாற்று வழி தேடுமாறு கெலுஸ்கரிடம் கேட்டார். ஆனால் இந்த முயற்சி பயன் தரவில்லை. ஆனால் கெலுஸ்கர் பரோடாவில் ஓரளவு முற்போக்குச் சிந்தனையும் நல்லியல்பும் கொண்ட பேராசிரியர் ஒருவர் வீட்டில், அம்பேத்கர் பணம் தரும் விருந்தினராய்த் தங்கிட ஏற்பாடு செய்தார். முதலில் இந்த ஏற்பாட்டுக்கு இணங்கிய அப்பேராசிரியர் பழமை வெறி கொண்ட அவர் மனைவியினுடைய எதிர்ப்பின் முன்னர் ஓர் ஆட்டுக்குட்டிபோல் நடுங்கினார். ஆகவே அம்பேத்கருக்கு ஆதரவு அளிக்கும் ஏற்பாட்டிலிருந்து பின்வாங்கிவிட்டார். கெலுஸ்கர் கூறியதன்பேரில் அம்பேத்கர் பரோடா நிலையத்திற்கு வந்திறங்கியபோது, 'நம் ஏற்பாட்டை என் மனைவி எதிர்க்கிறாள்; எனவே என் வீட்டிற்கு வர வேண்டாம் ' என்று அப்பேராசிரியர்

எழுதிய கடிதம் அவரிடம் தரப்பட்டது. பரோடா நிலையத்திலிருந்து மீண்டும் பம்பாய்க்குத் திரும்பினார். தான் கல்வி பெற உதவிய பரோடா மன்னரின் மாநிலத்திலிருந்து இறுதியாக விடைபெறத் தீர்மானித்தார்.

பம்பாயை வந்தடைந்தபோது அவருடைய சிற்றன்னை கடுமையாக நோயுற்றிருந்தார். சில நாட்கள் கழித்துச் சிற்றன்னை இறந்தார். குமுறும் மனங்கொண்ட சிற்றன்னையின் இயல்பு காரணமாகக் குடும்பத்தில் மனக்கசப்புகள் ஏற்பட்டிருந்தன. ஆயினும் அம்பேத்கர்தான் அவருடைய இறுதிச் சடங்குகளைச் செய்தார்.

ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்கள்பற்றிய சிந்தனை இந்தியத் தேசியக் காங்கிரசில் இக்கட்டத்தில் வளரத் தொடங்கியது. சட்ட வரம்புக்குட்பட்ட அரசியல் போராட்டத்தை வழிமுறையாகக் கொண்டிருந்த காங்கிரசு, அதுவரையில் தீண்டப்படாதவர் பிரச்சினையைத், தன் இலட்சிய வரம்புக்கும் செயல்பாட்டுக்கும் அப்பாற்றபட்டதாகவே கருதிவந்தது. ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்கள்மீது காங்கிரசுக்கு ஏற்பட்ட திடீர் அன்பு காங்கிரசு-லீக் திட்டத்திற்கு இவர்களின் ஆதரவைப் பெற வேண்டும் என்று உள் நோக்கம் கொண்டதேயாகும். காங்கிரசு-லீக் திட்டம் முஸ்லிம்களின் தனித்தன்மையை ஏற்றுக்கொண்டது. ஆனால் தீண்டப்படாதவர்கள்பற்றிக் கணக்கிலேயே காங்கிரசு எடுத்துக் கொள்ளவில்லை.

காங்கிரசு-லீக் கோரிக்கைகள்பற்றி முடிவு எடுக்க 1917 நவம்பரில் பம்பாயில் ஒடுக்கப்பட்ட வகுப்புகளின் இரண்டு மாநாடுகள் நடந்தன. முதல் மாநாட்டைச் சர் நாராயணன் கணேஷ் சந்தவர்க்கர் முன்னின்று நடத்தினார். மக்கள் தொகை விகிதப்படி சட்ட சபைகளுக்குத் தங்கள் பிரதிநிதிகளைத் தாங்களே தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கு உரிமை வழங்குவதன்மூலம் தீண்டப்படாதவர்களின் நலன்களைப் பாதுகாக்க வேண்டும் என்று அரசைக் கேட்டுக்கொள்ளும் முதல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இரண்டாவது தீர்மானத்தின்மூலம் காங்கிரசு-லீக் திட்டத்திற்கு ஆதரவு அளித்தது. அதே நேரத்தில் இதற்கு ஈடாக, மதத்தின் பெயராலும் வழக்கத்தின் பெயராலும் ஒடுக்கப்பட்ட மக்கள்மீது திணிக்கப்பட்டுள்ள சமூக இயலாமைகளை அகற்ற வேண்டியதன் தேவை, நீதி, நேர்மை பற்றி அடுத்துக் கூடவுள்ள காங்கிரசு மாநாட்டில்

சாதி இந்துக்களுக்கு உணர்த்த வேண்டும் என்றும் இத்தீர்மானம் கோரியது.

சில நாட்கள் கழித்து இரண்டாவது மாநாடு நடந்தது. இந்த மாநாடு சாதி இந்துக்களுக்கு அரசியல் அதிகாரம் மாற்றப்படுவதை எதிர்த்தது. தங்கள் பிரதிநிதிகளைத் தாங்களே தேர்ந்தெடுத்துக் கொள்ள உரிமை வழங்கிடக் கோரியது.

அம்பேத்கர் முதல் மாநாட்டின்போது, தன் சிற்றன்னை மறைவு கருதித் துக்கம் அனுசரித்துக்கொண்டிருந்தார். மேலும் காங்கிரசு ஏற்பாடு செய்திருந்த தீண்டப்படாதவர் மாநாட்டில் கலந்துகொள்ளும் வாய்ப்பு அவருக்கு இல்லை. இரண்டாவது மாநாட்டின் நோக்கங்கள் இவருடைய நோக்கத்திற்கு ஒத்ததாய் இருந்தபோதிலும் இதில் கலந்துகொள்ளும் மனோநிலையில் அவர் இல்லை.

மேற்குறித்துள்ள தீண்டப்படாதவர் முதல் மாநாட்டின் கோரிக்கையின்படி, தீண்டப்படாதவர்கள் காங்கிரசு-லீக் திட்டத்திற்கு ஆதரவு அளித்ததற்குக் கைம்மாறாக, 1917 டிசம்பரில் கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரசின் ஆண்டு மாநாட்டில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

காங்கிரசு-லீக் திட்டம்பற்றிய அம்பேத்கரின் கருத்துகளை இங்குக் குறிப்பது சிறப்பாக அமையும். சட்ட சபைகளுக்குத் தம் விருப்பம்போல் நிர்வாக இயந்திரத்தை மாற்றவும் உருவாக்கவும் அதிகாரம் வேண்டும் என்று இத்திட்டம் கேட்கவில்லையே என்று அம்பேத்கர் குறிப்பிட்டார். "இத்திட்டம் பொருத்தமற்றதாக இருக்கிறது. ஏனெனில் இத்திட்டத்தில் நிர்வாக இயந்திரமும் சட்டசபைகளும் ஆட்சிபுரிவதற்கான கட்டளை உரிமைகளை மேலிடத்தில் உள்ள வெவ்வேறு அதிகாரப் பீடங்களிலிருந்துதான் பெறுகின்றன. மேலும் வெவ்வேறுபட்ட இந்த அதிகாரப் பீடங்களுக்குக் கட்டுப்பட்டவையாகவும் இவை இருக்கின்றன" என்று கூறியுள்ளார்.[17]

தீண்டப்படாதவரின் கோரிக்கையினை ஏற்றுத் தீர்மானம் நிறைவேற்றிய மேலே சொன்ன கல்கத்தா மாநாடு நடந்து மூன்று மாதங்கள் கடந்தபின்னர், மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்ச்சி நடந்தது. இந்திய ஒடுக்கப்பட்ட வகுப்புகள் மிஷின் சங்கத்தின் அனைத்திந்திய ஒடுக்கப்பட்ட வகுப்புகளின் முதல் மாநாடு பம்பாயில் 1918 மார்ச்சு 23, 24 ஆகிய நாட்களில் நடந்தது.

தகுதி வாய்ந்த மேன்மைமிகு பரோடா மன்னர் சாயாஜி ராவ் கெய்க்வாடு இந்த மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார். இந்தியாவில் சிறந்த தலைவர்களாகத் திகழ்ந்துகொண்டிருந்த வித்தல் பாய் பட்டேல், எம்.ஆர். செயக்கர், பிபின் சந்திரபால் மற்றும் பலரும் இம் மாநாட்டில் கலந்துகொண்டனர். டாக்டர் ஹெரால்டு எச். மான், இரவீந்திரநாத் தாகூர், துவாரகையின் சங்கராச்சாரி, கார்வீர், டாக்டர் குர்ட்டகோட்டி ஆகியோரிட மிருந்து மாநாட்டிற்கு வாழ்த்துச் செய்திகள் வந்தன. வரவேற்புக் குழுத் தலைவர் சர் நாராயணன் கணேஷ் சந்த வர்க்கர் இந்திய நாட்டு மக்களின் மனச்சாட்சியைத் தட்டி எழுப்பவும், பகுத்தறிவுச் சிந்தனையையும் உணர்வையும் தூண்டவும், தீண்டாமைக் கறையைத் துடைத்து எறிய வேண்டு மென்று கேட்டுக் கொள்ளவும் கூடியுள்ளோம் என்று கூறினார். அறியாமை காரணமாக உள்ள பகையுணர்ச்சிகளும், வகுப்பு வெறியும், பெருகி வருகிற அறிவியல் சிந்தனைக்கும் பல்லாயிரக்க ணக்கான மக்களின் உணர்வினையும் கண்ணோட்டத்தையும் மாற்றியமைத்துக் கொண்டுவரும் சமூக மறுமலர்ச்சி எண்ணத்திற்கும் எதிராக இனி நீடித்து நெடுங்காலம் நிற்க முடியாது என்று தன் உரையில் மன்னர் குறிப்பிட்டார்.

இரண்டாவது நாள் மாநாட்டு நிகழ்ச்சிகளில் திலகர், காப்பர்டே, ஏ.வி. தாக்கர் ஆகியோர் கலந்துகொண்டனர். 'கடவுள் தீண்டாமை யைப் பொறுத்துக்கொள்வாரேயானால் அவரைக் கடவுளாகவே நான் மதிக்கமாட்டேன்' என்று திலகர் ஒரு தீர்மானத்தை ஆதரித்துப் பேசியபோது முழங்கினார். பண்டை நாளில் பார்ப்பனரின் ஆதிக்கச் சூழ்ச்சியால்தான் தீண்டாமை வழக்கம் உருவாயிற்று என்பதை மறுக்கமாட்டேன் என்றும் அவர் கூறினார். தீண்டாமை ஒரு நோய்; அதை அகற்றிட வேண்டும்; அது ஒரு சமூக வழக்கமாக இருக்கிறது; அதை மாற்றிட வேண்டும் என்று கூறித் திலகர் தன் பேச்சை முடித்தார்.[18] அன்றாட வாழ்வியல் நடப்புகளில் இனித் தீண்டாமையைக் கடைப்பிடிக்க மாட்டோம் என்று உறுதி கூறும் கொள்கை அறிக்கையில் முதன்மையான தலைவர்கள் பலரும் கையொப்பமிட்டனர். இந்த அனைத்திந்தியத் தீண்டாமை எதிர்ப்பு அறிக்கை சிம்லா மாநாட்டின் இறுதியில் நிறைவேற்றப்பட்டது. ஆயினும் இந்த அறிக்கையில் திலகர் கையொப்பமிடவில்லை. அவருடைய ஆதரவாளர்களின் நெருக்கு தல் காரணமாக அவர் கையொப்பமிடவில்லை என்று கூறப்பட்டது.[19] இந்த மாநாட்டைக் கர்ம வீரர் வி.ஆர். ஷிண்டே ஏற்பாடு செய்திருந்தார்.

III

தீண்டப்படாதவர்களின் உயர்வினுக்காகச் சாதி இந்துக்கள் தொடங்கியுள்ள இயக்கத்தை அம்பேத்கர் நம்பாமல் அய்யுற்று ஒதுங்கியிருந்தார். அதனால் அந்த மாநாட்டில் அவர் பங்கு பெறவில்லை. அடிப்படையிலேயே அதற்கு முரண்பட்டு நின்றார். நடப்புகளைக் கவனித்துக்கொண்டிருந்தார். அளப்பரிய தன் ஆற்றலையும் அறிவையும் பயன்படுத்தக்கூடிய சரியான வாய்ப்பு வரும் என்று காத்துக்கொண்டிருந்தார். முதலில் தான் காலூன்றி நிற்க ஓர் ஆதாரம் தேவைப்பட்டது. இதை அடைவதற்கு அவராகவே சம்பாதிப்பது என்பது தவிர வேறு மாற்று வழியில்லை. வழக்குரைஞர் தொழில் அவர் கண்முன் நின்றது. சொந்த வாழ்க்கையை நடத்துவதற்கும் தன்பால் தன் மக்கள் ஈர்க்கப்படுவதற்கும் வழக்குரைஞர் தொழில் உதவும் எனக் கருதினார். ஆனால் இலண்டனில் கிரேஸ் இன் சட்டக் கல்லூரியில் அவருடைய படிப்பு பாதியில் நின்றுவிட்டிருந்தது. இலண்டனில் தன் படிப்பை முடிக்க வேண்டும் என்ற அடங்காத விருப்பம் அவர் உள்ளத்தில் இருந்துகொண்டேயிருந்தது. இதை எப்படியும் அடைந்தே தீருவது என்று தீர்மானித்தார். நல்லெண்ணம் கொண்ட ஒரு பார்சி நண்பர் வழியாக இரண்டு மாணவர்களுக்குப் பாடம் கற்றுத் தரும் வாய்ப்பு அவருக்குக் கிட்டியது. இருப்பு மற்றும் பங்கு மார்க்கெட் வணிகத்தில் இருப்பவர்களுக்கு ஆலோசனை கூறும் வணிக நிறுவனம் ஒன்றையும் அதே நேரத்தில் தொடங்கினார். அது நல்ல வருவாயை வழங்கத் தொடங்கியது. ஆலோசனை கூறும் வணிக நிறுவனத்தின் உரிமையாளர் ஒரு தீண்டப்படாதவர் என்பது வாடிக்கையாளர்களுக்கு விரைவில் தெரிந்துவிட்டது. எனவே இவர் இதையும் மூடவேண்டியதாயிற்று. அதன்பின் சிலகாலம் ஒரு பார்சிக்காரரின் கடிதப் போக்குவரத்து மற்றும் கணக்கு எழுதும் வேலையைக் கவனித்துவந்தார்.

இந்நிலையிலும் மேலும் அறிவைப் பெருக்கிக்கொள்வது எங்ஙனம் என்று அவர் உள்ளம் ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டேயிருந்தது. இவ்வேளையில் பெர்ட்ரண்ட் ரசல் எழுதிய, ''சமுதாயத்தைத் திருத்தியமைத்தல்'' என்ற நூலைப்பற்றிய திறனாய்வுக் கட்டுரையை இந்தியப் பொருளாதாரச் சமூக இதழுக்காக எழுதினார். போர்பற்றிய புத்தகம் இது என்று குறிப்பிட்டு விட்டு - அறிவார்ந்த வேண்டுகோள்மூலமே போரை ஒழித்துவிட முடியாது என்றும், போர் மூளுதற்குக் காரணமாக உள்ளவற்றிற்கு எதிராக ஆக்கப்பூர்வமான தன்மையில் வாழ்வில் நம் விருப்பங்களையும் உணர்வு

களையும் பின்பற்றுவதன்மூலமே போரை ஒழிக்க முடியும் என்றும் ரசல் கருதுவது சரியே என்று தன் மதிப்புரையில் அம்பேத்கர் குறிப்பிட்டார். ரசல் போருக்கு எதிரானவர்; ஆனால் வெறுமையான அமைதியின் ஆதரவாளர் அல்லர். ரசலின் கூற்றுப்படி செயல்தான் வளர்ச்சிக்கு வழி வகுக்கும். அமைதியின் மறுபெயர் மரணம்தான்; ஆற்றல்தான் சக்தி. ஆக்கமான தன்மையில் ஆற்றலைப் பயன் படுத்தி எதையும் பெறலாம்; வன்முறையைப் போன்ற அழிவிற்காக ஆற்றலைப் பயன்படுத்தக்கூடாது. இவை ரசலின் கோட்பாடுகள். அகிம்சை எனப்படும் கொள்கையின் பெயரால் தங்களின் ஒருதலைச் சார்பான தத்துவத்திற்கான நியாயம் ரசல் புத்தகத்தில் இருப்பதாக இந்தியர்கள் கூறுவார்களோ என்று அம்பேத்கர் அஞ்சினார். சமூக வாழ்வின் உளவியல் அடிப்படையை வலியுறுத் தியிருப்பதற்காக ரசலை இத்திறனாய்வின் இறுதியில் அம்பேத்கர் பாராட்டியுள்ளார். சமூகத்தைத் திருத்தி அமைப்பது என்பது அச்சமூகத்தில் தனி மனிதர்களுக்கு இடையே இருக்கின்ற உறவைச் சரியாகப் புரிந்துகொள்வதைப் பொறுத்திருக்கிறது. இந்தப் பிரச் சினை பல சமூகவியலாளர்களுக்குப் பிடிபடாமலே வழுவிப்போய் விட்டது.

'இந்தியாவில் சாதிகள்' என்ற தன் ஆய்வுக் கட்டுரையை அம்பேத்கர் நூல் வடிவில் அச்சிட்டார். "இந்தியாவில் சிறு நிலங்களும் அவற்றிற்கான தீர்வுகளும்" (Small-holdings in India and their Remedies) என்ற சிந்தனையைத் தூண்டும் ஒரு கட்டுரையை யும் எழுதினார். சிதறுண்டு கிடக்கும் சிறிய நிலங்களை ஒன்றிணைத் துத் திரட்டிப் பெரும் பரப்புடைய நிலங்களாக அமைப்பதன்மூலம் இந்திய விவசாயத்தை முன்னேற்ற முடியும் என்று கருதிய வல்லுநர்கள் இச்செய்தியைப்பற்றி அப்போது விவாதித்துக்கொண் டிருந்தார்கள். இதுபற்றிய பரோடாக் குழுவின் அறிக்கையையும் வல்லுநர்களின் கருத்தையும் அம்பேத்கர் திறனாய்வு செய்தார். "எதிர்க்கப்படும் என்ற அச்சமே இல்லாமல் ஒரு கருத்தைத் துணிந்து கூறலாம். விவசாயத்தைத் தொழில் மயப்படுத்துதல் பெரிய அளவு விவசாய நிலங்களாக ஆவதற்கு ஆதரவாக நின்று ஊக்குவிக்கும். ஆனால் இது நிலங்களை ஒன்றிணைக்காது. விவாதத்திற்கே இடமில்லாத ஒரு உண்மை என்னவென்றால் நிலத்திலிருந்து ஆதாயம் கிடைத்துக்கொண்டிருக்கும்வரையில் நிலத்தை ஒன்றிணைப்பது எளிதன்று; நிலங் களின் ஒன்றிணைப் புக்கு ஒரு முன் தேவையாக நிகழ வேண்டியது விவசாயத்தைத் தொழில் மயமாக்குதலே ஆகும்" என்று கூறி முடித்துள்ளார்.[20]

இந்த அளவிற்கு அறிவின் அடித்தளத்தைப் பெற்றிருந்தும்கூட அம்பேத்கரின் வாழ்க்கைக் கப்பல் இனிதே ஊர்ந்து செல்லவில்லை. மனச் சோர்வு அடைந்திருந்த இந்நிலையில், பம்பாயில் சைடன் ஹாம் கல்லூரியில் பொருளியல் வர்த்தகப் பிரிவில் ஒரு வேலை காலி இருப்பதாக அம்பேத்கர் அறிந்தார். பேராசிரியர் பதவிக்கு அவர் விண்ணப்பித்தார். பம்பாய் மாகாண முன்னாள் கவர்னராக இருந்தவரும் அம்பேத்கருக்கு இலண்டனில் நன்கு பழக்கமானவரு மான சைடன்ஹாம் பிரபுவுக்குச் சைடன்ஹாம் கல்லூரியில் காலியாக உள்ள பேராசிரியர் பதவிக்குத் தன்னை நியமிக்குமாறு பம்பாய் அரசுக்குப் பரிந்துரை செய்யக் கோரி ஒரு கடிதம் எழுதினார். எல்லா ஏற்பாடுகளும் நடந்தன; நேர்முகத் தேர்வும் நன்முறையில் முடிந்தது. சைடன்ஹாம் கல்லூரியில் அரசியல் பொருளாதாரப் பேராசிரியராக அம்பேத்கர் அமர்த்தப்பட்டார். 1918 நவம்பரில் இப்பதவியை ஏற்றார். இதை ஒரு இடைக்கால ஏற்பாடாகவே கருதினார். இப்பதவியை ஏற்றுக்கொண்டதன் நோக்கமே இதன்மூலம் தேவையான பணத்தைச் சேர்த்துக்கொண்டு இங்கிலாந்துக்குச் சென்று சட்டப்படிப்பையும் பொருளாதாரப் படிப்பையும் முடிக்க வேண்டும் என்பதேயாகும்.

சைடன்ஹாம் கல்லூரியில் இந்தப் புதிய பேராசிரியரிடம் மாணவர்கள் தொடக்கத்தில் அதிக அக்கறை காட்டவில்லை. உயர் சாதி இந்து மாணவர்களும் மற்றும் சமுகத்தில் முன்னேறிய வீட்டுப் பிள்ளைகளும் ஒரு தீண்டப்படாதவர் என்ன கற்றுத் தந்துவிடப் போகிறார் என்று நினைத்தார்கள். ஆழ்ந்த படிப்பையும் ஈடுபாட் டையும் உடைய ஒரு மனிதர் தங்கள் முன் நிற்கும்போது என்ன நிகழும் என்பதைப்பற்றி அவர்களுக்குத் தெரியாது. அம்பேத்கரின் ஆழ்ந்த படிப்பறிவு, விளக்கமாக எடுத்துரைக்கும் திறமை, சிந்தனையைத் தூண்டும்படியான பேச்சு ஆகியவை மெல்லமெல்ல மாணவர்களின் மனங்களை ஈர்த்தன. இந்த இளம் பேராசிரியரின் எடுப்பான உடை, பரந்த படிப்பறிவு, ஊடுருவிப் பாயும் கண்களின் ஒளிவீச்சு ஆகியவை பொருளியல் மாணவர் வட்டத்தில் புகழ் பெற்றவையாயின. இதன் விளைவாக மற்ற கல்லூரிகளிலிருந் தும் மாணவர்கள் தனி அனுமதி பெற்று இவர் வகுப்பில் அமர்ந்து பாடம் கேட்டனர். பாடம் நடத்துவதற்காக இவர் எழுதிய குறிப்புகளும் திரட்டிய செய்திகளும் பொருளாதாரம்பற்றி ஒரு விரிவான புத்தகமே எழுதும் அளவிற்கு இருந்தன. ஆனால் பேராசிரியராக இவர் பெற்ற வெற்றியானது, புனிதமான கல்வி கற்கும் சூழ்நிலையில்கூட, தீண்டாமையின் தீமையைத் தணித்திட உதவவில்லை. பேராசிரியர்களுக்கென வைக்கப்பட்டிருந்த குடிநீர்ப்

பானையிலிருந்து அம்பேத்கர் தண்ணீர் குடிப்பதற்குக் குசராத்திப் பேராசிரியர்கள் சிலர் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

ஆயினும் அம்பேத்கர் பேராசிரியர் பதவியை வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டிருக்கவில்லை; அதை ஒரு கருவியாக மட்டுமே கருதினார். வேண்டுமென்றே சுமத்தப்பட்ட இழிவு களும் இழைக்கப்பட்ட அவமானங்களும் தீண்டாமைப் பிரச்சினையின் ஆணிவேரையே காணுமாறு இவரைத் தூண்டின. ஆகவே மெல்ல இவர் தீண்டப்படாதவர்களின் நாடித் துடிப்பைக் கண்டறியத் தொடங்கினார். இதற்காக ஆதரவு தரும் மய்யங் களுடன் அமைதியாகத் தொடர்புகொண்டார். உரிய விவரங்களைச் சேகரித் தார். இறந்துபோன செல்களில் புத்துயிர் பாய்ச்சிட முனைந்தார்; உயிருள்ளவற்றை மேலும் ஒளிர்ந்திடச் செய்தார்.

இந்த நோக்கத்தை மனத்திற்கொண்டு கிரிக்கெட் விளையாட்டில் பெரும் சாதனை செய்ததற்காகப் பி. பாலுவுக்கு ஒரு பாராட்டு விழா நடத்துமாறு ரோஹிதாஸ் வித்தியா வர்த்தக சமாஜத்தை ஊக்குவித்தார். இந்த விழா சிறப்பாக நடைபெற அம்பேத்கர் கடும் உழைப்பை நல்கினார். ஒரு மாணவர் என்ற முறையில் ஒரு தீண்டப்படாத பந்து வீச்சாளராகத் திகழ்ந்தவரின் புகழைப் பெருமைக்குரியதாகக் கருதினார். பம்பாய் நகராட்சியில் பி. பாலு ஓர் உறுப்பினராக உயருவதற்கு அம்பேத்கர் அரும்பாடுபட்டார். இதற்காகத் தீண்டப்படாதவர்களுக்கென ஏற்கனவே இருந்த ஒரே பதவியை இரண்டாக உயர்த்திடச் செய்தார்.

இக்காலக்கட்டத்தில் மராட்டியத்தில் பரந்த மானுடப் பற்றும் வீறார்ந்த துணிவும் கொண்ட மராத்திய சிற்றரசர் ஒருவர் பலருடைய கவனத்தையும் ஈர்த்தார். தீண்டாமை ஒழிப்பிலும் ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்கள் நலனிலும் அவர் ஆழ்ந்த அக்கறை காட்டிவந்தார். சிறப்பு வாய்ந்த இச்சிற்றரசர் கோல்ஹாப்பூர் மன்னர் ஆவார். இவர் பெயர் சாகு மகாராசா. கீழ்ச் சாதி மக்கள் கல்வி கற்கத் தன்னால் இயன்றதனைத்தையும் செய்தார்; சாதி இந்துக்களால் ஏற்படுத்தப்பட்ட தடைகளை நீக்கவும் இழிவுகளைத் துடைக்கவும் முயன்றார்; மிகக் கொடுமையான புரோகிதப் பிடியிலிருந்தும் நீதியற்ற பார்ப்பன ஆதிக்கத்திலிருந்தும் கீழ்ச்சாதி மக்களை விடுதலை செய்வதைக் குறிக்கோளாகக்கொண்டிருந்தார். ஒல்லும் வழியெல்லாம் தீண்டப்படாத மக்களை ஊக்குவித்தார். தனக்கு நேரிடை உதவியாக இருக்கக்கூடிய பதவிகளில் தீண்டப்படாதவர் களை நியமித்தார். தீண்டப்படாதவர்கள் வழக்கறிஞர்களாக

ஆவதற்கு உரிய சன்னது வழங்கினார். பொது இடங்களில் இவர்களோடு உணவருந்தினார். தீண்டப்படாத மாணவர்களுக்கு இலவசக் கல்வியும் இலவசத் தங்குமிடமும் உணவும் அளிக்கும் மாணவர் விடுதிகளை ஏற்படுத்தினார். பெருமைக்குரிய அரசரின் யானைப்பாகன் பதவியையும் தீண்டப்படாதவருக்கே அளித்தார்.

இக்கட்டத்தில், மாண்ட்டேகு - செம்ஸ்போர்டு அறிக்கையின் படி, வாக்குரிமை வழங்குவது தொடர்பாகச் 'சவுத் பரோ குழு' இந்தியாவில் பல்வேறு தரப்பினரின் - வகுப்பினரின் கருத்துகளைக் கேட்டறிய வந்தது. இக்குழுவின்முன் சாட்சியம் அளிப்பதற்காகக் கர்ம்வீரர் ஷிண்டேவும், அம்பேத்கரும் அழைக்கப்பட்டனர். தீண்டப்படாதோருக்குத் தனி வாக்குரிமையும் தீண்டப்படாத வகுப்பு மக்கள் தொகைக்கு ஏற்ப இட ஒதுக்கீடும் தேவை என்று அம்பேத்கர் கோரினார். பம்பாய் 'டைம்ஸ் ஆப் இந்தியா' இதழுக்கு அம்பேத்கர் அப்போது எழுதிய ஒரு கடிதத்திலிருந்து ஹோம்ரூல் இயக்கத்தினரின் கோரிக்கைபற்றி அம்பேத்கர் என்ன கருத்துக் கொண்டிருந்தார் என்பதை நாம் அறிய முடிகிறது. சுயாட்சி வேண்டும் என்று கேட்பதற்கு முன், கீழ்ச் சாதியினராக - ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களாக இருக்கின்றவர்களுக்குச் சமூகத்தில் சம உரிமையும் சமநீதியும் தந்து சமதளத்தில் வைக்க வேண்டியது முன்னேறிய மேல்சாதியினரின் கடமையாகும். ஏனெனில் இவர்களைப் போலவே தீண்டப்படாதவர்களும் இந்து மதத்தைச் சேர்ந்தவர்கள்; ஒரே மாதிரியான பழக்க வழக்கங்ளைப் பின்பற்றி ஒரே நாட்டெல்லைக்குள் வாழ்பவர்கள். இவர்களைப் போலவே தீண்டப்படாதவர்களுக்கும் சுதந்திர உணர்ச்சியும் சுயாட்சி வேட்கையும் உள்ளன. சுயாட்சி பார்ப்பானின் பிறப்புரிமையாகக் கருதப்படுவதைப் போலவே ஒரு மகாரின் பிறப்புரிமையாகவும் இருக்கிறது என்று அம்பேத்கர் அழுத்தந் திருத்தமாக வலியுறுத்தியுள்ளார்.

தீண்டப்படாதவர்களுக்குக் கல்வியையும் அறிவையும் தந்து உயர்த்துவதுதான் முன்னேறிய வகுப்பினர் செய்ய வேண்டிய முதலாவது கடமையாகும். இப்படிப்பட்ட நடைமுறையை மேற்கொண்டால் அன்றி இந்தியா சுயாட்சி பெறுவது என்பது வெகுகாலத்திற்குத் தள்ளிக்கொண்டே போகும் எனக் குறிப்பிட்டுள்ளார்.[21]

1919இல் தத்தோபா பவார் மூலமாகக் கோல்ஹாப்பூர் மன்னருடன் நெருக்கமாகப் பழகும் வாய்ப்பு அம்பேத்கருக்கு

ஏற்பட்டது. தான் தொடங்கவுள்ள மாதம் இருமுறை இதழுக்காக மன்னரிடம் சில உதவிகள் பெற்றார். 'மூக் நாயக்' (ஊமைகளின் தலைவன்) என்ற பெயரிலான இதழை 1920 சனவரி 31ஆம் நாள் தொடங்கினார். அம்பேத்கர் இந்த இதழின் அதிகாரப்பூர்வ மான ஆசிரியராக இல்லாவிட்டாலும் அவர்தான் அதற்கு எல்லாம் என்ற நிலை இருந்தது. இதில் அவர் தன் கருத்துகளை எழுதி வந்தார். இப்பத்திரிக்கையைத் தொடங்கியபோது எந்த அளவிற்குச் சாதகமற்ற எதிர்ப்பான சூழ்நிலை நிலவியதென்றால், காசு கொடுத்து மூக் நாயக் பத்திரிக்கை வெளிவருவதுபற்றி விளம்பர மாகப் போடுமாறு 'கேசரி' பத்திரிக்கையைக் கேட்டுக் கொண்ட போது, அதை வெளியிட மறுத்துவிட்டது.[22] அப்போது திலகர் உயிருடன் இருந்தார்.

மூக் நாயக் முதல் இதழில் அவ்விதழின் குறிக்கோள்பற்றி எளிமையான முறையில், புரிந்து ஏற்றுக்கொள்ளும் தன்மையில், அழுத்தமான வீச்சுடன் அம்பேத்கர் அறிவித்துள்ளார். 'இந்தியா ஒரு சமத்துவமில்லாத நாடு. இந்தியா பல அடுக்குகளை உடைய கோபுரம் போன்றது. ஆனால் இதற்கு நுழைவாயிலே இல்லை. ஒரு அடுக்கிலிருந்து மற்றொரு அடுக்கிற்குச் செல்ல ஏணிப்படி களும் இல்லை. ஒரு அடுக்கில் பிறந்த ஒருவர் அங்கேயேதான் மடிய வேண்டும்' என்று எழுதியுள்ளார். பார்ப்பனர், பார்ப்பனர் அல்லாதார், தீண்டப்படாதவர்கள் என்ற மூன்று பிரிவுகளாக இந்துச் சமூகம் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். கடவுள் விலங்குகளி லும் மற்ற உயிரற்ற பொருள்களிலும் இருக்கிறார் என்று தத்துவ விளக்கம் கூறிக் கொண்டே, அதே சமயம், தன் சொந்த மதத்துக்காரர்களையே தீண்டப்படாதவர்களாக நடத்துகின்றவர்க ளுக்காக இரக்கப்படுகிறேன் என்று எழுதியுள்ளார். அறிவையும் கல்வியையும் பரப்புதலை நோக்கமாகக் கொண்டிருக்காமல் பார்ப்ப னர்கள் இவற்றை முழுவதுமாகத் தாமே பெற்று ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்பதையே குறிக்கோளாகக் கொண்டிருப்பதற்காக வருந்துவதாகக் குறிப்பிட்டுள்ளார். கல்வியும் அதிகாரமும் இல்லா மையே பார்ப்பனர் அல்லாதாரின் பின்தங்கிய நிலைக்குக் காரணம் என்று கருதினார். இறுகப் பிணைத்துள்ள அடிமைத்தளையிலிருந்து, வறுமையி லிருந்து, அறியாமையிலிருந்து ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களைக் காப்பாற்றி மீட்டிட மிகப் பெரிய அளவிலான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. சமூக இயலாமை களை உணர்ந்திடும் வகையில் விழிப்புணர்வு பெறச்செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

'ஊமைகளின் தலைவன்' ஏட்டின் மற்றொரு இதழில், இந்தியா ஒரு சுதந்திர நாடாக மட்டும் இருந்துவிட்டால் போதாது என்று குறிப்பிட்டுள்ளார். இந்தியா ஒரு நல்ல அரசாகவும் உருவாக வேண்டும். அதில் எல்லா வகுப்பு மக்களுக்கும் மத, சமூக, பொருளாதார, அரசியல் தொடர்பானவற்றில் சமஉரிமை என்பது உறுதி செய்யப்பட்டதாக இருக்கவேண்டும். ஒவ்வொரு தனி மனிதனுக்கும் வாழ்வின் படிகளில் உயர்வதற்கான வாய்ப்பும், இவ்வாறு முன்னேறுவதற்கு ஏற்ற நல்ல சூழ்நிலையும் அளிக்கப் பட வேண்டும். பிரிட்டிஷ் அரசின் நீதியற்ற அதிகாரத்தை எதிர்ப்பது சரி என்று பார்ப்பனர்கள் சொல்வதில் எந்த அளவிற்கு நியாயம் இருக்கிறதோ, அதைவிட நூறு மடங்கு அளவு நியாயம் - ஆட்சி அதிகாரம் பார்ப்பனர் கைகளுக்கு மாற்றப்படக்கூடாது என்று ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்கள் எதிர்ப்பதில் அடங்கியிருக்கி றது. இக்கருத்தைப் புறக்கணிக்கக் கூடிய அருவருக்கத்தக்க மனிதர் எவரும் இருக்க முடியாது என்று அதே கட்டுரையில் எழுதியுள் ளார். பிரிட்டிஷ் அரசு அளித்து வரும் பாதுகாப்பு அகற்றப்படுமா னால் தீண்டப்படாதவர்கள்பால் இரக்கமில்லாதவர்கள் இவர்களை மிதித்து நசுக்கிவிடுவார்கள் என்று வலியுறுத்தியுள்ளார். ஒடுக்கப் பட்ட வகுப்பினருக்கு அடிப்படை உரிமைகளை வழங்காத சுயராச்சியம் அவர்களுக்கு ஓர் உண்மையான சுயராச்சியமாக இருக்க முடியாது. அது அவர்களுக்கு ஒரு புதிய அடிமைத் தளையாகவே இருக்கும் என்று மற்றொரு கட்டுரையில் எழுதியுள் ளார்.

இந்துச் சமூகத்தின் மீது முழுத் தாக்குதல் தொடுக்க அம்பேத்கர் அப்போது தயாராக இல்லை. அவர் ஓர் அரசுக் கல்லூரியில் பேராசிரியராகப் பணிபுரிந்துகொண்டிருந்தார். மேலும் அவருடைய ஆயுதக் கிடங்கில் போதிய அளவுக்குப் படைக் கருவிகளைச் சேர்த்திருக்கவில்லை.

1920 மார்ச்சு 21இல் கோல்ஹாப்பூர் அரசில் மான்கோன் என்ற இடத்தில் நடைபெற்ற தீண்டப்படாதவர் மாநாட்டிற்கு அம்பேத்கர் தலைமை தாங்கினார். இதில் சாகு மகாராசாவும் கலந்துகொண்டார். "அம்பேத்கர் உருவில் உங்கள் மீட்பரைக் கண்டறிந்துள்ளீர்கள். உங்கள் அடிமை விலங்கை இவர் உடைத்தெ றிவார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அது மட்டுமன்று. ஒரு காலம் வரும்; அப்போது அனைத்திந்திய அளவில் மதிப்பு வாய்ந்த புகழ்மிக்க தலைவர்களில் ஒருவராக இவர் திகழ்வார் என்று என் மனச்சான்று சொல்கிறது" என எதிர்காலத்தை

உய்த்துணர்ந்து அறிவிப்பதுபோன்று கோல்ஹாப்பூர் அரசர் உரைத்தார்.[23] இந்த மாநாட்டின் முடிவில் பல சாதி மக்களும் கலந்துகொண்ட விருந்து நடந்தது. இதில் மேன்மைமிகு மன்னரும், அரசு அதிகாரிகளும், பாளையக்காரர் களும், அம்பேத்கர் தலைமையில் தீண்டப்படாதவர்களும், மற்றவர்களும் கலந்து கொண்டனர்.

மற்றொரு முதன்மை வாய்ந்த மாநாடு நாகபுரியில் 1920 மே மாதக் கடைசி வாரத்தில் நடைபெற்றது. அங்கும் அம்பேத்கரின் குரல் ஒலித்தது. தீண்டப்படாதவரால் நடத்தப்பட்ட அனைத்திந்திய முதல் மாநாடு இதுதான். கோல்ஹாப்பூர் மன்னர்தான் இம்மாநாட்டின் தலைவர். அவ்வேளையில் கர்ம வீரர் ஷிண்டே ஒடுக்கப்பட்ட வகுப்புகள் கழகத்தின் சார்பில் ஒரு கருத்தை வெளியிட்டார். தீண்டப்படாதவர்களின் பிரதிநிதி களைத் தீண்டப்படாதவர்களுக் கான அமைப்புகள் தேர்ந்தெடுக்கக்கூடாது; அரசாங்கமும் தேர்ந்தெடுக்கக்கூடாது; அவர்கள் சட்டசபை உறுப்பினர்களால் தான் தெரிவுசெய்யப்பட வேண்டும் என்று அதில் கூறினார். நாகபுரி மாநாடு இக்கருத்தை ஏற்க வேண்டும் என்பதற்காகத் தன் ஆட்களை ஷிண்டே அனுப்பிவைத்தார். ஷிண்டேயின் கருத்து மாபெரும் அவமானமானது என்று அம்பேத்கர் கொதிப்படைந்தார். ஷிண்டேவின் கருத்தைக் கடுமையாக எதிர்த்து முழங்கினார். இத்தன்மையில் அரசு எடுக்கும் நடவடிக்கையை எதிர்த்துத் தனியான தீர்மானம் இம் மாநாட்டின் இறுதியில் நிறைவேற்றப்பட்டது. ஷிண்டேவின் கருத்துக்கு எதிராக அம்பேத்கர் தன் கருத்துகளை இம் மாநாட்டில் முன்வைத்தபோதுதான் அவருடைய நுண்ணிய அறிவாற்றலும், சூழ்நிலைக்கு ஏற்ப வாதிடும் திறமையும், ஒரு தலைவனுக்குரிய தகுதியும் புது வெள்ளம்போல் வெளிப்பட்டன. பொதுவாழ்வில் இங்குதான் அம்பேத்கர் தன் முதல் வெற்றியைப் பெற்றார்.

தீண்டப்படாதவர் நலனுக்காகச் சாதி இந்துக்கள் எவ்வளவுதான் வருந்தி உழைத்தாலும் தீண்டப்படாதவரின் மனநிலையை இவர்களால் உணர முடியாது என்று அம்பேத்கர் கருதினார். எனவேதான் தீண்டப்படாத வகுப்பினரின் உயர்வினுக்காகச் சாதி இந்துக்களால் உருவாக்கப்படும் எந்த அமைப்பையும் அடிப்படையிலேயே அம்பேத்கர் எதிர்த்தார். ஷிண்டேயின் தீண்டப்படாத வகுப்புகள் கழகத்திலிருந்து தீண்டப்படாத வகுப்பு மக்களின் கவனத்தைத் திசை திருப்பிட நாகபுரி மாநாடு நல் வாய்ப்பை நல்கியது. மாநாட்டின் முடிவில் தீண்டப்படாத வகுப்புகளில் உள்ள பல்வேறு

பிரிவுகளையும் ஒன்றிணைக்க அம்பேத்கர் ஒரு முயற்சியை மேற்கொண்டார். மத்திய மாகாணங்களில் மகார் வகுப்பில் மட்டும் பதினெட்டு உள் சாதிகள் இருந்தன. இந்த உள் சாதிகளின் தலைவர்களை அழைத்தார்; அவர்களுக்கு ஒரு விருந்து கொடுத்தார். பல உள் சாதியினர் பங்குகொண்ட இந்த விருந்திற்கு எல்லாத் தீண்டப்படாத பிரிவுகளிலிருந்தும் தலைவர்கள் வரவில்லை. மகார் வகுப்பினரின் உட்பிரிவுகளில் உள்ள தலைவர்களை ஒன்றுசேர்ப்ப தற்கே அம்பேத்கர் அரும்பாடுபட வேண்டியிருந்தது.

கோல்ஹாப்பூர் அரசர் அம்பேத்கரிடம் கொண்டிருந்த அன்பும் மதிப்பும் வளர்ந்தன. திடீரென்று ஒருநாள் சாகு மன்னர் அம்பேத்கரின் வீட்டிற்குச் சென்றார். அம்பேத்கரை இது வியப்பில் ஆழ்த்தியது. விரைந்து சட்டையை மாட்டிக்கொண்டு மன்னரைத் தன் படிப்பறைக்கு அழைத்துச் சென்றார்.

IV

பேராசிரியரான அம்பேத்கர் கைநிறையச் சம்பளம் வாங்கிய போதிலும் சிக்கனமாகவே வாழ்ந்தார். பரேலில் தொழிலாளர்கள் வாழ்ந்த புதிய குடியிருப்புப் பகுதியில் எதிரெதிரே அமைந்த இரு அறைகள் கொண்ட வீட்டில்தான் அப்போதும் வாழ்ந்தார். தன் சம்பளத்திலிருந்து நிலையான ஒரு தொகையை வீட்டுச் செலவுகளுக்கெனத் தன் மனைவியிடம் கொடுத்து வந்தார். கடமைப் பொறுப்பும் தன்மான உணர்வும், அமைதியும், உறுதியும், தன்னல மறுப்பும், சமய உணர்வும் ஒருங்கே பெற்றிருந்த அவருடைய மனைவி இராமாபாய் தொடக்க ஆண்டுகளில் ஒரு போராட்டமான வாழ்க்கையை நடத்த வேண்டி யிருந்தது. தன் கணவரின் மறைந்துவிட்ட அண்ணன் குடும்பத்தை யும் உடன் வைத்துப் பேணிய நிலையிலும் அவர் அமைதியாகவும் இணக்கமாகவும் வாழ்ந்தார். கடுமையான மத ஆசாரங்களை வழுவாமல் பின்பற்ற வேண்டும் என்பதில் உணர்ச்சி வயப்படு வார்; பிடிவாதமாக இருப்பார்.

துன்பத்தைத் தாங்கும் ஆற்றலில் சிறந்த இவர் அம்பேத்கர் அமெரிக்காவில் இருந்தபோது எத்தகைய ஆதரவும் அற்ற நிலையில் வாழ்ந்தபோதிலும், குறைபட்டுக்கொண்டதில்லை; சிறு முணுமுணுப்பும் செய்ததில்லை. தன் கணவன் நலமாக இருக்க வேண்டும்; முன்னேற வேண்டும் என்று எப்போதும் கடவுளிடம் வேண்டிக்கொண்டிருப்பார். அம்பேத்கர் அமெரிக்காவிற்குப் புறப் பட்டுச் சென்றபோது இவர் கருவுற்றிருந்தார்; இவருக்கு ஓர் ஆண்

மகவு பிறந்தது, ரமேஷ் என்ற இம்மகன் குழந்தையிலேயே இறந்துவிட்டான். அம்பேத்கர் இந்தியாவிற்குத் திரும்பியபின் பிறந்த கங்காதரனும் குழந்தையாக இருக்கும்போதே இறந்து விட்டான். இப்போது யசுவந்தன் மட்டுமே இருந்தான். இவனுடைய உடல்நிலை எப்போதும் கவலை தருவதாகவே இருந்தது. இந்த நிலைமையிலும் எந்த அளவிற்கு முடியுமோ அந்த அளவிற்குச் சிக்கனமாக வாழ்ந்தார். கணவருடைய படிப்புக்குத் தொல்லையாக இல்லாத வகையில் தன்னைத் தனிமைப்படுத்திக் கொண்டார்; குடும்பத்தில் யாருக்கு நோய் ஏற்பட்டாலும் அதைத் தெரிவிப்பதும் இல்லை; யாராலும் அவர் படிப்பு பாதிக்கப்படக் கூடாது என்று கருதினார். கணவரின் முயற்சியால் இப்பொழுது ஓரளவு எழுதவும் படிக்கவும் கற்றுக் கொண்டிருந்தார். இந்தியப் பெருந்தலைவர்களுக்கு அருமையான எளிமையான மனைவியர் வாய்த்திருந்தனர். இது தனித் தன்மையான சிறப்பாகும். திலகர், காந்தி, சாவர்க்கர் ஆகியோர்க்கு அமையப்பெற்றதுபோலவே அம்பேத்கருக்கும் ஒப்பரிய உயர் குணங்கொண்ட மனைவி கிடைத்திருந்தார்.

இறுதியில் தான் சேர்த்திருந்த சிறு தொகை, கோல்ஹாப்பூர் மன்னரிடம் பெற்ற சில உதவிகள், நண்பர் நவல் பத்தேனாவிடம் பெற்ற கடன் ரூ5000 ஆகியவற்றுடன், 1920 சூலை மாதம் சட்டப் படிப்பையும் பொருளாதாரப் படிப்பையும் முடித்திட வேண்டும் என்று கருதி இலண்டனுக்குப் பயணமானார். நடுக்கமற்ற மனமும், ஆதரவளிக்கும் குணமும் பொறுமையும் கடமை உணர்வும் மிக்க அவர் மனைவி அளித்த ஒத்துழைப்பு ஒப்பரியதாகும். இராமாபாய்க்கு வாழ்க்கையில் மீண்டும் தனியே போராட வேண்டிய நிலை; தன் மகன் யசுவந்தனையும், தன் கணவரின் இறந்துவிட்ட அண்ணன் குடும்பத்தையும் பேணிட வேண்டிய பெரும் பொறுப்பு தொடர்ந்தது.

இதற்கிடையில் மன்னரின் வளத்தைப் பெருக்கிட அரசின் நிதிநிலையைக் கட்டுப்படுத்திட வேண்டும் என்ற பேரார்வத்தினால் பரோடா அரசின் அதிகாரிகள் அம்பேத்கர் பெற்றிருந்த கல்வி உதவித் தொகையைத் திருப்பிக் கட்டுமாறு மிகவும் வலியுறுத்தி வந்தனர். அம்பேத்கருக்கு அளிக்கப்பட்டிருந்த கல்வி உதவித் தொகையை இப்போது கடன் என்று மாற்றிவிட்டனர். இப் பணத்தை அம்பேத்கர் திருப்பிச் செலுத்த வேண்டியிருப்பதுபற்றி சைடன்ஹாம் கல்லூரி நிர்வாகத்திற்கும், பம்பாய் மாகாணக் கல்வி அதிகாரிகளுக்கும், பம்பாயில் புகழ் பெற்றிருந்த தொழிலாளர்

தலைவர் என்.எம். ஜோஷிக்கும் அரசரின் அதிகாரிகள் எழுதினார் கள். இந்த நடவடிக்கைகள்பற்றி மன்னருக்கு அதிகாரிகள் சொல்லியதாகத் தெரியவில்லை.

கல்விக்காக இப்பணம் செலவிடப்பட்டது; ஆகவே இப் பணத்தை வசூல் செய்தல் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று இது தொடர்பான கோப்பில் அரசர் குறிப்பு எழுதியிருக்கிறார். இவ்வாறு எழுதப்பட்ட பிறகும் அரசின் நிர்வாகப் பொறுப்பில் இருந்தவர்கள் கொண்டிருந்த பொறாமை உணர்ச்சியின் காரணமாக அம்பேத்கர் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுப்பதற்கான வாய்ப்பினை உண்டாக்குவதற்காகப் பணத்தை வசூல் செய்யும் நடவடிக்கையை மேலும் சிலகாலம் இழுத்தடித்தனர். இறுதியில் அரசரே அதிகாரிகளை இடித்துக் கூறி இதற்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்தார். கல்வி உதவித் தொகை பெற்றவர்களுக்குத் தொல்லை தரும் இக்கொள்கையை 1932இல் அரசவை கைவிட்டது.

இலண்டன் நகரை அடைந்ததும் 1920 செப்டம்பரில் இலண்டன் பொருளாதார மற்றும் அரசியல் விஞ்ஞானக் கல்லூரி யில் தன் பொருளியல் கல்வியை அம்பேத்கர் தொடர்ந்தார். கிரேஸ் இன் சட்டக் கல்லூரியிலும் சட்டப் படிப்பைத் தொடர்ந்தார். இப்பொழுது அவருடைய கவனம் இலண்டன் அருங்காட்சியகத் தின் பக்கம் படர்ந்தது. இங்குப் பண்டையத் தத்துவ அறிவியல் களஞ்சியங்களாக நூல்கள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளன. பழங்காலத் தொல்பொருள் சின்னங்கள் இங்குப் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. காரல் மார்க்சு, மசானி, லெனின், சாவர்க்கர் போன்றவர்கள் தம் அறிவுப் பசியைத் தணித்துக்கொள்ளவும் தெளிவு பெறவும் நாடிச் சென்ற இடம் இதுதான்; வாய்ப்பு அமையும் போதெல்லாம் இந்த அருங்காட்சியகத்தில் உள்ள நூலகத்தில் அம்பேத்கர் ஆழ்ந்து படித்தார்; காலை 8 மணிமுதல் மாலை 5மணிவரை படிப்பது என்பது அடிக்கடி நிகழும்.

நேரத்தைப் பொன்போல் கருதுவது அவர் வாழ்வில் முதன்மை யான இடத்தைப் பெற்றிருந்தது. நேரத்தையும் செலவையும் மிச்சப்படுத்த வேண்டும் என்பதற்காக அவர் பகல் உணவு உண்ணாமலேயே இருந்துவிடுவார். அச்சமயம் ஒரு பெண் நடத்திவந்த விடுதியில் தங்கியிருந்தார். அது அரை உணவு விடுதியாகவும் இயங்கியது. பம்பாயைச் சேர்ந்த அஸ்நாட்கர் என்பவரும் இப்பெண் நடத்திய விடுதியில் அம்பேத்கருடன் பணம் தரும் விருந்தாளியாகத் தங்கியிருந்தார். இவ்விடுதியின்

உரிமையாளரான இப்பெண் கடுமையும் கண்டிப்பும் உள்ள பேர்வழி! ஜாம் தடவப்பட்ட சிறிய ரொட்டித் துண்டு, ஒரு சிறிய மீன் துண்டு, ஒரு குவளை தேநீர் இவைதாம் அந்த அம்மையார் அங்குத் தங்கியிருந்தவர்களுக்கு அளிக்கும் காலைச் சிற்றுண்டி. செலவு குறைவான இச்சிறிதளவு சிற்றுண்டியை அவசர அவசரமாக விழுங்கிவிட்டுக் காலையிலேயே அருங்காட்சியகத்திற்கு விரைந்து ஓடுவார். அருங்காட்சியகத்துள் நுழையும் முதல் ஆள் பெரும்பாலும் இவர்தான். இடையில் நிறுத்துவதோ ஓய்வு கொள்வதோ இல்லாமல் இந்த நூலகத்தில் மணிக்கணக்கில் அன்றாடம் படித்துவந்தார். எந்த அளவிற்கு ஆழ்ந்து மூழ்கிப் படித்து வந்தாரெனில், நூலகக் காவலாளி அம்பேத்கர் எங்கே இருக்கிறார் என்று ஒவ்வொரு நாள் மாலையிலும் வேட்டையாடுவதுபோல் தேடிப் பிடித்து அம்பேத்கரை வெளியே அனுப்புவார். ஏனெனில் இவர்தான் நூலகத்தை விட்டு வெளியேறும் கடைசி மனிதர். நூலகத்தை விட்டு வெளியேறும்போது அவர் எழுதிய குறிப்புத் தாள்களால் அவரது சட்டைப் பைகள் பிதுங்கிக்கொண்டிருக்கும். அத்துடன் படித்த களைப்பால் முகம் வெளிறிப் போய் சோர்ந்து காணப்படும்.

அம்பேத்கரின் ஆய்வுப்பணி அருங்காட்சியக நூலகத்தோடு மட்டும் நின்றுவிடவில்லை. இந்திய அலுவலக நூலகம், இலண்டன் பல்கலைக்கழக நூலகம் மற்றும் பொருளாதார நூல்களுக்காகப் புகழ் பெற்றிருந்த இலண்டன் நகரிலிருந்த பிற நூலகங்கள் ஆகியவற்றில் பல தொகுதிகளையும் பழைய அறிக்கைகளையும் படித்தார். தன் ஆராய்ச்சிக்காகப் பெருமளவில் குறிப்புகள் எழுதிக்கொண்டார்.

பகற்பொழுதில் மேற்கொண்ட ஈடில்லா இக் கடும் உழைப்புக்குப் பின் மாலையில் திறந்த வெளியில் அரைமணி நேரம் உலாவுவார். இரவு உணவு மீண்டும் அப்பெண்மணியின் விடுதியில்தான். கறி சூப், சில பிஸ்கட் துண்டுகள், சிறிது வெண்ணெய் இவையே இரவு உணவு! இவ்வாறு இரக்கமற்ற சிக்கனத்துடன் தான் வாழ்ந்த காலத்தைச் சில ஆண்டுகள் கழித்து நினைவுகூர்ந்து கடுமையான சொற்களால் பிரபாகர் பத்தேயிடம், "நான் தங்கியிருந்த விடுதியின் சொந்தக்காரப் பெண் கொடுமையானவள். அவள் எப்பொழுதுதான் சாவாளோ என்றுதான் எண்ணுவேன். கண்டிப்பாக அவள் நரகத்திற்குத்தான் போய் இருப்பாள்"[24] என்று கூறினார்.

இரவு உணவுக்குப்பின் தான் தங்கியிருந்த இடத்தில் படிப்ப தன் இரண்டாவது சுற்று தொடங்கும். இரவு பத்து மணியளவில் வயிற்றின் பசித்தீ மேலெழுந்து சென்று மூளையின் அறிவுப் பசியை ஒடுக்கி அடக்கும். பசி வயிற்றைப் பிசைய அம்பேத்கர் துடித்துத் துன்புறுவார். கடும் பசியால் கனன்று துடிப்பார். அவருக்குப் பழக்கமாயிருந்த இந்தியர் ஒருவர் பப்படம் ஒரு கட்டு கொடுத்திருந்தார். இந்தப் பப்படத்தைப் பொரித்துத் தின்பதற்காக வாணல் ஒன்று வாங்கினார். நான்கு பப்படம் சுட்டுத் தின்று தேநீர் குடித்துத் தன் பெரும் பசியை ஓரளவு தணித்துக் கொள்வார். மீண்டும் இடைவிடாத படிப்பு தொடரும். அது விடியற்காலைவரை நீளும். அம்பேத்கர் அறை நண்பர் அஸ்நாட்கர் இனிய ஆழ்ந்த தூக்கத்திற்குப்பின் இடையில் தற்செயலாகக் கண்விழித்துப் பார்க்கும்போதும் அம்பேத்கர் இன்னும் ஆழ்ந்து படித்துக்கொண்டிருப்பதைக் கண்டு அவர்பால் கழிவிரக்கம் கொண்டு, படுத்துத் தூங்குங்கள் என்று அன்புடன் கூறுவார். "வறுமையும் நேர நெருக்கடியும் மிகுவிரைவில் படிப்பை முடித்திட வேண்டுமென்று என்னை முடுக்குகின்றன; எனவேதான் வேட்டை நாய் போன்ற விடாப்பிடியுடன் இந்த இடையறாப் படிப்பு" என்று அமைதியாக அந்தப் பேரறிஞர் விடை பகர்வார்.

அவ்வப்போது அவருடைய நண்பர் நவல் பத்தேனாவின் உதவியை நாடினார். அவரும் விழுமிய வகையில் உதவி வந்தார். "என் பணத் தேவைக்காக உங்களுக்குத் தொல்லை தருகிறேன் என்று என் உள்ளம் நைந்து வருந்துகிறது. இதை நீங்கள் நம்புவீர்கள் என்று எண்ணுகிறேன். என் பொருட்டு நீங்கள் ஏற்கின்ற துன்பங்களை மிக நெருக்கமான நண்பன்கூடத் தாங்கிக் கொள்ளமாட்டான் என்பதை உணருகின்றேன். தொடர்ந்து ஏதாவ தொரு உதவியை உங்களிடம் நான் கேட்டுக் கொண்டே யிருப்பது உங்கள் முதுகெலும்பை முறித்து எனக்குள்ள ஒரே ஆருயிர் நண்பரான உங்களை என்னிடமிருந்து பிரித்து விடாது என்று நம்புகிறேன்" என்று ஒருமுறை பத்தேனாவிற்கு மனம் நெகிழ்ந்து மடல் எழுதினார். செருமானிய நாணயத்தின் மதிப்பு உயரும்போல் இருப்பதால், முன்னதாகவே ஓரளவு வாங்கி வைத்துக்கொள்வதற் காக ரூ.2000 அனுப்புமாறு பத்தேனாவிற்கு வலியுறுத்தி ஒரு மடல் எழுதினார்.

ஏழைச் சிறுவனாக வாழ்வில் அடி எடுத்து வைத்து மிகச் சிறந்த மனிதனாக உயர்ந்த பெஞ்சமின் பிராங்கிளின், வாழ்வின் வெற்றி என்பது கடும் உழைப்பு, சிக்கனம் ஆகிய இரண்டைப்

பொறுத்துத்தான் உள்ளது என்று கூறியுள்ளார். மாதத்திற்கு எட்டு பவுண்டுகள் என்ற சிறிய தொகைக்குள் தன் தேவைகளைச் சுருக்கிக்கொண்டு மிகவும் சிக்கனமாக அம்பேத்கர் வாழ்ந்தார். உடலால், உள்ளத்தால் தெளிந்த அறிவினராய் விளங்கினார். உடைகளுக்காகப் பணத்தைச் செலவிடமாட்டார். அரிதாகவே போக்குவரத்திற்காகப் பணத்தைச் செலவழிப்பார். அப்பெரு நகரின் பல இடங்களுக்கும் அலைந்து உலைந்து நடந்தே செல்வார். உணவு விடுதிகள், விருந்துகள், இன்பச்சுற்றுலா, திரையரங்குகள் இவை அவர் அறியாதவை. இவற்றை நாடிச் செல்லப் பணமோ நேரமோ அவருக்கு இருந்ததில்லை. ஒருவர் எவ்வாறு தன் எதிர்காலத்தையும் தனித்தன்மையான சிறப்பியல்புகளையும் அமைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்கும், சுடச்சுட ஒளிரும் பொன்போல் அடுத்தடுத்து வரும் இடுக்கண்கள் ஒருவரிடம் பொதிந்துள்ள ஆற்றலை எவ்வாறு தட்டி எழுப்புகின்றன என்பதற்கும் எடுத்துக்காட்டாக அம்பேத்கர் வாழ்க்கையைப்போல வரலாற்றில் மிகச் சிலருடைய வாழ்க்கை மட்டுமே இலங்குகின்றது. மணிக்கணக்கில் கடும் உழைப்பு, கொடுந்துன்பங்களைத் தாங்குதல், உயர்சிந்தனை ஆகியவை மட்டுமே உலக வரலாற்றில் உயர்ந்த மனிதர்களுக்கு வெற்றியை ஈட்டித் தந்துள்ளன.

கல்வியில் சிறப்புற வேண்டும் என்று அம்பேத்கர் போராடிக் கொண்டிருந்தபோதிலும் தன் வாழ்க்கையின் குறிக்கோளை மறக்க வில்லை. செயலை நோக்கியே சிறந்த மனிதர்களின் வளர்ச்சி இயங்குகிறது. அதனுடைய மகிழ்ச்சியில் மயங்குவதில்லை. இலண்டன் சென்றபின் இந்திய அரசின் செயலாளராக இருந்த மாண்ட்டேகுவையும், அப்போது இலண்டன் வந்திருந்த வித்தல் பாய் பட்டேலையும் சந்தித்து இந்தியாவில் உள்ள தீண்டப்படாத வர்களின் துயரங்கள்பற்றி அவர்களுடன் பேசினார்.

இந்தியாவிலிருந்து நெடுந்தொலைவில் வாழ்க்கையில் போராடிக் கொண்டிருந்த போதிலும், இந்தியாவில் தீண்டப்படாதவர்களின் உயர்வினுக்காக உழைத்துக்கொண்டிருந்த ஒடுக்கப்பட்ட வகுப்பு கள் கழகத்தின் கிளைகளின் செயல்பாடுகள்பற்றிச் சரியாக அறிந்துகொண்டிருந்தார். தீண்டாமைக்கு எதிரான போரில் இருபது ஆண்டுகளுக்குமேல் தனக்கு இணையற்ற தோழராய் விளங்கிய எஸ்.என். சிவதார்க்கர் வழியாக, இலண்டனிலிருந்தவாறே, இயக் கத்தைச் சரியான பாதையில் நடத்துவதுபற்றி நெறிப்படுத்திக் கொண்டிருந்தார். 'ஊமைகளின் தலைவன்' இதழ் வெளிவருவது

பற்றி அதிக ஆர்வம் கொண்டிருந்தார். இந்த இதழ் வெளிவர இயலாத நிலை ஏற்படும்போதெல்லாம் கவலைப்பட்டார். இப்பத்திரிக்கையை நிறுவியவன் என்ற தன்மையில் என்னால் இதிலிருந்து ஒதுங்கியிருக்க முடியவில்லை என்று ஒரு கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எடுக்கின்ற முயற்சிகள் வெற்றியைத் தருமா இல்லையா? நம் பணியை மற்றவர்கள் பாராட்டுவார்களா இல்லையா? என்றெல்லாம் கவலைப்படாமல் கடமையைக் கட்டாயம் செய்திடல் வேண்டும்; விழுமிய குறிக்கோளில் ஒருவன் கொண்டுள்ள மெய்யான ஈடுபாடும் திறமையும் நிரூபிக்கப்படும்போது அவனுடைய எதிரிகள்கூட அவனை மதிப்பார்கள் என்று எழுதியுள்ளார்.

புகழ் பெற வேண்டும் என்று விழைவது தவறன்று. ஆனால் புகழ் கிடைக்கவில்லை என்பதற்காக மனந்தளர்ந்து உன் போராட்டத்தைக் கைவிட்டுவிடாதே! நன்றி கொன்றவர்களால் நீ ஒதுக்கப்பட்டாலும், உனக்கு உரிய சிறப்பு மறுக்கப்பட்டாலும் திருப்பித் தாக்கிடும் உன் போர்க்குணத்தை நழுவவிடாதே என்றெல்லாம் வேறொரு கடித்தில் குறிப்பிட்டுள்ளார்.

பின்னொரு தடவை அவருடைய சொந்த வாழ்க்கையையே எடுத்துக்காட்டாகக் கூறுகிறார். 'ஊமைகளின் தலைவன்' இதழின் புத்தாண்டு ஆசிரிய உரையில் அதன் ஆசிரியர் தற்புகழ்ச்சியாகத் தன்னைப்பற்றி மட்டுமே எழுதிக்கொண்டார். ஆனால் அதன் நிறுவனரான அம்பேத்கரைப்பற்றிக் குறிப்பிடவே இல்லை. இவ்வாறு இருந்தபோதிலும் இப்பத்திரிக்கை தீண்டப்படாதவர்களுக்காக இயங்குகிறது; தொண்டு செய்கிறது; இது மனநிறைவு தருகிறது என்று குறிப்பிட்டுள்ளார். தீண்டப்படாதவர்களுக்குள் இருக்கின்ற பல்வேறு உட்சாதிகளும் ஒன்றிணைய வேண்டியதன் முதன்மையை ஒவ்வொரு கடிதத்திலும் வலியுறுத்திவந்தார். இவ்வாறு ஒன்றுபட்டு முயன்றாலும் பிரச்சினைகளைத் தீர்த்திட நீண்ட காலமாகும் என்று அறிவு கொளுத்தினார்.

இந்த அறிவுரையை இடைவிடாமல் சொல்லிக்கொண்டேயிருந்தார். பெருந்தலைவர்கள் எல்லோரும் தம் தொடக்கக் கால ஆண்டுகளில் உடன் பணியாற்றும் தோழர்களின் இன்பதுன்பங்களிலும் தொல்லைகளிலும் ஆழ்ந்த ஈடுபாடு காட்டியதைப் போன்றே அம்பேத்கரும் விளங்கினார். அவருடைய சமூகத்தின் மூத்த தலைவரான டி.டி. கோலாப் போன்றவர்களின் உடல்

நலம்பற்றி அடிக்கடி கேட்பார். நண்பர்கள் தம் சுற்றத்தினரை இழக்கும்போது அவர்கள் இரங்கல் செய்தி அனுப்பினார். தன் மகன், தன் அண்ணன் மகன் படிப்புபற்றி எப்பொழுதும் கவலையுடன் எண்ணினார். நண்பர் சிவதார்க்கருக்கு இவர்களின் கல்விபற்றி எழுதி இவர்களின் தனிப்பயிற்சிக்கென ஆசிரியர் ஒருவரை அமர்த்துமாறு கேட்டுக்கொண்டார்.

அம்பேத்கர் அந்நாளில் மராத்தி நாடகங்களைப் படித்து வந்தார் என்று தெரிகிறது. மராத்தியில் புகழ்பெற்ற நாடக ஆசிரியரான கட்கரியின் சிறந்த நாடக நூல்களை அனுப்புமாறு சிவதார்க்கருக்கு அம்பேத்கர் நினைவூட்டிக் கொண்டேயிருந்தார். மூல்லோச் பதிப் பித்த ரைகார்டோவின் தொகுப்புகள் (Ricardo's works) என்ற நூலை வாங்கி அனுப்புமாறு இலண்டனிலிருந்து எழுதினார். இது கிடைத்தற்கரிய நூல். பம்பாயில் பழைய புத்தகக் கடைப்பகுதியில் எந்தக் கடையில் இந்நூல் இருக்கிறது என்றும் சில மாதங்களுக்கு முன் அக்கடையில் இந்நூலைத் தான் பார்த்தது பற்றியும் எஸ்.என். சிவதார்க்கருக்குக் கடிதம் எழுதினார். உயர்ந்த உடைய ணிந்திருந்த அம்பேத்கரைக் கண்டதும் பம்பாயிலிருந்த அந்தக் கெட்டிக்காரக் கடைக்காரன் கந்தலாகிவிட்டிருந்த அந்நூலுக்கு அதிக விலை சொன்னதால் அப்போது அம்பேத்கர் அதை வாங்க முடியாதுபோயிற்று.

இங்கிலாந்தில் இருந்த காலத்தில் பொதுவாக அம்பேத்கர் நல்ல உடல் நலத்துடன் இருந்தார். அவர் எழுதியுள்ள கடிதம் ஒன்றிலிருந்து 1922 அக்டோபர் மாதத்தில் உடல் நலம் குன்றியிருந்தார் என்று அறிகின்றோம். இச்செய்தி மற்றவர்களுக்குத் தெரிவிக்கப்படவில்லை. எப்பொழுதும் கணவனைப்பற்றியே கவ லைப்பட்டுக்கொண்டிருக்கும் அம்பேத்கரின் மனைவி இச்செய் தியை அறிந்தால் மேலும் பதட்டமாகிவிடுவார் என்ற காரணத்தால் சிவதார்க்கர் அம்பேத்கர் மனைவிக்குக்கூட அவருடைய உடல்நலக் குறைவுபற்றிக் கூறவில்லை.

நாடகத்தில் வரும் திருப்பங்கள்போல் இந்திய அரசியல் வானில் மாற்றங்கள் நிகழ்ந்துகொண்டிருந்தன. அம்பேத்கர் இங்கிலாந்து சென்றடைந்த சிறிது காலத்திற்குள் இந்திய நாட்டின் தலைசிறந்த மகனாக விளங்கிய லோகமானிய திலகர் திடீரென்று இறந்துவிட் டார். இந்தியர் துக்கத்தில் ஆழ்ந்தனர். இந்த இழப்பினூடேதான் காந்திய இயக்கத்தின் அரசியல் கருத்துகளும் காந்தியாரின் செல்வாக்கும் இந்தியாவில் பரவிப் பெருகின. சில ஆண்டுகள்

கழித்து, இக்காலக்கட்டத்தைப்பற்றி எழுதும்போது, இது இந்தியா வின் இருண்ட காலம் என்று அம்பேத்கர் குறிப்பிட்டுள்ளார்.

இக்கட்டத்தில் தீண்டாமை ஒழிப்பில் புரட்சிகரமான செயல் ஏதும் நிகழவில்லை. திலகர் சுயராச்சிய நிதி திரட்டியபோது காந்தியார் காங்கிரசின் முதன்மையான கொள்கைகளில் ஒன்று தீண்டாமை ஒழிப்பு என்று ஆக்கினார். ஆனால் திலகர் நிதியாகத் திரட்டிய ஒரு கோடி ரூபாயிலிருந்து சிறு தொகைக்குமேல் தீண்டாமை ஒழிப்பிற்காகச் செலவிட காந்தி மறுத்தார். சில மாதங்கள் இப்பிரச்சினையைக் கிடப்பில் போட்டிருந்தபின் உண் மையான அன்பும் ஈடுபாடும் இல்லாத காரணத்தால் காங்கிரஸ் செயற்குழு தீண்டப்படாதவர்களை முன்னேற்றுவது என்கிற பிரச்சினையை இந்து மகாசபைக்கு என்று ஒதுக்கி விட்டுவிடலாம் என முடிவு செய்தது. இந்து மகாசபைதான் இப்பிரச்சினையைக் கவனிக்கத் தகுதியானது என்று காங்கிரஸ் கருதியது.

1919ஆம் ஆண்டுச் சட்டம், இந்திய வரலாற்றில் முதன் முறையாகத் தீண்டப்படாத வகுப்புகள் இருப்பதை அங்கீகரித்தது. மத்தியச் சட்டசபைக்கு இந்தியக் கவர்னர் ஜெனரல் நியமனம் செய்த பதினான்கு பேரில் தீண்டப்படாதவர் ஒருவர் நியமனம் பெற்றார். இதேபோன்று மாகாணச் சட்டசபைகளுக்கும் தீண்டப் படாதவர்கள் நியமன உறுப்பினர்கள் ஆனார்கள். மத்திய மாகாணத்துக்கு நால்வர், பம்பாய்க்கு இருவர், பீகாருக்கு இருவர், வங்காளத்துக்கு ஒருவர், அய்க்கிய மாகாணத்துக்கு ஒருவர் என்று தீண்டப்படாதவர்கள் மாகாணச் சட்டசபைகளுக்கு நியமன உறுப்பி னராயினர். சென்னை மாகாணச் சட்டசபைக்கு ஒன்பது தீண்டப்ப டாத வகுப்புகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தன்மையில் பத்து பேர் நியமிக்கப்பட்டனர்.

நாட்கள் உருண்டோடின. அம்பேத்கரின் அரும்பெரும் ஆய்வுப்பணி படிப்படியாக ஒரு முடிவுநிலைக்கு வந்தது. "பிரிட்டிஷ் இந்தியாவில் பேரரசின் நிதியை மாகாணங்களுக்குப் பிரித்தளித்தல்" (Provincial Decentralization of Imperial Finance in British India) என்ற ஆய்வுக் கட்டுரையை அவர் முதலில் எழுதி முடித்தார். இதற்காக 1921 சூன் மாதத்தில் அவருக்கு எம்.எஸ். (Master of Science) பட்டம் வழங்கப்பட்டது. 1922 அக்டோபரில் அவருடைய புகழ்மிக்க "ரூபாயின் சிக்கல்" (The Problem of the Rupee) என்ற ஆய்வுக் கட்டுரையை எழுதி முடித்து இலண்டன் பல்கலைக்கழகத்தில் ஒப்படைத்தார். அதே நேரத்தில் இலண்டனில்

சட்டத் தேர்வு எழுதவும் அழைக்கப்பட்டார். அவருடைய ஆய்வுக் கட்டுரைகளை எழுதி முடிப்பதில் ஆழ்ந்து ஈடுபட்டுக் கடுமையாக உழைத்துக் கொண்டிருந்ததால் இதற்கு முன்னர், சட்டத்தேர்வை எழுத அவரால் முடியவில்லை. மேலும் தனக்குச் சட்ட நூல்களை இரவல் தருவதாக வாக்களித்திருந்த நண்பர் அந்நூல்களைத் தராமல் விட்டுவிட்டார்.

இதற்கிடையில் அவருடைய படிப்பு முடிவடையும் தருவாயில் இருக்கும்போது, அய்ரோப்பாவில் புகழ் பெற்றிருந்த மற்றொரு கல்வி மய்யத்தில் சேர்ந்து படித்திட விரும்பினார். செருமனியிலுள்ள பான் பல்கலைக்கழகத்தில் சேருவதற்காக, 1922 ஏப்ரல் மாத மத்தியிலிருந்து மே மாதம் பாதிவரையில் செருமனியில் தங்கிக்கொண்டு ஏற்பாடுகள் செய்தார். அதன்பின் இலண்டன் திரும்பிவிட்டார். இலண்டன் பல்கலைக்கழகத்தில் அவருடைய ஆய்வுக் கட்டுரையை அளித்துவிட்டு உடனே பான் பல்கலைக்கழகத்தில் படிப்பதற்காகச் செருமனிக்குச் சென்றார். அங்குச் சென்ற மூன்று மாதங்களுக்குள், 1923 மே மாதம், அம்பேத்கரின் 'உருபாயின் சிக்கல்' என்ற ஆய்வுக் கட்டுரையில் உள்ள சில சொற்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத் தேர்வாளர்களின் மனத்தைப் புண்படுத்துவதாகத் தேர்வாளர்கள் கருதுவதால் அந்த ஆய்வுக் கட்டுரையின் முடிவுகளை மாற்றாமல் சில சொற்களை மட்டும் மாற்றி மீண்டும் எழுதித்தர வேண்டும் என்பதற்காக உடனே இலண்டனுக்கு வருமாறு அவருடைய பேராசிரியர் எட்வின் கனான் அம்பேத்கரை அழைத்தார். இலண்டன் உயர்கல்வி வட்டாரத்தில் அம்பேத்கரின் எழுத்துகள் பெருங் கிளர்ச்சியைத் தோற்றுவித்தது இது முதன்முறையன்று. அதற்குச் சில நாட்களுக்குமுன் "இந்தியாவில் பொறுப்பு வாய்ந்த அரசின் பொறுப்புகள்" (Responsibilities of Responsible Government in India) என்ற தலைப்பில் மாணவர் சங்கத்தில் ஒரு கட்டுரை படித்தார். அறிஞர்களிடையே இது பெரும்பரபரப்பை ஏற்படுத்தியது. அம்பேத்கர் இந்திய விடுதலைப் புரட்சியாளர்களில் ஒருவராக இருப்பாரோ என்ற அய்யத்தை இது எழுப்பியது. இங்கிலாந்தில் பேராசிரியராக இருந்த ஹெரால்டு. ஜெ. லஸ்கி கூட அம்பேத்கர் கட்டுரையின் கருத்துகள் புரட்சிகரமானவை என்பதை வெளிப்படையாகவே புலப்படுத்துகின்றன என்று கருத்தறிவித்தார்.

'உருபாயின் சிக்கல்' என்ற ஆய்வுக் கட்டுரையை மீண்டும் திருத்தி எழுதுவதற்காக இலண்டனில் அம்பேத்கரால் மேலும்

தொடர்ந்து தங்கி இருக்க இயலவில்லை. அவரிடமிருந்த பண வசதி பெரிதும் சுருங்கிவிட்டது. தன் தேவைகளைச் சுருக்கி மிகச் சிக்கனமாக வாழ்ந்ததன்மூலம் அவர் சேர்த்த பணத்திற்குப் புத்தகங்களாக வாங்கிவிட்டிருந்தார். இந்தியாவில் அவர் குடும்பமோ மிகவும் நெருக்கடியில் இருந்தது. ஆய்வுக் கட்டுரையை மீண்டும் எழுதுவதுபற்றிய சிந்தனையுடன், 1923 ஏப்ரல் மாதம் அவர் பம்பாய்க்குத் திரும்பினார். சில நாட்கள் கழித்து 'உருபாயின் சிக்கல்' பற்றிய ஆய்வுக் கட்டுரையைத் திருத்தி எழுதிப் பம்பாயிலிருந்து இலண்டனுக்கு அனுப்பினார். இலண்டன் தேர்வாளர்கள் இதனை ஏற்றுக்கொண்டனர். இதற்கான டி.எஸ். (Doctor of Science) பட்டத்தைப் பெற்றபோது அவர் பெருமகிழ்ச்சியில் திளைத்தார். மிக நெடிய கடும் உழைப்பு, நடுக்கமற்ற மனத்திட்பம், எதையும் தன்வயமாக்கும் அறிவாற்றல் இவை இறுதியில் அவருக்குப் பெரும் வெற்றியை ஈட்டித் தந்தன.

விரிவுபடுத்தப்பட்ட பகுதியுடன் இந்த ஆய்வுக் கட்டுரை 1923 டிசம்பர் மாதம் இலண்டனில் பி.எஸ். கிங் அண்டு சன்ஸ் கம்பெனியால் வெளியிடப்பட்டது. அம்பேத்கர் இந் நூலைத் தம் பெற்றோர்க்குக் காணிக்கையாக்கினார். "நான் கல்வி பயில அறிவு நெறிகாட்டித் தியாகங்கள் செய்ததற்காக என் உள்ளத்தில் உறைந்துகொண்டிருக்கும் நன்றியைக் காட்டும் வகையில் இந்நூலை என் பெற்றோர்க்குப் படைக்கிறேன்" என அவர் எழுதியுள்ளார். பெருஞ்சிறப்பு வாய்ந்த அவருடைய ஆசிரியர் எட்வின் கனான் இந்நூலை மக்களுக்கு அறிமுகப்படுத்தினார். அம்பேத்கர் இந்நூலில் முன்வைத்துள்ள ஆய்வுரைகளில் பலவற்றைத் தான் ஏற்கவில்லையாயினும், அம்பேத்கரின் சில கருத்துகள் சில பிரச்சினைகளுக்கு மரண ஆணி அடித்தன என்று கூறி, உலக அளவில் பொருளாதாரத் துறையில் புகழ் பெற்றிருந்த இப்பேராசிரியர் அம்பேத்கர் முன்வைத்துள்ள கருத்துகளும் காரணங்களும் புதியனவாகவும் சிந்தனையைத் தூண்டுவனவாகவும் உள்ளன என்றும் வியந்து பாராட்டினார்.

நாணய நடப்பின் சிக்கலைத் தீர்த்திட முயன்றபோது உருபாய்க்கும் பவுண்டுக்கும் இடையே உள்ள மதிப்பு ஆங்கிலேயர்க்கு அதிக இலாபம் தரும் தன்மையில் சூழ்ச்சியாகக் கையாளப்பட்டது என்பதை அம்பேத்கர் புலப்படுத்தினார். அதே நேரத்தில் இந்திய மக்களை நசுக்கிடும் வகையில் இடையூறுகள் எவ்வாறு சுமத்தப்பட்டன என்று இந்நூலில் அம்பேத்கர் விளக்கியுள்ளார்.

அம்பேத்கர் இப்பொழுது ஒரு பாரிஸ்டர். இத்துடன் அறிவியலில் இலண்டன் பல்கலைக்கழகம் வழங்கிய டாக்டர் பட்டத்தையும் பெற்றிருந்தார். தத்துவத்தில் அமெரிக்கப் பல்கலைக் கழகம் அளித்த டாக்டர் பட்டம், பான் பல்கலைக்கழகத்தில் கற்ற கல்வி ஆகியவையும் அவருக்கு அணி செய்தன. முழுத்தகுதி வாய்ந்த வழக்கறிஞரானார். இந்தியாவில் உள்ள பொருளாதாரச் சமூகவியல் அறிஞர்களுக்கு அறைகூவல் விடுமளவிற்குச் சிறந்த வல்லுநரானார். இத்தகுதிகளுடன் இந்திய அரசியல் களத்தில் புயலென நுழைந்தார் அம்பேத்கர்.

தலைவராக உருவாதல்

வழக்கறிஞராகத் தொழில் செய்வதென அம்பேத்கர் முடிவு செய்தார். அப்போதுதான் தீண்டப்படாதவர்களின் விடுதலைக்காக உழைப்பது என்ற வாழ்வின் குறிக்கோளைச் செயல்படுத்துவதற்குத் தேவையான வாய்ப்புகளும், வருவாய்க்கான வசதியும், ஓய்வும் அமையும் என்று எண்ணினார். வழக்கறிஞராகப் பதிவுசெய்து 'சன்னத்' வாங்குவதற்கும் அவரிடம் பணம் இல்லை. என்றென்றும் ஆதரவளித்து உதவிடும் நண்பர் நவல் பத்தேனா இம்முறையும் அவருக்குப் பணம் தந்தார். இப்பணத்தைக் கொண்டு 'சன்னத்' வாங்கினார். 1923 சூன் மாதம் வழக்கறிஞராக வாழ்க்கையைத் தொடங்கினார். தீண்டாமையின் முட்கள், தோலின் நிறம், அனுபவமில்லாத சட்ட அறிவு, நீதி மன்றங்களில் நிலவிய உதவிகரமற்ற சூழ்நிலைகள் ஆகியவை அவர் வழக்கறிஞர் தொழிலில் எளிதில் முன்னேறுவதற்குத் தடைகளாய் நின்றன. ஆனால் இதற்காக அவர் மனந்தளரவில்லை. கடுமையான உழைப்பைச் செலுத்துவதன்மூலமே அடுத்த முயற்சியில் மேலான வெற்றியைப் பெற முடியும் என்பதை அவர் அறிந்திருந்தார். இது அவர் இளமையிலிருந்தே கற்றிருந்த பாடம். எனவே வழக்கறிஞர் தொழிலிலும் வெற்றியை நிலைநாட்டிட உறுதி பூண்டார்.

பம்பாயில் மேல்முறையீட்டுப் பிரிவில் அம்பேத்கர் வழக்கறிஞராகச் சேர்ந்தார். மூலவழக்குகள் பதிவுப்பிரிவில் வழக்கறிஞராகப் பணியாற்றிட ஒருவருடைய திறமையைவிட வழக்கறிஞர் தொழிலிலுள்ள மூத்த வழக்கறிஞர்கள் அளிக்கும் ஆதரவைப் பொறுத்தே வெற்றி என்பது இருக்கும். எனவே அம்பேத்கர் இங்கு மூலவழக்குப் பதிவுப்பிரிவில் வழக்கறிஞராகத் தொழில் நடத்த விரும்பவில்லை. ஆங்கிலேய நீதிபதிகள்முன் ஆங்கிலேயப் பாரிஸ்டர்கள்தாம் திறமையாக வாதிடுகிறார்கள் என்ற பொதுவான கருத்து அந்நாளில் நிலவியது. அவர்கள் முன்வைக்கும் வாதங்களை விடச் சிலபோது அவர்களுடைய வெள்ளைத்தோல் வெள்ளை நீதிபதிகளின் பார்வையில் ஒளிர்ந்து மின்னியது. மேலும் அம்பேத்கரின் வழக்கறிஞர் தொழிலில் பல இடையூறுகள் குறுக்கிட்டன.

இவர் தீண்டப்படாதவர் என்கிற காரணத்தால் மூத்த வழக்கறிஞர்கள் தம் நிலையிலிருந்து கீழிறங்கிவந்து தொழில்

முறையில் இவரோடு தொடர்புகொண்டு உதவிட முன்வரவில்லை.

உயர்நீதிமன்றத்தில் முன்வரிசை வழக்கறிஞராகத் தன்னை உயர்த்திக் கொள்ளும்வரையில், புறநகர் நீதிமன்றங்களில் கிடைக்கும் வழக்குகளை ஏற்றுத் தொழில் நடத்தினார். வழக்கறிஞர் தொழிலில் புகழ்பெற்றவர்கள் எல்லோரும் தொடக்கக் காலத்தில் இத்தன்மையில்தான் மன ஆறுதல் பெற்றுத் தங்களைத் தாங்களே தேற்றிக்கொண்டு முன்னேறினார்கள்.

இப்போது புறநிலை உந்துதல்களும், அகநிலைத் தாக்கங்களும் தீண்டப்படாத வகுப்பு மக்களின் மனநிலை, மற்றும் போக்குகள் ஆகியவற்றின்மீது தெளிவான மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தன. கல்விப் பரவல், செய்தித் தொடர்பு வளர்ச்சி, போக்குவரத்து வசதியில் முன்னேற்றம், நாட்டு விடுதலை உணர்ச்சி ஆகியவை தீண்டாமைபற்றி மக்கள் கொண்டிருந்த கொடுமையான கருத்துகள் மீது அழுத்தமான மாற்றங்களை ஏற்படுத்தத் தொடங்கின.

முதல் உலகப் போரின்போது இந்தியாவில் நெசவாலைத் தொழில் வளர்ந்தது. இதனால் மற்ற வகுப்புகளைச் சார்ந்த தொழிலாளர்களைப் போலவே தீண்டப்படாத வகுப்புத் தொழிலாளர்களும் நெசவாலைத் தொழிலால் பொருளாதார நிலையில் ஓரளவு உயர்ந்தனர். தங்கள் வாழ்நிலையை மேலும் உயர்த்திக்கொள்ள வேண்டும் என்ற தூண்டுதலை இதன்மூலம் பெற்றனர். முதல் உலகப் போரின் விளைவாகக் குடியாட்சி முறைபற்றிய கருத்துகள் இந்தியாவில் வேகமாகப் பரவின. உலகம் முழுவதும் இருந்த சமூகச் சீர்திருத்த இயக்கத்திற்கு முதல் உலகப் போர் ஒரு பெரும் உந்துவிசையாக அமைந்தது. இது இந்தியாவில் தீண்டப்படாதவர் மனங்களில் தாங்களும் முன்னேற வேண்டும் என்ற அதிர்வலையைத் தோற்றுவித்தது. இந்த வகுப்பு மக்களின் சிந்தனைகளிலும், செயல்களிலும் தமக்குரிய நிலையை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற அவா வெளிப்பட்டது. அடிமைப்பட்டிருந்த ஒரு வகுப்பினர் விழிப்புணர்வு பெற்றுத் தம் சிந்தனைக்குப் புத்துயிர் ஊட்டும்போது இதுபோல் நடைபெறுவது இயல்பே! வேகமான சமூக மாற்றங்கள் நல்லெண்ணங்கொண்ட பெரியார்களின் முயற்சியால் மட்டுமே நடைபெறுவதில்லை. நசுக்குண்ட மக்கள் ஒன்றுதிரண்டு தங்களுக்குரிய நிலையை உறுதிசெய்திட வீறுகொள்ளும்போதுதான் சமூக மாற்றங்கள் விரைந்து நிகழ்கின்றன என்பது சமுதாயச் சீர்திருத்த விதியாகும்.

இவ்வேளையில் திருத்தியமைக்கப்பட்ட பம்பாய் மாகாணச் சட்டசபையில் அங்கம் வகித்த தாழ்த்தப்பட்ட வகுப்புப் பிரதிநிதிகள், ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களின் நல்வாழ்வுத் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும் என்பதில் தீவிரக் கவனம் செலுத்தினார்கள். பம்பாய் மாகாணச் சட்டசபைக்குத் தாழ்த்தப்பட்டவர்களின் பிரதிநிதியாக முதலாவதாக நியமிக்கப்பட்ட டி.டி. கோலாப், ஒடுக்கப்பட்ட வகுப்பினர்க்குக் கல்வி எளிதில் கிடைக்கும்பொருட்டுத் தொடக்கக் கல்வியைக் கட்டாயமாக்க வேண்டும் என்ற தீர்மானத்தைக் கொண்டுவந்தார். கிராமங்களில் மகார்களுக்குத் தண்ணீர் வசதியின்மையை அகற்றுதல், ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களுக்கெனப் புதிய தொடக்கப் பள்ளிகள் தொடங்குதல்பற்றிப் பல கேள்விகளைக் கேட்டார். ஒடுக்கப்பட்ட வகுப்புப் பெண்களுக்கெனத் தனியாக விடுதிகள் தொடங்கப்பட உள்ளனவா என்றும் வினவினார். சட்டசபையின் மற்றொரு உறுப்பினரான ஆனந்தராவ் சுர்வே தாணா மாவட்டத்தில் பொதுப் போக்குவரத்து வாகனங்களில் ஒடுக்கப்பட்ட மக்கள் பயணம் செய்ய அனுமதிக்கப்படுவதில்லை என்பது உண்மையா என்று விவாதத்தின்போது குறுக்கிட்டார்.

எஸ்.கே. போலே முன்மொழிந்த முக்கியமானதொரு தீர்மானம் *1923* ஆகஸ்டு 4ஆம் நாள் பம்பாய் மாகாணச் சட்டசபையில் நிறைவேறியது. தனிச்சிறப்பும், பொறுமையும், கூர்ந்த அறிவுமுடைய சமூகச் சீர்திருத்தக்காரரான போலே 1906 இல் ஆரிய சாமாஜத்தினருடன் பல சாதி விருந்தில் தீவிரமாகப் பங்கேற்றதாக அவருடைய பண்டாரிச் சாதியினர் அவரைச் சாதி விலக்கம் செய்யப்போவதாக மிரட்டியதையும் துணிச்சலுடன் எதிர்த்து நின்றார். அவர் ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களின் மேம்பாட்டிற்காகத் துணிவான நடவடிக்கைகளை மேற்கொண்டார். தன் தீர்மானத்தை முன்மொழிந்து பேசியபோது தீண்டாமை இந்தியாவின் புகழுக்கு ஒரு பெரிய களங்கம் என்று குறிப்பிட்டார். மேலும் தென்னாப்பிரிக்காவில் கறுப்பர்களுக்கெனத் தனிக்குடியிருப்புப் பகுதிகளை ஏற்படுத்துவதை நாம் எதிர்க்கின்றோம். ஆகவே நம்முடைய சொந்த நாட்டை முதலில் சீர்திருத்த வேண்டும். நம்முடைய நலனையும் நாட்டின் நலனையும் கருத்திற்கொண்டு நாம் ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களை நல்ல முறையில் நடத்த வேண்டும் என்று கூறினார்.

நீங்கள் உங்களைத் திருத்திக்கொள்ளாவிட்டால் தீண்டப்படாத மக்கள் என்றோ ஒருநாள் சத்தியாக்கிரகத்தில் இறங்கிவிடுவார்கள்

என்று எச்சரித்தார். தன் சொந்தச் சகோதரர்களான தீண்டப்படாதவர் கள்பற்றிச் சாதி இந்துக்கள் கொண்டுள்ள கண்ணோட்டத்தில் புதிய மாற்றம், புதிய அத்தியாயம் தொடங்கப்பட வேண்டும் என்றும், இதற்காக அரசு உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்திப் பேசினார்.

அரசின் நிதியிலிருந்து கட்டப்பட்டுப் பராமரிக்கப்படுகின்ற அல்லது அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட அமைப்புகளால் நிர்வகிக் கப்படுகின்ற பொதுக்குடிநீர் வசதிகள், கிணறுகள், தரும சத்திரங்கள் மற்றும் பொதுப்பள்ளிகள், நீதிமன்றங்கள், அலுவலகங்கள், மருத்துவமனைகள் ஆகிய எல்லா இடங்களையும் தீண்டப்படாத வர்கள் பயன்படுத்த அனுமதிக்க வேண்டும் என்பதுதான் போலேயின் புகழ்மிக்கத் தீர்மானத்தின் வடிவமாகும். இத்தீர்மானம் பம்பாய் ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களின் மனங்களில் மகிழ்ச்சி பெருக்கெடுத்தோடச்செய்தது. அவர்கள் தங்கள் நன்றியுணர்வைக் காட்டிட வேண்டி ஜெ. அட்டிமான் எம்.எல்.சி. தலைமையில் போலேவுக்கு ஒரு பாராட்டு விழா நடத்தினர். அவர்களின் விடியலுக்காகச் சிறப்பான தொண்டாற்றி வருவதைப் பாராட்டும் அடையாளமாகத் தங்கப் பதக்கத்தைப் போலேவுக்கு அணிவித் தனர்.

இத்தீர்மானத்தை நிறைவேற்றியதன் விளைவாகப் பின்வரும் ஆணையை அனைத்துத் துறைத்தலைவர்களுக்கும் பம்பாய் அரசு அனுப்பியது. "சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் தொடர்ச்சியாகப் பம்பாய் அரசு எல்லாத் துறைத் தலைவர்களுக்கும் இந்த ஆணையை அனுப்புவதில் மகிழ்ச்சிகொள்கிறது. அரசுக்குச் சொந்தமான அல்லது அரசால் நிர்வகிக்கப்படுகின்ற எல்லாப் பொது இடங்களிலும் இத்தீர்மானத்தின்படிச் செயல்பட வேண்டும் என்று அனைத்துத் துறைத் தலைவர்களையும் அரசு அறிவுறுத்துகிறது. உள்ளாட்சி அமைப்புகள் அவற்றின் அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில் இத்தீர்மானத்தைச் செயல்படுத்துவதுபற்றி உரிய முடிவு எடுக்குமாறு மாவட்ட ஆட்சியாளர்கள் அறிவுரை வழங்க வேண்டும்" என்பதே அந்த அரசு ஆணையாகும். பம்பாய் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர், பம்பாய் நகராட்சி ஆணையர் ஆகியோரும் அவரவர் ஆட்சி அதிகார எல்லைக்குட்பட்ட பொது இடங்களில் இத்தீர்மானத்தைச் செயல்படுத்துவதுபற்றிச் சம்பந்தப் பட்ட நிர்வாக உறுப்பினர்களின் ஒப்புதல் பெற்று முடிவு எடுக்குமாறு அரசினால் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

1923ஆம் ஆண்டின் இறுதியில் ஒடுக்கப்பட்ட வகுப்புகள் தொடர்பான முக்கியமான இன்னொரு அறிவிப்பு வெளியானது. மகாத்மா காந்தியின் ஒத்துழைப்பால் தூண்டப்பட்ட மௌலானா முகம்மது அலி இந்திய முஸ்லிம்களுடன் சேர்ந்துகொண்டு கிலாபத் உரிமைகளை வலியுறுத்திவந்தார். காந்தியுடன் இவர் பெயரையும் இணைத்துப் பேசியதால் இவருக்குத் தற்பெருமை தலைக்கேறியிருந்த நிலையில் பேராசை பிடித்த ஒரு கருத்தை இவர் வெளியிட்டார். எல்லாத் தேசியப் பிரச்சினைகளையும் சமயச்சார் பற்ற தன்மையில் அணுகுவதாகத் தம்பட்டம் அடித்துக் கொள்ளும் இந்தியத் தேசியக் காங்கிரசின் தலைவர் நாற்காலியில் அமர்ந்து கொண்டு, தீண்டப்படாத இந்துக்களை முஸ்லிம்களுக்கும், இந்துக்களுக்கும் சரிபாதியாகப் பிரித்துக் கொடுத்துவிட வேண்டும் என்று முகமது அலி முழங்கினார். காந்தியுடன் இருந்த கடவுளுக்கு அஞ்சும் முஸ்லிம்களும் காட்டுமிராண்டித்தனமான இக்கருத்தை ஆதரித்தனர். காந்தியின் பக்தி சூழ்ந்த முன்னிலையில் இவர்கள் வீராப்புடன் முழங்கியபோதுகூடக் காந்தியின் முகத்தில் மறுப்பின் மெல்லிய அசைவோ, எதிர்ப்பின் அதிர்வோ தென்படவில்லை. சென்னையில் காந்திக்கு அளித்த ஒரு வரவேற்புக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய யாக்கூப் உசேன் இந்தியாவில் உள்ள தீண்டப்படாதவர்கள் அனைவரையும் இஸ்லாம் மதத்திற்கு மதமாற்றம் செய்வதே முஸ்லிம்களின் கடமையாகும் என்று குறிப்பிட்டார்.[25]

II

இந்திய வரலாற்றில் 1924ஆம் ஆண்டு மிகவும் குறிப்பிடத்தக்க ஆண்டாக அமைந்தது. இந்த ஆண்டில்தான் இந்தியச் சமூகக் களத்தில் மூன்று பெரும் பேராற்றல் வாய்ந்த தலைவர்கள் சிறையிலிருந்து விடுதலை ஆயினர். அந்தமான் சிறையில் பன்னிரண்டு ஆண்டுகளுக்குமேல் கொடுந்துன்பம் ஏற்றபின் வீர சாவர்க்கர் விடுதலை செய்யப்பட்டார். சில நாட்களுக்கு முன்னர் தான் அவர் அந்தமான் சிறையிலிருந்து எரவாடாச் சிறைக்குக் கொண்டுவரப்பட்டார். 1924 சனவரி 6ஆம் நாள் எரவாடாச் சிறையிலிருந்து நிபந்தனையோடு கூடிய விடுதலை செய்யப்பட்டு இரத்தினகிரிக்குக் கொண்டுவரப்பட்டார்.

இரத்தினகிரியை விட்டு வெளியில் எங்கும் செல்லக்கூடாது என்பது நிபந்தனை. கிலாபத் - சுயராச்சியக் கிளர்ச்சிக்காக இரண்டு ஆண்டுகள் காந்தி சிறையில் இருந்தார். அக்கிளர்ச்சி தோல்வி

அடைந்த நிலையில் உடல் நலக்குறைவு காரணமாகக் காந்தி எரவாடாச் சிறையிலிருந்து 1924 பிப்ரவரி 11ஆம் நாள் விடுதலை ஆனார். விடுதலை பெற்ற நிலையில் அவ்விருவரும் கிடைக்கின்ற எந்த வாய்ப்பையும் நன்கு பயன்படுத்திக்கொள்ளத் திட்டமிட்டனர். இருவரும் சமூகப் போராட்டக் களத்தில் குதித்தனர். 1924 ஏப்ரல் மாதம் இந்துச் சமூகத்தை ஒன்றுதிரட்ட சாவர்க்கர் இந்துச் சங்கம் என்ற அமைப்பை ஏற்படுத்தினார். இதன் அடிப்படையான நோக்கம் ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களின் முன்னேற்றம் என்பதாகும். அந்தமான் சிறைக்கு அனுப்பப்பட்டது முதல் வீர சாவர்க்கர் தீண்டப்படாதவர்களின் உரிமைகளுக்காகவும், உயர்வுக்காகவும் போராடிக்கொண்டிருந்தார். காந்தி அவருடைய வழிமுறைகளையும் ஒப்பரிய ஆற்றலையும் ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களின் நல்வாழ்வுக்காகச் செலவிட்டுக்கொண்டிருந்தார்.

தீண்டப்படாதவர்களை மேலுயர்த்துவதற்கான இயக்கத்தை அமைத்திட 1924 மார்ச்சு மாதம் அம்பேத்கர் முன்னேற்பாட்டு வேலைகளைச் செய்தார். இக்குறிக்கோளை அடைவதற்காக 1924 மார்ச்சு 9ஆம் நாள் பம்பாயில் தாமோதர் அரங்கில் ஒரு கூட்டத்தைக் கூட்டினார். தீண்டப்படாதவர்களின் இன்னல்களை நீக்கவும், இவர்களின் துன்பங்களை அரசுக்கு எடுத்துரைக்கவும் ஒரு மத்திய அமைப்பு ஏற்படுத்துவதன் தேவைபற்றி அக்கூட்டத்தில் ஆராயப்பட்டது. நீண்ட விவாதத்திற்குப் பின் இதற்கென ஓர் அமைப்பை ஏற்படுத்துவதென முடிவெடுக்கப்பட்டது. இதன்படி "பகிஷ்கிரித் ஹித்தகாரிணி சபா" (Bahishkrit Hitakarini Sabha) என்ற பெயரில் 1924 சூலை 20ஆம் நாள் ஓர் அமைப்பு நிறுவப்பட்டது. 1860ஆம் ஆண்டைய சங்கங்கள் பதிவுச் சட்டம் XXIஆம் விதியின்படி இது பதிவுசெய்யப்பட்டது. இதன் செயல்பாடுகள் பம்பாய் மாகாண எல்லைக்குள் இருக்கும். இதன் தலைமை இடம் தாமோதர் அரங்கம், பம்பாய் - 12இல் அமைந்திருந்தது. இந்தச் சபாவின் நோக்கங்களும், குறிக்கோள்களும் பின்வருமாறு:

(அ) ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களிடையே கல்வியைப் பரப்பிட விடுதிகளைத் திறத்தல்; அல்லது தேவைப்படுகின்ற மற்ற வழிமுறைகளைக் கையாளுதல்;

(ஆ) ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களைக் கலாச்சாரத் தன்மையில் உயர்த்திட வேண்டி நூலகங்கள், சமூக மையங்கள், பயிற்சி வகுப்புகள், வாசகர் வட்டங்கள் ஆகியவற்றை அமைத்தல்;

(இ) ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்திடவேண்டி தொழில் மற்றும் வேளாண்மைப் பயிற்சிப் பள்ளிகளைத் தொடங்குதல்;

(ஈ) ஒடுக்கப்பட்ட வகுப்பினரின் துயரங்களை உரியோர் கவனத்திற்குக் கொண்டுசெல்லுதல்;[26]

பகிஷ்கிரித் ஹித்தகாரிணி சபையின் தலைவர் சர் சிமன்லால் ஹரிலால் சத்தால்வாட் எல்.எல்.டி.; இதன் துணைத் தலைவர்கள் மேயர் நிஸ்சிம் J.P.; வழக்கறிஞர் ருஸ்தம்ஜி ஜின்வாலா, ஜி.கே.நாரிமன், டாக்டர் ஆர்.பி.பராஞ்சிபய், டாக்டர் வி.பி.சவான், வழக்கறிஞர் பி.ஜி.கெர் ஆவர். பி. ஜி.கெர் பதினைந்து ஆண்டுகள் கழித்துப் பம்பாய் மாகாணத்தின் பிரதமரானார். நிர்வாகக் குழுவின் தலைவராக அம்பேத்கரும், அதன் செயலாளராக எஸ்.என். சிவ தார்க்கரும், பொருளாளராக என்.டி. ஜதாவும் இருந்தனர்.

இந்த மத்திய நிறுவனம் ஒடுக்கப்பட்ட வகுப்பினரைத் தாழ்ந்து கிடக்கும் நிலையிலிருந்து, இந்தியச் சமூகத்தில் மற்றவர்களுக்குச் சமமான அளவில் சமூக அரசியல் துறைகளில் உயர்த்த வேண்டும் என்பதற்காக உழைத்தது. இவர்களின் பொருளாதார மேம்பாட்டிற் காகவும் பாடுபட்டது. 1924ஆம் ஆண்டின் முற்பகுதியில் ஷோலாப்பூர் மாவட்டத்தில் பார்சியில் நடைபெற்ற பம்பாய் மாகாண இரண்டாவது மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத் தின் ஒரு கோரிக்கையை இந்தச் சபை செயல்படுத்தியது.

இந்தச் சபையின் நிலைப்பாடு, கட்டமைப்பு ஆகியவைபற்றி இதன் முதல் ஆண்டறிக்கை தெளிவுபடுத்தியது. சபையின் குழுக்களுக்கும் (Committees) மன்றங்களுக்கும் (Boards) ஒடுக்கப் பட்ட வகுப்பினரிலிருந்தே பெரும்பாலோரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டும். ஏனெனில் இவ்வாறு இல்லாவிட்டால் எந்த நிறுவனத்தாலும் குறிப்பிடத்தக்க வகையில் முன்னேற முடியாது; அதன் குறிக்கோள்களையும் செயல்படுத்த முடியாது. இத்துடன் தங்களைப் போலவே துன்பத்திற்குள்ளான வகுப்பினரையும் இக்குழுக்களுக்குத் தேர்வு செய்துகொள்ள வேண்டும் என்று ஆண்டறிக்கை கூறியது. ஓர் அமைப்பின் வெற்றி அதன் கிளைகள் கொண்டுள்ள ஈடுபாடு, அதன் கொள்கைகள் திட்டங்கள்பால் உறுப்பினர்கள் கொண்டுள்ள பற்று ஆகியவற்றைப் பொறுத்திருக் கின்றது என்றும் ஆண்டறிக்கை வலியுறுத்தியது. இந்தச் சபையை நடத்திச்செல்வதில் ஒடுக்கப்பட்ட வகுப்பினர்க்கே முதன்மையும், முன்னுரிமையும் தரப்பட்டாலும், மேல் சாதியினரின் ஆதரவும்,

அன்பும் இல்லாமல் முன்னேற்றத்திற்கான திட்டங்களை நிறைவேற்ற முடியாது என்று இச்சபையின் முன்னோடிகள் கருதினர். உயர் சாதியினரின் நன்கொடையை ஏற்க மறுப்பது என்பது தற்கொலைக்கு ஒப்பானதாகும் என்று அவ்வறிக்கை குறிப்பிட்டது.

ஆனால் அம்பேத்கர் ஏன் புதியதொரு பாதையை வகுத்தார்? ஒடுக்கப்பட்ட வகுப்பினரின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடும் பல அமைப்புகளும் நிறுவனங்களும் சமூகத் தளத்தில் இருந்தன. சமூகச் சீர்திருத்தத்திற்கு என்றே சில அமைப்புகள் இருந்தன. இந்துக் குடும்பச் சீர்திருத்தம், இந்துச் சமூகச் சீர்திருத்தம் ஆகிய இரண்டிற்குமுள்ள வேறுபாட்டை அம்பேத்கர் தெளிவாக்கினார். ரானடே போன்ற சமூகச் சீர்திருத்தக்காரர்களால் தொடங்கப்பட்ட சமூகச் சீர்திருத்த இயக்கங்களும், ரானடேவால் தொடங்கப்பட்ட சமூக மாநாடும், விதவை மறுமணம், பெண்களுக்குச் சொத்துரிமை, பெண் கல்வி, குழந்தை மணம் போன்றவற்றில் மட்டுமே கவனம் செலுத்தின. ஆனால் அம்பேத்கர் போன்றோரால் தொடங்கப்பட்ட அமைப்போ சாதி முறையை ஒழித்து இந்துச் சமூகத்தைச் சம உரிமையின் அடிப்படையில் திருத்தி அமைக்கக் கோரியது. சமூக மாநாட்டு அமைப்பு இந்துச் சமூகத்தின் உணர்வுகளை விழிப்புறச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது என்பதில் அய்யமில்லை; ஆனால் அதன் செயல் வட்டம் மேல்சாதி இந்துக்களின் முன்னேற்றத்தைப் பொறுத்ததாக மட்டுமே இருந்துவிட்டது. சமூக மாநாடு அறிவார்ந்த மேல்சாதி இந்துக்களைத் தன் அமைப்பில் கொண்டிருந்தது. சாதி முறையை ஒழிப்பதற்காகப் போராட வேண்டியதன் தேவையை இவர்கள் உணரவேயில்லை அல்லது இக்கடினமான பெரும்பணியை ஏற்றுச் செய்திடும் துணிவும் அவர்களுக்கு இல்லை. இந்துச் சமூகத்தில் நிலவிய கேடுகளைக் களையவும் அதைத் திருத்தியமைக்கவுமே அவர்கள் முயன்றனர். அதாவது அவர்கள் உச்சியிலிருந்து மாற்றத்தைத் தொடங்கினர்; அடியிலிருந்து ஆரம்பிக்கவில்லை.

பிரார்த்தனை சமாஜத்தை அமைத்தவர்களும், பிரம்ம சமாஜத்தை உருவாக்கியவர்களும் மனிதாபிமான அடிப்படையில் இத்துறையில் ஓரளவு பணியாற்றியிருந்தனர். சத்திரபதி சாகு, சாயாஜிராவ் கெய்க்வாடு போன்ற சிற்றரசர்களும், கர்ம வீரர் ஷிண்டே போன்ற தலைவர்களும் தீண்டப்படாதவர்களை உயர்த்துவதற்காக அயராது உழைத்தனர். இப்பணியையே தம் தொழிலாகவும் வாழ்க்கை நெறியாகவும் கொண்ட இவர்களைப் போன்றவர்கள் சிலரே இருந்தனர். ஆனால் நவநாகரிகச் சீர்திருத்தவாதிகள்,

பகட்டான பகுத்தறிவாளர்கள், மனித நேயம் பேசும் வாய்ச்சொல் வீரர்கள் போன்றவர்கள் பெரும் எண்ணிக்கை யில் ஏற்கனவே இருந்தனர். இவர்கள் உயரிய மொழியில் ஒடுக்கப்பட்ட மக்கள்பால் உதட்டளவில் அன்பு பாராட்டினார்கள். இதன்மூலம் ஏகாதிபத்திய அதிகார வர்க்கத்திற்கும், அறிவாளி உலகிற்கும் தம் புரட்சிகரமான கருத்தைக்... காட்ட வேண்டும் என்பதே இவர்களின் உள் நோக்கமாகும். எண்ணற்ற சமூகச் சீர்திருத்தக்காரர்கள் தம் வாழ்நாள் முழுதும் மேற்கொண்ட இத்தகைய முயற்சிகளும், அவர்கள் செய்த தொண்டுகளும் வீணானவை என்பதாகக் குறைத்து மதிப்பிட வில்லை. நாட்டுப்பற்று மிக்கவர்கள், அரசர்கள், சீர்திருத்தவாதிகள், மனிதாபிமானிகள், மகாத்மாக்கள், பகுத்தறிவாளர்கள் என்று பலபேர் இதற்கு முன் பாடுபட்டிருந்தனர். அவர்களுக்குத் தோன்றியவாறு இந் நோயின் தன்மையைக் கண்டறிந்து தீர்க்கும் முறைகளையும் முன்மொழிந்தனர். ஆனால் இவை பயன் தராதவையாயின. நோயோ வயிற்றில் இருந்தது; ஆனால் சீர்திருத்தவாதிகளோ அவ்வப்போது தலையில் மருந்தைத் தடவி னார்கள். சில பேர் ஒடுக்கப்பட்ட மக்களுக்குக் கல்வியை வழங்கினார்கள். பலர் உபதேச மொழிகளைப் பொழிந்தனர்; சிலபேர் இவர்களுடன் இணைந்து உண்டனர்; வாழ்க்கையைப் பற்றி, வீட்டைப்பற்றி, உடையைப்பற்றித் திருத்தமாக இருப்பது எப்படி என்று சிலர் கற்பித்தனர்; குளிப்பது எப்படி என்று கூடக் கற்றுக்கொடுத்தனர்.

இவ்வாறு இவர்கள் மெய்யன்புடன் செய்த தொண்டுகள் நசுக்கப்பட்ட மக்களின் நெஞ்சங்களில் அவர்களின் விடுதலைக் கான உறுதியை, நம்பிக்கையை, வேட்கையை ஏற்படுத்தவில்லை. சார்ந்து வாழும் உணர்வும், பாதுகாப்பைத் தேடும் எண்ணமும், புரந்து ஓம்பப்பட விரும்பும் கருத்தும் அவர்களிடையே வளர்ந்தி ருந்தன. தீண்டப்படாதவர்கள் இதை அறிந்திருந்தனர். ஆனால் உதவி என்பதற்கும், சுய உதவி என்பதற்கும் இடையேயுள்ள வேறுபாட்டை விளங்கிக்கொள்ள அவர்களுக்குத் தெரியவில்லை. சுய உதவியே மிகச்சிறந்த உதவியாகும். அவர்களுக்கு அடிப்படை யில் தேவைப்படுவது இதுவே!

இக்காலக்கட்டத்தில் இந்தியாவின் பழமையைப் போற்றும் சிந்தனை குன்றுபோல் அசையாமல் வலிமையுடன் இருந்தது. இந்துக்களில் மூன்றில் ஒரு பகுதியினராக இருப்பவர்களையே தங்கள் சமூகத்தில் இரண்டறக் கலந்தவர்கள் என்று ஏற்றுக்கொள்ள இந்துக்கள் மறுக்கின்றனரே என்பதைப்பற்றி எதிரிகளான முஸ்லீம்

அரசியல்வாதிகள் சுட்டிக்காட்டும்போது மட்டும் அரசியலில் ஈடுபட்டுள்ள இந்துக்களில் சிலபேருடைய மனச்சான்று ஆட்டங் கண்டது. கோயிலுக்குள் நுழையவிடுவதும், பார்ப்பனர்கள் புரோகி தம் செய்வதும் தீண்டப்படாதவர்களுக்கு மறுக்கப்பட்டது. சாதி இந்துக்களில் பெரும்பாலோர் இப்பிரச்சினையைப்பற்றி அக்கறை காட்டவில்லை; மரக்கட்டை போன்று இருந்தனர்.

நசுக்கப்பட்ட தீண்டப்படாத இந்துக்களின் சிக்கலை, தம் விருப்பம்போல் ஆர அமர மெல்லத் தீர்க்கலாம் என்று எண்ணினர்.

அதனால்தான் இந்து மகாசபையினரும் ஆரிய சமாஜத்தினரும் இந்துச் சமூகத்தை ஒன்றிணைக்க வேண்டும் என்ற முயற்சியில் வெற்றிபெற முடியவில்லை. இந்துக்களே! தீண்டப்படாதவர்களுக் குக் கோயில்கள், பள்ளிகள் மற்ற பொது இடங்களைத் திறந்து விடுங்கள்! என்று 1923இலேயே தீர்மானத்தை நிறைவேற்றியிருந் தும், இதற்கேற்ற தன்மையில் தீவிரமான செயல்பாடுகளை மேற்கண்ட அமைப்புகள் மேற்கொள்ளாததால் இவற்றின் சாதனை கள் குறிப்பிடத்தக்கவையாக அமையவில்லை. நேர்மையுடன் இந்து மகாசபைத் தலைவர்கள் எடுத்த முயற்சிகளைப் பழமையில் மூழ்கிக் கிடந்த இந்துக்களில் பெரும்பான்மையானவர்கள் வெறுப்புட னேயே நோக்கினர்.

துடிப்பான நாட்டுப்பற்று மிக்க இந்துத் தொண்டர்களில் பெரும்பாலோர் ஆங்கில ஆட்சிக்கு எதிரான போராட்டத்தில்தான் ஈடுபட்டிருந்தனர். அந்நிய ஆட்சிக்கு எதிராகப் போரிடும்போது அமைதியான, இரகசியமான, சிலபோழ்து வெளிப்படையான ஆதரவும் அரவணைப்பும் மக்களிடமிருந்து கிடைக்கின்றது. ஆனால் சமூகச் சீர்திருத்தவாதிகளுக்கு இதுபோன்ற ஆதரவு மக்களிடமிருந்து கிடைப்பதில்லை. ஆகவே இந்து மகாசபைத் தலைவர்களின் பணி கடினமாக இருந்தது என்பது இயல்பே! எனவே தங்களின் பழக்கவழக்கங்களுக்கும், நம்பிக்கைகளுக்கும் எதிரான தன்மையில் இந்து மகாசபையினர் மேற்கொண்ட முயற்சிகளுக்கு வெகுமக்களிடமிருந்து ஆதரவைப் பெற முடிய வில்லை.

இந்து மகாசபையின் முன்னணித் தலைவர்களில் சிலர் அழுகிப்போன வைதிக மனப்பான்மையில் மூழ்கிக்கிடந்தனர். தமக்குப் பயன்படும் என்று கருதும் நேரங்களில் தவிர மற்ற நேரங்களில் சீர்திருத்தக்காரர்களுடன் சேராமல் எச்சரிக்கையுடன்

தனித்தே இவர்கள் இருந்தனர். இதுவே தோல்விக்கான முதன்மை யான காரணமாகும். இதன் விளைவாக இந்துக்கள் எல்லோரும் சமம் என்ற அடிப்படையில் இந்துக்கள் அனைவரையும் ஒன்றி ணைப்போம் என்ற இவர்களின் இலட்சியம் எட்டாக் கனியாயிற்று. இவர்களின் நோக்கம் நல்லதுதான். ஆனால் அதைச் செயல்படுத் திய முறை மோசமானது. ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களைப் பிணைத்திருந்த அடிமைத்தளைகளை உடைத்தெறிவதற்காகப் போராடியதைவிட அவர்கள் நிறைவேற்றிய ஆதரவுப் போக்கான தீர்மானங்களில்தான் அவர்களுடைய கொள்கைப்பற்று அதிகமாக வெளிப்பட்டது. தீண்டாமை ஒழிப்பில் அவர்களுடைய பங்களிப்பு மற்றவர்கள் செய்ததைக் காட்டிலும் அதிகம் என்பது மெய்தான். ஆனால் அவர்கள் தம்பட்டம் அடித்துக்கொள்ளுகின்ற அளவுக்குச் சமமாக அது இல்லை. ஆற்றலும், வீரமும், கூர்ந்த மதியும் கொண்டவர்களாக அரசியலில் திகழ்ந்த இவர்களில் பெரும்பாலோர் சமூகப் பிரச்சினையில் மட்டும் பாழடைந்த வீட்டிற்கு வெள்ளைய டிக்கும் வேலையை மட்டும் செய்ய விரும்பினார்கள். இடிந்துவிடும் நிலையிலுள்ள வீட்டைச் சுண்ணாம்பு அடித்து மட்டும் காப்பாற்ற முடியாது என்ற உண்மையை அவர்கள் மறந்துவிட்டார்கள். அதை இடித்துத் தரைமட்டமாக்கிவிட்டுப் புதியதாகக் கட்ட வேண்டும். அவர்களுடைய அக்கறையின்மையும், பொறுப் பின்மையும் எந்த அளவிற்கு வெறுப்பூட்டுவதாக இருந்திருப்பின் சுவாமி சிரத்தா னந்தா அந்த முகாமிலிருந்து விலகி இருப்பார்! பெரும் தலைவர்க ளான சிரத்தானந்தர், பரமானந்தர், பிறகு சாவர்க்கர் போன்றவர்க ளால் வழிநடத்தப்படும் இந்து மகாசபையில் பழமையைப் போற்றும் பிற்போக்குச் சீர்திருத்தவாதிகளே அதிகமாக இருந்தனர் என்று பத்திரிக்கை உலகம் படம்பிடித்துக் காட்டியதில் வியப்ப தற்கு என்ன இருக்கிறது?

தீண்டப்படாதவர்பற்றிக் காங்கிரசுத் தலைவர்கள் கொண் டிருந்த அணுகுமுறையோ இரங்கத்தக்க அளவுக்குக்கேடானதாக இருந்தது என்பது மிகவும் வருந்தற்குரியதாகும். முஸ்லிம்களின் கிலாபத் இயக்கக் கோரிக்கையை நிலைநிறுத்தும் பெருவிருப்பத் தால், காங்கிரசுத் தலைவர்கள் இந்திய முஸ்லிம்களின் இருப்பு, வாழ்க்கை, அவர்களின் முக்கியத்துவம்பற்றி மட்டுமே சிந்தித்திட முன்வந்தனர். வரலாறு, அரசியல், சமூக வாழ்க்கை, தேசியம், நாட்டுப்பற்று ஆகிய அனைத்துக்கும் வரையறையாக முஸ்லிம் களின் குறுகிய கண்ணோட்டத்தையும், மத வெறியையும் திருப்திசெய்வது என்ற ஒன்றையே அளவுகோலாகக் கொண்டிருந்

தனர். ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்கள் இயலாமைக்கு ஆளாகிப் பாதிக்கப்பட்டார்களா இல்லையா என்பதைப்பற்றி அறிந்துகொள்ள அவர்கள் கவலைப்படவேயில்லை.

அத்துடன் மட்டுமின்றித் தீண்டப்படாத மக்கள் இஸ்லாத்திற்கும், கிறித்துவ மதத்திற்கும் மாற்றப்படுவது சூழ்ச்சியாகவா, கட்டாயத்தாலா என்பதைப்பற்றியும் அவர்கள் கவலைப்படவில்லை. தீண்டப்படாதவர்களை முன்னேற்றுவதற்காகக் காந்தி நடத்தும் இயக்கத்தையும் அவர்கள் பின்பற்றுவதில்லை. இதுவரை இந்நாட்டில் காங்கிரசு நாற்பது ஆண்டுகளாக மாநாடுகள் நடத்தியுள்ளது. ஆனால் ஒடுக்கப்பட்ட மக்களுக்குக் குடிக்கத் தண்ணீர் கிடைக்கிறதா இல்லையா என்றுகூட இம்மாநாடுகள் கவனத்தில் கொள்ளவில்லை. ஆனால் முஸ்லிம்களின் மதத் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் கிலாபத் இயக்கம் பற்றிமட்டும் காங்கிரசு அதிகமாகக் கவலைப்பட்டது. தீண்டப்படாதவர்கள் பிரச்சினைகள் பற்றி காங்கிரசு ஏறெடுத்தும் பார்த்ததில்லை. ஏனெனில் இது இந்துக்களுக்கான அமைப்பாக மட்டுமே இருந்தது.

III

மேலே விளக்கிக் காட்டியவாறு மூன்று பெரும் சக்திகளாக விளங்கிய காந்தி, சாவர்க்கர், அம்பேத்கர் ஆகிய மூவரும் தீண்டப்படாதவர்களின் முன்னேற்றத்திற்காக உழைத்தனர்.

காந்தி சாதி அமைப்பு முறையை - நால்வருணத்தை நம்பினார். சாதி அமைப்பு அப்படியே இறுக்கமாக இருக்க வேண்டும். ஆனால் அதே நேரத்தில் தீண்டாமை என்ற கறையைக் கழுவிவிட்டு ஒடுக்கப்பட்ட மக்களை அய்ந்தாவது சாதியாக ஆக்க வேண்டும் என்பது காந்தியின் குறிக்கோள். காந்தி ஒரு மானுடப்பற்றாளர் என்ற தன்மையில் உலகிலுள்ள நசுக்கப்பட்ட மக்கள்பால் அவருக்கு அன்பு சுரந்தது இயல்பே! இத்துடன் சாதி இந்துக்களின் பிடியில் சிக்குண்டு பெரிதும் வதைபட்டுக்கொண்டிருந்த ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களின் பிரச்சினையை இந்துக்களிடையே மட்டும்தான் கொண்டுசென்றார்.

அதே நேரத்தில் தன் இயக்கத்திற்குத் தூண்களாகத் திகழ்ந்து கொண்டிருக்கும் பழமைப்பற்றுமிக்க முதலாளிகளின் மென்மையான உணர்வுகள் பாதிக்கப்படக்கூடாது என்பதில் எப்பொழுதும் காந்தி எச்சரிக்கையாய் இருந்தார். இந்துச் சமூகத்தைத் திருத்தி

அமைக்க வேண்டும் அல்லது புதுப்பிக்க வேண்டும் என்பது அவர் நோக்கமன்று. ஏதுமறியா இந்த ஊமை மக்கள் பல இலட்சம் பேர் நாங்கள் கிறித்துவ மதத்திற்கோ, இஸ்லாம் மதத்திற்கோ மாறிவிடுவோம் என்று மிரட்டியபோதுகூட, ஓர் உலக ஆசிரியராக உருவாகி வந்த காந்தி, இதற்கு எதிராகத் தன் சுண்டுவிரலைக் கூட அசைக்கவில்லை. மேலும் காந்தி மேற்கொண்ட முறைகள் வெறும் பிரச்சாரத் தன்மையுடையவையாகவே இருந்தன; செயல் பாட்டுக்கு ஒத்தவையாக இல்லை

காந்தி பெரிதும் சீர்திருத்தவாதி. ஆனால் சாவர்க்கரும், அம்பேத்கரும் சமூகப் புரட்சியாளர்கள். ஒரு சீர்திருத்தவாதி பழைய கட்டடத்தைப் புதுப்பிப்பார். ஆனால் ஒரு புரட்சியாளரோ பழைய கட்டடத்தை இடித்துவிட்டுப் புதிய கட்டடத்தைக் கட்டுவார்.

சாவர்க்கரின் நிலைபாடுகள் தேசிய நோக்கும் நடைமுறைச் சார்பும், புரட்சிகரப் போக்கும் கொண்டவையாக இருந்தன. பல்வேறு சாதிகளாக இருக்கின்ற இந்துச் சமூகத்தைச் சாதியற்ற இந்துச் சமூகமாக மாற்றிட வேண்டும் என்பதையே குறிக்கோளாகக் கொண்டு இவர் செயல்பட்டார். சாதியற்ற இந்த இந்துச் சமூகத்தில் சமூக, பொருளாதார, அரசியல் நிலைகளில் அனைவரும் சமமாக இருப்பார்கள் என்று கூறினார். இந்துக்களின் ஒற்றுமையின்மீது - அசைக்க முடியாத ஓர்மையின் அடித்தளத்தின் மீது-ஆற்றல் மிக்க ஓர் அரசை அமைக்க விரும்பினார். இரத்தினகிரி மாவட்டத்திற் குள்ளேயே இருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் சட்டத்தி னால் அவர் முடக்கப்பட்டுவிட்டதால் அவருடைய இயக்கத்தின் வேகமும், தாக்கமும் புரட்சிகரக் கூறுகளும் இந்த மாவட்டத்திற்கு அப்பால் செல்லவில்லை. இந்த மாவட்டத்திற்கு வெளியே ஒரு சில முற்போக்குச் சிந்தனையாளர்கள், பகுத்தறிவாளர்களின் கவனத்தை மட்டும் ஈர்த்தது.

அம்பேத்கரின் நிலையோ முற்றிலும் வேறுபட்டது. தீண்டப் படாத மக்களிடையே தோன்றியவர் இவர். அம்பேத்கர் தீண்டப் படாதவர்கள் என்ன சிந்தித்தார்களோ அதையே சிந்தித்தார்; அவர்களைப் போலவே உணர்ந்தார்.

அவர்களுடைய தன்னலமற்ற, தங்கு தடையற்ற அன்பைப் பெறுவது எப்படி என்பதை அறிந்திருந்தார். பத்தாண்டுகளாக அவர்களுடைய வாழ்வின் கழிவிரக்கத் தாழ்ச்சிகளையும், திகைப் பூட்டும் வறிய நிலைகளையும், அழுக்கேறிய அவலமான

பழக்கங்களையும் பார்த்தும் அனுபவித்தும், ஆராய்ந்துணர்ந்திருந் தார். அவர்களுடைய இழிநிலையைக் கண்டு மனங்கொதித்தார். அமுக்கி வைக்கப்பட்டிருந்த அவர்களுடைய உணர்வுகள், எண்ணங்கள் அடக்கிவைக்கப்பட்டிருந்த சுயநிலை இவற்றை உலகுக்கு வெளிப்படுத்தினார். அவர்களின் வாழ்நிலையைப் பார்த்த, அவர்களைப் போலவே பாதிக்கப்பட்ட, அவர்களின் நிலையை நன்கு ஆராய்ந்து அறிந்த தலைவராக அம்பேத்கர் அவர்கள் முன்னின்றார். உலகப் புகழ்வாய்ந்த மூன்று பல்கலைக் கழகங்களில் பெற்ற பரந்த புலமை, தனித்தன்மை வாய்ந்த ஆற்றல், ஒப்பரிய கொள்கை ஆகியவற்றுடன் வெல்ல முடியாத ஒரு வீரராக அவர் உருவாகியிருந்தார். அவர்களுடைய இன்னல் களையும், துன்பங்களையும் தனக்கு நேர்ந்த இழிவாகவே கருதினார். அடிமை நிலையில் இருக்கும் இம்மக்களைச் சுயமரி யாதை உடைய மனிதர்களாக மாற்றுவதே தன் வாழ்வின் குறிக்கோள் என உறுதிபூண்டார்.

சார்ந்து வாழும் உணர்வை அம்பேத்கர் வெறுத்தார். சாதி இந்துச் சீர்திருத்தவாதிகளின் ஆதரவினை நம்பியிருப்பதை அருவ ருப்பானதாகக் கருதினார். ஒடுக்கப்பட்ட வகுப்பினரின் பெயரால் வளர்த்தெடுக்கப்பட்டு இயங்குகின்ற அமைப்புகளும் இயக்கங்க ளும் நிகழ்ச்சிகள் நடத்தப்படும்போது மட்டும் தீண்டப்படாதவர்க ளைக் கூட்டி வைத்துப் பேசுவதை மிகவும் வெறுத்தார். தன் கையே தனக்குதவி என்ற விழுமிய கருத்தில் அழுத்தமான நம்பிக்கை கொண்டிருந்தார் அம்பேத்கர். நோய் நாடி நோயின் மூலத்தைக் கண்டறிந்தார். பாதிக்கப்பட்ட மக்களே திரண்டெழுந்து தம் முயற்சியாலும் செயலாலும் அநீதியைத் துடைத்தெறியாதவரை யில் அதை அகற்றிட முடியாது என்கிற வரலாற்று உண்மையை அம்பேத்கர் அறிந்திருந்தார். அடிமை நிலையைத் தீயிட்டுப் பொசுக்க வேண்டுமென்ற பெருநெருப்பு அடிமையின் உள்ளத்தில் மூளாதவரையில் அவனுக்கு விடிவே இல்லை. "நீ ஓர் அடிமை என்பதை அடிமைக்கு உணர்த்து; அவன் கொதித்தெழுந்து புரட்சி செய்வான்" என்ற முழக்கத்தை அம்பேத்கர் முன் வைத்தார். 'உங்களை நீங்களே உயர்த்திக் கொள்ளப் போராடுங்கள்!' என்று அவர்களைத் தூண்டினார். சுய உதவி, சுய முயற்சி, சுயமரியாதை என்ற மூன்று கொள்கை முழக்கங்களைத் தூக்கிப்பிடித்தார். இந்தத் திரிசூலத்தை ஏந்திக்கொண்டுதான் தன் வகுப்பு மக்களைச் செயலில் இறங்குமாறு அவர் தூண்டினார்.

தீண்டப்படாதவர்களின் புதிய தலைவரான அம்பேத்கர் அவர்களிடம் கனல் தெறிக்கப் பேசினார். அவருடைய பேச்சில் இடித்துரைத்தல், குற்றங்கடிதல், ஊக்குவித்தல் ஆகியவை பின்னிப் பிணைந்திருந்தன. "கவலை கப்பிய உங்கள் முகத்தைக் காணும்போதும், துன்பந்தோய்ந்த குரலைக் கேட்கும்போதும் என் உள்ளம் வெடித்துச் சிதறுகிறது. பன்னெடுங்காலமாக நீங்கள் அழுது புலம்பிக்கொண்டிருக்கிறீர்கள். இது தவிர்க்கப்பட முடியாத துன்பம் என்று கருதி இதைவிடாமல் கட்டிப்பிடித்துக் கொண்டிருப்பதற்காக நீங்கள் வெட்கப்படவில்லையே! தாயின் கருப்பையிலேயே நீங்கள் செத்தொழிந்திருக்கக் கூடாதா? உங்களுடைய இரங்கத்தக்க, இகழத்தக்க, வெறுக்கத்தக்க அவலமான வாழ்க்கையினால் உங்கள் துன்பம், வறுமை, அடிமைநிலை ஆகியவை மேலும் இழிந்து, இன்னலுற்று உலகிற்கே சுமையாயினவே ஏன்? உங்களைத் திருத்திக்கொண்டு புதிய வாழ்க்கைக்கு உங்களால் உயர முடியாவிட்டால் நீங்கள் இறப்பதே மேல்; மற்றவர்களுக்குச் சமமாக நீங்கள் ஒவ்வொருவரும் இந்நாட்டில் உணவு, உறையுள், உடை பெற வேண்டியது உங்கள் பிறப்புரிமையாகும். சமூகத்தில் மரியாதைக்குரிய நிலையை நீங்கள் அடைய வேண்டுமானால் தன் கையே தனக்குதவி என்கிற தத்துவத்தை நம்புங்கள். இதுவே உங்கள் உயர்வுக்குச் சிறந்த வழியாகும்" என்று முழங்கினார். அம்பேத்கரின் உரைகளில் பெருக்கெடுத்துக் கொப்பளிக்கும் உணர்ச்சிகள் தீண்டப்படாதவர்களின் நெஞ்சங்களில் எழுச்சியை ஏற்படுத்தின. அடிமைத் தளையை அறுத்திட அவர்களை வீறுகொள்ளச் செய்தன.

இந்தியாவின் அரசியல் விடுதலைக்கான போரில் அம்பேத்கர் சேரவில்லை. நன்கு ஆய்ந்தறிந்தே இவ்வாறு செயல்பட்டார். அந்நிய ஆட்சியால் அரசியல் அதிகாரத்தை இழந்தவர்கள் அந்நிய ஆட்சியிடமிருக்கிற அரசியல் அதிகாரத்தை மீண்டும் கைப்பற்றிடப் போராடிக்கொண்டிருக்கிறார்கள். ஏனெனில் ஆங்கிலேயரை விரட்டிவிட்டால் அரசியல் ஆதிக்கம் தானாகவே மீண்டும் தம் கைக்கு வந்துவிடும் என்பதே அவர்களின் உள்ளக்கிடக்கை! தீண்டாப்படாத வகுப்பு மக்களின் நம்பிக்கை நட்சத்திரமான அம்பேத்கர் சுதந்திரம், குடியாட்சி என்று சுதந்தர இயக்கத்தார் பேசியதிலெல்லாம் தனக்கு நம்பிக்கை இல்லை என்று கூறினார். இந்தியாவின் நெடிய வரலாற்றுப் படிப்பினை இவ்வாறு அவரை நினைக்கச் செய்தது. புகழ் பெற்ற மன்னர்களும் பேரரசுகளும் இந்த நாட்டில் இருந்தன. ஆனால் அவருடைய மக்கள் எல்லா ஆட்சிகளிலும்

தொழுநோயாளிகள்போலவே நடத்தப்பட்டனர். ஒதுக்கி வைக்கப் பட்ட தீண்டப்படாத மக்களுக்குக் குடியுரிமையோ, அரசியல் உரிமையோ, மத உரிமையோ அளிக்கப்படவில்லை. இந்த உரிமைகளை இவர்களுக்குப் பெற்றுத் தருவதே அம்பேத்கரின் நோக்கமாகும். இந்த மனித உரிமைகளைப் பெறுவதற்காக உடலால், உள்ளத்தால், அறிவால் அவர்கள் உயர்ந்திட வழி வகுத்தார். ஆறு கோடி அடிமை மக்களையும் இந்நாட்டின் உண்மையான மனிதர்களாக உருவாக்கிட முயன்றார்.

அரசியல் உரிமைகளுக்காகப் போராடும்போது ஒரு பக்கம் சாதி இந்துக்களையும் இன்னொரு பக்கம் பிரிட்டிஷ் அரசையும் எதிர்த்துப் போராட வேண்டியிருப்பதை அவர் அறிந்திருந்தார். பிரிட்டிஷ் ஆட்சியை வெறுப்பதனால் இரு பக்கங்களிலிருந்தும் அவருடைய மக்களுக்குப் பகைமை நேரிடும் என்பதை உணர்ந் திருந்தார். எனவே தன் மக்களுக்கு உரிமைகளைப் பெற்றுத் தருவதற்கு ஏற்ற தன்மையில் மட்டும் பிரிட்டிஷ் அரசுடன் ஒத்துழைப்பது புத்திசாலித்தனமானது எனக் கொண்டார். பசியுடன் புழுதியில் புரண்டு ஏக்கம் நிறைந்த கண்களுடன் பொத்தல் குடிசைகளிலும் குப்பை மேடுகளிலும் மடிந்துகொண்டிருக்கும் கோடிக்கணக்கான இந்த ஊமை மக்களுக்கு விடுதலையைப் பெற்றுத் தருவதன்மூலம் இந்நாட்டின் வலிமையை, நலத்தை, வளத்தை, பெருமையை, நாகரிகத்தை மேலும் உயர்த்துவதே தன் வாழ்வின் குறிக்கோள் என்று கருதினார். சாவு மூச்சு விட்டுக்கொண்டு கிடக்கும் இந்து மதத்தை அதன் அழிவிலிருந்து காப்பாற்றி, 2500 ஆண்டுகளாக வரலாற்றின் ஏடுகளைச் செல்லரிக் கச் செய்த அதன் களங்கத்தைத் துடைத்து, இழந்த பெருமையை மீண்டும் நிலை நாட்டிடப் புத்துயிர் ஊட்டுவது உயரிய குறிக்கோள் அல்லவா? தீண்டப்படாதவர்களின் உணர்ச்சி களைத் தட்டியெழுப் பிய அதேநேரத்தில், அம்பேத்கர் சாதிப் பித்தால் காழ்ப்பேறிய, பொறுப்பில்லாத இந்துக்களுக்கு ஒரு எச்சரிக்கையையும் விடுத்தார். சாதி இந்துக்களின் மனமாற்றத்தை வேண்டிக் காந்தி பேசினார். சாவர்க்கரின் முழக்கமோ சாதி இந்துக்களுடைய அறிவை ஊடுருவிச் சென்று அவர்களின் மனச்சான்றை உறுத்தியது. தீண்டப்படாதவர்க ளுக்கு அம்பேத்கர் ஊட்டிய எழுச்சியோ, சேக்சுபியரின் கதைப் பாத்திரங்களைப்போல், உள்ளத்திலிருந்து ஊற்றெடுத்துப் பாய்ந் தன. ஆனால் மற்ற சீர்திருத்தவாதிகளின் வேண்டுகோள்கள் தோலிலிருந்து தொடங்கி இதயத்தை நோக்கிச் சென்றன; அவை ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களின் உள்ளங்களைக் தொடவே

யில்லை. அம்பேத் கரின் போக்குக்கும் மற்ற சமூகச் சீர்திருத்தக்காரர் களின் நோக்குக்கும் இடையே உள்ள வேறுபாடு இதுதான்.

IV

பகிஷ்கிரித் ஹித்தகாரிணி சபையின் தோற்றத்துடன் சுயமரியா தைக் கொள்கையின் காலமும் தொடங்கியது. இந்தச் சபை காலூன்றிச் செயல்படத் தொடங்கியது. 1925 சனவரி 4ஆம் நாள் ஷோலாப்பூரில் ஒடுக்கப்பட்ட உயர்நிலைப் பள்ளி மாணவர் கள் தங்கிப் படிப்பதற்கான விடுதியை இச்சபை ஏற்படுத்தியது. மாணவர்களின் உணவு, உடை, மற்ற செலவு களையும் இந்தச் சபையே ஏற்றுக்கொண்டது. இவ்விடுதியை நடத்துவதற்காக ஷோலாப்பூர் நகராட்சி நாற்பது ரூபாய் உதவித் தொகையாக வழங்கியது. தீண்டப்படாத வகுப்பைச் சேர்ந்தவரும் அந்த நகராட்சியின் உறுப்பினருமான ஜீவப்பா சுபா அய்தலே அந்த விடுதியின் நிர்வாகத்தைக் கவனித்துவந்தார்.

ஒடுக்கப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கென இந்தச் சபை மற்றொரு அமைப்பை நிறுவியது. அறிவையும் கல்வியையும் பெற வேண்டும் என்ற ஆர்வத்தை ஊட்டுவதும், சமூக சேவை செய்ய வேண்டும் என்ற விருப்பத்தை உருவாக்குவதும் அதன் நோக்கமாகும். இந்தச் சபையின் மேற்பார்வையின் கீழ்ச் சரசுவதி விலாஸ் என்ற மாத இதழை மாணவர்கள் நடத்தினார்கள். இது தவிர பம்பாயில் இலவசப் படிப்பகம் ஒன்றும், மகார் ஹாக்கி கிளப்பும் தொடங்கப்பட்டன. தீண்டப்படாதவர்கள் சூதாட்டம், குடி போன்ற சீரழிவுச் சிற்றின்பப் பொழுதுபோக்குகளில் ஈடுபட்டுக் கெட்டழிவதைத் தடுப்பதே இதன் நோக்கமாகும்.

அம்பேத்கரின் இத்தகைய தனித்தன்மை வாய்ந்த இயல்பு களால் தீண்டப்படாத வகுப்பு மக்கள் ஈர்க்கப்பட்டனர். பாரிஸ்டர் பட்டம் பெற்று இங்கிலாந்திலிருந்து அவர் திரும்பிய சில நாட்கள் கழித்து நடந்த முதல் பொதுக்கூட்டத்தில் அம்பேத்கர் கலந்துகொண் டார். அந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்தவர்கள் தவிர, தீண்டப்ப டாத வகுப்பார் ஒருவர்கூட அக்கூட்டத்திற்கு வரவில்லை. அக்கூட்டம் நடைபெற்ற இடத்தைச் சுற்றியிருந்த வீடுகளின் வாயிற்படிகளில் சிலபேர் அமர்ந்த வண்ணம் புகைபிடித்துக்கொண் டும் பேசிக்கொண்டும் இருந்தனர் என்ற தன் முதல் அனுபவத்தைப் பின்னாளில் ஒரு முறை அவர் நினைவுகூர்ந்து கூறினார். பணத்தின் வலிமையோ பத்திரிக்கை களின் துணையோ இல்லாமல்

நகரங்களுக்கும் பட்டிதொட்டி களுக்கும் சென்று மக்களைச் சந்தித்து எதிர்த்துத் தாக்குவதற்கும் புரட்சி செய்வதற்கும் அவர்களைத் தயார்ப்படுத்தினார். பம்பாய் மாகாணம் நிப்பானியில் நடைபெற்ற தீண்டப்படாத வகுப்பினர் முதல் மாகாண மாநாட்டை முன்னின்று நடத்தினார். 1925 ஏப்ரல் மாதம் இரத்தினகிரி மாவட்டத்தில் மால்வான் என்ற ஊரில் நடைபெற்ற தீண்டப்படாதவர்களின் முதல் மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார். ஓர் ஆர்வலர் வலியுறுத்தி அழைத்ததன் பேரில் கோவாவுக்குச் சென்றார். அம்பேத்கருடன் சிவதார்க்கரும் சென்றார். அவர்கள் இருவரும் கோவாவில் சில இடங்களைப் பார்த்துவிட்டுப் பம்பாய் திரும்பினர்.

அம்பேத்கர் அளித்த அறிக்கையினைப்பற்றி, இந்திய நாணய நடப்பு மற்றும் நிதிக்கான இராயல் கமிஷன் 1925 டிசம்பர் 15ஆம் நாள் அம்பேத்கரின் கருத்துகளை நேரில் கேட்டறிந்தது. இந்தியாவிற்கென்று தனியான தங்க மதிப்புக் கோட்பாடு இல்லாத தால் இந்தியாவிற்கு நன்மை தரும் தன்மையில் தங்கச் செலாவாணிக் கோட்பாட்டைக் கடைபிடிக்க முடியாது என்று ஆணித்தரமாகக் கூறினார்.

தீண்டப்படாத வகுப்பினரின் போராட்டம் தொடர்பாக ஈடு இணையற்றதொரு நிகழ்ச்சி 1925இல் நடைபெற்றது. திருவிதாங் கூர் ராஜ்யத்தில், வைக்கத்தில் சில வீதிகளில் தீண்டப்படாதவர்கள் நுழையக்கூடாது என்று தடுக்கப்பட்டிருந்தனர். இந்த வீதிகளில் நடப்பதற்கான உரிமையை நிலைநாட்டிடப் பார்ப்பனர் அல்லாதார் தலைவரான இராமசாமி நாயக்கரின் தலைமையில் சத்தியாக்கிரகப் போராட்டம் நடந்தது. அந்த அறப்போராட்டம் விளைவித்த சிந்தனைத் தாக்கமும் தன்னுரிமை உணர்ச்சிப் பெருக்கமும் பரவலாக மிகப்பெரிய விளைவை ஏற்படுத்தின. இதனால் வைதிக இந்துக்களும்கூட ஓரளவு சமத்துவ உரிமை உணர்வும் பெருந்தன் மையும் பெற்றதால், தீண்டப்படாதவர்களுக்குத் தடைசெய்யப்பட் டிருந்த வீதிகளைத் திறந்துவிட்டனர்.

அதே நேரத்தில் மற்றொரு நிகழ்ச்சியும் நடைபெற்றது. பொறுப்புள்ள சாதி இந்துக்களையும், சுயமரியாதை உணர்வுள்ள தீண்டப்படாதவர்களையும் இந்நிகழ்ச்சி உலுக்கியது. 1926 மார்ச்சு மாதம் சென்னையில் முருகேசன் என்கிற தீண்டப்படாதவர், இந்துக் கோயிலினுள் நுழையக்கூடாது என்ற தடையை மீறியதற்காக முருகேசன் கைது செய்யப்பட்டு, கோயிலின் புனிதத்தைக் கெடுத்தார் என்பதற்காகத் தண்டிக்கப்பட்டார்.

அம்பேத்கர் இந்த நிகழ்ச்சிகளைக் கூர்ந்து கவனித்துவந்தார். மகத் (Mahad) சத்தியாகிரகம் தொடங்கவிருந்தபோது எழுதிய ஆசிரியவுரை ஒன்றில் வைக்கம் சத்தியாக்கிரகம்பற்றி நெஞ்சம் நெகிழ்ந்து அவர் எழுதினார். இவை குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள். இனி நடக்கவிருக்கும் நிகழ்ச்சிகளுக்கு இவை முன்னோடிகள்.

அம்பேத்கர் விடுத்த வேண்டுகோள்களில் தன்கையே தனக் குதவி என்ற கருத்தே வலிமையாக மேலோங்கியிருந்தது. அந்த ஆண்டு ஏப்பிரல் மாதம் ஜெஜூரிக்குச் சென்றார். அங்கு நடந்த கூட்டத்தில் தீண்டப்படாதவர்கள் குடியிருப்பதற்காகத் தமக்கென்று தனி நிலப்பரப்பைக் கைப்பற்ற வேண்டும் என்று கூறினார். அக்கூட்டத்தில் பேசியவர்களில் ஒருவர் தீண்டாமையை ஒழிக்க முடியாவிட்டால் தலைவர் கூறியவாறு செய்யத் தயாராக இருக்கி றோம் என்று கருத்துக் கூறினார். தனிக்குடி யிருப்பு அமைத்தல் என்ற கருத்து திகைப்பூட்டியது. இருப்பினும் எந்த அளவிற்கு அம்பேத்கர் மனச் சோர்வும் வெறுப்பும் கொள்ளும் தன்மையில் நாட்டின் சூழ்நிலைகள் இருந்தன என்பதை இது காட்டுகிறது.

வழக்கறிஞர் தொழிலில் அம்பேத்கர் முன்னேறி வந்தார். அந்த ஆண்டு முக்கியமானதொரு வழக்கில் வாதாடினார். கே.பி. பக்டே, கேசவராவ் ஜெடே, தினகர் ராவ் ஜவால்கர் என்ற மூன்று பார்ப்பனர் அல்லாத தலைவர்கள்மீது பூனாவைச் சார்ந்த சில பார்ப்பனர்கள் வழக்கு தொடுத்தனர். பார்ப்பனர்கள்தான் இந்தியா வைப் பாழ்க்கிவிட்டனர் என்று அவர்கள் வெளியிட்ட துண்டறிக் கையினால் பார்ப்பன இனத்தின் புகழுக்குக் களங்கம் ஏற்பட்டு விட்டது என்பதே குற்றச்சாட்டு. பார்ப்பனர்களின் சார்பில் பூனாவின் தலைசிறந்த வழக்கறிஞர் எல்.பி. போபட்கர் வழக்காடி னார். மாவட்ட செசன்சு நீதிபதி முன்னர் அவ்வழக்கு விசாரணைக்கு வந்தது. அம்பேத்கர் மிகத் திறமையாக வாதாடி 1926 அக்டோபரில் அந்த வழக்கில் வென்றார். சமூக மட்டத்திலும் தனிப்பட்ட முறையிலும் அந்த வழக்கில் அம்பேத்கர் பெற்ற வெற்றி வாடிக்கையாளர்களிடமும் அம்பேத்கரிடமும் மிகப்பெரிய தாக் கத்தை ஏற்படுத்தியது. பாரிஸ்டர் என்ற நிலையில் படிப்படியாக அவர் உயர்நிலையை எய்திவந்தார். அரவணைப்பு அற்ற சூழல் உயர்நீதிமன்றத்தில் இருந்தபோதிலும் பின்வரிசையிலிருந்து பெரும் புகழுடன் முன்வரிசைக்கு வந்துகொண்டிருந்தார்.

சமூகப் புரட்சியின் அதிர்வலைகள் சமுதாயத்தைக் கலக்கிக் கொண்டிருந்தன. போலேவின் தீர்மானத்திற்குப் பின்னரும்,

பெரும்பாலான நகராட்சிகளிலும் உள்ளாட்சிகளிலும் தீண்டப்படாத வகுப்பு மக்களுக்குரிய உரிமைகள் வழங்கப்பட்டதாகத் தெரிய வில்லை. பொதுக்கிணறுகள், குளங்கள், பள்ளிகள், மருத்துவமனை கள், தருமச் சத்திரங்கள் ஆகியவற்றைத் தீண்டப்படாத வகுப்பு மக்களும் பயன்படுத்துவதற்கான தீர்மானங்களை அவை நிறை வேற்றியிருந்தன. எனினும் அத்தீர்மானங்கள் நல்லெண்ணத்தைக் காட்டிக் கொள்ளமட்டும் பயன்பட்டனவே தவிரத் தீண்டப்படாத வகுப்பு மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கான நடவடிக் கைகளை அவ்வமைப்புகள் மேற்கொள்ளவே இல்லை. ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட தீர்மானம் செத்ததுபோல் ஆகிவிட்டதால், 1926 ஆகஸ்டு 5ஆம் நாள் பம்பாய்ச் சட்டசபையில் போலே ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்தார். மூன்று ஆண்டுகளுக்கு முன் இதுதொடர்பாக இம்மன்றம் நிறைவேற்றிய தீர்மானத்தை நடை முறைப்படுத்தாத நகராட்சிகளுக்கும் உள்ளாட்சி அமைப்புகளுக்கும் அரசு மானியத் தொகையை வழங்கக்கூடாது என்று இத்தீர்மானம் கோரியது.

தீர்மானத்தின் மீதான விவாதம் நடப்பதற்குமுன் பெரும் பாலான இந்து உறுப்பினர்கள் கொள்கையளவில் இதனை ஆதரிப்பதாகக் கூறினார்கள். இத்தீர்மானத்தைச் செயல்படுத்த வேண்டாம் என்றும், செயல்படுத்தினால் சட்டசபைக்கு வெளியே பெரும் எதிர்ப்புப் புயலைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்றும் ஓர் உறுப்பினர் கூறினார். அய்தராபாத் மாவட்ட (சிந்து) உறுப்பினர் நூர் முகம்மது பார்ப்பனர் அல்லாத உறுப்பினர்களின் போக்கை மிகக் கடுமையாகச் சாடினார். பார்ப்பனர்களிடமிருந்து தங்களுக்கு உரிய உரிமைகள் அனைத்தையும் பெற வேண்டும் என்று துடிக்கின்ற பார்ப்பனர் அல்லாதவர்கள் கீழ்ச்சாதி மக்களுக்கு மிகச் சாதாரணமான நீதியைக்கூட வழங்கிட மறுக்கிறார்களே என்று குற்றஞ் சாட்டினார். எதிர்காலத்தை உய்த்துணர்ந்து உரைப்பது போல், 'மேல்சாதியினரின் கொடுமையால் சமூகத்தில் கீழ்ச் சாதியினராக ஆக்கப்பட்ட மக்கள் இன்றளவும் தங்களின் இழிநிலையை மாற்ற முடியாததாக இருப்பதை உணர்ந்து மதம் மாறக்கூடிய நாள் வெகுதொலைவில் இல்லை என்றே நான் நினைக்கிறேன். அதன்பிறகு முகம்மதியர் களும் கிறித்துவப் பாதிரிகளும் தூண்டியதால்தான் தீண்டப்படாத வகுப்பு மக்கள் தாங்கள் பிறந்த இந்து மதத்தைவிட்டு விலகி மதம் மாறினார்கள் என்று குற்றம் சாட்டுவதில் பயனில்லை' என்று தெளிவாக எடுத்துரைத்தார்.

இந்துச் சமுதாயத்தைப்பற்றி ஒரு முஸ்லிம் தீட்டிக்காட்டிய ஓவியம் இது. இதுவே உண்மை; ஆனால் கசப்பான உண்மை. இது உள்ளத்தை நோகச்செய்வது; ஆனால் உண்மையில் ஆபத்தானது. மாகாணச் சட்டசபையிலும், நாட்டின் பிற பகுதிகளிலும் இந்துச் சமூகத்தைத் திருத்தி அமைக்கவேண்டும் என்ற கருத்து அலைவீசியது. ஆயினும் பழமைவாதிகளும் பிற்போக்குச் சக்திகளும் தம் பிடியை நழுவவிடாமல் இறுகப் பற்றிநின்றனர். அம்பேத்கர் இப்பிற்போக்குச் சக்திகளைத் தகர்த்துப் புதிய பாதை அமைக்க வேண்டிய நிலையில் இருந்தார். இப்பணியை முடித்திட அளவுகடந்த நெஞ்சுரமும் ஈடு இணையற்ற ஈடுபாடும் அசாதாரணமான ஆற்றலும் தேவைப்பட்டன.

V

புயல் தோன்றுவதற்கு முன் காற்று மண்டலத்தில் அழுத்தம் குறைகிறது என்பதை நாம் அறிவோம். தொழிலாளர் நவீனக் குடியிருப்புப் பகுதியில் அம்பேத்கர் வாழ்ந்துவந்தார். இக் குடியிருப்புக் கட்டடம் ஒவ்வொன்றும் மூன்று அடுக்கு மாடிகளைக் கொண்டது. ஒவ்வொரு மாடியிலும் எண்பது ஒற்றை அறை வீடுகள் இருந்தன. இவ்வீடுகளில் நவீனக் கழிப்பிட, குளியல் அறை வசதிகள் இல்லை. ஒவ்வொரு மாடியிலும் இரண்டு கழிவறைகளும், பாத்திரம் தேய்க்க, துணி துவைக்க, குளிக்க ஆகிய அனைத்திற்கும் இரண்டு தண்ணீர்க் குழாய்களும் இருந்தன. தொழிற்சாலைகளில் வேலைசெய்யும் தீண்டப்படாத வகுப்பு மக்களே பெருமளவில் இவற்றில் குடியிருந்தனர்.

இக்குடியிருப்புக்கு அருகில் இருந்த பம்பாய்ச் சமூக நலக் கழகத்திற்குச் சொந்தமான கட்டடத்தில் இருந்த ஒரு சிறிய அறைதான் அம்பேத்கரின் அலுவலகம். உயர் அதிகாரப் பொறுப்புகளிலிருந்தவர்களும் சிறந்த அறிஞர்களும் அம்பேத்கருடைய வீட்டைத் தேடி வந்து சந்திப்பது வழக்கம். தாங்கள் வருவதுபற்றி முன்கூட்டியே தெரிவிக்காமல் அவர்கள் வரும்போது அம்பேத்கர் அரைகுறை ஆடையில் இருப்பார். அதுபோன்ற நேரங்களில் அவருடைய அலுவலகத் தாழ்வாரத்தில் மொட்டை பெஞ்சின் மீது அமர்ந்து வந்தவருடன் பேசுவார். அவருடைய அறை எளிமையாக இருந்தது; வசதிக் குறைவானதாக இருந்தது.

ஒருநாள், அம்பேத்கர் அலுவலக அறைக்கு எதிரில், நகராட்சி அதிகாரி ஏற்பாடு செய்திருந்த கட்டாயத் தொடக்கக் கல்விபற்றிய

தொடக்க விழாக் கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. அப்போது மௌலானா சவுகத் அலி என்ற முஸ்லிம் தலைவர் அம்பேத்கரைச் சந்திக்க வந்தார். இக்கூட்டம் முடியும்வரை உங்கள் பெருத்த உடம்புடன் இக்கூட்டத்தில் அமர்ந்திருங்கள் என்று சிரித்துக் கொண்டே சொன்னார் அம்பேத்கர். அந்த முஸ்லிம் தலைவரும் மகிழ்வுடன் அவ்வாறே அமர்ந்தார்.

பொதுத்தொண்டு செய்பவர், வழக்கறிஞர் என்ற வகையில் பலதரப்பட்ட பணிகளை அம்பேத்கர் மேற்கொண்டிருந்தார். கல்வித் துறையிலும், சட்டசபை நியமன உறுப்பினர் ஆகவும் பம்பாய் நகராட்சி உறுப்பினர் என்ற நிலையிலும் தன் கருத்துகளைக் கூறிட அம்பேத்கர் சில வாய்ப்புகளைப் பெற்றிருந்தார். இந்நிலையில் பம்பாய்ச் சைடன் ஹாம் கல்லூரியின் முதல்வர் பதவி காலியாயிற்று. இக்கல்லூரியில் அம்பேத்கர் முன்பு பேராசிரியராக இருந்தார். முதல்வர் பதவிக்கு அம்பேத் கரைவிடத் தகுதி சான்றவர் பம்பாய் மாகாணத்தில் வேறு எவரும் அப்போது இல்லை. கல்வித் துறையில் உறுப்பினராக இருந்த முற்போக்குச் சிந்தனையாளரான டாக்டர் ஆர்.பி. பராஞ்சிபய்கூட அம்பேத்கருக்கு அந்த முதல்வர் பதவியைப் பெற்றுத் தருவதற்கான முயற்சியை மேற்கொள்ளவில்லை. மகாபலேசுவரில் கெலுஸ்கர் பராஞ்சிபய்யைச் சந்தித்து இதைப்பற்றிக் கேட்டதற்குத் தன்னால் அது இயலாதுபோயிற்று என்று கூறிப் பூசிமெழுகினார். பம்பாய் எல்ஃபின்ஸ்டன் கல்லூரியில் பேராசிரியர் பதவியை அம்பேத்கருக்கு அளிக்க பராஞ்சிபய் ஏற்பாடு செய்தார். ஆனால் அம்பேத்கர் அப்பதவியை ஏற்க மறுத்துவிட்டார். மேலும், "என் மக்களுக்குத் தொண்டு செய்வதே இனி என் வாழ்வின் குறிக்கோள் என்று நான் முடிவு செய்துவிட்டதால், இப்பணிக்கு இடையூறாக இருக்கும் எந்த வேலையையும் ஏற்க முடியாது" என்று கெலுஸ்கருக்குக் கடிதம் எழுதித் தெரிவித்தார்[27]. ஆயினும் 1925 சூன் மாதம் பாட்லிபாய் கணக்கியல் பயிற்சி நிறுவனத்தில் பகுதி நேர விரிவுரையாளராகப் பணி செய்ய ஒப்புக்கொண்டார். அங்கு வணிகச் சட்டப் பாடத்தைக் கற்பித்தார். 1928 மார்ச்சு மாதம்வரை இந்த நிறுவனத்தில் பாடம் பயிற்றுவித்தார்.

இக்காலக்கட்டத்தில்தான் அம்பேத்கருக்கு இன்னொரு மகன் பிறந்தான். இராஜரத்தினா என்று பெயர் சூட்டி இக்குழந்தையிடம் பேரன்பு செலுத்திவந்தார். இராஜரத்தினா பிறப்பதற்குமுன் இந்து என்ற பெண் குழந்தை பிறந்தது. இந்து குழந்தைப் பருவத்திலேயே இறந்துவிட்டாள். இதனால் இராமாபாயின் உடல் நலம் பெரிதும்

குன்றியது. ஓய்வுக்காகவும் மாறுதலுக்காகவும் மனைவியையும் யசுவந்தன், இராஜரத்தினா ஆகியோரையும் வெளியூருக்கு அம்பேத்கர் அனுப்பிவைத்தார்.

ஆனால் எதிர்பாராத நிலையில் 1926 சூலை மாதத்தில் அம்பேத்கர் தன் செல்ல மகன் இராஜரத்தினாவை இழந்தார். குழந்தையின் உடலை அடக்கம் செய்யத் தர மறுத்திடும் அளவிற்கு அவர் துயரத்தில் மூழ்கியிருந்தார். குழந்தையின் இறுதி மூச்சு அடங்கிய அறைக்குள் நுழையவும்கூட மனந் துணியாமல் பல நாட்கள் தவித்தார். குழந்தையின் இறப்பை அறிந்து அவருடைய நண்பர் தாத்தோபா பவார் அம்பேத்கருக்கு இரங்கல் தெரிவித்துக் கடிதம் எழுதினார். 1926 ஆகஸ்டு 16ஆம் நாள் அக்கடிதத்திற்குப் பதில் எழுதிய அம்பேத்கர் தன் ஆற்றொணாத் துயரை அப்படியே அக்கடிதத்தில் வடித்திருந்தார். "எங்கள் அருமை மகன் மாண்ட அதிர்ச்சியிலிருந்து நாங்கள் மீண்டு விட்டதாக நடிப்பதில் பயன் ஏதுமில்லை. துக்கத்திலிருந்து என்றுமே மீள முடியாது எனக் கருதுகிறேன். மூன்று மகன்கள். ஒரு மகள் ஆக நான்கு கண்ணைக் கவரும் எழில் பொருந்திய மக்களை மண்ணில் புதைத்தோம். இவர்கள் உயிரோடு இருந்திருப்பின் இனிய எதிர்காலத்தைப் பெற்றிருப்பார்கள். இவர்களை இழந்த துன்பம் உள்ளத்தைச் சுக்குநூறாக உடைக்கிறது. நகர்ந்துகொண்டேயிருக்கும் மேகங்கள் போல் நாட்கள் எம்மைக் கடந்து செல்கின்றன. நாங்களும் ஏதோ உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அருமைக் குழந்தைகளின் இழப்பினால் எங்கள் வாழ்க்கை சப்பென்று ஆகிவிட்டது. பைபிளில் கூறியிருப்பதுபோல், 'நீங்கள் இந்த மண்ணின் உப்பாய் இருக்கிறீர்கள். இந்த மண்ணிலிருந்து உப்பு பிரிந்து போய்விட்ட பிறகு, எதைக் கொண்டு இந்த மண்ணில் உப்பை உண்டாக்குவது?' என்கிற வாசகத்திலிருந்து, வெறுமையாகிவிட்ட என் வாழ்வில் இந்த உண்மையை ஒவ்வொரு நொடியும் உணருகிறேன். என் கடைசி மகன் அற்புதமானவன்; அவனைப் போன்ற குழந்தையை நான் பார்த்ததேயில்லை. அவன் இறந்த பிறகு என் வாழ்க்கை களைகள் மண்டிய தோட்டம்போல் ஆகிவிட்டது. இதற்குமேல் எழுத இயலவில்லை. தொடர்ந்து எழுத முடியாமல் துக்கம் என்னை அடைக்கிறது. மனமுடைந்தவனின் மரியாதையை ஏற்பீர். துன்பத்தில் உள்ள உங்களுடைய அம்பேத்கர்" என்று எழுதி முடித்திருக்கிறார்.

சூழ்நிலைகள் இன்னும் சரியில்லாமலேயே இருந்தன. உரன் மிக்க அம்பேத்கர் உள்ளத்திலும் சிலபோழ்து மனத்தளர்ச்சி

மேலோங்கியது; ஆதரவற்று இருப்பதுபோன்ற உணர்வு அவர் உள்ளத்தில் படர்ந்தது. மணிக்கணக்கில் மனத்தை அரிக்கும் எண்ணங்களுக்கு ஆளானார். ஆழ்ந்த சிந்தனையில் ஈடுபட்ட அவருடைய உள்ளம் புதிய ஒளியைத் தேடிக்கொண்டிருந்தது. மேலே ஒரு துண்டைப் போட்டுக்கொண்டு, அவருடைய படிப்பறையில் அமர்ந்து, நீல வானத்தைப் பல மணி நேரம் பார்த்துக்கொண்டேயிருப்பார். இரண்டு பெஞ்சுகளை ஒன்றாகச் சேர்த்து அதன்மீது தூங்கிவிடுவார்.

அவர் மனத்திட்பமும், அனைத்து வகைப்பட்ட அறிவியல் துறைகளில் போதிய அறிவும் பல்வேறு மதச் சாத்திரங்களில் கூர்த்த மதிநுட்பமும் பெற்றிருந்தார். ஒரு துறவியைப் போல அவர் தன் தேவைகளைப் பெரிதும் குறைத்துக்கொண்டார்; அமைதியான ஆழ்ந்த தியானத்தில் பல நாட்களைக் கழித்தார்.

அரசனாவதற்கு முன் நெப்போலியன் பட்ட கொடுந் துன்பங்களை எண்ணிப்பாருங்கள். ஆனால் செயலின் விடியல் அவனுடைய வாயில் கதவைத் தட்டியது. உலகத்தை ஆட்டிப் படைக்கின்ற மனிதர்கள் தங்களை எதிர்கொள்ளுகிற உள்ளத்தை உடைக்கும் இடையூறுகளைத் தளராத முயற்சியின்மூலம் முறியடித்து வெற்றிகொள்ளுகிறார்கள். அதுபோன்றே அம்பேத்கரும் செயல்பட்டார்.

துன்பம் இழைக்கப்பட்டவர்களும், உதவி பெற விரும்பியவர்களும் பல பகுதிகளிலிருந்தும் 'ஏழைகளின் வழக்கறிஞரான' அம்பேத்கரை நாடி வந்தனர். அவர்களுடைய துன்பநிலை கண்டு அம்பேத்கரின் நெஞ்சம் நெகிழ்ந்து உருகும். அவர்களுடைய இன்னல்களைப்பற்றி அக்கறையுடன் கேட்டறிவார்; உரிய சட்ட ஆலோசனைகளை வழங்குவார். அவர்களுக்காக முழு ஈடுபாட்டுடன் நன்கு உழைத்து வழக்காடுவார்; அதற்காகப் பெயரளவுக்கு ஒரு தொகை பெறுவார்; இலவசமாகவும் வழக்காடுவார். அந்நாளில் அவரை நாடிவருவோரிடம் அவர்கள் மனம் மகிழுமாறு மிகுந்த அன்பைப் பொழிவார். அவர்களை அக்கறையுடனும் கனிவுடனும் கவனித்துக்கொள்வார். அவருடைய எளிய இனிய அன்பில் தோய்ந்து திளைத்த ஏழை மக்களின் உள்ளங்களில் நன்றி உணர்ச்சி பெருக்கெடுத்தோடியது.

அவருடைய குடும்பம் வெளியூர் சென்றிருந்தபோது, வெளி மாவட்டத்திலிருந்து இருவர் அவர்களுடைய சொந்த வேலையாகப்

பம்பாய்க்கு வந்தனர். அவர்கள் அம்பேத்கருடன் கலந்து பேசிட விரும்பினர். மேலும் அவர்களுக்குத் தங்குவதற்கு இடமும் தேவைப்பட்டது. அம்பேத்கரின் வீட்டில் தங்கினார்கள். அப்போது அம்பேத்கர் மட்டுமே வீட்டில் இருந்தார். காலையில் நீதிமன்றத்திற்குப் புறப்பட்டுச் செல்லுமுன் தங்களோடு அம்பேத்கர் ரொட்டியும் தேநீரும் சாப்பிட்டதை அந்த இரு விருந்தினர்களில் ஒருவர் நன்றிப் பெருக்குடன் பின்னாளில் நினைவுகூர்ந்து சொன்னார். மாலையில் அவர்கள் இருவரும் அம்பேத்கர் வீட்டிற்குத் திரும்பியபோது, அவரே உணவு சமைத்து வைத்துவிட்டு, அவர்களின் வருகைக்காக உண்ணாமல் காத்துக்கொண்டிருப்பதைக் கண்டு வியந்தனர். வியப்பாலும், நன்றிப் பெருக்காலும் அவர்களின் கண்கள் ஒளிர்ந்தன.

மிகப் பெரிய படிப்பாளியான அம்பேத்கர் சமையல் கலையிலும் வல்லவர். அம்பேத்கர் பொதுவாக அதிகம் பேசமாட்டார். அவரைச் சந்திக்க வருபவரின் உள்ளத்தில் மதிப்பும் அச்சமும் ஏற்படும். அவருடைய பழகும் இயல்புகளை ஒருவர் முழுவதுமாக அறிய முடியாது. அவருடைய தோற்றம் ஆளுமை மிக்கது. இத்தகைய இயல்புகளின் இருப்பிடமான அவர் மிகச் சாதாரணமானவர்களுக்கு மேற்கண்டவாறு விருந்தோம்புவார் என்று யாரும் எதிர்பார்க்கமாட்டார்கள். இத்தகைய சிறந்த மனிதர்களின் அன்பான அரவணைப்பின் மீதுதான் பேரரசுகளும் பெருந்தலைமைகளும் உருவாக்கப்பட்டன. இத் தகைய சிறந்த தலைவர்கள் மக்களிடம் அப்பழுக்கற்ற முழு ஈடுபாடுகொண்டிருந்தனர். தம்முயிரையும் அளிக்க அணியமாக இருந்த அம்மக்களிடம் கொட்டும் அருவி போன்ற பேரன்பைப் பொழிந்தனர். இவையே அவர்தம் பெருமைக்கு அடித்தளமாகும். இப்பண்புகளைப் பேணிப் போற்றிக் காத்தவர்களின் தலைமை தழைத்தோங்கியது. இப்பண்புகளைக் கைவிட்டவர்கள் காலப்போக்கில் தலைமையிலிருந்து தூக்கியெறியப்பட்டனர்.

அடிமைத்தனத்திற்கு எதிராக...

புத்தாண்டு நாளில், கொரிகான் போர் நினைவுச்சின்னம் அருகில், தீண்டப்படாத வகுப்பு மக்கள் பொதுக்கூட்டம் ஒன்றை நடத்தினார்கள். இவ்வகுப்பினரின் முக்கியத் தலைவர்கள் இக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். இக்கூட்டத்தில் அம்பேத்கர் உரையாற்றினார். நம்முடைய சமூகத்திலிருந்து நூற்றுக்கணக்கானவர் கள் ஆங்கிலேயருக்காகப் போர் புரிந்தனர். ஆனால் பிரிட்டிஷ் அரசு செய்ந்நன்றி கொன்றதுபோல், நம்முடைய சமூகத்தை 'இராணுவத்தில் சேரக்கூடாத வகுப்பாக' அறிவித்துவிட்டது. ஆங்கிலேயரின் பக்கம் நின்று போர்புரிவது பெருமைக்குரியது அன்று. சாதி இந்துக்கள் இவர்களைத் தீண்டப்படாதவர் களாகவும் இழிவுபடுத்தியும் ஒதுக்கிவிட்டதால் பிழைப்பதற்கு வேறு வழியின் றிப் பிரிட்டிஷ் இராணுவத்தில் சேர்ந்தனர்'' எனக் குறிப்பிட்டார். இராணுவத்தில் சேருவதற்குத் தடை விதித்துள்ளதற்கு எதிராகக் கிளர்ச்சி செய்யு மாறும், இத்தடையை நீக்கிட அரசை வலியுறுத்து மாறும் மக்களைக் கேட்டுக்கொண்டார்.

இக்காலக்கட்டத்தில் பம்பாய் மாகாணச் சட்டசபை உறுப்பின ராக அம்பேத்கரைக் கவர்னர் நியமித்தார். 1927 பிப்ரவரி 2ஆம் நாள் தீண்டப்படாத வகுப்பு ஆசிரியர்கள் ஒன்றுகூடிச் சட்டசபை உறுப்பினராக அம்பேத்கர் ஆனமைக்குப் பாராட்டு விழா நடத்திப் பண முடிப்பு தருவது என்று முடிவுசெய்தனர். அதன்படி ஏப்ரல் 19ஆம் நாள் பம்பாய்ப் பரேல் பகுதியில் தாமோதர் அரங்கில் தீண்டப்படாத வகுப்பினரின் கல்வியில் அக்கறைகொண்டிருந்த நகராட்சிக் கல்வி மேற்பார்வையாளர் எஸ்.பி.பந்தூர்கர் தலைமை யில் கூட்டம் நடைபெற்றது. பண முடிப்பு அளிக்கப்பட்ட இவ்விழாவில், 'அம்பேத்கர் அவருடைய பெரும் பொறுப்புகளைச் செவ்வனே செய்வார்' என்று பந்தூர்கர் கூறினார். அம்பேத்கரின் சீரிய முயற்சிகள் வெற்றிபெற தீண்டப்படாத வகுப்பு மக்களும் தம் பொறுப்பை உணர்ந்து பங்களிப்புச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அவருடைய பணியைப் பாராட்டியதற் காக ஒடுக்கப்பட்ட வகுப்பு ஆசிரியர்களுக்கு அம்பேத்கர் நன்றி தெரிவித்தார். தனக்கு அளித்த பணமுடிப்பைப் பகிஷ்கிரித் ஹித்தகாரிணி சபைக்கு நன்கொடையாக அளித்தார்.

சுயமரியாதைச் சூரியன் வானில் எழுந்துவிட்டான். ஒடுக்கி வந்த முகில்கள் ஓடத் தொடங்கிவிட்டன. தீண்டப்படாத மக்கள் தலைநிமிர்ந்து நோக்கினர்.

அம்பேத்கர் வாழ்வில் சிறப்பான நிகழ்ச்சி ஒன்று நடந்தது. அதுதான் மகத் போராட்ட நிகழ்ச்சியாகும். போலே அவர்களால் பம்பாய்ச் சட்டசபையில் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்ட தீர்மானம்தான் இப்போராட்டத்திற்கு மூலமாகும். 1923இல் நிறை வேற்றப்பட்ட போலே தீர்மானம் 1926இல் சிறிய மாறுதல்க ளுடன் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது. இதன் அடிப்படையில் மகத் நகராட்சி சௌதார் குளத்தைத் தீண்டப்படாதவர் பயன்படுத்த லாம் என்று அறிவித்தது. ஆனாலும் நகராட்சியின் தீர்மானம் செயல் வடிவம் பெறவேயில்லை; ஒரு நல்லெண்ணத்தின் அறிகுறியாகவே நின்றுவிட்டது. சாதி இந்துக்களின் எதிர்ப்பு உணர்வுக்கு அஞ்சித் தீண்டப்படாதவர்கள் தங்கள் உரிமையை நிலைநாட்ட முயலவில்லை.

ஆகவே 1927 மார்ச்சு 19, 20 ஆகிய நாட்களில் கொலாபா மாவட்டத் தீண்டப்படாத மக்கள் மாநாட்டை மகதில் நடத்துவது என்று முடிவு எடுக்கப்பட்டது. இக்கூட்டத்தை நடத்திய தலைவர் கள் மாநாடு நடைபெறவுள்ள நாட்கள்பற்றிப் பிப்ரவரி மாதம் முதல் வாரத்தில் அம்பேத்கருக்குத் தெரிவித்தனர். சுரேந்திர நாத் திம்னிஸ், சுபேதார் சவத்கர், ஆனந்தராவ் சித்ரே ஆகியோர் மாநாட்டிற்கான ஏற்பாடுகளை மிகுந்த கவனமுடன் செய்தனர். தலைவர்களும் தொண்டர்களும் சுற்று வட்டாரத்தில் இருந்த மலைப்பகுதிகளிலும் பள்ளத்தாக்குகளிலும் இருந்த ஊர்களுக்கு நடந்து சென்று இந்த மாநாட்டின் முதன்மையை வலியுறுத்தி இரண்டு மாதக் காலம் பிரச்சாரம் செய்தனர். பதினைந்து வயது சிறுவர்முதல் எழுபது வயது முதியவர்வரை ரொட்டி மூட்டையைத் தோளில் தொங்கவிட்டுக்கொண்டு நூறு மைல் களுக்கு அப்பால் இருந்தும் நடந்தே வந்து மகதை அடைந்தனர். மராட்டியம், குசராத் ஆகியவற்றின் எல்லா மாவட்டங்களிலிருந்தும் தீண்டப் படாத வகுப்புத் தொண்டர்களும், தலைவர்களும் பேராளர்களுமாக மொத்தத்தில் பத்தாயிரம் பேர் மகத் மாநாட்டிற்கு வந்தனர்.

மாநாடு நுட்பமாகத் திட்டமிடப்பட்டது; எல்லா வசதி களும் செய்யப்பட்டன; மாநாட்டின் வெற்றிக்காக அனைத்து வழிமுறைக ளும் பின்பற்றப்பட்டன. மாநாடு நடைபெற்ற இடத்தில் தீண்டப் படாதவர்களுக்குக் குடிதண்ணீர் கிடைக்காது என்பதால் சாதி

இந்துக்களிடமிருந்து நாற்பது ரூபாய்க்குத் தண்ணீர் விலை கொடுத்து வாங்கப்பட்டது. உள்ளூர்த் தெய்வமான வீரேசுவர் பெயரில் அமைந்த பந்தலில் மாநாடு நண்பகலில் தொடங்கியது.

தலைமை உரை நிகழ்த்த அம்பேத்கர் எழுந்தார். அரையாடை அணிந்திருந்த, செய்வது அறியாத ஆண்களும் பெண்களும் ஆர்வமுடன் காத்திருந்தனர். சிறிய எளிய நடையிலான அழுத்த மான சொற்றொடர்களால் அம்பேத்கர் உரையாற்றினார். அவர் குரலில் புதுவகையான போராட்டத் தொனி ஒலித்தது. தான் தொடக்கக் கல்வியை முதலில் பெற்ற தபோலியின் சூழலை விளக்கினார். சிறுவயதில் துள்ளி மகிழ்ந்து விளையாடிய இடம் எவர் உள்ளத்தையும் என்றும் ஈர்க்கும். அதன் எழிலார்ந்த இயற்கைச் சூழல் மேலும் நேசத்தைத் தூண்டும் எனக் கூறி, தான் சிறுவனாக இருந்த காலத்தினை நினைவுகூர்ந்தார்; 'தீண்டப் படாதவர்கள் என இன்று இழிவுபடுத்தப்பட்டுள்ள நாம் ஒரு காலத்தில் மிக முன்னேறிய வகுப்பினரைத் தவிர, மற்றவர்களைக் காட்டிலும் கல்வியில் மிகவும் உயர்ந்திருந்தோம். நாட்டின் இந்தப் பகுதியில் நம் வகுப்பு மக்களின் செயல்பாடுகளும் ஆளுமையும் உயிரோட்டமும், அதிகாரச் செல்வாக்கும் பெற்றிருந்தன' எனக் குறிப்பிட்டார்.

உள்ளார்ந்த விழைவுடன் தன் மக்களுக்கு ஒரு கோட்பாட்டை அறிவித்தார். மராட்டியத்தின் மலைகளிலும் பள்ளத்தாக்குகளிலும் ஊர்களிலும் அது எதிரொலித்தது. ''இராணுவத்தில் நம் வகுப்பின ரைச் சேரவிடாமல் தடுத்திருப்பதே நம் வீழ்ச்சிக்கான முக்கியமான காரணங்களில் ஒன்றாகும். இராணுவம் நம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ள ஒப்பரிய வாய்ப்பை அளித்தது. இராணுவ அதிகாரிகளாக நம்முடைய திறமையையும் அறிவையும் வீரத்தை யும் சிறப்பையும் நாம் நிலை நாட்டினோம். அந்நாளில் இராணுவப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களாகத் தீண்டப்படாதவர்களும் இருந்தனர். இராணுவ முகாமில் இருந்த கட்டாயத் தொடக்கக் கல்வி முறை மிகவும் பயனுள்ளதாகவும் முழுமையானதாகவும் இருந்தது. நெப்போலியனுடனான போரில் இங்கிலாந்து சிக்குண் டிருந்த காலத்தில் இந்தியாவில் பேரரசை நிறுவுவதற்குத் துணையாக விளங்கிய தீண்டப்படாதவர்களுக்கு இராணுவத்தில் நுழைவதற்கான கதவுகளைப் பிரிட்டிஷ் அரசு மூடிவிட்டதானது, நம்மைக் காட்டிக் கொடுத்ததும் நமக்கு இழைத்த துரோகமும் ஆகும்'' என்று விளக்கினார்.

எழுச்சியூட்டும் குரலில் தொடர்ந்து பேசினார். "மூன்று வழிகளில் நம்மைத் தூய்மை செய்துகொள்ளாதவரையில் நிலையான முன்னேற்றத்தை நாம் அடைய முடியாது. நாம் நடந்து கொள்ளும் முறையில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்; நம் பேச்சுமுறையில் திருத்தம் தேவை; நம் எண்ணத்தில் எழுச்சி வேண்டும். உங்களிடம் ஒன்றைக் கேட்டுக்கொள்கின்றேன்: இறந்த விலங்குகளின் புலாலை உண்பதில்லை என்று இந்த நிமிடம் முதலே உறுதி எடுத்துக்கொள்ளுங்கள். நமக்குள் உயர்வு தாழ்வு பாராட்டுவதை விட்டொழிப்பதற்கு இதுவே தக்க தருணமாகும். வீசி எறியப்படும் மீந்த உணவுகளை உண்பதில்லை என்று உறுதி பூணுங்கள். சுய உதவியைக் கற்பது, சுயமரியாதையை மீண்டும் பெறுவது, சுய அறிவை வளர்ப்பது ஆகியவற்றின்மூலம் மட்டுமே நம்மை உயர்த்திக்கொள்ள முடியும்" என்றார். இராணுவம், கடற்படை, காவல்துறை ஆகியவற்றில் பணியில் சேருவதற்கான தடையை நீக்கக் கோரி அரசுக்கு எதிராகப் போராட முன் வாருங்கள் என்று மக்களுக்கு அழைப்பு விடுத்தார். கல்வியின் தேவை, அரசு ஊழியத்தில் நுழைதல் ஆகியவற்றின் இன்றியமையாமையை விளக்கினார். மகார்களின் பிரச்சினையைப்பற்றிப் பேசும்போது வீசி எறியப்படும் சில ரொட்டித் துண்டுகளுக்காக அவர்களுடைய மனித உரிமை களையே விற்றுவிடுவது மானங் கெட்டதனமல்லவா என்று அன்பான முறையில் கேட்டு, அவர்களுடைய சுயமரியாதை உணர்ச்சியைத் தட்டி எழுப்பினார். இழிவு படுத்தும், அடிமைப் படுத்தும் பழக்க வழக்கங்களை விட்டொழியுங்கள் என்று வேண்டுகோள் விடுத்தார். ஊருக்குப் பொது ஊழியம் செய்வதற்காக அளிக்கப்பட்டுள்ள மானிய நிலத்தை வேண்டாம் என்று விட்டுவிட்டு, காட்டு நிலப் பகுதிகளைக் கேட்டுப் பெற்று அதில் விவசாயம் செய்யுங்கள் என்று புது வழி காட்டினார்.

'உங்களுடைய பிள்ளைகளின் எதிர்காலம் உங்களுடைய வாழ்க்கையைவிட உயர்ந்ததாக அமைய வேண்டும் என்று எண்ணாவிட்டால், இன்றையப் பெற்றோர்களாகிய உங்களுக்கும், விலங்குகளுக்கும் வேறுபாடே இல்லை' என்று உணர்ச்சி பொங்க இறுதியில் கூறினார்.

முக்கியமான செய்திகள்பற்றி மாநாடு தீர்மானங்கள் இயற்றியது. சாதி இந்துக்கள், தீண்டப்படாதவர்கள் தங்களுடைய குடியுரிமைகளைப் பெறுவதற்கு உதவிட வேண்டும்; அவர்களை வேலைகளில் அமர்த்திக்கொள்ள வேண்டும்; தீண்டப்படாத

மாணவர்களுக்கு உணவளிக்க வேண்டும்; இறந்த விலங்குகளின் உடல்களைச் சாதி இந்துக்களே புதைத்துக்கொள்ள வேண்டும் என்று ஒரு தீர்மானம் மூலம் சாதி இந்துக்களுக்கு அம் மாநாடு ஒரு வேண்டுகோள் விடுத்தது. தனியான சட்டத்தின்மூலம் இறந்த விலங்குகளின் புலாலைத் தீண்டப்படாதவர்கள் உண்பதைத் தடை செய்யவேண்டும் என்றும், மதுவிலக்கை நடைமுறைப் படுத்த வேண்டும் என்றும், இலவசக் கட்டாயக் கல்வியை வழங்க வேண்டும் என்றும், ஒடுக்கப்பட்ட வகுப்பு மாணவர் விடுதிகளுக்கு அரசு நிதிஉதவி அளிக்கவேண்டும் என்றும், உள்ளாட்சி நிறுவனங் கள் போலேயின் தீர்மானத்தை நடை முறைப்படுத்த வேண்டும் என்றும், தேவைப்பட்டால் இதற்கென 144 தடை ஆணைகளைப் பயன்படுத்த வேண்டும் என்றும் அரசைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

II

உள்ளூரிலிருந்தும் வெளியூர்களிலிருந்தும் மாநாட்டுக்கு வந்திருந்த சாதி இந்துத் தலைவர்களில் சிலர் மாநாட்டின் முதல் நாள் தீண்டப்படாத வகுப்பு மக்கள் கேட்கும் உரிமைகளின் நியாயத்தை வலியுறுத்திப் பேசினார்கள். இதற்குத் தாங்கள் உதவுவதாகவும் உறுதி கூறினார்கள். அன்றிரவு கொள்கை ஆய்வுக் குழு கூடியது. மாநாட்டில் கலந்துகொண்ட உயர்சாதித் தலைவர்களின் உணர்வுகளைக் கருத்திற் கொண்டது. மாநாட்டினர் ஊர்வலமாகச் சௌதார் குளத்திற்குச் சென்று தீண்டப்படாத மக்கள் அதில் தண்ணீர் எடுக்கும் உரிமையை நிலைநாட்டிட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. அடுத்த நாள் காலை மாநாட்டில் சாதி இந்துக்களின் கடமைகள், பொறுப்புகள்பற்றிய தீர்மானத்தை ஆதரித்துப் பேசுமாறு சாதி இந்துக்களின் தலைவர்கள் இரண்டு பேர் அழைக்கப்பட்டனர். கலப்புத் திருமணம்பற்றிய பகுதியைத் தவிர, மற்ற அனைத்தையும் இருவரும் ஆதரித்துப் பேசினார்கள். 1924ஆம் ஆண்டிலேயே மகத் நகராட்சி இக்குளத்தைத் தீண்டப் படாதவர்கள் பயன்படுத்தலாம் என்று அறிவித்திருந்தது. அத்தீர்மானத்தின்படி இப்போது இக்குளத்தில் தீண்டப்படாதவர்கள் தண்ணீர் எடுக்கும் உரிமையை நிலை நாட்டுவது என்று முடிவு செய்யப் பட்டது. குளத்திலிருந்து தண்ணீர் எடுக்கும் உரிமையை உறுதி செய்திட மாநாட்டின் பிரதிநிதிகள் சௌதார் குளத்தை நோக்கி அமைதியாக நடந்து சென்றனர்.

சிறப்பு வாய்ந்த பெரும் விளைவுகளை ஏற்படுத்திய புகழ் மிக்க அந்நிகழ்ச்சி நடைபெறத் தொடங்கியது. அடிமை முறைக்

சாதிக்கும், புரோகிதத்திற்கும் எதிர்ப்பாளரான - தீண்டப்படாத இந்துக்களின் விழிப்புணர்வின் பிரதிநிதியான அம்பேத்கர் அக் குளத்தை நோக்கி நடந்தார். அக்குளத்தில் சாதி இந்துக்களோடு முகம்மதியரும் கிறித்துவரும் நீர் எடுத்தனர். ஆனால் இந்துக் கடவுள்களை வணங்கும் - இந்து மதத்தைக் காலங்காலமாகப் பின்பற்றிவரும் தீண்டப்படாத இந்துக்கள் நீர் வேட்கையால் தொண்டை வறண்டு உலர்ந்து தவித்தாலும் அக்குளத்திலிருந்து ஒரு சொட்டுத் தண்ணீரையும் எடுக்க அனுமதிக்கப்பட்டதில்லை. பன்னெடுங்காலமாக அநீதியின் கால்களின் கீழ் நசுக்கப்பட்டுக் கிடந்த தீண்டப்படாத மக்கள் தங்கள் மனித உரிமைகளை நிலை நாட்டிட வீறுகொண்டு நிமிர்ந்துநின்றனர். இம்மக்களின் வரலாற்றில் இதுபோன்று மெய்சிலிர்க்க வைத்த நிகழ்ச்சி நடந்ததே இல்லை. போற்றிப் புகழ்ந்து ஏற்றுக்கொண்டிருந்த பழக்க வழக்கங்களைத் தகர்த்து நொறுக்கிட சமூகப் புரட்சியின் காவலரான - போர்க் குணம் மிக்க தீரம் செறிந்த அம்பேத்கர் தன் படையுடன் நடந்தார். சமூகத்தில் புதிய தளங்களையும் தகுதிப்பாடுகளையும் உருவாக்கி னார். உலகத்தின் நோயாளியாக இருந்த இந்துஸ்தானத்தைப் புதியதாக அவர் வடிவமைத்தார். அவர்களுடைய பெருந்தலைவ ரைப் பின்பற்றி நான்கு நான்கு பேராக அணிவகுத்து அந்தப் பத்தாயிரம் மக்களும் நடந்தனர். அம்மக்களின் அடக்கி வைக்கப்பட் டிருந்த ஆற்றல் பேரழுத்தத்துடன் வேகமாக மேலெழும்பிப் பாய்ந்தது. கடந்த கால வரலாற்றில் இதற்கு இணையான தன்மையில் அம்மக்களின் எழுச்சி பீறிட்ட நிகழ்ச்சி நடைபெற்ற தில்லை.

அரசியல் ஊர்வலங்களில் ஆரவாரமும் உணர்ச்சிப் பெருக்கும் அதிகமிருக்கும். ஆனால் அம்பேத்கர் மேற்கொண்ட ஊர்வலமோ இடர்ப்பாடும் ஆபத்தும் நிறைந்ததாகும். எத்தகைய சமூக-மத அமைப்பின்மீது அம்பேத்கர் தன் தாக்குதலைத் தொடுத்தார்? எளிய உதவியற்ற சிறு சமூகத்தின்மீது பெரும்பகுதியினர் பல தடைகளை மதத்தின் பெயரால் விதித்திருந்தனர். வெறித்தனமான, உளுத்துப் போன, நேர்மையற்ற மனிதத் தன்மையில்லாத சட்டங்கள் கோடிக்கணக்கான தீண்டப்படாத மக்களுக்கு விலங்கிட்டு அவர்க ளின் கழுத்தை நெரித்துக் குருதி சிந்துமாறு காலங்காலமாகச் செய்துகொண்டிருக்கின்றன. அடிமைப் பட்ட நாட்டில் அரசியல் விடுதலைக்கான போராட்டங்களையும் ஊர்வலங்களையும் நடத்து வது எளிது. ஏனெனில் விடுதலைப் போராட்டக்காரர்களுக்குப் பொதுமக்கள் நேரிடையாகவும், மறைமுகமாகவும் ஆதரவு

தருகின்றனர். அரசியல் விடுதலை வீரர்களின் போராட்டப் பாதையில் பன்னீர் தெளித்து மக்கள் வரவேற்பார்கள். ஆனால் நலிவுகளிலிருந்தும் மூடநம்பிக்கை களிலிருந்தும், கிழடு தட்டிப் போன மரபுகளிலிருந்தும் தீய வழக்கங்களிலிருந்தும் சமூகத்தை விடுதலை செய்வதற்காக இவற்றின்மீது கடுந்தாக்குதல் தொடுப் பவர்களின் நிலையோ இதற்கு எதிர்மறையானது. ஏனெனில் அவர்களுடைய முயற்சிகளும் செயல்பாடுகளும் சமூகத்தின் ஒட்டு மொத்த நம்பிக்கைக்கு எதிரானவையாக இருக்கின்றன. சமூகத்தில் உள்ள பெரும்பாலோர் பிற்போக்காளர்களாகவும் தாங்கள் மிகவும் மதித்துப் போற்றும் பழைய மரபுகளையும் வழக்கங்களையும் கைவிட விரும்பாதவர்களாகவும் இருக்கின்றனர்.

விலங்கினும் கீழாய் வாழுமாறு அழுத்திவைக்கப்பட்டிருந்த கோடிக்கணக்கான ஊமை மக்களின் உள்ளங்களில் ஊறிவிட்டிருந்த தன்னம்பிக்கையற்ற மனநிலையை அம்பேத்கர் விரட்டியடித்தார். உலக வரலாற்றில் கண்ட சுதந்திரம்பற்றிய விதியை அவர்களுக்குக் கற்பித்தார். உரிமையை எவரும் அன்பளிப்பாகப் பெறமுடியாது; போராடித்தான் அதைப் பெறமுடியும். தன்னிலை உயர்வு என்பது மற்றவர்களின் வாழ்த்துகளால் வருவதன்று. அது ஒருவருடைய போராட்டத்தின்மூலமும் செயல்களினாலும் மட்டுமே விளைவதா கும். செயலற்று உறங்கிக்கிடந்த இம்மக்கள் கோழைகளாக இருந்தனர். அவர்களுக்குத் துணிவும் விழிப்புணர்வும் கொள்கையும் தேவைப்பட்டன. மனித உரிமைகளுக்காகப் போராடுமாறு அம்பேத்கர் அவர்களுக்கு உணர்ச்சியூட்டினார். தான் செயல்படுவ தன்மூலமாக அவர்களைச் செயல்படவைத்தார். உலகில் வரலாற் றைப் படைத்த தலைவர்களின் ஆளுமைப் பண்பாக அவர்களின் வினையாண்மையே விளங்கியது. தன் செயல்கள் வழியாகத் தன் ஆற்றலை அவர் வெளிப்படுத்தினார். இம்மக்கள்பேரில் தான் கொண்ட நம்பிக்கைமூலம் தன்பால் அவர்கள் நம்பிக்கை கொள்ளச் செய்தார். அவருடைய குறிக்கோள் போராட்டங்களின் ஊடே வடிவமெடுத்து முன்னேறிச் சென்றது.

தீண்டப்படாதவர்களின் வரலாற்றில் தங்கள் வகுப்பைச் சார்ந்த ஒப்பற்ற தலைவரின்கீழ்த் தங்கள் உரிமைகளை நிலைநாட்டிட முதன்முறையாக முன்வந்தனர். தங்களின் கட்டுப்பாட்டை, ஆற்றலை, ஆர்வத்தை வெளிப்படுத்தினார்கள். மகத் நகர வீதிகளில் நடந்துசென்று சௌதார் குளத்தருகே ஊர்வலம் முடிந்தது. அம்பேத்கர் குளத்தில் படிக்கட்டில் நின்றுகொண்டிருந்தார். அறிஞருள் அறிஞராக, உலகிலுள்ள சிறந்த படிப்பாளி எனப்படும்

எவருக்கும் சமமான படிப்பாளியாக அம்பேத்கர் திகழ்ந்தார். உயர்ந்த நெறிகள்கொண்ட இந்துவான அவர் பொதுக் குடிநீர் வசதி உள்ள இடத்தில் தண்ணீர் குடிக்க முடியாதவராக, இந்துஸ்தானத்தில் பொது நூலகத்தினுள் அமர்ந்து படிக்க முடியாத வராக இருந்தார். அவர் பிறந்து வாழ்ந்த நாட்டில் அவருக்கிருந்த நிலை இது! ஆனால் இப்பொழுதோ கொடுமதியினரின் ஆண வத்தை முறியடித்தார். விலங்குகளிடமும் அன்பு காட்டுவது எங்கள் மதம் என்று பெருமையடித்துக் கொண்டவர்கள் தங்கள் சொந்த மதத்தினரையே நாயைவிட, பூனையை விட இழிவாக நடத்தினார் கள். இவர்களுடைய போலித்தனத்தை அம்பேத்கர் தோலுரித்துக் காட்டினார்.

அம்பேத்கர் சௌதார் குளத்திலிருந்து தண்ணீரைப் பருகினார். அவருக்குப் பின்னால் அணிவகுத்து நின்ற ஆயிரக்கணக்கான மக்களும் இதேபோன்று தண்ணீரைக் குடித்துத் தங்கள் உரிமையை நிறுவினார்கள். அதன்பின் அமைதியாக அனைவரும் மாநாட்டுப் பந்தலுக்குத் திரும்பினார்கள். செயல்படுவதே சிறந்தது என்கிறார் ரஸ்கின். மனிதனின் சிறப்பைத் தீர்மானிப்பது அவன் செயலே என்கிறார் கார்லைல். உரிய காலத்தில் செய்யப்படும் ஒரு செயலின் பரிமாணம் பல ஆண்டுகள் தீவிரமாகப் பொறிபறக்கப் பேசுவதை விட - பல தீர்மானங்களை நிறைவேற்றுவதைவிடப் பன்மடங்கு நன்மை விளைக்கவல்லது.

இந்த நிகழ்ச்சி நடந்து இரண்டு மணிநேரம் கழித்துத் தீய எண்ணங்கொண்ட சில சாதி இந்துக்கள் தீண்டப்படாதவர்கள் வீரேசுவரர் கோயிலுக்குள் நுழையவும் திட்டமிட்டிருக்கிறார்கள் என்ற புரளியைப் பரப்பிவிட்டனர். இதை நம்பிய கயவர் கூட்டம் கைகளில் மூங்கில் தடிகளுடன் தெருக்கோடிகளில் கூடியது. மகத் நகரின் எல்லாப் பழைமைவாதிகளின் கைகளிலும் ஆயுதங்கள்; நகரம் முழுவதிலும் காலிகளின் கூட்டம் அலை மோதியது. இந்து மதத்திற்கு ஆபத்து; கடவுளையே களங்கப் படுத்தப் பார்க்கிறார்கள் என்று அவர்கள் ஆரவாரக் கூச்சலிட்டனர். அவர்களுடைய நெஞ்சங்கள் படபடத்தன; கைகள் நடுங்கின; இழிவுபடுத்தும் இந்த அச்சுறுத்தலை எண்ணி அவர்களுடைய முகங்கள் சினத்தால் சிவந்தன. கடவுளுக்கு உகந்தவர்களான இவர்களைக் 'காஃபிர்கள்' என்று முகம்மதியர் திட்டியபோதோ, சில முகம்மதியர் இந்துக் கடவுள் சிலைகளை உடைத்தபோதோ, பசுக்களைக் கொன்ற போதோ இந்து மதம் இழிவுபடுத்தப்பட்டதாகச் சாதி இந்துக்கள் நினைக்கவில்லை. இஸ்லாமியர்கள் இக்குளத்தில் தண்ணீர்

எடுத்தனர். பைபிளுக்கு அப்பால் உள்ள மதக் கருத்துகள் யாவும் சாத்தானால் சொல்லப்பட்டவை என்று கூறுகின்ற கிறிஸ்துவர்கள் இக்குளத்தில் நீர் எடுத்தபோது, போலியான வெற்றாரவாரக் கூச்சல் இவர்களுடைய தொண்டைக் குழியிலேயே அடைபட்டுவிட்டதே அது ஏன்? ஆனால், சாதி இந்துக்கள் வணங்குகின்ற இராமனையும் கிருஷ்ணனையும் வணங்குகின்ற இவர்களுடைய சொந்த மதச் சகோதரர்களான தீண்டப்படாதவர்கள் இக்குளத்திலிருந்து தண்ணீர் எடுத்ததால், இவர்களுடைய கடவுள்கள் தீட்டாகிவிட்டன என்றும் விண்ணகத்தின் ஊழிக்கூத்தின் பேரழிவு சாதி இந்துக்களின் வீடுகளின்மேல் படர்ந்துவிட்டது என்றும் இதனால் உலகத்தாரின் பார்வையில் தாழ்ந்து இழிந்துவிட்டோம் என்றும் ஏன் இவர்கள் நினைக்கிறார்கள்?

இவ்வாறு பகுத்தறிந்து சிந்திப்பதை மகதின் பழமை போற்றும் வெறியர்கள் பாவமாகக் கருதினார்கள். வீரேசுவரர் கோயிலின் புனிதத்தன்மை கெடப்போகிறதே என்ற எண்ணத்தினாலும் தங்களுடைய மதத்திற்கு அவமானம் ஏற்பட்டுவிட்டதே என்றும் தவறாகக் கருதிக் கொதிப்படைந்த சாதி இந்துக்கள் தீண்டப்படாத வகுப்பினரின் மாநாட்டுப் பந்தலை நோக்கிப் பாய்ந்தோடினர். மாநாட்டிற்கு வந்திருந்தவர்களில் பலரும் சிறுசிறு குழுக்களாக நகரத்தில் ஆங்காங்கே சிதறிக் கிடந்தனர். சிலபேர் ஊருக்குத் திரும்பிச் செல்வதற்காக மூட்டை முடிச்சுகளைக் கட்டிக்கொண்டிருந் தனர். சில பேர் உணவருந்திக் கொண்டிருந்தனர். பெரும்பாலோர் நகரத்தைவிட்டு அவர்களுடைய ஊர்களுக்குப் பயணமாகிவிட்டிருந் தனர். இந்தப் போக்கிரிக் கும்பல் மாநாட்டுப் பந்தலில் இருந்தவர் கள்மேல் பாய்ந்தது; அவர்கள் உண்டுகொண்டிருந்த உணவை எட்டி உதைத்து மண்ணில் சிதற அடித்தது; பாத்திரங்களை நசுக்கியது. என்ன நடக்கிறது என்பதை அறியும் முன்னரே சிலரை இவர்கள் நையப்புடைத்தனர். பந்தலில் பெரும் குழப்பம். இதுவரை இந்தப் பழமைவாதிகள் தங்கள் மனச்சான்றை மட்டுந் தான் இழந்திருந்தார்கள்; இப்போது தங்கள் அறிவையும் இழந்து விட்டார்கள்.

மகத் தெருக்களில் சுற்றிக்கொண்டிருந்த மாநாட்டிற்கு வந்த ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் இந்தத் திடீர் தாக்குதலால் நிலைகுலைந்தனர். அவர்களில் தனியாக மாட்டிக்கொண்டவர்கள் தாக்கப்பட்டனர். பாதுகாப்பிற்காக முகம்மதியர் வீடுகளுக்குள் ஓடினர். இந்தப் போக்கிரிகளை அடக்கத் தவறிய உள்ளூர் மணியக்காரரும் காவல்துறை அதிகாரியும் பயணியர் விடுதியில்

தன் தோழர்களுடன் தங்கியிருந்த அம்பேத்கரை மாலை நான்கு மணிக்குச் சந்தித்தனர். மாநாட்டு வேலையாக அம்பேத்கர் இங்குதான் தங்கியிருந்தார். "அவர்களை நீங்கள் அடக்குங்கள்; நான் என் மக்களைக் கட்டுப்படுத்துவேன்" என்று அந்த அதிகாரிகளிடம் கூறிவிட்டு அவர் இரண்டு மூன்று தோழர்களுடன் மாநாட்டுப் பந்தலை நோக்கி விரைந்தார். வீதியில் ஒரு ரௌடிக் கும்பல் அம்பேத்கரைச் சூழ்ந்தது. ஆனால் அவர் அமைதியாகக் "கோயிலுக்குள் நுழையும் எண்ணமோ திட்டமோ எங்களுக்கு இல்லை" என்பதைக் கூறி அவர்களின் கொதிப்பை ஆற்றிட முயன்றார். நடந்தவற்றை எல்லாம் பார்த்துவிட்டு மீண்டும் பயணியர் மாளிகைக்குத் திரும்பினார். அந்நேரம்வரையில் இருபது பேர்களுக்குப் பலத்த காயங்கள் ஏற்பட்டிருந்தன. ஒரு மருத்துவரை அழைத்து வந்தனர். வந்த மருத்துவரோ, 'கால நேரந் தெரியாமல் ஒரு தீரச் செயலில் இறங்கினீர்களே!' என்று அவர்களைத் திட்டிக்கொண்டே புண்களுக்கு மருந்திட்டுச் சென்றார்.

அதன்பின் இந்தப் போக்கிரிகள் தெருக்களில் சுற்றிச்சுற்றித் திரிந்தனர். கண்ணெதிரில்பட்ட, ஊர்களுக்குத் திரும்பிக்கொண்டிருந்த தீண்டப்படாத வகுப்பு மக்களைத் தாக்கினர். மாநாட்டிற்கு வந்தவர்களை அவர்கள் ஊருக்குத் திரும்பியதும் அங்கே உதைக்குமாறு மகதிலிருந்து வெளியூர்களில் உள்ள சாதி இந்துக்களுக்குச் செய்தி அனுப்பப்பட்டது. இதுதான் மிகவும் கண்டிக்கத்தக்கதாகும். இதன்படி மாநாட்டிற்கு வந்த மகார்கள் ஊருக்குச் சென்ற பிறகோ அல்லது அதற்கு முன்னதாகவோ பல இடங்களில் தாக்கப்பட்டனர்.

மாநாட்டிற்கு வந்தவர்கள் இதுபோல் மிருகத்தனமாகத் தாக்கப்படும் செய்தி காட்டுத் தீபோல் பரவியது. அம்பேத்கர் பயணியர் மாளிகைக்குத் திரும்பியபோது, கிட்டத்தட்ட நூறுபேர் பழிக்குப்பழி வாங்கிட வேண்டும் என்று கண்களில் தீப்பொறி பறக்க, கைகள் துடிதுடிக்கப் பொறுமையிழந்து அம்பேத்கரின் ஆணைக்காகக் காத்துக்கொண்டிருந்தனர். ஆனால் அம்பேத்கர் பொறுமையுடனும் கட்டுப்பாட்டுடனும் இருக்குமாறு வேண்டினார். சிறிது நேரம் பேரமைதி நிலவியது. அம்பேத்கர் சினத்தைத் தூண்டும் வகையில் ஒரு சொல் சொல்லியிருந்தால் போதும். மகத் நகரில் அன்று இரத்த ஆறு ஓடியிருக்கும்; பேரழிவு ஏற்பட்டிருக்கும். நகரத்திலும் பந்தலிலும் பயணியர் மாளிகையிலும் இருந்த பிரதிநிதிகளின் எண்ணிக்கை உள்ளூர்ப் போக்கிரி களின் எண்ணிக்கையைவிட அதிகம். அதனால் அவர்களின் மண்டையை எளிதாகப் பிளந்திருப்பார்கள். முதல் உலகப் போரைப் பார்த்தவர்கள், போர்க்களத்தில்

தீரமுடன் போரிட்டவர்கள் நூற்றுக்கணக்கில் அவர்களிடையே இருந்தனர்.

இவ்வளவு இருந்தும் அம்பேத்கரின் அரிய முயற்சியால் கட்டுப்பாடு நிலைநாட்டப்பட்டது. அவர்கள் தங்களைத் தாக்கியவர் களை நேருக்கு நேர் எதிர்த்து நின்றனர்.

மகத் போராட்டம் சட்டத்திற்குட்பட்டது; வன்முறையற்றது. சட்டத்தை மீற வேண்டும் என்று அவர்கள் கனவிலும் கருத வில்லை. அதனால் பெரிய கலவரம் தவிர்க்கப்பட்டது. இரவு நேரம் ஆனதும் எல்லாப் பிரதிநிதிகளும் அவரவர் ஊர்களுக்குத் திரும்பினார்கள். அன்று மாலை முதல் பயணியர் மாளிகையை அரசு அலுவலர் ஒருவருக்காகப் பதிவு செய்யப்பட்டிருந்ததால் அம்பேத்கர் தன் தோழர் ஆனந்தராவ் சித்ரேவுடன் காவல் நிலைய அறையில் அன்றிரவைக் கழித்தார். இந்தக் கிளர்ச்சிபற்றிய தன் விசாரணையை முடித்துக்கொண்டு மார்ச்சு 23ஆம் நாள் பம்பாய்க் குத் திரும்பினார்.

கலவரமெல்லாம் அடங்கியபின்னர் காவல்துறையினர் வந்த னர்; அத்துமீறிப் பந்தலில் நுழைந்தார்கள் என்று கூறி வைதிகப் போக்கிரிகள் சிலரைக் கைதுசெய்தனர். மொத்தம் ஒன்பது வைதிக இந்துத் தலைவர்களில் அய்ந்து பேர்களுக்கு அதிக அளவில் அட்டூழியம் செய்தனர் என்று நான்கு மாதக் கடுங்காவல் தண்டனை தரப்பட்டது. 1927 சூன் 6ஆம் நாள் இத்தீர்ப்பை மாவட்ட நீதிபதி வழங்கினார். மாவட்ட அதிகாரிகள் இந்துக்கள் அல்லாதவராக இருந்ததால்தான் தீண்டப்படாதவர்களுக்கு நீதி கிடைத்தது என்று அம்பேத்கர் கூறியது பேருண்மையாகும். ‘பேஷ்வாக்கள் ஆட்சிக் காலமாக இருந்திருப்பின் என்னை யானையின் காலின்கீழ்ப் போட்டு நசுக்கிக் கொன்றிருப்பார்கள்’ என அவர் கூறினார். பேஷ்வாக்களின் ஆட்சிக் காலத்தில்தான் பூனா நகரத்திற்குள் பகற்பொழுதில் குறிப்பிட்ட சில மணி நேரத்திற்குத் தீண்டப்படாதவர்கள் நுழையக்கூடாது என்ற தடை விதிக்கப்பட்டிருந்தது. அனுமதிக்கப்படும் அந்தப் பகல் நேரத்திலும் தெருவில் நடந்துசெல்லும்போது எச்சில் துப்புவதற்காகக் கழுத்தில் மண் சட்டியைக் கட்டித் தொங்கவிட்டுக்கொண்டு போக வேண்டும்.[28]

III

மராட்டியத்தில் தீண்டப்படாத மக்கள் நடத்திய முதலாவது பெரும் பொதுமாநாடு இவ்வாறாக முடிவுற்றது. தங்கள் குடியுரிமை

களை நிலைநாட்டிட வெளிப்படையாக மேற்கொள்ளப்பட்ட முதல் முயற்சி இது! இம்மாநாடு பெரும் சிறப்பு வாய்ந்த-எழுச்சியூட்டிய நிகழ்ச்சியாகும். இந்துஸ்தானத்தின் வரலாற்றில் புதிய திருப்பு முனையாக இது அமைந்தது. இந்த மாநாடு அம்பேத்கரின் தனி வாழ்வில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியது. அத்துடன் சமூகத்தின் மற்றும் அமைப்புகளின் போக்கையே மாற்றியது. வங்காளப் பிரிவினை அறிவிப்பு, சூரத் காங்கிரஸ் மாநாட்டில் திலகரின் பங்களிப்பு, சாவர்க்கர் அயல் நாட்டுத் துணிகளை முதன்முதலில் தீயிட்டுக் கொளுத்தியது, முசாபர்பூரில் குதிராம் போஸ் வீசிய வெடிகுண்டு, 1930இல் காந்தி மேற்கொண்ட தண்டி யாத்திரை, 1943இல் சுபாஸ் சந்திரபோஸின் போர்ப் பிரகடனம் போன்ற நிகழ்ச்சிகளைப் போன்று மகத் மாநாடும் வரலாற்றில் முதன்மை பெற்றுவிட்டது.

வரலாற்று நோக்கில் பார்க்கும்போது இந்திய அரசியல் புரட்சியானாலும், சமூக மற்றும் மதப் புரட்சியானாலும் முதன் முதலில் இவை மராட்டியத்தில்தான் தோன்றின. இது குறிப்பிட்டுச் சொல்லத்தக்க சிறப்புடையதாகும்.

ஒடுக்கப்பட்டு விலங்கினும் இழிவாய் நடத்தப்பட்ட கோடிக்க ணக்கான இந்த ஊமை மக்கள் தங்களுடைய காவலரான அம்பேத்கர் தலைமையில் இந்திய வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்கினார்கள். அவர்களுடைய நெடுங் காலத் துன்பத்தை உலகறிய உரத்த குரலில் வெளிப்படுத்தினர். இத் துன்பத்தைத் துடைத்தெறிய பேராற்றலுடன் வந்தனர். சரியான புரிதலுடன் துணிந்து பகைமுகத்தை எதிர்த்து நின்றனர். அவர்களு டைய இன்றைய வாழ்வையும் எதிர்கால வாழ்வையும் தளைப்படுத் தியிருந்த இழிவுகளையும் இயலாமைகளையும் உதறித் தள்ளினர்.

கற்றறிந்த அவர்களுடைய தலைவர்கள் தொடக்கிவைத்த இப்போராட்டம், அவர்களுடைய உள்ளங்களைப் பற்றி ஈர்த்தது. சுயமரியாதை உணர்வையும் தன்னைத் தானே உயர்த்திக் கொள்ளவேண்டும் என்ற எண்ணத்தையும் தூண்டிக் கொழுந்து விட்டு எரியச்செய்தது.

மகதில் இழைக்கப்பட்ட இழிவினாலும் அவமானத்தினாலும் அவர்கள் கொதிப்புற்றிருந்தனர். முன்பு எப்பொழுதும் மேற்கொள் ளப்பட்டிராத அளவில் சுய முயற்சியில் முன்னேறுவது, தன் முயற்சியால் பண்பாட்டை உயர்த்திக் கொள்வதுபற்றி அவர்கள்

ஆழ்ந்து சிந்தித்தனர். மகத் மாநாட்டின் விளைவாக, தீண்டப்படாத வர்கள் இறந்த விலங்குகளின் இறைச்சியைத் தின்பதையும், செத்த மாடுகளின் தோலை உரிப்பதையும், வீசி எறியப்படும் மீந்த உணவுக்காகக் காத்துக் கிடப்பதையும் கைவிட்டனர்.

அமைப்பு ரீதியாக ஒன்று திரளுவது, தீவிரமாகப் போராடுவது ஆகியவற்றின் முதன்மையை உணர்ந்தனர். இவர்கள் கோரிக்கை யின் நியாயத்தையும் பொதுக் குடிநீர்க் குளத்தில் நீர் எடுக்கும் உரிமையையும் சில இந்துக்கள் ஆதரித்தபோதிலும், பொதுக் குடிநீர்க் குளத்தை இவர்கள் பயன்படுத்துவது சட்டப்படி தவறன்று என்பதையும் இவர்களுடைய இந்த உரிமையை எதிர்ப்பவர்களை அரசு தண்டிக்கும் என்பதையும் இப்போது நன்கு அறிந்திருந்தார் கள். இவ்வாறாக மகத் போராட்டம் தீண்டப்படாத வகுப்பு மக்களின் முன்னேற்றத்தை அய்ம்பது ஆண்டுகள் முன்னோக்கி எடுத்துச்சென்றது.

அம்பேத்கர் பம்பாய்க்குத் திரும்பியபோது அவருடைய குடும்பத்தினர் மிகவும் மனங்கலங்கிப் போயிருப்பதைக் கண்டார். அவருடைய அண்ணன் அரைக் குடிமயக்கத்தில் இருந்த நிலையி லும், அன்பின் காரணமாக, அம்பேத்கருடைய செயல் களைக் குறை கூறினார். அவருடைய வழக்கறிஞர் தொழிலில் நாட்டம் செலுத்துமாறும், சவுதார் குளப்போராட்டம் போன்ற சமூகப் பணிகள் காரணமாக ஆபத்தான மோதல்களை உருவாக்கக்கூடிய பணிகளில் ஈடுபட வேண்டாம் என்றும் அம்பேத்கரை எச்சரித்தார். அம்பேத்கரின் சாதி இந்து நண்பர்களைப்பற்றிக் கடிந்து பேசினார். அவருடைய அண்ணன் மூன் சில சொற்களை மட்டுமே முணுமுணுத்தார். அவர் சென்ற பிறகு தனக்கு எது நல்லது என்றும் தன் சமூகத்திற்கு எது நன்மை தரும் என்றும் தனக்கு நன்கு தெரியும் எனக் குடும்பத்தாரிடம் கூறினார். ஆனால், இதனால் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தவர் அம்பேத்கரின் மனைவி தான். இரண்டு நாட்களாகக் கண்ணையும் இமைக்காமல் தூங்காமல் படுக்கையில் பெருமூச்செறிந்தவாறே தவித்துக்கொண்டிருந்தார். பம்பாய்க்குத் திரும்பிவந்த அம்பேத்கரைக் கண்ட பிறகுதான் மன ஆறுதலடைந்தார்; கடவுளுக்கு நன்றி தெரிவித்துப் பூசை செய்தார்.

புண்படுத்தப்பட்டுவிட்டதாகக் கருதிக்கொண்ட இந்துமதப் பழமை விரும்பிகள் சாதி விலக்கக் கொடுமையை மேலும் கூர்மைப்படுத்தினர். பழமையிலும் பிற்போக்குத்தனத்திலும் மூழ்கித்

திளைத்த மூடர்களும் கண்மூடித்தனமான மத வெறியர்களும் தீண்டப்படாதவர்களை ஊர்க்காவல் வேலைக்கு வரவிடாமல் தடுத்தனர்; தங்கள் நிலங்களிலிருந்து அவர்களை வெளியேற்றினர். உணவுத் தானியங்களை அவர்களுக்கு விற்க மறுத்தனர். ஏதாவதொரு பொய்யான காரணத்தின் பேரால் தீண்டப்படாதவர்களுடன் வம்புச் சண்டையிழுத்தனர்; அவர்கள் மீது வழக்கு தொடுத்துப் பலரைச் சிறைக்கு அனுப்பினர். மகத் நகரின் மதவெறி பிடித்த சாதி இந்துக்களின் வெட்கக்கேடான மனிதத்தன்மையற்ற அட்டூழியத்தை எதிர்த்து இந்துஸ்தானம் முழுவதும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. இந்தியா முழுவதும் இது முதன்மையான செய்தியாயிற்று.

நாடெங்கிலும் கடுமையான விவாதத்தை இது தூண்டிவிட்டது. மத வெறியர்களின்-பிற்போக்காளர்களின் உள்ளங்களில் இது கடும் வெறுப்பை ஏற்படுத்தியது. மராட்டியப் பத்திரிக்கை உலகம் இரண்டு அணிகளாகப் பிரிந்து நின்றது. தீண்டப்படாத மக்களின் துணிச்சலான இந்தப் போராட்டத்தைச் சிலர் கண்டித்தனர்; சிலர் சட்டத்தினுள் பதுங்கிக்கொண்டு பிதற்றினர். மாநாட்டின் முடிவில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் விரும்பத்தகாதவை என்று கூறிச் சிலர் முதலைக் கண்ணீர் வடித்தனர். இவர்கள் எதிர்ப்பு அணியினர். தங்கள் உரிமையை நிலைநாட்டிக்கொள்ள இந்துத் தீண்டப்படாத மக்கள் மேற்கொண்ட துணிச்சலான இந்தப் போராட்டத்தைச் சிலர் பாராட்டினார்கள். பொதுக்கூட்டங்கள் நடைபெற்றன. அக்கூட்டங்களில் பேசியவர்கள் இந்திய அரசு உடனடியாக இதில் தலையிட வேண்டும் என்று கோரினர். மகதின் வைதிக இந்துக்களின், மதப் பழமையாளர்களின் செயல்கள் வெட்கக்கேடானவை என்று கண்டித்தனர். ஒடுக்கப்பட்ட மக்களையும், அவர்களின் தலைவர் அம்பேத்கரையும் பாராட்டிப் பேசினர்.

போலேயின் தீர்மானத்தை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும், இதற்கு முரணாகச் சட்டத்தை மீறுகிற தறுதலைகளைத் தண்டிக்க வேண்டும் என்றும் மராட்டிய அரசைக் கேட்டுக்கொண்டனர்.

இதுபோன்ற பொதுக்கூட்டங்கள் பம்பாய் நகரிலும் கிராமங்களிலும் வட்டத் தலைநகரங்களிலும் பெருநகரங்களிலும் நடைபெற்றன. பூனா நகரத்தில் நடைபெற்ற ஒரு கண்டனக் கூட்டத்தில் எல்.பி. போபாத்கர் பேசும்போது, 'என் வாழ்நாளிலேயே இதற்கு

ஒரு விடிவு ஏற்படும். அப்போது இந்த மண்ணிலிருந்தே தீண்டாமை மறைந்துவிட்டிருக்கும்; தீண்டாமை ஒரு பழைய வரலாற்றுச் செய்தியாக மாறிவிடும்!'' என்று குறிப்பிட்டார்.

முழு மனத்துடனும் அஞ்சாமலும் அம்பேத்கரின் போராட்டத்தை ஆதரித்த தலைவர் சாவர்க்கர்தான். தீண்டாமை கண்டிக்கப் படவேண்டியதும் ஒழிக்கப்பட வேண்டியதும் ஆகும் என்று அவர் வலியுறுத்தினார். இவ்வாறு செய்ய வேண்டியது காலத்தின் தேவை கருதி மட்டுமன்று; இதுதான் உண்மையான மதக் கட்டளையாக வும் இருக்கிறது. இது ஒரு கொள்கையாக-இன்றியமையாத செயலாக இருப்பதுடன் இது ஒரு சமூக நீதியாகவும் இருக்கிறது. இதை ஒருவகை உதவி என்று மட்டும் கருதாமல் மனித நேயத் தொண்டு என்றும் எண்ணிச் செய்திட வேண்டும். இவ்வாறு சாவர்க்கர் கருத்துரைத்தார். ஒரு மனிதனைத் தொடுவதால் புனிதம் கெட்டு விடுகிறது என்பதைவிட, பசுவின் மூத்திரத்தால் ஒருவன் தீட்டிலிருந்து புனிதமடைகிறான் என்பது அருவறுப்பானதும் கண்டிக்கத்தக்கதும் ஆகும். ஆதலால் மகதில் தீண்டப்படாதவர்கள் நடத்திய சத்தியாக்கிரகம் சரியானதே என்றும், தம் மதத்தைச் சேர்ந்த சொந்த சகோதரர்களுக்குரிய மனித உரிமைகளை முழுமை யாக மீண்டும் தரவேண்டியது நல்ல சமய உணர்வுள்ள இந்துக்களின் நீங்காக் கடமையாகும் என்றும் சாவர்க்கர் மேலும் கூறினார்.

தீண்டப்படாதவர்கள் தண்ணீரைத் தொட்டதால் தூய்மை கெட்டுவிட்டது என்ற சௌதார் குளத்தின் நிலை என்னவாயிற்று? இந்துப் பிற்போக்காளர்களும் பழமைக் காப்பாளர்களும் வீரேசுவரர் கோயிலில் ஒரு கூட்டத்தைக் கூட்டினர். தீட்டுப்பட்டுவிட்ட சௌதார் குளத்தினை மீண்டும் புனிதப்படுத்துவது எப்படி என்று கலந்து பேசினார்கள். இவ்வுலகில் எந்த ஒரு மோசமானதையும் தீட்டுப்பட்டுவிட்டதையும் புனிதமாக ஆக்கிடக் கழுவாய் தேடும் வழி அவர்களுக்கு இருந்தது. பசுவின் சாணம், மூத்திரம், தயிர், தண்ணீர் ஆகியவற்றின் கலவையைக் கொண்டு எல்லா வகையான தீட்டுகளையும் கழுவிட முடியும் என்று அவர்கள் கருதினார்கள். அதன்படி 108 குடங்களில் அக்குளத்திலிருந்து தண்ணீர் எடுத்தனர். அந்தப் பானைகளில் தயிர், பசுவின் சாணம், பசுவின் மூத்திரம், பால் ஆகியவற்றைக் கரைத்தபின், தேர்ந்தெடுக்கப்பட்ட பார்ப்ப னப் புரோகிதர்களின் காதைத் துளைக்கும் மந்திரக் கூச்சல்களுக்கி டையே அப்பானைகளில் இருந்த கலவைகளைக் குளத்தில்

ஊற்றினார்கள். அதன்பின் அக்குளம் புனிதமடைந்து விட்டதாக அறிவிக்கப்பட்டது. சாதி இந்துக்கள் இனி இதைப் பயன்படுத்த லாம் என்றும் அறிவிக்கப்பட்டது. ஆனால் முகம்மதியர்களுக்கும், கிறித்தவர்களுக்கும் இந்தப் புனிதப்படுத்தலுக்கும் தொடர்பே இல்லை. ஏனெனில் மனிதன் தொடுவதால் தண்ணீரின் புனிதம் கெடுவதில்லை என்று அவர்கள் கருதினார்கள். எப்பொழுதும்போல் தொடர்ந்து அவர்கள் மட்டும் அக்குளத்து நீரைப் பயன்படுத்தி வந்தார்கள்.

தீண்டப்படாதவர்களின் இந்தக் கோரிக்கையை மகதில் இருந்த ஒவ்வொரு சாதி இந்துவும் எதிர்த்தனர் என்று இதனால் கூறிட முடியாது. பாபுராவ் ஜோஷி போன்ற இந்துத் தலைவர்கள் ஒடுக்கப்பட்டவர்களுக்குத் தீவிர ஆதரவு காட்டியதற்காகப் பல ஆண்டுகள் மதவெறி பிடித்த இந்துக்களின் பகைக்கு ஆளாக நேரிட்டது. மதவெறிப் பிற்போக்காளர்களின் நெறி பிறழ்ந்த போக்கினைக் கண்டு சிலபேர் இதைத் தடுக்க இயலாமல் தமக்குள் மனம் குமுறி வருந்தினர். இவ்வாறு மாறுபட்ட கருத்துகள் வெளிப்படுத்தப்பட்ட போதிலும் இவற்றால் பயன் ஏதும் விளையவில்லை. பழைமை போற்றும் ஒரு இந்து, மனித இனத்தில் புதிரான - இறுகிப்போன - தொன்மையான புதைவடிவம் போன்றவன் ஆவான். அவனுக்குக் குருட்டுத்தனமான-அறிவுக்குப் பொருந்தாத மரபுதான் உண்மையைவிட மிகச் சிறந்ததாகத் தென்படும். காலத்தின் வளர்ச்சியும் போக்கும் அவன் உள்ளத்தில் எத்தகைய தாக்கத்தையும் ஏற்படுத்துவதில்லை.

IV

பல திசைகளிலிருந்தும் வெளிப்பட்ட விமர்சனங்களை அம்பேத்கர் சந்திக்க வேண்டியிருந்தது. எனவே தனக்கென ஒரு பத்திரிக்கை இருக்க வேண்டியதன் தேவையை மிகவும் உணர்ந்தார். சரியான கண்ணோட்டத்தையும் கொள்கையையும் முன் வைக்க வும், கட்சியின் முறையீடுகளையும் கோரிக்கைகளையும் வெளிப் படுத்தவும் இக்காலத்தில் தகுதிசான்ற ஒரு தலைவருக்கு ஒரு பத்திரிக்கை கட்டாயத் தேவையாயிற்று. இறக்கைகள் இல்லாத பறவை போன்றதாகும் - பத்திரிக்கை இல்லாத ஓர் தலைவரின் நிலை! ஆகவே பம்பாயில் 1927 ஏப்ரல் 3ஆம் நாள் மராத்தி மொழியில் மாதம் இருமுறை வெளியீடாகப் பகிஷ்கிரித் பாரத் (Bahishkrit Bharat) என்ற பத்திரிக்கையைத் தொடங்கினார். மக்கள் நலனுக்காக ஒருவர் பத்திரிக்கை நடத்த வேண்டுமானால்,

அவருடைய சொந்த வாழ்க்கைக்கான வருவாய்க்குச் சுதந்திரமான ஒரு தொழிலைச் செய்பவராக விளங்க வேண்டும் என்று கருதினார். இதனால்தான் வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்டதாகப் பத்திரிக்கை தொடங்கப்பட்டதன் நோக்கத்தினை விளக்கி எழுதும் போது குறிப்பிட்டுள்ளார். தனக்கெனச் சுதந்திரமான பொருள் வருவாய் இருந்தால்தான் பொதுத்தொண்டு செய்வதற்கான வாய்ப்பு அதிகரிக்கும் என்பதை நெடுநாட்களுக்கு முன்பே உணர்ந்திருந்தார். அக்காலத்தில் உண்மையிலேயே பத்திரிக்கை நிறுவனங்களின் நிதிநிலை சரியில்லாமல் இருந்தது. இன்றைய நிலைமை அவ்வாறு இல்லை.

தீண்டப்படாதவர்களுக்கென்று செய்தி ஏடு இருக்க வேண்டிய தன் இன்றியமையாமையை வலியுறுத்தியபோது, அம்பேத்கர், 1930இல் நடைமுறைக்கு வரப்போகிற அரசியல் சீர்திருத்தச் சட்டங்களில் தீண்டப்படாதவர்கள் தங்கள் மக்கள்தொகை விகிதாச் சாரத்திற்கு ஏற்பப் பிரதிநிதித்துவம் பெறத் தவறிவிட்டால் அத்தோடு அவர்களின் எதிர்காலம் இருண்டு போய்விடும் என்று எச்சரிக்கை விடுத்தார். இல்லாவிடில், மாண்ட்டேகு-செம்ஸ் போர்டு சீர்திருத்தங் களினால் ஏற்கனவே கிடைத்திருந்த நிலையைவிட இன்னும் மோசமான நிலை ஏற்பட்டு விடும் என்று மேலும் எச்சரித்தார். இவ்வாறு நிகழ்வதைத் தடுத்திட, தீண்டப்படாத வகுப்பு மக்கள், இந்நாட்டில் நடக்கும் நிகழ்ச்சிகள் பற்றி நன்கு அறிந்திருக்க வேண்டும். மேலும் அவர்களுக்குள்ள குறைகளையும், கருத்துக ளையும் உணர்வுகளையும் அரசின் முன் வைக்க வேண்டும்; மக்களின் கவனத்துக்கும் கொண்டுசெல்ல வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

தன் புதிய பத்திரிக்கை மூலமாக அம்பேத்கர் தன் கருத்துகளை விளக்கியும், நோக்கங்களை வரையறுத்தும், அவருடைய இயக்கத் தைப் பற்றி மற்றவர்களின் விமரிசனங்களுக்குப் பதிலளித்தும் எழுதத் தொடங்கினார். தீண்டப்பட்டாதவர்களும் இந்துக்களே. ஆகவே கோயில்களும் பொதுக் குடிநீர் நிலைகளும் அவர்களுக்குத் திறந்து விடப்பட வேண்டும் எனக் கோரினார். சுருக்கமான உணர்ச்சிகரமான அச்சமற்ற ஆசிரியவுரைகளை அடுத்தடுத்து எழுதினார். போலேயின் தீர் மானத்தை நடைமுறைப்படுத்துமாறு அவற்றில் வலியுறுத்தினார். உள்ளாட்சிகள் போலேயின் தீர்மா னத்தை நடைமுறைப்படுத்தும் என்று நம்பி வாளா விருக்க முடியாது. ஏனெனில் தீண்டப்படாத வகுப்பு மக்களின் நலனுக்கு எதிரான, பிற்போக்குத்தனமான, மதவெறி கொண்ட, பழைய

மரபுகளைப் போற்றுகின்ற குறுகிய மனம் படைத்தவர்களே உள்ளாட்சிகளில் ஆதிக்கம் செய்துகொண்டிருக்கின்றனர் என்பதை அவர் விளக்கினார். இத்தீர்மானத்திற்கு எதிராகத் தவறு செய்பவர்களையும், இதை மீறுவோரையும் அரசு தண்டிக்க வேண்டும் என்று பத்திரிக்கை வாயிலாக அரசைக் கேட்டுக் கொண்டார்.

தீண்டப்படாதவர்கள் செத்த விலங்குகளின் இறைச்சியையும் மாட்டுக் கறியையும் தின்பதால்தான் அவர்களுக்குச் சமூக உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன என்று சிலபேர் வாதிட்டனர். அவ்வாறாயின் புலாலையே தொட்டும் பார்க்காத சில பிரிவினரையும் தீண்டப்படாதவர்களாக ஆக்கியிருப்பது ஏன்? மாட்டிறைச்சி உண்ணும் முகம்மதியரும் கிறித்துவரும் தொட்டுக் கொள்ளக் கூடியவர்களாக இருப்பது எவ்வாறு? என்று அம்பேத்கர் கேட்டார்.

குளம் என்பது பொதுச்சொத்து அல்ல என்று சிலர் கூறினார்கள். பொதுமக்களின் பயன்பாட்டிற்கு என்று இருக்கின்ற எதுவும்-அரசினாலோ, அரசு சார்ந்த மற்ற நிறுவனங்களாலோ நடத்தப்படுகின்ற, கட்டுப்படுத்தப்படுகின்ற எதுவும் பொதுச்சொத்துதான் என்று அவர்கள் முகத்தில் அறைந்தாற்போல் பதி லிறுத்தார். இவை சில பிரிவினரால் மட்டும் பயன்படுத்தப்படுகிறதா என்பதைக் கருத்தில்கொள்ள வேண்டியதில்லை என்றார். சில பேர் தீண்டப்படாதவர்களின் உரிமைகளைத் தம் கால்களின் கீழ்ப் போட்டு நசுக்கிப் பொசுக்கிக்கொண்டே, சனநாயகத்தின் பெயரால், மக்களின் எண்ணங்களுக்கு ஏற்ப அரசை நடத்த வேண்டும் என்று பிரிட்டிஷ் அரசிடம் கேட்கிறார்கள். இவ்வாறு கேட்பவர்களைப் பார்த்து, 'நீதி', 'சனநாயகம்' என்கிற கொள்கைகள் உங்கள் வாய்ப் பேச்சோடு சரிதானா என்று கேட்டார்.

சில இந்துக்கள் தங்களின் கோழைத்தனத்தை மிகவும் கெட்டிக்காரத்தனமாக மறைத்துக்கொண்டார்கள். மக்கள் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்க இன்னும் தயாராகவில்லை என்ற காரணத்தைக் காட்டி, தீண்டப்படாத மக்களுக்குரிய நீதியை வழங்கிட இவர்கள் தவறி விட்டார்கள். இவர்களுடைய வாதத்தை அம்பேத்கர் மிகமிக எளிமையாக முறியடித்தார். பெரும்பான்மை மக்கள் தயாராகவோ தகுதியுடனோ இல்லாதிருக்கும் நிலையில் இந்த நாட்டிற்கு அரசியல் சுதந்திரம் வேண்டும் என்று எப்படி நீங்கள் கேட்கிறீர்கள்? நாட்டு விடுதலைபற்றி நூற்றில் ஒருவருக்குக் கூடப்புரியாதே! அப்படி இருந்தும் திலகர் இந்தியர்களுடைய விடுதலைக்காகப் போராடினாரே!

தீண்டப்படாதவர்களைத் தீவிரவாதக் கொள்கையினராக மாற்றி விட்டாரே என்று அம்பேத்கரைச் சாதி இந்துக்கள் கண்டித்தனர். தீண்டப்படாதவர்களுடைய சமூக உரிமைகளையும் சுயமரியாதையையும் மதக் கொடுமையின்மூலம் நாள் தோறும் நசுக்கிக் கொண்டிருக்கிறபோது அம்பேத்கர் வேறு என்ன செய்ய முடியும்? திலகர் தீண்டப்படாத வகுப்பில் பிறந்திருப்பாரானால் 'சுயராச்சியம் எனது பிறப்புரிமை' என்று கூறி இருக்கமாட்டார்; அதற்குப் பதிலாக, ''தீண்டாமையை ஒழிப்பதே என் பிறப்புரிமை!'' என்று முழங்கியிருப்பார்.[29] அம்பேத்கர் திலகரைப்பற்றி இவ்வாறு கணித்தது முற்றிலும் சரியானதே. திலகர் தீண்டப்படாத வகுப்பில் பிறந்திருப்பாரானால் அவருடைய உள்ள உரன், எரிமலை போன்று கொதித்தெழும் ஆற்றல், அஞ்சா நெஞ்சுரம், எல்லையற்ற சுயமரியாதை உணர்ச்சி ஆகிய அனைத்தையும் பழைமைவாதிகளின் கோட்டைகளைத் தகர்த்திட வெடிகுண்டாகப் பயன்படுத்தியிருப்பார். இந்நிலையில் திலகர் அரசியலில் புரட்சிகர இளைஞர்களை உருவாக்கி ஊக்குவித்ததுபோல் தீண்டாமைத் தடைகளைத் தகர்த்தெறியக் கூடிய சமூகப் புரட்சிக்கான இளைஞர்களைப் பேணிக்காத்து வளர்த்திருப்பார் என்பது உறுதி.

தென்னாப்பிரிக்காவில் இந்தியர்களும், இங்கிலாந்தில் இந்திய மாணவர்களும் இழிவாக நடத்தப்படுவதுபற்றி இங்கே சில பேர் கடுமையாகக் கண்டனம் தெரிவிக்கின்றனர். ஆனால் அதே நேரத்தில் இந்தியாவில் இருக்கின்ற அவர்களுடைய சொந்த நாட்டு மக்களுக்கு-சொந்தமதச் சகோதரர்களுக்கு மானிட உரிமைகளைத் தர மறுக்கின்றனர். அவர்களுடைய இந்த இரட்டை வேடப் போக்கினை-வெட்கங்கெட்ட தன்னலத் தன்மையை அம்பலப் படுத்தி அவர்களை எள்ளி நகையாடினார்.

தீண்டாமையை ஒழிக்க விரும்புகின்ற தலைவர்களுக்கும் பொதுமக்களுக்கும் இறுதியாக அழுத்தமானதோர் வேண்டுகோளை முன்வைத்தார் அம்பேத்கர். 'உங்கள் இரக்க உணர்ச்சிக்குச் செயல் வடிவம் கொடுங்கள்; சீர்திருத்தத்தை அன்றாட வாழ்வில் நடைமுறைப்படுத்துங்கள். இந்த அநீதி பல நூற்றாண்டுகளாக இழைக்கப் பட்டு வருவதால் இதை இன்னும் சிறிது காலத்திற்குப் பொறுத்துக் கொள்ள வேண்டும் என்பது மாபெரும் கொடுமையாகும். குகைகளில் வாழ்ந்த காட்டுமிராண்டி மனிதன்தான் தன் பாவங் களுக்கு இதுபோன்ற விளக்கம் கூறுவான்' என்று கூறினார். அறிவார்ந்த மனிதர்கள் தாங்கள் கொண்டுள்ள கருத்துகளையும்,

மேற்கொள்ளுகிற உறுதிப்பாடு களையும் செயல் வடிவில் நடத்திக் காட்ட வேண்டும் என மனதார வேண்டிக் கொண்டார்.

சமூகப் புரட்சியாளரான அம்பேத்கர் தீண்டாமை ஒழிப்பு என்பது கல்வி வளர்ச்சி, பகுத்தறிவுச் சிந்தனை வளர்ச்சி ஆகியவற்றைச் சார்ந்திருக்கிறது என்பதைவிட மேல் சாதிக்காரர்க ளின் புரிந்துகொள்ள முடியாத சிந்தனைப் போக்கு, தன்னல உணர்ச்சி, தனி உரிமைகளை அனுபவித்தல் ஆகியவற்றை விட்டொழிப்பதைப் பொறுத்திருக்கிறது என்று கருதினார். தீண் டாமை யைக் கடைப்பிடிப்பது என்பது நாக்கின் மேல் நெருப்புத் துண்டுகளை வைத்துக்கொண்டு உயிர் வாழ்வது போன்று ஆபத்தானது என்பதைச் சாதி இந்துக்கள் உணருகின்ற வகையில் தீவிரமான முறையில் செயல்படுங்கள் என்று தீண்டப்படாத மக்களை அவர் கேட்டுக்கொண்டார். மாநாடுகளில் விடுக்கப்படும் வேண்டுதல்களையோ, நிறைவேற்றப்படும் தீர்மானங்களையோ சாதி இந்துக்கள் புரிந்துகொள்ளமாட்டார்கள். உங்களைத் தீண்டப் படாதவர்களாக நடத்துவது அவர்களின் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் என்ற நிலை ஏற்பட்டால்தான் அவர்கள் செய்த தவறுகளின் கொடுமையை அறிவார்கள். இந்துக்களுக்கும் முகம்மதி யருக்கும் இடையே நடைபெறும் போராட்டத்தை நினைவில்கொள் ளுங்கள் எனக் கோரினார். இவர்களிடையேயான போராட்டம் கலாச்சார முதன்மையைப் பெறுவதற்கான போராட்டம் ஆகும். ஆட்சி அதிகாரத்தைத் தீர்மானிக்கிற ஆற்றல் உங்கள் கைகளில் உள்ளது. ஆகவே உங்கள் சக்தியை உங்களுக்கு ஆக்கம் தரும் வகையில் பயன்படுத்துங்கள்; உங்களுடைய சமூக, அரசியல் உரிமை களின் முன்னேற்றத்திற்காகவே பயன்படுத்துங்கள் என்று கூறினார்.

'பணிவாக வேண்டுதல் மூலமோ, உரிமைகளைப் பறித்தவர் களின் மனம் நெகிழ வேண்டும் எனக் கோருவதாலோ நாம் இழந்த உரிமைகளை என்றும் பெறமுடியாது; இடையறாத போராட்டங்களின் மூலம்தான் உரிமைகளைப் பெறமுடியும்'.

'ஆடுகளைத்தான் பலியிடுகிறார்கள்; சிங்கங்களை அல்ல' என்று முடிவாக முழங்கினார்.

V

பம்பாய் மாகாணப் புதிய சட்டசபைக் கூட்டம் 1927 பிப்ரவரி 18இல் தொடங்கியது. தீண்டப்படாத வகுப்பினரின் பிரதிநிதிகளாக

நியமனம் பெற்ற டாக்டர் அம்பேத்கரும், டாக்டர் சோலங்கியும் இச்சபையில் இருந்தனர். பம்பாய் மாகாணச் சட்டசபையில் 1927 பிப்ரவரி 27ஆம் நாள் அம்பேத்கர் வரவுசெலவுத் திட்டத்தின்மீது தன் கன்னிப்பேச்சை நிகழ்த்தினார். இந்த வரவுசெலவுத் திட்டத்தைப்பற்றிப் பயனுள்ள வகையில் திறனாய்வு செய்வதற்கே இடமில்லை என எடுத்த எடுப்பிலேயே கூறினார். ஏனெனில் மாகாணத்தின் மொத்த வருவாயான 15.5 கோடி ரூபாயில் 9.5 கோடி ரூபாய்க்குச் சட்டசபையின் ஒப்புதல் பெறாமலேயே நிர்வாகத்துறையே வரியாக விதித்துவிட்டது. வருவாய் பெறுவதற்கெனக் குறிப் பிடப்பட்டுள்ள வழிவகைகள் நம்பிக்கை அளிப்பவையாக இருக்க வேண்டும். வரவுசெலவுத் திட்டத்தின் இன்றியமையாத கூறு இதுவாகும். வரி கட்டுபவரின் கண்ணோட்டத்தில் இந்த வரவுசெலவுத் திட்டம் சமநிலை அற்றதாகவும் வரவேற்க முடியாததாகவும் ஆதரிக்க முடியாததாகவும் இருக்கிறது எனக் குறிப்பிட்டார்.

நிலவரி விதிப்பிற்கும் வருமான வரி விதிப்பதற்கும் இடையேயுள்ள வேறுபாடு ஏழை விவசாயியின் நிலையை எவ்வாறு இன்னும் மோசமானதாக்கிவிட்டது என்று அம்பேத்கர் விளக்கினார். ஒரு ஏக்கர் நிலம் உடையவரும், பெருநில உடைமைக்காரரும், ஜாகீர்தாரும், இனாம்தாரரும் ஒரே அளவுகோலின் அடிப்படையில் தான் நிலவரி செலுத்தினார்கள். பயிர் விளைச்சல் தராமல் நடுவிலேயே பாழாகிவிட்டாலும் அல்லது நல்ல மகசூலைத் தந்தாலும் நிலவரி விதிப்பு அளவுகோலின் அடிப்படையில் வேறுபாடு இல்லை. நிலவரியின் அடிப்படையானது நிலப்பரப்பின் விகிதாச்சாரத்தின் அடிப்படையில் இருக்க வேண்டும்; அது ஒரே அளவுகோல் அடிப்படையில் இருக்கக்கூடாது என்றார். வருமான வரியைப் பொறுத்தமட்டில், நடப்பு ஆண்டில் ஒருவருக்கு வருவாய் இல்லை என்றால் அவர் வரி கட்டவேண்டியதில்லை என்ற நிலைமை இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட அளவிற்குக் குறைவாக வருவாய் உள்ளவர்களுக்கு வருமான வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் நிலவரியைப் பொறுத்த அளவிலோ பெருநில உடைமைக்காரராக இருந்தாலும் சிறுநில உடைமைக்காரராக இருந்தாலும் இரக்கமின்றி ஒரேவிகிதத்தில் நிலத் தீர்வை வசூலிக்கப்படுகிறது என்பதை விளக்கினார்.

மதுவிலக்கைப்பற்றிப் பேசும்போது 'தலைவர் அவர்களே! மதுவிலக்குக் கொள்கையை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. இது

நல்ல பயனளிக்க வேண்டுமென்பதற்காகச் சில நடைமுறைகளை மேற்கொள்வது என்று அரசு முடிவுசெய்தது; ஆனால் எதையும் இன்னும் நடைமுறைப்படுத்தவில்லை. முதல் கட்டமாக மது விற்பனையில் பங்கீட்டு முறையைக் கொண்டு வரவேண்டும்' என்று கூறினார். குடிப் பழக்கத்திலிருந்து மக்களை மீட்பதற்காக மருத்துவ வசதியையும் கட்டாயக் கல்வியையும் வாழ்க்கைக்குத் தேவையான மற்ற வசதிகளையும் அரசு வழங்கும் என்று தான் நம்புவதாகத் தன் பேச்சின் முடிவில் அம்பேத்கர் குறிப்பிட்டார்.

இதுதான் அம்பேத்கரின் முதலாவது உரை ஆகும். ஆயினும் விளக்கமாகவும் உள்ளத்தைத் தூண்டுமாறும் மனத்தில் பதியும் தன்மையிலும், அந்த உரை அமைந்திருந்தது. அந்த உரை அம்பேத்கரின் இளகிய உள்ளத்தை, அச்சமில்லாமல் வாதிடும் திறனை, ஆழ்ந்த படிப்பறிவைப் புலப்படுத்தியது. ஒடுக்கப்பட்ட ஊமை மக்களின் தகுதி சான்ற தலைவர் இவர் என்பதை அது உறுதிசெய்தது.

மார்ச்சு 10ஆம் நாள் சட்டசபையில் அரசின் மதுவிலக்குக் கொள்கையைப்பற்றி மீண்டும் அம்பேத்கர் பேசினார். நாட்டுச் சாராயத்தின்மீது அதிக வரி விதித்திருப்பதால்தான் கள்ளச்சாராயம் காய்ச்சுவது அதிகமாகிவிட்டது என்றார். மது விலக்கை நடைமுறைப்படுத்தவேண்டும் என்பதில் ஆழ்ந்த ஈடுபாடுகொண்டிருந்த அம்பேத்கர் 1952இல் அவருடைய தேர்தல் அறிக்கையில் இதைப்பற்றி அழுத்தந் திருத்தமாகக் குறிப்பிடவில்லையே, ஏன்? இது ஆய்வுக்குரிய முரணான செய்தியாகும். அளவு கடந்து பெருகிவிட்ட கள்ளச் சாராயம், மதுவிலக்கைத் திறமையாக அமல்படுத்த முடியாததால் மிகவும் பாதிப்புக்குள்ளான அரசின் நிதி நிலைமை, அதனால் மக்களின் வரிச்சுமை மேலும் அதிக மாகுமே என்ற கவலை ஆகியவற்றின் காரணத்தால் மதுவிலக்குக் கொள்கையை ஏற்பவராயிருந்தும் அவர் எதிரான நிலைபாட்டை எடுக்க நேரிட்டதோ! இது விவாதிக்கப்பட வேண்டிய செய்தி யாகும்! மதுவிலக்குக் கொள்கையில் அவர் பட்டும் படாமலும் ஏன் நடந்துகொண்டார் என்பதை, இவ்வுரையின் பிற்பகுதியில் அம்பேத்கர் கூறியுள்ளதிலிருந்து நாம் அறிந்துகொள்ள முடிகிறது. ''அவைத் தலைவர் அவர்களே! மதுவிலக்கை நீங்கள் எந்த அளவிற்கு வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப் போகிறீர்கள் என்பது, இப்புதிய கொள்கையால் ஏற்படும் வருவாய் இழப்பை நாம் எப்படி ஈடுகட்டப் போகிறோம் என்பதைப் பொறுத்தே

இருக்கிறது; வருவாய் இழப்பைச் சரிக்கட்டுவதற்கான கேள்விக்கு விடை காண்பதைப் பொறுத்தும் இருக்கிறது'' எனக்குறிப்பிட்டார். எவ்வளவு நடைமுறையான உண்மை இது! அன்று அவர் சொன்ன நிலை இன்றும் நீடிக்கிறதே!

வரவுசெலவுத் திட்டத்தின்மீது நடைபெற்ற விவாதத்தின் போது கல்விக்கான நிதி ஒதுக்கீடுபற்றியும் அம்பேத்கர் பேசினார். சிறுவர்களுக்குக் கல்வி வழங்குவதில் குறைந்த அளவில்தான் அரசு முன்னேற்றம் கண்டுள்ளது என்று கூறினார். 'கல்வி எல்லோர்க்கும் எளிதில் கிடைக்கும்படி செய்ய வேண்டும். எந்த அளவிற்கு முடியுமோ அந்த அளவிற்குக் குறைந்த செலவில் தாழ்ந்த வகுப்பினருக்கு உயர்கல்வி கிடைக்கும் வகையில் கல்வித் துறையின் கொள்கை இருக்க வேண்டும். ஆகவே கீழ்ச்சாதி மக்களுக்குத் தனிச்சலுகை தர வேண்டும்'' என்று அரசைக் கேட்டுக்கொண்டார்.

''இந்தக் கீழ்ச்சாதி மக்களை மற்ற வகுப்பினர் அடைந்துள்ள நிலைக்குக் கொண்டு வர வேண்டுமானால் அதற்கு ஒரே வழிதான் இருக்கிறது. நடைமுறைப்படுத்தும் விதத்தில் வேறுபாடு காட்டும் கொள்கையைப் பின்பற்ற வேண்டும். அதாவது கீழ்நிலையில் இருப்பவர்களுக்குத் தனிச் சலுகை அளிக்க வேண்டும்'' என்று வாதிட்டார். எல்லாவற்றிலும் சமத்துவத்தைப் பேணிட வேண்டும் என்று வலியுறுத்துவோர் வேண்டுமென்றே ஒன்றை மறந்து விடுகிறார்கள். அய்ந்தையும் பத்தையும் பொது எண்ணான இரண்டால் தனித்தனியாகப் பெருக்கினால் பத்தும், இருபதும்தான் கிடைக்கும். பொது எண்ணான இரண்டால் அய்ந்தைப் பெருக்கி னால் இருபது வராது. ஆகவே சமத்துவம் என்பது மேல் சாதிக்காரர்களின் நிலைக்குக் கீழ்ச்சாதியினரை உயர்த்துவதேயாகும் என்று அம்பேத்கர் கூறினார்.

சட்டசபையில் கல்வியைப்பற்றி உரையாற்றிய சில நாட்கள் கழித்து, கல்வியைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் யாராக இருக்க வேண்டும் என்பதைப்பற்றி ஒரு தலையங்கம் எழுதினார். பார்ப்பனர்களை ஆசிரியர்களாக அமர்த்தினால் கல்வியில் உண்மை யான முன்னேற்றத்தை அடையவே முடியாது என அதில் குறிப்பிட்டார். ஏனெனில் பார்ப்பனர்கள் கீழ்ச்சாதி மக்களை வெறுக்கும் மனங்கொண்டவர்கள்; தங்களைத் தவிர வேறு எவ்வகுப்பினரும் கல்வி அறிவு பெறக்கூடாது என்ற காழ்ப் புணர்ச்சி கொண்டவர்கள். மனிதர்களை நாயினும் கீழாக நடத்து

பவர்கள் மற்ற மனிதர்களை ஒரு போதும் சமமாகவோ அன்பாகவோ நடத்தாதவர்கள் என்று ஆணித்தரமாகக் குறிப்பிட்டார். ஆசிரியர்கள் நாட்டை நடத்திச் செல்லும் தேர்ப்பாகனைப் போன்றவர்கள். சமூகச் சீர்திருத்தக் கண்ணோட்டத்தில் நோக்கும் போது, எத்தகையவர்களை ஆசிரியர்களாகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதைவிட மிகவும் முக்கியமானது வேறேதும் இல்லை. பின்தங்கிய வகுப்பு மாணவர்களின் செவிகளில், "உடலால் உழைக்கும் உங்களின் அப்பன்மார் தொழில்களைச் செய்யவே நீங்கள் பிறந்திருக்கிறீர்கள்; நீங்கள் கீழ்ச் சாதி மக்கள்; கல்வி என்பது ஒரு சாதிக்கே உரியது" என்று இடைவிடாது ஓதிக்கொண்டிருக்கின்றனர் பார்ப்பனர். இவர்களிடம் மிக மேன்மை தர வல்லதும் தேசிய முக்கியத்துவம் உடையதும் மனிதத் தன்மையை அளிக்க வல்லதும் அறிவைத் துலங்கச் செய்வதுமான கல்வி கற்பித்தல் தொழிலை ஒப்படைக்கக்கூடாது எனத் தெளிவாகக் கூறினார். தன்னலமே வடிவான, நாட்டையே பாழ்படுத்தும் தன்மைகொண்ட சக்திகளைக் களைந்தெறிந்தால்தான், நாடு உண்மையான முன்னேற்றத்தை அடைய முடியும் என்பதை வலியுறுத்துவதே அம்பேத்கர் கூற்றின் நோக்கமாகும். இத்தகைய விரிந்த தளத்தின் மீதுதான் நாட்டின் ஒருமுகப்படுத்தப்பட்ட முன்னேற்றத்தை வலிமையாகக் கட்ட முடியும் என்றார் அம்பேத்கர்.

VI

இந்துஸ்தானத்தின் மாபெரும் விடுதலை வீரரான சிவாஜியின் 300ஆவது பிறந்தநாள் விழா மராட்டிரம் முழுவதும் 1927ஆம் ஆண்டு கொண்டாடப்பட்டது. கொலாபா மாவட்டம் பத்லாபூரில் நடந்த சிவாஜி விழாவிற்குத் தலைமை தாங்குமாறு அம்பேத்கரை அழைத்தனர். தன் தளபதிகளான சிவதார்க்கர், தியோராவ் நாயக் ஆகியோருடன் அம்பேத்கர் பத்லாபூர் சென்றார். அங்குச் சுற்றுப் பக்கத்துக் கிராம மக்களிடம் கலந்து பேசியபின், அந்நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்த பாலேயி சாஸ்திரி என்ற பார்ப்பனர் பின்னர் அம்பேத்கருக்கு அன்பான வரவேற்பைத் தந்து விருந்தோம்பினார். அக்கூட்டத்தில் அம்பேத்கர் சிவாஜியின் அருஞ் செயல் களையும் விரிவாக எழுச்சியூட்டும் வகையில் எடுத்துரைத்தார். அக்கூட்டத்திற்கு வந்திருந்த சுமார் அய்ந்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்களைப் பார்த்து, "சிவாஜியால் நிறுவப்பட்ட பேரரசு வீழ்ச்சியுற்றதற்குக் காரணம் என்ன?" என்று கேட்டார். சமுதாயத்தில் நிலவிய, பகையுணர்ச்சியை வளர்க்கும் சமூக உயர்வு தாழ்வும்,

பேஷ்வாக்களின் ஆட்சிமீது மக்களுக்கு இருந்த வெறுப்பும்தான் காரணங்கள் என்று அம்பேத்கரே நிரல்படுத்திக் கூறினார்.[30]

பம்பாய்ச் சட்டசபைக்கு அம்பேத்கர் நியமிக்கப்பட்டதைப் பாராட்டுவதற்கான விழா *1927* மே *8*ஆம் நாள் காரா ஆபிரகாமில் நடைபெற்றது. சட்டமன்ற உறுப்பினராக இருந்த பீம்பாய் தேசாய் அக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார். மகாராட்டிரச் சமூகச் சீர்திருத்தவாதிகளின் சிந்தனையைக் கோயில் நுழைவு பற்றிய பிரச்சினை ஆட்கொண்டிருந்தது. பம்பாயில் கட்டப்பட்டுள்ள தொரு புதிய கோயில் எல்லா இந்துக்களுக்கும் முதல் நாள் தொட்டே திறந்து விடப்பட்டுள்ளது என்ற செய்தி சில பத்திரிக்கைகளில் *1927* சூன் மாதம் வெளியாயிற்று. இந்த இயக்கத்தில் ஈடுபாடு கொண்டிருந்த தொண்டர்களும் இச் செய்தியை உறுதி செய்தனர். இக்கோயிலின் செயலாளருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அவரை நேரில் கண்டு பேசுவதற்கான நேரத்தை உறுதி செய்துகொண்டு சிவதார்க்கருடன் அம்பேத்கர் அங்குச் சென்றார். அங்கே அம்பேத்கர் வருகை தருவதை அறிந்த கயமை மனங் கொண்ட ஒருவன் உள்ளூரில் இருந்த மக்களைத் தூண்டிவிட்டு அம்பேத்கரை அக்கோயிலிலிருந்து விரட்டுமாறு தூண்டிவிட்டான். ஒரு கும்பல் அம்பேத்கரைச் சூழ்ந்துகொண்டு ஊளையிட்டது. மத வெறியர்கள் சூழ்ந்துநின்ற நிலையிலும் அம்பேத்கர் உறுதியுடன் அச்சூழ்நிலையை எதிர் கொண்டார். "இக்கோயிலின் நிர்வாகப் பொறுப்பில் இருப்பவரின் அழைப்பின்பேரில்தான் இங்கு வந்தோம். அவர் வெளியேறுமாறு சொல்லாத வரையில் இக்கோயிலை விட்டு நகர மாட்டோம்" என்று அம்பேத்கர் கூறினார். ஆனால் அந்த வெறிக்கும்பல் அதற்குச் செவி சாய்க்கவில்லை.[31] அக்கோயிலின் செயலாளர் மத வெறியர்களின் முன் அஞ்சிப் பணிந்துவிட்டார். அம்பேத் கருக்கு அளித்திருந்த பேட்டியை ரத்துசெய்துவிட்டார். கோயில் தலைமைப் பொறுப்பில் இருந்த ஒருவரே தானளித்த வாக்கைத் தவறிவிட்டார். அம்பேத்கரின் கால் பட்டதால் கோயிலின் புனிதம் கெட்டுவிட்டது என்பதற்காகக் கோயில் செயலாளரே தீட்டுக் கழிப்புக்கான சடங்குகளைச் செய்தார்.

1927 சூலை மாதம் மூன்றாவது கிழமையில் பூனாவில் மாங்வாடாவில் ஒரு முக்கியமான கூட்டத்தில் அம்பேத்கர் பேசினார். *'தீனபந்து'* பத்திரிக்கையின் ஆசிரியர் வி.எம். நவ்லே இக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார். சுபேதார் கட்சி, ராஜ்

போஜ், கே.எம். ஜதாவ், பீராரைச் சார்ந்த அனந்தசாமி, ஆரிய சேவக் சங்கத்தவரான ஒக்லே ஆகியோரும் மற்ற தலைவர்களும் அக்கூட்டத்தில் கலந்துகொண்டனர். சமார் சமூகத்தினர், அம்பேத்கர் ஒருதலைச் சார்பாக நடந்து கொள்வதாகக் கூறும் குற்றச்சாட்டு களை, அக்கூட்டத்தில் உணர்ச்சி பொங்கிட மறுத்துக் கூறினார். இதுவே அக்கூட்டத்தில், அவர் கூறிய சிறப்பான செய்தியாகும். நாசிக்கிலும், ஜல்கானிலும் நிறுவப்பட்ட மாணவர் விடுதிகளில் தீண்டப்படாத வகுப்புகளின் எல்லாப் பிரிவு மாணவர்களும் சேர்ந்திட வழிவகை செய்ததைப்பற்றி விளக்கிக் கூறினார். அவருடைய முயற்சியால் சமார் வகுப்பைச் சார்ந்த பி. பாலு பம்பாய் நகராட்சி உறுப்பினராக்கப்பட்டதையும், மாங் பிரிவைச் சேர்ந்த ஒரு சிறுவனைத் தன் வீட்டில் வளர்த்து வருவதையும், தீண்டப்படாத எல்லா உட்பிரிவினரும் மாநாடுகளில் ஒன்றாக அமர்ந்து உண்ணும் ஏற்பாட்டைச் செய்ததையும் எடுத்துரைத்து, நசுக்கப்பட்ட சமூக மக்கள் அனைவரும் உயர வேண்டும் என்பதே தன் குறிக்கோள் என்பதை விளக்கிக் காட்டினார். தங்களுக்குள் உட்பிரிவு பாகுபாடு பார்க்காமல், சட்ட சபைக்குத் திறமை சான்ற, தங்களின் நலன்களுக்காகப் போராடக்கூடிய ஒரு பிரதிநிதியை அனுப்புவது தவறா என்று சமார் மக்களைக் கேட்டார். மகார் இனத்தில் தான் பிறந்தது ஒரு பெரும்பேறு என்று கருதுவதாகக் குறிப்பிட்டுவிட்டு, சமார் இனத்திலிருந்து இந்த நோக்கத்திற்காகப் போராடுவதற்கான தகுதி சான்ற தலைவர் ஒருவர் முன் வருவாராயின் தன் இடத்தை அப்படிப்பட்டவருக்கு விட்டுக் கொடுக்கத் தயாராக இருப்பதாக முழங்கினார்.

தீண்டப்படாத வகுப்பு மக்களைத் தம் கையாளாகப் பயன் படுத்தி, பார்ப்பனரல்லாதாருக்கு எதிராக ஏவிவிட்டுத் தங்கள் சுயநலத்தைப் பாதுகாத்துக்கொள்ளும் சக்திகளைப்பற்றி எச்சரிக்கை யாய் இருங்கள் என்று அக்கூட்டத்தில் கூறினார். முஸ்லிம்களின் அச்சுறுத்தல் பெருகி வரும் ஆபத்து காரணமாக உங்களை நாடிவரும் இந்து மதக் காப்பாளர்களை நம்பாதீர்கள் என்று கேட்டுக்கொண்டார். பம்பாயில் உணவு விடுதி ஒன்றில் ஒரு பார்ப்பனர் பீங்கான் குவளையில் தனக்குத் தேநீர் தர மறுத்துக் கண்ணாடிக் குவளையில் அளித்ததை எடுத்துக்காட்டி, படிப்பு மட்டுமே தீண்டாமை முதலான பிரச்சினைகளை ஒழித்துவிடாது என்று எச்சரித்தார். போர்க்குணப் போக்கினை மேற்கொள்ளாவிட் டால் இழிவுகளையும் இயலாமைகளையும் இனியும் பொறுத்துக் கொள்ளமாட்டோம் என்று சிந்தனையால், சொல்லால், செயலால்

மெய்ப்பிக்காவிட்டால் எதையுமே சாதிக்க முடியாது எனக் கூறிய அவர், "தீண்டப்படாத வகுப்பு மக்களே! பொதுக்குடிநீர் நிலைகளைப் பயன்படுத்தும் உரிமையை வென்றெடுங்கள், பொதுக் கோயில்களில் தீரமுடன் நுழையுங்கள். தீண்டப்படாத வகுப்பு மக்களுக்கு இதுதான் உடனடியான செயல் திட்டமாகும்!" என்று இறுதியாக நெஞ்சு நெகிழ வேண்டுகோள் விடுத்தார்.

1927 சூலை மாதக் கடைசி வாரத்தில், கல்வி பயிற்றுவிக்கும் சிறந்த பல்கலைக்கழகமாக ஆக்க வேண்டும் என்ற நோக்குடன் பம்பாய்ப் பல்கலைக்கழகத்தைத் திருத்தியமைப்பதற்கான மசோதா சட்டசபையில் கொண்டு வரப்பட்டது. இப்பல்கலைக்கழகம் அமைக்கப்பட்ட காலந்தொட்டே வெறும் கல்லூரிகளை உருவாக்கும் நிறுவனமாக மட்டுமே இது இருக்கிறது என்ற குறை சொல்லப்பட்டு வந்தது. இதைப்பற்றிக் குறிப்பிட்டு அம்பேத்கர் பேசும்போது, "அவைத் தலைவர் அவர்களே, இப்போது செய்திருப்பதைப் போலக் கல்லூரிகளையும், பல்கலைக்கழகத்தையும் தனியாகப் பிரிப்பது சிறந்த வழியன்று. இதற்கு மாறாகக் கல்லூரிகளும் பல்கலைக்கழகமும் கல்வி கற்பித்தலில் சமஉரிமை உடையவையாக இருக்கும் வகையில் புதிய திட்டம் ஒன்றை உருவாக்க வேண்டும். இவை இரண்டுமே இளங்கலை, முதுகலைப் படிப்புகளின் வளர்ச்சிக்கு இணைந்து பாடுபட வேண்டும்" என்று கூறினார். இந்த வகையில் பம்பாய்ப் பல்கலைக்கழகக் குழுவின் பரிந்துரைகளை விடச் சட்லர் குழுவின் பரிந்துரைகள் மிகவும் பயன் உள்ளவையாகும்" என்று எடுத்துரைத்தார்.

பல்கலைக்கழக செனட் அமைப்பு பற்றிப் பேசும்போது, பம்பாய்ப் பல்கலைக்கழகச் செனட்டில் பிற்பட்ட மற்றும் தீண்டப்படாத வகுப்பினர் பிரதிநிதித்துவம் பெற்றிருக்க வேண்டும் என்ற கருத்தை ஆதரித்துப் பேசினார். மதவெறி மோதலில் குளிர் காய்ந்து கொண்டிருப்பவர்கள் இதை எதிர்ப்பது வியப்பாக இருக்கிறது என்றார் அம்பேத்கர். இது கே.எம். முன்ஷி மீது அம்பேத்கர் தொடுத்த தாக்குதலாகும். பல்கலைக்கழகப் பட்டதாரிகளுக்கு விடுத்த அறிக்கையில் கே.எம். முன்ஷி 'குஜராத் குஜராத்தியர்களுக்கே!' என்ற முழக்கத்தை முன் வைத்துத் தனக்கு வாக்களிக்குமாறு கேட்டுள்ளார் என்று அம்பேத்கர் குற்றஞ்சாட்டினார். முன்ஷி சீறி எழுந்தார்; அம்பேத்கரின் கூற்று முற்றிலும் தவறானது என்று பதிலிறுத்தார். அரசியல்வாதிகளுக்கு மறதி அதிகம் என்று முன்ஷி கூறினார்.

இந்துக்களும் முஸ்லிம்களும் ஒருவரையொருவர் மதவெறிக் கண்ணோட்டத்துடனேயே நோக்குகின்றனர் என அம்பேத்கர் கூறியபோது, 'அய்யோ பாவம்' என்றும், 'இல்லை' என்றும் 'சவாலுக்குத் தயாரா?' என்றும் பலர் குரல் எழுப்பினார்கள். 'இதெல்லாம் வெறும் பாசாங்கு; இல்லை என்ற குரல்களை நான் நம்பத் தயாராக இல்லை' என்று அம்பேத்கர் முழங்கினார்.

பம்பாய் மாகாணத்தைப் பாதிக்கக்கூடிய முக்கியச் சட்டங்கள் இயற்றப்படும்போது அவற்றின் விவாதங்களில் ஆர்வமுடன் அம்பேத்கர் பங்கேற்றார். இத்துடன் தீண்டப்படாத வகுப்பு மக்களின் நலன் தொடர்பானவற்றில் மிகுந்த விழிப்புடனிருந்தார். சிறிய அநீதி இழைக்கப்பட்டதை அறிந்தாலும் அதையே ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தி அவர்களின் சார்பில் வாதாடினார். அரசின் உயர் பதவிகளில் தீண்டப்படாத வகுப்பினர்களிலிருந்து தகுதியானவர்களை இன்னும் ஏன் அமர்த்தவில்லை என்று சட்டமன்றத்தில் பல தடவை வினாத் தொடுத்தார். எழுத்தர் வேலைக்குத் தேர்வுசெய்வதற்கெனத் தேர்வுக் குழு ஒன்று இருக்கிறதா? அரசாங்கப் பொது ஊழியத்தில் தீண்டப்படாதவர் எத்தனைப் பேர் வேலையில் இருக்கிறார்கள்? என்ற கேள்விகளை எழுப்பினார். ஒரு நீதிபதி ஒரே தன்மைகொண்ட இரண்டு வெவ்வேறான வழக்குகளில் மாறுபட்ட தீர்ப்புகளை அளித்திருப்பது இந்த அரசுக்குத் தெரியுமா? என்றும் கேட்டார்.

ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள மொத்த மக்கள்தொகை எவ்வளவு, அதில் மகார் எத்தனை பேர், மகார்களுக்கு இனாம் நிலத்திலிருந்தும், பலுத்தா மூலம் அரசு தரும் சம்பளம் மூலமும் கிடைக்கும் வருமானம் எவ்வளவு? அவர்களுக்கு எல்லாப் பணிகளின் மூலமாகவும் கிடைக்கும் மொத்த வருவாய் எவ்வளவு? என்ற விவரங்களை அரசு அளிக்க வேண்டும் என்று கோரினார். இந்த விவரங்களைத் திரட்டுவது என்பது மிகச் சுமையான பணியாகும்; எனவே இப்பணியை மேற்கொள்ள இயலாது என்று அரசுத் தரப்பில் விடை கூறப்பட்டது. உள்துறை அமைச்சரான ஜெ.இ.பி. ஹாட்சனுடன் ஒருமுறை கடுமையான வாக்குவாதம் மேற்கொண்டார். மாகாணக் காவல்துறையில் காவலர் பணிக்கு ஆள் சேர்ப்பதில் தீண்டப்படாத வகுப்பினர்க்குத் தடை ஏதேனும் விதிக்கப்பட்டிருக்கிறதா? என்று அம்பேத்கர் வினவினார். அவ்வாறான தடைச் சட்டம் ஏதும் இல்லை என்று அமைச்சர் ஹாட்சன் பதிலளித்தார். அப்படிப்பட்ட தடை ஏதும் இல்லையெனில்,

பம்பாய் நகரக் காவல்துறை ஆணையாளர் தீண்டப்படாத வகுப்பு மக்களைக் காவல்துறையில் சேர்த்திட மறுப்பது ஏன்? என்று கேட்டு உள்துறை அமைச்சரை அம்பேத்கர் மடக்கினார். 'இக் கேள்வி பெரிய விவாதத்தைத் தொடக்கி வைக்கிறது. இதில் நடைமுறைச் சிக்கல் இருக்கிறது என்று மட்டும் சொல்ல விரும்புகிறேன். இந்த அவையில் உள்ள ஒவ்வொரு உறுப்பினரும் இதை அறிவார்கள். இந்த நடைமுறைச் சிக்கல்கள்தான் தீண்டப் படாத வகுப்பு மக்களை அதிக எண்ணிக்கையில் காவல்துறையில் சேர்த்திடத் தடையாக உள்ளன. மற்றபடி இதற்கு எதிராகத் தடை ஆணை ஏதும் இல்லை'' என்று கடுகடுத்த முகத்துடன் ஹாட்சன் விடை தந்தார்.

தீண்டப்படாதார் விடுதலைப் போர்

சௌதார் குளத்தை மேல் சாதியினர் புனிதப்படுத்திய செய்தி தீண்டப்படாத வகுப்பு மக்களின் உள்ளங்களை ஆழமாகப் புண்படுத்தியது. இதை அறிந்த அம்பேத்கர் பெருஞ்சினங் கொண்டார்; உரிமைகளை நிலைநாட்டிட மீண்டும் சத்தியாக்கிரகப் போராட்டத்தைத் தொடங்க வேண்டும் என்று முடிவுசெய்தார். நிதானம் அற்ற நிலையில் எடுக்கப்பட்ட இம்முடிவானது நோயை விட மோசமாக இருக்குமோ எனச் சிலர் அஞ்சினார்கள். வெறும் கல்வியைப் பரப்புவதோ சமய நூல்களுக்கு விளக்கவுரை ஆற்றுவதோ நெடுங்காலமாக இருந்துவரும் இந்நோயை ஒழித்துவிடாது என்று அம்பேத்கர் நியாயமான கோபத்துடன் கூறினார். புரையோடிவிட்ட புண் இது. அறிவு என்ற மருந்துக்கட்டு போடுவதனாலோ, நல்லெண்ணம் கொண்ட திட்டங்களை அறிவிப்பதனாலோ இதைக் குணப்படுத்தி விடமுடியாது. கொடிய நோய்களுக்குத் தீவிரமான அறுவை சிகிச்சையே மருந்தாகும் என்றார்.

மராட்டியத்தின் பார்ப்பனர் அல்லாதார் தலைவர்களான ஜவல்கர், ஜெதே ஆகியோர் சத்தியாக்கிரகத் திட்டத்திற்குத் தங்களின் முழு ஆதரவை அளிப்பதாகக் கூறினார்கள். ஆனால் இதில் பார்ப்பனர்கள் இடம் பெறவே கூடாது என்றும், போராட்டம் வன்முறை அற்றதாக இருக்க வேண்டும் என்றும், இது தொடர்பாக ஒரு மாநாட்டை மகதில் கூட்டியபின் வெகுமக்கள் பங்கு கொள்ளும் போராட்டமாக நடத்தப்பட வேண்டும் என்றும் நிபந்தனைகள் விதித்தனர். பார்ப்பனர்கள் அனைவருமே தீண்டப்படாத வகுப்பு மக்களுக்கு எதிரிகள் என்ற எண்ணம் தவறானதாகும் என்று அம்பேத்கர் கூறினார். பார்ப்பனிய மனப்பான்மை கொண்டிருப்பவர்களே வெறுக்கப்படத் தக்கவர்கள். உயர்ந்த சாதி தாழ்ந்த சாதி என்று வேறுபடுத்துவது பார்ப்பனியம்; இதுதான் மனிதனைத் தொட்டால் தீட்டு என்ற சிந்தனையை வளர்த்தெடுத்தது; சமூகத்தில் சிலருக்கு இதுதான் சிறப்பு உரிமைகளை அளித்தது; சமனற்ற நிலையைத் தோற்றுவித்தது என விளக்கினார். சாதியில் உயர்வு தாழ்வு கற்பிக்கும் மனப்பான்மை கொண்ட பார்ப்பனர் அல்லாதவரை நான் வெறுக்கின்ற அதே நேரத்தில் இந்த உயர்வு தாழ்வு உணர்வு இல்லாமல், சிறப்பு உரிமைகளையும் அதிகாரத்தையும் விட்டொழித்த பார்ப்பனரை வரவேற்கிறேன் என்றார்.

இதன்படி 1927 ஜூன் 26ஆம் நாள் 'பகிஷ்கிரித் பாரத்' இதழில் ஒரு அறிவிப்பு வெளியிடப்பட்டது. மகத் குளத்தைப் புனிதப்படுத்தியதன் மூலமாக மகதின் இந்துக்கள் தீண்டப்படாத வகுப்பினர் மீது முத்திரையிட்ட கறையைக் கழுவிட விரும்புகின்ற- சௌதார் குளத்தில் தண்ணீர் எடுத்ததற்காக உங்களுடைய பிரதிநிதிகளைத் தாக்கிய இந்துக்களின் செயலைக் கண்டிக்க விரும்புகின்ற தீண்டப்படாத வகுப்பு மக்கள், பம்பாயில் உள்ள பகிஷ்கிரித் ஹித்தகாரிணி சபையின் அலுவலகத்தில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று அந்த அறிக்கையில் கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தது. இச்சபை இந்தச் சத்தியாக்கிரகத்தை நடத்தும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.

மதம் மனிதனுக்காகவா? அல்லது மதத்திற்காக மனிதனா? என்ற கேள்வியை அம்பேத்கர் எழுப்பினார். தீண்டப்படாதார் நலத்தைப் பேணும் மதத்திற்காகத் தீண்டப்படாத வகுப்பு மக்கள் சாகவும் அணியமாக உள்ளனர். ஆனால் அவர்களுடைய நலனைப்பற்றி அக்கறை கொள்ளாத மதத்தை அவர்கள் சிறிதும் மதிக்கத் தயாராக இல்லை. 'நாம் இந்து மதத்தைச் சேர்ந்தவர்களா, இல்லையா என்பதை முடிந்த முடிவாகத் தீர்மானித்துவிட வேண்டும்' என அவர் முழங்கினார். இந்துச் சமூகம் ஓர் ஆர்மோனியப் பெட்டி போன்றது. இதில் முக்கிய சுருதி போன்று பார்ப்பனர்கள் இருக்கின்றனர். இந்த முக்கிய சுருதி பொருத்தமாக இசைக்காவிட்டால் சமூகம் முழுவதுமே நிலைகுலைந்து போய் விடும். சமூக இழிவைத் துடைத்தெறிவது, வீழ்த்தப்பட்டோரை விழித்தெழச் செய்வது, தீண்டப்படாதாரைச் சமூகத்தில் மற்றெவர்க்கும் சமமாக உயர்த்துவது இவையே பண்பாட்டின் உண்மையான இலக்கணம் என விளக்கம் அளித்தார் அம்பேத்கர்.

இதற்கிடையில், மகத் நகராட்சி, 1924இல் தீண்டப்படாத வகுப்பு மக்களுக்காகச் சௌதார் குளத்தைத் திறந்து விடுவது என்று நிறைவேற்றிய தீர்மானத்தை 1927 ஆகஸ்டு 4ஆம் நாள் ரத்து செய்தது. அம்பேத்கர் இதை ஒரு சவாலாக எதிர்கொண்டார். இதற்காகச் செப்டம்பர் 11ஆம் நாள் பம்பாயில் தாமோதர் அரங்கில் ஒரு பொதுக்கூட்டத்தைக் கூட்டினார். அங்கு, மகத் குளத்தில் தீண்டப்படாதவர்களின் நீர் எடுக்கும் உரிமையை மீண்டும் நிலை நாட்டுவதற்கான போராட்டத் திட்டத்தை வகுக்கவும், அதற்கான நாள் குறிக்கவும் ஒரு குழு அமைக்கப்பட்டது. நான்கு நாட்கள் கழித்து அம்பேத்கர் அலுவலகத்தில் இக்குழு கூடியது; 1927 டிசம்பர் 25, 26 ஆகிய நாட்களில் சத்தியாக்கிரகம் செய்வது என்று இக்குழு அறிவித்தது.

தொடங்கப்படவுள்ள மகத் போராட்டத்தின் தன்மையை விளக்கி அம்பேத்கர் பேசினார். மேற்கொள்ளப்படும் ஒரு போராட்டத்தின் வெற்றி, கோரிக்கையிலுள்ள நியாயத்தையும் அதை அடைவதற்காகக் கையாளும் வழி முறையையும் பொறுத்திருக்கிறது. போராட்டத்தின் நோக்கம் உயரியதாக இருப்பின் அதன் வெற்றியைப்பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. ஏனெனில் எப்பொழுதும் உண்மையே இறுதியில் வெல்லும். உண்மை என்பதன் பல்வேறு கூறுகளையும் நியாயமான கோரிக்கையை வென்றெடுக்கப் போராடுவதுபற்றியும் அம்பேத்கர் விளக்கிப் பேசும்போது, 'ஒரு சத்தியாக்கிரகி அளவுகடந்த தன்னம்பிக்கையைப் பெற்றிருக்க வேண்டும். கோரிக்கை நேர்மையானதாகவும் நல்லதாகவும் இருந்தால்தான் தன்னம்பிக்கை தழைத்துப் பெருகும். ஆகவே சத்தியாக்கிரகி எது நல்லது? எது சரியானது? என்பதை அறிந்திருக்க வேண்டும். மக்களை ஒன்று சேர்க்கின்ற எந்தச்செயல்பாடும் நல்லதே ஆகும். எங்கே ஒற்றுமை உருவாகிறதோ அங்கே நல்ல இலட்சியமும் இருக்கும். இத்தத்துவத்தின் தோற்றம் பகவத்கீதைக்கு உரியதாகும். கீதையின் தத்துவமே சத்தியாக்கிரகம் தான்' என்றார். இதற்குக் கீதையிலிருந்து மேற்கோள்களை எடுத்துக்காட்டினார். ஏனெனில் கீதை சாதி இந்துக்களுக்கும் தீண்டப்படாதவர்களுக்கும் ஏற்புடையது என்று கருதப்பட்டது.[32]

போராட்டம் வன்முறையானதாக இருப்பினும் அகிம்சை வழியினதாயினும் அதன் குறிக்கோள் விழுமியதாயிருப்பின் அது நேர்மையானதே என அம்பேத்கர் கருதினார். இலட்சியம் நியாயமானதாக இருப்பின் அதை அடைந்தே தீர வேண்டும் என வலியுறுத்துவதும் அதற்காகப் போராடுவதும் நியாயமானதே. குறிக்கோள் நியாயமற்றதாக இருப்பின் அதை அடைவதற்கான வழிமுறையும், அதை அடைய வேண்டுமென வலியுறுத்துவதும் நெறி பிறழ்ந்ததாகவே இருக்கும். ஒரு இலட்சியத்திலுள்ள நியாயம் என்பது அதை எய்துவதற்காகக் கையாளப்படும் வழி முறையினால் மாறுபடுவதில்லை. வினைச்சொல்லை மாற்று வதால் ஒரு சொற்றொடரின் பொருளே மாறிவிடுவதுபோல் பல்வேறு வழிமுறைகளைப் பின்பற்றுவதால் உயர்ந்த குறிக்கோளின் சிறப்பு குன்றுவதில்லை என்று அம்பேத்கர் விளக்கினார்.

நீதியை நிலைநாட்டவேண்டி பாரத வீரன் அர்ச்சுனன் ஆயுதமேந்திய போக்கு சரியானதே என்று அம்பேத்கர் கருதினார். 'அகிம்சையே சிறந்த நெறி' என்று எல்லாக் காலத்திலும் எல்லாச் சூழ்நிலைகளிலும் கடைப்பிடித்திட இயலாது. அவ்வாறு மனிதன்



அம்பேத்கரின் தந்தை சுபேதார் ராம்ஜி மாலோஜி



அம்பேத்கரின் தமையனார் பலராம்

நினைத்தானானால் காற்றில் உள்ள நுண்ணுயிர்கள் மடியுமே என்று கண் இமைகளைக் கூட அசைக்க முடியாது; பழங்களைத் தின்னவோ, நீரைக் குடிக்கவோ, காற்றைச் சுவாசிக்கவோகூட முடியாது. புல்லை அறுப்பதோ மரத்தை வெட்டுவதோ கூடாது என்றும் ஆகிவிடும். உண்ணக் கொல்ல முனைகிற கொலைகாரன், ஒரு பெண்ணைக் கற்பழிக்க முயல்பவன், அண்டை வீட்டுக்குத் தீயிடுபவன், திருடுபவன் போன்ற தீயவர்கள் கையும் களவுமாகப் பிடிபடும்போது தப்பியோட முயற்சிக்கின்றனர்; அம்முயற்சியில் கொல்லப்படுகின்றனர். இத் தகையவர்கள், பிறருக்குத் தீங்கு இழைப்போர், கொடுஞ்செயல் புரிவோர் போன்றே தாம் செய்த பாவங்களுக்கு இரையாகிறார்கள் என்று அம்பேத்கர் கருதினார். ஒருவருடைய உணர்வுகளைப் புண்படுத்துவதுதான் வன்முறை என்றால், காந்தியின் சத்தியாக்கிரகம் வன்முறையை அடிப்படையா கக் கொண்டதேயாகும் என்று குறிப்பிட்டு விட்டு, சரியான நெறி என்பது இயலும்போதெல்லாம் வன்முறையற்றதாக இருக்க வேண்டும்; தேவையான போதெல்லாம் அது வன்முறையானதாக இருக்க வேண்டும் என்று அம்பேத்கர் கூறினார்.

தொடங்கவுள்ள மகத் போராட்டத்தைப்பற்றிப் பேசினார். சத்தியாக்கிரகத்தைத் தொடங்கும்போது அது அமைதியற்ற சூழ் நிலையைத் தோற்றுவிக்க வாய்ப்பு உண்டு; அதுபோன்ற நிலையில், நியாயமான உரிமைகளுக்காகப் போராடுகிறவர்களுக்கு அரசு உதவியாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதாக அம்பேத்கர் கூறினார். ஆனால் அரசு சத்தியாக்கிரகத்திற்குத் தடை விதித்தால் என்ன செய்வது? அந்நிலை ஏற்பட்டால் சத்தியாக்கிரகம் செய்வோர் தடையை மீற வேண்டும்; கைதாக வேண்டும். இதை நன்கு உணர்ந்தவர்கள் மட்டுமே போராட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார். தீண்டாமை இழிவான ஒரு கறையாக இருக்கிறது. இதை அகற்றிடச் சிலபேர் உயிர்த் தியாகம் செய்தாலும் பரவாயில்லை என்று வலியுறுத்தினார். எப்படியேனும் உயிர் வாழ்ந்தால் போதும் என்று எண்ணுவதோ, காக்கையைப் போன்ற வாழ்க்கையை ஆயிரம் ஆண்டுகளுக்கு வாழ நினைப் பதோ ஒரு செம்மையான வாழ்வாகாது. ஓர் உண்மையை நிலைநாட்டிட-ஒரு சூளுரையை நிறைவேற்றிட-தன்மானத்தைக் காத்திட-நாட்டின் பெருமையை நிலைநாட்டிட உயிர்த்தியாகம் செய்யும்போதுதான் வாழ்வு சிறக்கிறது; அழியாப் புகழ் பெறு கிறது. மனித உரிமைகளைக் காப்பதற்காக வேண்டிப் பல தலைவர்கள், பலிபீடத்தில் தங்கள் இன்னுயிரை ஈந்துள்ளனர்.

ஓதிய மரம் போல் எதற்கும் உதவாமல் வாழ்வதைவிட உயர்ந்த கொள்கைக்காக இளமையிலேயே உயிர் விடுவது மேலானதாகும் என்றார் அம்பேத்கர்.

தீண்டப்படாத வகுப்பு மக்கள் தங்கள் உரிமைகளைப் பயன்படுத்துவதை அரசு தடுத்தால் இந்தப் பிரச்சினை பன்னாட்டு அவை முன்னர் (League of Nations) எடுத்துச் செல்லப்படும் என்று இறுதியில் எச்சரித்தார். சாதி இந்துக்கள் தங்களுடைய போராட்டத்திற்கு இடர் விளைவித்தால், இந்து மதம் கற்சுவர் போன்றது; அதைத் தழுவி நிற்பது பயனற்றது; ஆகவே தீண்டப்படாதவர்கள் வேறு ஒரு மதத்தை நாடிப் புகலிடம் தேடவேண்டியிருக்கும் என்பது உலகிற்கு மிகத் தெளிவாகப் புலனாகிவிடும் என்று கருத்தறிவித்தார்.

சாதி இந்துக்களின் அமைப்புகளிடமிருந்தும், செய்தித்தாள் களின் வாயிலாகவும் புயல் போன்ற கண்டனங்களும் பழிப்புரை களும் கிளம்பின; அம்பேத்கரின் முயற்சிகளுக்கு உள் நோக்கம் கற்பித்தன. மதமாற்றக் கருத்துக்கு மயங்கியிருப்பின் நினைத்த அளவிலேயே இப்பிரச்சினையை நானே தீர்த்துவிட்டிருப்பேன் என்றார், அம்பேத்கர். ஆனால் தீண்டப்படாத வகுப்பு மக்கள் இந்து மதத்திலேயே இருக்க விரும்புகின்றனர். அதனால்தான் சமத்துவத்திற்காகவும் குடியுரிமைக்காகவும் போராடுகின்றனர்.

''உங்களுடைய மதம்தான் எங்களுடைய மதம் எனில் உங்களுடைய உரிமைகளும் எம் உரிமைகளும் சமமாக இருக்க வேண்டும். ஆனால் உண்மை நிலை அப்படியா இருக்கிறது? இல்லையே! அவ்வாறிருக்கும்போது நீங்கள் எட்டி உதைப்பதை யும், அவமதிப்பதையும் பொறுத்துக்கொண்டு, எந்த அடிப்படை யில் எங்களை இந்து மதத்தில் இருக்கச்சொல்கிறீர்கள்? ஒரே மதத்தைப் பின்பற்றும் இரண்டு பேர்களிடையே வேறுபாடுகாட்டும் மதம் ஒருதலைச் சார்பானதல்லவா? தன்னைப் பின்பற்றுகின்ற கோடிக்கணக்கானவர்களைக் கிரிமினல் குற்றம் செய்தவர்கள் போலவும் நாயினும் இழிந்தவர்களாகவும் நடத்தி, தாங்க முடியாத இயலாமைகளை அவர்கள் மீது திணித்துத் துன்புறுத்துகின்ற மதம் எவ்வகையிலும் ஒரு மதமன்று. இக்கொடிய அமைப்பைப் போற்றுகின்ற எதுவும் மதம் என எப்படிப் பெயர் பெற முடியும்? மதமும் அடிமை முறையும் ஒன்றோடொன்று பொருந்தி இருக்க முடியாதவை'' என்று முழங்கினார் அம்பேத்கர்.

மதம் என்பது முதலில் இவ்வுலக வாழ்வில் உங்களுக்கு வளத்தையும் முன்னேற்றத்தையும் அளிப்பதாக இருக்க வேண்டும்; மோட்சம் என்பது அதன் அடுத்தபடியான நோக்கமாக இருக்க வேண்டும் என்று மதத்திற்கு விளக்கம் அளித்தார் அம்பேத்கர். மக்களுக்கு இவ்வுலக வாழ்வில் வளமான வாழ்க்கையை அளிப்பதையே முதலாவது கட்டளையாக ஒவ்வொரு மதமும் கொண்டிருக்க வேண்டும்.

''தீண்டாமை நல்வாழ்விற்கான எல்லா வாயில்களையும் தீண்டப்படாதவர்களுக்கு அடைத்துவிடுகிறது. தீண்டப்படாதவருக்கு சமூகத்தில் சுதந்திரமாக நடமாடும் எந்தவித உரிமையையும் தரவில்லை. தனியாக ஒதுக்கிவைக்கப்பட்ட இடத்தில் இருள் சூழ்ந்த குடிசையில் வாழுமாறு கட்டாயப்படுத்துகிறது. கல்வி கற்பதையும் அவன் விரும்புகின்ற தொழிலைச் செய்வதையும் தடை செய்கிறது. செத்த பிறகு இந்த உலகத்தையோ மேலுலகத்தையோ யாராவது பார்த்திருக்கிறார்களா? மூன்று மேல் வருணத்தார்க்கும் ஊழியம் செய்வதால் சூத்திரனுக்கு மோட்சம் கிடைக்கிறது என்று இந்து மத நூல்கள் பரப்பியிருப்பது கடைந்தெடுத்த கயமைத்தனமல்லவா? அடிமை முறைக்கு இடப்பட்டுள்ள இன்னொரு பெயர்தான் தீண்டாமை. தன் சுயமரியாதையை அழித்துக்கொண்டு எந்த இனமும் முன்னேற முடியாது. ஆகவே தீண்டப்படாதவர்களை உயர்த்த வேண்டும் என்று உண்மையிலேயே நீங்கள் விரும்பினால் சமூகத்தில் சுதந்திரமான குடிமக்களாகவும் அவர்களுடைய வாழ்க்கையைத் தீர்மானித்துக் கொள்ள முழுஉரிமை உடையவர்களாகவும் அவர்களை நடத்துங்கள்'' என்று அம்பேத்கர் கேட்டுக்கொண்டார்.

''தீண்டாமை தீண்டப்படாதவர்களையும் இந்துக்களையும் பாழ்படுத்திவிட்டது; இதன் விளைவாக இந்த நாட்டையும் சீரழித்துவிட்டது. தீண்டப்படாத வகுப்பு மக்கள் தங்கள் சுதந்திரத்தையும் சுயமரியாதையையும் மீளப் பெற்றால் தங்களுடைய முன்னேற்றத்திற்கும் வளத்திற்கும் மட்டும் பயன்படுத்தாமல், தங்களுடைய நல்லுழைப்பை - அறிவாற்றலை - துணிவை இந்நாட்டின் வலிமைக்கும் வளத்திற்கும் அளிப்பார்கள். தீண்டாமை எனும் களங்கத்தைத் துடைத்தெறிந்திடப் போராடுவதிலேயே தீண்டப்படாதவர்கள் தற்போது செலவிட்டு வரும் அளப்பரிய ஆற்றலைச் சேமித்தால், இதைத் தங்களுடைய கல்வி வளர்ச்சிக்கும் நாட்டின் ஒட்டு மொத்தப் பொருளாதார ஆதாரங்களைப் பெருக்கிடவும் அவர்கள் பயன்படுத்த முடியும். தங்களை மனிதர்களாக நடத்தப்பட வேண்டுமென்பதற்காகவே அவர்கள் வேறொரு மதத்தைத்

தழுவ வேண்டிய நிலை ஏற்படாது'' என்றார். தீண்டப்படாத வகுப்பு மக்கள் உறுதியுடன் மேற்கொண்டுள்ள போராட்டம் மனிதத் தன்மையைக் கோருவதாகவும் அவர்களின் நலன் சார்ந்ததாகவும் மட்டுமின்றி நாட்டின் உயர்வுக்கான போராட்டமாக வும் விளங்குகின்றது எனவும், இது இந்து மதத்திற்கே மிகப் பெரும் ஆக்கம் சேர்ப்பதாகவும் விளங்கும் எனவும் கூறினார்.

II

இக்காலக்கட்டத்தில்தான் லோகமானிய பாலகங்காதரத் திலக ரின் மகன் ஸ்ரீதர் பந்துக்கும், அம்பேத்கருக்கும் தொடர்பு ஏற்பட்டது. ஸ்ரீதர் பந்த் அம்பேத்கரின் நண்பரானார்; அவரிடம் பெருமதிப்பும் கொண்டிருந்தார். அவர் சமூகச் சீர்திருத்தங்களை ஊக்குவித்தார். 1927 செப்டம்பர் மாதம் ''கேசரி'' அறக்கட்டளை உறுப்பினர்களின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் திலகரின் புகழ்பெற்ற கெய்க்வாடு வாடாவில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சிக்கு, தீண்டப்படாத வகுப்பு இளைஞர்கள் இசைக் குழுவை ஸ்ரீதர் பந்த் அழைத்தார். சமூகச் சீர்திருத்தத்தில் துணிச்சலாகச் செயல்பட்டு வரும் ஸ்ரீதர்பந்தைத் தீண்டப்படாத வகுப்பு மக்கள் மிகவும் பாராட்டினார்கள்.

இளைஞர்கள் எழுச்சி பெற்றுப் புயல் வேகத்தில் செயலில் இறங்க வேண்டுமெனத் தூண்டி, இதில் தன் கவனத்தை அதிகமாக அளித்து வந்தார் அம்பேத்கர். 1927 அக்டோபர் 2ஆம் நாள் பூனாவில் நடைபெற்ற தீண்டப்படாத வகுப்பு மாணவர் மாநாட் டிற்கு அவர் தலைமை தாங்கினார். தீண்டப்படாத வகுப்புகளில் உள்ள படித்த அறிவாளிகள் அனைவரும் அம்பேத்கரின் கொள்கைகளையும் அவருடைய சிறப்பியல்புகளையும் அவரோடு நெருங்கிப் பழகி அறிவதற்கான வாய்ப்பாக இம்மாநாட்டைப் பயன்படுத்திட முயற்சி மேற்கொள்ளப்பட்டது. கொடிய வறுமையி லிருந்தும், மீள முடியாத அறியாமையிலிருந்தும் மீட்டு, மனித உரிமைகளை வென்றெடுத்துத் தருவதாக வாக்களித்து வரும் அம்பேத்கரைக் காண்பதற்குப் படித்தவர்களுக்கு இந்த மாநாடு ஒரு வாய்ப்பாக அமைந்தது. இம்மாநாடு நடைபெற்ற அகல்யா ஆசிரமம் கொடிகளாலும் தோரணங்களாலும் அணி செய்யப்பட்டி ருந்தது. தங்களுக்கு விடுதலை வழங்கிடப் போராடிக்கொண்டிருக் கும் தலைவருக்கு-விடுதலை வீரருக்குத் தொண்டர்கள் அணிவகுப்பு மரியாதை செய்தனர். இம்மாநாட்டில் ஸ்ரீதர்பந்த் திலகர், சோலங்கி, பி.என். ராஜ் போஜ் ஆகியோர் பேசினார்கள். தீண்டப்படாத

வகுப்பு மாணவர்கள் கல்வியில் கருத்தூன்றிப் படிக்க வேண்டும் என்பதையும் தங்கள் கடமைகளைப் பொறுப்புணர்ந்து ஆற்ற வேண்டும் என்பதையும் வலியுறுத்தி அம்பேத்கர் பேசினார். வாழ்வில் அவர்கள் வகிக்கப் போகும் பங்கு பெரும்விளைவுகளை ஏற்படுத்தும்; தீண்டப்படாதவர்களின் முன்னேற்றத்திற்கும் எதிர்கா லத்திற்கும் நல்ல பங்களிப்பை நல்கும். சமூகத்தின் உயர்விற்காகத் தீண்டப்படாத வகுப்புப் பெண்களும் பங்களிப்புச் செய்ய முடியும் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்தினார். வீட்டு வேலைகளைச் செவ்வனே செய்து முடித்த பின், அன்றாட வாழ்வில் இதற்கென நேரத்தை ஒதுக்கி, தம் வகுப்பைச் சார்ந்த பெண்களின் உயர்வுக்காக உழைக்க வேண்டும் என்றார்.

ஸ்ரீதர் பந்த் திலகரின் அழைப்பின் பேரில் அம்பேத்கர் தேநீர் விருந்தொன்றில் கலந்து கொண்டார். இந்த விருந்து திலகர் கெய்க்வாடாவில் நடைபெற்றது. இந்த விருந்து நடந்த சில மாதங்கள் கழித்துத் துடிப்பான அந்த இளைஞர் எல்லோரும் துயரப்படக்கூடிய தன்மையில் தன் வாழ்க்கையை முடித்துக் கொண்டார். இத்துயரமான நிகழ்ச்சி நடப்பதற்குச் சில மணி நேரத்திற்கு முன் தன் அருமை நண்பர் அம்பேத்கருக்கு ஸ்ரீதர் பந்த் ஒரு கடிதம் எழுதினார்.

அதே மாதத்தில் பம்பாய் மாகாண வேளாண்மைத் துறை இயக்குநராக இருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் டாக்டர் ஹெரால்டு எச். மான் அவர்களுக்கு அளிக்கப்பட்ட வழியனுப்பு விழாவில் அம்பேத்கர் கலந்து கொண்டார். பூனாவில் தீண்டப்படாதவகுப்பு மக்கள் தலைவர் எஸ்.ஜெ. காம்பிளே அவர்களின் அழைப்பின் பேரில் இக்கூட்டத்தில் அவர் கலந்து கொண்டார். இந்த விழா பூனாவில் அரசினர் விடுதியில் நடைபெற்றது. டாக்டர் மான் தனக்குப் பலவகையிலும் உதவியாக இருந்தமையைக் குறிப்பிட்டு, அதற்காக நன்றி தெரிவிப்பதாக அம்பேத்கர் பேசினார். பேராற்றல் வாய்ந்த டாக்டர் அம்பேத்கர் தலைமையின் கீழ் மகார் மக்கள் பணியாற்ற வேண்டும் என்று டாக்டர் மான் தன் நன்றியுரையில் அறிவுறுத்தினார்.

அம்பேத்கரின் இயக்கம் இப்பொழுது வலுப்பெற்று வளர்ந்து வந்தது. தொண்டர்களும் உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் இந்த இயக்கத்தின்பால் ஈர்க்கப்பட்டனர். இந்து சாஸ்திரங்களின்படி மேல் வருணத்தார் மட்டுமே அணிவதற்கு உரிமை உடைய பூணூலைத் தீண்டப்படாத வகுப்பினருக்குச் சமதா (சமத்துவ) சங்கத்தின் மூலம்

இதன் தலைவர்கள் அணிவித்தனர். இது போன்ற புரட்சிகரமான செயல்களை மேலே குறிப்பிடப்பட்ட சமூகச் சம உரிமைச் சங்கத்தின் மூலம் செய்தனர். இச்சங்கத்தில் எல்லாச் சமூகத்தைச் சேர்ந்தவர்களும் உறுப்பினராக இருந்தனர். இச் சங்கத்தைச் சேர்ந்த ஒவ்வொரு உறுப்பினரும் சங்கத்திலுள்ள பிற உறுப்பினர்களைத் தத்தம் வீட்டிற்கு விருந்திற்கு அழைத்திட வேண்டும். இதன் மூலம் உயர்வு தாழ்வு கற்பிக்கும் சாதியப் போக்கு அழித்தொழிக்கப் படும் என்று கருதப்பட்டது.

1927 நவம்பர் 4ஆம் நாள் பம்பாய் தாமோதர் அரங்கில் ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. அப்போது இந்தியாவிற்கு வருகை தந்திருந்த பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினரும் தொழிற்கட்சி அங்கத்தினருமான மார்டி ஜோன்ஸ் அவர்களுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. ஸ்காட்லாந்து, அயர்லாந்து, இங்கிலாந்து ஆகிய வற்றின் மொத்த மக்கள் தொகையைவிட அதிக எண்ணிக்கையில் இந்தியாவில் இருக்கிற தீண்டப்படாத வகுப்பு மக்கள் விலங்கினும் இழிந்த அவல நிலையில் வாழ்வதைக் கண்டு வருந்துவதாக அவர் கூறினார். சிறந்த கல்வியும் ஆற்றலும் வாய்ந்த ஒரு பெரும் தலைவர் தீண்டப்படாதவர்களிடையே தோன்றியுள்ளார். இவர் தீண்டப்படாதவர்களின் அடிமை விலங்கை உடைத்தெறிவார் என்று, அம்பேத்கரைக் குறிப்பிட்டு, மார்டி ஜோன்ஸ் கூறினார்.[33]

மகத் போராட்டத்திற்கான தயாரிப்பு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த அதே நேரத்தில், அம்ரோதியில் (அமராவதி) கோயில் நுழைவுப் போராட்டமும் தலைதூக்கியது. கடந்த மூன்று மாதங்களா கவே இப்போராட்டம் கொதித்துக்கொண்டிருந்தது. கோயில் நுழைவுப் போராட்ட அமைப்பாளர்கள் தாங்கள் போராட்டம் நடத்த இருப்பது பற்றி அம்பா தேவி கோயில் அறங்காவலர்களுக்கு எழுத்து வடிவில் முன்னறிவிப்புச் செய்துவிட்டனர். ஆகஸ்டு 21ஆம் நாள் அறங்காவலர்களிடமிருந்து இதற்கான பதில் வந்தது. நெடுங்காலமாக இருந்து வரும் இவ்வழக்கத்தை மாற்ற முடியாது என்றும், அதனால் தீண்டப் படாத மக்களைக் கோயிலினுள் அனுமதிக்க முடியாது என்றும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந் தது. அதன்பின் டாக்டர் பஞ்சாப் ராவ் தேஷ்முக், மற்றும் பீராரின் கோயில் நுழைவு இயக்கத் தலைவர்களும், தீண்டப்படாத வகுப்பு மக்களின் தலைவர் ஜி.ஏ. கவாய் அவர்களும் இதுபற்றி விவாதிக்க அம்ரோதியில் ஒரு கூட்டத்தைக் கூட்டினர். ஒரு சமரச உடன்பாடு முன் மொழியப்பட்டது. ஆனால் இறுதியில் இது கைகூடவில்லை. கோயில் நுழைவு இயக்கத்தின் முன்னணித் தலைவர்கள்

போராட்டத் திட்டத்தைப்பற்றி இறுதி முடிவு எடுப்பதற்காக ஒரு மாநாட்டை நடத்துவது என்று முடிவெடுத்தனர். இதற்கேற்ப 1927 நவம்பர் 13ஆம் நாள் அம்ரோதியில் இந்திரா பவன் தியேட்டரில் கோயில் நுழைவு ஆதரவு மாநாடு நடைபெற்றது. இதற்குத் தலைமை தாங்குமாறு அம்பேத்கர் அழைக்கப்பட்டார். தொடர் வண்டி நிலையத்தில் தீண்டப்படாதவர்களின் தலைவரான அம்பேத் கரை வரவேற்க மாபெரும் கூட்டம் திரண்டது. மிகுந்த பரபரப்புக்கி டையே மாநாட்டு நடவடிக்கைகள் தொடங்கின. பாரிஸ்டர் திக்கடே, அரசு வழக்கறிஞர் சௌபால், கே.பி. தேஷ்முக், தியோராவ் நாயக், டி.வி. பிரதான், ஆர்.டி. கௌலி ஆகியோர் இம் மாநாட்டில் கலந்துகொண்டனர். டாக்டர் பஞ்சாப் ராவ் தேஷ்முக் தன் அறிமுக உரையில் இம்மாநாடு நடைபெறுவதற்கான வரலாற்றை விளக்கினார். அம்பேத்கரை இம் மாநாட்டிற்குத் தலைமை ஏற்குமாறு முன்மொழிந்தார்; நானா சாகிப் அமிர்த்கர் வழிமொழிந்தார்.

பெரும் கரவொலிக்கிடையே தலைமை உரையை நிகழ்த்த அம்பேத்கர் எழுந்தார். கோயிலில் உள்ள கடவுள் சிலையைத் தொழுதிட விரும்பும் எவர்க்கும் வேறுபாடோ, தங்குதடையோ, நிபந்தனையோ இல்லாமல் சிலையின் அருகில் சென்று வணங்கிடும் உரிமை இருக்க வேண்டும் என்றார். தென் ஆப்பிரிக்காவில் இந்தியர்கள் நிறத்தின் பெயரால் இரயிலில் ஒதுக்கப்பட்ட பெட்டி களில் பயணம் செய்ய வற்புறுத்தப்பட்டபோது இந்துக்கள் இங்கே அதை எவ்வாறு கண்டித்தனர் என்பதை அம்பேத்கர் மாநாட்டில் நினைவூட்டினார். ''நாங்கள் எதை மிகவும் வலியுறுத்துகிறோமெ னில், கடவுளை வணங்குவதால் எந்த அளவிற்கு நீங்கள் மனநிறைவு அடைகிறீர்கள் என்பது அன்று எங்கள் கவலை; தீண்டப்படாதவன் கோயிலினுள் நுழைந்தால் கோயில் தீட்டுப் பட்டுப்போகும் என்பதோ கடவுள் சிலையின் புனிதம் பாழ்பட்டு விடும் என்பதோ இருக்கக்கூடாது. அதனால்தான் எமக்கெனத் தனிக் கோயில் ஏற்படுத்தும் எண்ணத்தை எதிர்க்கின்றோம். இருக்கின்ற கோயிலினுள் செல்லும் உரிமைக்காகப் போராடுகின் றோம்'' என்று பேசினார்.

சட்டத்தில் இதுகுறித்து உள்ள நிலையை விளக்கிப் பேசினார். தீண்டப்படாதவர்களின் உதவியுடன் கோயில் கட்டப்படவில்லை என்பது உண்மைதான். ஆயினும் கோயில் என்பது எல்லா இந்துக்களுக்கும் உரியது; இந்து மதத்தின் நன்மைக்காக இருப்பது என்பதால் எல்லோரும் நுழைய அனுமதிக்கப்பட வேண்டும்.

சில இடங்களில் கோயில் தனியார் சொத்தாக இருந்த போதிலும் எல்லா இந்துக்களின் பயன்பாட்டிற்கும் அது உரியதாக இருக்கிறது. 'தீண்டப்படாத இந்துக்கள்' என்று அழைக்கப்படுவதால் இக் கோயில்களில் உள்ள தெய்வங்களை வழிபடுவதற்கு இவர்களுக் கும் உரிமை இருக்கிறது எனத் தன் உரையில் குறிப்பிட்டார்.

அதன்பின் கோயில் நுழைவுகுறித்த கலாச்சாரத் தொடர்பான செய்திகளை விளக்கினார். ''இந்துக் கலாச்சாரம் எவ்வாறு மேல்சாதி இந்துக்களுக்கு உரியதாக இருக்கிறதோ அதே தன்மையில் தீண்டப்படாத வகுப்பு இந்துக்களுக்கும் உரியதாகும். வியாத கீதையை எழுதிய தீண்டப்படாதவரான வால்மீகியும், சொக் மேளா, ரோகிதாசு போன்றோரும் பார்ப்பனரான வசிஷ்டர், சத்திரியரான கிருஷ்ணன், வைசியரான ஹர்ஷர், சூத்திரரான துக்காராம் ஆகியோரைப் போலவே இந்துக் கலாசாரத்தின் வளர்ச்சிக்கும் பெருமைக்கும் பெரும் பங்களிப்பைச் செய்துள்ள னர். இந்துக்களைக் காப்பாற்றுவதற்காகச் சித்நாக மகார் போன்ற எண்ணற்ற வீரர்கள் போர் புரிந்துள்ளனர். இந்துக் கலாச்சாரத்தின் பெயரால் கட்டப்பட்ட கோயில் தீண்டப்படாத - தீண்டப்படக் கூடிய ஒரு பிரிவு இந்துக்களின் தியாகத்தால்தான் வளர்ந்து வளம் பெற்றது. அதனால் சாதிப் பாகுபாடு பாராட்டாமல் எல்லா இந்துக்களும் கோயிலினுள் நுழைய அனுமதிக்கப்பட வேண்டும்'' என்றும் விளக்கினார்.

இந்த உண்மையை உணர்ந்துவிட்டால், நெடுங்காலமாகத் தீண்டப்படாதவர்கள் கோயிலுக்குள் நுழையாமல் இருந்தார்கள் என்ற காரணங்காட்டி, இப்போது இவர்கள் கோயிலினுள் செல்லக் கூடாது என்று கூறமாட்டார்கள். ஒருவர் ஒரு தெரு வழியாகப் பல ஆண்டுகளாக நடந்து செல்லவில்லை என்ற காரணங்காட்டி அவரை இப்போது அத்தெரு வழியாக நடந்து செல்லக்கூடாது என்று எப்படித் தடுக்க முடியாதோ அது போன்றதுதான் கோயில் நுழைவுத் தடுப்பும் ஆகும். வீதியைப் பயன்படுத்துவதில் உள்ள நீதியே கோயில் நுழைவிலும், பொதுக்குடிநீர் நிலைகளிலும் இருக்க வேண்டும்'' என்று கூறி முடித்தார்.

அடுத்த நாள் மாநாட்டின் அம்ரோதி சத்தியாக்கிரகத்தை மூன்று மாதங்களுக்கு மிகாமல் தள்ளிப் போடுவது என்று தீர்மானிக்கப் பட்டது. டில்லி மேலவை உறுப்பினராகவும் அம்பா தேவி கோயில் நுழைவுப் போராட்டக் குழுவின் தலைவராகவும் இருந்த ஜி.எஸ். காப்பர்டே அவர்களின் கருத்துப்படி இந்த முடிவு

எடுக்கப்பட்டது. அம்பேத்கருக்குப் பாராட்டுதல்கள் தெரிவிக்கும் நிகழ்ச்சியுடன் மாநாடு முடிவுற்றது. பம்பாய் புறப்பட்டுச் செல்லுமுன் ''மராட்டிரகேசரி''யின் ஆசிரியர் சவானும், கே.பி. தேஷ்முக்கும் ஏற்பாடு செய்திருந்த தேநீர் விருந்தில் அம்பேத்கர் கலந்துகொண்டார்.

இந்த மாநாடுபற்றிக் குறிப்பிடவேண்டிய மற்றொரு செய்தியுள் ளது. நவம்பர் 14ஆம் நாள் காலை அம்பேத்கர் அவர்களின் அண்ணன் பாலா சாகிப் இறந்துவிட்ட செய்தி அம்ரோதிக்குத் தந்திமூலம் வந்தது. அதனால் அவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாநாட்டு நிகழ்ச்சி சிறிது நேரம் ஒத்திவைக்கப்பட்டது.

அம்பேத்கரின் அண்ணன் பாலாசாகிப் நல்ல உடற்கட்டும் அஞ்சா நெஞ்சமும் எவருடனும் அன்பாகப் பழகும் பண்பும் சுறுசுறுப்பும் மிக்கவர். இடையறாது படித்துக்கொண்டேயிருக்கும் பழக்கம் உடையவர்; சிறந்த பேச்சாளர்; பல பணிகளை ஏற்று அவற்றில் தன் முத்திரையைப் பதித்தவர்; இராணுவத்தில் பேண்டு வாசிப்பவர்; இசைக்கலைஞர்; பம்பாய் நகராட்சியில் எழுத்தர் என்று வாழ்வில் பல்வேறு அனுபவங்களைப் பெற்றவர். ஆனால் அவருடைய இரு மனைவியரும் ஒரே மகனும் இறந்துவிட்டனர். ஒரு மகள் மட்டுமே உயிரோடு இருந்தாள். பணியிலிருந்து ஓய்வு பெறுவதற்கு ஆறு மாதங்களுக்கு முன் தன் அய்ம்பத்தைந்தாவது வயதில் இறந்துவிட்டார். அம்பேத்கர் இரண்டாம் முறை இங்கிலாந்தில் தங்கியிருந்தபோது, பலராம், தீண்டப்படாதவர்களின் வீறுமிக்க தலைவராக விளங்கினார். ஆனால் இவரிடம் இருந்த சில தீயப் பழக்கங்கள் காரணமாக அண்ணன் தம்பி உறவில் கசப்பு ஏற்பட்டிருந்தது. ஆயினும் அம்பேத்கர் அம்ரோதியிலிருந்து பம்பாயை அடைந்ததும், அவருடைய அண்ணனுடைய இறுதிச் சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

III

மகதில் மாநாடும் சத்தியாக்கிரகமும் நடத்துவதற்கான நாள் நெருங்கிக்கொண்டிருந்தது. மகத் மீண்டும் கிளர்ந்தெழுந்தது. இப் போராட்டத்தை எதிர்த்தவர்கள் 1927 நவம்பர் 27ஆம் நாள் வீரேசுவரர் கோயிலில் ஒரு கூட்டத்தைக் கூட்டினர். அம்பேத்கரும் தீண்டப்படாதார் வகுப்பு மக்களும் சௌதார் குளத்திலிருந்து தண்ணீர் எடுக்கவிடாமல் தடுப்பது எப்படி எனத் திட்டம் தீட்டிட முயன்றனர். தீண்டப்படாதவர்களுக்கான ஆதரவாளர்களும் இக்

கூட்டத்தில் இருந்ததால் இக்கூட்டம் குழப்பத்தில் முடிந்தது. பூனாவிலிருந்து வந்திருந்த இந்துத் தலைவர்கள் சிலர் இப் போராட்டத்தை எதிர்க்கவேண்டாம் என்று அறிவுறுத்த முயன்றனர். ஆயினும் வெறியர்கள் இதற்குச் செவிசாய்க்கவில்லை.

டிசம்பர் 7ஆம் நாள் மாவட்ட நீதிபதி மகதிற்கு வந்தார். இப்போராட்டம்பற்றி இரு தரப்புத் தலைவர்களும் அவருடன் பேசினார்கள். சாதி இந்துக்கள் சட்டத்துடன் இணங்கிப் போக வேண்டும் என்று அவர் கூறினார். மேலும் சௌதார் குளத்திலிருந்து தீண்டப்படாதவர்கள் தண்ணீர் எடுப்பதைத் தடுப்பதற்கான தடை ஆணையைப் பிறப்பிக்க மறுத்தார். ஆகவே மதவெறி கொண்ட தலைவர்கள் 1927 டிசம்பர் 12ஆம் நாள் மகதில் உரிமையியல் நீதி மன்றத்தில் இடைக்காலத் தடை விதிக்கக் கோரி அம்பேத்கர், சிவதார்க்கர், கிருஷ்ணாஜி, எஸ். காதம் மகதைச் சார்ந்த கன்யமாலு சாம்பார் ஆகிய தீண்டப்படாத வகுப்புத் தலைவர்கள் மீது வழக்குத் தொடுத்தனர். இந்த வழக்கின் மீது இறுதித் தீர்ப்பு கூறப்படுகின்ற வரையில் செயல்படும் இடைக் காலத்தடை ஆணை ஒன்றை டிசம்பர் 14ஆம் நாள் மகத் நீதிமன்றம் போராட்டத்தினருக்கு எதிராக வழங்கியது. இதன்படி மறு ஆணை வழங்கப்படும் வரையில் தீண்டப்படாத வகுப்பு மக்களோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளோ சௌதார் குளத்திற்குச் செல்லவோ அதிலிருந்து தண்ணீர் எடுக்கவோ கூடாது என்று விதிக்கும் தடை ஆணை அம்பேத்கர், சிவதார்க்கர், கிருஷ்ணாஜி, எஸ். காதம் ஆகியோருக்கு நேரில் வழங்கப்பட்டது. பிற்போக்கு மதவெறிக் கும்பல் மிகத் தந்திரமாக அம்பேத்கர் இரு முனைகளிலும் நின்று போராட வேண்டிய நிலையை உருவாக்கிவிட்டது. ஒருபுறம் இதில் அக்கறையற்ற அன்னிய ஆங்கில அரசு, மறுபுறத்திலோ பார்ப்பனர் கள் தலைமையிலான மாறுதலை எதிர்க்கும் இந்துமத வெறிக் கும்பல்!

மகதில் மாநாடு நடைபெறுவதற்கான எல்லா ஏற்பாடுகளும் விரிவாகச் செய்யப்பட்டன. மாநாட்டிற்கான பந்தலை அமைத்திட இந்து நிலக்கிழார் எவரும் இடம் தர மறுத்தனர். எனவே மிகவும் முயன்று ஒரு முஸ்லிமிடமிருந்து நிலத்தைப் பெற்றனர். உள்ளூர் வணிகர்கள் மாநாடு தொடர்பாக ஒத்துழைப்புத் தர மறுத்துவிட்ட னர். எனவே வரவேற்புக் குழுவினர் பத்து நாட்களுக்குப் போதுமான தானியத்தையும் மற்ற உணவுப் பொருட்களையும் வெளியிலிருந்து வாங்கி வந்தனர். ஆனந்தராவ் சைத்ரே இப்பணி யைத் திறம்படச் செய்தார். உணவு ஏற்பாடு செய்தலும்



ஜோதிராவ் புலே
அம்பேத்கர் குருவாகக் கருதிய மூவருள் ஒருவர்.



சாகு மகாராஜ்
அம்பேத்கரின் உயர்வுக்கு உறுதுணை நின்றவர்

ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் நிலைநிறுத்தலும் சுபேதார் கட்சியிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. அரசின் எல்லாத் துறைக ளையும் சேர்ந்த மாவட்டத் தலைமை நிர்வாக அதிகாரிகள் டிசம்பர் 19ஆம் நாள் மகதில் குழுமினர். சௌதார் குளத்தைச் சுற்றி எல்லாப் பக்கங்களிலும் காவல் துறையினர் நிறுத்தப்பட்டனர். டிசம்பர் 21 முதல் மாநாட்டின் பிரதிநிதிகளும், பார்வையாளர்களும் மகதிற்கு வந்து குவியத் தொடங்கினர். மாவட்ட நீதிபதி அன்றாடம் அவர்களின் முகாமிற்கு வந்து அவர்கள் மேற்கொள்ளவுள்ள போராட்டத்தைக் கைவிடுமாறு கோரினார்.

தொண்டர்களும் தலைவர்களும் அடங்கிய இருநூறு பேர் கொண்ட குழுவுடன் டிசம்பர் 24ஆம் நாள் அம்பேத்கர் பம்பாயை விட்டுப் பயணமானார். மறுநாள் நண்பகலில் மகதிலிருந்து அய்ந்து கல் தொலைவில் உள்ள தாஸ்கான் நிலையத்தில் அம்பேத்கர் குழுவினர் இறங்கினார்கள். தலைவரின் வரவினை எதிர்நோக்கி மூவாயிரம் சத்தியாக்கிரகத் தொண்டர்கள் பேரார்வமுடன் காத்திருந்த னர். தங்களுடைய தலைவரைக் கண்டதும் மகிழ்ச்சி பொங்கக் கைதட்டி ஆரவாரம் செய்து அன்புடன் வரவேற்றனர்.

வரவேற்பு முடிந்தபின் காவல்துறைக் கண்காணிப்பாளர் மாவட்ட நீதிபதியின் கடிதத்தை அம்பேத்கரிடம் அளித்தார். உடனடியாக மகதில் உள்ள அலுவலகத்தில் தன்னைச் சந்திக்குமாறு மாவட்ட நீதிபதி அக்கடிதத்தில் அம்பேத்கரைக் கேட்டுக்கொண்டி ருந்தார். அதன்படியே தன் தளபதிகளில் ஒருவரான சகர்சரபுதேயு டன் மாவட்ட நீதிபதி அலுவலகத்துக்கு விரைந்தார். மாவட்ட நீதிபதி சிறிதும் காலந்தாழ்த்தாமல் தெளிவாகவும் மென்மையான குரலிலும் இப்போராட்டத்தைத் தள்ளி வைக்குமாறு காரண காரியங்களுடன் வலியுறுத்தி அறிவுரை கூறினார். ஆனால் மாவட்ட நீதிபதியின் கருத்துக்கு அம்பேத்கர் உடன்படவில்லை. எப்படியி ருப்பினும், மாநாட்டில், அம்பேத்கர் பேசுவதற்கான வாய்ப்பு தருவதென முடிவு செய்யப்பட்டது. இதற்கிடையில் அம்பேத்கரு டன் பம்பாயி லிருந்து வந்த குழுவினரும் மூவாயிரம் தொண்டர்க ளும் காவல் துறையினர் புடைசூழத் தாஸ்கானிலிருந்து ஊர்வலமா கப் புறப்பட்டு எழுச்சிப் பாடல்களைப் பாடிக்கொண்டும் இடை யிடையே விண்ணதிர முழக்கமிட்டவாறும் பிற்பகல் இரண்டரை மணியளவில் மகதை அடைந்தனர். பெருந்திரளான மக்கள் 'சிவாஜி மகராஜ் வாழ்க!' என்று முழக்கமிட்டவாறு மாநாட்டின் பந்தலுக்குள் நுழைந்தனர். பந்தலின் தூண்களில் நறுக்குத் தெறித்தாற்போன்ற மணி மொழிகள் எழுதப்பட்ட அட்டைகள் தொங்கவிடப்

பட்டிருந்தன. நுழைவாயிலின் முன்னால் ஒரு குழி தோண்டப் பட்டிருந்தது.

மாவட்ட நீதிபதியைச் சந்தித்த பின் அம்பேத்கர் மாநாட்டுப் பந்தலுக்கு விரைந்தார். தனியான சிறப்பு உணவு வேண்டாம் என்று மறுத்துவிட்டு மற்ற சாதாரணத் தொண்டர்களோடு சேர்ந்து உணவுகொண்டார்.

மாநாடு மாலை நான்கரை மணிக்குத் தொடங்கியது. சத்தியாக் கிரகம் வெற்றிபெறவேண்டுமென்று வாழ்த்தி முக்கியத் தலைவர்கள் அனுப்பிய செய்திகள் படிக்கப்பட்டன. அங்கே கூடியிருந்த பதினைந்தாயிரம் மக்களும் செவிப்பறை கிழியுமாறு முழக்கங்கள் எழுப்பிட, கைதட்டி மகிழ்ச்சி ஆரவாரம் செய்திட, மாநாட்டின் தலைவர் அம்பேத்கர் எழுந்தார். கூடியிருந்தவர்களில் பெரும் பாலோர் மேலாடை அணிந்திருக்கவில்லை. அவர்களுடைய பழைய தலைப்பாகைகள் கிழிந்திருந்தன; மயிர் மழிக்கப்படாத முகங்கள்; சூரிய ஒளியால் சுடப்பட்டுக் கறுத்திருந்த கன்னங்கள், ஆர்வத்தா லும் நம்பிக்கையாலும் ஒளி வீசின. பேராரவாரத்திற்குப் பின் அரங்கில் அமைதி நிலவியது. மென்மையான, மேன்மை தொனிக் கின்ற ஆனால் அழுத்தமான குரலில் தன் உரையைத் தொடங்கிய அம்பேத்கர், "எங்கள் சத்தியாக்கிரகத்தை எதிர்ப்பவர்களுக்கு முதலில் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். சௌதார் குளத்திலிருந்து தண்ணீரைக் குடிக்காவிட்டால் நாங்கள் செத்துப் போக மாட்டோம். இப்பொழுது குளத்திற்கு எதற்காக நாங்கள் செல்ல விரும்புகிறோம் என்றால், நாங்களும் மற்றவர்களைப் போன்ற மனிதர்கள்தாம் என்பதை உறுதி செய்வதற்காகத்தான்" என்று கூறினார்.

சமூகச் சமத்துவத்தின் புதிய அத்தியாயத்தை இந்த நாட்டில் தொடங்குவதற்காகவே மகத் மாநாடு கூட்டப்பட்டுள்ளது என்றார். இந்தப் போராட்டத்தைப் பிரான்சு நாட்டு வரலாற்று நிகழ்ச்சி ஒன்றுடன் ஒப்பிட்டுப் பேசினார். பிரான்சு நாட்டில் மக்களின் பிரதிநிதிகள் வெர்செய்ல்சில் கூடி மனித உரிமைகள்பற்றிப் பிரகடனம் செய்தனர். சமூக, மத, அரசியல் ஆதிக்கத்திற்கு எதிராகப் புரட்சி செய்யுங்கள் என்று அறைகூவல் விடுத்தனர். எல்லா மனிதர்களும் பிறக்கும்போது சமமாகப் பிறப்பதைப் போலவே சாவிலும் சமத்துவமாக இருக்கிறார்கள் என்று அறிவித்தனர். இந்த மனித உரிமைகளைப் பாதுகாத்துப் பேணுதலே அரசியலின் தலையாய கொள்கையாக இருக்க வேண்டும் என அம்பேத்கர்

சுட்டிக் காட்டினார். ''தீண்டாமை ஒழிப்பும் சமபந்தி விருந்தும் நம் இன்னல்களை நீக்கி விடமாட்டா. நீதித்துறை, இராணுவம், காவல்துறை, வணிகத்துறை போன்ற அனைத்து அரசுத்துறைகளி லும் தடையின்றி நமக்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டும்'' என்று கூறினார். ''சாதியம் அற்ற-சமத்துவம் நிறைந்த கொள்கைகளின் அடிப்படையில் இந்துச் சமூகம் திருத்தி அமைக்கப்பட வேண்டும்'' என்று கூறி உரையை முடித்தார்.

இம்மாநாட்டின் முதலாவது தீர்மானம் மனித உரிமைகள் பற்றியதாகும். அநீதியும், மத ஆணவமும், அரசியல் பிற்போக்குத் தனமுழ், பொருளாதாரப் பற்றாக்குறையும் ஒரு நாட்டை எந்த அளவிற்குச் சீரழிக்கும் என்பதற்கு இந்தியா இரங்கத்தக்க எடுத்துக் காட்டான நாடாக விளங்குகிறது என்று மாநாட்டில் அறிவிக்கப் பட்டது. இத்தீமைகளிலிருந்து விடுபடுவதற்குள்ள ஒரே வழி பிறந்ததுமுதல் இறக்கும்வரை அனைவரும் சமம் என்ற கொள்கை யைக் கடைப்பிடித்தலேயாகும். சமூகத்தில் உயர்வு தாழ்வு கொள்கையைப் போற்றுகின்ற பழைய மற்றும் புதிய இந்துமதத் தத்துவ நூல்கள் அனைத்தின் ஆதாரத் தன்மையையும் மாநாடு மறுத்தது. இந்த மத நூல்களின்படியே இன்றுள்ள சமூகத்தில் நாம் நடக்க வேண்டும் என்பதற்கு மாநாடு எதிர்ப்பைத் தெரிவித்தது. இத் தீர்மானத்தைச் சிவதார்க்கர் முன் மொழிந்தார்; பாவ்ராவ் கெய்க்வாடு, என்.டி. ஜெதேவ், திருமதி கங்குபாய் சவந்த் ஆகியோர் வழிமொழிந்தனர்.

அதன்பின் இந்துப் பிற்போக்காளர் மீது கடுமையான தாக்குதல் தொடுக்கப்பட்டது. வேதங்களைப் படிக்கும் அல்லது பக்கத்தில் நின்று கேட்கும் சூத்திரர்களின் காதில் காய்ச்சிய ஈயத்தை ஊற்ற வேண்டும் என்று மனுநீதி சொல்லுகிறது. சூத்திரர்களின் வளர்ச் சியை மழுங்கடித்துச் சுயமரியாதையைப் பாழ்படுத்தி அவர்கள் சமூக, பொருளியல், மத, அரசியல் துறைகளில் என்றென்றும் அடிமைகளாக நிலைத்திருக்கும்படிச் செய்துவிட்ட மனுநீதியை மக்கள் முன்னிலையில் தீயிட்டுக் கொளுத்த வேண்டும் என்று மாநாடு தீர்மானித்தது. இத்தீர்மானத்தின் பேரில் சகஸ்ர புதே, ராஜ் போஜ், தோரட் ஆகியோர் அனல் கக்கப் பேசினர். சாதி இந்துக்களால் மிகவும் புனிதமாகப் போற்றப்படுகின்ற - தீண்டப் படாத வகுப்பு மக்களால் பெரிதும் வெறுக்கப்படுகின்ற மனுஸ்மி ருதி மாநாட்டில் கடுங்கண்டனத்திற்குள்ளாயிற்று. இந்துக்களின் வாழ்வு மற்றும் வாழ்க்கைச்சட்டங்களின் பேரில் ஆட்சி செலுத்து வது மனுஸ்மிருதிதான். 1500 ஆண்டுகளுக்கு முன் வகுக்கப்பட்டது

இது. என்றாலும் காலங்கள் மாறிய பிறகும் இன்றளவும் மனுஸ்மிருதி கடவுள் போன்று நீக்கமற எங்கும் நிறைந்துள்ள சிறந்த ஒன்றாகப் பழைமைவாதிகளால் கருதப்படுகிறது.

பார்ப்பனர் அல்லாதார்மீதும் ஆதிசூத்திரர்மீதும் மனுஸ்மிருதியின் விதிகளை இரக்கமின்றித் திணிப்பவர்களே அதன் விதிகள் அனைத்தையும் மீறியிருக்கிறார்கள். இப்படிச் சொல்லிக்கொள்பவர்கள் தாங்களே உயர்ந்தவர்கள் என்று பெருமையடித்துக் கொள்கிறார்கள். இரசாயனப் பொருள்கள், நீர்ப் பொருள்கள், வண்ணத் துணிகள், பூக்கள், மணப் பொருள்கள், ஆயுதங்கள் ஆகியவை தொடர்பான வணிகத்தில் பார்ப்பனர்கள் ஈடுபடக்கூடாது என்று மனுஸ்மிருதி தடை விதித்துள்ளது. ஆனால் துணிக்கடை, மருந்துக்கடை, பால்கடை, உணவு விடுதி, மணப்பொருள்கள் விற்பனை, இரும்புக் கடை ஆகிய தொழில்களை ஒரு பார்ப்பான் செய்யும்போது சமூகத்தில் அவனுடைய உயர்ந்த புனிதமான பெருமையை இதனால் இழப்பதில்லை. துணி ஆலை ஒன்றைத் தொடங்கிட ஆதரவளித்த திலகர் வேதம் படிக்கும் உரிமையை அல்லது வேதவழிப்பட்ட வழிபாட்டுரிமையைப் பார்ப்பனர் அல்லாதார் பெறுவதை ஏற்க மறுத்துவிட்டார்.

இத்தீர்மானத்தை முன்மொழிந்த சகஸ்ர புதே மனுஸ்மிருதியை முற்றிலுமாகக் கண்டித்தார். ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களின் கண்ணோட்டத்தில் மனுஸ்மிருதி சமத்துவமின்மையின், கொடுமையின், அநீதியின் அடையாளமேயாகும் என்றார். மாநாட்டில் பேசிய அனைவரும் ஈவிரக்கம் காட்டாமல் அதன் கட்டளைகளை முழுவதுமாகக் கண்டித்தனர்; கடுஞ்சொற்களால் கண்டித்ததுடன் அவர்களின் சினம் தணியவில்லை. இரவு ஒன்பது மணிக்கு மாநாட்டுப் பந்தலின் முன் தோண்டப்பட்டிருந்த குழியில் மனுஸ்மிருதி, ஒரு சிதைக்குத் தீயிடுவது போன்று, தீண்டப்படாத துறவிகளால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது.

இந்தப் புரட்சிகரமான செயல் இந்தியாவில் போலி அறிஞர்கள், பண்டிதர்கள், ஆச்சாரியர்கள், சங்கராச்சாரிகள் போன்றோரைக் கதிகலங்கச் செய்தது. பார்ப்பனியத்தின் கடும் எதிர்ப்பாளரான பாஸ்கரராவ் ஜெதேவ் போன்றவர்களின் நாடி நரம்புகளில் ஒரு பேரதிர்ச்சியை ஏற்படுத்தியது. மத நூல்களில் தீமையை விட நன்மைகளே மிகுதி; அதனால் அவற்றின்மீது இப்போது தொடுக்கப்பட்டுள்ள தாக்குதல் மிகவும் வரம்பு மீறிய செயலாகும் என்று பாஸ்கரராவ் ஜெதேவ் கருத்துத் தெரிவித்தார்.

அம்பேத்கர் காலம் முழுவதும் சிலை வழிபாட்டை மறுத்தவர். பாழடைந்த புகலிடங்களில் இருந்த பொய்க் கடவுள்களைச் சம்மட்டியால் அவர் அடித்து நொறுக்கினார். மதவெறியர், சடங்குகளின் பெயரால் வயிறு வளர்ப்போர், மாற்றத்தை எதிர்ப்போர் ஆகியோர் மீது மார்ட்டின் லூதர் தொடுத்த தாக்குதலுக்குப் பின்னர் மதத்தின் போலியான புனிதத்தின் மீது தொடுக்கப்பட்ட போர் இதுவேயாகும். இந்திய வரலாற்றில் 1927 டிசம்பர் 25ஆம் நாள் சிவப்பு எழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய ஒன் றாகும். ஏனெனில் அன்றுதான் அம்பேத்கர் பழைய ஸ்மிருதியைக் கொளுத்திவிட்டு, வெகுமக்களின் வாழ்க்கைக்கான புதிய இந்துச் சட்டத்தை உருவாக்க வேண்டும் என அறிவித்தார். மகத் இந்தியாவின் விட்டன் பர்க் ஆயிற்று.

இந்துச் சமூகம் ஒரே வகுப்பு என்று ஆகிட வேண்டும் என மூன்றாவது தீர்மானம் கோரியது. தற்போதுள்ள புரோகித முறை சனநாயக அமைப்பாக மாற்றப்பட வேண்டும். விரும்புகின்ற எவரும் புரோகிதராகிட வாய்ப்பு இருக்க வேண்டும் என்று நான்காவது தீர்மானம் கூறியது.

அடுத்த நாள் காலை நிகழ்ச்சிகள் தொடங்கியபோது சத்தியாக்கிரகப் போராட்டம்பற்றிய தீர்மானத்தை அம்பேத்கர் முன்மொழிந்தார். மேற்கொள்ளவுள்ள சத்தியாக்கிரகத்தின் பரிமாணம்பற்றியும், போராட்டத்தால் ஏற்படக்கூடிய விளைவுகள்பற்றியும் அம்பேத்கர் நன்கு உணர்த்தினார். கையில் தடி ஏந்திச் செல்லாதீர்; ஒவ்வொருவரும் கட்டுப்பாட்டைத் தவறாமல் கடைப்பிடியுங்கள் என்று பிரதிநிதிகளை அவர் கேட்டுக்கொண்டார். ஒவ்வொரு சத்தியாக்கிரகியும் கைதாக வேண்டியிருக்கும்; அந்நிலையில் மன்னிப்புக்கேட்பதோ, விடுதலை செய்யும்படிக் கெஞ்சுவதோ கூடாது என்று கூறினார். ''உங்களுடைய மதிப்பையும் உரிமைகளையும் நிலைநாட்டுவதற்காக இந்தத் தாக்குதலைத் தொடுக்கத் தயாராக இருப்பதைப் பார்க்கும்போது என் உள்ளம் மகிழ்ச்சியால் துள்ளுகிறது. இதில் நாம் வெற்றி பெறுவோம் என்பதில் எனக்கு அய்யமில்லை. இந்தப் போராட்டத்தில் நீங்கள் பங்கேற்பதால் சந்திக்க வேண்டியுள்ள துன்பங்கள், இன்னல்கள் பற்றி நன்கு சிந்தித்துப்பார்த்து அதன்பின் இப்போராட்டத்திற்கு உங்கள் ஒப்புதலைக் கொடுங்கள். இவ்வுலகில் பெருமுயற்சியின்றி அரிதான எந்த ஒன்றையும் அடைய முடியாது என்பதை நினைவில் கொள்ளுங்கள்'' என்று கூறினார். சத்தியாக்கிரகத்திற்கு ஆதரவாகப் பன்னிரண்டு பேரும், எதிராக நான்கு பேரும் பேசினார்கள்.

இறுதியில் அம்பேத்கர், தீர்மானத்தின் மீதான விவாதத்தைத் தொகுத்துப் பேசியபோது, பெரும்பாலோர் சத்தியாக்கிரகத்திற்கு ஆதரவாக இருக்கிறார்கள்; சிலரே வேண்டாம் என்கிறார்கள் எனக் குறிப்பிட்டார். "நான் எச்சரிக்கையாகச் சொல்கிறேன். நான் சொல்லுகிறேன் என்பதற்காக நீங்கள் போராட்டத் தீயில் குதிக்காதீர் கள். இந்தப் போராட்டத்தின் நியாயம்பற்றி உங்களுக்கு முழு நம்பிக்கை ஏற்பட்டால் மட்டும் இதைச் செய்யுங்கள். உயிரைக் கொடுத்தேனும் தீண்டாமையை ஒழிக்க விரும்புகின்றவர்களே நமக்குத் தேவை. மாவட்ட ஆட்சியாளர் பேசியதைக் கேட்டபிறகும் போராட வேண்டும் என்ற உங்கள் முடிவு உறுதியுடன் நிலைத்திருக்குமாயின் நீங்கள் இந்த அறப்போரில் குதிக்கத் தயங்கவேண்டியதில்லை" என்று கூறித் தெளிவுபடுத்தினார்.

நண்பகல் நேரம் வந்தது. மராட்டிரத்தின் புகழ்மிக்க பார்ப்பனர் அல்லாதார் தலைவர்களான ஜெதே, ஜவல்கர் இருவரும் பம்பாயிலிருந்து வருகை தந்தனர்; அவர்கள் மாநாட்டுப் பந்தலுக்குள் நுழைந்தனர். அவர்களுடைய கருத்தைக் கூறுமாறு அம்பேத்கர் அவர்களை அழைத்தார். அவர்களும் உயர்ந்த இலட்சியத்தை முன்வைத்த இந்த அறப்போரை ஆதரித்துப் பேசினார்கள். பேரறிவாளரும் திறமை சான்றவருமான அம்பேத்கரின் தலைமையின் கீழ்த் தீண்டப்படாத வகுப்பு மக்கள் போராட முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டனர். அம்பேத்கர் அவர்களை அடிமை நிலையிலிருந்து மீட்பார் என்றும் குறிப்பிட்டனர். பகல் ஒன்றரை மணிக்கு மாநாட்டு முற்பகல் நிகழ்ச்சிகள் முடிவுற்றன.

IV

சத்தியாக்கிரகத்தில் பங்குகொள்ள விரும்புகிறவர்களின் பெயர்களைப் பதிவுசெய்யும் பணியை இருபது தொண்டர்கள் ஏற்றனர். ஒரு மணி நேரத்திற்குள்ளாகவே, 4000 பேர் போராட்டத்தில் கலந்துகொள்வதற்குத் தங்கள் பெயர்களைப் பதிவுசெய்துகொண்டனர். தங்கள் பெயரைப் பதிவுசெய்துகொள்ள வேண்டி இதைப் போல் பன்மடங்கு எண்ணிக்கையினர் வற்புறுத்தினர். ஒன்று அக்குளத்தைக் கைப்பற்ற வேண்டும் அல்லது கைதாக வேண்டும்- இந்த இரண்டில் ஒன்றைச் செய்யாமல் நான் ஊருக்குத் திரும்பமாட்டேன் என்று ஒவ்வொருவரும் சபதம் கூறினர்.

மாநாட்டில் இருந்த மக்களின் ஆவேச மனநிலைகுறித்து மாவட்ட ஆட்சியாளருக்குத் தெரிவிக்கப்பட்டது. ஏற்கனவே

திட்டமிட்டிருந்தபடி மாவட்ட நீதிபதியான மாவட்ட ஆட்சியாளர் இம்மாநாட்டிற்கு வந்து பேசினார். ''பம்பாய் மாகாணச் சட்டசபைத் தீர்மானத்தின்படி பொதுக்குளங்கள், பள்ளிகள், சாலைகள் முதலியவை எல்லார்க்கும் பொது என்று ஆக்கப்பட்டுவிட்டன. ஆனால் இந்தச் சௌதார் குளம் தனியார் சொத்து என்று கூறிப் பன்னிரண்டு பேர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளனர். ஆகவே நீங்கள் நீதிமன்றத்தின் தீர்ப்பு வரும்வரை காத்திருங்கள். கடந்த முறை உங்களைத் தாக்கியவர்கள் தண்டிக்கப்பட்டனர் என்பதை நீங்கள் அறிவீர்கள். நீங்கள் இப்போது சட்டத்தை மீறினால் அவர்களுக்கு ஏற்பட்ட அதே நிலையே உங்களுக்கும் ஏற்படும். உங்களுடைய நண்பன் என்ற முறையில் சொல்லுகின்றேன்; நீதிமன்றத் தீர்ப்பு கூறப்படுவதற்கு முன்னர் இந்தப் பிரச்சினையை மேலும் சிக்கலாக்காதீர்கள்'' என்று கேட்டுக்கொண்டார்.

உடனே ஜவல்கர் எழுந்தார். மராட்டியர்கள் சத்தியாக்கிரகத்தை ஆதரிப்பதாக அறிவித்தார். ஆனால் போராட்டத்தை இப்போது தள்ளிப் போடவேண்டும் என்று கோரினார். சுபேதார் காட்கியும் இதே தன்மையில் பேசினார். மாவட்ட ஆட்சியாளரை அம்பேத்கர் மாநாட்டுப் பந்தலிலிருந்து வழியனுப்பி வைத்தார். அன்றிரவு ஏழுமணிவரை பேசிய ஒவ்வொருவருமே சத்தியாக்கிரகத்தைத் தொடங்க வேண்டும் என்று வலியுறுத்திக் கூறினார்கள். அங்கு இதற்கு மாறுபட்ட கருத்தினைக் கூறியவர்களைக் கேலி செய்தும் ஊளையிட்டும் பிரதிநிதிகள் மறுப்புத் தெரிவித்தனர். மறுநாள் காலைவரைக்கும் மாநாட்டை அம்பேத்கர் ஒத்தி வைத்தார்.

அன்றிரவு முக்கியமான தலைவர்கள் கூடிப் பேசினர்; நீதிமன்றத்தின்முன் வழக்கு இருப்பதால் போராட்டத்தைத் தள்ளி வைப்பது என முடிவுசெய்தனர். மாநாட்டை முடித்து வைப்பதன் அடையாளமாக, ஊர்வலமாகச் சென்று குளத்தை ஒரு சுற்றுச் சுற்றுவது என்றும் தீர்மானித்தனர். இந்த முடிவு மாவட்ட நீதிபதிக்குத் தெரிவிக்கப்பட்டது. டிசம்பர் 27ஆம் நாள் மீண்டும் மாநாடு தொடங்கியது. போராட்டம் நடத்துவது என்ற முதலாவது தீர்மானத்தைத் திரும்பப்பெறுவதற்கு அம்பேத்கர் முன்வந்தார். ஊசி விழுந்தால் ஓசை கேட்கும் அளவிற்கு மாநாட்டில் ஆழ்ந்த அமைதி நிலவியது. போராட்டத்தைத் தள்ளிவைக்கக் கோரும் தீர்மானத்தை அம்பேத்கர் முன்மொழிந்தார். இருதலைக் கொள்ளி எறும்பு போன்ற நிலை அவருக்கு! மாநாட்டினரின் பேரெழுச்சியை அமைதிப்படுத்த வேண்டிய-போராட்டக்காரர்களின் மனநிலையை

அறிந்து செயல்பட வேண்டிய வேளை வந்துவிட்டது. இந்த நெருக்கடியான நிலையை மிகவும் திறமையாக அம்பேத்கர் சமாளிக்கத் தொடங்கினார். பொறுமையை இழக்கத் தொடங்கி விட்ட-உணர்ச்சி வயப்பட்டு நின்ற-மாநாட்டினரைப் பார்த்து அம்பேத்கர் பணிவான வேண்டுகோள் விடுத்தார். "நீங்கள் வீரஞ்செறிந்த இனத்தினர். தங்களின் நியாயமான உரிமைகளை நிலைநாட்டிடத் தங்களின் இன்னுயிரையும் அளிக்கத் தயாராக உள்ள மக்கள் கட்டாயம் வெற்றி குவிப்பார்கள். ஆனால் இப்பொழுது ஒரு சோதனைக் கட்டம் வந்துள்ளது. அதனால் நீங்கள் தாக்குதலைத் தொடுப்பதற்கு முன்னர் ஒரு முறைக்கு இருமுறை சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறீர்கள்" என்று கூறிவிட்டு, மேலும் தொடர்ந்து பேசினார். "காந்தியால் தொடங்கப்பட்ட சத்தியாக்கிரக இயக்கத்தைப்பற்றி நீங்கள் நன்கறிவீர்கள். அது அந்நிய ஆதிக்கத்திற்கு எதிரானது என்பதால் அதை வெகுமக்கள் ஆதரித்தனர். ஆனால் நம்முடைய போராட்டமோ பெரும்பான்மை யினராக உள்ள சாதி இந்துக் களுக்கு எதிரான போராட்டமாகும். ஆகவே வெளியிலிருந்து நமக்குக் கிடைக்கும் ஆதரவு மிகக் குறைவாக இருப்பது இயல்பே ஆகும். இந்த உண்மைகளைக் கருத்தில்கொண்டு பார்க்கும்போது அரசை நாம் பகைத்துக் கொள்ளக்கூடாது; அரசை நம் எதிரியின் பக்கத்தில் நாமே சேர்த்துவிடக்கூடாது; இவ்வாறு செய்வது பயனும் தராது" என்றார்.

"நாம் போராட்டத்தைத் தள்ளிவைப்பதன் விளைவாக அவமா னம் ஏற்பட்டுவிடும் என்று கருதாதீர்கள். என்னைப் பொறுத்தமட் டில் சட்டத்தை மீறுவது, ஒரு வழக்கறிஞருக்கு உரிய நடைமுறை விதிகளை மீறுவதால் என் பேரில் சுமத்தப் படக்கூடிய குற்றச்சாட்டு, போராட்டத்திற்காகச் சிறைவைக்கப்படுவது ஆகிய மூன்று ஆபத்துகளையும் எதிர்கொள்ள அணியமாக இருக்கிறேன். என் அன்புக்குரிய தோழர்களே! இப் போராட்டத்தைத் தள்ளிவைப் பது என்பது போராட்டத்தையே கைவிட்டு விட்டதாக ஆகாது. சௌதார் குளத்தில் நீரெடுக்க உள்ள உரிமையை நாம் நிலைநாட் டும் வரையில் நம் போராட்டம் தொடரும் என்பது உறுதி" என அறுதியிட்டுக் கூறினார் அம்பேத்கர்.

மாநாட்டில் திடீரென ஓர் ஆழ்ந்த அமைதி. பிரதிநிதிகளின் உள்ளங்களில் பெரிய உணர்ச்சி மோதல். கசப்பான ஏமாற்ற அலை மாநாட்டில் மோதிக்கொண்டிருந்தது. தலைவர் அம்பேத்கரின்

போராட்ட ஒத்திவைப்புத் தீர்மானத்தினால் சிலர் தம் நெஞ்சத்திற் குள்ளேயே புழுங்கினர். ஆயினும் மாற்றுவழி ஏதும் இல்லை. ஆகவே தலைவரின் வேண்டுதலுக்கு அமைதியாகத் தங்கள் ஒப்புதலை அளித்தனர்.

மாநாடு இத்தீர்மானத்தை ஏற்றுக்கொண்டது. பிரதிநிதிகள் ஊர்வலமாகச் செல்ல வரிசையில் நின்றனர்; ஊர்வலமாகப் புறப்பட்டனர். பம்பாய்த் தொண்டர் படை ஊர்வலத்தின் முன்வரிசையில் சென்றது. முழக்கமிட்டவாறும், கையில் தட்டிகள் ஏந்தியும் மெதுவாக நடந்தனர். ஊர்வலம் குளத்தை அடைந்தது; அதைச் சுற்றி வலம் வந்தது. அப்போது மகத் சாதி இந்துக்கள் என்ன செய்துகொண்டிருந்தனர்? மகத் வீதிகள் வெறிச்சோடிக் கிடந்தன; கதவைத் தாளிட்டுக்கொண்டு வீட்டுக்குள் சாதி இந்துக்கள் முடங்கிக்கிடந்தனர்; உள்ளத்தில் கொடிய நஞ்சைத் தேக்கிக் கொண்டு புழுப்போல் நெளிந்துகொண்டிருந்தனர். ஒன்றரை மணிநேரம் கழித்து, ஊர்வலம், நண்பகல் நேரத்தில் பந்தலுக்குத் திரும்பியது. விரும்பத்தகாத நிகழ்ச்சி ஏதும் நடைபெறவில்லை.

மகதில், அன்று மாலை சமார்கள் குடியிருப்புப் பகுதியில் அம்பேத்கர் உரையாற்றினார். நீங்கள் மானத்துடன் வாழ விரும்புகிறீர்களா? அல்லது தங்கக் கூண்டில் அடைக்கப்பட்ட வீட்டு விலங்குகளாக இருக்க விரும்புகிறீர்களா? என்று அவர் களைப் பார்த்து வினவினார். சமார்கள் செருப்புத் தைக்கும் தொழில் செய்துவந்தனர். சமார்கள் தீண்டப்படாத வகுப்பினராயினும், சாதி இந்துக்களுடன் நெருக்கமாகப் பழகும் வாய்ப்புள்ளவர்கள். அவர்கள் சிறுபான்மையினர். மராட்டிரத்தில் அய்ம்பது மகார் களுக்கு ஒரு சமார் என்ற எண்ணிக்கை விகிதத்தில் இருந்தனர்.

வரவேற்புக் குழுவினர்க்கும், பிரதிநிதிகளுக்கும், ஆதரவாளர் களுக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டதுடன் இரவு 10 மணிக்கு மாநாடு முடிவுற்றது. மாநாடு முடிந்தவுடனேயே, பந்தலிலேயே தீண்டப் படாத வகுப்புப் பெண்கள் மூவாயிரம் பேர் கலந்துகொண்ட கூட்டத்தில் அம்பேத்கர் பேசினார். இந்தியாவில் இதுபோன்ற தீண்டப்படாத பெண்கள் கூட்டம் நடந்தது இதுவே முதலாவதா கும். தீண்டப்படாத வகுப்புப் பெண்கள் கிளர்ந்தெழுந்து விட்டனர் என்பதன் அறிகுறி இது என்ற தன்மையில் இக்கூட்டம் தனிச்சிறப்பைப் பெறுகிறது. வீட்டில் அமர்ந்து உரையாடுவது போன்று, எளிய முறையில் அவர் பேசினார். "தீண்டப்படாதவர் களாக உங்களை எந்நிலையிலும் கருதாதீர்கள். தூய்மையாக

இருக்கக் கற்றுக்கொள்ளுங்கள். உயர்சாதிப் பெண்களைப்போல் உடை உடுத்துங்கள். உங்கள் சேலை ஒட்டுப் போட்டுத் தைக்கப்பட்டு இருப்பதுபற்றிக் கவலைப்படாதீர்கள்; ஆனால் அது தூய்மையாக இருக்கிறதா என்று கவனியுங்கள். எத்தகைய உடையை நீங்கள் உடுத்த வேண்டும், எந்த உலோகத்தாலான அணிகலன்களை அணியவேண்டும் என்று எவரும் உங்களைக் கட்டுப்படுத்த முடியாது. அறிவை வளர்த்துக்கொள்வதிலும் சுய உதவி உணர்ச்சியைப் பெருக்கிக்கொள்வதிலும் நாட்டம் செலுத்துங்கள்'' என அறிவுறுத்தினார். தன் குரலைச் சற்றுத் தாழ்த்தி, ''உங்கள் கணவரோ, மகன்களோ குடிகாரர்களாக இருப்பின் அவர்களுக்கு உணவு தராதீர்கள். உங்கள் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்புங்கள். ஆண்களைப்போலவே பெண்களுக்கும் கல்வி தேவை என்பதை உணருங்கள். எழுதவும் படிக்கவும் கற்றுக்கொண்டால் பெரிய அளவில் முன்னேற முடியும். நீங்கள் எப்படி இருக்கிறீர்களோ அப்படித்தான் உங்கள் பிள்ளைகளும் இருப்பார்கள். உங்கள் பிள்ளைகளுடைய வாழ்க்கை நல்லொழுக்க நெறியில் இயங்குமாறு செய்யுங்கள். உங்கள் மகன்கள் இவ்வுலகில் தங்கள் தனி முத்திரையைப் பதிக்கும் வகையில் அவர்களை உருவாக்குங்கள்'' என்று மேலும் அறிவுறுத்தினார். மறுநாள் விடியற்காலை மாநாட்டைவிட்டுச் செல்லும்போது, தங்களுடைய வழிகாட்டியும் ஒப்பற்ற தலைவரும், முடிசூடா மன்னருமாக விளங்கிய அம்பேத்கர் முதல்நாள் அறிவுறுத்தியபடி, பெண்கள் சேலை கட்டும் முறையை மாற்றிவிட்டிருந்தமை அனைவரையும் வியக்கச்செய்தது.

இவ்வாறாக மகத் போராட்டம் முடிவுற்றது.

இத்துடன் இந்திய வரலாற்றின் ஒரு அத்தியாயம் முடிவுக்கு வந்தது. சமத்துவமான மனித உரிமைகள் வேண்டும் என அம்பேத்கர் விடுத்த அறைகூவலுடன் இந்த வரலாற்று அத்தியாயம் முடிவுக்கு வந்தது. இதே வாரத்தில் சென்னையில் நடைபெற்ற இந்தியத் தேசியக் காங்கிரசில், முற்ற முழுமையான நாட்டு விடுதலையே இந்திய மக்களின் குறிக்கோள் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. முதலாவது அறிவிப்பு (மகத்) சமூக விடுதலைபற்றியது. இரண்டாவதான அறிவிப்பு (சென்னை) அரசியல் விடுதலைபற்றியது. தற்செயலாக நேரிட்ட வரலாற்றுச் சிறப்பு மிக்க ஒற்றுமையான நிகழ்ச்சிகளாகும் இவை! சமூக அரசியல் சமத்துவத்தை நோக்கி இந்தியா தன்னை மறு ஆய்வு



அம்பேத்கர் அயல்நாடு சென்று உயர்கல்வி கற்க உதவிய பரோடா மன்னர்
சாயாஜிராவ் கெய்க்வாடு

செய்துகொண்டிருக்கிறது என்பதன் அடையாளமே இந்த இரு அறிவிப்புகளுமாகும்.

V

மகத் போராட்டம் தீண்டப்படாத மக்களிடம் மிகப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இப்பிரச்சினையில் அரசின் செயல்பாட்டில் ஒரு பெரிய மாற்றத்தை விளைவித்தது. இந்துப் பழமைவாதிகளை இது அதிர்ச்சிக்குள்ளாக்கியது. ஒடுக்கவோ அடக்கவோ முடியாத அளவில் தீண்டப்படாத வகுப்பு மக்களிடையே விழிப்புணர்வும் தன்முனைப்பும் ஏற்பட்டுவிட்டன. பல்வேறு மாவட்டங்களிலிருந்து மகத் மாநாட்டிற்கு வந்திருந்த பிரதிநிதிகள் தங்கள் துன்பத்திற்குக் காரணமாக இருக்கும் கொடுமைகளை எதிர்த்து மக்களை அணிதிரட்ட முடியும் என்பதை உணர்ந்தனர். தாங்கள் துணையற்றவர்களாக இல்லை - ஆபத்தான நேரத்தில் அழைப்பு விடுத்தால் பக்கத்து மாவட்டங்களில் உள்ள தங்கள் சகோதரர்கள் உதவிட ஓடிவருவார்கள் என்ற நம்பிக்கை ஏற்பட்டு விட்டது. இம்மக்களை இனியும் ஏனோதானோ என்று ஒதுக்கிட முடியாது என்பதை அரசும் உணர்ந்தது. அதனால் இவர்களின் துயரங்களைக் களைவதில் அதிகக் கவனம் காட்டியது.

மகத் போராட்டத்தினால் ஏற்பட்ட விளைவுகளில் இவற்றை விட மிக முதன்மையானது ஒன்றுண்டு. அம்பேத்கரின் பெயரும் புகழும் இந்தியாவின் மூலைமுடுக்கெல்லாம் பரவியது என்பதே அது. தீண்டப்படாத மக்களின் தலைவர் அம்பேத்கர் என்பது மறுக்க ஒண்ணாதவாறு உறுதியாகிவிட்டது. அவருடைய செல்வாக்கின் எல்லை மேலும் விரிந்து வளர்ந்தது.

'அம்பேத்கர்' எனும் சொல் தீண்டப்படாத வகுப்பு மக்களின் மந்திரச் சொல் ஆகிவிட்டது. அம்பேத்கர் ஓர் அரசியல் மேதை; அவர் ஒரு கல்விக் கடல் என்பதை மகத் போராட்டம் நிருபித்தது. ஆய்ந்தறிந்தடங்கிய சிறந்த அறிஞரான அவர், செயல்மறவராகவும் திகழ்ந்தார். அவருள் இலக்கியமும் வாழ்வும் இனிது இசைந்திருந்தன.

வெடிகுண்டெறிந்தது போன்று மனுஸ்மிருதி எரிக்கப்பட்ட நிகழ்ச்சிபற்றிச் செய்திகளைக் கூறவேண்டும். வெறுப்பு காரணமாக மட்டுமே மனு நீதியை எரிக்கவில்லை என்று பின்னாளில் அம்பேத்கர் குறிப்பிட்டார். உண்மையில் மனுஸ்மிருதி சாதி

இந்துக்களின் உரிமைப் பட்டயம் ஆகும்; ஆனால் அதே நேரத்தில் தீண்டப்படாதவர்களின் அடிமைத்தனத்தைக் காப்பாற்றுகிற வேதம் அது. 1938இல் டி.வி. பர்வதே என்ற முன்னணிப் பத்திரிக்கையாளருக்கு அளித்த பேட்டியில், மகத் போராட்டம்பற்றி, "வேண்டுமென்றே திட்டமிட்டு மனுஸ்மிருதி எரிக்கப்பட்டது. எச்சரிக்கையுடன், ஆனால் தீவிரமாகச் செய்யப்பட்ட செயல் அது. சாதி இந்துக்களின் கவனத்தை ஈர்க்க வேண்டும் என்பதே அதன் நோக்கம். தீர்வு கருதி அவ்வப்போது இதுபோன்ற தீவிரமான செயல்களை மேற்கொள்வது தேவையாயிருக்கின்றது. கதவைத் தட்டினால் தவிர யாரும் திறக்கமாட்டார்கள். மனு ஸ்மிருதியில் உள்ள எல்லாப் பகுதிகளுமே கண்டிக்கப்பட வேண்டியவை அல்ல. இதில் நல்ல கொள்கைகளே இல்லை என்பதோ, மனு ஒரு சமூகவியல் அறிஞன் அல்லன் என்பதோ, மனு ஒரு முட்டாள் என்பதோ எங்கள் கருத்தன்று. மனு நீதியின் பெயரால் பல நூற்றாண்டுகளாக நாங்கள் நசுக்கப்பட்டு வருகின்றோம். இந்த அநீதியின் அடையாளமாக அது இருப்பதால்தான் அதைக் கொளுத்தினோம். இந்த மனு ஸ்மிருதியின் கட்டளைகளின்படிதான் கொடிய வறுமையில் நாங்கள் தள்ளப்பட்டோம். எனவேதான் நாங்கள் விரைந்து பாய்ந்து ஒன்று திரண்டு நின்று எங்கள் உயிர்களைக் கையில் ஏந்திக்கொண்டு போராட்டத்தில் குதித்தோம்" என அம்பேத்கர் விளக்கினார்.[34]

இத்தீயிடலுக்கு முன்னர் இன்னொரு தீயிடல் நடைபெற்றிருந்தது. இந்திய மக்களைச் சுரண்டும் அந்நிய வெள்ளையர் ஆட்சிக்கு எதிராக வளர்ந்து வரும் வெறுப்பைக் காட்டுவதன் அறிகுறியாக, அயல் நாட்டுத் துணிகளைச் சாவர்க்கர் 1906இல் கொளுத்தினார். அம்பேத்கர் மனுநீதியைக் கொளுத்தியதன் நோக்கமும் பயனும் அடிமைமுறை மீது உள்ள வெறுப்பையும் எதிர்ப்பையும் காட்டுவதற்கேயாகும். அநீதியான சமூகச் சட்டங் களின் சாசனமாக மனுநீதி இருப்பதால் அம்பேத்கர் அதைத் தாக்கினார். மராட்டியத்தின் இந்த இருபெரும் சிந்தனையாளர்கள் இந்து மதச் சாத்திரங்கள் பற்றிக் கொண்டிருந்த கருத்துகள் கவனத்திற் கொள்ளத்தக்கன. சாவர்க்கர், அம்பேத்கர் இருவருமே சமூகப் புரட்சியாளர்கள்; பகுத்தறிவாளர்கள்; சிலை வணக்கத்தை எதிர்ப்பவர்கள். ஆனால் இந்துமதச் சாத்திரங்களைப்பற்றி மட்டும் சிறிது மாறுபாடான கருத்தினைக் கொண்டிருந்தவர்கள்.

மனுஸ்மிருதிக்குத் தீயிட்ட நிகழ்ச்சி எல்லா இந்து மதச் சீர்திருத்தவாதிகளையும் அலறிடச் செய்தது. இந்தச் சீர்திருத்த

வாதிகளின் நம்பிக்கைகள், புனித நூல்கள், புராணங்கள் ஆகியவற்றின்மீது சாவர்க்கர் தொடுத்த கடுந்தாக்குதல்களால் அவர்கள் அஞ்சி நடுங்கினர். 'நாட்டிற்கு நெருக்கடி ஏற்படும் நேரத்தில் 'இந்துக்களே மாட்டிறைச்சியைத் தின்னுங்கள்!' என்று சாவர்க்கர் கூறியது மேலும் அவர்களைத் திகைப்படையச் செய்தது. மனுநீதியை எரித்தும் மாட்டிறைச்சியை உண்ணுமாறு இந்துக்களுக்குச் சொன்னதும் வைதிகர்கள், பழைமை வெறியர்கள், சனாதன சீர்திருத்தவாதிகள் ஆகியோர் மீது விழுந்த பயங்கரமான நூதனமான தாக்குதல்களாகும். இந்து மதச் சாத்திரங்களைக் கண்டனம் செய்வதில் அம்பேத்கரிடமிருந்து சாவர்க்கர் சிறிதளவில் மாறுபட்டார். இந்து மதப் பண்டைய நூல்களை அறிவியல் நோக்கில் ஆய்வுக்கு உட்படுத்தி, நாட்டின் நலனுக்காக எந்தெந்தக் கருத்துகள் பயன்பட்டிருக்கின்றனவோ அவற்றை அஞ்சாமல் பின்பற்றவேண்டும் என்றும், நாட்டின் வளர்ச்சிக்கும் வளத்திற்கும் ஒற்றுமைக்கும் எந்தெந்தக் கருத்துகள் தடையாக இருந்தனவோ அவற்றை அடியோடு விட்டொழிக்க வேண்டும் என்றும் சாவர்க்கர் கருதினார். மனுநீதி விதிகள் தீண்டப்படாத இந்து வகுப்பினருக்கோ இந்துப்பெண்களுக்கோ ஏற்றது என்று சாவர்க்கர் கருதவில்லை.

நெடுங்காலமாக இன்னலில் வதைபடும் தீண்டப்படாத மக்களின் விடுதலை வீரராகத் திகழும் அம்பேத்கர் இந்து மத நூல்களைப் பிரஞ்சு நாட்டுச் சிந்தனையாளர் வால்டேரின் தீவிரத்துடன் தாக்கிச் சின்னாபின்னமாக்கினார். சாதிக் கொடுமையை எள்ளளவும் அனுபவித்தறியாத முன்னோர்களின் வழிவந்த சாவர்க்கரோ உளுத்துப்போன இந்து மத நூல்களையெல்லாம் துடைப்பம் எடுத்துப் பெருக்கி ஒரு மூலையில் குவித்து 'இவை இந்திய வரலாற்றில் கலாச்சாரத்தின் சின்னங்கள்; இவை ஆய்வுக்குப் பயன்படும் பதிவேடுகள் என்றார். இவற்றை வரலாற்று ஆவணங்களெனக் கருதினார்; நன்றியுணர்வுடனும் நோக்கினார். அம்பேத்கரும் சாவர்க்கரும் இடம் மாறி எதிர் எதிரான வகுப்பில் பிறந்திருந்தார்களானால், அப்போது இந்து மத நூல்களை அம்பேத்கர் எத்துணைக் கடுமையாகத் தாக்கினாரோ அதேபோல் சாவர்க்கரும் செய்திருப்பார். சாவர்க்கர் இந்து மத நூல்களைப்பற்றி எத்தன்மையில் எழுதினாரோ அதே தன்மையில் அம்பேத்கரும் எழுதியிருப்பார்.

மகத் போராட்டம்பற்றி இன்னும் சொல்லப்பட வேண்டிய செய்திகள் உள்ளன.

மாநாடு முடிந்த பின் அம்பேத்கரும் அவருடைய தோழர்களும் மகதிற்கு அருகில் இருந்த புத்தர் காலத்தினதாகக் கருதப்பட்ட நில அகழ்வு இடம் ஒன்றைக் காணச் சென்றனர். அங்கிருந்த உருவச் சிலைகளைப் பார்த்து நெஞ்சம் நெகிழ்ந்த அம்பேத்கர் அப்பழங்காலத்தில் புத்தரின் தொண்டர்கள் பிரம்மச்சாரிகளாக இருந்து, தாமே விரும்பி வறுமையைத் ,தழுவி, தன்னலமின்றிச் சமூகத்திற்கு எவ்வாறு தொண்டாற்றினார்கள் என்பதை விளக்கிக் கூறினார். அங்கிருந்த இருக்கைகளில் அக்காலத்தில் பௌத்தத் துறவிகள் அமர்ந்திருக்கக் கூடும்; அதனால் அதில் யாரும் அமராதீர்கள் என்று, மிகுந்த மரியாதை தொனிக்க, தன் தோழர்களுக்குக் கூறினார்.

அடுத்ததாக, நவீன இந்தியாவில் இந்துக்கள் புனிதமாகக் கருதும் ஓர் இடத்தைப் பார்க்கத் தன் குழுவினருடன் சென்றார். நவீன இந்தியாவில் இந்துக்களின் காவலராகத் திகழ்ந்த மாவீரன் சிவாஜியின் தலைநகராக விளங்கிய கோட்டைதான் அந்த இடம். விடுதலையின் சின்னமாக, தன்மானத்தின் ஊற்றாக, சிதைக்க முடியாத ஊக்கத்தின் உறைவிடமாகச் சிவாஜி கருதப்படுகிறார். அம்பேத்கர் அந்த இடத்தைப் பார்க்கச் சென்றபோது சுற்று வட்டாரத்தில் இருந்த நிலைமை அவர்களுக்கு ஊக்கம் தருவதாக இல்லை. சூழ்ச்சி மிக்க எதிரிகளால் ஊதிவிடப்பட்ட பகை நெருப்பு பற்றி எரிந்து பழி வாங்கிடத் துடித்துக்கொண்டிருந்தது. மகத் போராட்டத்தை முறியடிக்க முடியாமல் தோற்றவர்களிடம் காழ்ப்புணர்ச்சி கனன்றுகொண்டிருந்தது. தீண்டப்படாதோரின் தலைவரை மறைவிடங்களில் பதுங்கியிருந்து சாதி இந்துக்கள் தாக்கப்போவதாக வதந்தி பரவியிருந்தது. தங்கள் தலைவருக்குத் தீங்கு நேருமோ என்று அஞ்சி, சுற்றுப்பக்கக் கிராமங்களில் உள்ள தீண்டப்படாதவர்களுக்குத் தகவல் அனுப்பினார்கள். இந்தச் செய்தியறிந்த மக்கள் சிவாஜிக் கோட்டையின் அடிவாரத்தில் அன்றிரவு திரண்டனர். இரவானதும் அம்பேத்கரும் அவருடைய தோழர்களும் போகும் வழியில் உள்ள நத்தே என்ற சிற்றூரில் தங்கினர்.

அடுத்தநாள் காலை இக் குழுவினர் ராய்காட் மலைக் கோட்டைக்கு ஏறிச் சென்றனர். ஒரு காலத்தில் இந்துஸ்தானத்தின் பெருங்கிளர்ச்சியின் இருப்பிடமாகத் திகழ்ந்த அந்த இடத்தைப் பார்த்ததும், அம்பேத்கர் மனம் நெகிழ்ந்தார். பாதுகாக்கப்படாத, கரையான் அரித்துக் கிடந்த மாபெரும் பேரரசின் சின்னங்கள் சிதறிக் கிடந்தன. கம்பீரமான அகன்ற நுழைவாயில்கள்,

அங்குமிங்குமாகக் கிடந்த பெருந்தூண்கள், இடிந்து கிடந்த அரண்மனை! அவை அக்கால வரலாற்று நாயகர்களையெல்லாம் அவர்களின் மனக்கண்முன் கொண்டுவந்து நிறுத்தின. அக் கோட்டையிலேயே தங்கினார்கள். சோர்ந்து களைத்திருந்ததால் அனைவரும் ஆழ்ந்து உறங்கிவிட்டனர். பாழடைந்த கோட்டை யின் ஒரு பகுதியில் படுத்திருந்த அக்குழுவினர்மீது நள்ளிரவில் வெளியி லிருந்து யாரோ தண்ணீரைத் தெளித்தனர். வெளியில் கிசுகிசுக்கும் குரலோசை கேட்டது. இவற்றால், அக்குழுவினர் முகம் வெளுத்து அச்சமுற்று நின்றனர். வெளியில் இருந்த ஆட்கள், ''எச்சரிக்கையாய் இருங்கள்!'' என்று தணிந்த குரலில் கூறினர். அவர்கள் யார் என்பது அக் குழுவினர்க்குத் தெரியவில்லை. இரவு இரிந்து, பொழுது புலர்ந்தது. வெளியிலிருந்து எச்சரித்தவர் கள் தங்களைப் பாதுகாக்க வந்தவர்கள் என்பதைக் குழுவினர் அறிந்தனர். அவர்களுடைய அன்பு எல்லையற்றதாகும்; அவர்களு டைய எச்சரிக்கை உரிய காலத்தில் செய்யப்பட்ட ஒன்றாகும். நல்லவேளையாகத் தங்களுடைய தலைவருக்கோ குழுவிலிருந்த மற்றவர்களுக்கோ இன்னல் ஏதும் விளையவில்லை. அம்பேத்கர் பாதுகாப்புடன் இருப்பதை அறிந்து, பெண்கள், தாங்கள் பெற்ற பிள்ளையிடம் காட்டும் அன்பைப்போல் அம்பேத்கர்பேரில் அன்பைப் பொழிந்தனர். அவர் ஆபத்துக்கு ஆளாகாமல் நலமுடன் இருப்பதற்காகக் கடவுளுக்கு நன்றி தெரிவித்தனர்.

சௌதார் குளத்தில் தீண்டப்படாத வகுப்பு மக்கள் நிலைநாட்ட விரும்பிய உரிமை என்னவாயிற்று? நீதி மன்றத்தில் நீண்ட காலம் இழுபறியாக இவ்வழக்கு நடந்தது. மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் மூன்று ஆண்டுகள் தொடர்ந்து வாதாடி இவ்வழக்கில் வென்றார் அம்பேத்கர்.

விடிவெள்ளி

தீண்டப்படாத வகுப்பு மக்களுடைய வரலாற்றுப் பழம் பெருமை, முன்னோரின் சமய நெறிகள்பற்றிய ஆதாரங்கள் சிதறிக் கிடந்தன. அவற்றின்மீது புதிய ஒளியைப் பாய்ச்சி ஆய்வு செய்தனர். 1928 சனவரி மாதத் தொடக்கத்தில் நாசிக் அருகில் உள்ள இந்துக்களின் புண்ணியத்தலமான திரைம்பாக்கில் தீண்டப் படாத வகுப்பு மக்கள் ஒரு கூட்டத்தைக் கூட்டினார்கள். அவர்களுடைய பெரும் துறவி சொக்க மேளருக்கு அங்கே ஒரு கோயில் கட்டுவதுபற்றிக் கூடிப்பேசி முடிவெடுக்க விரும்பினர். இக்கூட்டத்திற்குத் தலைமை தாங்க அம்பேத்கர் அழைக்கப்பட்டார். சொக்க மேளருக்கு ஒரு கோயில் கட்டுவதைவிட, தீண்டாமை எனும் கறையைத் துடைத்திடத் தாங்கள் தளரா ஊக்கமுடன் உழைப்பதே அத் துறவிக்கு எழுப்பும் பொருத்தமான நினைவுச் சின்னமாகும் என்று நீண்ட விவாதத்திற்குப்பின் முடிவெடுக்கப் பட்டது. தீண்டப்படாத வகுப்பு மக்களுக்கு என்று தனிக் கோயில்கள் இருப்பதை அம்பேத்கர் மனமார விரும்பவில்லை என்பது இம்முடிவுக்கு முதற் காரணம். கோயில் கட்டுவதற்கு ஆகும் செலவு பெரும் சுமையாக இருக்குமே என அவர் நினைத்தது இரண்டாவது காரணம். சிலையை வழிபடுவதைவிட மக்களை உயர்த்துவதற்கான பயன் விளைக்கும் நெறிமுறைப்படி நடப்பதே நன்று என்று எண்ணுபவர் அம்பேத்கர். இது மூன்றாவது காரணம்.

கி.பி. 1300-1600 காலக்கட்டத்தில் மராட்டியத்தில் வாழ்ந்த சமயப் பாவலர்கள் பகவத் தருமத்தைப் (வருணாசிரமத்தை) போற்றியவர்கள். ஒரு சாதி இன்னொரு சாதி மீது ஆதிக்கம் செய்வதற்கும், சமூகத்தில் சமத்துவமின்மையும் அநீதியும் இருப்ப தற்கும் அடித்தளமாக விளங்கும் சாதி அமைப்பை நேரடியாக எதிர்த்து இவர்கள் பிரச்சாரம் செய்யவில்லை. ஒரு பார்ப்பானும் ஒரு சூத்திரனும் மனிதன் என்கிற நிலையில் சமம் என்று ஆக வேண்டும் என்பதற்காக இந்தச் சமயப் பாவலர்கள் முயற்சிக்க வில்லை. ஆனால் கடவுளைத் தொழுகிற ஒரு பார்ப்பனப் பக்தனும் ஒரு சூத்திரப் பக்தனும் சமம் என்று ஆக்கிட முயன்றனர். இந்த முயற்சியில் இத்துறவியர் வென்றனர். சாதி வேறுபாடு கருதாமல், ஒருவரை அவர் பக்தர் என்பதற்காகச் சிறப்பளிக்கப் பார்ப்பனர்கள் ஒத்துக்கொள்ள வேண்டியதாயிற்று.

''சாதி ஒழிய வேண்டும் என்ற கண்ணோட்டத்தில், இந்தத் துறவிகள் மேற்கொண்ட முயற்சிகளினால் சமூகத்தில் எத்தகைய நற்பயனும் ஏற்படவில்லை. மனிதனின் சிறப்பியல்பு அவனிடத்தி லேயே பொதிந்திருக்கிறது; அதுவே அவனை அடையாளம் காட்டுகிறது. பக்தி என்கிற பொன்மூலாம் பூசி மனிதனின் சிறப்பை அடையாளம் காட்ட முடியாது. இந்த உண்மையை நிலைநாட்ட இத் துறவிகள் முயற்சிக்கவில்லை. இதற்கு மாறாக இவர்களுடைய போராட்டத்தால் தீண்டப்படாத வகுப்பு மக்களுக்குத் தீங்கான விளைவுதான் ஏற்பட்டது. நீங்கள் சொக்க மேளரைப்போலப் பக்திமான்களாக உங்கள் தகுதிகளை உயர்த்திக்கொண்டால் நாங்கள் உங்களை மதிக்கத் தயாராக இருக்கின்றோம் என்று கூறிப் பார்ப்பனர்கள் தீண்டப்படாத மக்களின் வாயை அடைத்திட வாய்ப்பை உருவாக்கித்தந்தது'' என்று அம்பேத்கர் சுட்டிக் காட்டினார். பல்வேறுபட்ட பக்திநெறிகளைப் பின்பற்றியபோதி லும் மக்களிடம் சாதி வேறுபாட்டு உணர்ச்சி மிகுந்திருந்தது என்று அம்பேத்கர் கூறினார். சமயக் குரவர்கள் போதித்த சமத்துவம், நீதி, மனித நேயம் ஆகியவற்றை மக்கள் புறக்கணித்தனர். ஆனால் தங்களின் சமயக் குரவர்கள் அதீதமான மாய மந்திரச் சக்திகளைப் பெற்றிருந்ததாக மிகைப்படுத்திக் கூறினார்கள்.

இராமதாசரின் பக்தி மார்க்கம் தோன்றிய நாள் முதலே அதைப் பின்பற்றுவோர் சாதி அமைப்பைப் போற்றித் தூக்கிப் பிடிப்பவர்க ளாகவே இருக்கின்றனர். இதன் நிறுவனரான இராமதாசரிடம் பார்ப்பனர் உயர்ந்தவர் என்கிற மனப்பான்மை குடிகொண்டிருந் தது. பார்ப்பான் எவ்வளவுதான் இழிந்தவனாக இருப்பினும் அவன் மற்ற சாதியினரைவிட இவ்வுலகிலும் மேலுலகிலும் உயர்ந்தவனா கவே கருதப்படுவான் என்று இராமதாசர் கூறினார். மேலும் பார்ப்பான் கடவுளால் வணங்கத்தக்கவன் என்று அவர் கருதினார்.

இக்காலக்கட்டத்தில்தான் சர் துக்கோஜிராவ் ஹோல்கருக்கும், அமெரிக்கப் பெண்ணான செல்வி மில்லருக்கும் நிகழவிருந்த திருமணம் மகாராட்டிரத்தில் பழைமைவாதிகளுக்கும் முற்போக்குச் சிந்தனையாளர்களுக்குமிடையே பெரும் கருத்து மோதலை ஏற்ப டுத்தியிருந்தது. மகாராசா 'தாங்கர்' இனத்தைச் சேர்ந்தவர். இந்தச் சமூகத்தவர் இத்திருமணம் தொடர்பாக இருகூறாகப் பிரிந்து நின்றனர். எனவே இந்தச் சமூகத்தினரின் மாநாடு ஒன்றைக் கூட்டி இதைப்பற்றி முடிவுசெய்வது என்று தீர்மானித்தனர். இக் கூட்டத் தில் பங்கேற்றுத் தங்களை வழிநடத்திட வேண்டுமென

அம்பேத்கரும் போலேவும் வேண்டிக்கொள்ளப்பட்டனர். 1928 மார்ச்சு மாதம் பாராமதியில் இக்கூட்டம் நடைபெற்றது. மகாராட்டிர முற்போக்கு அணியினரைப் போலவே, அம்பேத்கரும் போலேவும் இத்திருமணத்தை ஆதரித்தனர். மாநாடு மகாராசாவின் திருமண முடிவினை ஏற்றது. அம்பேத்கர் தான் மிகவும் வெறுத்த இந்து மதத்திற்கு அமெரிக்கப் பெண் மதமாற்றம் செய்யப்பட்டதை ஆதரித்தாரா அல்லது தன் உள் சாதிக்கு வெளியே மகாராசா திருமணம் செய்துகொண்டதை ஆதரித்தாரா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

பாராமதிக்கு அம்பேத்கர் வருகை தந்த வாய்ப்பைப் பயன்படுத்தித் தீண்டப்படாத வகுப்பு மக்கள் போலே தலைமையில் அம்பேத்கருக்கு அன்றிரவு ஒரு வரவேற்பளித்தனர். அம்பேத்கர் மீது பாராட்டுமொழிகளைப் பொழிந்தனர். துணைக் கலெக்டராக நியமிக்கப்பட்ட முதலாவது இந்துத் தீண்டப்படாதவர் என்பதற்காக எம். கே. ஜதாவ் அவர்களுக்கும் அங்கேயே பாராட்டு வழங்கினார். தீண்டப்படாத வகுப்பு மக்களில் தகுதி சான்றவர்களை அரசின் உயர் பதவிகளில் அலுவலர்களாக அமர்த்திட வேண்டும் என்று அம்பேத்கர் தொடர்ந்து வலியுறுத்தி வந்ததன் விளைவாகத் தான் ஜதாவிற்கு இந்த உயர்ந்த பதவி கிடைத்தது. அம்பேத்கர் பிரிட்டிஷ் கவர்னர் சர் லஸ்ஸி வில்சனுடன் ஒரு சமயம் கடுமையாக வாதிட நேர்ந்தது. கவர்னர் லஸ்ஸி வில்சன் அம்பேத்கரை அரசினர் மாளிகைக்கு அழைத்தார். நியமன உறுப்பினராக இருந்துகொண்டு அரசின் கொள்கைகளை விமர்சனம் செய்வது தனக்கு வியப்பளிப்பதாகவும், இதை ஏற்க இயலாது என்றும் அம்பேத்கரிடம் கவர்னர் கூறினார். அம்பேத்கர் சட்டசபையில் தான் பேசியது சரியே என்று உடனே விடையளித்தார். வில்சன் அரசு தீண்டப்படாத வகுப்பு மக்களின் நலனை உயர்த்துவதற்காக உண்மையில் எதுவுமே செய்யவில்லை; தகுதி பெற்ற திறமையானவர்களை உயர் பதவிகளுக்காக இன்னும் தேர்வு செய்யவில்லை; ஜதாவ் அளித்துள்ள விண்ணப்பம் இன்னும் கவனிக்கப்படாமல் இருப்பதே தன் கூற்றுக்குச் சான்றாக இருக்கிறது என்று அம்பேத்கர் அஞ்சாமல் சுட்டிக்காட்டினார். ஜதாவ்பற்றிய அரசின் முடிவுக்கு இதுவே காரணமாயிற்று. இதன் விளைவாகத் தீண்டப்படாத வகுப்பினரை அரசு வேலைக்குச் சேர்ப்பதில் அரசின் போக்கில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. தட்டினால் தவிர எந்தக் கதவும் திறக்கப்படுவதில்லை என்பதற்கு இது நல்லதோர் எடுத்துக் காட்டாகும்.

ஏழைகளின் வாழ்வை உயர்த்துவதற்காகக் கருத்து கூறிடச் சட்டசபையில் கிடைக்கிற ஒவ்வொரு வாய்ப்பையும் நழுவவிடா மல் அம்பேத்கர் பயன்படுத்தினார். பெண் தொழிலாளர்களுக்கான மகப்பேறு நலத்திட்ட மசோதா பம்பாய்ச் சட்டசபையில் விவாதிக் கப்பட்டபோது அம்பேத்கர் ஏழைகளிடம் கொண்டிருந்த ஆழ்ந்த அன்புணர்ச்சி அவருடைய உரையில் வெளிப்பட்டது. "நாட்டின் நலன் கருதி, பிள்ளைப்பேற்றிற்கு முன்னும் பின்னும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குத் தாய்க்குக் கட்டாயம் ஓய்வு அளிக்கப்பட வேண்டும். இதன் அடிப்படையில் இம்மசோதா இருக்கிறது" என்று கூறி இம்மசோதாவை ஆதரித்து அழுத்தமாகப் பேசினார். இதற்காக ஆகும் செலவை அரசு ஏற்க வேண்டும் என்று அம்பேத்கர் கருதியபோதிலும் இப்போதுள்ள சூழ்நிலையில், அச்செலவைப் பெண்களின் உழைப்பை மலிவாகவும் அதிக இலாபத்திற்கும் சுரண்டுகிற தொழில் உரிமையாளர்களே ஏற்கச் செய்வதும் தவறாகாது என்று கூறினார். இதற்கு இம் மசோதாவில் வழிவகை செய்யவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

ஒரு முக்கியமான மசோதாவை அம்பேத்கரே பம்பாய்ச் சட்டசபையில் கொண்டுவந்தார். இதில் தன் முழு முனைப்பையும் காட்டினார். "1874ஆம் ஆண்டைய பம்பாய்ப் பரம்பரை அரசு அலுவல்கள் சட்டத்தைத்" திருத்துமாறு அம்பேத்கரின் தீர்மானம் கோரியது. 1928 மார்ச்சு 19ஆம் நாள் இதனைச் சட்டசபையில் முன்மொழிந்தார்.

இந்தப் பரம்பரை அரசு அலுவலர்கள் சட்டப்படி, கிராம ஊழியப் பதவிகளில் இருந்த மகார் சாதி மக்கள் இரவுபகல் பாராமல் அடிமைகள்போல் பணியாற்ற வேண்டியிருந்தது. மகார் பணியாளர் வேலைக்கு வரமுடியாதபோது அவருடைய தந்தையோ அல்லது அவர் குடும்பத்தைச் சேர்ந்த யாரேனும் ஒருவரோ ஊழியம் செய்யுமாறு கட்டாயப்படுத்தப்பட்டார். கடுமையான ஓய்வில்லாத உடலை வருத்தும் இந்த வேலைக்காக 'வட்டன்' எனப்படும் சிறு துண்டு நிலம் மானியமாகத் தரப்பட்டது; இத்துடன் கிராமத்தினரால் மாதந்தோறும் சிறிதளவு தானியமும், இரண்டு அணா முதல் ஒன்றரை உருபாய் வரை பணமும் அற்பக் கூலியாக அளிக்கப்பட்டன. இதன் விளைவாக மகார்கள் சோம்பேறிகளாகி விட்டனர்; வாழ்வுக்குத் தேவையான உயிரோட்டமான ஊக்கத்தை இழந்துவிட்டனர். அவர்களுடைய சுயமரியாதை உணர்வையும் இழந்துவிட்டனர். அவர்களுடைய பெரு விருப்பங்களும் திறமை களும் இந்த அற்பமான குற்றேவல் வேலைகளைச் செய்வதிலேயே

பிணைக்கப்பட்டுவிட்டன. இத்தகைய அடிமைத் தளையை அடித்து நொறுக்குவதற்காக அம்பேத்கர் இந்த மசோதாவைக் கொண்டுவந்தார்.

இந்த மசோதாவைக் கொண்டு வருவதற்கு முன்னர் தன் வகுப்பு மக்களுக்கு இந்த மசோதாவின் உள்ளடக்கம், நோக்கம் ஆகியவை பற்றி விளக்கினார். முந்தைய ஆண்டில் இதற்காக மாவட்ட, வட்ட அளவில் உள்ள நகரங்களில் பல பொதுக்கூட்டங் களும் மாநாடுகளும் நடத்தப்பட்டன. அவற்றில் இந்த மசோதாவி னால் தோன்றக்கூடிய சிக்கல்கள், தீண்டப்படாதவர்கள் இதுபற்றிக் கொண்டுள்ள அய்யங்கள், தன்னலம் மிக்க கொடிய நெஞ்சினர் அறியாமை மிக்க இம்மக்களிடையே உலவ விட்டிருந்த தவறான புரிதல்கள் ஆகியவை விளக்கப்பட்டு விவாதிக்கப்பட்டன. 1927 நவம்பர் 5ஆம் நாள் பம்பாயில் கமதிபுராவில் ராவ்பகதூர் எஸ்.கே. போலே தலைமையில் 5000 'வட்டன்தார்'களான மகார்கள் கலந்துகொண்ட பெரும் பொதுக்கூட்டம் நடந்தது. 1927 நவம்பர் 13இல் நாசிக் மாவட்ட வட்டன்தார் மாநாடு நடைபெற்றது. 3000 பேர் கலந்துகொண்ட மற்றொரு மாபெரும் பொதுக்கூட்டம் ஜலகானில் நடைபெற்றது. சட்டசபையில் கொண்டுவரப்படவுள்ள மசோதாவில் அடங்கிய செய்திகள், நோக்கங்கள்பற்றி இக்கூட்டத் தில் அம்பேத்கர் விளக்கிப் பேசினார்.

இவ்வாறாக, இம்மசோதாவைச் சட்டசபையில் கொண்டுவருவ தற்கு முன் வட்டன் முறைக்கு எதிரான கருத்து மக்களிடையே உருவாக்கப்பட்டது. 1928 ஆகஸ்டு 3ஆம் நாள் அம்பேத்கர் இம்மசோதாவைச் சட்டசபையில் முன்மொழிந்து பேசினார். அரசின் எல்லாத் துறைகளிலும் எல்லா வேலைகளையும் செய்வதற்கு மகார்கள் வீட்டு வேலைக்காரியைப்போலப் பயன் படுத்தப்படுகின் றனர். இரவானாலும் பகலானாலும் எந்த நேரத்தில் அழைத்தாலும் இவர்கள் ஓடிச்சென்று வேலை செய்ய வேண்டியுள்ளது. ஆனால் இவர்களுக்குக் கிடைக்கும் ஊதியமோ மிக அற்பமானதாக இருக்கிறது என்று கூறினார். அதன்பின் இவர்களுடைய கொடிய வறுமை நிலையைப்பற்றி விளக்கினார். இரண்டே வழிகளில்தான் இவர்களுக்கு வருவாய் கிடைக்கிறது. ஒன்று இனாம் (வட்டன்) நிலங்கள் மூலமாக; மற்றது பலுதா (Baluta) எனப்படுகிற வட்டன்தார் மகார்கள் கிராமங்களில் வசூலித்துக் கொள்ளுகிற தானியங்களின் மூலமாக! இந்த வட்டன் நிலங்கள் முன்னாளில் பேரரசர்களால் மகார்களுக்கு அளிக்கப்பட்டன. அந்த மானிய நிலத்தின் அளவை இன்றைய அரசு அதிகப்படுத்தவில்லை.



பம்பாயில் இராஜகிரகம் இல்லத்தில்: (இடப்புறமிருந்து) அம்பேத்கர் மகன் யசவந்தராவ், அம்பேத்கர், அம்பேத்கர் மனைவி இராமாபாய், அம்பேத்கரின் அண்ணன் மனைவி இலட்சுமிபாய், அம்பேத்கரின் அண்ணன் மகன் முகுந்தராவ், அம்பேத்கரின் அன்பு நாய் டாபி.

பொருள்களின் விலை உயர்ந்துவிட்டது; வாழ்க்கைச் செலவு அதிகரித்துவிட்டது; இந்நிலையில் இம்மக்கள் வருவாய்க்கு என்ன செய்வார்கள் என்பதில் அரசு ஒரு நொடியும் அக்கறை காட்டவில்லை. ஆனால் அரசு ஊழியர்களுக்கு மட்டும் ஊதிய உயர்வு கொடுக்கப்படுகிறது; அரசு ஊழியர்களின் எண்ணிக்கை மட்டும் பெருகிவிட்டது என்கிற விவரங்களை உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்தார். முற்காலத்தில் மகார்களுக்குத் தரப்பட்ட மானிய நிலமோ ஒவ்வொரு தலை முறையிலும் துண்டாடப்பட்டு வந்தது. இதன் விளைவாக இதிலிருந்து இவர்கள் பெறும் வருவாய் என்பது கணக்கில் எடுத்துக்கொள்ள முடியாத அளவிற்கு மிகக்குறைவாக உள்ளது எனச் சுட்டிக்காட்டினார்.

"அவைத் தலைவர் அவர்களே! இது ஒரு அநியாயமான கொடிய முறை; இதில் நீதி இல்லை. இதன்படியே தொடர்ந்து இம்மக்கள் பணியாற்றவேண்டும் என்று அரசு விரும்பினால் மகார்களுக்குச் சம்பளம் தரும் பொறுப்பை அரசு கட்டாயம் மேற்கொள்ள வேண்டும். இந்தப் பொறுப்பைச் சிறிதும் கவலை யின்றித் தட்டிக் கழிக்கிற தன்மையில், அரசுக்குப் பதிலாகச் சம்பளம் தரும் பொறுப்பை மூன்றாவது நபரான விவசாயியிடம் ஒப்படைக்கக்கூடாது. ஆனால் இதுதான் இப்போது நடந்துகொண் டிருக்கிறது" எனச் சட்டசபையில் குறிப்பிட்டார்.

வட்டன் நிலங்களைக் கிராம ஊழியப் பதவிகளில் உள்ளவர் களுக்கே மதிப்பீட்டு விலையில் உரிமை ஆக்கிவிட வேண்டும். கட்டாய ஊழியம் என்பதிலிருந்து இவர்களை விடுவித்திட வேண்டும். வட்டன் நிலம் 60,000 மகார்களுக்குப் பிரித்தளிக்கப்பட் டுள்ளது; இது மூன்றில் ஒரு பங்கினரான 20,000 பேர்களுக்கே பிரித்தளிக்கப்படப் போதுமானதாகும். மகார்களின் நிலங்கள் மீது விதிக்கப்படும் நிலவரியிலிருந்தும், பலுதா முறைமூலம் கிராமத்தில் வசூலிக்கப்படும் தானியத்திலிருந்தும் இவர்களுக்குச் சம்பளம் வழங்கப்பட வேண்டும். பலுதா என்பது ஊர்க் காவல் மற்றும் பாதுகாப்புப் பணிகளைச் செய்வதற்காக ஊர் மக்களால் மகார்களுக் குத் தானியமாகத் தரப்படும் சம்பளமாகும். ஆகவே இதனால் அரசின் நிர்வாகச் செலவில் கூடுதல் சுமை ஏற்படாது" என்று வழி வகைகளையும் கூறினார்.

"அரசு, ஆசிரியர்களின் மற்றும் தலத்திகளின் ஊதியத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கை எடுத்துள்ளது. உறுதியுடனும் துணிவுடனும் இவர்கள்பால் அன்பு பாராட்டி இந்த அரசு

செய்திருப்பதுபோல மகார்களின் துன்பத்தைத் துடைப்பதில் இதே உறுதியையும் துணிவையும் இரக்கத்தையும் காட்ட வில்லையே ஏன்? இதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. பிரிட்டிஷ் பேரரசின் குடிமக்களாக இருக்கின்ற ஒரு வகுப்பினரை மீள முடியாத அடிமைகளாக வைத்திருக்கும் ஒரு முறைக்கு அரசு உடந்தையாக இருப்பது ஏன்? ஆகவே நான் பணிவுடன் தெரிவிக்க விரும்புவது என்னவெனில், சட்டப்படியும் அறநெறிப்படியும் நீதியின் அடிப்படையிலும் இந்த மசோதாவின் நான்காவது பிரிவில் நான் வகுத்துள்ள கோட்பாடு நியாயமானது சமத்துவம் தரவல்லது என்பதேயாகும்'' என்று மேலும் கூறினார்.

மகார்கள் இந்த மசோதா நிறைவேற்றப்பட வேண்டும் என்பதில் உறுதியுடன் இருக்கிறார்கள். சட்டசபை இந்த மசோதாவை நிறைவேற்றத் தவறினால் ஒரு பொது வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்படும் என்றும், தன்னுடைய சட்டசபை உறுப்பினர் பதவியை ராஜிநாமா செய்ய நேரிடும் என்றும் கூறி அரசை அச்சுறுத்தினார். இம்மசோதாவின் கோட்பாடுகள் மகார்களின் நலன்களுக்கு மிகவும் இன்றியமையாதது எனக் கருதுவதாலும், மகார்களின் முன்னேற்றத்திற்கு வட்டன் முறையே மிகப்பெரிய தடையாக இருப்பதாக உறுதியுடன் எண்ணுவதாலும் மசோதாவை நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இந்த மசோதாவை ஒருமனதாகச் சட்டசபை நிறைவேற்றும் என நம்புவதாகக் கூறி, மசோதாவை முதற்சுற்று விவாதத்துக்கு முன்மொழிவதாகக் கூறினார்.[35]

இம்மசோதாவின் மீது அம்பேத்கர் ஆற்றிய இரண்டு மணிநேர உரை அழுத்தமுடனும் கேட்போர் நெஞ்சைப் பிணைப்பதாகவும் கோட்பாட்டை நேரடியாக உணர்த்துவதாகவும் அமைந்திருந்தது. இவ்வுரையை உறுப்பினர்கள் அனைவரும் அமைதியுடன் கேட்டனர். முதல் சுற்று விவாதத்திற்குப் பின் ஆகஸ்டு 4ஆம் நாள் இருபத்தி மூன்று பேர் கொண்ட தேர்வுக்குழுவிற்கு இம் மசோதாவை அனுப்பவேண்டும் என்ற தீர்மானத்தை அவரே முன்மொழிந்தார். *1929* ஜுன் மாதத்திற்குள் தேர்வுக்குழு தன் அறிக்கையை அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது. இந்த மசோதாவின் முடிவு அவலமானதேயாகும். தேர்வுக்குழு இம் மசோதாவின் உள்ளடக்கத்தை அடையாளம் காணமுடியாத வகையில் உருக்குலைத்தது. பலுதா முறைபற்றி முரண்பாடு எழுந்தது. அம்பேத்கர், தானியத்திற்குப் பதிலாகப் பணமாகச்

சம்பளம் தரப்பட வேண்டும் என வலியுறுத்தினார். நிலங்களை மதிப்பீட்டின் அடிப்படையில் அல்லாமல் அவற்றை விற்பதால் கிடைக்கக் கூடிய பணத்தில் பாதித் தொகைக்கு மகார்களுக்கு விற்கவேண்டும் என்று தேர்வுக்குழு கூறியது. அம்பேத்கர் மதிப்பீட்டின் அடிப்படையில் நிலம் வழங்கப்பட வேண்டும் என்று கோரியிருந்தார். பழைமைவாதிகளின்-மேட்டுக் குடியினரின் பிரதிநிதிகளில் ஏறக் குறைய எல்லோருமே இந்த மசோதாவிற்கு எதிராக இருந்தனர்; சிலரே அரசுக்கு ஆதரவாக நின்றனர். சில மாதங்களுக்கு முன் சைமன் குழுவிற்கு அளித்த அறிக்கையில் அம்பேத்கர், 'முஸ்லிம்கள் தேச விரோத எண்ணங் கொண்டவர்கள்' என்று மிகக் கடுமையாகத் தாக்கியிருந்தார் என்பதனால் முஸ்லிம் உறுப்பினர்கள் இந்த மசோதாவை எதிர்த்தனர்.[36] இறுதியில் 1929 சூலை 24ஆம் நாள் சட்டசபையில் அம்பேத்கர், "இந்த மசோதாவை நான் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன்" என்று கூறினார். அதன் பின் கால் நூற்றாண்டு உருண்டோடிவிட்டது. மகார்களின் துயர நிலை மாறாமல் அப்படியே நீடித்தது. இதைப்பற்றிக் கவலைப்படுவார் யாருமில்லை.

II

இந்தியாவில் இருந்த நெருக்கடியான அரசியல் நிலையைத் தணிப்பதற்காகப் பிரிட்டிஷ் அரசு 1919ஆம் ஆண்டைய சட்டத்தை மறு ஆய்வு செய்து திருத்திட முடிவுசெய்தது. இதற்கெனச் சர் ஜான் சைமனைத் தலைவராகக்கொண்ட சைமன் குழுவை அமைத்தது. இக்குழுவில் பிரிட்டிஷ் பிரபுக்கள் சபை உறுப்பினர் இருவரும் பிரிட்டிஷ் மக்களவை உறுப்பினர் நால்வரும் உறுப்பினர்களாக இருந்தனர். சர் ஜான் சைமன் நாடாளுமன்ற விவாதங்களில் சிறப்புடன் திகழ்ந்தவர். இக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் உருவாக்கப்படும் கருத்துகள் அமைச்சரவையின் கூட்டுத் தேர்வுக்குழுவின்முன் வைக்கப்படும். இதற்கு முன்னர் சட்டச் சீர்திருத்தம்பற்றி இந்தியர்களின் கருத்துகள் கேட்டறியப்படும் என்று அறிவிக்கப்பட்டது. 1919ஆம் ஆண்டைய சட்டத்தில் அறிவித்திருந்தபடி இந்திய மக்களின் சிக்கலை மறு ஆய்வு செய்யும் வேலையைத் தொடங்குவதற்காக, சைமன் குழு 1928 பிப்ரவரி 3ஆம் நாள் பம்பாய் வந்து சேர்ந்தது. இது சைமன் குழுவின் முதலாவது இந்திய வருகை ஆகும். இக்குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் ஆங்கிலேயர்களாகவே இருந்தனர். இத்தன்மை இந்தியர்களை அவமதிக்கும் செயல் என்று கூறி ஏறக்குறைய எல்லா இந்தியக் கட்சிகளும் கருதின. காங்கிரசுக் கட்சி சைமன்

குழுவை எல்லா நிலைகளிலும் எல்லா வடிவங்களிலும் புறக்கணிப்பது என்று முடிவுசெய்தது. எனவே சைமன் குழு வந்திறங்கிய போது அதற்கு எதிராகக் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடத்தப் பட்டது.

'சைமனே திரும்பிப் போ' என்ற அட்டைகளை ஏந்தியவாறு கண்டன முழக்கங்கள் முழங்கப்பட்டன. நாடு முழுவதும் சைமன் குழுவிற்கு எதிரான ஆர்ப்பாட்டங்களைக் காங்கிரசுக்காரர்கள் நடத்தினார்கள். சில இடங்களில் காவல்துறை துப்பாக்கிச் சூடு நடத்தியது. சைமன் குழு இரண்டாவது முறையாக 1928-29 மாரிக்காலத்தில் இந்தியாவிற்கு வந்தபோதும் எதிர்ப்புணர்ச்சி கொண்ட ஆர்ப்பாட்டங்களை எதிர்கொண்டது.

இதற்கிடையில் காங்கிரசுக் கட்சி கூட்டிய அனைத்துக் கட்சிகளின் கூட்டம் 1928 பிப்ரவரியிலும், மே மாதத்திலும் நடைபெற்றது. மோதிலால் நேரு தலைமையில் சுதந்திர இந்தியாவிற் கான அரசியல் சட்டத்தை வரைவதற்கான ஒருகுழு இக்கூட்ட முடிவில் அமைக்கப்பட்டது. இக்குழு 1928 சூன் முதல் ஆகஸ்டு முடிய பணியாற்றி ஓர் அரசியல் சட்டப் பேரவை உருவாக்கியது.

இந்தியாவிற்கென அரசியல் அமைப்புச் சட்டம் எழுதுவதற்காக இந்தியர்களால் எடுக்கப்பட்ட முதல் முயற்சி இதுவேயாகும். முஸ்லிம்கள் மத அடிப்படையில் பிரிந்து போவதைத் தடுப்பதே இச் சட்ட வரைவின் முதன்மையான நோக்கமாயிருந்தது. தீண்டப்படாத அல்லது நசுக்கப்பட்ட வகுப்புகளைப்பற்றி மோதி லால் நேரு அறிக்கையில், "அரசியல் சட்டம்பற்றிய எங்களுடைய யோசனைகளில் சட்டசபைகளில் தீண்டப்படாத வகுப்பு மக்கள் பிரதிநிதிகளாக வருவதற்கென, தனியான ஏற்பாடு எதையும் செய்யவில்லை; தனி வாக்காளர்கள் தொகுதியை அமைப்பதுமூலம் அல்லது நியமன முறைமூலம் இவர்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்படலாம்" என்று கூறப்பட்டிருந்தது. ஆனால் இவ்விரு முறைகளும் தவறானவை, தீங்கானவை என்று மைசன் குழு கருதியதால் இவற்றிற்கு ஆதரவளிக்கவில்லை. பிரிட்டிஷ் அரசின் "உரிமைகள் பற்றிய அறிக்கை" யானது தீண்டப்படாத வகுப்பு மக்களின் துன்பங்கள் அனைத்தையும் துடைத்திடும் மருந்தாக விளங்கும் எனச் சைமன் குழு கூறியது.[37] அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்குக் காங்கிரசுக் செயற்குழு முக்கியமான முகம்மதிய, பார்சி, கிறித்துவ, சீக்கிய, ஆங்கிலோ-இந்திய அமைப்புகளுக்கு அழைப்பு அனுப்பியது; பார்ப்பனர் அல்லாதார் அமைப்புகள்,

திராவிட மகாஜனசபை போன்றவை கூட அழைக்கப்பட்டன. ஆனால் அம்பேத்கர் தலைமையில் இயங்கிய தீண்டப்படாத வகுப்பினர் நிறுவனத்திற்கோ மற்ற எந்தத் தீண்டப்படாத வகுப்பு அமைப்பிற்கோ அழைப்பு அனுப்பவில்லை என்பதைக் கருத்தில் கொண்டால்தான், காங்கிரசுக் கட்சி தீண்டப்படாத வகுப்பு மக்கள்பால் கொண்டிருந்த மனப்போக்கினைத் தெளிவாகப் புரிந்து கொள்ளமுடியும். ஆனால் இதற்குப் பத்து ஆண்டுகளுக்கு முன்னரே, அம்பேத்கர், சௌத்பரோ குழுவின் முன் தீண்டப்படாதோர் சார்பில் சாட்சியம் கூறினார் என்பது மனங்கொள்ளத்தக்கதாகும்.

இவ்வேளையில் 1928 சூன் முதல் அம்பேத்கர் பம்பாய் அரசினர் சட்டக் கல்லூரியில் பேராசிரியர் பணியைத் தற்காலிகமாக ஏற்றார். தீண்டப்படாத வகுப்பு மக்களின் விடுதலைக்கான போராட்டங்கள், ஆழ்ந்த விவாதங்கள், கூட்டங்களிலும் கருத்தரங்குகளிலும் கலந்துகொள்வதற்காக நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் மேற்கொண்ட பயணங்கள் ஆகியவற்றிற்கே அவருடைய நேரம் செலவாகிவிட்டதால், வழக்கறிஞர் தொழிலில் கவனம் செலுத்தி முன்னேறிட அவருக்குப் போதிய நேரம் கிடைக்கவில்லை. தீண்டப்படாத வகுப்பு மக்களின் தலைவர், சிறந்த படிப்பாளி, தன் கடைசிப் பத்திரிகையின் ஆசிரியர் என்கிற பல்வேறு பணிகளின் காரணமாக வழக்குரைஞர் பணிக்கென அவரால் நேரம் ஒதுக்கி வழக்குகளை ஏற்க முடியவில்லை. ஆகவே வாழ்க்கைச் செலவிற்காக அவர் கல்லூரி ஆசிரியர் பதவியை ஏற்க நேரிட்டது.

சைமன் குழுவுடன் ஒத்துழைப்பதற்காகப் பிரிட்டிஷ் இந்தியா முழுமைக்குமான ஒரு குழுவை மத்திய அரசு அமைத்தது; ஒவ்வொரு மாகாணச் சட்டசபையும் சைமன் குழுவுடன் ஒத்துழைப்பதற்காக ஒரு மாகாணக்குழுவைத் தேர்ந்தெடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. இதன்படி பம்பாய் மாகாணக் குழுவிற்குப் பம்பாய்ச் சட்டசபை அம்பேத்கரையும் மற்ற உறுப்பினர்களையும் 1928 ஆகஸ்டு 3ஆம் நாள் தேர்ந்தெடுத்தது.

சைமன் குழு மேற்கொண்ட நடவடிக்கைகளும் சுற்றுப் பயணங்களும் இந்திய அரசியல் சூழலில் புதிய சிந்தனைகளைக் கிளறிவிட்டன. இதனால் பலதரப்பட்ட சக்திகளும் தலைவர்களும் முன்னணிக்கு வந்தனர். சைமன் குழுவின்முன் சாட்சியம் அளித்த தன்மூலம் அம்பேத்கரின் ஆற்றலும் அறிவுத்திறனும் முதன்மையும்

வெளிப்பட்டன. தீப்பொறி பறக்க, அஞ்சாமல் மனத்தில்பட்டதை மறைக்காமல் பேசுபவர் அம்பேத்கர் என்று கல்லூரியில் அவரைப் பற்றிப் பெரும்பாலோர் இக்கட்டத்தில் அறிந்திருந்தனர்; அம்பேத்கர் சைமன் குழுவிற்கு ஒத்துழைப்பு அளித்து வந்ததால் அவரைப் பிரிட்டிஷ்காரர்களின் கையாள், கருங்காலி, பேய், துரோகி என்றெல்லாம் கூறி வசைமாரி பொழிந்தனர். ஒருநாள் காலை கல்லூரியில் வகுப்பறைக்குள் அம்பேத்கர் நுழைந்தபோது சட்டக் கல்லூரி மாணவர்கள் அவருடைய வகுப்பைப் புறக்கணித்து வெளியேறினர். தீவிரத் தேசிய உணர்ச்சிமிக்க சிறந்த மாணவன் ஒருவன் சைமன் குழுவுடன் அம்பேத்கர் ஒத்துழைப்பதற்காக அவரைக் கண்டித்தான். மறுநாள் இந்நிகழ்ச்சிபற்றிய செய்தி எல்லா நாளேடுகளிலும் வெளியானது என்பதைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ!

சைமன் குழுவின்முன் பதினெட்டு தீண்டப்படாத வகுப்புச் சங்கங்கள் சாட்சியம் கூறின; தங்கள் கோரிக்கைகள் அடங்கிய அறிக்கையைக் குழுவிடம் அளித்தன. அவற்றில் பதினாறு சங்கங்கள் தீண்டப்படாதவர்களுக்கெனத் தனி வாக்காளர் தொகுதிகள் வேண்டும் என்று கோரியிருந்தன. பகிஷ்கிரித் ஹித்தகாரிணி சபையின் சார்பில் கோரிக்கை அறிக்கையைச் சைமன் குழுவிடம் அம்பேத்கர் அளித்தார். தீண்டப்படாத வகுப்பு மக்களுக்கெனத் தனியான இட ஒதுக்கீட்டுடன் கூடிய 'கூட்டு வாக்காளர் தொகுதி' (Joint electorate) ஏற்படுத்தப்பட வேண்டும் என்று அந்த அறிக்கை கோரியது.[38] நாட்டை நடத்திச் செல்லும் பொறுப்பில் இருப்பவர்கள் பல இலட்சக்கணக்கில் ஊமையராக உள்ள தீண்டப்படாத வகுப்பு மக்களை மறந்துவிடுகிறார்கள் என்று அந்த அறிக்கை குறைகூறியது. பிரிட்டிஷ் இந்திய மக்களில் அய்ந்தில் ஒரு பங்கினராக இருக்கின்ற தீண்டப்படாத வகுப்பு மக்களுக்கு 1919ஆம் ஆண்டைய சட்டத்தின்கீழ்ப் பெரும் அநீதி இழைக்கப் பட்டுவிட்டது என்று அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டிருந்தது. பம்பாய் மாகாணச் சட்டசபையில் மொத்தம் உள்ள 140 இடங்களில் 22 இடங்களைத் தீண்டப்படாத வகுப்பு மக்களுக்கென ஒதுக்கிடவேண்டுமென்று பகிஷ்கிரித் ஹித்த காரணி சபை கோரியது. உறுப்பினர்களை நியமன முறையில் அமர்த்தும் கொள்கையை வன்மையாக எதிர்த்தது; தீண்டப்படாத வகுப்பு மக்கள் தேர்தல்மூலம் உறுப்பினர்களாக ஆவதற்கு வழிவகை செய்யவேண்டும் என்று அச்சபை வலியுறுத்தியது. தங்களுக்கு அரசியல் கல்வி தேவை என்றும் அமைச்சர் பதவி மிக் முக்கியமான

சிறப்புரிமைகளைப் பெற்றிருப்பதால் தாங்களும் அமைச்சரவையில் இடம் பெறவேண்டும் என்றும் அந்த அறிக்கை கோரியது.

போதிய பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளுடன் மேலும் சில கோரிக்கைகளையும் அச்சபை முன்வைத்தது. நாட்டிற்காக எழுதப்படவுள்ள அரசியல் அமைப்புச் சட்டத்தில் தீண்டப்படாத வகுப்பு மக்களுக்குக் கல்வி வழங்குவதே மாகாண வரவுசெலவுத் திட்டத்தில் முதன்மையான பணியாக இருக்க வேண்டும் என்ற ஒரு விதியைச் சேர்த்திடக் கோரியது. தீண்டப்படாத வகுப்பு மக்கள் இராணுவம், கடற்படை, காவல் துறை ஆகியவற்றில் பணியில் சேருவதற்கான உரிமையை அளித்திட வேண்டும் என்றும் வலியுறுத்தியது.

பெரும்பான்மையினராக இருக்கின்ற இந்துக்கள், முன்வைக் கின்ற பொறுப்பான குறிப்பிட்ட நிகழ்ச்சிகளை மட்டும் நம்பி அவற்றில் மயங்கி அவர்கள் நல்லவர்கள் என்று மதிப்பீடு செய்ய வேண்டாம் என்று சைமன் குழுவைப் பகிஷ்கிரித் ஹித்தகாரிணி சபை எச்சரிக்கை செய்தது. தீண்டப்படாத வகுப்பு மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள அட்டூழியங்கள், இழிவாக நடத்துதல் மற்றும் ஒடுக்குமுறைகள் ஆகியவற்றிற்கான ஆதாரங்களை அச் சங்கம் நிரல்படுத்திச் சுட்டிக்காட்டியது. சமூகம், பொருளாதாரம், மதம் ஆகிய துறைகளில் தீண்டப்படாத மக்களின் வாழ்க்கை இன்னல்களுக்குள்ளாகி இருப்பதற்கு இத்தகைய சூழ்நிலைதான் காரணம் என்று அச்சபை கூறியது.

ஆயினும் பகிஷ்கிரித் ஹித்தகாரிணி சபை, நல்லறிவு வாய்க்கப் பெற்றுள்ள இந்துத் தலைமையை நம்பத் தயாராக இருப்பதாகக் கூறியது. ‘நல்ல இந்துவின் தலைமையிலான அரசின் கீழ்ச் சிறந்த உலகளாவிய இன்பம் தழைக்கும் என்பதில் தீண்டப்படாத வகுப்பு மக்களில் எவரும் அய்யுறமாட்டார்கள்’ என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் உண்மையென்னவென்றால், சட்டங்களும் அமைப்புகளும் மாற்றப்படவேண்டும் என்று கேட்கப்படுவது நல்லெண்ணங்கொண்ட இந்துக்களுக்காக என் றில்லை; ஆனால் இந்துக்களில் உள்ள தீயோருக்காக என்றல்லவா இருக்க வேண்டும் என்று அச்சங்கம் அந்த அறிக்கையில் வினா தொடுத்துள்ளது.

சென்னை மாகாண ஆதிதிராவிட மகாஜன சங்கத்தின் மய்ய அமைப்பு தீண்டப்படாத வகுப்பு மக்கள் அரசினால் பதவிகளில்

நியமிக்கப்பட வேண்டும் என்று கோரியது. பம்பாய் மாகாணப் பார்ப்பனர் அல்லாதார் கட்சி தீண்டப்படாதவர்களுக்குத் தனி வாக்காளர் தொகுதியும், தனி ஒதுக்கீட்டு இடங்களும் இருக்க வேண்டும் என்று தன் அறிக்கையில் பரிந்துரைத்திருந்தது. சிந்து மாகாணத்தைத் தனியாகப் பிரிக்க வேண்டும்; வடமேற்கு எல்லைப்புற மாகாணத்திலிருந்து புதிய ஒரு மாகாணத்தைப் பிரித்து ஏற்படுத்த வேண்டும்; முஸ்லிம்களுக்கெனத் தனி வாக்காளர் தொகுதிகள் இருக்க வேண்டும்; கூட்டாட்சி அரசிய லமைப்புச் சட்டத்தில் மாகாணங்களுக்கெனத் தனி அதிகாரங்கள் (Residuary Powers) இருக்க வேண்டும் என்கின்ற கோரிக்கைகளை முஸ்லிம் லீக் வலியுறுத்தியது.

1928 அக்டோபர் 23ஆம் நாள் சைமன் குழு, மத்தியக்குழு, பம்பாய் மாகாணக் குழு ஆகியவை பூனாவில் அம்பேத்கரிடம் சாட்சியம் பெற்றன. இம்மூன்று குழுக்களும் பகிஷ்கிரித் ஹித்த காரிணி சபை அளித்த கோரிக்கை அறிக்கையையும், இந்திய ஒடுக்கப்பட்டோர் சங்கம் சமர்ப்பித்திருந்த அறிக்கையையும் தம் மிடம் ஆய்வுக்காகப் பெற்றிருந்தன. எடுத்த எடுப்பிலேயே சர் ஜான் சைமன் அம்பேத்கரிடம் பம்பாய் மாகாணத்தில் உள்ள தீண்டப்படாத வகுப்புகளின் மக்கள் தொகையைப்பற்றிப் பல கேள்விகள் கேட்டார். அதன்பின்னர் ஹரி சிங் கௌர் அம்பேத்கரி டம் இது சார்பான பின்வரும் கேள்விகளைக் கேட்டார்.[39]

கேள்வி: டாக்டர் அம்பேத்கர், 'ஒடுக்கப்பட்ட வகுப்புகள்' என்பதும், தீண்டப்படாத வகுப்பு மக்கள் என்பதும் ஒரே பொருளைக் குறிக்கும் சொற்களா?

விடை: ஆம்.

கேள்வி: ஒடுக்கப்பட்ட வகுப்புகளுக்குத் தனியான பிரதிநிதித்துவம் வேண்டும் என்று நீங்கள் கேட்டுள்ளீர்கள். தீண்டப்படாதவர் களுக்காகத் தனிப்பிரதிநிதித்துவம் கேட்பது என்ற அளவுடன் நின்று கொள்ளுகிறீர்கள் அல்லவா?

விடை: ஆம்.

கேள்வி: சில ஆதிக்குடிகள் தீண்டப்படாதவர்களாக இல்லை என்று நீங்கள் கூறியிருக்கிறீர்கள்.

விடை: சில பகுதிகளில் அவ்வாறு அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் சார்பில் நான் பேசப் போவதில்லை.

அதன்பின் குழுவினர்க்கும் அம்பேத்கருக்கும் இடையே கீழ்க்குறித்துள்ள கேள்வி பதில் உரையாடல் நடைபெற்றது.

கேள்வி: இந்திய அரசியல் அமைப்புச் சட்டம், அதிலும் குறிப்பாகப் பம்பாய் மாகாணச் சட்டம் இந்த மக்களை எவ்வாறு நடத்த வேண்டும் என்பதுபற்றி நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?

விடை: முதலாவதாக நான் தெரிவிக்க விரும்புவது என்னவென்றால், தெளிவாக வீரையறுக்கப்பட்ட சிறுபான்மையினராக, இந்துச் சமூகத்திலிருந்து பிரிக்கப்பட்டவர்களாக, தனித் தன்மையான சுதந்திரமான சிறுபான்மையினராகத் தீண்டப்படாத வகுப்பு மக்கள் நடத்தப்பட வேண்டும் என்று நாங்கள் கேட்கிறோம். இரண்டாவதாக நான் முன்வைப்பது என்னவென்றால், பிரிட்டிஷ் இந்தியாவில் உள்ள மற்ற எந்தச் சிறுபான்மையினரைக் காட்டிலும் தீண்டப்படாத வகுப்புச் சிறுபான்மையினருக்கு மிக அதிக அளவிலான அரசியல் பாதுகாப்பு தேவைப்படுகிறது. ஏனென்றால் இவர்கள் கல்வியில் மிகவும் பின்தங்கியவர்களாகவும், பொருளாதாரத்தில் மிகவும் ஏழைகளாகவும், சமூக நிலையில் அடிமைகளாகவும் இருக்கிறார்கள். தீண்டப்படாதவர்கள் பல கொடுமையான அரசியல் உரிமைப்பறிப்புகளால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். வேறு எந்த வகுப்பிற்கும் இது போன்ற பாதிப்பு இல்லை. வயது வந்த அனைவர்க்கும் வாக்குரிமை வரும்போது எங்கள் வகுப்பிற்கெனத் தனி இடங்கள் ஒதுக்கப்பட வேண்டும்.

கேள்வி: வயது வந்தோர்க்கு வாக்குரிமை என்பது இல்லாவிட்டால்?

விடை: அந்நிலையில் தனி வாக்காளர் தொகுதியைக் கேட்போம்.

கேள்வி: குறிப்பாக அரசுப் பொது ஊழியங்களில் ஒதுக்கீடு பெறவேண்டும் என்பதில் நீங்கள் அதிக அக்கறை காட்டுகிறீர்கள். இது ஏன்?

விடை: மிகப்பல சந்தர்ப்பங்களில் தீண்டப்படாத வகுப்பு மக்களின் நலன்களுக்கு எதிராகவே சட்டம் செயல்பட்டிருக்கிறது என்பதை அழுத்தந்திருத்தமாகக் கூற விரும்புகின்றேன்.

கேள்வி: 'தீண்டப்படாத வகுப்புகள்' என்பதற்குச் சரியான ஒரு வரையறையை எனக்குக் கூற முடியுமா?

விடை: தொட்டால் தீட்டுப்பட்டுவிடும் என்று கருதப்படும் சாதிகள்.

கேள்வி: மகார், மாங் உள் சாதிகளுக்கு இடையே கலப்புத் திருமணம் நடைபெறுகிறதா?

விடை: இல்லை. சாதி இந்துக்கள் இவர்களிடமும் விஷத்தைப் பரப்பிவிட்டார்கள்.

கேள்வி: மகார், மாங் வகுப்பினர் ஒன்றாக உணவருந்துகிறார்களா?

விடை: ஆம், இப்போதெல்லாம் அருந்துகிறார்கள்.

கேள்வி: தீண்டப்படாத வகுப்பு மக்கள் உண்மையான இந்துக்கள் என்று நீங்கள் வரையறை செய்கிறீர்களா?

விடை: எந்தப் பெயரால் அழைக்கப்படுகிறோம் என்பதைப்பற்றி நான் கவலைப்படவில்லை. இந்து மதத்திற்கு (வருணத்திற்கு) வெளியே நான் இருந்துகொண்டிருக்கும்வரையில் என்னை ஓர் இந்து என்றோ அல்லது இந்து அல்லாதவன் என்றோ அழைத்துக்கொள்வதில் அர்த்தமே இல்லை.

கேள்வி: நீங்கள் இந்து மதத்திற்கு வெளியே இருப்பதாக ஆனால், இந்துச் சட்டத்திற்கு நீங்கள் கட்டுப்பட்டவராக இருக்க முடியாது. அப்படியானால் எந்த உரிமையியல் சட்டத்திற்கு நீங்கள் ஆளாவீர்கள்?

விடை: நாங்கள் இந்துச் சட்டத்தினால் ஆளப்படுகின்றோம்.

இந்துச் சமூகச் சீர்திருத்தவாதிகள் தீண்டாமை ஒழிப்பிற்காக மேற்கொண்ட முயற்சிகள்பற்றிக் குறிப்பிடும்போது அவை வெறும் மேடைப் பேச்சுகளாகவே நின்றுவிட்டன என்று அம்பேத்கர் குறிப்பிட்டார்.

அந்த நாட்களில் வழக்குரைஞர் தொழில் செய்வதற்கு அம்பேத்கருக்கு நேரமே கிடைக்காதிருந்தது. இருப்பினும் அம்பேத்கர் ஒரு வழக்கை எடுத்துக்கொண்டாராயின், தன் கட்சிக்காரரின் வெற்றிக்காக விழிப்புடனிருந்து அயராது பாடுபடுவார். இன்றியமையாத அரசியல் வேலை அல்லது சமூகப்பணி காரணமாகச் சிலபோழ்து அவசர அவசரமாக நீதிமன்றத்தில் வாதிட்டுவிட்டு முன்னதாகவே புறப்பட்டுச்செல்ல நேரிட்டாலும் அம்பேத்கர் தன்



அம்பேத்கரும் மனைவி இராமாபாய் அம்மையாரும்

கட்சிக்காரர்களை என்றுமே கைநழுவவிட்டதில்லை. இவ்வாறு அம்பேத்கரைப்பற்றிச் சொல்லப்படுவதை, ஓர் உண்மை நிகழ்ச்சி உறுதி செய்கிறது. பூனாவில் சைமன் குழுமுன் அம்பேத்கர் சாட்சியம் அளிக்கவேண்டிய அதே நாளிலேயே தாணா மாவட்ட நீதிமன்றத்தில் ஒரு கொலை வழக்கில் அவர் வாதாடவேண்டிய நிலை ஏற்பட்டது. அவருடைய கட்சிக்காரர்களைத் தூக்குத் தண்டனையிலிருந்து காப்பாற்றுவதற்காக வாதாட வேண்டிய முக்கியமான வழக்கு அது. அதே சமயத்தில் அவருடைய சமூக மக்களின் நலன்களுக்காகச் சைமன் குழுவின்முன் பூனாவில் சாட்சியம் கூறும் அரிய வாய்ப்பையும் இழக்க முடியாது. எனவே, அம்பேத்கர் மாவட்ட நீதிபதியிடம், தன்னுடைய வாதங்களை முதலில் உரைத்துவிட்டுச் செல்வதற்காகத் தனிச் சலுகையளிக்கு மாறு வேண்டினார். நீதிமன்ற நெறிப்படி அரசு வழக்கறிஞர் குற்றஞ்சாட்டி வாதிட்டு முடித்தபிறகுதான், எதிரிகளுக்கான வழக்கறி ஞர் அவற்றிற்குப் பதிலளிப்பதற்காக அழைக்கப்பட்டிருக்க வேண் டும். ஆனாலும் அம்பேத்கரின் வேண்டுகோளை நீதிபதி ஏற்றார். அம்பேத்கர் மிகத் திறமையாக வாதாடி முடித்தபின் பூனாவிற்குப் புறப்பட்டுச் சென்று சைமன் குழுமுன் சாட்சியம் அளித்தார். அக்கொலை வழக்கில் கட்டாயம் வெற்றி கிட்டும் என்று அம்பேத்கர் அழுத்தமான நம்பிக்கையுடன் இருந்தார். அதே போன்று அந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களில் பெரும் பாலோர் நீதி மன்றத்தால் தூக்குத் தண்டனையிலிருந்து விடுதலை செய்யப்பட்டனர்.

தீண்டப்படாத வகுப்பு மக்களின் குடியுரிமைகள்பற்றி அம்பேத்கர் எப்பொழுதும் கூர்ந்து கவனித்துவந்தார். ஆபத்தான சூழ்நிலையிலும் அஞ்சாமல் எவ்வாறு தங்கள் உரிமைகளை நிலைநாட்டிக்கொள்வது என்பதைத் தீண்டப்படாத மக்களுக்குக் கற்பிப்பதற்காகக் கிடைக்கின்ற ஒவ்வொரு வாய்ப்பையும் அம்பேத் கர் நழுவவிடாமல் பயன்படுத்தினார். அத்தகையதோர் வாய்ப்பு தானாகவே 1928 செப்டம்பர் மாதம் பம்பாயில் கணபதி விழாவின்போது அவர்களுக்குக் கிடைத்தது. பொது இடத்தில் வைக்கப்பட்டுள்ள கணபதியின் உருவத்தை வழிபடுவதற்கு எல்லா இந்துக்களுக்கும் உரிமை இருக்கிறதா என்பதைப்பற்றிச் சீர்திருத்த இந்துக்களுக்கும் வைதிக இந்துக்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. ஆனால் அம்பேத்கரின் முயற்சியாலும் அச்சுறுத்தல்க ளாலும், அவருடைய 'சமூகச் சமத்துவக்கழகத்'தாலும் (Social Equality League) மற்றும் போலே போன்ற சமூகச் சீர்திருத்தக்காரர்

களின் முயற்சியாலும் இப்பிரச்சினை நல்ல முறையில் தீர்த்து வைக்கப்பட்டது. அதன்படி தீண்டப்படாத இந்துக்கள் பந்தலில் வைக்கப்பட்டுள்ள கணபதி உருவத்தை வழிபடுவதற்கான உரிமையைப் பெற்றனர்.

அதே காலக்கட்டத்தில் அம்பேத்கரின் கவனத்தை மற்றொரு நிகழ்ச்சி ஈர்த்துநின்றது. அதுதான் பம்பாயில் நடைபெற்ற நெசவாலைத் தொழிலாளர்களின் முதல் வேலைநிறுத்தம். 1,50,000 தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டதால் ஆறு மாதக் காலம் நெசவாலைகள் செயலற்றுக் கிடந்தன. ஒவ்வொரு தொழிலாளியும் மூன்று விசைத்தறிகளின் இயக்கத்தைக் கவனிக்க வேண்டும் என்ற புதியமுறையை ஆலைகளின் உரிமையாளர்கள் புகுத்தினார்கள்.

அதன் அடிப்படையில் தொழிற்சாலைகளில் ஆட்குறைப்பு செய்யத் தொடங்கினார்கள். ஆகவே ஆலைத் தொழிலாளர்கள் அந்தப் புதிய வேலை முறை மாறுதலையும் ஆட்குறைப்பையும் எதிர்த்தனர். பம்பாயில் முதன்மையான தொழிற்சங்கமாகத் திகழ்ந்த 'கிர்னி கம்கார் மகா மண்டல்' என்ற தொழிற் சங்கம் தொழிலாளர்களிடையே புதிய வேலை முறைக்குக் கடும் எதிர்ப்பை உருவாக்கியது; வேலைநிறுத்தத்தைத் தொடங்கியது. அந்த வேலை நிறுத்தத்தின்போது தீண்டப்படாத பிரிவைச் சேர்ந்த தொழிலாளர்கள் தான் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டனர். வறியருள் வறியரான அவர்கள் தங்களை அரித்துத் தின்னும் அத்துன்பத்திலிருந்து விடுபட விரும்பினர்.

அம்பேத்கர், அவரைப் பொறுத்த அளவில், அந்த வேலை நிறுத்தத்தை ஆதரிக்கவில்லை. கடந்த எண்பது ஆண்டுகளாக பம்பாயில் நெசவாலைகள் இருக்கின்றன. ஆனால் அவற்றில் அதிகச் சம்பளம் தரக்கூடிய நெசவு போன்ற பிரிவுகளில் தீண்டப்படாத தொழிலாளர்கள் வேலை செய்ய அனுமதிக்கப்பட்டதே இல்லை என்ற உண்மை அம்பேத்கரை வருந்தச் செய்து கொண்டிருந்தது. இந்தக் குறைபாட்டைக்களையவோ, நெசவாலைத் தொழிலில் தீண்டப்படாத வகுப்பு மக்களின் நலனுக்கு எதிராகவுள்ள இடையூறுகளை அகற்றவோ எந்த ஒரு தொழிற்சங்கமும் முயன்றிடவில்லை. மேலும் கம்யூனிசமும் வேலைநிறுத்தமும் பிரிக்க முடியாத இரட்டையர் போலவே இருக்கும் என்று அம்பேத்கர் கருதினார். தொழிலாளர் இயக்கம் தன் பழைய போக்கினைக் கைவிட்டுவிட்டுப் புதிய கண்ணோட்டத்துடன்

வளர்ந்துகொண்டிருக்கிறது என்பதை அம்பேத்கர் அறிந்திருந்தார். அரசியல் புரட்சியில் ஆர்வம் காட்டுகின்ற அளவிற்குத் தொழிலாளர் களின் பொருளாதார நலன்களைப் பேணுவதில் தொழிலாளர் இயக்கம் அக்கறை செலுத்தவில்லை என்று அம்பேத்கர் கருதினார். அதனால் வேலைநிறுத்தம் என்ற ஆயுதம் அரசியல் நோக்கத்திற்கா கவே பயன்படுத்தப்படுகிறது என்றார். அதன் காரணமாக உண்மையில் தீண்டப்படாத வகுப்பு மக்களின் பொருளாதார நிலை மேலும் சீரழிந்தது. ஆக்வே அம்பேத்கர் சுதந்திரமானதொரு தனி வழியைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தார்.

தீண்டப்படாத வகுப்புத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தைக் கைவிட்டு மீண்டும் வேலைக்குச் செல்வதே அவர்களின் துன்பத் தைக் குறைப்பதற்கான வழி என்று அம்பேத்கர் கருதினார். இ.டி. சஸ்ஸீன் அவர்களுக்குச் சொந்தமாக இருந்த பல்வேறு தொழிற்சாலைகளுக்கும் சேர்த்து மேலாளராக இருந்த பெடரிக் ஸ்டோன் வேலைநிறுத்தத்தைக் கைவிட்டு வேலைக்குத் திரும்புமாறு தீண்டப்படாத தொழிலாளர்களுக்கு அறிவுறுத்துமாறு, தொடர்ந்து அம்பேத்கரைக் கேட்டுக்கொண்டிருந்தார். பம்பாய்த் தொழிலாளர் இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவரான போலேவின் துணையு டன் அம்பேத்கர் இதில் துணிச்சலான நிலைப்பாட்டை எடுத்தார். வேலைநிறுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்த பகுதியில் ஆபத்தான இடங்களுக்கும் அம்பேத்கர் சென்றுவந்தார். பம்பாயில் தீய சக்திகளின் உறைவிடமான ஒரு பகுதியில்தான் அம்பேத்கர் கடந்த பத்தாண்டுகளாக வாழ்ந்து வந்தார். அதனால் அவர் தொழிலாளர்க ளின் வலிமைகள், பலவீனங்கள் பற்றி நன்கு அறிந்திருந்தார். சாவிற்கு அஞ்சாத தோழர்களின் துணையுடன் தீண்டப்படாத தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்புவதற்கான முயற்சிகளை அம்பேத்கர் மேற்கொண்டார். இறுதியில் பெருமளவில் அதில் அம்பேத்கர் வெற்றி கண்டார்.

அந்த வேலைநிறுத்த நாட்களில் மோதலும் பகை உணர்ச்சியும் கனன்றுகொண்டிருந்தன. அம்பேத்கரின் அலுவலகத்திற்கும் வீட்டிற்கும் அருகில்தான் தொழிற்சங்கங்களின் தலைமையிடங்கள் இருந்தன. நடைபாதையில், கூட்டமாக அமர்ந்துள்ள தொழிலாளர் களின் கண்கள் பகையுணர்வை உமிழ்ந்திட, அவர்களூடே அம்பேத்கர் நடந்து செல்வார். உணவிற்காக அவருடைய வீட்டிற்கு அம்பேத்கர் நடந்து செல்லும்போதும் திரும்பி வரும்போதும் அவருடைய நம்பிக்கைக்குரிய தோழர்கள் சிலர் அவருக்குத்

தெரியாமலே அவரைப் பின்தொடர்ந்து சென்று பாதுகாப்பு அளித்தனர் ஒருநாள் அம்பேத்கர் அவருடைய வீட்டிலிருந்து அவருடைய அலுவலகத்திற்குத் திரும்பிக்கொண்டிருந்தபோது 'ஏன் என்னைப் பின் தொடர்ந்து வருகிறீர்கள்' என்று கேட்டார். அவர்கள் அமைதியாக நின்றனர். ஆனால் அவர்களின் கண்கள் அம்பேத்கரிடம் அவர்கள் கொண்டிருந்த முழு ஈடுபாட்டைக் காட்டின. "இந்த முட்டாள்தனமான பாதுகாப்பை நிறுத்துங்கள்; என் பொருட்டு உங்கள் உயிர்களுக்கு ஆபத்தைத் தேடிக்கொள்ளா தீர்கள்; என்னுடைய சாவினை யார் தடுத்து நிறுத்திவிட முடியும்? இந்த அளவிற்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவையே இல்லை" என்று புத்தரைப் போன்று, அம்பேத்கரும் அவர்களிடம் சொன்னார். ஆயினும் அவருக்கு அளிக்கப்பட்டுவந்த பாதுகாப்பு தொடர்ந்தது.

வேலைநிறுத்தக் காலத்தில்-பகை உணர்வுகள் மேலோங்கி இருந்த காலக்கட்டத்தில்தான், இந்நூலில் ஏற்கனவே விவரிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சியான சைமன் குழுமுன் அம்பேத்கர் சாட்சியம் அளிக்கும் நிகழ்ச்சியும் நடைபெற்றது என்பதை இங்கு நினைவு கூரவேண்டும். பிரிட்டிஷ் தொழிலாளர் தலைவரான மேஜர் அட்லி, சைமன் குழுவில் உறுப்பினராக இருந்தார். பின்னாளில் இங்கிலாந்தின் பிரதமர் ஆனார். அம்பேத்கர் சைமன் குழுமுன் சாட்சியம் அளித்தபோது, அவரிடம் அட்லி சில பொருத்தமான கேள்விகளைக் கேட்டார். தொழிலாளர் பிரச்சினை தொடர்பாக அவ்விருவருக்கும் இடையே பரிமாறிக் கொள்ளப்பட்ட கருத்துகளை இங்கே குறிப்பிடுவது பொருத்தமாகும்.[40]

அட்லி: தீண்டப்படாத வகுப்பு மக்கள் தொழிற்சாலைகளிலும் பஞ்சாலைகளிலும் மற்ற ஆலைகளிலும் வேலை செய்கிறார்களா?

அம்பேத்கர்: எல்லோரும் வேலை செய்கிறார்கள். தீண்டப்படாத வகுப்பு மக்கள் அனைவருமே கூலிகளாகத்தான் இருக்கிறார்கள்.

அட்லி: நான் சொல்ல வந்த கருத்தை நீங்கள் புரிந்துகொள்ளவில்லை. நான் தொழிற்சாலைகள்பற்றிப் பேசுகின்றேன். தீண்டப்படாத வகுப்பு மக்கள் கிராமங்களில் ஏதாவதொரு வேலையில் உழைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பெரும் எண்ணிக்கையில் தொழிற்சாலைகளிலும் வேலை செய்கிறார்களா?

அம்பேத்கர்: மிகப் பெரும் எண்ணிக்கையில் வேலை செய்கிறார்கள்.

அட்லி: தீண்டப்படாதவர்களாக அவர்கள் நடத்தப்படுவது எவ்வகையிலேனும் குறைந்துள்ளதா?

அம்பேத்கர்: குறையவில்லை. அதிகச் சம்பளம் கிடைக்கும் நெசவுப் பிரிவில் தீண்டப்படாதவர்கள் வேலை செய்ய முற்றிலுமாக அனுமதிக்கப்படுவதேயில்லை. நூற்புப் பிரிவு போன்றவற்றில் மட்டுமே அவர்கள் வேலையில் சேர முடியும்.

அட்லி: ஏன்?

அம்பேத்கர்: தீண்டாமைதான் காரணம்.

III

சைமன் குழுவின் பணி மாரிக்காலம்வரை தொடர்ந்தது. மாகாணக் குழுக்களும் தங்கள் அறிக்கைகளைத் தனியாகத் தயாரித்தன. பம்பாய் மாகாணச் சட்டசபையால் சைமன் குழுவுடன் ஒத்துழைப்பதற்காக அமைக்கப்பட்ட மாகாணக் குழு அரசியலமைப்புச் சட்டச் சிக்கல் தொடர்பாக அதிகாரப்பூர்வமான, அதிகாரப்பூர்வமற்ற சாட்சியங்களைக் கேட்டறிந்தபின், அதனுடைய அறிக்கையை 1929 மே 7ஆம் நாள் அளித்தது. சிந்துப் பகுதியைப் பிரித்துத் தனி மாகாணமாக்க வேண்டும் என்ற கோரிக்கையில் நியாயம் இருப்பினும் நிதி நிலைமை காரணமாக அதை நடைமுறைப்படுத்த இயலாது என்று அவ்வறிக்கை கூறியது. கர்நாடகப் பகுதி தனியாகப் பிரியவேண்டும் என்ற கோரிக்கைக்கு வலுவான ஆதாரம் இல்லை என அக்குழுவினர் கருதினர். மொத்தம் உள்ள 140 இடங்களில் கூட்டு வாக்காளர் தொகுதிகளுடன் பத்து இடங்கள் தீண்டப்படாதவர்களுக்கு ஒதுக்கிட வேண்டும்; முஸ்லிம்களுக்குத் தனி வாக்காளர் தொகுதிகளுடன் 33 விழுக்காட்டு இடங்களை வழங்க வேண்டும் என்று அக்குழுவினர் பரிந்துரை செய்திருந்தனர்.

பம்பாய் மாகாணக் குழுவுடன் அடிப்படையிலேயே கருத்து வேறுபாடு கொண்ட அம்பேத்கர் அவ்வறிக்கையில் கையொப்பம் இடாமல், தன் கருத்துகளையும் பரிந்துரைகளையும் தனியாக எழுதி, 1929 மே 17ஆம் நாள் அக்குழுவிடம் அளித்தார்.[41]

கர்நாடகப் பகுதி தனியாகப் பிரிய வேண்டும் என்ற கோரிக்கையைப்பற்றிக் குறிப்பிடும்போது, பம்பாய் மாகாணத்திலிருந்து கர்நாடகப் பகுதி தனியாகப் பிரிவதை அவர் எதிர்ப்பதாகக் குறித்துள்ளார். "ஒவ்வொரு மொழிக்கும் ஒரு மாகாணம் என்ற கொள்கை நடைமுறைப்படுத்த முடியாத அளவிற்குச் சிக்கல் மிகுந்த கொள்கையாக இருக்கிறது. 'ஒரு மொழிக்கு ஒரு மாகாணம்' என்ற கொள்கையின் அடிப்படையில் மாநிலங்களை உருவாக்கிக் கொண்டே போனால் மாநிலங்களின் எண்ணிக்கை கணக்கற்றுப் பெருகி இக்கொள்கையை நடைமுறைப்படுத்த முடியாத ஒன்றாக ஆக்கிவிடும் என்பது என் கருத்து. பொதுத் தேசிய இன உணர்ச்சியை வெகுமக்களிடையே உருவாக்கி வளர்த்தெடுத்திட வேண்டிய இன்றியமையாக் காலக்கட்டத்தில் நாம் இருக்கும்போது, முதலில் அவர்கள் இந்தியர்கள், அடுத்து இந்துக்கள், முஸ்லிம்கள், சிந்துக்கள், கன்னடியர்கள் என்ற உணர்வை வளர்க்காமல், முதலிலும் இந்தியர்களே-கடைசியிலும் இந்தியர்களே என்ற தேசிய இன உணர்ச்சியை வளர்க்கவேண்டும்" என்று நாட்டுப்பற்று மிக்க அம்பேத்கர் கூறினார். முதலிலும் இந்தியர்கள்-முடிவிலும் இந்தியர்கள் என்ற கொள்கையை ஏற்றுக் கொண்டபின் மாகாணப் பற்றினை வலிமையாக வளர்க்கின்ற - குழு நலன்களை ஊக்குவிக்கின்ற எச்செயலையும் செய்யக்கூடாது என்று அம்பேத்கர் வலியுறுத்தினார்.

அந்நாளில் சிந்து மாகாணத்தைத் தனியாகப் பிரிக்க வேண்டும் என்ற கோரிக்கை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உருவெடுத்திருந்தது. முஸ்லிம் வகுப்பினர் பெரும்பான்மையினராக இருக்கின்ற நிலையைப் பயன்படுத்தி அப்படிப்பட்ட அய்ந்து மாகாணங்களில் முஸ்லிம்களை அரசியலிலும் பெரும்பான்மையினராக ஆக்கிடவேண்டும் என்ற பெரும் சூழ்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாகவே, 'சிந்து மாகாணம் தனியாக வேண்டும்' என முஸ்லிம்கள் கேட்கிறார்கள் என்று அம்பேத்கர் கருதினார். மேலோட்டமாகப் பார்க்கும்போது இக்கோரிக்கை அறியாமையினாலோ அல்லது தெளிவான நோக்கம் இன்றியோ கேட்கப்படுவது போன்று தோன்றும்; ஆனால் இது உண்மையன்று என நாட்டிற்கு அம்பேத்கர் ஓர் எச்சரிக்கை செய்தார். அக்கோரிக்கையினுள் மறைந்து கிடக்கும் உள்நோக்கம் அச்சமூட்டுவதாய் உள்ளது; திருப்பித் தாக்குவதன்மூலமே நீதியையும் அமைதியையும் நிலை நாட்ட முடியும் என்று அக்கோரிக்கையினர் கருதுகின்றனர்.

'போருக்கு ஆயத்தம் செய்வதே அமைதியைக் காப்பதற்கான சிறந்த வழி' என்ற கொள்கையிலிருந்து அக் கோரிக்கை பிறந்ததாகும். அம்பேத்கர் முஸ்லிம்கள்பற்றிக் கூறிய கருத்திற்கு ஆதரவாக, கல்கத்தாவில் முஸ்லிம் லீக் மாநாட்டில் காந்தியத் தேசிய முஸ்லிமான மௌலான ஆசாத் ஆற்றிய உரையிலிருந்து ஒரு பகுதியை எடுத்துக்காட்டினார். "இந்தியாவில் ஒன்பது இந்து மாகாணங்களும் அய்ந்து முஸ்லிம் மாகாணங்களும் இருக்கும்; அந்த ஒன்பது இந்து மாகாணங்களில் இந்துக்கள் முஸ்லிம்களை எவ்வாறு நடத்துகின்றார்களோ அதே தன்மையில் அந்த அய்ந்து முஸ்லிம் மாகாணங்களிலும் முஸ்லிம்கள் இந்துக்களை நடத்துவார்கள். இது பெரிய இலாபம் அல்லவா? முஸ்லிம்கள் தங்கள் உரிமைகளை நிலைநாட்டிக் கொள்வதற்குப் பெற்றிருக்கிற ஒரு புதிய ஆயுதமன்றோ இது?" என்பதே ஆசாத்தின் உரையாகும். காந்தியத் தேசிய முஸ்லிம் தலைவர்களின் உள்ளங்களை இப்பேச்சு மிகத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகிறது என்று அம்பேத்கர் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அதன்பின்னர் அம்பேத்கர் முஸ்லிம்கள் தனி முஸ்லிம் வாக்காளர் தொகுதி கேட்பதுபற்றிய தன் கருத்தை அந்த அறிக்கையில் விளக்கியிருந்தார். அய்ரோப்பாவில் பல்வேறு இன மக்கள் ஒரே அரசின் கீழ்ப் பொதுவாக்குரிமைக் கொள்கையை ஏற்று எவ்வாறு ஒற்றுமையாக வாழ்கின்றனர் என்பதை அம்பேத்கர் எடுத்துக்காட்டினார். "முகம்மதியர்கள் இந்தியாவில் மட்டும் சிறுபான்மையினராக இல்லை என்ற உண்மையை இன்னும் பலரும் அறியாமல் இருக்கிறார்கள். இன்னும் பல நாடுகளிலும் முகம்மதியர்கள் சிறுபான்மையினராக உள்ளனர். அல்பேனியாவில் முகம்மதியர் மிகப் பெரும்பான்மையினராக இருக்கின்றனர். பல்கேரியா, கிரீஸ், ருமேனியா ஆகிய நாடுகளில் அவர்கள் சிறுபான்மையினர். யூகோஸ்லேவியாவிலும், ரஷ்யாவிலும் பெரும் பான்மை எண்ணிக்கையில் அவர்கள் இருக்கின்றனர். அந்த நாடுகளில் உள்ள முகம்மதியர்கள் இஸ்லாமிய வகுப்பு அடிப்படையிலான தனி வாக்காளர் தொகுதிகள் வேண்டும் என்று வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்களா? அரசியல் வரலாற்றை நன்கறிந்தவர்களுக்குத் தெரியும் - அந்த நாடுகளில் தனி வாக்காளர் தொகுதிகள் என்றில்லாமலேயே முகம்மதியர்கள் ஓரளவு நல்ல நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர் என்பது! இன்னும் சொல்லப்போனால், உறுதி செய்யப்பட்ட விகிதாச்சாரப் பிரதிநிதித்துவம் என்பது

இல்லாமல்தான் அவர்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். ஆதலால் இந்தியாவில் இஸ்லாமியர்கள் தனி இஸ்லாமியர் தொகுதி கோருவ தானது தேவைக்கு அதிகப்படியானதாகவும், எல்லோராலும் ஏற்கப்படக்கூடியதாகவும் இல்லை எனக் கருதுகிறேன்'' என்று அம்பேத்கர் விளக்கிக் கூறினார். மத அடிப்படையிலான பிரதிநிதித் துவம் அடிப்படையிலேயே மிகவும் தவறானதாகும்; அதை நடைமுறையில் அனுமதிப்பது என்பது பெருந்தீமையை நிலை நாட்டி நீடிக்கச் செய்வதாகும் என்று அம்பேத்கர் கூறினார்.

''குறிப்பிட்ட சில வகுப்பினருக்குத தனிப் பிரதிநிதித்துவம் கட்டாயம் தேவை என்ற கருத்தை நான் கொண்டிருப்பினும், தனி வாக்காளர் தொகுதிமூலம் அவர்கள் பிரதிநிதித்துவம் பெறு வதை நான் எதிர்க்கிறேன். பிரதேச அடிப்படையிலான வாக்காளர் தொகுதி, தனி வாக்காளர் தொகுதி ஆகிய இரண்டுமே தீவிரவாதத் தின் எல்லைகள்; ஆகவே சனநாயகம் இல்லாத இந்நாட்டில் சனநாயக அரசியலமைப்பு முறைகளை அறிமுகப் படுத்தும்போது உருவாக்கப்படுகின்ற பிரதிநிதித்துவத் திட்டங்களில் இந்த இரண்டு தீவிர எல்லைகள் இடம் பெறுவதைத் தவிர்த்திட வேண்டும். தனி இட ஒதுக்கீட்டுடன் கூடிய கூட்டு வாக்காளர் தொகுதி முறைதான் மிகமிகச் சிறந்ததாகும். இதை விடக் குறைவாக இருக்கும் திட்டம் போதாததாக இருக்கும்; இதைவிட அதிகமாக இருக்கும் திட்டமோ நல்ல சனநாயக அரசின் குறிக்கோளையே தோற்கடித்து விடும்'' என்று அம்பேத்கர் மேலும் கூறியுள்ளார்.

அக்காலக்கட்டத்தில் நிலவிய கொள்கைகள், தேற்றங்கள், வாழ்ந்த தலைவர்கள் ஆகியவற்றை முன்னிலைப்படுத்திப் பார்க்கும் போது அம்பேத்கர் சைமன் குழுவிற்கு அளித்த மேற்படி அறிக்கை அறிவார்ந்ததாகவும் நாட்டுப்பற்றை உணர்த்துவதாகவும் இருந்தது. உறுதியான அடித்தளத்தின்மீது நடுநிலையுடன் எழுதப்பட்டிருந்த தாகக் கொள்ளப்பட்டது. அதனால் அந்த அறிக்கை வெளியிடப் பட்டதும் அம்பேத்கரின் நெடுநாளைய எதிரிகளும், கண்மூடித்தன மான திறனாய்வாளர்களும் வேண்டுமென்றே எதிர்ப்பிரச்சாரம் செய்துவந்த பத்திரிக்கையாளர்களும் அம்பேத்கரைப் புகழ்ந்து பாராட்டினார்கள். ஒரே நாளில் அம்பேத்கர் அவர்கள் சிறந்த அரசியல்வாதியாக, மிகப்பெரிய தேசபக்தராக, கோடிக்கணக்கான தீண்டப்படாத வகுப்பு மக்களிடையே கண்டெடுக்கப்பட்ட வைரமாக, அரிய மதிநுட்பம் வாய்ந்த அரசியல் மேதையாக இவர்களுக்குக் காட்சியளித்தார். வானத்து விடிவெள்ளிபோல்,

அனுபவம் மிகுந்த வழிகாட்டிபோல் அவர் காலத்தில் வாழ்ந்த சிறந்த அரசியல் தலைவர்களுள் ஒருவராக அம்பேத்கார் உருவானார். சைமன் குழுவினருக்கு அம்பேத்கர் அளித்த அந்த அறிக்கை அடுத்து நடைபெற்ற நாட்டின் தலைவிதியைத் தீர்மானிக்கும் செயல்களோடு அம்பேத் கரைப் பிணைத்தது. அந்த அறிக்கை வரலாற்றாளர்களுக்குத் தெளிவான வழிகாட்டியாக விளங்கும்.


களப்பணிகள்

சட்டப்படியான உரிமைகள் மற்றும் சட்டசபைப் பிரதிநிதித்துவம் முதலானவற்றில் தீண்டப்படாத வகுப்பு மக்களுக்கு உரிய உரிமைகளைப் பெற்றுத் தருவதற்கான போராட்டங்களிலேயே அம்பேத்கரின் முயற்சி, ஆற்றல், அறிவுத்திறன் ஆகியவற்றின் பெரும்பகுதி செலவாயிற்று. சூழ்நிலைகள் இவ்வாறு அமைந்துவிட்டன. அவருடைய வகுப்பு மக்கள், கல்வியில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருந்ததுபற்றி அவர் எப்போதும் கவலைப்பட்டுக் கொண்டிருந்தார். இன்றியமையாத தேவையாகவும் அவர்கள் படிப்படியாக முன்னேறுவதற்கு வலிமை வாய்ந்த கருவியாகவும் கல்வி இருப்பதாக அம்பேத்கர் கருதினார். எனவே இவர்களிடையே கல்வியைப் பரப்பிட ஒல்லும் வகையெல்லாம் முயன்றார். 1928 சூன் மாதத் தொடக்கத்தில் மாணவர் தங்கும் விடுதிகள் இரண்டைத் தொடங்கினர். பகிஷ்கிரித் ஹித்தகாரிணி சபையைக் கலைத்துவிட்டு, 1928 சூன் 14ஆம் நாள், ஒடுக்கப்பட்ட வகுப்புகள் கல்விக் கழகம் என்ற ஓர் அமைப்பை நிறுவினார். வலுவான அடித்தளத்தின்மீது அவருடைய வகுப்பு மக்களுக்குப் பள்ளிக் கல்வியை வழங்க வேண்டும் என்பதே அக்கழகத்தின் குறிக்கோள். உயர்நிலைப்பள்ளிக் கல்வியைக் கற்க வசதியற்ற தீண்டப்படாத வகுப்பு மாணவர்களின் நலனுக்காக ஒடுக்கப்பட்ட வகுப்புகள் கல்விக் கழகம் மாணவர்கள் தங்கிப்படிப்பதற்கான விடுதிகளை ஏற்படுத்திட மேற்கொள்ளும் முயற்சிகளுக்குப் பம்பாய் மாகாண அரசு உதவிட வேண்டுமென்று அம்பேத்கர் வேண்டுகோள் விடுத்தார்.

1928 அக்டோபர் 8ஆம் நாள் பம்பாய் அரசு இதற்கான ஒரு திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தது.

ஒடுக்கப்பட்ட வகுப்பு உயர்நிலைப்பள்ளி மாணவர்களின் தனி நலனுக்காக அய்ந்து மாணவர் விடுதிகளை அமைப்பதற்கான திட்டத்திற்கு ஒப்புதல் அளித்திருப்பதாக ஆளுநர் அறிவித்தார்.

அம்பேத்கர் தொடங்கிய கல்விக் கழகம் 1861ஆம் ஆண்டைய அறக்கட்டளைகள் மற்றும் சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் XXIஆம் பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகப் பதிவு செய்யப்பட்டது. அக்கல்விக்கழகம் ஓர் ஆட்சி மன்றக் குழுவால் நிர்வகிக்கப்



மகத் நகரின் சௌதார் குளம்.
தீண்டாமையை எதிர்த்து, முதன் முதலாக 19.3.1927இல் அம்பேத்கர் நீர் எடுக்கும் உரிமையை நிலைநாட்டிய இடம்.

பட்டது. அக்குழுவில் மேயர் நிசிம், சங்கர் சயன்ன பர்ஷா, டாக்டர் புருஷோத்தம் சோலங்கி, அம்பேத்கர் ஆகியோர் உறுப்பின ராக இருந்தனர். அந்த ஆட்சிமன்றக் குழுவிற்கு ஆலோசனை வழங்குவதற்கெனப் பத்தொன்பது பேர் கொண்ட குழு ஒன்று இருந்தது. அம்பேத்கர் அக்கல்விக்கழகத்தின் பொதுச் செயலாளராக வும், சிவதார்க்கர் செயலாளராகவும் பொருளாளராகவும் இருந்தனர். அக்கல்விக்கழகத்தின் பொறுப்பில் இருந்த அனைவரும் தங்களு டைய தலைவரான அம்பேத்கரின் கொள்கை களில் முழு ஈடுபாடும் அவர்தம் செயல்திறனில் பெருநம்பிக்கையும் கொண்டிருந்தனர்.

அக்கல்விக்கழகத்தினர் காட்டிய ஈடுபாடும் மேற்கொண்ட முயற்சிகளும் அரசுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தியது இயல்பே! ஆகவே தொடங்கப்படவிருந்த அய்ந்து மாணவர் விடுதிகளையும் நிர்வாகம் செய்யும் பொறுப்பைப் பம்பாய் மாகாண அரசு அக்கழகத்திடம் ஒப்படைத்தது. அந்த அய்ந்து விடுதிகளுக்கும் சேர்த்து ஆண்டிற்கு ரூ.9,000 நிதி ஒதுக்குவது என்றும் அரசு முடிவுசெய்தது.

ஆனால் அரசு மானியமாக வழங்கிய அந்த நிதி உதவி செலவுகளைச் சரிகட்டப் போதாததாக இருந்தது. ஆகவே பல்வேறு தரப்பினரிடமிருந்தும் அம்பேத்கர் நன்கொடை திரட்டிட நேரிட்டது. தாராள மனங்கொண்ட பொதுமக்கள், முற்போக்கான உள்ளாட்சி அமைப்புகள், அறக்கட்டளை நிறுவனங்கள், பெருந்தன்மையாளர் கள் ஆகியோரை அம்பேத்கர் நிதி உதவிக்காக நாடிச் சென்றார். சில ஜில்லா போர்டு தலைவர்களும், நகராட்சிகளின் தலைவர்களும் அந்த உயரிய நற்செயலுக்கு மனமுவந்து தாராளமாக உதவிட முன்வந்தனர். தீண்டப்படாத மாணவர்கள் பள்ளியில செலுத்த வேண்டிய சம்பளத் தொகையைக் குறைத்தனர்; மாணவர் விடுதிகள் கட்டுவதற்காக நிலத்தை இலவசமாக வழங்கினர்; மற்ற வழிகளிலும் உதவினர்.

அம்பேத்கர் அமைத்த அக்கல்விக்கழகம் தீண்டப்படாத மாணவர்கள் இலவசமாக உண்ணுவதற்கும் மேலும் மாணவர்கள் படிப்பதற்கு ஆகும் மற்ற செலவுகளுக்கும் பணம் கொடுத்தது. சாதி இந்து அமைப்புகள் இப்பிரச்சினையில் சிறிதும் அக்கறை காட்டவில்லை. ஆகவே பண நெருக்கடி காரணமாக அம்பேத்கர் முஸ்லிம்களின் உதவியை நாடினார். முகம்மதிய வட்டாரங்கள் சிலவற்றில் உதவி பெற்றிட முயன்றார். ஒரு முஸ்லிம் அறக்கட்ட ளையின் நிர்வாக உறுப்பினர்களுக்கு 1929 சூலை மாதம்

அம்பேத்கர் எழுதிய கடிதம் ஒன்றில் பம்பாய் மாகாணத்தில் தீண்டப்படாத வகுப்பு மக்களிடையே கல்வியைப் பரப்புவதற்காக அவர் உருவாக்கியுள்ள கல்விக்கழகம் மேற்கொண்டுள்ள முயற்சிகளை விளக்கி ஒரு வேண்டுகோள் மடல் எழுதினார். பார்சி சமயத்தினரின் அறக்கட்டளைகளிடமும் உதவிகோரிச் சென்றார். சில மாதங்கள் கழித்து என். எம். வாடியா அறக்கட்டளையின் செயலாளருக்கு உதவி வேண்டி அவர் அனுப்பிய வேண்டுகோள் மடலில், "எமது கல்விக்கழகம் இத்தொகையைத் தீண்டப்படாத வகுப்பு மக்களிடமிருந்து திரட்டிட முடியவில்லை; காரணம் அவர்களுடைய கொடிய வறுமைதான். உயர்சாதி இந்துக்களின் எதிர்ப்புணர்வு என்று கூற முடியாவிட்டாலும், அவர்களின் அக்கறையற்ற போக்கு காரணமாகச் சாதி இந்துக்களிடமிருந்தும் நன்கொடை பெற முடியவில்லை. இந்நிலையில் எமது கல்விக்கழகம் மாணவர் விடுதிகளை நடத்தி வருவதனால் கடனாளியாகிவிட்டது" எனக் குறிப்பிட்டிருந்தார்.

தீண்டப்படாத வகுப்பு மாணவர்கள் தங்குவதற்கான இடத்தைப் பெறுவது அக்கல்விக் கழகத்திற்கு இடர்ப்பாடாக இருந்தது. இதற்காக எந்தவொரு சாதி இந்துவும் எளிதில் தன் வீட்டை வாடகைக்குத் தர முன்வரவில்லை. அவ்வாறு கொடுக்க முன்வந்தாலோ அதிக வாடகைக்குத்தான் தந்தார்கள்; அதையே பெரிய உதவி செய்துவிட்டதாகவும் கருதினார்கள். எப்பொழுதும் இப்பிரச்சினையால் அம்பேத்கர் கவலைப்பட்டுக்கொண்டேயிருந்தார். அதனால் உள்ளாட்சி அமைப்புகளின் பல உறுப்பினர்களுக்கும், பல மாவட்டங்களில் இருந்த முக்கியமானவர்களுக்கும் தனிப்பட்ட முறையில் பண உதவி வேண்டி மடல் எழுதிக் கொண்டேயிருந்தார். ஒரு மாவட்டக் கழகத்திடமிருந்து மாணவர் விடுதி ஒன்றுக்கு உதவியைப் பெற்றுத் தருமாறு அந்த ஜில்லா போர்டு உறுப்பினர் ஒருவருக்கு அவர் எழுதிய கடிதத்தில், "தீண்டப் படாத வகுப்பு மக்களை முன்னேற்றுவது இந்நாட்டில் உள்ள முற்போக்குச் சிந்தனையாளர்கள் அனைவருமே வரித்துக்கொள்ள வேண்டிய சீரிய பணியாகும்" என்று அம்பேத்கர் குறிப்பிட்டுள்ளார். மற்றொரு ஜில்லா போர்டு உறுப்பினருக்கும் அவர் எழுதிய கடிதத்தில், தீண்டப்படாத வகுப்பு மக்களின் கல்விப் பிரச்சினையைப்பற்றி விவாதிக்கப்படவுள்ள ஜில்லா போர்டு கூட்டத்தில் அந்த உறுப்பினரைக் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொண்டார். "இந்தக் கூட்டத்தின் நோக்கம் தீண்டப்படாதவர்களின் முன்னேற்றம் பற்றியதாகும். இந்த வகையில் இந்த உயரிய குறிக்கோள்

என்னுடையதாக இருப்பது போன்றே உங்களுக்கு உரியதாகவும் இருக்கிறது. ஆகவே இதற்கு ஏற்ப நீங்கள் ஆர்வத்துடன் செயல்படுங்கள் என்று நான் வற்புறுத்த வேண்டியதில்லை'' என்று அக்கடிதத்தில் உள்ளத்தைத் தொடும் வண்ணம் எழுதினார்.

அடிமைப்பட்டுக்கிடக்கும் சமூகத்திலிருந்து தோன்றும் தலைவர்கள் அச்சமூகத்தை விடுதலை செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்கின்றனர். அம்முயற்சியில் அரசியல் தளத்தில் நிற்கும் தலைவர்கள் அடிமை மக்களின் உள்ளத்தில் அடிமைத் தன்மையின் பேரில் வெறுப்பை வளர்த்து, அவர்களை ஒடுக்கி அடக்கி ஆளுவோருக்கு எதிராக அம்மக்களின் எதிர்ப்புணர்ச்சியைத் திருப்பி விடுகின்றனர். ஆனால் சீர்த்திருத்த வேட்கை கொண்ட தலைவர்களோ மக்களிடையே சென்று சிந்தனையால் உணர்வால் செயலால் எவ்வாறு உருவாகி வளர வேண்டும் என்று அம்மக்களுக்குக் கற்பிக்கின்றனர்.

நீக்ரோ இன மக்களுக்குத் தலைவராகவும் டஸ்கிஜீ நிறுவனத்தின் நிறுவனராகவும் விளங்கிய புக்கர்-தி-வாஷிங்டன் வாக்களிக்கும் உரிமையைவிட, நடைமுறைக்கல்விக்கும் பொருளாதார முன்னேற்றத்திற்குமே அதிக முக்கியத்துவம் அளித்தார். அவர் பிற இன மக்களின் உதவி, அனுதாபம், செயல்முறை ஆதரவு ஆகியவற்றையும் திரட்டிக்கொண்டார். மேலும் நீக்ரோக்களின் கல்வி வளர்ச்சிக்கும் பொருளாதார முன்னேற்றத்திற்கும் முதன்மை தந்தார். இந்தியாவில் அரசியல் களத்தில் தலைமை தாங்கிச் செயல்பட வேண்டியிருந்ததால் அம்பேத்கரின் கவனம் தீண்டப்படாதவர்களின் கல்விப் பிரச்சினையிலிருந்து சில நாட்களுக்கு விலகியிருந்தது. நெப்போலியன் போனபார்ட் போன்று அம்பேத்கரும் அவர் காலத்தில் விளங்கிய சிறந்த தலைவர்களின் உள்ளங்களில் பெரும் தாக்கத்தையும் வியப்பையும் ஏற்படுத்தி, உலகில் மிகச் சிறந்தவர்களாகக் கருதப்படும் எவர்க்கும் தான் இளைத்தவரில்லை என்று காட்டுவதற்காக அரசியல் களத்தில் குதித்திருக்கக்கூடும். இத்தகையதொரு அவாவினை நிறைவேற்றிக்கொள்ளுவதற்குச் சமூகப் பணியைவிட அரசியல் செயல்பாடுதான் இணக்கமானதாகும்.

இந்தியாவின் நிலைமைகளுக்கு உரிய தீர்வுகளை அம்பேத்கர் அவருக்கே உரிய தன்மையில் கண்டறிந்திருந்தார். அரசாங்கத்தில் கீழ்நிலை வேலைகளிலும் இராணுவத்திலும் தீண்டப்படாதவர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென அம்பேத்கர் கோரி வந்ததானது, அவர்களை வாழ்வில் உயர்த்துவதற்குப் போதுமான

வையாக இல்லை. அவருடைய வகுப்பு மக்கள் எந்த அளவுக்குக் கல்வியைப் பெறுகிறார்களோ அந்த அளவுக்கு முன்னேறுவதற் கான வாய்ப்புகளும் அதிகமாகிக்கொண்டேயிருக்கும். வாய்ப்பு களைப் பயன்படுத்துவதும் அந்த அளவுக்கு எளிதாக இருக்கும் என்று அம்பேத்கர் கருதினார். ஆயினும் அவருடைய மக்களுக்கு அரசியல் சமத்துவத்தையும் அரசியல் அதிகாரத்தையும் உறுதி செய்வதன்மூலம், அரசினாலும் அரசின் நிறுவனங்களாலும் மேற் கொள்ளப்படும் முயற்சிகள்மூலம் தீண்டப்படாத வகுப்பு மக்களின் கல்விச் சிக்கல் தானாகவே தீர்க்கப்பட்டு விடும் என்று அம்பேத்கர் கருதினார். ஆகவே அவருடைய நேரத்தையும் திறமையையும் அவருடைய மக்களைக் கல்வியில் உயர்த்துவதற்காகச் செலவிடுவ தைவிட, அவர் களுக்கு அரசியல் உரிமைகளைப் பெற்றுத் தருவதில் அதிகமாகச் செலவிட்டார்.

தீண்டப்படாத வகுப்பு மக்களின் கல்விப் பிரச்சினை மற்றொரு புறத்திலிருந்து வந்த இடையூறினால் மேலும் நெருக்குதலுக்குள்ளா னது. தீண்டப்படாத மக்களின் குழந்தை களைக் கல்வி நிலையங்களில் சேர்த்திட மறுத்தல் கூடாது என்று அரசு ஆணை பிறப்பித்திருந்த போதிலும், பள்ளிகளில் அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. பள்ளிகளின் நிர்வாகங்களுடன் போராடி இப்பிரச் சினையை அம்பேத்கர் தீர்த்துவைத்தார். கர்ம வீரர் ஷீன்டேவும், வீர சாவர்க்கரும் மராட்டியத்தில் தீண்டப் படாத வகுப்பு மக்களின் குழந்தைகள் மற்ற உயர்சாதி இந்துக்களின் குழந்தைகளோடு சேர்ந்து கல்வி பயில்வதற்கான உரிமையைத் தீண்டப்படாத வகுப்பு மக்கள் பெறுவதற்காகப் போராடி, அதில் பெருமளவு வெற்றியும் பெற்றனர்.

II

1929 பிப்ரவரி மாதத்தின் முதல் வாரத்தில் பம்பாயில் வால்பகாடியில் நடைபெற்ற ஒரு கூட்டத்திற்கு மராட்டிய, குசராத்திய தீண்டப்படாத வகுப்பு மக்கள் பெருந்திரளாக வந்தனர். அம்பேத்கர் இக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார். இக்கூட்டத் தில் அம்பேத்கர் பேசும்போது பொருளாதாரத் துன்பங்களைப் போக்கிக் கொள்ளுவதற்கும், வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொள்ளுவதற்கும் கடுமையாகப் போராடுமாறு அவர்களை வற்பு றுத்தினார். இவ்வுலகில் உள்ள மற்ற சமூகத்தினரைப் போலவே சம உரிமையையும் தகுதியையும் பெற்றிடவும் இந்துச் சமூகத்தை அதனுடைய பெரும் பாவத்திலிருந்து விடுவிக்கவும் போராடிட முன்வாருங்கள் என்று அறைகூவல் விடுத்தார்.

அம்பேத்கர் சட்டக் கல்லூரியில் பேராசிரியராக இருந்த காலத்தில் மாணவர் உள்ளங்களில் அவரைப்பற்றி ஏற்பட்டிருந்த பெருமதிப்பும் கவர்ச்சியும் நெடுங்காலம் நீடித்து நின்றன. சட்டம் பற்றி ஆழ்ந்த ஈடுபாட்டுடன் கற்றுத் தன் அறிவைப் பெருக்கிக் கொண்டிருந்தார். அதனால் அரசியலமைப்புச் சட்டம்பற்றி மாணவர்களின் சிந்தனையைத் தூண்டும் வகையில் வகுப்பில் பாடம் நடத்தினார். ஆயினும் 1929 மார்ச்சு மாதத்துடன் அவருடைய பேராசிரியர் பதவி ஒரு முடிவுக்கு வந்தது. அடுத்த நான்கு ஆண்டுகள் அம்பேத்கர் அரசியல் புயலில் சுற்றிச் சுழன்று கொண்டிருந்தார். வட்டமேசை மாநாட்டிலும் கூட்டுக் குழுவிலும் உருவாக்கப்படவுள்ள இந்தியாவிற்கான அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள்பற்றிய விவாதங்களில் அவர் ஆழ்ந்து ஈடுபட்டிருந்தார்.

1929ஆம் ஆண்டு இரண்டாவது மூன்றாவது காலாண்டுகளில் எண்ணற்ற மாநாடுகளில் கலந்துகொண்டு வழிகாட்டினார். 1929 ஏப்பிரல் மாதம் சிப்ளனில் நடைபெற்ற இரத்தினகிரி மாவட்ட மாநாட்டிற்குத் தலைமை தாங்குமாறு அம்பேத்கர் அழைக்கப்பட்டிருந்தார். மாநாட்டிற்குரிய பந்தல் அமைப்பதற்கான இடத்தைப் பெருமுயற்சிக்குப் பின்னரே பெறமுடிந்தது. மகதில் நடந்தது போன்று இங்கும் நடக்குமோ என்றும், இவ்வூரில் மாநாடு நடைபெறுவதால் தீண்டப்படாத இந்துக்கள் தங்கள் கிணறுகளைத் தீட்டாக்கி விடுவார்களோ என்றும் வைதிக இந்துக்கள் அஞ்சினர். அந்நியர் படையெடுத்து வந்துவிட்டதுபோல் கருதி, மிகுந்த எச்சரிக்கையுடனும் கவனத்துடனும் சாதி இந்துக்கள் தங்கள் கிணறுகளை மூடிவிட்டார்கள். சிப்ளன் பயணியர் மாளிகையில் அம்பேத்கரும் அவருடைய குழுவினரும் இரண்டு நாட்கள் தங்கியிருந்தனர்.

முற்போக்குச் சிந்தனையாளர்களான விநாயகராவ் பார்வே, பி.ஜி. காட்டு ஆகிய இருவரும் மாநாட்டில் கலந்துகொண்டனர். இவர்கள் இருவரும் உள்ளூர் வழக்குரைஞர்கள். ஓம் சாமி ராக்ஜி மாநாட்டில் வரவேற்புரை நிகழ்த்தினார். சாதி இந்துக்கள் தங்கள் பார்வையை விரிவடையச் செய்யவேண்டியிருப்பதன் தேவையை இவர் வலியுறுத்தினார். அம்பேத்கர் தலைமை உரையாற்றும்போது, "உங்களுடைய அடிமைத்தளையை நீங்களே தான் அறுத்தெறிய வேண்டும். தன்மானத்தை இழந்து ஒருவர் உயிர் வாழ்வது என்பது இழிவானதாகும். சுயமரியாதை என்பது வாழ்வில் உயிரனைய

ஒரு அம்சமாகும். சுயமரியாதை இல்லாவிட்டால் ஒரு மனிதன் வெறும் சைபர்தான். தன்மானத்துடன் தலை நிமிர்ந்து வாழ வேண்டுமானால் ஒருவன் இடையே உள்ள தடைகளைத் தகர்த்தெறிய வேண்டும். கடுமையாக அயராது போராடுவதன் மூலமே ஒருவன் வலிமையை, தன்னம்பிக்கையை, அங்கீகாரத் தைப் பெறமுடியும்'' என்று உணர்வூட்டினார். அதன்பின், கொங்கணத்தில் கோட்டி என்று அழைக்கப்படும் நிலமானிய முறை தீண்டப்படாத வகுப்பு மக்களின் குருதியைக் குடித்துக்கொண்டிருப் பதால், அந்த நிலமானிய முறையை ஒழித் திடத் தன்னால் இயன்ற அனைத்தையும் செய்வதாக அவர்களுக்கு உறுதி கூறினார். அவர்களின் நலனுக்காக எத்தகைய கொடுந்துன்பத்தையும் தாங்கி டத் தான் தயாராக இருப்பதாக முழங்கினார்.

''உங்களுடைய துன்பங்களிலிருந்தும் இழிவுகளிலிருந்தும் நீங்கள் விடுதலை பெறுவதற்காக உங்களுக்கு விழிப்புணர்வை ஊட்டிட நான் இங்கே வந்தால் என் உயிருக்கு ஆபத்து வரும் என்று அச்சுறுத்தப்பட்டது. மனிதன் அழியப்போகிறவன்தான். ஒவ்வொருவரும் ஏதோ ஒருநாளில் இறக்கப்போவது உறுதி. உயர்வான சுயமரியாதைக் கொள்கைகளுக்கு உரமூட்டிட, மனித வாழ்வை மேலும் உயர்த்திட உயிரையும் கொடுக்கத் தயார் என்று உங்களில் ஒவ்வொருவரும் உறுதி எடுத்துக்கொள்ளவேண் டும். நாம் அடிமைகள் அல்லர்; நாம் வீரஞ்செறிந்த பரம்பரையினர். வீரஞ்செறிந்த மறவனுக்குச் சுயமரியாதை இன்றி, நாட்டுப்பற்று இன்றி வாழ்வதைக் காட்டிலும் இழிவானது வேறொன்றுமில்லை'' என முழங்கி எழுச்சியூட்டினார்.

இந்து நிலக்கிழார்களின், சாதி இந்துக்களின் ஒடுக்குமுறைகளி லிருந்து விடுபட விரும்பினால், ஊரிலிருந்து ஒரு தொலைவில் உள்ள நிலப்பகுதிக்குக் குடியேறலாம் என்ற தன் கருத்தை, அம்மாநாட்டில் வெளியிட்டார். சிந்துப் பகுதியிலும், இந்தூர் சமஸ்தானத்திலும் பயிரிடுவதற்கான நிலங்களை உங்களுக்காகப் பெற்றுத்தர முயல்வேன் என்று கூறினார். அவர்களுடைய அக்கம்பக்கத்தினராக இருந்த முஸ்லிம்கள் ஆப்பிரிக்காவிற்குச் சென்று அங்கிருந்து பெரும் செல்வத்துடன் கொங்கணத்திற்குத் திரும்பியிருப்பதை எடுத்துக்காட்டினார். சிந்துப் பகுதியில் சுக்கூர் அணைத் திட்டப் பகுதியை ஆய்வு செய்ய மற்ற சட்டசபை உறுப்பினர்களுடன் அம்பேத்கர் சென்றிருந்தார். சுக்கூர் அணைத் திட்டத்தால் அங்குப் பாலைவனமாகக் கிடந்த ஆயிரக்கணக்கான

ஏக்கர் நிலங்கள் வளமான விவசாய விளைநிலங்களாக மாற்றப் படவிருப்பதைக் கண்டார். அங்குச் சென்றிருந்தபோது அம்பேத் கருக்குத் தனிக் குடியேற்றம்பற்றிய சிந்தனை ஏற்பட்டிருக்கலாம். இந்தூர் சிற்றரசருடன் அப்போது அவருக்கு ஏற்பட்டிருந்த தொடர்பினால் அங்குத் தீண்டப்படாத வகுப்பு மக்களுக்கு நிலத்தைப் பெற்றுத்தரமுடியும் என்ற நம்பிக்கை உருவாகியிருக்க லாம்.

சிப்ளன் மாநாட்டின் முடிவில் அனைவர்க்கும் பூணூல் கொடுக்கப்பட்டது. அம்பேத்கரின் பார்ப்பன நண்பரான தியோராவ் நாயக் பூணூல் அணிவிக்கும் ஆச்சாரியாராக முன்னின்று வேத முழக்கங்களுக்கிடையே 6,000 மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கும் பூணூல் அணிவித்தார்.

அன்றிரவு விநாயகராவ் பார்வே அம்பேத்கரை விருந்திற்கு வருமாறு அன்புடன் அழைத்திருந்தார். அம்பேத்கர் அவ்விருந்தில் கலந்துகொண்டார். அதுபோன்ற சமபந்தி விருந்துகளில் ஒரு பார்ப்பனரோடு உடன் அமர்ந்து உண்பதால் முக்தி கிடைக்கும் என்ற எண்ணத்தினால் கலந்து கொள்ளக்கூடாது; அது போன்ற சமபந்தி விருந்துகள் சமூக உறவுகளில் உள்ள இறுக்கத்தை நெகிழ்விக்கின்றன, சமத்துவக் கோட்பாட்டை வளர்க்கின்றன என்ற அடிப்படையில்தான் கலந்துகொள்ள வேண்டும் என்று கூறினார்.

அடுத்த நாள் காலை அதே இடத்தில் ஒரு விவசாய மாநாட்டிற்கு அவர் தலைமை தாங்கினார். தாழ்த்தப்பட்டுக் கிடக்கும் தம் மக்களின் நல்வாழ்விற்காகப் போராடுவதே தம் வாழ்வின் குறிக்கோள் என்பதை நன்கு உணர்ந்திருப்பதாக அம்மாநாட்டில் பேசும்போது அம்பேத்கர் குறிப்பிட்டார். "நான் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தவன்; பம்பாயில் ஒரு தொழிலாளர் குடியிருப் புப் பகுதியில் ஏழைகளுடன் வாழ்ந்தவன்; அதனால் உங்கள் துயரங்களை நான் நன்கறிவேன்" எனவும் குறிப்பிட்டார். கோட்டி நிலக்குத்தகை முறை உங்கள் குருதியை உறிஞ்சிக்கொண்டிருக்கி றது; இந்த நிலக்குத்தகை முறையை ஒழித்திட வேண்டும். இதை ஒழித்தால்தான் உங்கள் வாழ்வில் அமைதியும் முன்னேற்றமும் உண்டாகும். உங்கள் குறிக்கோளை அடைவதற்காகத் தொடர்ந்து போராடிக்கொண்டிருங்கள். அடுத்துவரும் நான்கைந்து ஆண்டு களில் இந்தியா தன்னைத்தானே முழுமையாக ஆளுகின்ற நிலையை அடையவிருக்கிறது. அப்போது கோட்டி நிலக்குத்தகை முறையைத் தீவிரமாகப் போராடி ஒழிப்பதற்குப் பொருத்தமானவர்

களை உங்களின் பிரதிநிதிகளாகச் சட்டசபைக்குத் தேர்ந்தெடுத்து அனுப்புங்கள் என்று அறிவுறுத்தினார்.

அம்பேத்கர் சிப்ளனிலிருந்து பம்பாய் திரும்பியதும் நெசவாலைத் தொழிலாளர் வேலைநிறுத்தத்திற்கு எதிராக வேலை செய்யத் தொடங்கினார். இந்த வேலைநிறுத்தத்தை கிர்னி கம்கார் தொழிலாளர் சங்கம் முன்னின்று நடத்தியது. இச்சங்கத்தின் அறைகூவலின் பேரில்தான் பம்பாய் நெசவாலைத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்வதென முடிவுசெய்தனர். இச்சங்கம் தன் முதல் முயற்சியில் தோல்வியடைந்த போதிலும் இடதுசாரி கம்யூனிஸ்டு பிரிவினர் பம்பாய்த் தொழிலாளர்களை 1929 ஏப்ரல் 26 முதல் இரண்டாவது வேலைநிறுத்தத்தைத் தொடங்குமாறு வற்புறுத்தினர். முதல் வேலைநிறுத்தத்தின் விளைவாகப் பல தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டு வேறு ஆட்கள் நியமிக்கப்பட்டனர். இதனை எதிர்ப்பதே இரண்டாவது வேலைநிறுத்தத்தின் நோக்கமாகும். தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் செய்யும் உரிமையை அம்பேத்கர் ஏற்றுக்கொண்டிருந்தார். ஆனால் வேலைநிறுத்தம் என்ற ஆயுதத்தை மிக அரிதாக மட்டுமே பயன்படுத்த வேண்டும்; தொழிலாளர்களின் நலனுக்காக மட்டுமே வேலைநிறுத்தம் என்றிருக்க வேண்டும்; கம்யூனிஸ்டுகளின் அரசியல் நோக்கத்திற்காக என்று இது இருக்கக்கூடாது என அம்பேத்கர் கூறினார். அவருக்கே உரிய துணிச்சலுடன் அம்பேத்கர் அவருடைய இக்கருத்தை வலியுறுத்தினார். தொழிலாளர்களின் முன்னேற்றத்தை முக்கிய நோக்கமாகக் கொள்ளாமல் கம்யூனிஸ்டுகள் அரசியல் நோக்கத்தின் உந்துதலால்தான் இந்த வேலைநிறுத்தத்தில் இறங்கினார்கள் என்று கூறினார்.

கம்யூனிஸ்டுகளால் ஏற்பாடு செய்யப்பட்ட வேலைநிறுத்தத்திற்கு அம்பேத்கர் காட்டிய எதிர்ப்பு எப்போதையும்விடத் தீவிரமானதாக இருந்தது. தொழிற்சாலைகளில் சில பிரிவுகளில் அதிக ஊதியம் தரும் வேலையில் சேருவதற்குத் தீண்டப்படாத வகுப்பு மக்களுக்கு இருந்து வந்த தடைகளுக்கு எதிராக இந்தக் கம்யூனிஸ்டு தலைவர்கள் என்றுமே தங்கள் குரலை எழுப்பவில்லை; தீண்டாமை காரணமாகத் தீண்டப்படாத வகுப்பு மக்களைத் தொழிற்சாலைகளில் நிறைய ஊதியம் அளிக்கப்படும் பிரிவுகளில் சேர முடியாதவாறு வைத்திருந்தனர். அம்பேத்கர் வேலைநிறுத்தத்திற்கு ஏன் ஆதரவளிக்கவில்லை என்பதற்கு இரண்டாவதான ஒரு காரணம் இருந்தது. அதாவது முதல்


வேலைநிறுத்தத்தினால் தீண்டப்படாத வகுப்புத் தொழிலாளர்களின் நிலைமை மோசமாகிவிட்டிருந்தது. கடன் கொடுத்தவர்களும் ஈட்டிக்காரர்களும் தொழிலாளர்களைக் கெடுபிடி செய்து நெருக்கினார்கள்; அவமானமாகப் பேசினார்கள். ஆகவே தொழிலாளர்களின் முன்னேற்றத்தை மட்டுமே நோக்கமாகக்கொண்ட வேலை நிறுத்தத்தை மேற்கொள்வது அவர்களின் உரிமையாகும் என்று அம்பேத்கர் அறிவித்தார். மாற்றம் என்பது முன்னேற்றத்திற்கானதாக இருக்க வேண்டும்; ஆனால் அதே நேரத்தில் அந்த முன்னேற்றம் என்பது தொழிலாளர்களின் நலன்களுக்கு ஊறு விளைவிக்காததாகவும் இருக்க வேண்டும். நோயைக் குணப்படுத்த வேண்டும்; அதே வேளையில் நோயாளியின் நிலையை மேலும் சீரழிப்பதாக அது இருக்கக்கூடாது என்று அம்பேத்கர் விளக்கினார்.[42]

அம்பேத்கர், மற்ற இரு தொழிலாளர் தலைவர்களான ஆர். ஆர். பக்களே, ஷியாமாராவ் பருலேக்கர் ஆகியோருடன் இணைந்து கிர்னி தொழிலாளர் சங்கத்தின் பிரச்சாரத்தை முறியடித்தார். நெசவாலைத் தொழிலாளர் சங்கம் 1929 ஏப்பிரல் மாதம் 29ஆம் நாள் பம்பாய் தாமோதர் அரங்கில் தொழிலாளர் கூட்டம் ஒன்றைக் கூட்டியது. அம்பேத்கர் இக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார். அப்போது தொடங்கப்படுவதாயிருந்த (இரண்டாவது) வேலை நிறுத்தத்திற்கு எதிராக ஒரு தீர்மானம் இக்கூட்டத்தின் இறுதியில் நிறைவேற்றப்பட்டது.

இத்தொழிலாளர் போராட்டம் நடந்துகொண்டிருந்த காலத்தில், சிட்டகானில் ஒரு பெரிய மாநாட்டில் அம்பேத்கர் உரையாற்றினார். ஒருவருடைய சுயமரியாதையைக் காப்பாற்றிக்கொள்வதற்குக் கல்வி மட்டும் இருந்துவிட்டால் போதாது என்று அம்மாநாட்டில் குறிப்பிட்டார். கல்வியில் ஒருவர் பெற்றிருக்கின்ற உயர்ந்த படிப்பு மட்டுமே மற்றவர்களிடமிருந்து மரியாதையையும் நன்மதிப்பையும் பெறுவதற்குப் போதுமானவை என்றிருப்பின், நானும் என்னைப் போன்று படித்துள்ளவர்களுக்கும் சமூகத்தில் படித்தவர்களாலும் அதிகாரத்தில் இருப்பவர்களாலும் இழிவாக நடத்தப்பட்டிருக்க மாட்டோம் என்று மனம் நொந்து கூறினார். உங்கள் பாதையில் குறுக்கிடுகின்ற தடைகளைத் தூக்கி எறியுங்கள்; உங்கள் வாழ்வில் தீண்டாமை எனும் கறையைத் துடைத்து அழியுங்கள் என்று மாநாட்டிற்கு வந்திருந்த மக்களிடம் எழுச்சியான வேண்டுதலை முன்வைத்தார்.

ஜலகானில் நடைபெறவிருந்த ஒரு முதன்மையான மாநாடு அம்பேத்கரின் வழிகாட்டுதலை எதிர்நோக்கியிருந்தது. பீரார் மற்றும் மத்திய மாகாணத் தீண்டப்படாத வகுப்பு மக்கள் இம்மாநாட்டை 1929 மே 29ஆம் நாள் கூட்டினார்கள். பம்பாயில் வேலைநிறுத்தம் தொடர்பான வேலைகளில் அம்பேத்கர் மூழ்கி யிருந்த போதிலும், இதற்கென நேரத்தை ஒதுக்கிக்கொண்டு இம்மாநாட்டில் கலந்து கொண்டார். தீண்டப்படாத வகுப்பு மக்களின் அவல நிலைகள் பற்றிச் சாதி இந்துக்கள் இனியும் அக்கறைகாட்டாது இருப்பார்களே யானால் தீண்டப்படாதவர்கள் வேறு ஒரு மதத்திற்கு மாறவேண் டிய நிலை ஏற்படும் என்று இம்மாநாட்டில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இம்மாநாட்டில் அம்பேத்கர் பேசும்போது, இந்து மதத்தில் இருந்துகொண்டே தீண்டப்படாத வகுப்பு மக்கள் தங்களின் இயலாமைகளை அகற்றிக்கொள்ள முடியாது என்று நறுக்குத் தெறித்தாற்போல் குறிப்பிட்டார். ஒரு குறிப்பிட்ட நாளுக்குள் சாதி இந்துக்கள் தீண்டப்படாதவர்களின் இயலாமை களை நீக்காவிட்டால், இனியும் வறுமையிலும் துயரங்களிலும் இயலாமைகளிலும் உழன்று துன்புற இயலாது என்று எண்ணுகின் றவர்கள் அவர்களுடைய வாழ்க்கை வசதியை, சுயமரியாதையை உயர்த்திக்கொள்வதற்காக வேறொரு மதத்தில் சேர்ந்துவிடலாம் என்று அம்பேத்கர் அறிவுரை கூறினார். பம்பாயில் வேலைநிறுத்தம் தொடர்பாக அம்பேத்கர் இருக்கவேண்டிய நிலைமை இருந்ததால் அவர் அடுத்த நாளே பம்பாய்க்குத் திரும்பினார்.

ஜலகான் மாநாட்டில் தீண்டப்படாத வகுப்பு மக்கள் நிறைவேற் றிய தீர்மானத்தை ஜலகான் இந்துக்கள் ஒரு பொருட்டாகக் கருதாமல் விட்டுவிட்டனர். இன்னும் கூடுதலான அளவில் குடியுரிமைகளைப் பெறவேண்டும் என்ற நோக்குடன், சாதி இந்துக்களின் உணர்வுகளைச் சிறுபிள்ளைத்தனமாக உசுப்பிவிட வேண்டும் என்பதற்காகச் செய்யப்பட்ட சூழ்ச்சிதான் அத்தீர்மானம் என்று சாதி இந்துக்கள் கருதினார்கள். தீண்டப்படாத வகுப்பு மக்கள் அத்தீர்மானத்தின் மூலம் சாதி இந்துக்களுக்குக் கொடுத்திருந்த காலக்கெடு முடிந்துவிட்டது. எனவே 1929 ஜுன் மாத முதல் வாரத்தில் பன்னிரண்டு மகார்கள் முஸ்லிம் மதத்தில் சேர்ந்தனர். இச்செயல் சனாதன இந்து சீர்திருத்தவாதிகளைத் திகைப்படையச் செய்தது. அவர்களின் மனக் கண்கள் திறந்தன. நடந்த நிகழ்ச்சிகளையும் அவற்றிற்கான காரணங்களையும் உணரத்தலைப் பட்டனர். இவ்வாறு உணர்ந்தது கொஞ்சக் காலத்திற்கு மட்டுமே நீடித்தது. மகார் ஒருவனிடம் ஒட்டிக் கொண்டுள்ள தீட்டு அவன்



முதல் வட்டமேசை மாநாடு (1930 நவம்பர் 16 முதல் 1931 சனவரி 19 வரை)
அம்பேத்கர் இடது வரிசையில் முதலில் அமர்ந்துள்ளார்.

சாவின் சாம்பலில்தான் அழியும் என்று எண்ணிக்கொண்டிருந்த சாதி இந்துக்கள் மேலும் காலங் கடத்தாமல், தயங்காமல் இரண்டு பொதுக் கிணறுகளைத் தீண்டப்படாத வகுப்பு மக்களுக்காகத் திறந்துவிட்டனர். சாதி இந்துக்கள் செய்த காலங்கடந்த செயல் இது; தன்னெழுச்சியாகச் செய்த நற்செயலன்று; எனவே சாதி இந்துக்களைப் பாராட்டுவதற்கு இதிலொன்றும் இல்லை என்று அம்பேத்கர் கூறினார். இந்துச் சமூகம் நீதி, சமத்துவம், மனிதத் தன்மை ஆகியவற்றிற்கு மதிப்பளித்திருக்குமானால் இன்று நிலைமை இந்த அளவிற்கு முற்றியிருக்காது என்று அம்பேத்கர் சொன்னார். இஸ்லாம் மதமும் கிறித்துவ மதமும் தந்த நெருக்குதல் காரணமாகத் தீண்டப்படாத வகுப்பு மக்கள் சிறிது நற்பயன் அடைந்தனர்.

இந்த மாநாடுகள் அம்பேத்கர் இயக்கத்திற்குத் தூண்டுதலாக அமைந்தன. தீண்டப்படாத வகுப்பு மக்கள் தமக்குள் ஏற்படுத்திக் கொண்ட சூளுரைகளை மீறுவோரைப் புறக்கணித்தனர். இறந்த ஆடு மாடுகளைத் தூக்கிச்செல்ல மறுக்கிற, பூணூல் போட்டுக் கொண்டிருக்கின்ற தீண்டப்படாத வகுப்பு மக்களுக்கு உயர் சாதி இந்துக்கள் பல வழிகளிலும் தொல்லை தந்தனர். இதைப்பற்றி அம்பேத்கரிடம் அவருடைய மக்கள் புகார் செய்தனர். உயர்சாதி இந்துக்களின் இச்செயலைக் கண்டித்துப் பம்பாயில் போலே தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடந்தது. தீண்டப்படாத வகுப்பு மக்களைத் துன்புறுத்தும் உயர் சாதியினருக்கு அம்பேத்கர் கடுமையானதோர் எச்சரிக்கையை அம்மாநாட்டில் விடுத்தார்.

அம்பேத்கரும் அவருடைய நண்பர்களும் இணைந்து நடத்தி வந்த சமூகச் சம உரிமைக்கழகத்தின் செயல்பாடுகள்குறித்துக் காரசாரமான விவாதங்கள் குமுறி எழுந்தன. அக்கழகத்தின் மானுடப் பற்றுமிக்க, புரட்சிகரக் கொள்கைகளினால் கலங்கிப் போயிருந்தவர் கள் அதைப்பற்றிக் கடுமையாக விமர்சனம் செய்தனர். அத்தகைய விமர்சனங்களுக்கு அம்பேத்கர் விளக்கமாகப் பதிலளித்தார். ஒரு மனிதன் எந்தக் கொள்கைகளைப் பிரச்சாரம் செய்கிறானோ அவற்றின்படி அவன் நடக்கும்போது மரியாதைக்குரியவனாகிறான். ஆனால் சில பேர் தாம் தூக்கி உயர்த்திப் பிடிக்கும் கொள்கையை நடைமுறைப்படுத்திடத் துணிவற்றவர்களாக இருக்கிறார்கள் என்ப தற்காக அக்கொள்கை என்றும் பாதிக்கப்படுவதில்லை. ஆயினும் இவ்வுலகிலிருந்து சமத்துவமின்மை என்பது என்றுமே அழியாது என்றும் சிலர் கூறுகின்றனர். அவ்வாறாயின் ஒழுக்கக் கேடு என்பது

எல்லாக் காலங்களிலும், எல்லா நாடுகளிலும் இருந்துகொண்டிருக்கும் போது, ஒழுக்கத்தைப்பற்றி ஏன் மக்களுக்குக் கற்பிக்கிறீர்கள் என்று அவர்களைத் திருப்பிக் கேட்டார். வலுவான சமூகத்தின் அடித்தளம் போன்றது சமூகச் சமஉரிமைக் கோட்பாடு என்பதை அம்பேத்கர் மீண்டும் வலியுறுத்திப் பேசினார். உறுதியான உயரிய கொள்கைகளின் மேல் ஒரு சமூகத்தை நிறுவ வேண்டுமானால், அச்சமூகத்தின் அங்கமாக இருக்கின்ற எல்லாப் பிரிவினர்க்கும் மதம், சமூகம், அரசியல், பொருளாதாரம் ஆகிய அனைத்துத் துறைகளிலும் சம உரிமை வழங்கப்பட வேண்டியது இன்றியமையாததாகும் என்று அம்பேத்கர் விளக்கினார்.

1929 செப்டம்பர் மாதம் ஒரு கொலை வழக்கு தொடர்பாக மாவட்ட நீதிமன்றத்தில் வாதாட வேண்டியிருந்ததால் அம்பேத்கர் இரத்தினகிரிக்குச் சென்றார். சாவர்க்கர் அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ள விரும்பினார். நூற்றுக்கணக்கான மக்கள் கையொப்பமிட்ட அழைப்பு மடலை அம்பேத்கரிடம் அளித்து, வித்தோபா கோயிலில் ஏற்பாடு செய்துள்ள கூட்டத்தில் பேசுமாறு அவரை அழைத்தனர். வித்தோபா கோயில் புகழ் பெற்றது. அங்குச் சாவர்க்கர் இயக்கத் தோழர்கள் பல சமூகச்-சீர்திருத்தப் போராட்டங்களை நடத்தி வெற்றிபெற்றார்கள் என்பதால் அது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இடமாகத் திகழ்ந்தது. பிற்போக்குவாதிகள், அம்பேத்கர் பேசுவதாக இருந்த அக்கூட்டத்திற்குத் தடை ஆணை வாங்கிடத் துடித்தனர். இரத்தினகிரி நகரம் முழுவதும் இதே பேச்சாக இருந்தது. அதற்குள் அம்பேத்கர் அவசரமாக பம்பாய்க்கு வரவேண்டுமெனத் தந்தி ஒன்று வந்தது. அதனால் அக்கூட்டத்தில் கலந்துகொள்ளாமலேயே அம்பேத்கர் பம்பாய்க்குத் திரும்பினார். ஒரே மேடையில் இந்தியாவின் இருபெரும் புரட்சி வீரர்கள் கனல் தெறிக்க ஆற்றிடவிருந்த சிறந்த பேச்சுக்களைக் கேட்கும் அரிய வாய்ப்பினை இரத்தினகிரி மக்கள் இழந்துவிட்டனர்.

பம்பாயில் பொது இடத்தில் வைக்கப்பட்டிருந்த கணபதியின் உருவ வழிபாட்டு உரிமைக்காக இந்த ஆண்டிலும் அம்பேத்கர் போராடினார். தாதர் சர்வஜனிக் கணேஷ் விழாவின் தலைவர் தீண்டப்படாத வகுப்பு மக்களுக்கு வழிபாட்டு உரிமையை வழங்குவது எனக் கடந்த ஆண்டு எடுத்த முடிவை இப்போது திரும்பப் பெற்றுக் கொண்டதாகச் சமூக சம உரிமைக் கழகத்திற்குத் தெரிவித்தார். ஆகவே கணேசர் உருவத்தை வைத்திருக்கும் அறைக்குள்ளோ அல்லது அதற்கு அருகிலோ தீண்டப்படாத இந்து

எவரும் அனுமதிக்கப்படமாட்டார் என்று விழாத்தலைவர் தெளிவு படுத்திவிட்டார். கணேசர் உருவத்தை வழிபாட்டுக்கென வைக்கின்ற அன்று காலை அந்த இடத்தில் மோதல் ஏற்படக்கூடிய சூழ்நிலை உருவாயிற்று. விழா ஏற்பாட்டாளர்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் காவல்துறையினரை அழைத்திருந்தனர்; அத்துடன் பந்தலில் அடியாட்களையும் நிறுத்தியிருந்தனர். சுமார் ஆயிரம் தீண்டப்படாத இந்துக்கள் பந்தலுக்கு வெளியே கூடினர்; உள்ளே சென்று கணபதியை வழிபட அனுமதிக்க வேண்டும் என்று வற்புறுத்தினர். அம்பேத்கரும், போலேவும் மற்ற உள்ளூர்த் தலைவர்களும் அவ்விடத்திற்கு வந்தனர். அம்பேத்கர் அங்குப் பெருந்திரளாகக் கூடியிருந்த தம் மக்களைப் பெருமுயற்சி எடுத்து அமைதிப்படுத்திவிட்டு வைதிகர்களின் தலைவர் டாக்டர் ஐவ்லேவுடன் பேச்சுவார்த்தையைத் தொடங்கினார். மிகச் சாதாரண மனித உரிமைகளை வழங்குமாறு அம்பேத்கர் அவரிடம் வேண்டினார். அப்பேச்சுவார்த்தை பயன் தராதுபோல் தோன்றியது; எனவே சூழ்நிலை அச்சமூட்டுவதாய் வளர்ந்தது. வைதிகத் தலைவர்களும் ஒவ்வொரு நொடியும் தீண்டப்படாத வகுப்பு மக்கள் முன்னேறி உள்ளே வந்து கொண்டிருப்பதைக் கண்டனர். இறுதியில் அன்று பிற்பகல் மூன்று மணிக்கு வைதிகர்கள் தம் முடிவை மாற்றிக்கொண்டனர். தீண்டப்படாத வகுப்பு மக்கள் வெற்றிக் களிப்போடும் உரிமையுடனும் கைவீசி வழிபாட்டுப் பந்தலுள் நடந்துசென்றனர்.

III

பம்பாய் மாகாண அரசு அமைத்த ஸ்டார்ட்டே குழுவின் செயல்களில் அம்பேத்கர் முழுமையாக ஈடுபட்டிருந்தார். பம்பாய் மாகாணத்தில் தீண்டப்படாத வகுப்பு மக்கள் மற்றும் பழங்குடியினரின் கல்வி, பொருளாதார, சமூக நிலைகளை ஆய்வு செய்து அவர்களின் முன்னேற்றத்திற்கான வழிவகைகளைப் பரிந்துரை செய்யவேண்டும் என்ற நோக்குடன் டாக்டர் பி.ஜி. சோலங்கி முன்மொழிந்த தீர்மானத்தின் அடிப்படையில் ஸ்டார்ட்டே குழு அமைக்கப்பட்டிருந்தது. அக்குழுவில் அம்பேத்கர், சோலங்கி, தக்கர் பாபா என்று அழைக்கப்படுகின்ற ஏ.வி. தக்கர் ஆகியோர் உறுப்பினர்கள். அக்குழுவின் உறுப்பினர் என்ற முறையில் அம்பேத்கர் பெல்காம், கண்டேஷ், நாசிக் ஆகிய மாவட்டங்களில் பயணம் செய்தார். அக்குழுவின் உறுப்பினராகவிருந்த போதிலும் சுற்றுப்பயணத்தின்போது அம்பேத்கரே இழிவாக நடத்தப்படும் நிலைக்கு ஆளானார். ஒரு உள்ளாட்சிப் பள்ளியின் தலைமை

ஆசிரியர் அம்பேத்கரைப் பள்ளி வகுப்பறைக்குள் நுழையவிட மறுத்துவிட்டார். ஒரு மாணவனின் பாதுகாவலரிடமிருந்து புகார் வந்ததன்பேரில் அம்பேத்கர் அப்பள்ளிக்குச் சென்றார். அந்தப் புகாரில் கூறியிருந்தவாறு அந்த மாணவனை வகுப்பில் உட்கார ஏன் அனுமதிக்கவில்லை, வெளியில் தாழ்வாரத்தில் ஏன் உட்கார வைக்கப்பட்டான் என்பதை நேரில் கண்டறியவே அம்பேத்கர் அங்கே சென்றார். அக்குழுவினர் கிழக்குக் கண்டேஷ் பகுதியில் சுற்றுப்பயணம் செய்தனர். அப்போதும் அம்பேத்கரை அவமதிக்கும் ஒரு நிகழ்ச்சி நடந்தது.

சாலிஸ்கானில் தீண்டப்படாத வகுப்பு மக்கள் அம்பேத்கருக்கு ஒரு வரவேற்பு அளித்தனர். அவர்கள் வாழுமிடத்திற்கு அம்பேத்கரை அழைத்துச்செல்ல விரும்பினர். ஆனால் அம்பேத்கரை ஏற்றிச்செல்ல அங்கிருந்த எல்லாக் குதிரை வண்டிக்காரர்களும் மறுத்துவிட்டனர். இறுதியில் ஒரு குதிரை வண்டிக்காரன் தீண்டப்படாத ஒருவர் அவனுடைய குதிரை வண்டியை ஓட்டிச் செல்ல அனுமதித்தான். அந்தத் தீண்டப்படாதவருக்கு வண்டியை ஓட்டிப் பழக்கம் இல்லை; ஆதலால் குதிரை தறிகெட்டு ஓடியது. அதனால் வண்டியிலிருந்து அம்பேத்கர் தூக்கி எறியப்பட்டார்; தெருவிலிருந்த கற்களின்மீது அவர் விழுந்ததால் பலத்த அடிபட்டது. "1929 அக்டோபர் 23ஆம் நாள் நான் பயணம் செய்த குதிரை வண்டி குடை சாய்ந்தது. நான் வெளியில் தூக்கியெறியப்பட்டேன். இந்த விபத்தில் என் வலது காலில் ஒரு எலும்பு முறிந்தது. அதனால் டிசம்பர் மாத இறுதிவரை படுக்கையிலேயே இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. என்னால் நடக்க முடிகிறதென்றாலும் தடியின் துணையில்லாமல் நடக்க முடியவில்லை" என்று இந்த விபத்து நடந்த ஒரு மாதம் கழித்து எழுதிய ஒரு கடிதத்தில் அம்பேத்கர் குறிப்பிட்டிருந்தார்.[43]

1930 மார்ச்சு மாதத்தில் ஸ்டார்ட்டே கமிட்டி தன் அறிக்கையை அளித்தது. தீண்டப்படாத வகுப்பு மக்கள் இந்துமதச் சடங்குகளையும் நடைமுறைகளையும் விழாக்களையும் பின்பற்றுகிறார்கள். ஆனால் ஊருக்கு வெளியே தனியான குடியிருப்புப் பகுதியில் வாழுமாறு கட்டாயப்படுத்தப்பட்டிருப்பதால் அவர்கள் மற்ற சமூகத்தினருடன் கலப்பது தடை செய்யப்பட்டுள்ளது. அதன் விளைவாக அடிமைகளாக வாழுகின்றனர். பொதுப்பள்ளிகள் திறக்கப்படுவதனால் அவர்களுடைய கல்வி வாய்ப்பு பெருகும்; உயர்நிலைப் பள்ளிகளில் படிக்கும் தீண்டப்படாத வகுப்பு

மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகையை அதிகப்படுத்தித் தரவேண்டும்; அவர்கள் தங்கிப் படிப்பதற்கான விடுதிகளை அதிகப்படுத்த வேண்டும், ஆலைகளிலும் இரயில்வே பணிமனை களிலும் சேரும் தீண்டப்படாத வகுப்புப் பயிற்சியாளர்களுக்கும் தொழிற்பயிற்சி பெறுவதற்காகச் சேரும் தீண்டப்படாத வகுப்புப் பயிற்சியாளர்களுக்கும் உதவித் தொகை வழங்க வேண்டும்; அவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று பொறியியல் கல்வி பெறக் கல்வி உதவித் தொகை அளிக்க வேண்டும். இத்திட்டங்கள் செயல்படுத்தப்படுவதைக் கண்காணிக்கத் தனி அலுவலர் ஒருவரை அமர்த்த வேண்டும் என்று ஸ்டார்ட்டே குழு தன் பரிந்துரைகளில் குறிப்பிட்டிருந்தது.

அக்குழு மற்ற சில திட்டங்களையும் பரிந்துரைத்தது. கிராமக் கூட்டுறவுச் சங்கங்களில் தீண்டப்படாதவர்கள் பிரதிநிதித்துவம் பெறவேண்டும்; வட்டிக்கடை நடத்துவோரைக் கட்டுப்படுத்தும் சட்டம் இயற்றப்பட வேண்டும்; நகராட்சியின் துப்புரவுத் தொழிலாளர்களுக்குச் சேமநலநிதியை ஏற்படுத்த வேண்டும்; தீண்டப்படாத வகுப்பு மக்கள் காவல்துறையிலும் இராணுவத்திலும் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும்; நகரங்களில் அவர்கள் குடியிருப் பதற்கான வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டும்; காடழிக்கப்பட்ட நிலங்களையும் தரிசு நிலங்களையும் தீண்டப்படாத வகுப்பு மக்களுக்கு அளித்திட வேண்டும்; சுக்கூர் அணைத்திட்டம் தீண்டப்படாத வகுப்பு மக்களின் நல்வாழ்விற்காகப் பயன்படுத்தப் படவேண்டும் என்பவையே ஸ்டார்ட்டே குழுவின் மற்ற பரிந்துரை களாகும்.

குதிரை வண்டியிலிருந்து விழுந்த விபத்தினால் அம்பேத்கர் வெளியே சென்று வேலைகளைச் செய்ய முடியாதுபோயினும் அவர் வீட்டில் சோம்பிக் கிடக்கவில்லை. உயர்ந்த தன்மையின் சிறந்த கூறுகளில் ஒன்றான தளராமுயற்சியுடனேயே அவர் செயல்பட்டார்.

புரோகித ஒழிப்புபற்றிச் சிந்தனையைத் தூண்டும் ஒரு கட்டுரையை அம்பேத்கர் எழுதினார். 1929 அக்டோபர் மாதத்தில் பம்பாய் கிரானிக்கிள் இதழில் பார்சிக்காரர் ஒருவர் புரோகிதத்தைக் கடுமையாகக் கண்டித்து ஒரு கட்டுரை எழுதினார். அக்கட்டுரையில் சாதி ஒழிப்பைப் போலவே புரோகித ஒழிப்பை நோக்கமாகக் கொண்ட ஒரு சங்கம் தொடங்கப்பட வேண்டியிருப்பதன் தேவையை வலியுறுத்தி எழுதியிருந்தார்.

அக்கருத்தை ஆதரித்து, 'புரோகிதச் சூழ்ச்சி எதிர்ப்புச் சங்கம் ஏன் தேவை?' என்ற தலைப்பிட்டு அம்பேத்கர் ஒரு கட்டுரையைப் பம்பாய்க் கிரானிக்கிள் இதழுக்கு எழுதினார்.[44] இந்துப் புரோகித வகுப்பினர், பார்சி மதச்சடங்குகளைச் செய்யும் சாதாரணப் புரோகிதர் ஒருவரைவிட ஒழுக்கத்திலோ கல்வியிலோ மற்ற வேறு எந்த வகையிலோ உயர்ந்தவர்களாக இல்லை. அந்தப் பார்சி நண்பர் இந்துமதப் பரம்பரைப் புரோகிதர்கள்பற்றிக் கூறியுள்ள குற்றச்சாட்டுகள் எண்ணற்றவையாயும் திகைக்கச் செய்வனவாக வும் உள்ளன என்று அம்பேத்கர் குறிப்பிட்டுள்ளார். "இந்துமதப் புரோகிதன் நாகரிக வளர்ச்சி எனும் சக்கரத்திற்கு ஒரு முட்டுக்கட்டை யாகவே இருந்துவருகிறான். மனிதன் பிறக்கிறான்; ஒரு குடும்பத் தின் தந்தையாகிறான்; அதன்பின் இறக்கிறான். அவனுடைய வாழ்நாள் முழுவதும் புரோகிதன் தீய பேய்போல் அவனைப் பின் தொடர்கிறான்" என்று அம்பேத்கர் அக்கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

புரோகிதப் பார்ப்பான் மனிதர்களுள் ஓர் மோசமான பிறவி என்று அம்பேத்கர் குறிப்பிட்டுள்ளார். "கண்ணுக்குத் தெரியாத கடவுள் சக்திக்கும் ஆதரவற்ற மனிதனுக்கும் இடையே இழிந்த ஏமாற்று வேலை செய்து தன் வயிற்றை வளர்த்துக் கொண்டிருக்கி றான். திருமணம் போன்ற இன்ப நிகழ்ச்சி, இறப்பு போன்ற துன்பநிகழ்ச்சி ஆகிய இரண்டிலுமே புரோகிதர்கள் ஏமாற்றிச் சுரண்டுகிறார்கள். கட்டுரை எழுதிய அந்தப் பார்சி நண்பர் அருமையாக எடுத்துக்காட்டி விளக்கியிருப்பதுபோல், புரோகிதர் களில் பலரும் தங்களிடம் அகப்பட்டோரை உறிஞ்சி வாழ்ந்திட கடவுள் அருள்புரிய வேண்டும் என்று வேண்டுதல் செய்கிறார்கள் என்று அம்பேத்கர் எழுதினார். ஏழைக் குடும்பத்தில் ஒரு பார்சிக்காரர் இறந்துவிட்டால் அவர் உயிரோடு இருந்த காலத்தை விட, பிணமானபின் அக்குடும்பத்திற்குப் பொருளாதார ரீதியாகப் பெரும் சுமையாகிவிடுகிறார் என்று அந்தப் பார்சி நண்பர் கட்டுரையில் எழுதியிருந்ததைச் சுட்டிக்காட்டி, அம்பேத்கர், தன்னுடைய கட்டுரையில் இந்து, முகம்மதிய, கிறித்துவச் சமயங்களிலுள்ள முற்போக்குச் சிந்தனையாளர்கள் புரோகித முறையின் தீமைகளை இந்தியாவிலிருந்து அகற்றிட முன்வருமாறு ஒரு வேண்டுதலை முன்வைத்தார். அந்தப் பார்சி சகோதரர் குறிப்பிட்டிருப்பதுபோல் புரோகிதத்தின் சுமை தாங்க முடியாததாக இருக்கிறது; ஆகவே அதைத் தூய்மை செய்யும் உயரிய பணியில் நீங்களும் சேர வாருங்கள் என்று அழைப்புவிடுத்தார் அம்பேத்கர்.

அக்காலக்கட்டத்தில், பூனாவின் தீண்டப்படாத வகுப்புத் தலைவர்களான சிவராம் ஜன்பா காம்ப்ளே, ராஜ்போஜ் ஆகியோர் பூனாவின் சாதி இந்துத் தலைவர்களான வி.வி. சாத்தே, தேஷ்தாஸ் ரானடே, ஜி.என். கனித்கர், கேசவராவ் ஜெதே, என்.வி. காட்கில் ஆகியோருடன் கலந்து பேசி பூனாவில் புகழ்பெற்ற பார்வதிக் கோயிலில் தீண்டப்படாத வகுப்பு மக்களின் வழிபாட்டுரிமையை நிலைநாட்டுவதற்காக அக்டோபர் மாதம் இரண்டாவது வாரத்தில் சத்தியாக்கிரகப் போராட்டத்தைத் தொடங்கினார்கள். என்.வி. காட்கில், பின்னாளில், சுதந்திர இந்தியாவின் முதலாவது அமைச்சரவையில் பொதுப்பணி மற்றும் சுரங்க அமைச்சராக இருந்தார். பார்வதிக் கோயில் நுழைவுச் சத்தியாக்கிரகப் போராட்ட எதிர்ப்பாளர்கள் எல்லோரையும் அச்சுறுத்தும் வகையில் எதிர்ப்பு முழக்கங்களை முழங்கியவாறே சத்தியாக்கிரகிகள் மீது கற்களை வீசினார்கள். காட்கில், ரானடே மற்றும் ஆரிய சமாஜத் தலைவர்கள் சிலர் இக்கல்வீச்சில் காயமடைந்தனர். ராஜ் போஜ் பலத்த காயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப் பட்டார்.

வைதிக இந்துக்கள் சத்தியாக்கிரகிகளைத் தாக்கியதைக் கண்டித்துப் பொதுக்கூட்டங்கள் நடத்தப்பட்டன. அப்போது அம்பேத்கர் ஸ்டார்ட்டே குழுவின் நடவடிக்கைகளில் முழுமையாக ஈடுபட்டிருந்ததாலும், கோயில் நுழைவு சத்தியாக்கிரகத்தை நடத்தியவர்களில் சாதி இந்துக்களே அதிக அளவில் முன்னின்ற தாலும் அவற்றிலிருந்து விலகியிருந்தார். ஆயினும் அக்கோயில் நுழைவுச் சத்தியாக்கிரகத்தை ஆதரித்துக் கிளர்ந்தெழும்படியாகப் பம்பாயில் ஒரு கூட்டத்தில் உரையாற்றினார். பம்பாயில் உள்ள தீண்டப்படாத வகுப்பு மக்கள் பூனாவின் தீண்டப்படாத வகுப்பு மக்கள் நடத்தும் மிக அடிப்படையான மனித உரிமைப் போராட்டத்திற்கு முழு ஆதரவளிக்க வேண்டும்; அவர்களுக்கு நிதி உதவி அளிப்பதுடன், தேவைப்பட்டால் பூனாவிற்குக் குழுக்களாகச் சென்று சத்தியாக்கிரகத்தில் கலந்துகொள்வதற்கும் தயாராக இருக்க வேண்டும் என்று அம்பேத்கர் அங்கு அறைகூவல் விடுத்தார். இன்னும் கொஞ்ச காலம் பொறுத்துக்கொள்ளுங்கள்; சாதி இந்துக்கள் மனம் மாறும் வரை காத்திருங்கள் என்று சமாதானம் சொல்லுவோரின் கருத்தைத் தான் சற்றும் ஏற்க இயலாது என அம்பேத்கர் அறிவித்தார். 1929 டிசம்பர் 31க்குள் இந்தியாவிற்கு டொமினியன் அந்தஸ்து வழங்க வேண்டுமென்று இந்தியத் தேசியக் காங்கிரசு பிரிட்டிஷ் நாடாளு மன்றத்திற்கு ஒரு காலக்கெடு கொடுத்துள்ளது. அவ்வாறிருக்கும்போது கோயிலில் நுழைவதற்கான மிகச்சாதாரணமான

மானுட உரிமையைப் பெறுவதற்குக் கூடத் தீண்டப்படாத வகுப்பு மக்கள் இன்னும் காத்துக்கொண்டிருக்க வேண்டும் என்று கூறுவதில் என்ன நியாயம் இருக்கிறது? என்று அம்பேத்கர் கேட்டார். அப்பேச்சின் இறுதியில் பம்பாயிலும் அது போன்றதொரு போராட்டத்தைத் தொடங்கவிருப்பதாக அம்பேத்கர் அறிவித்தார். சமத்துவச் சங்கத்தின் தலைவர் என்ற முறையில் அப்போராட்டத்தை வெற்றியடையச் செய்வேன் என்றும் கூறினார்.

பூனாவில் நடைபெற்றது போன்ற சத்தியாக்கிரகம் நடப்பது அதுவே முதன்முறை அன்று. அதுபோன்ற போராட்டங்களை ஏற்கெனவே இரத்தினகிரியில் சாவர்க்கர் நடத்தினார். அத்தகைய போராட்டங்கள் கார்வர், அமராவதி, முன்ஷிகஞ்ச் மற்றும் வங்காளத்தில் குல்னா ஆகிய இடங்களிலும் நடந்துள்ளன. பூனா சத்தியாக்கிரகம் மீண்டும் தொடங்கப்பட்டது. கோயிலை மூடியே வைத்திருந்ததால் அப்போராட்டம் நிறுத்தப்பட்டது. அந்தப் பிரச்சினையைப்பற்றிப் போராட்டம் நடத்தும் எண்ணத்தை அம்பேத்கர் ஒருபோதும் கைவிடவில்லை.

இந்திய வரலாற்றில் 1930ஆம் ஆண்டு செயல்களும் அவற்றிற்கான எதிர்ச் செயல்களும் நிறைந்த ஆண்டாக இருந்தது. சிந்தனையில் ஒரு புதிய மாற்றம்; அணுகுமுறையில் ஒரு புதிய கண்ணோட்டம்; புதுவகையான ஒடுக்குமுறைகள்; புதிய வகை யான நல்லிணக்க முயற்சிகள் ஆகியவற்றை 1930ஆவது ஆண்டு கண்டது. இன்னும் சரியாகச் சொல்வதானால் சத்தியாக்கிரக ஆண்டாக அது திகழ்ந்தது. காங்கிரசின் தன்னிகரற்ற தளபதியாக விளங்கிய மகாத்மா காந்தி நாட்டின் விடுதலைக்காக அவருடைய மாபெரும் இயக்கத்தை 1930 மார்ச்சு 12ஆம் நாள் தொடங்கினார். அப்போராட்டத்தால் நாடு முழுவதுமே அமைதியான எதிர்ப்புப் போர் அரங்கமாக மாறியது. குதிரை போலீஸ் பட்டாளம், துப்பாக்கிச் சூடு, சிறைவாசம் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் பெருந்திரளான மக்கள் சத்தியாக்கிரகத்தில் குதிக்கும் நிலை உருவாகியிருந்தது.

காந்தியாரின் தண்டி யாத்திரைக்குப் பத்து நாட்களுக்கு முன்னர் இந்தியச் சமூகப் புரட்சியின் தந்தையான அம்பேத்கர் நாசிக்கில் அவருடைய கோயில் நுழைவுப் போராட்டத்தைத் துவக்குவதற் கான முன்னேற்பாட்டு வேலைகளை மூன்று மாதங்களாகக் கவனித்தார். பம்பாயில் இருந்தவாறே அவருடைய கடிதங்கள் மூலமாகவும் முன்னணித் தோழர்கள் வாயிலாகவும் வழிகாட்டி, எழுச்சியூட்டி, அப்போராட்டத்தை வளர்த்தெடுத்தார். நாசிக்கில் தீண்டப்படாத வகுப்பு மக்கள் சத்தியாக்கிரகக் குழு ஒன்றை அமைத்தனர். ஒரு கால்க்கெடு கொடுத்து, அந்நாளுக்குள் புகழ் பெற்ற காலாராம் கோயிலைத் தீண்டப்படாத வகுப்பு மக்களுக்கா கத் திறக்காவிடில் சத்தியாக்கிரகம் செய்வோம் என்றும், சத்தியாக்கிர கம் குழுவின் செயலாளரான பாவ்ராவ் கெய்க்வாடு மூலமாகச் செய்வோம் என்றும் அக்கோயிலின் அறங்காவலர்களுக்குத் தெரிவித்தனர். அதேவேளையில் அக் கோயிலில் உள்ள இராமனை வழிபடும் உரிமையைப் பெற்றிட நாசிக்கில் அணி திரளுமாறு தீண்டப்படாத வகுப்பு மக்களுக்கு எழுச்சிமிக்க அறைகூவல் விடப்பட்டது. சத்தியாக்கிரகக் குழுவின் வேண்டுகோளை ஏற்றுச் சுமார் 15,000 தொண்டர்களும் பிரதிநிதிகளும் நாசிக்கில் தீண்டப் படாத வகுப்பு மக்களின் வாழிடப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த

பந்தலில் குழுமினர். அங்கு வந்திருந்தவர்களில் தியோராவ் நாயக், ராஜ் போஜ், பிரதான், சிவ்தார்க்கார், பட்டிப்பவனதாஸ், பி.ஜி. கெர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

சத்தியாக்கிரக நாளும் புலர்ந்தது. அந்நாள் 1930 மார்ச்சு 2 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்று காலை 10 மணிக்கு அந்தப் பந்தலில் அம்பேத்கர் தலைமையில் மாநாடு தொடங்கியது. அப்போதுள்ள சூழ்நிலையை ஆராய்ந்து சத்தியாக்கிரகத்தைத் தொடங்குவதற்கான வழிமுறைகளை வகுத்திட அம்மாநாட்டில் முனைந்தனர். நண்பகல் மாநாடு உணவுக்காகக் கலைந்தது; மீண்டும் பிற்பகல் ஒன்றரை மணிக்குக் கூடியது.

பிற்பகல் மூன்று மணிக்கு அம்மாநாட்டிற்கு வந்திருந்தவர்கள் ஊர்வலமாகச் செல்வதற்காக நான்கு நான்கு பேராக வரிசையில் நின்றனர். அந்த வரிசை ஒரு மைல் நீளத்திற்கு மேல் நின்றது. நாசிக்கின் வரலாற்றில் அதுதான் மிகப்பெரிய ஊர்வலமாகும். ஊர்வலத்தின் தலைப்பகுதியில் பாண்டு வாத்திய இசையை இராணுவப் பாணியில் இசைத்துக்கொண்டு நடந்தனர். அந்த ஊர்வலத்தில் இராணுவத்தில் பணியாற்றிய பலர் இருந்தனர். அவர்களுக்கு அந்த இராணுவ இசை அவர்களுடைய இராணுவ வாழ்க்கையை நினைவூட்டி அவர்களை வீறுகொள்ளச் செய்வதாக இருந்தது. ஊர்வலத்தில் இரண்டாவது அணியாகச் சாரணர் பிரிவு சென்றது. அவர்களைத் தொடர்ந்து 500 பெண் சத்தியாக்கிரகிகள் பெண்ணுலகின் புரட்சிகரமான மாற்றத்தின் அறிகுறியாக வீர நடையிட்டனர். அந்த மறத்தியர் அணியைத் தொடர்ந்து பின்னால், நரம்புகள் புடைத்திட, உணர்ச்சிப் பிழம்பாக மாறிப் பல்லாயிரக் கணக்கானவர்கள் நடந்தனர். ஆயினும் அந்த ஊர்வலம் கட்டுப்பாட்டுடனும் ஒழுங்குடனும் உறுதிப்பாட்டுடனும் சென்றது.

காலாராம் கோயிலின் கிழக்கு வாயில் அருகில் அந்த ஊர்வலம் வந்ததும், மாவட்ட நீதிபதி, மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர், நகர நீதிபதி ஆகியோர் அந்த நுழைவாயில் அருகில் வந்தனர். கோயிலின் எல்லா நுழைவாயில்களும் மூடப்பட்டு விட்டிருந்ததால் ஊர்வலத்தினர் கோதாவரிப் படித் துறைப் பக்கம் சென்றார்கள். அங்கே அந்த ஊர்வலம் ஒரு பொதுக்கூட்டமாக மாற்றப்பட்டது.

அன்றிரவு பதினொரு மணிக்குத் தலைவர்கள் கூடிப் பேசினார்கள். அனைத்து அம்சங்களைப்பற்றியும் விவாதித்தபின் கோயிலின்



இரட்டைமலை சீனிவாசன், முதல் வட்டமேசை மாநாட்டிற்கு
அம்பேத்கருடன் பிரதிநிதியாகச் சென்றவர்.

வாயில்களின் முன்னர் அமைதியான முறையில் போராட்டத்தை நடத்துவது என்று முடிவுசெய்தனர். வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த அப்போராட்டம் 1930 மார்ச்சு 3ஆம் நாள் காலை தொடங்கியது. போராட்டத்தின் முதல் குழுவினரான 125 ஆண்களும் 25 பெண்களும் கோயிலின் நான்கு நுழைவாயில்களின் முன்பும் அறப்போரைத் தொடங்குவதற்காக நின்றனர். போராட்டத்தில் கலந்துகொள்வதற்காகத் தங்கள் பெயர்களைப் பதிவு செய்திருந்த 8000 சத்தியாக்கிரகிகளும் தங்கள் முறை எப்போது வரும் என்று காத்திருந்தனர். ஆனால் கோயிலின் எல்லாக் கதவுகளும் மூடப்பட்டுக் கிடந்தன; அருகில் போகக் கூடாது என்பதற்காக வாயில்களில் தடைகளும் ஏற்படுத்தப்பட்டிருந்தன. நுழைவாயில் முன் சத்தியாக்கிரகிகள் அமர்ந்து பக்திப் பாடல்களைப் பாடினார்கள்; பசனை செய்தார்கள். மூவாயிரத்திற்கு மேற்பட்ட தீண்டப்படாத வகுப்பு மக்கள் அங்கே குழுமினர். காவல்துறையினர் எச்சரிக்கையுடனிருந்து செயலில் இறங்கத் தயாராக நின்றனர். கோயிலின் ஒவ்வொரு நுழைவாயிலிலும் பலத்த காவலர் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. இரண்டு முதல் வகுப்பு நீதிபதிகள் தேவையான நடவடிக்கையை எடுப்பதற்காகக் காலை முதல் அங்கேயே இருந்தனர். காவல் துறைக் கண்காணிப்பாளரான ரினால்ட்ஸ் அவருடைய அலுவலகத்தைக் கோயிலுக்கு எதிரே அதற்கென அமைக்கப்பட்டிருந்த கொட்டகைக்கு மாற்றிக்கொண்டார்.

கோயிலின் நான்கு நுழைவாயில்களும் மூடப்பட்டுவிட்டதால் சாதி இந்துக்களும் கோயிலுக்குள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. அந்த முட்டுக்கட்டையை நீக்குவது எப்படி என்று சாதி இந்துத் தலைவர்கள் இரகசியமாகக் கூடிப்பேசினார்கள். சாதி இந்துக்களுக்காகக் கோயிலின் கதவுகள் திறக்கப்பட்டிருக்குமானால் கட்டுப்படுத்த முடியாத ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கும்.

அன்றிரவு நாசிக் குடிமக்கள் கூட்டம் சங்கராச்சாரியார் டாக்டர் குற்றக்கோட்டி தலைமையில் நடைபெற்றது. வைதிக இந்துக்கள் பெருமளவில் அக்கூட்டத்தில் இருந்ததால் கூட்டம் குழப்பத்தில் முடிந்தது. அச்சமயம் சனாதன இந்துக்களைப் பயம் பிடித்தாட்டியது. அதனால் அவர்கள் கலகக்காரர்களாக மாறினார்கள். அவர்கள் கூட்டத்தினர்மீது கற்களையும் செருப்புகளையும் வீசினார்கள். தீண்டப்படாத வகுப்பு மக்களுக்குக் கோயிலைத் திறந்து விடுமாறு கடவுள் இராமனே வந்து அப்போது சொல்லியிருந்தாலும், வெறி தலைக்கேறியிருந்த வைதிக இந்துக்கள் அந்த இராமனையே தூக்கி

எறிந்திருப்பார்கள் என்று கூறுமளவிற்கு நிலைமை மோசமாக இருந்தது.

இச்சத்தியாக்கிரகப் போராட்டம் தொடர்ந்து ஒரு மாதம் நடந்தது. ஏப்பிரல் 9ஆம் நாள் வந்தது. இராமனின் உருவத்தைத் தேரில் வைத்து ஊர்வலமாக இழுத்துச்செல்லும் நாள் அது. ஆகவே தீண்டப்படாத வகுப்பு மக்களுக்கும் சாதி இந்துக்களுக்குமிடையே ஓர் உடன்பாடு உருவாக்கப்பட்டது. இரு தரப்பிலும் உள்ள திண்ணிய தோளினர் தேரை இழுத்துச் செல்வது என்று முடிவெடுக்கப்பட்டது. அக்காட்சியைக் காண அன்று பகற்பொழுதில் ஆயிரக்கணக்கானவர்கள் கோயிலின் முதன்மை வாயிலருகே கூடினார்கள். தான் தேர்ந்தெடுத்த சிறந்த மல்லர்களுடன் அம்பேத்கர் அக்கோயிலின் வாயிலருகே நின்றார். ஆனால் அம்பேத்கரின் போராட்ட வீரர்கள் தேரைத் தொட்டிழுப்பதற்குள் சாதி இந்துக்களில் இருந்த போக்கிரிகள் அவர்கள் மீது பாய்ந்து அவர்களோடு சண்டையிட்டனர். முன்னரே தாங்கள் இரகசிய மாகத் திட்டமிட்டிருந்தவாறு சாதி இந்துக்கள் தேரை இழுத்துக் கொண்டு ஓடினர். முட்கள் நிறைந்த, இருபுறமும் பாதை வசதியில்லாத ஒரு குறுகலான தெரு வழியாக வேண்டுமென்றே தேரை இழுத்துச் சென்றனர். அத்தெருவின் இருமுனைகளிலும் ஆயுதம் ஏந்திய காவல் துறையினர் அரணாக நின்றிருந்தனர். கத்ரேக்கர் என்ற பெயர் கொண்ட பந்தாரி இளைஞன், சுடுவதற்கான ஆணைக்காகக் காத்துக்கொண்டிருந்த காவல் துறையின் அரணையும் துணிச்சலாக உடைத்துக்கொண்டு தேரை நோக்கிப் பாய்ந்துசென்றான். அடுத்த நொடியில் தீண்டப்படாத வகுப்பு மக்கள் பெருங்கூட்டமாகத் தங்கள் மீது எறியப்படும் கற்களையும் கூடப் பொருட்படுத்தாமல் பாய்ந்து முன்னேறிச் சென்று அத்தேரைக் கைப்பற்றினார்கள். படுகாயமடைந்த மறவன் கத்ரேக்கர் கீழே விழுந்து குருதி வெள்ளத்தில் மிதந்தான். அம்பேத்கரை அவருடைய தோழர்கள் பாதுகாத்தனர். அவரைப் பாதுகாப்பதற்காகப் பிடிக்கப்பட்ட குடைகளும் சின்னாபின்னமாயின. அதனால் அவருக்கு இலேசான காயம் ஏற்பட்டது. நாசிக் நகரம் முழுவதும் தீண்டப்படாத வகுப்பு மக்களும் சாதி இந்துக்களும் தடுப்பாரின்றி மோதிக்கொண்டனர்.

அந்தச் சத்தியாக்கிரகம் நாசிக் மாவட்டம் முழுவதும் இருந்த சாதி இந்துக்களின் மனங்களில் தீண்டப்படாத வகுப்பு மக்களின் மீது பகையுணர்ச்சியை ஏற்படுத்தியது; அதன் விளைவாகப் பள்ளிகளிலிருந்து தீண்டப்படாத வகுப்பு மாணவர்கள் துரத்தப்

பட்டனர். பொது வீதிகளில் தீண்டப்படாத வகுப்பினர் நடந்திட அனுமதி மறுக்கப்பட்டது. கடைகளில் தீண்டப்படாத வகுப்பினர்க ளுக்கு அத்தியாவசியப் பண்டங்களை விற்க மறுத்தனர். சாதி இந்துக்களுக்குச் சமமாக உரிமைகள் வேண்டுமென்று கேட்டதால் அவர்களுக்கு இக்கேடுகள் செய்யப்பட்டன. பல கிராமங்களில் தீண்டப்படாத வகுப்பு மக்கள் கொடுமையாக நடத்தப்பட்டனர். அத்தகைய துன்பங்களுக்கிடையேயும் நாசிக் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தினார்கள். உடன்பாடு காணுமாறு இருதரப்பினரிட மும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. டாக்டர் முஞ்சே, சங்கராச்சாரியார் டாக்டர் குற்றக்கோட்டி ஆகிய இருவரும் உடன்பாட்டை உருவாக்கிட முயன்றனர். பெருஞ்செல்வரான பிர்லா 1930 ஏப்பிரல் மாத மத்தியில் பம்பாயில் அம்பேத்கரைச் சந்தித்து அது தொடர்பாகப் பேசினார். ஆனால் தீண்டப்படாத வகுப்பு மக்கள் தம் கொள்கையில் உறுதியுடன் நின்றனர். அதனால் சாதி இந்துக்கள் புகழ்மிக்க காலாராம் கோயிலை ஓராண்டுக் காலம் மூடியே வைத்திருக்க நேரிட்டது. அப்போராட்டம் 1935 அக்டோபர் மாத இறுதிவரை நீடித்தது.

II

நாசிக்கில் கோயில் நுழைவுப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த அதே சமயத்தில், சைமன் குழு அறிக்கை வெளியிடப்பட்ட பிறகு அனைத்திந்திய மாநாடு ஒன்றை நடத்த வேண்டும் என்று தீண்டப்படாத வகுப்புத் தலைவர்கள் எண்ணி னார்கள். அதற்கேற்ப கே.ஜி. நட்கூலி தலைமையில் நாகபுரியில் ஒரு வரவேற்புக் குழுவை அமைத்தனர். பூனாவின் ஒடுக்கப்பட்ட மக்கள் தலைவர் காம்ப்ளேவுடன் கலந்து பேசியபின், அனைத்திந் திய மாநாட்டை அம்பேத்கர் தலைமையில் நடத்துவது என்று அக்குழு முடிவெடுத்தது. தீண்டப்படாத வகுப்பு மக்களின் பிரதிநிதியாக வட்டமேசை மாநாட்டில் கலந்துகொள்வதற்காக அம்பேத்கரை இலண்டனுக்கு அனுப்புவது என்றும் அக்குழு முடிவு செய்தது.

இறுதியாகச் சைமன் குழுவின் அறிக்கை 1930 மே மாதம் வெளியாயிற்று. இந்தியத் தேசியம் மற்றும் அதன் பின்னணிகள் பற்றிய கருத்தையும் நோக்கத்தையும் அந்த அறிக்கை புறக்கணித்தி ருந்தது. இந்தியக் கண்ணோட்டத்தை வேண்டுமென்றே அது ஒதுக்கித் தள்ளியிருந்தது. இந்திய அரசியல் கட்சிகளுக்கு இடையே இணக்கமான ஓர் உடன்பாடு ஏற்படாததால் இந்தியத் தேர்தல்களில்

தனிவாக்காளர் தொகுதிமுறை நீடிக்கவேண்டும் என்று சைமன் குழுவின் அறிக்கை பரிந்துரைத்திருந்தது. நேருவின் அறிக்கை ஒப்புக்கொள்ளப்பட்ட தீர்வு அன்று எனச் சைமன் குழு கருதியது.

மத்தியச் சட்டசபையில் மொத்தம் இருந்த 250 இடங்களில் 60 விழுக்காடு இடங்களை அதாவது 150 இடங்களைத் தீண்டப் படாத வகுப்பினரையும் உள்ளிட்ட இந்துக்களுக்கென ஒதுக்கியது. தீண்டப்படாத வகுப்பு மக்களுக்கெனத் தனி இட ஒதுக்கீட்டுடன் கூடிய கூட்டு வாக்காளர் தொகுதிகளைச் சைமன் குழு முன்மொழிந் திருந்தது. மாகாண ஆளுநரிடம் தகுதிச் சான்றிதழ் பெற்ற பிறகுதான் தீண்டப்படாத வகுப்பினர் தேர்தலில் நிற்க முடியும் என்று சைமன் குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

அம்பேத்கர் பல்வேறு பணிகளில் ஈடுபட்டிருந்ததால் சட்ட சபையின் அன்றாட நடப்புகளில் அதிக ஆர்வம் காட்டவில்லை. பம்பாய் மாகாணச் சட்டசபையின் பிப்பிரவரி - மார்ச்சு மாதத் தொடர்க் கூட்டத்தின்போது அம்பேத்கர் அய்ந்து நாட்கள்தான் சட்டசபைக்குச் சென்றிருக்கிறார். அவர் கவனம் முழுவதும் நாசிக் போராட்டத்திலேயே படிந்திருந்தது. உயர்நிலைப் பள்ளிகளுக்கு நிதி உதவி அளிப்பதுபற்றிய ஒரே ஒரு கேள்வியை மட்டுமே அம்பேத்கர் எழுப்பியிருக்கிறார் என்பது சட்டசபை நடவடிக்கைக் குறிப்புகளிலிருந்து தெரியவருகிறது. அனைத்துக் கட்சி மாநாட்டி னால் அமைக்கப்பட்ட பாத்ரோ கமிட்டி 1930 மே மாத நடுவில் பம்பாயில் கூடியது. அக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அம்பேத் கர் அழைக்கப்பட்டிருந்தார். அவ்வாறே அவர் கலந்து கொண்டார். இந்து - முஸ்லீம் பிரச்சினை மற்றும் சிறுபான்மை யினர் சிக்கல்பற்றி அக்குழுவில் உடன்பாடு ஏற்பட முடியாது போயிற்று.

சூலை-ஆகஸ்டு மாதங்களில் நடைபெற்ற பம்பாய் மாகாணச் சட்டசபைக் கூட்டத்தில் 1930 சூலை 19ஆம் நாள்வரை அம்பேத்கர் கலந்துகொண்டார். ஆனால் சட்டசபை விவாதங்களில் அவர் பங்குகொள்ளவில்லை. அனைத்திந்தியத் தீண்டப்படாத வகுப்பு மக்கள் மாநாடு நாகபுரியில் நடைபெறுவதற்கு முன்னர், இந்தியத் தேசியக் காங்கிரசு முன்வைத்த கோரிக்கை பற்றியோ, அக்கோரிக்கையைப் பிரிட்டிஷ் அரசு நிராகரித்ததுபற்றியோ தன் கருத்தாக எதையும் கூறுவதை அம்பேத்கர் தவிர்த்திட விரும்பினார்.

திட்டமிட்டிருந்தவாறு 1930 ஆகஸ்டு 8ஆம் நாள் நாகபுரியில் அனைத்திந்தியத் தீண்டப்படாத வகுப்பினர் மாநாடு அம்பேத்கர்

தலைமையில் நடைபெற்றது. ஒன்றுபட்டுச் சுயமாக ஆட்சி செய்துகொள்ளும் வகுப்பாக இந்திய மக்கள் உருவாவதற்கான வாய்ப்பு உள்ளது என்று அம்பேத்கர் தன் தலைமை உரையில் குறிப்பிட்டார். பல்வேறு இனம், மதம், மொழி, கலாச்சாரம் ஆகியவற்றைக் கொண்டிருக்கின்ற யூகோஸ்லேவியா, எஸ்தோனியா, செக்கோஸ்லோவேகியா, அங்கேரி, லாத்வியா, லித்துவேனியா, ருஷ்யா முதலிய நாடுகளின் மக்கள் ஒன்றுபட்டுச் சுயாட்சி செய்து கொள்ளும் வகுப்புகளாக விளங்கும்போது இந்தியாவிலும் அதுபோல் ஏன் ஏற்படக்கூடாது என்பதற்கான காரணமே இல்லை என்று குறிப்பிட்டார். ஆனால் இந்தியாவில் சுயமாக ஆட்சி செய்துகொள்ளுவதற்கான அரசியல் சட்டத்தை உருவாக்கும்போது இங்கே நிலவுகின்ற பல்வேறுபட்ட நிலைமைகள், தேசிய இனங்கள் ஆகியவற்றைக் கட்டாயம் கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டும் என்றார். சாதி மனப்பான்மையில் ஊறிய இந்து உயர்சாதி ஆதிக்கவாதிகளிடம் எல்லையிலா அரசியல் அதிகாரம் வழங்கப்பட்டுவிடுமோ என்ற தன் ஆழ்ந்த அச்சத்தை அம்பேத்கர் வெளியிட்டார். 'எவ்வளவு நல்லதொரு நாடாக இருந்தாலும் அது மற்றொரு நாட்டை ஆளுவதற்குத் தகுதி இல்லை' என்றார், அம்பேத்கர். அதேபோன்று எவ்வளவு நல்ல தன்மை கொண்ட வகுப்பாக இருந்தாலும் அது இன்னொரு வகுப்பின் பேரில் ஆதிக்கம் செய்யத் தகுதியில்லை என்றார். இன்றைய குடியரசு அமைப்பின் அடிப்படைக் கொள்கையானது ஒவ்வொரு தனிமனிதனின் இருப்பையும் மதிப்பையும் அங்கீகரிப்பதாகும். ஒரு தனி மனிதனுக்கு ஓர் உயிர்தான் இருக்கிறது என்ற அடித்தளத்தின் மீது குடியரசுக் கோட்பாடு இயங்குகிறது. ஆகவே ஒவ்வொரு மனிதனுக்கும் வாழ்க்கையில் அவனால் முடிந்த அளவிற்கு முன்னேறுவதற்கான முழு வாய்ப்பையும் தரவேண்டும். ஆனால் இந்தியாவில் எண்ணிக்கையில் சிறுபான் மையினராகவுள்ள ஆதிக்கவாதச் சிறு கும்பல் இக்கொள்கைக்கெதிரான எண்ணங்களையும் செயல்களையும் கொண்டிருக்கிறது என்று அம்பேத்கர் சுட்டிக்காட்டினார். ஒன்றோடொன்று தொடர்பு இல்லாததாகச் சமூகம் என்பதும் அரசியல் என்பதும் மனிதனின் தனித்தனிச் செயல்பாட்டுத் தளங்களாக இருக்கின்றன என்று எண்ணுவது தவறாகும். ஆதிக்கம் செய்துகொண்டிருக்கும் இந்திய மேட்டுக்குடியினர் மேலும் அதிகாரம் வேண்டுமென்று கூச்சலிட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் தான் தீண்டாமை எனும் பாவம் இன்னும் தொடர்ந்து இருப்பதற்குக் காரணமாவார்கள். தீண்டாமையின் பெயரால் ஆறு கோடி மக்களுக்கு அடிப்படை மனித உரிமைகளும் நாகரிகத்தின்

கலாச்சாரத்தின் பயன்களும் மறுக்கப்பட்டிருக்கின்றன. இதே போன்று பெரும் எண்ணிக்கையில் உள்ள இந்நாட்டின் ஆதிக்குடிகளும் மலைவாழ் மக்களும் நாடோடிகளாகக் காட்டுமிராண்டி நிலையில் சுற்றிக்கொண்டிருக்கும்படி வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஆகவே நசுக்கப்பட்டுக் கிடக்கும் தீண்டப்படாத வகுப்பு மக்களுக்கு அரசியல் சட்டத்தில் போதிய பாதுகாப்புகள் அளிக்கப் பட வேண்டும் என்றும், தீண்டப்படாத வகுப்பினரின் மக்கள் தொகை விகிதாச்சாரத்துக்கு ஏற்பச் சட்டசபைகளில் இடம் இவர்களுக்கு ஒதுக்கித் தரப்படவேண்டும் என்றும் கோரினார்.

அதன்பின் சைமன் குழுவின் பரிந்துரை ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களை எவ்வாறு பாதிக்கிறது என்பதை அம்பேத்கர் தன் தலைமை உரையில் விளக்கினார். தேர்தலில் போட்டியிடுகின்ற தீண்டப்படாத வகுப்பினர் ஆளுநரிடம் தகுதிச் சான்றிதழ் பெறவேண்டும் என்றிருப்பதையும், தீண்டப்படாத வகுப்பு மக்களின் பிரதிநிதியாகத் தீண்டப்படாதவர் அல்லாத ஒருவரைக்கூட ஆளுநர் தேர்வு செய்யலாம் என்றிருப்பதையும் அம்பேத்கர் கண்டனம் செய்தார். "இது நியமனம் செய்வதற்கான முயற்சியே தவிர வேறொன்றுமில்லை. ஆளுநர் ஒரு தொகுதியில் ஒரே ஒரு வேட்பாளரை மட்டுமே தெரிவு செய்தால் அத்தொகுதியில் தேர்தலே நடக்காது" என்று அம்பேத்கர் முழங்கினார். "நம்முடைய பிரதிநிதிகளை நம் விருப்பப்படி நாமே தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமையைக் கேளுங்கள். இதற்கு எத்தகைய தடையோ நிபந்தனையோ இருக்கக்கூடாது. நம் நலன்களைத் தீர்மானிப்பதில் நாம்தான் கட்டாயம் சிறந்த நீதிபதிகளாக இருக்க முடியும். நமக்கு எது நல்லது என்பதை முடிவு செய்பவர் ஆளுநராகவே இருந்தாலும் அதை நாம் அனுமதிக்கக் கூடாது" என்று அறிவு புகட்டினார்.

அடுத்து அம்பேத்கர் இந்தியாவிற்குச் சுதந்திரம் வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையைப்பற்றிப் பேசும்போது "டொமினியன் அந்தஸ்து கோட்பாடு எனக்கு மேலானதொன்றாகத் தோன்றுகின்றது; அதில் சுதந்திரத்தின் சாராம்சம் இருக்கிறது; முழுமையான சுதந்திரம் என்பதில் உள்ள ஆபத்து டொமினியன் அந்தஸ்தில் இல்லை" என்று கூறினார்.

பேரெழுச்சியூட்டும் வகையில் தண்டி யாத்திரையைக் காந்தி தொடங்கிவிட்டிருந்தார். பல்லாயிரக்கணக்கான மக்கள் அதனால்

சிறைப்பட்டனர். அந்த ஒத்துழையாமை இயக்கத்தைப்பற்றி அம்பேத்கர் பேசும்போது, பொருத்தமற்ற காலக்கட்டத்தில் தண்டி யாத்திரை தொடங்கப்பட்டிருப்பதால் அதை நான் எதிர்க்கிறேன் என்று கூறினார்.

ஒத்துழையாமை இயக்கம் வெகுமக்கள் திரண்டெழுந்து பங்குகொள்ளும் பெரும் நிகழ்ச்சியாகும். வலுக்கட்டாயப்படுத்தல் அதன் அடிப்படை இயல்பாக இருக்கிறது. அது காலால் மிதித்துக் கொண்டு மிரட்டுவதாக உள்ளது. ஒத்துழையாமையைப் பரந்த அளவில் செயல்படுத்தும்போது அது பெருங்கலவரத்தில்தான் போய் முடியும். ஒரு புரட்சி என்பது இரத்தம் சிந்துவதாக இருந்தாலும், இரத்தம் சிந்தாததாக இருந்தாலும் அதில் பெரிய வேறுபாடு ஒன்றும் இல்லை. ஏனெனில் புரட்சி என்பது மாற்றத்திற்கான ஒரு நடைமுறைதான். புரட்சி நடைபெறும்போது அந்த நடைமுறையேகூடக் குழப்பத்திற்குள்ளாகும் ஆபத்தும் பேரழிவை உண்டாக்கக்கூடிய தன்மையும் கொண்டதாக இருக் கிறது. புரட்சிகள் அடிக்கடி நிகழ்வது தவிர்க்க முடியாததாகும். ஆயினும் புரட்சிக்கும் உண்மையான சமூக மாற்றத்திற்கும் இடையே இருக்கின்ற பெருத்த வேறுபாட்டை அவர்கள் மறந்து விடக்கூடாது. ஒரு புரட்சி அரசியல் அதிகாரத்தை ஒருவரிடமிருந்து மற்றொருவருக்குக் கைமாற்றிக் கொடுக்கிறது; அல்லது ஒரு நாட்டினரிடமிருந்து மற்றொரு நாட்டினருக்கு அதிகாரத்தை மாற்றித் தருகிறது. இந்த வெறும் அதிகார மாற்றத்துடன் தீண்டப்படாத மக்கள் மனநிறைவு அடைந்துவிடக்கூடாது. அரசியல் அதிகாரம் மாற்றப்படும்போது அது பரவலாகவும் பிரித்தளிக்கப்பட வேண் டும். அப்போதுதான் சமூகத்தில் இயங்கிக்கொண்டிருக்கின்ற சக்திகளின் தன்மைக்கு ஏற்ப உண்மையான சமூக மாற்றம் ஏற்படும்.

நாகபுரியில் ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களின் தலைவரான அம்பேத்கரின் தாக்குதலிலிருந்து பிரிட்டிஷ் அரசு தப்பியதா? இல்லை! ரானடே கருதியதைப் போன்றே அம்பேத்கரும் ஆங்கிலேயரின் இந்திய வருகை ஒரு வகையில் நற்பேறு உடையது என்றார். இந்தியாவில் அறிவின் விழிப்புணர்ச்சிக்கும், உரிமை, சமத்துவம், சகோதரத்துவம் முதலிய கோட்பாடுகள் இந்தியச் சமூகத்தில் விதைக்கப்படுவதற்கும் ஆங்கிலேயர் வருகையே உதவிற்று; தங்களுடைய சமூகப் பழக்கவழக்கங்கள் சமுதாய ஒழுக்கம்பற்றி இந்தியர்கள் வெட்கப்படும்படிச் செய்தது; சமூக

மதிப்புகள்பற்றி மறு ஆய்வு செய்யுமாறு கட்டாயப்படுத்தியது. மேலும் ஆங்கிலேயரின் வருகையினால்தான் எல்லார்க்கும் பொது வான சட்டமும் அரசு முறையும் இந்தியாவில் ஏற்பட்டன. ஆயினும் இந்தியாவில் இருக்கின்ற பிரிட்டிஷ் அரசுதான் உலகி லேயே செலவு மிகுந்த வெள்ளை யானை அரசாக உள்ளது என்று வெளிப்படையாக அம்பேத்கர் கூறினார். இந்தியாவில் மக்கள் வறுமையில் வாடுவது போன்று உலகில் வேறு எங்கேனும் உண்டா? என்று அவருடைய மக்களைப் பார்த்துக் கேட்டார். "பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதல் காற்பங்கின்போது இந்தியா வில் நிலைபெற்றுவிட்ட பிரிட்டிஷ் ஆட்சியில் அய்ந்து பஞ்சங்கள் ஏற்பட்டன; பத்து இலட்சம் மக்கள் பட்டினியால் மாண்டனர் என்பது உறுதி செய்யப்பட்ட உண்மையாக இருக்கிறது. இரண்டாவது கால் நூற்றாண்டின்போது ஆறு பஞ்சங்கள் ஏற்பட்டு அய்ம்பது இலட்சம் மக்களை அழித்துவிட்டுச் சென்றது என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. கடைசிக் கால் நூற்றாண்டில் என்ன நடத்திருக்கும் என்று நினைக்கிறீர்கள்? பதினெட்டு பஞ்சங்கள் ஏற்பட்டன. நெஞ்சத்தை நடுங்கச்செய்யும் அளவில் - 1,50,00,000 முதல் 2,60,00,000 வரை மக்கள் மாண்டார்கள் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது" என்று புள்ளி விவரங்களுடன் கூறி அம்பேத்கர் பிரிட்டிஷ் ஆட்சியைச் சாடினார். இந்த அளவிற்குக் கொடிய வறுமை தொடர்ந்து இருப்பதற்குக் கார்ணம் இந்திய நாட்டை ஆளும் பிரிட்டிஷ் அரசு வேண்டுமென்றே பின்பற்றும் மக்கள் விரோதக் கொள்கைதான் என்றார் அம்பேத்கர். அதன்பின் இந்தியாவில் சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதற்காக இந்தியாவில் உள்ள பிரிட்டிஷ் அரசை அம்பேத்கர் பாராட்டினார். "ஆனால் நாம் ஒன்றை மறந்துவிடக்கூடாது; மக்கள்-தாழ்த்தப்பட்டவர்கள் உட்படச் சட்டம் ஒழுங்கினால் மட்டுமே உயிர் வாழ்ந்துவிட முடியாது; அரிசி பருப்பு கிடைத்தால்தான் உயிர் வாழ முடியும்" என்று கூறி எச்சரித்தார்.

பிரிட்டிஷ் அரசு இருக்கின்ற வரையில் அவருடைய மக்களின் குறைகள் அனைத்தையும் அகற்றிட முடியாது என்று அம்பேத்கர் அவருடைய மக்களிடம் எச்சரித்தார். "சுதந்திரம் பெற்ற நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தில்தான் அரசியல் அதிகாரம் உங்கள் கைகளுக்கு வருவதற்கான வாய்ப்பு இருக்கிறது; அரசியல் அதிகாரத்தால் மட்டுமே நம் மக்களுக்கு நல்வாழ்வை நல்கிட முடியும். கடந்த காலச் சிந்தனைகளிலேயே மூழ்கித் திளைத்துக் கொண்டிருக்காதீர்கள். நீங்கள் எடுக்கும் முடிவு எவருடைய

அச்சுறுத்தலுக்கோ ஆசைக்கோ உட்பட்டதாக இருக்கக்கூடாது; உங்களுக்கு எது நல்லது என்று எண்ணிப்பார்த்து முடிவுசெய்யுங் கள். சுயராச்சியம்தான் உங்களுடைய குறிக்கோள் என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என்று நான் நம்புகின்றேன்'' என்று அம்பேத் கர் கூறினார்.

காங்கிரசு கட்சியில் உறுப்பினராக ஆவதற்குத் தீண்டாமை ஒழிப்புக் கொள்கையை ஒரு விதியாகக் காங்கிரசுக் கட்சி வைக்கவில்லை என்று அம்பேத்கர் கூறினார். அத்துடன் காந்தியும் தீண்டாமைக்கு எதிராக எந்தவொரு போராட்டத்தையும் நடத்த வில்லை. மேலும் தீண்டப்படாத வகுப்பினர்களும் சாதி இந்துக்க ளும் இணக்கமாக இருக்க வேண்டும் என்பதற்காகக் காந்தி உண்ணா நோன்பு எதுவும் இருக்கவில்லை. ஆகவே தீண்டப்படாத வகுப்பு மக்களின் பாதுகாப்பு அரசாங்கத்தையோ காங்கிரசையோ சார்ந்திருக்கவில்லை. நமக்கான செயல் திட்டத்தை நாமே உருவாக்கி நாமேதான் அமைத்துக்கொள்ள வேண்டும் என்றார் அம்பேத்கர். தீண்டப்படாத வகுப்பு மக்கள் அவர்களுடைய அவலங்களை ஒன்றுபட்ட மத்திய அமைப்பின் மூலமாகவே வெளிப்படுத்த வேண்டும் என்றார். காலங்காலமாக அவர்கள் ஊமைகளாகவே இருந்துகொண்டிருக்கின்றனர். அவர்களுடைய துன்ப நிலைக்காக அரசாங்கத்தையோ சீர்திருத்தவாதிகளையோ மட்டும் குறை சொல்வ தில் எந்த நியாயமும் இல்லை என்றார்.

காங்கிரசு ஒரு தேசிய இயக்கமே தவிர அது ஒரு அரசியல் கட்சி அன்று என்று அம்பேத்கர் கூறினார். சோதனை என்று வரும்போது பல காங்கிரசுக்காரர்களும் அவரவர் வர்க்க முகாம்களுக் குத்தான் ஓடிவிடுவார்கள்; வெகுமக்களுக்காக இருக்கமாட்டார்கள் என்பதில் எனக்கு எள்ளளவும் அய்யமில்லை என்றார்.

அரசியல் அதிகாரத்தைப் பெறவேண்டியதன் தேவையைப் பற்றி அம்பேத்கர் வலியுறுத்திப் பேசியபோதிலும், சமூக நிலையில் தீண்டப்படாத வகுப்பு மக்கள் அவர்களை உயர்த்திக் கொள்ள வேண்டியதன் முதன்மையைப்பற்றியும் கூறினார்.

''அரசியல் அதிகாரம் தீண்டப்படாத வகுப்பு மக்களின் இன்னல்கள் அனைத்தையும் தீர்த்திடும் சஞ்சீவி மூலிகையன்று என்பதை வலியுறுத்திக் கூறிட, இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள விரும்புகின்றேன். உங்களுக்கான விடியல் சமூகத் தளத்தில் நீங்கள் உயர்வதைப் பொறுத்தே இருக்கிறது. தீயப்


பழக்கங்களை விட்டொழியுங்கள்; தவறான வாழ்க்கை முறைகளை மாற்றி அமையுங்கள். உங்களுடைய வாழ்க்கை முறைகளை மாற்றுவதன்மூலமே மற்றவர்களின் மதிப்பையும் நட்பையும் பெறமுடியும். நீங்கள் கட்டாயம் கல்வி கற்க வேண்டும். உங்களில் பலரும் மிக உயர்ந்த நிலையை அடைவதற்கு எழுத்தறிவு மட்டுமே போதாது. உங்களில் பலரும் இந்த உயர்ந்த நிலையை அடையும்போதுதான் நமது சமூகம் முழுவதுமே எழுச்சிபெற்று தன் மதிப்பை உயர்த்திக்கொள்ளும். இருப்பதே போதும் என்று எண்ணுகின்ற இரங்கத்தக்க மனநிலையைத் துடைத்தெறிந்துவிட்டு, அதற்குப் பதிலாகப் போத வில்லையே என்ற நியாயமான எண்ணத்தை உருவாக்கிட வேண்டிய தேவை உங்கள் முன் இருக்கிறது. இருப்பது போதாது என்ற எண்ணமே எல்லா உயர்வுகளுக்கும் ஊற்றாகும்'' என்று அம்பேத்கர் விளக்கினார்.

''நம்முடைய இயக்கத்தின் விளைவாக நம் மக்களுக்கு விடுதலை கிடைக்கும். இந்த நாட்டில் நமக்கென்று இருக்கின்ற புதிய சமூகம் உருவாகும்; அச்சமூகத்தில் அரசியல், சமூகம், பொருளியல் ஆகிய அனைத்துத் துறைகளிலும் எல்லா மனிதர் களுக்கும் ஒரே சமமான மதிப்புத்தான் இருக்கும்'' என்று நாகபுரி மாநாட்டில் தன் பேச்சின் இறுதியில் அம்பேத்கர் கூறினார்.

அரசியல் சுதந்திரம்பற்றி அம்பேத்கர் இங்கே அறிவித்தது பழைய கொள்கையிலிருந்து உறுதியாக மாறுபட்ட போக்காகும். தீண்டப்படாத வகுப்பினர்களின் இயக்க வரலாற்றில் இது மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். தொடக்கக் கால ஆண்டுகளில் தீண்டப்படாத இயக்கத் தலைவர்கள் இந்தியாவுக்கு அரசியல் சுதந்திரம் அளிக்க வேண்டாம் என்று பிரிட்டிஷ் அரசுக்கு வேண்டுகோள் விடுத்தனர். அம்பேத்கர் தலைமையேற்ற பிறகுதான் சமூகச் சமத்துவத்திற்காகவும் அரசியல் உரிமைகளுக்காகவும் தீண்டப்படாத வகுப்பு மக்கள் போராடினார்கள்.

1930இல் அவர்கள் அரசியல் சுதந்திரத்தில் தங்களுக்குள்ள அசையா நம்பிக்கையை அறிவித்தனர். நாகபுரி தீண்டப்படாத வகுப்பினர் மாநாட்டில் அம்பேத்கர் மற்றொரு முக்கியமான அறிவிப்பைத் தன் மக்கள் முன்னிலையில் வெளியிட்டார். சாதி இந்துக்கள் எவ்வளவு தொல்லைகளை ஏற்படுத்தினாலும் நான் இந்து மதத்தைக் கைவிடமாட்டேன் என்றார்.

பிரிட்டிஷ் அரசுக்கு எதிராக அம்பேத்கர் திரும்பியிருப்பதைக் கண்டு சில பத்திரிகைகள் அவருடைய இந்த மாறுதலைப் பாராட்டி



இரண்டாவது வட்ட மேசை மாநாடு
காந்தி, அம்பேத்கர் அமர்ந்துள்ளனர்.

எழுதின. மராட்டிரத்தில் முன்னணி நாளேடாகத் திகழ்ந்திருந்த கேசரி அம்பேத்கரின் இந்த மாற்றத்தைப்பற்றி எழுதும்போது ஷேக்ஸ்பிய ரின் நாடகத்தில் வரும், 'நீ கூடவா புரூட்டஸ்?'[45] என்ற குற்றஞ்சாட்டும் வரியை மேற்கோள் காட்டிக் குத்தலாக எழுதியது. அம்பேத்கரின் பேச்சு நெருப்பை உமிழ்வது போலவும் ஒளியைப் பாய்ச்சுவது போலவும் ஒரே நேரத்தில் இருப்பது அவரின் தனித் தன்மையாகும். அம்பேத்கர் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைப்பற் றியோ உலகச் செய்திகளைப்பற்றியோ பேசும்போது அவர் உள்ளத்தின் கசப்புணர்வுகள் அவருடைய சிந்தனைத் தெளிவை மூடி மறைப்பதில்லை. அரசியல் சமூகப் பிரச்சினைகளை, கற்பிக்கும் கலை நயத்தோடும் தீவிரமாகவும் ஆர்வத்தோடும் அவர் திறனாய்வு செய்யும்போது அம்பேத்கரின் நாட்டுப்பற்று மிக்க நெஞ்சம் தேசப்பற்று என்கிற நாடித்துடிப்பை இழந்ததே இல்லை. நாகபுரி மாநாட்டை அடுத்து அம்பேத்கர் நோய்வாய்ப்பட்டார். அப்போது நினைவிழந்திருந்த நிலையில் அவருடைய மக்களின் எதிர்காலத்தைப்பற்றி நிலை இழந்து பேசினார். காய்ச்சல் தணிந்தது; விரைவில் நலமெய்தினார்.

III

முன்னரே அறிவித்திருந்தவாறு பிரிட்டிஷ் அரசு இலண்டனில் வட்ட மேசை மாநாட்டைக் கூட்டியது. அதில் இந்தியப் பிரதிநிதிகள், பிரிட்டிஷ் அரசின் பிரதிநிதிகள், பிரிட்டிஷ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். இந்திய மக்களின் கோரிக்கைகளை நிறைவுசெய்யும் வகையில் இந்தியாவிற்கான அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்குவதுதான் அம்மாநாட்டின் நோக்கம்.

வட்ட மேசை மாநாடு எண்பத்தொன்பது உறுப்பினர்களைக் கொண்டிருந்தது. அவர்களுள் பதினாறு பேர் மூன்று பிரிட்டிஷ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள்; அய்ம்பத்து மூன்று பேர் இந்தியப் பிரதிநிதிகள். வட்ட மேசை மாநாட்டுத் திட்டத்துக்கு ஒத்துழைக்க மறுத்த காங்கிரசுக் கட்சி தவிர, பல்வேறு நோக்கங் களைக்கொண்ட அமைப்புகளின் பிரதிநிதிகளாக அந்த அய்ம்பத்து மூன்று பேர்களும் கலந்துகொண்டனர். இந்தியச் சமஸ்தானங் களின் சார்பில் இருபது பேர் கலந்துகொண்டனர். வட்ட மேசை மாநாட்டிற்கு அழைக்கப்பட்டிருந்தவர்களில் முற்போக்குச் சிந்தனை கொண்ட பதின்மூன்று இந்துத் தலைவர்கள் இருந்தனர். சர் தேஜ் பகதூர் சாப்ரு, எம்.ஆர். ஜெயகர், சர் சிமன்லால் சத்தால் வாட்,

சீனிவாச சாஸ்திரி, சி.ஒய். சிந்தாமணி ஆகியோர் அதில் அடங்குவர். முஸ்லீம்களின் பிரதிநிதிகளாக ஆகா கான் அரசர், சர் முகம்மது ஷஃபி, முகமது அலி ஜின்னா, ஃபஸ்லுல் ஹக் முதலியோரும், சீக்கியரின் பிரதிநிதியாகச் சர்தார் உஜ்ஜல் சிங், இந்து மகாசபையின் சார்பில் டாக்டர் பி.எஸ். முஞ்சே, இந்தியக் கிறித்துவர்களின் பிரதிநிதியாகக் கே.டி. பால் ஆகியோர் கலந்துகொண்டனர். இந்தியச் சிற்றரசுகளான ஆழ்வார், பரோடா, போபால், பிக்கனீர், காஷ்மீர், பாட்டியாலா ஆகியவற்றின் சிற்றரசர்களும், மற்ற சமஸ்தானங்களின் சார்பில் சர் அக்பர் ஹைதரி, சர் சி.பி. இராமசாமி அய்யர், சர் மிர்சா இஸ்மாயில் ஆகியோரும் கலந்துகொண்டனர். மற்ற சில அமைப்புகளின் சார்பில் ஏ.பி. பாத்ரோ, பாஸ்கரராவ், வி. ஜதாவ் ஆகியோர் வட்டமேசை மாநாட்டிற்குச் சென்றனர். தீண்டப்படாத வகுப்பு மக்களின் பிரதிநிதிகளாக அம்பேத்கரும், ராவ்பகதூர் இரட்டைமலை சீனிவாசனும் சென்றனர்.

1930 செப்டம்பர் 6ஆம் நாளன்று இந்திய வைஸ்ராய் வழியாக வட்டமேசை மாநாட்டில் கலந்துகொள்வதற்கான அழைப்பை அம்பேத்கர் பெற்றார். இந்தியா, இங்கிலாந்து ஆகிய இரு நாடுகளின் வரலாற்றிலும் வட்டமேசை மாநாடு மிகவும் முக்கியமானதொரு நிகழ்ச்சியாக அமைந்தது. குறிப்பாக, தீண்டப்படாத வகுப்பு மக்களுக்கோ அவர்களுடைய வரலாற்றில் இது ஒரு பெரும் திருப்புமுனையாக அமைந்தது. ஏனெனில் வட்டமேசை மாநாட்டின் விளைவாகத்தான் மற்ற இந்தியர்களைப் போலவே இந்தியாவிற்கான அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்குவதில் தீண்டப்படாத வகுப்பினர்களும் சம உரிமையைப் பெற ஏதுவாயிற்று. கடந்த இரண்டாயிரமாண்டைய வரலாற்றில் அவர்களுடைய தாய்நாட்டை ஆளுவதுபற்றி அவர்களுடைய குரல் ஒலித்திட முதன்முதலாக வாய்ப்பு கிடைத்தது.

வட்டமேசை மாநாட்டில் கலந்துகொள்வதற்காக அம்பேத்கர் இங்கிலாந்திற்குப் பயணமானபோது பம்பாயில் தீண்டப்படாத வகுப்பு மக்கள் அவருக்கு மிகச்சிறப்பான வழியனுப்பு விழா நடத்தினர். 1930 அக்டோபர் 2ஆம் நாள் நடைபெற்ற அவ்விழாவில் அவர்களுடைய முன்னேற்றத்திற்காகத் தன்னலமின்றி அயராது பாடுபட்டு வரும் அம்பேத்கருக்கு அவர்களுடைய உள்ளங்களில் தேங்கிக் கிடக்கும் நன்றி உணர்ச்சியைக் காட்டும் வகையில் பண முடிப்பும் வரவேற்பு மடலும் வழங்கினர். அக்கூட்டத்தின் தலைவரான டாக்டர் சோலங்கியும், போலே போன்ற மற்ற

பேச்சாளர்களும் அம்பேத்கரின் சிறந்த அறிவாண்மையை, உயர்ந்த ஒழுக்க நெறிகளை மிகவும் பாராட்டிப் பேசினார்கள்.

பாராட்டுதல்களுக்கு நன்றி தெரிவித்து டாக்டர் அம்பேத்கர் பேசினார். அவர் பெற்றிருக்கின்ற சிறிதளவு வெற்றிகளும் அவருடைய எண்ணற்ற தொண்டர்களின் மற்றும் தோழர்களின் ஒத்துழைப்பால் ஈட்டப்பட்டவையாகும் என்று அம்பேத்கர் கூறினார். பம்பாய்ச் சட்டசபையில் டாக்டர் சோலங்கி ஆற்றிய பணிகளையும் தனக்கு அவர் அளித்த உதவிகளையும் அம்பேத்கர் பாராட்டிப் பேசினார். தன்னுடைய வலது கையாகத் தியோராவ் நாயக் இருப்பதாகப் பாராட்டிப் பேசி, தான் இந்தியாவில் இல்லாதபோது தியோராவ் நாயக் இவ்வியக்கத்தைச் சரியான முறையில் வழி நடத்திச்செல்வார் என்று அம்பேத்கர் கூறினார். அவருடைய இயக்கத்திற்காகப் பெருந்தொகையைச் செலவிட்டு வரும் சங்கர்ராவ் எஸ். பர்ஷாவை அம்பேத்கர் நன்றிப் பெருக்குடன் பாராட்டினார். மாதமிருமுறை இதழாக வெளிவந்துகொண்டிருந்த தன்னுடைய பகிஷ்கிரித் பாரத் (''புறக்கணிக்கப்பட்ட இந்தியா'')திற்குப் பதிலாக ''ஜனதா'' (மக்கள்) என்ற மாதமிருமுறை ஏடு விரைவில் வெளிவரவிருக் கிறது என்பதை அறிவித்தார்.

தீண்டப்படாத வகுப்பு மக்களின் கண்ணோட்டத்தில் வட்ட மேசை மாநாடு உறுதியாக ஆக்கந்தரும் நடவடிக்கையே என்று அம்பேத்கர் கூறினார். தீண்டப்படாத வகுப்பு மக்கள் உட்பட வட்ட மேசை மாநாட்டில் கலந்துகொள்ளும் எல்லாத் தரப்பினருமே 'சுயராச்சியமே இந்தியரின் குறிக்கோள்' என்று முடிவுசெய்துள்ளனர். அரசியல் சட்டத்தை எவ்வாறு அமைப்பது, அதில் சிறுபான்மையினரின் உரிமைகள் யாவை என்பதுபற்றி மட்டுமே கருத்து வேறுபாடு எழுந்துள்ளது. ஒரு மிகச் சிறிய சிறுபான்மையினரிடம் அரசியல் அதிகாரத்தை ஒப்படைப்பதா அல்லது எல்லா வகுப்புகளுக்கும் சமமாகப் பிரித்தளிப்பதா என்பதே முதன்மையான கேள்வியாக இருக்கிறது.

''என்னைப் பொறுத்தவரையில், என் மக்களுக்கு எது உரியதோ அதைக் கேட்பேன். இந்தியச் சுயராச்சியக் கோரிக்கையை உறுதியாகத் தூக்கிப் பிடிப்பேன்'' என்று அம்பேத்கர் கூறினார். செருமனி, ரஷ்யா, சப்பான், அமெரிக்கா ஆகிய நாடுகளின் தலைவர்களையும் பிரதிநிதிகளையும் சந்தித்து, நசுக்கப்பட்டுக் கிடக்கும் இந்தியர்களின் பிரச்சினையைப்பற்றி அவர்களிடம் எடுத்துரைப்பேன்; இயலுமாயின் உலக நாடுகளின்

அவைக்கும் அவர்களுடைய சிக்கலைக் கொண்டுசெல்வேன் என்று தன் பேச்சின் இறுதியில் உறுதி கூறினார். தன் தளபதிகளுக்கும் மக்களுக்கும் இறுதியாக ஓர் எச்சரிக்கை விடுத்தார். உங்களிடையே உட்குழுச் சண்டை வராமல் காத்திடுங்கள்; தலைமை இடத்தைப் பிடிக்க வேண்டுமென்ற பேராசை உங்களுடைய வலிமையைக் குறைக்கும்; உங்கள் நிலையை மோசமாக்கும்; உங்கள் குறிக்கோளைப் பாழாக்கும் என்று அறிவுரை கூறினார்.

1930 அக்டோபர் 4ஆம் நாள் பம்பாயிலிருந்து அம்பேத்கர் எஸ். எஸ். இந்திய வைஸ்ராய் கப்பலில் இலண்டனுக்குப் புறப்பட்டார். அவர் புறப்பட்டுச் சென்றபோது இந்தியாவின் அரசியல் சூழ்நிலை சரியாக இல்லை. இந்திய நாடே கொந்தளிப்பில் இருந்தது. அவரவர்க்குரிய நேரிய வழியில் இந்தியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக வட்டமேசை மாநாட்டில் கலந்துகொள்ள பிரிட்டிஷ் அரசுடன் ஒத்துழைத்த தலைவர்களைக் காங்கிரசுக்காரர்கள் வெறுத்தனர்; பழித்தனர்; கண்டனம் செய்தனர். சூழ்நிலை பதற்றமாக இருந்தது; எந்த நேரத்தில் எது நடக்குமோ என்று அச்சமூட்டுவதாய் இருந்தது. அதனால் அக்டோபர் 8ஆம் நாள் கடற்பயணத்தின்போது ஏடனிலிருந்து அம்பேத்கர் அவருடைய செயலாளரும் நம்பிக்கைக்குரிய தளபதியுமான சிவதார்க்கருக்குத் தன் சமூக மக்களின் பாதுகாப்பு பற்றிய தன் கவலையைத் தெரிவித்து ஒரு கடிதம் எழுதினார். பேச்சிலும் செயலிலும் எச்சரிக்கையுடன் இருங்கள்; இரவில் வெளியில் சென்று வேலை செய்யாதீர்கள் என்று அக்கடிதத்தில் அறிவுரை கூறியிருந்தார். கட்சி அலுவலகத்தின் கதவை நீண்ட இரும்புப் பட்டையைப் போட்டுப் பூட்டுமாறு வலியுறுத்தியிருந்தார். பம்பாயில் அவர்களுடைய அமைப்பின்பால் பகைகொண்டிருந்த தீண்டப்படாத வகுப்புத் தலைவரைப் பற்றிக் குறிப்பிட்டு அவருடைய நடவடிக்கையைக் கண்காணிக்குமாறு எழுதியிருந்தார்.

வங்கியில் வரவுசெலவு வைத்துக் கொள்வதுபற்றித் தன் மகன் யஸ்வந்தனுக்குச் சொல்லித் தரும்படி சிவதார்க்கரைக் கேட்டுக் கொண்டார். ஒரு குறிப்பிட்ட அதிகாரியை நேரில் சென்று பார்த்து அவருக்கு வேண்டிய இருவர்க்கு வேலை தருவது தொடர்பாக நினைவூட்டுமாறு கேட்டுக்கொண்டிருந்தார். பகை கொண்டு காங்கிரசுக்காரர்கள் தீண்டப்படாத வகுப்பு மக்களைத் தாக்கினாலோ அல்லது தீண்டப்படாத வகுப்பு மக்கள் காங்கிரசுத் தொண்டர்களுடன் சில்லறைச் சண்டையில் ஈடுபட்டாலோ அவைபற்றி

மார்செயில்ஸ் முகவரிக்குத் தனக்கு எழுதுமாறு சிவதார்க்கரைக் கேட்டுக்கொண்டிருந்தார்.

அப்போது இந்தியத் தேசியக் காங்கிரசின் வழிமுறைகளை எதிர்க்கின்ற எந்தத் தலைவருக்கும் சாதகமற்ற சூழ்நிலையே நிலவியது. அரசியலில் படிப்படியான மாற்றத்திலும், தங்களின் அனுபவ முதிர்ச்சியிலும் பெரும் நம்பிக்கைகொண்டு செயல்பட்ட காங்கிரசு மிதவாதத் தலைவர்களின் போக்கைக் காங்கிரசு இடதுசாரியினர் பொறுத்துக் கொள்ளவிரும்பவில்லை. அதுமட்டுமன்று; நாட்டுப்பற்று என்பது காங்கிரசுக் கட்சியின் உறுப்பினர்களாக உள்ளவர்களுக்கு மட்டுமே சொந்தமானது என்று சில காங்கிரசுத் தலைவர்கள் கருதினார்கள். ஆகவே வட்டமேசை மாநாட்டின்போது பிரிட்டிஷ் அரசுக்கு ஒத்துழைத்தவர்களை உதவாக்கரைகள், ஒட்டுண்ணிகள், ஆங்கிலப் பேரரசின் குற்றேவலர்கள் என்றும், இந்திய நாட்டின் நலன்களுக்கு எதிரான துரோகிகள் என்றும் பழி தூற்றினர். இதைவிட இழிந்த தன்மையில், சுபாஷ் சந்திரபோஸ், "பிரிட்டிஷ் அரசின் அருளால் அம்பேத்கர் மீது தலைமைப் பதவி ஏன் திணிக்கப்பட்டிருக்கிறது தெரியுமா? இந்தியத் தேசியத் தலைவர்களைத் திட்டுவதற்காகத்தான்'[46] என்று கூறியிருக்கிறார். காங்கிரசாரால் ஏற்கெனவே கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளைவிட சுபாஷ் சந்திரபோசால் சாட்டப்பட்ட அர்த்தமற்ற குற்றச்சாட்டு சற்றும் குறைவான தன்மை கொண்டதல்ல. பிரிட்டிஷ் ஆட்சி மற்றும் முஸ்லீம்களைப் பொறுத்த விஷயங்களில் காங்கிரசுக்காரர்கள் அகிம்சைக் கொள்கையைப் பின்பற்றுவதும் மற்ற இந்தியக் கட்சியினரிடம் மாறாத பகையுணர்ச்சியுடனும் வன்முறையுடனும் நடந்து கொள்வதும் காங்கிரசுக்காரர்களுக்கே உரிய தனிக் குணமாகிவிட்டது. ஆகவே காங்கிரசுப் பத்திரிகைகள் தங்கள் சினத்தையோ பழித்தலையோ முஸ்லீம் பிரதிநிதிகளிடம் ஒருபோதும் காட்டியதேயில்லை; மூஞ்சே, சாப்ரு, ஜெயகர் முதலியவர்களிடம் சிலபோது சினத்தைக் காட்டின; ஆனால் எப்பொழுதும் அம்பேத்கர் மீது மட்டும் சீறிப்பாய்ந்தன. அவரை இழிவுபடுத்த முனைந்தன. 1930இல் இருந்த இத்தகைய சூழ்நிலையை வட்டமேசை மாநாடு நடைபெறுவதற்குமுன் சர் தேஜ் பகதூர் சாப்ருவும், டாக்டர் மூஞ்சேவும் நேரில் பார்ப்பது போல் விளக்கினார்கள்.

கடற்பயணத்தின்போது அம்பேத்கருக்கு ஒரு சங்கடமான நிலை ஏற்பட்டது. அவர் எடுத்துச்சென்ற இரும்புப்பெட்டிகளின்

சாவிகளை மறதியாக வீட்டிலேயே வைத்துவிட்டிருந்தார். ஆகவே ஒரு பெட்டியை உடைத்துத்தான் மாற்று உடையை எடுக்க நேரிட்டது. கடல் கொந்தளிப்பாக இல்லாமல் இருந்தது. 1930 அக்டோபர் 18ஆம் நாள் அம்பேத்கர் இலண்டனை அடைந்ததும் எண் 8, செஸ்டர் பீல்டு தோட்டம், மேஃபேர், இலண்டன் டபில்யூ. ஐ. என்ற முகவரியில் தற்காலிகமாகத் தங்கினார். தாமஸ் குக் அண்ட் சன்ஸ், பெர்க்கினி தெரு, இலண்டன் டபில்யூ. ஐ. என்ற முகவரிக்குத் தனக்குக் கடிதம் எழுதுமாறு அவருடைய தோழர்களுக்குத் தெரிவித்தார். பெட்டியின் சாவிகளும் மற்ற பொருட்களும் அக்டோபர் 28ஆம் நாள் இலண்டனில் அம்பேத்கர் கைக்குக் கிடைத்தன.

தீண்டப்படாதமக்களின் பிரச்சினையைப் பரிவுடன் பார்க்கின்ற போக்கு இங்கிலாந்தில் நிலவியதை அம்பேத்கர் கண்டறிந்தார். இலண்டனை அடைந்ததும் தீண்டப்படாத வகுப்பு மக்களின் பிரச்சினை தொடர்பாக அரசியல் கட்சிகளின் தலைவர்களோடு தொடர்புகொண்டார். இந்தியாவில் பம்பாய் மாகாணச் சட்டசபைக் குப் புதியதாக நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் எவரெவர் என்பதுபற்றியும் சௌதார் குளம் வழக்கில் நீதிமன்றம் அளித்த தீர்ப்புபற்றியும் தந்திமூலம் அறிந்திட அம்பேத்கர் மிகுந்த ஆவலாய் இருந்தார்.

IV

எல்லோரும் ஆவலுடன் எதிர்நோக்கிய வட்டமேசை மாநாடு 1930 நவம்பர் 12ஆம் நாள் தொடங்கியது. வட்டமேசை மாநாடு தொடங்கவிருப்பதுபற்றிப் பிரிட்டிஷ் பொதுமக்கள் மிகுந்த ஆர்வம் காட்டினார்கள். அம்மாநாடு நடைபெற்ற பிரபுக்கள் சபைக்குச் செல்லும் பாட்டை நெடுகிலும் பார்வையாளர்கள் திரளாகக் குழுமி நின்றனர். மேன்மைமிகு பிரிட்டிஷ் பேரரசர் வட்டமேசை மாநாட்டிற்கு வருகை தந்தார். மாநாட்டைத் தொடக்கி வைத்து அவர் உரையாற்றினார்: "இறையாண்மை மிக்க இந்த அரசு இந்திய மண்ணில் வரலாற்றுச் சிறப்புமிக்க கூட்டங்களைப் பல நேரங்களில் கூட்டியுள்ளது. இப்போது நீங்கள் கூடியிருப்பது போன்று பிரிட்டிஷ் மற்றும் இந்திய அரசியல் வல்லுநர்களும் இந்தியச் சிற்றரசர்களும் இப்படி ஒரே இடத்தில் கூடிய நிகழ்ச்சி இதற்கு முன்னர் நடந்ததில்லை. ஒரு வட்டமான மேசையைச் சுற்றி நீங்கள் கூடியிருப்பதன் நோக்கம் இந்தியாவின் எதிர்கால அரசியலமைப்பு முறையைப்பற்றி விவாதிக்கவும், உடன்பாடு

காணவும்தான். நீங்கள் எடுக்கின்ற முடிவு எனது பாராளுமன்றத்திற்கு வழிகாட்டியாக அமையும்; இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் உருவாக்கப்படுவதற்கு அடித்தளமாக விளங்கும்'' என்று பேரரசர் தன் தொடக்க உரையில் குறிப்பிட்டார். இந்திய நாட்டிற்காகத் தொண்டு செய்தவர்கள் என்று உங்களுடைய பெயர்கள் வரலாற்றில் இடம் பெறும் என்று தான் நம்புவதாகப் பேரரசர் அவருடைய பேச்சின் இறுதியில் குறிப்பிட்டார். பேரரசர் அவையிலிருந்து சென்றபின், ராம்சே மாக்டொனால்டு வட்டமேசை மாநாட்டின் தலைவராக ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தொழிற்கட்சியின் தலைவரும் 'இந்திய அரசு' (The Government of India) என்ற நூலை எழுதியவருமான ராம்சே மாக்டொனால்டு இந்தியாவின் பிரச்சினையைத் தீர்த்திட பிரிட்டன் உறுதிபூண்டுள்ளது என்றார். புதிய வரலாறு உருவாக்கப்படும் காலக்கட்டத்தில் நீங்கள் இருக்கிறீர்கள் எனக் குறிப்பிட்டார்.

வட்டமேசை மாநாடு அரசியலமைப்புச் சட்டத்தை வரைவதற்காக அமைக்கப்பட்ட அரசியல் சட்டவரைவு சபை அன்று. இந்திய மற்றும் பிரிட்டானிய அரசியல் வல்லுநர்கள் பங்கேற்ற குழு இது! வாக்கெடுப்பின்மூலம் இவர்கள் எதையும் தீர்மானிக்க இயலாது. வட்டமேசை மாநாட்டின்முன் கொண்டுவரப்படும் முக்கியமான பிரச்சினைகள்பற்றி இதில் கலந்துகொண்டுள்ளவர்களின் கருத்தைத் தெள்ளத்தெளிய அறிந்து, உறுதிப்படுத்திக் குறித்துக் கொள்வதே இதன் பணியாகும்.

அதன்பின் வட்டமேசை மாநாடு நடைபெறும் இடம் செயின்ட் ஜேம்ஸ் அரண்மனைக்கு மாற்றப்பட்டது. அவ்விடத்தில் நவம்பர் 17 முதல் 21 வரை நடைபெற்ற பொதுவிவாதத்தின் போது சாப்ரு, ஜெயகர், மூஞ்சே, ஜின்னா, பிக்கனீர் சிற்றரசர், அம்பேத்கர் முதலானோர் உள்ளத்தைத் தொடும் உணர்ச்சிமிக்க உரைகளை ஆற்றினர். வட்டமேசை மாநாட்டிற்கு வழிகாட்டியாக, நண்பராக, தத்துவ ஆசானாக விளங்கிய சர் தேஜ் பகதூர் சாப்ரு தன் தெள்ளிய நடையிலான - உள்ளத்தைக் கவரும் பேச்சில், "பிரிட்டிஷ் காமன்வெல்த்தில் உள்ள மூன்று நாடுகளுக்கு இருப்பதைப் போன்ற சரி சமமான சம உரிமையை இந்தியா கோருகிறது. அதை அடைந்திட இந்தியா உறுதி பூண்டுள்ளது. அச்சமஉரிமை ஒரு பொறுப்பு வாய்ந்த அரசினை அளிப்பதுடன், வெகுமக்களின் விருப்பங்களுக்கு ஏற்பச் செயல்படும் அரசாகவும் அது இருக்கும்'' எனக் குறிப்பிட்டார்.

பிக்கனீர் சிற்றரசர் தன்னையும் தன் அரசாட்சியையும் பிரிட்டிஷ் இந்தியாவின் விழுமிய விருப்பங்களோடு அடையாளங் காட்டிக் கொண்டார். 'பிரிட்டிஷ் இந்தியாவின் சுயாட்சி பெற்ற கூட்டாட்சியுடன் இந்தியச் சிற்றரசர்கள் அவர்களாகவே முன்வந்து இணைவார்கள்' என அறிவித்தார். அந்த அறிவிப்பு அனைவரையும் வியப்புறச் செய்தது. அக்கூட்டாட்சி அறிவிப்பைப் பாட்டியாலா மன்னரும், போபால் நவாப்பும் ஆதரித்தனர்.

அனைத்திந்தியக் கூட்டாட்சி அமைவதை முஸ்லீம் உறுப்பினர் கள் வரவேற்றனர். ஆனால் பிரிட்டிஷ் இந்தியாவில் உள்ள மற்ற மாகாணங்களுக்கு இருப்பது போன்ற ஒரு தகுதியை வட மேற்கு எல்லைப்புற மாகாணத்திற்கு வழங்கிட வேண்டும் என்று மிகத் தீவிரமாகக் கோரினார்கள். சிந்து மாகாணத்தைத் தனியாகப் பிரிக்க வேண்டும் என்று கேட்டனர்.

எம்.ஆர். ஜெயகர் அவருடைய ஆழ்ந்த, அருவிபோல் கொட்டிய இனிய பேச்சில் இந்தியாவுக்கு டொமினியன் அந்தஸ்து அளிக்கப்பட வேண்டும் எனக் கேட்டார். "இந்தியாவிற்கு இன்றே டொமினியன் அந்தஸ்தை அளித்துவிட்டால் அடுத்த சில மாதங்களி லேயே சுதந்திரம் வேண்டுமென்ற கூச்சல் தானே அடங்கிவிடும். அவ்வாறில்லாமல் இந்த வட்டமேசை மாநாட்டிலிருந்து நாங்கள் வெறுங்கையுடன் திரும்பிச்செல்ல நேர்ந்தால், சுதந்திரக் கோரிக்கை யானது பன்மடங்கு பெருகிப் பேரழுத்தமுடன் ஒலிக்கும்" என மேலும் கூறினார்.

பாட்டியாலா மன்னரை அடுத்துப் பேசிய டாக்டர் மூஞ்சே, பீல் பிரபுவின் வாதங்கள் அனைத்தையும் மறுத்தார். பிரிட்டிஷ் அரசு இந்தியரின் கப்பல் போக்குவரத்து, பருத்தித் தொழில் மற்றும் பிற தொழில்களை எவ்வாறு நசுக்கியது என்பதை எடுத்துரைத்தார். நாட்டு விடுதலைக்கான ஒத்துழையாமை இயக்கத்தைத் தன் படையைக் காட்டி அடக்கிவிடலாம் என்று பிரிட்டிஷ் அரசு நம்புவது மிகவும் தவறானதாகும். ஏனெனில் அந்தக் காலம் மலையேறிவிட்டது என்று மூஞ்சே பேசினார்.

புதிய அரசியல் சட்டத்தில் தொழிலாளர்களுக்கு அதிக உரிமைகள் அளிக்கப்பட வேண்டுமென்று என்.எம். ஜோஷி கோரினார். கூட்டாட்சிக் கோட்பாட்டின் அடிப்படையில் எதிர்கால அரசியல் அமைப்புச் சட்டம் அமையவேண்டும் எனச் சர் மிர்சா கூறினார். எழுதப்படவுள்ள அரசியல் சட்டம் மக்கள் விரும்பி

ஏற்கத்தக்க வகையில் இருக்க வேண்டும் என்று சர். சி.பி. இராம சாமி அய்யர் கருத்துரைத்தார். அதனை அடுத்து இரண்டு மூன்று பேர் பேசிய பிறகு உறுதியான, தடுமாற்றம் என்பதையே அறியாத, தன்னம்பிக்கை மிகுந்த ஒருவர் ஒளிவீசும் கண்களுடன் பேசிட எழுந்தார். அவர் அதிகம் பேசாத இயல்பினர். அவர் மிகவும் தாழ்ந்த நிலையிலிருந்து தன் அறிவாற்றலால், உள்ள உரனால் மட்டுமே உயர்நிலை எய்தியவர். வட்டமேசை மாநாட் டிற்கு வந்திருந்த இளவரசர்கள், அரசியல் மேதைகள், சட்ட வல்லுநர்கள், பேரரசுகளையும் சிற்றரசுகளையும் குறுநில மன்னர்க ளையும் பல்வேறு நிறுவனங்களையும், கொள்கைகளையும் பிரதிநிதித்துவப்படுத்திய அறிஞர்கள் ஆகியோர் நடுவே அவர் அமர்ந்திருந்தார். இந்தியாவில் ஏழையருள் ஏழைகளாக, அரைப்பட் டினியுடன் அரையாடையுடன் ஊமையராக வாழ்ந்து கொண்டிருப் பவர்களின் பிரதிநிதியாக அவர் வந்திருந்தார். அவர் இப்போது என்ன பேசுவார்? அதை எவ்வாறு எடுத்துரைப்பார்? அவர் படிப்பதற்காக உதவிய அரசரும் அந்த அவையில் இருந்தார். அக்குழுவில் அவருக்குப் பள்ளியில் பாடம் பயிற்றுவித்த ஆசிரியர் ஒருவரும் இருந்தார். பேசுவதற்காக எழுந்து நின்ற அவர்பால் அனைவரின் கண்களும் நிலைகொண்டிருந்தன. அவர் தெளிந்த அறிவினர். எதைச் சொல்லவேண்டும் எப்படிப் பேசவேண்டும் என்பதை அவர் நன்கறிவார். பிரிட்டிஷ் பிரதமர் மாக்டொனால்டு மற்றும் ஜோஷி ஆகிய இருவரைத் தவிர அங்குக் கூடியிருந்த எவரும் கொல்லும் வறுமையின் கொடிய வடிவங்களை அனுபவத் தறிந்ததில்லை. வட்டமேசை மாநாட்டிற்காக வந்திருந்தவர்களுள் புலவர்களும் இலக்கியவாணர்களும் இருந்தனர்; ஆனால் பல்கலைக் கழகத்தில் முறையாகப் பயின்று அறிவியலில் டாக்டர் பட்டம் பெற்றவர் அவர் ஒருவரே. அவர்தான் இந்தியாவின் நசுக்கப்பட்ட மக்களின் தலைவரான டாக்டர் அம்பேத்கர்.

பிரிட்டிஷ் இந்தியாவின் மொத்த மக்கள் தொகையில் அய்ந்தில் ஒரு பகுதியினராக இருப்பவர்களின் கருத்தைத் தான் பிரதிநிதித்து வப்படுத்துவதாக வட்டமேசை மாநாட்டில் எடுத்த எடுப்பிலேயே அம்பேத்கர் அறிவித்தார். இங்கிலாந்தின், பிரான்சு நாட்டின் மக்கள் தொகைக்குச் சமமான எண்ணிக்கை கொண்ட அம்மக்கள் அடிமைகளைவிடத் தாழ்ந்த நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தனர் என்பதையும் அவர் குறிப்பிட்டார். இந்தியாவில் உள்ள தீண்டப் படாத வகுப்பு மக்கள் இப்போது இருக்கின்ற அரசை மாற்றிட விரும்புகின்றனர்; அதற்குப் பதிலாக மக்களால் தேர்ந்தெடுக்கப்

பட்ட, மக்களுக்காக நடத்தப்படுகின்ற, மக்களால் ஆளப்படுகின்ற ஓர் அரசு அமையவேண்டும் என்று விரும்புகின்றனர் என அம்பேத்கர் அறிவித்தார். இதைக் கேட்டு அனைவரும் வியப்பில் ஆழ்ந்தனர். இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சிபற்றித் தீண்டப்படாத வர்கள் கொண்டிருந்த போக்கில் ஏற்பட்டுள்ள இப்புதிய மாற்றம் வியப்பளிக்கக்கூடியதுதான்; ஆனால் பெருஞ்சிறப்புக்குரிய செய லாகும் என்று அம்பேத்கர் கூறினார். அவர் மேற்கொண்ட நிலைப்பாட்டின் நேர்மையை நிலைநிறுத்திட, தன் குரலை உயர்த்தி, கண்களில் ஒளி மின்னிட, இப்போதுள்ள எங்கள் நிலையையும் ஆங்கிலேயர் ஆட்சிக்கு முன்னைய எங்களின் அவல நிலையையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது முன்னேறுவதற்குப் பதிலாக முன்னே றுவதற்கான நாள் குறிப்பதிலேயே நாங்கள் நாட்களைக் கழித்துவிட் டோம் என்பதைக் கண்டறிய முடிகிறது. ஆங்கிலேயர் வருவதற்கு முன் தீண்டாமை காரணமாக நாங்கள் வெறுத்தொதுக்கத்தக்க நிலையில் வைக்கப்பட்டிருந்தோம். இந்த நிலையை அகற்றிட ஆங்கிலேயர் ஆட்சி ஏதேனும் செய்ததா? பிரிட்டானியரின் வருகைக்கு முன் கிராமங்களில் கிணறுகளில் நாங்கள் தண்ணீர் எடுக்க முடியாது. கிணற்றில் நீர் எடுக்கும் உரிமையைப் பிரிட்டிஷ் அரசு எமக்குப் பெற்றுத் தந்ததா? ஆங்கிலேயர் ஆட்சி அமைவதற்கு முன் நாங்கள் கோயிலுக்குள் நுழைய முடியாது? இப்போது நாங்கள் நுழையும் நிலை வந்துவிட்டதா? பிரிட்டிஷ் ஆட்சிக்கு முன்பு நாங்கள் காவல்துறையில் சேர்ந்து பணியாற்றிடத் தடை இருந்தது. இப்போது பிரிட்டிஷ் அரசு எங்களைக் காவல் துறையில் சேர்த்துக்கொள்கிறதா? பிரிட்டிஷ் ஆட்சிக்கு முன்பு இராணுவத்தில் பணிபுரிய நாங்கள் அனுமதிக்கப்படவில்லை. இப்போது இராணுவப் பணி எமக்குத் திறந்துவிடப்பட்டுள்ளதா? இவற்றில் எந்தவொரு கேள்விக்கும் இந்த அவையினர் ஆம் என்று பதில் சொல்ல முடியாத நிலைதானே இருக்கிறது! ஆறாத புண்ணாகவே இன்னும் எங்கள் இன்னல்கள் நீடிக்கின்றன; அவை ஆற்றப்படாமல் அப்படியே இருக்கின்றன. ஆனால் 150 ஆண்டுக் காலப் பிரிட்டானியர் ஆட்சி உருண்டோடிவிட்டது'' என்று உணர்வு மேலிடப் பேசினார்.

''இப்படிப்பட்ட அரசாங்கத்தால் யாருக்கு என்ன நன்மை?'' என்று அம்பேத்கர் வட்டமேசை மாநாட்டினரை நோக்கிக் கேட்டார். அவ்வாறு அம்பேத்கர் கேட்டதும் பிரிட்டிஷ் பிரதிநிதிகள் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர். இந்தியப் பிரதிநிதிகளை யும் அம்பேத்கரின் கேள்வி ஒரு கலக்குக் கலக்கியது. அம்பேத்கர்



மூன்றாவது வட்டமேசை மாநாட்டில் கலந்து கொள்ள அம்பேத்கர் சென்றிருந்தபோது இலண்டனில் மக்களவையின் முன் அம்பேத்கர், முகம்மது ஜஃப்ருல்லாகான்

மேலும் தொடர்ந்து பேசினார். ''வாழ்க்கையை நடத்துவதற்குப் போதுமான ஊதியத்தையோ வேலைசெய்யும் இடத்தில் நல்ல வசதியையோ தொழிலாளர்களுக்கு வழங்கிட முதலாளிகள் மறுக்கிறார்கள் என்பதை அரசு நன்கறியும். நிலக்கிழார்கள் தங்களிடம் வேலை செய்யும் வெகுமக்களைக் கசக்கிப் பிழிகிறார்கள் என்பதும் அரசுக்குத் தெரியும். ஆயினும் பல ஆண்டுகளாக நசுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை நலிவடையச் செய்துவரும் இந்தச் சமூகத் தீமைகளை அரசு களையவில்லை. இத்தீமைகளைத் துடைத்தெறிவதற்குத் தேவையான சட்ட அதிகாரங்களை ஆங்கில அரசு பெற்றிருந்த போதிலும் தற்போதுள்ள சமூக இயல் சட்டத்தையோ, பொருளாதார வாழ்நிலையையோ மாற்றவில்லை. தான் தலையிட்டால் எதிர்ப்பு அதிகமாகுமோ என அரசு அஞ்சுகிறது. சீரிய வகையில் நாட்டிற்கு நலம் சேர்க்கும் செயல்களில் தங்கள் முழுவிசுவாசத்தையும் செலுத்தக்கூடியவர்களைக் கொண்டதாகவுள்ள ஓர் அரசை அமைக்க விரும்புகின்றோம். மக்கள் எந்த அளவிற்கு அடங்கிக்கிடப்பார்கள் - அவர்கள் எப்போது பொறுமை இழந்து எதிர்ப்பார்கள் என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளக் கூடியவர்கள் ஆட்சிபுரியும் அரசாக அது இருக்க வேண்டும். நீதி வழிப்பட்டதாகவும், இக்கணமே தீர்வு செய்யப்பட வேண்டியதான சமூகப் பொருளியல் விதிகளை மாற்றுகின்ற ஆற்றலுடைய அரசாகவும் அது இருந்திட வேண்டும்'' என்று அம்பேத்கர் கூறினார்.

டொமினியன் அந்தஸ்து கோரிக்கையை அம்பேத்கர் ஆதரித்தார். புதிய அரசியல் சட்டத்தில் அரசியல் அதிகாரம் தனித்தன்மையான வகையில் உருவாக்கப்பட்டாலன்றித் தீண்டப்படாத வகுப்பு மக்களுக்கு அந்த அரசியல் சட்டத்தில் உரிமைகள் கிடைக்காது என்று தான் அய்யுறுவதாக அம்பேத்கர் கூறினார். அரசியல் சட்டத்தை உருவாக்கும்போது ஒரு செய்தியைக் கவனத்திற் கொள்ளவேண்டும். அதாவது சாதிப் படிக்கட்டு மேலே செல்லச் செல்ல மதிப்பு உயர்கிறது; கீழே போகப்போகத் தாழ்ச்சி அதிகமாகிறது. இந்தியச் சமூகத்தில் சாதிப்படி நிலை இவ்வாறு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதனால் சமத்துவ உணர்ச்சியும் சகோதரத்துவ எண்ணமும் இதில் வளருவதற்கே வாய்ப்பில்லை. உயர் சாதிப்படி நிலைகளிலிருந்து தோன்றிய அறிவாளிக் கூட்டம்தான் இங்கே அரசியல் இயக்கத்தை நடத்திக்கொண்டிருக்கிறது. இவர்கள் தங்கள் குறுகிய சாதிக் கண்ணோட்டத்தைக் கைவிடவேயில்லை. ஆகவே, ''எங்களுடைய துன்பங்களை

எங்களைப் போன்று செம்மையாக எவராலும் துடைக்க முடியாது. அரசியல் அதிகாரம் எங்கள் கைக்கு வராதவரையில் அவற்றை எங்களால் அகற்றிட முடியாது. தீண்டப்படாத வகுப்பு மக்கள் இவற்றை நீக்குகின்ற அரிய செயலைச் செய்வதற்கான காலம் எப்போது வரும் என நீண்ட நெடுங்காலமாகக் காத்துக்கிடந்துவிட்டார்கள்'' என்று அம்பேத்கர் பேசினார்.

இந்திய அரசியலில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டை நிலையைப் பற்றி அம்பேத்கர் குறிப்பிடும்போது, அரசியல் தத்துவத்தில் சிறந்த ஆசான் என்று அவர் கருதிய எட்மண்ட் பர்க், ''வன்முறையைப் பயன்படுத்துவது என்பது ஓர் இடைக்கால ஏற்பாடாக மட்டுமே இருக்க வேண்டும்'' எனக் கூறியிருப்பதை மேற்கோள் காட்டினார். அவருடைய வட்டமேசை மாநாட்டு உரை அறிவு நுட்பம் தேங்கியதாக இருந்தது. தன் பேச்சை முடிக்கும்போது பிரிட்டிஷ் அரசுக்கும், வட்டமேசை மாநாட்டில் தத்தம் கருத்தை நிலைநாட்டிட முனைபவர்களுக்கும் அம்பேத்கர் ஓர் எச்சரிக்கை விடுத்தார். ''தற்போது நாடு இருக்கின்ற நிலையில் பெரும்பான்மை மக்களால் ஏற்றுக்கொள்ளப்படாத எந்தவொரு அரசியல் சட்டமும் செம்மையாகச் செயல்படாது என்பதைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லையோ என்று நான் அஞ்சுகின்றேன். அரசியல் சட்டம் இயற்றுவதற்கு நீங்கள் முன் வந்திருக்க வேண்டிய காலமும் அதை இந்தியர் ஏற்றுக்கொண்டிருக்கக்கூடிய நிலைமையும் முடிந்து போய்விட்டது. அக்காலம் இனி திரும்பி வராது. ஆகவே புதிய அரசியல் சட்டம் நன்கு செயல்படவேண்டுமானால், அரசியல் சட்டத்தின் கட்டளைக் கல்லாக மக்களின் விருப்பங்கள் இடம் பெற வழி காணுங்கள்; உங்களின் வாதப் பிரதிவாதங்களைப் பெரிதுபடுத்தாதீர்கள். இத்தன்மையில் தான் புதிய அரசியல் சட்டத்தை நீங்கள் உருவாக்க வேண்டும்'[47] என்று அம்பேத்கர் உறுதிப்பட உரைத்தார்.

அம்பேத்கரின் அஞ்சாமை செறிந்த துணிச்சல் மிக்க திறனாய்வு நிறைந்த வட்டமேசை மாநாட்டுப் பேச்சு வியத்தகு விளைவை ஏற்படுத்தியது. ஒளிவு மறைவு இல்லாமல், அச்சமற்ற தன்மையில், தெளிவாக, உண்மைகளை அம்பேத்கர் எடுத்துரைத்த பாங்கு வட்டமேசை மாநாட்டுப் பிரதிநிதிகளை மிகவும் கவர்ந்தது. பிரிட்டிஷ் பிரதமரின் கவனத்தையும் ஈர்த்தது. அவர்தம் அறிவார்ந்த உரையை மாநாட்டினர் அனைவரும் பாராட்டினர். 'தி இண்டியன் டெய்லி மெயில்' (The Indian Daily Mail) நாளேடு அம்மாநாட்டில் நிகழ்த்தப்பட்ட மிகச் சிறந்த உரைகளில் அம்பேத்கருடைய

பேச்சும் ஒன்றாகும் என்று குறிப்பிட்டு எழுதியது. வட்டமேசை மாநாட்டில் அமர்ந்திருந்தவர்களுள் ஒருவர் அம்பேத்கரின் உரையைக் கேட்டுப் பெரிதும் மகிழ்ந்தார். வியப்பும் மனநிறைவும், பாராட்டுதலும் மனத்தில் பொங்கிட அவர் தன் மாளிகைக்குத் திரும்பினார். அம்பேத்கரின் முன்னேற்றத்திற்காக அவர்கள் எடுத்த முயற்சிகளும் செலவிட்ட பணமும் பெரும் பயனை விளைத்துள்ளன என்று கண்களில் மகிழ்ச்சிக் கண்ணீர் மல்கிடத் தன் அரசியிடம் கூறினார். அது அரும்பெரும் சாதனை; புகழ்மிக்க வெற்றி! இவ்வாறு வியந்து மகிழ்ந்து பாராட்டியவர் வேறு எவருமிலர் - மேன்மை மிகு பரோடா மன்னரே அவர்.

பரோடா மன்னர் இலண்டனில் அம்பேத்கருக்கு ஒரு விருந்தளித்தார். தனக்கு மிக நெருங்கியவர்களை மட்டுமே அவ்விருந்திற்கு அழைத்திருந்தார். பரோடா மன்னரான கெய்க்வாடும் அம்பேத்கரும் பல ஆண்டுகள் மன வேறுபாடு கொண்ட நிலையில் இருந்துவிட்டு, நாடகத்தில் வரும் ஒரு இன்பியல் முடிவுபோல், இருவரும் வட்டமேசை மாநாட்டில் சந்தித்தது காலத்தின் விளங்காத புதிரேயாகும்.

அம்பேத்கரின் கருத்துவளஞ்செறிந்த உரை இலண்டன் பத்திரிக்கைகளின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்தது. ஆங்கில மொழி நாளேடுகளும் பத்திரிக்கையாளர்களும் தீண்டப்படாத இத்தலைவர் பால் தங்கள் கவனத்தைச் செலுத்தினார்கள். ஆங்கில நாட்டின் அரசியல் வல்லுநர்களான சைடன் ஹாம் பிரபு, ஓ'டையர் மற்றும் சிலரும் அம்பேத்கரின் நாகபுரி மாநாட்டின் பேச்சினைக் கடுமையாகக் கண்டித்து 'ஸ்பெக்டேட்டர்' பத்திரிகையில் முன்பு எழுதினார்கள். ஆனால் இப்பொழுதோ அம்பேத்கர் ஒரு சிறந்த தேசியவாதி என்பதை அவர்கள் முழுமனத்துடன் ஏற்றுக்கொண்டனர். அதனால் இந்தியாவின் புரட்சிகரத் தலைவர்களுள் அம்பேத்கரும் ஒருவர் என்று அவர்கள் தங்களுக்குள் கூறிக்கொண்டனர். பிரிட்டிஷ் அரசியல் அறிஞர்களில் சிலர் ஏ.பி. லத்தேயிடம் அம்பேத்கர் இந்தியப் புரட்சிகர முகாமைச் சேர்ந்தவரா என்று இரகசியமாக உசாவினர். பிரிட்டிஷ் அரசியல்வாதிகள் அம்பேத்கரைப்பற்றி இத்தன்மையில் விசாரிப்பதில் வியப்பதற்கொன்றுமில்லை. 1917ஆம் ஆண்டு அமெரிக்காவிலிருந்து அம்பேத்கர் இங்கிலாந்திற்கு வந்திறங்கியபோது பிரிட்டிஷ் உளவுத் துறையினரால் முழுமையாகச் சோதனை செய்யப்பட்டது இங்கே நினைவுகூரத் தக்கதாகும்.

மாநாட்டின் தொடக்கக்கட்டத்தில் முற்போக்குச் சிந்தனை கொண்ட தலைவர்களான சாப்ரு, சாஸ்திரி, செத்தல் வாடு ஆகியோர் இந்து-முஸ்லிம் பிரச்சினையில் முசுலீம் பிரதிநிதிகளுடன் ஓர் உடன்பாடு காண முயன்றனர். இந்துப் பிரதிநிதிகள் கவாஸ்ஜி ஜகாங்கிர் இல்லத்தில் கூடி முசுலீம் பிரதிநிதிகளுடன் ஓர் உடன்பாடு காண்பதற்கான வாய்ப்புகள்பற்றி ஆராய்ந்தனர். மூஞ்சேவும், ஜெயகரும் அத்தகைய உடன்பாடு டொமினியன் அந்தஸ்து அளிக்கப்பட்ட பிறகுதான் சாத்தியப்படும் என்று கருத்துரைத்தனர். மிதவாதத் தலைவர்களான ஜெயகர், மூஞ்சே, அம்பேத்கர் முதலானோர் போபாலின் நவாப், ஆகா கான், ஜின்னா ஆகியோருடன் மற்றவர்களோடும் போபால் நவாப் தங்கியிருந்த இடத்தில் இதுபற்றிக் கூடிப்பேசினார்கள். சிந்துப் பகுதி தனி மாகாணமாகப் பிரியவேண்டும் என்ற முசுலீம்களின் கோரிக்கையை மூஞ்சேவும் ஜெயகரும் முற்றாக எதிர்த்ததால் அப் பேச்சுவார்த்தை முறிந்தது. முசுலீம் தலைவர்கள் இசுலாமியர் சிறுபான்மையினராக இருந்த மாகாணங்களில் தங்களுக்கு எத் தன்மையில் இட ஒதுக்கீடு கேட்டார்களோ, அதே தன்மையில் முசுலீம்கள் பெரும்பான்மை யினராக உள்ள மாகாணங்களில் இந்துக்களுக்கும் சீக்கியர்களுக்கும் இட ஒதுக்கீடு கேட்கப்பட்டதை ஏற்றிட மறுத்தமையும் அப்பேச்சு முறிவடைந்ததற்கு மற்றொரு காரணமாகும்.

வட்டமேசை மாநாட்டில் பொது விவாதம் முடிந்தபின், ஒன்பது துணைக்குழுக்கள் அமைக்கப்பட்டன. கூட்டாட்சி அமைப்புக்கான துணைக்குழு ஒன்றில் தவிர மற்ற எல்லாத் துணைக்குழுக்களிலும் டாக்டர் அம்பேத்கர் உறுப்பினராக இடம் பெற்றிருந்தார். சிறுபான்மையினர் துணைக்குழு, மாகாணங்கள் துணைக்குழு, அரசு ஊழியத் துணைக்குழு ஆகியவற்றில் இந்திய மற்றும் பிரிட்டனின் தலைசிறந்த அறிஞர்களுடன் அம்பேத்கர் பணியாற்றினார். மாகா ணங்கள் துணைக்குழுவில் அம்பேத்கர் சிந்தாமணியின் கருத்தை ஆதரித்துப் பேசும்போது, இந்தியாவில் எந்தவொரு மாகாணத்தி லும் சட்டமன்ற மேலவையை ஏற்படுத்துவது என்பது தேவையற் றதும் விரும்பத்தகாததும் ஆகும் என்று கூறினார்.

இராணுவத் துணைக்குழுவின் அறிக்கை மீதான விவாதத்தின் போது இந்திய இராணுவத்திற்கு ஆட்களைத் தேர்ந்தெடுக்கும் போது திறமை மற்ற தகுதிகளின் அடிப்படையில் எல்லாப் பிரிவு இந்தியர்களும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று கோரினார்.

அம்பேத்கர் அவருடைய குறிக்கோளை அடைவதற்காக ஒரு முக்கியமான பணியைச் செய்தார். தீண்டப்படாத வகுப்பு மக்களின்

கலாச்சாரம், மதம், பொருளாதாரம், முதலியவற்றைப் பாதுகாப்பதற்கான அடிப்படை உரிமைகள் ஆவணத்தை அம்பேத்கர் தயாரித்தார். அந்தத் திட்டத்தைக் கடும் உழைப்பை நல்கித் தேர்ந்த மதிநுட்பத்துடன் தயாரித்து, இந்தியாவின் எதிர்கால அரசியல் சட்டத்தில் சேர்ப்பதற்காகச் சிறுபான்மைத் துணைக்குழுவின் முன் சமர்ப்பித்தார். 'சுயாட்சி பெற்ற இந்தியாவிற்கான எதிர்கால அரசியல் சட்டத்தில் தீண்டப்படாத வகுப்பு மக்களின் பாதுகாப்பிற்கான ஓர் அரசியல் காப்புத் திட்டம்' என்று அத்திட்டதிற்குத் தலைப்பிட்டிருந்தார்.

அரசின் கீழ் உள்ள மற்ற குடி மக்களுக்கு வழங்கப்பட்டிருப்பது போன்றே தீண்டப்படாத வகுப்பு மக்களுக்கும் குடியுரிமை அளிக்கப்பட வேண்டுமென்று அடிப்படை உரிமைகள் அறிக்கையில் கூறியிருந்தார். தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டும்; தீண்டப்படாத வகுப்பு மக்களை அடிமைப்படுத்திட, சட்டப் பாதுகாப்புடன் இருக்கின்ற தண்டனைகள், தடைகள், இயலாமைகள், சட்டத்தில் வேற்றுமை பாராட்டல் ஆகிய அனைத்தும் அகற்றப்பட வேண்டும் என்று அந்த அறிக்கையில் வலியுறுத்தினார். ''சட்டசபைகளில் போதிய பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும்; தனி வாக்காளர் தொகுதி மூலம் தங்கள் பிரதிநிதிகளைத் தாங்களே தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டும். அரசு ஊழியத்தில் மக்கள் எண்ணிக்கைக்கு ஏற்பப் பிரதிநிதித்துவம் தரப்படவேண்டும்; அரசு வேலைக்கு ஆட்களைத் தேர்வு செய்து அவர்களின் பணியைக் கட்டுப்படுத்தும் தேர்வாணைக் குழுவில் தங்களுக்குப் போதிய பிரதிநிதித்துவம் தரப்படவேண்டும்'' என்று அந்த அறிக்கையில் கோரியிருந்தார்.

அடிப்படை உரிமைகள் அறிக்கையின் படிகளை இந்தியாவில் உள்ள தன் தோழர்களுக்கு அம்பேத்கர் அனுப்பினார். தீண்டப்படாத மக்களின் பிரதிநிதிகள் சார்பில் சிறுபான்மையினர் துணைக்குழுவிடம் அளிக்கப்பட்டுள்ள அந்த அறிக்கைக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் பல நகரங்களிலும் பொதுக்கூட்டங்கள் நடத்தித் தீர்மானம் இயற்றுமாறு அறிவுறுத்தியிருந்தார். அவ்வாறு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் நகல்களைப் பிரிட்டிஷ் பிரதமர் ராம்சே மாக்டொனால்டுக்கு அனுப்புமாறு கேட்டிருந்தார். அத் தீர்மானத்துடன், தீண்டப்படாத வகுப்பு மக்கள் ஒத்துழைப்பு அளிப்பதற்காக முன்வைக்கும் குறைந்தபட்சக் கோரிக்கைகள் அவை என்றும், அவற்றை ஏற்காவிட்டால் சுயாட்சிக்கான எவ்வித அரசியல்

சட்டத்திற்கும் தீண்டப்படாத வகுப்பு மக்கள் தங்கள் ஒப்புதலைத் தரமாட்டார்கள் என்றும் பிரிட்டிஷ் பிரதமருக்குத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொண்டார். அவ்வாறே இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் பிரிட்டிஷ் பிரதமர் அலுவலகத்திற்குத் தீர்மான வாசகத் தந்திகள் வந்து குவிந்தன.

வட்டமேசை மாநாட்டின் நிகழ்ச்சிகளின்போது நடந்த ஒரு செய்தி அப்போது போதிய அளவிற்கு இந்தியாவில் அறியப்படாமல் இருந்தது. சிறுபான்மையரின் உரிமைகள் பற்றிய விவாதத்தின் போது, டாக்டர் முஞ்சேவும் டாக்டர் அம்பேத்கரும் ஓர் உடன்பாட்டிற்கு வந்திருந்தனர் என்பதே அச்செய்தியாகும். அந்த உடன்பாட்டைப்பற்றி இரு தலைவர்களும் அமெரிக்கா மற்றும் பிற நாடுகளின் பத்திரிகையாளர்களிடம் அறிவித்துவிட்டு, சாதி இந்துக்களுடன் தீண்டப்படாத வகுப்பு மக்கள் இனிச் சண்டை போடவேண்டிய தேவையே இருக்காது என்று கூறினார்கள்.

லிபரல் கட்சித் தலைவர்களும் தொழிற்கட்சித் தலைவர்களும் முஸ்லிம்களின் வகுப்பு வாதப் பேராசைக்கு ஆதரவளிக்க உள்ளூர விரும்பவில்லை என்று பொதுவாகக் கருதப்பட்டது. 'டெய்லி ஹெரால்டு' நாளேடு இந்தியாவின் அரசியல் சிக்கல்பற்றிய முகம்மதியரின் கண்ணோட்டத்தைக் குறைகூறியது. முசுலீம்கள் தீண்டப்படாத வகுப்பினர்களின் கோரிக்கைகளுக்கு ஆதரவளிக்கவில்லை. என்றாவது ஒருநாள் சாதி இந்துக்களும் தீண்டப்படாத வகுப்பு மக்களும் ஒன்று சேர்ந்துவிடுவார்கள்; அப்போது கூட்டாகத் தங்களை எதிர்ப்பார்கள் என்று முசுலீம்கள் நினைத்தார்கள்.

இந்தியப் பிரதிநிதிகளிடையே உடன்பாடு ஏற்படுவதற்கான ஒரு நிலைமையை உருவாக்கிட பிரிட்டிஷ் பிரதமர் அவருக்கே உரிய வழியில் முயன்றார். சில பிரதிநிதிகளைத் தெரிவுசெய்து அவர்களுக்குப் பிரிட்டிஷ் பிரதமரின் மகள் விருந்தளித்தார். பரோடா மன்னர், அம்பேத்கர், சர் மிர்சா இஸ்மாயில், ஜின்னா, தம்பே முதலானோரும் மற்றும் சிலரும் அந்த விருந்தில் கலந்துகொண்டனர். செக்கர்சில் இருந்த தன்னுடைய நாட்டுப்புற இல்லத்திற்குப் பிரதமர் சில பிரதிநிதிகளை அழைத்துச் சென்றார். அங்கே இந்தியப் பிரச்சினையைப்பற்றி அவர்கள் அளவளாவினர். ஆனால் அங்கும் ஓர் உடன்பாட்டை எட்ட முடியவில்லை.

சிறுபான்மையர் துணைக்குழு அதன் அறிக்கையை வட்டமேசை மாநாட்டிற்கு வழங்கியது. அந்த அறிக்கையின் கடைசிப்

பத்தியில், "சிறுபான்மையினர் மற்றும் தீண்டப்படாத வகுப்பு மக்கள் தங்களுடைய நிலைப்பாட்டில் உறுதியுடன் இருக்கிறார்கள்; அவர்களுடைய கோரிக்கைகள் நியாயமான முறையில் ஏற்கப்பட் டாலன்றி இந்தியாவின் சுயாட்சிக்கான அரசியல் சட்டத்திற்கு அவர்களுடைய ஒப்புதலை அளிக்கமாட்டார்கள்" என்று குறிப்பி டப்பட்டிருந்தது.

ஜோஷி, ஜதாவ், பால் ஆகியோரைப் போன்றே அம்பேத் கரும் வாக்குரிமைத் துணைக்குழுவின் பரிந்துரைகள் போதுமான வையாக இல்லை என்று கூறி ஏற்க மறுத்தார். வயது வந்த அனைவர்க்கும் வாக்குரிமையை உடனே வழங்க வேண்டும் என்று அவர்கள் கோரினார்கள். நேரமின்மையால் படிக்க முடியாமல் போய்விட்ட தன் எழுத்து வடிவப் பேச்சில், வாக்குரிமையைச் சில பகுதியினருக்கு மட்டுமே அளிப்பது என்பது தீண்டப்படாத வகுப்பு மக்களைக் காட்டிக் கொடுப்பதேயாகும் என்று அம்பேத்கர் குறிப்பிட்டிருந்தார். அதன்மூலம் தீண்டப்படாத வகுப்பினர்களின் நலன்கள்பற்றிக் கவலைப்படாதவர்களின் கருணைக்கு மீண்டும் அவர்களை ஆளாக்கிடும் நிலையைத் தொழிற்கட்சி அரசு ஏற்படுத்தி விடக்கூடாது என்று அம்பேத்கர் எச்சரித்தார்.

V

இலண்டனில் அம்பேத்கர் அல்லும் பகலும் உழைத்தார்; பலரை நேரில் கண்டு அளவளாவினார்; பலருக்குப் பேட்டிகள் தந்தார்; பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரை அழைத்துக் கூட்டம் நடத்தி அவர்கள் தீண்டப்படாதவர் பிரச்சினையைப்பற்றி முழுமையாக அறியுமாறு செய்தார். அம்பேத்கரின் இந்த நடவடிக் கைகள் தீண்டப்படாதவர் பிரச்சினைபற்றியும் அவர்கள் நல்வாழ்வு பற்றியும் அம்பேத்கர் எந்த அளவிற்கு ஈடுபாடும் பற்றுறுதியும் கொண்டிருந்தார் என்பதைப் புலப்படுத்துகின்றன. வெளிநாட்டுப் பத்திரிக்கைகளுக்குக் கட்டுரைகள் எழுதுவதற்கும் பத்திரிக்கைகளில் அறிக்கைகள் வெளியிடுவதற்கும் மற்றும் இலண்டனில் கூட்டங்க ளில் பேசுவதற்கும் கிடைக்கின்ற ஒவ்வொரு வாய்ப்பையும் அம்பேத்கர் பயன்படுத்திக்கொண்டார். அவற்றின் வழியாக, இந்தியாவில் பன்னெடுங்காலமாகத் தீண்டப்படாத மக்கள் அனுப வித்து வரும் தாங்க முடியாத அவமானங்கள், நம்பவும் முடியாத அளவிற்கான துன்பங்கள் முதலானவற்றை அம்பேத்கர் வெளிப் படுத்தினார். அம்பேத்கர் பத்திரிக்கைகளுக்கு விடுத்த ஒவ்வொரு அறிக்கையிலும் அறிவுநலஞ் சான்ற மக்கள் தீண்டப்படாத

வகுப்பினர்களின் கோரிக்கைகளுக்கு ஆதரவு அளிக்குமாறு வேண்டினார். மனிதத் தன்மையின் அடிப்படையில் தீண்டப்படாத வகுப்பாரின் பிரச்சினைக்குத் தீர்வுகாணத் தங்களின் உதவியை அளிக்க வேண்டியது மக்களின் அறஞ்சார்ந்த கடமையாகும் என்று அம்பேத்கர் கூறினார்.

இவற்றின் விளைவாக அமெரிக்க நாட்டு நீக்ரோக்களைவிட இந்தியாவில் தீண்டப்படாத வகுப்பு மக்களின் வாழ்நிலை மிகவும் இழிந்ததாக இருந்தது என்பதை உலக மக்கள் முதன்முதலாக அறிந்து கொண்டனர். அம்பேத்கரின் வேண்டுகோள் சில பிரிட்டிஷ் தலைவர்களை மனம் நெகிழச் செய்தது. அதன் விளைவாக மிஸ் எலினார், மிஸ் எல்லன், நார்மன் ஏஞ்செல் மற்றும் சிலர் அடங்கிய பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒரு குழுவாகச் சென்று சான்கி பிரபுவைச் சந்தித்துத் தீண்டப்படாத வகுப்பு மக்களுக்கு உடனே வாக்குரிமை வழங்குமாறும், அவர்களுடைய இயலாமைகளைப் போக்குமாறும் வேண்டினார்கள். அமையவுள்ள அரசியலமைப்பில் தீண்டப்படாதவர்கள் இந்தியாவில் உள்ள மற்ற வகுப்பு மக்களுக்குச் சமமாக உரிமையளிக்கப்படுவார்கள் என்று சான்கி பிரபு உறுதி கூறினார். அம்பேத்கர் டொமினியன் அந்தஸ்து கோரிக்கையை எதிர்க்கவில்லையே என்பதற்காகச் சில பிரிட்டிஷ் ஏடுகள் அம்பேத்கரிடம் பகை பாராட்டின.[48] தீண்டப்படாத வகுப்பு மக்களுடைய கோரிக்கைகளைப் பொறுத்து அப்பத்திரிக்கைகள் அக்கறை காட்டாமல் இருப்பதுபற்றியோ அல்லது எதிர்ப்பதைப்பற்றியோ கவலைப்படவில்லை என்று அம்பேத்கர் கூறினார்.

அம்பேத்கரின் ஆழ்ந்த படிப்பறிவும், கடும் உழைப்பும், எவரையும் வெற்றி கொள்ளும் அறிவாற்றலும் வட்டமேசை மாநாட்டுப் பிரதிநிதிகளையும் பிரிட்டிஷ் அரசியல் வல்லுநர்களையும் பெரிதும் ஈர்த்தன. பல முனைகளிலிருந்து அவருக்குப் பாராட்டுதல்கள் கிடைத்தன; சில முனைகளிலிருந்து வெறுப்பும் உமிழப்பட்டது. அம்பேத்கரின் அரும்பணிக்குப் புகழ்மாலை சூட்டிப் பின்னாளில் 'தி சண்டே கிரானிக்கிள்' ஏடு எழுதியது. "உள்ளத்தால் உண்மையான ஒரு நாட்டுப்பற்றாளர் அம்பேத்கர். அவரைத் தங்கள் பக்கம் இழுத்துக் கொள்ளவேண்டும் என்ற நோக்குடன் பிரிட்டிஷ் பிற்போக்காளர்கள் மேற்கொண்ட மயக்கு முயற்சிகளை அவர் எதிர்த்து நின்று போராட வேண்டியிருந்தது. அவருடன் வட்டமேசை மாநாட்டிற்குத் தீண்டப்படாத வகுப்பு மக்களின் பிரதிநிதியாக வந்திருந்த சீனிவாசனை தேசிய உணர்வுத்

தளத்தில் நிறுத்தி வைத்திட அம்பேத்கர் தனி முயற்சி எடுக்க நேரிட்டதால் அவருடைய பணி மேலும் சுமையானதாக ஆயிற்று. செஸ்டர் பீல்டு தோட்டத்தில் நடந்த விவாதத்தின்போது, விட்டுக் கொடுப்பது என்பதன் பெயரால், சர் தேஜ் பகதூர் சிற்றரசர்களுக்கு அதிக அளவில் இடம் கொடுக்கிறார் என்று அம்பேத்கர் பல தடவைகளில் எடுத்துரைத்தார். ஆயினும் சர் தேஜ் மிகவும் சிக்கலானதோர் நிலையைச் சமாளிக்க வேண்டிய நிலையில் இருக்கிறார் என்பதையும் அம்பேத்கர் ஒத்துக்கொண்டார்'' என்று அந்த ஏடு எழுதியது.

''உண்மையான பிரதிநிதித்துவம் பெற்றதாக அரசியலமைப்பு அமைந்தாலன்றி, வேறு வகையில் அமைகின்ற பொறுப்பு வாய்ந்த அரசை ஏற்பதற்கான உரிமைக் கட்டளையைத் தீண்டப்படாத வகுப்பு மக்கள் தனக்கு அளிக்கவில்லை என அம்பேத்கர் கூறினார். உருவாகவிருக்கின்ற அரசு ஒரு சில வகுப்பு மக்கள் மட்டுமே ஆதிக்கம் செலுத்தும் அரசாக அமைந்திடுமோ என்ற தன் அச்சத்தை வெளியிட்டார். அம்பேத்கரின் இக்கருத்துக்குப் பிரிட்டனில் இருந்த தொழிற்கட்சி, லிபரல் கட்சித் தலைவர்கள் ஆதரவு அளித்தனர்'' என்று 'இந்தியன் டெய்லி மெயில்' பத்திரிகையின் நிருபர் எழுதினார்.

இலண்டனில் வட்டமேசை மாநாட்டுப் பணிகளில் மூழ்கி யிருந்த நிலையிலும் அம்பேத்கர் தணியாத அறிவு வேட்கையினால் உந்தப்பட்டு, இலண்டனிலிருந்த பழைய புத்தகக் கடைகளில் அரிய நூல்களைத் தேடி வாங்கிடச் சென்றார். மூன்று பெட்டிகள் நிறைய நூல்களை வைத்துப் பம்பாயின் பழைய தொழிலாளர் தலைவர் வி.எம். பவார் மூலமாக இந்தியாவிற்கு அனுப்பினார். நூல்கள் அடங்கிய நான்காவது பெட்டி தன் உடன் தோழரான சீனிவாசனிடம் கொடுத்தனுப்பப்படுவதற்காகத் தயாராக இருந்தது. அம்பேத்கர் இலண்டனிலிருந்த சில ரஷ்யத் தலைவர்களைச் சந்திக்க விரும்பினார். ஆகவே அவர் சிவதார்க்கருக்குக் கடிதம் எழுதி, பம்பாயில் புகழ்பெற்ற தொழிலாளர் தலைவர் ஆர்.ஆர். பக்காலே விடம் கூறி ரஷ்ய நாட்டுத் தலைவர்களின் முகவரிகளைத் தனக்கு அனுப்புமாறு நினைவூட்டுங்கள் என்று கேட்டுக்கொண்டார். அமெரிக்காவிற்குச் சென்று, இந்தியாவில் தீண்டப்படாத வகுப்பு மக்களின் பிரச்சினையைப்பற்றி அமெரிக்கர்களுக்கு எடுத்துரைக்க எண்ணங்கொண்டிருந்தார். ஆனால் அவ்வாறு அமெரிக்கா செல்வ தற்கு அம்பேத்கருக்கு நேரம் கிடைக்காது போயிற்று எனத்

தெரிகிறது. அம்பேத்கர் இலண்டனில் இருந்தபோதுதான் மகத் துணை நீதி மன்றத்தில் நடைபெற்ற மகத் குளம் வழக்கில் அளிக்கப்பட்ட வைதிகர்களுக்கு எதிரான தீர்ப்பினால் தன் வகுப்பு மக்கள் வெற்றி பெற்றுவிட்ட செய்தியை அறிந்தார். பம்பாய் மாகாணச் சட்டசபைக்குத் தான் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ள இனிய செய்தியையும் அறிந்தார்.

அவ்வேளையில் இந்தியாவில் நடைபெற்ற மற்றொரு நிகழ்ச்சி அம்பேத்கரை மகிழ்வித்தது. அம்பேத்கர் அறிவுறுத்தியிருந்தவாறு அவருடைய தளபதிகளான தியோராவ் நாயக்கும், கதிரேக்கரும் 'ஜனதா' (மக்கள்) என்ற பெயரில் புதிய மாதம் இருமுறை இதழைத் தொடங்கினார்கள். இந்தியாவின் அரசியல், சமுதாயத் துறைகளில் அம்பேத்கரின் பங்கு புதுமையான படிநிலை வளர்ச்சியைக் கொண்டதாக இருக்கிறது. அம்பேத்கர் தொடங்கிய முதல் பத்திரிகை 'மூக் நாயக்' - ஊமைகளின் தலைவன்; இரண்டாவது பத்திரிகை 'பகிஷ்கிரித் பாரத்' - புறக்கணிக்கப்பட்ட இந்தியா; மூன்றாவது 'சமத்துவம்'; நான்காவது 'ஜனதா'-மக்கள். ஊமைகளின் தலைவன் ஏடு தீண்டப்படாத வகுப்பு மக்களைக் கிளர்ந்தெழச் செய்தது. அவர்கள் பட்ட துன்பங்களை எடுத்துரைத்தது. 'சமத்துவம்' பத்திரிகையோ மற்ற மக்களைப்போன்று தீண்டப்படாதாரும் சமமாக வாழவேண்டும் என்ற எழுச்சியையூட்டியது. 'ஜனதா' பத்திரிகை சமத்துவம், சுதந்திரம், சகோதரத்துவம் என்ற கோட்பாடுகளின் அடிப்படையில் தீண்டப்படாத வகுப்பு மக்கள் இந்துச் சமூகத்தில் இணைந்து இருந்திடவே விரும்புகின்றனர் என்பதை எடுத்துரைத்தது. அம்பேத்கர் தன் நன்றியைத் தெரிவித்துத் தன் தளபதிகளுக்குக் கடிதம் எழுதினார். தீண்டப்படாத வகுப்பு மக்களின் உயரிய நோக்கங்கள் வெற்றி பெற வேண்டுமென்பதற்காக அவர்கள் காட்டிய துணிவையும், செய்த தொண்டையும், கோடிக்கணக்கான நசுக்கப்பட்ட மக்களின் உணர்வுகள், இடையூறுகள், விருப்பங்கள் ஆகியவற்றில் அவர்கள் முழுமையாகக் கலந்து ஒன்றி விட்டமையையும், தியோராவ் நாயக்கிற்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுப் பாராட்டியிருந்தார்.

பல்வேறு துணைக்குழுக்களின் அறிக்கைகளைப் பதிவு செய்து கொண்டபின் வட்டமேசை மாநாடு 1931 சனவரி 31ஆம் நாள் ஒத்திவைக்கப்பட்டது. அதன்பின் பிரிட்டிஷ் மக்களவையில் இந்தியாவைப்பற்றிய விவாதம் நடைபெற்றது. அந்த விவாதத்தின் போது தீண்டப்படாத வகுப்பு மக்களின் துன்பங்களை ஓர்



பம்பாயில் ஜின்னாவின் இல்லத்தில் பெரியார் ஈ.வெ. ராமசாமி குழுவினருடன் அம்பேத்கர். (8.1.1940)

உறுப்பினர் எதிரொலித்தார். ஆழ்ந்த அனுதாபங்கொண்ட அய்சக் ஃபுட் அவர்கள்தான் அவ்வுறுப்பினராவார். "தீண்டப்படாத வகுப்பினர்களின் பாதுகாப்பிற்கான காப்பு விதிகளை நாம் ஏற்படுத்தாவிட்டால் அம்மக்கள் நமக்கு எதிராகக் கொதித்தெழுவார்கள். எதிர்காலத்தில் ஆட்சி செய்வோருக்கு நான் கூற விரும்பும் அறிவுரை இதுதான். உங்களுடைய முதன்மையான கவலை மக்களைப் பற்றியதாக இருக்கட்டும்! இப்பொழுது அவர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளமுடியாத எளியராய் இருக்கலாம்; ஆனால் என்றாவதொரு நாள் அவர்கள் வலிமை மிக்கவர்களாவார்கள். இந்நிலவுலகில் அறநெறி இருப்பதால் காலங்காலமாகத் தீண்டப்படாத வகுப்பு மக்களின் மீது சுமத்தப்பட்டுவிட்ட துயரங்களின் சுமையைத் தொடர்ந்து அவர்கள் இனியும் தாங்கிக் கொண்டிருக்க இடமிராது. இனி அடுத்து வரவுள்ள இருபது ஆண்டுகளில் இந்தியாவின் முன்னேற்றம்பற்றிக் கணிப்பதற்கான உரைகல் தீண்டப்படாத வகுப்பு மக்களுக்கு நாம் என்ன செய்தோம் என்பதேயாகும்" என்று அய்சக் ஃபுட் பேசினார். இலண்டனில் அம்பேத்கர் அயராது மேற்கொண்ட முயற்சிகளுக்குக் கிடைத்த சிறந்த பாராட்டுரையாக அப்பேச்சு அமைந்தது. அம்பேத்கர் இலண்டனைவிட்டுப் புறப்படுவதற்கு முன்னர், வட்டமேசை மாநாட்டின் பணியைப்பற்றிய தன் கருத்தைத் தன் செயலாளர் சிவதார்க்கருக்கு எழுதினார். வட்டமேசை மாநாட்டின் முடிவுகள்பற்றித் தனக்கு இருவிதக் கருத்துகள் இருந்த போதிலும், இந்தியாவில் சுயாட்சி அரசு அமைவதற்கான அடித்தளத்தை வட்டமேசை மாநாடு அமைத்துவிட்டதாகவே நம்புவதாகக் குறிப்பிட்டிருந்தார். இவ்விளக்கத்தைக் கொண்டு பார்க்கும்போது வட்டமேசை மாநாடு வெற்றியானதே! ஆயினும் மற்றொரு கோணத்தில் பார்க்கும்போது - அரசியலமைப்பு அடித்தளத்தில் காரையைவிட மணலே அதிகமாக இருக்கிறது;[49] ஆகவே அடித்தளம் போதுமான அளவிற்கு உறுதியானதாக இல்லை. இருப்பினும் தீண்டப்படாதவர்கள் உரிமைகளைப் பொறுத்த அளவில் வட்டமேசை மாநாடு மாபெரும் வெற்றிதான் என்று அம்பேத்கர் எழுதினார்.

அந்த வட்டமேசை மாநாட்டின் குறிப்பிடத்தக்க பங்களிப்பாகத்தான் ஒன்றுபட்ட இந்தியா என்ற இந்திய அரசியல் சிந்தனை உருவாயிற்று. இந்திய அரசியல் களத்தில் தீண்டப்படாத வகுப்பு மக்கள் உறுதிப்பாடு மிக்க ஒரு சக்தியாக உருவானமை வட்டமேசை மாநாட்டின் குறிப்பிடத்தக்க மற்றொரு விளைவாகும். தேர்ந்த மதிநுட்பத்துடன், கேட்டாரைப் பிணிக்கும் தன்மையில்

தீண்டப்படாத வகுப்பு மக்களின் தாங்க வொண்ணாத துன்பநிலைகளை உலக மக்கள் அறியும் வகையில் அம்பேத்கர் விளக்கியது மற்றுமொரு அரிய சாதனையாகும். அமைக்கப்படவுள்ள சட்டசபைகளில் பல்வேறு வகுப்பினரும் கோரிய இட ஒதுக்கீடு, தேர்தல் முறையில் தனி வாக்காளர் தொகுதியை அளிப்பதா அல்லது கூட்டு வாக்காளர் தொகுதி அடிப்படையில் இட ஒதுக்கீடு அளிப்பதா என்பவற்றில் எழுந்த கருத்து வேற்றுமை காரணமாக வட்டமேசை மாநாடு ஒத்திவைக்கப்பட்டது. முதன்மையான அரசியல் கட்சியான காங்கிரசுக் கட்சி இந்த வட்டமேசை மாநாட்டில் கலந்து கொள்ளாத நிலையில் ஒரு முக்கியமான முடிவை எடுத்தால் வேண்டுமென்றே காங்கிரசின் எதிர்ப்பைப் புறக்கணித்ததாகும் என்று எண்ணியும் ஒரு முடிவினை எடுக்காமல் விட்டுவிட்டிருக்கலாம். 1931 பிப்ரவரி 13ஆம் நாள் மார்செயில்ஸில் கப்பல் மூலமாக அம்பேத்கர் இந்தியாவிற்குப் பயணமானார்.

VI

1931 பிப்ரவரி 27ஆம் நாள் அம்பேத்கர் பம்பாயை அடைந்தார். பம்பாய் பலார்டு துறைமுகத்தில் வந்திறங்கிய அம்பேத்கருக்கு, அம்பேத்கர் சேவாதளத் தொண்டர்கள் பெருந்திரளாக சங்கர்ராவ் வத்வால்கர் தலைமையில் உற்சாகமான வரவேற்பு அளித்தனர். பத்திரிக்கையாளர்களுக்கு அளித்த ஒரு பேட்டியில் வட்டமேசை மாநாடு இந்தியரின் அரசியல் மேதைத் தன்மைக்குக் கிடைத்த ஒரு மாபெரும் வெற்றியாகும் எனக் குறிப்பிட்டார். அதில் குறைகள் இருந்தபோதிலும், அவை, இனி உருவாக்கப்படவுள்ள அரசியல் சட்டத்தின் முக்கியமான கூறுகள் அல்ல. வாக்குரிமை சில பகுதியினருக்கு மட்டுமே வழங்கப்பட்டிருப்பதைக் கண்டனம் செய்தார். இந்திய ஆண், பெண் அனைவர்க்குமாக அரசியல் அதிகாரத்தைப் பெற்றுத்தரும் முயற்சி தோல்வி அடைவதற்கு காந்தி காரணமாக இருப்பாராயின், காந்தியின் அச்செயலை நம்பிக்கைத் துரோகம் என்று பெயரிட்டழைக்கத் தயங்கமாட்டேன் என்று அம்பேத்கர் கூறினார். இந்தியர்களுக்கு அரசியல் அதிகாரம் அளிக்கப்படுவது என்பது சிறுபான்மையினரின் சிக்கலைத் தீர்ப்பதைப் பொறுத்தே இருக்கிறது என மேலும் குறிப்பிட்டார். இந்தியாவிற்கான எதிர்கால அரசியல் சட்டத்தில் தீண்டப்படாத வகுப்பு மக்களுக்கான இடம் உறுதி செய்யப்பட்டு விட்டது; அவர்களுடைய இயலாமைகள் இனி இல்லாதொழிந்து போகும் என்ற தன் மனநிறைவைப் பேட்டியின் இறுதியில் வெளியிட்டார்.

இந்திய அரசியல் நிலைமைகளில் மிக வேகமான மாற்றங்கள் நடைபெற்றன. வட்டமேசை மாநாட்டில் பிரிட்டிஷ் பிரதமர் இறுதியாகப் பேசியபோது கூறிய கருத்துரைக்கு ஏற்ப, இந்திய வைஸ்ராய் சனவரி 26ஆம் நாள் காங்கிரசுத் தலைவர்களை விடுதலை செய்தார். பல நாட்கள் பேச்சுவார்த்தை நடத்தியபின்னர் வைஸ்ராய் இர்வின் பிரபுவுடன் 1931 மார்ச்சு 5ஆம் நாள் டில்லியில் காந்தி ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டார். ஒத்துழை யாமை இயக்கத்தைக் கைவிடுவதாகவும், இரண்டாவது வட்ட மேசை மாநாட்டில் கலந்துகொள்வதாகவும் காந்தி உறுதி அளித்தார்.

பம்பாயை அடைந்த பிறகு மூன்று நான்கு நாட்கள் அம்பேத்கர் பேட்டிகள் அளித்தார்; தன் நண்பர்களுடனும் தோழர்களுடனும் அளவளாவினார்; ஓரிரு நாட்கள் கழித்துப் பம்பாய் பரேலில் நடைபெற்ற மாபெரும் தீண்டப்படாதார் பொதுக்கூட்டத்தில் உரையாற்றினார். அவர்கள் அளித்த ஆதரவினாலும், மேற்கொண்ட போராட்டத்தாலும்தான், அவர்களுக்குச் சில நன்மைகளைப் பெற்றுத்தர முடிந்தது என்று கூறினார். ஆகவே தொடர்ந்து போராடுங்கள் என்று அவர்களுக்கு அறிவுரை கூறினார். அடுத்த நாள் பம்பாய் மாகாணச் சட்டசபையில் உறுப்பினர் பதவியை ஏற்றார். 1931 மார்ச்சு மாதம் நடுப்பகுதிவரையில் சட்டசபைக் கூட்டத்தொடரில் கலந்துகொண்டர். அச்சமயத்தில் நாசிக்கில் ஒரு சிக்கல் எழுந்தது.

பாவ்ராவ் கெய்க்வாடு தலைமையில் கூடிய தீண்டப்படாத வகுப்புத் தலைவர்கள் நாசிக்கில் கோயில் நுழைவுப் போராட்டத்தை மீண்டும் தொடங்குவது என்று முடிவுசெய்தனர். டாக்டர் மூஞ்சே அளித்த உறுதி மொழியின் பேரில் 1930இல் அப்போராட்டம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ஒரு குழுவை அமைப்பதாக 1930இல் மூஞ்சே உறுதி கூறியிருந் தார். பல மாதங்கள் கடந்தபின்னும் அவர் எந்த நடவடிக்கையும் எடுக்காததால் மீண்டும் போராட்டத்தைத் தொடங்குவது என்று முடிவுசெய்தனர். அம்பேத்கர் அவருடைய பம்பாய்த் தோழர்களு டன் மார்ச்சு 14ஆம் நாள் நாகபுரி தொடர்வண்டியில் நாசிக் சென்றடைந்தார். செக்ரியா மனியார் என்ற ஒரு முகம்மதியரின் இல்லத்தில் அவர்கள் தங்கினார்கள். நாசிக்கில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் மக்கள் கிளர்ந்தெழும்படியானதோர் உரையை அம்பேத்கர் நிகழ்த்தினார். அதைக்கேட்ட அம்மக்களின் ஆர்வம் பொங்கிப்பீறிட்டெழுந்தது. ஆயினும் கட்டுப்பாட்டுடன் வன்முறை

யற்ற வழியில் போராட வேண்டியதன் முதன்மையை அம்பேத்கர் மிகவும் வலியுறுத்தினார். ஓரிரு நாட்களுக்கு முன் தான் சிறையிலிருந்து விடுதலையாகி - வெளிவந்திருந்த தின்கர்ராவ் ஜவல்கர் அப்பொதுக்கூட்டத்தில் பங்கேற்றுத் தீண்டப்படாதாருக்கு நம்பிக்கையும் துணிவும் உண்டாகும் வகையில் பேசினார். உடனே அம்பேத்கர் நாசிக்கிலிருந்து பம்பாய்க்குப் பயணமானார். பம்பா யில் தாணாவில் 1931 மார்ச்சு 16ஆம் நாள் திங்கட்கிழமை அன்று பம்பாயில் சிர்னர் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவ வழக்கில் அவர் வாதாட வேண்டியிருந்தது. ஞாயிற்றுக்கிழமை நண்பகலில் நாசிக்கில் தீண்டப்படாதார் ஓர் ஊர்வலத்தை நடத்தினர். ஊர்வலத் தின் ஒரு திருப்பத்தில் வைதிகக் கும்பல் ஊர்வலத்தினர் மீது கற்களை வீசியது. நாசிக் நகராட்சியினர் நடந்து கொண்டதுபோ லவே, நாசிக் மாவட்டக் காங்கிரசுக் கட்சியின் தலைவரும் பிற்போக்காளர்களுக்கு உடந்தையாக இருந்தார் என்பதை நினை வில் கொள்ள வேண்டியுள்ளது. குறிப்பிடத்தக்க மற்றொரு செய்தியும் இருக்கிறது. அதாவது கராச்சியில் நடைபெற்ற காங்கிரசு மாநாட்டில், மதம் தொடர்பானவற்றில் கண்டிப்பான நடுநிலைப் போக்கினைக் கடைப்பிடிக்கப்போவதாக ஒரு தீர்மானம் நிறைவேற் றப்பட்டது. அம்மாநாடு நடைபெறுவதற்குச் சில நாட்களுக்கு முன், பம்பாயில் தங்கியிருந்த காந்தி, சுதந்திரம் பெற்ற பிறகு கோயில் நுழைவுக்காகத் தான் போராடப்போவதாகக் கூறினார். இது காந்தியின் தெளிவான திட்டவட்டமான அறிவிப்பாகும்.

அம்பேத்கர் நாசிக்கிலிருந்து பம்பாய் திரும்பியபின், தாணா மாவட்ட நீதிமன்றத்தில் வழக்காடும் பணியில் ஈடுபட்டார். சிர்னர் துப்பாக்கிச் சூடு சம்பவம் என்ற பெயர்பெற்ற அவ்வழக்கில் மொத்தம் நாற்பத்தேழு பேர் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தனர். அவர் கள் அனைவரும் நாட்டுப்பற்று மிக்க தீரர்கள். அவர்களில் நான்கு பேர் சார்பாக அம்பேத்கர் அவ்வழக்கில் வாதாடினார். பன்வெலுக்கு அருகிலுள்ள சிர்னர் என்ற சிற்றூரில் 1930 செப்டம்பர் 30ஆம் நாள் காங்கிரசு தொடங்கிய காட்டுப் பாதுகாப்புச் சத்தியாக்கிரகத்தின் விளைவாக அவ்வழக்கு தொடரப்பட்டது. அந்தச் சத்தியாக்கிரகத் தின்போது துப்பாக்கிச் சூடு நடந்தது. அதில் கிராம மணியக்காரரும் மற்றும் சிலரும் மாண்டனர். மக்களுக்கு எதிராக அரசு தொடுத்த வழக்கு என்பதால் அதன் விளைவுகள் பெரிய அளவினதாக இருந்தன. அவ்வழக்கின் தொடர் நடவடிக்கைகளை இந்தியா முழுவதும் மக்கள் மிகுந்த ஆர்வமுடனும் கவலையுடனும் கவனித்து வந்தனர். டாக்டர் பட்டாபி சீதாராமய்யா போன்ற

காங்கிரசு வரலாற்று ஆசிரியர்களின் பார்வைக்கு இது தெரியாது போயினும், இவ்வழக்கு மராட்டிய வரலாற்றில் மிகவும் இன்றியமையாத ஒன்றாகத் திகழ்ந்தது. ஆதலால் மாவட்ட நீதிபதி சஞ்சனா முன்னிலையில் மராட்டியத்தின் சிறந்த வழக்கறிஞர்கள் அந்த வழக்கில் வாதிட்டனர். குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் சார்பில் திலகரின் பழம்பெரும் பற்றாளர் ஆர்.பி. கரண்டிகர், டாக்டர் அம்பேத்கர், கே.என்.தார்ப், ரீஜ் மற்றும் பலரும் வாதிட்டனர்.

கோடை விடுமுறையின்போது அவ்வழக்கு விசாரணை தீவிரமாக நடைபெற்றது. அம்பேத்கர் இவ்வழக்கில் சாட்சியம் கூற வந்தவர்களை மிக நுட்பமாக மடக்கி மடக்கிக் கேள்விகள் கேட்டார். இதனைக் கூர்ந்து கவனித்த நாட்டுப் பற்று உணர்வுகொண்ட மக்கள் வட்ட மேசை மாநாட்டுக்குத் தீண்டப்படாத வகுப்பு மக்களின் பிரதிநியாக அரசு அம்பேத்கரைத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருந்தபோதிலும், அரசுக்கு எதிரான இவ் வழக்கில் மிகுந்த துணிச்சலுடன் அவர் வாதிட்டதை மிகவும் பாராட்டினார்கள். இவ்வழக்கில் ஒரு முறை அம்பேத்கர் குறுக்கிட்டுக் கேட்ட கேள்வி ஒன்று நீதிமன்றத்திலிருந்த அனைவரையுமே குலுங்கிச் சிரித்திட வைத்தது. அரசுத் தரப்பு வழக்கறிஞர் குற்றம் சாட்டப்பட்டுக் கூண்டில் நிற்கும் 15ஆவது குற்றவாளியைச் சாட்சியம் கூறவந்த ஒருவர் அடையாளம் கண்டறிகிறாரா என்பதற்காகச் சாட்சிக்காரரை நோக்கி ஒரு கேள்வியைக் கேட்டார். 'குற்றம் சாட்டப்பட்டிருப்பவரின் முகத்தைப் பார்த்து அவரை அடையாளம் கண்டுபிடிக்கிறீர்களா? அல்லது அவருடைய மூக்கின் மேல் உள்ள வடுவை வைத்து அவர் யார் என்பதை அறிந்துகொள்கிறீர்களா? என்று அரசுத் தரப்பு வழக்கறிஞர் கேட்டதும், அம்பேத்கர் சட்டென்று எழுந்து, 'என்ன இது? அவருடைய மூக்கு அவர் முகத்தில் இல்லையா?' என்று கேட்டார். இதுவே நீதிமன்றத்தில் சிரிப்பூட்டிய கேள்வியாகும்.

ஜூன் 20 செவ்வாய்க்கிழமை அன்று அம்பேத்கர் வாதங்களை எடுத்துரைத்தார். சிந்தனையைத் தூண்டும் தன்மையிலும் தன் கட்சியை ஏற்கச் செய்யும் வகையிலும் 8, 9, 10 எண்ணுள்ள குற்றவாளிகள் சார்பில் வாதங்களை முன் வைத்தார். குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு ஆதரவாக விரிவான வாதங்களை முன் வைத்தார். இறுதியில், அவ்வழக்கை மற்றொரு கண்ணோட்டத்தில் நின்று தீரமுடன் திறனாய்வு செய்தார். "இந்த வழக்கு ஒரு தனித்தன்மையான வடிவத்திலுள்ளது. அரசுக்கும் மக்களுக்கும்

இடையே நடைபெறும் வழக்கு என்று இது கருதப்படுகிறது. மக்களின் உரிமை நிலை நாட்டப்படுவது பெரிதா, அரசின் நிலைத்த தன்மை நீடிப்பது பெரிதா என்பதே இவ்வழக்கில் எழுந்துள்ள பெரிய கேள்வியாகும். ஜூரிகளான நியாயவாதிகள் இந்நீதி மன்றத்தில் இருப்பதன் நோக்கம் மக்களின் உரிமைகளுக்கு எதிரான தப்பெண்ணம் கொண்டதாக நீதிமன்றம் அமைந்து விடக்கூடாது என்பதுதான். அரசின் நிலைத்த தன்மை நீடிக்க வேண்டும் என்பதைவிட மக்களின் உரிமைகளும் சுதந்திரங்களும் முதன்மை வாய்ந்தவை என்பதை ஜூரிகளான நியாயாதிபதிகள் கருத்தில் கொள்ள வேண்டும் என வேண்டிக்கொண்டார்.

மிகவும் சிக்கலான அவ்வழக்கில் நீண்டகால விசாரணைக்குப் பின், 1931 சூலை 2ஆம் நாள் நீதிபதி தன் தீர்ப்பை வழங்கினார். 27 பேர்களுக்குப் பல்வேறு தண்டனைகள் வழங்கப்பட்டன. மற்ற 17பேர் குற்றவாளிகள் அல்லர் என்று விடுதலை செய்யப் பட்டனர்.

இதற்கிடையில் தீண்டப்படாத வகுப்புத் தலைவர்களின் கூட்டம் ஒன்றை அம்பேத்கர் 1931 ஏப்பிரல் 19ஆம் நாள் பம்பாய் பரேலில் கோகலே கல்விக் கழக அரங்கில் கூட்டினார். வங்காளம், மத்திய மாகாணம், சென்னை, மராட்டிரம் ஆகிய பகுதிகளிலிருந்து தீண்டப்படாத வகுப்பு மக்களின் முக்கியத் தலைவர்கள் அக்கூட்டத்தில் கலந்துகொண்டனர். என்.சிவராஜ் அக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார். வட்டமேசை மாநாட்டில் தான் செய்த பணிகள்பற்றி அம்பேத்கர் ஓர் அறிக்கை படித்தார். ஆரவாரம் மிக்க கைத் தட்டலுக்கிடையே அந்த அறிக்கையை அக்கூட்டம் நன்றிப் பெருக்குடன் ஏற்றுக்கொண்டது. இந்தியாவுக் கான கூட்டாட்சி அமைப்புக்குழுவில் தீண்டப்படாத வகுப்பு மக்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டும் என்று அம்மாநாடு கேட்டுக்கொண்டது. அடுத்த வட்டமேசை மாநாட்டில் தீண்டப் படாத வகுப்பு மக்களுக்குப் போதுமான பிரதிநிதித்துவம் வழங்கப் படவேண்டும் என்றும், மாகாணங்களில் வருங்காலத்தில் அமைய வுள்ள அமைச்சரவைகளில் தீண்டப்படாதவர்களும் அமைச்சர் களாக்கப்பட வேண்டும் என்றும் அக்கூட்டம் கோரியது. வட்டமேசை மாநாட்டில் தீண்டப்படாத வகுப்பு மக்களுக்காகத் தீரமுடன் செயல்பட்ட பிரதி நிதிகளுக்கு அக்கூட்டம் ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்தது. தீண்டப்படாத வகுப்பு மக்களின் நலன்களுக்காக வட்டமேசை மாநாட்டில் பரிந்து பேசிய அய்சக்

ஃபுட், ரீடிங் பிரபு, பீல் பிரபு, சர் தேஜ் பகதூர் சாப்ரு முதலானோர்க்கும் அக்கூட்டம் நன்றி பாராட்டியது.

கூட்டம் நடைபெற்ற அரங்கிற்கு வெளியே தெருவில் சிறிது கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டது. தங்களைத் தேசியவாதிகள் என்று அழைத்துக்கொண்ட எதிர்ப்புணர்வு கொண்ட சிலர் வேண்டுமென்றே அங்குக் குழப்பத்தை ஏற்படுத்திட முயன்றனர். கட்டுப்பாடு மிக்க அம்பேத்கர் தொண்டர் படையினரால் அம் முயற்சி முறியடிக்கப்பட்டது. அக்கலகக்காரர்கள் படுதோல்வியைச் சந்தித்தனர். கலகக்காரர்களின் தலைவன் தியோருக்கர் தப்பி ஓடி, கடைசியில் அம்பேத்கரின் காரில் ஏறிக் கொண்டு தன்னுடைய உயிரைக் காப்பாற்றுமாறு அம்பேத்கரிடம் கெஞ்சினான். அவனை விரட்டிக்கொண்டு வந்த வேகத்தில் தொண்டர்கள் மோதியதால் அம்பேத்கரின் காரின் முன்பகுதி நொறுங்கியது. அந்த அளவிற்கு அக்கலகக்காரர்களைத் தொண்டர் படையினர் சிதறடித்தனர். ஆனால் அக்கலகக்காரனுக்கு அம்பேத்கர் அடைக்கலம் அளித்தார்.

காந்தியுடன் கொள்கை மோதல்

தீண்டப்படாத வகுப்பினர்களும் காவல்துறையில் வேலையில் சேரலாம் என்ற பம்பாய் மாகாண அரசின் அறிவிப்பு அப்பொழுது தான் வெளியாகியிருந்தது. அம்பேத்கரின் தளராமுயற்சிகள் பயன் தரத்தொடங்கின. அது முன்னேற்றத்திற்கான சிறிய தொடக்கம்தான் எனினும் தீண்டப்படாத வகுப்பு மக்கள் அடிப்படை உரிமையைப் பெற்றனர் என்ற வகையிலும் பொருளாதார முன்னேற்றம் அடைவதற்கான வாய்ப்புப் பெற்றனர் என்ற நோக்கிலும் ஒரு பெரும் சாதனையாகும். அம்பேத்கர் இப்போது எளிதில் புறக்கணிக்கப்பட முடியாத ஒரு சக்தியாக உருவானார். அவர் தொடங்கிய போராட்டங்கள், இந்தியாவில் அவர் ஆற்றிய பணிகள், வட்ட மேசை மாநாட்டில் அவர் ஈட்டிய பெரும் புகழ் ஆகிய அனைத்தும் தீண்டப்படாதவர்கள் குறித்து அரசு கொண்டிருந்த நோக்கில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்திட வேண்டிய நெருக்குதலை உண்டாக்கின.

நாட்டின் அரசியல் பிரச்சினையைத் தீர்ப்பதில் காங்கிரசுக்காரர்களின் கண்ணோட்டத்தில் தெளிவான மாற்றம் அப்பொழுது தெரிந்தது. சென்னையில் ஒரு கூட்டத்தில் பேசும்போது, ஜவகர்லால் நேரு, வட்டமேசை மாநாட்டில் கலந்து கொண்டவர்களைத் தேசத் துரோகிகள் என்று எப்பொழுதுமே காங்கிரசு சொன்னதில்லை; அவர்கள் மக்களின் பிரதிநிதிகள் அல்லர் என்று தான் காங்கிரசு கூறியது என்றார். அடுத்து நடைபெறவுள்ள வட்டமேசை மாநாட்டில் தான் கலந்துகொள்வதற்கான நிபந்தனைகள்பற்றிப் பேச்சுவார்த்தை நடத்துமளவிற்குக் காந்தியின் மனப்போக்கு விரிவடைந்தது.

கொச்சி சிற்றரசைச் சேர்ந்த திருச்சூரிலிருந்து தீண்டப்படாதவர்கள், காங்கிரசு நடத்தும் கோயில் நுழைவு இயக்கத்தில் கலந்து கொள்வதுபற்றிக் கருத்துத் தெரிவிக்குமாறு அம்பேத்கரைக் கேட்டிருந்தனர். ‘காங்கிரசின் உதவியைச் சார்ந்து நிற்காதீர்கள்; அது உங்களுக்குப் பெருமை சேர்க்காது; உங்களுடைய விடுதலையை உங்களுடைய முயற்சிகள் மூலமே பெறுங்கள்’ என்று அம்பேத்கர் அறிவுரை கூறினார்.

அக்காலக் கட்டத்தில் எம்.என்.ராய் அவர்கள் டாக்டர் முகம்மது என்ற மாறு பெயரில் இந்தியத் தலைவர்களைச் சந்தித்து

அவர்களின் போக்கினைக் கண்டறிந்துகொண்டிருந்தார். அவர் அம்பேத்கரைப் பம்பாயில் அவருடைய அலுவலகத்தில் சந்தித்தார். அவர்கள் இந்திய அரசியல் நிலைமைகள்பற்றி உரையாடினர். தீண்டப்படாத வகுப்பு மக்கள் பிரச்சினையைப்பற்றி டாக்டர் முகம்மது சிந்திக்கவேயில்லை என்பதை அம்பேத்கர் கண்டறிந்தார். அப்பேட்டி முடிந்ததும் டாக்டர் முகம்மது அவர்களை அழைத்து வந்த டி.வி. பிரதானிடம் 'உங்களுடன் வந்தவர் அவர் சொல்லிக் கொண்டதுபோல் உத்திரப்பிரதேசத்தைச் சேர்ந்த முஸ்லீமாகத் தெரியவில்லையே; அவர் ஒரு வங்காளத் தலைவர்போல் தோன்றுகிறாரே' என்று அம்பேத்கர் கேட்டார். பதினைந்து நாட்கள் கழித்து டாக்டர் முகம்மது என்கிற எம்.என்.ராய் கைதுசெய்யப் பட்டார்.

அவ்வேளையில் காங்கிரசுக்காரர்கள் அயல் நாட்டவர்களிடம் உண்மையுடனும், பொறுத்துப்போகும் பணபுடனும் நடந்து கொள்ளுவது; காங்கிரசு அல்லாத தலைவர்களிடமும் - முகம்மதியர் அல்லாத தலைவர்களிடமும் வெறுப்புடனும் பொறுமை இழந்தும் நடந்துகொள்வது என்ற கொள்கையை மீண்டும் ஒரு முறை உறுதிசெய்தனர். தீண்டப்படாத வகுப்பு மாணவர்கள் தங்கிப் படிப்பதற்காக அம்பேத்கர் தொடங்கியிருந்த மாணவர் விடுதியைப் பார்ப்பதற்காக அவர் அகமதாபாத்திற்குச் சென்றார். அகமதாபாத் தொடர் வண்டி நிலையத்தில் காங்கிரசுக்காரர்கள் அம்பேத்கருக்குக் கருப்புக்கொடி காட்டினார்கள்.

இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் கலந்துகொள்வதற்காக அழைக்கப்பட்டிருக்கும் பிரதிநிதிகளின் பெயர்கள் பட்டியல் சூலை மாதம் மூன்றாவது கிழமையில் வெளியிடப்பட்டது. அம்பேத்கர், சாஸ்திரி, சாப்ரு, ஜெயகர், சத்தால்வட், மாளவியா, சரோஜினி நாயுடு, காந்தி, மிர்சா இஸ்மாயில், ஜின்னா, இராமசாமி முதலியார் ஆகியோரும் மற்றும் சிலரும் அப்பட்டியலில் இடம் பெற்றிருந்த னர். முதலாவது வட்டமேசை மாநாட்டில் இந்தியக் கூட்டாட்சி அமைப்புத் துணைக்குழுவில் வேண்டுமென்றே அம்பேத்கரின் பெயர் சேர்க்கப்படவில்லை. அவருடைய நாட்டுப்பற்றுமிக்க சிந்தனைகள், வெகுமக்களுக்காகவும் சனநாயக உரிமைகளுக்காக வும் அஞ்சாமல் போரிடும் குணம் ஆகியவை பிரிட்டானியர்களை இப்போது குற்ற உணர்வுகளுக்கு உள்ளாக்கிவிட்டன. அதனால் இம்முறை கூட்டாட்சி அமைப்புத் துணைக்குழுவில் அம்பேத்கர் உறுப்பினராக இடம் பெற்றிருந்தார். இக்குழுதான் இந்தியாவுக்கு

ஒரு புதிய அரசியல் சட்டத்தை உருவாக்குவதில் முதன்மையான் தாக விளங்கியது.

இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் இங்கிலாந்திலிருந்தும அம்பேத்கருக்கு இதற்கான பாராட்டுகள் வந்து குவிந்தன. எதிர் முகாமைச் சேர்ந்த பத்திரிக்கைகள்கூட அம்பேத்கரின் நாட்டுப் பற்றை, சனநாயகத்தின் பால் அவருக்கிருந்த ஈடுபாட்டை, பரந்துபட்ட மக்களின் முன்னேற்றத்தில் அவர் காட்டிய ஆர்வத் தைப் பாராட்டத் தொடங்கின.

மாவட்ட அளவில் குறிப்பிடத்தக்க பத்திரிகையாக விளங்கிய 'கொலாபா சமாச்சார்' அம்பேத்கரின் சமூகச் சீர்திருத்த முயற்சிகளை எப்பொழுதும் குறைகூறிக்கொண்டேயிருந்தது. ஆனால் சிர்னர் வழக்கில் அம்பேத்கர் நாட்டிற்கு ஆற்றிய அரும்பணியை அப்பத்திரிக்கை நன்றிப் பெருக்குடன் புகழ்ந்துரைத்தது. சைமன் குழு இந்தியாவிற்கு வந்திருந்தபோதும், இலண்டனில் நடைபெற்ற முதலாவது வட்டமேசை மாநாட்டின்போதும் அம்பேத்கர் செய்த சீரிய பணிகளை அப்பத்திரிக்கை நினைவுகூர்ந்து எழுதியது. அம்பேத்கர் உண்மையான தேசபக்தர்; நாட்டின் அடிமை விலங்கை உடைத்தெறியப் போராடுபவர்; மற்றவர்களும் அவ்வாறு செய்திட இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் அவர் உதவுவார் என்று அப்பத்திரிக்கை மேலும் குறிப்பிட்டிருந்தது.

'தி இந்தியன் டெய்லி மெயில்' நாளேடு டாக்டர் அம்பேத்கர் கூட்டாட்சி அமைப்புத் துணைக்குழுவில் இடம் பெற்றமையை மிகவும் பாராட்டியது. "அம்பேத்கர் ஒரு நாட்டுப்பற்றாளர்; சுயாட்சி அரசு அமைய வேண்டும் என்பதை முக்கியக் குறிக்கோளாகக் கொண்டிருப்பவர்; மாகாணச் சட்டசபைக்கும், மத்தியக் கூட்டாட்சிச் சட்டசபைக்கும் வாக்குரிமை வரையறை செய்வது பற்றி எதிர்காலத்தில் நடைபெறவுள்ள விவாதங்களில் தீண்டப்படாதவர்களின் பிரதிநிதியாகத் திகழும் அறிவில் சிறந்த இந்த மனிதர்தான் இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் மிக முக்கியமான பங்களிப்பைச் செய்யப் போகிறார்" என்று அப்பத்திரிக்கை எழுதியது.

சண்டே கிரானிக்கிள், கேசரி மற்றும் பல நாளேடுகள் அம்பேத்கர் இரண்டாவது வட்டமேசை மாநாட்டிற்குத் தேர்வு செய்யப்பட்டிருப்பதுபற்றித் தம் மன மகிழ்ச்சியை வெளியிட்டன. இந்தியச் சமூக ஊழியர் சங்கப் பத்திரிக்கை டாக்டர் அம்பேத்கரை



1942 ஜூலை மாதம் நாகபுரியில் 'அனைத்திந்தியத் தீண்டப்படாத சாதிகள் பேரவை' நடத்திய பெண்கள் மாநாட்டில் அம்பேத்கர் உரையாற்றுகிறார்.

யும், என்.எம். ஜோஷியையும் பாராட்டியது. இவர்கள் இருவரும் சமுகத்தில் எளிய பிரிவிலிருந்து வந்தவர்கள். ஒருவர் தொழிலாளர் வர்க்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்; மற்றவர் ஒடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதியாகத் திகழ்கிறார். இந்த நாட்டில் இதுவரை நடத்தப்பட்டுவந்துள்ள 'மேதாவித்தன அரசியலுக்கு' இவர்கள் புதியவர்கள்தான்; ஆனால் எளிய மக்களின் நன்னம்பிக்கைக்கு உரியவர்களாக இருவரும் திகழ்கிறார்கள். இம்மக்களுடைய கோரிக் கைகளுக்காகப் போராடுகிறார்கள்; இவர்களைச் சுற்றியுள்ள திறமை சாலிகளின் கவரும் புன்னகை கண்டு மயங்காதவர்கள்; உயர்த்திப் பிடிக்க வேண்டிய சில கொள்கைகளை நடைமுறைப்படுத்துமாறு இவர்கள் வற்புறுத்துவதை எந்தச் சூழலாலும் தடுக்க முடியாது'' என்று அப்பத்திரிக்கை எழுதியது. இதற்குச் சில நாட்களுக்கு முன்னர், பம்பாயில் முன்னணியில் இருந்த தேசிய நாளேடான ஃபிரீ பிரஸ் ஜெர்னல் (Free Press Journal) பத்திரிகையில் இலண்டன் நிருபர் மிஸ். மேயோவிற்குப் பதிலளித்து எழுதிய கட்டுரையில் அம்பேத்கர் முதல் வட்டமேசை மாநாட்டில் செய்த அரும்பணிக்குப் புகழ்மாலை சூட்டினார். அம்பேத்கர் அச்சமற்ற, சுதந்திரமான, நாட்டுப்பற்று மிக்க சிந்தனையாளர்; முதலாவது வட்டமேசை மாநாட்டில் அவர் காட்டிய அச்சமற்ற இயல்பை இந்துக்களாலும் முகம்மதியர்களாலும் தாங்கிக்கொள்ள முடியவில்லை. வட்டமேசை மாநாட்டில் அம்பேத்கர் ஆற்றிய தொடக்கவுரைதான் அம்மாநாட் டில் ஆற்றப்பட்ட எல்லா உரைகளைவிடவும் சிறந்ததாக இருந்தது என்று அந்த நாளேட்டின் இலண்டன் நிருபர் மேலும் குறிப்பிட் டிருந்தார்.

காந்தி வட்டமேசை மாநாட்டில் கலந்துகொள்வதுபற்றி அது வரை முடிவு செய்யப்படவில்லை. அதனால் அனைவரின் கவனமும் பம்பாயில் மலபார் ஹில் பகுதியில் காந்தி தங்கியிருந்த மணிபவன் பக்கம் திரும்பியது. காரணம் காந்தி அங்கே தங்கிக் கொண்டுதான் அவருக்கு உரிய தன்மையில் எளிதில் விளங்கிக் கொள்ளமுடியாத சித்து விளையாட்டுகளையும், அரசியல் நாடகத் தையும் நடத்திக்கொண்டிருந்தார். அந்த அரசியல் சந்தடியிலும் அவசர நேரத்திலும்கூட அம்பேத்கரின் கோரிக்கைகள்பற்றி ஆழம் பார்க்க காந்தி விரும்பினார். அதனால் 1931 ஆகஸ்டு 6ஆம் நாள் காந்தி அம்பேத்கருக்கு ஒரு கடிதம் எழுதினார். அம்பேத்க ருக்கு நேரம் ஒதுக்க முடியுமானால் அன்றிரவு எட்டு மணிக்குத் தானே வந்து அவரைச் சந்திக்க விரும்புவதாகக் காந்தி அக்கடிதத்தில் எழுதியிருந்தார். சங்கிலியிலிருந்து அம்பேத்கர் அப்பொழுதுதான்

திரும்பியிருந்தார். அவருக்குக் காய்ச்சல் கண்டிருந்தது. ஆயினும் அன்றிரவு எட்டு மணிக்குத் தானே நேரில் காந்தியைச் சந்திக்க வருவதாகக் கடிதம் எழுதினார். ஆனால் அன்று மாலை அம்பேத்கருக்குக் காய்ச்சல் 106 டிகிரி அளவிற்கு அதிகரித்துவிட்டது. எனவே காய்ச்சல் தணிந்தபின் வந்து சந்திப்பதாகக் காந்திக்கு மீண்டும் கடிதம் எழுதினார்.

ஆகஸ்டு 14ஆம் நாள் பகல் இரண்டு மணிக்கு மணிபவனில் காந்தியைச் சந்திக்க அம்பேத்கர் சென்றார். அம்பேத்கருடன் அவருடைய முன்னணித் தோழர்களான தியோராவ் நாயக், சிவதார்க்கர், பிரதான், பவுராவ் கெயிக்வாடு, கதிரேக்கர் ஆகியோர் சென்றனர். மூன்றாவது மாடியில் காந்தி இருக்கிறார் என்று அம்பேத்கரிடம் தெரிவிக்கப்பட்டது. அப்போது காந்தி அவருடைய கட்சிக்காரர்களுடன் பேசியவாறே சில பழங்களைத் தின்று கொண்டிருந்தார். அம்பேத்கரும் அவருடைய தோழர்களும் காந்திக்கு வணக்கம் தெரிவித்துவிட்டு அங்கிருந்த விரிப்பின் மீது அமர்ந்தனர். முகம்மதியர் அல்லாத, ஐய்ரோப்பியர் அல்லாத தலைவர்களிடமும் பிரதிநிதிகளிடமும் காந்தி எப்பொழுதும் நடந்து கொள்ளுகின்ற முறைப்படி, அம்பேத்கரைச் சற்று நேரம் நேராகப் பார்க்காமல் மிஸ். ஸ்லேடு அவர்களோடும் மற்றவர்களோடும் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தார். காந்தியாரின் அக்கறையின்மை மேலும் சிறிது நேரம் நீடித்ததால் மோதல் ஏற்படுமோ என்று அம்பேத்கருடன் வந்திருந்தவர்கள் அஞ்சினார்கள். அந்நிலையில் காந்தி அம்பேத்கரின் பக்கம் திரும்பிப் பார்த்தார். அம்பேத்கரைக் காந்தி காண்பது அதுவே முதன்முறையாகும். வழக்கமான உசாவல்களைப் பரிமாறிக்கொண்டபின் பேசவேண்டிய செய்தியைப்பற்றிப் பேச்சு தொடங்கியது.

காந்தி: நன்று, டாக்டர், இதைப்பற்றி நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

அம்பேத்கர்: உங்களுடைய கருத்துகளை நான் அறிவதற்காக என்னை அழைத்திருக்கிறீர்கள். அன்புகூர்ந்து நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்களோ அதை என்னிடம் சொல்லுங்கள்; அல்லது என்னிடம் கேள்விகளாகக் கேளுங்கள், நான் பதில் சொல்கிறேன்.

காந்தி: (அம்பேத்கரை உற்றுப் பார்த்தவாறே) காங்கிரசைப் பற்றியும் என்னைப் பற்றியும் உங்களுக்குச் சில குறைகள்

இருப்பதாக நான் அறிகிறேன். தீண்டப்படாதவர்களின் பிரச்சி னையைப்பற்றி என் பள்ளிப் பருவம் முதல் - நீங்கள் அப்போது பிறந்து இருக்க மாட்டீர்கள், நான் சிந்தித்துக் கொண்டு வருகின்றேன் என்பதை நான் உங்களிடம் கூறவிரும்புகின் றேன். காங்கிரசின் வேலைத்திட்டத்தில் இந்தப் பிரச்சினையைச் சேர்த்திடவும், காங்கிரசின் மேடைகளில் இதை ஒரு அரசியல் கொள்கை முழக்கமாக ஆக்கிடவும் நான் எந்த அளவிற்குக் கடும்முயற்சிகளை மேற்கொண்டேன் என்பதை நீங்களும் அறிந்திருப்பீர்கள். காங்கிரசுத் தலைவர்கள் இப்பிரச்சினையை மதம், சமூகம் தொடர்பானது என்று காரணங்காட்டி அரசியலில் இதை இணைப்பதை எதிர்த்தார்கள். அத்துடன் நிற்கவில்லை; தீண்டப்படாதவர்களின் மேம்பாட்டிற்காகக் காங்கிரசுகட்சி ஏறக் குறைய இருபது இலட்சம் உருபாய் செலவிட்டுள்ளது. உங்களைப் போன்ற மனிதர்கள் என்னையும் காங்கிரசையும் எதிர்ப்பது எனக்கு உண்மையில் வியப்பூட்டுகிறது. உங்களு டைய நிலைப்பாட்டை வலியுறுத்திடும் வகையில் நீங்கள் ஏதேனும் கூற விரும்பினால் தாராளமாய்ச் செல்லலாம்.

அம்பேத்கர்: மகாத்மாஜி, நான் பிறப்பதற்கு முன்பே தீண்டப்படாத வர்களின் பிரச்சினையைப்பற்றி நீங்கள் சிந்திக்கத் தொடங்கிவிட் டீர்கள் என்பது உண்மைதான். வயதானவர்களும் பெரியவர்க ளும் அவர்களுடைய வயதைப்பற்றி வலியுறுத்திக் கூற விரும்புகிறார்கள். உங்களுடைய முயற்சியால்தான் காங்கிரசு இப்பிரச்சினையை ஏற்றுக்கொண்டது என்பது உண்மைதான். ஆயினும் உங்களிடம் ஒரு செய்தியை வெளிப்படையாகச் சொல்லிவிட விரும்புகின்றேன். காங்கிரசு இப்பிரச்சினைக்கு ஒரு பெயரளவு அங்கீகாரம் கொடுத்தது என்பதற்கு மேல் இதற்காக எதுவும் செய்யவில்லை. தீண்டப்படாதவர்களை உயர்த்துவதற் காகக் காங்கிரசு இருபது இலட்சம் உருபாய்க்கு மேல் செலவு செய்தது என்று சொன்னீர்கள். இத்தொகை முழுவதும் வீணாயிற்று என்றே நான் சொல்லுவேன். இவ்வளவு பெரிய தொகை என்னிடம் இருந்திருக்குமானால், என்னுடைய மக்க ளின் மனநிலையில், பொருளாதார நிலையில் வியப்பூட்டும்படி யான மாற்றங்களை நான் ஏற்படுத்தியிருப்பேன். அத்தகைய நிலை உருவாகியிருப்பின், நெடுநாட்களுக்கு முன்பே நீங்கள் என்னைச் சந்திப்பது தவிர்க்க முடியாத ஒன்றாக ஆகியிருக்கும். காங்கிரசு தன் கொள்கைகள் என்று சொல்லிக் கொள்பவற்றில் மனமார்ந்த ஈடுபாட்டுடன் இருப்பதில்லை. இதில் உண்மையான

ஈடுபாடு காங்கிரசுக்கு இருந்திருக்குமானால் காங்கிரசுக் கட்சியில் உறுப்பினராகச் சேருவதற்குக் கதரை அணிய வேண்டும் என்பதைக் கட்டாயம் என்று ஆகிக்யிருப்பது போல், தீண் டாமை ஒழிப்பையும் ஒரு நிபந்தனையாக அது கட்டாயம் ஏற்படுத்தியிருக்கும். தீண்டப்படாத ஆணையோ அல்லது பெண்ணையோ தன் வீட்டில் வேலைக்கு வைத்துக்கொள்ளாத - தீண்டப்படாத மாணவனைத் தன் குடும்பத்தில் வைத்து வளர்க்காத அல்லது வாரத்தில் ஒரு நாளைக்கேனும் தீண்டப்ப டாத வகுப்பு மாணவனுடன் தன் வீட்டில் உணவு உண்ணாத எவரையும் காங்கிரசில் உறுப்பினராகச் சேர்த்திட முடியாது என்று ஏன் விதி செய்யவில்லை? அத்தகையதோர் நிபந்த னையை ஏற்படுத்தியிருப்பின், காங்கிரசுக் கட்சியின் ஒரு மாவட்டத் தலைவர் தீண்டப்படாதவர்களின் கோயில் நுழை வுக்கு எதிராகச் செயல்பட்ட கேவலமான நிலையை நீங்கள் தவிர்த்திருக்கலாம்.

காங்கிரசு தன்னை வலிமைப்படுத்திக்கொள்ள விரும்புகிறது; ஆகவே இதுபோன்ற நிபந்தனைகளை விதிப்பது நடைமுறைக் குப் பொருந்திவராது என்று நீங்கள் கூறலாம். அப்படியானால், காங்கிரசுக் கட்சி கொள்கைக்கு அளிக்கிற முதன்மையைவிட, கட்சியை வலிமைப்படுத்துவதற்குத்தான் அதிகமாகக் கவலை எடுத்துக்கொள்ளுகிறது என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகி றேன். உங்கள்மீதும் காங்கிரசுமீதும் என் குற்றச்சாட்டு இதுதான். பிரிட்டிஷ் அரசு தன் மனப்போக்கை மாற்றிக் கொள்ளவில்லை என்று நீங்கள் கூறுகிறீர்கள். எங்கள் பிரச்சினை யைப் பொறுத்த அளவில் இந்துக்கள் தங்கள் மனப்போக்கினை மாற்றிக்கொண்டதாகத் தெரியவில்லை என்று நானும் கூறுகின் றேன். எவ்வளவு காலத்திற்கு அவர்கள் பிடிவாதமாக இருக்கிறார் களோ அந்நாள்வரை நாங்களும் காங்கிரசையோ, இந்துக்க ளையோ நம்பமாட்டோம். சுயஉதவி, சுயமரியாதையை நாங்கள் நம்புகிறோம். பெரிய தலைவர்களிடமோ மகாத்மாக்களி டமோ நாங்கள் நம்பிக்கை வைக்கத் தயாராக இல்லை. இதைப்பற்றி நான் மிகவும் கடுமையான முறையில் வெளிப்ப டையாகவே தெளிவுபடுத்திட விரும்புகிறேன். விரைவில் மறைந்துபோகும் மாய உருவங்களைப்போல மகாத்மாக்கள் என்பவர்கள் பெரும்பரபரப்பைக் கிளப்பிக்கொண்டு வருகிறார் கள்; ஆனால் அவர்களால் எந்த உயர்வும் ஏற்படுவதில்லை என்பதை வரலாறு கூறுகிறது. எங்களுடைய இயக்கத்தைக்

காங்கிரசுக்காரர்கள் ஏன் எதிர்க்கிறார்கள்? என்னை ஏன் துரோகி என்று சொல்லுகிறார்கள்?

அப்பொழுது அம்பேத்கர் மிகவும் அமைதியிழந்து உணர்ச்சி வசப்பட்ட நிலையில் இருந்தார். அவர் முகம் சிவந்தது; கண்கள் பளிச்சிட்டன. கொஞ்சநேரம் அமைதியாய் இருந்தபின் மனங் கசந்த கோபக்குரலில் அம்பேத்கர் பேசத் தொடங்கினார்.

அம்பேத்கர்: காந்திஜி, எனக்குத் தாய்நாடு இல்லை.

காந்தி: (அதிர்ச்சியுற்று அவர் பேச்சை இடைமறித்து) உங்களுக்குத் தாய்நாடு இருக்கிறது. வட்டமேசை மாநாட்டில் நீங்கள் ஆற்றிய செயல்கள்பற்றி எனக்குக் கிடைத்த அறிக்கைகளின் அடிப்படையில் நீங்கள் மதிப்புமிக்க ஒரு நாட்டுப்பற்றாளர் என்பதை நான் அறிகிறேன்.

அம்பேத்கர்: நீங்கள் எனக்குத் தாய்நாடு இருப்பதாகக் கூறுகிறீர்கள்; ஆயினும் எனக்குத் தாய்நாடு இல்லை என்றே மீண்டும் கூறுவேன். இங்கே நாங்கள் நாய்களைவிட, பூனைகளைவிட இழிவாக நடத்தப்படும்போது இதை என்னுடைய சொந்தத் தாய்நாடு என்று எப்படி நான் அழைக்க முடியும்? இதை என் சொந்த மதம் என்று எப்படி எண்ண முடியும்? இங்கே குடிப்பதற்குக்கூட நாங்கள் தண்ணீரைப் பெறமுடியாதே! சுயமரியாதை உணர்வுள்ள எந்தவொரு தீண்டப்படாதவனும் இந்த நாட்டைப்பற்றிப் பெருமையாக நினைக்கமுடியாதே? இந்த நாடு எங்கள் மீது எண்ணற்ற அநீதிகளையும் இழிவுகளையும் சுமத்தியுள்ளது. ஆகவே அறிந்தோ அறியாமலோ இந்த நாட்டின்பேரில் விசுவாசம் கொள்ளாத நிலைக்கு நாங்கள் இரையாகிட நேர்ந்தால் அதற்கான பொறுப்பு இந்நாட்டையே சாரும். துரோகி என்று என்னை அழைப்பதற்காக நான் வருந்தவில்லை; ஏனெனில் எங்கள் செயல்களுக்குக் காரணமாக எந்த மண் இருக்கிறதோ அதுதான் நான் துரோகி என்று அழைக்கப்படக் காரணமாக இருக்கிறது. நீங்கள் சொன்னது போல, இந்த நாட்டின் தேசப் பக்திக்கு உதவுகின்ற, பயன்படும்படியான தேசியத்தொண்டு நான் ஏதேனும் செய்தி ருந்தால், அது என் மாசிலா மனச்சான்றினால் செய்யப்பட்டதே தவிர, என்னுள் இருக்கும் தேசப்பற்றினால் அன்று! காலங்கால மாக நசுக்கப்பட்டுக் கிடக்கும் என் மக்களுக்கு மனித உரிமைகளைப் பெற்றுத் தருவதற்காக நான் மேற்கொண்ட

முயற்சிகளினால் இந்த நாட்டிற்கு நான் ஏதாவது கேடு செய்திருப்பின் அது பாவமாகாது. என் செயல்பாடு காரணமாக இந்த நாட்டிற்குத் தீங்கு ஏதும் விளையவில்லை என்றால், அதற்கு என் தூய மனச் சான்றுதான் காரணம். என் மனச்சான்று காட்டும் நெறிப்படி என் மக்களுக்கு மனித உரிமைகளைப் பெற்றுத்தர முயற்சித்துக் கொண்டிருக்கிறேன். இந்நாட்டைக் கேடு சூழவேண்டும் என்று மனத்தாலும் எண்ணுவது இல்லை; அத்தன்மையில் செயல்படுவதுமில்லை.

அங்கிருந்த சூழ்நிலை கனிவற்றதாக மாறியது. முகங்களிலோ சிடுசிடுப்பு. காந்தி பொறுமை இழந்துகொண்டிருந்தார். அம்பேத்கரின் பேச்சுக்குப் பதிலடி கொடுக்க விரும்பினார். அந்நிலையில்தான் அந்தப் பேட்டியின் நோக்கம் தொடர்பான மிக முக்கியமானதொரு கேள்வியை அம்பேத்கர் கேட்டார்.

அம்பேத்கர்: ''தீண்டப்படாதவர்களைவிடச் சமூக, அரசியல், பொருளாதார நிலைகளில் முஸ்லீம்களும் சீக்கியர்களும் அதிக அளவில் முன்னேறியவர்களாக இருக்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். முதல் வட்டமேசை மாநாடு முஸ்லீம்களின் கோரிக்கைகளுக்கு அரசியல் அங்கீகாரம் அளித்து, அவர்களுடைய அரசியல் பாதுகாப்பிற்கு ஏற்ற பரிந்துரை செய்துள்ளது. காங்கிரசு முஸ்லீம்களின் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டிருக்கிறது. முதல் வட்டமேசை மாநாடு தீண்டப்படாத வகுப்பு மக்களின் அரசியல் உரிமைகளையும் அங்கீகரித்துள்ளது. அவர்களுடைய அரசியல் உரிமைக் காப்புகளுக்காகவும் அவர்கள் போதிய அளவில் பிரதிநிதித்துவம் பெறவும், பரிந்துரை செய்துள்ளது. எங்களைப் பொறுத்தவரையில் இவை தீண்டப்படாத வகுப்பு மக்களுக்கு நன்மை தருவனவாகும். இதுபற்றி உங்கள் கருத்து என்ன?

காந்தி: அரசியல் ரீதியாக இந்துக்களிடமிருந்து தீண்டப்படாதவர்களைத் தனியாகப் பிரிப்பதை நான் எதிர்க்கிறேன். அது முற்றிலும் தற்கொலைக்கு ஒப்பானதாகும்.

அம்பேத்கர்: (எழுந்தவாறே) வெளிப்படையாக உங்கள் கருத்தைச் சொன்னதற்கு நன்றி! இந்த இன்றியமையாத பிரச்சினையைப் பொறுத்தமட்டில் நம் இருவரின் நிலைப்பாடு என்ன என்பதை நான் தெரிந்துகொண்டது நல்லது; நான் விடைபெற்றுக் கொள்கிறேன்.[50]

அம்பேத்கர் அக்கூடத்தை விட்டு வெளியேறினார். அவருடைய ஆற்றல் முழுவதையும் ஒன்றுதிரட்டிப் போராட உறுதி பூண்டார். நசுக்கப்பட்ட அவருடைய மக்களுக்கு மனித உரிமைகளைப் பெற்றுத்தர வேண்டுமென்ற உறுதிப்பாடு அவர் முகத்தில் ஒளிர்ந்தது.

காந்தி-அம்பேத்கர் சந்திப்பு சோகம் கப்பியதாக முடிந்தது. இந்திய அரசியலின் மாபெரும் தலைவர் காந்தி; அரசியலில் அவர் ஒரு சர்வாதிகாரி; இந்திய மக்களின் முடிசூடா மன்னர் அவர்; காந்தியின் சக்திமிக்க செயல்கள் வெகுமக்களை அவர்பால் ஈர்த்தன. காந்தியிடம் மறுத்துப் பேசுவது என்பதே நிலையான வெறுப்புக்கும் மாறாத கசப்புணர்வுக்கும் ஒருவர் ஆளாவது போன்றதாகும். அவ்வாறு ஒரு இந்துத் தலைவர் பதிலுக்குப் பதில் பேசுவது என்பது காந்தியின் கற்பனைக்கும் எட்டாத ஒன்றாகும். காந்திக்கும் அம்பேத்கருக்கும் இடையிலான கொள்கைப் போராட்டம் எதிர்ப்பு வடிவம் எடுத்தது. எதிர்ப்புத் தீ மேலும் தூண்டிவிடப்பட்டது. காந்திக்கும் அம்பேத்கருக்கும் இடையே நடைபெறப்போகும் மோதலின் தொடக்கம்தான் அந்தப் பேட்டி.

அம்பேத்கர் ஒரு அரிஜன் அல்லர் என்று காந்தி நினைத்தார் என்பதுதான் மாபெரும் வியப்புக்குரிய செய்தியாகும். காந்தி இலண்டன் செல்லும்வரையில் அம்பேத்கர் ஒரு பார்ப்பனர் என்றே நினைத்திருந்தார். அவர் அரிசனங்கள் நலனில் ஆழ்ந்த அக்கறை கொண்டிருந்ததால் வரம்பு கடந்து பேசினார் என்று காந்தி எண்ணிக் கொண்டிருந்தார்.[51]

II

அன்றிரவு சர். கவாஸ்ஜி ஜகாங்கீர் அரங்கில் தீண்டப்படாத வகுப்புப் பெண்கள் நடத்திய வழியனுப்பு விழாவில் அம்பேத்கர் மக்கள் கிளர்ந்தெழும்படியாகப் பேசினார். "உங்களுடைய அடிமை நிலையை வேரோடும் வேரடி மண்ணோடும் களைந்தெறிய வேண்டும் என்ற உறுதிப்பாட்டில் விடாப்பிடியாக நீங்கள் நின்று அதற்காக எத்தகைய இடையூறுகளையும் இன்னல்களையும் ஏற்றிடத் தயாராகிவிட்டால், நான் ஏற்றுக்கொண்டிருக்கின்ற பெருஞ் சுமையான பணியின் வெற்றியும் பெருமையும் உங்களுடையதாகி விடும்" என்று கூறினார். அதே அரங்கில் அடுத்து நடைபெற்ற தீண்டப்படாத வகுப்பு ஆண்கள் கூட்டத்திலும் அம்பேத்கர் கலந்துகொண்டு உரையாற்றினார். கேட்டோர் நெஞ்சங்களை

நெகிழ்வித்த அப்பேச்சில், அவர்கள் பொழியும் எல்லையற்ற அன்புதான் அவருடைய மாபெரும் உந்து விசையாக விளங்குகிறது என்று கூறினார். வட்டமேசை மாநாட்டைப்பற்றியும் அங்கே குறிப்பிட்டுப் பேசினார். "வட்ட மேசை மாநாட்டிற்கு அழைக்கப் பட்டுள்ள நூற்று இருபத்தைந்து பேர்களில் நம் பிரதிநிதிகள் இருவர் தான் - நாங்கள் இருவராக இருப்பினும் உங்கள் நலனுக்காக விண்ணகத்தை மண்ணகத்துடன் இணைப்பதுபோன்று பாடுபடு வோம் என்று உறுதிகூற விரும்புகின்றேன். இன்று பிற்பகல் காந்தியுடன் பேசினேன். உங்களுடைய முன்னேற்றத்திற்காக அவர் இப்போது ஒன்றும் செய்யமாட்டார். நாம் நம் சொந்தக் கால்களில் நின்றுகொண்டு எந்த அளவிற்கு முடியுமோ அந்த அளவிற்கு நம் உரிமைகளுக்காகப் போராட வேண்டும். ஆகவே உங்கள் போராட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லுங்கள்; உங்கள் ஆற்றல்களை ஒன்றுதிரட்டுங்கள்; அதிகாரமும் மரியாதையும் போராட்டங்களின்மூலமாகவே உங்களை வந்தடையும்" என்று முழங்கினார்.

அடுத்த நாள் 1931 ஆகஸ்டு 15 சனிக்கிழமை வட்ட மேசை மாநாட்டிற்குச் செல்லும் பிரதிநிதிகள் கிட்டத்தட்ட எல்லாரும் எஸ்.எஸ். மூல்தான் கப்பலில் இலண்டனுக்குப் பயணமாகத் தயாராக இருந்தார்கள். பம்பாயில் பெல்லார்டு துறைமுகம் அன்று கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது. இளவரசர்கள் முதல் சாதாரணமானவர்கள் வரையிலான அனைத்து நிலையினரும் அன்று அத்துறைமுகத்தில் குழுமியிருந்தனர். நண்பர்களும், ஆர்வலர்களும், தொண்டர்களும், பக்தர்களும், அவரவருடைய அரசர்களும், தலைவர்களும் நலமுடன் கடற்பயணம் செய்து இலண்டன் சென்று வெற்றியிடன் திரும்ப வேண்டும் என்று வாழ்த்தி வழியனுப்ப வந்திருந்தனர். டாக்டர் அம்பேத்கர் காரிலிருந்து இறங்கியதும் அவருடைய தொண்டர்கள் தொடர்ந்து கைதட்டி ஆரவாரமான வரவேற்பு அளித்தனர். மோலே இரயில் நிலையத்துக்கு வெளியே இரண்டாயிரம் தொண்டர்கள் கூடியிருந்தனர். அம்பேத்கர் மோலே நிலையத்திற்கு வந்து சேர்ந்ததும், 'அம்பேத்கர் வாழ்க!' என்று முழக்கமிட்டு வரவேற்றனர்.

கப்பல் தளத்தில் அம்பேத்கர் சர் பிரபா சங்கர் பட்டானியைத் தற்செயலாகச் சந்திக்க நேர்ந்தது. அப்போது, 'காந்தியுடன் நீங்கள் பேசிய பேச்சின் முடிவு என்னவாயிற்று?' என்று பட்டானி கேட்டார். பேட்டியின் நடுவில் தான் அங்கிருந்து எழுந்து வெளியே

சென்றுவிட்டதால் அதன்பிறகு என்ன நடந்தது; அதன் முடிவு என்ன என்பது தனக்குத் தெரியாது என்று பட்டானி அம்பேத்கரிடம் கூறினார். நைட் பட்டம் பெற்றிருந்த பட்டானி பேசிய தொனியின் தன்மையிலிருந்து அம்பேத்கர் ஒரு நுட்பத்தை உய்த்துணர்ந்துகொண்டார். அதனால் நீங்கள் பேட்டியின்போது கூடத்திலிருந்து இடையிலேயே ஏன் எழுந்துசென்று விட்டீர்கள் என்று அம்பேத்கர் வினவினார். ஒரு நல்ல மனிதரை அவருடைய பெருமையைக் குலைக்கும் வகையில் ஒரு பழி சுமத்துவோன் திட்டினால் அத்தீயவனின் நாக்கை அறுத்தெறிய வேண்டும்; அவ்வாறு செய்ய முடியாவிட்டால் அவ்விடத்தைவிட்டு உடனே அகல வேண்டும் என்று இந்து மதச் சாஸ்திரங்கள் கூறுகின்றன என்று ஒரு வகையான மனக் கொதிப்புடன் கூறினார். பட்டானியிடம் அறிவற்ற வெறி மேலும் பெருகி வருவதைக் கண்டு அம்பேத்கர் தமக்குள் சிரித்துக்கொண்டார். முகத்தில் எரிச்சலூட்டும் படியான உணர்வைச் சிறிதளவும் காட்டாமல் அம்பேத்கர் பட்டானியிடம், 'கைதேர்ந்த கபட வேடதாரிக்கும் கேடுகெட்ட வகையில் முகஸ்துதி செய்வோனுக்கும் உங்கள் இந்து சாஸ்திரத்தில் என்ன தண்டனை விதிக்கப்பட்டுள்ளது?' என்று கேட்டார். அந்தச் சாட்டையடியின் வீச்சினால் பட்டானி கொதிப்படைந்து நீங்கள் இப்படிக் கடுமையாகத் தாக்கிப் பேசுவதன் பொருள் என்ன என்று அம்பேத்கரிடம் கேட்டார். தான் சொல்ல நினைத்தது என்ன என்பதையும் பட்டானி புரிந்துகொண்டது என்ன என்பதைப்பற்றியும் அம்பேத்கர் விளக்கினார். உங்களைப் போன்ற கேடுகெட்ட வெறும் புகழ்ச்சியாளர்களின் பிடியிலிருந்து காந்தியை விடுதலை செய்ய வேண்டும் என்பதே என் எண்ணம் என அம்பேத்கர் அறைந்தார். அங்கிருந்த காவல்துறை கமிஷ்னர் வில்சன் தலையிட்டதால் அவர்களிடையே மோசமான நிலை உருவாகாமல் தடுக்கப்பட்டது. இச்சம்பவத்தால் பட்டானிக்கு நல்லறிவு வந்திருக்க வேண்டும். பெருந்தலைவர்கள் தமக்குத் தாமே தன்னாய்வு செய்வதையும் அவர்களைச் சுற்றியிருக்கின்ற முகஸ்துதி செய்யும் மனிதர்களை விலக்கிவிடுவதையும் மேற்கொள்வார்களேயானால் அத்தலைவர்களால் இவ்வுலகிற்குக் கிடைக்கும் பயன்களில் ஒரு சிறு பகுதிகூடக் குறைந்துவிடாது.

அம்பேத்கர் பயணம் செய்த அதே கப்பலில் சாப்ரு, ஜெயகர், அய்யங்கார் ஆகியோரும் பயணம் செய்தனர். காந்தியும் மாளவியாவும் வட்டமேசை மாநாட்டிற்கு வருவதற்கான முயற்சிகளை மேற்கொள்வோம் என்று ஒரு பேட்டியில் கூறினார்கள்.

அதே கப்பலில் புறப்படுவதாக இருந்த சரோஜினி நாயுடுவும், மாளவியாவும் காந்தி தன் புறப்பாடுபற்றி இன்னும் முடிவு செய்யாதிருந்ததால், அவர்களுடைய பயணத்தை ரத்து செய்து விட்டனர். கப்பலில் அம்பேத்கர் ஒரு பேட்டி தந்தார். வட்டமேசை மாநாட்டிற்குக் காந்தி செல்வதைத் தள்ளிப் போடுவதுபற்றிக் குறிப்பிட்டுப் பேசினார். ''இந்தியாவின் நலன்களைவிடப் பர்தோலி இயக்க நலனைப் பெரிதென்று எண்ணுவது முட்டாள்தனத்தின் உச்சக்கட்டமாகும். காந்தி சிறுசிறு குறைபாடுகள்பற்றி அதிகமாகக் கவலைப்படுகின்றார். ஆனால் பெரிய பிரச்சினைகளில் அக்க றையே காட்டாமல் இருக்கிறார். பெரிய பிரச்சினைகளைத் தீர்ப்பதன்மூலம் அப் பிரச்சினைகளின் பேரில் அதிகாரம் செலுத்து பவர்களையே கட்டுப்படுத்தி விடமுடியும். இதில் காந்தியின் போக்கினை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.'' என அம்பேத்கர் குறிப்பிட்டார்.

தன்னுடைய கோரிக்கைகளைக் காந்தி எதிர்க்கப்போவதுபற்றி அப்பொழுது அம்பேத்கர் ஆழமாகச் சிந்தித்துக்கொண்டிருந்தார். இந்தியாவில் கூட்டங்களை நடத்தித் தீண்டப்படாதவர்களின் கோரிக்கைகளைப்பற்றி காந்தி கொண்டுள்ள போக்கினைக் கண்ட னம் செய்யுமாறு அவருடைய செயலாளர் வழியாக அவருடைய மக்களைக் கேட்டுக்கொண்டார். சூயஸ் கால்வாயிலிருந்து சிவதார்க்க ருக்கு மற்றொரு மடல் எழுதினார். முதல் வட்ட மேசை மாநாட்டின்போது சிறுபான்மையினர் துணைக்குழுவிடம் தான் அளித்த அறிக்கையின் நகல்களை இலண்டனுக்கு அனுப்புமாறு அக்கடிதத்தில் அவர் கேட்டிருந்தார். தான் கையோடு எடுத்து வர மறந்துவிட்ட தோல்பையை ராவ்பகதூர் ஆர். சீனிவாசனிடம் கொடுத்தனுப்புமாறும் எழுதியிருந்தார்.

கப்பல் பயணத்தின்போது ஜெயகரும், ரேவா சமஸ்தானத்தின் மன்னரும், மற்ற தலைவர்களும் தீண்டப்படாதவர்களின் சமத்துவச் சேவாதளத்தின் எழுச்சிமிகு காட்சியைப்பற்றிய தங்கள் மகிழ்ச்சி யைத் தெரிவித்தனர். ஷவுகத் அலியும் தன் மகிழ்ச்சியைப் புலப்படுத்தினார். அது போன்றதோர் தொண்டர் படையை உருவாக்கிட இந்து மகா சபையை நேருக்கு நேர் சந்திக்கக்கூடிய கட்டுப்பாடுமிக்க தொண்டர் படை ஒன்றைத் தீண்டப்படாத இந்துக்கள் உருவாக்கியிருக்கிறார்கள் என்று களிப்புடன் கூறிய டாக்டர் மூஞ்சே தன் மனத்தில் மறைந்திருந்த ஆசையை வெளிப்படுத்தினார். தீண்டப்படாதவர்களின் தலைவராக



வைஸ்ராய் நிர்வாகக்குழு உறுப்பினர்கள்.
நிற்பவர் வரிசையில் இடமிருந்து ஐந்தாவதாக இருப்பவர் அம்பேத்கர்.

அம்பேத்கர் திகழ்வதை முஞ்சே பாராட்டினார். அம்பேத்கர் தீண்டப்படாதவர்களின் மேம்பாட்டிற்காக ஆற்றிடும் அருந் தொண்டை அம்மக்கள் நன்கு அறிந்திருக்கிறார்கள். அதனால் சாதி இந்துக்களைப் போலத் தீண்டப்படாதவர்கள், அக்கறையற்றவர் களாகவோ, நன்றி கெட்டவர்களாகவோ இல்லை. சாதி இந்துக்கள் அவர்களின் நலனுக்காகப் பாடுபடுவர்களைப்பற்றி அறியாதவர் களாகவே இருக்கின்றனர் என்று முஞ்சே கூறினார்.

1931 ஆகஸ்டு 29ஆம் நாள் அம்பேத்கர் இலண்டனைச் சென்றடைந்தபோதே இன்புளுயன்சா காய்ச்சலால் பீடிக்கப்பட்டி ருந்தார். அத்துடன் கடுமையான வாந்தியும் வயிற்றுப் போக்கும் இருந்தன. அந்நோய் அவருடைய உடல் வலிமையை உறிஞ்சியது. அவருடைய உடல் நலம் நைந்துபோய் நெருக்கடியானதோர் கட்டத்தில் இருப்பதாகச் சிவதார்க்கருக்குக் கடிதம் எழுதினார். செப்டம்பர் 7 திங்கட்கிழமை முதல் அவருடைய உடல் நலிவு குணமடையத் தொடங்கியது; ஆயினும் சோர்வு மட்டும் இருந்து கொண்டேயிருந்தது. சிவதார்க்கருக்கு எழுதிய ஒவ்வொரு கடிதத்தி லும் அவர் நோய்வாய்ப்பட்டிருப்பது பற்றித் தன்னுடைய மனைவியிடம் எதுவும் கூற வேண்டாம் என்று வலியுறுத்தினார். அந்நிலையிலும் ஒரு செய்தி அவர் சிந்தனையில் கனத்து நின்றது. மகத் துணை நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கில் தோற்றுப் போன வைதிக இந்துக்கள் தாணா மாவட்ட நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்திருந்தனர். தாணா மாவட்ட நீதிபதியின் தீர்ப்பு வெளிவர வேண்டிய நேரம் அது! அத்தீர்ப்பு வெளியானதும் அதைப்பற்றி உடனே தெரிவிக்குமாறு சிவதார்க்கருக்கு அம்பேத்கர் எழுதியிருந் தார்.

இதற்கிடையில் காந்தி, வல்லபாய் பட்டேல், ஜவர்கர்லால் நேரு, சர் பிரபா சங்கர் பட்டானி முதலானோர் சிம்லாவில் வைஸ்ராயைச் சந்தித்தனர். அதற்குமுன் நிலவிய கருத்து வேறுபாடு கள் பேசித் தீர்த்துக்கொள்ளப்பட்டன. இலண்டனுக்கு விரைவில் புறப்படும் கப்பலில் பயணமாவதற்காகக் காந்தி பம்பாய்க்குப் புறப்பட்டார். காந்தி, சரோஜினி நாயுடு, பண்டிட் மாளவியா மற்றும் குழுவினருடன் ஆகஸ்டு 29 அன்று இங்கிலாந்திற்குப் பயணமானார்; 1931 செப்டம்பர் 12இல் இலண்டனை அடைந்தார்.

III

1931 செப்டம்பர் 7ஆம் நாள் இரண்டாவது வட்ட மேசை மாநாடு தொடங்கியது. இம்முறை இதில் கலந்துகொண்டவர்களின்

எண்ணிக்கை அதிகப்படுத்தப்பட்டிருந்தது. முஸ்லிம் லீக் தலைவர் சர் முகம்மது இக்பால், கிறித்துவர்களின் பிரதிநிதியான டாக்டர் எஸ்.கே. தத்தா, பெரும் முதலாளியான ஜி.டி. பிர்லா, சனாதன சீர்திருத்தவாதியான பண்டிட் மாளவியா, இந்தியாவின் கவிக்குயில் சரோஜினி நாயுடு, சர் அலி இமாம் ஆகியோர் இரண்டாவது வட்டமேசை மாநாட்டிற்குப் புதியதாக அழைக்கப்பட்டிருந்தவர்கள் ஆவர். இரண்டாவது வட்டமேசை மாநாட்டின் குறிப்பிடத்தக்க சிறப்பு புரியாத புதிர்போடும் காந்தி பங்கு பெற்றமையாகும். முதல் வட்டமேசை மாநாடு டென்மார்க்கின் இளவரசர் இல்லாமல் நடந்த ஹேம்லட் (Hamlet) நாடகம் போன்றதாகும்.

மாநாடு தொடங்குவதற்குச் சில நாட்கள் முன்னர் பிரிட்டிஷ் அரசியலில் ஒரு மாற்றம் நடந்தது. தொழிற்கட்சி அரசு மாற்றப் பட்டு ஒரு தேசிய அரசு அமர்த்தப்பட்டிருந்தது. ஆயினும் ராம்சே மாக்டொனால்டுதான் முன்போலவே பிரதமராக நீடித்தார். இந்திய அரசுக்கான செயலாளராக இருந்த வெட்ஜ்வுட் பன் மாற்றப்பட்டு சர் சாமுவல் ஹோரே அப்பதவியில் அமர்த்தப்பட்டிருந்தார். சர்ச்சில் முதலான கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவர்கள் இந்தியருக்கு அரசியல் அதிகாரங்கள் மாற்றப்படுவதைக் கடுமையாக எதிர்த்தனர்.

வட்டமேசை மாநாட்டின் முக்கியமான பணி கூட்டாட்சி அமைப்புக் குழுவிலும், சிறுபான்மையினர் குழுவிலும்தான் பெரிதும் அடங்கியிருந்தது. முதல் வட்டமேசை மாநாட்டின்போது துணைக் குழுக்கள் தயாரித்து அளித்திருந்த அறிக்கைகளை மறு ஆய்வு செய்து மேலும் விரிவாக எழுத வேண்டிய வேலையை இரண்டாவது வட்டமேசை மாநாடு மேற்கொள்ள வேண்டியிருந் தது. கூட்டாட்சி அமைப்புக் குழுவில் 1931 செப்டம்பர் 15 ஆம் நாள் காந்தி தன் முதல் உரையை நிகழ்த்தினார்.

"காங்கிரசு இந்தியருள் எல்லாத் தரப்பினரையும் எல்லா வகுப்பினரையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. காங்கிரசு முஸ்லிம் களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது; ஏனெனில் முஸ்லிம்கள் காங்கிரசில் தலைவர்களாகவும் செயற்குழுவில் உறுப்பினர்களாக வும் இருக்கின்றனர். காங்கிரசு தீண்டப்படாதவர்களைப் பிரதிநிதித்து வப்படுத்துகிறது; எவ்வாறெனில் தீண்டாமை ஒழிப்பைக் காங்கிரசு தன் அரசியல் கொள்கைகளில் ஒன்றாகக் கொண்டிருக்கிறது. காங்கிரசு இந்தியச் சிற்றரசுக்களின் சார்பாகவும் நிற்கிறது; எவ்வாறெ னில் சிற்றரசுகளின் உள் விவகாரங்களில் தலையிடாமல் இருப்பது என்ற கொள்கையின்மூலம் அவர்களுக்கு இப்பொழுது கூட உதவி

செய்துவருகிறது. காங்கிரசு பெண்களின் பிரதிநிதியாகவும் திகழ்கி றது; எப்படியெனில் காங்கிரசின் தலைவர்களாக டாக்டர் அன்னி பெசன்ட்டும் சரோஜினி நாயுடுவும் இருந்தார்கள். நான்தான் காங்கிரசு கட்சியின் ஒரே பிரதிநிதி! எனவே இந்திய நாடு முழுமைக்கும் நான் ஒருவனே பிரதிநிதி'' என்று காந்தி பேசினார்.

காந்தியாரின் பேச்சிலிருந்து காற்று எந்தப்பக்கம் நோக்கி வீசுகிறது என்பதை அம்பேத்கர் புரிந்துகொண்டார். காந்தி பேசிய அன்றே அம்பேத்கரும் கூட்டாட்சி அமைப்புக் குழுவில் தன் முதல் உரையை நிகழ்த்தினார். கூட்டாட்சி அமைப்புக்குழு கண்ணை மூடிக்கொண்டு சமஸ்தானங்கள் கேட்பதைக் கொடுக்க முடியாது என்று சிற்றரசர்களை நோக்கி அம்பேத்கர் கூறினார். உடனே பிக்கனீர் சிற்றரசர் துள்ளியெழுந்து நின்று, சிற்றரசுகளும் தொகை குறிக்கப்படாத காசோலையில் கையெழுத்துப் போட்டுக் கொடுக்கமாட்டா என்று பதிலளித்தார். அதன்பின் அம்பேத்கர் அவருடைய கருத்தை வலியுறுத்திப் பேசினார். கூட்டாட்சியில் ஒரு சிற்றரசு சேரவேண்டுமானால் அதனுடைய குடிமக்களுக்கு நாகரிகமான நல்வாழ்வை வழங்குவதற்குத் தேவையான வளங்க ளும் தகுதியும் அதனிடம் இருக்கிறது என்பதை மெய்ப்பிக்க வேண்டும். கூட்டாட்சியின் நாடாளுமன்ற அவைக்கு சிற்றரசுகள் அனுப்பும் பிரதிநிதிகள் நியமன உறுப்பினர்களாக இருக்கக்கூடாது; தேர்தல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக இருக்க வேண் டும் என்று அம்பேத்கர் மிகவும் வலியுறுத்திக் கூறினார்.

நியமன முறையானது நிர்வாக அதிகாரிகளைச் சட்டசபைக்குக் கட்டுப்படாதவர்களாக ஆக்கிவிடுகிறது. ஆனால், சட்டசபையின் பெரும்பான்மையினரால்தான் ஆட்சி நடத்தப்படுகிறது என்ற ஒரு பொய்யான தோற்றத்தை இது அளிக்கிறது என்பது அம்பேத்கரின் அழுத்தமான கருத்தாகும். நியமனமுறை என்பது பொறுப்பு வாய்ந்த அரசாங்கம் என்கிற கோட்பாட்டுக்கு எதிரானதாகும் என்று அம்பேத்கர் கூறினார். நிலப்பிரபுக்களுக்குத் தனியான பிரதிநிதித்து வம் தேவை என்ற கோரிக்கை மீது அம்பேத்கர் பேசும்போது, அவர்களுக்குத் தனிப் பிரதிநிதித்துவம் வழங்கக்கூடாது என்றார். ஏனெனில் அவர்கள் வைதிகர்களுடன் சேர்ந்துகொண்டு அதன் மூலம் சுதந்திரம், முன்னேற்றம் ஆகியவற்றின் குறிக்கோள்களையே தோற்கடித்துவிடுவார்கள் என்று கூறினார். சிற்றரசுகளின் மக்கள் சார்பில் அவர்களின் உரிமைகளுக்காகப் பேசப்பட்ட முதல் பேச்சு இதுதான்; சிறந்த பேச்சும் இதுவே!

சிற்றரசர்களும், நிலக்கிழார்களும், அவர்களுடைய நலன்களை ஓம்புவோரும், சிற்றரசுகளின் பிரதிநிதிகளை நியமன முறையில் கூட்டாட்சிச் சட்டசபைக்கு அனுப்பவேண்டும் என்ற அவர்களின் கோரிக்கைக்கு எதிராக அம்பேத்கர் அழுத்தமுடன் பேசிய பேச்சு அவர்களை அதிர்ச்சியடையச் செய்தது. அதன் விளைவு என்னவா யிற்று எனில், அம்பேத்கருக்குப் பின்னர் பேசிய ஒவ்வொருவரும் அம்பேத்கரின் கருத்தை ஆதரித்தோ எதிர்த்தோ பேசினார்கள். பெரும்பாலோர் அம்பேத்கரின் கருத்து முற்போக்கானது; புரட்சிகர மானது என்று எண்ணினார்கள்.

வட்டமேசை மாநாட்டின் பிரதிநிதிகள் இந்திய மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அல்லர்; பிரிட்டிஷ் அரசால் தெரிவு செய்யப்பட்டவர்கள் என்று அடுத்த நாள் காந்தி பேசினார். இலண்டனுக்குப் புறப்படுவதற்கு முன்பே காந்தி அறிந்திருந்த செய்திதான் இது! ஆனால் இப்போது மாநாட்டில் இதைக் கண்டிப்பதுபோல் பேசத் தொடங்கினார். கூட்டாட்சிச் சட்டசபை யில் சிற்றரசுகளின் பிரதிநிதித்துவம்பற்றிய அம்பேத்கரின் கருத்தைக் குறிப்பிட்டுக் காந்திபேசும்போது, அம்பேத்கரின் கருத்தைப் பொதுவாக ஆதரிப்பதாகக் கூறினார். ஆயினும் தான் சிற்றரசுகளின் கருத்தை எதிரொலித்த கவின் ஜோன்ஸ், சர் சுல்தான் அகமது ஆகியோரின் கருத்துடன் முழுவதுமாக உடன்படுவதாகவும் கூறினார். காந்தி கூட்டாட்சி அமைவதை ஆதரித்தார். ஆனால் சிற்றரசர்களின் நிலைபாட்டுக்குச் சார்பாளராகிச் சிற்றரசுகளின் குடி மக்களுக்கு எதிராக நின்றார். 'சிற்றரசுகள் என்ன செய்யவேண்டும்; என்ன செய்யக்கூடாது என்பதைப் பற்றிக்கூறிட நமக்கு உரிமை இல்லை என்பது என் பணிவான கருத்து' என்றும் காந்தி கூறினார்.

அதன்பின், காந்தி எல்லாருடைய சிந்தனையையும் ஆட்கொண் டிருந்த உயிர் போன்ற பிரச்சினையைப்பற்றிப் பேசினார். பல்வேறு வகுப்புகள் தனிப்பிரதிநிதித்துவம் கோருவதுபற்றிக் காந்தி தன் கருத்தைக் கூறினார். "இந்து-முஸ்லிம்-சீக்கியர் என்ற வட்டத்திற் குள் மட்டுமே தனிச்சலுகை வழங்குவது என்பது இருக்கவேண்டும் என்பதைக் காங்கிரசு ஏற்றுக்கொண்டது. இதற்கு வலுவான வரலாற்றுக் காரணங்களும் உள்ளன. ஆனால் இந்தத் தனிச்சலுகைக் கொள்கையை எந்த வடிவத்திலும் காங்கிரசு மற்றவர்களுக்கு இனி நீட்டிக்காது. தனிச்சலுகை கோருவோரின் பட்டியலை நான் பார்த்தேன். தீண்டப்படாதவர்களைப் பொறுத்தமட்டில், டாக்டர் அம்பேத்கர் என்ன சொல்ல விரும்புகிறார் என்பதை என்னால்

இன்னும் புரிந்துகொள்ள முடியவில்லை. தீண்டப்படாதவர்களின் நலன்களை எடுத்துரைக்கும் அவருடைய பொறுப்பு வாய்ந்த பணியில் காங்கிரசும் பங்கு கொள்ளும். இந்தியாவின் விரிந்த பரப்பெல்லையில் உள்ள எந்த ஒரு தனி மனிதரின் அல்லது சமூகத்தின் நலனைப்போலவே தீண்டப்படாதவர்களின் நலனும் காங்கிரசுக்கு உகந்ததாகும். ஆகவே மேலும் தனிப்பிரதிநிதித்துவம் கேட்கும் எந்தக் கோரிக்கையையும் நான் கடுமையாக எதிர்ப்பேன்'' என்று காந்தி பேசினார்.

காந்தியாலும் காங்கிரசாலும் தீண்டப்படாத வகுப்பு மக்கள்பேரில் தொடுக்கப்பட்ட போர்தான் இது என்று அம்பேத்கர் கூறினார். இவ்வாறு காந்தி அறிவித்துவிட்டபின், இதைப் பற்றிப் பேசுவதற்கான முக்கியக் களமாக உள்ள சிறுபான்மையினர் குழுவில் காந்தி என்ன பேசுவார் என்பதை நான் நன்கறிவேன் என்று அம்பேத்கர் கூறினார்.

செப்டம்பர் 18ஆம் நாள் கூட்டாட்சி அமைப்புக் குழுக் கூட்டத்தில், அம்பேத்கர் காந்தியை நோக்கி, ''கூட்டாட்சிச் சட்டசபை, கூட்டாட்சி நிர்வாகத்தை உருவாக்குதல் ஆகியவைபற்றி நீங்கள் கூறிய கருத்துக்கள் உங்களுடைய சொந்தக் கருத்துகளா? காங்கிரசின் கருத்துகளா?'' என்று கேட்டார். திவான்பகதூர் ஏ.இராமசாமி முதலியார் அரசு ஊழியர்கள் அரசியல் பிரிவின் ஒரு அங்கமாக இருக்கிறார்கள்; மற்ற எந்தவொரு பொது ஊழியத்தில் இருப்பவர்களைப் போலவே - அவர்கள் இந்தியாவிலிருப்பினும் வெளிநாட்டிலிருப்பினும் மனச்சான்றுப்படியும் நேர்மையாகவும் நடந்துகொள்கிறார்கள் என்று பேசியபோது அம்பேத்கர் குறுக்கிட்டு, நிலைமை அவ்வாறு இருப்பின் நீங்கள் ஏன் பொறுப்பான அரசு வேண்டும் என்று கேட்கிறீர்கள் என்று வினவினார். பண்டிட் மாளவியா சிற்றரசர்களிடம் பொறுமையும் பரிவும் காட்டவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அரசு எல்லா வளங்களையும் பயன்படுத்திப் போதுமான அளவிற்குப் பணத்தை மக்களின் தொடக்கக் கல்விக்காகச் செலவிட்டால் தீண்டப்படாதவர் என்ற சொல்லே கடந்த கால வரலாற்றுச் சொல்லாகிவிடும் என்று மாளவியா கூறினார். அம்பேத்கர் உடனே குறுக்கிட்டுத் தன் சொந்த வாழ்க்கை அனுபவத்தைக் கூறினார். அவர் உயர்ந்த கல்வி கற்றிருந்தபோதிலும் தீண்டப்படாதவராகவே இன்னும் நடத்தப்படுவதைப்பற்றிக் கூறினார். அம்பேத்கரின் பேச்சிற்குப் பதிலளித்துச் சர் அக்பர் ஹைதாரி பேசும்போது, அம்பேத்கரின்

பேச்சுகள் இருக்கின்ற சூழ்நிலையின் உண்மை நிலையைச் சரியாக உணர்ந்து பிரதிபலிப்பதாக இல்லை என்று குறைகூறினார். உண்மை நிலையைப் பிரதிபலிக்கத் தவறியவன் என்ற குற்றச்சாட்டுக்கு என்றுமே நான் ஆளானதில்லை என்று அம்பேத்கர் மறுமொழி கூறினார்.

கூட்டாட்சி அரசியல் சட்டத்தை உருவாக்குவதுபற்றிய விவாதத்தின்போது கூட்டாட்சியை நடைமுறைப்படுத்தத் தொடங்க வேண்டிய காலஎல்லைபற்றி எவருமே குறிப்பிடவில்லை. அதைப் பற்றி அம்பேத்கர்தான் முதலில் பேசினார். 'இந்தியச் சிற்றரசர்கள் இந்தியக் கூட்டாட்சியில் சேருவதுபற்றி முடிவு எடுக்கும் வரையில், சுயாட்சி அரசு அமைவதைச் செயல்படுத்தாமல் கிடப்பில் போடவேண்டும் என்று எண்ணக்கூடிய இந்தியன் ஒருவனேனும் இருப்பான் என்று நினைக்கவில்லை' என்று அம்பேத்கர் கூறினார்.

கூட்டாட்சிக் குழுவின் விவாதங்களின்போது, புதிய சிந்தனைகள், கருத்துகளின் பரிமாற்றம், உலக அரசியல் சட்டங்களின் வரலாறு, சுதந்திர இந்தியாபற்றிய புதிய கருத்துகள் ஆகியவை வெளிப்பட்டன. அவைகளைப்பற்றி அம்பேத்கர் ஆற்றிய உரை செய்திகள் நிறைந்ததாக, ஆர்வத்தைத் தூண்டுவதாக, புதிய யோசனைகளைத் தெரிவிப்பதாக இருந்தது. அரசியலறிஞர், பாரிஸ்டர், சட்ட வல்லுநர், பேராசிரியர், கோடிக்கணக்கான ஒடுக்கப்பட்ட மக்களின் காவலர், சமஸ்தான மக்களின் நண்பர் முதலான தகுதிகளை ஒருங்கே பெற்றிருந்த அம்பேத்கர் வட்ட மேசை மாநாட்டில் தன்னுடைய பல்துறை அறிவினால் அனைவரையும் கவர்ந்து நின்றார்.

1931 செப்டம்பர் மாதத்தின் மூன்றாவது வாரமும் அப்போது கடந்துவிட்டிருந்தது. சிறுபான்மையினர் குழு அதனுடைய வேலையைச் செப்டம்பர் 28இல் தொடங்குவதாக இருந்தது. அதற்கு முந்திய நாள் காந்தியின் மகன் தேவதாஸ் காந்தி அம்பேத்கரைச் சந்தித்துச் சரோஜினி நாயுடுவின் இருப்பிடத்தில் அன்றிரவு 9 மணி முதல் 12 மணி வரை காந்தியும் அம்பேத்கரும் சந்திப்பதற்கான ஏற்பாட்டைச் செய்தார். அதன்படி அம்பேத்கர் காந்தியைச் சென்று சந்தித்துத் தன் கருத்துகளை எடுத்துரைத்தார். ஆனால் காந்தி தன் மனத்தில் இருப்பதை வெளிப்படுத்தவேயில்லை. மற்றவர்கள் ஒத்துக்கொண்டால் அம்பேத்கரின் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்வதாகக் காந்தி கூறினார்.

1931 செப்டம்பர் 28ஆம் நாள் சிறுபான்மையினர்குழு தன் முதல் கூட்டத்தைத் தொடங்கியது. இந்தியாவின் சிறுபான்மையினர் சிக்கல் எல்லோரையும் திணற அடித்துக்கொண்டிருக்கிறது என்பதைப் பிரிட்டிஷ் பிரதமர் ஒப்புக்கொண்டார். பிரிட்டிஷ் அரசே நடுவராயிருந்து இப்பிரச்சினையில் தீர்ப்பு அளிக்க வேண்டும் என்று சிலர் கூறினார்கள்; மற்ற சில பிரதிநிதிகள் இதற்கு இணங்கவில்லை; ஆகவே நடுவர் தீர்ப்புக்கு விடுவது என்பது சிலருக்கு ஏற்க முடியாததாக இருக்கும் என்று கருதுகிறேன் என்று பிரதமர் கூறினார். அதன்பின், ஆகா கான், மகாத்மா காந்தி அன்றிரவு முஸ்லிம் தலைவர்களைச் சந்திக்க இருப்பதாகத் தெரிவித்து அக்கூட்டத்தைத் தள்ளி வைக்கக் கோரினார். ஆகா கான் கருத்தை வழிமொழிந்து மாளவியாவும் அந்தப் பொதுவிவாதத்தைத் தள்ளிப் போட வேண்டும் எனக் கூறினார்.

இந்து-முஸ்லிம் உடன்பாடு காண்பதற்காகக் காந்திக்கும் முஸ்லிம் தலைவர்களுக்கும் இடையே நடைபெற்றுக்கொண்டிருந்த இரகசியப் பேச்சுவார்த்தையை அம்பேத்கர் அறிந்திருந்தார். ஆகவே அக்கூட்டத்தை ஒத்திவைக்கக் கோரும் தீர்மானத்தின் மீது தன் கருத்தைக் கூறினார்.'' தீண்டப்படாத வகுப்பு மக்களைப் பொறுத்தவரையில், எங்களுடைய கோரிக்கைகளைச் சிறுபான்மையினர் குழுவின்முன் கடந்தமுறையே வைத்துவிட்டோம். நான் செய்ய வேண்டியது ஒன்றே ஒன்றுதான் இருக்கிறது; பல்வேறு சட்டசபைகளிலும் தீண்டப்படாதவர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய பிரதிநிதித்துவத்தின் அளவுபற்றிய சுருக்கமான அறிக்கையை இக்குழுவில் வைக்க விரும்புகின்றேன்'' என்றார்.

வகுப்புச் சிக்கலைத் தீர்ப்பதற்காக மேலும் பேச்சுவார்த்தை நடக்கவிருப்பதுபற்றிக் கேட்டுப் பெரிதும் மகிழ்வதாக அம்பேத்கர் கூறினார். மேலும் தொடர்ந்து பேசினார். ''தொடக்கத்திலேயே இச்செய்தியைப்பற்றி முழுமையாகத் தெளிவுபடுத்திட விரும்புகின்றேன். உடன்பாடு காணும் முயற்சியில் ஈடுபட்டுள்ளவர்கள் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். அவர்கள் எல்லாச் சிறுபான்மையினரைப்பற்றியும் பேச முழு அதிகாரம் அளிக்கப்பட்ட தூதுவர்கள் அல்லர். காந்தியோ, காங்கிரசுக்காரர்களோ எவரெவரைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள் என்பது ஒருபுறம் இருக்கட்டும்; எங்களைக் கட்டுப்படுத்தும் நிலையில் அவர்கள் இல்லை என்பது மட்டும் உறுதி! கண்டிப்பாக அவர்கள் எங்கள் பிரதிநிதிகள் அல்ல என்று அழுத்தந்திருத்தமாக இக்கூட்டத்தில் கூறிக்கொள்கிறேன்'' என்றார். ஓர் எச்சரிக்கையுடன் தன் பேச்சை முடித்தார்.

'ஒரு செய்தியை மிகவும் வலியுறுத்திக் கூறிட விரும்புகின்றேன். தனக்கு முழு அதிகாரம் இருப்பதாக யார் கூறினாலும் அல்லது அந்த அதிகாரத்தை அளித்திருப்பதாக யார் சொன்னாலும், அந்த அதிகாரத்தை என் பங்கிலிருந்து எடுத்துத் தரக்கூடாது; அவ்வாறு யாரும் எடுத்துத் தரவும் முடியாது'' என்று முழங்கினார். அக்குழுவின் தலைவராகியிருந்த பிரதமர் மெக் டொனால்டு, 'டாக்டர் அம்பேத்கர் அவர்கள் தன் நிலையை அவருக்கு உரிய ஏற்றமிகு முறையில் மிகவும் தெளிவாக்கிவிட்டார். அதைப்பற்றி அய்யத்திற்கே இடமில்லாதபடிக் கூறிவிட்டார்'' என்று குறிப்பிட்டார்.[52]

IV

அக்டோபர் முதல் நாள் காந்தி மேலும் ஒரு வாரத்திற்குச் சிறுபான்மையினர் குழுக்கூட்டத்தை ஒத்திவைக்குமாறு கேட்டார். முஸ்லிம்களின் பல்வேறு குழுத்தலைவர்களுடன் தான் பேச்சு வார்த்தை நடத்திக்கொண்டிருப்பதாக அக்குழுவில் காந்தி கூறினார். உடனே அம்பேத்கர் எழுந்து நின்று, அப்படி ஒரு உடன்பாடு ஏற்படுமானால் அதற்கு இடையூறு விளைவிக்க நான் விரும்பவில்லை; அவ்வாறு ஏற்படுத்தப்படும்படியான குழுவில் தீண்டப்படாதவர்கள் இடம் பெற்றிருப்பார்களா இல்லையா என்பதை அறியவிரும்புகிறேன் என்று கேட்டார். காந்தி, ஆம் என்று விடை சொன்னார். அதற்காகக் காந்திக்கு அம்பேத்கர் நன்றி தெரிவித்துவிட்டுப் பிரதிநிதிகளை நோக்கித் தன் பேச்சைத் தொடர்ந்தார். ''கூட்டாட்சி அமைப்புக் குழுவில் முதல் நாள் காந்தி பேசும்போது, இந்தியத் தேசியக் காங்கிரசின் பிரதிநிதி என்ற முறையில் முஸ்லிம்கள் சீக்கியர்கள் தவிர வேறு எந்த வகுப்பினர்க்கும் அரசியல் அங்கீகாரத்தை அளிக்கமாட்டேன் என்று நம்மிடம் கூறினார். ஆங்கிலோ-இந்தியர்களையோ, தீண்டப்படாதவர்களையோ, இந்தியக் கிறித்தவர்களையோ காந்தி அங்கீகரிக்கத் தயாராக இல்லை. இக்குழுவில் நான் ஒரு செய்தியைச் சொன்னால் அது ஒழுங்கை மீறிய செயலாகாது என்று எண்ணுகிறேன். கடந்த வாரம் மகாத்மா காந்தியைச் சந்திக்கும் மகிழ்ச்சியான வாய்ப்பு ஏற்பட்டது. அப்போது அவருடன் தீண்டப்படாதவர்களின் பிரச்சினையைப்பற்றிப் பேசினேன். மற்ற சிறுபான்மைப் பிரிவின் பிரதிநிதிகள் என்ற தன்மையில் நேற்று அவருடைய அலுவலகத்தில் அவரோடு பேசும் வாய்ப்பு அமைந்தது. அப்போது காந்தி, நன்கு முழுமையாக ஆய்வு செய்துதான் கூட்டாட்சி அமைப்புக் குழுவில்

அந்நிலைப்பாட்டை எடுத்தேன் என்று தெளிவாகக் கூறினார்'' என்று அம்பேத்கர் பேசினார்.

'முதல் வட்டமேசை மாநாட்டின்போது சிறுபான்மைத் துணைக் குழு செய்ததுபோல, தீண்டப்படாதவர்களை இந்தியாவின் எதிர் கால அரசியல் சட்டத்தில் அங்கீகரித்து ஏற்காவிட்டால் அக்குழுவில் நான் சேரமாட்டேன்; கூட்டத்தை ஒத்திவைக்க வேண்டும் என்ற கோரிக்கைக்கு ஆதரவும் அளிக்கமாட்டேன்' என்று அம்பேத்கர் முழங்கினார். சர் ஹெர் பர்ட் கார், டாக்டர் தத் மற்றும் சிலர் ஒத்திவைப்பை ஆதரித்தனர்.

காந்திக்கும் முஸ்லிம் தலைவர்களுக்கும் இடையிலான பேச்சு வார்த்தை ஒரு வாரம் நடந்தது; பேச்சுவார்த்தை நம்பிக்கையூட்டும் நிலையை எட்டியிருப்பதாகப் பத்திரிகைகள் அறிவித்தன. முஸ்லிம் களின் பதினான்கு கோரிக்கைகளையும் காந்தி ஏற்றுக்கொண்டார் என்றும், மீதப்பட்ட அதிகாரங்களை மாகாண அரசுகளுக்கு அளித்திடவும் அவர் ஒத்துக்கொண்டார் எனவும், பஞ்சாபிலும் வங்காளத்திலும் முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக இருக்க அனுமதித்துவிட்டார் எனவும், இவற்றின்மூலம் முஸ்லிம்களுக்குத் தொகை குறிக்கப்படாத காசோலையைக் காந்தி வழங்கிவிட்டார் என்றும் செய்திகள் வெளியாயின. ஆயினும் சீக்கியர்-முஸ்லிம் பிரச்சினை தோல்வியில் முடிந்தது.

அக்டோபர் 8ஆம் நாள், சிறுபான்மையினர் குழுவில் வகுப்புச் சிக்கலுக்கு மனமொத்தத் தீர்வினைக் கண்டிட முறைசாராப் பேச்சுகள்மூலம் பல்வேறு குழுக்களின் பிரதிநிதிகளுடன் பல்வேறு குழுக்களுக்கிடையேயும் நடைபெற்ற பேச்சு வார்த்தைகள் பயன்தர வில்லை என்று தன் தோல்வியை ஆழ்ந்த வருத்தமுடன் காந்தி தெரிவித்தார். தோல்விக்கான காரணம் வட்டமேசை மாநாட்டிற்கு அழைக்கப்பட்டிருக்கும் இந்தியப் பிரதிநிதிகளின் போக்கேயாகும் என்று காந்தி கூறினார். அவர்கள், தாங்கள் பிரதிநிதித்துவப்படுத்துவ தாகச் சொல்லிக்கொண்ட கட்சிகளாலோ அல்லது குழுக்களாலோ தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப்பட்டவர்கள் அல்லர். உடன்பாடு காண்பதற்கு அவர்கள் இருந்தாக வேண்டும் என்று கருத வேண்டாதவர்கள்கூட அழைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று காந்தி கூறினார். ஆகவே அக்கூட்டத்தைக் காலவரையறையின்றித் தள்ளிப்போட வேண்டும் என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்தார். அம்பேத்கர் உடனே அச்சவாலை ஏற்றுக் காந்திக்குப் பதிலளிக்க எழுந்து நின்றார். நேற்றிரவுதான் பிரதிநிதிகள் யாரும் சிறுபான்மைக்

குழுவில் நிலைமை மேலும் மோசமாகும் படியாகப் பேசவோ, கருத்துக்கூறவோ கூடாது என்று முடிவு எடுக்கப்பட்டது. ஆனால் காந்தி தான் செய்துகொண்ட ஒப்பந்தத்தை மீறிவிட்டார் என்று கூறினார்.

கொழுந்துவிட்டெரியும் தீப்போல் அம்பேத்கரின் ஓங்கிய குரல் ஒலித்தது. 'காந்தி பேசியதைக் கேட்டபின் என்னை அமைதியிழக்கச் செய்தது எதுவெனில், சிறுபான்மையினர் குழுவைக் காலவரம்பின்றி ஒத்திப்போடவேண்டும் என்ற அவருடைய கருத்தைக் கூறுவதுடன் அவர் நிற்காமல், இந்த வட்டமேசை மாநாட்டில் அமர்ந்திருக்கின்ற பல்வேறுபட்ட வகுப்புகளின் பிரதிநிதிகளை அவமதிப்பு செய்யும் வகையில் பேசியிருப்பதுதான். பிரதிநிதிகள் அரசினால் நியமிக்கப்பட்டவர்கள்; ஆதலால் அவர்கள் பிறந்த வகுப்பின் கருத்தினை அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை என்று காந்தி கூறுகிறார். நாங்கள் அரசினால் நியமிக்கப்பட்டவர்கள் என்ற குற்றச்சாட்டை மறுக்கவில்லை. என்னைப் பொறுத்த அளவில், இந்தியாவில் உள்ள தீண்டப்படாத வகுப்பு மக்களுக்கு ஒரு வாய்ப்பு தந்து, இந்த மாநாட்டிற்குத் தங்களுடைய பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்புமாறு கேட்டிருந்தாலும் கட்டாயம் நான் தேர்ந்தெடுக்கப்பட்டு இங்கே வந்திருப்பேன். ஆகவே நான் நியமிக்கப்பட்டவனாக இருந்தாலும், தேர்ந்தெடுக்கப்பட்டவனாக இருந்தாலும் என்னுடைய வகுப்பு மக்களின் கோரிக்கைகளை நான் பிரதிநிதித்துவப்படுத்துகின்றேன். இதைப் பற்றி எந்த மனிதனுக்கும் தவறான புரிதல் இருக்கக்கூடாது'' என்று அம்பேத்கர் முழங்கினார்.

அம்பேத்கர் மேலும் தொடர்ந்து பேசினார்: 'காங்கிரசு தீண்டப்படாதவர்களின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது; என்னைவிட அல்லது மற்ற என் தோழர்களைவிடத் தீண்டப்படாதவர்களைக் காங்கிரஸ் பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்று காந்தி சொல்லிக்கொண்டிருக்கிறார். அவ்வாறு சொல்லிக்கொண்டிருப்பது பொறுப்பற்றவர்கள் கூறிக்கொண்டிருக்கிற பல பொய்களில் இதுவும் ஒன்று என்றே நான் கூற விரும்புகின்றேன். ஆனால் சம்பந்தப்பட்ட நாங்கள் இதைப்பற்றித் தொடர்ந்து மறுத்துக் கொண்டே இருக்கிறோம்'[53] என்றார் அம்பேத்கர். அதன்பின், அம்பேத்கர், இந்தியாவில் அவர் சென்றறியாத மூலை முடுக்கில் உள்ள ஊர்களிலிருந்தும், பார்த்தறியாத மனிதர்களிடமிருந்தும் அவருடைய நிலைப்பாட்டை ஆதரித்து வந்துள்ள தந்திகளை



மீனாம்பாள் சிவராஜ், அம்பேத்கர், சென்னை என். சிவராஜ்

எடுத்துக்காட்டிப் பேசினார். சிறுபான்மையினர் குழுவே பிரச்சினையைத் தீர்க்க வேண்டும்; அல்லது தீர்வுகாணும் பொறுப்பைப் பிரிட்டிஷ் அரசு எடுத்துக் கொள்ளவேண்டும் என்று அம்பேத்கர் கூறினார். இதன் விளைவாக ஏற்பட்ட ஏமாற்றத்தினாலும் அச்சத்தினாலும் அம்பேத்கர், அப்போதுள்ள சூழ்நிலையில், தீண்டப்படாத மக்கள் அரசியல் அதிகாரத்தைப் பிரிட்டிஷாரிடமிருந்து மாற்றுவதுபற்றி அதிகமாகக் கவலைப்படவில்லை என்று கூறினார்; அப்படியே அரசு அதிகாரத்தை மாற்றவேண்டும் என்று விரும்பினால், அது நிபந்தனைகளுடன் கூடியதாக இருக்கவேண்டும். அந்த நிபந்தனையின்படி, அதிகாரம் தன்னலக் கும்பலிடமோ, ஆதிக்கம் செய்யும் சிலரிடமோ, முகம்மதியரிடமோ, இந்துக்களிடமோ அளிக்கப்படக்கூடாது. அப்பிரச்சினைக்கான தீர்வு என்பது அதிகாரம் எல்லா வகுப்பினர்க்கும் அவரவர் விகிதாச்சாரத்திற்கு ஏற்பப் பகிர்ந்தளிக்கப்படுவதாய் இருக்கவேண்டும் என்று அம்பேத்கர் கூறினார்.

பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட முறை அல்லது பிரதிநிதிகளிடம் காணப்படுவதாகக் கூறப்படும் தனிப்பட்ட குறை போன்றவற்றால்தான் ஒரு தீர்வினை எட்ட முடியவில்லை என்று காரணம் கற்பிக்க வேண்டாம் என்று பிரிட்டிஷ் பிரதமர் பிரதிநிதிகளிடம் கேட்டுக்கொண்டார்; மேலும் உண்மையை நேருக்கு நேர் சந்திக்க வேண்டும்; இத்தகைய பிரச்சினை இந்தியாவில் இருக்கிறதா இல்லையா என்பதை மட்டுமே கருத்தில் கொள்ளவேண்டும் என அவர் கூறினார். பிரதமரின் பேச்சில் குத்தல்கள் இருந்தன. சிலர் அப்பேச்சை நன்றி மறந்த பேச்சு என்றனர்; காந்திக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட அம்புகள் அதில் இருந்தன என்றும் கூறினர்.

அம்பேத்கர் மேற்கொண்ட தீவிரமான பிரச்சாரம் அத்துடன் நிற்கவில்லை. வட்டமேசை மாநாட்டின்போது நடந்தவற்றை முழுமையாகத் தொகுத்து 'டைம்ஸ் ஆப் இந்தியா' இதழுக்கு இலண்டனிலிருந்து அக்டோபர் 12ஆம் நாள் அம்பேத்கர் ஒரு மடல் எழுதினார். "நமது முஸ்லிம் நண்பர்களுடன் காந்தி உடன்பாடு காணப் பேச்சுவார்த்தை நடத்தியபோது, முஸ்லிம்களின் பதினான்கு கோரிக்கைகளை அவர் ஏற்றுக்கொள்வதற்குக் கைம்மாறாக முஸ்லிம்கள், தீண்டப்படாதவர்களுடையவும், மற்ற சிறுபான்மையினருடையவுமான கோரிக்கைகளை எதிர்க்க வேண்டும் என்று கோரினார். இச்செய்தியை மிகவும் நம்பிக்கையானவர்கள் எங்களிடம் சொன்னார்கள். எல்லோருடைய முன்னிலையிலும்

எங்கள் கோரிக்கைகளை மற்றவர்கள் ஒத்துக்கொண்டால் நான் ஏற்றுக் கொள்கிறேன் என்று சொன்ன காந்தி, அதன்பின் தனிப்பட்ட முறையில் மற்றவர்கள் அக்கோரிக்கைகளுக்கு இணங் கக்கூடாது என்பதற்காக வேலை செய்யத் தொடங்கினார்; ஒத்துக்கொள்ளத் தயாராக இருந்தவர்களை விலைகொடுத்து வாங்கி னார். ஒரு மகாத்மா என்பவர் செய்யக்கூடிய செயலன்று இது என்பதே எங்கள் கருத்து. தீண்டப்படாத வகுப்பு மக்களின் கொடிய பகைவன் ஒருவன்தான் இதுபோல் செய்வான். தீண்டப்ப டாத வகுப்பு மக்களின் நண்பனாகத் திரு. காந்தி செயல்படாதது மட்டுமன்று - ஒரு நேர்மையான எதிரியாகவும் அவர் நடந்துகொள் ளவில்லை'' என்று அவருக்கே உரிய ஈவிரக்கமற்ற முறையில் அம்பேத்கர் சாடினார்.

இந்தியாவிற்கு எழுதிய மற்றொரு மடலில், வட்டமேசை மாநாடு பெருந்தோல்வியில் முடியும்; அத்தோல்விக்குக் காந்திதான் காரணமாக இருப்பார் என்று எழுதினார். சிறுபான்மையினர் சிக்கலைத் தீர்ப்பதில் காந்தி ஒருதலைச் சார்பாக, வேண்டுமென்றே வேறுபாடு காட்டுகின்ற போக்கினைக் கையாண்டார். அய்யத்திற்கு இடந்தரும் வகையில் பிரச்சினையைக் கையாளும் தன்மை, பிரதிநிதிகளைச் சற்றும் மதியாமை, அவர்களை அவமதிக்கும்படி யான செயல்கள் ஆகிய போக்குகளினால்தான் காந்தியால் அப்பிரச்சினையைத் திறமையாகத் தீர்க்கமுடியாமல் போய்விட்டது. ஒரு வகுப்புக்கு எதிராக மற்றொரு வகுப்பை மோதவிடும் காந்தியின் கொடிய செயல் இப்போது தெளிவாகிவிட்டது என்று அம்பேத்கர் கூறினார். சனநாயக நெறிமுறைக்கு எதிரான காந்தியின் மனப்போக்கு ஹெரால்டு லஸ்கி போன்றவர்களையும், காங்கிரசுத் தலைவர்களான வித்தல்பாய் பட்டேல் போன்றவர்களையும் காந்தி இப்பிரச்சினையை மிகவும் தவறான முறையில் கையாண்டார் என்று முணு முணுக்கச் செய்தது என்று கூறி அக்கடிதத்தை முடித்தார்.

அம்பேத்கர் முன்வைத்த கோரிக்கைகளுக்குக் காந்தி காட்டிய எதிர்ப்பு இந்தியா முழுவதும் தீண்டப்படாதவர்களிடையே மனக் கொதிப்பையும் எதிர்ப்பையும் ஏற்படுத்தியது. அனைத்திந்தியத் தீண்டப்படாதார் மாநாடு ராவ்பகதூர் எம்.சி. இராஜா தலைமையில் கர்கானில் கூடியது. காந்தி தீண்டப்படாதவர்களின் சார்பாகப் பேசுவதாகக் கூறுவது தவறு என்று அது அறிவித்தது. தொடக்கக் காலம் முதலே காங்கிரசு தீண்டப்படாதவர்களின் நலனுக்காகப்

பாடுபட்டு வருகிறது; அவர்களுக்காகப் போராடி வருகிறது என்று காந்தி கூறியதைக் கண்டனம் செய்தது. காந்தியின் அந்த அறிவிப்புகள் உண்மைக்கு மாறானவை என்று மாநாட்டின் தலைவர் எம்.சி. இராஜா கூறினார்.

அம்பேத்கர் முன்வைத்த கோரிக்கைகளை அம்மாநாடு ஆதரித்தது. தீண்டப்படாதவர்களுக்கெனத் தனியான வாக்காளர் தொகுதி முறை இடம் பெறாத எந்தவொரு அரசியல் சட்டத்தையும் தீண்டப்படாத வகுப்பு மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்று அம்மாநாட்டில் அறிவிக்கப்பட்டது. காந்தியையோ, காங்கிரசையோ நம்ப வேண்டாம் என்று அம்பேத்கரைக் கேட்டுக் கொண்ட தந்திகள் நூற்றுக் கணக்கில் தீண்டப்படாத வகுப்புத் தலைவர்களிடமிருந்தும், சங்கங்களிலிருந்தும் இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் அனுப்பப்பட்டன.

திருநெல்வேலி, ராபர்ட்சன் பேட்டை (சென்னை), லைலாப்பூர், கர்னால், சிதம்பரம், கள்ளிக்கோட்டை, பனாரஸ், கோல்ஹாப்பூர், இயோட்மால், நாகபுரி, சாந்தா, கான்பூர், காம்ப்டே, பெல்காம், தார்வார், நாசிக், ஹூப்ளி, அகமதாபாத், தூத்துக்குடி, கொழும்பு மற்றும் பல இடங்களில் இக்கோரிக்கையை முன்வைத்துப் பொதுக்கூட்டங்களும் மாநாடுகளும் நடைபெற்றன.

பெரும் எண்ணிக்கையில் இலண்டனுக்கு அனுப்பப்பட்ட இத்தந்திகளின் பேரொலி தீண்டப்படாத வகுப்பு மக்களின் உண்மையான பிரதிநிதி யார் என்பதைத் தெளிவாக உறுதி செய்தது. காந்திக்கும் சில தந்திகள் வந்தன. இலண்டனில் காந்தி பல இடங்களில் பேசும்போது அவரிடம் ஓயாமல் கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதில்சொல்லும் அளவிற்கு அந்தத் தந்திகள் போதுமானவையாக இல்லை. அம்பேத்கர் முழுவீச்சுடன் தொடுத்த பிரச்சாரத்தின் வலிமை காந்தியை உண்மையில் திகைக்கச் செய்துவிட்டது. தீண்டப்படாதவர்களின் காவலன் என்று காந்தி கூறிவந்த கூற்று வெற்றுரை என்பது வெட்டவெளிச்சமாகிவிட்டது.

நாசிக்கிலும், குருவாயூரிலும் தீண்டப்படாத வகுப்பு மக்கள் அப்போது மேற்கொண்ட கோயில் நுழைவுப் போராட்டம் காந்தியின், காங்கிரசின் போலித்தனத்தை மேலும் அம்பலப்படுத்தியது. நாசிக்கில் மீண்டும் தொடங்கப்பட்ட சத்தியாக்கிரகம் பேரெழுச்சியுடன் வீறுநடையிட்டது. அய்ந்தாயிரம் தொண்டர்கள் நாசிக் நகரில் குவிந்தனர். அம்பேத்கரின் நம்பிக்கைக்குரிய தளபதி

பாவ்ராவ் கெய்க்வாடு, தீண்டப்படாத வகுப்புத் தலைவர்களான ரான்கம்பே, பட்டிட்பவன்தாஸ், நம்பிக்கைக்குரிய தளபதி தியோ ராவ் நாயக் ஆகியோர் அப்போராட்டத்தை முன்னின்று நடத்தினர். வைதிக இந்துக்களின் - இந்துத் தலைவர்களின் பொய்யான நடிப்பைத் தோலுரித்துக் காட்டினார்கள். நிலைமை எந்த அளவிற்கு வெட்கக் கேடான நிலைக்குச் சென்றதெனில், இலண்டனிலிருந்து டாக்டர் முஞ்சே, 'நம்முடைய சகோதரர்களான தீண்டப்படாதவர் கள் இடருற்றிருக்கும் நிலையில் அவர்களுடைய குடியுரிமைகள், மதஉரிமைகள் ஆகியவற்றை அவர்கள் பெறுவதற்குத் தடையாக இந்துக்கள் இருக்காதீர்கள்' என்று கேட்டுக் கொள்ளும் அளவிற்குச் சென்றது. நாசிக் காலாராம் கோயில் வாயிற் கதவுகள் முந்திய சத்தியாக்கிரகத்தின்போது மூடப்பட்டது போலவே இப்போதும் மூடப்பட்டன.

சாதி இந்துக்களின் போக்கினை அம்பலப்படுத்தும் வகையில் அவருடைய மக்கள் தக்கசமயத்தில் மேற்கொண்ட கோயில் நுழைவுப் போராட்டம்பற்றி அம்பேத்கர் அகமகிழ்ந்தார். இலண்ட னிலிருந்து அவருடைய மக்களுக்கு ஒரு செய்தியை அனுப்பினார். "நீங்கள் எதிர் பார்த்ததைப் போலவே பம்பாய் மாகாண மத்தியப் பிரிவின் காவல்துறை ஆணையரிடமிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது; நாசிக் போராட்டத்தை நிறுத்துமாறு உங்களுடைய மக்களுக்கு அறிவுரை கூறுங்கள் என்று அதில் ஆணையர் கேட்டுள்ளார். இதுவரை அவருக்குப் பதில் எழுதவில்லை; இன்று பதில் எழுதுவேன். நாங்கள் அப்போராட்டத்தை நிறுத்தமுடியாது என்று தெரிவிக்கப்போகிறேன். ஆகவே தொடர்ந்து போராடுங்கள் என்று நம் மக்களுக்குக் கூறுங்கள். வைதிக இந்துக்களின் ஆணைகளை நாம் எவ்வாறு ஏற்கமாட்டோமோ அதே போன்று நாம் என்ன செய்யவேண்டும் என்பதற்கான ஆணைகளை அரசிடமிருந்தும் ஏற்க முடியாது. தீண்டாமையை அகற்றும் என்று நீண்டகாலம் இந்த அரசை நம்பினோம். ஆனால் அரசு இதற்காக ஒரு விரலைக்கூட அசைக்கவில்லை. ஆகவே இப்போது போராட் டத்தை நிறுத்துமாறு கூறிட அரசுக்கு உரிமை இல்லை. இக்கடினமான பணியை நாமே நம் தோள்களில் சுமக்க வேண்டும். எப்பாடுபட்டேனும் இந்த இழிவிலிருந்து நம்மை நாமே விடுதலை செய்துகொள்ள நம்மால் இயன்றதனைத்தையும் செய்வோம்"[54] என்று அம்மடலில் அம்பேத்கர் எழுதினார்.

ஈடு இணையற்ற எழுச்சியுடனும் உறுதிப்பாட்டுடனும் நாசிக் சத்தியாக்கிரகம் தொடர்ந்து நடைபெற்றது. பெரிய பொதுக்கூட்டங்

களும் ஊர்வலங்களும் நடந்தன. பல தொண்டர்களும் தலைவர்களும் கைதாயினர். அவர்கள் துணிவுடன் முன்வந்து சிறை புகுந்தனர். 'இலண்டன் டைம்ஸ்' இதழில் இந்தப் போராட்டம் பற்றியும் கைதுகள்பற்றியும் செய்திகள் வெளியாயின. இது அம்பேத்கருக்கு மேலும் புதிய வலிமையைச் சேர்த்தது.

காந்தியுடனான மோதலை அடுத்து, கூட்டாட்சி அரசுபற்றிய துணைக்குழுவின் முன் வைக்கப்பட்ட அரசு நிதிக் கோட்பாடு மீதான விவாதத்தில் அம்பேத்கர் கலந்துகொண்டார். கூட்டாட்சியில் அமையவுள்ள கூட்டு நீதிமன்ற அமைப்புமுறை எவ்வாறு இருக்கவேண்டும் என்று அம்பேத்கர் ஆற்றிய உரை சிந்தனையைத் தூண்டும் படியாகவும் தெளிவூட்டுவதாகவும் இருந்தது. அந்த விவாதத்தில் ஜின்னா, ஜெயகர், சாங்கி பிரபு, லோதியன் பிரபு ஆகியோரும் அதிக ஆர்வமுடன் கலந்துகொண்டனர். அவர் கூறிய கருத்துகளில் சிலவற்றை மேலும் தெளிவுபடுத்துமாறு அம்பேத்கரைக் கேட்டனர்.

பணிச்சுமை அதிகமாக இருந்தபோதிலும் அம்பேத்கர் தனிப்பட்ட முறையில் தந்த பேட்டிகள், அளித்த விளக்கங்கள், வெளியிட்ட அறிக்கைகள், மறுப்பு அறிக்கைகள் இலண்டனில் பல நிறுவனங்களில் நிகழ்த்திய உரைகள் ஆகிய அனைத்திலும் வட்டமேசை மாநாட்டில் அவர் எடுத்த நிலைப்பாட்டைத் தெளிவுபட விளக்கினார். அனைத்துலக விவகாரங்களுக்கான நிறுவனத்தில் அம்பேத்கர் ஆற்றிய உரை காந்தியின் தவறான கூற்றைத் தவிடுபொடியாக்கியது. மேற்கொண்ட எல்லையற்ற எதிர்ப்பின் காரணமாகத் திகைப்புற்றிருந்த சிலபேர் அம்பேத்கரிடம் ஓடிச்சென்று விளக்கம் கேட்டார்கள். செல்வி முரியேல் லெஸ்ட்டர் என்பவர் வீட்டில்தான் காந்தி தங்கியிருந்தார். முரியேல் அம்பேத்கரைச் சந்தித்தார். அம்பேத்கரும் அவருடைய நிலைபாட்டை முரியேலுக்கு விளக்கினார். காந்திக்கும் அம்பேத்கருக்கும் நண்பரான ஒருவர் இரு தலைவர்களையும் தேநீர் விருந்திற்கு அழைத்து இணக்கம் ஏற்படுத்த முயன்றார். மனிதாபிமான அடிப்படையில் காந்தி தீண்டப்படாதவர்களின் மேம்பாட்டிற்காகப் பாடுபட்டு வருகிறார் என்றும் தீண்டாமையை ஒழிக்க முயன்று வருகிறார் என்றும் அம்பேத்கர் ஒப்புக் கொண்டார். ஆனால் இந்தப் பிரச்சினையை அணுகுவதில் எங்களுக்குள் அடிப்படையிலேயே பெரிய வேறுபாடு இருக்கிறது என்று அம்பேத்கர் சொன்னார்.

1931 அக்டோபர் மாத இறுதியில் பிரிட்டனில் தேர்தல் நடந்தது. கன்சர்வேட்டிவ் (டோரி) கட்சி ஆட்சிக்கு வந்தது.

தொழிற்கட்சி அரசு தோற்றதுபற்றி அம்பேத்கர் குறிப்பிடும் போது, தொழிற்கட்சியின் திட்டங்கள் தொழிலாளர்களாலோ சாதாரண பிரிட்டிஷ் குடிமகனாலோ எளிதில் புரிந்துகொள்ள முடியாத அளவிற்கு முற்போக்கானவையாக இருந்தன என்றார். அம்பேத்கர் எழுதிய கடிதம் ஒன்றில் காந்தியை ஆதரிக்கும் தீண்டப்படாத வகுப்புத் தலைவர்கள், காந்தி தனி வாக்காளர் தொகுதியை மட்டும் எதிர்க்கவில்லை தீண்டப்படாதவர்களுக்கான தனியான பிரதிநிதித்து வத்தையே எதிர்க்கிறார் என்ற உண்மையைப் புரிந்து கொள்ள வில்லை. அவ்வாறு புரிந்துகொண்டிருப்பின் அப்பிரச்சினை நீண்ட நாட்களுக்கு முன்பே தீர்க்கப்பட்டு விட்டிருக்கும் என்று அம்பேத்கர் கூறினார்.

வட்டமேசை மாநாடு நடைபெற்றுக்கொண்டிருந்தபோது, மேன் மைமிகு பிரிட்டிஷ் பேரரசர் இந்தியப் பிரதிநிதிகளுக்கு நவம்பர் 5ஆம் நாள் ஒரு வரவேற்பு விருந்து அளித்தார். அந்த விழாவில் சிலர் மட்டுமே பேசுவது என்று முடிவு செய்யப்பட்டிருந்தது. காந்தி மொட்டையடித்துக்கொண்டிருந்தார். அவர் வழக்கமாக அணியும் அரையாடையுடன் இருந்தார்; காலில் செருப்பு அணிந்தி ருந்தார். இந்தியாவில் தீண்டப்படாதவர்களின் நிலையைப்பற்றி, பேரரசர், அம்பேத்கரிடம் கேட்டார். உள்ளத்தை உலுக்கிடும் துன்பமான நிலைகளைப்பற்றி முழு ஈடுபாட்டுடன், கண்கள் ஒளிவீசிட முகத்தில் உணர்ச்சி பொங்கிட அம்பேத்கர் எடுத்துரைத்த தைக் கேட்டுப் பேரரசர் துணுக்குற்றார். அதன்பின் பேரரசர் அம்பேத்கரின் தந்தையைப்பற்றியும் அவர் கல்வி பெற்ற இடத்தைப்பற்றியும், எவ்வாறு கல்வியில் இந்த அளவிற்கு உயர் நிலையை எய்தினார் என்பதுபற்றியும் அன்புடன் வினவினார்.

V

அம்பேத்கர் காந்தி மீது தொடுத்த தாக்குதல் மிகக்கடுமையா னது. அது காந்தியின் உள்ளத்தைக் குத்திக்கிளறியதால் அங்கே பொங்கியெழுந்த மனக்கொதிப்பை அணைபோட்டுத் தடுத்திட காந்தி எந்த அளவிற்கு முயன்றிருப்பார் என்பதை எண்ணிப் பாருங்கள். எல்லையற்ற மனத் திட்பத்தை வளர்த்துக்கொண்டிருப்ப வர் என்று புகழ்பெற்றிருந்த காந்திக்கு இப்படியொரு மனப் போராட்டம்! அவருடைய சொல், செயல், உணர்வு ஆகியவற் றைக் கையாளுவதில் மற்றவர்களால் எளிதில் புரிந்துகொள்ள முடியாத புதிரான திறமையை வளர்த்துக்கொண்டிருந்தார் மகாத்மா. அப்படிப்பட்ட ஒரு மனிதரின் சீற்றம் அணைகடந்தால் கட்டாயம்

அவருடைய எதிரி அதில் சிக்குண்டு மூழ்கியே போவார். கதர் உடையில் துறவிபோல் இருந்த காந்தி அந்த மேதகு அவையில் அவரைவிட வயதில் இளையவரான ஆனால் எவராலும் அடக்கி விட முடியாத, துடுக்குத்தனம் மிக்க, முறையாக வளர்த்தெடுக்கப் பட்ட முரட்டுத்தனமுடன் பேசுகின்ற, சிலை வழிபாட்டை ஒழித்திடும் வெறியுடன் செயல்படுகின்ற ஒருவரால் அம்பலப்படுத் தப்பட்டார்.

பெருஞ்சிறப்பு வாய்ந்த காந்தியின் அடக்க முடியாத ஆசையா னது சிலை வணக்கத்தை மறுக்கும் ஒரு இளைஞரின் தணியாத வேட்கையுடன் மோதியது. ஒருவர் அதிகாரத்தின், புகழின் உச்சியில் இருந்தார்; மற்றவரோ விண்வீழ்கொள்ளி போன்ற ஒளிச்சிறப்புடன் மிளிர்ந்தார். அந்த முதுகிழவரின் உள்ள உரன் நாடறிந்த ஒன்றாகும். அந்த இளைஞரின் மனத்திட்பமோ குறிப்பிடத் தகுந்த சிறப்பு வாய்ந்ததாகும். இருவருமே மதத்தை விரும்பினார்கள்; நம்பினார்கள். மகாத்மா காந்திக்கு மதம்தான் அரசியல்; ஆனால் உண்மையான மதம்தான் சமூகத்தின் அடித்த ளம் என்று பாபர்சாகிப் அம்பேத்கர் கருதினார். வாழ்க்கைக்கும் சமூக முன்னேற்றத்திற்கும் மதம் இன்றியமையாதது என்று அம்பேத்கர் கூறினார். போப் அவர்களின் சொற்களில் கூறுவதா னால், தான் மட்டுமே ஆள வேண்டும் என்று இருவருமே விரும்பினார்கள். துருக்கியரைப் போல அரியணையின் அருகில் அவர்களுடைய சகோதரர்கள் இருப்பதைக்கூட அவர்களால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. மகாத்மா, அம்பேத்கரின் பரந்துபட்ட படிப்பறிவை, சிந்தனையின் ஆற்றலை, உள்ள உரனை மதித்தார். ஆனால் அவருடைய கொள்கைகளுக்குச் சிறிதளவும் ஆதரவுகாட்ட மறுத்து விட்டார். காந்தியின் ஒப்பற்ற ஆற்றலை, மனிதத்தன்மையின் அடிப்படையில் தீண்டப்படாதவர்க ளுக்கு அவர் ஆற்றிய தொண்டை அம்பேத்கர் ஒப்புக்கொண்டார். ஆனால் கண நேரத்தில் தோன்றி மறையும் பேய்கள்போல் மகாத்மாக்களும் பெரும் ஆரவாரத்தைக் கிளப்புவார்கள்; அதனால் எத்தகைய மேம்பாடும் பயனும் ஏற்படுவதில்லை என்று அம்பேத் கர் கூறினார். இயல்பில் காந்தியும் அம்பேத்கரும் வசிஷ்டர், விசுவாமித்திரர் போல் அல்லது வால்டேர், ரூசோபோல் ஒருவருக் கொருவர் மாறுபட்ட இயல்புடன் இருந்தனர். இவ்வுலகின் மிகச்சிறந்த மனிதராகத் திகழ்ந்த காந்திக்கு அரசியல், விஞ்ஞானம், சமூக இயல் கோட்பாடுகள்பற்றி எதுவும் தெரியாது. ஆனால் அம்பேத்கர் அரசியல் சட்ட இயலில் முழுமுதல் தலைவனாக இருந்தார்; சமூக இயலின் சிறந்த மாணவராகத் திகழ்ந்தார்.

தீண்டப்படாதவர்களுக்கு நான்தான் உண்மையான பாதுகாவலன் என்று காந்தி சொன்னார். ஆனால் அம்பேத்கர், நான்தான் தீண்டப்படாதவர்களுக்கு இயல்பான தலைவன் என்றார். தீண்டப்படாதவர்களின் தலைவர் என்பது வெறும் உணர்வின் அடிப்படையில் மகாத்மா வருவித்துக்கொண்டதாகும். ஆனால் பாபாசாகிப் அம்பேத்கரின் தலைமை என்பதோ இயல்பானது; உண்மையானது; நடைமுறை ரீதியானது. இந்திய அரசியலில் ஈடுஇணையற்ற சர்வாதிகாரிபோல இருந்துகொண்டு காந்தி செலுத்திய ஆதிக்கத்திற்கு, அந்த இளைஞர் ஒரு சவாலாகத் திகழ்ந்தர். அதனால் அப்பெருந்தலைவர் அந்த இளைஞரைத் தனிமைப்படுத்தி அடக்கி ஒடுக்க முனைந்தார். மகாத்மாவின் எதற்கும் அசையாத தன் முனைப்பு அவருடைய ஆழங்காண முடியாத அரசியல் சூழ்ச்சியை விட மேலோங்கி நின்றது. அம்பேத்கரிடம் இருந்த மன்னிக்கக் கூடிய பெருமித உணர்ச்சி அவரிடமிருந்த வெறுப்புணர்வையும் விஞ்சி நின்றது.

மகாத்மாவின் பெரும்புகழ் உலகம் முழுவதும் படர்ந்து பரவியிருந்தது. அம்பேத்கருக்குள் இருந்த ஆற்றல்மிக்க மனிதன், மனிதனை மனிதன் இழிவுபடுத்தும் கேட்டினை உலகுக்கு உணர்த்தினான். அவர் ஓங்கி அடித்த சம்மட்டியடிகள் உலகம் முழுவதும் எதிரொலித்தன. இந்தியாவில் பாராட்டுக்கும் புகழுரைக்கும் பழகிப் போயிருந்த மகாத்மா—இலண்டனில் நடைமுறை உலகத்தை, சிறந்த அரசியல் மேதைகளை, அச்சமற்ற அறிஞர்களைச் சந்திக்க வேண்டியிருந்தது. இலண்டனில் காந்திக்கு இந்தியப்பத்திரிகை உலகம் பக்கத்துணையாக இல்லை; அவருடைய பக்தர்கள் அவரைச் சூழ்ந்து நிற்கவில்லை. அதே நேரத்தில் வணிக மயமாகிவிட்ட இந்தியப் பத்திரிகைகளால் ஏவிவிடப்பட்ட அம்பேத்கர் உயர்ந்து ஒளிர்ந்தார். கட்சியமைப்பின் உந்துதலான உதவியோ, கட்சிப்பணத்தின் உதவியோ இல்லாமல், அவருடைய விட்டுக் கொடுக்காத நெஞ்சுறுதி, மலைப்பூட்டும் ஆற்றல், வீரஞ்செறிந்த துணிவு, ஈடிலா அறிவுத்திறன் ஆகியவற்றைத் தன் வலிமையாகக் கொண்டு அம்பேத்கர் உயர்ந்தார். வெற்றிகொள்ளும் அறிவாற்றலை அம்பேத்கர் பெற்றிருந்ததால் ஒரு பகுத்தறிவாளரையோ அல்லது ஒரு புரட்சியாளரையோ, ஒரு மகாத்மாவையோ அல்லது கடவுளின் திருத்தூதரையோ நேருக்குநேர் சந்திக்க அவர் எப்போதும் தயாராக இருந்தார்.

காந்திக்கும் அம்பேத்கருக்கும் இடையே நடைபெற்ற மோதலைப்பற்றி குளோர்னி போல்ட்டன் (Glorney Bolton) எழுதியுள்ளார்.



டாக்டர் அம்பேத்கர், பெரியார் ஈ.வெ. இராமசாமியுடன் 1944 செப்டம்பர், சென்னையில்

நாட்கள் செல்லச்செல்ல டாக்டர் அம்பேத்கர் உலகின் கவனத்தை ஈர்த்தார்; தீண்டப்படாத வகுப்பு மக்களுக்காக அவர் பேசினார். கன்சர்வேட்டிவ் கட்சி மேடையாக இருந்தாலும், சோசலிஸ்ட் கட்சி மேடையாக இருந்தாலும் இந்தியாவின் நல்வாழ்வுபற்றியே அவர் பேசினார். தீண்டப்படாத வகுப்பு மக்களின் துன்பமயமான வாழ்க்கையைப்பற்றிய விளக்கம் அவர் பேச்சில் கட்டாயம் இடம்பெற்றிருந்தது. இப்போக்கு நடைமுறையை ஒட்டியதாக இருப்பதைக் காட்டிலும் கொள்கை உணர்ச்சி சார்ந்ததாகவே இருந்தது. தீண்டப்படாத வகுப்பு மக்களின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதன்மூலம் காந்தி இலண்டனில் இருந்த எல்லாப் பிரிவுச் சமயக் குருமார்களின் புகழுரைகளைப் பெற்றிருக்கலாம். ஆனால் அம்பேத்கர் காந்திக்கு அந்த வாய்ப்பு கிடைக்க முடியாதபடிச் செய்துவிட்டார். முதலில், முகம்மதியர்கள், காந்திக்கு ஏற்பட்ட இந்த இக்கட்டான நிலையை எண்ணி உள்ளூர மகிழ்ந்தனர். காந்தி முக்கியத்துவம் வாய்ந்த ஒருவர். எனவே அவருக்கு உரிய மரியாதையை அம்பேத்கர் காட்ட வேண்டும் என வட்டமேசை மாநாட்டுப் பிரதிநிதி ஒவ்வொருவரும் எதிர்பார்த்தனர் என்று குளோர்னி போல்ட்டன் எழுதினார்.[55]

இந்தியத் தேசியப் பத்திரிகைகள் உடனடியாக அம்பேத்கர் மீது கட்டற்ற சினத்துடன் தாக்குதலைத் தொடுத்தன. அரசியல் அதிகார மாற்றம் என்பதைப்பற்றி அதிகமாகக் கவலைப்படவில்லை என்று அம்பேத்கர் கூறியதை ஒரு வெட்கங்கெட்ட பேச்சு என்று இப்பத்திரிகைகள் குறிப்பிட்டன; அம்பேத்கர் தன்னடக்கத்தையும் நாகரிகத்தையும் காற்றில் பறக்கவிட்டுவிட்டார் என்று கதறின.

அம்பேத்கர் இந்தியாவில் மிகவும் வெறுக்கப்பட்ட மனிதராக ஆனார். நாகரிகமற்ற, திமிரான, அளவை விஞ்சிய முரட்டுத்தனமுள்ள, மனிதத்தன்மையற்ற ஒரு மனிதராக அம்பேத்கர் பழிக்கப்பட்டார். அவர் ஒரு பேய், சமூகத்தின் முதல் எதிரி, பிற்போக்காளர், பிரிட்டிஷ் அரசின் கையாள், இந்திய நாட்டின் துரோகி, இந்து மதத்தை அழிக்க வந்துள்ள கொடியவர் என்றெல்லாம் கண்டனம் செய்யப்பட்டார். அப்போது இந்தியாவில் புகழ்பெற்ற ஒரு பத்திரிகையாளரான டி.ஏ. இராமன் என்பவரிடம், அவருடன் பயணம் செய்த ஒருவர், இவ்வுலகில் நான் எவரையேனும் என்றேனும் ஒருநாள் கொலை செய்தால் அவர் அம்பேத்கராகத்தான் இருப்பார் என்று தம் வெறியைக் கொட்டினார். நாட்டில் உள்ள பத்து பேர்களைவிட அம்பேத்கரைப்பற்றி மட்டும்

இதைவிட இன்னும் மோசமானவற்றை மற்றவர் கூறிடக் கேட்டேன்[56] என்று இராமன் கூறினார். எதிரிகளின் அக்கொடுந்தாக் குதல்பற்றிச் சில ஆண்டுகள் கழித்து அம்பேத்கர் சினந்த பார்வையுடன் எட்வர்ட் தாம்சனிடம், "உண்மையில் நான் குறுகிய நோக்கங் கொண்டவனாக மட்டும் இருக்கவில்லை, இவற்றைக் கேட்டு என் தோலும் மரத்துப்போய்விட்டது."[57] என்று சொன்னார்.

இந்தியப் பத்திரிகைகளால் அவருடைய வெறுப்புணர்வு அதன் எல்லையை எட்டியிருந்தது. ஆனால் அயல்நாட்டுப் பத்திரிகையா ளர்கள் காந்தி—அம்பேத்கர் மோதலைச் சற்று மாறுபட்ட தன்மை யில் பார்த்தனர். "காந்தியின் குரல் பலருக்கு எதிரானது; அவர்கள் செல்வாக்கற்றவர்களாக இருக்கலாம்; மகாத்மா செல்வாக்கு மிக்க பெரிய அமைப்பின் சார்பில் பேசுபவராக இருக்கலாம்; பெரிய எண்ணிக்கையில் உள்ள சிறுபான்மையினர்களிடையே இருக்கின்ற தேசியக் கண்ணோட்டம் கொண்ட சிறந்த தலைவர்களைக் காந்தி தன்னுடன் அழைத்து வந்திருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். அவ்வாறு அழைத்து வந்திருப்பின் இப்போது காந்தியைப்பற்றிக் கூறப்படுகின்ற குற்றச்சாட்டுகளுக்கு அவர்கள் பதில் சொல்லியிருப்பார்கள்" என்று ஒரு அமெரிக்கப் பத்திரிகையா ளர் எழுதினார். இதே போன்ற கருத்தைச் சர். சிமன்லால் ஹரிலால் சத்தல் வாட் அவருடைய **(Recollections and Refelections)** 'நினைவுக் குறிப்புகளும் பிரதிபலிப்புகளும்' என்ற நூலில் எழுதியுள்ளார். ஆனால் தீண்டப்படாதவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்திட காங்கிர சில் யார் இருக்கிறார்கள்? எம்.சி. இராஜாவும் காந்தியையும் காங்கிரசையும் கைகழுவிவிட்டார். காங்கிரசில் எஞ்சியுள்ள மற்ற தீண்டப்படாத வகுப்புத் தலைவர்கள் அம்பேத்கர் முன்னிலையில் நிற்கவும் தகுதியற்றவர்கள்.

மற்றொரு அரசியல் பார்வையாளர் காங்கிரசுப் பத்திரிகை ஒன்றுக்கு அவருடைய அறிக்கையை அனுப்பினார். "முஸ்லீம்கள் கூடக் காந்தியிடம் மிகுந்த மரியாதையுடன், பணிவுடன் நடந்து கொண்டார்கள். ஆனால் கற்றறிந்த அம்பேத்கரோ அளவுக்கு அதிகமான முரட்டுத்தனத்துடன் நடந்துகொண்டார்; மனிதத் தன்மையுடன்கூட நடந்துகொள்ளவில்லை. அம்பேத்கர் இலண்ட னில் தன் மனக்காழ்ப்பைக் கொட்டித் தீர்த்திட முடிந்தது. இந்தியாவில் அவரால் இதுபோல் செய்ய முடியாது" என்று அவர் கூறியிருந்தார். அந்த அரசியல் பார்வையாளர் உயர்ந்த

கொள்கைக்காக உழைத்திடும் சிறந்த இந்த மனிதனைச் சந்தித்ததே இல்லை போலும்! அம்பேத்கரை வெறும் கண்களால் மட்டுமே அவர் பார்த்திருக்கிறார்; அம்பேத்கரின் உயரிய தன்மையை அவர் ஆய்வு செய்யவில்லை.

வாய்ப்பு அமையும்போதெல்லாம் பகைகொண்டு அவரைத் தாக்கி வந்த விமர்சகர்களை அவர் திருப்பித் தாக்கினார். எப்படி? அவர்கள் வழிபடும் காந்தியின் புகழை அடித்து நொறுக்குவதன் மூலமாக! காந்தி மீது அவர் தொடுத்த தாக்குதல் வால்டேர், மார்க்சு, லெனின் போன்றவர்கள் தங்களின் எதிரிகள் மீது தொடுத்த தாக்குதல் போன்றிருந்தது. சில ஆண்டுகள் கழித்து வட்டமேசை மாநாட்டின்போது காந்தி நடந்துகொண்ட முறை பற்றி அம்பேத்கர் அய்யத்திற்கே இடமில்லாத வகையில் கூறினார். "காங்கிரசு அதனுடைய பிரதிநிதியாக வட்டமேசை மாநாட்டிற்குக் காந்தியைத் தேர்ந்தெடுத்து அனுப்பியது அதன் போதாத காலம்தான். இந்தியாவின் தலைவிதியை நிர்ணயிப்பதற்கு வழி காட்டிட காந்தியை அனுப்பியதற்குப் பதிலாக மிக மோசமான ஒரு மனிதரை அனுப்பியிருக்கலாம். பல பிரிவினர்களையும் ஒன்றிணைக்கும் முயற்சியில் காந்தி பெருந்தோல்வியையே தழுவினார். அடக்கத்தின் முழுவடிவம் என்று தன்னைக் காந்தி காட்டிக்கொண்டார். வெற்றியை எட்டிப் பிடித்துவிட வேண்டும் என்ற முயற்சியில் காந்தி ஒரு சிறுமதியினர் என்பதை வட்டமேசை மாநாட்டில் அவர் நடந்துகொண்ட முறை புலப்படுத்தியது; வட்டமேசை மாநாட்டில் கலந்துகொள்வதற்காக இலண்டனுக்கு வருவதற்கு முன்பே அரசுடன் வெற்றிகரமானதோர் சமரசத்தை ஏற்படுத்திக் கொண்ட காந்தி, காங்கிரசுக்காரர்கள் அல்லாத பிரதிநிதிகள் அனைவரையும் இழிவாக நடத்தினார். வாய்ப்பு அமையும்போதெல் லாம், அவர்கள் அடித்தளமே இல்லாத வெற்று ஆட்கள் என்று அவர்கள் மனம் புண்படும்படிப் பேசினார். காங்கிரசின் பிரதிநிதி என்றவகையில் காந்தி தான் மட்டுமே இந்திய நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கூறினார். பல பிரிவுகளின் பிரதிநிதி களை ஒன்றிணைப்பதற்கு மாறாக காந்தி அவர்களிடையே பிளவை அதிகப்படுத்தினார். அறிவுக் கண்ணோட்டத்திலிருந்து பார்த்தாலும் அவர் போதிய அறிவைப் பெற்றிருக்கவில்லை என்பதை அவரே நிருபித்தார். அரசியல் சட்டம் மற்றும் வகுப்புச்சிக்கல் பற்றிய பல பிரச்சினைகளை வட்டமேசை மாநாடு தீர்க்கவேண்டியிருந்தது. அச்சமயங்களில் பயனற்ற பல சொற்பொழிவுகளை ஆற்றிக்கொண் டிருந்தார். ஆனால் உருப்படியான கருத்தையோ ஆக்கந்தரும்

யோசனையையோ அவர் கூறவே இல்லை''[58] என்று அம்பேத்கர் கூறினார்.

காந்தியின் அரசியல் ஆசான் கோகலே காந்தியின் இத்தன்மையைக் கணித்திருந்தார். அரசியல் வரலாற்றில் அரசியல் தொடர்பான பேச்சுவார்த்தைகள்பற்றியோ, விவாதங்கள்பற்றியோ எழுதப்படும் போது காந்தி தோல்வியுற்ற ஒரு மனிதராக எழுதப்படுவார் என்று கோகலே கருத்து கூறியிருந்தார்.

தங்களைப் போன்றுள்ள மற்ற சிறுபான்மையினரைக் காட்டிக் கொடுக்க முஸ்லீம்கள் விரும்பாததால்தான், காந்தி கூறிய சமரச யோசனையை முஸ்லீம்கள் ஏற்க மறுத்தனர் என்று அம்பேத்கர் கருதியிருப்பது வரலாற்றின்படி சரியானதன்று. உடன்பாடு காணும் முயற்சியில் ஒரு குறிப்பிட்ட எல்லைவரை இந்துத் தலைவர்களோடு இணக்கமாக இருப்பதுபோல் போக்குக்காட்டிவிட்டு, அதன்பின்னர் மேலும் கூடுதலான சலுகைகளைப் பெறுவதற்காகப் பிரிட்டிஷ் அரசினை நாடுவது என்பது முஸ்லீம் தலைவர்கள் கையாளும் நடைமுறைத் தந்திரமாக அப்போது இருந்தது. சலுகைகளை அளிக்கும் அதிகாரம் பிரிட்டிஷ் அரசிடம் தான் இருந்தது என்பதை முஸ்லீம்கள் தெளிவாக அறிந்திருந்தனர். புத்திசாலித்தனமுள்ள எந்தவொரு மனிதனும் தான் எது வேண்டுமென்று கேட்கிறானோ அதையே மற்றவர்கள் கேட்கும்போது எப்படித் தடுத்திட முடியும்? என்பது இரண்டாவது காரணம். தனி வாக்காளர் தொகுதி வேண்டுமென்று முஸ்லீம்கள் ஆலாய்ப் பறந்தார்கள். இந்த உரிமைகளை மற்ற சிறுபான்மையினர்களும் பெறுவதை முஸ்லீம்கள் தடுக்கவில்லை; அந்த அளவிற்கு அவர்களிடம் கெட்டிக்காரத்தனம் இருந்தது. இந்தச் சமூகம் அரசியல், சமூக நிலைகளில் பிளவுபட்டிருந்தமையை முஸ்லீம்கள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டனர். அம்பேத்கரிடம் அவர்கள் உதட்டளவில் மட்டுமே ஆதரவு காட்டினார்கள்; உருப்படியாக எவ்வகையிலும் உதவவில்லை.

அம்பேத்கரின் சுதந்திர உணர்வை, நாணயத்தை, தொண்டினைத் துரோகச் செயல் என்று காங்கிரசின் தலைவர்களும், இந்தியப் பத்திரிகைகளும் படம்பிடித்துக் காட்டியமை எப்படி நீதியாகும்? எப்படி நேர்மையாகும்? காந்தியின் பக்கம் அவர் இல்லை என்பதனாலேயே அவர் தேசத்துரோகியாகிவிட்டாரா? எவ்வளவு பெரிய சிறப்பு வாய்ந்த மனிதராக இருப்பினும், அவருக்கு அறிவின் வலிமையும் சிந்தனை ஆற்றலும் எந்நிலையிலும் வளையாத

உறுதிப்பாடும் மிக்க அம்பேத்கர் வெறும் பின்பாட்டுப் பாடுபவராக எப்படி இருக்க முடியும்? ஒரே சுற்று வட்டத்திற்குள் இரு விண்மீன்கள் இயங்க முடியாது. காங்கிரசுக் கட்சி மட்டும்தான் நாட்டின் விடுதலைக்காகப் பாடுபடுகிறது என்கிற எண்ணத்தை மக்களிடையே காங்கிரசுக்காரர்கள் ஏற்படுத்திவிட்டார்கள். உண்மை என்னவென்றால், அவ்வாறு உரிமைக் கோருவதற்கு காங்கிரசுகூட மிகவும் காலந்தாழ்ந்துதான் முன்வந்தது. முழு அரசியல் விடுதலை தான் எமது குறிக்கோள் என்று முதன்முதலில் முழங்கியவர்கள் வீர சாவர்க்கரும் அவருடைய புரட்சிகரக் கட்சியும்தான். எல்லாக் கட்சிகளும் சுதந்திரம் கோரின. ஆனால் அந்தந்தக் கட்சியின் இயல்புக்கு ஏற்பவே சுதந்திரத்தைக் கோரினர். அம்பேத்கரும் நாட்டு விடுதலையை விரும்பினார். அவருடைய கட்சியின் குறிக்கோள் சுதந்திரமே எனவும் அறிவித்தார். விடுதலை பெற்ற இந்தியாவில்தான் தீண்டப்படாதவர்களின் வாழ்க்கை விரைவான முன்னேற்றத்தை எய்திட முடியும் என்று பல மாநாடுகளிலும், முதலாவது வட்டமேசை மாநாட்டிலும் அம்பேத்கர் தெளிவுபடுத்தியுள்ளார். தீண்டப்படாதவர்களின் நலன்களுக்கும், மேம்பாட்டிற்கும் பகைவர்களாக, தீங்கு விளைவிப்பவர்களாக இருக்கின்ற பெரும்பான்மையினரிடம் சுதந்திர இந்தியாவின் ஆட்சி அதிகாரம் முழுவதும் போய்விடுமோ என்று அம்பேத்கர் அஞ்சினார். அதனால் சுதந்திரம் கோரும் வேட்கை சில போழ்து தணிந்து காணப்பட்டது.

அம்பேத்கரின் சிந்தனையில் சுழன்று வீசிக்கொண்டிருந்த போராட்டத்தைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டுமானால் வரலாற்று ஆசிரியர்கள் மற்றொரு நிகழ்ச்சியையும் பதிவுசெய்ய வேண்டும். அந்த நிகழ்ச்சி அம்பேத்கரின் உண்மையான உள்ளத்தை வெளிப்படுத்தும். அம்பேத்கர் அவருடைய பேச்சுகளைப் பிரிட்டிஷ் அரசியல் வல்லுநர்கள் முஸ்லீம்களின் கோரிக்கைகளை ஆதரிக்கும் நோக்குடன் இந்துக்களுக்கு எதிராக அடிக்கடி பயன்படுத்துவதைக் கண்டார். முஸ்லீம்களுக்கு எதிராக, இந்துக்களின் நலன்களை ஆதரித்து, ஒரு இரகசியக் குறிப்பைப் பிரதமர் ராம்சே மெக்டொனால்டுக்கு அம்பேத்கர் அனுப்பினார் என்று அவருடைய மிக நெருங்கிய நண்பர்கள் கூறுகின்றனர்.

VI

இந்தப் பிரச்சினையில் நியாயம் யார்பக்கம் இருந்தது என்று கேட்டால் அம்பேத்கரின் பக்கம்தான் இருந்தது. இந்தியாவின்

நெடிய வரலாற்றில் பல மன்னர்களும் பேரரசுகளும் இருந்தனர். ஆளும் வர்க்கத்தினரில் ஒருவர்கூட, காலங்காலமாக அடிமைத்தளை யில் கட்டுண்டு கிடக்கும் தீண்டப்படாத வகுப்பு மக்களுக்கு விடுதலை வழங்கவேண்டும் என்று எண்ணவில்லை. ஊமையராய் முடமாகக் கிடக்கும் கோடிக்கணக்கான அம்மக்களை மனிதர் நிலைக்கு உயர்த்துவதற்காக ஆட்சி அதிகாரப் பீடத்தில் இருந்த சாதி இந்துக்கள் எந்தவொரு சட்டத்தையும் இயற்றவில்லை. அவருடைய மக்களின் இரங்கத்தக்க கொடிய நிலையைச் சினத்தைக் கிளறும் மொழியில் இலண்டனில் உலக மக்கள் அறியுமாறு அம்பேத்கர் பேசினார். அவரைப் போன்ற மனக்கிளர்ச்சி கொண்ட ஆற்றல்மிக்க சிந்தனையாளர் அவ்வாறு பேசுவது இயல்பே!

சாதி இந்துக்கள் அரசியல் அடிமைத்தளையால் பாதிக்கப்பட்டிருந்தனர். ஆனால் அம்பேத்கருடைய மக்களோ இந்த நாட்டில் சமூக மற்றும் அரசியல் அடிமைத்தளைகளால் பிணைக்கப்பட்டிருந்தனர். சமூக அரசியல் தளைகளால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்களை ஒடுக்குவோரைப்பற்றிக் கனல் கக்கும் மொழியில்தான் கண்டிப்பார்கள். நூற்று அய்ம்பது ஆண்டுக்கால அரசியல் அடிமைத்தனத்தை எதிர்த்துப் பிரிட்டிஷ் அரசுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தீவிரமான வழிமுறைகளும் வன்முறைகளும் நியாயப்படுத்தப்படும் போது, தீண்டப்படாதவர்கள் தங்களை ஒடுக்குவோரின் பிரதிநிதிகள் பற்றியும், ஒடுக்குமுறைபற்றியும் புண்படும்படியாக வெறுப்புடன் பேசுவது ஆயிரம் மடங்குகள் நியாயமானதாகும். தங்களை இரண்டாயிரம் ஆண்டுக் காலமாக மனிதத் தன்மையற்ற முறையில் நடத்திய சமூகத்தைச் சேர்ந்த தலைவர்களைப்பற்றி நசுக்கப்பட்ட மக்கள் நாகரீகமான முறையில், இனிய சொற்களால் எப்படிப் பேசமுடியும்? இதுநாள்வரை தங்களை நசுக்கிக்கொண்டிருக்கும் ஆதிக்கவாதிகளிடம் அரசியல் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டால் அவர்களிடமிருந்து என்ன நன்மையை எதிர்பார்க்கமுடியும்? அயல் நாட்டவரிடமிருந்து உதைவாங்கிக்கொண்டிருக்கும் அதே வேளை யில், தங்களைவிட ஏழை எளியவராக இருக்கும் சொந்தச் சகோதரர்களையே கீழ்த்தரமாக எட்டி உதைத்துக்கொண்டிருக்கும் செயலைப்பற்றி என்னென்பது? தீண்டப்படாத வகுப்புத் தலைவர்கள் சுட்டெரிக்கும் சொற்களால் சாடுகிறார்களே என்று கண்டிப்பதற்கு அவர்களுக்கு என்ன தகுதி இருக்கிறது? தீண்டப்படாதவர்களை விட முன்னேறிய நிலையில் உள்ள வகுப்பினர்க்கு 'வரலாற்றின் அடிப்படையில்' என்று காரணம் காட்டி அவர்களுக்குத் தனிச் சலுகையும் பாதுகாப்பும் அளிக்க ஒப்புக்கொண்டார்கள்;

ஆனால் அதே தனிச்சலுகைகளை இந்திய நாட்டில் உண்மையில் நசுக்கப்பட்டுக் கிடக்கும் மக்களுக்கு அளித்திட மறுத்தார்கள். இது எவ்வகையில் நியாயம்?

சாதி இந்துக்களின் தலைவர்கள் அவர்களுடைய அரசியல் விடுதலைக்காகப் போராடினார்கள். ஆனால் அம்பேத்கருக்கோ தீண்டப்படாத வகுப்பு மக்களை மனிதர்கள் என்ற நிலைக்குக் கொண்டு வருவதே தலையாய பணியாக இருந்தது. உளவியல் பூர்வமாக, வரலாற்றில் ஒரு காலக்கட்டத்தில் ஒரே ஒரு முறை மட்டுமே அமையக்கூடிய வாய்ப்பு அது.

அதை அவர் இழந்திட இடந்தருவாரா? வட்டமேசை மாநாட்டில் அந்த அரிய வாய்ப்பை அம்பேத்கர் கண்டார்; பாய்ந்து அதை இறுகப் பற்றிக்கொண்டார். வட்டமேசை மாநாட்டின் பிரதிநிதியாக அம்பேத்கர் இடம் பெறாதிருந்திருப்பின், தீண்டப்ப டாத வகுப்பு மக்களை இந்தியாவின் அரசியல் களத்திற்கு வேறு யார் அழைத்து வந்திருப்பார்கள்? அரசியல் சுதந்திரத்திற்காகப் போராடியவர்களிடம் செல்வமும், செல்வாக்கும் வலிமையும் ஒரு சேர இருந்தன. ஆனால் அம்பேத்கர் எந்த மக்களின் உரிமைக்காகப் போராடிக்கொண்டிருந்தாரோ, அம்மக்களின் அறிவும், சிந்தையும், உணர்வுகளும், நல விருப்பங்களும் இம்மண்ணில் காலங்காலமாக நசுக்கப்பட்டுக் கிடந்தன. அவருடைய இலட்சியம் விழுமியது; அவருடைய பணி மாண்புமிக்கது, எளிதில் செய்ய முடியாத ஒப்பரிய பணி அது! அரசியல் விடுதலையை வென்றெடுப்பதை விட விரைந்து பெறப்பட வேண்டியது. அம்பேத்கரின் வெற்றியில் தான் இந்தியச் சனநாயகத்தின், இந்திய நாட்டின் வெற்றியும் வலிமையும் பாதுகாப்பும் அடங்கியிருந்தன.

அரசியல் விழிப்புணர்வு பெற்ற தீண்டப்படாத வகுப்பு மக்கள்மீது சாதி இந்துக்கள் தங்கள் தலைமையைத் திணிக்க முயலுவதும், தீண்டப்படாதவர்களின் நலன்களைப் பேணுவோம் என்று கூறுவதும் வடிகட்டிய முரட்டுத்தனமான, அட்டூழியமான பேராசையே ஆகும். ஒடுக்குபவர்கள் என்றுமே மீட்பர்களாக ஆவதில்லை. தீண்டப்படாதவர்களின் விடுதலை வீரர் அவர்களி டையே தோன்றினார். அவர்களால் எந்த அளவிற்கு முடியுமோ அந்த அளவிற்குப் போராடுவதற்கான எழுச்சியை அவர்களுக்கு அவர் ஊட்டினார். தீண்டப்படாதவர்களின் விடியலுக்கான ஒரு நல்ல அறிகுறி இது! ஊமை மக்களின் தலைவரான அம்பேத்கர் அரசியல் பிரச்சினைகளில் துணிச்சலாக மேற்கொண்ட

முடிவுகளும், அரசியல் சட்டம்பற்றி மிக நுணுக்கமாக உய்த்தறிந்த திறனும் தீண்டப்படாதாருக்குப்' பெருஞ்செல்வமாகத் திகழ்ந்தன. புதிய வரலாறு தொடங்கப்போகிறது என்பதன் அடையாளமாக அது இருந்தது. ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களின் நலங்கருதியே-ஒட்டுமொத்தமாக இந்துச் சமூகத்தின் நீடித்த நலன் கருதியே அம்பேத்கரின் முயற்சிகள் அமைந்திருந்தன. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் பற்றி முழங்குகிறவர்கள் செய்யவேண்டிய புனிதக் கடமை என்னவென்றால், 'இட ஒதுக்கீட்டுடன் கூடிய கூட்டு வாக்காளர் தொகுதி' என்ற அவருடைய கோரிக்கைக்கு ஒப்புதல் தருவதேயாகும். ஆனால் காங்கிரசின் சார்பில் பேசியவர்களோ அம்பேத்கரின் கோரிக்கையை ஆதரிப்பதற்கு மாறாக, எதிர்த்தார் கள்; அதே சமயத்தில் இக்கோரிக்கையை முஸ்லீம்கள் முன்வைத்த போது அதற்கு ஒப்புதல் தந்தனர். முஸ்லீம்களின் கோரிக்கையோ நேர்மையற்றது, ஆதிக்க எண்ணங்கொண்டது; உள்நோக்கம் உடையது.

உண்மையில் அம்பேத்கர் மேற்கொண்டு எவ்வாறு செயல்படு வது என்று புரியாமல் இருதலைக்கொள்ளி எறும்பாக இருந்தார். பிரிட்டிஷ் அரசியல் வல்லுநர்களை எதிர்த்துக்கொண்டு காந்தியுடன் அம்பேத்கர் இணங்கிப் போயிருந்தாரானால், அவருடைய மக்களுக் காகப் பிரிட்டிஷ் அரசிடமிருந்து எதையுமே அவர் பெற்றிருக்க முடியாது; காந்தியும் அம்பேத்கரின் மக்களுக்கு அவருடைய நல்வாழ்த்துகளையும், பயனில் பரிவுமொழிகளையும் தவிர வேறெ தையும் வழங்கியிருக்கமாட்டார். ஆகவே அம்பேத்கர் பிரிட்டிஷ் அரசின்பக்கம் சேர வேண்டியது தவிர்க்க இயலாததாகி விட்டது; அதன்மூலம் அவருடைய நிலைபாட்டிற்குப் பிரிட்டிஷ் அரசின் அங்கீகாரமும், கோரிக்கைகளுக்கு ஒப்புதலும் பெற்றிட நேரிட்டது. மற்றொரு மாற்று வழி என்னவெனில், காந்தியின் பக்கம் சேர்ந்து தனிப் பிரதிநிதித்துவத்தையும் கூட்டு வாக்காளர் தொகுதி முறையை யும் பெறுவதாகும். ஆனால் மகாத்மா அக்கோரிக்கையையும் கடுமையாக எதிர்த்தவர். காந்தி நிலைமையை உய்த்துணர்ந்து இக்கோரிக்கைக்கு ஆதரவு அளித்திருப்பின், பெரும் மோதலைத் தவிர்த்திருக்கக்கூடும்.

மீண்டும் வட்டமேசை மாநாடுபற்றிய செய்திக்கு வருவோம். சிறுபான்மையினர் குழுவின் கடைசிக் கூட்டம் நடைபெற்றது. அப்போது முஸ்லீம்கள், தீண்டப்படாதவர்கள், கிறித்தவர்களில் ஒரு பிரிவினர், அய்ரோப்பியர்கள், ஆங்கிலோ - இந்தியர்கள்

ஆகியோரின் முதன்மையான பிரதிநிதிகள் கூட்டாகக் கையெழுத்திட்ட ஒரு வேண்டுகோள் அறிக்கையை அளித்தார்கள். அந்த அறிக்கையில் முஸ்லீம்கள், தீண்டப்படாதவர்கள், கிறித்தவர்கள், ஆங்கிலோ-இந்தியர்கள், அய்ரோப்பியர்கள் ஆகியோரின் பொதுவான கோட்பாடுகள், தனிச்சலுகைகள்பற்றிக் குறிப்பிட்டிருந்தனர். "பிறப்பிடம், மதம், சாதி அல்லது சமயம் ஆகியவற்றின் காரணமாக அரசு உத்தியோகத்தில் சேருவதற்கோ, அதிகாரம் அல்லது மதிப்புத்தரும் பதவியில் அமருவதற்கோ, குடியுரிமைகளை அனுபவிப்பதற்கோ, எந்தவொரு தொழிலையும் செய்வதற்கோ, எவருக்கும் எத்தகைய பாகுபாடும் காட்டக்கூடாது" என்று அக்கூட்டறிக்கையில் கோரிக்கை வைக்கப்பட்டிருந்தது.


தீண்டப்படாதவர்களை அரசு ஊழியத்திலும், இராணுவம் மற்றும் காவல்துறையிலும் வேலைக்குச் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்றும், பஞ்சாபில் தீண்டப்படாதவர்களுக்கான பஞ்சாப் நில உரிமை மாற்றுச் சட்டத்தை நீட்டிக்க வேண்டும் என்றும், தமக்கு இழைக்கப்பட்ட குறையைப் போக்கவோ அல்லது நிர்வாகத்தில் உள்ள அதிகாரியின் அக்கறையற்ற போக்கினை அரசின் கவனத்திற்குக் கொண்டுவரவோ கவர்னருக்கோ அல்லது கவர்னர் ஜெனரலுக்கோ முறையீடு செய்யும் உரிமையை வழங்க வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் கோரப்பட்டிருந்தது.

அந்தக் கோரிக்கை அறிக்கையுடன், அம்பேத்கரும் இரட்டைமலை சீனிவாசனும் ஒரு துணை அறிக்கையைத் தயாரித்து அளித்தனர். இந்தியாவில் எல்லா மாகாணச் சட்டசபைகளிலும் மத்தியச் சட்டசபைகளிலும் தீண்டப்படாதவர்களுக்குத் தனிப்பிரதிநிதித்துவம் அவர்களின் மக்கள் தொகைக்கு ஏற்ப அளிக்கப்பட வேண்டும் என்று அந்தத் துணை அறிக்கையில் அவர்கள் கேட்டிருந்தனர். அவர்கள் தனி வாக்காளர் தொகுதி வேண்டுமெனக் கோரியிருந்தனர். இட ஒதுக்கீட்டுடன் கூடிய கூட்டு வாக்காளர் தொகுதிமுறை தொடர்ந்து இருக்கவேண்டுமானால் அது ஒரு கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு நடத்தப்பட்ட பின்னர்தான் தொடர்ந்து நடைமுறையில் இருக்கவேண்டும்; இதற்கான கருத்துக் கணிப்பு இருபது ஆண்டுகள் கழித்துத்தான் நடத்தப்பட வேண்டும். தீண்டப்படாதவரின் பெயர்மாற்றம்பற்றிய கோரிக்கை அவர்களுடைய கடைசிக் கோரிக்கையாக இருந்தது. 'சாதி இந்துக்கள் அல்லாதவர்', 'புரோட்டஸ்டென்ட்டு இந்துக்கள்' அல்லது 'இந்து மதத்தில் நம்பிக்கை இல்லாதவர்கள்' என்ற ஏதாவதொரு பெயரை

தீண்டப்படாத வகுப்புகள்' என்பதற்குப் பதிலாக அரசு ஏற்க வேண்டும் என்று கேட்டனர்.[59]

சிறுபான்மையினர் உடன்படிக்கை அறிக்கையில் தீண்டப்படாதவர்களுக்குத் தனி வாக்காளர் தொகுதி வழங்கப்பட்டிருப்பதை காந்தி அறிந்ததும் கொதித்தெழுந்து சீறினார். "முன்பு நான் சொன்னதையே மீண்டும் கூறிட விரும்புகின்றேன். இந்துக்களுக்கும், முகமதியர்களுக்கும், சீக்கியர்களுக்கும் ஏற்புடைய எந்தவொரு தீர்வையும் காங்கிரசு ஏற்றுக்கொள்ள எப்பொழுதும் தயாராக இருக்கிறது. ஆனால் மற்ற எந்தவொரு சிறுபான்மையினருக்கும் தனி ஒதுக்கீடோ அல்லது தனி வாக்காளர் தொகுதியோ அளிக்கப்படுவதற்குக் காங்கிரசு உடன்படாது" என்று காந்தி கூறினார். தீண்டப்படாதவர்களின் சார்பில் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகள் மற்ற எல்லாவற்றைக் காட்டிலும் இரக்கமற்ற முறையில் இந்துச் சமூகத்தைப் பிளவுபடுத்துவனவாகும்; அவை நிலையான கொடிய தடைகளாக இருக்கும்; தீண்டப்படாதவர்கள் கோரிக்கைபற்றிக் கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டால் அதில் நான் தான் பெருவாரியான வாக்குகளுடன் வெற்றிபெறுவேன் என்று காந்தி கூறினார். அம்பேத்கரின் திறமையைத் தான் மதிப்பதாகவும், ஆனால் அம்பேத்கர் தன் வாழ்க்கையில் சந்தித்த கசப்பான அனுபவங்கள் அவரை நேர்மையுடன் முடிவெடுக்கவிடாமல் தடுக்கின்றன என்றும் காந்தி அவருடைய மறுப்புரையில் திட்டவட்டமாகக் குறிப்பிட்டார்.

அம்பேத்கரின் கருத்தை மறுத்துக் காந்தி பேசியபோது, 'என்னுடைய முழுப்பொறுப்பையும் உணர்ந்துதான் நான் பேசுகிறேன். இந்தியாவில் இருக்கின்ற தீண்டப்படாத வகுப்பு மக்கள் அனைவரின் சார்பிலும் பேசுவதாக டாக்டர் அம்பேத்கர் உரிமை கொண்டாடி நிலைநாட்டியிருப்பது சரியன்று. அது இந்து மதத்தில் பிளவை ஏற்படுத்தும். அதனால் விளைகின்ற பயன் எதுவானாலும் அதை நான் எவ்வகைப்பட்ட மனநிறைவுடனும் ஏற்க முடியாது. தீண்டப்படாத வகுப்பு மக்கள் இஸ்லாத்திற்கோ, கிறித்தவ மதத்திற்கோ மதம் மாறுவதுபற்றி எனக்குக் கவலை இல்லை; அதை நான் பொறுத்துக் கொள்வேன். ஆனால் ஒவ்வொரு கிராமத்திலும் இவர்கள் இரு பிரிவினராகப் பிரிந்து நின்றால் இந்து மதத்திற்கு என்ன கேடு சூழுமோ என்று நான் அஞ்சுவதால் எதிர்க்கின்றேன் என்றார் காந்தி. 'தீண்டப்படாதவர்களின் அரசியல் உரிமைகள்பற்றிப் பேசுவோர்க்கு இந்தியாவைப்பற்றியோ,



அம்பேத்கர் தான் நிறுவிய சமதா சைனிக் தள மறவர்களுடன்

இந்தியச் சமூகம் இன்று எவ்வாறு அமைந்துள்ளது என்பதுபற்றியோ எதுவும் தெரியாது. ஆகவே என்னால் எந்த அளவிற்கு முடியுமோ அந்த அளவிற்கு அழுத்தமுடன் கூறிட விரும்புகின்றேன். இதை எதிர்க்கின்ற ஒரே ஆளாக நான் மட்டுமே இருக்க நேரிட்டாலும் இதை என் உயிரைக் கொடுத்தேனும் எதிர்ப்பேன்' என்று காந்தி உணர்ச்சி மேலிட உரைத்தார்.

அம்பேத்கரின் கடுங்கண்டனத்துக்கு ஆளாகி மிகவும் மனம் புண்பட்டிருந்த காந்தியின் பேச்சுக்கு அம்பேத்கர் பதிலளிக்கவில்லை. தீண்டப்படாத வகுப்பு மக்களிடையே தனக்கும் அம்பேத்கருக்கும் எந்த அளவிற்குச் செல்வாக்கு இருக்கிறது என்று ஒப்பிட்டுப் பேசும் அளவிற்குக் காந்தி கீழிறங்கிவிட்டிருந்தார். இந்தியா முழுவதிலிருந்தும் அம்பேத்கருக்கு ஆதரவாகக் கிடைத்த தந்திகள், மற்றும் நடத்தப்பட்ட கூட்டங்கள், மாநாடுகள் காந்தியின் நிலைக்கு எதிர்ப்பைக் காட்டின. வேறு யாராக இருந்தாலும் இவற்றைக் கண்டு தடுமாற்றம் அடைந்திருப்பார். ஆனால் காந்தி அவருடைய கருத்தில் விடாப்பிடியாக இருந்தார். தீண்டப்படாதவர்களுக்கு இட ஒதுக்கீட்டுடன் கூடிய கூட்டு வாக்காளர் தொகுதி முறையை ஏற்றுக் கொண்டு காந்தி இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வை ஏற்படுத்தியிருக்கலாம். ஆனால் காந்தி அம்பேத்கருடன் இணங்கிப் போகத் தயாராக இல்லை. அதே வேளையில் முஸ்லீம்களிடம் முழுமையாக அவர் சரணடைந்தார். முஸ்லீம்களுக்கெனத் தனி வாக்காளர் தொகுதி அமைவதையும், தனி மாகாணம் அவர்களுக்கென அமைவதையும், எளிதில் சாதிக்கப்பட முடியாத இவை அரசியல் சட்டத்தில் இடம் பெறுவதையும் காந்தி ஏற்றுக்கொண்டார். அம்பேத்கரிடம் பொறுமையுடன் எடுத்துரைத்து விளக்கி இணக்கமுடன் செயல்பட்டு, ஓர் உடன்பாட்டை உருவாக்கிட வேண்டும் என்ற எண்ணத்துடன் காந்தி முயன்றிருப்பாராயின், அம்பேத்கரின் அறிவாற்றலும், தாக்குந்திறனும் முஸ்லீம் மதவெறியர்களின் கோட்டையைத் தகர்ப்பதில் பெருந்துணையாக விளங்கியிருக்கும்.

காந்தியின் பேச்சில் வெளியான மற்றொரு செய்தி, தீண்டப்படாதவர்கள் இஸ்லாத்திற்கோ, கிறித்துவ மதத்திற்கோ மாறுவது பற்றிக் கவலைப்படமாட்டேன் என்று அவர் தெரிவித்ததாகும். இத்தகைய மதமாற்றம்பற்றி உண்மையில் காந்தி என்றுமே கவலைப்பட்டதில்லை; சிறிய அளவில் எதிர்ப்பும் காட்டியதில்லை. காந்தியின் இந்தப் போக்குக் காரணமாக, காங்கிரசார் அல்லாத

இந்துத் தலைவர்கள், காந்தி ஜைனம், பௌத்தம், கிறித்துவம் ஆகிய சமயக் கோட்பாடுகளின் ஒன்றிணைந்த உருவமாகத் தான் மாறவேண்டும் என்பதைத் தன்னுடைய குறிக்கோளாகக் கொண்டிருக்கிறார் என்று குற்றம் சாட்டியபோது, அதைக் காந்தியால் மறுக்க முடியாது போயிற்று. மதமாற்றத்திற்கு எதிராகக் காந்தி ஒரு சொல் கூறியிருந்தாலும் அவர் முஸ்லீம்களுடனும், கிறித்தவர்களுடனும் மோத வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும். அப்போது மகாத்மா என்ற பட்டம் கனவுபோல் கலைந்து போய்விட்டிருக்கும் என்று காந்தியின் விமர்சகர்கள் கூறினார்கள். சிறுபான்மையினர் சிக்கலைத் தீர்ப்பதில் பிரதிநிதிகளிடையே கருத்து ஒற்றுமை ஏற்படாததைக் கண்ட பிரிட்டிஷ் பிரதமர், அச்சிக்கலைத் தீர்ப்பதற்கான முழு அதிகாரத்தையும் தனக்கு அளிக்குமாறும், அவ்வாறு தான் எடுக்கின்ற முடிவுக்குக் கட்டுப்படுவோம் என்று உறுதி கூறுமாறும் ஒரு வேண்டுகோள் விண்ணப்பத்தில் சிறுபான்மையினர் குழு உறுப்பினர்கள் அனைவரும் கையெழுத்திட்டுத் தரவேண்டும் என்றும் கேட்டார். காந்தியும் மற்ற பிரதிநிதிகளும் அத்தகைய உறுதிமொழி விண்ணப்பத்தில் கையொப்பமிட்டனர். ஆனால் அம்பேத்கர் அதில் கையொப்பமிடவில்லை. ஏனெனில் அவருடைய கோரிக்கை நியாயமானது; அது கட்டாயம் வெற்றிபெறும் என்று நம்பினார். அதன்பின் பிரதமர் வட்டமேசை மாநாட்டை டிசம்பர் முதலாம் நாளுக்கு ஒத்திவைத்தார். பிரிட்டிஷ் பிரதமர் வேண்டுகோள் விடுப்பதற்குமுன் சர்.மிர்சா இஸ்மாயிலின் இருப்பிடத்தில் அம்பேத்கரும் காந்தியும் சந்தித்துப் பேசிக்கொண்டார்கள் அம்பேத்கரின் ஆதரவைப் பெறவேண்டும் என்ற நோக்குடன் காந்தி புதுமையானதொரு கருத்தை அப்போது கூறினார். இடஒதுக்கீடு இல்லாமல், கூட்டுத் தொகுதி முறையில் நடத்தப்படும் தேர்தலில் தீண்டப்படாத வகுப்பு வேட்பாளர் வெற்றிபெறத் தவறிவிட்டால், தீண்டப்படாத வகுப்பு வேட்பாளர் நீதிமன்றத்திற்குச் சென்று தன் வகுப்பு அடையாள உரிமையை நிலைநாட்டிக் கொள்ளலாம் என்று காந்தி சொன்னார். அறிவுக்குப் பொருந்தாதவற்றை மிகத்திறமையாகப் பேசுவதில் காந்தி சில சமயங்களில் வல்லவர்; அது அவருக்குக் கைவந்த கலை. அர்த்தமற்ற விநோதமான அக்கருத்தைக் கேட்டு அம்பேத்கர் மனதாரச் சிரித்துக் கொண்டார்.

அம்பேத்கர் இலண்டனில் இருந்தபோது பம்பாய் அரசு அவருக்கு ஜெ.பி. பதவியை அளித்துப் பெருமைப்படுத்தியது. காங்கிரசுவாதியான என்.எஸ். கஜ்ரோல்கர் போன்றவர்களும்

அதற்காக அம்பேத்கருக்குப் பாராட்டு தெரிவித்தனர். டிசம்பர் 5ஆம் நாள் இலண்டனிலிருந்து அமெரிக்காவுக்குப் புறப்பட்டுச் சென்று, அதன்பின் ஒரு மாதம் கழித்து இந்தியாவிற்கு வர இருப்பதாக அம்பேத்கர் சிவதார்க்கருக்குக் கடிதம் எழுதினார். இரட்டைமலை சீனிவாசன் அவர்களிடம் புத்தகங்கள் அடங்கிய முப்பத்திரண்டு பெட்டிகளைக் கொடுத்து அனுப்புவதாகவும் அக்கடிதத்தில் அம்பேத்கர் குறிப்பிட்டிருந்தார். அதன்படியே, அம்பேத்கர் நியூயார்க் சென்றார். அங்கு அவருடைய முன்னாள் பேராசிரியர்களைச் சந்திக்க விரும்பினார். சிறிது ஓய்வு எடுப்பதற்காகவும் அங்கே சென்றார் என்று கூறப்பட்டது.

காந்தி இலண்டனிலிருந்து இந்தியாவிற்குப் புறப்பட்டார். 1931 டிசம்பர் 28ஆம் நாள் பம்பாய் அடைந்தார். அதற்குச் சில நாட்களுக்கு முன், பம்பாயிலிருந்து வெளியாகும் ஃப்ரீபிரஸ் ஜெர்னல் (Free Press Journal) நாளேட்டில் ஓர் அறிவிப்பு வெளியாயிற்று. காந்தியிடம் தங்களுக்குள்ள நம்பிக்கையைக் காட்டுவதற்காக இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் தீண்டப்படாத வகுப்பு மக்கள் பம்பாய்க்கு வருகிறார்கள் என்று அதில் அறிவிக்கப்பட்டிருந்தது. அதனால் தீண்டப்படாத வகுப்புகள் அமைப்பின் செயலாளர் என்ற முறையில் சிவதார்க்கர், பம்பாய் மகாணக் காங்கிரசுக் கமிட்டியின் செயலாளருக்கு, காந்தியின் வருகையின்போது காந்திக்கு எதிராக முழக்கமிட்டு ஆர்ப்பாட்டம் செய்வோம் என்று ஒரு எச்சரிக்கை விடுத்தார். காந்தியையும் காங்கிரசையும் குற்றஞ்சாட்டி ஓர் அறிக்கையை வெளியிட்டார். வட்டமேசை மாநாட்டில் தீண்டப்படாதவர்களின் கோரிக்கைக்குக் காந்தி காட்டிய பகை எதிர்ப்பு நியாயமற்றது, மூர்க்கத்தனமானது, தெளிவற்றது, கண்டிக்கத்தக்க அளவிற்கு வெறித்தனமானது என்று அந்த அறிக்கையில் குற்றம் சாட்டப்பட்டிருந்தது. பம்பாய் மாகாணக் காங்கிரசு செயற்குழுவிற்குச் செயலாளராக இருந்த எஸ்.கே. பாட்டீல், காந்திக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வரவேற்பு என்பது தீண்டப்படாத வகுப்பு மக்களின் அன்பையும், நம்பிக்கையையும், மதிப்பையும் மகாத்மாவிற்குக் காட்டுவதற்காக மட்டுமே என்று பணிவான முறையில் சிவதார்க்கருக்கு ஒரு கடிதம் எழுதினார்.

ஆயினும் இதனால் ஏற்பட்ட பதற்றம் தணியவில்லை. டிசம்பர் 27 இரவே மோலே நிலையத்திற்குக் காங்கிரசு தொண்டர்கள் சென்றுவிட்டனர். தீண்டப்படாத வகுப்பு மக்கள் ஆண்களும்

பெண்களுமாக எட்டாயிரம் பேர் இரவு இரண்டரை மணிக்கு நடுக்கும் குளிரில் மோலே நிலையத்தை நோக்கிச் சென்றனர். குளிர் மிகுந்த இரவு மெல்லமெல்ல விலகியது. காலை ஆறு மணிக்கு மகாத்மா மோலேயில் வந்திறங்கினார். அவருக்கு எதிராகத் தீண்டப்படாத மக்கள் கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் செய்தனர். அதனால் கைகலப்பு ஏற்பட்டது. கற்கள், தடிகள், செங்கற்கள், சோடாபுட்டிகள் இருதரப்பிலிருந்தும் சரமாரியாக வீசப்பட்டன. அகிம்சையின் அவதாரமான காந்திக்கு அவருடைய மண்ணில் அளிக்கப்பட்ட வரவேற்பும் எதிர்ப்பும் இறுதியில் இரத்தம் சிந்துவதில் முடிந்தது. உண்மையில் வருந்தத்தக்க செயல்தான் அது! பிறருக்கு உதவுதல் என்பது எப்போதும் முதலில் தன் குடும்பத்தில்தான் தொடங்கப்படல் வேண்டும். ஆனால் காங்கிரசிடம் இது இல்லாமல் இருந்தது. காங்கிரசுத் தலைவர்களும் பத்திரிகைகளும் அரசியல் எதிரிகளிடம் பெருந்தன்மையற்ற போக்கிலும் பொறுமையிழந்தும் நடந்து கொள்வதில் முதலிடம் பெற்றிருந்தார்கள். தீண்டப்படாத வகுப்பு மக்களின் தலைவரான அம்பேத்கரைப்பற்றி அவர்கள் வெறுப்பூட்டும் பிரச்சாரத்தை மேற்கொண்டிருந்தார்கள்; பிரிட்டிஷ்காரர்களின் கையாள், புதரில் உள்ள நாகப்பாம்பு, துரோகி, சாருவாகனன் என்றெல்லாம் அம்பேத்கரைப் பழித்தனர். காங்கிரசுக்காரர்கள் அகமதாபாத்தில் அம்பேத்கருக்கு ஏற்கெனவே கறுப்புக்கொடி காட்டியிருந்தார்கள். காந்திக்குக் கறுப்புக்கொடி காட்டியது அதற்கான பதிலடி!

பூனா ஒப்பந்தம்

1932 சனவரி 4ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை அம்பேத்கர் இலண்டனுக்குத் திரும்பினார். சனவரி 15ஆம் நாள் இலண்டனிலிருந்து அம்பேத்கர் மார்செயில்ஸில் கப்பலில் ஏறிப் பயணமானார்; சனவரி 29ஆம் நாள் பம்பாயை அடைந்தார். பிரிட்டிஷ் பிரதமரால் நியமிக்கப்பட்ட வாக்குரிமைக் குழுவின் பிரிட்டிஷ் உறுப்பினர்கள் அம்பேத்கர் பயணம் செய்த கப்பலில் உடன் வந்தனர். அக்குழுவில் அம்பேத்கரும் உறுப்பினராக இருந்தார். வழக்கம் போல் அம்பேத்கர் வாங்கிய பொருள்கள், நூல்கள் இருபத்து நான்கு பெட்டிகளில் அவருடன் எடுத்துவரப்பட்டன.

அம்பேத்கர் சனவரி 29 காலை ஆறு மணிக்குப் பம்பாயில் வந்திறங்குவதாக இருந்தது. அவருடைய ஆதரவாளர்களும் தொண்டர்களும் விடியற்காலை முதலே அவருடைய வருகைக்காகத் துறைமுகத்தில் காத்திருந்தனர். பீ. பாலு உள்ளிட்ட தீண்டப்படாத வகுப்புத் தலைவர்கள் சிலரும், அரசியலில் காந்தியின் சார்பாளரான கஜ்ரோல்கரும் அம்பேத்கருக்குக் கப்பல் தளத்திலேயே மாலை அணிவித்து வரவேற்றனர்.

அம்பேத்கரும் அவருடன் பயணம் செய்த மௌலானா ஷவுகத் அலியும் மோலே துறைமுகத்தில் வந்திறங்கினார்கள். முஸ்லீம் தலைவரையும், தாழ்த்தப்பட்டோர் தலைவரையும் மகிழ்ச்சி பொங்கிய ஆரவாரத்துடன் மக்கள் வரவேற்றனர். முஸ்லீம்களும் தீண்டப்படாதவர்களுமாகக் கூடியிருந்த அப்பெருங் கூட்டத்தில் ஷவுகத் அலி பேசினார். ஒவ்வொரு மனிதனுக்கும் தன்னுடைய கொள்கையில் அசைக்க முடியாத நம்பிக்கை இருக்க வேண்டும்; அவ்வகையில் அம்பேத்கர் அவருடைய கொள்கைகளுக்காக மிகுந்த துணிச்சலுடன் போராடியது மிகவும் பாராட்டத்தக்கதாகும் என்று ஷவுகத் அலி கூறினார். ஷவுகத் அலியையும் அம்பேத்கரையும் ஊர்வலமாக அழைத்துச் சென்றனர்; ஊர்வலம் பைகுல்லாவில் முடிவுற்றது.

தீண்டப்படாத வகுப்பு மக்களின் வலிமையை, தன்னம்பிக்கையை, பேரவாவினை வெளிப்படுத்தும் மனிதராக அம்பேத்கர் அப்போது உருவாகியிருந்தார். அவரை இனி எவரும் எளிதில் புறக்கணித்துவிட முடியாது என்பது நிரூபிக்கப்பட்டுவிட்டது.

தீண்டப்படாதோரின் ஒரு வரலாற்றுக் கட்டத்தையே முடிவுக்குக் கொண்டு வரும் அளவிற்கு அவர் அவருடைய மக்களைத் திறமையாக வழிநடத்தினார். தீண்டப்படாததாவர்களின் உறங்கிக்கிடந்த நாளங்களில் புதிய ஆற்றலை, புதிய இரத்தத்தை, புதிய ஆவலைப் பாய்ச்சினார் அம்பேத்கர். மேற்கொள்ளும் முயற்சியில் இடர்களும் இன்னல்களும் இடையில் வந்தாலும், அவர் ஊட்டிய ஆற்றலும், அளித்த தொலைநோக்கும், விழிப்புணர்வும் தொடர்ந்து இலங்கிடும்.

அன்று மாலை பம்பாயில் பரேலில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் நூற்றுப்பதினான்கு அமைப்புகளின் சார்பில் அம்பேத்கருக்கு வரவேற்பு மடல் வழங்கப்பட்டது. அவருடைய மக்கள் காட்டிய எல்லையற்ற அன்பையும் நன்றிப் பெருக்கையும் கண்டு மனம் நெகிழ்ந்து உணர்ச்சி வயப்பட்டு அந்த மாபெரும் பொதுக்கூட்டத்தில் பேசவும் முடியாமல் சிறிது நேரம் அசைவற்று நின்றார், அம்பேத்கர். ஒருவாறு தன்னை நிலைபடுத்திக்கொண்ட பின் அவர் பேசத் தொடங்கினார். தான் செய்திருப்பதாகச் சொல்லப்படும் அருஞ்செயல்கள் அனைத்தும் தொண்டர்கள் அளித்த ஒத்துழைப்பினாலும் அவருடைய மக்கள் தங்களை மறந்து அளித்த பேராதரவினாலும் விளைந்தவையேயாகும் என்று அம்பேத்கர் கூறினார். ஒரு கொள்கையின் வெற்றிக்கும் தோல்விக்கும் அதன் தலைவர் மட்டுமே காரணமாக இருப்பதில்லை; ஆகவே தொடர்ந்து போராடுங்கள் என்று அவர் மக்களைக் கேட்டுக் கொண்டார். தன்னைப் பற்றியும் அங்கே பேசினார். "நானும் ஒரு மனிதன்தான்; தவறு செய்வது மனித இயல்பு; நானும் சில நேரங்களில் ஒருதலைச்சார்பாக நடந்துகொண்டிருக்கலாம்; அவற்றை நீங்கள் மன்னிக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

"நான் காந்தியை எதிர்க்கிறேன்; அதற்காகவே என்னைத் துரோகி என்று காங்கிரசுக்காரர்கள் கூறுகிறார்கள். இந்தக் குற்றச்சாட்டிற்காக நான் கவலைப்படவில்லை. இது ஆதாரமற்றது, பொய்யானது, கெடு நோக்குடையது. உங்களுடைய அடிமைத்தளைகளை உடைப்பதற்குக் காந்தியே மிகக் கடுமையான முறையில் எதிர்ப்பைக் காட்டியிருப்பதை அறிந்து உலகமே அதிர்ச்சிக்குள்ளாகியிருக்கிறது. வட்டமேசை மாநாட்டின் வரலாற்றைப் படித்துப் பார்க்கும் எதிர்கால இந்துச் சந்ததியினர் இம்மாநாட்டில் நான் ஆற்றிய தொண்டினைப் பாராட்டுவார்கள் எனற நம்பிக்கை எனக்கு

இருக்கிறது'' என்று அம்பேத்கர் பேசினார். இலண்டனில் இருந்த போது காந்தியை நான்கைந்து முறை அவர் சந்திக்க நேர்ந்தது பற்றியும், காந்தி தன் கையில் புனிதகுரான் புத்தகத்தை எடுத்துக் கொண்டு இரகசியமாக ஆகாகான் வீட்டிற்குச் சென்று அந்த முஸ்லீம் தலைவர் தீண்டப்படாத வகுப்பு மக்களுக்கு அளித்து வரும் ஆதரவைத் திருப்பிப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று வற்புறுத்தியபோது அதற்கு இணங்க ஆகாகான் மறுத்ததுபற்றிய வரலாற்றையும் அம்பேத்கர் வெளிப்படுத்தினார்.[60] காந்தியைத் தெய்வாம்சம் உள்ளவராகக் கருதாதீர்கள்; மனிதனைத் தெய்வாம்ச மாகக் கருதுவதை எதிர்ப்பவன் நான் என்று அம்பேத்கர் கூறினார். கூட்டத்தின் முடிவில் நாசிக் கோயில் நுழைவுப் போராட்டத்தில் பங்குகொண்டு சிறை சென்று விடுதலையான வீரர்களுக்குப் பாராட்டு தெரிவிக்கப்பட்டது.

''சம உரிமை தந்து சமமாக நடத்தப்படவேண்டும் என்ற எங்கள் கோரிக்கை வாளின் வலிமையான கைப்பிடியாக நீங்கள் உண்மையில் செயல்பட்டீர்கள். எங்களுக்காக நீங்கள் தீரமுடன் போராடியிருக்காவிட்டால் எங்கள் கோரிக்கைகளைப் புறக்கணித்து விட்டிருப்பார்கள். எங்களுடைய உரிமைகளைப் பாதுகாப்பதற்காக ஒரு மனிதன் ஆற்றக்கூடிய எல்லா வகையான முயற்சிகளையும் நீங்கள் செய்தீர்கள். இலண்டனில் நீங்கள் ஆற்றிய அருஞ்செயல்க ளின் விளைவாக மிக விரைவில் நாங்களும் இந்தியாவில் உள்ள பெரிய வகுப்பினர்களுக்குச் சமமாக நடத்தப்படப் போகிறோம். நம் சமூகம் இன்று பெற்றுள்ள பொறுப்புணர்வும், சிந்தனையோட் டமும் இந்தியா முழுவதும் உரிமையை நிலைநாட்டிக் கொள்ள முனைந்திருப்பதும், முழுக்க முழுக்க உங்களுடைய முயற்சியின் வழிகாட்டுதலின் விளைவேயாகும் என்று சொன்னால் மிகையாகாது '' என்று அம்பேத்கருக்குத் தீண்டப்படாத வகுப்பு மக்கள் அளித்த வரவேற்பு மடலில் பொறிக்கப்பட்டிருந்தது.

வாக்குரிமைக் குழுவின் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக உடனே அம்பேத்கர் தில்லிக்குப் பயணமானார். வாக்குரிமைக் குழுவின் தலைவராக லோதியன் பிரபு இருந்தார். தில்லிக்குப் போகும் வழி நெடுகிலும் பல தொடர்வண்டி நிலையங்களில் அம்பேத்கருக்கு மக்கள் இனிய வரவேற்பை அளித்தனர். நாசிக், இகத்புரி, தியோலாலி, மன்மத் புசாவல், ஜான்சி ஆகிய தொடர்வண்டி நிலையங்களில் அம்பேத்கருக்கு அளிக்கப்பட்ட வரவேற்புகள் எழுச்சியும், மகிழ்ச்சியும் நிறைந்தவையாக இருந்தன.

வாக்குரிமைக் குழு 1932 பிப்பிரவரி மாதத்தின் தொடக்கத்தில் பீகார் மாகாணத்தில் பயணம் செய்தது. எல்லா இடங்களிலும் தீண்டப்படாத வகுப்பு மக்கள் அம்பேத்கரை ஆர்வமுடன், அன்புடன் வரவேற்றனர். அதன்பின் வாக்குரிமைக் குழு பாட்னா வழியாக வங்காளத்திற்குச் சென்றது. அம்பேத்கரைப் பின்பற்றிய தீண்டப்படாத வகுப்புத் தலைவர்கள் வாக்குரிமைக் குழுவின் முன் சாட்சியம் அளித்தனர். அவர்கள் தனி வாக்காளர் தொகுதி முறை வேண்டுமென்று வற்புறுத்தினார்கள். இட ஒதுக்கீட்டுடன் கூடிய கூட்டு வாக்காளர் தொகுதியில் போட்டியிடும் தீண்டப்படாத வகுப்பு வேட்பாளர்கள் பெரும்பான்மையினராக உள்ள சாதி இந்துக்களின் ஏவல் பணிபுரிபவர்களாகச் செயல்பட வேண்டியிருக்கும்; அவர்களுடைய வாக்குகளைப் பெறவேண்டுமென்பதற்காக அவர்களின் தீய சூழ்ச்சிகளுக்குத் துணைபோக வேண்டியிருக்கும்; அல்லது பெரும்பான்மை சமூகத்தின் கையாளாக இருக்கக்கூடிய தீண்டப்படாதவர் தேர்ந்தெடுக்கப்படக்கூடும் என்ற காரணங்களைக் காட்டி, கூட்டு வாக்காளர் தொகுதி முறையை அவர்கள் எதிர்த்தார்கள். கூட்டுவாக்காளர் தொகுதி முறை வெற்றிகரமாகச் செயல்படவேண்டுமானால் பெரும்பான்மையினராக உள்ள சாதி இந்துக்களிடம் பெருந்தன்மை உருவாக வேண்டும் என்பது ஒரு முன்தேவையாக உள்ளது என்று தீண்டப்படாத வகுப்புத் தலைவர்கள் பலரும் கருத்து கூறினார்கள். ஆனால் அத்தகைய ஆக்கந்தரும் சூழ்நிலை அப்போது நிலவவில்லை என்று அவர்கள் கருதினார்கள்.

அம்பேத்கருக்கு மற்றொரு புதிய சிக்கல் உருவாயிற்று. தனி ஒதுக்கீட்டுடன் கூடிய கூட்டு வாக்காளர் தொகுதி என்ற கருத்தின் அடிப்படையில் டாக்டர் முஞ்சே எம்.சி. இராஜாவுடன் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டார். டாக்டர் முஞ்சேவுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் விவரங்கள் அடங்கிய விண்ணப்ப அறிக்கையை இராஜா தந்திமூலம் பிரிட்டிஷ் பிரதமருக்குத் தெரிவித்தார். இந்த உடன்படிக்கை அம்பேத்கரை ஓர் இக்கட்டான நிலைக்கு உள்ளாக்கியது. காந்திக்குத் தீண்டப்படாதவர்களுடைய துன்பங்களைப்பற்றி உண்மையில் ஒன்றும் தெரியாது, அதனால் தான் தீண்டப்படாதவர்களின் விருப்பத்திற்கு எதிராகக் கூட்டு வாக்காளர் தொகுதிமுறையை அவர்கள் மீது திணிக்கிறார் என்று கூறி, தனி வாக்காளர் தொகுதி வேண்டும் என்ற அம்பேத்கரின் கோரிக்கைக்கு ஆதரவு அளிப்பதாக முன்பு இராஜா இலண்டனுக்குத் தந்தி கொடுத்தார் என்பதை இங்கு நினைவுகொள்ளவேண்டும்.


தொடக்கத்தில் இராஜாவும் அவர்களைச் சார்ந்தவர்களும் தனி இட ஒதுக்கீட்டுடனான கூட்டு வாக்காளர் தொகுதி வேண்டும் என்று தான் கேட்டனர். ஆனால் அதன்பின்னர் இந்நிலைப்பாட்டிலிருந்து இராஜா மாறிவிட்டார். மத்தியச் சட்டசபையில் தீண்டப்படாதவர்க ளின் பிரதிநிதியாக இராஜா ஒருவர்தான் இருந்தார். வட்டமேசை மாநாட்டிற்கு அவர் அழைக்கப்படவில்லை. வட்டமேசை மாநாட் டிற்கு அழைக்கப்படாமல் ஒதுக்கப்பட்டதற்காகவோ அல்லது தீண்டப்படாதவர்களின் பிரதிநிதியாகக் காந்தி தன்னைப் பிரகடனப் படுத்தி வந்ததால் மனவருத்தமுற்றோ, இராஜா கூட்டு வாக்காளர் தொகுதி வேண்டும் என்ற முந்திய நிலைப்பாட்டைக் கைநழுவ விட்டுவிட்டுத் தனி வாக்காளர் தொகுதிதான் வேண்டும் என்று வற்புறுத்தினார். ஆனால் மீண்டும் முதலில் மேற்கொண்ட நிலைக்கே திரும்பினார். அம்பேத்கரும் இதேபோன்று தன் கருத்தை மாற்றிக்கொண்டார். சைமன் குழுவிடம் அம்பேத்கர் அளித்த அறிக்கையில் கூட்டு வாக்காளர் தொகுதியும் தனி இட ஒதுக்கீடும் அளிக்கப்படவேண்டும் என்று கேட்டிருந்தார். தனி வாக்காளர் தொகுதி வேண்டும் என்று கேட்டிருந்த முஸ்லீம்களின் கோரிக் கையை மிகக் கடுமையாகச் சாடியிருந்தார். ஆனால் தீண்டப்படாத வர்களின் தனி இட ஒதுக்கீடு கோரிக்கைக்குக் காந்தி காட்டி வந்த உறுதியான எதிர்ப்பு, சூழ்நிலையை மோசமடையச் செய்தது. எனவே அம்பேத்கர் தனி வாக்காளர் தொகுதியின் பக்கம் மாறினார். தீண்டப்படாதவர்களின் ஒன்றுபட்ட கோரிக்கையாகத் தனி வாக்கா ளர் தொகுதி முறையைத் தூக்கிப் பிடித்தார்.

வாக்குரிமைக் குழு வைசிராய் மாளிகையில் கூடியது. அடிப்படை உரிமைகளை அனுபவிப்பதற்குத் தடையாக விளங்கு கிற தீண்டப்படாதவர்களுக்கு எதிரான சமூக விலக்க நடைமுறை யைத் தூண்டினாலோ அல்லது அதற்கு ஆதரவு அளித்தாலோ அதற்குத் தண்டனை அளிக்கின்ற வகையிலான ஒரு விதியை இந்தியக் குற்றவியல் தண்டனைச் சட்டத்திலோ அல்லது எதிர்கால அரசியல் சட்டத்திலோ சேர்க்கவேண்டும் என்று தீண்டப்படாதவர்க ளின் சார்பாக அம்பேத்கர் வேண்டினார். வாக்குரிமைக் குழு அக்கருத்தை ஏற்றது.

1932 பிப்பிரவரி 28ஆம் நாள் சென்னையில் பத்தாயிரம் தீண்டப்படாதவர்கள் கலந்துகொண்ட மாபெரும் கூட்டத்தில் அம்பேத்கருக்கு மிகச் சிறப்பானதொரு வரவேற்பு அளிக்கப்பட் டது. அக்கூட்டத்தில் கிறித்தவர்களும், முகமதியரும், பார்ப்பனர் அல்லாதாரும் கலந்துகொண்டனர்.

இராணுவத்தில் பணிபுரிந்த தீண்டப்படாதார் சங்கத் தலைவர் அக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார். தீண்டப்படாதவர்கள் இராணுவப் பணியாளர் சங்கம், சென்னை மாகாணத் தீண்டப்படாத வர் பெடரேஷன், ஆதித்திராவிட மலையாளிகள் சங்கத் தலைவர், ஆதி ஆந்திர மகாசபையின் தலைவர், அருந்ததியர் மகாசபையின் தலைவர், கேரளத் தீண்டப்படாதவர் சங்கத் தலைவர் மற்றும் தொழிலாளர் சங்கம் முதலான தென்னிந்தியாவில் இருந்த ஏறக்கு றைய எல்லாத் தீண்டப்படாதவர் சங்கங்களின் சார்பிலும் அம்பேத்கருக்கு ஒரு பொது வரவேற்பிதழ் படித்தளிக்கப்பட்டது. தனி வாக்காளர் தொகுதி நிலைப்பாட்டிலிருந்து கூட்டு வாக்காளர் தொகுதி நிலைப்பாட்டுக்குத் தலைகீழாகத் தாவிவிட்ட எம்.சி. இராஜாவின் போக்கினை அக்கூட்டத்தில்தான் அம்பேத்கர் வெளிப் படுத்தினார். அனைத்திந்தியத் தீண்டப்படாதவர் மாநாடு கம்தியில் நடைபெறுவதற்கு முன்னர், இராஜா அவருடைய கருத்தாக எதையும் சொல்லியிருக்கக்கூடாது என்று அம்பேத்கர் கூறினார். அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுங்கள்; வாய் உறுதிமொழிகளி லும் கவர்ச்சியான வாக்குறுதிகளிலும் ஏமாறாமல் எச்சரிக்கையுடன் இருங்கள்; உங்களுடைய துன்பங்களை உங்கள் வாழ்க்கையில் உங்களுடனிருந்து அனுபவித்த தலைவர்களை மட்டும் நம்புங்கள் என்று அக்கூட்டத்தில் வலியுறுத்தினார். தீண்டப்படாதவர்களின் நல்வாழ்விற்காகவும், தீண்டாமை எனும் கறையைத் துடைக்கவும் பாடுபட்ட, தீண்டாமைக் கொடுமைக்கு ஆளாகாத தலைவர்களான கௌதமபுத்தர், இராமானுசர் ஆகியோருக்கு ஏற்பட்ட முடிவினை உங்கள் கவனத்தில் கொள்ளுங்கள் என்று அக்கூட்டத்தின் இறுதியில் கேட்டுக்கொண்டார்.

இராஜா-மூஞ்சே உடன்பாடுபற்றிய செய்தி வெளியானதும், இராஜா தனி இட ஒதுக்கீட்டுடனான கூட்டு வாக்காளர் தொகுதிமுறைக்குச் சார்பாகத் தாவிவிட்டதைக் கண்டித்தும், அம் பேத்கர் முன்வைத்துள்ள கோரிக்கையை ஆதரித்தும் வங்காளம் மற்றும் அசாம் தீண்டப்படாதார் வகுப்புத் தலைவர்கள் அறிக்கை கள் வெளியிட்டனர். வங்காள மாகாணத் தீண்டப்படாதவர் சங்கத் தலைவரும் மத்தியச் சட்டமன்ற உறுப்பினருமான எம்.பி. மாலிக்; உத்திரப்பிரதேசத்தின் ஆதி இந்துச் சபையின் தலைவர், அனைத்து அசாம் தீண்டப்படாதவர் சங்கத் தலைவர், பஞ்சாபின் ஆதி தரும மண்டல் தலைவர், டில்லி மாகாணத் தீண்டப்படாதவர்க்கான நிதி உதவி சங்கத் தலைவர் ஆகிய அனைவரும் இராசாவைக் கண்டித்தனர்; அம்பேத்கர் முன்மொழிந்துள்ள கோரிக்கையை



அரசியல் அமைப்புச் சட்ட வரைவுக் குழுவினருடன் தலைவர் அம்பேத்கர்

ஆதரித்தனர். தீண்டப்படாதாரின் கோரிக்கைகளுக்காக மிகச் சிறந்த முறையில் போராடி வருவதற்காக இரத்தினகிரி இந்து மகாசபை அம்பேத்கரைப் பாராட்டியது. இந்நிகழ்ச்சி வீர சாவர்க்கர் அம்பேத்கரின் செயலைத் தெளிவாகப் புரிந்துகொண்டு பாராட்டியதற்கு ஒரு சான்றாகும்.

அச்சமயத்தில் பம்பாய் அரசு நாசிக் மாவட்டத்தில் உள்ள தீண்டப்படாதவர்களின் நிலைமைபற்றி ஆய்வு செய்வதற்காகச் சிமிங்ட்டன் அய். சி. எஸ்., சக்ரியா மனியார் ஆகிய இருவரைக் கொண்ட ஒரு குழுவை அமைத்தது. அக்குழு அளித்த அறிக்கையின் ஒரு அத்தியாயத்தில் அம் மாவட்டத்தில் உள்ள மாவட்டக் கழகத்தின் 1100 கிணறுகளில் தீண்டப்படாதவர்கள் தண்ணீர் எடுக்க அனுமதிக்கப்படுவதில்லை என்றும், 1923ஆம் ஆண்டின் அரசுத் தீர்மானத்திற்குப் பிறகும் இந்த நிலை நீடிக்கிறது என்றும் தகவல் வெளியிடப்பட்டிருந்தது. அதே மாநிலத்தில்தான் நாசிக் சத்தியாக்கிரகம் மூன்றாவது கட்டத்தை எட்டியிருந்தது. அதன் தலைவர்களான பாவ்ராவ் கெய்க்வாடு, ரான்காம்பே இருவரும் கைதாகியிருந்தனர். அவர்கள் கைதான ஏப்பிரல் 14 அன்றே அம்பேத்கருக்கு இச்செய்தியைத் தந்திமூலம் தெரிவித்தனர். பணிச்சுமையின் அழுத்தத்தாலும் நிகழ்ச்சிகளின் போக்கினாலும் தான் மனத்தளர்ச்சியும் சோர்வும் அடைந்திருப்பதாக அம்பேத்கர் தெரிவித்தார். சாதகமற்ற சூழ்நிலைகள் அவரை மிகவும் கவலைகொள்ளச் செய்தன. வாக்குரிமைக் குழுவில் இருந்த இந்து உறுப்பினர்களான சிந்தாமணி, பாக்லே, தாம்பே முதலானோர் தீண்டப்படாதவர்களின் தனி வாக்காளர் தொகுதிக் கோரிக்கைக்குக் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தனர். அதனால் அவர்களுக்கும் அம்பேத்கருக்கும் இடையே மனக்கசப்பு வளர்ந்திருந்தது. அவர்கள் அம்பேத்கரோடு பேசிக்கொள்வதுகூட இல்லை என்ற அளவிற்கு அது முற்றியிருந்தது. அத்தகைய நெருக்கடியான நிலையில், ஒரே நேரத்தில் இரண்டு பிரச்சினைகளில் தன்னால் ஈடுபட்டுச் செயல்பட இயலாது என்பதை வருத்தமுடன் தன் செயலாளருக்குத் தெரிவித்தார். கோயில் நுழைவுச் சிக்கலைவிட அரசியல் உரிமைகளைப் பெறும் பிரச்சினை மிகவும் முக்கியமானதாகும் என்று அம்பேத்கர் கருதினார். தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டுள்ள அச் செயலிலிருந்து விலகி வேறொன்றில் ஈடுபடுவது அறிவுடைமையன்று, ஆபத்தானது என்றும் அவர் எண்ணினார்.

அம்பேத்கர் சிம்லாவிலிருந்து எழுதிய கடிதம் ஒன்றில், வகுப்புச் சிக்கல் மீது பிரிட்டிஷ் பிரதமர் அவருடைய முடிவை அறிவிப்பதற்கு முன்னர் அவரைச் சென்று பார்ப்பது இன்றியமை

யாததாகும் என்று குறிப்பிட்டிருந்தார். ஆகவே அவருடைய நம்பிக்கைக்குரிய முன்னணித் தோழர்களிடம் அவ்வாறு இலண்டன் செல்வதற்குத் தேவையான பணத்தை, அதற்கான காரணத்தைக் கூறாமலேயே, திரட்டமுடியுமா என்று அம்பேத்கர் அறிய விரும்பினார்; அப்போது இலண்டனில் இருந்த ஆகாகானுக்கும் அவர் கடிதம் எழுதினார். இலண்டனில் பிரிட்டிஷ் பிரதமரைத்தான் சந்திக்க எண்ணங் கொண்டிருப்பதுபற்றிய அவருடைய கருத்தைத் தெரிவிக்குமாறும், அதற்கான வாய்ப்பு உள்ளதா என்றும், வகுப்புச் சிக்கல்பற்றிப் பிரதமர் முடிவெடுக்கக்கூடிய தோராயமான நாள்பற்றியும் தெரிவிக்கும்படி அக்கடிதத்தில் அம்பேத்கர் கேட்டு எழுதியிருந்தார். அதே வாரத்தில் அம்பேத்கர் எழுதிய மற்றொரு கடிதத்தில் வகுப்புரிமைக் குழுவில் இருந்த இந்து உறுப்பினர்கள் மீது அவர் கொண்டிருந்த மனக்கசப்பைப் பற்றி நிறைய எழுதினார். தன்னலம் மிக்கவர்களாகவும், அவர்களிடையே விவாதிக்கும்போது தீவிரவாதிகளாக இருக்கும் அவர்கள் வெளியில் வந்ததும் கோழைகளாகவும் எளிதில் விட்டுக்கொடுத்துவிடுப்வர்களாகவும் இருக்கின்ற அவர்களுடைய மனநிலையைத்தான் வெறுப்பதாக அம்பேத்கர் அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். அறிவற்ற, சுயநலமான அவர்களுடைய போக்கினை வெறுப்பதாகவும் இந்துச் சமூகத்திடமிருந்து விலகியே இருந்திட முயல்வதாகவும் அம்பேத்கர் எழுதியிருந்தார். உடல் துன்பம், மன அழுத்தம் ஆகியவற்றுடன் அவர் உழைத்துக்கொண்டிருந்தார். அத்துடன் அப்போது அவருக்கு வயிற்றுப்போக்குத் தொல்லையும் இருந்தது.

ஏப்பிரல் மாதம் வங்காளத்தின் நாம சூத்திரர் சங்கம் அதனுடைய 14ஆவது ஆண்டுக் கூட்டத்தைக் கல்கத்தாவில் ஆல்பர்ட் நிறுவன அரங்கில் டாக்டர் காளிசரண் மண்டல் தலைமையில் நடத்தியது. அக்கூட்டம் அம்பேத்கரின் கோரிக்கைகளை ஒருமனதாக ஆதரித்தது. அம்பேத்கர் மேற்கொண்டுள்ள நிலையை நியாயமற்ற முறையில் விமர்சிக்கும் பத்திரிகைகளைக் கண்டித்தது. அப்பிரச்சினை தொடர்பான காங்கிரசின் போக்கு ஆதரவு அளிப்பதாக இல்லை என்பதுடன் நடைமுறைக்கு ஏற்றதாக இல்லை என்றும் அறிவித்தது.

1932 மே முதல் நாள் வாக்குரிமைக் குழு அதன் பணியை முடித்தது. லோதியன் பிரபு சில முக்கியமான செய்திகள்பற்றி அம்பேத்கருடன் விவாதிக்க விரும்பியதால் அம்பேத்கர் மேலும் ஓரிரு நாட்கள் சிம்லாவில் தங்கிட நேரிட்டது. வாக்குரிமைக் குழு

அதன் அறிக்கையை எழுதியது. வாக்குரிமை முறையைத் திருத்தியமைப்பது, மத்திய மற்றும் மாகாணச் சட்டசபைகளின் தொகுதிகளைப் பிரித்தளிப்பது, அவற்றின் எல்லைகளை வரையறுப்பது ஆகியவைபற்றிய தன் கருத்தை அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது. அக்குழுவில் இருந்த இந்து உறுப்பினர்களுடன் மாறுபட்ட கருத்தினைக் கொண்டிருந்ததால், அம்பேத்கர் தனியானதோர் அறிக்கையை அக்குழுவிடம் அளித்தார். "ஒடுக்கப்பட்ட வகுப்புகள்" என்ற சொற்கோவைக்கான தெளிவான வரையறையை அக்குழு செய்திருந்தது. அக்குழு எடுத்த முடிவுகளில் அதுதான் மிக முக்கியமான முடிவாகும். 1916இல் இந்தியச் சட்டசபைக் குழுவும், இந்திய அரசின் கல்வித்துறை ஆணையர் சர். ஹென்றி ஷார்ப்பும், சவுத்பரோ வாக்குரிமைக் குழுவும் தீண்டப்படாத வகுப்புகளையும், மலைவாழ் பழங்குடியினரையும், குற்றப் பரம்பரையினரையும் மற்றும் சிலரையும் "ஒடுக்கப்பட்ட வகுப்புகள்" என்று ஒரே தொகுப்பின் கீழ்ச் சேர்த்து விட்டிருந்தனர். ஆனால் லோதியன் வாக்குரிமைக் குழுவோ, "ஒடுக்கப்பட்ட வகுப்பினர் என்பது தீண்டப்படாதவர்களை மட்டுமே குறிப்பிடுவதாக இருக்க வேண்டும்" என்று கருத்துத் தெரிவித்திருந்தது. இது அம்பேத்கருக்குக் கிடைத்த வெற்றியாகும். அக்குழுவிற்கு அம்பேத்கர் அளித்திருந்த அறிக்கையில் தீண்டாமை என்பதை அதன் நடைமுறை இயல்புடன் பொருத்திப் பார்க்கவேண்டும் என்றும், அச்சொல்லுக்குரிய பொருள் பொருத்தமற்றதாக உள்ளது என்றும் குறிப்பிட்டிருந்தார்.

II

1932 மே 4ஆம் நாள் அம்பேத்கர் சிம்லாவிலிருந்து பம்பாய்க்குத் திரும்பினார். உடனே மே 6ஆம் நாள் நாகபுரிக்கு அருகில் உள்ள கம்தியில் நடைபெறவிருந்த அனைத்திந்தியத் தீண்டப்படாதவர் மாநாட்டில் கலந்துகொள்வதற்காகப் பம்பாயிலிருந்து கல்கத்தா செல்லும் தொடர்வண்டியில் புறப்பட்டுச் சென்றார். அம்பேத்கர் கலந்துகொள்ள வேண்டும் என்பதற்காக அம்மாநாடு அத்தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருந்தது. கசராவிலிருந்து நாகபுரி வரும்வரையில் வழிநெடுகிலுமிருந்த எல்லாத் தொடர்வண்டி நிலையங்களிலும் அன்றிரவு முழுவதும் தீண்டப்படாத வகுப்பு மக்கள் ஆர்வமுடன் கூட்டமாகக் கூடிநின்று அம்பேத்கருக்கு வரவேற்பளித்தனர்.

தொடர்வண்டி மே 5 காலை 9 மணிக்கு நாகபுரியை அடைந்தது. 'அம்பேத்கர் வாழ்க!' என்ற முழக்கத்தால் நாகபுரி

தொடர்வண்டி நிலையமே அதிர்ந்தது. நிலையத்தின் நடைபாதையி லேயே அம்பேத்கருக்கு 5000 மக்கள் எழுச்சி மிக்க வரவேற்பு அளித்தனர். அம்பேத்கரையும் மற்ற தலைவர்களையும் சாக்ரே அங்கே வரவேற்றார். இராஜா-மூஞ்சே ஒப்பந்தத்தை ஆதரிக்கும் விரல்விட்டு எண்ணக்கூடிய சிலர் அம்பேத்கருக்கு அங்கே கறுப்புக்கொடி காட்டமுயன்றனர்; ஆனால் அவர்கள் நிலையத்திலி ருந்து விரட்டியடிக்கப்பட்டனர். நகர நீதிபதியும், காவல்துறைக் கண்காணிப்பாளரும் நாகபுரி நிலையத்தில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்காக வந்திருந்தனர். மாநாட்டுப் பந்தல் அழகுற அலங்கரிக்கப்பட்டிருந்தது. 15,000 பேர் அமரும் அளவிற்கு மிகவும் பெரியதாக அது இருந்தது. மாநாட்டின் மேடையும் மிகவும் அகன்றதாக அமைக்கப்பட்டிருந்தது. இந்தியாவில் எல்லாப் பகுதிகளிலிருந்தும் ஏறக்குறைய எல்லாத் தீண்டப்படாத வகுப்புத் தலைவர்களும் முக்கியமானதொரு முடிவையெடுக்க அங்கே கூடியிருந்தனர். அதனால் மாநாட்டில் பரபரப்பான உணர்ச்சி மிக்க சூழ்நிலை நிலவியது. வறுமைக்கு ஆட்பட்டிருந்த நிலையிலும் பெருந்திரளாகத் தீண்டப்படாதவர்களின் பிரதிநிதிகள் அம்மாநாட் டில் குழுமியிருந்தது வியப்புக்குரியதாக இருந்தது. சில காங்கிரசுத் தலைவர்களும், இந்துமகாசபைத் தலைவர்களும் இராஜா-மூஞ்சே உடன்படிக்கையை ஆதரிக்கின்ற சிலபேருக்கு நாகபுரி மாநாட்டிற் குச் சென்றுவர தொடர்வண்டிப் பயணத்திற்கான கட்டணத்தை அளிக்க ஏற்பாடு செய்ததாகத் தெரியவந்தது. ஆனால் தீண்டப் படாத வகுப்புத் தலைவர்களை இந்த ஏற்பாடு ஈர்க்கவில்லை எனத் தென்படுகிறது. மற்றொரு குறிப்பிடத்தக்க செய்தி என்னவெ னில், டாக்டர் மூஞ்சேவின் கோட்டை என்று கருதப்பட்ட நாகபுரியில் தீண்டப்படாதவர்களின் மாநாடு நடைபெற்றதாகும். அங்கு இராஜா-மூஞ்சே ஆதரவாளர்கள் அதிகமாக இருப்பதாகவும் கூறப்பட்டது. நிலைமையை முழுமையாகப் புரிந்துகொள்வதற்காக இங்கே ஒரு செய்தியை நினைவில் கொள்ளவேண்டும். இராஜா-மூஞ்சே ஒப்பந்தம் அறிவிக்கப்பட்டவுடன் அனைத்திந்தியத் தீண்டப்படாதோர் சங்கத்தின் பொதுச் செயளாளராகவிருந்த கவாய்க்கு எழுதிய கடிதம் ஒன்றில், கோபமூட்டப்பட்ட மனநிலை யில், கவாயின் சங்கம் கூட்டு வாக்காளர் தொகுதியையும் இட ஒதுக்கீட்டையும் ஆதரித்தால், 'நமக்குள் பிளவு ஏற்படும்; நாம் நமக்குள் சண்டையிட நேரிடும்' என்று அம்பேத்கர் ஏற்கனவே எழுதியிருந்தார். அம்பேத்கர் இக்கடிதத்தின் மூலம் தன்னை மிரட்டுவதாக லோதியன் பிரபுவுக்குக் கவாய் தெரிவித்ததாக அப்போது செய்தி வெளியாயிற்று.

மே 7 ஆம் நாள் மாலை மாநாடு தொடங்கியது. சிறுபான்மையினர் உடன்பாட்டில் குறிப்பிட்டுள்ளவாறு தனி வாக்காளர் தொகுதியை ஆதரித்தும், இராஜா-மூஞ்சே ஒப்பந்தத்தை மறுத்தும், மாநாடு வெற்றிபெற வேண்டும் என வாழ்த்தியும் வந்திருந்த சுமார் 200 வாழ்த்துச் செய்திகள் மாநாட்டில் படிக்கப்பட்டன. புத்த மகாசபையின் பொதுச் செயளாளர் தன் நல்வாழ்த்துகளைத் தெரிவித்தும் தீண்டப்படாத வகுப்பு மக்கள் பௌத்த மதத்தைத் தழுவ வேண்டுமென வேண்டியும் செய்தி அனுப்பியிருந்தார். மாலை 6 மணிக்கு வரவேற்புக் குழுவின் தலைவர் வரவேற்புரை நிகழ்த்திட எழுந்தபோது, இராஜா-மூஞ்சே உடன்பாட்டை ஆதரித்த ராஜ்போஜ் எழுந்து நின்று சில கேள்விகளைக் கேட்க முயன்றார். பின் நாளில் இதே ராஜ்போஜ் அம்பேத்கர் அமைத்த அனைத்திந்தியத் தீண்டப்படாத சாதிகள் கூட்டமைப்பின் பொதுச் செயலாளராக இருந்தார் என்பது நினைவிற்கொள்ளத்தக்கதாகும். மாநாட்டின் தலைவர் தலைமைப் பொறுப்பை ஏற்கும்வரையில் பொறுத்திருக்குமாறு ராஜ்போஜ் கேட்டுக் கொள்ளப்பட்டார். "அவரை உட்காரச் சொல்லுங்கள்;" "அவரை வெளியேற்றுங்கள்" என்ற குரல்கள் மாநாட்டில் ஒலித்தன. எனவே ராஜ்போஜ் பந்தலைவிட்டு வெளியேறிட நேரிட்டது. கட்டுக்கோப்பான அமைப்பும், உறுப்பினர்களின் ஒழுங்கு முறையுமே நல்ல தலைவர்களை உருவாக்குகின்றன. இவை இன்றேல் தீயவர்களாகவே தலைவர்கள் உருவாவார்கள். அம்பேத்கரின் கட்சி அப்போது கட்டுக்கோப்பாக உருவாக்கப்பட்டிருந்தது. அதனால் கண்டிப்பான முறையில் ஒழுக்கநெறிகள் பின்பற்றப்பட்டன. ராஜ்போஜுக்கும் அவருடைய ஆதரவாளர்களுக்கும் அது போன்ற கட்சிப் பின்னணி இல்லை.

நாகபுரி மாநாட்டின் தலைவர் ஹர்தாஸ் தீண்டப்படாத சாதிகள் பேரவையின் வரலாற்றினை விளக்கி, தீண்டப்படாத வகுப்பு மக்களுக்கிடையில் ஒற்றுமை இருக்க வேண்டியதன் இன்றியமையாமையை வலியுறுத்திப் பேசினார். தனி வாக்காளர் தொகுதியைப் பெறுவதற்காக நாம் அனைவரும் ஒன்றுபட்டுப் போராடுவோம்; இல்லாவிடின் அப்போராட்டத்திலேயே அழிவோம் என்று முழங்கினார். தீண்டப்படாத வகுப்பு மக்களின் விழைவுகளை விளக்கி வி.அய். முனுசாமிப்பிள்ளை இரண்டு மணிநேரம் உரையாற்றினார். அரசின் நடவடிக்கை ஏமாற்றமளிப்பதாக அவர் கூறினார். குறிப்பாகத் தீண்டப்படாதவர்களிலிருந்து போதிய எண்ணிக்கையில் பிரதிநிதிகளை அரசு அழைக்கவில்லை என்றார். மேலும் இரண்டு பிரதிநிதிகளைத் தீண்டப்படாதவர்களிலிருந்து அழைக்க வேண்டும் என்று அரசைக் கேட்டுக்கொண்டார்.

மறுநாள் பொது மாநாடு தொடங்கியபோது மீண்டும் தன் எதிர்ப்பைத் தெரிவிக்க ராஜ்போஜ் எழுந்தார். அதனால் பெருங்கூச்சலும், உரத்த கண்டனக் குரல்களும் எழுந்தன. சிறிய அளவில் கைகலப்பும் ஏற்பட்டது. அங்கு வந்திருந்த நகர நீதிபதி ராஜ்போஜை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பினார். தீண்டப்படாதார் மாநாடு பன்னிரண்டு தீர்மானங்களை நிறைவேற்றியது. சிறுபான்மையினர் குறித்த ஒப்பந்தத்தில் தீண்டப்படாத சாதிகளின் மிகக் குறைந்த அளவிலான கோரிக்கைகளே ஏற்கப்பட்டுள்ளன என்பதே தன் தெளிவான கருத்தாகும் என அம்மாநாடு அறிவித்தது. தீண்டப்படாத வகுப்பு மக்களின் நலனுக்கு எதிரானது என்று கூறி இராஜா-மூஞ்சே உடன்பாட்டை அம்மாநாடு மறுதலித்தது. வட்டமேசை மாநாட்டில் அம்பேத்கரும், ராவ்பகதூர் சீனிவாசனும் ஆற்றிய ஒப்பரிய உயர்தொண்டினை அம்மாநாடு பாராட்டியது. தீண்டப்படாதார் மாநாடு அம்பேத்கரையும் சிறுபான்மையினர் ஒப்பந்தத்தையும் முழுமையாக ஆதரிக்கிறது என்பது அம்மாநாட்டின் இறுதியில் மிகத் தெளிவாக உறுதிப்படுத்தப் பட்டது.

கம்தி மாநாடு முடிந்த பின்னர் அம்பேத்கர் பூனா, ஷோலாப்பூர், நிப்பானி ஆகிய இடங்களுக்குச் சென்று தீண்டப்படாதவர்களின் பொதுக் கூட்டங்களில் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அவற்றுள் பூனாப் பயணம் மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். 1932 மே 21ஆம் நாள் மாலை அம்பேத்கர் பூனாவை அடைந்தார். அங்கு அவரை ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். ஊர்வலத்தில் அம்பேத்கர் அமர்ந்து சென்ற காரில் 'ஓம்' என்று பொறிக்கப்பட்ட கெருவா என வழங்கப்படும் பெரிய காவிநிறக் கொடி பறந்து கொண்டிருந்தது. வைதிகத்திற்கு எதிரான முழக்கங்களை எழுப்பியவாறு அம்மாபெரும் ஊர்வலம் நடந்து சென்று அகல்யா சிரமத்தின் திறந்த வெளியை அடைந்தது. அங்குதான் பொதுக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஏ.பி. லத்தே தலைமையில் நடைபெற்ற அக்கூட்டத்தில் அம்பேத்கருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. அம்பேத்கர் இந்தியாவில் புரட்சிகர இயக்கத்தைச் சேர்ந்தவரா? இல்லையா? என்று இலண்டனில் அரசியல் தலைவர்களும் உயர் அதிகாரிகளும் தன்னிடம் இரகசியமாக விசாரித்தது பற்றி அப்பொதுக்கூட்டத்தில்தான் லத்தே எடுத்துரைத்தார். இத்தகைய மதிப்பைப் பெற்றிருந்த அம்பேத்கரைத் தேசத்துரோகி என்று படம் பிடித்துக் காட்டிட தேசியப்பத்திரிக்கைகள் முயல்வதற்கு

அவற்றின் இழிந்த இயல்பே காரணமாகும் என்று லத்தே கூறினார். முன்பு ஒருமுறை கோல்ஹாப்பூரில் கலைக்கல்லூரியின் முதல்வர் பதவியை லத்தே அம்பேத்கருக்கு அளிக்க முன்வந்தார். உங்கள் வழக்குரைஞர் தொழில் எப்படி நடக்கிறது என்று அப்போது அவர் அம்பேத்கரிடம் கேட்டார். அதற்கு அம்பேத்கர் என்ன பதில் சொன்னார் தெரியுமா? 'என் வாழ்க்கையில் வெற்றி என்பது தீண்டப்படாத வகுப்பு மக்களை மனிதர்களாக உயர்த்துவதுதான்' என்று அம்பேத்கர் அப்போது கூறியதை லத்தே நினைவுகூர்ந்தார். இந்தியாவில் உள்ள தீண்டப்படாத வகுப்பு மக்களின் உயர்வுக்காக அம்பேத்கர் உழைத்துக்கொண்டிருக்கிறார். அவருடைய தொண்டு இந்திய நாட்டிற்கும் உலகத்திற்கும் சிறந்த பங்களிப்பைத் தருவதாகும் என்று லத்தே குறிப்பிட்டார்.[61]

தனக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்கு அம்பேத்கர் பதிலளித்துப் பேசினார். "இந்து இந்தியாவில் இப்போது நான்தான் மிகவும் வெறுக்கப்படும் மனிதனாக இருக்கின்றேன்; துரோகியாகச் சித்திரிக்கப்படுகிறேன்; இந்துக்களின் எதிரி என்று கூறி வெறுக்கப்படுகிறேன். இந்து மதத்தை அழிக்க வந்தவன் என்று என்னை வைகின்றனர். இந்த நாட்டின் பெரிய எதிரி என்று எனக்கு முத்திரை குத்துகின்றனர். ஆனால் நான் சொல்வதை நம்புங்கள். இப்போதுள்ள வசைமாரி மறைந்த பின்னர், எதிர்கால வரலாற்று ஆய்வாளர்கள் வட்டமேசை மாநாட்டின் நடவடிக்கைகளை விருப்பு வெறுப்பின்றி ஆய்வு செய்யும்போது நான் இந்த நாட்டிற்குச் செய்துள்ள தொண்டினை இந்து மதத்தின் வருங்காலத் தலைமுறையினர் பாராட்டுவார்கள். என் தொண்டினை அவ்வாறு கண்டறிந்து போற்றாவிட்டாலும் அதற்காக நான் கவலைப்படமாட்டேன்" என்றார். அவருடைய முகம் பொலிந்து ஒளிர்ந்திட அவர் மேலும் தொடர்ந்து பேசினார்: "தீண்டப்படாத வகுப்பு மக்கள் நான் செய்யும் பணியில் முழுநம்பிக்கையும் நான் மேற்கொள்ளும் முயற்சிகளில் உள்ளார்ந்த ஈடுபாடும் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் எனக்கு மிகுந்த மனநிறைவு அளிப்பதாகும். எந்த ஒடுக்கப்பட்ட மக்களிடையே நான் பிறந்தேனோ, வளர்ந்தேனோ, வாழ்கின்றேனோ, அந்த மக்களின் உயர்வினுக்காக என் உயிரைக் கொடுத்தேனும் தொண்டு செய்யவேண்டும் என்பது என் உள்ளக்கிடக்கையாகும். நியாயம் மிக்க என் குறிக்கோளில் இம்மியளவும் விட்டுத்தரமாட்டேன்; என் எதிரிகளின் அச்சமூட்டுகின்ற இழிந்த பழிப்புகள்பற்றியும் நான் கவலைப்படமாட்டேன்" என்று கூறித் தன் பேச்சை முடித்தார்.

வகுப்புச் சிக்கல்பற்றிய அரசின் முடிவு அறிவிக்கப்படுவதற்கு முன்னர் பிரிட்டிஷ் பிரதம மந்திரியையும் மற்ற அமைச்சர்களையும் சந்திப்பதற்காக வேண்டி, 1932 மே 26-ஆம் நாள் அம்பேத்கர் இலண்டனுக்குப் புறப்பட்டார்.

எஸ்.எஸ். காண்டிரோசோ (S.S. Conte Rosso) என்ற இத்தாலிய நாட்டுக் கப்பலில் அம்பேத்கர் பயணம் செய்தார். அவர் இலண்டன் பயணத்தை மேற்கொண்ட செய்தியை மற்றவர்களுக் குத் தெரிவிக்கக்கூடாது என்று அவருடைய தோழர்களுக்கு அம்பேத்கர் கட்டளையிட்டிருந்ததால் அவருடைய இலண்டன் பயணம் இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. ஆயினும், 'பம்பாய்க் கிரானிக்கிள்' பத்திரிக்கையின் நிருபர் ஒருவர் அம்பேத்கர் இலண் டன் செல்வதுபற்றித் துருவி அறிந்து செய்தி வெளியிட்டார். அதனால் அம்பேத்கர் மேற்கொண்டுள்ள புதிய முயற்சிபற்றி அனைவர்க்கும் தெரிந்துவிட்டது. அம்பேத்கர் கப்பலில் முதல் வகுப்பில் பயணம் செய்தார். குறைந்த அளவில் பொருட்களை எடுத்துச் சென்றார். 1932 ஆகஸ்டு மாத இறுதியில் திரும்பிவிடுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

எம்.சி. இராஜாவின் நிலைப்பாட்டில் ஏற்பட்ட திடீர் மாற்றம் உண்மையில் அம்பேத்கரை மிகவும் கவலைகொள்ளச் செய்தது. லோதியன் குழுவின் முடிவுகளும் அம்பேத்கருக்குப் பெருமளவில் சாதகமானதாக இல்லை. வாழ்வில் ஒருமுறை மட்டுமே கிடைக்கும் அரிய வாய்ப்பு இது என்று அவர் எண்ணினார். ஆகவே அவரால் இயன்றதனைத்தையும் செய்தே தீருவது என உறுதி பூண்டார். அவர் இலண்டனில் தங்கியிருப்பது என்பது அவருடைய கோரிக்கைகள் வலிமை பெற உதவும் என்று எண்ணினார். இலண்டனுக்குச் செல்லும் வழியில் பயணத்தின்போது அவர் இந்தியாவிற்கு எழுதிய கடிதங்களில் காங்கிரசில் உள்ள சாதி இந்து மூடர்கள் தன் அச்சகத்தை எரித்துவிடுவார்களோ என்ற தன் ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தியிருந்தார். புதிய அறை ஒன்றுக்கு ஏற்பாடு செய்து அதில் அவருடைய புதிய புத்தகங்கள் உள்ள பெட்டிகளை எடுத்துச்சென்று வைக்குமாறும், இல்லாவிடில் வேறு எங்கேனும் பாதுகாப்பாக வைக்குமாறும் சிவதார்க்கருக்கு அறிவுறுத்தியிருந்தார். எப்பொழுதும் அவருடைய நூல்களின் பாதுகாப்புப் பற்றிய சிந்தனை அவர் உள்ளத்தில் வட்டமிட்டுக் கொண்டேயிருந்தது.

1932 சூன் 7ஆம் நாள் அம்பேத்கர் இலண்டன் சென்றடைந் தார். அவர் எந்த நோக்கத்திற்காக இலண்டனுக்கு வந்தாரோ அது


தொடர்பாகப் பிரிட்டிஷ் அரசின் உயர் அதிகாரிகளையும் எல்லா அமைச்சர்களையும் ஒருவாரக் காலத்திற்குள் சந்தித்தார். அவருடைய அறிவாற்றல் அனைத்தையும் திரட்டி அவருடைய கோரிக்கையைப் பற்றி அவர்களிடம் விளக்கினார். இருபத்திரண்டு பக்கங்களில் தட்டச்சு செய்யப்பட்ட அவருடைய கோரிக்கை விண்ணப்பத்தை பிரிட்டிஷ் அமைச்சகத்திடம் அளித்தார். அவர் மேற்கொண்ட முயற்சிகளின் விளைவு எத்தகையதாக இருக்கும் என்று அப்போது ஒன்றும் கூறமுடியாத நிலையில் அவர் இருந்தார். உயர் மட்டத்தில் விவாதிக்கப்பட்டு முடிவு எடுக்கப்படவுள்ளது என்று சொன்னார். பம்பாய், சென்னை, மத்திய மாகாணம் ஆகியவற்றில் உள்ள தீண்டப்படாத வகுப்பு மக்களுக்குத் தனி வாக்காளர் தொகுதி வழங்கப்பட இருப்பதாகக் காற்றுவாக்கில் செய்தி அடிபட்டது. சூன் 14ஆம் நாளுக்குள் அவருடைய கோரிக்கையின் வெற்றிக்காக அவரால் இயன்றதனைத்தையும் செய்து முடித்துவிட்டார். அதனால் இந்தியாவிற்குத் திரும்பிட விரும்பினார். அவருடைய ஆதரவாளர்களில் சிலர் அம்பேத்கர் மேலும் சில நாட்கள் இலண்டனிலேயே தங்கியிருக்க வேண்டும் என்று கோரினார்கள். ஆதலால் ஜெர்மனியில் டிரஸ்டனில் டாக்டர் மோல்லர் நடத்திய ஜெர்மன் மருத்துவ இல்லத்தில் ஒரு மாதம் தங்கித் தன் உடல் நலத்தை நன்கு தேற்றிக்கொள்வதென முடிவு செய்தார். டிரஸ்டனில் இருந்தால் தேவைப்படும்போது இலண்டன் செல்வதற்கும் எளிதாக இருக்கும் என்றும் கருதினார். அம்பேத்கருக்குப் பணம் தேவையாக இருந்தது. இலண்டனில் தங்கியிருப்பது என்பது கால வரையறையின்றி நீண்டுகொண்டே போனதால் பணத் தேவைபற்றியும், தன் உடல் நலன்பற்றியும் மிகவும் கவலையடைந்தார். ஆகவே, இயலுமாயின் ஒரு தொகையை அனுப்புமாறு சிவதார்க்கருக்கு மடல் எழுதினார்.

டாக்டர் மூஞ்சே இலண்டனுக்கு வரவிரும்புவதாகவும் அவருடன் இராஜாவும் வருகிறார் என்றும் ஒரு வதந்தி இலண்டனில் இருந்த இந்தியர் வட்டத்தில் உலவியது. தன்னை இடர்ப்பாட்டுக்கு உள்ளாக்கிய இராஜாவை அம்பேத்கர் வெறுத்தார். ஆதலால் இராஜா பம்பாயிலிருந்து இலண்டனுக்குப் புறப்படுவாரானால் அவருக்குக் கறுப்புக்கொடி காட்டி வழியனுப்புமாறு பம்பாயில் இருந்த தன் தோழர்களுக்கு அம்பேத்கர் எழுதினார். பம்பாயில் இராஜா நடத்திட முயன்ற மாநாட்டைத் தம் தொண்டர்கள் கட்டாயம் முறியடித்திருப்பார்கள் என்று உறுதியாக நம்புவதாக அம்பேத்கர் எழுதிய கடிதம் ஒன்றில் குறிப்பிட்டிருந்தார். பல

தொல்லைகளுக்கிடையே இராஜாவின் கட்சியினர் பம்பாயில் அப்போது கூட்டிய மாநாட்டை அம்பேத்கரின் தொண்டர்கள் கலைந்தோடச் செய்தனர். அதில் அம்பேத்கர் அமைப்பின் தொண்டர் ஒருவர் இறந்தார்; மற்றும் அய்ம்பது பேருக்கு அடிபட்டது. இராஜாவின் மீது கொண்டிருந்த கடும் வெறுப்பினால், 'நாம் கவனத்திற் கொள்ள வேண்டிய அளவிற்கு இராஜா முக்கியமானவர் அல்லர்' என்று அம்பேத்கர் கூறினாலும், இராஜாவின் முயற்சிகளை எல்லா முனைகளிலும் முறியடித்திட வேண்டும் என்பதில் அவர் பதட்டமான முனைப்புடன் இருந்தார்.

அத்தகைய பரபரப்பான செயல்களில் ஈடுபட்டிருந்தபோதிலும் அவருடைய அண்ணன் மகனையோ தன் மகனையோ அல்லது அவர்களின் படிப்பைப்பற்றியோ அவர் மறந்தாரல்லர். அவர் டிரஸ்டனில் இருந்தபோது அவ்விரு பிள்ளைகள் எந்த அளவிற்குப் படிப்பில் முன்னேற்றம் பெற்றிருக்கிறார்கள் எனக்கேட்டு எழுதியிருந்தார். சிறந்த உயர்ந்த மனிதர்கள் அவர்களுடைய செயல்களிலும் இலட்சியங்களிலும் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக்கொள்வதால் அவர்களுடைய பிள்ளைகளின் வளர்ச்சியில் தனிக்கவனம் செலுத்த முடிவதில்லை. குடும்பத் தலைவர்களுடைய செயல்களாலும் நடவடிக்கைகளாலும் ஏற்படும் ஆரவாரமான பெருமையில் இனம்புரியாமல் தட்டுத்தடுமாறிக்கொண்டு அவர்களுடைய மனைவியரும் பிள்ளைகளும் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். அதனால்தான் சிறந்த மனிதர்களின் வாழ்க்கை இருபுறத்தும் ஆழமான இருண்ட குறுகிய பள்ளங்களையும் உயரமான முகடுகளையும் உடைய மாபெரும் மலைகளாகக் காட்சியளிக்கின்றது.

1932 சூலை மாத நடுவில் அம்பேத்கர் உடல்நலன் தேறியபின் டிரஸ்டனிலிருந்து புறப்பட்டுப் பெர்லின் சென்று அங்கு ஒரு வாரம் தங்கினார். அப்போதுதான் இட்லர் ஒரு தலைவராக அங்கு உருவாகிக்கொண்டிருந்தார். பெர்லினிலிருந்து வியன்னா சென்று, வெனிசில் கன்ஜி (Gange) என்ற கப்பலில் புறப்படப்போவதாகப் பெர்லினிலிருந்து கடிதம் எழுதினார். தனக்கு வரவேற்பு அளிப்பது போன்றவற்றைத் தான் முதன்மையாகக் கருதவில்லை என்று அம்பேத்கர் கூறினார். அவ்வாறு அவர் கூறியது மனித இயற்கைதான். ஏனெனில் தனக்கு ஒன்று கிடைக்காதபோதுதான் மனிதன் அதையே நினைத்து நினைத்து ஏங்குகிறான். அம்பேத்கர் மாணவராக இருந்த காலத்தில் அயல் நாடுகளுக்குச் சென்றபோதும் திரும்பியபோதும் எவரும் அவற்றில் அக்கறை காட்டவில்லை.



அம்பேத்கர் நிறுவிய சித்தார்த்தா கல்லூரியின் ஒரு தோற்றம்

வட்டமேசை மாநாட்டில் பங்கேற்கத் தொடங்கிய பிறகுதான் அவர் பயணம் புறப்பட்டுச் செல்வது பெரும் வழியனுப்பு விழாவாகவும், அவர் வந்து சேருவது வரவேற்பு விழாவாகவும் அவருடைய பல்லாயிரக்கணக்கான தொண்டர்களாலும் பத்திரிக்கையாளர்களா லும் கொண்டாடப்பட்டன.

III

1932 ஆகஸ்டு *17*ஆம் நாள் அம்பேத்கர் பம்பாய் அடைந்தார். இந்தியாவின் வகுப்புப் பிரச்சினையில் பிரிட்டிஷ் பிரதமர் தன் தீர்ப்பை வழங்கியதற்கு மூன்று நாட்களுக்கு முன்புதான் அம்பேத் கர் வந்து சேர்ந்தார். அத்தீர்ப்பின்படி தீண்டப்படாத வகுப்பு மக்களுக்கு மாகாணச் சட்டசபைகளில் தனி இட ஒதுக்கீடும், தங்கள் பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்க ஒரு வாக்குரிமையும் பொதுத்தொகுதியில் பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்க மற்றொரு வாக்குரிமையும் ஆக இரண்டு வாக்குரிமைகளும் அளிக்கப்பட்டிருந் தன.

பம்பாய் வந்து சேர்ந்த அடுத்த நாளே சர். சாமுவேல் ஹோரேவுக்கு அம்பேத்கர் ஒரு கடிதம் எழுதினார். அரசு முடிவின் ஒன்பதாவது பத்தியில் கடைசிப்பகுதியின் அர்த்தம்பற்றிச் சில தீண்டப்படாத வகுப்பு உறுப்பினர்களிடையே அய்யப்பாடு இருப்பதால் அதன் பொருளைத் தெளிவுபடுத்துமாறு அம்பேத்கர் அம்மடலில் கேட்டிருந்தார். வகுப்புரிமை குறித்த முடிவில் சில விதிவிலக்குகள் இணைக்கப்பட்டிருப்பதால் தீண்டப்படாத வகுப்பு மக்கள் இதை ஏற்றுக் கொள்ளுமாறு செய்திட அவரால் இயலாது என்று அம்பேத்கர் எழுதியிருந்தார். ''உங்களிடமிருந்து பதில் கடிதம் வரும் வரையில் இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலுமுள்ள தீண்டப்படாதவர்களிடமிருந்து என்னிடம் கொட்டப்படுகின்ற மனக்கொந்தளிப்பை வெளிப்படையாக வெடிக்காதவாறு தடுத்திட நான் முயல்வேன்'' என்று அக்கடிதத்தின் இறுதியில் அம்பேத்கர் உறுதியளித்திருந்தார்.

வகுப்புவாரித் தீர்ப்பு இந்தியரிடையே இருந்த பிரிவினையை நிலைக்கச் செய்தது; அதாவது இந்தியாவை அரசியல் ரீதியாகப்பிள வுபடுத்தியது என்றே கூறலாம். இது முஸ்லீம்கள், சீக்கியர்கள், அய்ரோப்பியர்கள், கிறித்தவர்கள் ஆகிய அனைவர்க்கும் தனி வாக்காளர் தொகுதியை வழங்கியது. இதன் முக்கிய நோக்கம் பற்றிப் பம்பாய்க் கிரானிக்கிள் பத்திரிக்கை விமர்சித்தபடிக்

கூறுவதானால், இந்தியாவில் பெரும்பான்மையினராக உள்ள இந்துக்களைச் சிறுபான்மையினராக ஆக்குவதேயாகும்.[62] ஆகவே அனைத்துத் தரப்பினராலும் பத்திரிக்கைகளாலும் இம்முடிவு கண்டனம் செய்யப்பட்டது.

ஆயினும் வகுப்பு வாரித் தீர்ப்பு பெரும் அரசியல் சிக்கலாக உருவாகிக்கொண்டிருந்தது. அதில் அம்பேத்கர் ஈடுபடக்கூடிய ஆபத்தான நிலை இருந்தது. காந்தி இந்தியாவுக்குத் திரும்பியதும் சனவரி 4ஆம் நாள் கைது செய்யப்பட்டார். அரசியலில் சாதி இந்துக்களுடன் தீண்டப்படாதவர்களை முடிச்சுப்போடுவதற்கான தன் முயற்சியைக் காந்தி கைவிடவில்லை. 1932 மார்ச்சு மாதத் தொடக்கத்தில் காந்தி எரவாடா சிறையிலிருந்து, 'தீண்டப்படாத இந்துக்களையும், சாதி இந்துக்களையும் பிரிக்கின்ற எந்தவொரு முயற்சியையும் என் உயிரைக் கொடுத்தேனும் தடுப்பேன்' என்று பிரிட்டிஷ் அமைச்சரவைக்குத் தெரிவித்திருந்தார். தீண்டப்படாதவர்களுக்கு வகுப்புவாரித் தீர்ப்பில் தனி வாக்காளர் தொகுதி வழங்கப்பட்டிருந்தது. ஆகவே தீண்டப்படாதவர்களுக்கான தனி வாக்காளர் தொகுதி முறையை நீக்காவிட்டால் சாகும்வரை உண்ணாநோன்பு இருக்கப் போவதாகக் காந்தி அறிவித்துவிட்டார். ஆனால் வகுப்புவாரி அடிப்படையில் கிறித்துவர்கள், முஸ்லீம்கள், சீக்கியர்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ள தனித்தொகுதி பற்றிக் காந்தி ஒரு கருத்தும் கூறவில்லை.

மற்றோர் நிலையில் நின்று நோக்கினாலும், தீண்டப்படாத வகுப்பு மக்களுக்குத் தனி வாக்காளர் தொகுதி அளிக்கப்பட்டதற்கு எதிராக, சாகும்வரை உண்ணாநோன்பு இருக்கப்போவதாகக் காந்தி மேற்கொண்டுள்ள செயல் நேர்மையற்றதாகவே இருக்கிறது. இலண்டனில் சிறுபான்மையினர் குழுவின் கடைசிக் கூட்டத்தில் வகுப்புவாரிச் சிக்கலில் இறுதி முடிவெடுக்கும் தனி அதிகாரத்தைப் பிரிட்டிஷ் பிரதமருக்கு அளிக்கும் உறுதிமொழிப்பத்திரத்தில் காந்தியும் கையெழுத்திட்டிருந்தார். ஆகவே காந்தி பிரிட்டிஷ் பிரதமர் அறிவித்த வகுப்புவாரித் தீர்ப்புக்குக் கட்டுப்பட்டவரே. அரசியலில் ஏமாற்ற மடைந்திருந்த காந்தி உலகத்தின் கவனத்தை இந்தியாவின்பால் ஈர்த்திடவும் குறிப்பாகத் தீண்டப்படாதாருக்குத் தனி வாக்காளர் தொகுதியைப் பெற்றிட அம்பேத்கர் முயல்வதைத் தடுத்திடவும் சாகும்வரை உண்ணாவிரதம் என்பதை அறிவித்தார். காந்தியின் செயல் என்பது தன்முனைப்பானது; விடாப்பிடியானது. காந்தியின் ஆற்றல் முழுவதும் முடிவில்லாத அவருடைய

செயல்களிலிருந்தே தோன்றுகின்றன. அவரை உருவாக்கியவை அவருடைய செயல்களேயாகும்! சிறையில் இருக்கும்போதுகூட இந்தியாவின் நலனைப் பாதிக்கக்கூடிய வகையில் அறிவிக்கப்படும் எந்த ஒரு முடிவையும் அவர் வெறுமனே வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க மாட்டார். இச்செய்தியில் அரசியல்வாதியாகச் செயல்பட்ட காந்தி தேச ஒற்றுமை, நாட்டுப்பற்று ஆகியவற்றின் பெயரால் இந்துக்கள் ஒன்றுபட்டுத் திரண்டிடவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். இதில் அவர் சரியான நிலைப்பாட்டையே எடுத்தார் என்பது வெளிப்படையாகும்.

காந்தியின் அறிவிப்பு நாட்டைத் திகைக்கச் செய்துவிட்டது. இவ்வாறு நிகழ்ந்தது இயல்பே. காந்திக்கும் அரசுக்கும் பொதுமக்களால் வேண்டுகோள்கள் விடப்பட்டன; பத்திரிக்கைகளில் பல அறிக்கைகள் வெளியிடப்பட்டன; பிரார்த்தனைகளும் நடத்தப்பட்டன. டாக்டர் இராஜேந்திரப் பிரசாத் போன்ற தலைவர்கள் இந்து மதத்திற்கு ஆபத்து வந்துவிட்டது என்று அறிவித்தனர். அனைத்துத் தரப்பு இந்துக்களிடையேயும் குழப்பமும் பதற்றமான சூழ்நிலையும் நிலவின. தீண்டப்படாத வகுப்பு மக்களுக்குச் சாதி இந்துக்கள் இழைத்த கொடுமைகளை எண்ணி அவர்கள் வெட்கப்பட்டதனாலா அந்தக் குழப்பமும் பதற்றமும் ஏற்பட்டன? இல்லை அவர்களுடைய அரசியல் தலைவரின், விடுதலை வீரரின் உயிருக்கு ஆபத்து வந்துவிட்டதே என்பதால்தான் அந்தக் குழப்பமும், தடுமாற்றமும்! வழக்கம்போல் மேல் சாதி இந்துக்களின் துன்பமயமான ஓலம் பெரிதுபடுத்தப்பட்டது. இந்துக்கள் திகைத்துநின்றனர்.

சிக்கலுக்குத் தீர்வுகாணவும் மகாத்மாவின் உயிரைக் காப்பாற்றிடவும் வேண்டி செப்டம்பர் 19ஆம் நாள் பம்பாயில் இந்துத் தலைவர்களின் மாநாடு ஒன்றை நடத்திட எண்ணங் கொண்டிருப்பதாக பண்டித மாளவியா சிம்லாவிலிருந்து அறிவித்தார். அதைப் பற்றி அம்பேத்கருக்கு அவர் தந்திமூலம் தெரிவித்தார். ஏனெனில் மகாத்மாவின் உயிரைக் காப்பாற்ற வேண்டுமானால் பிரிட்டிஷ் பிரதமரின் வகுப்புவாரி ஒதுக்கீடுபற்றிய தீர்ப்பை மாற்ற வேண்டியது இன்றியமையாததாகும். அவ்வாறு அதை மாற்றுவதற்கு அம்பேத்கரின் ஒப்புதலைக் கட்டாயம் பெற்றாக வேண்டியிருந்தது. ஏனெனில் அம்பேத்கர்தான் தீண்டப்படாத வகுப்பு மக்களுக்கு அந்த உரிமைகளைப் போராடிப் பெற்றுத்தந்தார். ஆகவே அனைவரின் கண்களும் அம்பேத்கர் பக்கம் திரும்பின. இதற்கான தீர்வு அவர்கையில்தான் இருந்தது. அம்பேத்கரைத் தீண்டப்படாத

வகுப்பு மக்களின் தலைவராக ஏற்க இதுவரையில் மறுத்து வந்த தலைவர்களும் பத்திரிக்கைகளும் இப்போது தீண்டப்படாதவர்க ளின் தலைவராகவும் பிரதிநிதியாகவும் அம்பேத்கரை ஏற்கவேண் டிய கட்டாய நிலைக்குத் தள்ளப்பட்டமை விதியின் கொடிய விளையாட்டே! எல்லோரும் அம்பேத்கரையே விடிவெள்ளியாக நோக்கினர்.

காந்தி மேற்கொண்ட சாகும்வரை உண்ணாநோன்பு என்பத னால் தோன்றக்கூடிய நெருக்கடி எந்த அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் பாரித்த பரிமாணம் உடையதாகவும் இருக்கும் என்பதை அம்பேத்கர் அறிந்திருந்தார். மிகவும் ஆபத்தான கொடியதோர் ஆயுதத்தைக் காந்தி அம்பேத்கர்மீது வீசிவிட்டார். அந்த ஆபத்தை எதிர்கொள்ள அம்பேத்கர் தன்னைத் தயார் செய்து கொண்டார். பம்பாய் மாகாணக் கவர்னரைப் பூனாவில் சந்தித்துப் பேசினார். அந்தப் பிரச்சினையைப்பற்றி அரசு என்ன கருதிக் கொண்டிருக்கிறது என்பதைக் கண்டறிய அம்பேத்கர் அவ்வாறு முயன்றிருக்கலாம். இந்துத் தலைவர்களின் மாநாடு தொடங்கவிருந்த நிலையில் அம்பேத்கர் பத்திரிக்கைகளுக்கு ஓர் அறிக்கை வெளியிட் டார். "என்னைப் பொறுத்தவரையில் நான் எந்த யோசனையையும் பரிசீலிக்கத் தயாராக இருக்கிறேன். ஆயினும் தீண்டப்படாத வகுப்பு மக்களின் உரிமைகள் எந்த வகையிலும் குறைக்கப்படு வதை நான் அனுமதிக்கமாட்டேன். தெளிவானதொரு திட்டமின்றி வெறுமனே கூடி மாநாடு நடத்துவதாலோ விவாதிப்பதாலோ எத்தகைய பயனும் விளையாது" என்று அந்த அறிக்கையில் அம்பேத்கர் குறிப்பிட்டிருந்தார். அகமதாபாத்திலிருந்து வந்திருந்த தீண்டப்படாத வகுப்பு மக்களின் பிரதிநிதிக்குழுவிடமும், இந்தியா வின் பெரும் பணக்காரரான சேத்வால் சந்த் ஹீராச்சந்திற்கு அளித்த பேட்டியிலும் இக்கருத்தையே அம்பேத்கர் வெளிப்படையாக விளக்கினார். காந்தி அவருடைய கருத்தைப் பிரிட்டிஷ் பிரதமரிடம் விவாதித்திருக்க வேண்டும். அவருடைய யோசனையாக எதையும் காந்தி முன்வைக்கவில்லை; அதனால் இந்நிலை ஏற்பட்டுள்ளதற்குக் காந்தியே பொறுப்பேற்க வேண்டும் என்று அம்பேத்கர் அவர்களி டம் கூறினார்.

இது தொடர்பாகப் பார்வையாளர்களும், தலைவர்களும், நண்பர்களும் அம்பேத்கரைச் சந்திக்கத் தொடங்கினார்கள். ஸ்டார்ட்டே குழுவில் அம்பேத்கருடன் பணியாற்றிய தாக்கர் தொடக்கத்திலேயே அம்பேத்கரைச் சந்தித்தவர்களில் ஒருவராவார்.

இந்தப் பிரச்சனையைத் தீர்த்துவைப்பதுபற்றிப் பேசிட அம்பேத்கரை அவர் நாடி வந்தார். நேரத்தை, அறிவைப் பெருக்கிக் கொள்வதற்குரியதாகவும், அரியபொருளாகவும் எப்பொழுதும் நினைக்கின்ற அம்பேத்கர் ஒரு முக்கியமான குற்றவியல் வழக்குத் தொடர்பாக நான் ஆழ்ந்து படித்துக்கொண்டிருக்கிறேன்; ஆகவே உங்களுக்கு எவ்வளவு நேரம் தேவைப்படும் என்று தாக்கரிடம் கேட்டார். குறைந்தது ஒரு மணி நேரமேனும் தேவைப்படும் என்று தாக்கர் பதிலுரைத்தார். என்னால் அய்ந்து மணித்துளிகள் மட்டுமே ஒதுக்க முடியும் என்றார் அம்பேத்கர். மேலும் கூடுதலான நேரத்தை அளிக்குமாறு தாக்கர் கேட்டார். சொன்னதுபோலவே சரியாக அய்ந்து நிமிடங்கள் ஆனதும் பேட்டியை முடித்துக் கொண்டு அம்பேத்கர் அறைக்குள் சென்றுவிட்டார். இதுபோல் நறுக்கெனவும் திடுமெனவும் பேட்டி நேரத்தைச் சுருக்கிடும் போக்கு அம்பேத்கரைப் போன்ற ஓர் அரசியல் மேதையின் வாழ்வில் நன்மையை விடக் கேட்டினையே அதிகமாகத் தரும். ஆயினும் தாக்கர் அம்பேத்கரை அடுத்த நாள் சந்தித்தார்.

அம்பேத்கருக்கு எதிராக வெறித்தனமான பிரச்சாரம் தொடங்கப் பட்டது. அரக்கன், துரோகி, பிரிட்டிஷாரின் கைக்கூலி என்ற வசைமொழிகள் மீண்டும் அவர் மீது வீசப்பட்டன. பம்பாய் மாநாடு தொடங்குவதற்கு முன் பி.ஜி. ஹார்னிமன்பம்பாய்க் கிரானிக்கிள் பத்திரிக்கையில் வெறியூட்டும்படியான ஒரு கட்டுரையை எழுதினார். தீண்டப்படாத வகுப்பு மக்களை அம்பேத்கர் அவருடைய உள்ளங்கையில் அடக்கி வைத்துக்கொண்டிருப்பது போல் பேசக்கூடாது; இந்திய நாட்டு மக்கள் எல்லோரையும் கணக்கில் எடுத்துக்கொண்டு சிந்திக்க வேண்டும். இந்திய நாட்டையே ஆட்டிப்படைக்கும் ஆற்றலைத் தான் பெற்றிருப்பதாக எண்ணிக்கொண்டு முற்றிலுமாகத் தனிமைப்படுத்திக்கொண்டிருக்கின்ற எண்ணத்தை அவர் கைவிடவேண்டும் என்று அக்கட்டுரையில் எழுதப்பட்டிருந்தது. இந்தியாவின் தத்துப் பிள்ளைபோல் கருதிக் கொண்ட அக்கட்டுரையாளர் அம்பேத்கருக்கு ஓர் எச்சரிக்கையை விடுத்தார். இதுபோன்றதொரு பிரச்சினையில் கர்வத்துடன் தனிமைப்படுத்திக்கொள்ளும் நிலைப்பாட்டை எடுக்கின்ற எவர்க்கும் அத்தனிமையே நிலையானதாகிவிடும் என்று எச்சரித்திருந்தார்.

அம்பேத்கர் அமைதியுடனும் உறுதியுடனும் செயல்பட்டார். பம்பாய் மாநாடு தொடங்குவதற்கு முன் அம்பேத்கர் மற்றுமோர் அறிக்கையை வெளியிட்டார். தீண்டப்படாதவர் பிரச்சினை

அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததன்று என்றும், இந்திய அரசியல் சட்டப் புத்தகத்தின் ஓர் இணைப்புதான் அது என்றும் காந்தி வட்டமேசை மாநாட்டில் பேசியதை இப்போது அந்த அறிக்கையில் நினைவுபடுத்தினார். வட்டமேசை மாநாட்டின் விவாதம் முழுவதிலும் இந்திய நாட்டிற்குச் சுதந்திரம் வழங்க வேண்டும் என்பதை காந்தி இடைவிடாமல் வலியுறுத்திக்கொண்டிருந்தார். அதனால் நாட்டின் சுதந்திரத்திற்காகச் சாகும்வரை உண்ணாவிரதம் என்று இந்த உச்சகட்ட நடவடிக்கையைக் காந்தி மேற்கொண்டிருந்தால் அதில் நியாயம் இருக்கிறது. அவருடைய உயிர்துறக்கும் முயற்சிக்குத் தீண்டப்படாத வகுப்பு மக்களுக்குத் தனிப் பிரதிநிதித்துவம் தரப்பட்டுள்ளதைக் காந்தி காரணமாகக் காட்டியிருப்பது வியப்பும் வருத்தமும் தருகின்றது. தனி வாக்காளர் தொகுதி தீண்டப்படாதவர்களுக்கு மட்டுமா தரப்பட்டுள்ளது? இந்தியக் கிறித்தவர்கள், ஆங்கிலோ-இந்தியர்கள், அய்ரோப்பியர்கள், முகமதியர்கள், சீக்கியர்கள் முதலானோர்க்கும் அல்லவா அளிக்கப்பட்டிருக்கிறது என்று அந்த அறிக்கையில் அம்பேத்கர் வினா எழுப்பியிருந்தார்.

முகமதியர்க்கும், சீக்கியர்க்கும் தனி வாக்காளர் தொகுதியைத் தருவதால் இந்திய நாடு பிளவுபடாதென்றால், தீண்டப்படாதவர்களுக்குத் தனி வாக்காளர் தொகுதியை அளிப்பதால் இந்துச் சமூகமும் இரண்டாகப் பிளவுபடாது என்றும் அம்பேத்கர் வாதிட்டார். "மகாத்மா அழிவே இல்லாத மனிதர் அல்லர். காங்கிரசும் அப்படித்தான்; காங்கிரசைத் தீங்கற்ற சக்தி என்று கருதினாலும் அது என்றும் நிலைத்திருக்கப்போவதில்லை. இந்தியாவில் பல மகாத்மாக்கள் இருந்திருக்கிறார்கள். தீண்டாமையை அகற்றித் தீண்டப்படாதவர்களை உயர்த்தி மற்றவர்களோடு அவர்களையும் இணைத்திட வேண்டும் என்பதையே இலட்சியமாகக்கொண்டு அவர்கள் வாழ்ந்தார்கள். அவர்களின் விழுமிய நோக்கத்தை வெற்றிக்கு இட்டுச் செல்ல முடியாமல் அவர்கள் அனைவருமே தோற்றுப்போனார்கள். மகாத்மாக்கள் வந்தார்கள்; மகாத்மாக்கள் மறைந்தார்கள். ஆனால் தீண்டப்படாதவர்கள் மட்டும் தீண்டப்படாதவர்களாகவே இருக்கிறார்கள்" என்று வெல்ல முடியாத வாதத்திறனுடன் அந்த அறிக்கையின் இறுதியில் அம்பேத்கர் குறிப்பிட்டிருந்தார்.

துறவிக்குரிய பேரண்மதியைக் கொண்டிருப்பினும் மகாத்மா உலகியலில் வல்லுநர். அரசியல் மதிநுட்பத்தையோ அல்லது

அவருடைய கொள்கையையோ முகம்மதியர் அல்லதாவர்களிடமும் ஆங்கிலேயரிடமும் காட்டும்போது தேர்ந்த உலகியல் நுட்பம் மகாத்மாவிடம் வெளிப்படும். இதில் ஒரு வல்லுநர் என்ற வகையில் அக்கலையை எவ்வாறு பயன்படுத்துவது என்பதை அவர் நன்கறிந்திருந்தார். ஆங்கிலேயரிடமிருந்து சுதந்திரத்தைப் பெறுவதற்காக என்று அறிவித்துவிட்டுச் சாகும்வரை அதற்காக உண்ணாவிரதம் இருக்கத் தொடங்கியிருந்தால் என்ன நடந்திருக்கும் என்பதை அவர் நன்கறிவார். அதேபோல் முஸ்லீம்களுக்கான தனி வாக்காளர் தொகுதியைக் கைவிடவேண்டும் என்ற கோரிக்கைக்காகச் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்திருந்தால் என்ன நடக்கும் என்பதும் மகாத்மாவிற்குத் தெரியும். மேலும் தீண்டாமையை ஒழிக்க வேண்டும் என்பதற்காக அவர் உயிர் துறக்கும் முயற்சியில் இறங்கவில்லை. காந்தியின் இந்த மனப்போக்கை நன்கறிந்திருந்த காரணத்தால்தான் அம்பேத்கர் மிகக் கடுமையாக அவரைத் தாக்கினார். காந்தி மேற்கொண்ட சாகும்வரை உண்ணாநோன்பு என்பது மக்கள் தீண்டப்படாதவர்களின் நிலையை அறிந்திடச்செய்தது. தீண்டப்படாதவர்களின் உள்ளங்களில் குமுறிக் கொந்தளித்துக் கொண்டிருந்த கோப உணர்ச்சிகளைச் சாதி இந்துக்கள் கண் திறந்து சிறிது நேரமேனும் பார்த்திட அது வழி செய்தது. மக்களும் பத்திரிக்கை உலகமும் நாட்டுப்பற்றாளர்களும் சமூகத்தில் உள்ள தீண்டாமைக் களங்கத்தைக் கண்டறிந்திடத் தூண்டியது. எல்லா அரசியல் கட்சிகளிலும், சமூக வட்டங்களிலும், மத அமைப்புகளிலும் அம்பேத்கரைப்பற்றிய பேச்சாகவே இருந்தது. அம்பேத்கருக்கு எண்ணற்ற தந்திகளும் கடிதங்களும் வந்து குவிந்தன. அவற்றில் சில அவரை எச்சரித்திருந்தன; சில அவருடைய மனச்சான்றுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தன; இன்னுஞ் சில அவருடைய நிலைப்பாட்டை ஆதரித்தன.

IV

ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தவாறு இந்துத் தலைவர்களின் மாநாடு 1932 செப்டம்பர் 19ஆம் நாள் இந்திய வணிகர் சங்கத்தின் பெரிய அரங்கில் பண்டித மதன்மோகன் மாளவியா தலைமையில் பரபரப்பான சூழ்நிலைக்கு மத்தியில் [illegible]பெற்றது. தலைவருக்கு அருகில் அம்பேத்கரும், [illegible] அமர்ந்திருந்தனர். இராஜாவும், டாக்[illegible]சேவும் கைகோர்த்தவாறே அரங்கிற்குள் நுழைந்தனர். [illegible]பேதார், சர். சிமன்லால் ஹரிலால் சத்தால்வாட், லால்சந்த் [illegible]ராச்சந், டாக்டர் இராஜேந்தி[illegible]

பிரசாத், கமலா நேரு, சாப்ரு, ஆனே, சாயித் ராம் கித்வானி, தாக்கர், டாக்டர் தேஷ்முக், டாக்டர் சாவர்க்கர், கே. நடராசன், பி. பாலு முதலானோரும் மற்றவர்களும் மேடையில் அமர்ந்திருந்த னர். அம்பேத்கரை முதலில் பேச அழைக்குமாறு சேத் வால்சந்த் ஹீராசந்த் மாளவியாவிடம் யோசனை கூறினார். அம்மாநாட்டில் அமைதியான உறுதியான குரலில் அம்பேத்கர் பேசத் தொடங்கி னார். "தீண்டப்படாத வகுப்பு மக்களின் நலனுக்கு எதிராகக் காந்தி உண்ணா நோன்பைத் தொடங்கியிருப்பது மிகவும் வருந்துதற்குரியதாகும். காந்தியின் ஒப்பரிய உயிரைக் காப்பாற்ற ஒவ்வொருவரும் முயற்சிக்க வேண்டும். என்பது மிகவும் சரியானது தான். ஆனால் காந்தியிடமிருந்து மாற்று யோசனை எதுவும் வராத நிலையில் இச்சிக்கலைத் தீர்ப்பதற்கு வழியே தெரியவில்லை. ஆகவே காந்தியிடம் ஒரு மாற்றுத் திட்டத்தை நீங்கள் பெற்றுக் கொண்டு வாருங்கள். அப்போதுதான் என்னால் விவாதத்தில் கலந்துகொள்ள முடியும். ஆனால் ஒன்று மட்டும் உறுதி. காந்தியின் உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக என் மக்களின் நலனுக்கு எதிராக முன் வைக்கப்படும் எந்தவொரு திட்டத்தையும் நான் ஏற்கமாட்டேன்" என்று கூறிமுடித்தார். அம்பேத்கர் கடைசியாகக் கூறிய சொற்களைக் கேட்டதும் சில தலைவர்கள் துணுக்குற்றனர்; சிலருக்கு நெஞ்சில் நடுக்கம் ஏற்பட்டது.

அதன்பின் இந்துத் தலைவர்கள் மாநாடு ஒத்தி வைக்கப்பட்டது. அடுத்த நாள் - செப்டம்பர் 20 அன்று நண்பகல், எரவாடா சிறையில் உள்ள காந்தியிடம் சென்றிருந்த தூதுக்குழுவின் கருத்தைக் கேட்பதற்காக மீண்டும் மாநாடு கூடியது. தூதுக்குழுவின் தலைவரான சர். சுனிலால், தீண்டப்படாதவர்களுக்காகத் தனி இட ஒதுக்கீடு அளிப்பதில் தனிப்பட்ட முறையில் தனக்கு எவ்விதத் தடையும், இல்லை என்று காந்தி கூறியதாக மாநாட்டில் தெரிவித்தார். அதன்பின் அதுபற்றி அம்பேத்கரைக் கருத்துக் கூறுமாறு அழைத்த னர். தான் ஓர் இக்கட்டான நிலையில் நிறுத்தப்பட்டிருப்பதாகக் கூறிவிட்டுத் தன் பேச்சைத் தொடர்ந்தார். "கொடியவனாக நான் காட்சிதரும் நிலைக்கு இன்றைய சூழ்நிலை உருவாகிவிட்டுள்ளது. ஆயினும் உங்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகின் றேன். என் கடமையிலிருந்து நான் பின்வாங்க மாட்டேன். அருகில் உள்ளதொரு விளக்குக் கம்பத்தில் என்னைத் தூக்கிலிட்டாலும் என் மக்களின் நியாயமான நலன்களுக்கு நான் துரோகம் செய்யமாட்டேன். உண்ணாநோன்பை ஒரு வாரம் தள்ளிப்போடு மாறு காந்தியிடம் சொல்லுங்கள்; அதன் பின்னர் இப்பிரச்சினைக்

குத் தீர்வுகாண முயலுங்கள்; அதுதான் சிறந்தது'' என்றார் அம்பேத்கர்.

அம்பேத்கரின் பேச்சு மாநாட்டினரை மீண்டும் அதிர்ச்சிக் குள்ளாக்கியது. ''கொள்கையாளர்களே, பண்டிதர்களே, தேசபக்தர் களே நீங்கள் எங்களை உங்களின் உடன்பிறந்தவர்களாக நடத்தாத போது, கூட்டு வாக்காளர் தொகுதியை எங்கள் மீது திணிப்பதற்கோ அல்லது உங்கள் கோட்பாட்டிற்கு எங்களை இணங்கச்செய்வ தற்கோ உங்களுக்கு உரிமை கிடையாது'' என்று கூறுவதுபோல் அம்பேத்கரின் மாசற்ற முகமும், ஒளிமிளிரும் கண்களும் திகழ்ந்தன.

அடுத்த நாள்-செப்டம்பர் 21ஆம் நாள் பிற்பகல் 2 மணிவரை மாநாடு ஒத்திப்போடப்பட்டது. மாநாட்டின் முக்கிய உறுப்பினர்கள் உடனடியாகப் புறப்பட்டுப் பிர்லாவின் வீட்டிற்குச் சென்றனர். அங்கே சர். தேஜ்பகதூர் சாப்ரு ஒதுக்கப்பட்ட இடங்களுக்கான முதல்கட்டத் தேர்தலுக்கான திட்டத்தையும், இரண்டாவது கட்டத் தேர்தலுக்கான திட்டத்தையும் உருவாக்கினார். ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ள ஒவ்வொரு இடத்திற்கும் முதலில் தீண்டப்படாதவர்கள் தாங்களே மூன்று பேர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அதன்பின் அந்த மூவருள் ஒருவரைச் சாதி இந்துக்களும் தீண்டப்படாதவர்க ளும் கூட்டாகச் சேர்ந்து தேர்தலில் வாக்களித்துத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதே அத்திட்டங்களாகும். அதன்பின் அம்பேத்கர் அவருடைய தோழர்களுடன் கலந்து பேசிய பிறகு அவருடைய திட்டத்துடன் இரண்டு மணி நேரத்திற்குள் வருவதாகக் கூறினார். நெருக்கடி நேருகின்ற நேரங்களிலும், முக்கியமான பிரச்சினைகள் பற்றியும் அம்பேத்கர் அவருடைய தோழரான பி.ஜி. கனேகரின் கருத்தைக் கேட்டறிவார். கனேகர் சிறந்த படிப்பாளி; எதையும் நுட்பமாக உய்த்தறிந்து முடிவெடுக்கும் திறன் மிக்கவர். அவரு டைய தோழர்களுடன் கலந்து பேசிய பின்னர் அன்றிரவு அம்பேத்கர் மாநாட்டிற்குத் திரும்பி வந்தார். அவர்கள் முன்மொ ழிந்த திட்டத்தை ஏற்பதாகக் கூறினார்; ஆனால் பிரிட்டிஷ் பிரதமர் அவருடைய தீர்ப்பில் அளித்துள்ளதைவிட அதிகமான இடங்கள் ஒதுக்கப்பட வேண்டும் என்று கூறினார். அம்பேத்கருடைய கருத்தை மாநாட்டுத் தலைவர்கள் ஏற்றுக் கொண்டனர். ஜெயகர், சாப்ரு, பிர்லா, இராசகோபாலாச்சாரி, டாக்டர் இராசேந்திர பிரசாத் முதலானோர் அன்று நள்ளிரவு தொடர்வண்டியில் பூனாவிற்குப் புறப்பட்டுச் சென்றனர்.

செப்டம்பர் 21 புதன் கிழமை காலை 7 மணிக்கு எரவாடா சிறையில் அலுவலக அறையில் காந்தியைச் சந்தித்தார்கள். அவர்கள் கூறிய திட்டத்தைப்பற்றி எண்ணிப் பார்த்த பின்னர் அவர்களுக்குத் தம் முடிவைத் தெரிவிப்பதாகக் காந்தி சொன்னார். அன்று நண்பகல் எரவாடா சிறையின் நுழைவாயிலுக்கு அருகில் உள்ள திறந்த வெளிக்குக் காந்தியை அழைத்துச் சென்றனர். அங்கே அவருடைய கட்டிலுக்கு அருகில் சர்தார் பட்டேலும், காந்தியின் செயலாளர் பியாரிலாலும் அமர்ந்துகொள்ள அனுமதிக்கப்பட்டனர். அன்று பகலில் பூனாவிலிருந்து சாப்ரு அம்பேத்கருடன் தொலைபேசியில் பேசினார். உடனே பூனாவிற்குப் புறப்பட்டு வருமாறு கேட்டுக் கொண்டார். அன்று நள்ளிரவு இரயிலில் அம்பேத்கரும் புறப்பட்டார். அதே நாளில் இராஜாவும் மாளவியாவும் பம்பாயில் இருந்து பூனாவிற்குப் புறப்பட்டனர்.

வியாழன் காலை காந்தி டாக்டர் இராசேந்திரப் பிரசாத்துடனும் இராஜகோபாலாச்சாரியுடனும் கலந்து பேசினார். தீண்டப்படாதாருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடங்களில் சிலவற்றில் மட்டும் முதல்கட்ட, இரண்டாவது கட்டத் தேர்தல்கள் நடத்துவதையும்; ஒதுக்கீடு செய்யப்பட்ட மற்ற இடங்களுக்குக் கூட்டு வாக்காளர் தொகுதி முறை இருப்பதையும் தாம் விரும்பவில்லை என்று காந்தி அவர்களிடம் கூறினார். மேலும் தேர்தல் நடக்கும் எல்லாத் தொகுதிகளுக்கும் முதல்கட்ட, இரண்டாம் கட்டத் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்றார் காந்தி. நேஷனல் ஓட்டலில் தங்கியிருந்த அம்பேத்கரிடம் காந்தியின் கருத்தை எடுத்துரைத்தனர். மீண்டும் பதட்டமான சூழ்நிலை உருவாயிற்று. இதற்கிடையில் தீண்டப்படாதவர்களுக்கான தனி வாக்காளர் தொகுதியை ரத்து செய்யக் கோரிப் பிரிட்டிஷ் பிரதமருக்குத் தந்தி அனுப்ப வேண்டும் என்று சில தலைவர்கள் ஆலோசனை கூறினார்கள். ஆனால் அம்பேத்கர் உறுதியுடனும் மிகத் தெளிவாகவும் அவர்களுக்கு விடை பகன்றார். பிரிட்டிஷ் பிரதமர் தீண்டப்படாதவர்களுக்கு வழங்கிய தனி வாக்காளர் தொகுதியை அவர் இழப்பதற்குத் தயாராக இருப்பதாகவும், ஆனால் அதற்குச் சரியான மாற்றுத் திட்டத்தை அளித்தால் மட்டுமே அவ்வாறு செய்திட முன்வர முடியும் என்றும் கூறினார். கானல் நீரை நம்பி ஓடுகிற ஆள் நானில்லை என்று அம்பேத்கர் கூறினார். தீர்வு காண்பதில் ஏற்பட்ட தொய்வு நிலையால் பயங்கரமான நம்பிக்கையற்ற தன்மை வளர்ந்தது. அன்று நண்பகலில் சிறையில் காந்தியை ஜெயகர், சாப்ரு, மாளவியா ஆகியோர் சென்று பார்த்தனர். அதன்பின்



25.9.1947 சித்தார்த்தா கல்லூரியில் அம்பேத்கர் உரையாற்றுகிறார்.

பி. பாலுவும், இராஜாவும் காந்தியைச் சந்தித்தபோது அவர் நிறைவடையும்படியான உடன்பாட்டை உருவாக்குவோம் என்று உறுதி கூறினார்கள்.

அன்று மாலை ஜெயகர், பிர்லா, சுனிலால் மேத்தா, இராசகோபாலாச்சாரி ஆகியோருடன் அம்பேத்கர் காந்தியைச் சிறையில் சந்தித்தார். அச்சந்திப்பு பேரச்சமூட்டும் ஓர் அரசியல் நெருக்கடியாக இருந்தது. அவர்கள் சிறைக்குள் சென்றபோது தாழ்வாகப் படர்ந்திருந்த ஒரு மாமரத்தின் நிழலில் போடப்பட்டி ருந்த வெண்ணிறம் பூசப்பட்ட இரும்புக் கட்டிலின் மீது விரிக்கப்பட்டிருந்த பாயில் காந்தி படுத்திருந்தார். சர்தார் பட்டே லும், சரோஜினி நாயுடுவும் காந்தியின் அருகில் அமர்ந்திருந்தனர். கட்டிலின் அருகில் தண்ணீர்ப் புட்டிகள், சோடா உப்பு, சோற்று உப்பு ஆகியவை வைக்கப்பட்டிருந்தன.

அம்பேத்கர் காந்தியின் கட்டிலை நெருங்கியபோது பேரமைதி யும், ஏக்கம் மிக்க எதிர்ப்பும் நிலவின. அச்சமூட்டும் அந்த அமைதி அம்பேத்கரை அசைத்திடுமோ? காந்தியை நேரில் கண்டதும் அம்பேத்கரின் இணங்கிப் போகாத இயல்பு நொறுங்கி விழும் என்று ஜெயகர் மற்றவர்களிடம் கூறியிருந்தார். அங்கே நிலவிய தன்வயப்படுத்தும் அமைதி மாலை நேர மங்கிய ஒளியால் மேலும் மயக்க மூட்டுவதாக ஆயிற்று. அம்பேத்கர் அதில் மயங்கிவிடுவாரோ? தன் வயப்படுத்தும் திறன்மிக்க காந்தியின்முன் இப்போது இருந்தார், அம்பேத்கர். அருந்திறல் மிக்க மனிதர்கள் மீது தன் வசிய ஆற்றலை ஏவி, புரிந்து கொள்ளமுடியாத அவருடைய கவர்ச்சித்திறனால் அவர்களை மயங்கச்செய்து மந்திரத்தால் கட்டுண்டதுபோல் காந்தி ஆக்கியிருக்கிறார். சிறைக்கு வெளியிலோ கடுமையான புயல்போல் குமுறிக் கொந்தளித்துக் கொண்டிருக்கும் நிலை; சிறைக்கு உள்ளேயோ மயக்கி நிலைக்கு லையச் செய்திடும் ஓர் அமைதி. இவற்றிற்கிடையே சிக்கிக் கொண்ட அம்பேத்கர் அமைதியாகவும் தன்னிலை தளராமலும் இருந்தார். புயல் வேகத்துடன் நடந்த இத்தகைய நடப்புகளின் போது அம்பேத்கரைத் தவிர வேறு எவரேனும் இருந்திருப்பின் அவர் உயிரோடு மறைந்து போயிருப்பார். அம்பேத்கரோ அவருடைய வாழ்வைவிட அவருடைய மக்களின் வாழ்வையே அதிகமாக நேசித்தார்; தனக்கு என்ன நேருகிறது என்பதைப் பற்றிக் கவலைப்படாமல் அவருடைய மக்களின் நலனே பெரிதெ னப் பேணினார். இயல்பாகவே நல்லிதயம் பெற்றிருந்த அம்பேத்கர்

காந்தியின் நெகிழ்விக்கும் நிலையைக் கண்டதும் கண்ணீர் சிந்திக் கதறி அழுதிருப்பார். ஆனால் அவருடைய மக்கள் நெடுங்காலமாக அனுபவித்து வரும் துன்பங்கள், இழிவுகள், இடர்ப்பாடுகள், அவருடைய கண்களையும், உள்ளத்தினையும் அவருடைய அறிவுக்குக் கட்டுப்பட்டு நடக்குமாறு செய்துவிட்டன. பிரச்சினைகளால் அறிவும் உறுதிப்பாடும் தடுமாற்றமடைவதில்லை என்பது மராட்டியத்தில் தோன்றிய தலைவர்களின் தனிப்பண்பாகும். இதுபோன்ற நிகழச்சிகள் மராட்டிய வரலாற்றில் நிறைந்து காணப்படுகின்றன. அத்தலைவர்களைப் போலவே அம்பேத்கரும் தனிப்பண்புடன் திகழ்ந்தார். அவருடைய அரசியல் வாழ்வையே கையில் ஏந்தியவாறு அந்தப் புயலை அம்பேத்கர் சந்தித்துக் கொண்டிருந்தார்.

1931 ஆகஸ்டு 14ஆம் நாள் மணிபவனில் அவர்களுடைய முதல் சந்திப்பின்போது தொடங்கிய போராட்டத்தின் இன்னொரு கட்டமே இப்போது இவ்வாறு உருவாகியிருந்தது. இவ்வுலகிலேயே செயல்திறனில் மிகச்சிறந்த ஒரு மனிதரை - புரிந்து கொள்ளமுடியாத வகையில் மனிதர்களைத் தன் வயப்படுத்திடும் மாயக் கவர்ச்சிமிக்க ஒருவரை - இருபதாம் நூற்றாண்டினையே சலித்தெடுத்துத் தேர்ந்தெடுத்த திறமைகளையெல்லாம் இரசவாதத்தால் பெற்றிருப்பது போன்ற தகுதிகளை உடைய ஒரு பனியாவாக, ஒரு பாரிஸ்டராக, ஒரு துறவியாக இருக்கின்ற காந்தியை - சிலை வணக்க மறுப்பாளரும் புரட்சியாளருமான அம்பேத்கர் மீண்டும் மோதலில் சந்திக்க நேரிட்டது. இத்தகைய இருபெரும் திறல் மறவர்கள் மோதும்போது கட்டாயம் அங்கே தீப்பற்றி எரியும்; புயல்வீசும், எரவடா சிறைக்கு வெளியில் காந்தி அமர்ந்திருந்த இடத்தில் இத்தகைய நிலைதான் உருவாகிக்கொண்டிருந்தது.

காந்தி சோர்வுற்றிருந்தார்; படுக்கையில் படுத்திருந்தார்; பேச்சு வார்த்தை தொடங்கியது. விவரம் முழுவதையும் சாப்ரு காந்திக்கு எடுத்துரைத்தார். இந்துக்களின் கருத்தை மாளவியா கூறினார். அதன்பின் அம்பேத்கர் அமைதியாகவும், மெதுவாகவும் பேசத் தொடங்கினார். மகாத்மாஜி! எங்களிடம் எப்பொழுதும் நீங்கள் நியாயமற்ற முறையிலேயே நடந்து கொள்கிறீர்கள் என்றார் அம்பேத்கர். என் தலைவிதியின் சூழ்நிலையால் நான் உங்களிடம் நியாயமாக நடந்துகொள்ளாததுபோல் ஒரு தோற்றம் இருக்கிறது; அதற்காக நான் ஏதும் செய்ய இயலாதவனாக இருக்கிறேன் என்று காந்தி பதிலளித்தார். பிறகு அம்பேத்கர் நிலைமைகளை

விளக்கினார்; தன் கருத்தை எடுத்துரைத்தார். அம்பேத்கரின் ஆழ்ந்தமைந்த பேச்சு காந்தியின் பேரில் ஒரு தாக்கத்தை உண்டாக்கியது என்பது வெளிப்படையாகத் தெரிந்தது. அம்பேத்கரின் கோரிக்கைகள் நியாயமானவை என்ற உணர்வு காந்திக்கு ஏற்பட்டது. காந்தி பதில் சொல்லத் தொடங்கினார். ''டாக்டர்! உங்களுக்கு என் முழு ஆதரவு உண்டு. நீங்கள் கூறியவற்றுள் பெரும்பாலானவைபற்றி நான் உங்கள் கருத்தினையே கொண்டிருக்கிறேன். என் உயிரைக் காப்பது பற்றி நீங்கள் அக்கறை கொண்டிருப்பதாகக் கூறினீர்கள்'' என்று காந்தி கூறியதும், அம்பேத்கர், 'ஆமாம், மகாத்மாஜி! எங்களுடைய மக்களுக்காக நீங்கள் உங்கள் தொண்டு முழுவதையும் அளித்தீராயின், நீங்கள் எங்கள் பாராட்டுக்குரிய தலைவராகிவிடுவீர்கள் என்று நம்புகின்றேன்' என்று பதில் சொன்னார். 'நல்லது, அப்படியானால் என்னுயிரைக் காப்பாற்றிட என்ன செய்யவேண்டும் என்பதை நீங்கள் அறிவீர்கள். அதைச் செய்து என் உயிரைக் காப்பாற்றுங்கள். வகுப்புவாரி ஒதுக்கீட்டுத் தீர்ப்பில் உங்களுடைய மக்களுக்கு அளிக்கப்பட்டுள்ளதை நீங்கள் இழக்க விரும்பவில்லை என்பது எனக்குப் புரிகிறது. நீங்கள் கூறுகிற வேட்பாளர் குழுவைத் தேர்வு செய்யும் திட்டத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் அதில் உள்ள ஒரு முரண்பாட்டை நீங்கள் நீக்கிடவேண்டும். அதாவது அதே முறையை எல்லாத் தொகுதிகளுக்கும் பொருந்துவதாக ஆக்கிட வேண்டும். பிறப்பினால் நீங்கள் தீண்டப்படாதவர்; நான் விரும்பிமேற்கொண்ட கொள்கையால் தீண்டப்படாதவன். எனவே பிரிக்க முடியாதபடி நாம் ஒன்றென ஆகவேண்டும். இந்துச் சமூகத்தில் பிரிவினை ஏற்படுவதைத் தடுத்திட என் உயிரையும் தர நான் தயாராக இருக்கிறேன்'' என்று காந்தி கூறினார்.

காந்தியின் யோசனையை அம்பேத்கார் ஏற்றுக்கொண்டார். பேச்சுவார்த்தை முடிந்தது. மற்ற விவரங்களைப்பற்றிப் பேசி முடிவெடுத்திடத் தலைவர்கள் தங்கள் பணியைத் தொடங்கினார்கள். வேட்பாளர் குழு என்பதில் எத்தனைப் பேர் இருக்க வேண்டும், மாகாணச் சட்டசபைகளில் இருக்க வேண்டிய மொத்த இடங்கள் எத்தனை, முதல் கட்டத் தேர்வு எவ்வளவு காலத்திற்கு இருக்க வேண்டும், தீண்டப்படாதவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் இடங்கள் எவ்வளவு காலத்திற்கு இருக்க வேண்டும் பதவிகளை எவ்வாறு பகிர்ந்து கொள்ளுவது என்பவை குறித்துத் தங்களுக்கிடையே பேசி முடிவெடுக்கத் தொடங்கினார்கள்.

செப்டம்பர் 23 வெள்ளிக்கிழமையன்று பொழுது புலர்ந்தது. வேட்பாளர் குழுவில் எத்தனைப் பேர் இருக்க வேண்டும் என்பது பற்றிக் காரசாரமான விவாதம் பல மணி நேரம் நடந்தது. பிறகு ஒதுக்கீடு செய்யப்படும் இடங்கள்பற்றி விவாதிக்கப்பட்டது. மாகாணச் சட்டசபைகளில் மொத்தம் 197 இடங்கள் ஒதுக்கிட வேண்டும் என்று அம்பேத்கர் கோரினார். ஆனால் இந்துத் தலைவர்கள் அதை 126 ஆகக் குறைத்தனர். பேச்சுவார்த்தை நீண்டு கொண்டேபோயிற்று; நேரம் விரைந்தோடியது. பத்து மணி நேரம் கலந்து பேசியபிறகு சில செய்திகளைப்பற்றித் தீர்மானித்திட வேண்டி காந்தியின் பார்வைக்கு அவற்றைக் கொண்டு சென்றனர். அவற்றில் அம்பேத்கரின் கருத்தைக் காந்தி ஆதரித்தார். முதற்கட்டத் தேர்தல் எவ்வளவு காலத்திற்கு இருக்க வேண்டும், ஒதுக்கீடு செய்யப்படும் இடங்களின் கால அளவு எத்தனை ஆண்டு என்பதுபற்றிக் கருத்துக் கணிப்பு நடத்துதல் ஆகியவைபற்றிய கருத்து முரண்பாடு காரணமாகப் பேச்சுவார்த்தை முறிந்துவிடுமோ என்ற நிலை ஏற்பட்டது. முதற்கட்டத் தேர்தல் பத்து ஆண்டுகளுடன் முடிந்துவிட வேண்டும்; ஆனால் அதன்பின் பதினைந்து ஆண்டுகள் கழித்துத்தான் இடஒதுக்கீடு பற்றித் தீண்டப்படாதவர்களிடையே கருத்துக் கணிப்பு நடத்தி ஒரு முடிவு எடுக்க வேண்டும் என்று அம்பேத்கர் வலியுறுத்தினார். இட ஒதுக்கீட்டை அகற்றுகின்ற அதிகாரத்தைத் தீண்டப்படாதவர்களிடம் தருவதென்பது இட ஒதுக்கீட்டையும் பிரிவினையையும் நிலைக்கச் செய்துவிடும் என்று மற்ற தலைவர்கள் கருதினார்கள். இருபத்தைந்து ஆண்டுகள் கழித்துத்தான் தீண்டப்படாதாரிடையே கருத்துக் கணிப்பு நடத்த வேண்டும் என்று அம்பேத்கர் வலியுறுத்தியமை சாதி இந்துக்களிடையே ஒரு கொந்தளிப்பை ஏற்படுத்தியது. இன்னும் இருபது ஆண்டுகளிலோ அதன் பிறகோ தீண்டாமை ஒழிந்துவிடும் என்று நான் நம்பத் தயாராக இல்லை என்று வெளிப்படையாக அம்பேத்கர் கூறினார். சாதி இந்துக்களின் தலைமேல் ஒரு கத்தி தொங்கிக்கொண்டிருப்பது போன்ற நிலை இருந்தால்தான் தீண்டப்படாதவர்கள்பற்றிய தங்களுடைய மனிதத் தன்மையற்ற போக்குகளைச் சாதி இந்துக்கள் மாற்றிக்கொள்வார்கள் என்று அம்பேத்கர் கூறினார்.

மாலை மணி நான்கு ஆயிற்று. காந்தியின் உடல்நிலை மிகவும் ஆபத்தான கட்டத்தை நோக்கிச் சென்றுகொண்டிருப்பதாகச் செய்தி வந்தது. அவருடைய உடல் வலிமை வேகமாகத் தளர்ந்து கொண்டிருந்தது. காந்தியின் மகன் தேவதாசு கண்களில் நீர்மல்கிடத்

தன் தந்தையின் உடல்நிலைபற்றி அம்பேத்கரிடம் எடுத்துக் கூறினார். உடன்பாடு ஏற்படுவதற்குத் தடையாக உள்ள தீண்டப் படாதவர்களின் கருத்துக் கணிப்பை வலியுறுத்தாதீர்கள் என்று தேவதாசு கெஞ்சிக் கேட்டார். இறுதியில் கருத்துக் கணிப்புப் பிரச்சினையை காந்தியின் கவனத்திற்குக் கொண்டுசெல்வதென முடிவு செய்யப்பட்டது. இரவு ஒன்பது மணிக்கு அம்பேத்கரும் மற்றும் சில முக்கியத் தலைவர்களும் சிறையில் காந்தியைச் சந்தித்தனர். கருத்துக் கணிப்பு என்ற கோட்பாட்டைக் காந்தி ஏற்றுக் கொண்டார். ஆனால் அது அய்ந்தாண்டுகளானதும் நடத்தப்பட வேண்டும் என்றார். காந்தியின் குரல் முணுமுணுக்கும் அளவிற்கு மிகவும் மெலிந்து ஒடுங்கிவிட்டிருந்தது. சிறையில் இருந்த மருத்துவர்கள் குறுக்கிட்டு மேலும் காந்தியிடம் உரையாட வேண்டாம் என்று தடுத்துவிட்டனர். மாமரத்தின் இலைகள் அசைவற்றிருந்தன; அங்கே பேரமைதி நிலவியது. அங்கு வந்தவர்கள் திரும்பிச் சென்றனர். அம்பேத்கர் அவருடைய நிலைப்பாட்டை விட்டுத் தரத்தயாராக இல்லை. அவருடைய உள்ள உரன் ஒரு நெருக்குதலுக்குள்ளாயிற்று; கொலை மிரட்டல் கடிதங்கள் குவிந்தன; தெருவில் கொலை வெறிப்பார்வைகள் அவர்மீது பாய்ந்தன; சில தலைவர்கள் பித்தம் பிடித்ததுபோல் புறம்பேசிப் பழித்தனர்.

வெள்ளி இரவு முழுவதும் என்ன நடக்குமோ என்ற அச்சம் நிறைந்ததாக இருந்தது. செப்டம்பர் 24 சனிக்கிழமை காலை பேச்சுவார்த்தை மீண்டும் தொடர்ந்தது. மாகாணச் சட்டசபைகளில் 148 இடங்களைத் தீண்டப்படாதவர்களுக்கு அளிப்பது என்பதன் மூலம் அவர்களுக்கான மொத்த இடங்கள்பற்றிய பிரச்சினை ஒரு முடிவுக்கு வந்தது. மத்தியச் சட்டசபையில் பிரிட்டிஷ் இந்தியாவில் இந்துக்களுக்கென உள்ள மொத்த இடங்களில் பத்து விழுக்காட்டைத் தீண்டப்படாதவர்களுக்கு ஒதுக்கீடு செய்வது என்றும் முடிவு செய்யப்பட்டது. தீர்வை எட்டுதற்குத் தடையாக இருந்த தீண்டப்படாதார் கருத்துக் கணிப்பு பற்றிப் பல மணி நேரம் மீண்டும் விவாதம் நடந்தது. அம்பேத்கரின் கருத்தை ஒருவரும் ஏற்காததால் அது தொடர்பாக மீண்டும் காந்தியைச் சந்திப்பது நல்லது என்று அவர் எண்ணினார். டாக்டர் சோலங்கி, இராசகோபலாச்சாரி ஆகியோருடன் அம்பேத்கர் காந்தியிடம் சென்றார். உங்களுடைய வாதத்திலுள்ள நியாயம் மறுக்க முடியாததாகும் என்று காந்தி அம்பேத்கரிடம் கூறினார். வெறும் சட்டப்பாதுகாப்பு மட்டுமே தீண்டாமை நோயை ஒழித்துவிடாது; தன்னுடைய கடந்த கால

பாவங்களுக்குத் தானே முன்வந்து கழுவாய் தேடிக்கொள்ள இந்து மதத்திற்குக் கடைசியாக ஒரு வாய்ப்புக் கொடுங்கள் என்று அம்பேத்கரிடம் பரிவுடன் கேட்டார் காந்தி. கருத்துக் கணிப்பு கட்டாயம் இருக்க வேண்டும்; ஆனால் அது அய்ந்தாண்டுகளான தும் நடத்தப்பட வேண்டும் என்று காந்தி கூறினார். 'அய்ந்து ஆண்டுகள் தான் அல்லது என் உயிர். இதுவே முடிவு' என்று காந்தி கூறியபோது, அவருடைய குரலில் தீர்மானகரமான உறுதிப்பாடு ஒலித்தது.

பேச்சுவார்த்தை நடக்கும் இடத்திற்கு அம்பேத்கர் திரும்பி வந்தார். கருத்துக்கணிப்பு எடுக்கும் காலம் குறைந்தது பத்து ஆண்டுகள் என்றாவது இருக்கவேண்டும் என்று வலியுறுத்தினார். இதற்கு மேலும் இதில் விட்டுக்கொடுக்கத் தயாராக இல்லை என்று அவர் கூறிவிட்டார். ஒரு மணி நேரம் கழித்து அவர்கள் ஒரு முடிவுக்கு வந்தனர். கருத்துக் கணிப்பை எப்போது நடத்துவது என்ற கால வரையறையைக் குறிப்பிடாமல் ஒப்பந்தம் செய்து கொள்வது என்பதை இரு தரப்பினரும் ஏற்றுக்கொண்டனர். பிற்பகல் மூன்று மணிக்குச் சிறையில் காந்தியிடம் இதைப்பற்றி இராசகோபாலாச்சாரி விளக்கினார். இது மிகவும் சிறந்தது என்று கூறி, காந்தி தன் ஒப்புதலை அளித்தார். இராமகிருஷ்ண பந்தர்கர் சாலையில் உள்ள சிவலால் மோதிலால் மாளிகைக்கு இராசகோபாலாச்சாரி விரைந்தோடி வந்தார். தங்களிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்திற்குக் காந்தி ஒப்புதல் அளித்துவிட்டார் என்று மகிழ்ச்சிப் பெருக்கிற்கிடையே அறிவித்தார். இதற்கான ஒப்பந்தம் விரைந்து எழுதப்பட்டது. புது மகிழ்ச்சியும் புத்துணர்ச்சியும் இனிய கலந்துரையாடலும் நிறைந்த சூழ்நிலையில் செப்டம்பர் 24 சனிக்கிழமை மாலை அய்ந்து மணிக்கு ஒப்பந்தம் கையெழுத்தானது. வரலாற்றில் இதுதான் "பூனா ஒப்பந்தம்" என்ற பெயர்பெற்றதாகும். தீண்டப்படாதவர்களின் சார்பில் அம்பேத்கர் கையெழுத்திட்டார். இந்துக்களின் சார்பாகப் பண்டித மதன்மோகன் மாளவியா கையெழுத்திட்டார். மற்றும் ஜெயகர், சாப்ரு, ஜி.டி. பிர்லா, இராசகோபாலாச்சாரி, டாக்டர் இராசேந்திரப் பிரசாத், இராவ்பகதூர் சீனிவாசன், எம்.சி. இராஜா, தேவதாஸ் காந்தி, பிஸ்வாஸ், ராஜ்போஜ், பி. பாலு, கவாய், தாக்கர், சோலங்கி, சி.வி. மேத்தா, பாக்கலே, காமத் ஆகியோரும் கையெழுத்திட்டனர். பம்பாயில் மற்றும் சிலர் இதில் கையொப்பமிட்டனர். இராசகோபாலாச்சாரி மகிழ்ச்சியில் திளைத்தார்; அதன் அறிகுறியாக அவருடைய பேனாவை அம்பேத்கரிடம் கொடுத்துவிட்டு, அம்பேத்கரின் பேனாவைப் பெற்றுக் கொண்டார்.

V

உடனடியாக ஒப்பந்தத்தின் உள்ளடக்கச் செய்திகள் பிரிட்டிஷ் அமைச்சரவைக்கும், வைஸ்ராய்க்கும் தொலைவரிமூலம் தெரிவிக்கப் பட்டன. பம்பாய் ஆளுநரின் செயலாளருக்கும் இருதரப்பினராலும் தனித்தனியே இச் செய்திகள் தரப்பட்டன. அடுத்த நாள் காலை ஒப்பந்தத்தை உறுதிசெய்வதற்காகத் தலைவர்கள் பம்பாய்க்குத் திரும்பினார்கள். 25ஆம் நாள் பிற்பகல் இரண்டு மணிக்கு இந்திய வணிகர் சங்க அரங்கில் தலைவர்கள் ஒரு கூட்டத்தை நடத்தினார் கள். அக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய மாளவியா பிறப்பின் காரணமாக எவரையும் தீண்டப்படாதவர் என்று கருதக்கூடாது என்று அறிவித்தார். தீண்டாமை இந்த மண்ணிலிருந்தே மறைந்து போகுமாறு செய்யவேண்டும் என்று இந்துக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். ஒப்பந்தத்தை உறுதி செய்யும் தீர்மானத்தை மதுரதாஸ் வாசஞ்சி முன்மொழிந்தார்; சாப்ரு அதை வழிமொழிந்தார். தன் கோரிக்கைகளுக்காக அம்பேத்கர் தீரமுடன் போராடியதற்காகச் சாப்ரு முழுமனத்துடன் அவரைப் பாராட்டினார். நாட்டின் வருங்காலத்தில் அம்பேத்கர் சிறந்ததோர் போராளியாகத் திகழ்வார் என்றும் சாப்ரு குறிப்பிட்டார்.[63]

அம்பேத்கர் அத்தீர்மானத்தை ஆதரித்துப் பேச எழுந்தபோது பலத்த கைத்தட்டல் அவரை வரவேற்றது. நேற்று நடந்த நிகழ்ச்சிகள் என் கற்பனைக்கும் எட்டாதவையாக இருக்கின்றன. என்று அம்பேத்கர் குறிப்பிட்டார். ஒரு பெரிய மனப்போராட்டத் திற்கும் குழப்பத்திற்கும் பிறகே இந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கி றது; வேறு எந்தவொரு மனிதனும் என்னைப் போன்று அந்த அளவிற்கு இக்கட்டான நிலைக்கு ஆளானதில்லை என்றார். ஒருபுறம் இந்தியாவின் மிகச்சிறந்த தலைவரின் உயிரைக் காப்பாற் றிட வேண்டிய நிலைமை! மறுபுறம் தீண்டப்படாத சமூகத்தின் நலன்களைக் காத்திட வேண்டிய நிலைமை! ஆனால் இறுதியில் காந்தி, சாப்ரு, இராசகோபாலாச்சாரி ஆகியோரின் ஒத்துழைப்பால் நாங்கள் இத்தீர்வை எட்டினோம். 'வட்டமேசை மாநாட்டின் போதே மகாத்மாஜி ஏன் இந்த நிலைப்பாட்டை எடுக்கவில்லை என்பதே எனக்கு வருத்தம் அளிப்பதாகும். அங்கு நான் சொன்ன கருத்துகள் மீது அவர் இந்த அளவிற்குக் கவனம் செலுத்தியிருப்பா ராயின் இப்போது அவர் ஏற்க நேரிட்ட கடும் சோதனையை ஏற்க வேண்டிய தேவையே இல்லாமல் போயிருக்கும்'[64] என்று அம்பேத்கர் கூறினார்.

தன் பேச்சை முடிக்கும் முன், சாதி இந்துக்கள் இந்த ஒப்பந்தத்தின்படி நடந்துகொள்ள வேண்டும் எனத் தான் மனமார விழைவதாக அம்பேத்கர் கூறினார். புனிதத் தன்மையானது இந்த ஒப்பந்தம் என்று கருதி நேர்மையான உணர்வுடன் சாதி இந்துக்கள் செயலாற்றுவார்கள் என்று நம்புவதாகக் குறிப்பிட்டார்.

பூனா ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் அளிக்குமாறு பாராளுமன்றத் திற்குப் பரிந்துரைக்கப் போவதாகச் செப்டம்பர் 26ஆம் நாள் பிரிட்டிஷ் அரசு அறிவித்தது. எரவாடா சிறையில் அன்று மாலை பிரார்த்தனைகள் நடைபெற்றன. ஆரஞ்சுச் சாற்றினைக் காந்திக்குக் கஸ்தூரிபாய் அளித்தார். அய்ந்தரை மணிக்குக் காந்தி தன் உண்ணாநோன்பினை முடித்தார். அப்போது அவருக்கு அருகில் அவருடைய தொண்டர்களும் ஆர்வலர்களும் சுமார் இருநூறு பேர் இருந்தனர். அவர்களுள் கவிஞர் தாகூர், சரோஜினி நாயுடு, சர்தார் பட்டேல், சொரூப் இராணி நேரு ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்களாவர்.

பூனா ஒப்பந்தம் இந்தியா முழுவதிலும் உணர்ச்சி அலைகளை எழுப்பியது. அதன் விளைவு உலகெங்கும் எதிரொலித்தது. பூனா ஒப்பந்தத்திற்கு முன் காங்கிரசுத் தலைவர்களும் பத்திரிக்கைகளும் அம்பேத்கரைத் தீண்டப்படாதவர்களின் தலைவராக ஏற்க மறுத்த னர். ஆனால் பூனா ஒப்பந்தத்திற்குப் பின் இந்தியா முழுவதும் உள்ள தீண்டப்படாத வகுப்பு மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தலைவர் அம்பேத்கர் என்பது மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது. இந்தப் புதிய ஒப்பந்தத்தில் இருதரப்பினருமே சிலவற்றை விட்டுக் கொடுக்க நேரிட்டது. சாதி இந்துக்கள் தீண்டப்படாதோருக்கு 71 இடங்கள் என்பதற்குப் பதிலாக 148 இடங்களைக் கொடுக்க வேண்டியதாயிற்று. தீண்டப்படாத மக்கள் சாதி இந்துக்களைத் தன் வழிக்கும் கொண்டு வருவதற்கான அரிய வாய்ப்பை இழந்தனர். வகுப்புவாரி ஒதுக்கீடு பற்றிய அரசு அறிவிப்பினால் தீண்டப்படாத வகுப்பு மக்கள் சட்டசபைகளுக்குத் தங்கள் பிரதிநிதிகளைத் தாங்களே தேர்ந்தெடுத்துக் கொள்ளும் தனி உரிமை பெற்றிருந்தனர். அத்துடன் பொதுத் தொகுதியில் சாதி இந்துக்களு டன் சேர்ந்து வாக்களித்துச் சாதி இந்துக்களின் பிரதிநிதியைத் தேர்தெடுக்கும் வாய்ப்பையும் பெற்றிருந்தனர். ஆனால் இப்பொ ழுது தீண்டப்படாதவர்களைத் தேர்ந்தெடுக்கும் வாக்குரிமை அதிகாரம் சாதி இந்துக்களுக்கும் தரப்பட்டுள்ளது. செப்டம்பர் 26ஆம் நாள் டில்லியில் கூடிய இந்து மகாசபைக் கூட்டம் ஒரு

தீர்மானத்தின் மூலம் பூனா ஒப்பந்தத்திற்குத் தன் ஆதரவைத் தெரிவித்தது. சிக்கலற்றதாகவும் தெளிவானதாகவும் இருந்த இராஜா-முஞ்சே ஒப்பந்தத்தை அம்பேத்கர் ஏன் எதிர்த்தார் என்பது எல்லோருக்கும் வியப்பளிப்பதாகும். நல்லெண்ணங் கொண்ட-ஆனாலும் வலிமையற்ற ஒரு தரப்பாரிடமிருந்து இக்கோரிக்கை வந்தது என்பதனாலா?

மூன்றாவதாக மற்றொரு செய்தியும் உறுதியாயிற்று. காந்தியினுள் இருந்த மகாத்மா தன்மை எப்பொழுதெல்லாம் அவருள் இருக்கின்ற அரசியல்வாதியைவிட மேலோங்கி எழுகின்றதோ, அப்போதெல்லாம் சாதாரண சிறிய செய்திகளைக்கூட அவர் மிகவும் சிக்கலானதாக ஆக்கிவிடுகின்ற அற்புதம் நடக்கிறது. வட்டமேசை மாநாட்டில் அரசியல்வாதி காந்தி என்பதைவிட, மகாத்மா என்ற காந்திதான் மேலோங்கி நின்றார். மகாத்மா என்கிற காந்தி உலகையே கலக்கினார்; ஆனால் அரசியல்வாதி என்கிற காந்தி தோற்றுப் போனார். எரவாடா சிறையிலோ அரசியல்வாதி என்ற காந்தி வென்றார்; மகாத்மா என்ற காந்தி தோற்கடிக்கப்பட்டார். காந்தி ஈட்டிய வெற்றி எதிரியை இனி எழுந்திருக்க முடியாதபடி செய்துவிட்டது. அம்பேத்கர் தன் வாழ்நாளெல்லாம் கூர்தீட்டிய ஆயுதங்கள் அனைத்தையும் இப்போரில் இழக்கும்படியாகக் காந்தி செய்துவிட்டார். கர்ணனை நிராயுதபாணியாக இந்திரன் ஆக்கியது போல் காந்தி அம்பேத்கரை வலிமையற்ற மனிதராக இதன்மூலம் ஆக்கிவிட்டார். காந்தி வட்டமேசை மாநாட்டின்போது தீண்டப்படாதவர் பிரச்சினையில் போதிய அளவில் இணங்கிப் போகும் பண்பை வெளிப்படுத்தியிருந்தால், மகாத்மா இத்தகைய பெருந் துன்பத்தை ஏற்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது என்று அம்பேத்கர் கூறுவது மிகவும் சரியானதாகும். இத்துன்பம் காந்தியே ஏற்படுத்திக்கொண்டதாகும்.

பூனா ஒப்பந்தம் வரலாற்றில் ஓர் அத்தியாயத்தை முடிவுக்குக் கொண்டு வந்தது. *1931* ஆகஸ்டு *14*ஆம் நாள் மணிபவனில் தொடுக்கப்பட்ட போர் ஒரு முடிவுக்கு வந்துவிட்டதா? அல்லது இது இரண்டாவது போரின் துவக்கமா? இந்தப் போர் நிறுத்தத்திற்குப் பிறகும் போர் தொடருமா?

அரசியல் உரிமை முழக்கம்

பூனா ஒப்பந்தத்தின் விளைவாக இந்துத் தலைவர்கள் கோயில் நுழைவுப் போராட்டத்தில் ஆர்வம்காட்ட முன்வந்தனர். 1920களின் தொடக்கத்தில் தீண்டப்படாதவர்கள் கோயிலினுள் நுழைவதைக் காந்தி ஆதரிக்கவில்லை; சமபந்தி உணவு உண்பதை யும் எதிர்த்தார். முக்கியமான காங்கிரசுத் தலைவர்களும் கோயில் நுழைவு இயக்கத்தை எதிர்த்தனர்.

காந்தி உண்ணாநோன்பு இருந்த காலகட்டத்தில் சில கோயில் கள் தீண்டப்படாதவர்களுக்காகத் திறந்துவிடப்பட்டதாகச் செய்தி கள் வெளியாயின. அது வெறும் வீராவேசமான புள்ளி விவரமாக மட்டுமே இருந்தது. ஏனெனில் உண்மை நிலை அதற்கு எதிரானதாகவே இருந்தது. காந்திக்கு ஆதரவுகாட்ட வேண்டும் என்பதற்காகவே பாழடைந்த கோயில்களும், பேய்கள் இருப்பதா கப் பயம் ஊட்டப்பட்ட கோயில்களும், வழிபாடு நடக்காத கோயில்களுமே கோயில் நுழைவுப் பட்டியலில் இடம் பெற்றிருந் தன என்று அம்பேத்கர் எடுத்துக்காட்டினார். சில கோயில்கள் மட்டுமே அடங்கிய அப்பட்டியலில் காந்தியின் சொந்த மாகாண மான குஜராத்திலிருந்து ஒரு கோயில் கூட இடம் பெறவில்லை. அம்மாகாணம் அன்றும் இன்றும் என்றும் போலவே பழமையில் ஊறிக்கிடக்கிறது.

1930 மார்சு மாதம் நாசிக்கில் அம்பேத்கர் தொடங்கிய கோயில் நுழைவுப் போராட்டத்தையும், 1931 நவம்பரில் குருவாயூரில் கேளப்பன் நடத்திய 'கோயில் நுழைவுப் போராட்டத்தையும் காங்கிரசுக்காரர்கள் இதுவரை புறக்கணித்தே வந்தனர். 1932 செப்டம்பர் மாதம் 21ஆம் நாள், தீண்டப்படாதவர்களுக்குக் குருவாயூர் கோயிலைத் திறந்துவிடாதவரையில் உண்ணாநோன்பு இருக்கப்போவதாக அறிவித்துக் கேளப்பன் உண்ணாவிரதத்தைத் தொடங்கினார். தீண்டப்படாதவர்களுக்குக் குருவாயூர் கோயிலைத் திறந்துவிடாவிட்டால், 1933 சனவரி முதல் நாள் கேளப்பனோடு சேர்ந்து தானும் உண்ணாவிரதம் இருக்கப் போவதாகக் காந்தி தந்தி மூலம் தந்த உறுதிமொழி காரணமாக, செப்டம்பரிலிருந்து மூன்று மாதங்களுக்குத் தன் உண்ணாநோன்பைக் கேளப்பன் ஒத்திப் போட்டார். மலபாரில் உள்ள தீண்டப்படாதவர்களுக்குக்



அம்பேத்கர், சவிதா அம்பேத்கர்

கேளப்பன் தலைசிறந்த வழிகாட்டியாகத் திகழ்வதால், தீண்டப்படா தவர்களின் கோயில் நுழைவை விட, கேளப்பனின் உயிர் மிகவும் மதிப்பு வாய்ந்தது என்று அம்பேத்கார் செய்தி அனுப்பினார்.

நாசிக்கில் கோயில் நுழைவுப் போராட்டத்தை மிகத் தீவிரமாக நடத்திய அம்பேத்கர் இப்போது அவருடைய போராட்டத்தின் போக்கினை வேறுதிசையில் திருப்பிவிட்டார். அரசியல் அதிகாரத் தைப் பெறுவதற்காக அவர்களுடைய ஆற்றல்களைப் பயன்படுத்து மாறு அவர்களிடம் கேட்டுக்கொண்டார். 1932 செப்டம்பர் 28ஆம் நாள் பம்பாயில் ஓர்லியில் ஒரு பொதுக் கூட்டத்தில் அம்பேத்கர் பேசும்போது, 'கோயில் நுழைவுப் போராட்டத்தின் நோக்கம் நல்லதுதான். ஆனால் ஆன்மீக நலனைத் தேடுவதைவிட உங்களுடைய உலக வாழ்க்கைகைகுத் தேவையானவற்றைப் பெறுவதில் அதிகக் கவனம் செலுத்துங்கள். பணம் இல்லாததால் தான் உண்ண உணவும், உடுத்த உடையும், உங்களுடைய பிள்ளைகளைப் படிக்கவைக்க வாய்ப்பும், மருத்துவம் செய்து கொள்ளுவதற்கான வசதியும் உங்களுக்குக் கிடைக்காமல் இருக்கி றது. ஆகவே அரசியல் அதிகாரம் பெறுவதில் கண்ணும் கருத்துமாக இருங்கள். உங்களுடைய வலிமையைப் பெருக்கிக் கொள்ளுங்கள். உங்கள் வாழ்க்கைக்கான தேவைகளைப் பெறுவதற்காகப் போரா டுங்கள்' என்று கூறினார். தங்களுடைய கட்சியின் தலைமை அலுவலகம் அமைக்கப்படுவதற்கானதொரு கட்டடம் கட்டுவதற்கா கக் கட்டட நிதி திரட்ட வேண்டும் என்பதை இக் கூட்டத்தில் அம்பேத்கர் மிகவும் வலியுறுத்தி வேண்டுகோள் விடுத்தார்.

1932 அக்டோபர் மாதம் இரண்டாவது வாரத்தில் பம்பாயில் பெல்லாசிங் சாலையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அம்பேத் கர் பேசியபோதும் இதே கருத்தை வலியுறுத்தினார். அவர்களு டைய சிந்தனையை இவ்வுலகில் அனுபவிக்கப் பெற வேண்டிய வற்றின்மீது செலுத்தாமல் தாம் பார்த்தறியாத மேலுலகம்பற்றிய கருத்துக்களில் மயங்கிக் கிடப்பதால் உயிர் வாழ்வதற்கே எவ்வளவு கடுமையாகப் போராட வேண்டியிருக்கிறது என்பதை அம்பேத்கர் விரிவாக விளக்கிக் கூறினார். உயிர் வாழ்க்கைக்குத் தேவையானவற் றைப் பெறுவதற்கு முயல்வதைப் புறக்கணித்த காரணத்தால் அவற்றை எவ்வாறு பெறுவது என்பதைப்பற்றியும் மக்கள் கவலைப்படாதவர்களாகி விட்டார்கள். அதனால் நாடே பின்தங்கி விட்டது; நாட்டின் முன்னேற்றமும் வளர்ச்சிபெறாமல் தேக்கமடைந் துவிட்டது என்று உள்ளத்தைத் தொடும்படியாகக் கூறினார்.

"உங்களுடைய கழுத்தில் உள்ள துளசி மாலை ஈட்டிக்காரரின் பிடியிலிருந்து உங்களை மீட்காது. நீங்கள் இராமனைப்பற்றி பக்திப் பாடல்களைப் பாடுவதால் நிலப்பிரபுவிடமிருந்து குத்தகையில் சலுகை கிடைத்துவிடாது. ஒவ்வொரு ஆண்டும் பந்தர்பூருக்கு நீங்கள் புண்ணிய யாத்திரை போவதால் மாதக் கடைசியில் உங்களுக்குச் சம்பளம் ஏதும் கிடைக்காது. சமூகத்தில் பெரும்பாலோர் இதுபோன்ற அர்த்தமற்ற கற்பனைகளிலும் மூடநம்பிக்கைகளிலும் மாயங்களிலும் மூழ்கியிருப்பதால்தான், தன்னலம்மிக்க புத்திசாலிகள் சமூகத்திற்கு எதிராகத் தங்கள் திட்டங்களை நிறைவேற்றிக் கொள்வதற்குத் தாராளமாக வாய்ப்புகளும் வசதிகளும் கிடைக்கின்றன. ஆகவே உங்களை ஒன்று கேட்டுக்கொள்வேன். உங்களுக்குக் கிடைக்கின்ற சிறிதளவு அரசியல் அதிகாரத்தையும் திறமையாகப் பயன்படுத்துங்கள். அதைப்பற்றிக் கவலைப்படாமலும் அதைச் சரியான முறையில் பயன்படுத்தாமலும் போனால் உங்களுடைய துன்பங்களுக்கு ஒரு முடிவே ஏற்படாது. நாம் எந்த அடிமைத்தளையை அறுத்தெறியப் போராடிக்கொண்டிருக்கிறோமோ அந்த அடிமைத்தளை நம்மை மேலும் இறுக்கிப் பிடித்துவிடுமோ என்ற அச்சம் என் உள்ளத்தில் தோன்றுகின்றது. நாம் இப்போது விழிப்படைந்திருப்பது என்பது குறுகிய காலத்திலேயே முடிந்து விடுமோ என்றும் அஞ்சுகிறேன்" என அம்பேத்கர் அக்கூட்டத்தில் குறிப்பிட்டார்.

சிவந்த்வாடியில் ஒரு முக்கியமான கொலை வழக்கில் அம்பேத்கர் வழக்காடச் செல்ல வேண்டியிருந்தது. 1932 செப்டம்பர் 19ஆம் நாள் சிவந்த்வாடியில் வழக்கு விசாரணைக்கு வந்தது. அப்போது காந்தி உண்ணாநோன்பில் இருந்ததால் அன்று அம்பேத்கர் அங்குச் செல்ல இயலாது போயிற்று. ஆகவே விசாரணை அக்டோபர் 19ஆம் நாளுக்குத் தள்ளி வைக்கப்பட்டது. சிவந்த்வாடிக்குச் செல்லும் வழியில் எரவாடா சிறையில் அம்பேத்கர் காந்தியைச் சந்தித்தார். தீண்டாமை எதிர்ப்புக் கழகத்தில் இருக்க வேண்டிய உறுப்பினர்களின் தன்மைபற்றிக் காந்தியுடன் பேசிய போது அதனுடைய பல்வேறு குழுக்களிலும் தீண்டப்படாதவர்களே பெரும்பான்மையினராக இருக்க வேண்டும் என்று கூறினார். தீண்டப்படாதவர்களுக்கான தனியான மக்கள் தொகைக் கணக்கெடுப்பு தேவை என்று அம்பேத்கர் வலியுறுத்தினார். தீண்டப்படாதார் முன்னேற்ற இயக்கத்தில் தொய்வு ஏற்பட்டிருப்பது தெளிவாகத் தெரிகிறது என்றார். தீண்டாமை எதிர்ப்புக் கழகத்தின் செயல்கள் கோயில் நுழைவு, சமபந்தி உணவு என்பனவற்றில் நாட்டம்

செலுத்துவதைவிட, தீண்டப்படாதவர்களைப் பொருளாதாரம் கல்வி சமூகம் ஆகிய நிலைகளில் முன்னேற்றுவதற்கான முயற்சி களில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும் என்பது அவருடைய கருத்தாகும் என்று காந்தியிடம் கூறினார்.

சிவந்த்வாடியிலிருந்து பம்பாய் திரும்பியபின் 1932 அக்டோபர் 28ஆம் நாள் சர். கவாஸ்ஜி ஜகாங்கீர் அரங்கில் ருஷி சமாஜம் அம்பேத்கருக்கு ஒரு வரவேற்பு அளித்தது. அக்கூட்டத்தில் அம்பேத்கர் பேசும்போது கோயில் நுழைவு இயக்கத்திலும், சமபந்தி உணவு உண்பது என்பதிலும் அதிகமாக ஈடுபடாதீர்கள் என்று அவருடைய மக்களை எச்சரித்தார். அவற்றால் உங்களு டைய வாழ்க்கைப் பிரச்சினை தீராது என்றார். உங்களுடைய துன்பங்கள் முன்கூட்டியே தலைவிதியால் நிர்ணயிக்கப்பட்டிருக் கின்றன என்ற மூடத்தனமான நம்பிக்கையை எவ்வளவு விரைவில் விட்டொழிக்கிறீர்களோ அந்த அளவிற்கு நல்லது என்றார். உங்களுடைய வறுமை தவிர்க்க முடியாத ஒன்று, உடன்பிறந்தது, நீக்க முடியாதது என்று நீங்கள் நினைப்பது முற்றிலும் தவறானதா கும். இத்தகைய தன்மையில் உங்களை நீங்களே அடிமைகளாக எண்ணுவதைக் கைவிட்டுவிடுங்கள் என்று அம்பேத்கர் வலியுறுத்தி னார். மூன்றாவது வட்ட மேசை மாநாட்டில் கலந்துகொள்வதற்காக இலண்டனுக்குப் புறப்படுவதற்கு முன்னர் நவம்பர் 4ஆம் நாள் அம்பேத்கருக்கு ஒரு வரவேற்பு அளிக்கப்பட்டது. குஜராத்தியரான மெக்வால் சமூகத்தினர் இந்த வரவேற்பு விழாவுக்கு ஏற்பாடு செய்திருந்தனர். இந்த வரவேற்பின்போது அம்பேத்கர் நெடிய ஆயுளும் நிறைந்த செல்வமும் பெற்றுத் திகழ வேண்டும் என்று பலவாறாகக் கூறி வாழ்த்தினர்.

1932 நவம்பர் 7ஆம் நாள் அம்பேத்கர் இங்கிலாந்திற்குப் பயணமானார். பயணம் புறப்படுவதற்கு முன் அம்பேத்கர் அளித்த பேட்டியில் மய்ய ஆட்சிக்கு எத்தகைய அதிகாரமும் அளிக்காமல் மாகாண மட்டத்தில் மட்டும் சுயாட்சியை ஏற்படுத்துவது என்பது பொருத்தமற்றதாகும் என்று கூறினார். மய்ய அரசின் அதிகாரங்கள் அனைத்திந்தியக் கூட்டமைப்பினைச் சார்ந்திருக்க வேண்டும் என்ற கருத்தை விரும்பவில்லை என்றார் அம்பேத்கர். காந்தியின் ஒத்துழையாமை இயக்கம் ஆங்கில ஆட்சிக்கு எதிரான கிளர்ச்சி யன்று; ஏனெனில் அதன்மூலம் பிரிட்டிஷ் நிர்வாகத்தை அகற்ற இயலாது என்று அம்பேத்கர் கருதினார்.

அளப்பறிய ஆற்றலும் ஈடற்ற தன்னம்பிக்கையும் உடைய அம்பேத்கர் அவருடைய மக்களின் ஒரே தலைவராகத் திகழ்ந்தார். இந்தியாவின் மிகச் செல்வாக்குப் படைத்த அரசியல் தலைவரான காந்தியுடன் மோதியபின் அம்பேத்கர் புத்துணர்ச்சியுடனும், ஊக்கமுடனும் செயல்பட்டார். இத்தாலியக் கப்பலான விக்டோரியா வில் பயணம் செய்வதை அம்பேத்கர் விரும்பினார். ஏனெனில் அக்கப்பலின் அமைப்பு, அதன் வேகம், தங்குவதற்கு அதில் இருந்த வசதிகள், நவீனப் பயணச் சாதனங்கள் ஆகியவை அவரைக் கவர்ந்தன. இந்துப் பெருங்கடல் அமைதியாக இருந்தது. எல்லையற்று விரிந்து ஒளிரும் கண்ணாடிப் பரப்பாகக் காட்சியளித் தது அது. செங்கடலும் அதே போன்று அமைதியாகவே இருந்தது. அப் பருவத்தில் பொதுவாகச் செங்கடலில் கடற்பயணம் செய்வது மிகவும் தொல்லையானதாக இருக்கும்.

'ஒவ்வொரு முறையும் பெரும் திரளாகக் கூட்டங்கூடி ஆரவாரமான முறையில் என்னை வழியனுப்பி வைப்பது என்னை அமைதியிழக்கச் செய்கிறது. என் சிந்தனையோட்டம் சனநாயக நெறிக்கு இசைந்ததாய் இருக்கிறது. பயணத்தையொட்டி நடைபெ றும் பெருங்கூட்டங்களும், ஆரவாரக் கூச்சல்களும் சனநாயகத் தன்மையற்ற தனிநபர் வழிபாட்டுச் சாயலுடைய புகழ்ச்சிகளும் என்னைத் திக்குமுக்காடச் செய்கின்றன. என் நெஞ்சம் தனிமையை- ஆரவாரமற்ற அமைதியான சூழலை அவாவுகிறது. ஓய்வான அமைதியான வாழ்க்கை வேண்டுமென்று என்னைப் போன்று வேறு எவரும் ஏங்க மாட்டார்கள். புயலுக்குப்பின் அமைதி என்ற விதி உண்மையாக இருக்குமானால், வருந்தி மேற்கொண்ட முயற்சிகளுடன் இடைவிடாமல் போராட்டங்கள் நடத்திய நான் நீண்ட நாட்களுக்கு முன்பே ஓய்வு பெற்று அமைதியான வாழ்வில் மகிழ்ந்துகொண்டிருந்திருக்க வேண்டும். அத்தகைய ஒரு நியதி என் வாழ்க்கைக்குப் பொருந்தாது என்பதை நான் நன்கறிவேன். என் வாழ்வின் இறுதிவரை பரபரப்பான ஆரவாரமான சூழலே நீடிக்கும். ஏனெனில் என் வாழ்கை அவ்வாறு அமைந்துவிட்டது. கடமையைச் செய்ய வேண்டும் என்ற பேரவாவினால்தான் இந்த ஆரவாரத்திற்கு நான் கட்டுப்பட்டு நடக்க வேண்டியுள்ளது. கொண்ட கொள்கையில் ஈடுபாடும் கடமையைச் செய்யும் ஆர்வமும் மிகச் சிறந்த பணிகளைத் திறமையுடன் செய்வதற்கான துணிவையும் ஊக்கத்தையும் தருகின்றன. மேற்குறிததுள்ள செய்தி களை அம்பேத்கர் இந்தியாவிற்கு எழுதிய கடிதங்களில் குறிப்பிட்டி ருந்தார்.

II

கப்பல் பயணத்தின்போது பல முக்கியப் பயணிகள் பூனா ஒப்பந்தத்தைப்பற்றியும் இந்தியாவையே உலுக்கிய காந்தியின் உண்ணாநோன்புபற்றியும் பேசிக்கொண்டனர். காந்தியின் உண்ணாநோன்பு அவர்களைப் பெரிதும் கவர்ந்திருந்தது. ஒரு அய்ரோப்பியப் பயணி, அம்பேத்கரைச் சுட்டிக்காடி, அவருடைய நண்பரிடம் 'அதோ அந்த இளைஞர்தான் இந்திய வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தை எழுதிக்கொண்டிருப்பவர்' என்று கூறினார். அரசியல் பிரச்சினைகள்பற்றிக் கப்பலில் மற்றவர்களோடு கலந்துரையாடியபோது, பிரிட்டிஷ் அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் தீண்டப்படாதவர்கள் மத்தியச் சட்டசபையில் பிரதிநிதித்துவம் பெறாமல் செய்திட எவ்வெவ்வாறு திட்டமிட்டிருந்தனர் என்ற செய்தியை அறிந்து அம்பேத்கர் அதிர்ச்சியடைந்தார். தீண்டப்படாதவர்களின் நலன்களைக் கவனித்துக்கொள்ள வேண்டியது மாகாண அரசுகளின் பொறுப்பாகும் என்று கூறி, மத்தியச் சட்டசபையில் தீண்டப்படாதவர்களுக்கென ஒதுக்கப்படவிருந்த இடங்களை எடுத்து முஸ்லீம்களுக்கும் அய்ரோப்பியர்களுக்கும் தாங்களாகவே அளித்திட அவர்கள் திட்டமிட்டிருந்தனர். மத்தியச் சட்டசபையில் இந்துக்களுக்கென உள்ள இடங்களில் 18 விழுக்காட்டைத் தீண்டப்படாதவர்களுக்கு அளிக்க வேண்டும் என்று விதித்துள்ள பூனா ஒப்பந்தமானது, பிரிட்டிஷ் அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் சேர்ந்து தீட்டியிருந்த திட்டத்தை முறியடித்துவிட்டது என்பதைக் கண்டறிந்ததும் அம்பேத்கர் மகிழ்ச்சியால் மெய்சிலிர்த்தார். மூன்றாவது வட்டமேசை மாநாட்டுக்குச் சென்றுகொண்டிருந்த சில பிரதிநிதிகள் பிரிட்டிஷ் அரசு தருகின்ற எதையும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்பதைக் கண்டறிந்தார். ஆகவே எதிர்பாராத திருப்பம் ஏதேனும் ஏற்பட்டால் தவிர சைமன் குழு அறிக்கையில் அறிவிக்கப்பட்டதற்கு மேல் கூடுதலாக எதுவும் இந்தியாவுக்குக் கிடைக்காது என்று அம்பேத்கர் கூறினார்.

தன் காலில் இருந்த சிறிதளவு வலியால் அம்பேத்கர் துன்புற்றார். இதனால் கப்பலின் மேல்தளத்தில் முந்தைய பயணத்தின்போது வேகமாக நடந்து மகிழ்ந்ததுபோல் இம்முறை அவரால் நடக்க முடியவில்லை. ஆயினும் வரலாற்றில் அவருடைய மனத்தைக் கவர்ந்த நெப்போலியனைப்பற்றிப் பேராசிரியர் சுலோனி எழுதிய நூலைப் படிப்பதில் நேரத்தைக் கழித்தார். அரிசன இயக்கம்பற்றிக் காந்தி எரவாடா சிறையிலிருந்து

வெளியிட்ட அறிக்கைகளையும் படித்தார். காந்தியின் அறிக்கை களைப்பற்றி அவருடைய தோழர்களுக்கு எழுதிய கடிதங்களில் காந்தியின் கருத்துகள் அவர்களுடைய கருத்தையொட்டி உருவாகி வருவதாகவும், ஆனால் சமபந்தி உணவு உண்பதையோ அல்லது கலப்புத்திருமணம் செய்து கொள்வதையோ வரவேற்கும் அள விற்கு இன்னும் காந்தியின் சிந்தனைப் போக்கு வளர்ச்சியடைய வில்லை என்றும் அம்பேத்கர் குறிப்பிட்டார். காந்தி உண்ணா நோன்பு முயற்சியில் இறங்கக்கூடாது; ஏனெனில் அவர் வீணாக இறந்து விடுவதைத் தான் விரும்பவில்லை என்றும் எழுதினார்.

காந்தியின் அறிக்கைகளைப்பற்றித் தீண்டாமை எதிர்ப்புக் கழகத்தின் பொதுச்செயலாளரான தாக்கருக்கு 1932 நவம்பர் 14ஆம் நாள் இலண்டன் செல்லும் வழியில் போர்ட் செயிட் துறைமுகத்திலிருந்து ஒரு கடிதம் எழுதினார். அக்கடிதம் மிகவும் மதிப்பு வாய்ந்த ஆவணமாகக் கருதப்படுகிறது. எரிச்சலடையும் படியான-புண்படுத்தும்படியான வழக்கமான பாணியில் இல்லா மல், நடைமுறை சார்ந்த இயல்பான இணக்கமான தன்மையில் தீண்டாமையை ஒழித்தல்பற்றி இந்துச் சமூக ஊழியர்களுக்கு ஆக்கப்பூர்வமான யோசனைகளை அம்மடலில் அம்பேத்கர் எழுதியிருந்தார். "சட்டத்தினாலோ, தனி வாக்காளர் தொகுதிக்குப் பதிலாகக்கூட்டு வாக்காளர் தொகுதியைத் தேர்தல் சட்டத்தின்மூலம் கொண்டுவருவதாலோ தீண்டப்படாதவர்களையும் சாதி இந்துக்க ளையும் ஒன்றுபடுத்திவிட முடியாது. அன்பு ஒன்றே அவர்களை ஒற்றுமையுடன் வைத்திருக்க வல்லதாகும். தன்னுடைய வழிமுறை களை மாற்றிக்கொள்ள வேண்டும் என்று சாதி இந்துவை உணரச் செய்யாதவரை - நினைக்கச் செய்யாதவரை தீண்டப்படாத மக்களுக்கு விடிவே இல்லை. சாதி இந்துக்களின் சிந்தனையில் ஒரு புரட்சி தோன்ற வேண்டும் என நான் எதிர்பார்க்கிறேன்" என்று அக்கடிதத்தில் அம்பேத்கர் எழுதியிருந்தார்.

ஆகவே தீண்டப்படாத வகுப்பு மக்கள் கிராமத்தில் கிணற்றில் தண்ணீர் எடுத்தல், ஊர்ப்பள்ளிகளில் சேர்ந்து படிக்க இடம்பெறல், சத்திரங்களில் தங்கிட உரிமைபெறல், பொதுவழிகளைப் பயன்ப டுத்தல் போன்ற குடியுரிமைகளைப் பெறுவதற்காகத் தீண்டாமை எதிர்ப்புக் கழகம் இந்தியா முழுவதும் தீவிரமாகப் போராட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அது இந்துச் சமூகத்தில் ஒரு சமுதாயப் புரட்சியை ஏற்படுத்தும் என்று நம்புவதாக அம்பேத்கர் கூறினார்.

இக்குடியுரிமைப் போராட்டத்தை வெற்றிபெறச் செய்யவேண்டுமானால் சிற்றூர்ப்புறங்களில் பணியாற்றிட மிகப் பெரிய தொண்டர் படை வேண்டும். தீண்டப்படாதவர்கள் அவர்களுடைய உரிமைகளுக்காகப் போராடுவதற்கு அத்தொண்டர்கள் ஊக்கமளிப்பார்கள்; வழக்குகளை நடத்துவதில் அவர்களுக்கு உறுதுணையாக இருப்பார்கள். இத்திட்டத்தினைச் செயல்படுத்தும்போது சமூகத்தில் அமைதிக் குலைவும் வன்முறையைத் தூண்டும் போராட்டமும் ஏற்படும். இது தவிர்க்க முடியாதது என்பதே என் கருத்தாகும். தீண்டாமையை ஒழிக்கும் போராட்டத்தில் மென்மையான எதிர்ப்பினைக் காட்டுவது பயன் விளைவிக்காது என்று அம்மடலில் அம்பேத்கர் எழுதியிருந்தார்.

இதற்கு ஏற்ப, சாதி இந்துக்கள் வழக்கமாகப் பின்பற்றிவரும் மரபுகளின்மீது கடுந்தாக்குதலை நீங்கள் தொடுத்து ஒரு நெருக்கடியை ஏற்படுத்த வேண்டும்; அந்த நெருக்குதல் சாதி இந்துவைச் சிந்திக்குமாறு கட்டாயப்படுத்தும். அவ்வாறு சாதி இந்து சிந்திக்கத் தொடங்கினால்தான் தன்னை மாற்றிக்கொள்வதற்கான மன நிலையைப் பெறுவான்; இல்லாவிட்டால் பழைய போக்கிலேயே தான் இருப்பான். எதிர்ப்புணர்ச்சியைக் காட்டக்கூடாது; மென்மையான முறையில் கருத்துகளைப் புகட்ட வேண்டும் என்று கூறுகின்ற கோட்பாட்டில் உள்ள குறைபாடு என்னவெனில், அதனால் ஒரு நெருக்கடியை ஏற்படுத்த முடியாது என்பதேயாகும். மகதில் சௌதார் குளத்தில் நீர் எடுக்கும் போராட்டம், நாசிக்கில் கலாராம் கோயில் நுழைவுக் கிளர்ச்சி, மலபாரில் குருவாயூர் கோயில் நுழைவுப் போராட்டம் முதலான நேரடிப் போராட்டங்களில் இறங்கிய சில நாட்களிலேயே, சீர்திருத்தவாதிகள் இலட்சக்கணக்கான நாட்கள் பிரச்சாரம் செய்தாலும் உருவாக்க முடியாத விளைவுகள் ஏற்பட்டன என்று எடுத்துக்காட்டி அம்பேத்கர் நேரடியாகச் செயலில் இறங்க வேண்டியதன் முதன்மையை விளக்கியிருந்தார்.

வேலையிலும் ஊழியத்திலும், எல்லாத் துறைகளிலும் நிலைகளிலும் சம உரிமையும் வாய்ப்பும் பெற்றில்லாமையே தீண்டப்படாதவர்களின் வறுமைக்கும் துன்பத்திற்கும் காரணமாகும் என்று அவர் சுட்டிக்காட்டினார். தீண்டப்படாதவர்களின் இத்தகைய இயலாமைகளை நீக்குவதற்காகத் தீண்டாமை ஒழிப்புக் கழகம் போராட வேண்டும் என்று அம்பேத்கர் கேட்டுக் கொண்டார். இதுபோன்ற பணிகளைச் செய்வதற்குத் தீண்டப்படாதவர்களிடை

யேயிருந்து முழு நேரத் தொண்டர்களை அமர்த்திக்கொள்ள வேண்டும். ஏனெனில் பாதிக்கப்பட்ட சமூகத்திலிருந்து அவர்கள் வந்ததால் சீர்திருத்தம் பேசும் சந்தர்ப்பவாதிகளைவிடக் கொள்கை நிறைவேற்றத்திற்காக மிகுந்த ஈடுபாட்டுடன் தீவிரமாகச் செயல்படு வார்கள் என்று அவர் கருதினார். 'அன்பு பாராட்டுபவரால் மட்டுமே தொண்டாற்ற முடியும்' என்ற டால்ஸ்டாயின் அறிவுரையை மேற்கோள் காட்டி, கூலிக்கு மாரடிக்கும் ஆட்கள் இப்பணிக்குப் பயன்படமாட்டார்கள் என்று கூறி, புகழ்பெற்ற அக்கடிதத்தை அம்பேத்கர் முடித்திருந்தார்.

மத்தியதரைக் கடலைக் கடந்து கொண்டிருந்தபோது கப்பல் அப்படியும் இப்படியுமாக வேகமாக அலைக்கழிக்கப்பட்டது. எத்தகைய புயலாலும் பாதிக்கப்படாமல் கப்பலில் அமைதியாகப் பயணம் செய்யக் கூடிய நாள் என்றைக்கு வருமோ என்று அம்பேத்கர் ஏங்கினார். அத்தகைய கப்பலைக் கட்டுவது மனிதனின் அறிவாற்றலுக்கு அப்பாற்பட்டதன்று என்றும் கூறினார்.

அக்கடற்பயணத்தின்போது அவர் எழுதிய கடிதம் ஒன்றில் பிறரை நண்பர்களாக ஆக்கிக்கொள்ளும் திறமை தன்னிடம் இல்லை என்று குறிப்பிட்டிருந்தார். கடுகடுப்பான முகமும் அச்சமூட்டும் என்னுடைய தோற்றமும் இதற்கு ஒரு காரணம்; நண்பர்களோடு கூடி மகிழ்வதைவிட நூல்களைப் படிப்பதில் மூழ்கிக் கிடப்பதை விழைகின்ற என் மனமும், எப்பொழுதும் ஆழ்ந்த சிந்தனையில் ஈடுபட்டிருக்கும் என் பழக்கமும் மற்ற காரணங்களாகும் என்று அவர் எழுதியிருந்தார். இவ்வியல்புகள் இருப்பினும் கப்பலில் ஜாத் (Jath) இளவரசரோடு அவர் நட்பை ஏற்படுத்திக்கொண்டார்; பல்த்தான் சிற்றரசின் திவானும் பெருந்தன்மையும் இனிய இயல்பும் கொண்டவருமான கே.வி. காட்போலேவுடன் பழகி அன்னாரின் நற்பண்புகளை அறிந்துகொண்டார்.

ஜெனிவாவில் கண்ணைக் கவரும் எழில்மிக்க அரங்கினைக் கண்டுகளித்து மனமாரப் பாராட்டினார். பேரழகின் திருவுருவாக அந்த அரங்கம் இருப்பதாக அவர் வர்ணித்தார். மிகச் சிறந்த கலை எழிற்கூடமாக அது விளங்குவதற்குக் காரணமாக இருந்த பெனிட்டோ முசோலினியை மிகவும் பாராட்டினார்.

இலண்டனை அவர் அடைந்தபோது நவம்பர் 17ஆம் நாளே மூன்றாவது வட்டமேசை மாநாட்டின் கூட்டம் தொடங்கி விட்டிருப்பதைக் கண்டார். இம்முறை பிரதிநிதிகள் குறைந்த

எண்ணிக்கையில் இருந்தனர். காங்கிரசு வேண்டுமென்றே கலந்து கொள்ளாமை குறிப்பிடத்தக்கதாகும். பிரதிநிதிகள் தமக்குள் பிளவு பட்டுக் கிடந்தமை அம்பேத்கரை மிகவும் வருந்தச்செய்தது. முஸ்லீம் பிரதிநிதிகள் அவர்கள் அளித்த பதினான்கு அம்சக் கோரிக்கை அறிக்கையில் இருந்த அனைத்தையும் ஏறக்குறைய பெற்றுவிட்டபிறகும் இந்தியாவில் மத்தியில் அதிகாரம் வாய்ந்த அரசை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையில் மற்ற இந்தியப் பிரதிநிதிக் குழுக்களுடன் ஒத்துழைக்காமல் இருப்பதைப் பார்த்து அம்பேத்கர் வருந்தினார். முஸ்லீம்கள் ஒன்றுதிரண்ட தனிக் குழுவாகச் செயல்பட்டனர்; ஆனால் இந்துக்களின் பிரதிநிதிகளோ தமக்குள் பிளவுபட்டிருப்பதால் வலிமையற்றவர்களாக இருந்தார் கள் என்ற அவருடைய எண்ணம் இங்கு மேலும் உறுதிப்பட்டது.

முஸ்லீம் தலைவர்கள் தன்னலங் கொண்டவர்களாக இருந்தது மட்டுமின்றிக் குறுகிய மனப்பான்மையினராகவும், சமூகக் கண் ணோட்டத்தில் பிற்போக்காளர்களாகவும் இருப்பதைக் கண்டார். அது முஸ்லீம்களுடைய தனி இயல்பாக இருப்பதைக் கண்டு அம்பேத்கர் வியப்படைந்தார். தீண்டப்படாதவர்களின் கோரிக்கை களுக்கு ஆதரவு அளிக்குமாறு முஸ்லீம்களைக் கேட்பது பாதுகாப் பற்றதாகும் என்ற முடிவிற்கு அம்பேத்கர் வந்தார். அம்முடிவு தவிர்க்க இயலாததாகும் என்றும் கருதினார். கோயில் நுழைவு எதிர்ப்பு இயக்கத்திற்கு முஸ்லீம்கள் ஆதரவு தரவேண்டும் என்றும், சாதி இந்துக்களின் குறைகளுக்காக முஸ்லீம்கள் குரல் கொடுக்க வேண்டும் என்றும் கெஞ்சிக் கேட்டு வங்காளத்திலிருந்த வைதிக இந்துக்கள் குஸ்நவிக்குத் தந்தி கொடுத்திருந்ததுபற்றி அம்பேத்கர் விளக்கினார். இந்து மதத்தைக் காப்பாற்றிட உதவுமாறு கோரி முஸ்லீம்களுக்கு வங்காள வைதிக இந்துக்கள் விடுத்துள்ள வேண்டு கோளானது இந்தியாவில் உள்ள எல்லாச் சீர்திருத்தவாதிகளுக்கும் விடப்பட்டுள்ள ஆபத்தான எச்சரிக்கையாகும் என்று அம்பேத்கர் அறிவித்தார். வைதிக இந்துக்களைப் போலவே இந்திய முஸ்லீம்க ளும் விசித்திரமானவர்களே என்ற அவர் கருதினார். இந்திய முஸ்லீம்கள் சமூகச் சீர்திருத்தத்தை அடியோடு வெறுக்கின்ற இயல்பினர். கமால் பாட்சாவின் வரலாற்றிலிருந்து பாடம் கற்றுக் கொண்டால் இந்திய முஸ்லீம்கள் பயனடைவார்கள் என்று அம்பேத்கர் தன் மடலில் எழுதினார். துருக்கியின் தலைவரான கமால் பாட்சாவிடம் தனக்கு மிகுந்த மரியாதை உண்டென்றும், ஆனால் இந்திய முஸ்லீம் தலைவர்களான ஷவுகத் அலி போன்றவர்கள், முற்போக்கான கருத்துடையவர்களாக இருக்கிறார்


கள் என்பதற்காகவே கமால் பாட்சாவையும் அமானுல்லாவையும் மதித்துப் போற்றுவதில்லை என்றும் அம்பேத்கர் எழுதினார்.

திட்டமிட்டவாறு மூன்றாவது வட்ட மேசை மாநாட்டின் நடவடிக்கைகள் நடைபெற்றன. முந்தைய இரு வட்ட மேசை மாநாடுகளின் போது இறுதி செய்யப்பட்ட முடிவுகளுக்குச் சில விவரங்களை இணைப்பதும், இடையிடையே விடுபட்டவற்றைச் சேர்ப்பதும் லோதியன் குழு, டேவிட்சன் குழு ஆகியவை அளித்த அறிக்கைகளின் அடிப்படையில் மத்திய அரசை உருவாக்குவது பற்றி முடிவெடுப்பதும் மூன்றாவது வட்டமேசை மாநாட்டின் முக்கியப் பணிகளாக இருந்தன. தற்போதுள்ள சூழ்நிலையில் வயது வந்த அனைவர்க்கும் வாக்குரிமை அளித்திடுவது நடைமுறைக்கு ஒத்துவராது என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் வாக்குரிமை மேலும் பலதரப்பாருக்கும் விரிவுபடுத்தப்படும் என்றும், பெண்க ளில் ஒரு பகுதியினர்க்கு வாக்குரிமை வழங்கப்படும் என்றும் அந்த அறிவிப்பு கூறியது. இதுகுறித்து இந்தியச் சிற்றரசர்கள் ஆர்வமற்றும்நாட்களை எண்ணிக் கொண்டுமிருந்தனர்.தீண்டப்படா தவர்களில் பெரும்பான்மையினர்க்கு வாக்குரிமையை வழங்குவதற் கான விதியை ஏற்படுத்துவது என்று முடிவெடுக்கப்பட்டது.

III

வணிகப் பாதுகாப்புக் குழுவில் அம்பேத்கர் உறுப்பினராகப் பங்கேற்றிருந்தார். அம்பேத்கர், ஜெயகர், சர் கவாஸ்ஜி ஜகாங்கீர், ஜோஷி, கெல்கர் சாப்ரு, நானக் சந்த், என்.என். சர்க்கார் முதலான பிரதிநிதிகள் கையொப்பமிட்ட ஒரு கோரிக்கை விண்ணப்பத்தை வட்டமேசை மாநாடு ஆய்வு செய்து முடிவெடுப்பதற்காக அளித்தனர். பிறப்பு, சாதி, மதம் ஆகியவற்றின் அடிப்படையில் பின்பற்றப்படும் பாகுபாடுகளை நீக்குவதற்கான ஒரு விதியைச் சிறிய அளவிலேனும் இந்தியாவுக்கான அரசியல் சட்டத்தில் இணைக்க வேண்டும் என்று பிரதமரிடம் அந்த அறிக்கைமூலம் கோரியிருந்தனர்.

1932 டிசம்பர் இரண்டாவது வாரத்தில் இம்பீரியல் ஓட்டலி லிருந்து அம்பேத்கர் இந்தியாவிற்கு எழுதிய கடிதம் ஒன்றில் வட்டமேசை மாநாட்டின் நடவடிக்கைகளில் எவரும் ஆர்வம் காட்டவில்லை என்று குறிப்பிட்டிருந்தார்., அமெரிக்காவிற்குத் தரவேண்டிய கடனை எப்படி அடைப்பது என்ற எண்ணத்தில் பிரிட்டிஷ் மக்கள் மூழ்கியிருப்பதால் வட்டமேசை மாநாட்டை



அம்பேத்கரும் அவருடைய இரண்டாம் மனைவி சவிதா அம்பேத்கரும்
சி. இராசகோபாலாச்சாரி குடும்பத்தினருடன் (1948)

அவர்களும் பொருட்படுத்தவில்லை. களையிழந்த அத்தகைய சூழ்நிலையில் இந்தியாவிற்கு அதிகாரப் பொறுப்பு வாய்ந்ததும் உண்மையானதுமான அரசினை உருவாக்கிட வாய்ப்பு இல்லை என்பதால், இந்தியாவின் எதிர்காலம் ஒளிமயமானதாக இராது என்று அம்பேத்கர் எண்ணினார். கூட்டாட்சியின் அமைப்பு முறைபற்றிய ஆவணம் மாநாட்டின் ஆய்வுக்கு வைக்கப்பட்டுள்ளது; ஆனால் அது எப்போது விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப் படும் என்று நாள் குறிக்கப்படாமல் இருக்கிறது என்று மேலும் அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். முஸ்லீம்களும் சிற்றரசுகளின் பிரதிநிதிகளும் உடனடியாக அதிகாரப் பொறுப்பு வாய்ந்த ஒரு மய்ய அரசை ஏற்படுத்த வேண்டும் என்ற இந்தியரின் கோரிக்கையில் நாட்டம் செலுத்தாமல் இருக்கின்ற துரோகம் மனம் நொந்து வருந்துதற்குரியதாகும் என்றார். தமக்குள் பிளவுபட்டுக் கிடக்கும் இப்படிப்பட்டவர்களால் இந்தியாவுக்காக எதையும் சாதிக்க இயலாது என்று கருதினார்.

கவலை அளிக்கக்கூடிய உலகச் சூழ்நிலைகளும், இணங்கிப் போகும் இயல்பற்ற இந்திய முஸ்லீம்களின் போக்கும் இந்திய மக்களின் குறிக்கோள் நிறைவேற்றத்தில் இவர்கள் அக்கறை கொள்ளாமையும் சூழ்ந்த நிலையில், மூன்றாவது வட்ட மேசை மாநாட்டுப் பணிகள் 1932 டிசம்பர் 24ஆம் நாள் முடிவுற்றன. உடனடியாக அம்பேத்கர் இந்தியாவுக்குப் பயணமானார். பொது மேடைகளிலும் பத்திரிக்கைகளிலும் அச்சமயம் கோயில் நுழைவுப் போராட்டம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. கேளப்பனுக்கு ஆதரவாக அவரோடு சேர்ந்து உண்ணாநோன்பு இருக்கப் போவதாகக் காந்தி அறிவித்தமை மகாத்மாவின் முகாமில் இருந்த கருங்காலிகளை அடையாளங் காட்டியது. காந்தியிடம் கொண்டிருந்த குருட்டுப்பக்தியினால்தான் சாதி இந்துத் தலைவர்கள் அரைமனத்துடன் அவசர அவசரமாகப் பூனா ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டிருந்தார்கள் என்பது இப்போது வெட்ட வெளிச்சமாகிவிட்டது. கோயில் நுழைவு இயக்கம் மெல்லமெல்லத் தன் வலிமையை இழந்து வந்தது. தீண்டப்படாதவர்களுக்குக் குருவாயூர் கோயிலைத் திறந்துவிடக் கள்ளிக்கோட்டைச் சிற்றரசரான சாமரின் மறுத்துவிட்டார். சாமரின் இளவரசர் ஓர் இந்து ஆவார். ஆயினும் அவர் நடத்தும் மதச் சடங்கு நிகழ்ச்சிகளில் முஸ்லீம்களும் சில தனி உரிமைகளைப் பெற்றிருந்தனர்.

பொன்னாணி வட்டத்தில் ஒரு கருத்துக் கணிப்பு நடத்தி அதில் தீண்டப்படாதவர்கள் குருவாயூர் கோயிலுக்குள் நுழையக் கூடாது என்று பெரும்பான்மையினர் கருத்துத் தெரிவித்தால் நான்

மேற்கொள்வதாக உள்ள உண்ணாநோன்பினைக் கைவிட்டு விடுவேன் என்று காந்தி அச்சமயம் யோசனை கூறினார். ஆனால் பொன்னாணி வட்டக் கருத்துக் கணிப்பில் பெரும்பான்மையினர் கோயில் நுழைவுக்கு ஆதரவளித்தனர். ஆயினும் சாமரின் இளவரசர் பெரும்பான்மையினரின் கருத்துக்கு இணங்கிட மறுத்து விட்டார். அவ்வேளையில் இந்திய மத்தியச் சட்டசபையில் ரங்கா அய்யர் தீண்டாமை ஒழிப்பு மசோதா ஒன்றை முன்மொழிந்திருந் தார். அதேபோன்ற மசோதாக்களை மத்தியச் சட்டசபையில் இராஜா, கயா பிரசாத் சிங், பி.சி.மித்ரா ஆகியோரும் கொண்டுவர முயன்றனர். அதன்பின் பம்பாய் மாகாணச் சட்டசபையில் போலே தீண்டாமை ஒழிப்புத் தீர்மானத்தைக் கொண்டுவர முயன்றார்.

இத்தகைய நிலைமைகளில் காந்தி முன்பு அறிவித்திருந்தவாறு 1933 சனவரி முதலாம் நாள் உண்ணாநோன்பைத் தொடங்கப் போவதில்லை என்றும், கவர்னர் ஜெனரலின் முடிவுக்காகக் காத்திருக்கப் போவதாகவும் கூறி உண்ணாநோன்பினைத் தள்ளிப் போட்டார். "காந்தி இந்தியாவின் முடிசூடா மன்னர் என்பதும் அவர் வைத்ததே இந்தியாவில் சட்டம் என்பதும் உண்மையாக இருக்குமானால் ஏன் இந்தக் குளறுபடியும் அலம்பலும்?" என்று அம்பேத்கரின் ஆதரவாளர்கள் கேட்டனர்.

1933 சனவரி 23ஆம் நாள் கஞ்சி (Gange)என்ற கப்பலில் அம்பேத்கர் இலண்டனிலிருந்து பம்பாய்க்குத் திரும்பினார். சர். புருஷோத்தமதாஸ் தாக்கூர்தாசும் அவருடன் திரும்பினார். அம்பேத்கர் வந்திறங்கியதும் சமத்தா தள அமைப்பினர் அவருக்கு உற்சாகமாக வரவேற்பு அளித்தனர். அச்சமயம் டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிக்கை நிருபருக்கு அம்பேத்கர் பேட்டி அளித்தார். இந்தியா வில் அதிகாரப் பொறுப்புவாய்ந்த ஓர் அரசு ஏற்படுவது என்பது இந்தியச் சிற்றரசர்களின் விருப்பத்தினையோ அல்லது அவர்களின் அனைத்திந்தியக் கூட்டாட்சியில் இணைவது என்பதை எதிர் நோக்கியோ இருக்கக்கூடாது என்ற தன் கருத்தை வலியுறுத்தினார். கோயில் நுழைவு மசோதாக்கள்பற்றி அவருடைய கருத்தைக் கேட்டபோது, அந்த மசோதாக்களை மத்தியச் சட்டசபையிலும் சென்னை மாகாணச் சட்டசபையிலும் கொண்டுவருவதற்கு இந்திய வைஸ்ராய் உடனடியாக அவருடைய அனுமதியை அளிக்கப் போவதில்லை என்று கூறப்படும் வதந்திகள் கவலை தருவதாக உள்ளது எனக் குறிப்பிட்டார். கோயில் நுழைவுப் பிரச்சினைக்காகக் காந்தி தன் உயிரைப் பயணம் வைக்கத் தேவையில்லை என்றார்.

மத்திய மற்றும் மாகாணச் சட்டசபைகளில் கோயில் நுழைவு உரிமைபற்றி விவாதிப்பதற்கு வைஸ்ராய் தடையாக இருக்கக் கூடாது என்றும் குறிப்பிட்டார். சட்டசபையில் கோயில் நுழைவுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டபின், அது மக்களின் கருத்துக்குப் புறம்பாக இருக்கிறது என்று வைஸ்ராய் கருதினால் அப்போது அவருடைய தனி அதிகாரத்தைப் பயன்படுத்தி அச்சட்டத்தைத் தடுத்து நிறுத்தலாம் என்றும் அம்பேத்கர் கருத்து கூறினார்.

அம்பேத்கர் பெல்லார்டு துறைமுகத்தில் இருந்தபோது, ஏர வாடா சிறையில் தன்னை வந்து சந்திக்குமாறு கோரி காந்தியிடமி ருந்து தந்தி வந்தது. தில்லியிலிருந்து திரும்பும் பயணத்தின்போது ஏரவாடாவில் சந்திப்பதாகக் காந்திக்கு அம்பேத்கர் பதில் தந்தி விடுத்தார். அடுத்தநாள் இரங்கூனிலிருந்து, டாக்டர் பா மாவ் அவர்களிடமிருந்து, அம்பேத்கருக்கு ஒரு தந்தி வந்தது. "தில்லியில் சட்டசபை நடைபெறும்போது இந்தியத் தலைவர்களைச் சந்திப்ப தற்காகப் பர்மா பிரிவினை எதிர்ப்புத் தலைவர்கள் அடுத்த வாரம் தில்லிக்கு வருகிறார்கள். அவர்கள் உங்களுடனும் மற்ற தலைவர்க ளுடனும் பர்மாவின் அரசியல் சட்ட நிலையைப்பற்றிப் பேசிட விரும்புகின்றனர். ஆகவே தாங்கள் அக்குழுவினரைப் பிப்பிரவரி 4 மற்றும் 5 ஆகிய நாட்களில் தில்லியில் சந்திக்குமாறு வேண்டுகின்றோம். தில்லியில் உங்களோடு தொடர்புகொள்ளுவதற் காக உங்களுடைய தில்லி முகவரியை எமக்குத் தந்திமூலம் யூசிட் ஹிலெய்ங் 80, ஹெர்மிடேஜ் சாலை, இரங்கூன் என்ற முகவரிக்குத் தெரிவியுங்கள்" என்று யூ சிட் ஹிலெய்ங், டாக்டர் பா மாவ் ஆகிய இருவரும் இணைந்து தந்தி கொடுத்திருந்தனர். நாட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் வட்டமேசை மாநாட்டுப் பணிகளைப் பாராட்டும் தந்திகள் அம்பேத்கர் அலுவலகத்திற்கு வந்து குவிந்தன. தீண்டப்படாத வகுப்பு மக்களின் விடுதலைக்காகவும் உரிமைகளுக் காகவும் மற்றும் சுதேச அரசுகளிலுள்ள மக்களின் நலனுக்காகவும் வட்ட மேசை மாநாட்டில் தீரமுடன் போராடியதற்காக நன்றி தெரிவித்து எர்ணாகுளத்திலிருந்து தீயர் இளைஞர் சங்கத்தினர் கொடுத்திருந்த தந்தியும் அவற்றுள் ஒன்றாகும்.

வைஸ்ராய் தில்லியில் வட்டமேசை மாநாட்டின் பிரதிநிதிகளின் கூட்டத்தைக் கூட்டியிருந்தார். அதில் கலந்துகொள்வதற்காக அம்பேத்கர் பம்பாயிலிருந்து தில்லிக்குப் பயணமானார். தில்லியிலி ருந்து திரும்பிய பின் பிப்ரவரி 4ஆம் நாள் சந்திக்க வருவாதகக் காந்திக்குத் தந்தி கொடுத்தார். பிப்பிரவரி 3ஆம் நாள் காந்தியிடம்

இருந்து அம்பேத்கருக்கு ஒரு தந்தி வந்தது. 'உங்கள் தந்தி தற்பொழுதுதான் கிடைத்தது. நாளை 12.30 மணிக்குச் சந்திக்கலாம்-காந்தி' எனப் பதில் தந்தி கிடைத்தது. 1933 பிப்ரவரி 4ஆம் நாள் காந்தியை எரவாடா சிறையில் சந்திக்க விரும்பியதால் தில்லிக்கு வந்த பர்மியர் குழுவினரை அம்பேத்கர் சந்திக்கவில்லை என்பது புலனாகிறது.

அம்பேத்கர் தன் தோழர்களான எஸ்.என். சிவதார்க்கர், டோலஸ், உபாஷம் கோலி கோர்ப்படே, கேசவராவ் ஜெதே ஆகியோருடன் பிப்பிரவரி 4ஆம் நாள் பகல் 12.30 மணிக்கு எரவாடா சிறைக்குள் நுழைந்தார். காந்தி எழுந்து நின்று வந்தவர்களை மகிழ்வுடன் வரவேற்றார். சிறிது நேரம் கழித்துக் கோயில் நுழைவுப் பிரச்சினைமீது உரையாடல் படர்ந்தது. டாக்டர் சுப்பராயன், ரங்கா அய்யர் ஆகியோரின் மசோதாக்களுக்கு ஆதரவளிக்குமாறு காந்தி அம்பேத்கரிடம் கேட்டார். சுப்பராயன் முன்மொழிந்துள்ள மசோதாவிற்கு ஆதரவளிக்க முடியாது என்று திட்டவட்டமாக அம்பேத்கர் மறுத்தார். ஏனெனில் அம்மசோதாவில் தீண்டாமை ஒரு பாவம் (குற்றம்) என்று கண்டிக்கப்படவில்லை. மேலும் கோயில் நுழைவைக் கருத்துக் கணிப்பு ஆதரித்தால் மட்டுமே தீண்டப்படாதவர்களுக்குக் கோயில் திறந்து விடப்படும் என்று அம்மசோதா கூறுகிறது. ஆனால் கோயிலில் உள்ள கடவுளைத் தொழுகின்ற உரிமையைப் பற்றி அதில் ஏதும் குறிப்பிடப் படவில்லை என்ற காரணங்களை அம்பேத்ககர் எடுத்து விளக்கினார்.

தீண்டப்படாதவர்கள் வருண அமைப்பில் சூத்திரர்களாக இருக்க விரும்பவில்லை; என்னை ஒரு இந்து என்று நேர்மையுடன் அழைத்துக்கொள்ள முடியவில்லை என்று காந்தியிடம் அம்பேத்கர் கூறினார். என்னை இழிந்த நிலைக்குத் தள்ளிக் கண்டனம் செய்யும் இந்து மதத்தைப் பெருமைக்குரியதாக என்னால் எப்படிக் கருத முடியும்? என்று கேட்டார். அந்த வருணாசிரம முறை நீடிக்கும்வரையில் கோயில் நுழைவால் பெறக்கூடிய பயன்கள் எதற்கும் உதவாது என்று கூறினார்.

வருணமுறை கேடானது அன்று என்பதே என் கருத்து என்று காந்தி கூறினார். சாதி இந்துக்கள் அவர்களுடைய பாவங்களுக்குக் கழுவாய் தேடிக் கொள்ளவும் இந்து மதத்தைத் தூய்மைப்படுத்தவும் ஒரு வாய்ப்புக்கொடுங்கள்; இதைப் புறக்கணிக்காதீர்கள். நீங்கள் புறக்கணித்தால் சனாதனிகளும் அரசும் அவர்களுக்குச்

சாதகமாக இதைப் பயன்படுத்திக்கொள்வார்கள். இந்தச் சீர்திருத்தம் நடைமுறைக்கு வந்தால் தீண்டப்படாதவர்கள் சமூகத்தில் உயர் வடைவார்கள் என்று காந்தி கூறினார்.

அம்பேத்கரோ காந்தி கூறியதிலிருந்து மாறுபட்ட கருத்தினைக் கொண்டிருந்தார். தீண்டப்படாதவர்கள் பொருளாதாரம், கல்வி, அரசியல் ஆகிய துறைகளில் முன்னேற்றம் அடையும்போது கோயில் கதவுகள் தாமாகவே திறக்கப்படும் என்று அழுத்தமாக அவர் நம்பினார்.

1933 பிப்பிரவரி 11ஆம் நாள் காந்தி தொடங்கிய 'அரிஜன்' பத்திரிக்கையின் முதல் இதழுக்குத் தீண்டப்படாதவர்களின் நலன்க ளுக்காகப் பாடுபடுதல் என்பதுபற்றி அம்பேத்கர் அனுப்பிய செய்தியிலும் இதே கருத்தை வலியுறுத்தியிருந்தார். தீண்டப்படாத சாதிகள் (அல்லது அவர்ணஸ்தர்கள்) என்பவை வருணாசிரமத்தால் விளைந்தவையேயாகும். ஆகவே வருணாசிரமமுறை இருக்கும் வரையில் தீண்டப்படாத சாதிகளும் இருக்கும். வருணாசிரம முறை அழிக்கப்பட்டால்தான் தீண்டப்படாத சாதிகளுக்கும் விடுதலை கிடைக்கும். வெறுக்கத்தக்க, கொடுமையான வருணாசிரமக் கோட் பாடுகளை விட்டொழிப்பதுதான் இனி நடைபெறவுள்ள போராட் டத்தில் இந்துக்களுக்குக் கைகொடுக்கும்; அவர்கள் தங்களைக் காப்பாற்றிக்கொள்ளத் துணைசெய்யும் என்று அச்செய்தியில் அம்பேத்கர் குறிப்பிட்டிருந்தார். இதே கருத்தைப் படித்த இந்துக்கள் பலரும் கொண்டிருக்கிறார்கள்; ஆனால் என்னால் இக்கருத்தை ஏற்க முடியாது என்று காந்தி பதில் சொன்னார்.

IV

பூனாவிலிருந்து திரும்பியபின்னர் அம்பேத்கர் பம்பாய்ச் சட்டசபையின் விவாதங்களில் கலந்துகொண்டார். கிராமப் பஞ்சா யத்தில் முஸ்லீம்களும் தீண்டப்படாதவர்களும் இடம் பெறாமல் இருந்தால், மாவட்ட ஆட்சியர் அச்சமூகங்களின் பிரதிநிதிகளைப் பஞ்சாயத்தில் உறுப்பினர்களாக நியமிக்க வகைசெய்யும் சட்டப்பிரி வைக் கிராமப் பஞ்சாயத்து மசோதாவில் சேர்ப்பதற்கான திருத்தத் திற்கு ஆதரவாக ஆணித்தரமாக அம்பேத்கர் வாதாடினார்.

இத்திருத்தத்தைக் குறைகூறிப் பேசியவர்களுக்கு அம்பேத்கர் பதிலடி கொடுத்தார். "இந்தியா, ஐரோப்பா போன்றதன்று. இங்கிலாந்து இந்தியாவைப் போன்றதன்று. இங்கிலாந்தில்

வருணாசிரம அமைப்பு முறையில்லை. இந்தியாவில் வருண முறை இருக்கிறது. ஆகவே இங்கிலாந்திற்கு ஏற்புடையதாய் இருக்கின்ற அரசியல் அமைப்பு முறை இந்தியாவுக்கு என்றுமே பொருந்தாது. இந்த உண்மையை நாம் உணர்ந்து ஏற்றிட வேண்டும். எனக்கு வாக்களிக்கின்ற உரிமைமட்டும் இருந்தால் போதாது. என்னுடைய வகுப்பு மக்கள் சட்டசபையில் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையில் இடம் பெற்றிருப்பதோடு, விவாதங்களில் கலந்துகொள்வதுடன் முடிவுகளை எடுப்பதிலும் பங்கேற்கின்ற உரிமை உடையவர்களாக அவர்கள் திகழக்கூடிய அரசியலமைப்பு முறைதான் எனக்கு வேண்டும். ஆகவே வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்பது கேடானதோ நச்சானதோ அன்று; அதற்கு மாறாக அது இந்நாட்டில் உள்ள பல்வேறுபட்ட வகுப்பு மக்களுக்குப் பாதுகாப்பும் உறுதிப்பாடும் அளிக்கின்ற மிகச் சிறந்த ஏற்பாடாகும். ஆகவே அரசியலமைப்புச் சட்டத்தின் வடிவத்தை அது மூளியாக்குகிறது என்பதை நான் ஒப்பமாட்டேன்" என அடித்துக் கூறினார். இடைமறித்து ஒரு உறுப்பினர் கேட்டார்: "அப்படியானால் அது அழகு செய்கிறதோ!" டாக்டர் அம்பேத்கர்: 'ஆம்! அது அரசியலமைப்புச் சட்டத்தை அழகுபடுத்துகிறது!'

நீதித்துறையிலும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும் என்ற கோட்பாட்டிற்கு எதிராகச் சொல்லப்பட்ட கருத்துகளுக்குப் பதிலளித்து அம்பேத்கர் பேசினார். "நீதித்துறையிலும் வழக்குகள் சாதியின் அடிப்படையிலான விருப்பு வெறுப்பின் பேரில்தான் பெரும்பாலும் தீர்மானிக்கப்படுகின்றன. நீதிபதிகள் தாங்கள் வகிக்கின்ற பொறுப்பைச் சாதிக் கண்ணோட்டத்துடன் தவறாகப் பயன்படுத்திச் சோரம் போகின்றனர்" என்று கூறினார். பார்ப்பனர்களுக்கும் பார்ப்பனர் அல்லாதார்க்கும் இடையே நடைபெற்ற எந்தெந்த வழக்குகளில் இத்தன்மையில் தீர்ப்புகள் வழங்கப்பட்டன என்பதை எடுத்துக்காட்டினர்.

அம்பேத்கரின் பேச்சு சட்டசபையிலும் பத்திரிகை உலகிலும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. ஒட்டு மொத்தமாக நீதித்துறை முழுவதையும் அம்பேத்கர் கண்டித்ததை எதிர்த்து அடுத்தநாள் சட்டசபை உறுப்பினர்கள் மிகக் கடுமையாகச் சாடினார்கள். அதற்குப் பதிலளித்து அம்பேத்கர் பேசும்போது, நீதித்துறையை ஒட்டு மொத்தமாகவோ அல்லது ஒரு குறிப்பிட்ட வகுப்பைச் சுட்டியோ கண்டிக்க வேண்டும் என்ற கருத்தில் தான் பேசவில்லை என்று கூறினார். அப்பிரச்சனை அத்துடன் முடிவுற்றது.

1933 பிப்பிரவரி 12ஆம் நாள் கோயில் நுழைவுபற்றிய மசோதாக்கள், இயக்கங்கள் குறித்த அவருடைய புகழ்மிக்க அறிக்கையை அம்பேத்கர் வெளியிட்டார். அதன் நகல் ஒன்றை 'அன்புள்ள மகாத்மா அவர்களுக்கு' என்று விளித்து எரவாடா சிறைக்கு அனுப்பினார். ரங்கா அய்யரின் மசோதாவைத் தீண்டப்ப டாதவர்கள் ஆதரிக்க முடியாது என்றார். ஏனெனில் அம்மசோதா பெரும்பான்மையினரின் ஆதரவைப் பெற்றுச் செய்வதை அடிப்ப டைக் கொள்கையாகக் கொண்டுள்ளது; ஆனால் தீண்டாமையை ஒரு தீவினை என்று அது கருதவில்லை. கோயில் நுழைவினைப் பெரும்பான்மையினர் எதிர்ப்பதாகக் கூறுகின்றனர். அவ்வாறாயின் தீண்டாமைப் பழக்கத்திற்குப் பெரும்பாலோர் இரையாகிக் கிடக்கி றார்கள் என்பதற்காகவோ அல்லது பெரும்பான்மையினர் தீண்டா மையைக் கடைப்பிடிக்க விரும்புகிறார்கள் என்பதற்காகவோ ஒழுக்க நெறிக்கு ஒவ்வாத அப்பாவச் செயலைப் பொறுத்துக் கொள்ள முடியாது. தீண்டாமை பாவமான, இழிந்ததான வழக்கம் என்று தீண்டப்படாதவர்களின் கண்ணோட்டத்தில் தெரிந்தால் அதைப் பெரும்பான்மையினர் விரும்புவதாக இருப்பினும் தீண்டப் படாத மக்கள் அக்கொடிய வழக்கத்தைத் தயக்கமின்றித் தகர்த்தழித் திட வேண்டும் என்று எண்ணுகின்றனர். பொது நலனுக்கு எதிராகவும் ஒழுக்க நெறிக்கு முரணாகவும் இருப்பதாகக் கருதப்ப டும் வழக்கங்களை நீதிமன்றத்தில் சட்டம் இதே கண்ணோட்டத்தில் தான் வாதமிட்டு முடிவு கூறுகிறது. ஆனால் ரங்கா அய்யர் மசோதா இத்தன்மையில் அமைந்திருக்கவில்லை என்று அம்பேத்கர் விளக்கினார்.

கோயில் நுழைவுப் பிரச்சினையை நடைமுறை வாழ்வியல் கண்ணோட்டத்தில் நோக்கும்போது உயர் கல்வியும் உயர் வேலை வாய்ப்பும் பொருளீட்டுவதற்கான சிறந்த வழிகளும்தான் தீண்டப்ப டாதவர்களுக்கு முழுவிடுதலையை வழங்கக்கூடிய உறுதியான அடித்தளங்களாகும். சமூக வாழ்வின் படிநிலையில் அவர்கள் நன்னிலையை எய்தியதும் அவர்களுடைய மதிப்பு தானாகவே உயரும். அவ்வாறு அவர்கள் மதிக்கப்படும்போது அவர்களைப் பற்றிய வைதிக மத மனப்பான்மைகளும் கட்டாயம் மாறுதல் அடையும். அத்தகைய மனமாற்றம் ஏற்படாவிடினும், தீண்டப்படா தவர்களின் பொருளியல் நலன்களுக்கு அதனால் தீங்கினை ஏற்படுத்த முடியாது. இப்பிரச்சினையில் தன்மான உணர்வும் அடங்கியுள்ளது. அய்ரோப்பியர்களால் நடத்தப்படுகின்ற மனமகிழ் மன்றங்கள், மற்றவகைச் சங்கங்களில், "நாய்களும் இந்தியர்களும்

இவற்றில் அனுமதிக்கப் படுவதில்லை'' என்று விளம்பரம் செய்திருக்கிறார்கள். 'இவற்றில் உறுப்பினர்களாகச் சேர்த்து கொள் ளுங்கள்' என்று இந்தியர்கள் கெஞ்சிக் கேட்பதில்லை. அதே போன்று அனைத்து இந்துக்களும் 'நாய் உட்பட எல்லா விலங்குகளும் இங்கு அனுமதிக்கப்படுவார்கள் - ஆனால் தீண்டப்படாதவர்கள் மட்டும் அனுமதிக்கப்பட மாட்டார்கள்' என்று எழுதி வைக்கப்பட்டுள்ள கோயில்களில் நுழைந்திட எங்களை அனுமதியுங்கள் என்று நாங்கள் கெஞ்சிக் கேட்க மாட்டோம். கோயிலைத் தீண்டப்படாதவர்களுக்காகத் திறந்து விடுவதா? வேண்டாமா? என்பதைப்பற்றி முடிவு செய்வது உங்கள் பொறுப்பாகும். ஆனால் அதற்காக நான் போராடமாட்டேன். மனிதனின் சுயமரியாதையை மதியாமை என்பது இழிந்த இயல்பு என்று நீங்கள் நினைத்தால் கோயிலைத் திறந்துவிடுங்கள்; சிறந்த மனிதர்களாக வாழுங்கள். ஒரு சிறந்த மனிதனாக இருப்பதைவிட ஒரு இந்துவாகவே இருந்திட நினைத்தால் கோயிலின் கதவுகளை மூடிவிடுங்கள்; இப்படியே கெட்டழிந்து போங்கள்; அதைப்பற்றி நான் கவலைப்படமாட்டேன். இதுவே, நான் சாதி இந்துக்களுக்குக் கூற விரும்பும் செய்தியாகும்'' என்று காந்திக்கு அனுப்பியிருந்த அறிக்கையில் அம்பேத்கர் உணர்ச்சி மேலிட எழுதியிருந்தார்.

கோயில் நுழைவு என்பது இறுதி இலட்சியம் அன்று; இறுதிக் குறிக்கோளை நோக்கிவைக்கும் ஓர் அடிதான் அது என்பது சரியானது என்றால், இந்தியாவிற்கு டொமினியன் அந்தஸ்து அளிப்பதைக் குறிக்கோளாகப் பிரிட்டன் ஒப்புக் கொண்டால்தான் இந்தியாவிற்கான அரசியல் சீர்திருத்தங்களை ஏற்போம் என்று இந்தியர்கள் சொல்வதுபோல் நாங்களும் கோயில் நுழைவை ஆதரிக்க விரும்புகிறோம் என்று அம்பேத்கர் விளக்கினார்.

சமூகத்தில் சமத்துவமற்ற நிலையைப் பாதுகாக்கின்ற மதத்தை இனிப் பொறுத்துக் கொள்ள முடியாது என்ற உறுதியான முடிவினைத் தீண்டப்படாதவர்கள் எடுத்தனர். 'இந்துமதம் தங்களு டைய மதமாக இருக்க வேண்டுமானால் அது சமூகச் சமத்துவம் உடைய மதமாக ஆகவேண்டும். அதன்பின் அது தீண்டப்படாத வர்களை அயலார்களாகக் கருதாமல் தங்களைச் சேர்ந்தவர்களாகக் கொள்ள வேண்டும். இந்து மதம் சமூகச் சமத்துவம் கொண்ட மதமாக மாறவேண்டுமானால் அதன் கோட்பாடுகளின் சீர்திருத்தத் தில் கோயில் நுழைவை மட்டும் சேர்த்தால் போதாது. அதனுடைய நான்கு வருணக் கொள்கையை விட்டொழிக்க வேண்டும் என்பதே

குறிக்கோளாக இருக்க வேண்டும். இந்த நால்வருணம்தான் எல்லா வகையான சமத்துவமின்மைக்கும் மூலக் காரணமாகும். மற்ற சமத்துவமின்மைகளான சாதிமுறை, தீண்டாமை ஆகியவற்றிற்குத் தாய் போன்றது, நால்வருணமே. இதை ஒழிக்காதவரையில் தீண்டப்படாதவர்கள் கோயில் நுழைவை ஏற்கமாட்டார்கள்; இந்து மதத்தை நம்பமாட்டார்கள். கோயில் நுழைவை ஏற்றுக்கொண்டு அத்துடன் நிறைவடைவது என்பது, தீமையுடன் சமரசம் செய்துகொண்டு, மனிதனுள் பொதிந்து பொலிந்திடும் மாண்பினை இழப்பதற்குச் சமமானதாகும்' என்று அம்பேத்கர் உறுதியுடன் எழுதினார்.

அந்த அறிக்கையின் இறுதியில் அம்பேத்கர் காந்தியை நோக்கி முக்கியமானதொரு வினாவை முன்வைத்திருந்தார். அது இதுதான்: 'நான் இப்பொழுது கோயில் நுழைவை ஏற்றுக்கொண்டு, அத்துடன் நால்வருணமும் சாதிமுறையும் ஒழியவேண்டும் என்று போராடினால் - காந்தி இதில் எந்தப் பக்கம் நிற்பார்? அவர் எனக்கு எதிரணியில் இருப்பாரானால், நான் இப்போது அவர் அணியில் இருக்க இயலாது'

அம்பேத்கரின் சிந்தனைப் போக்கினை ஏற்றுக்கொண்டிருந்த தீண்டப்படாத வகுப்பு மக்களின் தலைவர்கள் அம்பேத்கரின் கருத்தை ஆதரித்தனர். இரட்டைமலை சீனிவாசன், பிரேம்ராய், மாலிக் முதலானோர் அம்பேத்கரின் கருத்தைத் தூக்கிப்பிடித்தனர்.

அம்பேத்கரின் கேள்விக்குப் பதிலளித்துக் காந்தி ஓர் அறிக்கையை வெளியிட்டார். "இந்து மதத்தில் பிறந்த காரணத்தால் மட்டுமே நான் ஓர் இந்துவாக இருக்கவில்லை. அதை நான் விரும்பித் தேர்ந்தெடுத்து நம்புகின்றவன் என்பதால் நான் ஓர் இந்து. என் கருதுகோளின்படி இந்து மதத்தில் உயர்வு தாழ்வு கிடையாது. வருணாசிரமத்தையே எதிர்த்துப் போராட வேண்டும் என்று டாக்டர் அம்பேத்கர் விரும்புகின்றபோது நான் அவருடைய அணியில் இருக்க முடியாது. ஏனெனில் இந்து மதத்தின் பிரிக்க முடியாத கூறு வருணாசிரமம் என்று நம்புபவன் நான்" என்பதே காந்தியின் கூற்றாகும்.

கோயில் நுழைவுபற்றிக் காந்திக்கும் அம்பேத்கருக்கும் இடையே மோதல் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது, இரத்தினகிரியில் பிரிட்டிஷ் அரசால் ஊர் அளவில் சிறைக் காவலில் வைக்கப்பட்டிருந்த பெருந்தலைவரான வீர சாவர்க்கர் வியப்பூட்டும்

அழைப்பு ஒன்றை அம்பேத்கருக்கு அனுப்பினார். இரத்தின கிரியில் சேத் பகோஜி கீர் கட்டியிருந்த புதிய கோயிலைத் திறந்து வைக்க வருமாறு அம்பேத்கரை அவர் அழைத்திருந்தார். முன்னரே வேறு நிகழ்ச்சிகளுக்கு ஒப்புக் கொண்டிருப்பதால் அந்த அழைப்பை ஏற்க இயலாமைக்கு ஆழ்ந்த வருத்தம் தெரிவித்து அம்பேத்கர் பதில் எழுதினார். 'சமூக மாற்றத்திற்காக நீங்கள் செய்துவரும் தொண்டினைப் பாராட்டுவதற்கு இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள விரும்புகின்றேன். தீண்டப்படாதவர்கள் இந்துச் சமூகத்தில் இரண்டறக் கலந்திட வேண்டுமானால் தீண்டாமையை மட்டும் அகற்றினால் போதாது; அதற்காக நால்வருணத்தை அழித்திட வேண்டும். இந்த உண்மையை உணர்ந்துள்ள மிகச் சிலருள் நீங்களும் ஒருவர் என்ற வகையில் நான் மகிழ்கின்றேன்'' என்று வீர சாவர்க்கருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

வலதுசாரி அணியில் விடாப்பிடியுடன் இருந்த தலைவர்களும் சக்திகளும் தங்கள் நிலையைத் தளர்த்திக் கொண்டு அம்பேத்கரின் பக்கமாக மெல்ல வரத் தொடங்கிய வேளையில், அம்பேத்கர் தீவிரமான இடதுசாரியின் பக்கம் சென்றமை பலரை வியப்பில் ஆழ்த்தியது. சாதி இந்துச் சீர்திருத்தக்காரர்கள் தொடங்கிய இயக்கத்திற்கு ஆதரவளியுங்கள் என்று அவருடைய மக்களைக் கேட்பதற்குப் பதிலாக, அவர்களின் கவனத்தை அரசியலில் உரிமைகளையும் அதிகாரத்தையும் பெறுவதை நோக்கித் திருப்பி விட்டார். ஆனால் உரிய காரணத்துடன்தான் அவ்வாறு அம்பேத்கர் செய்தார். இச்சமயம் தீண்டாமை எதிர்ப்புக் கழகத்தின் பெயரைக் காந்தி 'அரிஜன சேவை சங்கம்' என்று மாற்றிவிட்டார். இதனுடைய மத்தியக் குழுவில் அம்பேத்கரின் பெயர் இடம் பெற்றிருந்த போதிலும் அதனுடைய கூட்டம் எதிலும் அவர் கலந்துகொள்ள வில்லை. தீண்டாமை எதிர்ப்புக் கழகம் தன் உண்மையான கொள்கைகளிலிருந்து முற்றிலுமாக விலகிவிட்டதால், அம்பேத்கர், அதனுடனான தொடர்பைத் துண்டித்துக்கொண்டார். அதனுடைய செயற்குழுவில் தீண்டப்படாத வகுப்புத் தலைவர்களுக்கோ தொண்டர்களுக்கோ இடம் அளிக்கப் பெறாததால் அக்கழகத்தின் நேர்மையைப்பற்றிய அய்யம் தீண்டப்படாத வகுப்புத் தலைவர்க ளிடம் தோன்றியது. அக்கழகத்தின் நோக்கம் அம்பேத்கரின் இயக்கத்திற்கு உற்ற துணையாக இருப்பதன்று; அதற்கு மாறாக அவருடைய தலைமையை வீழ்த்துவதுதான் என்று பலரும் புரிந்துகொண்டனர். அதுமட்டுமின்றிக் காந்தி தீண்டாமை ஒழிப்பை, தீண்டப்படாதவர்களைக் கவருவதற்கென மேடைப் பிரச்சாரத்திற்



14.4.1950இல் அம்பேத்கர் பிறந்த நாளில் தில்லியில் அவருடைய வீட்டு நூலகத்தில்

காகப் பயன்படுத்துகிறாரே தவிர, உண்மையில் அதை வேலைத் திட்டமாக மேற்கொள்ளவில்லை என்றும் கருதினார்கள். மேலும் இரு தரப்பிரனருக்குமிடையே அடிப்படையிலேயே கருத்து வேறுபாடுகள் இருந்தன. கோயில் நுழைவுக் கிளர்ச்சி அளிக்கிற மகிழ்ச்சியிலும் கடவுளைப் பற்றிய சிந்தனையிலும் தீண்டப்படாத எளிய மக்கள் மூழ்கிவிடுவார்களோ என்று அஞ்சப்பட்டது. அதனால் அரசியல் பொருளாதாரச் சமத்துவத்தைப் பெறுவது என்ற குறிக்கோளிலிருந்து அவர்கள் திசை திருப்பப்பட்டு விடுவார்களோ என்றும் பயந்தனர். எனவே தான் இருதரப்பினருக் கும் இடையே பிளவு அதிகமாக இருந்தது.

அம்பேத்கரின் இந்த அறிக்கையைப்பற்றிப் பத்திரிக்கைகள் என்ன எழுதின? அம்பேத்கரின் அறிக்கையில் இருந்த கசப்பான உண்மைகளைக் கண்டு தேசியப் பத்திரிக்கைகள் அனைத்தும் சினங்கொண்டு அம்பேத்கர் மீது வெறுப்பை உமிழும் வேலையை மீண்டும் செய்யத்தொடங்கின. சில பத்திரிக்கைகள் அம்பேத்கரைப் பீமாசூரன் என்று கூறி ஓர் அரக்கனாகச் சித்தரித்தன. பம்பாயில் இருந்து வெளிவந்த ஒரு மராத்திய நாளேடு அவரைப் பிரம்ம தேவஸ்தாவாக உருவகப்படுத்தியது. ஒருவகையில் இப்பட்டம் அம்பேத்கரின் வாழ்க்கைக் குறிக்கோளை அப்படியே புலப்படுத்து வதாக உள்ளது என்று அம்பேத்கரின் சிந்தனை வழிப்பட்ட தோழர்கள் கூறினார்கள். இதே போன்று திலகரை இழிவுபடுத்தும் நோக்குடன் சிரோல் என்பவர் அவருக்கு 'இந்தியப் புயலின் தந்தை' என்று பட்டம் சூட்டினார். உண்மையில் இப்பட்டம் திலகரின் வாழ்க்கையையும் குறிக்கோளையும் எதிரொலிப்பதாக அமைந்தது. 'பிராமணாய' அல்லது 'பிராமணியம்' என்பது உயர்வு தாழ்வைக் கற்பிக்கும் கோட்பாட்டின் அடிப்படையில் அமைந்து, பார்ப்பனர்களால் தலைமை தாங்கி நடத்தப்படும் ஒரு சமூக அமைப்புத்தான் என்று அம்பேத்கர் தோழர்கள் கருதினார்கள். பிரம்ம தேவஸ்தா என்ற பாத்திரத்தை வகித்த அம்பேத்கர் சமத்துவம் அற்ற-நீதியற்ற இந்தச் சமூக அமைப்பு முறையை எதிர்த்தார். அவர் புரட்சியாளராகவும் நாட்டுப்பற்று மிக்கவராகவும் இருந்தார். சாதிகளின் உயர்வு தாழ்ச்சியை உடைத்துச் சமப்படுத்து வது, தீண்டாமையை ஒழிப்பது, கீழ்ச்சாதி மக்கள் சுரண்டப் படுவதைத் தடுப்பது ஆகியவற்றைப் பிரம்மதேவஸ்தா தன் கொள்கைகளாகக் கொண்டிருப்பதுபோல் அம்பேத்கரும் இவற் றைத் தன் குறிக்கோளாகக் கொண்டிருந்தார்.

காழ்ப்பேறிப்போன சனாதனிகளைப்பற்றிச் சொல்ல வேண்டிய தேயில்லை. ஆனால் அரைகுறையான சமூகச் சீர்திருத்தவாதிகளும் கூட ரங்கா அய்யரின் கோயில் நுழைவு மசோதாவை எதிர்த்தனர். இப்பிரச்சினையை இம்மசோதாவில் கண்டபடி கருத்துக் கணிப்பின் மூலம் தீர்மானிக்கப்படக்கூடாது என்று கூறினார்கள். சட்டம் மதம் தொடர்பானவற்றில் அரசு தலையிட இடந்தரக் கூடாது என்றனர். ரங்கா அய்யரின் மசோதாவைத் திரும்பப் பெறவேண்டும் என்று பண்டித மாளவியா மிகுந்த சினத்துடன் காந்திக்கு ஒரு தந்தி அனுப்பினார். கோயில் நிர்வாகத்தில் மறைமுகமாகக் கூட அரசு தலையிடுவது என்ற கொள்கையை எதிர்ப்பதாகவும், பம்பாயில் அளித்த உறுதிமொழிக்கு ஏற்ப இந்த மசோதா இருக்க வேண்டிய தேவையில்லை என்றும் அத்தந்தியில் மாளவியா குறிப்பிட்டிருந் தார். பூனா ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் தந்ததுதான் பம்பாய் உறுதிமொழி என்பதாகும்!

காந்தி-இராசாசி கூட்டு முயற்சியில் ஏதோ ஒரு தீய நோக்கம் இருப்பதாகப் பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் அய்யுற்றனர். தீண்டப் படாத மக்களைப் பிரிட்டிஷ் அரசுக்கு எதிராகக் கிளர்ந்தெழச் செய்வதுதான் அவர்களுடைய அரசியல் நோக்கமாக இருக்கும் என்று பிரிட்டானியர்கள் கருதினர். 'மதம் தொடர்பானவற்றில் பிரிட்டிஷ் அரசு தலையிடுவதில்லை' என்பது தெளிவாக அறிவிக் கப்பட்ட அரசின் கொள்கையாகும். அரசியல் ரீதியாக ஏற்கனவே எதிர்ப்புணர்வு கொண்டுள்ள மக்களின் வெறுப்பினை மேலும் வளர்ப்பதாகக் கோயில் நுழைவுப் பிரச்சினை ஆகிவிடுமோ என்று ஆட்சியாளர்கள் அஞ்சினர். இவ்வளவு காலமாகத் தீண்டாமை ஒழிப்பிற்காக எதுவும் செய்யாமல் இருந்துவிட்டு, இந்துத் தலைவர்கள் இப்போது சட்டத்தின்மூலம் தீண்டாமையை அகற்றிட முயல்வது என்பது உண்மையில் அரசுக்குத் தொல்லைதர வேண்டும் என்பதற்காகத்தான் என்று பிரிட்டிஷார் நினைத்தனர். ஆயினும் இறுதியில் இலண்டனில் இருந்த இந்தியா அலுவலகம் சட்டசபை உறுப்பினர்கள் கோயில் நுழைவுத் தீர்மானத்தைக் கொண்டு வருவதற்குக் கவர்னர் ஜெனரல் அனுமதிக்க வேண்டும் என்று அறிவுரை கூறியது. இது ஒரு அனைத்திந்தியப் பிரச்சினை; அதனால் மாகாண அடிப்படையில் இதன்மீது முடிவெடுக்க முடியாது என்று காரணங்காட்டி டாக்டர் சுப்பராயனும் நாராயணன் நம்பியாரும் (சென்னை மாகாணச் சட்டசபையில்) மசோதாவைக் கொண்டு வருவதற்கு வைஸ்ராய் அனுமதி அளிக்க மறுத்து விட்டார். ஆயினும் மற்றவர்கள் (மத்தியச் சட்டசபையில்)

மசோதாவைக் கொண்டு வருவதற்கு வைஸ்ராய் அனுமதி அளித்தார். ரங்கா அய்யர் கொண்டு வந்த மசோதாவைத் தவிர மற்ற அனைத்தும் விவாதத்துக்கு ஏற்கப்படவில்லை.

1933 மார்ச்சு 24ஆம் நாள் ரங்கா அய்யர் மத்தியச் சட்டசபையில் தன் மசோதாவை முன்மொழிந்தார். வைதிகத் தலைவர்கள் காங்கிரசு உறுப்பினர்களை உடந்தையாக்கிக் கொண்டு, அம்மசோதாவை நிறைவேற்ற வேண்டும் என்ற அக்கறையற்றிருந்த அரசின் போக்கினையும் துணையாகக் கொண்டு அம்மசோதாவின்பேரில் கடுந்தாக்குதல் தொடுத்தனர்; இதன் விளைவாக இம்மசோதா சில மாதங்கள் இழுத்தடிக்கப்பட்டு இறுதியில் கைவிடப்பட்டது.

V

கோயில் நுழைவுபற்றி அவருடைய அறிக்கையை வெளியிட்ட பின்னர் அம்பேத்கர் பன்னெடுங்காலமாக அவருடைய மக்களை ஆண்மையற்றவர்களாகவும் செயலற்றவர்களாகவும் ஆக்கி வைத்துக்கொண்டிருக்கும் ஆன்மீகப் போலிக் கருத்துகளுக்கும், மூட நம்பிக்கைகளுக்கும் எதிராகப் பிரச்சாரம் செய்யத் தொடங்கினார்.

கடவுளை வணங்குவதைவிட வாழ்க்கைக்கு ஆதாரமானவற்றைத் தேடுவதுதான் சிறந்தது என்று தீண்டப்படாத வகுப்பு மக்களின் சிந்தனையில் பதியுமாறு எடுத்துரைத்தார். தாணா மாவட்டத்தில் கசாரா என்ற இடத்தில் நடைபெற்ற தீண்டப்படாதவர் மாநாட்டில், 'இந்து மதத்தில் எமக்குச் சமஉரிமை வேண்டும். நால்வருணம் அடியோடு கல்லியெறியப்பட வேண்டும். உயர் சாதியினருக்குத் தனி உரிமைகளும் தாழ்ந்த சாதியினருக்கு வறுமையும் என்று ஆக்கி வைத்துள்ள கோட்பாடு இப்பொழுதே தொலைந்தொழிய வேண்டும். பிரிட்டிஷ் அரசு ஓர் அயல்நாட்டு அரசு. ஆகவே இந்த அரசின்கீழ் நம்முடைய வாழ்நிலையில் பெரிய அளவில் முன்னேற்றம் ஏற்படாது. உங்களுக்குள் வேற்றுமை வளர இடந்தராதீர்கள்; நம்முள் வேற்றுமை பாராட்டல் நம்மை அழித்துவிடும். உங்களைச் சுற்றியுள்ள நிலைமைகளையும் சூழல்களையும் உங்கள் கண்களாலேயே காணுங்கள்; ஆராய்ச்சி செய்யுங்கள். நீங்கள் பெறவிருக்கின்ற அரசியல் உரிமைகள் மகதிலும், நாசிக்கிலும் நீங்கள் போராடியதால் கிடைப்பனவாகும் என்பதை மறவாதீர்கள். இலண்டனில் தி டைம்ஸ் நாளேட்டில் ஒவ்வொரு நாளும் நாசிக்சத்தியாக்கிரகத்தைப் பற்றி வெளியான

செய்திகள் பிரிட்டானியர்களை இதில் ஆர்வங்கொள்ளச் செய்து அவர்களுக்கு உண்மையை உணர்த்தின'' என்று அம்பேத்கர் பேசினார்.

'நீங்கள் எதை இழந்தீர்களோ அதை மற்றவர்கள் ஆக்கிரமித்துக் கொண்டார்கள். நீங்கள் தாங்கிக்கொண்டிருக்கும் இழிவுகளின் மீதுதான் மற்றவர்களின் பெருமை நிலைகொண்டிருக்கிறது. வரு வாய்க்கு வழியின்றிப் பசியிலும் கொல்லும் வறுமையிலும் இழிவுகளிலும் நீங்கள் துன்புறுவது உங்களுடைய முற்பிறவியில் நீங்கள் செய்த பாவங்களின் விளைவாக விதிக்கப்பட்ட தண்டனை கள் அல்ல. உங்களுக்கு மேலே இருப்பவர்களின் துரோகமும் அடக்கி ஆளும் கொடுமையுமே இவற்றுக்குக் காரணங்களாகும். உங்களிடம் நிலம் இல்லை - ஏனெனில் மற்றவர்கள் உங்களிட மிருந்து அதைப் பறித்துக்கொண்டார்கள். நீங்கள் பதவிகளில் இல்லை - ஏனெனில் அவற்றை மற்றவர்கள் ஏகபோகமாக ஆக்கிக் கொண்டார்கள். எனவே விதியை நம்பாதீர்கள். உங்களுடைய வலிமையில் நம்பிக்கை வையுங்கள்' என்று கூறி அம்மாநாட்டில் எழுச்சியூட்டினார்.

1933 பிப்பிரவரி மாதத்தின் கடைசி வாரத்தில் பம்பாயில் மஸ்கானில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசினார். 'திலகருக்கு முன்பு ஏற்பட்டது போன்றதோர் நிலையில் நான் இருக்கிறேன். என்னு டைய எதிரிகள் எவ்வளவு காலத்திற்கு என்னைச் சபித்துக் கொண்டிருக்கிறார்களோ அவ்வளவு காலம் நான் உங்களுக்காகச் செய்யும் பணிகள் சரியான பாதையில் நியாயமான முறையில் செல்கின்றன என்பது உறுதி செய்யப்பட்டதாகிறது. கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளில், தீண்டாமையை ஒழித்திட இப்போது நாம் எடுத்துள்ளது போன்ற முயற்சி, ஒருபோதும் மேற்கொள்ளப் படவில்லை. சுயராச்சியக் கோரிக்கையும் இந்துக்களின் நலனும் தீண்டப்படாதவர்களின் ஆதரவு இல்லாவிட்டால் நிறைவேறாது என்பதை இப்போது தீண்டப்படாதவர்கள் தெளிவாகத் தெரிந்து கொண்டுள்ளனர். ஆகவே இந்துக்கள் உங்களுக்குச் செய்வது என்பது கருணையினாலோ அல்லது இரக்கத்தினாலோ அன்று. அவர்களுடைய சுயநலத்தைக் கணக்கில் கொண்டுதான் செயல்படு கிறார்கள். நம் இயக்கத்தின் நோக்கம் கொடிய ஆதிக்கத்தை, அநீதியை, போலியான மரபுகளை எதிர்த்துப் போராடுவதே யாகும்; தனிப்பட்ட உரிமைகளை உடைத்தெறிந்து துன்பத்தில் சிக்குண்டுள்ள நம் மக்களை விடுவிப்பதாகும். நாம் இடையறாது

போராடிக்கொண்டிருப்பதால்தான் நம் கோரிக்கைகள் அங்கீகரிக்கப் பட்டுள்ளன.''

''இறந்த விலங்குகளின் இறைச்சியை உண்ணாதீர்கள். அப்படி யானால் வேறு எதைத் தின்பது என்று என்னிடம் சிலர் கேட்கிறார்கள். கற்பு நெறியில் நிற்கும் ஒரு பெண்ணின் நிலையை நினைத்துப்பாருங்கள் என்பதே இவர்களுக்கு என் பதிலாகும். அவள் துன்பத்தில் உழன்றிட நேர்ந்தாலும் தன் வாழ்க்கையை உயர்த்திக்கொள்வதற்காக விலைமகளாக வாழ்ந்திட விரும்பு வதில்லை. தன்மானத்தைக் காப்பதற்காக எத்துணைத் துன்பத்தை யும் அவள் ஏற்றுக்கொள்கிறாள். இவ்வுலகில் சுயமரியாதையுடன் வாழக் கற்றுக்கொள்ளுங்கள். இவ்வுலகில் ஏதாவது சீரிய பணியைச் செய்ய வேண்டும் என்ற இலட்சிய வேட்கையை வளர்த்துக் கொள்ளுங்கள். எவர் இடையறாது வருந்தி முயற்சிக்கிறார்களோ அவர்கள்தான் வாழ்வில் உயர்வடைகிறார்கள். நாம் உயரவே முடியாது என்ற தப்பான எண்ணத்தை உங்களில் சிலர் கொண்டிருக்கிறீர்கள். நம்மால் ஒன்றும் செய்ய முடியாது என்று நினைத்த காலம் மலையேறிவிட்டது என்பதை நினைவிற் கொள்ளுங்கள். இப்போது புதிய வரலாறு தொடங்கிவிட்டது. இந்நாட்டின் அரசியலிலும் சட்டசபைகளிலும் நீங்கள் பங்கேற்றுச் செயல்படுவதன்மூலம் எண்ணியவற்றை எல்லாம் எண்ணியவாறு அடைய முடியும்.''

1933 மார்ச்சு மாதத்தின் முதல் கிழமையில் பம்பாயில் ஒரு பொதுக்கூட்டத்தில் அம்பேத்கருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. ''என்னுடைய பணியை, தகுதிகளைப்பற்றி நீங்கள் அளித்த வரவேற்பில் வானளாவப் புகழ்ந்திருக்கிறீர்கள். உங்களைப் போன்ற ஒரு சாதாரண மனிதனான என்னை நீங்கள் தெய்வமாக்கிட விரும்புகிறீர்கள். தலைவரை வழிபடும் இந்த எண்ணம் உங்களுக்குக் கேட்டினையே உண்டாக்கும். ஆகவே அந்த எண்ணத்தை முளையிலேயே கிள்ளி எறியுங்கள். இவ்வாறு ஒரு தனிமனிதனைக் கடவுளாக்குவதால் உங்களுடைய பாதுகாப்பை, நல்வாழ்வை அவரிடம் நம்பி ஒப்படைத்துவிடுகிறீர்கள். அதன் விளைவாக மற்றவரைச் சார்ந்து வாழும் இயல்பு உங்களிடம் வளருகிறது; உங்கள் கடமைகளைப் புறக்கணிக்கிறீர்கள். இது போன்ற எண்ணங்களுக்கு நீங்கள் இரையாகிவிட்டால், இந்த நாட்டிலும் சமுகத்திலும் உங்கள் வாழ்நிலையானது ஆற்றின் நீரோட்டத்தோடு மிதந்து செல்லும் மரக்கட்டைகளுக்கு ஒப்பாகி

விடும். உங்கள் போராட்டம் முழுமையாகத் தோல்வியடைந்து விடும்'' என்று எச்சரித்துத் தன்னம்பிக்கையூட்டி உரையாற்றினார்.

''புதிய வரலாற்றின் இக்கட்டத்தில் உங்களுக்கு வழங்கப்படும் அரசியல் உரிமைகளைப் புறக்கணிக்காதீர்கள். உங்கள் இனம் முழுவதும் இன்றுவரையில் மிதித்து நசுக்கப்பட்டே கிடந்தது. ஏனெனில் நம்மால் எதுவும் செய்யமுடியாது என்ற எண்ணத்தில் நீங்கள் அமிழ்ந்திருந்ததால்தான். தலைவரை வழிபடுதல், மனிதனைத் தெய்வமாக்குதல், கடமையைப் புறக்கணித்தல் போன்றவை இந்துச் சமூகத்தைச் சீரழித்துவிட்டன என்று நான் கூறுவேன். நம் நாட்டின் இழிந்த நிலைகளுக்கு இவைகளே காரணங்களாகும். மற்ற நாடுகளில் நாட்டிற்கு ஆபத்தும் நெருக்கடியும் ஏற்படும் வேளைகளில் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஒற்றுமையாகச் செயல்பட்டு நாட்டிற்கு ஏற்பட்ட இடர்களையும் அச்சத்தையும் அகற்றி அமைதியையும் செல்வச் செழிப்பையும் நிலைநாட்டுகின்றனர். ஆனால் நம்முடைய மதமோ மனிதனால் ஆவது ஒன்றுமில்லை என்று இடைவிடாமல் நம்முடைய செவிகளில் ஓதிக் கொண்டிருக்கிறது. இதனால் மனிதன் பயனற்ற மரக்கட்டை போன்றவனாகிவிட்டான். ஆகவே நாட்டிற்கு நெருக்கடி நேரும் போதெல்லாம் கடவுள் புதிய அவதாரமெடுத்து வந்து நம்மை ஆபத்திலிருந்து காப்பாற்றுவார் என்று கருதுகின்றோம். அதன் விளைவாகப் பகைவர்களுக்கு எதிராக ஒன்றுபட்டுப் போரிடாமல், இந்த வேலையைச் செய்வதற்காகக் கடவுள் இங்கு வந்து அவதரிப்பார் என்று காத்துக்கொண்டிருக்கிறோம்''[65]

''உங்கள் அடிமைத்தளையை நீங்கள்தான் அறுத்தெறிய வேண்டும். அடிமைத்தளையை அகற்றிடக் கடவுளையோ அல்லது தெய்வாம்சம் பொருந்திய மனிதனையோ எதிர்நோக்கி இருக்காதீர்கள். உங்கள் விடுதலை என்பது அரசியல் அதிகாரத்தைப் பெறுவதில் அடங்கியுள்ளது; புண்ணியத் தலங்களுக்குப் போவதிலோ விரதங்கள் இருப்பதிலோ அது இல்லை. சாஸ்திரங்களில் நீங்கள் வைத்துள்ள பக்தி உங்களை உங்கள் அடிமைத் தளையிலிருந்தும், இயலாமைகளிலிருந்தும், வறுமையிலிருந்தும் விடுவிக்காது. உங்களுடைய முன்னோர்கள் பல தலைமுறைகளாக இத்தகைய பக்தி வழியில் வாழ்ந்துவிட்டனர். ஆனால் அவர்களுடைய துன்பங்கள் மாயவில்லை. நைந்து நலிந்துபோன உங்கள் வாழ்வில் எவ்வகையிலும் எள்ளளவும் இன்றுவரை மாற்றம் ஏற்படவில்லை. உங்கள் முன்னோர்களைப் போலவே நீங்களும்

கந்தலையே உடுத்திக்கொண்டிருக்கிறீர்கள். அவர்களைப் போலவே வீசி எறியப்படும் மீந்த உணவில் உயிர்வாழ்ந்து கொண்டிருக்கிறீர் கள். அவர்களைப் போலவே அழுக்கேறிய சேரிகளில் பொத்தல் குடிசைகளில் மடிந்துகொண்டிருக்கிறீர்கள். அவர்களைப் போலவே நீங்களும் நோய்களுக்கு இரையாகிக் கோழிக் குஞ்சுகளைப்போல் செத்துக்கொண்டிருக்கிறீர்கள். உங்களுடைய மதவிரதங்களும், கடுமையான சடங்கு ஆசாரங்களும், தவ ஒழுக்கங்களும் உங்க ளைப் பட்டினியிலிருந்து மீட்கவில்லை.''

''உங்களுக்கு உணவு, உடை, உறையுள், கல்வி, மருத்துவம், மற்றும் வாழ்க்கைக்குத் தேவையான எல்லா வசதிகளையும் பெறுவதற்காக அனைத்து வாய்ப்புகளையும் அளிக்க வேண்டியது சட்டசபையின் அரசின் கடமையாகும். சட்டத்தை உருவாக்குதலும் அதை நடைமுறைப்படுத்தலும் உங்களுடைய ஒப்புதலோடும் உதவியுடனும் விருப்பத்தின் பேரிலும் நடைபெற வேண்டும். சுருக்கமாகச் சொன்னால், இவ்வுலக இன்பங்கள் அனைத்தையும் அளிக்க வல்லது அரசின் சட்டமேயாகும். ஆகவே சட்டத்தை உருவாக்கும் அதிகாரத்தைக் கைப்பற்றுங்கள். உங்களுடைய கவனத்தை நோன்பு, வழிபாடு, தவம் போன்றவற்றிலிருந்து முற்றிலும் திருப்பிச் சட்டத்தை உருவாக்கும் அதிகாரத்தைக் கைப்பற்றும் முயற்சியில் செலுத்த வேண்டியது உங்கள் கடமையா கும். அதில்தான் உங்களின் விடுதலை அடங்கியுள்ளது. அஃதொன்றே உங்கள் பட்டினிக்கு ஒரு முடிவு கட்டும். எண்ணிக்கையில் பெரும்பான்மையினராக இருப்பது மட்டும் போதாது என்பதை நினைவில் நிறுத்துங்கள். நீங்கள் எப்பொழுதும் விழிப்புடனும், வலிமையுடனும், சிறந்த கல்வியைப் பெற்றவர்களா கவும், சுயமரியாதை உடையவர்களாகவும் இருந்தால்தான் வெற் றியை ஈட்டி நிலைநாட்டிட முடியும்'' என்று அவருக்கு அளித்த வரவேற்புக்குப் பதிலளித்து அம்பேத்கர் உரையாற்றினார்.

VI

1933 மார்ச்சு மாத மத்தியில் இந்திய அரசியலமைப்புச் சட்டச் சீர்திருத்தங்கள்பற்றிய முன்மொழிவுகளைக்கொண்ட ஒரு வெள்ளை அறிக்கையைப் பிரிட்டிஷ் அரசு வெளியிட்டது. அந்த வெள்ளை அறிக்கை பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் கூட்டுக் குழுவால் ஆராயப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதை 'வெள்ளை மாளிகை ஆதிக்க ஆணவம்' என வர்ணித்தார்; 'அமைதியைக் கடுமையாகக் குலைக்கக் கூடியதாகும்' என்று

சுபாஷ் சந்திர போஸ் கூறினார்; டாக்டர் முஞ்சே 'அது ஒரு கறுப்பு அறிக்கை' என்றார்; 'கூட்டாட்சி முறைக்கு ஏற்பட்ட பின்னடைவு' என்று ஜெயகர் கருத்து கூறினார்.

அவ்வேளையில் வங்காள மாகாணச் சட்டசபையில் பூனா ஒப்பந்தத்தை இரத்து செய்யவேண்டும் என்ற தீர்மானம் நிறை வேற்றப்பட்டது. டைம்ஸ் ஆஃப் இந்தியா பத்திரிக்கைக்கு விடுத்த ஓர் அறிக்கையில் அம்பேத்கர் வங்காளத்தின் இந்துத் தலைவர் களின் போக்கினைச் சாடினார். பரேலிலும், இந்திய வணிகர் சங்க அலுவலகத்திலும் பூனா ஒப்பந்தத்தை உருவாக்குவதில் அதன் செயல் வரம்புகளைப்பற்றி என்னுடன் நடத்தப்பட்ட பேச்சு வார்த்தைகளில் வங்காளத்தின் இந்துத் தலைவர்கள் மிக முக்கிய மான பங்களிப்பைச் செய்தனர். ஆகவே பூனா ஒப்பந்தம் அவர்களுடைய ஒப்புதல் இல்லாமல் உருவாயிற்று என்று அவர்கள் இப்போது கூறுகின்ற கதை பொய்யானதாகும். பூனா ஒப்பந்த உருவாக்கத்தில் வங்காளத்தின் இந்துக்கள் பங்கேற்கவில்லை என்று என்.என். சர்க்கார் பிரிட்டிஷ் பிரதமருக்குத் தந்தி கொடுத்திருந்தார். அத்தந்தியைப்பற்றி பிரிட்டிஷ் பிரதமர் தனக்குத் தெரிவித்தார் என்ற செய்தியை அம்பேத்கர் வெளிப்படுத்தினார். 'பூனா ஒப்பந்தத்தின் உருவாக்கத்தில் வங்காளத்தின் இந்துத் தலைவர்கள் பங்கேற்க வில்லை என்றே வைத்துக்கொண்டாலும் அதற்காக அது வங்காளத் திற்குப் பொருந்தாது என்றாகிவிடாது என்பதை முதலில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். மேன்மைமிகு மன்னருடைய அரசின் வகுப்புவாரி ஒதுக்கீடு பற்றிய முடிவின் நான்காவது பத்தியில் இந்த ஒப்பந்தம் பிரிட்டிஷ் இந்தியா முழுமைக்கும் பொருந்தும் என்று கூறப்பட்டுள்ளது என்று பிரிட்டிஷ் பிரதமருக்கு அம்பேத்கர் எழுதிய பதிலில் சுட்டிக்காட்டினார். பூனா ஒப்பந்தம் வங்காளத்தின் தீண்டப்படாத தலைவர்களுக்கு நிறைவளிப்பதாக அமையவில்லை. வங்காளத்திற்கென ஒதுக்கப்பட்ட 30 இடங்களுக்குப் பதிலாக 50 இடங்கள் வேண்டும் என்று அவர்கள் வற்புறுத்தினார்கள். ஆனால் நான் தான் அவர்களைக் கட்டாயப்படுத்தி 30 இடங்களை ஏற்குமாறு செய்தேன். அதேபோன்று பம்பாய், பீகார், பஞ்சாப், அய்க்கிய மாகாணம், ஒரிசா முதலான மாகாணங்களின் தாழ்த்தப் பட்ட தலைவர்களுக்கும் பூனா ஒப்பந்தத்தின் பகுதிகள் நிறை வளிக்க வில்லை என்று அம்பேத்கர் கூறினார்.

வெள்ளை அறிக்கை அறிவிக்கப்பட்ட உடனேயே கூட்டுக் குழுவின் உறுப்பினர்களின் பெயர்களும் வெளியிடப்பட்டன.

பிரிட்டிஷ் இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்த பதினேழு பேரும், இந்தியச் சிற்றரசர்களின் சார்பில் ஏழு பேரும், பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலிருந்து முப்பத்து இரண்டு பேர்களும் கூட்டுக் குழுவில் இடம் பெற்றிருந்தனர். அம்பேத்கர், சாப்ரு, ஜெயகர், மிர்சா இஸ்மாயில், ஆகாகான், சர். அம்பேத்கர் அய்தரி ஆகியோர் அக் கூட்டுக் குழுவில் பணியாற்றிட அழைக்கப்பட்டிருந்தனர். இலண்டனுக்குப் புறப்படுவதற்கு முன் இரண்டு வார காலத்தில் அம்பேத்கர் பல வழியனுப்பு விழாக் கூட்டங்களிலும் பொதுக் கூட்டங்களிலும் கலந்துகொண்டு பேசினார். எரவாடா சிறையிலிருந்த காந்தியிடம் ஒரு முக்கியமான சந்திப்பை மேற்கொண்டார்.

அம்பேத்கரின் பேரும் புகழும் ஓங்கி வளர்ந்திருந்த போதிலும் சாதி இந்துக்கள் வட்டத்திலோ அவரைப்பற்றிய வெறுப்பு கடுகளவும் குறையவில்லை; அவரைச் சிறிய அளவில்கூடப் பாராட்டிட அவர்கள் முன்வரவில்லை. ஒடுக்கப்பட்ட மக்களின் உயர்வினுக்காக அருந்தொண்டாற்றியுள்ளதற்காக மேன்மைமிகு பரோடா மன்னருக்குப் பம்பாயில் ஒரு பாராட்டு விழா நடைபெறவிருந்தது. முதலில் அதற்கான வரவேற்புக் குழுவில் அம்பேத்கரின் பெயர் இடம்பெற்றிருந்தது. ஆனால் அவர் தீண்டப்படாதவர் என்ற காரணத்திற்காக இறுதியில் அவருடைய பெயர் நீக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. அம்பேத்கர் இப்போது அனைத்திந்தியத் தலைவராக உயர்ந்திருந்தார்; அவர் மிக உயர்ந்த கல்வியைப் பெற்றவர்களில் ஒருவராகத் திகழ்ந்தார்; பிரிட்டிஷ் பிரதமருடன், ஏன் பிரிட்டிஷ் பேரரசருடன் கூடச் சமமாக அமர்ந்துபேசிடும் அளவிற்கு அவருடைய தகுதி உயர்ந்திருந்தது. ஆனால் இந்தியாவின் அரைகுறை சீர்திருத்தவாதிகளோ அவர்களிடம் வேரூன்றி விட்டிருந்த சாதி வெறுப்பு காரணமாக இத்தகைய சால்புமிக்க அம்பேத்கருக்கு உரிய மரியாதை அளிக்க மறுத்தனர். எரவாடாவில் நேர்ந்த குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிக்குப் பின் பம்பாய் உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் அம்பேத்கருக்கு ஒரு பாராட்டு விழா நடத்த முன்வந்தனர். ஆனால் அவ்விழாவை நடத்திட ஏற்றதோர் இடம் கிடைக்காததால் அம்முயற்சி கைவிடப்பட்டது. குசராத்தின் புகழ்மிக்க வழக்கறிஞர் ஒருவர் அவருடைய மகளின் திருமணத்திற்கு அம்பேத்கரை அழைக்க விரும்பினார். அம்பேத்கர் தீண்டப்படாதவர் என்ற காரணத்தினால் அவருடைய விருப்பத்தையும் நிறைவேற்றிக்கொள்ள முடியவில்லை.[66]

தீண்டப்படாத வகுப்பு மாணவர்களின் தங்கும் விடுதியை 1933 எப்பிரல் 4ஆம் நாள் அம்பேத்கர் பார்க்கச் சென்றார். அப்போது அந்த விடுதி நாணா மாவட்டத்தில் ஆகாகான் மாளிகைக்கு மாற்றப்பட்டிருந்தது. அந்த மாளிகையை மாணவர் விடுதிக்காக அளித்திட வேண்டி ஆகாகானுக்கு அம்பேத்கர் தந்தி கொடுத்திருந்தார். ஆகாகானும் சில தொல்லைகளுக்குகிடையேதான் அம்பேத்கரின் வேண்டுகோளை நிறைவேற்றினார். அவ்விடுதியில் மாணவர்களிடம் அம்பேத்கர் பேசியபோது, அந்த விடுதியை முதலில் பன்வெலில் ஒரு யூதர் வீட்டில் தொடங்கிய போது, தீண்டப்படாதவர்களுக்கு வேறு எவரும் வீட்டை வாடகைக்கு விடமாட்டார்கள் என்பதை நன்கு புரிந்துகொண்ட அந்த வீட்டுக்கா ரர் வீட்டு வாடகையை உயர்த்திக் கேட்டதுபற்றி விளக்கிக் கூறினார். மிகவும் இழிவாக நடத்தப்பட்ட மற்றும் வசதியற்ற சூழ்நிலையில் அவர் காலத்தில் படிக்க நேர்ந்ததையும், இப்போது இந்த விடுதியில் வசதிகளுடன் நல்ல சூழ்நிலையில் இவர்கள் படிப்பதையும் ஒப்பிட்டுப் பார்க்குமாறு மாணவர்களைக் கேட்டுக் கொண்டார். கல்வி கற்கும் காலத்தில் அரசியலில் ஈடுபடாதீர்கள் என அறிவுரை புகன்றார். அவர்களுடைய சொல்லும் செயலும் மதிக்கத்தக்கவையாக உருவாக்கிக் கொள்ளப்பட வேண்டும் என்று மாணவர்களுக்கு அறிவுரை கூறினார். நல்ல பழக்கவழக்கங்களைத் தாமே வளர்த்துக்கொள்ளல், சுய உதவியைக் கற்றல் ஆகியவற்றின் இன்றியமையாமையை அவர்களுக்கு உணர்த்தினார். வாழ்க்கையில் ஒரு இலட்சியத்தை மேற்கொள்ளுங்கள்; அதை அடைவதற்காக விடாமுயற்சியுடன் உழைப்பை அளியுங்கள் என்று வலியுறுத்தி னார்.

அடுத்த கிழமையில் சோபேரேயில் தீண்டப்படாதவர் மாநாட் டில் அம்பேத்கர் உரையாற்றினார். ஏப்பிரல் 12ஆம் நாள் அம்பேத்கருக்கும், தீண்டப்படாதவர்களின் கல்விக்காகத் தொண் டாற்றிய பம்பாய் நகராட்சியின் பள்ளிகளின் குழுத் தலைவர் வி.ஜி. ராவ் அவர்களுக்கும் பாராட்டு விழா நடைபெற்றது. தாமோதர் அரங்கிற்குப் பின்புறம் இருந்த திடலில் அக்கூட்டம் நடந்தது. 'பேராசிரியராகி வாழ்நாள் முழுவதும் மாணவனாகவே இருக்கவேண்டும் என்றுதான் முதலில் நான் திட்டமிட்டிருந்தேன்; அந்த நோக்கத்திற்காக மாணவர் பருவத்திற்குரிய மகிழ்ச்சிகளை யெல்லாம் துறந்தேன்; ஆயிரக்கணக்கில் நூல்களை வாங்கினேன். ஆனால் என் நல்வாய்ப்பாகவோ, கெட்ட வாய்ப்பாகவோ அரசியல் புயலிடையே தூக்கி எறியப்பட்டுவிட்டேன்' என்று



குடியரசுத் தலைவர் இராசேந்திரப் பிரசாத், பிரதமர் நேரு மற்றும் அமைச்சர்களுடன் அம்பேத்கர் (31.1.1950)

அக்கூட்டத்தில் கூறினார். அன்றிரவு பம்பாய்க்கு அருகில் இருந்த குர்லா என்ற இடத்தில் ராவ்பகதூர் எஸ்.கே. போலே தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அம்பேத்கருக்கு ஒரு பணமுடிப்பு வழங்கப்பட்டது.

இதற்கிடையில் அம்பேத்கர் காந்தியைச் சந்திக்க விரும்பினார். இந்தியாவிற்கான புதிய அரசியல் சட்டம் வரவிருப்பதைக் கருத்தில் கொண்டுதீண்டப்படாதவகுப்பு வேட்பாளர்கள் குழுமுறைபற்றியும், தீண்டப்படாதவர்களுக்கான முதற்கட்டத் தேர்தல்பற்றியும் காந்தியின் கருத்தை அறிய விரும்பினார். இலண்டனுக்குப் புறப்படுவதற்கான ஏற்பாடுகளை விரைந்து செய்யவேண்டியவராக இருந்தார். இருப்பினும் பொதுக் கூட்டங்களில் பங்குகொள்வது, நீதிமன்றத்திற்குச் செல்வது, வழக்குகளை முடிக்க வேண்டி இருந்தமை, வீட்டிற்குத் தேவையானவற்றிற்கு ஏற்பாடு செய்வது, நூல்களைத் தேர்ந்தெடுப்பது போன்ற பல வேலைகளையும் அம்பேத்கர் கவனிக்க வேண்டியிருந்தது. மூர், ஷிண்டே, கெய்க் வாடு, சவான் ஆகியோருடன் அம்பேத்கர் ஏப்பிரல் 23ஆம் நாள் காந்தியைச் சந்திக்க எரவாடா சிறைக்குச் சென்றார். மாமரத்தின் கீழ் காந்தியும் அம்பேத்கரும் நாற்காலியில் அமர்ந்திருந்தனர். கையில் குறிப்பேடு, பென்சில் ஆகியவற்றுடன் மகாதேவ தேசாய் அவர்கள் இருவருக்கும் அருகில் அமர்ந்திருந்தார்.

குழு முறை மிகவும் செலவாகக் கூடியதாக இருக்கும் என்று காந்தியிடம் அம்பேத்கர் கூறினார். தீண்டப்படாதவர்கள் பொதுத் தொகுதியில் போட்டியிடுவதற்கு முதற்கட்டத் தேர்தலில் தீண்டப்படாதவர்களின் வாக்குகளில் குறைந்தது 25 விழுக்காடு வாக்கினைப் பெற்றிருக்க வேண்டும் என்று இருக்கிறதே என்று காந்தியிடம் கேட்டார். அதுபற்றி எண்ணிப்பார்த்து அவருடைய கருத்தை அம்பேத்கரின் இலண்டன் முகவரிக்குத் தெரிவிப்பதாகக் காந்தி சொன்னார். பிறகு காந்தி அம்பேத்கரிடம் பூங்கொத்து ஒன்றை அளித்தார். தீண்டாமை ஒழிப்புபற்றி காந்தி உரையாடலைத் திசை திருப்பினார். சனாதனிகள் தன்னை ஓர் அரக்கன் என்று தூற்றுகிறார்களே என்று காந்தி அம்பேத்கரிடம் கூறினார். சனாதனிகளிடமிருந்து வேறு எதை எதிர்பார்க்க முடியும் என்று காந்தியிடம் அம்பேத்கர் வினவினார். அதுதான் தக்க சமயம் என்று எண்ணித் தீண்டப்படாதவர்களின் தலைவரான உங்களுக்குக் கூடத் தீண்டாமை ஒழிப்புப் பற்றிய என்னுடைய பணி நிறைவளிப்பதாக இல்லையே என்று காந்தி சொன்னார். பேச்சின்

இறுதியில், இலண்டனிலிருந்து எப்போது திரும்புவீர்கள் என்று காந்தி அம்பேத்கரிடம் கேட்டார். 1933 ஆகஸ்டு மாத வாக்கில் திரும்பக் கூடும் என்று அம்பேத்கர் விடைபகர்ந்தார். அம்பேத்கரின் வெளிநாட்டுப்பயணம் வெற்றிபெற காந்தி வாழ்த்தினார். பேட்டி முடிந்தது.

இலண்டனுக்குப் புறப்படுவதற்கு முதல் நாள் ஏப்பிரல் 23 அன்று பம்பாய் தாமோதர் அரங்கில் பூனாவின் தீண்டப்படாத வகுப்பு மக்கள் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் உரையாற்றினார். இரண்டாவது வட்ட மேசை மாநாட்டின்போது அவர் எதையும் செய்ய முடியாத நிலையில் இருந்ததாகக் கூறினார். தீண்டப்படாத வர்களுக்கு எதையும் தர அப்போது மறுத்த காந்தியுடன் சேர்ந்து கொண்டு பிரிட்டிஷ் அரசின் ஆதரவை இழந்துவிட விரும்பவில்லை என்றார். தீண்டப்படாதவர்களின் உரிமைகளுக்கான அவருடைய போராட்டம் வெற்றியை நெருங்கிக்கொண்டிருக்கிற நிலையில் எந்த அளவிற்கு முடியுமோ அந்த அளவிற்கு அவருடைய ஆற்றல்கள் அனைத்தையும் திரட்டி இந்தியாவிற்கு அதிக அதிகாரங்களைப் பெற அவர் முயற்சிக்கப் போவதாகக் கூறினார். அக்கூட்டத்தின் முடிவில் அவரை வழியனுப்புவதற்கு வழக்கமாக வருவதுபோல் பெல்லார்டு துறைமுகத்திற்கு வரவேண்டாம் என்று அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். வழியனுப்பிட வருவதற்காக அவர்களு டைய ஒருநாள் ஊதியத்தை இழந்துவிடக்கூடாது என்று அறிவுறுத் தினார்.

கூட்டுக் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக 1933 ஏப்பிரல் 24ஆம் நாள் அம்பேத்கர் இலண்டனுக்குப் புறப்பட்டார்; மே 6ஆம் நாள் இலண்டனை அடைந்தார். காந்தி புதியதாகத் தொடங்கவிருந்த உண்ணாநோன்புபற்றிய விவரத்தைத் தெரிவிக்கு மாறு இலண்டனிலிருந்து அம்பேத்கர் கேட்டார். மே மாதம் 8ஆம் நாள் தன்னைத் தூய்மைப்படுத்திக்கொள்வதற்கெனக் காந்தி தொடங் கிய உண்ணாநோன்புபற்றி இலண்டன் பத்திரிக்கைகள் சில மிகச் சிறிய அளவில் மட்டுமே செய்தியை வெளியிட்டிருந்தன; சில ஏடுகள் அதுபற்றிய செய்தியையே வெளியிடவில்லை. ராஜ்போஜ் மற்றும் சிலருடைய நடவடிக்கைகள்பற்றிய செய்தியை இலண்டனி லிருந்து அடிக்கடி கேட்டுக்கொண்டேயிருந்தார்.

இலண்டனில் இருந்த நாட்களில் அம்பேத்கர் தலைவர் என்ற முறையிலும் அமைப்பாளர் என்ற நிலையிலும் அவருடைய முன்னணித் தோழர்களோடு இடைவிடாது நெருக்கமான தொடர்பு

கொண்டார். அவர்களுடைய இன்பங்களிலும் துன்பங்களிலும் பங்குகொண்டு அவர்களுக்கு வழிகாட்டியாக விளங்கினார். அவர்களுக்கு நெருக்கடி ஏற்பட்ட நேரங்களிலெல்லாம் அறிவுரை வழங்கினார். அவருடைய செயலாளர் சிவதார்க்கர் பம்பாய் நகராட்சிப் பள்ளிகள் குழுவின்கீழ்க் கல்விக் கண்காணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றார். பதவி உயர்வு பெற்றுப் புதிய பதவியில் அமர்ந்துள்ளதற்காகச் சிவதார்க்கருக்குத் தன்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்தார். அம்பேத்கர் இலண்டனில் இருந்தபோது தனக்குப் பேருதவி புரிந்த கெலுஸ்கருக்கு உதவிட முயன்றார். கெலுஸ்கர் அப்போது முதுமையடைந்திருந்தார். கெலுஸ்கருக்கு மாத உதவித் தொகை வழங்குமாறு வேண்டி பரோடா மன்னருக்கு அவருடைய திவான்மூலம் விண்ணப்பம் செய்தார். ஜனதா வார இதழின் ஆசிரியராக இருந்த பாஸ்கரராவ் கதிரேக்கருக்குத் தன் அச்சகத்தைக் கவனித்துக் கொள்ளுமாறு எழுதினார். 'நீங்கள் அனுபவித்துக்கொண்டிருக்கின்ற தொல்லைகளை நான் நன்கறிவேன். அதற்காக நான் வருந்துகின்றேன். மிகச் சிறிய தொகையை ஊதியமாகப் பெற்றுக்கொண்டு நீங்கள் உங்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு உழைப்பதற்காக நானும் மற்றவர்களும் உங்களுக்கு நன்றிக்கடன் பட்டுள்ளோம். இது வெறும் புகழ்ச்சியுரையன்று' என்று கதிரேக்கருக்கு அம்பேத்கர் ஒரு பாராட்டுக் கடிதம் எழுதினார்.

கதிரேக்கருக்கு எழுதிய அக்கடிதத்தில் அம்பேத்கர் இயக்கங்கள் பற்றிய பொதுவானதோர் உண்மையை அவருக்கு உணர்த்தினார். ஏழைகளுக்கான, நசுக்கப்பட்டவர்களுக்கான எல்லா இயக்கங்களும் தொடக்க நிலையில் சிறிய அளவில்தான் செயல்படமுடிந்தது. கடுமையான துன்பங்கள் நிறைந்த பாதையில் அவை பல முன்னேற்றங்களையும் பின்னடைவுகளையும் சந்திக்கின்றன. ஆனால் அவைகளின் இறுதி இலட்சியம் தோல்வியடையாமல் வெற்றி பெறுகின்றது என்பது என் அசைக்க முடியாத நம்பிக்கை என்று எழுதியிருந்தார். அவருடைய தோழர்களில் சிலர் அவர் சில உண்மைகளை மறைக்கிறார் என்று கூறுகின்ற குற்றச்சாட்டிற்கு, 'என் வாழ்க்கை முழுவதும் நீங்கள் அனைவரும் வெளிப்படையாகப் பார்க்கக்கூடியதாகத்தான் இருக்கிறது. திறந்த புத்தகம் போல் ஒவ்வொருவரும் காணக்கூடியதாக என் வாழ்க்கை இருப்பதுபோல் வேறு எந்தத் தலைவரின் வாழ்க்கையும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை' என்று பதில் எழுதினார். கதிரேக்கர் ஜனதா சிறப்பு மலரை உருவாக்கி வெளியிட்டதற்காகத் தன் மகிழ்ச்சியைத்

தெரிவித்தார். ஆனால் சிறப்பிதழ் முழுவதும் தனி ஒருவருடைய சிறப்பியல்புகளை விவரிப்பதாக மட்டுமே இருக்கக்கூடாது; அவர் எந்த நோக்கங்களுக்காகப் போராடுகிறாரோ அவற்றின் பல்வேறு கூறுகளை விளக்குவதாக அது இருக்க வேண்டும் என்றார்.

அவ்வேளையில் கவாய் மூலமாகச் சில வட்டாரங்களில் அம்பேத்கர் இஸ்லாம் மதத்திற்கு மாறப்போகிறார் என்ற செய்தி பரவியது. சுபேதார் சவத்கர் அதுபற்றி அம்பேத்கருக்கு ஒரு கடிதம் எழுதினார். அவர்களுடைய பிரச்சினையைத் தீர்க்காமல் அத்தகையதோர் முடிவை அவசரப்பட்டு அவர்களுடைய 'ராஜாவான' அம்பேத்கர் எடுக்கமாட்டார் என்று அவருடைய மக்கள் பொதுவாகக் கருதுகின்றனர் என்று சவத்கர் அம்மடலில் எழுதியிருந்தார். சவர்க்கரின் கடிதத்திற்கு இலண்டனிலிருந்து அம்பேத்கர் பதில் எழுதினார். 'மதமாற்றம்பற்றி கவாயுடன் நான் பேசினேன். அவரிடம் பல செய்திகள் குறித்துப் பேசிய சமயத்தில் இந்து மதத்திலிருந்து விலகி வேறோர் மதத்தைத் தழுவிட முடிவு செய்திருப்பதாகக் குறிப்பிட்டேன். ஆனால் ஒருபோதும் இஸ்லாம் மதத்தில் சேரமாட்டேன் என்றும் பௌத்த மதம்தான் எனக்கு ஈர்ப்புடையதாக இருக்கிறது என்றும் அவரிடம் கூறினேன். என்னுடைய மக்களின் விதியைத் தீர்மானிக்கும் வேலையில் நான் மூழ்கியுள்ளேன். என்னுடைய தனித்தன்மை, சுதந்திரம்பற்றிய நினைவே எனக்கில்லை. உங்களுடைய பிரச்சினையைத் தீர்க்காத வரையில் நான் வேறு பணிகளில் நாட்டம் கொள்ளமாட்டேன்' என்று எழுதியிருந்தார்.

கடும் உழைப்பு அவருடைய உடல் நலனைக் குலைக்கத் தொடங்கியது. அவருடைய கண்பார்வை பழுதடைந்தது. அதனால் அவர் மூக்குக் கண்ணாடியை மாற்றினார். அம்பேத்கர் எந்த நோயையும் தாங்கிக்கொண்டு எத்தகைய துன்பத்தையும் ஏற்றுக் கொள்வார்; ஆனால் அவருடைய கண்பார்வையை இழப்பது என்ற எண்ணத்தை அவரால் தாங்கிக்கொள்ள முடியாது. கவிஞர் மில்டனைப் போல் தான் குருடனாகிவிட்டால் எப்படியிருக்கும் என்று எண்ணி ஒருமுறை சிறு குழந்தையைப் போல் தேம்பித் தேம்பி அவர் அழுதார். கண்பார்வையை இழந்துவிட்டால் படிப்பது என்பது ஒரு முடிவுக்கு வந்துவிடும்; அப்போது வாழ்வே பயனற்றதாகிவிடும் என்று எண்ணி அவர் குமுறினார்.

கூட்டுக் குழுவின் இந்தியப் பிரதிநிதிகள் இலண்டனை அடைந்ததும், முறையாகக் கூடி, வெள்ளை அறிக்கையில் உள்ள

குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி ஒரு குழுவை அமைக்கும் பணியில் ஈடுபட்டனர். அக்கூட்டத்தில் டாக்டர் மூஞ்சே, டாக்டர் சச்சிதானந்த சின்ஹா, பண்டிட் நானக்சந்த் ஆகியோர் கலந்துகொண்டனர். அம்மூவரும் நாடாளுமன்றக் கூட்டுக்குழுவின் முன் சாட்சியம் அளிப்பதற்காக அங்கு வந்திருந்தனர். ஹரிசிங்கவுரும் மற்றவர் களும் அக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். வெறி கொண்டு போராட வேண்டிய நிலைக்குத் தான் தள்ளப்பட்டதால் தான் தனி வாக்காளர் தொகுதியைக் கேட்டதாக அம்பேத்கர் கூறினார். சாதி இந்துக்களின் மனிதத்தன்மையற்ற போக்கு மிகவும் மனக்கசப் படைந்து நம்பிகையிழக்கும் நிலைக்குத் தன்னை ஆளாக்கியது என்று அக்கூட்டத்தில் அம்பேத்கர் கூறினார். இந்துச் சமுதாயத்தை ஒன்றுதிரட்ட வேண்டுமென்று இந்துத் தலைவர்கள் உண்மையான ஈடுபாட்டுடன் முயற்சிப்பார்களானால் தீண்டப்படாத வகுப்பு மக்கள் நெஞ்சார்ந்த விருப்பத்துடன் அவர்களுடன் இணைவார்கள் எனக் குறிப்பிட்டார். டாக்டர் மூஞ்சே அம்பேத்கரின் அப்பேச்சி னைப் பாராட்டினார். இந்து மகாசபையின் தலைவர் பதவியை அம்பேத்கருக்கு அளித்திடவும் முன்வந்தார்.

இந்தியாவில் பூனா ஒப்பந்தத்திற்கு எதிரான போராட்டம் கடுஞ்சூடு பிடித்தது. பூனா ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் தந்த இந்துத் தலைவர்களில் ஏறக்குறைய எல்லோருமே இப்போது அதனை எதிர்ப்பவர்களாக மாறிவிட்டனர். காந்தியின் அரிஜன இயக்கத்தில் அவர்கள் காட்டிய ஆர்வம் வற்றிவிட்டது. பூனா ஒப்பந்தம் கையெழுத்தான அடுத்த நாள் தாகூர் பூனாவிற்கு வந்தார். பிரிட்டிஷ் அமைச்சரவையும் பூனா உடன்பாட்டை ஏற்றுக்கொண்டது என்ற இனிய செய்தியின் மகிழ்ச்சியில் மிதந்தவாறே பூனாவிற்கு வந்த தாகூர், காந்தியின் மார்பின் மீதிருந்த ஆடையில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டு களிப்படைந்த தாகூர் இப்பொழுது மாறுபட்ட தொனியில் பேசலானார். தில்லியில் இந்து மகாசபை மாநாட்டில் பூனா ஒப்பந்தத்திற்கு ஒப்புதல் தந்து தனித் தீர்மானம் இயற்றிய இந்து மகாசபைத் தலைவர்கள், பஞ்சாபில் தீண்டப்படாதவர் பிரச்சினை இல்லை என்று காரணங்காட்டி, பூனா ஒப்பந்தத்தில் ஒரு திருத்தத்தைச் செய்யவேண்டும் என்று கோரத் தலைப்பட்டனர்.

இலண்டனிலிருந்த இந்தியாவிற்கான அரசுச் செயலாளர் (Secretary of State for India) பூனா ஒப்பந்தம் அனைத்து இந்துத் தலைவர்களின் ஒப்புதலைப் பெற்றிருப்பதால் அது மாறாமல்

அப்படியே நீடிக்கிறது என்று தன்னைச் சந்திக்க வந்த இந்துப் பிரதிநிதிக் குழுவிடம் கூறினார். வங்காள மாகாண இந்துக்களின் நிலைப்பாட்டை ஆதரித்துத் தாகூர் அனுப்பிய ஒரு தந்தியைச் சர். என்.என். சர்க்கார் இலண்டனில் இந்தியாவிற்கான உதவிச் செயலாளரிடம் காட்டியபோது, இதுபற்றி இந்தியாவிற்கான செயலாளர் ஏற்கனவே கூறியதையே பதிலாக எடுத்துரைத்தார்.

1933 அக்டோபர் 3ஆம் நாள் கூட்டுக்குழு தன் கூட்டத்தை மீண்டும் தொடங்கியது. அக்கூட்டத்தில் டாக்டர் ஜெயகரும், சர். மனுபாயும் பிற்போக்குத் தனமான வெறிபிடித்த சில பிரிட்டிஷ் காரர்களைக் குறுக்கு விசாரணை செய்ய மறுத்துவிட்டனர். அக்டோபர் 23, 24 ஆகிய நாட்களில் வின்சன்ட் சர்ச்சில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார். அப்போது அம்பேத்கர் சர்ச்சிலுடன் கடுமையாக வாதிட நேர்ந்தது. சர்ச்சில் நாடாளுமன்றத்தில் பேசிய பேச்சின்மீதே கேள்விகளைக் கேட்டு சர்ச்சிலை அம்பேத்கர் திக்குமுக்காடச் செய்து வீழ்த்தினார். அம்பேத்கரின் தன்னம்பிக்கையும் அஞ்சாமையும் போர்க்குணமும் அவர் காலத்தில் வாழ்ந்த மாபெரும் ஏகாதிபத்திய அரசியல்வாதியான சர்ச்சிலுக்கு இணையானதாக இருந்தது என்று இதனால் நிருபணமாயிற்று.

கூட்டுக்குழு அத்னுடைய பணியை 1933 நவம்பரில் முடித்தது. அது வெள்ளை அறிக்கையை ஆதரித்தது. அதுவரை நடைபெற்ற விவாதங்களின் அடிப்படையில் அரசியல் சட்டத்தை வரைந்திட சிறிய குழு ஒன்றை அமைத்தது. பெரும்பாலான உறுப்பினர்கள் இந்தியாவிற்குத் திரும்பிவிட்டனர். இந்திய இராணுவத்தைப்பற்றி நூல் ஒன்றை எழுதுவதற்குத் தேவையான புள்ளி விவரங்களைத் திரட்டுவதில் இலண்டனில் அம்பேத்கர் தீவிரமாக ஈடுபட்டிருந்தார். இலண்டனிலுள்ள இந்தியா அலுவலகத்தில் இருந்த ஆவணங்களிலிருந்து இதற்குத் தேவையான பகுதிகளை எடுத்தெழுவதற்காக எழுத்தர்களை அமர்த்தினார்.

அம்பேத்கர் இலண்டனிலிருந்தபோது அடிக்கடி அவர் தங்கும் விடுதியை மாற்றிக்கொண்டேயிருந்தார் என்று தெரிகிறது. முதலில் இம்பீரியல் ஓட்டல், ரசல் சதுக்கம் என்ற முகவரியிலிருந்து வீட்டிற்குக் கடிதங்கள் வந்தன. ஆகஸ்டு வரையில் அங்குத் தங்கியிருந்தார். செப்டம்பரிலிருந்து மாண்டேகு ஓட்டல், ரசல் சதுக்கம் என்ற முகவரியிலிருந்து மடல்கள் எழுதினார். அக்டோபர் மாதத்தில் அதே பகுதியில் ப்ளூம்ஸ்பரி தெருவில் இருந்த பேலஸ் ஓட்டலிலிருந்து அவர் வீட்டிற்குக் கடிதங்கள் எழுதியிருக்கிறார்.

அவர் கடைசியாகத் தங்கியிருந்த இடத்திலிருந்து எழுதிய கடிதம் ஒன்றில் மகார்களுக்கும், சமார்களுக்கும் இடையே உள்ள தகராறு பற்றிக் குறிப்பிட்டுள்ளார். மகார் வகுப்பினர்தான் மகாராட்டிரத்தில் பெரும் எண்ணிக்கையில் உள்ளனர்; ஆனால் சமார் வகுப்பினர் மிகவும் சிறுபான்மையினராக இருக்கின்றனர். அம்பேத்கர் மகார்கள் சார்பாக நடுநிலை பிறழ்ந்து நடந்துகொள்கிறார் என்று சமார்கள் குற்றஞ்சாட்டினார்கள். ஆனால் இதில் சிறிதும் உண்மையில்லை. இந்துஸ்தானத்தில் எல்லா இடங்களிலும் இந்துக்கள் பெரும்பான் மையினராக இருக்கிறார்கள் என்று இந்துக்கள்மீது முஸ்லிம்கள் எப்பொழுதும் குற்றம் சாட்டுவதுபோல், அம்பேத்கரின் இயக்கத் தில் மகார்களே அதிக எண்ணிக்கையில் இருந்து ஆதிக்கம் செய்கின்றனர் என்று சமார்கள் கூறிவந்தனர். அவ்வாறு கூறும் குறுமதியாளரைக் கண்டு மனம் வருந்துவதாக அம்பேத்கர் எழுதினார். இத்தகைய முரண்பாடு சாதி இருக்கும்வரை நீடிக்கவே செய்யும் என்றார். இங்கே குறிப்பிட்ட ஒருவரைக் கைநழுவ விடுவதும் மற்றோர் இடத்தில் மற்றொருவரைப் புறக்கணித்து விடுவதும் இந்த நோயைத் தீர்க்காது. சாதிகள் ஒழியும்போதுதான் இந்தக் கசப்புகள் மறையும்.

அம்பேத்கர் இலண்டனிலிருந்து புறப்பட்டு விக்டோரியா கப்பலில் 1934 சனவரி 8ஆம் நாள் பம்பாயை அடைந்தார். அவர் மிகுந்த ஊக்கமுடனும் உற்சாகத்துடனும் காணப்பட்டார்; அவருடைய நண்பர்களிடமும் அன்பர்களிடமும் மகிழ்ந்து உரையா டினார். துறைமுகத்தில் அவர் அளித்த பேட்டியில் கூட்டுக்குழு வெள்ளை அறிக்கையில் முன்மொழியப்பட்டுள்ள கருத்துகளை மாற்றக்கூடும்; ஆயினும் மொத்தத்தில் அந்த அறிக்கையை அக்குழு ஏற்றுக்கொள்ளும் என்று அம்பேத்கர் கூறினார். 'நாமும் அதை ஏற்றுக்கொண்டு, பிறகு மேலும் உள்ள தேவைகளுக்காகப் போராட வேண்டும். கைகளைக் கட்டிக்கொண்டும் எதுவும் செய்யாமலும் நான் சும்மாயிருக்க மாட்டேன்' எனக்கூறினார். பூனா ஒப்பந்தத்தை மாற்றியமைக்க வேண்டும் என்று இந்துத் தலைவர்கள் போராடி வருவதுபற்றிக் குறிப்பிட்டு, அதைக் கூட்டுக்குழு ஏற்றுக்கொள் ளாது என்று சொன்னார். அவர்களுடைய வாக்கை அவர்களால் காப்பாற்ற முடியாதுபோனால் அது இந்துக்களுக்கு இழிவும் அவமானமும் ஆகும் என்று மேலும் விளக்கினார்.

அவருடைய எதிர்கால அரசியல் திட்டம்பற்றிக் கேட்டபோது, தற்சமயம் அரசியலில் ஆர்வமுடன் என் உள்ளம் ஈடுபட

விரும்பவில்லை என்றார். "இந்திய இராணுவம்" (Army in India) என்ற ஒரு நூலை எழுதிக்கொண்டிருந்தார். மற்றெதையும் விட அது அவரை மிகவும் கவர்ந்துநின்றது. அப்புத்தகம் எப்போது வெளியாகும் என்பதைக் கூற இயலாது என்றார்; ஆனால் விரைவில் வெளியாகும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்தார். இந்திய இராணுவத்தைப் பற்றிய அரசியலமைப்புச் சட்டக் கூறுகளை விளக்குவதே அந்நூலின் நோக்கமாக இருந்தது எனத் தெரிகிறது. ஆயினும் அந்நூல் முழுவதுமாக எழுதி முடிக்கப்படாமல் நின்று போய்விட்டதாகத் தெரிகிறது.

வைதிகத்தின் மேல் விழுந்த பேரிடி

கடந்த நான்கு ஆண்டுகளாக அம்பேத்கர் இந்தியாவிலும் இங்கிலாந்திலும் வருந்தி மேற்கொண்ட கடும்பணி அவருடைய உடல்நலனைப் பாதித்துவிட்டது. தொடர்ந்து பத்தாண்டுக் காலமாக இந்திய அரசியல்பற்றியும், இந்திய அரசியல் சட்டப்பிரச்சினைகள் பற்றியும் அவர் தொடர்ந்து படித்தமையும் விவாதங்களில் கலந்து கொண்டமையும் ஓய்விலா சமூகப்பணியும் சுயமரியாதை இயக்கத்தில் மேற்கொண்ட தளர்விலா முயற்சிகளும் தீண்டப்படாதாரின் அடிமை விலங்கை உடைத்திட இடைவிடாமல் போராடியமையும் எந்த ஒரு தலைவரின் உடல் நலனையும் கட்டாயம் குலைவுறவே செய்துவிடும். சோர்வறியா அவருடைய கட்டான உடல் இப்போது ஓய்வை நாடியது; அவருடைய நரம்புகளும் நாளங்களும் ஓய்வை வேண்டின. மூளைச் சோர்வினை அவரும் உணர்ந்தார். தனிமையில் ஓய்வெடுக்க வேண்டுமென்று அவர் எண்ணிடும் அளவிற்கு அவருடைய நாடி நரம்புகள் தளர்ச்சியடைந்திருந்தன. போர்டிக்குச் சென்று சில நாட்கள் தங்கினார். பிறகு மகாபலேஸ்வருக்குச் சென்றார். அங்கு ஆயுர்வேத மருத்துவம் செய்து கொண்டார். போர்டியில் இருந்தபோது அவரைச் சந்திக்க யாரும் வராததால் நன்கு ஓய்வெடுத்தார். போர்டியில் தன் சொந்தத்திற்குக் கட்ட விரும்பிய வீட்டின் வரைபடத்தைத் தீட்டுவதில் அவர் மூழ்கியிருந்தார். அவருடைய வீடுகட்டும் திட்டத்தைப்பற்றிக் கமலகாந்த் சித்ரேவுக்கு எழுதிவிட்டு, என் திட்டத்தைப்பற்றி அறிய நீங்கள் சிரிப்பீர்கள் என்றும் குறிப்பிட்டிருந்தார். ஆனால் அம்பேத்கரின் வீடுகட்டும் திட்டம் மிகவும் அருமையானதாக இருந்தது. நீச்சலடிக்கப் போவதாகவும் - கடல் எனக்கு மிக அருகில் உள்ளது; அது என்னை அழைக்கிறது; அதன் அழைப்பை ஏற்று நான் நீந்திடப் புறப்பட்டு விட்டேன் எனவும் சித்ரேவுக்கு எழுதினார்.

மிகச் சிறந்த தலைவர்களும் கடலைப் போன்றவர்கள். அவர்களுடைய செயலும் சிந்தனையும் போராட்டமும், கடலைப் போன்றே ஒருபோதும் ஓய்வதில்லை. அம்பேத்கரை நண்பர்கள் சந்திக்கும்போதெல்லாம் மருத்துவர்கள் விதித்த கட்டுப்பாடுகளை மறந்து கலந்துரையாடத் தொடங்கிவிடுவார். உடல்நலம் குன்றியிருப்பதுபற்றிய நினைவேயில்லாமல் அவருடைய நா இயந்திரம் போல் மணிக்கணக்கில் சுழன்றுகொண்டேயிருக்கும். இவ்வாறு

ஒய்வெடுத்துக்கொண்டிருந்த காலத்தில்தான் துறவு மனநிலை அவரிடம் குடிகொண்டிருந்தது. மொட்டைத் தலையுடனும் நீண்ட மேலாடையுடனும் அப்போது அவர் பூண்டிருந்த கோலம் அவரை ஒரு சந்நியாசியாகக் காட்டியது. துறவி போன்ற கோலத்தில் அம்பேத்கர் இருந்த படங்கள் மகாராட்டிரத்தில் சில பத்திரிக்கை களில் அச்சமயம் வெளியாயின.

சில நாட்கள் ஓய்வெடுத்தபின் அம்பேத்கர் பம்பாய்க்குத் திரும்பினார். உடனடியாகக் கவனிக்க வேண்டிய பணி ஏதும் அப்போது இல்லை. 'நெடுங்காலமாக நசுக்கப்பட்டுக் கிடந்த மக்களின் நிலை கட்டாயம் உயரும். வாக்களிக்கும் உரிமையை அவர்கள் பெறுவார்கள். அடக்கிவைக்கப்பட்டிருந்த அவர்களு டைய குரல்கள் விடுதலை பெற்று இந்த நாட்டின் சட்டங்களை உருவாக்குவதிலும் தனிமனிதனின் உரிமைகளை வரையறுப்பதி லும் பங்கேற்கும். சட்டசபைகளில் அவர்கள் தலைநிமிர்ந்து அமர்ந்திருப்பார்கள். அந்த இடங்களையெல்லாம் தொட்டுப் பார்க்கக்கூடாது என்று தடுத்துவிட்ட சாதியினருடன் விரைவில் சமமாக அவர்கள் வீற்றிருப்பார்கள். சாதி இந்துக்களுடன் சேர்ந்து தீண்டப்படாதவர்களும் முன்னேறுவதற்கான வாய்ப்பு கிடைக்கும்' என்றெல்லாம் அம்பேத்கர் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தார். தீண்டப்படாதவர்களுக்கு வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டிருப் பதுபற்றி அம்பேத்கர் மிகுந்த மனநிறைவு கொண்டார். துன்பந் தோய்ந்த அவர்களுடைய இரண்டாயிரம் ஆண்டுக்கால வரலாற்றில் அரசியல் ரீதியாக அவர்கள் ஓர் அங்கீகாரம் பெறுவது இதுவே முதன்முறையாகும்.

அரசியல் சட்ட வரைவை முன்மொழியும் மசோதா பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட இருந்தது. இதற்கிடையில் தான் என்ன செய்வது என்று எண்ணினார். ஆதலால் வழக்குரைஞர் தொழிலுக்குத் திரும்பினார். 1934 ஜூன் முதல் பம்பாய்ச் சட்டக்கல்லூரியில் பகுதிநேரப் பேராசிரியராகப் பணிபுரிந்தார். உண்மையில் அவரைப் போன்ற சீரிய தகுதியும் தேர்ந்த கல்வியும் சட்ட அனுபவமும் உடைய ஒருவரை அக்கல்லூரியின் தலைவரா கத்தான் நியமித்திருக்கவேண்டும். சில தலைவர்களின் சிறப்புகள் அவர்கள் நீண்டகாலம் கடுஞ்சோதனைகளுக்கும் கொடுந்துன்பங் களுக்கும் உள்ளான பிறகுதான் மதிக்கப்படுகின்றன என்பதை அவர்களுடைய போகூழ் என்பதா? வேறெப்படிச் சொல்லுவது? அறிவாற்றல் மிக்க வழக்கறிஞரான - அமைப்புகளைக் கட்டமைப்பதில் திறன்மிக்கவரான - பொதுமக்களின் செல்வாக்



அவுரங்காபாத்தில் கட்டுமான நிலையில் இருந்த கல்லூரியின் முன் அம்பேத்கர் (1953 சூலை 9)
அம்பேத்கரின் இடப்புறம் இருப்பவர் எஸ்.கே. போலே.

கைப் பெற்றவரான அம்பேத்கரை ஒரு சாதாரணப் பேராசிரியராகப் பெற்றிருப்பது பற்றிக் கல்லூரியின் நிர்வாகத்தினர் பெருமையடைய வுமில்லை; மகிழ்ச்சி கொள்ளவுமில்லை. அப்போது அம்பேத்கருக்கு வேறு முதன்மையான பணி ஏதும் இல்லாததால் இந்த வேலையை ஏற்றுக் கொள்ளலாம் என்று தோன்றியது. அதன்படியே பேராசிரி யர் பதவியை ஏற்றார்.

அவ்வேளையில் அம்பேத்கர் தன் இளமைக்காலம் முதல் கண்டுவந்த ஒரு கனவை நனவாக்கிடத் தொடங்கினார். ஆசியாவி லேயே, தன் நூலகத்தை நிறுவுவதற்காகவென்று ஒரு மாளிகையை எவரேனும் எழுப்பியிருப்பதாக நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர் களா? குறித்து வைத்துக் கொள்ளுங்கள் - அவர்தான் அம்பேத்கர்! அவருடைய நூல்களை வைப்பதற்காகவென்றே பம்பாய் தாதர் பகுதியில் இந்து காலனியில் ஒரு வீட்டைக் கட்டினார். பொதுவாக மற்ற வீடுகள் கட்டப்படுவது போன்ற அமைப்பில் இது கட்டப்படவில்லை. தாமஸ் ஜெஃபர்சனைப் போலவே, அம்பேத் கரும் கட்டடக்கலைபற்றிய பல நூல்களை வாங்கிப் படித்தார். அவருடைய விருப்பத்திற்கு ஏற்ற தன்மையில் வசதிகள் மிகுந்த தாயும் எழிலார்ந்த தோற்றம் உடையதாகவும் கட்டடத்தை உருவாக்கிட வேண்டுமென்ற பேரவா கொண்டிருந்தார். அதனால் முதலில் கட்டிய பகுதிகளில் சிலவற்றை இடித்துவிட்டு மீண்டும் தன் புதிய விருப்பத்திற்கு ஏற்ப மாற்றியமைத்தார். கட்டியதை இடித்துவிட்டு மாற்றியமைத்துக் கட்டுவது என்பது இவ்வாறு அடிக்கடி நடந்தது. இதைப் பார்த்துக்கொண்டிருந்த அவருடைய தோழர் ஒருவர், இலண்டன் மியூசியத்திலுள்ள சிறந்த வடிவமைப்பு டையது போன்ற சன்னலை வைக்கவேண்டும்; நியூயார்க்கில் உள்ள நூலகத்தில் இருப்பது போன்ற கதவினை வைக்க வேண்டும்; ஒரு அரண்மனையில் இருப்பது போன்ற கவிகை மாடமும் தோற்றமும் இருக்க வேண்டும் என்றெல்லாம் அம்பேத்கர் வற்புறுத்திக் கொண்டேயிருந்தால் இந்த வீடு கட்டி முடிக்கப்படா மலே நின்றுவிடும் என்று சொன்னார். ஆயினும் இறுதியில் வீடு கட்டி முடிக்கப்பட்டது. பலமுறை மாற்றியமைத்தபின் நூலகம் முறையாக அக்கட்டடத்தில் அமைக்கப்பட்டது. முற்கால, மற்றும் தற்கால அறிஞர்களும் சிந்தனையாளர்களும் எழுதிய நூல்களில் இருந்து அறிவைப் பெருக்கிக்கொள்ளவும், ஆய்வை மேற்கொள்ள வும், கருத்துகளைச் சரிபார்த்துக் கொள்ளவும் ஆன மிகச் சிறந்த வாய்ப்பு இப்போது அவருக்கு அமைந்துவிட்டது. அந்த வீட்டிற்கு 'ராஜகிரஹா' என்று பெயர் சூட்டப்பட்டது.

அந்த வீட்டின் கீழ்த்தளம் குடியிருப்புக்கென ஒதுக்கப்பட்டிருந்தது. எளிமையும், கடமை உணர்வும், மதபக்தியும் மிக்க டாக்டர் அம்பேத்கரின் துணைவியார் ரமாபாய் ராஜகிரஹத்தில் குடியேறினார். அவ்வில்லத்தில் குடியேறியபோது இனம்புரியாத உணர்ச்சி மேலீட்டுக்கும் மலைப்புக்கும் அவர் ஆளாகியிருந்தார். அவருடைய குடும்பத்தினராலும் மக்களாலும் 'சாகிப்' என்று அழைக்கப்பட்ட அம்பேத்கர் உலகில் வாழ்ந்த சிறந்த சிந்தனையாளர்கள், வாழ்வியல் நெறிகளை வகுத்த அறிஞர்கள் எழுதிய நூல்களுக்கிடையே உணவு கொள்ளுவதை வழக்கமாகக் கொண்டார்.

அரசியல் சட்டத்தை உருவாக்குதல், ஆக்கப்பணிகளைச் செய்தல் ஆகியவற்றை நோக்கி நாட்டின் கவனம் ஈர்க்கப்பட்டிருந்தது. காந்தியின் அகிம்சைப்புரட்சியின்பால் ஆர்வமற்ற நிலை தோன்றியிருந்தது. சில நாட்களுக்கு முன்தான் காந்தி சுயராச்சியக் கட்சியை மீண்டும் புதுப்பிக்க வேண்டும் என்பதை ஆதரித்திருந்தார்; அவருடைய போராட்டத்தை நிறுத்திவிட்டதாகவும் அறிவித்திருந்தார். 1934 மே மாதம் அனைத்திந்தியக் காங்கிரசின் செயற்குழு காந்தியின் அந்தப் புதிய போக்கினையும் மாற்றத்தையும் ஏற்றுக் கொண்டது. அரசு காங்கிரசுக் கட்சிக்கு விதித்திருந்த தடையை அடுத்தமாதம் (சூன்) நீக்கியது. எனவே காங்கிரசுத் தலைவர்கள் அவர்களுடைய மாகாண அமைப்புகளை மீண்டும் இயங்கச் செய்யும் பணியில் ஈடுபட்டனர்.

வெள்ளை அறிக்கையைக் கண்டனம் செய்ததுதான் காங்கிரசுத் தலைவர்கள் செய்த முதல் வேலையாகும். வகுப்புவாரி இட ஒதுக்கீட்டுத் தீர்ப்புபற்றியும் அவர்களுடைய அதிருப்தியைத் தெரிவித்தனர். இந்தியாவின் நலன்களுக்கும் ஒற்றுமைக்கும் அது ஆபத்தானது, இழுக்கானது என்று கருதினார்கள். காங்கிரசார் அத்துடன் நின்றுவிடவில்லை. வகுப்புவாரி ஒதுக்கீட்டுத் தீர்ப்புக்கு ஆதரவளிப்பதில் ஆர்வங் கொண்டிருந்த முஸ்லிம்லீக்கை நிறைவு செய்யக்கருதியும், வகுப்புவாரி இட ஒதுக்கீட்டுத் தீர்ப்பை விலக்கிக்கொள்ளவேண்டும் என்று பெருங்கூச்சலிட்டுக் கொண்டிருந்த ஆனே, மாளாவியா ஆகியோரின் வாயை அடைக்கவும் கருதி, சூலை மாதம் பம்பாயில் நடைபெற்ற செயற்குழுவில் காங்கிரசுக் கட்சி வகுப்புவாரித் தீர்ப்பை ஏற்கவும் இல்லை; எதிர்க்கவுமில்லை என்று காங்கிரசுத் தலைவர்கள் அறிவித்தார்கள். தீய நோக்கங் கொண்ட இரட்டை வேட முழக்கம் இந்தியாவின் மிகப்பெரிய கட்சியான - காந்தியின் தலைமையில் இயங்கிய

காங்கிரசில் புற்றுநோய் போல் தோன்றி வளர்ந்துகொண்டிருப்பதை இந்நிலைப்பாடு புலப்படுத்தியது.

அச்சமயத்தில் அரசு இந்திய மத்தியச் சட்டசபைக்குத் தேர்தல் நடத்திடத் திட்டமிட்டது. தேர்தல் நடைபெறுவதற்கு முன், நாகபுரியின் தீண்டப்படாத வகுப்பு மக்களின் தலைவரான கவாய், காந்தி பூனா ஒப்பந்தத்தைப்பற்றி அவருடைய கருத்தினை அறிவிக்க வேண்டும் என்றும், மத்தியச் சட்டசபைக்குத் தேர்தலில் போட்டியிடுவதற்காக அய்ந்து தீண்டப்படாத வகுப்பு வேட்பாளர் களை நிபந்தனைகள் எதுவும் விதிக்காமல் காங்கிரசுக் கட்சி வேட்பாளர்களாக ஏற்கவேண்டும் என்று கோரவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார். பூனா ஒப்பந்தத்தின் சமரசப் பேச்சின் போது அவர்களுக்கு (காந்தியால்) அளிக்கப்பட்ட உறுதிமொழியின் காரணமாகக் காங்கிரசார் தீண்டப்படாதவர்களின் தேர்தலில் தலை யிட மாட்டார்கள் என்று பல தீண்டப்படாத வகுப்புத் தலைவர்கள் எண்ணினர். சுயேச்சை வேட்பாளர்களாக நின்றால் தேர்தலில் வெற்றிபெற மாட்டோமோ என்ற நம்பிக்கையிழந்த நிலையில் காங்கிரசின் பக்கமிருந்த தீண்டப்படாத வகுப்புத் தலைவர்கள் இருந்தனர். ஆகவே அந்தப் பிரச்சினைபற்றி காங்கிரசுத் தலைவர் களின் கருத்தை அறிந்திட விழைந்தனர். ஆனால் பூனா ஒப்பந்தத்தில் தனக்குள்ள தார்மிக நம்பிக்கையைக் காந்தி மீண்டும் உறுதிசெய்தார். ஆதலால் கவாயின் யோசனையைப் புறக்கணித் தார். சாதி இந்துக்களிடம் இருந்து சாதாரண அடிப்படை உரிமைகளைப் பெறுவதற்காகக் கடுமையாகப் போராடிக்கொண்டி ருக்கும் தீண்டப்படாத வகுப்பு மக்களைக் கவாயின் யோசனை தேவையில்லாமல் அரசுடன் மோதுமாறு செய்துவிடும் என்று காந்தி காரணம் கூறினார்.

காந்தியின் கருத்தை அம்பேத்கர் மகிழ்ச்சியுடன் ஆதரித்தார். ஆகவே அடுத்து நடைபெறவுள்ள காங்கிரசுக் கட்சியின் மாநாட்டில் பூனா ஒப்பந்தத்திற்கு ஊறு ஏற்படாதவகையில் வகுப்புவாரித் தொகுதிபற்றிய தீர்ப்பின்மீது ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுமாறு காந்திக்கு அம்பேத்கர் வேண்டுகோள் விடுத்தார். காந்தி எடுத்துள்ள உறுதியான நிலைபாட்டினை அம்பேத்கர் பாராட்டினார். காந்திக்கு வேண்டுகோள் விடுத்தவர்களுக்கு அதில் அடங்கியுள்ள சிக்கல்கள் பற்றித் தெரியாது என்று அம்பேத்கர் கூறினார். பூனா ஒப்பந்தத்தை உருவாக்கி அந்தவேளை வரையில் அதைப் பாதுகாத்த அம்பேத்கர், பின்னாளில் அவரே அதனுடைய கடும் எதிரியாக ஆகப்போவது பற்றிக் கனவுகூடக் கண்டிருக்கமாட்டார்.

இதற்கிடையில் ஆர்.ஆர். பாக்லே முன்மொழிந்திருந்த அரிச னங்களின் இயலாமைகளை அகற்றும் மசோதாவைப் பம்பாய் மாகாணச் சட்டசபை நிராகரித்துவிட்டது. அரசும், அந்த மசோ தாவை எதிர்த்தவர்களும் அம்மசோதாவின் உள்ளடக்கமாக உள்ள கொள்கைகளை ஏற்றுக்கொள்வதாகக் கூறியபோதிலும், அம்ம சோதா பெருமளவில் தீய விளைவுகளையே ஏற்படுத்தும் என்று அஞ்சினர்.

அச்சமயத்தில் அம்பேத்கர் தௌலதாபாத்திற்கு அவருடைய தொழில் தொடர்பான வேலையாகச் சென்றிருந்தார். அங்கே அவரும் அவருடைய தோழர்களும் பழைய கோட்டையைப் பார்க்கச் சென்றனர். முகங்கழுவிக் கொள்வதற்காக அங்கிருந்த குளத்து நீரை அள்ளினர். அதைக்கண்ட முதியவரான ஒரு முகமதியர் அவர்களிடம் ஓடிவந்து தீண்டப்படாதவர்களே, குளத் தின் புனிதத்தைக் கெடுத்துவிட்டீர்களே என்று கத்தினார். முஸ்லிம்கள் பெருங்கூட்டமாகக் கூடிவிட்டனர்; பதற்றமான நிலை உருவாயிற்று. அக்கூட்டத்திற்குத் தலைவனாக இருந்தவரை நோக்கி அம்பேத்கர், 'தீண்டப்படாத ஒருவர் முஸ்லிமாக மாறியபின் இக்குளத்தில் தண்ணீர் எடுத்தால் நீங்கள் தடுப்பீர்களா? தண்ணீர் எடுப்பவரைத் தடுக்குமாறு உங்கள் மதம் போதித்துள்ளதா?' என்று கேள்வி கேட்டு வாயடைக்கச்செய்தார். ஆபத்தான ஓர் சூழ்நிலை தவிர்க்கப்பட்டது. ஆயினும் அக்கோட்டைப் பகுதியில் அம்பேத் கரும் அவருடைய நண்பர்களும் வழியில் உள்ள நீர்நிலைகளை மாசுபடுத்தாமல் இருப்பதற்காக ஆயுதம் தாங்கிய ஒரு முஸ்லிம் தடுப்புக்காவலாக அவர்களுடன் அனுப்பப்பட்டார்.

II

இதற்கிடையில் கூட்டுக்குழுவின் அறிக்கை வெளியிடப்பட் டது. 1934 டிசம்பர் 19ஆம் நாள் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் இந்திய மசோதா கொண்டுவரப்பட்டது. கூட்டுக்குழுவின் அறிக்கை யைப்பற்றித் தன் கருத்தை அம்பேத்கர் அறிவித்தார். சட்டமன்றத் திற்கு இரண்டாவது அவை (மேலவை) ஏற்படுத்தப்பட்டிருப்பதை யும், அதன் பிரதிநிதித்துவத் தன்மையையும் அம்பேத்கர் எதிர்த்தார். ஏனெனில் இந்த ஏற்பாடு காரணமாகப் பூனா ஒப்பந்தத்தின் நோக்கமே தோற்கடிக்கப்பட்டுவிடும் என்றார். மேலும் சட்டமன்ற இரண்டாவது அவைக்கான தேர்தலில் செல்வாக்கு மிக்க சாதி இந்துக்களை எதிர்த்து, தீண்டப்படாத வகுப்பு வேட்பாளர்கள் வெற்றி பெறுவதற்கான வாய்ப்பே இல்லை என்றார்.

இந்தியாவில் இருந்த மற்ற அரசியல் கட்சிகள் கூட்டுக் குழுவின் அறிக்கை பிற்போக்குத் தனமானது, நாட்டின் முன்னேற்றத்திற்குத் தடையாக நிற்கக் கூடியது எனக் கூறிக் கண்டித்தன..அம்பேத்கரும் அவர்களைப்போலவே கண்டிப்பதைக் கண்டு தேசியப் பத்திரிக்கைகள் களிப்பெய்தின. தீண்டப்படாத வகுப்பு மக்கள் நலக்காவலரான அம்பேத்கர் இந்தியாவில் ஒவ்வொரு அரசியல் நடவடிக்கையையும் அரசியல் சட்ட உருவாக்கத்தையும் ஊன்றிக் கவனித்து வந்தார். அவருடைய மக்களின் உரிமைகளுக்கு மிகச்சிறிய தீங்கு ஏற்படினும் அவரிடமிருந்து கடுங்குற்றச் சாட்டுக் கணைகள் பாய்ந்தன. அம்பேத்கர், சைமன் குழுவின் முன்பும், வட்டமேசை மாநாட்டிலும் மாகாணங்களில் சட்டமன்ற இரண்டாவது அவை ஏற்படுத்துவதை எதிர்த்திருந்தார்.

கூட்டுக்குழுவின் அறிக்கையின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட இந்திய மசோதாபற்றிய விவாதம் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருந்தது. இவ்விவாதம் பற்றிக் குறிப்பிடத்தக்க செய்தி ஒன்றுள்ளது. கன்சர்வேட்டிவ் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினராக ஏ. டபிள்யூ குட்மேன் தீண்டப்படாதவர்களுக்காக உணர்ச்சிமிக்க முறையில் வாதாடினார். மாகாணச் சட்டசபைகளிலும் மத்தியச் சட்டசபையிலும் தீண்டப்படாதவர்களுக்குப் போதிய அளவில் இடங்கள் ஒதுக்கப்படாமைக்கு அவர் எதிர்ப்பு தெரிவித்தார். வரவிருக்கின்ற சீர்திருத்தங்கள் பற்றிய அரசியல் விவாதங்கள் இந்தியாவை ஒரு மோசமான நிலைக்குத் திருப்பின. வகுப்புவாரித் தொகுதிபற்றிய தீர்ப்பை ஏற்கவுமில்லை, எதிர்க்கவுமில்லை என்று கூறியவாறு முஸ்லிம் லீக்கிற்கு ஆதரவான நிலையை, இக்கட்டான நிலையில் காங்கிரசுத் தலைவர்கள் கடைப்பிடித்துக்கொண்டிருந்தனர். எனவே வகுப்புவாரித் தொகுதித் தீர்ப்பை ஏற்கவேண்டும் என்று மத்தியச் சட்டசபையை வற்புறுத்திட ஜின்னாவை அவர்கள் அனுமதித்தனர்.

அம்பேத்கர் சட்டக்கல்லூரியில் பேராசிரியராகப் பணிபுரிந்துகொண்டே இந்த நடப்புகளையெல்லாம் கூர்ந்து கவனித்துவந்தார். பூனா ஒப்பந்தத்திற்கு எதிராகச் சாதி இந்துத் தலைவர்கள் தொடர்ந்து கூச்சலிட்டுக்கொண்டிருந்ததால் அம்பேத்கர் மிகவும் மனம் புண்பட்டிருந்தார். எனவே எதுவும் பேசாமல் அமைதியாக இருந்தார். அவருடைய துணைவியார் உடல் நலம் குன்றியிருந்தார். கடந்த பத்து ஆண்டுக்காலமாக அவருடைய குடும்ப உறுப்பினர்களைக் கவனித்திட அவருக்கு நேரத்தை ஒதுக்க முடியாமல் போயிற்று.

சிறிதளவு ஓய்வு கிடைக்கும்போதெல்லாம் அவர் வீட்டுப் பொறுப்புகளைக் கவனித்தார். நல்ல காற்றோட்டச் சூழல் மருந்தாகப் பயன்படும் எனக்கருதி ஒருமுறை அவருடைய துணைவியாரைத் தார்வாருக்கு அழைத்துச் சென்றார்; ஆனால் அவ்வம்மையாரின் உடல்நலனில் அதிக முன்னேற்றம் ஏற்பட வில்லை. நல்லியல்பும் கடமையைப் பேணும் பண்பும் கொண்ட துணைவியார் வாய்க்கப்பெற்றிருந்தும் அவருடைய இல்வாழ்க்கை மகிழ்ச்சி நிறைந்ததாக அமையவில்லை. மூன்று மகன்களையும் ஒரு மகளையும் பறிகொடுத்துவிட்டார். கூரிய சொற்றிறம் படைத்த அரசியல்வாதியாகவும், எதற்கும் அஞ்சாத நெஞ்சுரமும், ஈடுஎடுப் பற்ற துணிவும் கொண்டவராகவும் அவர் இருப்பினும் தன் மக்களின் இறப்பின் கொடிய அதிர்ச்சியை அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அதனால் குடும்பத்தின் பற்றுகளிலிருந்து தன்னைப் பெரிதும் தனிமைப்படுத்திக்கொண்டார்.

அவருடைய மனைவியின் நோய்த் துன்பத்தைப் போக்கிட அம்பேத்கர் அவரால் இயன்றதனைத்தையும் செய்தார். தீர்க்கக் கூடிய நோய்களை மட்டுமே மருந்தால் குணப்படுத்த முடிகிறது. அவருடைய துணைவியாருக்கிருந்த (wasting) நோயை மருந்தால் தீர்க்க முடியவில்லை. 1935 மே 27ஆம் நாள் அவர் வாழ்வில் பேரிடி விழுந்தது. அவர் மனைவியின் இறுதி மூச்சு அடங்கியது. ரமாபாய் மனநிறைவோடு வாழ்தல் என்பதற்கோர் இலக்கியம், பெருந்தன்மையின் இருப்பிடம், ஒழுக்கத்தின் உறைவிடம் எனத் திகழ்ந்தவர். அவருடைய மறைவுக்கு முன் ஆறு மாதங்களாக அவர் கடுமையாக நோயுடன் போராடினார்; அவர் உடல் நாளுக்கு நாள் மெலிந்து சோர்வுற்றது; அவருடைய கன்னங்கள் குழிவிழுந்து வெளிறிப்போயின; பெறற்கரிய அவருடைய மனவலிமையால் தான் இல்வாழ்வின் தொடக்க ஆண்டுகளில் வறுமையும் கவலை யும் மிக்க ஆதரவற்ற சூழ்நிலையில் ஏற்பட்ட இடர்ப்பாடுகளையும் இன்னல்களையும் அமைதியாக எதிர்கொண்டு அவரால் தாங்கிக் கொள்ள முடிந்தது. புதிய இல்லமான ராஜகிர்கத்தின் எழிலும் பெருமையும்கூட அவரை நடைமுறை வாழ்வியலின் உண்மைகளி லிருந்து பிரித்துக் கவர்ந்திட இயலவில்லை. வாழ்வின் பெரும்பகுதி யைக் கொல்லும் வறுமையிலேயே கழித்தவர் அவர். கணவனின் பாதுகாப்பையும், உடல் நலத்தையும்பற்றியே அல்லும் பகலும் காலமெல்லாம் கவலைப்பட்டவர் அவர்; அதற்காகக் கடுமையான மதநோன்புகளை மேற்கொண்டார்; சனிக்கிழமை தோறும் நீரும் உளுந்தும் தவிர வேறெதையும் உண்டதில்லை; அவருடைய

'சாகிப்'பிற்கு (கணவருக்கு) அருள் செய்யுமாறு ஆண்டவனைத் தொழுது வேண்டிக்கொண்டேயிருந்தார். அவருடைய கண்களும் கைகளும் சிந்தனைகளும் அவருடைய கணவருக்குத் தொண்டு செய்வதிலேயே பேரின்பமடைந்தன. மென்மையான இயல்பும் மெலிந்த உடல் அமைப்பும் கொண்ட அவர் ஆர்ந்தமைந்த பண்புகளும், அடக்கமான பேச்சும், நடைமுறை சார்ந்த கண்ணோட்டமும், தாராள மனப்பான்மையும் மிக்கவராக வாழ்ந்தார்.

ரமாபாய் மனங்கலங்கிய நேரங்களில், தன் கணவருக்கு ஓய்வே இல்லாத வகையில் பொதுக்கூட்டங்களையும் மாநாடுகளையும் அடிக்கடி ஏற்பாடு செய்கிறார்களே என்று மனம் நொந்து அவர்களை மனத்திலேயே கடிந்துகொள்வார். அதனால் தன் கணவருக்கு ஆபத்தான சூழ்நிலைகள் ஏற்படுகின்றனவே என்று அஞ்சினார். மக்களுக்கு அறிவூட்டவும் பிரச்சாரம் செய்யவும் இம்மண்ணில் இத்தனைக் கூட்டங்களை நடத்த வேண்டுமா? என்று புரியாமல் அவர் குழம்புவது உண்டு. அவருடைய கணவர் தன்னுடன் இல்லாமல் தனியே மனத்தவிப்புடன் நாட்களைக் கழிப்பது அவருக்கு அச்சமூட்டுவதாக இருந்தது. அதனால் ஒருநாள் அவர் மூட்டை முடிச்சுகளைக் கட்டியெடுத்துக்கொண்டு அம்பேத்கர் தலைமை தாங்கிப் பேசிடவுள்ள மாநாட்டிற்கு அழைத்துச் செல்லுங்கள் என்று கூறி அடம்பிடித்தார். அதனால் சிறிதளவு கடுமையான சச்சரவே நடந்தது. ரமாபாயினுடைய அச்சங்கள் அர்த்தமற்றவை என்று அம்பேத்கர் கூறினார்.

பந்தர்பூருக்கு ஆண்டுதோறும் இலட்சக்கணக்கான இந்து மதப் பக்தர்கள் சென்று வழிபடுவது வழக்கம். ஆழ்ந்த பக்தி கொண்டிருந்த ரமாபாயும் பந்தர்பூருக்குச் சென்றுவழிபட வேண்டுமென்று மிகவும் விரும்பினார். ஆனால் தீண்டப்படாத ஒரு இந்துப் பெண்மணி என்பதால் பந்தர்பூரில் ஒரு குறிப்பிட்ட தொலைவில் நின்று கொண்டுதான் அவர் வழிபட முடியும். அவ்வாறு செய்வதைச் சுயமரியாதைக்காரரான அம்பேத்கர் பொறுத்துக் கொள்ளமாட்டார் என்று ரமாபாய் எண்ணினார். கடவுளை அருகில் நின்று பார்த்துவழிபட விரும்பும் பக்தர்களைத் தடுக்கின்ற பந்தர்பூர் பெரிதா என்ன? நசுக்கப்பட்ட மக்களுக்கு நம்முடைய ஒழுக்கமான வாழ்க்கை, தன்னலமற்ற செயல், தூய்மையான தொண்டு ஆகியவற்றைச் செய்வதன்மூலம் நாம் மற்றோர் பந்தர்பூரை உருவாக்கிக் கொள்ளலாம் என்று தனக்குத்தானே கூறித் தேற்றிக் கொண்டார். கடவுளின் தூண்டுதலால் உள்ளொளி பெற்ற விழுமிய

உயர்ந்த உள்ளத்திலிருந்துதான் இத்தகைய சொற்கள் பிறக்க முடியும். இந்த உலகத்திற்கு இணையான புதியதோர் உலகை உருவாக்குவேன் என்று விசுவாமித்திரன் சூளுரைத்தபோதுதான் மனிதகுலம் தோன்றியது. கிருஷ்ணபகவானுக்குப் பின்பு இன் றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய இந்துவான சித்தார்த்த கௌதமர் புது நெறியை உருவாக்கினார். அதன் விளைவாகப் புதிய புண்ணியத் தலங்கள் உருவாயின. பெசிசினில் இருந்த டாக்டர் சதானந்கல்வங்கரைக் காண ஒருவார இறுதிநாளில் அம்பேத்கர் சென்றிருந்தார். ரமாபாய் இறப்பிற்கு முதல்நாள் இரவே திரும்பிவிட்டிருந்தார். நல்லவேளையாக ரமாபாய் அம்மையாரின் உயிர்பிரியும்போது அம்பேத்கர் அவர் அருகில் இருந்தார். ரமாபாயின் இறுதி ஊர்வலத்தில் செல்வர், வறியர், அறிஞர், பொதுமக்கள் என்று பலதரப்பினருமாகப் பத்தாயிரம் பேர் கலந்துகொண்டனர். கனத்த நெஞ்சோடும் சோர்ந்த கண்களோடும் ஆழ்ந்த துயரம் தோய்ந்த சிந்தனையோடும் அம்பேத்கர் இறுதி ஊர்வலத்தில் நடந்தார். இடுகாட்டிலிருந்து திரும்பியபின் தாளாத் துன்பத்தினால் தன் அறையில் தனிமையில் தவித்துக் கொண்டிருந் தர். சிறு குழந்தைபோல் ஒருவாரக்காலம் அவர் தவிப்பினால் அழுதார். அவருடைய நண்பர்களால் அவருக்கு ஆறுதல் கூறித் தேற்றிட முடியவில்லை. அவர் பெற்ற செல்வத்துக்கெல்லாம் தெய்வமாகத் திகழ்ந்த அவருடைய மானிடச்சமூகத் தொண்டில் உற்ற தோழியாக விளங்கிய - அவருடைய வாழ்க்கைப் பயணத்தில் உற்ற துணைவியாக இலங்கிய ரமாபாய் அம்மையார் வாழ்விலிருந்து நீங்கிவிட்டார். சிலையில் கடவுள் இருக்கிறது என்பதை நம்பாதவர், புரோகிதத்தின் பொய்மைகளைப் பொசுக்கிட வேண்டும் எனத் துடித்தவர் அம்பேத்கர். அவர் தெய்வத்திடம் அன்பு செலுத்தும் மனிதனை ஒத்த தன்மையிலான அன்பைத் தன் மனைவியின்பால் கொண்டிருந்தார். அதனால் அவருடைய மனைவியின் ஈமச்சடங்குகளை இந்துமத வழக்கப்படி அவர் மகனைக் கொண்டு செய்வித்தார். மகார் வகுப்பினருக்குப் புரோகிதம் செய்யும் சம்பூமுர் என்பவர்தான் ஈமச்சடங்குகளை நடத்தினார். பள்ளிப் பருவம் முதல் அம்பேத்கரின் தோழராக விளங்கியவர் இவர். மூடநம்பிக்கை உடைய எளிய மக்கள் சிலர் இதுபோன்ற பெருங்கேடு வரப்போகிறது என்பதன் அறிகுறியாகத் தான் ஒருவேளை, சில நாட்களுக்கு முன் 'சாகிப்' அவர்களை இவ்வுலக இன்பங்களிலிருந்து விடுபடச் செய்திட துறவுக்கோலம் பூணச் செய்ததோ! என்று பேசிக் கொண்டனர். மொட்டையடிக்கப் பட்ட தலை, சிந்தனையில் ஆழ்ந்திருந்த முகம், வெறுமை படர்ந்த

கண்கள், சலனமற்ற சூழ்நிலை, நீண்டகாவி உடை- இப்படிப்பட்ட தோற்றத்தில் அம்பேத்கரைக் கண்ட மக்கள் உலக வாழ்வை வெறுத்த ஒரு துறவிபோல் அவர் இருப்பதாகவே கருதினர்.

அவருடைய துயரத்தை ஆற்றிக்கொள்வதற்கான காலமும் அதிகமாக நீடிக்கவில்லை. ஏனெனில் பம்பாய் மாகாண அரசு 1935 சூன் முதல் நாள்தொட்டு அம்பேத்கரைச் சட்டக்கல்லூரியின் முதல்வராக நியமித்தது. இப்பதவியை ஏற்றுக்கொள்வதாக அவருடைய மனைவியின் இறப்புக்கு முன்பே அவர் ஒப்புக் கொண்டிருந்தார். 1935 சூன் மாத மத்தியிலிருந்து கல்லூரியின் நிர்வாகப் பொறுப்பினையும் அவரே கவனிக்க வேண்டியிருந்தது. நீதித் துறையின் ஏணிப்படிகளில் இம்முதல்வர் பதவி உயர்ந்தபடியாகக் கருதப்பட்டது. ஈடற்ற தகுதிபடைத்த அவருக்கு அப்பதவி பொருத்தமானதே! மகிழ்ச்சியான மனநிலையில் இருக்கும்போது ஒரு சமயம் அம்பேத்கர் நீதித்துறையில் உயர்ந்த இடத்தை அடையவேண்டும் என்ற தன் அவாவினை வெளியிட்டார். இப்போது அது அவருக்குக் கிட்டுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டிருந்தது. முதல்வர் பொறுப்பை ஏற்றுக் கொண்டவுடன் கல்லூரியின் செயல்பாட்டை மேலும் உயர்த்துவதற்கான சிறந்த சில யோசனைகளை அரசுக்குத் தெரிவித்தார்.

அம்பேத்கர் அரசியலிலிருந்து ஓய்வுபெறப் போகிறார் என்ற செய்தி 1935 சூலை மாதத்தில் வெளியாயிற்று. 'பாம்பே கிரானிக்கிள்' ஏட்டில் ஒரு பத்திரிகையாளர், அம்பேத்கர் பம்பாய் உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாகவோ அல்லது புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் கீழ் ஓர் அமைச்சராகவோ ஆகப் போகிறார் என்று எழுதினார். ஒத்துழையாமை இயக்கம் தொடங்கிய காலம் முதல் அரசு ஊழியத்தில் உழைப்பவர்கள் அரசியல் இயக்கங்களில் பங்கேற்கமாட்டேன் என்ற உறுதி மொழியைக் கொடுக்க வேண்டும் என்றுள்ளது என்பதையும் அப்பத்திரிக்கையாளர் குறிப்பிட்டிருந்தார். அரசு ஊழியத்தில் அமர்வதற்கான முதலாவது நிபந்தனை அது. அரசின் சட்டக்கல்லூரியின் முதல்வர் என்ற பதவியிலுள்ள அம்பேத்கரும் அரசு ஊழியர்தான்; ஆகவே அவர் அரசியலில் பங்கேற்க இயலாது; எனவே அரசியலிலிருந்து அவர் ஓய்வுபெற வேண்டியது தவிர்க்க முடியாததாகும் என்று அந்தப் பத்திரிக்கையாளர் எழுதினார். சர்ஃபெடரிக் சைகஸ் பம்பாய் கவர்னராக இருந்தபோது அம்பேத்கரை உயர்நீதிமன்ற நீதிபதியாக ஆக்கிட எடுக்கப்பட்ட முயற்சி எவ்வாறு வெற்றிபெறாமல் போய்விட்டது என்றும், தற்போது கவர்னராக உள்ள பிரபோர்னி பிரபு அவரை உயர்நீதிமன்ற நீதிபதியாக உயர்த்துவார் என்று

எதிர்பார்க்கப்படுவதாகவும் அந்தப் பத்திரிக்கையாளர் மேலும் எழுதியிருந்தார். ஒருமுறை அம்பேத்கருக்கு மாவட்ட நீதிபதி பதவி தரப்பட்டது என்றும், அதை ஏற்றுக்கொண்டால் பிறகு உயர்நீதி மன்ற நீதிபதி பதவியைத் தருவதாக அவருக்கு உறுதி கூறப்பட்டது என்றும் அம்பேத்கர் பின்னாளில் விவரித்தார்.

அம்பேத்கரின் மனநிலையை அறிதல் எளிதன்று. ஆயினும் அம்பேத்கரின் முன்னைய செயல்பாடுகளின் அனுபவத்திலிருந்து, மிக உயர்ந்த பதவி பெற்றிருந்த அவருக்கு உயர்நீதிமன்ற நீதிபதி என்ற பதவி மிக எளிய ஒன்றாகும் என்பதை உறுதியாகக் கூறமுடியும். சிங்கம் போன்ற அவருக்கு அப்பதவி சிறிய கூண்டு போன்றதாகும். அவ்வாறான பதவிகளை ஏற்றுக்கொண்டிருப்பாரா னால், தீண்டப்படாதவருக்கு ஒரு வாய்ப்பைத் தந்தால் அரசின் எந்த உயர் பதவியிலும் கடமைகளைத் திறம்படச் செய்வார்கள் என்பதை நிரூபிக்கவும், தங்களுடைய மக்களுக்கு ஒரு முன் மாதிரியாக விளங்கவும் அவர்களுக்கு ஊக்கமூட்டுவதற்காகவும் அப்பதவியை அம்பேத்கர் பயன்படுத்தியிருப்பார். உயர் நீதிபதி பதவி என்ன, பேரதிகாரம் படைத்த வைஸ்ராய் பதவியேயானா லும் என் விழுமிய வேட்கைக்கு ஈடாகாது என்று அம்பேத்கர் ஒருமுறை மற்றவர்களிடம் கூறியுள்ளார்.

அம்பேத்கர் அரசியலிலிருந்து விலகிவிடப் போகிறார் என்ற செய்தி அவருடைய முன்னணித் தோழர்களின் பேரில் ஏவப்பட்ட ஓர் அச்சுறுத்தலாக இருக்கக்கூடும். அதன்மூலம் அவர்கள் தமக்குள் இருந்த குழுமனப்பான்மையை மறந்து ஒன்றுபட அது உதவும் எனக் கருதப்பட்டிருக்கலாம். இந்திய மசோதா பிரிட்டிஷ் பாராளு மன்றத்தில் விவாதத்தில் இருந்தது. அம்பேத்கர் தன் மக்களுக்கு நன்மைகளைப் பெற்றுத்தரவேண்டும் என்ற எண்ணங் கொண்டிருந் ததால் புதிய அரசமைப்புச் சட்ட வரைவை உருவாக்குவதில் பணியாற்ற வேண்டும் என்ற உறுதிபூண்டிருந்தார். அவ்வாறு செயல்படுவதற்குத் தடையாக அமையக்கூடிய எதையும் செய்திட அவர் விரும்பவில்லை. இதற்கிடையில்தான் சட்டக்கல்லூரியின் முதல்வர் பதவியை ஏற்றார். இந்த இடைக்காலத்தில் அவருக்கு நீதிபதி பதவியைக் கொடுத்திருப்பினும் ஏற்றுக்கொண்டிருந்திருப் பார்.

III

இந்த இடைக்கால அமைதிக்குப்பின் திடீரென ஒரு புயல் கிளம்பியது. இந்திய வரலாற்றில் இதற்கு முன் இத்தகைய புயல்



பர்மாவில் 1954 நவம்பரில் நடைபெற்ற 'உலக பவுத்த மாநாட்டில்' பங்கு
பெற்றபோது டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர்களுடன்
பெரியார் ஈ வெ. ரா. அவர்கள் (3.12.1954)

தோன்றியதில்லை. அம்பேத்கர் தன்னுடைய மதமாற்றம் பற்றி 1935 அம்டோபர் மாதம் நடைபெறவுள்ள இயோலா (YEOLA) மாநாட்டில் அறிவிக்க எண்ணங் கொண்டிருக்கிறார் என்ற செய்தி பத்திரிக்கைகளில் வெளியாயிற்று. திடீர் என வெளியான செய்தி நல்லெண்ணங் கொண்ட பல இந்துத் தலைவர்ளை அதிர்ச்சியுற்று நடுங்கச் செய்தது. அச்செய்தி உண்மையானதுதானா என்று அம்பேத்கரின் நண்பர்களும் ஆர்வலர்களும் அவரிடம் கேட்டனர். கெல்கர், போபட்கர், சித்ரே, மட்டே[67] ஆகியோர் கூட்டாக அம்பேத்கருக்கு ஒரு கடிதம் எழுதினார்கள். சாதி இந்துக்களின் மனமாற்றத்திற்கு ஓர் உத்தரவாதமளிப்பதாகவும், மதமாற்றம் பற்றிய அறிவிப்பை அவர் கைவிட வேண்டும் என்றும் அம்பேத்கருடைய மனத்தைத் தொடும் வகையில் அக்கடிதத்தின் மூலம் வேண்டுகோள் விடுத்திருந்தனர். பேராசிரியர் எஸ்.எம். மட்டே ஒரு சனாதன சமூகச் சீர்திருத்தவாதி. பல ஆண்டுகளாகத் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு தீண்டப்படாதவர் களின் கல்விக்காக அருந்தொண்டாற்றியவர் அவர்.

இந்துச் சமூகத்தில் தன்னுடைய மக்களை இணைத்திட ஒரு வழி காணவேண்டுமென்று அம்பேத்கர் கடந்த பத்து ஆண்டுகளாக முயன்றும் பயன் ஏதும் ஏற்படவில்லை. பொது இடங்களிலிருந்து அம்மக்கள் தண்ணீர் எடுக்கும் உரிமையைப் பெறுவதற்கும், நல்ல உடை உடுத்தவும், உலோகத்தாலான பாத்திரங்களைப் பயன்படுத் தவும், கல்வி கற்பதற்கான உரிமையைப் பெறவும் அவர் போராடவேண்டியிருந்தது. மகத் போராட்டம் அவருடைய மனத்தை மிகவும் புண்படுத்தியிருந்தது. மகத் மாநாடு நடந்து முடிந்தவுடன் இந்து மதத்தைவிட்டு விலகிட வேண்டுமென்ற எண்ணம் அவரைக் கொண்டது. நீதிமன்றத்தில் சௌதார் குளம் வழக்கு விசாரணையில் இருந்தபோது, சாட்சியங்களை ஏற்பாடு செய்வதற்காக அம்பேத்கர் மகதிற்கு அடிக்கடி சென்றுவந்தார். ஒரு மழைக்காலத்தின்போது அவர் மகதிற்குச் செல்ல நேர்ந்தது; அவ்வழியில் ஆற்றில் பெருக்கெடுத்தோடிய வெள்ளம் அவரை அவ்வழியிலேயே இரண்டு நாட்கள் சிக்கித் தவிக்கும்படிச் செய்து விட்டது. அவருடைய கார் நின்றுவிட்ட இடத்திற்கு அருகில் தாழ்த்தப்பட்டவர் குடியிருப்பு எதுவும் இல்லை. எனவே உணவும் தங்குமிடமும் இன்றி அம்பேத்கர் இருக்க வேண்டியதாயிற்று தீண்டப்படாத வகுப்பைச் சார்ந்தவரான அவருக்கு எவரும் தங்க இடமோ உண்ண உணவோ தரமாட்டார்கள் என்பதால்!

மகதிலிருந்து அம்பேத்கர் திரும்பியதும் மகத் பயணத்தின் போது நேரிட்ட இன்னலைத் தாங்க முடியாத மனத் துன்பத்துடன், தன் அறையின் கதவை மூடிக்கொண்டு வெளியிலேயே வராமல் இருந்தார். அவருடைய நண்பர்களும், தோழர்களும் போலேவுடன் அவரிடம் வந்து மிகமுயன்று புண்பட்டிருந்த அவருடைய உணர்வுகளை ஆற்றுவித்தனர்.

உங்களை மனிதர்களாகக் கருதுகின்ற, இவ்வுலக வாழ்வில் நீங்கள் உயருவதற்கு வாய்ப்பளிக்கின்ற, மற்றவர்களைப் போல் செயல்பட, உண்ண, நடக்க, வாழச் சம உரிமை தருகின்ற எந்தவொரு மதத்தையும் நீங்கள் தழுவலாம் என்று 1929 இல் ஜல்கானில் பேசியபோது அம்பேத்கர் தீண்டப்படாதவர்களுக்கு அறிவுரை வழங்கினார். அதன் விளைவாகத் தீண்டப்படாதவர்கள் பன்னிரண்டு பேர் முகம்மதியராக மதம் மாறிவிட்டார்கள். பெருமளவில் முயற்சிகளை மேற்கொண்டு, அளவிடற்கரிய ஆற்றலைச் செலவிட்டு அழுத்தமான நம்பிக்கையுடன் அம்பேத்கர் கோயில் நுழைவுப் போராட்டத்தைத் தொடங்கினார். ஆனால் சாதி இந்துக்கள் உலகியல் அறிவுடனோ, அப்போராட்டத்தின் நியாயத்தைப் புரிந்துகொண்டோ, அதற்கு ஆதரவளிக்க முன்வர வில்லை. மாறாக அவர்கள் தீய எண்ணங்கொண்ட கல்நெஞ்சினராக வும், இரக்கமற்றவர்களாகவும் இருந்தனர். அவர்களிடம் இலேசான ஆரவார அசைவுணர்ச்சி ஏற்பட்டது என்பதற்குமேல் அவர்கள் எதுவும் செய்யவில்லை. அப்போது நாசிக்கிற்கு அருகில் இருந்த ஒரு கிராமத்தில் தீண்டப்படாத வகுப்பு இளைஞர்கள் சிலர் இஸ்லாத்தில் இணைவதென முடிவு செய்திருந்தனர். இன்னும் சிறிது காலம் பொறுத்திருங்கள்; இந்து மதத்தினரின் போக்கினை மாற்றி உயர்த்த முடிகிறதா என்று முயன்று பார்ப்போம் என்று அம்பேத்கர் அந்த இளைஞர்களுக்கு அறிவுரை கூறினார்.

இயோலாவில் மாநாடு நடைபெறுவதற்குச் சில நாட்களுக்கு முன், கடந்த பத்து ஆண்டுகளாகத் தாங்கள் நடத்தி வரும் போராட்டங்கள் உண்டாக்கிய விளைவுகள் மற்றும் வரவிருக்கின்ற அரசியல் சீர்திருத்தச் சட்டங்கள் ஆகியவற்றின் பின்னணியில் அரசியல் சமூக நிலைமைகளை ஆய்வு செய்வதே இயோலா மாநாட்டின் நோக்கம் என்று தீண்டப்படாத வகுப்பு மக்களின் தலைவர்கள் அறிவித்தார்கள். இயோலாவிற்குச் செல்லும் வழியில் நாசிக் சாலையில் 'மெக்வால்' வகுப்பினர் (தெருக்கூட்டுவோர்) ஏற்பாடு செய்திருந்த தேநீர் விருந்திலும், நாசிக்கில் நடந்த சமபந்தி விருந்திலும் அம்பேத்கர் கலந்துகொண்டார்.

1935 அக்டோபர் 13ஆம் நாள் இயோலாவில் நடைபெற்ற மாநாட்டில் கிட்டத்தட்ட பத்தாயிரம் பேர் கலந்துகொண்டனர். பல்வேறு கருத்து கொண்டிருந்த தீண்டப்படாதவர்களும் வந்திருந்த னர். அய்தராபாத் சமஸ்தானத்திலிருந்தும், மத்திய மாகாணங்களி லிருந்தும் பிரதிநிதிகள் வந்திருந்தனர். மாநாட்டின் அழைப்பினை ஏற்றுப் பெருந்திரளாக வருகை தந்திருப்பதையும் எதிர்காலத் திட்டத்தைத் தீட்டுவதில் அவர்கள் கொண்டுள்ள ஈடுபாட்டினையும் பற்றிக் குறிப்பிட்டுத் தன் மகிழ்ச்சியைத் தெரிவித்தார் வரவேற்புக் குழுவின் தலைவர் ரான்காம்பே. பார்ப்பனர்களுக்கு மட்டுமே நலஞ்செய்வதால் சீர்கெட்ட இந்து மதத்தைப் பார்ப்பன மதம் என்று கூறுவது மிகவும் சரியே என்று அவர் தன் வரவேற்புரையில் குறிப்பிட்டார்.

உணர்வுகளைப் பொங்கி எழச் செய்யும் வகையில் அம்பேத் கர் இயோலா மாநாட்டில் ஒன்றரை மணி நேரம் உரையாற்றினார். பொருளியல், சமூகம், கல்வி, அரசியல் போன்ற அனைத்துத்துறை களிலும் தீண்டப்படாத வகுப்பு மக்கள் அனுபவித்துவரும் இன்னல்களை விளக்கினார். இந்து மதத்தின்கீழ் அதன் ஓர் அங்கமாகத் தீண்டப்படாதவர்கள் இருந்த போதிலும் மிகக் குறைந்தபட்ச மனித உரிமைகளைப் பெறுவதற்குக்கூட அவர்கள் அளவிறந்த தியாகங்கள் செய்திருப்பதைச் சுட்டிக் காட்டினார். குறிப்பாகக் கலாராம் கோயில் நுழைவுப் போராட்டத்தில் கடந்த அய்ந்து ஆண்டுகளில் தீண்டப்படாதவர்களை மனிதத்தன்மையற்ற முறையில் நடத்தியதைப்பற்றி விளக்கிய பின்னர், இந்துச் சமூகத்தில் சாதாரணமான மனித உரிமைகளையும் சமத்துவத்தை யும் பெறுவதற்காக அவர்கள் நடத்திய போராட்டங்கள் எவ்வாறு பயன்தராமல் போயின என்பதைச் சுட்டிக்காட்டினார். சம உரிமையையும் சமத்துவத்தையும் பெறுவதற்காகச் செலவிடப் பட்ட நேரமும், பணமும், மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளும் பயன்தரவில்லையே என்பதை அறிந்து ஆழ்ந்து வருந்துவதாக அம்பேத்கர் கூறினார்.

நம்முடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்காக இறுதியானதோர் முடிவினை எடுக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது. நம்மைத் துன்புறுத்திக்கொண்டிருக்கும் சமூக இயலாமைகளும், நம்மை இழிவுபடுத்தும் அவமதிப்புகளும், நாம் இந்துச் சமூகத்தில் இருப்பதன் விளைவாக ஏற்படுகின்றன. இவ்வாறெல்லாம் இழிவு படுத்தும் இந்துமதத்தை விட்டு நீங்கி, சமத்துவத்தையும் சம

உரிமையையும் அளிக்கின்ற நியாயமாக நடத்தப்படுவதை உறுதி செய்கின்ற வேறோர் மதத்தைத் தழுவது சிறந்ததல்லவா? என்று அம்பேத்கர் வினவினார்.

இந்து மதத்துடனான தொடர்புகளை அறுத்தெறியுங்கள். வேறோர் மதத்தை ஏற்று ஆறுதலையும் சுயமரியாதையையும் பெறுங்கள். ஆனால் மற்றோர் மதத்தைத் தேர்வு செய்வதில் எச்சரிக்கையுடன் இருங்கள். அந்த மதம் எத்தகைய தயக்கமும் இல்லாமல், உங்களைச் சமத்துவமுடன் நடத்துமா, உங்களுக்குச் சம அந்தஸ்தையும் வாய்ப்பையும் அளிக்குமா என்பதை உறுதி செய்துகொள்ளுங்கள் என அம்பேத்கர் தன் பேச்சின் குரலை உயர்த்தி அவர்களுக்கு அறிவுரை கூறினார்.

அதன்பின் அம்பேத்கர் மதமாற்றம்பற்றிய தன் நிலைப் பாட்டை விளக்கினார். ''என் போதாத காலம் நான் இந்துத் தீண்டப்படாதவனாகப் பிறந்துவிட்டேன். இவ்வாறு நான் பிறக்க நேர்ந்ததைத் தடுப்பது என்பது என் சக்திக்கு அப்பாற்பட்டதாகும். ஆனால் இந்து மதத்தின் மரியாதை கெட்ட, இழிவுபடுத்தும் சூழ்நிலையின் கீழ் நான் வாழ மறுப்பது என்பது என் சக்திக்கு உட்பட்டதே ஆகும். ஆகவே நான் ஒரு இந்துவாகச் சாகமாட்டேன் என்று உங்களிடம் உறுதி கூறுகின்றேன்'' என இடி முழக்கம் செய்தார்.

அந்த உரையின் இறுதியில் கலாராம் கோயில் நுழைவுப் போராட்டத்தை நிறுத்திவிடுமாறு அவருடைய மக்களைக் கேட்டுக் கொண்டார். ஆணவம் மிக்க சாதி இந்துக்களுக்கு எதிராகக் கடந்த அய்ந்து ஆண்டுகளாகப் போராட்டம் நடத்தப்பட்டது; அப் போராட்டத்தைச் சாதி இந்துக்கள் பலவகையிலும் குலைத்துத் தங்களுடைய கொடூரமான உள்ளத்தைக் காட்டினார்கள்; ஆகவே இது போன்ற போராட்டங்களை நடத்துவது பயனற்றதாகும் எனக் கருத்துரைத்தார். இந்து மதத்திற்கு வெளியே தனித்த ஒரு வகுப்பாக - சுதந்திரமான குடிமக்களாக வாழுகின்ற சிறந்ததோர் எதிர்காலத்தை உருவாக்கிக்கொள்பவர்களாக வாழப் போகின்றோம் என்ற உங்களுடைய முடிவை மற்றவர்கள் அய்யத்திற்கிடமின்றி அறிந்திடும் வகையில் நீங்கள் நடந்து காட்டுங்கள் என்று அம்பேத்கர் அறிவுரை கூறினார்.

அம் மாநாட்டில் சாதி இந்துக்களின் போக்குபற்றி நீண்ட விவாதம் நடந்தது. தீண்டப்படாதவர்களின் சமூகச் சமத்துவக்

கோரிக்கையைச் சாதி இந்துக்கள் ஈவிரக்கமற்ற தன்மையிலும் நியாயத்திற்கு எதிரான தன்மையிலும் புறக்கணித்து வருவதால் தீண்டப்படாதவர்களைச் சாதி இந்துக்களின் நிலைக்கு உயர்த்த வேண்டும் என்றும், இவ்வாறு இருபிரிவினரையும் இணைத்து ஒன்றுபடுவதன்மூலம் வலிமைமிக்க சிறந்ததோர் சமூகத்தை உருவாக்க முடியும் என்றும் எண்ணிக்கடந்த பத்து ஆண்டுகளாக நடத்தி வந்த போராட்டத்தை நிறுத்திவிட வேண்டும் என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இனிப் பயன்தராத இத்தகைய முயற்சிகளில் உங்களுடைய சக்தியை வீணாக்காதீர்கள்; சமூகத்தில் உங்களுக்கென்று மதிப்பான ஓர் இடத்தைப் பெற, இந்துஸ்தானத்தில் உள்ள மற்ற சமூகங்களுக்குச் சரிநிகர் சமம் என்ற அடிப்படையில் சுதந்திரமான ஒரு நிலையைப் பெற்றிடப்பாடு படுங்கள் என்று அத்தீர்மானம் தீண்டப்படாத வகுப்பு மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தது.

இயோலா மாநாடு முடிவுற்றது. அம்பேத்கரின் வாழ்வில் இப்போது ஒரு புதிய அத்தியாயம் தொடங்கியது. இந்தப் புதிய அத்தியாயம் அதுவரையில் அவர் நடத்திய இயக்கத்தின் நோக்கங்களிலிருந்தும் கொள்கைகளிலிருந்தும் உறுதியான முறையில் மிகவும் மாறுபட்டிருந்தது.

இயோலா மாநாட்டில் அம்பேத்கர் ஆற்றிய உரை அனைத்துத் தரப்பினரையும், அரசியல் கட்சிகளையும், சமூக அமைப்புகளையும் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. மத மாற்றம் செய்வதில் ஈடுபட்டுள்ள மதத்தினர் மிகுந்த சமயப் பணி ஆர்வத்துடன் தம் காதுகளைத் தீட்டிக்கொண்டு பிறந்த மண்ணிலேயே மடியப் போகும் இந்து மதத்தின் சாவொலி எப்போது கேட்கும் என்று காத்திருந்தனர். முஸ்லிம் தலைவர்களின் பேராசை நிறைந்த பார்வை அம்பேத்கரின் மீது படர்ந்தது. கிறித்தவ மதத்தைப் பரப்புவதில் முனைந்திருந்தவர்களின் நெஞ்சங்களிலோ புதிய ஆசைகள் அநேகம் புரண்டன; கிறித்தவ மதத்திற்குப் புதிய வரவாக வரவுள்ள தீண்டப்படாதவர்கள் சேர்ந்துவிட்டால் வலிமையும் அதிகாரமும் ஆதரவும் இப்போதுள்ளதைவிடப் பெருகுமே என்பதை எண்ணி அவர்கள் ஏங்கினர். அம்பேத்கரின் மத மாற்ற அச்சுறுத்தல் நடைமுறைப்படுத்தப்பட்டால், இந்துக்களுக்கு நிலையான பாதிப்பை உண்டாக்கும் வகையில் சமூகத்தில் பெரிய சலனம் ஏற்படும் என்று ஆவலுடன் எதிர்பார்த்தனர். அம்பேத்கரைத் தம்பால் வயப்படுத்தித் தங்கள் வலிமையைப் பெருக்கிக்கொள்ள சீக்கியரும் விழைந்தனர்.

இந்தியாவில் அனைத்துத் தரப்பினரிடமிருந்தும் மற்றும் உலகின் பல பகுதிகளிலிருந்தும் அம்பேத்கரின் பம்பாய் முகவரிக்கு எண்ணற்ற கடிதங்களும் தந்திகளும் வந்து குவிந்தன. கிறித்தவ மதத் தலைவர்களும் இஸ்லாமிய மதத் தலைவர்களும் செயல்படத் தொடங்கினார் மத்தியச் சட்டசபை உறுப்பினராக இருந்த கே.எல். கௌபா என்ற முஸ்லிம் தலைவர் அம்பேத்கருக்கு ஒரு தந்தி அனுப்பியிருந்தார். இந்தியாவில் இருக்கின்ற முகம்மதியர்கள் அம்பேத்கரையும் தீண்டப்படாத வகுப்பு மக்களையும் மரியாதை யுடன் வரவேற்கக் காத்திருப்பதாகவும் அரசியல், சமுதாயம், பொருளாதாரம், மதம் ஆகிய அனைத்துத் துறைகளிலும் முழுமை யான சமத்துவமும் சம உரிமையும் உறுதியாக அளிக்கப்படும் என்றும் அத்தந்தியில் அவர் குறிப்பிட்டிருந்தார். அம்பேத்கர் இது தொடர்பாக முஸ்லிம்களுடன் பேச விரும்பினால் 1935 அக்டோபர் 20 ஆம் நாள் பதுவானில் நடைபெறும் முகம்மதியர் மாநாட்டிற்கு வருமாறு கௌபா தெரிவித்திருந்தார்.

பம்பாய் மெத்தாடிஸ்ட் எபிஸ்கோபல் சர்ச்சின் பாதிரி பிரின்டன் தோபர்ன் பட்லேவிடம் அம்பேத்கரின் மதமாற்ற அறிவிப்பு பற்றிக் கருத்து கேட்டபோது, கிறித்தவ மதத்தின் வாழ்க்கை நெறிப்படிப் பார்த்தால், கோடிக்கணக்கினராக உள்ள தீண்டப்படாத வகுப்பு மக்கள் அவர்களாக உணர்ந்து மனந்திருந்தி மதம் மாறிட முன்வந்தாலன்றி, இத்துணைப் பெரும் எண்ணிக்கையி னர் எவ்வாறு கிறித்தவர்களாக ஆக முடியும் என்பதை என்னால் எண்ணிப்பார்க்க முடியவில்லை என்று கூறினார். அம்பேத்கரின் அறிவிப்பைக் கிறித்துவச் சர்ச்சுகள் வரவேற்கும்; ஏனெனில் தீண்டப்படாத வகுப்பு மக்கள் வாழ்க்கையில் முன்னேறுவதை மத மாற்ற அறிவிப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது; அவர்களுக்குப் புதிய விடியல் ஒன்று காத்திருப்பதாகத் தெரிகிறது என்று அப்பாதிரி மேலும் கூறினார்.

பனாரஸ் மகாபோதி சங்கச் செயலாளரிடமிருந்து அம்பேத் கருக்கு மற்றொரு அழைப்புத் தந்தி வந்தது. ஆசியாவின் பெரும்பகுதியிலுள்ள மக்களால் பின்பற்றப்படும் பௌத்த மதத்தில் அம்பேத்கரும் அவருடைய மக்களும் சேருவதை மிகுந்த அன்புடன் வரவேற்கின்றோம் என்று அத்தந்தியில் குறிப்பிடப்பட் டிருந்தது. பௌத்தர்களுள் மத அல்லது சமூக இயலாமைகள் ஏதும் இல்லை; புதியதாகச் சேருபவர்களுக்கு சமஉரிமை உறுதி யாக வழங்கப்படும். எங்களுக்குள் சாதி வேறுபாடு கிடையாது.

எங்களுடைய தொண்டர்களை அங்கு அனுப்ப விரும்புகிறோம் என்று அந்தத் தந்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.[68]

புதுமையானதோர் அழைப்பு சகோதர வகுப்பான சீக்கியரிட மிருந்து வந்தது. பொற்கோயிலின் நிர்வாகக் குழுவின் துணைத் தலைவர் சர்தார் தலிப் சிங் தோபியா அம்பேத்கருக்கு அனுப்பிய தந்தியில், தீண்டப்படாதவர்களின் மதமாற்றக் கோரிக்கைகள் அனைத்தையும் சீக்கிய மதம் நிறைவு செய்கிறது என்று குறிப்பிட்டிருந்தார். 'சீக்கிய மதம் கடவுள் ஒருவரே என்கிற தத்துவத்தைக் கொண்டது; அன்பு செய்தலே அதன் அடிப்படை; அதைப் பின்பற்றுகின்ற அனைவரையும் அது சமமாக நடத்துகிறது என்று தலிப் சிங் மேலும் கூறியிருந்தார்.

'தீண்டாமை அதனுடைய கடைசிக் காலக்கட்டத்தில் இருக்கும் போது அம்பேத்கர் மதமாற்றம்பற்றி அறிவித்திருப்பது துரதிர்ஷ்ட மான நிகழ்ச்சியாகும்' என்று காந்தி கருத்துரைத்தார். 'கவிதாவிலும் மற்ற கிராமங்களிலும் தீண்டப்படாத வகுப்பு மக்கள் மீது இழைக்கப்பட்ட கொடுமைகள்பற்றி உயர்ந்த மனிதரும் சிறந்த கல்வியாளருமான அம்பேத்கர் போன்றவர்கள் சினங்கொள்வதை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால், நாம் விரும்புகின்ற போது வீட்டையோ அல்லது மேலாடையையோ மாற்றிக் கொள்வதுபோல் மதத்தை மாற்றிக்கொள்ள முடியாது. ஒருவரு டைய உடம்பைவிட அவருடைய ஆன்மாவில் மதம் இரண்டறக் கலந்துள்ளது. அம்பேத்கரும் அத்தீர்மானத்தை நிறைவேற்றியவர் களும் மதம் மாறுவதால் அவர்களின் நோக்கம் நிறைவேறாது என்று நான் உறுதியாக நம்புகின்றேன். ஏனெனில் சூதுவாது அறியாத-படிப்பறிவு இல்லாத கோடிக்கணக்கான அரிசனங்கள் அம்பேத்காரின் கருத்துக்குச் செவிசாய்க்கமாட்டார்கள். அவர்களு டைய முன்னோர்கள் பின்பற்றி வந்த மதத்தைக் கைவிட முயலும்போது, நல்லதானாலும் கெட்டதானாலும் அவர்களுடைய வாழ்க்கை சாதி இந்துக்களுடன் இறுக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ள நிலையை நினைத்துத் தம் முயற்சியைக் கைவிட்டுவிடுவார்கள்' என்று காந்தி மேலும் கூறினார்.

மராட்டியத்தில் தீண்டாமை ஒழிப்பில் புதியதொரு வரலாற் றைப் படைத்த சாவர்க்கர், தன்னை ஊர்க்கட்டுப்பாட்டில் வைத்திருந்த இரத்தினகிரியிலிருந்து தீண்டப்படாதவர்கள் மதம் மாறுவதற்கு எதிராக ஓர் எச்சரிக்கை விடுத்தார். மதம் மாறிய பிறகு இந்தியாவில் கிறித்தவ மதத்திலோ இஸ்லாம் மதத்திலோ

தீண்டப்படாதவர்கள் சமமாக நடத்தப்படுவதற்கான வாய்ப்பு இல்லை என்று சாவர்க்கர் கூறினார். இதற்கு எடுத்துக்காட்டாக திருவிதாங்கூரில் தீண்டப்படக்கூடிய கிறித்தவர்களுக்கும் தீண்டப்ப டாத கிறித்தவர்களுக்கும் இடையே நடைபெற்றுக்கொண்டிருந்த மோதல்களைச் சுட்டிக்காட்டினார்.

தீண்டாமை குலைவுற்றுக் குறைந்துகொண்டிருக்கிறது என்று கூறிய சாவர்க்கர் அப்பிரச்சினையை நடைமுறை அறிவு நோக்குடன் அணுகினார். 'எல்லா மதங்களிலும் அறிவுக்குப் பொருந்தாத சில கூறுகள் உள்ளன. அவை நம்பிக்கையின் அடிப்படையில் இருக்கின்றன. இந்த உண்மையை உணர்ந்திட வேண்டும். தற்போதுள்ள மதக்கோட்பாடுகள் அறிவுக்கோ அல்லது காரண காரிய ஆய்வுக்கோ பொருந்தாதவையாக இருக்கின்றன என்று கூறுபவர்கள், இதற்கு மாற்று என்று கருதி, அறிவற்ற தவறான கருத்துகளைத் தழுவி ஏற்றுக்கொள்ளக்கூடாது. ஆகவே அம்பேத் கர் தருக்கவியலுக்கும் அறிவுக்கும் தாராளமாக இடந்தருகின்ற கோட்பாடுகளை அடித்தளமாகக் கொண்டிருக்கின்ற ஒரு மதத்தைத் தழுவிட வேண்டும்' என்று துணிவாகவும் கனிவாகவும் சாவர்க்கர் தன் கருத்தைக் கூறினார். தீண்டப்படாதவர்கள் முற்போக்கு இந்துக்களின் துணையுடன் சமத்துவத்தைப் பெறுவதற்காகத் தீவிரமாகப் போராடி, சமூகத்தில் அவர்களை உயர்த்திக்கொள்ள வேண்டும் என்று மேலும் சாவர்க்கர் கூறினார்.

காங்கிரசுக் கட்சியின் தலைவர் டாக்டர் இராஜேந்திரப் பிரசாத் இயோலா மாநாட்டுத் தீர்மானம் வருந்துதற்குரியதாகும் என்று குறிப்பிட்டார். அத்தீர்மானத்திற்குப் பின்பலமாக உள்ள தீண்டப் படாதவர்களின் சினம் நியாயமானதேயாயினும் சமூகச் சீர்திருத்தக் காரர்களின் பணியைச் சிக்கலாக்கக்கூடிய எதையும் தீண்டப்படாத வர்கள் செய்யக்கூடாது; அவ்வாறு செய்தால் அது துரதிஷ்டமான தாகும் என்று இராசேந்திரப்பிரசாத் மேலும் கூறினார்.

பம்பாய்த் தீண்டப்படாத வகுப்புத் தலைவரான தியோருக்கர், வேறோர் மதத்தைத் தழுவுவது பயன்தராது; ஏனெனில் இந்து மதத்தில் தீண்டப்படாதவர்கள் இழிந்த நிலையினராக இருக்கின்ற நிலைமாறி, அவர்கள் மற்றோர் மதத்தில் தீண்டப்படாதவர்களாக இருக்க வேண்டிய நிலை ஏற்படும். மேலும் எல்லா மதங்களிலும் சமத்துவமின்மை ஏதோ ஒரு வடிவில் இருந்துகொண்டிருக்கிறது என்று கூறினார். பம்பாயின் தீண்டப்படாதவர்களின் மற்றொரு தலைவரான கஜ்ரோல்கர் மதமாற்றத் தீர்மானத்தை அறிந்து

அதிர்ச்சியடைந்தார். தீண்டப்படாதவர்கள் நம்பிக்கையற்றுக்கிடந்த காலத்தில் அவர்களை வழிநடத்திய அம்பேத்கர், 'மதம் மாறுங்கள்' என்று கூறியிருப்பதைவிட அவர்களைத் 'தற்கொலை செய்து கொள்ளுங்கள்' என்று சொல்லியிருக்கலாம்; இச்செய்தி என் போன்றோரின் உள்ளத்தைப் பிளப்பதாகும் என்று கஜ்ரோல்கர் கூறினார். மதம் என்பது விற்பது, வாங்குவது போன்ற வணிகப்பொருளன்று என்று அவர் மேலும் கருத்துரைத்தார். சாதி இந்துக்களுக்குச் சமமான நிலையைப் பெற்றிட முயற்சிக்க வேண்டும் என்று நாகபுரியின் தீண்டப்படாத வகுப்புத் தலைவர் ஒருவர் கூறினார். அம்பேத்கரின் தோழரான டாக்டர் சோலங்கியும் இதே போன்ற கருத்தைத் தெரிவித்தார். இளைய தலைமுறையினர் இந்நிலையை மேலும் சீர் செய்வார்கள்; தீண்டப்படாத வகுப்பு மக்கள் தங்கள் வாழ்வின் முன்னேற்றத்திற்கும், சமத்துவமாக நடத்தப்படுவதற்கும் தொடர்ந்து போராட வேண்டும் என்று சோலங்கி அறிவுறுத்தினார்.

அம்பேத்கரின் மதமாற்ற அறிவிப்பு வட்டமேசை மாநாட்டில் அவருடன் பிரதிநிதியாக இருந்த இரட்டைமலை சீனிவாசனுக்கு இடிவிழுந்ததுபோல் இருந்தது. தீண்டப்படாதவர்கள் மதம் மாறிச் சென்றால், தீண்டப்படாத வகுப்பு மக்கள் எண்ணிக்கை குறைந்துவி டும்; அத்தகைய நிலை ஆதிக்கவாதிகளுக்கு ஊக்கந்தருவதாக அமைந்துவிடும் என்று சீனிவாசன் சொன்னார். தீண்டப்படாதவர் கள் அவர்களுடைய உரிமைக்காகவும் கொள்கைகளுக்காகவும் தொடர்ந்து போராட வேண்டும்; இதுவே ஆண்மையானதுமாகும். இதுதான் தீண்டப்படாதவர்களுக்கு வழங்கக்கூடிய சிறந்தஅறிவுரை யாகும் என்று சீனிவாசன் குறிப்பிட்டார்.[69]


IV

மதமாற்ற அறிவிப்பைப் போல், அம்பேத்கரின் வேறு எந்த அறிவிப்பும், உலக அளவில் இந்த அளவிற்குக் கவனத்தை ஈர்க்கவில்லை. ஆம், உண்மையில் அது ஒடுக்கப்பட்ட - நசுக்கப்பட்ட மக்களின் அச்சம் நிறைந்த வேதனையின் இறுதி ஓலமாக இருந்தது. துன்பப்படும் ஆன்மாவிடமிருந்து வீறிட்டெ ழுந்த அலறல் ஒலி அது. அவர்களுடைய சொல்லொணாத் துன்பங்களையும் கூனிக்குறுகச்செய்த அவமானங்களையும் பன் னெடுங்காலமாகச் சுரண்டப்பட்டு மனிதத்தன்மை அற்ற முறையில் நடத்தப்பட்ட இழிவுகளையும் மதமாற்ற அறிவிப்பின் வாயிலாக அவர்கள் வெளிப்படுத்தினார்கள். புயல் வேகத்திலான நியாயமான

சீற்றத்துடன் அம்பேத்கர் மதமாற்றம் எனும் வலிமையான ஆயுதத்தை, தான் இழைத்த துன்பத்திற்கு வருந்தாத கொடிய இந்துச் சமூகத்தின் மீது ஏவினார். திருப்பித்தாக்கும் நிலைக்கு அம்பேத்கரைப் பத்திரிக்கைகள் தள்ளியதால் மேலும் தீவிரமாகப் போராடினார். தன் ஆயுதங்களை ஏவி அப்போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தினார் அம்பேத்கர்.

அம்பேத்கரின் மதமாற்றம்பற்றிய இயோலா மாநாட்டின் உரைமீது காந்தி தெரிவித்திருந்த கருத்துகளை அசோசியேட்ட் பிரஸ் செய்தி நிறுவனத்தார் அம்பேத்கரிடம் சுட்டிக் காட்டிக்கேட்ட போது, 'இந்து மதத்தைவிட்டு நீங்குவது என்று நாங்கள் எடுத்துள்ள முடிவு அதன் விளைவை அறிந்தே எடுக்கப்பட்ட ஒன்றாகும். ஏனெனில் சமத்துவமின்மையே இந்து மதத்தின் அடித்தளமாக இருக்கிறது. தீண்டப்படாத வகுப்புமக்கள் ஒரு போதும் முழுமையான மனித உரிமைகளைப் பெறமுடியாத தன்மையில்தான் இந்து மதத்தின் கோட்பாடுகள் உள்ளன. காந்தி சொல்லியிருப்பதைப் போல மதம் மனிதனுக்குத் தேவைதான். ஆனால் முன்னோர்களின் மதத்தைக் கைவிடாமல் பின்பற்ற வேண்டும் என்று காந்தி கூறுவதை ஏற்க முடியாது. ஒரு மனிதனை ஒழுக்க நெறியில் செலுத்த வல்லதாகவும் அவனுடைய முன்னேற்றத்திற்கும் நல்வாழ்விற்கும் ஊற்றாகவும் மதம் எவ்வாறு விளங்க வேண்டும் என்று அவன் கொண்டிருக்கின்ற கருத்துக்கு நேர் எதிராக உள்ள மதத்தை எப்படி ஏற்றுக் கொள்ளமுடியும்? மதம் மாறுவது என்று நான் உறுதியான முடிவினை எடுத்துவிட்டேன். இம்முடிவு நல்லது என்று மக்கள் கருதினால் என்னைப் பின்தொடரட்டும்; இல்லாவிட்டால் என்னைப் பின்பற்ற வேண்டாம். மக்கள் என்னைப் பின்பற்றுகிறார்களா, இல்லையா என்பதைப்பற்றி நான் கவலைப்படவில்லை' என்று தன் நிலைபாட்டைத் தெளிவாக விளக்கினார்.

இரக்கமற்ற மனிதனையே வெறுக்கின்ற வைதிக இந்துக்கள் தீண்டப்படாத வகுப்பு மக்களின் மதமாற்ற முடிவினைப்பற்றிச் சிறிதும் கவலைப்படவில்லை. வளரவளர அவர்களின் மனங்கள் சிந்தனை வளமிழந்து கிழடுதட்டிப் போனவை. அதனால் சிந்திக்கும் ஆற்றலையும் தெளிவாகக் காணுகின்ற அறிவையும் அவர்கள் இழந்துவிட்டனர். படிப்பறிவு இல்லாத பார்ப்பனர் அல்லாதவர்களோ மதம் தொடர்பானவைபற்றிக் கவலைப்பட வேண்டியது பார்ப்பனர்களின் பொறுப்பு என்று எண்ணினர். இயோலா



வெவ்வேறு தோற்றத்தில் அம்பேத்கர்

மாநாட்டு மதமாற்ற முடிவுகுறித்து வைதிக இந்துக்கள் மகிழ்ச்சி அடைந்து பெருமூச்செறிந்தனர். நாசிக் வைதிக இந்துக்கள் கடந்த அய்ந்து ஆண்டுகளாகத் தீண்டப்படாத வகுப்பு மக்கள் நடத்திய கோயில் நுழைவுப் போராட்டத்தினால் அலைக்கழிக்கப்பட்டிருந்த மையால், தீண்டப்படாத வகுப்பு மக்கள் இந்து மதத்தைவிட்டு விலகுவதென்று எடுத்துள்ள முடிவினை அறிந்து மிகவும் மகிழ்ந்தனர். தீண்டப்படாதவர்களின் மதமாற்ற அறிவிப்பைக் காரணமாகக் காட்டி வைதிக இந்துக்கள் நாசிக்கில் உள்ள கோயில் தேரை ஊர்வலமாக இழுத்துச் செல்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சியாளருக்கு விண்ணப்பம் செய்தனர். தீண்டப்படாத வகுப்புத் தலைவர்களின் மதமாற்ற முடிவு அவர்களுடைய கோரிக்கைகளுக்கு ஆதரவளித்து வந்தசிற்றரசர்களை ஏமாற்றத்திற்குள்ளாக்கி இருக்கக்கூடும் அம்பேத்கர் இந்து மதத்தை விட்டு விலகினால் அவரைக் கொலை செய்துவிடுவதாகக் கூறி சிந்து மாகாண இந்து ஒருவர் இரத்தத்தினால் எழுதிய மிரட்டல் கடிதத்தை அனுப்பியிருந்தார்[70].

இயோலாவிலிருந்து அம்பேத்கர் பம்பாய்க்குத் திரும்பிய பின்னர் பாசெயினில் டாக்டர் சதானந்த் கல்வங்கருடன் இரண்டு நாட்கள் தங்கியிருந்தார். அம்பேத்கர் அவ்விடத்தில் இருந்தபோது, புகழ்பெற்ற இந்துச் சமயக் காப்பாளரான மசூர்கர் மகராஜ் அம்பேத்கரைச் சந்தித்து மூன்று மணிநேரம் உரையாடினார். மசூர்கர் மகராஜ் கோவாவில் பத்தாயிரம் கிறித்தவர்களை மீண்டும் இந்து மதத்திற்கு மதம் மாற்றியவராவார். தீண்டப்படாத வகுப்பு மக்கள் இந்து மதத்தைவிட்டு நீங்குவதால் இந்து மதம் பெரிய அளவில் பாதிக்கப்படமாட்டாது என்று அந்த இந்து மதத்தலைவரிடம் அம்பேத்கர் கூறினார். இதற்குப் பதிலளித்த மசூர்கர் மகராஜ் இந்து மதத்தை விட்டு வெளியேறுவது என்பதுடன் அது நின்றுவிடாது; காலப்போக்கில் இந்து மதத்தின் அழிவில் போய் அது முடியும் என்று கூறினார். அவ்வாறு இந்து மதம் அழிந்துவிடுவதுபற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை; அதன் பிறகும் இந்துஸ்தானத்தின் வரலாறு தொடரும் என்று அம்பேத்கர் விடைபகன்றார். அவ்வாறாயின் அது இந்துஸ்தானத்தின் வரலாறாக இருக்காது; 'பாக்கிஸ்தான்' போல் வேறொரு ஸ்தானத்தின் வரலாறாகத்தான் இருக்கும் என்று மசூர்கர் மகராஜ் பதில் சொன்னார். வருத்தத்துடன் தலையசைத்து அதை ஏற்றுக்கொண்ட அம்பேத்கர் அது அப்படித்தான் இருக்கும் என்று சொன்னார். அதுபோல் நடக்கவேண்டும் என்று நான் விரும்பவில்லை; ஆனால்

அந்தச் சோக நிகழ்ச்சி நடக்காமல் தவிர்ப்பது என்பது சாதி இந்துக்களின் கைகளில்தான் இருக்கிறது என்று அம்பேத்கர் கூறினார்.

இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வழிதான் என்ன? என்று மசூர்கர் அம்பேத்கரிடம் கேட்டார். ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் தீண்டாமையை அடியோடு அழித்துவிடுவோம் என்று சாதி இந்துத் தலைவர்கள் வாக்குறுதி தரவேண்டும் என்று அம்பேத்கர் பதிலுரைத்தார். இப்பிரச்சினையின் விரிந்த பரிமாணத் தைக் காணும்போது அவ்வாறு செய்வதற்குச் சிறிது காலம் ஆகும் என்று மசூர்கர் சொன்னார். ஆகவே சாதி இந்துத் தலைவர்கள் அத்தன்மையில் செயல்படுவதற்கு வாய்ப்பளிப்பதற்காக அம்பேத் கர் மதமாற்ற அறிவிப்பைத் திரும்பப் பெறவேண்டும் அல்லது இப்பிரச்சினையைத் தள்ளிப்போட வேண்டும் என்று அம்பேத்கரை மேலும் அவர் கேட்டுக்கொண்டார். 'சாதி இந்துக்களின் மனமாற்றத் திற்காக நான் இன்னும் அய்ந்து முதல் பத்து ஆண்டுகள் வரை காத்திருக்க முடியும். ஆனால் இதற்கிடையில் 'கேசரி' பத்திரிகை வட்டத்தாரால் மிகச்சிறந்த இந்துவாகக் கருதப்படுகின்ற, தீண்டப்ப டாத வகுப்புத்தலைவரான கே.கே. சகத்தை மராட்டிய சித்பவன் பார்ப்பனர்கள் சங்கராச்சாரியார் பதவியில் ஓராண்டுக் காலத்திற்கு அமர்த்தவேண்டும். மனம் மாறியதற்கும் சமத்துவத்தை ஏற்றுக் கொண்டதற்கும் அடையாளமாக ஒரு நூறு சித்பவன் பார்ப்பனக் குடும்பங்கள் புதிய சகத் சங்கராச்சாரியாரின் காலில் விழுந்து வணங்க வேண்டும்' என்று அம்பேத்கர் கூறினார். மேலும் 'இந்து' என்ற சொல்லுக்குரிய பொருளை வரையறுத்துக் கூறுமாறு மசூர்கரிடம் கேட்டார்.

சில நாட்களுக்குப்பின், நாசிக்கில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட் டத்தில் அமர்த்தப்பட்ட ஒரு தூதுக்குழுவினர் அம்பேத்கரைச் சந்தித்துத் தீண்டாமையை நடப்பிலிருந்து அகற்றிடத் தனிப்பட்ட முறையிலும் கூட்டாகவும் தாங்கள் போராடப்போவதாக உறுதிகூறி னார்கள். அத்தூதுக் குழுவின் தலைவரான ஆர்.ஜி. பிரதான் தங்களுடைய முயற்சி கட்டாயம் வெற்றிபெறும் என்று கூறி அம்பேத்கரின் மதமாற்ற முடிவினை மாற்றிட முயன்றார்.

அம்பேத்கர் அவருக்கே உரிய முறையில் அக்குழுவினருக்குப் பதில் சொன்னார். 'சமூகத்திற்கு மதம் இன்றியமையாததன்று என்று சிலர் நினைக்கின்றனர். அக்கருத்து எனக்கு உடன்பாடானதன்று. வாழ்க்கைக்கும் சமூக நடைமுறைக்கும் மதத்தின் அடிப்படைகள்

கட்டாயம் தேவை என்று கருதுகின்றேன். இந்துச் சமூக அமைப்பின் அடித்தளமாக மனுஸ்மிருதியில் சொல்லப்பட்டிருக்கிற தருமம்தான் இருக்கிறது; அவ்வாறிருக்க, தற்போது ஸ்மிருதியை அடித்தளமாகக் கொண்டிருக்கின்ற மத அமைப்பை மாற்றி அவ்விடத்தில் நல்லதோர் அடித்தளத்தை அமைக்காதவரையில் இந்துச் சமூகத்தில் இருக்கின்ற சமத்துவம் அற்ற நிலையை அகற்றிட முடியாது என்றே எண்ணுகின்றேன். அத்தகைய நல்ல அடித்தளத்தின் மீது இந்துச் சமூகம் தன்னை மறுசீரமைப்பு செய்துகொள்ளும் என்ற நம்பிக்கை எனக்கில்லை' என்று அக்குழுவினரிடம் விளக்கினார்.

அய்ந்தாண்டுக் காலத்திற்குள் மதமாற்றம் மேற்கொள்ளப்படும் என்று அம்பேத்கர் சொன்னார். இதற்கிடையில் சாதி இந்துக்கள் அவர்களுடைய ஆக்கப்பூர்வமான செயல்களின்விளைவுகள் மூலம் அவருக்கு நம்பிக்கையூட்டினால் மதமாற்ற முடிவினை மறு ஆய்வு செய்வேன் என்றும் அம்பேத்கர் கூறினார். அவருடைய வகுப்பு மக்களைச் செல்வாக்குமிக்க ஏதாவதொரு வகுப்புடன் இணைத்திட விரும்புவதாகவும், சீக்கிய மதத்தைத் தழுவிட எண்ணங்கொண்டு இருப்பதாகவும் அவர் மேலும் விளக்கினார். முஸ்லிம் மதத்துக்கு மாறுவதுபற்றிக் குறிப்பிட்டுப் பேசிய போது, மக்களின் மத உணர்வுகளிலும் மத நடப்புகளிலும் எவரொருவரும் தலையிடுவதை மிகவும் ஆபத்தானது என்று கருதக்கூடியவர்கள் யாரென்றால், அவர்கள் முஸ்லிம்களே ஆவர்' என்று அம்பேத்கர் சுட்டிக்காட்டினார்.

மதம் மற்றும் சமூக விஷயங்களில் மக்களின் நலனைக் கருதக்கூடிய ஒரு சர்வாதிகாரி உருவானால்தான் இந்தப்பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்று அம்பேத்கர் கருதினார். "சமூகம் மற்றும் மதக்கோட்பாடுகளில் மாறுதல்களை நடைமுறைப்படுத்திட இந்தியாவிற்குக் கமால் பாட்சா அல்லது முசோலினி போன்ற ஒரு சர்வாதிகாரி தேவைப்படுகிறார். இந்தியாவிற்குச் சனநாயகம் ஏற்றதன்று. சமூக விஷயங்களில் காந்தி ஒரு சர்வாதிகாரியாக உருவாவார் என்ற என் நம்பிக்கை சுக்குநூறாக உடைந்துவிட்டது. இப்போதுள்ள சூழ்நிலையில் சமூக மத விஷயங்களில் ஆதிக்கம் செலுத்தவல்ல ஒரு சர்வாதிகாரி தோன்றமுடியாது. இளைய தலைமுறையினர் மீது நம்பிக்கை வைக்க முடியவில்லை. ஏனெனில் இளைஞர்கள் இரானடே, கோகலே, திலகர் போன்று உயரிய கொள்கைகளை இலட்சியமாக வரித்துக்கொள்ளாமல் உள்ளத்திற்

குக் கிளர்ச்சியும் மகிழ்ச்சியும் தருவனவற்றில நாட்டம் கொண்டுள்ளனர். ஆகவே எதிர்கால இந்தியாவைப்பற்றி எனக்கு நல்ல நம்பிக்கை ஏற்படவில்லை'' என்று அம்பேத்கர் அக்குழுவினரிடம் கூறினார். அவர்களுடனான உரையாடலின் இறுதியில், 'மதம் பற்றி நான் கொண்டுள்ள கருத்தின்படி என்னிடம் தீவிரமான மத நம்பிக்கைகள் உள்ளன. ஆனால் இந்து மதத்தில் எனக்கு நம்பிக்கையில்லை. ஆகவே நான் இந்துவாகப் பாசாங்கு செய்துகொள்ள விரும்பவில்லை!'[71] என்று அம்பேத்கர் குறிப்பிட்டார்.

இயோலா மாநாட்டின் மதமாற்றத் தீர்மானத்தை நடைமுறைப் படுத்துவதற்காக விரைவிலேயே, நாசிக் சாலையில் ஒரு மாநாடு கூட்டப்பட்டது. நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்த தீண்டப்படாத வகுப்பினர் அமைப்புகளுக்கு அம்பேத்கரின் மதமாற்ற அறிவிப்பு அறிக்கைகள் ஆயிரக்கணக்கில் அனுப்பப்பட்டன. அச்சமயத்தில் இலாகூரில் பஞ்சாபி மொழிப் பத்திரிக்கை ஒன்றில் ஒரு செய்தி வெளியாயிற்று. அம்பேத்கரும் அவருடைய தொண்டர்களும் விரைவில் முகம்மதியர்களாக மதம் மாறப்போகிறார்கள் என்று பீர் ஜமாத் அலி கூறியிருப்பதாக அப்பத்திரிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அம்பேத்கரிடம் அச்செய்தி பற்றிக் கேட்டபோது, பம்பாயில் பீர் ஜமாத் அலி அவரை வந்து பார்த்தார் என்றும், அச்சந்திப்பின்போது அவர் இஸ்லாம் மதத்தைத் தழுவுவதற்கான வாய்ப்புக்கள்பற்றிப் பேசியதாகவும், ஆனால் அதுபற்றி உறுதியான முடிவு எதுவும் அப்போது எடுக்கப்படவில்லை என்றும் பதில் சொன்னார்.

1935 டிசம்பர் மாத நடுவில பம்பாயில் போரஸ் சாலையில் அம்பேத்கர் ஒரு கூட்டத்தில் பேசினார். அவர் விரைவில் நடத்திடக் கருதியுள்ள மகார் பிரிவினரின் மாநாட்டில் மதமாற்றம்பற்றி முதலில் தீர்மானிக்கப்படும் என்று அக்கூட்டத்தில் அறிவித்தார். அம்பேத்கர் அறிவித்த மதமாற்றம்குறித்துப் பல கடிதங்கள் பத்திரிக்கைகளுக்கு வந்து குவிந்தன. அவற்றில் பெரும்பாலானவை அம்பேத்கரைக் கண்டித்திருந்தன; சில கடிதங்கள் மட்டுமே அவருடைய நிலைப் பாட்டை ஆதரித்திருந்தன. அவ்வாறு வெளிவந்திருந்த கடிதங்களில், கட்டுரைகளில் அரைகுறையான சமூகச்சீர்திருத்தவாதி ஒருவர் நெஞ்சம் குமுறி எழுதிய கடிதம் ஒன்று இருந்தது. அம்பேத்கர் பெரிய எண்ணிக்கைகொண்ட இந்து மதத்தைவிட்டுச் சென்றால் குறிப்பிடத்தக்கவராக இல்லாமல் வெற்றாளாகிவிடுவார்; அம்பேத்கரின் பெருஞ்சிறப்பு என்பது அவர் தீண்டப்படாதாரின்

தலைவர் என்பதால் ஏற்பட்டதாகும் என்று அக்கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது. அம்பேத்கர் அவருக்கே உரிய வீச்சுடன் அக்கடிதத்திற்குப் பதிலுரைத்தார். அவர் பெற்றுள்ள திறமையும் பெருஞ்சிறப்பும் அவர் பொறுமையுடன் மேற்கொண்ட உழைப்பி னாலும் அறிவுத்திறனாலும் விளைந்தவையாகும். 'எந்தத் துறையில் பணியாற்றினாலும், பார்ப்பனராகவோ அல்லது பார்ப்பனர் அல்லாதவராகவோ உள்ள தகுதி சான்ற அறிஞர்களிடையேயோ அல்லது அரசியல் தலைவர்களிடையேயோ இருக்கும் நிலையிலும் என் தனித்தன்மையைப் பேணிக்காப்பாற்றிக்கொள்ள முடியும்' என்று அம்பேத்கர் கூறினார். தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்கள் எப்பிரிவினரிடையே இருந்தால் அவர்களின் வாழ்க்கை வளம் பெற்றுச் சிறப்படைகிறதோ அப்பிரிவினரிடையே தனக்கெனத் தனிச்சிறப்பு ஏதும் இன்றி வாழ்வதையே விரும்புவதாக அம்பேத்கர் மேலும் குறிப்பிட்டார்.

மதமாற்றம் எனும் முக்கியமான பிரச்சினையில் அம்பேத்கர் கவனத்தைச் செலுத்திக்கொண்டிருந்தபோதிலும் மற்ற பிரச்சினை களிலும் கவனத்தைச் செலுத்தி வந்தார். கொலாபா மாவட்டத்தில் சாரி (Chari) என்ற இடத்தில் நடைபெற்ற உழவர் மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார். விவசாயிகள் படும் துன்பங்களுக்கு மூலக்காரணம் பெருநில உடைமையாளர்கள் அனுபவிக்கும் இன்பத்தில்தான் இருக்கிறது என்று அவர்களுக்கு உணர்த்தினார். இந்தச் சுயநலக் கும்பல்கள் உங்கள்மீது சுமத்தியுள்ள பண்ணை அடிமைமுறைக்கு எதிராகப் போராடுங்கள் என்று அவர்களிடம் கேட்டுக் கொண்டார். அம்மாநாடு முடியும் தறுவாயில் அம்பேத் கரின் தனிப்பட்ட இயல்பினை வெளிப்படுத்திய சுவையானதோர் நிகழ்ச்சி ஒன்று நிகழ்ந்தது. மாநாட்டின் பந்தலில் அவருடைய நண்பர்களும் மற்ற தலைவர்களும் சில செய்திகள்பற்றி விவாதித்துக் கொண்டிருந்தபோது, ஈரமான தரைமீது பரப்பப்பட்டிருந்த வைக் கோலிலிருந்து ஒரு தேள் வெளிப்பட்டது. அதனால் பெருங்கூச்சல் ஏற்பட்டது. தேளை அடிக்கத் தடியைக் கொண்டுவா, செருப்பைக் கொண்டுவா என்று ஒவ்வொருவரும் கத்தினார்கள். அம்பேத்கர் எழுந்து சென்று தன்னுடைய வெறும் பாதத்தால் அத்தேளை நசுக்கிக் கொன்றார்.

அம்பேத்கர் சட்டக்கல்லூரியின் செயற்பாடுகளிலும் வளர்ச்சியி லும் ஆர்வங்கொண்டிருந்தார். மாணவர்களும் ஆசிரியர்களும் அம்பேத்கரை எவ்வாறு மதித்தனர் என்பதை 1936 சனவரி மாதம்

வெளியிட்ட கல்லூரி இதழில் அம்பேத்கருக்குச் சூட்டப்பட்டிருந்த புகழுரையிலிருந்து அறியலாம். அவ்விதழின் ஆசிரியவுரையில், ஒரு வழக்குரைஞருக்குரிய சிறந்த கூறுகளும் ஒரு மேதைக்குரிய தன்மைகளும் ஒருங்கிணைந்த ஓர் உருவம்தான் அம்பேத்கர் என்று புகழப்பட்டிருந்தது. 'புகழ்மிக்க ஒரு வழக்கறிஞர், பொருளியலில் சிறந்த அறிஞர், அரசியலமைப்புச் சட்ட வல்லுநர், இந்தியாவிலும் உலகின் பல பகுதிகளிலும் அனைவரும் அறிந்திருக்கக்கூடிய சிறப்பினைப் பெற்றிருப்பவர். அவரைப்பற்றி மேலும் எழுதுவது வீணேயாகும். எங்களுடைய கல்லூரியின் முதல்வரிடமிருந்து அதிகமான எதிர்ப்பார்ப்பை வெளியிடுவதன்மூலம் இப்போது அவருக்கு ஒரு சங்கடமான நிலையை உண்டாக்கக்கூடாது என்று எண்ணுகின்றோம். நாங்கள் பொறுமையுடன் காத்திருக்க விரும்பு கின்றோம்' என்று அம்பேத்கரைப்பற்றி மேலும் அம்மலரில் எழுதப்பட்டிருந்தது.

'பம்பாய் மாகாணச் சட்டக்கல்வியில் மேற்கொள்ள வேண்டிய சீர்திருத்தங்களைப்பற்றிய எண்ணங்கள்' என்ற தலைப்பிலான ஆய்வுக் கட்டுரையில், அம்பேத்கர் அவருடைய முற்போக்கான கருத்துகளை முன்வைத்திருந்தார். பம்பாய் மாகாணத்தில் சட்டத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் ஆறு பிரிவினராக வகைப்படுத்தப் பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டினார். வழக்குரைஞர் என்ற ஒரே தன்மையுள்ள தொழிலைச் செய்பவர்களுக்கிடையில், அவர்களு டைய கல்வித் தகுதியில் பல தரங்கள், தேர்வு எழுதுவதில் பலமுறைகள், அந்தஸ்தில் பலநிலைகள் என வேறுபாடுகள் இருப்பதை அம்பேத்கர் கண்டித்தார்.

சட்டக் கல்விக்கான முழுமையானதோர் பாடத்திட்டம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை அக்கட்டுரையில் அம்பேத்கர் விளக்கினார். ஒரு வழக்குரைஞர் சட்டத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை மிகத்தெளிவாகக் கற்றுணர்ந்தவராக இருக்க வேண்டும்; ஆழமான பொது அறிவைப் பெற்றிருக்க வேண்டும்; எடுத்துரைக்க வேண்டிய செய்தியைச் சொல்வன்மையுடன் வெளிப் படுத்திடத் திறமை பெற்றிருக்க வேண்டும்; உண்மை விவரங்க ளைத் துல்லியமாக எடுத்துரைக்குந் திறமை பெற்றிருக்க வேண்டும்; தெளிந்த மொழி நடையில் தான் கூறவிரும்புவதைப் புலப்படுத்தும் ஆற்றல் பெற்றிருக்க வேண்டும், கேட்கப்படும் கேள்விகளுக்கு மிகவும் பொருத்தமான விடைகளைக் கூறும் வல்லமை பெற்றிருக்க வேண்டும். இத்தன்மையில் வழக்குரைஞரை உருவாக்குவதாகச்

சட்டக்கல்வியின் பாடத்திட்டம் அமைந்திருக்க வேண்டும் என்று அம்பேத்கர் கூறினார்.

சட்டக்கல்வி பயிலும் மாணவர்கள் மற்ற சில துணைப்பாடங்களையும் படிக்க வேண்டும்; சட்டம்பற்றி மட்டுமே படிப்பது, சட்டத்தொழில் செய்வதற்கு முழுமையான அளவில் தகுதியை அளித்துவிடாது எனக் கல்வியாளர் என்ற தன்மையில் அம்பேத்கர் குறிப்பிட்டார். வழக்குரைஞர் சட்டச் சிந்தனையுடையவராக இருக்க வேண்டும் என்று கூறிய அம்பேத்கர், அகஸ்டின் பிர்ரல் (Augustin Birrel) என்பவரின் மேற்கோள் ஒன்றினை எடுத்துக்காட்டினார். அம்மேற்கோளாவது: 'வழக்கின் தன்மையை அய்யந்திரிபற விளக்குதல், சாட்சிகளை நிரல்பட எடுத்துரைத்தல், பொருத்திக் காட்டுதலை வளம்பட உரைத்தல் ஆகியவையே ஒரு சட்ட அறிஞனுக்கு வேண்டிய சிறப்பியல்புகளாகும்.''

V

அம்பேத்கர் மற்ற செயல்பாடுகளில் ஈடுபட்டிருந்தபோதிலும் முதன்மையான பிரச்சினையான மத மாற்றம்பற்றியும் கவனம் கொண்டிருந்தார். மதமாற்றம்பற்றித் தீர்மானிப்பதற்காக மேலும் ஒரு மாநாடு பூனாவில் 1936 சனவரி 12, 13 ஆகிய நாட்களில் பேராசிரியர் என். சிவராஜ் தலைமையில் நடைபெற்றது. 'இந்தியாவில் இப்போதுள்ள ஏதாவதொரு மதத்திற்கு மதமாற்றம் பெற்றுச் செல்வதன் மூலம்தான் தீண்டப்படாதவர்கள் தீண்டாமையிலிருந்து விடுபடமுடியும் என்று எண்ணிட வேண்டியதில்லை. நாமாக ஒரு புதிய மதத்தை அமைப்பதன் மூலமோ அல்லது பல்வேறு சடங்குகளைக்கொண்ட இந்து மதத்தை ஆரியர்கள் இந்தியாவிற்குக் கொண்டு வருவதற்கு முன்னர் ஆதித்திராவிடர்கள் கடைப்பிடித்தொழுகிய மதத்தை மீண்டும் புதுப்பித்தலின் வழியாகவோ நாம் தீண்டாமையிலிருந்து விடுபடலாம்' என்று என். சிவராஜ் தம் தலைமை உரையில் குறிப்பிட்டார்.

மாநாட்டினரின் மகிழ்ச்சி ஆரவாரத்திற்கிடையே உரையாற்றிய அம்பேத்கர் இந்து மதத்தை விட்டு விலக வேண்டியதன் தேவையை மீண்டும் வலியுறுத்தினார். மகாராட்டிரத் தீண்டப்படாத வகுப்பு இளைஞர் மாநாடாக அது நடைபெற்றது. அம்மாநாட்டில் மூன்று முக்கியச் செய்திகள் குறிப்பிடத்தக்கவையாக அமைந்தன. டாக்டர் சோலங்கி மதமாற்றம்குறித்து அம்பேத்கர் கொண்டிருந்த கருத்துக்கு நேர்எதிரான நிலைப்பாட்டை எடுக்காவிடினும்,

மாறுபட்ட கருத்துகளைக் கூறி வந்தார்; ஆனால் அம்மாநாட்டில் சோலங்கி தன் நிலைப்பாட்டைத் தலைகீழாக மாற்றி, மத மாற்றத்தை ஆதரித்தார். 'நான் அம்பேத்கருக்கு என் வேண்டுகோ ளாக ஒன்றை மட்டும் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். திட்டவட்ட மான வரையறை இல்லாத இந்து மதத்தில் தீண்டப்படாதவர்கள் இனி ஒரு நொடியும் இருப்பதை அம்பேத்கர் அனுமதிக்கக்கூடாது. அவர்களுக்கெனச் சுதந்திரமான புதிய மதத்தை அவர் அமைத்திட வேண்டும். தீண்டப்படாதவர்களுக்குத் தேவைப்படுவது ஒரு மகானோ, வேதங்களோ, கீதையோ, ஒரு சங்கராச்சாரியோ, தேவ தூதரோ அல்ல, அவர்களுக்கு அம்பேத்கர்தான் வேண்டும்' என்று சோலங்கி முழங்கினார். இது முதல் செய்தியாகும். மதமாற்ற முடிவு காரணமாகச் சமார் வகுப்பினர் அம்பேத்கரிடமிருந்து மெல்லமெல்ல விலகிச் செல்லத் தொடங்கினார்கள் என்பது இரண்டாவது செய்தியாகும். மூன்றாவதாக, காந்தி எவ்வாறு குருவாயூர் கோயில் நுழைவுப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக் கும் வகையில் தான் மேற்கொள்ள விருப்பதாக அறிவித்த உண்ணாநோன்பின் செயற் களத்தையும் கால எல்லையையும் நீட்டித்துக்கொண்டே போய்க் கடைசியில் உண்ணாவிரதம் மேற் கொள்ளாமல் விட்டுவிட்டாரோ—அதுபோல், அம்பேத்கரும் மத மாற்றத்திற்கான கால எல்லையை நீட்டித்துக்கொண்டிருந்தார். அவரும் அவருடைய மக்களும் அவர்களுக்கு முழுமையான அளவில் சமத்துவம் அளிக்கின்ற மதத்தை வரவேற்பதாக அம்பேத்கர் கூறினார். இயோலா மாநாட்டின் மத மாற்ற முடிவுக்குப் பின்னர் அம்பேத்கர் அளித்த பேட்டியொன்றில், மதம் மாறுவதற்காக அவருடைய மக்கள் அவரைப் பின்பற்றி வருகிறார் களா? இல்லையா? என்பதற்காகத் தான் காத்திருக்கப் போவதில்லை என்றார்.

மதமாற்றம் தீண்டப்படாதவர்களை அவர்களுடைய துன்பமய மான நரக வாழ்விலிருந்து மீட்டு, சமத்துவமான இன்ப வாழ்விற்கு இட்டுச் செல்லும் என்று எண்ணுவது தவறான கருத்தாகும் என்று அவருடைய மக்களுக்கு எச்சரித்தார். மற்ற எந்தவொரு புதிய மதத்தில் சேர்ந்தாலும், அங்கும் சுதந்திரத்திற்காகவும், சமத்துவத்திற் காகவும் போராட வேண்டியிருக்கும். 'கிறித்தவ மதத்திலோ இஸ்லாமிய மதத்திலோ சீக்கிய மதத்திலோ சேர்ந்தாலும் நாம் நம் நல்வாழ்விற்காக அங்கும் போராட வேண்டியிருக்கும். எந்த மதத்தில் சேர்ந்தாலும் இந்த நிலைதான் இருக்கும் என்பதை நாம் தெளிவாக அறிந்துள்ளோம். முகம்மதியராக மதம் மாறிவிட்டால்

நம்மில் ஒவ்வொருவரும் நவாபாக ஆகிவிடுவோம் என்றோ, கிறித்தவ மதத்தில் சேர்ந்தால் ஒவ்வொருவரும் போப் ஆக உயர்ந்து விடுவோம் என்றோ எண்ணுவது முட்டாள்தனமாகும்' என்று தெளிவுபடுத்தினார். எந்த மதத்திற்கு வேண்டுமானாலும் நாம் மாறுவோம். ஆனால் அங்கு நாம் போராடித்தான் தீரவேண்டும் என்பது தவிர்க்க முடியாதது. இந்து மதத்தில் இருந்து கொண்டே தீண்டப்படாதவர்கள் சமத்துவத்திற்காகப் போராடுவதற்காக, சாதி இந்துக்களுடன் சமரசம் செய்துகொள்ளும் பொருட்டு நாம் விதிக்கின்ற நிபந்தனைகளை இந்துக்கள் என்றுமே நிறைவேற்றமாட்டார்கள்; ஏனெனில் இது பசியை நீக்கப் போராடும் பிரச்சினையன்று; நாம் நடத்துகின்ற போராட்டம் புனிதமான நோக்கங்களைப் பின்னணியாகக் கொண்டிருக்கிறது என்பது அய்யத்திற்கிடமின்றி இப்போது தெளிவாகிவிட்டது. இல்லாவிட்டால் நம்மை அவர்களின் பக்கம் ஈர்ப்பதற்காகப் பணம்தர முன்வருவார்களா? மதமாற்றத்திற்காக ஏழுகோடி ரூபாய் தருவதற்கு அய்தராபாத் நைசாம்[72] தயாராக இருப்பதாகப் பலவாறாகச் சொல்லப்படுகிறது. கடவுளுக்காக என்பதால்தான் இவ்வளவு பெரிய தொகை அளிக்க முன் வருகிறார்களே தவிர, மற்றபடி அவர்களிடமிருந்து பணத்தை வாங்கவே முடியாது. காந்தி அரிசன நல நிதியைத் திரட்டத் தொடங்கியதன் நோக்கம் சாதி இந்துக்களிடம் தீண்டப்படாதவர்கள் அடிமைகளாக இருப்பதை நீடிக்கச் செய்திட வேண்டும் என்பதே யாகும். சாதி இந்துக்கள் உதவினாலும் அல்லது தடுத்தாலும் அதைப்பற்றிப் பொருட்படுத்தாமல் மதம் மாறுவது என்று முடிவுசெய்துவிட்டேன். கடவுளையே என் கண்முன் நிறுத்தி இந்துமதத்தை விட்டுப் போகாதே என்று சொன்னாலும், மதம்மாறுவது என்ற என் முடிவிலிருந்து நான் பின்வாங்க மாட்டேன்' என்று தன் உறுதிப்பாட்டை விளக்கினார்.

அம்பேத்கர் அவ்விளைஞர் மாநாட்டில் உரையாற்றியபோது இடையறாது எழுந்த பலத்த கைத்தட்டல்கள் அவருடைய ஆதரவாளர்களும் தொண்டர்களும் அவருடைய கருத்தைப் பாராட்டிப் போற்றினர் என்பதையும் மதமாற்ற இயக்கத்திற்கும் புது விசையை ஊட்டியது என்பதையும் புலப்படுத்தின. பூனா இளைஞர் மாநாடு அம்பேத்கருக்கு அவருடைய நெருங்கிய ஆதரவாளர்களிடையே பெரும் வெற்றியாக அமைந்தது. ஆனால், தீண்டப்படாதவர்களில், அமைப்புக்கு வெளியே அவருடைய ஆதரவாளர்களாக இருந்த பலரும்—சாதி இந்துக்களில் அம்பேத்கரின் இயக்கம் வெற்றியடைய வேண்டும் என விரும்பியவர்களும்

பூனா மாநாட்டின் காரணமாக அம்பேத்கரிடமிருந்து விலகிச் செல்லத் தலைப்பட்டனர். அம்மாநாடு பத்திரிக்கைகளுக்கும் அரசியல் சிந்தனையுடைய ஆயிரக்கணக்கான இந்துக்களுக்கும் ஓர் எச்சரிக்கையாக அமைந்தது. மகார் வகுப்புத் தலைவர்கள் தவிர, தீண்டப்படாத மற்ற வகுப்புக்களில் பெரும்பாலானவற்றின் தலைவர்கள் அம்பேத்கரின் மதமாற்றக் கருத்தினை ஏற்கவில்லை என்று அய்யத்திற்கிடமில்லாத தன்மையில் அறிவித்தனர். மதம் மாறுவதால் அவர்களுடைய வாழ்நிலையில் பொருளாதாரத்திலோ, மற்ற எந்தப் பயனுறு வகையிலோ மாற்றம் ஏற்படாது; மாறாகத் தீங்கான எதிர் விளைவுகளையே மத மாற்றம் ஏற்படுத்தும் என்று தீண்டப்படாத மற்ற வகுப்புத் தலைவர்கள் கூறினார்கள்.

துணிவுடனும் ஈடுபாட்டுடனும் உறுதிப்பாட்டுடனும் தீண்டப் படாதவர்களின் விடுதலைக்காகத் தங்கள் வாழ்க்கையையே ஒப்படைத்துக்கொண்டிருந்த சாதி இந்துத் தொண்டர்களும் தலைவர் களும் மதம் மாறப் போவதாக அம்பேத்கர் மீண்டும் வலியுறுத்தி யது கண்டு எரிச்சலடைந்தனர். அவர்களில் சிலர், தீண்டப்படாதவர் களுக்கு இப்பொழுது ஏற்பட்டுள்ள ஆபத்து போன்று அவர்களு டைய வரலாற்றில் இதற்கு முன் எப்போதும் ஏற்பட்டதில்லை என்றும், அம்பேத்கரின் மதமாற்றப் போக்கானது போராட்டக்களத் திலிருந்து புறமுதுகிடுகின்ற மனநிலை கொண்டதாகும் என்றும் கூறினார்கள். கடந்த சில நூற்றாண்டுகளாகக் கிறித்தவ, இஸ்லாமிய அமைப்புகள் தீண்டப்படாதவர்களை மதமாற்றம் செய்வதற்காக மேற்கொண்ட முயற்சிகள் தீண்டப்படாதவர்களை நரக வாழ்வி லிருந்து மீட்டு இன்பமான சொர்க்க வாழ்விற்கு இட்டுச் செல்லத் தவறிவிட்ட நிலையை நல்லெண்ணங்கொண்ட சாதி இந்துக்கள் அம்பேத்கருக்குச் சுட்டிக்காட்டினர்; இந்தியாவில் மதமாற்றத்தின வரலாறு அம்பேத்கரின் நோக்கத்திற்கு வலிமை சேர்ப்பதாக இல்லை என்று கூறினார்கள்.

மேலும் நெடுங்காலமாகக் கடைபிடிக்கப்பட்டுவரும் இந்து மதப் பழக்கங்களும் வழக்கங்களும் எந்த அளவிற்கு அவர்களி டையே வேரூன்றிவிட்டிருக்கின்றனவென்றால் இந்து மதத்திலிருந்து விலகி மற்றோர் மதத்தில் சேர்ந்துவிட்ட பிறகும், அவர்களையும் அறியாமலே இந்துமதப் பழக்க வழக்கங்களைப் பல ஆண்டுகளா கப் பின்பற்றிக்கொண்டிருக்கக்கூடிய நிலைக்கு அவர்களை இவை ஆட்கொண்டிருப்பதை அவர்கள் எடுத்துக் காட்டினார்கள். தீண்டா மையை ஒழிக்க அம்பேத்கர் போராடுவது போன்று, தீண்டா



அம்பேத்கரின் அரிய நிழற்படம்

மையை ஒழித்திடப் போராடுகின்ற எங்கள் பக்கம் தீண்டப்படாத வகுப்பு மக்கள் நின்று பணியாற்றி, எங்களோடு இணைந்து அமைப்பினை உருவாக்கி, ஓரணியில் நின்று தீரமுடன் போராட முன்வாருங்கள் என்று தீண்டப்படாத வகுப்பு மக்களுக்குச் சாதி இந்துக்கள் வேண்டுகோள் விடுத்தனர்; கோழைகளைப் போல் போர்க்களத்திலிருந்து ஓடிப் போக வேண்டாம் என்று அம்பேத்கரையும் அவருடைய ஆதரவாளர்களையும் கேட்டுக்கொண்டனர். தொலைநோக்குடன் பிரச்சினைகளைக் காணக்கூடிய மற்றுஞ் சில சமூகச் சீர்திருத்தவாதிகள் அம்பேத்கரின் மதமாற்ற இயக்கத்தை வேறோர் கண்ணோட்டத்துடனும் ஆதரவான தன்மையுடனும் மதிப்பீடு செய்தனர். இந்து மதத்தைத் திருத்தியமைத்து அதற்குப் புத்துயிரூட்ட வந்துள்ள மீட்பர் அம்பேத்கர் என்று அவர்கள் போற்றினார்கள்.

மதமாற்றப் பிரச்சினை பற்றிச் சரியாகக் கணிக்க முடியாதவர்கள் அம்பேத்கரின் மதமாற்ற அறிவிப்பை வெறும் மிரட்டல், வீம்புச் செயல், விளம்பரத் தந்திரம் என்று வருணித்தனர். அம்பேத்கர் மதமாற்றத்தால் ஏற்படக்கூடிய இடர்ப்பாடுகளைக் குறைத்து மதிப்பிட்டார் என்றோ, மதமாற்றம் அவர்களைச் சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்லும் என்று மனம் மயங்கியிருந்தார் என்றோ எவர் கூறினும் அது நேர்மையற்ற செயலாகும். சாதி இந்துக்களின் அணி கொண்டிருந்த கருத்துக்கு ஆதரவாக இருந்தவர்களில் பெரும்பாலோர் இப்பிரச்சினையின் ஒரு பக்கத்தை மட்டுமே பார்த்தார்கள். மத மாற்றத்தை மிகத் தீவிரமாக ஆதரித்தவர்களோ இதன் மற்றோர் பக்கத்தை மட்டுமே கண்டனர். அம்பேத்கர் என்ன செய்தாரெனில், ஒழியாமல் நீடித்துக்கொண்டிருக்கின்ற தீண்டாமைப் பிரச்சினையைத் தீர்த்திடுவதற்காக ஒரு நெருக்குதலை ஏற்படுத்தினார். அவருக்கே உரிய முறையில் அவருடைய உள்ளத்தை, ஆன்ம வலிமையை, ஆற்றலை, சிந்தனையை முழுக்கச் செலுத்தி, மனித உரிமைகளைப் பெறுவதற்காக அவருடைய மக்கள் நடத்தும் போராட்டம் உறுதியான முடிவினை எட்ட வேண்டுமென்பதற்காக அதனை முடுக்கிவிட்டார். ஆபத்தான நோய்களுக்கு அதிர்ச்சிதரும் சிகிச்சை தேவைப்படுகிறது. ஆழமாக வேரூன்றி விட்டிருக்கின்ற இப்பிணியைப் போக்கிட கடைசி முயற்சியாக அம்பேத்கர் இதை மேற்கொண்டார்.

ஆழ்ந்த மதச்சிந்தனைச் சூழலில் பிறந்து வளர்ந்த அம்பேத்கருக்கும் சிலை வணக்க வெறுப்பாளராகவும், சமூகத் தீமைகளை

அழிக்க விரும்பியவராகவும் திகழ்ந்த அம்பேத்கருக்கும் இடையில் நடந்த ஒரு போராட்டமே இது. அவருடைய போராட்டத்தின் தொடக்கக் காலத்தில் இந்துக் கோட்பாடு சாதி இந்துக்களுக்கு மட்டுமே உரிய சொத்தன்று என்று சொன்னார். சமார் வகுப்பைச் சார்ந்த சில பெண்கள் இஸ்லாமிய மதத்தில் சேர்ந்துவிட்டனர் என்ற செய்தியை முன்னர் ஒரு சமயம் அம்பேத்கர் அறிந்தபோது மனம் வருந்தினார். தீண்டப்படாத வகுப்பு மக்களை இந்துக்கள் என்று சாதி இந்துக்கள் கருதுகின்றவரையில் அவர்களைப்போலவே கோயிலுக்குள் நுழையும் உரிமை தீண்டப்படாதவர்களுக்கு உண்டு என்று அம்பேத்கர் கூறி வந்தார். தீண்டப்படாதவர்கள் அவர்களுடைய போராட்டத்தின்மூலம் இந்து மதத்தைத் தூய்மை செய்வதுடன் அவர்களுடைய குருதியைக் கொண்டு அதன் களங்கத்தைக் கழுவுகிறார்கள் என்று அம்பேத்கர் முழங்கியது உண்டு. வேறோர் மதத்திற்கு மதம் மாறிச் சென்ற இந்துக்களை மீண்டும் இந்து மதத்திற்கு மதம் மாற்றிய இந்துச் சமயப் பிரச்சாரகர்களைக் கோவா அரசு கைது செய்தபோது அதனை எதிர்த்துத் தந்தி மூலம் அனுப்பப்பட்ட அறிக்கையில் அம்பேத்கரும் கையெழுத்திட்டிருந்தார்.[73] வட்டமேசை மாநாட்டின் சிறுபான்மையினர் குழுவினர்க்கு அளித்த அறிக்கையில் தீண்டப்படாத வகுப்பு மக்களை "இந்து புரோட்டஸ்டென்டுகள்" என்றோ அல்லது "இந்துப் பழக்க வழக்கங்களை ஏற்காதவர்கள்" என்றோ அழைக்க வேண்டும் என்று அம்பேத்கர் வலியுறுத்தினார். எல்லாவற்றையும் விட அவர் பூனா ஒப்பந்தத்திலும் கையெழுத்திட்டார். இவை அனைத்தும் அம்பேத்கர் தொடர்ந்து இந்து மதத்தில் இருந்திட எண்ணங் கொண்டிருந்தார் என்பதைக் காட்டுவதற்குப் போதுமான அடையாளக் குறிப்புகளாகும்.

பூனா இளைஞர் மாநாடு பற்றிக் குறிப்பிட்டுக் கூற வேண்டிய மற்றோர் முக்கியச் செய்தி இருக்கிறது. மாநாடு நடைபெற்றுக் கொண்டிருந்தபோது ஒரு நாள்-1936 சனவரி 13ஆம் நாள் இரவு டாக்டர் அம்பேத்கரும் டாக்டர் சோலங்கியும் சீக்கியர்களின் பசனையில் கலந்துகொண்டனர்; அங்குச் சீக்கியச் சமயத் தலைவர்கள் அம்பேத்கர் சீக்கிய மதத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று வேண்டினர். அதே வாரத்தில் இரண்டு முகம்மதிய தூதுக் குழுவினர் பூனாவில் அம்பேத்கரைச் சந்தித்தனர்; தீண்டப்படாத வகுப்பு மக்கள் இஸ்லாமிய மதத்தைத் தழுவிட வேண்டுமென அவர்கள் வேண்டினர்.

இயோலா மாநாட்டில் மதம் மாறுவது என்று நிறைவேற்றப் பட்ட தீர்மானத்தை ஆதரித்துப் பூனாவில் நடைபெற்ற இளைஞர் மாநாட்டில் ஒரு தீர்மானம் இயற்றப்பட்டது. இயோலா மாநாட்டின் தீர்மானத்தில் அறிவிக்கப்பட்டிருந்தவாறு ஒன்றுபட்டுச் செயல்படு வதன் இன்றியமையாமையைப் பூனா மாநாட்டுத் தீர்மானம் வலியுறுத்தியது.

சமூக விடுதலைக்கான தீர்வு

ஜாட் - பட் - தோடக் மண்டல் (சாதி ஒழிப்புச் சங்கம்) லாகூரில் நடத்துவதாக இருந்த அதனுடைய ஆண்டு மாநாட்டில் நிகழ்த்துவதற்கான தலைமை உரையை அம்பேத்கர் 1936 சனவரி முதல் தயாரித்துக்கொண்டிருந்தார். அச்சாதி எதிர்ப்புச் சங்கத்தைச் சேர்ந்த தலைவர்கள் அம்மாநாட்டின் தலைமையை அம்பேத்கர் ஏற்க வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர். அவர்களுடைய பிரதிநிதியான இந்திர சிங் பம்பாயில் அம்பேத்கரைச் சந்தித்து அவர்களுடைய அழைப்பினை ஏற்றுக் கொள்ளுமாறு வலியுறுத்தினார். லாகூரில் கிறித்தவ மதப் பண்டிகையான ஈஸ்டர் நாட்களின்போது நடைபெறவுள்ள மாநாட்டிற்கு வரும்போது தன்னுடன் தங்கிட வேண்டும் என்று டக்கர் கோகுங் சந்த் நராங், அம்பேத்கரை அழைத்து, 1936 பிப்ரவரி முதல் வாரத்தில் மடல் எழுதியிருந்தார்.

பூனாவில் தீண்டப்படாத வகுப்பு இளைஞர் மாநாட்டில் அம்பேத்கர் நிகழ்த்திய உரையை எதிர்த்தும் ஆதரித்தும் பல கடிதங்கள் அம்பேத்கருக்கு வந்தன. அவற்றுள் சில, வருணாசிரம அமைப்பு தீமைகளைக் களையும் என்று குறிப்பிட்டிருந்தன. வருணாசிரம அமைப்பை வைத்துக்கொண்டு இந்துச் சமூகத்தைச் சீர்திருத்தி அமைக்க முயலுவது பயனளிக்காது; சாதி அமைப்பை ஒழிப்பதே பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரே வழியாகும் என்று மற்ற கடிதங்களில் கருத்துத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அம்பேத்கரின் மதமாற்ற அறிவிப்பு எரிமலை வெடித்தது போன்று இந்துத் தலைவர்களை அச்சுறுத்தியது. அதனால் மாளவியாவும் மற்ற தலைவர்களும் நாசிக்கிற்கும் மற்ற இடங்களுக்கும் சென்று மகாராட்டிரத்தில் உள்ள தீண்டப்படாத வகுப்பு மக்களின் உள்நோக்கத்தினை இந்துக்களிடம் எடுத்துரைத்து எச்சரித்தனர்.

அப்போது பம்பாயில் சித்த ரஞ்சன் நாடகக் கம்பெனி 'தக்கஞ்சதிவா' என்ற நாடகத்தை நடத்தி வந்தது. இந்நாடகம் மக்களிடையே பெரும் பரபரப்பையூட்டியது. இந்த நாடகக் கம்பெனி பம்பாயில், 'பம்பாய் நாடக அரங்கில்' (Bombay theatre) மார்ச்சு 15ஆம் நாள் அம்பேத்கருக்கு ஒரு பாராட்டு விழா

நடத்தியது. புகழ்பெற்ற நாடக ஆசிரியரான அப்பா சாகிப் திப்னிஸ் எழுதிய அந்த நாடகம் தீண்டாமைப் பிரச்சினையைச் சித்திரித்தது. மகாராட்டிர வரலாற்றில், பேஷ்வாக்களின் ஆட்சிக்காலத்தில், தீண்டப்படாதவர்கள் குறிப்பிட்ட சில மணிநேரங்களில் மட்டுமே வீதிகளில் நடக்க அனுமதிக்கப்பட்டதுபற்றியும், அவ்வாறு நடந்து செல்லும்போது எச்சில் துப்புவதற்காகக் கழுத்தில் மண்சட்டியைக் கட்டிக்கொண்டும் காலடிச் சுவடுகளை அழிப்பதற்காகத் துடைப் பத்தை இடுப்பில் கட்டித் தெருவைக் கூட்டும்படித் தொங்கவிட்டுக் கொண்டும் போகுமாறு எவ்வாறு கட்டாயப்படுத்தப்பட்டனர் என்பதை விளக்கும் பல காட்சிகள் அந்நாடகத்தில் இடம் பெற்றிருந்தன. அந்நாடகத்தைக் காண அம்பேத்கர் வர ஒத்துக் கொண்டுள்ளார் என்ற செய்தியை அறிந்த மக்கள் பெருந்திரளாக நாடக அரங்கிற்கு வந்தனர்; அரங்கம் நிரம்பி வழிந்தது.

அந்நாடக நிகழ்ச்சியின்போது அன்று முக்கியப் பேச்சாளராக ஆனந்தராவ் கத்ரே இருந்தார். இந்துச் சமூகத்தில் சமத்துவத்தின் அடிப்படையில் சமூகச் சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டும் என்பதில் மெய்யான ஈடுபாடும், கொழுந்துவிட்டெரியும் உணர்வும் கொண்டிருந்தவர் கத்ரே. தீண்டப்படாதவர்களுக்கு இழைக்கப்பட்டுள்ள கொடுமைகள் எந்த அளவிற்கு இழிவானவை யாகவும், மனிதத்தன்மையற்றவையாகவும் இருந்தனவென்றால் கழுத்தில் மண்சட்டியைத் தொங்கவிட்டவாறு நாடக மேடையில் தோன்றுவதற்குக்கூட நாடக நடிகர் மறுத்துவிடும் அளவிற்கு இருந்தது என்று கத்ரே பேசும்போது குறிப்பிட்டார்.

ஜாட்-பட்-தோடக் மண்டல் அதன் மாநாட்டை மே மாத மத்தியில் நடத்திட ஒத்திவைத்திருப்பதாக, 1936 மார்ச்சு இறுதியில் அம்பேத்கருக்குத் தெரிவித்தது. அம்மாநாடு குறித்த அறிவிப்பு பஞ்சாப் பத்திரிக்கை உலகில் ஒரு சலசலப்பை ஏற்படுத்தியது. இந்து மதத்தை வெறுக்கிறேன் என்று வெளிப்படையாக அறிவித்த அம்பேத்கரை அம்மாநாட்டின் தலைவராகத் தேர்ந்தெடுப்பதற்காக வைதிகர்கள் லாகூர் சாதி ஒழிப்புச் சங்கத்தைக் கடுமையாகக் குறைகூறினார்கள். அதன் விளைவாக அச்சங்கத்திற்குத் தீவிரமாக ஆதரவு அளித்து வந்த பாய் பரமானந்த், டாக்டர் நராங், மகாத்மா ஹன்ஸ் ராஜ், ராஜா நரேந்திர நாத் போன்ற தலைவர்கள் அச்சங்கத்திலிருந்து விலகிவிட்டனர். இச்சூழலில் பஞ்சாபிலிருந்த நிலையை அம்பேத்கருக்குத் தெளிவாக எடுத்துரைப்பதற்காக அச்சங்கத்தின் முன்னணித் தலைவராகத் திகழ்ந்த சாந்த்ராம்,

ஹர்பகவான் என்பவரைப் பம்பாய்க்கு அனுப்பினார். அவர் ஏப்பிரல் 9ஆம் நாள் பம்பாயில் அம்பேத்கரைச் சந்தித்தார். அதுவரையில் எழுதப்பட்டிருந்த தலைமை உரையை அவர் அம்பேத்கரிடமிருந்து பெற்றுச் சென்றார்.

1936 ஏப்பிரல் *13, 14* ஆகிய நாட்களில் நடைபெறவிருந்த சீக்கிய சமயத் தொண்டு மாநாட்டில் கலந்துகொள்வதற்காக அம்பேத்கர் அடுத்த நாள் அமிர்தசரசுக்குப் புறப்பட்டார். அந்தச் சீக்கியர் மாநாட்டிற்குச் சீக்கியர்களும் தீண்டப்படாத வகுப்பு மக்களும் பஞ்சாப், கேரளம் அய்க்கிய மாகாணங்கள். மத்திய மாகாணம் ஆகிய பகுதிகளிலிருந்து பெரும் எண்ணிக்கையில் வந்திருந்தனர். ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதியான சர்தார் பகதூர் ஹூக்கும் சிங் அம்மாநாட்டிற்குத் தலைமையேற்றிருந்தார்; வசக் காஸ் சிங் வரவேற்புக் குழுவின் தலைவராக இருந்தார். மாநாட்டின் தலைவரும், வரவேற்புக் குழுவின் தலைவரும் தங்களுடைய உரைகளில் ஆழ்ந்த சமயத் தொண்டின்மூலம் தீண்டப்படாதவர்க ளின் நிலையை உயர்த்த வேண்டியதன் தேவையை வலியுறுத்திப் பேசினார்கள். அம்மாநாட்டில் அம்பேத்கர் உரையாற்றியபோது சீக்கிய சமயத்தவர் அனைவரும் சமம் என்ற கோட்பாட்டை ஏற்றிருப்பதைத் தான் ஆதரிப்பதாகவும், இந்து மதத்தை விட்டு வெளியேறுவது என்று முடிவு செய்துவிட்டபோதிலும் வேறு எந்த மதத்தில் சேருவது என்பதைப்பற்றி இன்னும் முடிவு செய்யவில்லை என்றும் குறிப்பிட்டார். ஜோகேந்திர சிங் சமயத் தைப் பரப்பும் பணியை மேற்கொள்ள வேண்டியதன் தேவையை யும், அதற்காக ஓர் அறக்கட்டளையை ஏற்படுத்த வேண்டும் என்றும், அந்த அறக்கட்டளைக்காக நிதி வழங்குங்கள் என்று வேண்டியும் அம்மாநாட்டில் வலியுறுத்திப் பேசினார். கேரளாவில் தீண்டப்படாத வகுப்பான தீயர் வகுப்பைச் சேர்ந்த அய்ந்து முக்கியத் தலைவர்கள் டாக்டர் குட்டீர் தலைமையில் அம்மாநாட் டில் சீக்கிய மதத்தில் சேர்ந்தனர். மேலும் அய்க்கிய மாகாணங்கள் மற்றும் மத்திய மாகாணம் ஆகியவற்றிலிருந்து வந்திருந்த அய்ம்பது பேர் சீக்கிய மதத்தில் சேர்ந்தனர். இது அம்மாநாட்டின் குறிப்பிடத்தக்க முதன்மையான நிகழ்ச்சியாகும்.

பம்பாயில் அம்பேத்கரை ஹர்பகவான் சந்தித்தபோது அமிர்த சரசில் நடைபெறவிருந்த சீக்கியர் மாநாட்டில் தான் கலந்து கொள்ளவிருப்பதுபற்றி அம்பேத்கர் அவரிடம் தெரிவிக்கவில்லை என்று தெரிகிறது. ஏப்பிரல் 14ஆம் நாள் லாகூரிலிருந்து

அம்பேத்கருக்கு ஹர்பகவான் எழுதிய கடிதத்தில், "நான் இங்கு வந்த பிறகுதான் நீங்கள் அமிர்தசரசுக்கு வந்ததை அறிந்தேன். நீங்கள் அமிர்தசரசுக்கு வரப்போவதைப்பற்றி எனக்குத் தெரிவித்திருந்தால் நான் உங்களை இங்குச் சந்தித்திருப்பேன்" என்று குறிப்பிட்டிருந்தார். சீக்கியர் மாநாட்டில் அம்பேத்கர் கலந்து கொண்டதானது லாகூர் சாதி ஒழிப்புச் சங்கத்தினரின் அய்யத்தை மேலும் அதிகமாக்கியது. ஆகவே ஜாட்-பட்-தோடக் மண்டல் மாநாட்டில் அம்பேத்கர் நிகழ்த்துவதற்காக அச்சிட்டுள்ள உரையின் சில பகுதிகளை நீக்க வேண்டும் என்று அவர்கள் அம்பேத்கருக்குத் தெரிவித்தனர்; அம்மாநாட்டைக் காலவரையறையின்றித் தள்ளி வைத்துவிட்டதாகவும் தெரிவித்தனர். அம்பேத்கர் அச்சிட்டுள்ள தலைமை உரையிலிருந்து அகற்றிவிடவேண்டுமென்று அவர்கள் கோரிய பகுதி வேதங்களையும் இந்துச் சாத்திரங்களையும் பற்றியதாகும். தன் தலைமை உரையில் ஒரு காற்புள்ளியைக்கூட மாற்றமுடியாது என்றும், மாநாட்டிற்கு வர ஒப்புக் கொண்டதை ரத்து செய்துவிட்டதாகவும் அம்பேத்கர் பதில் எழுதினார். சீக்கியர் மாநாட்டில் கலந்துகொண்டதால்தான் சாதி ஒழிப்புச் சங்கத்தார் அத்தகைய முடிவையெடுத்தனர் என்று அம்பேத்கரும் கருதினார். அம்பேத்கர் சீக்கியத் தலைவர்களுடன் இரகசியமாகப் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருந்ததாலும், சாதி ஒழிப்பு மாநாட்டில் நிகழ்த்துவதாக இருந்த உரையில், 'இந்துவாக இருந்துகொண்டு நான் ஆற்றும் கடைசி உரை இதுதான்' என்று குறிப்பிட்டிருந்ததாலும்தான் சாதி ஒழிப்புச் சங்கத்தினர் அவர்களுடைய மாநாட்டிற்கு அம்பேத்கரைத் தலைவராக ஏற்க மறுத்தனர்.

அதுபோது காந்தியின் முகாமில் இருந்தவர்களும் அம்பேத்கரின் செயல்பாடுகளினால் கவலை அடைந்திருந்தனர். ஆகவே சேத் வால்சந்த் ஹீராச் சந்த் அம்பேத்கரைச் சந்தித்துக் காந்தியிடம் சென்று பேசுவதற்கு அவரை இணங்கச் செய்தார். அதன்படி அம்பேத்கர் வால்சந்துடன் சென்று காந்தியை வார்தாவிலும் பின்னர் செகானிலும் (சேவா கிராமம்) சந்தித்தார். ஆனால் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் அவர்களுக்குள் கருத்தொற்றுமை ஏற்படவில்லை. அம்பேத்கருக்குப் பின்புறமாக இருந்து கொண்டு இந்தியாவிலும் இங்கிலாந்திலும் பல சக்திகள் செயல்படுவதாகக் காந்தி தவறாகக் கருதினார். அதனால்தான் அம்பேத்கரின் மதமாற்ற அச்சுறுத்தல் அளவிற்குமேல் முக்கியத்துவம் பெற்றதாக வடிவமெடுக்க நேர்ந்து விட்டது என்று காந்தி எண்ணினார்.[74] செகானிலிருந்து திரும்பும் போது வார்தா நிலையத்தில் தீண்டப்படாத வகுப்பு மக்கள்

அம்பேத்கரை மகிழ்ச்சி ஆரவாரத்துடன் வரவேற்றனர். காந்தியை ஆதரித்து வந்த பெருஞ்செல்வர்களான வால்சந்த் ஹீரா சந்தும், ஜம்னாலால் பஜாஜூம் அம்பேத்கரிடம் நீங்கள் ஏன் காந்தியின் கருத்தை ஏற்கவில்லை? காந்தியுடனிருந்தால் தீண்டப்படாத வகுப்பு மக்களை உயர்த்துவதற்காகத் தங்குதடையற்ற பணவசதியை நீங்கள் பெற்றிருக்கலாமே என்று கேட்டனர். பல அம்சங்களில் அடிப்படையிலேயே காந்தியுடன் மாறுபட்ட கருத்தினைக்கொண் டிருக்கிறேன் என்று அம்பேத்கர் வெளிப்படையாக அவர்களுக்குப் பதிலுரைத்தார். அதன்பின் அவர்கள் அம்பேத்கரிடம் நேருவைப்பற் றிக் கூறினார்கள்; நேரு அவருடைய சொந்தக் கருத்துகளை ஒதுக்கி வைத்துவிட்டுக் காந்தியுடன் இணக்கமாக இருப்பதை நீங்கள் ஏன் முன்மாதிரியாக எடுத்துக்கொள்ளக்கூடாது என்று அவர்கள் கேட்டார்கள். நேருவை முன்மாதிரியாகக்கொண்டு செயல்படும் ஆள் நானில்லை; வெற்றிபெற வேண்டுமென்பதற்காக என் மனச்சான்றை நான் விட்டுக்கொடுக்கமாட்டேன் என்று கூறி அவர்களை வாயடைக்கச்செய்தார். அம்பேத்கரை வரவேற்கத் தீண்டப்படாத வகுப்பு மக்கள் பெருங்கூட்டமாகக் கூடியிருப் பதைக் கண்டு அந்த இரண்டு கோடீசுவரர்களும் வியந்தனர். அரிசனங்களின் நலனுக்காக நாங்கள் பெருந்தொகையைச் செலவு செய்தபோதிலும் அவர்கள் அதைச் சரியான முறையில் அங்கீகரிக்க வில்லையே ஏன் என்று அம்பேத்கரிடம் கேட்டார்கள். அதுதான் தாய்க்கும் செவிலிக்கும் இடையே மக்கள் காட்டும் வேறுபாடு என்று நறுக்குத் தெறித்தாற்போல் அம்பேத்கர் பதில் சொன்னார்.

டாக்டர் அம்பேத்கர் நிகழ்த்தப்படாத அவருடைய உரைக்கு "சாதி ஒழிப்பு" (Annihilation of caste) என்ற தலைப்பிட்டு அதை ஒரு நூலாக வெளியிட்டார். நடைபெறாமல் நின்றுவிட்ட அம் மாநாட்டின் உரை - செத்துப் பிறந்த குழந்தையாக - சாதி ஒழிப்பு என்ற பெயரில் மிகச்சிறந்த ஆய்வுக்கட்டுரையாக வரலாற்றில் இடம்பெற்றுவிட்டது. அந்த ஆய்வுக்கட்டுரை அவர் கடுமையாக உழைத்துப் படித்து, நுணுக்கமாக உற்றறிந்து உருவாக்கியதாகும். எதிர்காலம்பற்றி அவருடைய சிந்தனையில் சுழன்றுகொண்டிருந்த எண்ணங்களை முன்னறிந்து கூறியது அக்கட்டுரை. தர்க்கவியலுக்கு அக்கட்டுரை ஓர் பட்டறை. சிந்தனையை உலுக்குவதாகவும், குத்தலும் கேலியும் நிறைந்ததாக வும், குத்திக் கிழிப்பதாகவும், அனல் கக்குவதாகவும், எரிச்சலூட்டு வதாகவும், எரிமலையென வெடிக்கச் செய்வதாகவும் அக்கட்டுரை இருந்தது. அழுகிய புண்மீது அடர்த்தியான திராவகத்தை ஊற்றியது போல் சாதி இந்துத் தலைவர்களின் உள்ளங்களை அந்த ஆய்வுக்கட்டுரை பற்றி எரியச் செய்தது.

II

சாதி ஒழிப்புப்பற்றிய ஆய்வுக்கட்டுரையில் இந்துச் சமூகம தொடக்கத்தில் நான்கு வருணங்களாக - வகுப்புகளாக வகுக்கப்பட்டிருந்தது என்று அம்பேத்கர் குறிப்பிட்டுள்ளார். வருணம் தகுதியை அடிப்படையாகக்கொண்டிருந்தது. ஆனால் காலப்போக்கில் வருணங்கள் பிறப்பு அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டன. இவ்வாறாக நான்கு வருணங்களே நான்கு சாதிகளாயின. ஒரே இனமக்களிடையே ஏற்பட்ட சமூகப் பிரிவினையே சாதி(வருண) அமைப்பு என்று அம்பேத்கர் கருதினார். அது வெறும் தொழில் அடிப்படையில் மட்டும் ஏற்பட்ட பிரிவினை அன்று; தொழிலாளர்களிடையே ஏற்பட்ட பிரிவினையும் ஆகும். ஒருவர் அவருக்கு விருப்பம் இல்லாத ஒரு தொழிலைச் செய்யுமாறு கட்டாயப் படுத்தப்பட்டார். நால்வருண அமைப்பை வைத்துக்கொண்டு இந்துச் சமூகத்தைத் திருத்தியமைப்பது என்பது முடியாததும் தீங்கானதும் ஆகும். ஏனெனில் வருண அமைப்பு என்பது சாதி அமைப்பாகத் தாழ்ந்து இழிந்துவிடும் இயல்புடையது. சூத்திரர்கள் கல்வி கற்கக்கூடாது, வருவாய் தரக்கூடிய சுதந்திரமான எத்தொழிலையும் மேற்கொள்ளக்கூடாது, ஆயுதங்களை ஏந்திச் செல்லக் கூடாது என்று நால்வருணச் சட்டம் தடைவிதித்துள்ளது. அதனால் சூத்திரர்கள் என்றுமே எதிர்த்துப் புரட்சி செய்ய இயலாதவர்களாக ஆக்கப்பட்டனர். மேலும் என்றென்றும் தொண்டூழியம் செய்வது தங்களின் தவிர்க்க முடியாத தலைவிதி என்ற எண்ணத்திற்கு எப்பொழுதும் ஆளாகிக் கிடந்தனர். தங்களைத் தாங்கள் உயர்த்திக் கொள்வதற்கான செயல்களில் ஈடுபடமுடியாதவாறு சாதி அமைப்பு மக்களின் உணர்வுகளை மரத்துப்போகச் செய்து செயலிழக்க வைத்து முடமாக்கிவிட்டது என்று அம்பேத்கர் விளக்கியுள்ளார்.

மனித இனத்தின் மேம்பாட்டைத் தன் மூலக் கொள்கையாக சாதி அமைப்பு கொண்டிருக்கவில்லை. இந்துக்களில் நெறிபிறழ்ந்த ஒரு பிரிவினர் அகந்தையுடனும் தன்னலத்துடனும் தம் உயர்வைக் காப்பாற்றிக் கொள்வதற்குச் சமூக அமைப்பில் உள்ள சாதிமுறை இடங்கொடுத்துள்ளது. சமூகத்தில் உயர்வான நிலையில் தங்களை இறுத்திக்கொண்ட அவர்கள்தான் காலத்திற்கேற்பச் சாதிமுறையை வடிவமைக்கின்றனர். தாழ்நிலையில் வைக்கப்பட்ட மக்களை அதன்படி ஒழுகிடச் செய்யும் அதிகாரமும் அவர்களிடம்தான் இருக்கிறது. பொருளியல் கண்ணோட்டத்தின்படி பார்த்தாலும் உற்பத்தித் திறனைச் சாதிமுறை உயர்த்துவதில்லை. ஏனெனில்

சாதிமுறையின்படி ஒருவர் இயல்பாகக் கொண்டுள்ள நாட்டத்திற் கேற்பத் தொழிலைச் செய்யமுடியாது என அம்பேத்கர் அவ்வாய் வுக் கட்டுரையில் எழுதியுள்ளார்.

சாதி, இந்துக்களின் ஒழுக்கக் கோட்பாடுகளைக் குலைத்துப் பாழ்படுத்திவிட்டது. அது மனித நேய ஓர்மை உணர்வினைக் கொன்றுவிட்டது; பொது நலன் பேணும் பண்பினை அழித்துவிட் டது; குறுகிய மனப்பான்மையை வளர்த்துவிட்டது; ஒருவர் அவருடைய சாதியிடம் மட்டும் உண்மைப் பற்றுதலுடன் இருக்கும்படிச் சிந்தனையைக் குறுகிடச் செய்தது; தகுதியும் ஒழுக்கமும் சாதியைப் பொறுத்தவை என்று ஆக்கியது; மற்றோர் சாதியைச் சேர்ந்த மனிதனிடம் உள்ள நல்லியல்புகளை அது மதித்துப் பாராட்டுவதில்லை என அம்பேத்கர் அந்த ஆய்வுக் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் சாதி மதமாற்றத்தை அனுமதிப்பதில்லை; சாதியும் மதமாற்றமும் ஒத்துப்போக முடியாதவை; மதம் மாறியவருக்குச் சாதியில் இடமில்லை. இந்து மதத்தின் தொண்டு செய்யும் மனப்பான்மையைச் சாதி மாய்த்துவிட்டது. ஆனால் கடந்த காலத்தில் இந்து மதம் தொண்டு செய்யும் இயல்புடையதாக இலங்கியது. எனவே சாதி இருக்கின்றவரையில் மதமாற்றத்திற்கு வழி ஏற்படாது. சங்கம் என்கிற தன்மையில் ஒன்றுகூடி உறவாடுதல் என்ற ஒன்று இல்லாதவரையில் இந்துக்கள் வலிமை யற்றவராகவும் எதற்கும் எளிதில் அடங்கிப் போகும் தன்மையினரா கவும் இருப்பார்கள். அவர்களுக்கு இழைக்கப்படும் அவமானங் களையும் தீமைகளையும் அமைதியாகப் பொறுத்துக்கொள்வார்கள் என்று அம்பேத்கர் விளக்கிவிட்டு இந்துக்களுக்கு ஓர் எச்சரிக்கையும் விடுத்துள்ளார். இந்துக்கள் மன உறுத்தலோ இரக்கமோ இன்றி இந்நாட்டின் ஆதிக்குடிகளை இப்போதுள்ள இழிநிலையிலேயே இருக்க வைத்துவிட்டால் மற்ற மதத்தினர் அவர்களை அணுகி அவர்களுடைய மதத்திற்கு மாற்றிவிடுவார்கள். அதனால் இந்து மதத்திற்கு எதிரான அம்மதங்களில் இருப்பவர்களின் எண்ணிக்கை பெருகிக்கொண்டே போகும். இவ்வாறு நடைபெற்றால் அதற்கு இந்துக்களும் அவர்களுடைய சாதிமுறையும்தான் காரணமாகும் என்று வருமுன் உணர்ந்து உரைத்தார்.

உலகின் எந்தப் பகுதியிலும் மனித சமூகம் எத்தகைய வேறுபாடும் இல்லாத ஒரே தொகுதியாக இல்லை என்பது உண்மைதான். எல்லாச் சமூகங்களிலும் பிரிவினைகள்



1935 மே 27இல் இராமாபாய் இறந்த சமயத்தில் துறவுக் கோலத்தில் அம்பேத்கர்

இருக்கின்றன. ஆனால் இணைந்து செயல்படுதல், திருமண உறவு கொள்ளுதல், இரண்டறக் கலத்தல் போன்றவற்றில் மற்ற சமூகங் களில் உள்ள பிரிவுகளுக்கும் இந்துச் சமூகத்தில் உள்ள பிரிவுகளுக்கும் அடிப்படையில் வேறுபாடுகள் உள்ளன. இந்துச் சமூகத்தில் ஒவ்வொரு சாதியும் தன் சாதி நலனையே மய்யமாகக் கொண்டுள்ளது. இந்துக்களுக்கிடையேயுள்ள சமய வழக்கங்கள், நம்பிக்கைகள், சிந்தனைகள் ஒன்றேபோல் தோன்றினாலும் இந்துக் களை ஒரு சமூகம் என்றோ ஒரு தேசிய இனம் என்றோ இச்சொற்களின் உண்மையான பொருளின்படி ஏற்க இயலாது. சாதிகளின் தொகுப்பாகவே இந்துக்கள் இருக்கின்றனர். இந்துக்க ளின் அழிவிற்கு மூலமாக இருப்பது சாதியே. இந்துக்களின் வீழ்ச்சிக்கும் காரணமாக இருப்பது சாதியே. சாதியின் காரணமாகத் தான் இந்துக்களின் வாழ்வு தோல்விகளையே தொடர்ந்து சந்தித்துக் கொண்டிருக்கிறது. சாதியானது இந்துக்களை இந்தியாவின் நோயாளி மக்களாக ஆக்கிவிட்டது. இந்து இனத்தையே சாதி பாழ் படுத்தி விட்டது. இந்துச் சமூகத்தைக் குலைத்து அதன் உயிரோட்டத்தை அரித்து அதை அழித்துவிட்டது.

சாதியை ஒழிப்பதற்கான சிறந்த வழி கலப்புத்திருமணமே ஆகும். சமபந்தி விருந்து, சாதி உணர்ச்சியையோ சாதியின்படி நடப்பதையோ ஒழிப்பதில் வெற்றியடையவில்லை. இரத்தக் கலப்பு ஒன்றே சொந்த உறவு என்ற உணர்வினை உருவாக்கும். இரத்தக் கலப்பால் உறவினர் என்ற உணர்வு மேலோங்காத வரையில் தன்வரையில் தன் சாதி தனியானது என்ற உணர்வும், மற்ற சாதியினர் அயலவர் என்ற எண்ணமும் மறையாது.

சாதி இல்லாத நிலையை அடைவது எப்படி? சாதி என்பது ஒரு கருத்தியல்; ஒரு மனநிலை. இதை அழிப்பதற்கான வழி இதுபற்றி இந்துக்கள் கொண்டிருக்கும் கருத்தை மாற்றுவதேயாகும். இந்துக்கள் மனிதத் தன்மையற்றவர்களாக - கொடுமதியினராக இருப்பதால்தான் சாதியைப் பின்பற்றுகிறார்கள் என்று கூற முடியாது. அவர்கள் ஆழ்ந்த மத உணர்ச்சி நிரம்பியவர்களாக இருப்பதால்தான் சாதியைக் கடைப்பிடிக்கிறார்கள். சாதியின்படி நடப்பது அவர்களுடைய தவறன்று. தவறு அவர்களுடைய மதத்தில்தான் இருக்கிறது. இந்து மதம்தான் சாதிக் கருத்தை ஊட்டி வளர்க்கிறது. ஆகவே உண்மையான எதிரி சாத்திரங்களேயாகும். ஏனெனில் சாத்திரங்கள்தாம் சாதிவழிப்பட்ட மதத்தைக் கற்பிக்கின் றன. சாத்திரங்களும் இதிகாசப் புராணங்களும் மேலானவை என்ற

நம்பிக்கையைப் பொசுக்குங்கள். சாத்திரங்கள் மற்றும் வேதங்களின் அதிகாரத்தை, புனிதத்தை, தெய்வத்தன்மையை அழித்திடுங்கள். சாத்திரங்களுடன் அடிமைச் சங்கிலியால் பிணைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு ஆணுக்கும் பெண்ணுக்கும் விடுதலை கொடுங்கள். அதன் பிறகு அவர்கள் நீங்கள் யாரும் சொல்லாமலேயே கலப்புத்திருமணம் செய்துகொள்வார்கள்.

இந்துக்களுக்கு இயல்பாகச் சமூகத் தலைவர்களாகவும் அறிவாளிப்பிரிவினராகவும் இருக்கின்ற பார்ப்பனர்கள், புரோகிதர்களின் அதிகாரத்தையும் தனிமரியாதையையும் அழிக்கின்ற போராட்டத்திற்குத் தலைமை ஏற்கமாட்டார்கள். ஏனெனில் வலது கையே இடதுகையை முறித்திட முனையுமா? முனையாது. ஆகவே புரோகிதம் செய்யும் உரிமை பார்ப்பனர்களுக்கே பாரம்பரியமாக இருந்து வருவதை ஒழித்து அதைச் சனநாயகப்படுத்த வேண்டும். ஒரு குறிப்பிட்ட தேர்வில் தேர்ச்சியடைந்து பட்டயம் பெறுகின்ற எந்தவொரு இந்துவுக்கும் புரோகிதம் செய்யும் உரிமம் வழங்கப் பட வேண்டும்; புரோகிதர்களின் எண்ணிக்கையையும் குறைக்க வேண்டும். இப்படிச் செய்து பார்ப்பனியத்தைக் கொன்று இந்து மதத்தைக் காப்பாற்றுங்கள்.

இந்துக்களுக்கெனப் பொதுவான ஒரு மதக்கொள்கை நூல் தேவை என்று அம்பேத்கர் வலியுறுத்தினார். ஒழுக்க நெறிகளுக்குப் புத்துயிரூட்ட வேண்டிய தேவை இந்தச் சமூகத்திற்கு இருக்கிறது. இதைச் செய்யாமல் தள்ளிப்போடுவது ஆபத்தானதாகும் என்பதே அம்பேத்கரின் ஆய்வுக்கட்டுரை அளிக்கும் சிறந்த அறிவுரையாகும். இந்துச் சமூகத்தைப் புதிய கோட்பாடுகளின் அடித்தளத்தின்மீது திருத்தியமைக்க வேண்டும்.அந்த அடித்தளம் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் முதலான கொள்கைகளுக்கு இசைந்ததாக-சுருக்கமாகச் சொல்வதாயின் சனநாயகம் உடையதாக இருக்க வேண்டும் என்பதே அம்பேத்கர் நோக்கமாகும். இவ்வாறு திருத்தியமைக்க வேண்டுமானால் வாழ்வியல்பற்றிய அடிப்படையான கருத்தியல்களையும் மதிப்பீடுகளையும் மனிதர்களைப்பற்றியும் மற்றவைபற்றியும் கொண்டுள்ள கண்ணோட்டங்களையும் மனப் போக்குகளையும் இந்துக்கள் அடியோடு மாற்றியமைக்க வேண்டும்.

அந்த ஆய்வுக் கட்டுரையின் இறுதியில் இந்துக்கள் இந்தியாவின் நோயாளிகளாக இருக்கிறார்கள் என்று கூறிவிட்டு, இந்துக்களுக்கு ஒரு எச்சரிக்கையும் விடுத்திருக்கிறார். ''இந்துச் சமூகம்

சாதியற்ற சமூகமாக மாறினால்தான் அது தன்னைத் தற்காத்துக் கொள்ளக்கூடிய வலிமையைப் பெறமுடியும். அத்தகைய அகவலி மையைப் பெறாதவரையில் இந்துக்களுக்கான சுயராச்சியம் என்பது அடிமைநிலையை நோக்கி எடுத்து வைக்கும் மற்றோர் அடியாகவே அமையும்.''

ஜாட்-பட்-தோடக் மண்டல் கொண்டுள்ள இதே நோக்கம் நாடு தழுவியதொன்றாக இருப்பதால் அதனுடைய முயற்சிகளில் அது வெற்றிபெற வேண்டும் என்று விரும்புவதாக அம்பேத்கர் அவ்வாய்வுக் கட்டுரையின் இறுதியில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆய்வுநூல் பலருடைய கவனத்தை ஈர்த்தது. அதனால் அதனுடைய ஆங்கிலப் பதிப்பு இரண்டே மாதங்களில் விற்றுத் தீர்ந்துவிட்டது. அது இந்தியாவின் முக்கிய மொழிகளான பஞ்சாபி, மராத்தி, தமிழ், குசராத்தி, மலையாளம் முதலானவற்றில் மொழியாக் கம் செய்யப்பட்டது.

இந்துச் சமூகத்தைத் திருத்தியமைப்பதற்காகச் சாதியை ஒழிக்க வேண்டுமென்று அம்பேத்கர் மட்டும் கூறவில்லை. நவீன இந்தியாவின் தலைவர்களான சாமி சிரத்தானந்தா, லஜபதி ராய், இராஜாராம் மோகன்ராய், பாய் பரமானந்த், ஆச்சாரியா பி.சி. ராய், ஆர்.சி.தத், பிபின் சந்திரபால், சர். ஜதுநாத் சர்க்கார், அரவிந்த கோஷ், ரமானந்த் சட்டர்ஜி, லாலா ஹர் தயாள், வீர சாவர்க்கர் முதலானோர் சாதிய முறையைக் கண்டித்துள்ளனர். இவர்கள் அனைவருமே சாதிப் பிரிவினைகள் காரணமாக இந்துக்களிடையே தேசிய உணர்வோ, நாட்டுப்பற்றோ ஒற்றுமை உணர்ச்சியோ உருவாகாது போயிற்று என்று கூறியுள்ளார்கள். 'ஒரே சாதியைச் சார்ந்த ஆண் பெண் திருமண உணர்வே சாதியாக வளருகிறது; அது நாட்டின் ஒற்றுமைக்கு எதிரானதாக இருக்கிறது' என்று சிறந்த வரலாற்று அறிஞரான சர்க்கார் குறிப்பிட்டுள்ளார். சாதிக் கட்டுப்பாட்டை உடைத்துச் சுதந்திரமாகத் திருமணம் செய்துகொள் வதுதான் இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வழியாகும் என்றும் சர்க்கார் கூறியுள்ளார். லாலா ஹர் தயாள், ''சாதி, இந்தியாவின் சாபக் கேடு. சாதி அதனுடைய எல்லா வடிவங்களினாலும் நம் நாட்டை அடிமைகள் நிறைந்த ஒரு நாடாக ஆக்கிவிட்டது. இஸ்லாம் மதமோ இங்கிலாந்தோ இந்தியாவை அழிக்கவில்லை. நம்முடைய எதிரி நம்மிடையேதான் இருக்கிறான். புரோகிதமும் சாதியும் நம்மைக் கொன்றுவிட்டன. நம்முடைய சமூகத்தில் சாதி நீடித்திருக்கிறவரையில் இந்தியாவை ஒரு சுதந்திர நாடாக

நிறுவிடவோ நிர்வகிக்கவோ முடியாது. சொற்பொழிவுகள் நிகழ்த்த லாம்; தீர்மானங்கள் இயற்றலாம்; எண்ணற்ற தடவைகள் காமன்வெல்த் ஒப்பந்தங்களில் கையெழுத்திடலாம். ஆனால் சாதி இந்துக்கள் ஒற்றுமையுடன் செயல்படமாட்டார்கள்; சுதந்திர நாட்டை நிறுவமாட்டார்கள்; வெற்றியை ஈட்டும் ஒரு இராணு வத்தை உருவாக்கமாட்டார்கள்'' என்று கூறியுள்ளார்.

சுருக்கமாகச் சொல்வதாயின், இந்துக்களின் கேடுகளுக்கு மூல காரணமாக இருப்பது சாதிய முறைதான் என்பதே இந்தியாவின் சிறந்த உண்மையான வரலாற்றாசிரியர்கள், சமூகவியல் அறிஞர்கள், சிந்தனையாளர்கள், சமூகச் சீர்திருத்தவாதிகள் ஆகியோரின் உறுதி யான முடிவாகும். அய்ரோப்பியர்களிடம் இன அடிப்படையிலான கர்வ உணர்ச்சியும் முகமதியரிடம் மத அடிப்படையில் பெருமை கொள்ளும் உணர்ச்சியும், இந்துக்களிடம் சாதி அடிப்படையில் பெருமை கொண்டாடும் உணர்ச்சியும் படிந்துள்ளன என்று சில திறனாய்வாளர்கள் கூறுவது உண்மைதான் என்று எண்ணிடத் தோன்றுகிறது.

III

பூனாவில் நடைபெற்ற தீண்டப்படாத வகுப்பு இளைஞர் மாநாட்டுடன் அம்பேத்கர் மன நிறைவடையவில்லை. மத மாற்றக் கருத்துக்கு உண்மையில் எந்த அளவிற்கு அவருடைய மக்களி டையே ஆதரவு இருக்கிறது என்பதை மதிப்பிடுவதற்காக அவர் தோன்றிய மகார் வகுப்பினர் மாநாடு ஒன்றினை நடத்திட முடிவுசெய்தார். அதற்கேற்ப 1936 மே 30, 31 ஆகிய நாட்களில் பம்பாயில் தாதர் பகுதியில் இதற்கென அமைக்கப்பட்ட தனிப் பந்தலில் மாநாடு நடைபெற்றது. மாநாட்டிற்குச் சிறப்பு அழைப்பா ளர்களாக அழைக்கப்பட்டிருந்தவர்களில் அய்ரோப்பியக் கிறித்தவப் பாதிரி ஸ்டான்லி ஜோன்ஸ் மற்றும் பி.ஜெ.ஜெதாவ் ஆகியோர் இருந்தனர். மதமாற்றம்பற்றித் தங்களுக்குச் சாதகமான குறிப்பு ஏதேனும் நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ கூறப் படாதா என்று மேடையில் அமர்ந்திருந்த பல சீக்கிய, முஸ்லீம் தலைவர்களும் பாதிரிகளும் ஆர்வமுடன் காத்திருந்தனர். இயோலா மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி மதமாற்றத்தை மேற்கொள்வதற்கான வழிமுறைகளைக் கண்டறிவதே அம்மாநாட் டின் நோக்கமாகும். ரெவரெண்ட் ஜி.டி.டோலஸ் மாநாட்டினரை வரவேற்றார். அய்தராபாத்தைச் சேர்ந்த தீண்டப்படாதவர்களின் தலைவரான பி.எஸ். வெங்கட்ராவ் மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார்.

மாநாட்டில் உரையாற்றிட அம்பேத்கர் எழுந்தார். மாநாட்டில் அமர்ந்திருந்த அனைவரும் பேரமைதியுடன் அவர் பேச்சைக் கேட்க ஆர்வமுடனிருந்தனர். அம்பேத்கர் மராத்திய மொழியில் உரையாற்றினார். அவ்வுரை கையால் எழுதப்பட்ட அய்ம்பது பக்கங்களைக் கொண்டதாக இருந்தது. மகார் வகுப்பு மக்களின் கருத்தை அறிவதற்காகவே மகார் மாநாட்டைக் கூட்டியிருப்பதாக உரையின் தொடக்கத்திலேயே அம்பேத்கர் தெரிவித்தார். மதமாற்றத்தில் உடன்பாடான கருத்துள்ள மற்றவர்களை இம்மாநாட்டிற்கு அழைக்க வில்லையாயினும் அவர்கள் அவர்களுடைய மாநாடுகளில் மதமாற்ற இயக்கத்திற்கு ஆதரவளித்து உதவிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். மதமாற்றத்திற்கு எதிரானவர்களை இம்மாநாட்டிற்கு அழைக்காமல் விடப்பட்டுள்ளதுபற்றி அவர்கள் கவலைப்படத் தேவையில்லை என்று அம்பேத்கர் கூறினார்.

தீண்டப்படாத வகுப்பு மக்கள் அனுபவித்துவரும் எண்ணற்ற-அவர்களுக்கே உரிய இயலாமைகளை அம்மாநாட்டில் அம்பேத்கர் விளக்கிப் பேசினார். இந்து மதத்தில் அவர்கள் இருக்கின்ற வரையில் அவர்களுக்கு விடிவே இல்லை என்றார். உண்மையான சுதந்திரத்தை அவர்கள் பெறவேண்டுமானால் அவர்கள் இந்துமதத்தை விட்டு வெளியேறிட வேண்டும். அப்போதுதான் அவர்கள் விரும்பும் வகையில் உடுத்தவும் உண்ணவும் முடியும்; வேலைகளைப் பெறுவதும், கல்வி கற்பதும், நாகரிகமான சமூகத்தின் நடுவில் வாழ்வதும் அப்போதுதான் கைகூடும் என்று கூறினார். 'நீங்கள் இழப்பதற்கு ஒன்றுமில்லை-உங்கள் விலங்குகளைத் தவிர! உங்கள் மதத்தை மாற்றுவதன் மூலம் உங்களுக்குக் கிடைப்பது அனைத்தும் நன்மையே' என்று முழங்கினார். அதன்பின் இப்பிரச்சினையின் சமூகத் தன்மையை விளக்கினார். இப்பிரச்சினை சமூக உயர்வுக்காக ஒரு போராட்டமாகத் தெரிந்தாலும் உண்மையில் இது ஒரு வர்க்கப் போராட்டமேயாகும். சிறப்புரிமை பெற்றவர்களுக்கும், உரிமை இல்லாதவர்களுக்கும் இடையே மூண்டெழுந்து நடந்துகொண்டிருக்கும் இப்போராட்டத்தில் கடுமையான அடக்கு முறைகள் ஏவிவிடப்பட்டன. இப்போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தி வெற்றி பெற்றிடத் தீண்டப்படாதவர்களுக்கு ஆள்கட்டு வலிமையும், பண பலமும், அறிவாற்றலும் இல்லாமையே மூன்று முக்கியக் காரணங்களாகும். தீண்டப்படாதவர்கள் இந்து மதத்தில் இருக்கின்றவரையில் இன்றியமையாத இந்த மூன்று சக்திகளையும் பெறவே முடியாது என்று அம்பேத்கர் விளக்கினார்.

மத மாற்றப் பிரச்சினையில் சமயத் தொடர்பான கூறுகளைப் பற்றி விளக்கிப் பேசினார். ஓர் உண்மையான மதத்தின் செயல்பாடு ஒவ்வொரு தனி மனிதனையும் உயர்த்துவதாக இருக்க வேண்டும். அதற்காக அந்த மதம் சகோதரத்துவம், சமத்துவம், சுதந்திரம் முதலான நன்னெறிகளைக் கற்பிக்க வேண்டும். இந்து மதம் இத்தகைய நன்னெறிகளைக் கற்பிக்கவில்லை; தீண்டப்படாதவர்களுக்கு ஆக்கந்தரும் சூழ்நிலையை ஏற்படுத்தித் தரவில்லை; அவர்கள் முன்னேறுவதற்கான தனிமனிதச் சுதந்திரத்தை வழங்கிட மறுத்தது; கல்வி கற்கவும், சொத்து சேர்க்கவும், ஆயுதங்கள் வைத்திருக்கவும் அவர்களுக்கு உரிமை இல்லை. ஆகவே அவர்கள் இந்து மதத்தை விட்டு வெளியேறி நல்ல வாழ்க்கைச் சூழ்நிலைகளை அளிக்க முன்வருகின்ற மதத்தினை நாடவேண்டியது அவர்களுக்குத் தவிர்க்க இயலாததாகிவிட்டது என்று கூறினார்.

தீண்டாமையால்தான் உங்கள் திறமைகள் உரிய மதிப்புத் தரப்படாமல் புறக்கணிக்கப்படுகின்றன. உங்கள் உடல் வலிமையையும் அறிவாற்றலையும் எவரும் மதிப்பதில்லை. அதனால்தான் நீங்கள் இராணுவத்தில், காவல்துறையில், கடற்படையில் வேலையில் சேருவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. தீண்டாமை ஒரு சாபக்கேடு. அது உங்களுடைய உலகியல் வாழ்க்கையை, சிறப்பை, பெருமையைச் சீரழித்துவிட்டது என்று அம்பேத்கர் இடிமுழக்கமிட்டார்.

இந்துச் சமூகச் சீர்திருத்தவாதிகளின் நேர்மையில் தனக்கு நம்பிக்கையில்லை என்று அம்பேத்கர் வெளிப்படையாக அறிவித்தார். அவர்கள் தங்கள் சாதியிலேயே வாழ்ந்து அதிலேயே மணம் முடித்து அச்சாதியினராகவே இறக்கிறார்கள். தீண்டப்படாதவர்களைப் பாதுகாப்பதற்காகச் சாதி இந்துக்களுக்கு எதிராகப் போராடும் துணிவு காந்திக்குக் கூட இல்லை என்று அம்பேத்கர் அறிவித்தார். 'மதம் மாறுவதால் உங்களுக்குக் கிடைக்கப் போகும் நன்மை என்ன?' என்று என்னிடம் சிலபேர் கேட்கிறார்கள். 'சுதந்திரத்தினால் இந்தியாவிற்கு என்ன நன்மை கிடைக்கப் போகிறது?' என்பதே அவர்களுக்கு என் பதிலாகும். 'இந்தியாவிற்குச் சுதந்திரம் எப்படித் தேவைப்படுகிறதோ அதைப்போல, தீண்டப்படாதவர்களுக்கு மதமாற்றம் தேவைப்படுகிறது. இந்த இரண்டு இயக்கங்களின் அடிப்படை நோக்கம் சுதந்திரம் பெற வேண்டும் என்பதேயாகும்' என்று கூறினார்.

அம்பேத்கர் அதன்பின் மதமாற்றத்தின் அரசியல் விளைவுகளைப்பற்றி எடுத்துரைத்தார். 'மதம் மாறுவதால் தீண்டப்

படாதவர்கள் எவ்வகையிலும் பாதிக்கப்படமாட்டார்கள். எந்த மதத்தில் சேருகிறார்களோ அந்த மதத்தினரின் ஆதரவு அவர்களுக்குக் கிடைக்கும். என்னைப் பொறுத்தமட்டில் இந்து மதத்திற்கு ஒரேயடியாக முழுக்குப் போட்டுவிடுவது என்று முடிவு செய்து விட்டேன். என்னுடைய மதமாற்றம் வாழ்க்கை நலன்களை நோக்கமாகக் கொண்டதன்று. நான் ஒரு தீண்டப்படாதவனாக இருந்துகொண்டே இவ்வுலகில் என்னால் எதையும் அடைய முடியும். எனவே என்னுடைய மதமாற்றத்திற்கு அடிப்படையாக இருப்பது ஆன்மிக உணர்வு தவிர வேறொன்றுமில்லை. இந்து மதம் என் சிந்தனையை ஆட்கொள்ளவில்லை. என் சுயமரியாதை உணர்வு இந்து மதத்தை ஏற்றுக்கொள்ள மறுக்கிறது. ஆனால் உங்களைப் பொறுத்தவரையில் இவ்வுலகில் நல்லதோர் வாழ்க்கையைப் பெறுவதற்காகவும் உங்களுடைய சமய உணர்வுகளை நிறைவு செய்வதற்காகவும் மதமாற்றம் உங்களுக்கு வேண்டியதாய் இருக்கிறது. உங்கள் வாழ்க்கை நலன்களைப் பெறுவதற்காக நீங்கள் மதம்மாறுவதை முட்டாள்தனமாகப் பழித்துக் கூறுகிறவர்களின் கருத்துகளைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். இறந்தபின் கிடைக்கப் போவதாகக் கூறுகின்ற-மேலுலக வாழ்க்கையைப்பற்றிப் பேசுகின்ற மதத்தால் நமக்கு என்ன பயன்? ஒரு பணக்காரர் வேண்டுமானால் அவருடைய ஓய்வு நேரத்தில் மேலுலகச் சிந்தனையில் தோய்ந்து மகிழ முடியும். இவ்வுலகில் மேல்தட்டில் இருப்பவர்களும் செல்வ வளம் பெற்றவர்களும் செத்தபின் கிடைக்கப்போகும் வானுலக வாழ்வை நினைத்துக்காலம் கழிக்க முடியும். ஆனால் உங்களுடைய மானத்தை, செல்வத்தை, உணவை, வாழிடத்தை உங்களிடமிருந்து பறித்த இந்து மதத்தில் நீங்கள் ஏன் இருக்க வேண்டும்?

நான் உங்களுக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மதம் மனிதனுக்காகவே; மனிதன் மதத்திற்காக இருப்பவன் அல்ல. உங்கள் செயல்திறனைப் பெருக்கி அதை ஒன்றுதிரட்டி இவ்வுலகில் நீங்கள் வெற்றியடைய வேண்டுமானால் நீங்கள் மதத்தை மாற்றிக் கொள்ளுங்கள். உங்களை மனிதர்களாக மதிக்காத-நீங்கள் குடிப்பதற்குத் தண்ணீர் கொடுக்காத-உங்களைக் கோயிலுக்குள் நுழைய அனுமதிக்காத மதத்தை நல்ல மதம் என்று எப்படிக் கருத முடியும்? நீங்கள் கல்வி கற்பதற்குத் தடைவிதிக்கின்ற, உங்களுடைய பொருளாதார முன்னேற்றத்தில் குறுக்கிடுகின்ற மதத்திற்கு 'மதம்' என்ற பெயர் இருக்கலாமா? தன் மதத்தைச் சேர்ந்த சகோதரர்களுடன் பழகும்போது அவர்களை மனிதத் தன்மையுடன் நடத்த

வேண்டும் என்று கற்பிக்காத மதம் ஒரு மதமன்று; அது ஒரு ஆதிக்கச் சக்தியே ஆகும். விலங்குகளிடமும் அன்பு காட்டுங்கள் என்று தன்னைப் பின்பற்றுபவர்களுக்குப் போதிக்கின்ற மதம், மனிதன் தொட்டால் தீட்டு என்று கூறுவது போலித்தனமானதல்லவா? சில வகுப்பினரை மட்டும் கல்வி கற்பதிலிருந்து விலக்கி வைத்துவிட்ட மதம் அவர்கள் செல்வம் சேர்ப்பதையும் ஆயுதங்கள் ஏந்துவதையும் தடை செய்து விட்ட மதம் அவமானத்தின் சின்னமே ஆகும். அறியாமையில் இருப்பவர்கள் அறியாமையிலேயே அழுந்திக் கிடக்க வேண்டும் என்றும், ஏழைகள் என்றென்றும் ஏழைகளாகவே இருக்க வேண்டும் என்றும் கட்டாயப்படுத்துகின்ற மதம் ஒரு தண்டனையே ஆகும்.

புத்தர் சாகும் தறுவாயில் சொன்னதை மேற்கோளாகக் கூறி, 'அறிவைத் தேடி அடைக்கலம் புகுங்கள்!' என்ற வேண்டுகோளுடன் அம்பேத்கர் அவருடைய உரையை முடித்தார். புத்தரின் கூற்றை மேற்கோளாகக் காட்டியதால் அம்பேத்கர் பௌத்த மதத்தில் சேர்ந்திட நாட்டம் கொண்டிருப்பதாகச் சிலர் நம்பினார்கள். தான் சேரப்போகிற மதத்தின் பெயரைக் குறிப்பிடாமலேயே சாமர்த்தியமாகப் பேசினார் அம்பேத்கர்.

மாக்ஸ்முல்லர், எமர்சன், கார்லைல, செலிகல், தோரே, வால்டேர், எலியட், பெர்னாட்ஷா,[75] ஸ்கோபன்ஹர் போன்ற வரலாற்றாசிரியர்கள், சிந்தனையாளர்கள், தத்துவ மேதைகள் இந்து மதத்தின் பெருமையைப் பாராட்டியிருக்கிறார்கள். இவர்கள் அம்பேத்கரின் பேச்சைக் கேட்டிருந்தால் தங்களின் கருத்தை மாற்றிக் கொண்டிருப்பார்கள். ரோமன் சர்ச்சு ஒரு விலைமகள் என்று ஜான்நாக்ஸ் தூற்றியபோது, குத்திக் கிழித்து எரியச் செய்யும்படியான அவருடைய வசைமொழியில் ரோமன் சர்ச்சின் புகழை மாய்த்திடும்படியாக இருந்த ஆயிரக்கணக்கான சுடுசொற்கள், அம்பேத்கர் இந்துமதத்தைத் தாக்கிப் பேசிய பேச்சின் முன் ஒளி மங்கிப் போகும். அம்பேத்கரின் பேச்சு கரடுமுரடானதாகவும் காயப்படுத்துவதாகவும் இருந்தபோதிலும் எதிரியை அடித்து வீழ்த்துவதாகவும் ஆய்வு செய்வதாகவும் இருந்தது.

ஒட்டு மொத்தமாக மதம் மாறுவதற்கு அவர்கள் தயாராக இருப்பதாகப் பம்பாய் மாநாட்டில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இவ்வாறு மதம் மாறுவதற்கு முன்னோட்டமாக மகார்கள் இனிமேல் இந்துக் கடவுள்களை வணங்கக்கூடாது; இந்துச் சமயப்பண்டிகைகளைக் கொண்டாடக்கூடாது; இந்துமத

வழிபாட்டுத் தலங்களுக்குச் செல்லக்கூடாது என்று கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

அம்மாநாடு முடிந்தவுடன் அதே பந்தலில் நடந்த மகார் வகுப்புத் துறவிகள் மாநாட்டில் அம்பேத்கர் உரையாற்றினார். அத்துறவிகளும் இந்து மதத்தைக் கைவிடுவதென முடிவு செய்தனர். அவர்களுடைய மூதாதையர் காலம் முதல் இந்து மதத்துடன் கொண்டிருந்த உறவினை அறுத்தெறிந்து பொசுக்கிட துறவிகளும் முன்வரும் அளவிற்கு அம்பேத்கரின் பேச்சு அழுத்தமானதாகவும், எழுச்சியூட்டுவதாகவும் இருந்தது. இந்து மதத்தின் சின்னமாக அவர்கள் பயன்படுத்திக்கொண்டிருந்த பொருட்களைத் துறவிகள் தீயிட்டுக் கொளுத்தினார்கள். இவ்வுலக வாழ்வின் செயல்களைத் துறந்து மேலுலக வாழ்வினை நோக்கமாகக்கொண்டிருந்த அத்துறவிகள் மீண்டும் இவ்வுலகச் செயல்களில் ஈடுபட்டனர்.

அம்மாநாடு நடைபெறுவதற்குச் சிலநாட்களுக்குமுன் அம்பேத்கர் அவருடைய மகனையும், அவருடைய அண்ணன் மகனையும் அமிர்தசரஸில் இருந்த குருத்துவாரா மந்திருக்கு அனுப்பி வைத்ததன் மூலம் சீக்கிய மதத்தினருக்குப் புதிரான தன் மனக்குறிப்பைக் காட்டினார். அவர்களைச் சீக்கியர்கள் நம்பிக்கையுடன் வரவேற்றனர்; குருத்துவாராவில் அவர்கள் சீக்கியரின் இனிமையான விருந்தோம்பலில் ஒன்றரை மாதக்காலம் இருந்தனர்.

மதமாற்ற அறிவிப்பைத் தீண்டப்படாத வகுப்புத் தலைவர்கள் மீண்டும் உறுதி செய்ததைக் கண்ட மற்ற மதத் தலைவர்களின் நாக்கில் நீர் ஊறச்செய்தது; அவர்களுடைய ஆவலை அது மேலும் தூண்டியது. தங்கள் தங்களுடைய மதத்தைத் தழுவிச் சமத்துவமும் சுதந்திரமும் பெறுமாறு அம்மதத்தவர்கள் அம்பேத்கரை வற்புறுத்தத் தொடங்கினர்.

அய்தராபாத் நைசாமின் தூண்டுதலால் உந்தப்பட்டுச் சில முகமதியத் தலைவர்கள் அம்பேத்கரை இஸ்லாத்திற்கு இழுத்திட அவர்களால் இயன்றதனைத்தும் செய்தனர். அவர்கள் பம்பாயில் அம்பேத்கரைச் சந்திக்க முயன்றனர். ஆனால் அம்பேத்கரோ அன்று முழுவதும் பம்பாய் நகரை ஒரு காரில் சுற்றிக் கொண்டிருந்தார். அவர்களுடைய கவர்ச்சிக்கு ஆளாகாமல் இருக்க மகதிற்கு அருகில் வெந்நீர் ஊற்று உள்ள சாவ் என்ற கிராமத்திற்கு அன்று சென்றுவிட்டார். இவ்வாறாக அவர்களைச் சந்திப்பதைத் தவிர்த்தார். ஆயினும் பம்பாயில் ஒரு முஸ்லீம் உயர்நிலைப் பள்ளியில்

நடந்த ஒரு கூட்டத்தில் அவர் கலந்துகொண்டார். தொண்டையில் புண் இருக்கிறது என்று காரணங்கூறி அக்கூட்டத்தில் அவர் பேசுவதைத் தவிர்த்துவிட்டார்; முஸ்லீம்களின் தேன்பிசைந்த பேச்சுக்களை அங்குக் கேட்டார்.

பௌத்தர்களும் அவர்களுக்கே உரிய வழியில் அம்பேத்கரை அவர்கள்பால் இழுத்திட முயன்றனர். லோகநாத் பௌத்த மிஷனை நிறுவிய இத்தாலிய பௌத்தத் துறவியான லோகநாதா 1936 சூன் 10ஆம் நாள் பம்பாயில் தாதரில் இருந்த அம்பேத்கரின் இருப்பிடத்திற்கு வந்தார். துறவி உடையில் கையில் ஒரு பாத்திரமும் குடையும் வைத்திருந்த அவர் அம்பேத்கரைப் பேட்டி கண்டார். பௌத்த மதத்தை ஏற்குமாறு அம்பேத்கரிடம் நயம்பட வேண்டினார். அம்பேத்கருடன் லோகநாதா பேசியபின்னர் பத்திரிக் கையாளர்க்கு அவர் அளித்த பேட்டியில் பௌத்த நெறி அம்பேத்கரின் உள்ளத்தை ஈர்த்திருப்பதாகத் தெரிகிறது; பௌத்த மதத்தில் சேருவதுபற்றிக் கவனமுடன் ஆராய்வதாக அவர் வாக்களித்தார்; ஆயினும் உறுதியான பதில் எதையும் அவர் கூறவில்லை என்று சொன்னார். மீட்பராக (saviour) அம்பேத்கரை அணுகிய லோகநாதா என்ற அத்துறவியின் பெயர் இத்தாலிய மொழியில் செல்வடோர் (salvatore) என்பதாகும். அம்பேத்கர் தன்னுடைய கருத்தை ஏற்றுக் கொள்வார் என்று நம்புவதாக அத்துறவி கூறினார். அரிசனங்கள் அனைவரையும் பௌத்தராக மாற்றுவதே தன் நோக்கம் என்றார். அதன்பின் புண்ணிய யாத்திரைக்காக அவர் இலங்கைக்குச் சென்றார்.

IV

இதற்கிடையில் மதம் மாறுவதற்காகப் பொருத்தமானதோர் மதத்தைத் தேர்வு செய்வதுபற்றிப் பல மாநிலங்களிலிருந்து அவருடைய நெருங்கிய தோழர்களுடன் அம்பேத்கர் கலந்து பேசினார். சீக்கிய மதத்தைத் தழுவுவது என்று அப்பொழுது அம்பேத்கர் முடிவு செய்திருந்தார். சீக்கிய மதத்தைத் தழுவுவதில் இந்துச் சபையின் தலைவர்களுடைய ஆதரவை அம்பேத்கர் நாடவேண்டும் என்று அவர்களுடைய நண்பர்களும் தோழர்களும் கருதினார்கள். ஏனெனில் சீக்கிய மதம் இந்து மதத்திற்கு அன்னியமானது அல்ல என்று இந்துச் சபையின் தலைவர்கள் நம்புகிறார்கள். சீக்கிய மதம் இந்து மதத்திலிருந்து கிடைத்ததாகும். ஆகவே சீக்கியர்களும் இந்துக்களும் திருமணம் செய்துகொள்ளு கிறார்கள்; இந்து மகாசபையில் சீக்கியரும் உறுப்பினராகிட அனுமதிக்கப்படுகின்றனர்.



அம்பேத்கர் விமானத்தில் ஏறும் காட்சி



அம்பேத்கர் தன்னுடைய தனிச் செயலாளர் நான் சந்த் ராட்டுவின் தோள்மீது கைபோட்டுக் கொண்டு தடியூன்றி நடக்கும் காட்சி.

அதன்படி இந்து மகாசபையின் முன்னணித் தலைவரான டாக்டர் முஞ்சே பம்பாய்க்கு அழைக்கப்பட்டார். 1936 சூன் 18ஆம் நாள் இரவு ஏழரை மணிக்கு அம்பேத்கரின் வீடான ராஜகிரகாவில் டாக்டர் முஞ்சேவுடன் டாக்டர் அம்பேத்கரும் மற்றும் இரு நண்பர்களும் கூடிப் பேசினார்கள். அம்பேத்கர் மதமாற்றம் குறித்த அனைத்துச் சிக்கல்களையும் தெளிவுபடுத்தினார். முஞ்சேவுடன் மனந்திறந்து பேசினார். அடுத்த நாள் அம்பேத்கரின் நோக்கம் ஓர் அறிக்கை வடிவில் தயாரிக்கப்பட்டு முஞ்சேவிடம் தரப்பட்டது. தனிப்பட்ட முறையில் அந்த அறிக்கையை ஏற்றுக்கொள்வதாக முஞ்சே கூறினார். அதைப்பற்றி டாக்டர் எம்.ஆர்.ஜெயகர், டாக்டர் என்.டி. சாவர்க்கர் ஆகியோருடன் டாக்டர் முஞ்சே பேசியபிறகு தீண்டப்படாத வகுப்பு இந்துக்கள் சீக்கிய மதத்திற்கு மாறுவதற்கான ஒப்புதலை இந்துத் தலைவர்களிடம் பெறுவதற்காக சூன் 22ஆம் நாள் அவர் பம்பாயைவிட்டுப் புறப்பட்டார். மதமாற்றத்தின் நோக்கங்கள் அடங்கிய அம்பேத்கரின் அறிக்கையின் நகலை முஞ்சே பல இந்துத் தலைவர்களுக்கு அவர்களின் ஒப்புதலுக்காக அனுப்பினார். அந்த அறிக்கைக்கு ஒப்புதல் தந்து கடிதம் எழுதியவர்களில் டாக்டர் எம்.ஆர். ஜெயகர், சேத்ஜீகல் கிஷோர் பிர்லா, சர்.சி. விசயராகவாச்சாரியார், ராஜா நரேந்திரநாத் முதலானோர் குறிப்பிடத்தக்கவர்கள். 1932இல் கூட்டு வாக்காளர் தொகுதி குறித்துத் தன்னுடன் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்ட அரிசனத் தலைவரான எம்.சி. இராஜாவுக்கு முஞ்சே 1936 சூன் 30ஆம் நாள் ஒரு கடிதம் எழுதினார். அம்பேத்கரின் தலைமையை வீழ்த்துவதற்கு இது ஒரு பொன்னான வாய்ப்பு என்று எண்ணிய எம்.சி. இராஜா காந்தி, இராஜாஜி, மாளவியா ஆகியோருக்கு அம்பேத்கரின் மதமாற்றம்பற்றிக் கடிதம் எழுதி அவர்களுடைய அறிவுரையைக் கோரினார்.

அவ்வேளையில், பண்டிட் கோவிந்த் வல்லப பந்த் மதமாற்றம் பற்றிக் காங்கிரசார் கொண்டிருந்த கருத்துகளை வெளிப்படுத்தினார். அரிசனங்கள் இரண்டுவித வழிகளிலும் பயன்பெறுவதை அனுமதிக்கமுடியாது என்றார். தீண்டப்படாதவர்கள், ஒன்று இந்துக்களாக இருந்துகொண்டு பூனா ஒப்பந்தம் வழங்கியுள்ள சலுகைகளை அனுபவிக்க வேண்டும்; அல்லது இந்துக்கள் அல்லாதவர்களாக ஆகி அச்சலுகைகளை இழக்க வேண்டும் என்று பந்த் கூறினார். அதற்கு அம்பேத்கர் பதிலளித்தார். வர இருக்கின்ற தேர்தலில் நானும் எனது கட்சியினரும் போட்டியிட முடியாது என்று எம்மை அச்சுறுத்துவதற்காகக் காங்கிரசு மேற்கொண்ட பகட்டு வித்தைதான்

இது. நானும் என் வகுப்பு மக்களும் இந்து மதத்திலேயே இருந்திட வேண்டும் என்பதற்காக ஏவிவிடப்பட்டுள்ள நெருக்குதல் இது. தீண்டப்படாத வகுப்பு மக்கள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களை இந்துக்களின் பங்கிலிருந்து பெறவில்லை; பொதுத் தொகுதிப் பிரிவிலிருந்துதான் பெற்றார்கள். தீண்டப்படாத வகுப்பு மக்கள் ஒடுக்கப்பட்ட வகுப்பினராக மத அடிப்படையில் வரையறை செய்யப்படவில்லை; சமூக, பொருளாதார அடிப்படையில்தான் அவ்வாறு வரையறை செய்யப்பட்டனர். தீண்டப்படாதவர்கள் உண்மையில் மற்றோர் மதத்தைத் தழுவாத வரையில் இந்து மதத்தில் நம்பிக்கை இழந்துவிட்டோம் என்றோ இந்து மதத்தைக் கண்டிக்கிறோம் என்றோ அவர்கள் கூறுவதை வைத்து அவர்கள் மதம் மாறிவிட்டதாகப் பொருள் கொள்ள முடியாது. என்னைப் பொறுத்தமட்டில் நான் இந்து மதத்திற்கு எதிரான கருத்துடையவன். ஆனால் வேறு எந்த மதத்தை ஏற்பது என்று இன்னும் முடிவு செய்யாதவன். ஆகவே சட்டத்தின்படி மட்டுமே நான் இந்துவாக இருக்கிறேன் என்று அம்பேத்கர் கூறினார்.

கோவிந்த் வல்லப பந்திற்கும் அம்பேத்கருக்கும் இடையே நடந்த கருத்து மோதல் பற்றி "சண்டே ஸ்டேட்ஸ்மேன்" வார இதழ், அரசியல் சட்டத்தில் டாக்டர் அம்பேத்கர் சாதாரண அறிவு படைத்தவர் அல்லர்; அதில் அவர் கரைகண்டவர். அவர் சில நேரங்களில் ஒரு செய்தியை மிக அதிகமான அழுத்தமுடன் வலியுறுத்தினாலும் அவர் பெற்றிருக்கின்ற உயர்ந்த அறிவாற்றல் காரணமாக அதைப்பற்றி மேலும் வாதிட அவர் எப்பொழுதும் தயாராக இருப்பவர். தீண்டப்படாத வகுப்பு மக்கள் மதம் மாறுவதன் மூலம் 'பொதுவானவை' (பௌத்தம், சமணம் மற்றும் பிற) என்று கருதப்படுகின்ற எந்த வகுப்பிற்குச் சென்றாலும் ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களும் இரட்டைத் தொகுதி முறையும் தீண்டப்படாதாருக்கு இல்லை என்றாகிவிடும். அதே பிரிவைச் சேர்ந்த வேட்பாளர்களுடன் சமமாகப் போட்டியிட முடியும். அவ்வாறில்லாமல் தீண்டப்படாதவர்கள் முகமதியராகவோ, கிறித்துவராகவோ (அல்லது பஞ்சாபில் மட்டும் சீக்கியராகவோ) மாறினால் முகமதியருக்கும் கிறித்துவர்க்கும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இருப்பதால் தீண்டப்படாதவர்கள் 'பொதுத்தொகுதிப்' பிரிவில் போட்டியிட முடியாமல் போய்விடும். ஒட்டுமொத்தமான மதமாற்றம் வகுப்புவாரித் தீர்ப்பில் உள்ள வகுப்புகளின் விகிதாச்சாரத்தைக் கடுமையாகப் பாதிக்கும்; ஆகவே அதைத் திருத்தி அமைக்க வேண்டியிருக்கும். ஆயினும் இந்து மதத்தின்மீது தமக்குள்ள

வெறுப்பினை வெளிப்படுத்துவது (உண்மையில் மதம் மாறுவது என்பதிலிருந்து இது முற்றிலும் வேறுபட்டதாகும்) அவர்கள் இந்துமதத்திலிருந்து வெளியேறிவிட்டார்கள் என்றாகிவிடாது. டாக்டர் அம்பேத்கர் கூறுவது சரியே' என்று கூறி அம்பேத்கரின் கருத்தை ஆதரித்து எழுதியது.

அதற்குள்ளாகக் காந்தி, மாளவியா, இராசகோபாலாச்சாரி ஆகியோரிடமிருந்து எம்.சி. இராஜாவிற்குப் பதில் கடிதங்கள் வந்தன. அம்மூவருமே அம்பேத்கர் - மூஞ்சே முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். நம்பிக்கைக்குரிய நண்பர் என்ற அடிப்படையில் மூஞ்சே இராஜாவுக்கு எழுதினார். ஆனால் அக்கடிதத்தை வெளியிடுமாறு காந்தி இராஜாவிடம் வற்புறுத்தினார். இராஜாவுக்கும் மூஞ்சேவுக்கும் இடையிலான கடிதங்களை வெளியிடுவதற்கு அனுமதியளிக்க வேண்டுமென்று கேட்டு மூஞ்சேவுக்குக் காந்தி கடிதம் எழுதினார். இந்துத் தலைவர்களின் ஒப்புதலைப் பெறுவதற்காக மூஞ்சே ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் சென்று கொண்டேயிருந்ததால் காந்தியின் கடிதம் அவருக்கு உரிய காலத்தில் கிடைக்கவில்லை. இராஜாவுக்கும் மூஞ்சேவுக்கும் இடையில் இரகசியமாகப் பரிமாறிக் கொள்ளப்பட்ட கடிதங்களை இராஜா வெளியிடவேண்டும் என்ற காந்தியின் நோக்கம் நேர்மையானதன்று. முகமதியரையும், கிறித்துவர்களையும், அரசையும் அம்பேத்கருக்கு எதிராகச் செயல்படச்செய்து அவரை வீழ்த்துவதற்கு ஒரு கருவியாக, ஏமாற்றமடைந்திருந்த இராஜாவைக் காந்தி பயன்படுத்திக்கொண்டார். ஆகவே மூஞ்சேவின் இசைவின்றியே அவர்கள் இருவருக்கும் இடையிலான கடிதங்களை இராஜா பத்திரிக்கைகளில் வெளியிட்டுவிட்டார்.

தீண்டப்படாதவர்கள் சீக்கிய மதத்திற்குச் செல்வதையும் இப்புதிய சீக்கியர்கள் (Neo-Sikhs) பூனா ஒப்பந்தத்தின் சலுகைகளை அனுபவிப்பதற்காக அவர்களை அட்டவணைப்படுத்தப்பட்ட பட்டியலில் சேர்ப்பதையும் இந்து சபை எதிர்க்காது. ஆனால் இதற்கு முன்நிபந்தனையாக, இஸ்லாமிய மதத்தையும் கிறித்தவ மதத்தையும் புறக்கணித்துவிட்டுச் சீக்கிய மதத்தில் சேரவும், தீண்டப்படாதவர்களை இஸ்லாமிய மதத்திற்கு ஈர்த்திட முகமதியர் மேற்கொண்டுள்ள முயற்சிகளை முறியடித்திட இந்துக்களும் சீக்கியர்களும் மேற்கொள்ளுகின்ற பிரச்சாரத்திற்கு முழுஈடுபாட்டுடன் ஒத்துழைக்கவும், இந்துக் கலாச்சாரத்தைப் பிரச்சாரம் செய்யவும் பின்பற்றவும் அம்பேத்கர் உறுதியளிக்க வேண்டும் என்பதுதான் மூஞ்சே முன்மொழிந்த கருத்தாகும்.

மூஞ்சே அம்பேத்கரின் அறிக்கையையும் அவருடைய கடிதத்துடன் இணைத்து இராஜாவுக்கு அனுப்பினார். அம்பேத்கரின் அறிக்கையில், 'தீண்டப்படாதவர்களுக்கு அரசியல், சமூக, பொருளாதாரத் துறைகளில் தேவைப்படுவனவற்றை அளிக்கக்கூடியதாக இஸ்லாம் இருக்கிறது. கிறித்தவ மதத்திற்கோ அமெரிக்காவிலிருந்தும் இங்கிலாந்திலிருந்தும் அளவிலாத செல்வமும் ஆதரவும் கிடைக்கிறது. பிரிட்டிஷ் கிறித்தவ அரசு அதற்கு உறுதுணையாக விளங்குகிறது. சீக்கிய மதத்திற்கோ இதுபோன்ற அளவில் ஈர்க்கக்கூடிய வசதிகள் இல்லை. இஸ்லாமிய மதத்தைப்போலவோ கிறித்துவ மதத்தைப்போலவோ தீண்டப்படாத வகுப்பு மக்களுக்குச் சமூக, பொருளாதார, அரசியல் நிலைகளில் சீக்கிய மதத்தால் உதவிட முடியாது. ஆயினும் இந்துக்களின் நலன் கருதியே நான் சீக்கிய மதத்தில் சேரவிரும்புகின்றேன். புதிய சீக்கியர்களின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாகக் கூடிய பொருளாதார அரசியல் தடைகளை அகற்றுவதில் சீக்கியர்களுக்கு உதவிசெய்ய வேண்டியது இந்துக்களின் கடமையாகும்' என்று கூறப்பட்டிருந்தது.

சீக்கிய மதத்தைத் தேர்ந்தெடுத்தது ஏன் என்று அம்பேத்கர் மூஞ்சேவிடம் அளித்த அறிக்கையில் மேலும் விளக்கியிருந்தார். 'மாறுவதற்குரிய மதங்களாக இருக்கின்ற இஸ்லாம், கிறித்தவம், சீக்கியம் ஆகியவற்றுள் இந்துக்களின் கண்ணோட்டத்தில் எது சிறந்தது என்பதே இரண்டாவது கேள்வியாகும். இவற்றுள் சீக்கிய மதம்தான் சிறந்ததாகத் தெரிகிறது. தீண்டப்படாத வகுப்பு மக்கள் இஸ்லாமிய மதத்திலோ, கிறித்தவ மதத்திலோ சேருவதனால் அவர்கள் இந்து மதத்தைவிட்டு வெளியேற வேண்டியிருப்பதுடன், இந்துக் கலாச்சாரத்தை விட்டும் வெளியேற வேண்டியிருக்கும். இதற்கு மாறாக அவர்கள் சீக்கியராகிவிட்டால் அவர்கள் இந்துக் கலாச்சாரத்தில் தொடர்ந்து இருக்கலாம். இதன்மூலம் இந்துக்களுக்குக் கிடைக்கும் நன்மை பெரிதாகும்.

மதமாற்றத்தின் காரணமாக ஒட்டுமொத்தமாக நாட்டிற்கு ஏற்படக்கூடிய விளைவுகள்பற்றி மனங்கொள்ள வேண்டியது முதன்மையாகும். இஸ்லாத்திற்கோ, கிறித்தவத்திற்கோ மதம் மாறினால் தீண்டப்படாத வகுப்பு மக்கள் அவர்களுடைய தேசியத் தன்மையை இழந்துவிடுவார்கள். அவர்கள் முகமதியராக மாறிவிட்டால் முகமதியரின் எண்ணிக்கை இரண்டு மடங்காகிவிடும்; முஸ்லீம் ஆதிக்க அச்சுறுத்தல் உண்மையானதாகிவிடும். தீண்டப்படா

தவர்கள் கிறித்தவ மதத்திற்குச் சென்றால், கிறித்தவர்களின் எண்ணிக்கை அய்ந்தாறு கோடியாக உயர்ந்துவிடும். இந்திய நாட்டில் பிரிட்டிஷ் ஆட்சியின் பிடியை மேலும் வலுப்படுத்திட அது உதவும். இவ்வாறில்லாமல், அவர்கள் சீக்கிய மதத்தில் சேர்ந்தால், நாட்டின் முன்னேற்றத்திற்கு ஊறுவிளைவிக்காமல் இருப்பதுடன் நாட்டின் தலைவிதியை நிர்ணயிப்பதில் உறுதுணை யாகத் திகழ்வார்கள்; அவர்கள் தங்களுடைய தேசியத்தன்மையை இழக்க வேண்டியிருக்காது. மேலும் நாட்டின் அரசியல் முன்னேற் றத்திற்கும் அவர்கள் தம் பங்களிப்பைச் செய்வார்கள். ஆகவே தீண்டப்படாத வகுப்பு மக்கள் மதம்மாறுவதானால், நாட்டின் நலன்கருதி அவர்கள் சீக்கிய மதத்திற்குச் செல்லவேண்டும்' என்று குறிப்பிட்டிருந்தார்.[76]

இவ்வாறு நாட்டின் நலனை முதன்மையானதாகக் கருதிய அம்பேத்கர் பாரத நாட்டின் உண்மையான உயர்ந்த சிறந்த மகன் அல்லவா? இராஜா மூஞ்சேவுக்கு எழுதிய பதில் கடிதத்தில், நாங்கள் முற்றிலும் ஒருங்கிணைந்த ஒரு வகுப்பாக எங்கள் விருப்பத்தின்படி முன்னேறிச் செல்பவர்களாக இருக்க விரும்புகின்றோம். அதை அடைவதற்கான சிறந்த வழி இந்துவாகப் பிறந்த எங்கள் பிறப்புரிமையைத் தூக்கியெறிந்துவிடாமல், இந்து மதத்திலேயே இருப்பதேயாகும். எங்கள் நலன் கருதிச் செய்யப்படும் மாற்றங்கள் எங்களுடைய வகுப்பினர்க்கு மட்டும் வசதியானதாக இருந்தால் போதாது; மற்ற இந்து வகுப்புகளின் நலன்களுக்கும் இசைந்ததாக இருக்க வேண்டும். நடைபெற்றுக்கொண்டிருக்கும் வகுப்பு மோத லில், வகுப்புப் போட்டியில் நாங்கள் பலிகடாக்களாக ஆக விரும்பவில்லை என்று கூறியிருந்தார்.

அம்பேத்கரும் மூஞ்சேவும் மேற்கொண்ட முயற்சியைக் கொடுமையானது என்று இராஜகோபாலாச்சாரி வருணித்தார். ஆனால் அவரே அதன்பின் ஏழாண்டுகள் கழித்து, இந்தியாவை இரண்டாகத் துண்டாடவேண்டும் என்று இதைவிடப் பன்மடங்கு ஆபத்தான கருத்தினை முன்வைத்தார். காந்தி இராஜாவின் கருத்தை ஆதரித்தார். காந்தி அவருக்கே உரியமுறையில் தீண்டாமையை அகற்றுவது என்பது தீண்டாமையின் பிறப்பிடமாகிய இந்து மதத்தினால் மட்டும் முடியும் எனக் கூறினார். தீண்டாமை ஒரு மதப் பிரச்சினை. மதப் பிரச்சினையை ஒருபோதும் ஒரு பண்டம்போல் என்னால் கருதமுடியாது என்று கூறினார்.

இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு அம்பேத்கர் பதிலளித்தார்: "மூஞ் சேவின் இசைவின்றி அவருடைய கடிதங்களை எம்.சி. இராஜா

பத்திரிக்கைகளுக்கு வெளியிட்டிருக்கக்கூடாது. அவ்வாறு அவர் செய்தது நம்பிக்கைத் துரோகமாகும். இராஜாவுக்குச் சமய உணர்வை நிறைவுசெய்வது தவிர வேறொன்றும் தேவையில்லையெனில் சட்டசபைகளில் இட ஒதுக்கீடு பெறுவது போன்ற இம்மண்ணுலக வாழ்வின் தேவைகளை அவர் ஏன் வலியுறுத்தினார்? இந்துவாக வாழ்ந்து இந்துவாக இறக்க விரும்புகின்ற இராஜா பொருளாதார நலநோக்கங்கொண்ட திட்டங்களை ஆதரித்தது ஏன்?''

தீண்டப்படாதவர்களின் மதமாற்ற முடிவைப்பற்றி, காந்தியும் மாளவியாவும் இப்பொழுது குறை சொல்கிறார்கள். ஆனால் அந்த உரிமை அவர்களுக்கு இல்லை. ஏனெனில் பூனா ஒப்பந்தத்தின் போது தீண்டப்படாதவர்களின் மேம்பாட்டிற்காக அவர்கள் அளித்த வாக்குறுதிகளை முற்றிலுமாக நிறைவேற்றத் தவறிவிட்டார்கள். காந்தி சொல்வது அறிவுக்குப் பொருத்தமற்றதாக இருக்கிறது. மதமாற்றத்தை ஒரு பண்டமாகத் தன்னால் கருதிடமுடியாது என்று காந்தி இப்போது சொல்கிறார். ஆனால் பூனா ஒப்பந்தத்தின்போது தீண்டாமைப் பிரச்சினையை முற்றிலுமாக ஒரு பண்டமாகக் கருதியே செயல்பட்டார். இப்போது இதை இல்லை என்று மாற்றிப்பேசுவது பொய் என்று காந்திக்குத் தோன்றவில்லையா? என அம்பேத்கர் காந்திக்கும் மாளவியாவுக்கும் விடைபகன்றார். தங்களின் எதிர்காலத்தைப்பற்றி ஆழ்ந்த அக்கறை கொண்டிருக்கின்ற இந்துக்கள், இராசகோபாலாச்சாரி நல்ல மனநிலையில்தான் அவருடைய அறிக்கையை எழுதினாரா என்று அய்யப்படும் அளவிற்கு இராஜகோபாலாச்சாரியின் அறிக்கை நேர்மையற்றதாக இருக்கிறது என்று அம்பேத்கர் சொன்னார்.

'சீக்கிய மதத்திற்கு மதம் மாறுவது என்ற கருத்தைச் சங்கராச்சாரியார், டாக்டர் குற்றக்கோட்டி உட்பட பல முக்கிய இந்துத் தலைவர்கள் ஆதரித்திருக்கிறார்கள். உண்மையில் சீக்கிய மதத்திற்குச் செல்வதுபற்றிய எண்ணத்தை உருவாக்கி அதை என்னிடம் வற்புறுத்தியவர்கள் இந்துக்கள்தான். சீக்கியத்தை ஒரு மாற்றாக நான் கணக்கில் எடுத்துக்கொண்டதற்கு இந்துக்களின் எதிர்காலத்தைப்பற்றிக் குறிப்பிடத்தக்க அளவில் நான் கொண்டிருக்கின்ற அக்கறையே காரணமாகும்'[77] என்று மனம் நெகிழ்ந்து அம்பேத்கர் அவருடைய அறிக்கையின் இறுதியில் குறிப்பிட்டிருந்தார்.

முன்னர் வாழ்ந்த பெரும் இந்துத் தலைவர்களும் தற்காலத்தில் வாழும் சிறந்த இந்துத் தலைவர்களும், இந்து மதத்திற்கும், சீக்கிய

மதத்திற்கும் ஒரே தன்மையான கலாச்சாரமும் கொள்கைகளும் இருப்பதால், சீக்கிய மதத்தை இந்து மதத்திலிருந்து கிளைத்த ஒரு பிரிவாகவே கருதினார்கள். அதனால்தான் அம்பேத்கருடைய தலைமையின்கீழ்த் தீண்டப்படாத வகுப்பு மக்கள் மற்ற மதங்களுக் குச் செல்வதைவிட சீக்கிய மதத்திற்குச் செல்வதை முஞ்சேவும், சங்கராச்சாரிகுற்றக்கோட்டியும் ஆதரித்தனர். இந்து மதத்தோடு இசைந்த இயல்புடையதாகச் சீக்கிய மதம் இருப்பதால் இந்து மதத்திற்குப் பெரும் பாதிப்பு ஏற்படாது என எண்ணினர்.

V

கடந்த காலங்களில் இந்துக்கள் தங்கள் மதத்தை விட்டுவிலகி மற்றோர் மதத்தில் சேர்ந்தபோது இந்தியா பெரும் அதிர்ச்சிக் குள்ளாயிற்று என்ற வரலாற்று உண்மையை அம்பேத்கர் நன்கு அறிந்திருந்தார். அதனால் இப்பொழுது மதமாற்றம் மூலம் இந்துச் சமூகத்திற்கு ஒரு பேரதிர்ச்சியைக் கொடுக்க எண்ணினார். கடந்த காலத்தில் முகமதியராக மதம் மாறிய இந்துக்கள் இந்திய மண்ணில் முஸ்லீம்களின் ஆட்சியை ஏற்படுத்துவதற்காகப் போரிட்டனர். தீண்டப்படாதாரின் மதமாற்ற இயக்கம் தொடங்கி ஆறு ஆண்டுகள் கழிந்த பின்னர், ஜின்னா, லூயிஃபிஷருக்கு அளித்த பேட்டியொன் றில், இந்தியாவில் உள்ள முகமதியர்களில் எழுபத்தைந்து விழுக்காட்டினர் முன்பு இந்துக்களாக இருந்து மதம் மாறி வந்தவர்களே என்று சொன்னார். மதச் சார்பின்மையின் பெரு மையை உணர்த்திட வேண்டுமென்ற விழைவால் ஜவஹர்லால் நேருவும்கூட இங்குள்ள முகமதியர்களில் தொண்ணூற்றைந்து விழுக்காட்டினர் இந்து மதத்திலிருந்து மதம் மாறியவர்களே என்று வரையறுத்தார்.[78] சாதி இந்துக்கள், தீண்டப்படாத இந்துக்களின் நலன்கள்பற்றி அக்கறையற்றவர்களாக இருப்பதுடன் அவர்களை மனிதத்தன்மையற்ற முறையில் இழிவாகவும் நடத்துகின்றனர். இது தற்கொலைக்கு ஒப்பானதாகும். இதனால் இந்துக்களின் ஒட்டு மொத்த வலிமை குறைந்துகொண்டேயிருக்கிறது என்ற உண் மையை, நல்லறிவு படைத்த இந்துத் தலைவர்கள் உணர்ந்திருந்த தால்தான் அம்பேத்கரின் மதமாற்ற அறிவிப்பைப் பேரிடியாகக் கருதினார்கள்.

இந்து மதத்தின் வலிமையையும் ஆதரவையும் அடித்தளமாகக் கொண்டிருக்கிற காங்கிரசின் தலைவர்களோ மதமாற்றம் பற்றிக் கவலைப்படவில்லை. இந்துக்கள் மதம் மாறியதால் திருவிதாங்கூர், அசாம், பஞ்சாப் ஆகிய பகுதிகளில் ஏற்பட்ட விளைவுகளை

இதன்பின் அளிக்கப்பட்டுள்ள விளக்கங்களிலிருந்து தெளிவாக அறிய முடியும்.

இந்துமதக் காவலர்களான சிவாஜி, தயானந்தர், சிரத்தானந்தர், பரமானந்தர், சாவர்க்கர் போன்றவர்கள், இந்து மதத்திலிருந்து மதம் மாறிச் சென்றவர்களை மீண்டும் இந்து மதத்திற்குக் கொணரவும்; இந்தியாவில், இந்தியத் தேசியத் தன்மைக்கு எதிரானவர்களின் எண்ணிக்கை மேலும் பெருகுவதைத் தடுக்கவும் இடையறாது கடுமையாக ஏன் உழைத்தனர் என்பது இவற்றால் புலனாகும். இந்துக்களின் தாயகமான இந்த நாட்டில் மாபெருங்கேடு நிகழாமல் தடுப்பதற்காகத்தான் மூஞ்சேவும், சங்கராச்சாரி குற்றக்கோட்டியும் அம்பேத்கரை நாடிச் சென்று மதமாற்றம் மேற்கொள்வதாயின், சீக்கியத்தைத் தேர்ந்தெடுக்குமாறு அவரிடம் வேண்டினார்கள்.

அசாமில் 1901இல் மக்கள் தொகையில் 10,000 பேர்களில் இந்துக்கள் 5578, முகமதியர் 2689, கிறித்தவர் 23 என்ற எண்ணிக்கையில் இருந்தனர். ஆனால் 1941 இல் இந்துக்களின் எண்ணிக்கை 4129 எனக் குறைந்து விட்டது. முகமதியர் 3373 ஆகவும், கிறித்தவர் 35 ஆகவும் எண்ணிக்கையில் அதிகமாயினர். 1901இல் பஞ்சாபில் முகமதியர் அல்லாதவர் மொத்த மக்கள் தொகையில் 53 விழுக்காட்டினராகவும், முகமதியர் 47 விழுக்காட்டினராகவும் இருந்தனர். ஆனால் 1941இல் முகமதியர் அல்லாதவர் 47 விழுக்காட்டினராகக் குறைந்துவிட்டனர். முகமதியர் 53 விழுக்காட்டினராக அதிகரித்துவிட்டனர். 1920இல் திருவிதாங்கூரில் மொத்த மக்கள்தொகையில் இந்துக்கள் 83 விழுக்காட்டினராகவும், கிறித்தவர்கள் 12.4 விழுக்காட்டினராகவும் இருந்தனர். 1941 இல் இந்துக்களின் எண்ணிக்கை 60.5 விழுக்காடாகக் குறைந்தது; கிறித்தவரின் எண்ணிக்கை 32.3 விழுக்காடாக உயர்ந்துவிட்டது.

காட்ஃபிரே எட்வர்ட் பிலிப்பிஸ் என்பவர் "தீண்டப்படாதவர்களின் நாட்டம்" (Untouchable's quest) என்ற அவருடைய நூலில் தீண்டப்படாதவர்களை மேலும் கிறித்துவ மதத்திற்கு ஈர்ப்பது எப்படியென்பதை விளக்கும்போது, இந்தியாவில் உள்ள கிறித்தவர்களில் எழுபது விழுக்காட்டினர் தீண்டப்படாத வகுப்புகளிலிருந்து வந்தவர்களே என்று குறிப்பிட்டுள்ளார். 1931 உடன் முடிந்த பத்தாண்டுக் காலத்தில் இந்தியாவில் கிறித்தவர் எண்ணிக்கை மாதந்தோறும் 5000 வீதம் அதிகமாகி வந்தது. சிற்றூர்ப் புறங்களிலோ மாதந்தோறும் மதமாற்றத்தின் மூலம் 7000 பேர் கிறித்தவராகிவந்தனர்.

இந்துக்களை முகமதியராக மதம் மாற்ற வேண்டும் என்ற சிந்தனை முகமதியத் தலைவர்களிடையே பல தலைமுறைகளாகத் தொடர்ந்து இருந்து வருகிறது. இந்த எண்ணத்தின் அடிப்படையில் தான், மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்போது தீண்டப்படாதவர் களை 'இந்துக்கள்' என்று பதிவு செய்யப்படுவதற்கு முகமதியர் எதிர்ப்புத் தெரிவித்தனர்.[79] இதே உள்நோக்கத்துடன்தான் இந்தியத் தேசியக் காங்கிரசின் தலைவர் பதவியிலிருந்துகொண்டே மௌலானா முகமது அலி, தீண்டப்படாதவர்களை இரு கூறுகளாக ஆக்கி இஸ்லாத்திலும் இந்து மதத்திலும் இணைத்துக்கொள்ள வேண்டும் என்று கூறினார்.

அம்பேத்கரின் சாதி ஒழிப்பு குறித்த ஆராய்ச்சிக் கட்டுரை மீதான விவாதம் நாட்டில் தொடர்ந்து நடைபெற்றது. அதைப்பற் றிய பாராட்டுரைகளும், கண்டனக் குரல்களும் நாடெங்கிலும் கேட்டன. ஏறக்குறைய இந்நாட்டின் எல்லாச் சிந்தனையாளர்களும் தலைவர்களும் அம்பேத்கரின் ஆராய்ச்சியைக் குறித்து அவரவர் கருத்தினை வெளியிட்டனர். சாவர்க்கர் அம்பேத்கருக்கு அளித்த பதிலில், சாதி ஒழிப்புபற்றி அம்பேத்கர் கொண்டிருந்த கருத்தி னையே வெளிப்படுத்தியிருந்தார். இந்துக்களின் வாழ்க்கை 'தோல் விகளின் தொடர் வரலாறு' என்ற அம்பேத்கரின் கூற்றைச் சாவர்க்கர் ஏற்க மறுத்தார். வரலாற்றில் காணப்படும் இந்துக்களின் பொற்காலங்கள் சிலவற்றைச் சுட்டிக் காட்டினார். காந்தி, எம்.சி. இராஜாவுக்கு எழுதிய கடிதத்தில் தீண்டப்படாதவர்களின் மதமாற்றத்திற்குத் தன் எதிர்ப்பைத் தெரிவித்த பிறகு, அம்பேத்கரின் சாதிஒழிப்புப்பற்றிய ஆராய்ச்சிக்குப் பதிலளித்தார். 'டாக்டர் அம்பேத்கரின் குற்றச்சாட்டு' என்ற தலைப்பிட்டுக் காந்தி இரண்டு கட்டுரைகள் எழுதினார். எதிரியைச் சிறிது புகழ்ந்துவிட்டு அதன்பின் அவரைக் கண்டிப்பது காந்திக்கே உரிய கலையாகும். அதே தன்மையில் அம்பேத்கர் எதிர்காலத்தில் எந்த மதத்தில் இருந்தாலும், மற்றவர்கள் அவரை எளிதில் மறந்துவிடாமல் இருக்கும் வகையில் முன்னணியில் நின்று செயல்பட்டுக்கொண்டேயிருப்பார் என்று காந்தி கூறினார். அம்பேத்கர் இந்து மதத்திற்கு ஒரு சவாலாக இருக்கிறார் என்றும் சுட்டிக் காட்டினார். 'இந்துக்கள் அனைவரும் தத்தம் முன்னோர்களின் குலத்தொழிலைச் செய்து உயிர் வாழ வேண்டும் என்பதுதான் வருணாசிரமம் வகுத்தளித்துள்ள வாழ்க்கை நெறியாகும். மேலும் அம்பேத்கர் வகுத்துள்ள அளவுகோலின் படிப் பார்த்தால், எந்தவொரு மதமும் தேறாது. சைத்தன்யர், தியான்தேவ் (Dyandev), துக்காராம், திருவள்ளுவர், இராசாராம்

மோகன்ராய், இராமகிருஷ்ண பரமஹம்சர், தேவேந்திரநாத் தாகூர், விவேகானந்தர் போன்ற எண்ணற்றவர்களைத் தோற்றுவித்த இந்து மதம் அம்பேத்கரின் ஆராய்ச்சியில் குறிப்பிட்டுள்ளவாறு எத்தகைய தகுதியும் இல்லாததாக எப்படி இருக்க முடியும்? என்ற கேள்வியுடன் காந்தி அக்கட்டுரையை முடித்திருந்தார்.

லாகூரில் நடைபெறவிருந்த மாநாட்டில் நிகழ்த்துவதற்காகத் தயாரித்த உரையை விளம்பர ஆசை காரணமாகத்தான் வெளியிட்டிருப்பதாக மறைமுகமாகக் காந்தி குறைகூறியிருப்பது இரங்கத்தக்கதாகும் என்று அம்பேத்கர் காந்தியின் கட்டுரைக்குப் பதிலளித்தார். கண்ணாடி வீடுகளில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற மகாத்மா தம்மீது கல்லெறியக்கூடாது எனக் குறிப்பிட்டார். "ஒருவனின் இயல்பான விருப்பத்தைப்பற்றிக் கருத்தில் கொள்ளாமல் அவன் முன்னோர்கள் குலத்தொழிலையே செய்ய வேண்டும் என்று கூறுகின்ற காந்தியின் கோட்பாட்டிற்கும் நால்வருண அமைப்புக்கும் எள்ளளவும் வேறுபாடில்லை. காந்தி சட்டங்களை அளவுகோலாக எடுத்திருக்க வேண்டும். ஒரு பாதி துறவிபோலவும் இன்னொரு பாதி அரசியல்வாதியாகவும் அவர் நடந்துகொள்ளக்கூடாது. காந்தி இந்து மதத்தில் தோன்றிய சிறந்த ஞானிகளைப் பட்டியலிட்டுக் காட்டினார். ஆனால் அந்த ஞானிகளின் தன்னலமற்ற வாழ்க்கையோ அவர்கள் கூறிய உயர்ந்த கருத்துகளோ வெகுமக்களின் வாழ்க்கையில், நடப்புகளில் எத்தகைய தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. சாத்திரங்களின் கருத்துகளுக்கு எதிராகவும் அவர்கள் குரல் கொடுக்கவில்லை. இந்து மதத்தில் சிறந்தவர்கள் சிலராகவும், இழிந்தவர்கள் பலராகவும் இருப்பது ஏன்?" எனக் காந்திக்கு வினா விடுத்தார். "வாதமெல்லாம் சமூக நடப்புகளில் இந்துச் சமயமும் இந்துக்களும் கொண்டிருக்கிற குறைபாடான நடைமுறைகள் பற்றியது அன்று; அவர்களுடைய கோட்பாடுகள் என்னுடைய கண்ணோட்டத்தின்படி தவறானவையாக உள்ளன என்பதே ஆகும்" என்று அம்பேத்கர் விளக்கமளித்தார். எந்த மதமாவது பிந்திய தலைமுறைகளிலும் காலக்கட்டங்களிலும் எண்ணற்ற சிறந்த மனிதர்களைத் தொடர்ச்சியாகத் தோற்றுவித்திருக்கிறதா என்ற வினாவுக்கு விடை பகராமலே அம்பேத்கர் விட்டுள்ளார்.

காந்தியும் மற்றவர்களும் எதிர்த்தாக்குதல் தொடுத்திருந்தபோதிலும், அம்பேத்கர் மதமாற்ற முயற்சியில் மேலும் ஓரடியை எடுத்து வைத்தார். அம்பேத்கர் அவருடைய தொண்டர்களடங்கிய ஒரு குழுவினரைச் சீக்கிய சமய நெறிகளைக் கற்பதற்காக வேண்டி

அமிர்தசரசில் இருந்த சீக்கிய மத நிறுவனத்திற்கு 1936 செப்டம்பர் 18ஆம் நாள் அனுப்பினார். அக்குழுவிலிருந்த பதின்மூன்று பேர்களில் கற்றறிந்த அறிஞர் எவரும் இல்லை; அம்பேத்கரின் கோட்பாடுகளை உய்த்துணர்ந்தவர் யாருமில்லை. அவர்கள் அமிர்தசரசை அடைந்தவுடன் அவர்களுக்கு அம்பேத்கர் எழுதிய ஒரு கடிதத்தில் மதமாற்ற இயக்கத்தில் அவர்கள் முன்னணிப் படையாகத் திகழ்வதாகக் கூறி அவர்களைப் பாராட்டி ஊக்குவித் தார். அவர்கள் மேற்கொண்டுள்ள முயற்சியில் எல்லா வெற்றிகளை யும் பெறவேண்டும் என்று எழுதியிருந்தார். ஆனால் அக்கடிதத்தில் அவர்கள் சீக்கியச் சமயத்தைத் தழுவுதல்பற்றி அவர் எதுவும் குறிப்பிடவில்லை என்பதை நாம் கருத்திற்கொள்ள வேண்டும். அக்காலக்கட்டத்தில் அம்பேத்கர் சீக்கிய மத அமைப்புடனும் அதன் தலைவர்களுடனும் நெருக்கமான தொடர்புகொண்டிருந்தார். தீண்டப்படாதவர்கள் சீக்கியச் சமயத்தை ஏற்றுக் கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அவர்களின் நலனுக்காகப் பம்பாயில் ஒரு கல்லூரியைத் தொடங்குவது என்று அம்பேத்கரும் சீக்கிய மத அமைப்பினரும் பேசி முடிவு செய்திருந்தனர். அக்கல்லூரியில் தலைவராகவும் வழிகாட்டியாகவும் அம்பேத்கர் இருக்கப்போகிறார் என்றும் பேசிக்கொள்ளப்பட்டது. சீக்கியச் சமயத்தைப்பற்றிக் கற்க அமிர்தசரசு சென்ற பயிற்சிக் குழுவினர், ஆர்வமிகுதியினால் சீக்கிய மதத்திலேயே சேர்ந்துவிட்டனர். ஆனால் அம்பேத்கர் அவர்களை அங்கு அனுப்பியதன் நோக்கம் அவர்கள் சீக்கிய மதத்தில் சேரவேண்டும் என்பதன்று. அவர்கள் பம்பாய் வந்து சேர்ந்தபோது அவர்களை எவரும் விருப்பமுடன் வரவேற்கவில்லை. அதன்பின் அவர்களைப்பற்றி யாரும் கவலைப் படவில்லை.

சுதந்திரத் தொழிற்கட்சி தொடக்கம்

1936 ஆம் ஆண்டு முடிவை நெருங்கியது. 1935ஆம் ஆண்டைய இந்திய அரசுச் சட்டத்தின்படி 1937ஆம் ஆண்டு இந்திய மாகாணங்களில் சுயாட்சி ஏற்படுத்தவிருந்தது. அப்போது நடைபெறவிருந்த தேர்தல் அனைவரின் கவனத்தையும் ஈர்த்திருந் தது. தேர்தலில் போட்டியிடும் முயற்சிகள் தொடங்கப்பட்டன. தேர்தலில் போட்டியிடுவதற்காக ஒவ்வொரு கட்சியும் தயாரிப்பு வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டன. தேர்தலில் போட்டியிடுவதற் காக அம்பேத்கரும் திட்டங்களை வகுத்திடத் தொடங்கினார். அவருடைய தோழர்களுடன் கலந்து பேசியபிறகு, 1936ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் சுதந்திரத் தொழிற் கட்சி (Independent Labour Party) என்கிற ஒரு புதிய அரசியல் கட்சியைத் தோற்றுவித் தார். நிலமற்றவர்கள், ஏழை நிலக்குத்தகையாளர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் ஆகிய அனைவரின் உடனடித் தேவைகள், துன்பங்கள் ஆகியவற்றுக்குத் தீர்வு கூறுகின்ற சீரிய வேலைத் திட்டத்தை உருவாக்கினார்.

அம்பேத்கரின் வேலைத்திட்டம் கீழ்க்குறித்துள்ள கருத்துகளை விளக்கியிருந்தது. முழுப்பொறுப்பு வாய்ந்த சுயாட்சி அரசு அமைந்திடப் புதிய அரசியலமைப்புச் சட்டம் வழி வகுக்கவில்லை யாயினும், புதிய அரசியல் சட்டத்தை ஏற்றுச் செயல்படுவதெனச் சுதந்திரத் தொழிற்கட்சி முடிவு செய்தது.

நிலங்கள் சிறுசிறு துண்டுகளாகப் பிரிந்து கிடப்பதும், நிலத்தை நம்பியே தொழில் செய்வோரின் எண்ணிக்கை அளவுக்கதிகமாக இருப்பதும் விவசாயிகளின் வறுமைக்குக் காரணங்களாகும். நிலத்தை நம்பி வாழ்வோரின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கான வழி பழைய தொழிற்சாலைகளைப் புதுப்பிப்பதும், புதிய தொழிற்சாலைகளைத் தொடங்குவதும் ஆகும். மக்களின் உழைப் புத் திறனையும் உற்பத்தி ஆற்றலையும் பெருக்குவதற்காக, தொழிற்கல்வியை அளித்திட விரிவாகத் திட்டமிட்டுச் செயல்படுத்த வேண்டும். தேவைக்கு ஏற்பத் தொழிற்சாலைகளின் நிர்வாகத்தை அரசே ஏற்று நடத்த வேண்டும். தொழிற்சாலைகளை அரசுடைமை யாக்க வேண்டும். விவசாயக் குத்தகையாளர்களிடம் நிலக்கிழார்கள் அதிகக் குத்தகை வசூலிப்பதையும் குத்தகை செய்யும் நிலங்களில்



நோயுற்றுத் தளர்ந்த நிலையில் அம்பேத்கர்

இருந்து வெளியேற்றுவதையும் தடுத்து அவர்களைப் பாதுகாப்பதற்காகச் சட்டத் திருத்தம் செய்யப்படும். தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் நன்மைகள் இவர்களுக்கும் கிடைத்திட உரிய மாற்றங்களுடன் சட்டத் திருத்தத்தில் வழிவகை செய்யப்படும் என்று கட்சியில் அறிக்கை உறுதி அளித்தது.

தொழிற்சாலைகளில் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தல், நீக்குதல், பதவி உயர்வு அளித்தல் ஆகியவற்றை நெறிப்படுத்தல்; தொழிலாளர் வேலை செய்யும் நேரத்தின் அளவை நிர்ணயித்தல் நியாயமான கூலிபெற வழிகாணல், ஊதியமுடன்கூடிய விடுமுறை அளித்தல், தொழிலாளர்களுக்கு மலிவானதும் தூய்மையானதுமான குடியிருப்புகள் அமைத்தல் போன்ற தொழிலாளர் நலத்திட்டங்களைச் செயல்படுத்துவதற்கான சட்டங்கள் இயற்றப்படும் என்று கட்சியின் அறிக்கை அறிவித்தது. வேலையில்லாதவர்களுக்குத் தரிசு நிலங்களைத் தருவது, அவர்களை மராமத்து வேலைகளில் ஈடுபடுத்துவது ஆகியவற்றின்மூலம் வேலையின்மையை ஒழிக்க முடியும் என்றும் அந்த அறிக்கை கூறியது. தொழில் மய்யங்களிலும் பெரிய நகரங்களிலும் வாழும் கீழ்நிலையிலுள்ள நடுத்தர மக்களுக்கு வாடகை வீட்டில் குடியிருப்பதால் ஏற்படக்கூடிய தொல்லைகளிலிருந்து பாதுகாப்பு அளிக்கப்படும் என்றும் உறுதியளிக்கப்பட்டது.

அதன்பின், சமூகச் சீர்திருத்தம்பற்றிய கோட்பாடுகளை அவ்வறிக்கை விளக்கியது. சமூகச் சீர்திருத்தவாதிகளுக்கு உதவுவதாக உறுதியளித்தது. எல்லாவகையான வைதிகப் போக்குகளையும் பிற்போக்குத்தனமான செயல்களையும் தண்டிக்க வேண்டியது தேவையென்று வலியுறுத்தியது. அறக்கட்டளைகளிலிருந்து கிடைக்கும் கூடுதல் வருவாயைக் கல்வி அளித்தல் போன்ற சமயச் சார்பற்ற பணிகளுக்குச் செலவிட வேண்டும் என்று கருத்துரைத்தது. வீடுகட்டுதல், தூய்மையைப் பேணுதல் முதலானவற்றை அடிப்படையாகக் கொண்ட கிராம அமைப்புத் திட்டத்தை முன்மொழிந்தது. கிராமப்புற மக்களின் நோக்கினைப் புதிய வழியில் திருப்புதல், கிராமங்களில் சமுதாயக் கூடங்கள், நூலகங்கள், திரையரங்குகள் ஏற்படுத்திடல் ஆகியவற்றைச் செயல்படுத்திட சுதந்திரத் தொழிற் கட்சியின் அறிக்கை உறுதி கூறியது.

சுதந்திரத் தொழிற் கட்சி அறிவித்த திட்டங்களைப்பற்றிக் கருத்துக்கூறிய ஒரு ஆங்கில நாளேடு, 'அரசியல் கட்சிகளின்

எண்ணிக்கையை அதிகரித்தல் விரும்பத்தக்கதன்று. ஆயினும் இம்மாகாணத்தில் அண்மையில் அம்பேத்கர் உருவாக்கியுள்ள புதிய கட்சி மக்களின் வாழ்க்கையை உயர்த்துவதிலும் நாட்டின் எதிர்காலத்தை உருவாக்குவதிலும் உறுதுணையாக விளங்கக் கூடும். இக்கட்சியினரும் சோசலிஸ்டுகளும் ஒன்றுசேர்ந்து, வேக மாகப் பரவிவரும் கம்யூனிசத்தைத் தடுத்து நிறுத்த முடியும். சுதந்திரத் தொழிற் கட்சி, தனி வாக்காளர் தொகுதி முறையையும், இரட்டை வாக்குரிமையையும் கைவிட்டுவிட்டால், மிகக் குறுகிய காலத்திலேயே இக்கட்சி இந்தியாவிலேயே பெரும் சக்தி வாய்ந்த கட்சிகளில் ஒன்றாக வளர்ந்துவிடும் என்று எழுதியது. ஆனால், எப்போதும்போல் அம்பேத்கரிடம் அமைப்பைக் கட்டும் திறனை விட அறிவாண்மையே மேலோங்கி நின்றதால் அந்த ஆங்கில நாளேடு எதிர்பார்த்தவாறு அம்பேத்கரின் கட்சி நாடெங்கும் பரவி வலிமைமிக்க ஒன்றாக வளராதுபோயிற்று.

தேர்தலுக்கான முன்தயாரிப்பு வேலைகள் அனைத்தும் முடிந்த நிலையில் *1936* நவம்பர் *11*ஆம் நாள் புதன்கிழமை அம்பேத்கர் ஓய்வெடுப்பதற்காக இத்தாலியக் கப்பல் ஒன்றில் ஜெனிவாவிற்குப் புறப்பட்டுச் சென்றார். ஆனால் இப்பயணத்தின் உள்நோக்கம் வேறொன்றாக இருந்தது என்று கூறப்பட்டது. ஜெனிவாவிலிருந்து இங்கிலாந்திற்குச் சென்று, சீக்கிய மதத்திற்கு மாறிய பிறகும், தீண்டப்படாதவர்களுக்குப் புதிய அரசியல் சட்டத்தில் அளிக்கப்பட் டுள்ள பாதுகாப்புச் சலுகைகள் தொடர்ந்து கிடைக்குமா என்பது பற்றி பிரிட்டிஷ் அரசியல் வல்லுநர்களிடம் கேட்டறிவதே அம்பேத்கர் மேற்கொண்ட பயணத்தின் நோக்கம் என்று இந்தியா வில் பேசிக் கொள்ளப்பட்டது. புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தின் அடிப்படையில் மாகாணச் சட்டசபைகளுக்கு முதல் பொதுத் தேர்தல் நடைபெறவிருந்த நேரத்தில், அம்பேத்கர் அவருடைய பயணத்தைப்பற்றி வெளிப்படையாக அறிவிக்காமல், அமைதியாகவும் விரைந்தும் இந்த அய்ரோப்பியப் பயணத்தை மேற்கொண்டார் என்பதைக் கருத்தில் கொண்டால், அவருடைய பயணநோக்கம்பற்றி மற்றவர்கள் கூறிய கருத்து உண்மைக்குப் புறம்பானதன்று என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

ஜெனிவாவிற்குப் புறப்படுவதற்கு முன் 'தி டைம்ஸ் ஆஃப் இந்தியா' பத்திரிக்கையின் நிருபருக்கு அளித்த பேட்டியில், 'காங்கிரசுக் கட்சியில் சுரண்டுவோர், சுரண்டப்படுவோர் என்கிற இரு பிரிவினரும் இருக்கின்றனர். அரசியல் விடுதலையைப்

பெறுவதற்காக இப்படியிருப்பது தேவையானதாக இருக்கலாம். ஆனால் சமூகத்தைத் திருத்தியமைப்பதற்கு இவ்வாறு இருப்பது கேடான பின்புலமாகும்' என்று அம்பேத்கர் கூறினார். சனநாயக முறையில் வெகுமக்களுக்குக் கல்வி வழங்கவும், சரியான கோட்பாடுகளை மக்களின் முன்வைக்கவும், சட்டங்களை இயற்று வதன்மூலம் மக்கள் அரசியலில் ஈடுபட்டுச் செயலாற்றிட அவர் களை ஒன்று திரட்டவும் சுதந்திரத் தொழிற் கட்சி முயற்சிக்கும் என்று அம்பேத்கர் அப்பேட்டியில் மேலும் கூறினார். அவரை வழியனுப்பிட அவருடைய கட்சியின் தலைவர்கள் கிட்டத்தட்ட அனைவரும் வந்திருந்தனர்.

II

அம்பேத்கரின் மதமாற்ற அச்சுறுத்தல் இந்தியா முழுவதும் பரந்த அளவிலான விளைவுகளை ஏற்படுத்தியது. சாதி இந்துக்கள் பல நூற்றாண்டுகளாகத் தீண்டப்படாத இந்துக்களுக்கு இழைத்து வந்துள்ள அநீதியான கொடுமைகளை அவர்கள் உணர்ந்திடும் வகையில் அவர்களைத் தட்டியெழுப்பியது. அதுசமயம், இந்தியா வில் தீண்டாமையை ஒழிப்பதற்கான செயல்கள் மிகப் பெரிய அளவில் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதற்குச் சில நாட்களுக்கு முன்னர் மைசூர் சுதேச அரசு அதனுடைய வரலாற்றில் முதன்முறையாகத் தீண்டப்படாதவர்கள் தசரா தர்பார் விழாக்களில் கலந்து கொள்ளலாம் என்று அறிவித்தது. இந்த அறிவிப்பை அடுத்து திருவிதாங்கூர் சிற்றரசு, தீண்டப்படாத வகுப்பு மக்கள் அரசின் கட்டுப்பாட்டிலிருந்த 1600 கோயில்களினுள் சென்று கடவுளை வழிபடலாம் என்ற துணிவுமிக்க புரட்சிகரமான அறிவிப்பை வெளியிட்டது. உண்மையில், இக்கோயில் நுழைவு உரிமை இந்தியாவின் இந்துமதத்தின் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தை எழுதியது. திருவிதாங்கூர் அரசரின் பரந்த மனத்தையும் துணிவையும் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த அறிவிப்புக்குப் பின்புலமாக இருந்த சர். சி.பி. இராமசாமி அய்ய ரின் அரசியல் முதிர்ச்சியையும் இந்தியப் பத்திரிக்கைகள் பலபடப் புகழ்ந்து பாராட்டின. இந்நிகழ்ச்சியைச் சனநாயக மறுமலர்ச்சிக்கான அருஞ்செயல் என்று வருணித்தது. 'மான்செஸ்டர் கார்டியன்' பத்திரிக்கை இதற்காக சர்.சி.பி. இராமசாமி அய்யருக்குப் புகழ்மாலை சூட்டியது. பூனா ஒப்பந்தத்தின் உள்ளார்ந்த விழைவினையும் நோக்கத்தையும் முழுமையாக இந்த அறிவிப்பு செயல்படுத்தியுள்ளது என்று எம்.சி. இராஜா கருத்துக்கூறினார்.

சென்னையிலிருந்து வெளியாகும் 'தி இந்து' நாளேடு இந்த அறிவிப்பைத் துணிவான செயல் என்றும், உயர்ந்த அரசியல் மதி நுட்பத்தால் எடுக்கப்பட்ட சிறந்த நடவடிக்கை என்றும் எழுதியது.

அப்போது காங்கிரசின் தலைவராக ஜவஹர்லால் நேரு இருந்தார். இந்துக்கள் அவர்களின் தாயகமான இந்தியாவில் பெரும்பான்மையினராகத் தொடர்ந்து இருந்து வருகிறார்களா அல்லது இந்த உலக உருண்டையிலிருந்தே மறைந்துவிட்டார்களா என்பதைப்பற்றியெல்லாம் நேரு எப்போதுமே கவலைப்படுவ தில்லை. மதச்சிக்கலைத் தீர்ப்பதற்குச் சரியான வழி எல்லாக் கோயில்களையும் இரண்டு மூன்று தலைமுறைகளுக்கு மூடிவிட வேண்டும் என்று நேரு கூறி வந்தார்.[80] ஆனால் அத்தகைய நேருவையே திருவிதாங்கூர் அரசின் அறிவிப்பு மனம் நெகிழச் செய்தது. தீண்டாமைப் பிரச்சினையின் அடித்தளம் தீண்டப்படாத வகுப்பு மக்கள் நிலம் இல்லாதவர்களாக இருப்பதில்தான் இருக்கி றது; எனவே அது ஒரு பொருளாதாரப் பிரச்சினையாகும். இருப்பினும் பொருளாதாரத்துறையில் தீர்வு காண்பதற்குக்கூடத் திருவிதாங்கூர் அரசின் அறிவிப்பு தீண்டப்படாத வகுப்பு மக்களி டையே ஏற்படுத்தக்கூடிய மன எழுச்சிகளும் புதிய சூழ்நிலையும் நெடுங்காலத்திற்கு உற்றதுணையாக விளங்கும் என்று நேரு குறிப்பிட்டார்.[81] திருவிதாங்கூர் அரசரின் சீரிய முன்மாதிரியான கோயில் நுழைவு அறிவிப்பைப் பின்பற்றிக் குவாலியர் அரசரும் இந்தூர் அரசரும் தீண்டப்படாதாருக்குத் கோயில்களைத் திறந்துவிட வேண்டும் என இந்து மகாசபை வேண்டுகோள் விடுத்தது.

'பம்பாய் கிரானிக்கிள்' பத்திரிக்கை கூடத் திருவிதாங்கூர் அரசின் அறிவிப்பும், அம்பேத்கரின் மதமாற்ற அச்சுறுத்தலும் ஒன்றோடொன்று தொடர்புடையவையே என்பதை ஏற்றுக்கொண் டது. திருவிதாங்கூர் அரசின் இந்த அறிவிப்பு தன்னியல்பானதெ னில், மதமாற்ற அச்சுறுத்தலுக்கு முன்பே இது ஏன் அறிவிக்கப்பட வில்லை என்று 'இந்து ஹெரால்டு' பத்திரிக்கை வெளிப்படையாக வினவியது. இந்த வெற்றிக்குக் காரணம் தீண்டப்படாத வகுப்பு மக்கள் இடையறாது போராடி வருவதும் அவர்கள் அறிவித்த மதமாற்ற முடிவும் ஆகும் என்று அவ்வேடு குறிப்பிட்டது. திருவிதாங்கூர் சிற்றரசரின் நல்லெண்ணம் செயலாக வடிவம் பெற்றமைக்கு அம்பேத்கர் என்கிற ஒரு தனிமனிதர் ஏற்படுத்திய ஒரு நெருக்குதல்தான் காரணம் என்பது பேருண்மையாகும்.

ஆனால் வழக்கம்போல் அம்பேத்கரின் பெருமையையும் புகழை யும் இந்தியப் பத்திரிக்கைகள் வேண்டுமென்றே மறைத்தன. அவருடைய அச்சுறுத்தலின் நேரடி விளைவே திருவிதாங்கூர் அரசின் அறிவிப்பாகும்.

அம்பேத்கரின் கூற்றுப்படி உடல்நலம் பேணும்பொருட்டே அவர் அய்ரோப்பாவிற்குச் சென்றார். பெரும்பாலான நாட்களை வியன்னாவிலும், பெர்லினிலும் கழித்தார். இலண்டனில் ஒரு வாரம் மட்டுமே இருந்தார். அவர் இலண்டனில் இருந்தபோது, 'விவித விரிட்டா' (Vividha virita) என்ற குசராத்தி மொழியின் முன்னணி வார இதழின் நிருபர், அம்பேத்கர் இலண்டனில் ஒரு ஆங்கிலப் பெண்ணை மணந்துகொண்டதாகவும் அப்பெண்ணுடன் 1937 சனவரி 14ஆம் நாள் அவர் இந்தியாவுக்கு வருவார் என்றும் இந்தியாவிற்குச் செய்தி அனுப்பினார். விவித விரிட்டா இதழின் ஆசிரியர் அம்பேத்கரின் நெருங்கிய நண்பர் என்பதால் அம்பேத்கர் ஆங்கிலேயப் பெண்ணை மணந்துகொண்டார் என்ற செய்தியைப் பத்திரிக்கை உலகில் அவ்வப்போது வெளியாகக்கூடிய வெறும் பரபரப்பூட்டும் செய்தியாகக் கருதாமல் அது உண்மையாக இருக்கும் என்றே எண்ணினர். பத்திரிக்கைகளில் வெளியாகின்ற பெருந்தலைவர்களின் திருமணச் செய்திகள் எப்போதும் உலக அளவில் கிளர்ச்சி அலைகளைத் தோற்றுவித்துள்ளன. உலகத்தில் சிறந்த ஆற்றல் மிக்க தலைவர்களில் பலர் பொதுவாகவே பெண்களின் ஈர்ப்புக்கு ஆளாகி விடுகின்றனர். அம்பேத்கரின் சிறப்பியல்புகளால் ஈர்க்கப்பட்ட ஓர் ஆங்கிலப் பெண்மணி தன்னைத் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று அம்பேத் கரிடம் வற்புறுத்தி வந்ததாக ஒரு வதந்தி உலவியது. அவ்வாறு அம்பேத்கர் திருமணம் செய்துகொண்டிருப்பினும் அஃது அவரு டைய உயர்நிலையை எவ்வகையிலும் பாதித்திருக்காது. ஏனெனில் ஆகாகானை அவருடைய வகுப்பு மக்கள் எவ்வாறு போற்றிப் பின்பற்றினரோ அதுபோன்றே அம்பேத்கரையும் தீண்டப்படாத வகுப்பு மக்கள் உயர்நிலையில் வைத்துப் போற்றிப் பின்பற்றினர்.

1937 சனவரி 14ஆம் நாள் அம்பேத்கர் பம்பாய்க்குத் திரும்பினார். பம்பாய் வந்திறங்கியதும், அவர் அளித்த பேட்டியின் போது, இங்கிலாந்தில் அவர் திருமணம் செய்துகொண்டது உண்மையா என அவரிடம் கேட்டதற்கு, அது முற்றிலும் ஆதாரமற்ற வதந்தி என்று கூறி மறுத்தார்; எவருக்கும் தெரியாமல் திருமணம் செய்துகொள்ள வேண்டியதற்குக் காரணமே இல்லை

என்று மேலும் கூறினார். இலண்டனில் இருந்தபோது அரசியல் தொடர்பாக எவரையும் சந்தித்துப் பேசவில்லை எனவும் தெரிவித் தார். மதமாற்றத்தைப்பற்றி அவரிடம் கேட்டதற்கு, மதம் மாறுவது என்ற முடிவில் தான் உறுதியுடன் இருப்பதாகவும், ஆனால் எந்த மதத்திற்கு மாறுவது என்பதை இன்னும் முடிவு செய்யவில் லையென்றும் பதிலுரைத்தார். தற்போது அவருடைய கவனம் முழுவதும் பம்பாய் மாகாணச் சட்டசபைக்கு நடைபெறவிருக்கின்ற தேர்தலில் நாட்டங்கொண்டிருப்பதாக அப்பேட்டியின் இறுதியில் குறிப்பிட்டார்.

வழக்கம்போல் துறைமுகத்தில் அவர் வந்திறங்கியதும் அவ ருக்கு ஆரவாரமான வரவேற்பளிக்கப்பட்டது. அம்பேத்கரின் அய்ரோப்பிய மனைவியைக் காணவேண்டும் என்ற ஆவலோடு அவர் செல்லும் வழி நெடுகிலும் மக்கள் பெருந்திரளாகக் குழுமியிருந்தனர். ஆனால் பாபாசாகிப் அம்பேத்கர் மட்டும் தனியாக வருவதைக் கண்டு அவர்கள் வியப்படைந்தனர்.

இக்காலக்கட்டத்தில் இங்கிலாந்தின் மன்னர் எட்டாம் எட்வர்டு செய்துகொள்வதாக இருந்த திருமணத்தால் ஏற்பட்ட அரசியல் நெருக்கடியைத் தீர்ப்பதில் பிரிட்டிஷ் அரசியல் வல்லுநர்களின் கவனம் முழுவதும் படிந்திருந்தது; அதனால் தீண்டப்படாதவர் களின் மதமாற்றப் பிரச்சினையில் கவனம் செலுத்திட அவர்களுக்கு நேரமில்லை என்று கருதுவது குருட்டடியான ஊகமன்று; உண்மையேயாகும்.

வட்டமேசை மாநாடு நடைபெற்ற நாட்களில், அம்பேத்கரால் முன்வைக்கப்பட்ட தீண்டப்படாத வகுப்பு மக்களின் கோரிக்கை களை ஆழமாகக் கேட்டறிந்து அவர்களால் இயன்ற அளவில் நீதி வழங்கியிருப்பதாகவும், அதில் மேற்கொண்டு செய்வதற்கு இனி ஏதுமில்லை என்றும் பிரிட்டிஷ் அரசியல் தலைவர்கள் அம்பேத்கரிடம் கூறியிருக்கக்கூடும். பிரிட்டிஷ் அரசியல் தலைவர்க ளைச் சந்திப்பதற்கு முன், அம்பேத்கர் உலகப் புகழ்பெற்றிருந்த சில செருமானிய, அய்ரோப்பியச் சட்ட அறிஞர்களிடம் கலந்து பேசினார். சீக்கியர்களுக்குப் பஞ்சாப் சட்டசபையில் மட்டும் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது; அதனால் தீண்டப்படாத வகுப்பு மக்கள் சீக்கிய மதத்திற்கு மதம் மாறிவிட்டால், தீண்டப்படாதவர்க ளுக்கென மற்ற மாகாணச் சட்டசபைகளில் ஒதுக்கப்பட்டுள்ள இடங்களை அவர்கள் தக்க வைத்துக்கொள்வதற்கான வாய்ப்புகள் பற்றிச் சட்ட வல்லுநர்களின் கருத்தை அம்பேத்கர் கேட்டறிந்தார்.

சீக்கிய மத அமைப்பின் பொறுப்பாளர்களுக்கும் அம்பேத்கருக் குமிடையே உடன்பாடு எதுவும் ஏற்படவில்லை. அதனால் இருதரப்பினரும் அவர்களின் நிலைப்பாட்டிலிருந்து பின்வாங்கி விலகிச்சென்றுவிட்டனர்.

III

அம்பேத்கர் உடனடியாகத் தேர்தல் பிரச்சாரத்தைத் தொடங் கினார். தேர்தல் நாள் நெருங்கிக்கொண்டிருந்தது. தேர்தல்கள் முடிந்திட இன்னும் ஒரு மாதமே இருந்தது. அம்பேத்கரின் புதிய கட்சி, இந்தியாவிலேயே மிகப் பெரிய கட்சியான காங்கிரசின் எதிர்ப்பைச் சந்திக்க வேண்டியிருந்தது. காங்கிரசுக் கட்சி ஆள் வலிமையும், பண வலிமையும் பெற்றிருந்ததுடன் நாட்டு விடுதலைக்காகத் தியாகங்கள் செய்யும் கட்சி என்ற பெரும் புகழும் அதற்கு இருந்தது. தீண்டப்படாத வகுப்பு மக்களின் அனைத்திந்திய மாநாடுகள் பலவற்றிற்குத் தலைமை தாங்கிய கோடிக்கணக்கான தீண்டப்படாத ஊமை மக்களின் குரலாகத் திகழ்ந்த அம்பேத்கர் தேர்தல்களில் போட்டியிடுவதற்காக அனைத்திந்திய அளவிலான ஒரு கட்சியை ஏற்படுத்தவில்லை என்பது மிகவும் வியப்புக்குரிய செய்தியாகும். அவருடைய கட்சி பெரும்பாலும் பம்பாய் மாகாண எல்லைக்குள் மட்டுமே இயங்கியது.

எப்போதுமே செயலாற்றாமலிருப்பதைவிடக் காலந்தாழ்ந் தாவது செயலாற்றுவது நன்று எனக் கருதி அம்பேத்கர் தேர்தல் பிரச்சாரத்தைத் தொடங்கினார். புதிய கட்சியை அவர் ஏன் அமைத்தார் என்றும் அதில் அவர் ஆற்றவுள்ள பங்குப்பணிபற்றி யும் அறிய விரும்பிய மக்களுக்கு விளக்கம் கூற வேண்டிய நிலையிலிருந்தார். பம்பாய் மாகாணச் சட்டசபையில் மொத்தம் இருந்த 175 இடங்களில் 15 இடங்கள் மட்டுமே தீண்டப்படா தாருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களாகும். இந்தப் பதினைந்து உறுப்பினர் எண்ணிக்கை என்பது சட்டசபையில் வலிமையான எதிர்க்கட்சியாக இயங்கப் போதுமானதன்று. ஆகவே, அவருடைய உயர்விலும் தாழ்விலும் அவருக்கு உறுதுணையாக விளங்கிய சாதி இந்துத் தோழர்களுடன் அம்பேத் கர் கலந்துபேசியபின், பொதுத் தொகுதியிலும் சில வேட்பாளர் களை நிறுத்துவதென முடிவுசெய்தார். அவ்வாறு செய்துகொண்ட ஏற்பாடு, அவருடைய சாதி இந்துத் தோழர்களின் நல்லெண்ணத் தைப் பாதுகாத்திட உதவியாக இருந்தது. மேலும் பொதுத்தேர்த லில் தீண்டப்படாத வகுப்பு மக்களின் வாக்குகளைப்போலவே

தீர்மானிக்கிற சக்தியாக சாதி இந்துக்களின் வாக்குகளும் இருந்ததால் அவருடைய கட்சி வேட்பாளர்களின் வெற்றி வாய்ப்புக்கு அது மேலும் வலுவூட்டும். அதன் விளைவாக அதிக இடங்களைப் பெற்றிடலாம் என்றும் அம்பேத்கர் கருதினார். அம்பேத்கர் சில சுயேச்சை வேட்பாளர்களையும் ஆதரித்தார். இவ்வாறாக அம்பேத்கர் அமைத்த சுதந்திரத் தொழிற் கட்சி தன் செயற்களத்தை விரிவுபடுத்தியது; பரந்த அளவில் செல்வாக்கைப் பெருக்கிக் கொண்டது.

பம்பாய் மாகாணத்தின் எல்லா மாவட்டங்களிலும் அம்பேத்கர் சுற்றுப்பயணம் செய்தார். நாசிக், அகமத் நகர், கண்டேஷ் மாவட்டத்தில் சில இடங்கள், ஷோலாப்பூர், சதாரா, பெல்காம் ஆகிய இடங்களில் சுருக்கமாக உரையாற்றினார். சதாராவில் அவர் சிறிதளவு நேரமே இருந்தபோதிலும் அங்குள்ள அவருடைய அன்னையின் சமாதியில் - அன்பின் நெகிழ்வால் கண்களில் நீர் மல்கிட, மலர்வளையம் வைத்தார். நகரில் நகர் மாவட்டத் தீண்டப்படாதார் மாநாட்டில் கலந்துகொண்டார். அவருடைய கட்சியின் வேட்பாளராகப் போட்டியிடும் ரோகம் என்பவரை ஆதரிக்குமாறு வலியுறுத்தினார். ரோகமின் சிறப்புகள் தகுதிகள் பற்றித் தீண்டப்படாத வகுப்பு மக்கள் கவலைப்படத் தேவையில்லை; ஏனெனில் நூற்றுக்கணக்கான பட்டதாரிகளுக்குள்ள வலிமையைத் தான் ஒருவரே பெற்றிருப்பதால், சட்டசபைக்கு உள்ளேயும் வெளியேயும் தன்னால் கட்சியை வழிநடத்த முடியும் என்று அவர் உறுதி கூறினார். பன்வெல், மகத் ஆகிய இடங்களிலும் கூட்டங்களில் பேசினார். அம்பேத்கரின் தேர்தல் பிரச்சாரம்பற்றிக் குறிப்பிடப்பட வேண்டிய மற்றொரு செய்தி, சனநாயக சுயராச்சியக் கட்சியின் தலைவரான எல்.பி. போபாட்கருக்கு அம்பேத்கர் அளித்த ஆதரவாகும்.

1937 பிப்ரவரி மாதத்தின் முதல் வாரத்தில் போபாட்கர் அம்பேத்கருக்கு ஒரு கடிதம் எழுதினார். அக்கடிதத்தில் பூனாவில் உள்ள தீண்டப்படாதவர்கள், நடைபெறவுள்ள தேர்தலில் தன்னை ஆதரிக்குமாறு அவர்களுக்கு அம்பேத்கர் அறிவுறுத்த வேண்டும் என்று கேட்டிருந்தார். அம்பேத்கரின் ஆதரவைப் பெறுவது என்பது அவ்வளவு எளிதான செயல் அன்று. அம்பேத்கர் கணிப்புப்படி போபாட்கரின் கட்சியை ஆதரித்தவர்களில் பெரும்பான்மையோர் வைதிகப் பிற்போக்காளர்களே. ஆனால் போபாட்கரின் மதிப்புமிக்க தகுதிகளையும், கொள்கையில் அவர்

கொண்டிருந்த முழு ஈடுபாட்டையும் அம்பேத்கர் நன்கு அறிந்திருந் தார். தீண்டப்படாத வகுப்பு மக்களின் உயர்வினுக்காக உற்ற துணையாக எப்போதும் நின்றவர் போபாட்கர். மற்றோர் கட்சியைச் சார்ந்தவரான போபாட்கரை அம்பேத்கர் ஆதரித்ததற்கு இதைத்தவிர இன்னொரு காரணமும் இருந்தது. அதாவது அம்பேத்கரின் கட்சியைப் போலவே, போபாட்கரின் கட்சியும் புதிய அரசியல மைப்புச் சட்டத்தை ஏற்றுச் செயல்படுவதெனவும் அதற்காகப் பிரச்சாரம் செய்வதெனவும் முடிவு செய்திருந்தது. இவ்வாறு முடிவு செய்ததற்காகப் போபாட்கரின் தோழரான என்.சி. கெல்கர், அவருடைய முன்னாளைய காங்கிரசுத் தோழர்களுடைய- காங்கிரசுப் பத்திரிக்கைகளுடைய தாக்குதலுக்குப் பல ஆண்டுகள் இலக்காகித் துன்புற நேரிட்டது.

ஆகவே தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிட போபாட்கரை அம்பேத்கர் முழு மனத்துடன் ஆதரித்தார். அவர் வெற்றிபெற வேண்டுமென மனமார விரும்பினார். அவருக்கே உரிய தனி வழிமுறையில், கெல்கர் அம்பேத்கரை ஆதரித்தார். பம்பாயில் அவருடைய சொல்லுக்குக் கட்டுப்படக்கூடிய வாக்காளர்களுக்கு அம்பேத்கரை ஆதரிக்குமாறு வேண்டுகோள் விடுத்தார். சொற் களைக் கையாளுவதில் எப்பொழுதும் எச்சரிக்கையுடன் இருக்கும் இயல்புடைய கெல்கர் அவருடைய வேண்டுகோள் அறிக்கையில், இதுநாள்வரையில் வெளிப்படுத்தாமல் நெஞ்சில் தேக்கி வைத்திருந்த புகழ் மொழிகளால் அம்பேத்கரைப் பாராட்டியிருந்தார். அம்பேத்கர் தீண்டப்படாத வகுப்பு மக்களின் முடிசூடா மன்னர்; அவருடைய அறிவாண்மையால், கொண்ட கொள்கையில் வைத்திருந்த பற்றுறுதி யினால், இடையறாத போராட்டத்தால் அம்பேத்கர் புகழேணியின் உச்சியை அடைந்தவர் என்றும் பாராட்டியிருந்தார்.

பூனாவைச் சார்ந்த பார்ப்பனர் ஒருவருக்குத் தேர்தலில் வாக்களிக்கப் போவதாகத் தீண்டப்படாதவர்கள் சூளுரைத்தனர். என்னே இது! அரசியல் புதுமையான கூட்டாளிகளை உருவாக்கு கிறது. சமூகச் சமத்துவத்தை எதிர்க்கின்ற கேடான பிற்போக்காளர் களின் கூடாரம் என்று புகழ் பெற்றிருந்த பூனாப் பார்ப்பனர்களு டன் தேர்தலுக்காக அம்பேத்கர் கூட்டு வைத்துக்கொண்டதைக் கண்டு கேலியான மகிழ்ச்சியில் திளைத்த பம்பாயின் தொழிலாளர் தலைவர் என்.எம். ஜோஷி அம்பேத்கரைக் கண்டனம் செய்தார். ஒரு பயனும் தராத ஒரு காரியத்திற்காக அம்பேத்கர் அப்பழுக்கற்ற அவருடைய உயர் கொள்கையைக் கைநழுவ விட்டுவிட்டாரே

என்ற பொருள்படும்படியான பழமொழி ஒன்றைச் சுட்டிக்காட்டி, ஜோஷி அம்பேத்கரைப் பழித்தார். தன்மீது வீசப்பட்ட கொச்சையான பழமொழியுடன் கூடுதலாக ஒரு சொல்லைச் சேர்த்து அம்பேத்கர் அதை ஜோஷி மீதே திருப்பி வீசினார். தேர்தல் நெருங்கிக்கொண்டிருந்த வேளையில், சிந்து மாகாணத்தில் தீண்டப் படாத இந்துவாயிருந்து இஸ்லாமியராக மாறிய ஷேக் மஸ்ஜித் சிந்தி என்பவரால் பரபரப்பூட்டும் ஒரு செய்தி பரப்பப்பட்டது.

'முஸ்லீமாக மாறிய எனக்கு முஸ்லீம்கள் வாக்களிக்கப் போகிறார்களா? இல்லையா? இஸ்லாமிய மதத்திற்கு மதம்மாறி வந்தவர்களை முஸ்லீம்கள் மதிக்கிறார்களா? இல்லையா? என்பதை அரிசனங்கள் கூர்ந்து கவனித்துக்கொண்டிருக்கிறார்கள். சிந்து தேர்தலுக்குப் பிறகுதான் அம்பேத்கர் இஸ்லாமிய மதத்தைத் தழுவுதல் பற்றிய தன்னுடைய முடிவினை அறிவிப்பார்' என்பதே ஷேக் மஸ்ஜித் சிந்தி பரப்பிய செய்தியாகும். தேர்தலில் ஷேக் மஸ்ஜித் சிந்தியை எதிர்த்துப் போட்டியிட்ட சர். ஷா நவாஸ்கான் பூட்டோ என்பவர் ஷேக் மஸ்ஜித் கூறுவது உண்மையா என்பதைத் தெளிவுபடுத்துமாறு அம்பேத்கருக்குத் தந்தி கொடுத் தார். அம்பேத்கர் புட்டோவுக்கு அனுப்பிய பதில் தந்தியில், அத்தகையதொரு வாக்குறுதியை ஷேக் மஸ்ஜித்திற்கோ அல்லது வேறு ஒருவருக்கோ அளிக்கவில்லை என்றும், அக்கூற்று பொய்யானது என்றும் குறிப்பிட்டிருந்தார்.

காங்கிரசுக் கட்சி எல்லா மாகாணங்களிலும் தன் வேட்பாளர் களை நிறுத்தியது. ஆனால் பம்பாய் மாகாணத்தில் ஏன் இந்தியாவிலேயே இரண்டு தொகுதிகளில் மட்டும் காங்கிரசு தன் ஆள் வலிமை, பண வலிமை, சூழ்ச்சித் திறன், நடைமுறைத் தந்திரம் ஆகிய அனைத்தையும் திரட்டிப்போட்டியிட்டது. ஒன்று பம்பாயில் அம்பேத்கர் போட்டியிட்ட தொகுதி; மற்றொன்று பூனாவில் போபட்கர் வேட்பாளராக நின்ற தொகுதி. அம்பேத்கர் காங்கிரசின் பிறவி எதிரி போன்றவர்; அவர்கள் வழிபடும் பெருந்தலைவர்களையும் அவர்களுடைய கொள்கைகளையும் வெறுத்தவர். போபட்கரோ, முன்னாளில் மகாராட்டிர மாகாணக் காங்கிரசின் தலைவராக இருந்தவர்; ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக அஞ்சாது காங்கிரசுக்காரர்களுடன் போரிட்டவர். இந்தியாவின் புகழ்பெற்ற கிரிக்கெட் பந்து வீச்சாளரான பல்வன்கர் (Palvankar) காங்கிரசின் வேட்பாளராக அம்பேத்கருக்கு எதிராக நிறுத்தப்பட் டார். அம்பேத்கரின் வெற்றிவாய்ப்பைத் தடுக்க வேண்டும் என்ற



1956 டிசம்பர் 6ஆம் நாள், தில்லியில் அலிப்பூர் சாலையில் அவர்தம் இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த அம்பேத்கரின் பூதவுடல்.

திட்டத்துடன் - பின்னாளில் அம்பேத்கர் அமைத்த தீண்டப்படாத வகுப்பினர் பேரவையின் (ஃபெடரேஷனுக்கு) செயலாளராக இருந்த ராஜ்போஜ் அவர்களும், மற்றும் தியோருக்கர் என்பவரும் அம்பேத்கருக்கு எதிராகத் தேர்தலில் வேட்பாளராக நிற்கவைக்கப் பட்டிருந்தனர். 1937 பிப்ரவரி 17ஆம் நாள் தேர்தல் நடந்தது; தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்டது. அம்பேத்கரை எதிர்த்துப் போட்டியிட்டவர்களில் காங்கிரசு வேட்பாளரான பல்வன்கர் மட்டுமே ஓரளவு வாக்குகள் பெற்றிருந்தார். மற்ற வேட்பாளர்கள் மிகக் குறைந்த வாக்குகள் பெற்றுப் பின்தங்கித் தோல்வியில் அமிழ்ந்துபோயிருந்தனர். மிகப் பெரிய வாக்கு வேறுபாட்டுடன் அம்பேத்கர் வெற்றி பெற்றார். பூனாத் தொகுதியில் போபட்கர் தீரமுடன் போராடிய போதிலும் பெரும் எதிர்ப்புச் சக்திக்கு முன் தோற்க நேரிட்டது.

புதிய அரசியலமைப்புச் சட்டத்தின்படி நடைபெற்ற முதலாவது பொதுத் தேர்தலில் அம்பேத்கரின் சுதந்திரத் தொழிற் கட்சி மலைப்பூட்டும்படியான வெற்றியைக் குவித்தது. அக்கட்சி பதினேழு வேட்பாளர்களைப் பம்பாய் மாகாணச் சட்டசபைத் தேர்தலில் நிறுத்தியது; அவர்களில் பதினைந்து பேர் வெற்றி பெற்றனர். பம்பாய் மாகாணச் சட்டசபையில் அம்பேத்கருக்கும் காங்கிரசுக் கட்சிக்கும் இடையே இனி விறுவிறுப்பான விவாதங்கள் நடக்கும் என்று அரசியலின் போக்கினை அறிந்திருந்தவர்கள் எதிர்பார்த்தனர்.

ஏனெனில் அம்பேத்கர் எதிரிகளுக்குச் சிம்ம சொப்பனம் ஆவார். அதனால் காங்கிரசின் போலிக்கொள்கைகளும் தவறான கண்ணோட்டத்துடன் செய்யப்படும் செயல்களும் இனித் தூள் தூளாக்கப்படும் என்று சிந்தனையாளர்கள் எதிர்பார்த்தனர்.

IV

பம்பாய் மாகாணத் தீண்டப்படாத வகுப்பு மக்கள் அவர்களுடைய தலைவர் அம்பேத்கர் தேர்தலில் பெற்ற வெற்றியைக் கண்டு மகிழ்ச்சியில் திளைத்தனர். தேர்தல் முடிவு வெளியானவுடன் அம்பேத்கர் ஈட்டிய பெருவெற்றிக்காக மராத்வாடாவில் சங்கிலியில் அவருக்குப் பாராட்டு விழா நடத்தினார்கள். சுற்று வட்டாரத்தில் இருந்த சிற்றூர்களிலிருந்தும் சிறு நகரங்களிலிருந்தும் தீண்டப்படாத இந்துக்கள் பேரார்வமுடனும், பெருமிதத்துடனும் இந்த விழாவில் கலந்துகொண்டனர்.

அம்பேத்கரின் வெற்றிக்கு மேலும் பெருமை சேர்க்கின்ற வகையில் இன்னொரு பெரிய வெற்றி காத்திருந்தது. சௌதார் குளத்து நீரைப் பயன்படுத்துவதுகுறித்து நீண்ட நாட்களாக நடைபெற்றுக்கொண்டிருந்த வழக்கில், 1937 மார்ச் 17ஆம் நாள் பம்பாய் உயர்நீதி மன்றம் தீண்டப்படாத வகுப்பு மக்களுக்குச் சார்பாகத் தீர்ப்பு வழங்கியது. அதன்மூலம் நான்கு ஆண்டுகளுக்கு முன் தாணாவின் துணை நீதிபதி தீண்டப்படாதவர்களுக்கு ஆதரவாக அளித்த தீர்ப்பைப்பம்பாய் உயர்நீதி மன்றத் தீர்ப்பு உறுதி செய்தது.

காங்கிரசுக்கட்சி தேர்தலில் வெற்றி பெற்றபோதிலும் ஆட்சிப் பொறுப்பை ஏற்க மறுத்தது. சர். தன்ஜி ஷாபி கூப்பர், ஜம்னாதான் மேத்தா ஆகியோரின் தலைமையில் இருந்த இடைக்கால அரசின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் அறிக்கையில் கையெழுத் திடுமாறு காங்கிரசுக் கட்சியின் தலைவரான பி.ஜி. கெர் அம்பேத் கரை அணுகினார். அப்போது அம்பேத்கர் ஜன்ஜிரா சிற்றரசுக்குச் சென்றிருந்தார். காங்கிரசு தன் பெருமையை உயர்த்திக் கொள்வதற் கான முயற்சியே இது; கவர்னர் எப்படியும் இன்னும் ஆறு மாதக் காலத்திற்குள் சட்டசபையைக் கூட்டியாக வேண்டும்; அப்போது தங்கள் கருத்தைக் கூறுவதற்குக் காங்கிரசுக்கு வாய்ப்பு கிடைக்கும். எனவே காங்கிரசின் கோரிக்கை பொருளற்றது என்று ஜன்ஜிராவிலிருந்து அம்பேத்கர் பதில் அனுப்பினார்.

சில நாட்கள் கழித்து, சுதந்திரத் தொழிற்கட்சியின் சார்பில் பம்பாயில் கம்கர் திடலில் மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. அக்கூட்டத்தில் புதிய அரசியலமைப்புச் சட்டம் பற்றிய அவருடைய கருத்துகளையும் அதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற தன் உறுதிப்பாட்டையும் மீண்டும் வலியுறுத்திப் பேசினார். அப்போதுதான் தீண்டப்படாதாரின் நலன்கள் புதிய அரசியல் சட்டத்தினால் எந்த அளவுக்கு நன்முறையில் பாதுகாக்கப் படும் என்பது தெரியும் என்று கூறினார். காங்கிரசு புதிய அரசியலமைப்புச் சட்டத்தை ஏற்றுச் செயல்பட்டு இப்போதுள்ள முட்டுக் கட்டையான நிலையை முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென அவர் வேண்டுகோள் விடுத்தார். அதே நேரத்தில் காங்கிரசுக்கு ஓர் எச்சரிக்கையும் விடுத்தார். பிரிட்டிஷ் ஏகாதிபத்தி யத்திற்கெதிராகக் காங்கிரசால் நடத்தப்படுவதாகச் சொல்லப்படும் போராட்டம் முடியும்வரையில் எங்கள் துன்பங்கள் இப்படியே தொடருவதற்கு நாங்கள் அனுமதிக்கமாட்டோம் என முழங்கினார்.

நடைபெற்று முடிந்த தேர்தலின்போது, தேர்தலில் போட்டியிட்ட சில தகுதி படைத்த தீண்டப்படாத வகுப்பு வேட்பாளர்களுக்கு எதிராக ஜவஹர்லால் நேரு போன்ற சில தலைவர்கள் ஏவல்பணி செய்வோரை வேட்பாளர்களாக நிறுத்தியிருந்ததை அம்பேத்கர் கண்டித்தார். நேருவின் வீட்டு வேலையாள் ஹரி என்பவரை வேட்பாளராக நிறுத்தியிருந்ததை ஒரு எடுத்துக்காட்டாகச் சுட்டி னார். இடைக்கால அமைச்சரவையில் அவர் ஏன் சேரவில்லை என்ற கேள்விக்கு, பெரும்பான்மை இல்லாத-நீண்ட காலம் நீடிக்க முடியாத ஓர் அமைச்சரவையில் சேருவதால் ஒரு பயனும் விளையாது என்று பதிலளித்தார்.

இறுதியில் காங்கிரசுத் தலைவர்கள் தங்களுக்குள் தெளிந்து ஒரு முடிவுக்கு வந்தனர். 1937 ஜூலை 19ஆம் நாள் ஆட்சிப் பொறுப்பை ஏற்பதென முடிவுசெய்தனர். அதற்கு முந்திய நாள் இடைக்கால அரசு பதவியிலிருந்து விலகியது. அன்று மாலை சட்டசபை உறுப்பினர்கள் உறுதிமொழி கூறிப் பதவி ஏற்றனர். பிரிட்டிஷ் மன்னருக்கு விசுவாசமாக இருப்பதாகக் காங்கிரசு உறுப்பினர்கள் உறுதிமொழி கூறிப் பதவியேற்றபின் அவர்களின் இருக்கைகளில் அமர்ந்தனர். அம்பேத்கர் பகவத்கீதையின் பெய ரால் உறுதிமொழி கூற மறுத்துவிட்டுக் கண்ணியமான முறையில் உறுதிமொழியை ஏற்றார்.

பம்பாய் மாகாணச் சட்டசபையில் எதிர்க்கட்சிகளின் வரிசை யில் இருந்த அம்பேத்கரும், ஜம்னாதாஸ் மேத்தாவும் இந்தியாவில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த சட்டமன்ற உறுப்பினர்களிலேயே மிகச்சிறந்த தலைவர்களாக விளங்கினார்கள். உலகில் உள்ள வேறு எந்தச் சட்டசபையிலும் அவர்களுக்கு இணையானவர்கள் இல்லை எனலாம். அவர்கள் இருவரும் தேர்ந்த மதிநுட்பமுடன் திறமையாக வாதிடுவதில் வல்லவர்கள் என்ற புகழ் பெற்றிருந்தவர்கள். ஆனால் அதே வேளையில் பெரும்பாலான காங்கிரசு அமைச்சர்கள் அனுபவம் இல்லாதவர்களாக இருந்தனர். அவர்கள்தான் கடந்த பல ஆண்டுகளாகச் சட்டசபை உறுப்பினர் பதவியைப் 'பதவிப் பொறுக்கிகளின் வேலை' என்று வசைபாடிக்கொண்டிருந்தார்கள். ஆனால் இப்பொழுது அவர்களே அந்த வேலையை ஏற்றுக்கொண் டார்கள்.

தொழிலாளர் தலைவர்

காங்கிரசுத் தலைவர்கள் பம்பாய் மாகாணத்தில் காங்கிரசு அமைச்சரவையை அமைத்தனர். முஸ்லீம்களுக்கான தொகுதிகளில் காங்கிரசு படுதோல்வியடைந்ததால், தேர்ந்தெடுக்கப்பட்ட முஸ்லீம் சட்டமன்ற உறுப்பினர்களில் யாரைத் தம் பக்கம் சேர்த்துக் கொள்ளலாம் என்று தேடிக்கொண்டிருந்தார்கள். கூட்டு அமைச்ச ரவையை அமைக்க வேண்டிய தேவை இல்லாமலிருந்தது. அம்பேத்கர் கூட்டு அமைச்சரவைகளை அமைப்பதில் நம்பிக்கை யில்லாதவர்; மிக அரிதான சமயங்களில் மட்டுமே கூட்டு அமைச்சரவை அமைக்கப்பட வேண்டும் என்று கருதியவர்.

1937 சூலை 31ஆம் நாள் வழக்குரைஞர் தொழில் தொடர்பாக அம்பேத்கர் துலியாவுக்குச் சென்றபோது வழியில் சாலிஸ்கன் நிலையத்தில் வைகறைப் பொழுதில் தீண்டப்படாதவர்கள் திரளாகக் கூடித் தம் கைகளை அசைத்துத் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்த னர். அன்று காலை எட்டு மணிக்குத் துலியாவை அம்பேத்கர் அடைந்தபோது பெருத்த மகிழ்ச்சி ஆரவாரமுடன் வரவேற்கப்பட் டார். 'அம்பேத்கர் என்பவர் யார்?', 'அம்பேத்கர் எங்கள் அரசர்' என்ற புதிய முழக்கங்கள் விண்ணைப் பிளந்தன. அதன்பின் அம்பேத்கரைப் பயணியர் மாளிகைக்கு ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். நீதிமன்றப் பணிகள் முடிந்தபின் அன்று பிற்பகல் அரிசன சேவைச் சங்கத்தைச் சேர்ந்த பார்வே (Barve) அளித்த தேநீர் விருந்தில் அம்பேத்கர் கலந்துகொண்டார். அன்று மாலை விஜயானந்த் அரங்கில் ஒரு கூட்டத்தில் பேசினார். தீண்டப்படாத வர்களின் பிரச்சினைகளைப்பற்றிக் கவலைப்படாதவர்களாகவிருந்த பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்குப் பதிலாக, நடந்து முடிந்த தேர்தல்மூலம் இப்போது ஆட்சிக்கு வந்திருக்கிற தலைவர்கள் தீண்டப்படாதவர்களைச் சமுதாயத்தில் ஒடுக்குகின்றவர்களைக் கொண்டிருக்கிற கட்சியைச் சார்ந்தவர்கள் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும் என்று அக்கூட்டத்தில் பேசியபோது அவர் குறிப்பிட்டார். முற்காலத்தில் சங்கங்களும் அமைப்புகளும் தீண்டப் படாதவர்களை அவற்றில் உறுப்பினராகச் சேரவிடாமல் தடுப்பதில் எவ்வாறு எச்சரிக்கையாக இருந்தன என்பதை விளக்கினார். அதன்பின் காங்கிரசுக் கட்சி அமைத்துள்ள அமைச்சரவைகளின் மூலமாகப் பார்ப்பனியம் எவ்வாறு மேலாதிக்கத்தை உறுதிப்

படுத்திக் கொண்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டினார். எல்லாக் காங்கிரசு அமைச்சரவைகளுக்கும் பார்ப்பனர்கள்தான் தலைவர் களாக இருக்கின்றனர். ஆனால் அதே நேரத்தில் தீண்டப்படாதவர் ஒருவர் கூடக் காங்கிரசு அமைச்சரவையில் இல்லை.

சுதந்திரத் தொழிற் கட்சியின் முதலாவது பொதுக்குழுக் கூட்டம் 1937 ஆகஸ்ட்டு 7ஆம் நாள் பம்பாயில் நாக்படாவில் நெய்பர்குட் அவுசில் (Neighbourhood house) நடைபெற்றது. அம்பேத்கர் அதன் தலைவராகவும் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். பாரிஸ் டரான எம்.பி. சமார்த்தா பொதுச் செயலாளராகவும், கே.வி. சித்ரே, எஸ்.ஏ. உபாஷம் ஆகியோர் செயலாளர்களாகவும் தேர்ந்தெடுக்கப் பட்டனர். கே.வி. சித்ரே தற்காலிக அமைப்பாளராகவும் இருந்தார். அம்பேத்கரின் நெருங்கிய சகத் தோழர்களின் நம்பிக்கைக்குரிய தலைவராகச் சித்ரே கருதப்பட்டார். கட்சியில் பொதுக்குழுக் கூட்டத்தில் அம்பேத்கர் உரையாற்றியபொழுது வட்டமேசை மாநாடு நடைபெற்ற காலத்தில் மாகாணங்களில் அமைக்கப்படும் அமைச்சரவைகள் ஒவ்வொன்றிலும் ஓர் தீண்டப்படாத அமைச்சர் இருக்க வேண்டும் என்ற கருத்தை முன்மொழிய வேண்டும் என்று தனக்குத் தோன்றாது போயிற்று என்று கூறினார். 1937 ஆகஸ்டு மூன்றாவது கிழமையில் மாகாண அமைச்சர்களுக்கு மாதச் சம்பளமாக அய்ந்நூறு ரூபாய் அளிப்பது மற்றும் வீட்டு வாடகைப்படி, போக்குவரத்துப்படி வழங்குவதுபற்றிய மசோதா சட்டசபையில் தீர்மானிக்கப்படுவதற்காகக் கொண்டுவரப்பட்டது. பொது வரவுசெலவுத் திட்டத்தின்மீது நடந்த விவாதத்தின்போது அம்பேத்கர் அதில் பங்கு பெறவில்லை. அமைச்சர்களின் சம்பளம் பற்றிய மசோதாவைக் குறைகூறி அம்பேத்கர் பேசியபோது, "அமைச்சர்களின் சம்பளத்தைப் பற்றி முடிவு எடுக்குமுன், நான்கு அம்சங்களின் அடிப்படையில் சம்பளக் கோட்பாடு இருக்கிறதா என்பதைக் கவனத்திற் கொள்ள வேண்டும். அவையாவன: முதலாவதாகச் சமூக வாழ்க்கைத் தரம்; இரண்டாவதாக நிதி நிலைமை; மூன்றாவதாக நிர்வாகத்தில் நேர்மையும் தூய்மையும். அரசாங்கத்தின் மூன்று உறுப்புகளில் நிர்வாகத் துறைதான் அதன் மூளை வங்கியாக இருக்கிறது. அய்ந்நூறு ரூபாய் ஊதியம் என்பது தகுதி சான்றவர்களை வாழ்வின் மற்ற துறைகளுக்குப் போகுமாறு செய்துவிடும். அதன் விளைவாகப் பணத்தின் மதிப்பை அறியாத வர்கள் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற வழியேற்பட்டுவிடும்" என்று கூறினார்.

நாட்டில் உள்ள வாழ்க்கைத் தரத்தின் அடிப்படையில் சம்பளத்தை நிர்ணயித்தால், அமைச்சர்கள் ஒவ்வொருவரும் எழுபத்தைந்து உருபாய்தான் சம்பளமாகப் பெற வேண்டும் என்று அம்பேத்கர் அம்மசோதா மீதான உரையில் குறிப்பிட்டார். டாக்டர் ஜான்சன், 'நாட்டுப்பற்று என்பது கயவர்களின் கடைசிப் புகலிடமாக இருக்கிறது' எனக் கூறியுள்ளார். ஆனால் அது அரசியல்வாதிகளின் கடைசிப் புகலிடமாகவும் இருக்கிறது என்று தான் கருதுவதாக அம்பேத்கர் கூறினார். மசோதா மீதான விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசிய பம்பாய் மாகாணப் பிரதமர் கெர், அமைச்சர்களுக்கு ஊதியம் நிர்ணயிக்கிற இம்மசோதாவின் நோக்கம் தாய்நாட்டிற்குத் தொண்டு செய்யவேண்டும் என்பதேயா கும்; நாட்டுப் பற்று என்பது கயவர்களின் கடைசிப் புகலிடமாக இருக்கலாம். ஆனால் அதுதான் மரியாதைக்குரிய மனிதர்களின் முதலாவது புகலிடமாக இருக்கிறது என்று கூறினார். அதன்பின், கெர், அம்பேத்கர் அவருடைய சமூகத்திற்குத் தன்னலம் கருதாமல் ஆற்றியுள்ள தொண்டினைக் குறிப்பிட்டுவிட்டு, அதேபோன்று, அவர்தம் தொண்டினை இந்த நாட்டிற்கும் ஆற்றிட வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.

அம்பேத்கர் மேற்கொண்ட பிரச்சாரம் இடையீடின்றித் தொடர்ந்து நடைபெற்றது. *1937* செப்டம்பர் மாதத்தின் முற்பகுதி யில் மசூரில் தீண்டப்படாதார் மாவட்ட மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார். அம்மாநாட்டில் அம்பேத்கர் உரையாற்றியபோது, "தொழிலாளர்களின், ஏழைகளின் நலன்கள்பற்றிக் கவலைப்படாத வர் காந்தி என்பது என்னுடைய அழுத்தமான கருத்தாகும். காங்கிரசு ஒரு புரட்சிகரமான அமைப்பாக இருந்திருப்பின் அதில் நான் சேர்ந்திருப்பேன். ஆனால் காங்கிரசு ஒரு புரட்சிகரமான கட்சியாக இல்லை என்பது என் திடமான கருத்தாகும். சாதாரண மக்கள் அவரவர் விரும்புகின்ற தொழிலைச் செய்வதற்கான வாய்ப்பையும் உரிமையையும் பெற்று வளருவதற்கான வழிய மைத்துத் தரவல்ல சமூகப் பொருளாதாரச் சமத்துவத்தைத் தன் கொள்கையாக அறிவிக்கக்கூடிய துணிவு காங்கிரசுக்கு இல்லை. உற்பத்திச் சாதனங்கள் எல்லாம் சில சுயநலமிகளின் ஆதிக்கத்தில் இருக்கின்றவரையில் இதைச் செய்ய முடியாது. காந்தியின் தத்துவப்படிப் பார்த்தால் ஏருடன் பூட்டியுள்ள இரண்டு மாடுகளு டன் மூன்றாவது மாடாகத்தான் விவசாயியைப் பிணைக்க வேண்டியிருக்கிறது" என்று கூறினார்.

கம்யூனிஸ்டுகள் நடத்துகின்ற தொழிற்சங்க இயக்கத்திலும்தான் சேருவதற்கான வாய்ப்பு இல்லை என்று அம்பேத்கர் சொன்னார். தங்களுடைய அரசியல் நோக்கங்களுக்காகத் தொழிலாளர்களைச் சுரண்டுகின்ற கம்யூனிஸ்டுகளின் முதல் எதிரியாகத் தன்னைக் கருதுவதாகவும் குறிப்பிட்டார்.

தாங்கமுடியாத துன்பங்களுக்கிடையில் உழைக்கும் வெகு மக்களான விவசாயிகளின் நல்வாழ்விற்காக அம்பேத்கர் அவரால் இயன்றதனைத்தையும் செய்தார். பூனாவில் நடைபெற்ற பம்பாய் மாகாணச் சட்டசபைக் கூட்டத்தொடரின்போது 1937 செப்டம்பர் 17ஆம் நாள் கொங்கணப் பகுதியில் உள்ள கோட்டி நிலக்குத்தகை முறையை ஒழிப்பதற்கான மசோதாவைக் கொண்டுவந்தார்.

1937 தேர்தலுக்குப்பின் இந்தியாவில் அமைக்கப்பட்ட மாகாணச் சட்டசபைகளில் நிலக்குத்தகையாளர்களின கொத்தடிமை நிலையை ஒழிக்க வேண்டும் என்று மசோதாவைக் கொண்டுவந்த முதலாவது சட்டமன்ற உறுப்பினர் அம்பேத்கரே ஆவார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். நடப்பில் இருந்த குத்தகையாளருக்கான காலவரையறை முறையை ஒழிப்பதன்மூலம் சாகுபடி செய்து கொண்டிருந்த குத்தகையாளர்களுக்கே நில உரிமையைப் பெற்றுத் தரவேண்டும் என்பதே அம்பேத்கர் கொண்டு வந்த மசோதாவின் நோக்கமாகும். கோட்டி குத்தகை உரிமை முறையை அகற்றிவிட்டு அதற்குப் பதிலாக நிலப்பட்டா வழங்கும் இரயத்துவாரி முறையைக் கொண்டுவர விரும்பினார்; நில உரிமையாளர்களான கோட்டிகளுக்கு, அந்நிலங்களின் மீதான உரிமையை அவர்கள் இழப்பதற்காக நியாயமான அளவில் ஈட்டுத்தொகை வழங்கப்பட வேண்டும்; உண்மையில் நிலத்தைப் பயிரிட்டுக்கொண்டிருக்கும் குத்தகை விவசாயிகளுக்கு 1879ஆம் ஆண்டைய நில வருவாய்ச் சட்டத்தின் படி நில உரிமையை வழங்கிட வேண்டும் என்று அம்மசோதாவில் கோரியிருந்தார். ஆனால் இந்தப் பிரச்சினையை அரசு தள்ளிப் போட்டுக்கொண்டே போனதால் அம்பேத்கரால் இம்மசோதாவைச் சட்டசபையில் கொண்டுவர முடியாதுபோயிற்று. மகார் ஊழிய மானியம் அல்லது தலையாரி மானியம் என்கிற 'மகார் வட்டன்' முறையை ஒழிக்க வேண்டும் என்றும் அம்பேத்கர் ஒரு மசோதாவைக் கொண்டுவந்தார். இதை ஒழிக்க வேண்டும் என்று 1927 முதல் அம்பேத்கர் போராடி வந்தார். இறுதியில் ஒருவழியாக 1959இல் பம்பாய்க் கீழ்நிலை கிராம (ஊழியர்கள்) வட்டன்கள் ஒழிப்புச் சட்டம் I மூலம் மகார் வட்டன் முறை ஒழிக்கப்பட்டது.

1937 மார்ச்சு மாதம் முதல் முக்கியமான மானநஷ்ட வழக்கு ஒன்று பம்பாய் மஸகான் நீதிமன்றத்தில் நடைபெற்றுக்கொண்டிருந்தது. 'ஹிலால்' என்ற உருது நாளேட்டின் ஆசிரியராக இருந்த அலி பகதூர்கான் என்பவர் மகாராட்டிரத்தில் முன்னணியில் நின்ற ''விவித விரிட்டா' என்ற மராட்டிய வார இதழின் ஆசிரியர் ஆர்.கே. டட்னிஸ் என்பவர் மீது மான நஷ்ட வழக்கு தொடுத்திருந்தார். அம்பேத்கர் அவருடைய நண்பரான டட்னிஸ் சார்பில் மிகுந்த ஈடுபாட்டுடன் திறமையாக வாதாடினார். அவருடைய வாதங்களுக்கு ஆதாரமாக எண்ணற்ற ஆங்கில மற்றும் இந்திய வழக்குகளின் சட்டங்களை எடுத்துக்காட்டி, டட்னிஸ் எழுதிய கட்டுரையை அதன் ஒட்டுமொத்தத் தன்மையில் பார்க்க வேண்டும் என்று கூறி ஏழு மணி நேரத்திற்கு மேல் வாதிட்டார். குற்றம் சாட்டப்பட்ட டட்னிஸ் நல்லெண்ணத்துடன்தான் எழுதியிருக்கிறார் என்பதை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது. டட்னிஸின் நடத்தையைப்பற்றி ஹிலாஸ் கூறிய குற்றச்சாட்டை அவர் நிரூபிக்காததால் அவருக்கு அய்ந்து உருபாய் அபராதம் விதிப்பதாக நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

ஆதித்திராவிட இளைஞர் சங்கத்தைச் சேர்ந்த இளைஞர்கள் சிலர் அம்பேத்கர் தேர்தலில் மகத்தான வெற்றி பெற்றதற்காக அவருக்கு ஒரு பாராட்டு விழாவை 1937 நவம்பர் மாதம் நடத்தினார்கள். அக்கூட்டத்தில் பேசியபோது, இளைஞர்கள் காங்கிரசில் சேரக்கூடாது என அம்பேத்கர் எச்சரித்தார். இளைஞர்கள் காங்கிரசில் சேர்ந்துவிட்டால், தீண்டப்படாத வகுப்பு மக்களின் துன்பங்களுக்காகக் குரல்கொடுக்க அவர்களிடையே யாரும் இருக்க மாட்டார்கள் என்று கூறினார். அம்மாதத்தின் கடைசி வாரத்தில் பம்பாய்த் தீண்டப்படாத வகுப்பு மக்கள், நாசிக்கைச் சேர்ந்த அவர்களுடைய தலைவரான பாவ்ராவ் கெய்க்வாடுக்கு, தீண்டப்படாத மக்களின் குடியுரிமைகளுக்காக அவர் இடைவிடாது முழு ஈடுபாட்டுடன் சமூகத் தொண்டாற்றியதற்காகவும், தீரமுடன் போராடியதற்காகவும் பாராட்டு விழா நடத்தினார்கள். அக்கூட்டத்தில் தன்னுடைய தளபதியான கெய்க்வாடின் தொண்டினை, தோழமையை, தியாகத்தை அம்பேத்கர் பலபட பாராட்டினார்.

II

பந்தர்பூரில் நடைபெற்ற ஷோலாப்பூர் மாவட்டத் தீண்டப்படாதார் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக அம்பேத்கர் 1937 டிசம்பர் 30ஆம் நாள் புறப்பட்டார்; பயணவழியில் பொழுது புலரும்

நேரத்தில் குர்துவாடி நிலையத்தில் இறங்கிய அவருக்கு அன்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. அங்கிருந்து அவரையும் அவருடன் வந்த தோழர்களையும் தனிப் பேருந்தில் பந்தர்பூருக்கு அழைத்துச் சென்றனர். போகும் வழியில் கர்காம் கிராமத்தில் சிறிது நேரம் இருந்தனர். அங்கு மட்டாங் சமாஜத்தினர் முன்னிலையில் சுருக்கமாக அம்பேத்கர் உரையாற்றினார். காங்கிரசுக் கட்சிபற்றி எச்சரிக்கையுடன் இருங்கள்; ஏனெனில் வெள்ளைக் கதராடை உடுத்திக்கொண்டு கதர்த்தொப்பியும் அணிந்துகொண்டு உதட்டள வில் ஏழைகளின் நலன்பற்றிப் பேசுகின்ற சுரண்டல்காரர்களும், ஆதிக்கப் பேர்வழிகளும் உங்கள் குருதியை உறிஞ்சிக் குடிப் போரும் காங்கிரசில் இருக்கின்றனர் என்பதைப் புரிந்துகொள்ளுங் கள் என்று கூறினார். அன்று நண்பகல் அம்பேத்கர் பந்தர்பூரை அடைந்ததும் அவரை ஊர்வலமாகப் பயணியர் மாளிகைக்கு அழைத்துச் சென்றனர். பயணியர் மாளிகையில் பந்தர்பூர் நகராட்சியின் தலைவர் அம்பேத்கரைச் சந்தித்தார். அதன்பின் அவ்விருவரும் மாநாட்டிற்குச் சென்றனர். மாநாடு நகராட்சிச் சத்திரத்தில் நடைபெற்றது. சுற்று வட்டாரத்திலிருந்த ஊர்களிலிருந் தும் நெடுந்தொலைவிலிருந்தும் தீண்டப்படாத வகுப்பு மக்கள் அவர்களுடைய பெருந்தலைவர் அம்பேத்கரின் உரையைக் கேட்பதற்காகக் கூடியிருந்தனர்; ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்கள் வந்திருந்தனர்.

அம்மாநாட்டில் அம்பேத்கர், தீண்டப்படாதவர்களின் முன்னர் மூன்று பிரச்சினைகள் இருப்பதாகச் சுட்டிக்காட்டினார். இந்துச் சமூகத்தில் தீண்டப்படாதவர்களுக்குச் சமத்துவமான அந்தஸ்து எப்போதேனும் அளிக்கப்படுமா என்பது முதல் சிக்கல். நாட்டின் செல்வத்தில் அவர்களுக்கு உரிய பங்கு கிடைக்குமா என்பது இரண்டாவதாகும். மூன்றாவது அவர்களுடைய சுயமரியாதை, சுய உதவி இயக்கத்தின் கதி என்னவாகும் என்பதாகும். முதலாவது சிக்கல்குறித்து, சாதிமுறை நீடித்து இருக்கின்றவரையில் சமூகத்தில் சமத்துவமான நிலையை அடைய முடியாது என்று அவர் கூறினார். இரண்டாவது பிரச்சினையைப்பற்றி விளக்கியபோது, தீண்டப்படா தவர்களுக்குக் காங்கிரசு கேடுகள் செய்துள்ளது என்று குற்றஞ்சாட் டிக் கண்டித்தார். காங்கிரசு முதலாளிகளால் ஆட்டுவிக்கப்படுகிறது. முதலாளிகளின் கைப்பாவையாகக் காங்கிரசு இருக்கும்வரையில், தீண்டப்படாதவர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காகத் தற் போதுள்ள அரசு ஏதேனும் செய்யும் என்று நம்புவதற்கு இடமே இல்லை; நம்முடைய மக்களைச் சுரண்டிக்கொண்டிருக்கிற முதலாளி


களுக்கு எதிரான சக்திகளை ஒன்று திரட்டி ஒரு முன்னணியை அமைக்க வேண்டியது இன்றியமையாததாகும்; நம்முடைய பொருளாதாரச் சுதந்திரத்தை அடைவதற்கான வேளை வந்துவிட்டது என விளக்கினார். மூன்றாவது பிரச்சினையைப்பற்றிப் பேசியபோது, 'நீங்கள் ஒரு செய்தியை நினைவில் கொள்ளுங்கள்; நீங்கள் மேற்கொள்ளும் (சுயமரியாதை - சுயஉதவி) முயற்சியால் இழக்கப் போவது ஒன்றுமில்லை; அதனால் கிடைக்கின்ற ஒவ்வொன்றும் நமக்கு ஆதாயமே! நீங்கள் விட்டொழிக்கவேண்டியது உங்கள் சாவைப்பற்றிய அச்சத்தை மட்டுமே' என்று கூறி எழுச்சியூட்டினார்.

அம்பேத்கர் பம்பாய் மாகாணச் சட்டசபையில் கொண்டு வந்திருந்த மகார் வட்டன் ஒழிப்பு மசோதாவை அம்மாநாடு முழுமனத்துடன் ஆதரித்தது.

மாநாடு முடிந்தபின் அம்பேத்கரை நகராட்சி மன்றத்திற்கு அழைத்துச்சென்றனர். நகராட்சி உறுப்பினர்கள் மகிழ்ச்சி பொங்க அவரை வரவேற்றனர். அங்கு நகராட்சியின் தலைவர் உணர்ச்சி ததும்ப உரையாற்றி வரவேற்பளித்தார். சிறப்பு விருந்தினரான அம்பேத்கருக்கு மாலை அணிவித்தார். அவர்கள் காட்டிய அன்பிற்கும் பாராட்டுதல்களுக்கும் நன்றி தெரிவித்து அம்பேத்கர் பேசினார்.

பந்தர்பூரிலிருந்து ஷோலாப்பூரில் மட்டாங் மாநாட்டில் உரையாற்றுவதற்காக அம்பேத்கர் சென்றார். ஷோலாப்பூரில் 1938 சனவரி 4ஆம் நாள் காலை பகவத் சித்ரா மந்திரில் பொதுமக்களின் சார்பில் ஷோலாப்பூர் நகராட்சி அம்பேத்கருக்கு வரவேற்பு அளித்தது. வரவேற்பு மடலை நகராட்சியின் தலைவர் ராவ்பகதூர் டாக்டர். வி.வி. மூலே அவையில் படித்து அம்பேத்கரிடம் அளித்தார். டாக்டர் மூலே நகராட்சியின் தலைவர் என்ற நிலையில் ஷோலாப்பூரின் தீண்டப்படாத வகுப்பு மக்களுக்கு உற்றுழி உதவி வந்தார். தனக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்கு அம்பேத்கர் பதிலளித்துப் பேசியபோது நாடாளுமன்ற சனநாயகம்குறித்த அவருடைய கருத்துகளை எடுத்துரைத்தார்.

'காங்கிரசுக் கட்சியை மட்டுமே மதித்துப் போற்றுகின்ற மன இயல்பு மக்களிடையே ஒரு பழக்கமாக வளர்ந்துவிட்டிருக்கிறது; இந்தியாவில் வளர்த்தெடுக்கப்பட்டுள்ள அரசியல் சூழ்நிலையின் அவலம் இதுவாகும்.'



பம்பாயில், 7.12.1956ஆம் நாள் அம்பேத்கரின் இறுதிப் பயணம்

'எல்லாச் சூழ்நிலைகளுக்கும் எல்லாச் சிக்கல்களுக்கும் சன நாயக நெறியே சரியான தீர்வு என்று நான் நம்புவதில்லை. இந்தியாவில் இன்றுள்ள சூழ்நிலைக்குச் சனநாயக நெறியிலான அரசு பெரிதும் பொருத்தமற்றதாகும். மக்கள் நலனில் நாட்டம் மிக்க அறிவுசான்ற வலிமையானதோர் சர்வாதிகாரியின் ஆட்சி இந்தியாவிற்குச் சிறிது காலத்திற்குத் தேவைப்படுகிறது'.

இந்த நாட்டில் நம்மிடையே சனநாயகம் இருக்கிறது. ஆனால் அந்தச் சனநாயகம் அறிவுடைமையைச் செயற்படுத்தும் ஆற்றலை இழந்து நிற்கிறது. சனநாயகமானது ஒரே ஒரு அமைப்புடன் (காங்கிரசுடன்) மட்டுமே தளைப்படுத்திக்கொண்டுள்ளது. அந்த அமைப்பின் கருத்துகளையும் செயல்களையும் நடுநிலையில் நின்று ஆராய்ந்து தீர்ப்பளித்திட அந்தச் சனநாயகம் தயாராக இல்லை. ஆகவே அந்தச் சனநாயகத்தைப் பெருங்கேடானதாக, ஒரு நோயாக, ஒரு நலிவாக நான் கருதுகின்றேன். நம் மக்கள் அனைவரையும் அது பாதித்துள்ளது; அவர்களை மதிகெட்டவர்க ளாக்கிவிட்டது. இந்திய மக்கள், தம் பழக்கம் காரணமாக எதிலும் நம்பிக்கை வைப்பார்களே தவிர, எதையும் அறிவு நுட்பமுடன் ஆராய்ந்து பார்க்கமாட்டார்கள். எவரேனும் ஒருவர் வழக்கத்திற்கு மாறுபட்ட ஒன்றை இங்குச் செய்தால்-மற்ற நாடுகளில் மூளைக்கோ ளாறு உள்ளவன் செய்வது என்று சொல்லப்படுகின்ற தன்மையி லான ஒரு விசித்திரமான செயலை இங்குச் செய்தால், இந்த நாட்டில் அவர் ஒரு மகாத்மாவாகவோ அல்லது ஒரு யோகியா கவோ மதிக்கப்படுகிறார். இடையன் பின்னால் செம்மறியாடுகள் செல்வதுபோல் மக்கள் இத்தகையோரின் பின்னால் செல்கின்றனர். உண்மையில் மனக்குறையுள்ள அனைவரின் கருத்துகளையும் பொறுப்புடன் கேட்டறிந்திட சனநாயகம் கற்றுக் கொள்ள வேண்டும்.[82] இந்த நாட்டில் எங்கள் கட்சி மட்டுமே இருக்கிறது என்று தம்பட்டம் அடித்துக் கொள்கின்ற காங்கிரசுக் கட்சியில் இல்லாத என்னை-தற்போதுள்ள சூழலில் மக்கள் அக்கட்சியையே ஆதரிக்கத் தயாராக இருக்கும் நிலையையும் பொருட்படுத்தாமல், என்னைத் தேர்வு செய்து எனக்கு வரவேற்பு அளித்ததன்மூலம் ஷோலாப்பூர் நகராட்சி ஒரு முன்னோடியாகத் திகழ்கிறது என்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்' என விளக்கமாகப் பேசினார்.

அடுத்த நாள் ஷோலாப்பூரில் அம்பேத்கர் மற்றொரு முக்கிய உரையாற்றினார். மதம் குறித்த அம்பேத்கரின் கருத்துகளைக் கேட்டிட உள்ளூர்க் கிறித்தவர்கள் ஆவலுடன் இருந்தனர்.

ரெவரெண்ட் கங்காதர் ஜதாவ் தலைமையில் நடைபெற்ற கிறித்தவர்களின் கூட்டத்தில் அம்பேத்கர் பேசினார். 'இந்து மதத்தை விட்டுவிலகுவது என்ற என் எண்ணத்தை அறிவித்த நாள் முதற்கொண்டு, நான் விலைபேசப்படும் பொருள் போலாகிவிட்டேன் அல்லது மகிழ்ச்சியூட்டக்கூடிய ஒருவனாகக் கருதப் படுகின்றேன்' என்று பகடிதோய்ந்த தொனியில் கூறினார். மகாராட்டிரத்தின் புகழ்பெற்ற எழுத்தாளரான ஆச்சாரியா பி.கே. அட்ரே எழுதிய 'வந்தே பாரதம்' என்ற நாடகத்தில் மதமாற்றத்தைக் கேலிசெய்திருப்பதை அம்பேத்கர் சுட்டிக்காட்டி விட்டு, மதம் மாறுவது என்ற முடிவில் தான் உறுதியுடன் இருப்பதாக உரைத்தார். மதங்களை ஒப்பிட்டு ஆராய்ச்சி செய்ததில் இருவர் மட்டுமே தன்னைக் கவர்ந்தனர் என்றார். அவர்களில் ஒருவர் புத்தர்; மற்றவர் ஏசு கிறித்து.

ஒருவருக்கொருவர் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதை அறிவுறுத்துவதாக-சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு மனிதன் மற்றவர்க்கும் கடவுளுக்கும் ஆற்றவேண்டிய கடமைகளை வரையறை செய்து வலியுறுத்துவதாக மதம் இருக்க வேண்டும்; அத்தகைய மதம்தான் தனக்கு வேண்டும் என்று அவ்வுரையில் மேலும் குறிப்பிட்டார். தென்னிந்தியாவில் கிறித்தவத் தேவாலயங்களில் கிறித்தவர்களிடையே சாதி வேறுபாடு பின்பற்றப்படுகிறது என்றும் மேலும் அரசியலில் அவர்கள் பின்தள்ளப்பட்டிருக்கிறார்கள் என்றும் அக்கூட்டத்திலிருந்த கிறித்தவர்களிடம் கூறினார். மகார் இளைஞர்கள் கிறித்தவராக மதம் மாறினால் அவர்களுடைய கல்வி உதவித் தொகையை இழந்துவிடுகிறார்கள்; எனவே கிறித்தவர்களாக அவர்கள் மதம் மாறியதால் எத்தகைய பொருளாதாரப் பயனும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை; மேலும் இந்தியக் கிறித்தவச் சமூகம் சமூக அநீதிகளைக் களைந்திட என்றுமே போராடியதில்லை என்று அக்கூட்டத்தில் அம்பேத்கர் விளக்கினார்.[83]

அம்பேத்கருடைய மனங்கவர்ந்த மத நிறுவனர்களாகப் புத்தரையும் கிறித்துவையும் மட்டுமே அம்பேத்கர் குறிப்பிட்டுள்ளதை நாம் கவனத்திற்கொள்ள வேண்டும். அவர் இலண்டனிலிருந்து திரும்பிய பிறகு, சீக்கிய மதத்தின்பால் அவர் கொண்டிருந்த ஆர்வம் நீங்கிவிட்டது என்பதை இதன்மூலம் நாம் அறிகிறோம். கிறித்தவர்களிடையே அம்பேத்கர் ஆற்றிய உரை அவர்களைக் கடிந்துகொள்வதாகவும் இருந்தது; அதே வேளையில் அவர்களுக்கு அறிவு புகட்டுவதாகவும் இருந்தது.

அம்பேத்கர் ஷோலாப்பூரிலிருந்து பம்பாய் திரும்பியதும் விவசாயிகளின் பேரணியை நடத்துவதற்கான ஏற்பாட்டு வேலை களில் முழுமையாக ஈடுபட்டார். அப்பேரணி அம்பேத்கர் தலைமையில் பம்பாய் மாகாணச் சட்ட சபையை நோக்கிச் செல்வதாகத் திட்டமிடப்பட்டிருந்தது. பம்பாய்க்கு அருகிலிருந்த தாணா, கொலாபா, இரத்தினகிரி, சத்தாரா, நாசிக் ஆகிய மாவட்டங்களிலிருந்து விவசாயிகள் தொடர் வண்டிகளிலும் இயந்திரப் படகுகளிலும் பம்பாய்க்கு வந்தனர். கிழிந்த உடை உடுத்தியிருந்த அந்த விவசாயிகள் போர்வைகளையும் மூட்டை முடிச்சுகளையும் தம் தோள்களில் தொங்கவிட்டுக்கொண்டு, கைகளில் தடிகளுடன், தங்கள் குறைகளை அரசுக்கு உணர்த்திட வேண்டி பம்பாயில் திரண்டனர். வெயிலால் கறுத்திருந்த அவர் களின் முகங்களில் புதிய ஆர்வம் பொலிந்தது. மூன்று முனைகளிலிருந்து விவசாயிகளின் பேரணி சட்டசபையை நோக்கிச் சென்றது. ஒன்று பரேலிலிருந்து புறப்பட்டது; இன்னொன்று அலெக்சாண்டிரியா கப்பல் தளத்திலிருந்து தொடங்கியது; மூன்றா வது சௌபர்த்தியிலிருந்து கிளம்பியது. காவல் துறையினர் சூழ்ந்துவர, ஊர்வலம் முன்பே தீர்மானிக்கப்பட்டிருந்த வீதிகள் வழியாக ஊர்ந்து சென்றது. முக்கியமான இடங்களில் பலத்த போலீசு பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. 'கோட்டி நில உரிமை முறை ஒழிக,' 'டாக்டர் அம்பேத்கர் மசோதாவிற்கு ஆதரவு தாரீர்' என்ற முழக்கங்கள் எழுதப்பட்ட தட்டிகளை ஏந்தியவாறு ஊர்வலத்தினர் நடந்தனர். பகல் ஒன்றரை மணிக்கு மூன்று திசைகளிலிருந்தும் புறப்பட்ட பேரணிகள் விக்டோரியா டெர்மின சுக்கு அருகிலிருந்த எஸ்பிளனேடு திடலை அடைந்தன. அங்கே காவல் துறை அதிகாரிகள் ஊர்வலம் மேற்கொண்டு செல்லாதவாறு தடுத்து நிறுத்தினர். இருபது பேர் மட்டும் ஒரு குழுவாகச் சென்று பம்பாய் மாகாணப் பிரதமரைச் சந்திக்க அனுமதித்தினர். அந்நாளில் மாகாண முதலமைச்சரைப் 'பிரதமர்' என்று குறிப்பிடுவதுதான் வழக்கம். அம்பேத்கரின் தலைமையில் பருலேகர், எஸ்.சி. ஜோஷி, டி.டபிள்யூ. ரவுத், இந்துலால் யக்னிக், ஏ.வி. சித்ரே ஆகியோர் அடங்கிய குழுவினர் பிரதமரைச் சந்தித்தனர்.

அத்தூதுக் குழுவினர் பிரதமரிடம் விவசாயத் தொழிலாளிகளுக் குக் குறைந்தபட்சக் கூலியை அமல்படுத்த வேண்டும் என்பதை அவர்களுடைய முதல் கோரிக்கையாக வலியுறுத்தினர். இரண்டா வது கோரிக்கையாக, நிலவரி பாக்கியை வசூலிப்பதைத் தள்ளிவைத் திருப்பது போலவே குத்தகை பாக்கியையும் வசூலிக்காமல்

தள்ளிப்போட வேண்டும் என்று கேட்டனர். கோட்டி நிலஉரிமை முறையையும் இனாம்தார் முறையையும் நஷ்ட ஈடு கொடுத்தோ அல்லது கொடுக்காமலோ ஒழித்திட உடனடியாகச் சட்டம் இயற்ற வேண்டும் என்று வற்புறுத்தினார்கள். பொருளியல் நோக்கில் சமூகத்தைப் பாழ்படுத்துகின்ற, சமூக நிலையில் கொடுமை இழைக்கின்ற நிலப்பிரபுத்துவம் ஒழிக்கப்பட வேண்டும் என்றும் கோரினர். சிறு நில உடைமையாளர்களுக்கு நீர்ப்பாசனத் தீர்வை யைப் பாதியாகக் குறைக்கவேண்டும் என்பதைக் கடைசிக் கோரிக்கையாக வைத்தனர். ஒவ்வொரு பிரச்சினையும் அமைச்ச ரவை உரிய வகையில் தீர்த்திட முயலும் என்று பிரதமர் தூதுக் குழுவினரிடம் தெரிவித்தார்.

பிரதமரைச் சந்தித்தபின் தலைவர்கள் எஸ்பிளனேடு திடலுக்குத் திரும்பினார்கள். அங்கே மாபெரும் பொதுக் கூட்டத்தில் உரையாற் றினார்கள். அன்று 'கம்யூனிஸம்' பற்றி கருத்து செறிந்த உணர்ச்சி மிக்கதோர் உரையை அம்பேத்கர் ஆற்றினார். ''உலகில் உள்ள கம்யூனிஸ்டு தலைவர்கள் அனைவரும் படித்துள்ள புத்தகங்களை விட நான் அதிகமான அளவில் அதுபற்றிய நூல்களைப் படித்திருக்கிறேன்.[84] கம்யூனிஸ்டுகள் பிரச்சினைகளின் நடை முறைத்தன்மையை ஒருபோதும் காண்பதேயில்லை. உடைமை உடையவர் - உடைமை இல்லாதவர்; பணக்காரர் - ஏழை, சுரண்டுவோர்-சுரண்டப்படுவோர் என உலகில் இரண்டே வகுப்பு கள்தான் உள்ளன. மூன்றாவது வகுப்பாக நடுத்தரவர்க்கம் இருக்கிறது. இவர்கள் சிறுபான்மையினர். விவசாயிகளே! தொழிலா ளர்களே! உங்களுடைய வறுமைக்குக் காரணம் என்ன என்று எண்ணிப் பாருங்கள். உங்களைச் சுரண்டுவோரின் செல்வச்செழிப் பில்தான் உங்களின் உழைப்பு குவிந்திருக்கிறது. சாதி, இன வேறுபாடு கருதாமல் தொழிலாளர்களை ஒன்று திரட்டி ஓரணியில் நின்று போராடுவதே வறுமையிலிருந்து விடுபடுவதற்கான வழியா கும். உங்களுடைய உண்மையான பிரதிநிதிகளைச் சட்டமன்றத்திற் குத் தேர்தெடுத்து அனுப்புங்கள். இவ்வாறு நீங்கள் செய்தால், இருக்க இடமும், உடுத்த உடையும் உங்களுக்குக் கிடைக்கும். அப்போதுதான் இந்நாட்டிற்குத் தேவையான உணவையும் செல் வத்தையும் உற்பத்தி செய்கின்ற நீங்கள் பட்டினியால் சாக நேரிடாது'' என்று எழுச்சியூட்டிப் பேசினார். அம்பேத்கரின் பேச்சிலிருந்த அழுத்தத்தையும், சிறந்த வாதத்திறமையையும், கூர்த்த மதிநுட்பத்தையும் வேறு எந்தக் கம்யூனிஸ்டு தலைவருட னேனும் ஒப்பிட்டுப் பார்த்தால், அம்பேத்கர் மிகவும் உயர்ந்து

நிற்பதை இப்பேச்சின் மூலம் உணர முடியும். விவசாயிகளின், தொழிலாளர்களின், நிலமற்ற கூலி விவசாயிகளின் ஒப்பற்ற தலைவராக அம்பேத்கர் உருவாகிவிடுவாரோ என்று அவருடைய எதிரிகள் அஞ்சினார்கள்.

III

விவசாயச் சீர்திருத்தச் சட்டங்களுக்காக அம்பேத்கர் போராட்டம் நடத்திக்கொண்டிருந்த காலத்தில், ஆளுங்கட்சியான காங்கிரசுடன் கடுமையாக மோதவேண்டிய புதிய பிரச்சினை உருவெடுத்தது. தீண்டப்படாதார் நலக்கண்ணோட்டத்தில் அப்பிரச்சினை முதன்மை வாய்ந்ததாக இருந்தது. உள்ளாட்சி மன்றங்கள்பற்றிய சட்டத்தைத் திருத்துவதற்காகக் கொண்டுவரப்பட்ட புதிய மசோதாவிலிருந்த ஒரு விதியில் தீண்டப்படாதவர்களைக் 'கடவுளின் மக்களான அரிசனங்கள்' என்று ஒரு வரையுறை செய்யப்பட்டிருந்தது. அரிசனங்கள் என்ற குறியீட்டுச் சொல்லை அந்த விதியிலிருந்து நீக்குமாறு கோரி அம்பேத்கரின் தளபதியான பாவ்ராவ் கெய்க்வாடு ஒரு திருத்தத் தீர்மானத்தைச் சட்டசபையில் கொண்டுவந்தார். தங்களை அரிசனங்கள் என்று அழைக்கக்கூடாது எனத் தீண்டாப்படாத வகுப்பு மக்கள் பல மாநாடுகளில் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறார்கள்; ஆகவே 'அரிசன்' என்ற சொல்லுக்குச் சட்டவடிவ அங்கீகாரத்தை அளிக்கவேண்டாம் என்று தக்க காரணங்களைக் காட்டி கெய்க்வாடு முறையாக வாதிட்டார்.

'அரிசன்' என்ற பெயருடன் அம்மசோதாவை இந்த அவையில் நிறைவேற்றுவது என முடிவு செய்தால், அது ஒரு எதிர்ப்பைச் சந்தித்த பின்னரே நடைபெற முடியும். தீண்டப்படாதவர்கள் கடவுளின் பிள்ளைகளானால், தீண்டக்கூடிய வகுப்பு மக்கள் அரக்கர்களின் பிள்ளைகள் என்று பொருளா? எல்லோரையுமே 'அரிசனங்கள்' என்று அழைப்பதாயின் எமக்கு அதில் தடையேதும் இல்லை. இனிமையான ஒரு பெயரைத் தீண்டப்படாதவர்க்குச் சூட்டுவதால் பயன் ஏதும் விளையாது. தீண்டப்படாதவர்களின் இன்னல்களைப்போக்கிட நடைமுறையில் ஏதாவது செய்ய வேண்டும் என ஆணியறைந்தாற்போல் தன் கருத்தை வலியுறுத்தினார். டி. டபிள்யு. ரவுத், கெய்க்வாடு கொணர்ந்த திருத்தத்தை ஆதரித்தார். மாண்புமிகு அமைச்சர் எல்.எம். பட்டீல், 'வெறும் பெயர் மாற்றம் மட்டுமே இரங்கத்தக்கநிலையில் இருக்கும் தீண்டப்படாதவர்களைப் பொருளாதார ரீதியில் உயர்த்திவிடாது என்பதை அறிவோம். ஆயினும் 'தீண்டப்படாதவர்கள் என்ற சொல் ஒருவகையான

இகழ்ச்சியைக் குறிப்பதாக இருப்பதால் அதை நீக்கிடவிரும்புகின் றோம். ஆகவேதான் தீண்டப்படாத வகுப்புக்குக் கண்ணியமான ஒரு பெயரினைச் சூட்ட விரும்புகின்றோம்' என்று கூறினார்.

கெய்க்வாடு கொண்டுவந்திருந்த திருத்தம் சட்டசபையில் வாக்கெடுப்பிற்கு விடப்பட்டுத் தோல்வியுற்றது. தீண்டப்படாதவர் களுக்கென ஒதுக்கப்பட்டிருந்த பதினைந்து சட்டசபைத் தொகுதி களில் காங்கிரசு இரண்டே இடங்களில்தான் வெற்றிபெற்றது. அம்பேத்கர் கட்சியினர் பதிமூன்று இடங்களில் வென்றனர். இவ்வாறிருந்தும் காங்கிரசு சட்டசபையில் தனக்குள்ள பெரும் பான்மை காரணமாக 'அரிசன்' என்ற குறியீட்டுச்சொல்லைத் தீண்டப்படாத வகுப்பு மக்களின் விருப்பத்திற்கு மாறாக, அவர்கள் பேரில் திணித்துவிட்டது. உடனே அம்பேத்கர் துள்ளியெழுந்து உறுதியான குரலில் பேசத் தொடங்கினார். இந்தப் பிரச்சினையில் தீண்டப்படாதவர்களின் விருப்பத்தை அரசு ஏற்றுக்கொண்டிருக்க வேண்டும்; அவ்வாறு ஏற்காதது மிகவும் வருந்தத் தக்கதாகும். என்னுடைய மதிப்பிற்குரிய நண்பர் கெய்க்வாடு கொண்டு வந்த திருத்தத்தை இந்த அவை ஏற்றுக்கொண்டிருக்குமாயின், அதனால் யாருக்கும் தீங்கு ஏற்பட்டிருக்காது. இந்த நாட்டின் நலன்களும் பாதிக்கப்பட்டிருக்கமாட்டா. அரசு தன் பெரும்பான்மை பலத்தைச் சர்வாதிகார முறையில் பயன்படுத்த முனைந்து விட்டதால் எங்கள் எதிர்ப்பைத் தெரிவிப்பதன் அறிகுறியாக நாங்கள் இந்த அவையி லிருந்து வெளிநடப்பு செய்கிறோம்: அவையின் இன்றைய நடவடிக்கைகளில் இனிக் கலந்து கொள்ளமாட்டோம் என முழக்கமிட்டார்.

பிரதமர் கெர் தீண்டப்படாத உறுப்பினர்களை அமைதிப்படுத்த முயன்றார். அரிசன் என்ற சொல் நாகரிகமானதாகவும் சரியான பொருளை உணர்த்துவதாகவும் இருக்கிறது என்றார். இச்சொல்லின் தோற்றம் குசராத்தி சமயக்கவிஞரான நர்சி மேத்தாவின் பாடல் ஒன்றில் இருப்பதாக அவர் கூறினார்.

'இதற்கு மாற்றாக வேறு ஒரு சிறந்த பெயரை உடனடியாக என்னால் சொல்ல முடியாது. வேறு ஏதாவது மாற்றுச்சொல்லைக் கண்டறிவதற்காக ஆளும் கட்சியானது எங்களோடு கலந்து பேசியிருக்க வேண்டும். பிரதமர் கெர் கூறியவை எமக்கு நிறைவளிக்கவில்லை. ஆகவே இந்த அவையிலிருந்து வெளிநடப் புச் செய்கிறோம்' என்று கூறி அம்பேத்கர் சட்டசபையைவிட்டு வெளியேறினார். அவருடைய கட்சி உறுப்பினர்களும் அவரைப் பின்தொடர்ந்து வெளிநடப்பு செய்தனர்.

அம்பேத்கர் நசுக்கப்பட்ட மக்களின் நலன்களுக்காக உழைப்பதில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டிருந்தார். அதனால் கொஞ்சகாலம் அவர் புத்தகங்களில் தோய்ந்து கிடப்பதை மேற்கொள்ள இயலவில்லை. நூல்களுக்கிடையே இருப்பதை எப்போதும் விரும்புகின்ற அம்பேத்கர் இப்போது மக்களின் மத்தியில் இருந்தார். தீண்டப்படாதவர்களின் துன்பங்களை அறிவதற்குக் கிடைக்கின்ற ஒவ்வொரு வாய்ப்பிலும் அவர்களுடைய இன்னல்களைக் கேட்டறிந்து, ஆய்வு செய்து, அவ்விடத்திலேயே அவர்களுக்கு வழிகாட்டினார். அவர்களுடைய குறைகளை அரசுக்குத் தெரிவித்தார். அவர்களுடைய துயரங்களின், கருத்துகளின், சூளுரைகளின் குரலாக அம்பேத்கர் திகழ்ந்தார். அகமத் நகரில் வாழ்ந்த வறிய மக்கள் அம்பேத்கரின் வழிகாட்டுதலை வேண்டினர். அதனால் 1938 சனவரி 23ஆம் நாள் அகமத் நகரில் விவசாயிகள் தொழிலாளர்கள் மாநாட்டில் பங்கேற்று உரையாற்றினார்.

நகர் என்ற ஊரில் மாவட்ட உள்ளாட்சி மன்றத்தில் வழக்குரைஞர் பாவ்சாகிப் கன்வடே, சர்தார் தோரட், அரசு வழக்குரைஞரான திரிபுவன் ஆகியோர் அம்பேத்கருக்கு ஒரு தேநீர் விருந்து அளித்தனர். அன்று மாலை அம்பேத்கரும் அவருடைய தோழர்களும் அதே மாவட்டத்தில் இருந்த அக்கோலா என்ற சிற்றூருக்குத் தனி லாரி ஒன்றில் சென்றனர். வழி நெடுகிலும் அம்பேத்கரை மக்கள் மகிழ்ச்சி பொங்கிட வரவேற்றனர். அக்கோலாவில் மாநாட்டில் அம்பேத்கர் 90 நிமிடங்கள் உரையாற்றினார். அம்பேத்கர் சட்டசபையில் கொண்டுவந்திருந்த எல்லா மசோதாக்களையும் ஆதரித்து அம்மாநாடு தீர்மானங்களை நிறைவேற்றியது.

அதன்பின், அம்பேத்கர் விவசாயிகளையும் இரயில்வே தொழிலாளர்களையும் அணிதிரட்டும் பணியில் ஈடுபட்டார். இரயில்வே தொழிலாளர்களின்பால் அவர் நாட்டம் மிகுதியும் சென்றது. 1938 பிப்ரவரி 12 மற்றும் 13 ஆகிய நாட்களில் தீண்டப்படாத இரயில்வே தொழிலாளர்களின் மாபெரும் மாநாடு மன்மத்தில் கூட்டப்பட்டது. அம்மாநாட்டில் இருபதாயிரம் தொழிலாளர்கள் கலந்துகொண்டனர். அவர் சிறுவனாக இருந்தபோது பஞ்சாலைகளில் தொழிலாளர்களாகப் பணிபுரிந்த அவருடைய உறவினர்களுக்கு உணவு தூக்குகளில் உணவு எடுத்துச்சென்றது பற்றியும், அதனால் அவர்களுடைய பிரச்சினைகளைப்பற்றி அறிந்து கொள்ள வாய்ப்பு அமைந்ததுபற்றியும் விரிவாக எடுத்துரைத்தார். அந்நாளில் தொழிலாளர்களின் நிலைமை

முற்றிலும் மாறுபட்ட நிலையில் இருந்தது. தொழிலாளர்களின் தலைவர்கள், தொழிலாளர்களுக்கிடையே பிளவு ஏற்பட்டுவிடுமோ என்று அஞ்சி, தீண்டப்படாத தொழிலாளர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளைத் துடைத்திட முயற்சிக்கவேயில்லை என்றார். தீண்டப் படாத இரயில்வே தொழிலாளர்களுக்கென நடைபெறும் முதலாவது மாநாடு இதுதான் என்று குறிப்பிட்டார். 'சமூக அநீதிகளையும், இன்னல்களையும் களைந்திட நீங்கள் இதுவரை போராடினீர்கள். அதில் ஓரளவு வெற்றியும் பெற்றிருக்கின்றீர்கள். அதன் விளைவாக அரசியலில் பிரதிநிதித்துவம் கிடைத்திருக்கிறது. இப்போது உங்களு டைய பொருளாதாரத் துயரங்களைப் போக்கிடும் பணியை மேற்கொண்டிருக்கிறீர்கள். இதற்குமுன் பறையர்களாக மட்டுமே நீங்கள் ஒருவரோடு ஒருவர் சந்தித்துக்கொண்டீர்கள்; ஆனால் இப்போது தொழிலாளர்களாகச் சந்தித்துக்கொள்கிறீர்கள். இதுவரை, என்னை இந்நாட்டின் எதிரி என்று நம் எதிரிகள் கூறிவந்தார்கள். இனி என்னைத் தொழிலாளர்களின் எதிரி என்று அவர்கள் அழைப்பார்கள்' என்று அவருக்கே உரிய முத்திரைப் பாணியில் பேசினார்.

''நம் நாட்டில் உழைக்கும் வர்க்கத்திற்கு எதிராக இரண்டு சக்திகள் இருக்கின்றன. ஒன்று பார்ப்பனியம்; மற்றது முதலாளித்து வம். பார்ப்பனியம் என்று நான் குறிப்பிடுவது, பார்ப்பன வகுப்பினரிடம் மட்டும் குவிந்துள்ள அதிகாரம், சிறப்புரிமைகள், தன்னலம் முதலானவற்றையன்று. பார்ப்பனர்களை மட்டும் குறிப்பிடும் சொல்லாகப் பார்ப்பனியத்தை நான் பயன்படுத்த வில்லை. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றுக்கு எதிரான தன்மையையே பார்ப்பனியம் என நான் கருதுகிறேன். இதன்படி பார்த்தால் பார்ப்பனியம் எல்லாச் சாதிகளிலும் வகுப்புகளிலும் படிந்திருக்கிறது. பார்ப்பனியத்தின் மூலக்கர்த்தாக் கள் பார்ப்பனர்களே, ஆயினும் பார்ப்பனர்களிடம் மட்டும் அது இருக்கவில்லை. சமபந்தி விருந்து, கலப்புத் திருமணம் போன்ற சமூக உரிமைகளில் தடைபோடுவதுடன் பார்ப்பனியம் நின்றுவிட வில்லை; அது குடியுரிமைகளையும் வெகுமக்களுக்கு வழங்கிட மறுத்தது. வாழ்வில் எல்லாவற்றிலும் ஊடுருவி நிற்பது பார்ப்பனி யம். அதனால்தான் பொருளாதார வாய்ப்புகளையும் அது பாதித்தது''[85] என்று தீண்டப்படாத இரயில்வே தொழிலாளர் மாநாட்டில் மேலும் குறிப்பிட்டார்.

''தீண்டப்படாத வகுப்புத் தொழிலாளிக்கும் தீண்டக்கூடிய வகுப்புத் தொழிலாளிக்கும் இடையே இருக்கின்ற வாய்ப்புகளின் தன்மைகளை ஒப்பிட்டுப் பாருங்கள். வேலை கிடைப்பதில்,

அப்படி வேலை கிடைத்தாலும் அந்த வேலையை உறுதி செய்து கொள்வதில் அல்லது அதில் மேலும் முன்னேறுவதில் தீண்டப் படாத தொழிலாளிக்கு மிகக் குறைவான வாய்ப்பே கிடைக்கிறது. தீண்டாமையின் காரணமாகவே தீண்டப்படாத உழைப்பாளிக்குப் பல உத்தியோகங்களின், பல வேலைகளின் வாயிற்கதவுகள் மூடிக் கிடக்கின்றன என்பது ஊரறிந்த செய்தியாகும். நெசவாலைத் தொழில் இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். இரயில்வேயில் நீங்கள் தண்டவாளத்தைக் காவல் காக்கிற கேங்மென்களாக மட்டுமே இருக்கிறீர்கள். மற்ற உயர்ந்த உத்தியோகங்களில் நீங்கள் இல்லை என்பது ஒருபுறம் இருக்கட்டும்; சுமை தூக்குபவராகக்கூட நீங்கள் வரமுடியவிலலை. தொடர்வண்டி நிலையங்களில் சுமை தூக்குவோராக இருப்போரை நிலைய அதிகாரிகள் தம் வீடுகளில் வேலைக்காரர்களாக வைத்து வேலை வாங்குகிறார்கள். சுமைதூக்கு பவர் தீண்டப்படாதவராக இருந்தால் வீட்டு வேலைக்குப் பயன்படுத்த முடியாது என்பதற்காக இந்த வேலைக்கே சேர்ப்ப தில்லை. இதே நிலைதான் இரயில்வே பணிமனைகளிலும் இருக்கிறது. என் நிலைப்பாட்டை விமர்சனம் செய்கின்ற நண்பர் களைப் பார்த்து நான் ஒன்று கேட்க விரும்புகின்றேன். தீண்டாமையை—கவனமாக மிகத் தெளிவாக இங்கே இருக்கின்ற அநீதிகளையும் ஒருதலைச் சார்பையும் அகற்றாமல் தொழிலாளர் களை நீங்கள் எப்படி ஒன்று திரட்ட முடியும்? அநீதியும் ஒருதலைச்சார்பும் தவறான கொள்கைகளாகும்; ஒற்றுமைக் கோட் பாட்டிற்கு இவை ஊறு விளைவிப்பனவாகும். தொழிலாளத் தோழர்களே! தொழிலாளர்கள் அனைவரும் ஓரணியில் திரள வேண்டுமானால் உங்களுக்குள் உயர்வு தாழ்வு கற்பிக்கும் பார்ப்பனியத்தை அடியோடு கல்லி எறியுங்கள். இந்தியாவில் தொழிற்சங்க இயக்கம் வருந்துதற்குரிய நிலையில் இருக்கிறது; குமட்டுகின்ற நாற்றமடிக்கும் தேங்கிய குட்டையாகிவிட்டது அது. தொழிற்சங்க இயக்கத்தின் தலைமை பயங்கொள்ளித்தனமானது; தன்னலமானது; அல்லது தவறான வழிகாட்டுதலுக்கு உள்ளாகிக் கிடப்பது. முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்குமிடையே ஏதே னும் வேறுபாடு இருப்பினும், அந்த வேறுபாட்டைவிடத் தொழிற்சங்கங்களுக்குடையில் நடக்கின்ற மோதல்கள் மிகவும் ஆபத்தானவையாக இருக்கின்றன. கம்யூனிஸ்டுகள் தாங்கள் போராடிப் பெற்ற தொழிற்சங்க உரிமைகளைத் தவறாகப் பயன்படுத்துகிறார்கள்'' என்று அம்பேத்கர் கூறினார்.

காங்கிரசுக்கு வெளியிலோ அல்லது உள்ளேயோ தொழிலாளர் களுக்கெனத் தனியான ஒரு கட்சி இருப்பதை எதிர்ப்பதாக

எம்.என். ராய் கூறியிருப்பது தனக்கு வியப்பளிப்பதாக அம்பேத்கர் கூறினார். பலபேருக்கு எம்.என். ராய் புதிரானவராக இருக்கிறார்; அதைப் போல அவர் தனக்கும் புதிரானவராக இருப்பதாகக் குறிப்பிட்டார். எம்.என். ராய் ஒரு கம்யூனிஸ்டு. அதேபோது தொழிலாளர்களுக்கெனத் தனியானதோர் அரசியல் கட்சி இருப்பதை எதிர்க்கிறார்! விளங்கிக் கொள்ளமுடியாத முரண்பாடு இது! ராயின் கூற்றைக் கேட்டிருந்தால் லெனின் அவருடைய கல்லறையிலிருந்தே துள்ளிக் குதித்து எழுந்திருப்பார். ஆங்கில ஏகாதிபத்தியத்தை வீழ்த்துவதே இந்திய அரசியலின் முதலாவதான-முதன்மையான நோக்கமாக இருக்கவேண்டும் என்று ராய் கருதியிருக்கக்கூடும் என அம்பேத்கர் கூறினார். ஏகாதிபத்தியம் ஒழிக்கப்பட்டவுடன் இங்கே மக்களின் இரத்தத்தை உறிஞ்சுகிறவர்களாக இருக்கின்ற பெருநில உடைமையாளர்களை, ஆலை முதலாளிகளை, கடுவட்டிக்காரர்களை எதிர்த்துத் தொழிலாளர்கள் போராட வேண்டியுள்ளது. சுதந்திரம் பெற்ற உடனேயே முதலாளியத்தையும் ஏகாதிபத்தியத்தையும் எதிர்த்துப் போராடுவதற்காகத் தொழிலாளர்கள் தமக்கெனத் தனியான அமைப்பைப் பெற்றிருக்க வேண்டும் என அம்பேத்கர் விளக்கினார்.

தீண்டப்படாத இரயில்வே தொழிலாளர்களின் மாநாடு நடைபெற்ற அதே பந்தலில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தீண்டப்படாத இளைஞர் மாநாடும் நடத்தப்பட்டது. வரவேற்புக் குழுவின் தலைவரான முரளிதர் பக்ரே அம்மாநாட்டில் வரவேற்புரையாற்றினார். அதன்பின் அம்பேத்கர், தெளிவையும், ஊக்கத்தையும், செயல்வேகத்தையும் அளிக்கவல்ல அறியதோர் உரையை நிகழ்த்தினார். 'ஓர் உயர்ந்த குறிக்கோளை நீங்கள் ஏற்று ஒழுகிட வேண்டும். இதை என்றும் மறவாதீர். இதுவே உங்கள் வாழ்வின் உயரிய நெறியாக இருக்க வேண்டும். நாட்டின் உயர்வினுக்காக ஒருவர் கொண்டிருக்கிற கொள்கையானாலும் அல்லது தன்னுடைய சொந்த முன்னேற்றத்திற்காக மேற்கொண்ட கொள்கையாகயிருப்பினும் அதை அடைவதற்காக நிதானத்துடன் உழைத்திட வேண்டும். தளரா முயற்சியுடன் இன்னல்களையும் இடர்ப்பாடுகளையும் ஏற்றுக் கடுமையாக உழைத்ததன் மூலமே இவ்வுலகில் சிறந்தவற்றைப் பலர் அடைந்திருக்கிறார்கள். நீங்கள் ஏற்றுக் கொண்ட குறிக்கோளில் உங்களுடைய முழுச்சிந்தனையையும் ஆற்றலையும் செலுத்துங்கள். உயிர் வாழ்வதற்காகவே மனிதன் உண்ண வேண்டும்; ஆனால் சமூகத்தின் நலத்திற்காக உழைப்பதற்காக மட்டுமே உயிர் வாழவேண்டும்.



இலண்டனில் 'இந்தியா இல்லத்தில்' உள்ள அம்பேத்கரின் உருவப்படம்.
படத்தின் அருகில் நிற்பவர் இந்தியாவிற்கான முன்னாள் தூதுவர் எம். ரஸ்கோத்ரா.

கல்வியின் நோக்கம்பற்றி அம்பேத்கர் விளக்கிப் பேசினார். 'கல்வி என்பது வாள் போன்றது; இருபுறமும் கூர்மையுடைய ஆயுதம் அது: அதனால் அதைப் பயன்படுத்தும்போது விழிப்பு டன் இருக்க வேண்டும். ஒழுக்கமும் அடக்கமும் இல்லாத படித்த மனிதன் விலங்கைவிட ஆபத்தானவன். அவன் கற்ற கல்வி ஏழைகளின் நலன்களுக்குக் கேடு பயப்பதாக இருப்பின் அவன் சமூக விரோதி போன்றவனே. அப்படிப்பட்ட படித்த மனிதனை சீ! சீ!! என்று இகழ்ந்து ஒதுக்குங்கள்! கல்வியைவிட ஒழுக்கம் இன்றியமையாததாகும். இளைஞர்கள் சமய உணர்வில் நாட்டமில் லாதவர்களாக வளர்ந்து வருவதைக் கண்டு நான் மனம் வருந்துகின்றேன். சிலர் கூறுவது போன்று மதம் மயக்கமூட்டும் அபினி அல்ல. என்னிடமிருப்பதாகக் கருதப்படும் நல்லியல்புகள், அல்லது என்னுடைய கல்வியால் இச்சமூகத்திற்கு ஏற்பட்டிருப்பதா கச் சொல்லப்படும் நன்மைகள் எல்லாம் என்னுள் பொதிந்திருக்கும் சமய உணர்வினால் விளைந்தவையேயாகும். மனிதனுக்கு மதம் தேவையெனக் கருதுகின்றேன். ஆனால் மதத்தின் பெயரிலான கபட வேடத்தை நான் வெறுப்பவன்' என்று தீண்டப்படாத இளைஞர் மாநாட்டில் கூறினார். தீண்டப்படாத இளைஞர் மாநாடு மாபெரும் வெற்றியுடன் முடிந்தது. வாய்ப்பு நேரிட்டால், தீண்டப்படாத வகுப்புத் தலைவர்களாலும் வெகுமக்களைத் திரட்டிட முடியும் என்பதை இம்மாநாடு புலப்படுத்தியது.

IV

அம்பேத்கர் பம்பாய் திரும்பியதும், 1938 மார்ச்சு 19ஆம் நாள் பம்பாய் தாட்வாடியில் தீண்டப்படாத வகுப்பு மக்களின் சார்பில் விவித விரிட்டா இதழின் ஆசிரியர் ஆர்.கே. டட்னிஸ் அம்பேத்கருக்குச் சிறிய பணமுடிப்பொன்றை அளித்தார். அவ்விழா வில் பேசிய அம்பேத்கர் அவருடைய சுதந்திரத் தொழிற் கட்சியில் சேருமாறு மக்களைக் கேட்டுக்கொண்டார். 'என் உடல்நலம் சீர்கெட்டிருக்கிறது. அதனால் வாரத்தில் சனி, ஞாயிறு ஆகிய இரண்டு நாட்களும் நான் உண்ணாநோன்பு இருக்க வேண்டும் என்று மருத்துவர்கள் கூறியிருக்கிறார்கள். தண்ணீர்கூடக் குடிக்கக் கூடாது என்று தடை விதிக்கப்பட்டிருக்கிறது. திங்கட்கிழமை பகற்பொழுதில்தான் என் உண்ணாநோன்பை முடிக்கிறேன். கடவுள் தங்கள் வேண்டுதலை நிறைவேற்றியதற்காகவோ அல்லது தங்களுடைய வேண்டுதலை நிறைவேற்ற வேண்டும் என்பதற்கா கவோ மக்கள் உண்ணாநோன்பு இருக்கிறார்கள். ஆனால் நான் என்னுடைய செரிமானக் கோளாறுகளை நீக்குவதற்காக உண்ணா

நோன்பு இருக்கிறேன்' என்று கூறினார். அம்பேத்கரின் உண்ணா நோன்புபற்றி பம்பாய்ச் சட்டசபையிலும் பேசப்பட்டது. இரண்டு சூதாடிகளின் தண்டனையை உள்துறை அமைச்சர் நிறுத்திவைத்த செயலைக் கண்டித்து உணர்ச்சி பொங்க அம்பேத்கர் சட்டசபையில் பேசியபோது இடையில் ஒரு முழுங்கு தண்ணீர் குடித்தார். உடனே ஒரு காங்கிரசுக் கட்சி உறுப்பினர் எழுந்து 'இந்த அவையில் குடிக்கலாமா?' என்று அவைத்தலைவரிடம் கேட்டார். அப்போது அம்பேத்கர் தான் உண்ணாநோன்பு இருப்பதுபற்றிச் சட்டசபையில் கூறினார்.

சட்டசபைத் தேர்தலில் அடைந்த வெற்றியால் ஊக்கம் பெற்றிருந்த அம்பேத்கர் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் களில் தன் கவனத்தைச் செலுத்தினார். இது தொடர்பாக இஸ்லாம்பூருக்குச் சென்றார். சத்தாரா மாவட்டக் கழகத்திற்குப் போட்டியிடும் அவருடைய கட்சி வேட்பாளர்களுக்கு வாக்களிக்கு மாறு அங்குத் தீண்டப்படாத வகுப்பு மக்களைக் கேட்டுக்கொண் டார். அக்கூட்டத்தில் பேசியபோது, மராட்டியர்கள் காங்கிரசைச் சார்ந்திருக்காத தன்மையில் அவர்களுக்கெனத் தனியான ஒரு அரசியல் கட்சியை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்; ஏனெனில் காங்கிரசில் முதலாளிகளும் பார்ப்பனர்களும் மட்டுமே ஆதிக்கம் செய்துகொண்டிருக்கின்றனர்; இவர்கள் விவசாயிகளின், நடுத்தர வகுப்பு மக்களின் நலன்களுக்காக எதுவும் செய்யமாட்டார்கள் என்று அம்பேத்கர் கூறினார். சத்தாராவிற்கும் பூனாவிற்கும் சென்ற பிறகு பம்பாய்க்குத் திரும்பினார்.

அதே மாதத்தில் பம்பாய்ச் சட்டசபையில் மிக முக்கியமான தொரு மசோதா விவாதத்திலிருந்தது. அம்மசோதா தொடக்கக் கல்வி திருத்தச் சட்டம் பற்றியதாகும். அம்மசோதாவின் விவாதத்தின் போது சட்டசபையில் அம்பேத்கருக்கும் உள்துறை அமைச்சரான முன்ஷிக்கும் இடையே அடிக்கடி கடுமையான வாக்குவாதங்கள் ஏற்பட்டன. முன்ஷி சிறந்த வழக்கறிஞர்; திறமையாக வாதிடுவதில் வல்லவர். இவ்விருவரும் உணர்விலும் கொள்கை அடிப்படையி லும் எதிரெதிரான நிலையினராக இருந்தனர். அதனால் மிகக்கடுமை யாக ஒருவரையொருவர் எதிர்த்தனர்.

இக்கல்வி மசோதாவின்மீது அம்பேத்கர் பேசியபோது, காந்தி யால் உருவாக்கப்பட்டுக் காந்தியக் கோட்பாட்டினால் பேணி வளர்க்கப்படுகிற வார்தா கல்வித் திட்டத்தைத் தாக்கினார். உடனே முன்ஷி எழுந்து, வார்தா கல்வித் திட்டத்தைப்பற்றி மதிப்பீடு

செய்யும் தகுதி அம்பேத்கருக்கு இல்லை என்றார். மேலும் பெரும்பாலான சட்டமன்ற உறுப்பினர்கள் கல்வியியலாளர்களாக இல்லாத காரணத்தால் அவர்களால் இத்திட்டத்தின் தன்மையை உரிய முறையில் அறிந்து அதைப்பற்றிக் கருத்துக் கூறமுடியாது என்று முன்ஷி கூறினார். இது சட்டசபையையே அவமதித்த செயலாகும் என்று கருதிய அம்பேத்கர் சினந்தெழுந்து 'இந்தச் சட்டசபையையே நீங்கள் ஒட்டுமொத்தமாகக் கலைத்து விடலாமே' என்று கூறினார்.

முன்ஷி: மதிப்பிற்குரிய உறுப்பினருக்குச்சட்டம் இயற்றுவதற்கான பொது விதிகளுக்கும் செயல்படுத்தும் இலாகாவின் விதிமுறைகளுக்கும் இடையே இருக்கின்ற வேறுபாட்டைப் பிரித்தறியக் கூடிய திறமையோ நுட்பமோ இல்லை. பெரும்பான்மை உறுப்பினர்களின் ஒப்புதலைப் பெற்ற பிறகுதான் அரசு ஒவ்வொரு சட்டத்தையும் ஏற்படுத்துகிறது.

அம்பேத்கர்: எதிர்க்கட்சியினர் எதையுமே பேசக்கூடாது என்று மதிப்புக்குரிய நண்பர் கூறிட விரும்புகிறாரா?

மாண்புமிகு திரு.கெர் (பிரதமர்): உங்களால் நீக்க முடியாத - உங்கள் வழிக்குத் திருப்ப முடியாத - உங்கள் விருப்பத்திற்கேற்ப இயக்கமுடியாத ஒரு அரசாங்கம் இருக்கும்போது உங்கள் நிலைமை அப்படித்தான்.

அம்பேத்கர்: (சினத்துடன்) இப்போது மட்டும் என்ன வாழ்கிறதோ...

அவைத்தலைவர்: ஒழுங்கைப் பின்பற்றுங்கள்! ஒழுங்கைப் பின்பற்றுங்கள்!

ஒரு செய்தியை இங்கே நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அம்பேத்கர் கற்றறிந்த மேதையாக மட்டுமின்றிச் சட்டக் கல்லூரியின் முதல்வராகவும் இருந்தவர். ஆனால் முன்ஷியோ ஒரு வழக்குரைஞராக மட்டுமே இருந்தார். அம்பேத்கர் பல்லாண்டுகள் கல்விகற்றுக் கல்வித்துறையிலேயே உழன்றவர்; கல்விப் பிரச்சினைகளை ஆராய்ந்தவர். ஆகவே கல்வித் திட்டத்தைப்பற்றி மதிப்பீடு செய்வதற்கு அம்பேத்கரைவிட முன்ஷி சிறந்த தகுதியைப் பெற்றிருக்கவில்லை.

தேசிய முக்கியத்துவம் பெற்ற மற்றொரு பிரச்சினை மீதான விவாதம் பம்பாய்ச் சட்டசபையில் 1938 ஏப்பிரல் முதல் வாரத்தில் நடைபெற்றது. பம்பாய் மாகாணத்திலிருந்து கர்நாடகம் தனியாகப் பிரிக்கப்பட வேண்டும் என்பதே அப்பிரச்சினையாகும். அம்மசோதா மீது பேசிய அம்பேத்கர், கர்நாடகம் தனி மாகாணமாகப் பிரிக்கப்பட்டால், மற்ற அனைவர்க்கும் எதிராக லிங்காயத்துகள் ஆதிக்கம் செய்யும் ஒரு மாநிலமாகத்தான் அது ஆகிவிடும் என்று அஞ்சுவதாகக் கூறினார். கர்நாடக மாகாணப் பிரிவினையை எதிர்த்துப் பேசிய சமயத்தில், இந்தியர் அனைவர்க்குமான பொதுவான ஒரு சட்டத்தை உருவாக்கியதற்காகவும் மய்யப்படுத் தப்பட்ட ஒரு மத்திய அரசை ஏற்படுத்தியதற்காகவும் பிரிட்டிஷ் ஆட்சிக்கு நன்றி தெரிவிப்பதாகக் கூறினார். நாம் அனைவரும் இந்தியர் என்ற உணர்வினை உருவாக்குவதே நம்முன் உள்ள பொதுவான இலட்சியமாகும் என்று அறிவித்தார். 'நாம் அனை வரும் இந்தியர் என்ற உணர்வு இன்னும் கரு நிலையிலேயே இருக்கிறது. இப்போதுதான் அது வளரத் தொடங்கியுள்ளது. ஆகவே கலாச்சார உணர்வுகளுக்கும், தேசிய இன உணர்வுகளுக் கும் மற்ற வகையான தனித்தன்மை காப்பு உணர்வுகளுக்கும் முதன்மை தந்து வளரவிட்டால், அது நாம் வேண்டுமென்றே செய்யக்கூடிய மாபெரும் குற்றமாகும். என்னைப் பொறுத்த அளவில் இதற்கு நான் உடந்தையாக இருக்கமாட்டேன். ஆகவே நான் வன்மையாக, மிக வன்மையாக இத்தீர்மானத்தை எதிர்க் கிறேன்' (கைதட்டல்) என்று கூறி அவையினரையும் நாட்டினரை யும் எச்சரித்தார். பத்து ஆண்டுகளுக்கு முன் சைமன் குழுவிடம் தனியாக அளித்த அறிக்கையில் இதே காரணங்களின் அடிப்படை யில் கர்நாடகம் தனியாகப் பிரிவதை அம்பேத்கர் எதிர்த்திருந்தார்.

மற்றொரு இன்றியமையாத மசோதா பம்பாய்ச் சட்டசபையில் முன்மொழியப்பட்டிருந்தது. பம்பாய் நகரக் காவல்துறை (போலீஸ்) சட்டத்தைத் திருத்துவதே அதன் நோக்கமாகும். வேறெந்த மசோதா மீதும் இல்லாத அளவிற்கு இம்மசோதாமீது சூடான விவாதங்களும் கடுமையான தாக்குதல்களும் தொடுக்கப்பட் டன. இம் மசோதாவில் முன்மொழியப்பட்டுள்ள அதிகாரங்கள் கலகக்காரர்கள் மீது மட்டுமே பயன்படுத்தப்படுவதற்கான வழி வகை செய்யப்பட வேண்டுமென எல்லா எதிர்க் கட்சித் தலைவர்களும் முயன்றனர். இம்மசோதாவிற்கு முக்கியமான ஒரு திருத்தத்தை முன்மொழிந்து அம்பேத்கர் பேசினார். 'தீயவர்களால் பொதுமக்கள் தொல்லைகளுக்கு ஆளாகி வருகின்றனர் என்பது

உண்மைதான். அதன் விளைவாகப் பொதுமக்களின் உயிருக்கே ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. பம்பாயில் தீயொழுக்கங்களுக்கு உறைவிடமாக இருக்கின்ற பகுதியில் நான் இருபத்திரண்டு ஆண்டுகள் வாழ்ந்திருக்கிறேன். ஆகவே இந்த அவையில் இருக்கிற எந்த உறுப்பினரையும்விட, ஏன் போலீஸ் கமிஷனரைவிடவும்கூட 'மவாலிகள்' 'தாதாக்கள்' என்று அழைக்கப்படுகின்றவர்களால் ஏழைமக்கள் எவ்வாறெல்லாம் துன்பங்களுக்கு ஆளாகின்றனர் என்பதை நான் நன்கறிவேன். பாதிக்கப்பட்டவர்கள் தங்களுடைய துன்பத்தைத் தீர்த்துக்கொள்ள முடியாத அவலநிலையில் இருக்கின்றனர். ஏனெனில் பாதிக்கப்பட்டவர்கள் மேலும் தாக்குதலுக்கு ஆளாவோமா என்ற அச்சத்தின் காரணமாக நீதிமன்றத்திற்குச் சென்று அத்தீயவர்களுக்குத் தண்டனை வாங்கித் தர முயற்சிப்பதில்லை' என்று கூறினார்.

'மதக்கலவரங்களின் வரலாற்றைப் பார்க்கும்போது மதத்தின் பேரால் ஆண்டுதோறும் நடைபெற்றுவரும் இந்தக் கொலைத்தாண்டவத்தை உடனடியாக நிறுத்தவேண்டும் என்று அனைவரும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதேநேரத்தில் இதைத் தடுப்பதற்காக நிலைமைக்கேற்ப விருப்பம்போல் நடவடிக்கை எடுப்பதற்காகத் தரப்பட்டுள்ள அதிகாரத்தைப் போலீஸ் கமிஷனர் தன்னிச்சையாகவோ தவறாகவோ பயன்படுத்தாமல் இருப்பதற்கான வழிமுறைகளை இதில் ஏற்படுத்திட வேண்டும். இச்சட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது எந்த நோக்கத்திற்காக இது உருவாக்கப்பட்டதோ அந்நோக்கத்திற்கு மாறான தன்மையில் இதைக் காவல் துறையினர் பயன்படுத்த முடியாத வகையில் விளக்கத்தில் குறைபாடோ, தெளிவின்மையோ இல்லாததாக இச்சட்டத்திருத்த மசோதாவை இயற்றிட வேண்டும்' என்று அவையினரைக் கேட்டுக்கொண்டார்.

இம்மசோதாவின் மீதான விவாதத்தின்போது சட்டமன்றத்தில் சில நேரங்களில் கிளர்ச்சியூட்டும்படியான நிலைமைகள் ஏற்பட்டன. இம்மசோதாவின் முதல் சுற்று விவாதத்தின்போது இதை எதிர்த்து ஜம்னாதாஸ் மேத்தா, கொள்ளைக்காரனுக்குக்கூடக் குற்றச்சாட்டிலிருந்து தற்காத்துக்கொள்ளும் உரிமை அளிக்கப்பட வேண்டும் என்று கூறினார். இதை நடைமுறையில் பின்பற்ற முடியுமா என்று அம்பேத்கர் மேத்தாவை நோக்கிக் கேட்டார். அமெரிக்காவிலும்கூட இதுபோன்ற குற்றவாளிகள் அவர்களை விடுவித்துக் கொள்ளுவதற்காக வாதாடும் உரிமை பறிக்கப்படுவது

சரியானது என்று கருதப்படவில்லை என மேத்தா அவையில் தெரிவித்தார். சில மணித்துளிகள் கழித்து அம்பேத்கர் பேசியபோது, இந்தச் சட்டத்தின் செயல்பாட்டு எல்லையைத் தொழில் தகராறுகளுக்கு நீட்டித்துவிடக்கூடாது என்பதில் நான் ஜம்னாதாஸ் மேத்தாவை விட மிகுந்த கவலை உள்ளவனாக இருக்கிறேன் என்றார்.

ஜம்னாதாஸ் மேத்தா: என்னுடைய அளவிற்கு மட்டும்தான்; என்னை விட உங்களுக்கு அதிகமான அக்கறை கிடையாது.

அம்பேத்கர்: என்னை மேலும் பேசிட அனுமதிப்பீர்களானால், இதில் நான் உங்களைவிட அதிகமாக அக்கறை உள்ளவனாக இருக்கிறேன் என்று கூறிவிட விரும்புகிறேன்.

அதன்பின் உள்துறை அமைச்சரிடம் 'வகுப்பு' (community) என்று அந்த மசோதாவில் குறிப்பிடப்பட்டுள்ளதற்குச் சரியான விளக்கம் கூறுமாறு கேட்டார்.

1938 மே மாதத் தொடக்கத்தில் சத்னாமி சமூகத்தின் தலைமைப்பதவி குறித்த வழக்குத் தொடர்பாக அம்பேத்கர் நாகபுரிக்குச் சென்றார். நாகபுரி நிலையத்தில் அவருக்குச் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. நீதிமன்றத்தின் பணியை முடித்துக் கொண்டபின் அன்றிரவு அவர் பேசிய பொதுக் கூட்டத்திற்குப் புயலையும், மழையையும், மின்னலையும் பொருட்படுத்தாமல் மக்கள் பெருங்கூட்டமாகத் திரண்டு வந்தனர். அடுத்த நாள் காலை அவர் மாணவர் கூட்டம் ஒன்றில் உரையாற்றினார். பிறகு கம்தேவுக்குச் சென்று ஒரு கூட்டத்தில் பேசியபின் பம்பாய்க்குத் திரும்பினார்.

பம்பாய் மாகாணத்தைக் காங்கிரசுக் கட்சி ஆட்சி செய்து கொண்டிருந்தபோதிலும் பம்பாயிலிருந்த அரசு சட்டக்கல்லூரியின் முதல்வராக அம்பேத்கர் தொடர்ந்து பணியாற்றிக்கொண்டிருந்தார். 1938 மே மாதம் முதல்வர் பதவியைத் துறந்தார். சட்டக்கல்லூரியின் சிறப்பிதழில் பின்வருமாறு அவரைப்பற்றி எழுதப்பட்டிருந்தது. 'அம்பேத்கருடைய கற்றறிந்த மேதைத்தன்மைக்கும், திறமைக்கும், மாணவர்கள் மிகுந்த மதிப்பளித்து வந்தனர். அத்தகைய தகுதி சான்ற ஒரு முதல்வர் இப்போது இல்லாதது கல்லூரிக்குப் பேரிழப்பாகும். கடுமையாக உழைத்துக் கவனமுடன் தயாரித்துக் கொண்டுவந்து அவர் நடத்திய பாடங்களை மாணவர்கள் ஆழ்ந்த

கவனத்துடனும், அமைதியுடனும் கேட்டனர்.' அம்பேத்கர் முதல்வராக இருந்த காலத்தில் கல்லூரி நூலகம் பெருமளவில் வளர்ச்சியடைந்ததைப்பற்றி நன்றியுடன் கல்லூரிச் சிறப்பிதழ் நினைவு கூர்ந்திருந்தது. சட்டக்கல்விபற்றிப் புரட்சிகரமான கருத்துகளை அம்பேத்கர் கொண்டிருந்தார் எனவும் அதில் குறிப்பிடப் பட்டிருந்தது.

V

1938 மே 13ஆம் நாள் கொங்கணப் பகுதியில் உள்ள மாவட்டங்களுக்குச் சுற்றுப்பயணமாகப் புறப்பட்டார். கோல்ஹாப் பூர் வழியாகக் கன்கவலிக்குச் சென்றார். கன்கவலியில் 'அம்பேத்கர் நகர்' என்று பெயரிடப்பட்டிருந்த பந்தலில் நடைபெற்ற தீண்டப்படாதவர் மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார். கொங்கணப் பகுதியில் விவசாய இயக்கத்தைக் கட்டியமைத்ததில் பெரும் பங்காற்றிய ஏ.வி. சித்ரே அம்மாநாட்டிற்கு வருகை தந்திருந்தார். கோவ்லி பிரதான், டிப்னிஸ் முதலானவர்களும் அம்மாநாட்டில் கலந்துகொண்டனர். அச்சிறிய நகரத்தின் வரலாற்றில் அம்மாநாட்டில்தான் முதன்முதலாக ஒலிபெருக்கி பயன்படுத்தப்பட்டது. அம்பேத்கர் அவருடைய தலைமை உரையில்:

'மராட்டியத்தில் இருபது இலட்சம் மகார்கள் இருக்கிறோம். நம்முடைய உரிமைகளை வென்றெடுப்பதற்காகவும் நம் சமூகத்திற்குச் சுயமரியாதையான வாழ்வைப் பெற்றுத்தருவதற்காகவும் தொடர்ந்து போராடுவதற்கு இவர்களில் சிலரேனும் முன்வரவேண்டும். அருவருப்பான கெஞ்சிப் பிழைக்கும் பழக்கத்தை விட்டொழியுங்கள். மீதப்பட்டு, வீசியெறியப்படும் உணவை நம்பி உயிர் வாழும் போக்கைக் கைவிடுங்கள். சட்டசபையில் உள்ள உங்கள் பிரதிநிதிகள் எவ்வாறு செயல்படுகிறார்கள் என்பதை உற்றுக் கவனியுங்கள். கோட்டி முறையை ஒழிப்பதன்மூலம் உங்களுடைய அடிமை நிலையை ஒரு முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்பதில் நான் உறுதியுடன் இருக்கிறேன். நான் சட்டசபையில் கொண்டு வந்துள்ள இந்த மசோதா தோற்றுப்போகுமானால் கோட்டி முறையை ஒழித்திட அமைதியான முறையில் போராட்டம் நடத்திடத் தயாராக இருங்கள்' என்று கேட்டுக்கொண்டார்.

அடுத்த நாள் அம்பேத்கர், தேவ்ருக், ஆரவல்லி ஆகிய இடங்களுக்குச் சென்றார். சிறிது நேரமே அங்கெல்லாம் இருந்தார். அவ்விடங்களில் குழுமியிருந்த தீண்டப்படாத வகுப்பு

மக்களிடையே சுருக்கமாகப் பேசினார். மே 16ஆம் நாள் இரவு சிப்ளன் சென்றடைந்தார். அடுத்தநாள் காலை குகாகர் சென்று அங்கே ஒரு கூட்டத்தில் பேசிவிட்டு மீண்டும் சிப்ளன் திரும்பினார். சிப்ளனில் பொதுக்கூட்டத்தில் உரையாற்றினார். அவ்வமயம், 'காந்தியிடம் இருப்பதாகக் கூறப்படும் மாயக்கவர்ச்சியால் என்னை ஈர்த்திட முடியாது. ஜவஹர்லால் நேருவும், சுபாஷ் சந்திர போசும் காந்தியின் மோகன வலைவீச்சில் விழுந்துவிட்டனர். நான் என்றுமே அவர்களைப்போல் ஆகிவிடமாட்டேன். எப்பொழுதே னும் காங்கிரசில் நான் சேர நேர்ந்தாலும் அப்போதும் என் தகுதிகள் காரணமாகவே அங்கே சிறந்து விளங்குவேன். கோட்டி ஒழிப்பு மசோதாவைச் சட்டமன்றத்தில் நான் கொண்டுவந்து பத்து மாதங்களாகிவிட்டன. ஆளும் காங்கிரசுக் கட்சி அதை நிறைவேற்றா மல் தள்ளிப் போட்டுக்கொண்டே வருகிறது. அம்மசோதாவிற்குச் சட்டசபையில் போதிய ஆதரவு கிடைக்காமல் தோற்றுப்போகுமா னால் நாம் உடனடியாக வரிகொடா இயக்கத்தைத் தொடங்க வேண்டும். அந்தப் போராட்டத்தில் சிறைக்குச் செல்லும் முதல் ஆளாக நான் இருப்பேன். இம்மாகாண மக்கள் தொகையில் நூற்றுக்கு எண்பதுபேர் விவசாயிகளாக இருக்கிறீர்கள். ஆகவே பம்பாய் மாகாணத்தின் பிரதமர் பதவியில் உங்களைப் போன்ற ஒரு விவசாயி அமர வேண்டும் என்று விரும்புகிறேன்' என்று கூறினார்.

கேத், தபோலி ஆகிய ஊர்களில் கூட்டங்களில் உரையாற்றிய பிறகு, அம்பேத்கர் மகதிற்குச் சென்றார். கொங்கணத்தின் வைதிக இந்துக்களுக்கும், பிற்போக்குச் சக்திகளுக்கும் எதிராக மகதிலிருந்து தான் அம்பேத்கர் அவருடைய முதலாவது போரை நடத்தினார். மகதில் பெருந்திரளாகக் கூடியிருந்த மக்களிடையே காங்கிரசு ஆட்சி கடைப்பிடிக்கும் கொள்கைகள் ஏமாற்றமளிப்பதாகக் கூறி, அவர் கள் கிளர்ந்தெழும்படியானதோர் உரையை நிகழ்த்தினார். மே 13ஆம் நாள் பயணமாகப் புறப்பட்ட அவர் ஆயிரம் மைல்கள் சுற்றுப்பயணம் செய்துவிட்டு, மே 21ஆம் நாள் பம்பாய்க்குத் திரும்பினார். தொடர்ந்து கூட்டங்களில் பேசிக்கொண்டே இருந்த தால் அவர் தொண்டையும் பாதிக்கப்பட்டுவிட்டது. அதனால் அவர் கலந்துகொண்ட கடைசிக் கூட்டத்தில் அவரால் ஒரு சொல் கூடப் பேசமுடியாத நிலை ஏற்பட்டுவிட்டது.

சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு பம்பாய் திரும்பியபின் அம்பேத்கர் அளித்த பேட்டியொன்றில், அவருடைய கட்சிக்கு

மக்களிடையே பெருகிவரும் ஆதரவு மிகவும் மனநிறைவு அளிப்பதாக இருக்கிறது என்றும், நிலத்தின்மீது உரிமையின்றிக் கொத்தடிமைகளாக விவசாயிகள் இருக்கும் நிலையை ஒழித்திட அவர் எடுத்துள்ள நடவடிக்கைகளை மக்கள் நன்றியுடன் பாராட்டுவதாகவும் கூறினார். சுதந்திரத் தொழிற் கட்சி அதற்கே உரிய வழிகளில் அதனுடைய தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றிட நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது. காங்கிரசுக் கட்சி சட்டத்தின்மூலமாகக் குறைகளைக் களைந்திட மறுத்தால் அதனால் மக்கள் காங்கிரசிடம் வைத்துள்ள நம்பிக்கையை இழந்துவிடுவார்கள். அதன்பின் மக்கள் போராடக் கிளர்ந்தெழுவார்கள் என்பது திண்ணம் என்று அப்பேட்டியில் மேலும் குறிப்பிட்டார். சோசலிஸ்டுகளின் போக்கு தனக்கு வியப்பளிப்பதாகக் கூறினார். சோசலிஸ்டுகள் இத்தனை ஆண்டுகளாக ஜமீன்தார்களின் நிலங்களைக் கைப்பற்ற வேண்டும் என்றும், முதலாளித்துவ முறையை ஒழிக்க வேண்டும் என்றும் முழங்கிக்கொண்டிருந்தார்கள். ஆனால் கோட்டி முறையை ஒழிப்பதற்காகச் சட்டசபையில் மசோதா கொண்டுவரப் பட்டுள்ள இந்த நேரத்தில் அவர்கள் செயலற்றுக் கிடக்கிறார்கள் என்று கூறினார்.

அச்சமயம் மத்திய மாகாணத்தில் பதவியிலிருந்த காங்கிரசு அமைச்சரவையில் ஒரு சிக்கல் உருவாயிற்று. பிரதமர் டாக்டர் கரே தங்களுக்குப் பணிந்து போகவில்லை என்பதற்காகக் காங்கிரசுத் தலைவர்கள் அவ்ரைப் பிரதமர் பதவியிலிருந்து நீக்கினார்கள். ஆகவே பல இடங்களில் கூட்டங்களில் மக்களிடம் சனநாயக நெறிப்படியான தன் நிலைப்பாட்டைக் கரே விளக்கினார்.

அத்தகையதோர் கூட்டம் 1938 ஆகஸ்டு மாதத்தின் முதல் கிழமையில் ஆர்.எம். பட் உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. மூன்று அம்சங்கள் காரணமாக அக்கூட்டம் பெருந்திரளான மக்களை ஈர்த்தது. ஒன்று, டாக்டர் கரே எழுதிய பதவி விலகல் கடிதத்தைக் காந்தியே சரிபார்த்துத் திருத்தினார் என்று கூறப்பட்டதைக் காந்தி மறுத்தமை. இரண்டாவது காந்தியின் மறுப்பு உண்மையானது அன்று என டாக்டர் கரே மறுப்பு வெளியிட்டமை. மூன்றாவது கரேவின் புதிய அமைச்சரவையில் தீண்டப்படாத வகுப்பில் ஒருவரை அமைச்சராக ஆக்குவதற்குக் காந்தி தெரிவித்த எதிர்ப்பு. இம்மூன்று முக்கியக் காரணங்களால் அரசியல் நெருக்கடி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக ஆகிவிட்டது. பட் உயர்நிலைப் பள்ளியில் நடந்த அக்கூட்டத்தில் டாக்டர் முஞ்சே,

ஜம்னாதாஸ் மேத்தா, டாக்டர் அம்பேத்கர் ஆகியோர் டாக்டர் கரேவின் கருத்தை ஆதரித்துப் பேசினார்கள். கரே சட்டசபையின் தலைவர் என்ற முறையில் அமைச்சரவையை அவருடைய விருப்பம்போல் அமைத்துக்கொள்ளுவது நியாயமானதாகும் என்று கூறினார்கள். கரே அரிசன சேவா சங்கத்திலும் செயற்குழு உறுப்பினராக இருந்தார். அரிசனங்களை உயர்த்துவதற்கான செயல்களுக்கு ஊக்கமூட்ட வேண்டுமென்ற நோக்குடன் காந்தி கரேவுடன் மத்திய மாகாணங்களில் ஏற்கனவே சுற்றுப்பயணம் செய்தார். ஆனால் அதே காந்தி, கரே தன் அமைச்சரவையில் ஒரு தீண்டப்படாதவரை அமைச்சராகச் சேர்த்துக்கொள்ள அனுமதிக்கவில்லை.

அந்நாட்களில் யாரேனும் அம்பேத்கரிடம் காந்தி ஒரு புனிதமான மனிதர் என்று புகழ்ந்துரைத்தால், உடனே அவர், 'காந்தி புனிதமானவர்போல் தோற்றமளிக்கும் ஒரு பகட்டுக்காரர்' என்று பதிலளிப்பார். வட்டமேசை மாநாட்டின்போது காந்தி நடந்து கொண்ட முறை பெரிய துரோகச் செயலாகும் என்றும் விளக்குவார். அம்பேத்கர் மராத்தி வார இதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியில், 'வாயில் கடவுளின் பெயரைச் சொல்லிக்கொண்டே தன் அக்குளுக்குள் கத்தியை மறைத்து வைத்துக்கொண்டிருக்கிற ஒரு மனிதனுக்கு மகாத்மா என்ற பட்டம் பொருத்தமானது என்றால் - மோகனதாஸ் கரம்சந்த் காந்திக்கு மகாத்மா என்ற பட்டப் பெயர் மிகவும் பொருத்தமானதுதான்'[86] என்று கூறினார். இந்திய அரசியலில் அம்பேத்கரைப்போல் வேறு எந்தத் தலைவரும் எதையும் கடுமையான மொழியில் தாக்கியது இல்லை. எந்தவொரு புரட்சியாளரும் மென்மையான மொழிகளில் பேசுவதில்லை. புரட்சியாளர்களின் போக்கு எப்போதும் புயல் போன்றதோர் தாக்கத்தை விளைக்கவே செய்யும். அம்பேத்கர் 1938 அக்டோபர் மாதக் கடைசி வாரத்தில் ஆமதாபாத்திலிருந்து முப்பது மைல் தொலைவில் உள்ள பாவ்லா என்ற சிறிய நகரத்திற்குச் சென்றார். தீண்டப்படாதவர்கள் வாழ்ந்த பகுதியில் அவருக்கு ஒரு வரவேற்பிதழ் படித்தளிக்கப்பட்டது. கழிவிரக்க மூட்டும் அம்மக்களின் முகங்களைக் கண்டு அம்பேத்கர் நெஞ்சம் நெகிழ்ந்தார். மகாராட்டிரத்தில் உங்களுடைய சகோதரர்களான தீண்டப்படாதவர்கள் செய்திருப்பதுபோல நீங்களும் உங்கள் உள்ள உறுதியையும் தன்னம்பிக்கையும் வளர்த்துக்கொள்ளுங்கள் என்று அவர்களிடம் கேட்டுக்கொண்டார். அங்கிருந்து ஆமதாபாத் நகருக்குத் திரும்பியதும் பிரேமாபாய் அரங்கில் ஒரு கூட்டத்தில் பேசினார். 'அரசியலில்

நான் காந்தியை எதிர்க்கின்றேன். ஏனெனில் காந்தியிடம் எனக்கு நம்பிக்கை இல்லை. காந்தி தீண்டப்படாத வகுப்பு மக்களுக்கு நன்மை செய்வார் என்று என்னால் நம்ப முடியவில்லை. தீண்டப்படாதவர்களின் மேம்பாட்டில் காந்திக்கு மெய்யான பற்று இருந்திருக்குமானால், பம்பாய் மாகாணப் பிரதமரையும், மத்திய மாகாணங்களின் பிரதமரையும் அவர்களுடைய அமைச்சரவைக ளில் தீண்டப்படாதவர்களின் பிரதிநிதிகளை அமைச்சர்களாகச் சேர்த்துக்கொள்ளுமாறு ஏன் கேட்கவில்லை? பம்பாய் மாகாண அரசு நிலவரியைக் குறைக்கவில்லை. பணக்காரர்களின்மீது வரி விதிக்கத் தயங்குகிறது. இதற்கு முன்பு இருந்த (காங்கிரசல்லாத) அரசு தீண்டப்படாத மக்களுக்குத் தரிசு நிலங்களைச் சாகுபடி செய்வதற்காக வழங்க வேண்டும் என்றும், தீண்டப்படாதவர் களைக் காவல்துறையின் பணிகளில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்றும், தீண்டப்படாதவர்களுக்காக அரசுத் துறைகளில் உத்தியோ கங்களில் ஒரு குறிப்பிட்ட சதவீத இடங்களை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்றும் பரிந்துரை செய்திருந்தது. ஆனால் காங்கிரசு அரசு அதைப் பற்றியெல்லாம் கவலைப்படவில்லை' என்று அக்கூட்டத்தில் கூறினார்.

பெல்காம் மாவட்டச் சுதந்திரத் தொழிற் கட்சி நிப்பானியில் 1938 அக்டோபர் 31ஆம் நாள் கூட்டியிருந்த மாநாட்டிற்கு அம்பேத்கர் தலைமை தாங்கினார். அம்பேத்கர் நிப்பானிக்கு வந்து சேர்ந்ததும் மாபெரும் கூட்டம் விண்ணதிரக் கைதட்டி மகிழ்ச்சி பொங்கிட அவரை வரவேற்றது. ஒரு மைல் நீளம் இருந்த ஊர்வலத்தில் அய்ம்பது காளைகள் பூட்டிய தேரில் அம்பேத்கரை அமரச்செய்து அழைத்துச் சென்றனர்.

VI

இதற்கிடையில் 1938 செப்டம்பர் மாதத்தில் பம்பாய்ச் சட்டசபையில் தொழில் தகராறுகள் மசோதா விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இம்மசோதாவை அம்பேத்கரும் ஜம்னாதாஸ் மேத்தாவும் முழுமுச்சுடன் எதிர்த்தனர். இம்மசோதா சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில் வேலைநிறுத்தம் செய்வதைச் சட்டவிரோதமானதாக்குகிறது; தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் செய்யும் உரிமையைப் பறிக்கிறது; ஆகவே இம்மசோதா கேடானது, கொடூரமானது, தொழிலாளர்களைப் பழிவாங்கும் இரத்தவெறி கொண்டது என்று அம்பேத்கர் வருணித்தார். மேலும் தொழில் உரிமையாளர்கள் வரவுசெலவு விவரத்தை அளிக்க

வேண்டும் என்றும் இம்மசோதா கோரவில்லை. தொழிலாளர்களுக்கு எதிராகக் காவல்துறையைப் பயன்படுத்திட அனுமதிக்கிறது என்று அம்பேத்கர் விளக்கினார்.

'என்னைப் பொறுத்தமட்டில் வேலைநிறுத்தம் என்பது உரிமையை நிலைநாட்டச் செய்யப்படும் ஒரு தவறேயாகும். அது ஒரு தண்டனைக்குரிய குற்றமன்று. ஒரு மனிதனை அவனுடைய விருப்பத்திற்கு எதிராக வேலை செய்யும்படிச் செய்வது என்பது அவனை அடிமைப்படுத்துவது போன்றதேயாகும்.

தொழிலாளியை அடிமைபோல் ஆக்குவது என்பது அவனைத் தண்டிப்பதேயாகும். விருப்பம் இல்லாத வேலையைச் செய்வது என்பதே அடிமைத்தனமாகும் என்று அமெரிக்காவின் அரசியல் சட்டம் வரையறை செய்துள்ளது. தான் விரும்புகின்ற தன்மையில், ஓர் ஒப்பந்தத்தின் அடிப்படையில் சுதந்திரமாக ஒருவர் வேலை செய்வதற்கான உரிமையை அடைய மேற்கொள்ளப்படுவதே வேலைநிறுத்தமாகும். இந்தியா சுதந்திரம் பெறுவதற்கான உரிமையை ஒரு புனிதமான உரிமை என்று காங்கிரசுக்காரர்கள் கருதுவதைப் போலவே வேலைநிறுத்த செய்யும் உரிமையும் புனிதமானதாகும்' என்று அம்பேத்கர் கூறினார்.

இம்மசோதாவிற்குத் 'தொழில் தகராறுகள் மசோதா' என்பதற்குப் பதிலாக "தொழிலாளர்களின் சிவில் உரிமைகளை முடக்கும் சட்டம்' என்றே பெயரிட்டிருக்க வேண்டும். இம்மசோதா தொழிலாளர்களை நலிவுறச் செய்வதாகவும் பிற்போக்குத்தனமானதாகவும் இருப்பதால் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் செய்யும் உரிமைய முடக்குகிறது; சட்ட விரோதமானதாக்குகிறது; வேலைநிறுத்தமே செய்ய முடியாத நிலையை ஏற்படுத்துகிறது. ஆகவே இம்மசோதாவை உருவாக்கியவர் 1929ஆம் ஆண்டைய தொழில் தகராறுகள் சட்டத்தை உருவாக்கியவரைவிட மிகப் பெரும் பிற்போக்காளராவார் என்று அம்பேத்கர் விளக்கினார்.

அம்பேத்கர் இவ்வாறு தாக்கிப் பேசியபோது கடைசியாக அவர் குறிப்பிட்ட கருத்து முன்ஷிக்கும் அம்பேத்கருக்கும் இடையே கடுமையான வாக்குவாதத்தைத் தோற்றுவித்தது. வாக்குவாதத்தின் கடைசிப் பகுதியில் அளிக்கப்பட்ட பதில் கீழே தரப்பட்டுள்ளது.

முன்ஷி: கூலி வேலை செய்பவருக்கு இந்த மசோதாவின் தன்மை அடிமைத் தனமானதாக இருக்கலாம்.

அம்பேத்கர்: நீங்கள் இப்போது தயாரித்திருக்கிற மசோதாவின் மூலம் தொழிலாளர்களை மேலும் அடிமைப்படுத்துவதற்காக நீங்கள் நாணித் தலைக்குனிந்திருக்க மாட்டீர்களே!

(குறுக்கீடுகள்)

சபாநாயகர்: ஒழுங்கு! ஒழுங்கு!

தொழிலாளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு இது என்று சொல்லிக்கொள்ளுகிறார்கள்; ஆனால் தேர்தல் வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்தாமல் இருக்கிறார்கள் என்று அம்பேத்கர் அரசை இடித்துரைத்தார். சனநாயகத்தின் பெயரால் உழைக்கும் வர்க்கத்தினர் அடிமைப்படுத்தப்படுகின்றனர். எனவே இது சனநாயகத்தையே கேலிக் கூத்தாக்குவதாகும் என்று கூறினார். தொழிலாளர்களின் தலைவர்களான அம்பேத்கரும், ஜம்னாதாசும் ஆற்றல் மிக்க தம் வாதத் திறமையாலும் சிறந்த மதி நுட்பத்தாலும் ஆளும் கட்சியினர் அஞ்சி வெலவெலத்திடுமளவிற்கு அம்மசோதாவின் அம்சங்களை அடித்து நொறுக்கி அக்குவேறு ஆணி வேறாகப் பிய்த்தெறிந்தனர். ஆயினும் காங்கிரசு அமைச்சரவை அம்மசோதாவை நிறைவேற்றுவது என்று உறுதி பூண்டுவிட்டது. இறுதியில் அவ்வாறே நிறைவேற்றியது.

தொழிலாளர்களின் நலனைப்பற்றிக் கவலைப்படாத காங்கிரசு அமைச்சரவையின் போக்கு சட்டமன்றத்திற்கு வெளியே தொழில் நகரங்களிலும் பெருநகரங்களிலும் பெரும் எதிர்ப்பு அலையைத் தோற்றுவித்தது. இம்மசோதாவிற்கு எதிரான குரல்கள் ஒலித்தன. 1938 நவம்பர் 7ஆம் நாள் திங்கட்கிழமை ஒரு நாள் வேலைநிறுத்தம் செய்வதெனச் சுதந்திரத் தொழிற்கட்சியும், பி.பி.டி.யூ.சி. (B.P.T.U.C— பம்பாய் மாகாணத் தொழிலாளர் யூனியன் காங்கிரசு) யும் அறிவித்தன. ஒருபுறம் வேலைநிறுத்தம் செய்வதற்கான முன்னேற்பாடுகளும் பிரச்சாரமும் பம்பாயில் புயல்வேகத்தில் நடைபெற்றன; மறுபுறத்தில் இவ்வேலைநிறுத்தத்தை முறியடிப்பதற்கான முயற்சிகளும் நடந்தன.

வேலைநிறுத்தத்தில் கலந்துகொள்ளுமாறு கோரி அறுபது தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களுக்கு அழைப்பு விடுத்தன. தொழிலாளர் யூனியன் கவுன்சிலின் செயற்குழுக் கூட்டம் நவம்பர் 6ஆம் நாள் காலை 8 மணிக்கு ஜம்னாதாஸ் தலைமையில் கூடி, அடுத்த நாள்—நவம்பர் 7 அன்று வேலைநிறுத்தப் போராட்டத்திற்கு இறுதி வடிவம் தந்தது. அம்பேத்கர், பாருலேக்கர், மிராஜ்கர்,

டாங்கே, நிம்கர் முதலானோரும் மற்றவர்களும் இச்செயற்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். ஊர்வலம் நடத்துவதெனத் திட்டமிடப்பட்டது. மேலும் எல்லா ஆலைகள் மற்றும் தொழிற் சாலைகளின் முன்னால் அமைதியான முறையில் மறியல் செய்வ தென முடிவெடுக்கப்பட்டது. தொழில் நகரங்களில் உள்ள தொழிலாளர்கள் இந்த மசோதாவிற்கு எதிராகத் தங்கள் மனக் கொதிப்பைக் காட்டிட முன்வர வேண்டுமெனச் செயற்குழு வேண்டுகோள் விடுத்தது.

அம்பேத்கர் சுதந்திரத் தொழிற் கட்சியின் செயற்குழுக் கூட்டத்திற்கு அவருடைய கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்களை அழைத்தார்; வேலைநிறுத்தம் வெற்றிகரமாக நடைபெறுவதற்கான திட்டங்களை விரிவாகத் தீட்டினார். ஜம்னாதாஸ் மேத்தாவும் இச் செயற்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டார். கட்சிக்காரர்கள் எந்தெந்தப் பகுதிகளில் பொறுப்பேற்றுப் பணியாற்றிட வேண்டும் என்று இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. தொழிலாளர்களை ஊக்குவிக்குமாறு அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. காங்கிரசில் இருந்த சோசலிஸ்டுகளை எம்.என். ராய் அப்போது 'பிறழ உணர்ந்த காந்தியவாதிகள்' என்று வருணித்திருந்தார். காங்கிரசில் இருந்த சோசலிஸ்டுகள் அம்பேத்கர் தன் கட்சியை வலுப்படுத்திக் கொள்வதற்காக இந்த வேலைநிறுத்தத்தைப் பயன்படுத்திக் கொள்கிறார் என்று கூறி ஆதரவு அளிக்க மறுத்துவிட்டனர். காங்கிரசில் பெரும்புள்ளியாக விளங்கிய எஸ்.கே. பாட்டீல் வேலைநிறுத்தங்களுக்கு எதிரான கூட்டங்களுக்கு ஏற்பாடு செய் தார். காட்டன் கிரீன் என்ற இடத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பாட்டீல் கலந்துகொண்டார்.

பம்பாய் மாகாண அரசு பம்பாயை ஒட்டியிருந்த மாவட்டங் களிலிருந்து முந்நூறு ரிசர்வ் போலிஸ் படையினரையும் பன்னி ரண்டு அதிகாரிகளையும் பம்பாய்க்கு வரவழைத்தது. நகரத்தில் தொழிற்சாலைகளின் நுழைவாயில்களுக்கு அருகே உள்ள முக்கிய இடங்களில் அவர்களை நிறுத்தியது. சுதந்திரத் தொழிற் கட்சிதான் களத்தில் மிகத் தீவிரமாக இறங்கிச் செயல்பட்டுக்கொண்டிருந்தது. தன் கட்சித் தொண்டர்கள் மூலமாக ஆயிரக்கணக்கான துண்டறிக் கைகளைத் தொழிலாளர்களிடையே பரப்பியிருந்தது. ஆகவே இருதரப்பினரும் தயார் நிலையில் நின்றனர்.

நவம்பர் 6ஆம் நாள் மாலை கம்கார் திடலில் தொழிலாளர் பேரணி நடத்தப்பட்டது. காங்கிரசுப் பத்திரிக்கைகளின் கூற்றுப்படி

80,000 தொழிலாளர்கள் இப்பேரணியில் கலந்துகொண்டனர். அக்கூட்டத்திற்கு ஜம்னாதாஸ் மேத்தா தலைமை ஏற்றிருந்தார். ஜம்னாதாசு காங்கிரசு அமைச்சரவையை மிகக் கடுமையாகத் தாக்கிப் பேசினார். மற்ற தொழிலாளர் தலைவர்களும் அம்மசோதா வைக் கண்டித்துக் கனல் தெறிக்க உரையாற்றினார்கள். அந்தக் கறுப்பு மசோதாவின் சங்கிலிகளை அறுத்தெறியுமாறு இந்துலால் யக்னிக் தொழிலாளர்களைக் கேட்டுக்கொண்டார். டாங்கே காங்கிர சுத் தலைவர்களின் முட்டாள்தனமான போக்கினைச் சாடினார். அம்பேத்கர் காங்கிரசு அமைச்சரவையைப் பல்வேறு கோணங்களி லும் கண்டித்தார். இந்த வேலைநிறுத்தத்தை வெற்றிகரமான முறையில் நடத்தித்தர வேண்டியது தொழிலாளர்களின் கடமையா கும் என்று அவர் கூறினார்.

பொதுக்கூட்டம் முடிந்தபின் தொழிலாளர்கள் கம்கார் திடலி லிருந்து ஊர்வலமாகப் புறப்பட்டுப் பரேல், லால்பாக், டிலிஸ்லி சாலை ஆகியவற்றின் வழியாக நடந்து ஓர்லியில் ஜம்போரித் திடலை அடைந்தனர்; ஊர்வலம் அத்துடன் முடிவுற்றது.

அன்றிரவு தலைமைக் கண்காணிப்புக் குழு ஒன்று அமைக்கப் பட்டது. ஜம்னாதாஸ் அக்குழுவிற்குத் தலைவராகவும், அம்பேத்கர், டாங்கே, நிம்கர், மிராஜ்கர், பிரதான் ஆகியோர் அதன் உறுப்பினர்க ளாகவும் இருந்தனர். வேலைநிறுத்தப் போராட்டப் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்த 2,500 தொண்டர்களில் தொண்ணூறு விழுக்காட்டி னர் அம்பேத்கரின் சுதந்திரத் தொழிற் கட்சியைச் சேர்ந்தவர்களா கவே இருந்தனர்.

அடுத்தநாள் பொழுது புலர்ந்தது. விடியற்காலை அய்ந்தரை மணிக்கே வேலைநிறுத்தம் நடைபெறும் முக்கிய மய்யங்களில் காவல்துறையினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். வேலை நிறுத்தம் தீவிரமாக முழுவீச்சுடன் நடைபெறும் என்பதை உள்துறை அமைச்சரான முன்ஷி மிகத் தெளிவாக அறிந்திருந்தார். அதனால் அமைதிக்கு ஊறு விளைவிப்பதைத் தடுத்திட எடுக்கப்படும் நடவடிக்கைகளில் எத்தகைய குறைபாடும் நேரக்கூடாது என்று காவல்துறை ஆணையாளர்க்கு முன்ஷி கட்டளையிட்டார். மிக அமைதியான சூழ்நிலையில் வேலைநிறுத்தம் தொடங்கியது. தொழிற்சாலைகள் இருந்த பகுதிகளுக்குத் தொழிலாளர்களின் ஒப்பற்ற தலைவர்களான அம்பேத்கரும் ஜம்னாதாசும் செவ்வண் ணக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்ட, ஒலிபெருக்கி பொருத்தப் பட்டிருந்த லாரி ஒன்றில் அருகருகே அமர்ந்தவண்ணம் சென்று

அங்கே வீதிகளில் வரிசையாக நின்று வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களிடம், வேலைநிறுத்தத்தை வெற்றிய டையச் செய்யுமாறு வேண்டுகோள் விடுத்தனர் என்பது மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். பம்பாயிலிருந்த ஏறக்குறைய எல்லா நெசவாலைகளும் நகராட்சியின் பணிமனைகளும் மூடப்பட்டுக் கிடந்தன. சில தொழிற்சாலைகள் மட்டும் பெயரளவுக்கு இயங்கின.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு எதிராகக் கடுமை யான எதிர்ப்புகளுக்கிடையே தொழிற்சங்கத் தலைவர்களால் நடத்தப்பட்ட முதலாவது வேலைநிறுத்தம் இதுவேயாகும். காங்கி ரசு ஆதரவாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் சொந்தமான, மற்றும் அவர்களால் நிர்வகிக்கப்பட்ட பத்திரிக்கைகளில் பெரும்பாலானவை வேலைநிறுத்தப் பிரச்சினையில் அரசின் பக்கமே நின்றன. காங்கிரசு ஆட்சியே நீடிக்க வேண்டுமென்று விரும்பிய ஆங்கிலோ இந்திய நாளேடுகளும் வேலைநிறுத்தத்திற்கு எதிராக எழுதின. வேலை நிறுத்தத்தின் முக்கியத்துவத்தைக் குறைத்துக் காட்டுவதற்காகவும், தொழிலாளர்களிடையே அம்பேத்கருக்குப் பெருகிவரும் செல்வாக் கைக் குலைப்பதற்காகவும் இப்பத்திரிக்கைகள் திட்டமிட்டே பொய்ச்சுருட்டுச் செய்திகளை வெளியிட்டன.

ஆலைகள் நிறைந்திருந்த டிலிஸ்லி சாலை வேலைநிறுத்தத்தின் புயல் மையமாகத் திகழ்ந்தது. அங்கே நடந்த கல்வீச்சின் விளைவாக சிலர் காயமடைந்தனர். காவல்துறை அதிகாரி ஒருவரும் சில போலீசுக்காரர்களும் காயமடைந்தனர். அதனால் காவல்துறையி னர் கூட்டத்தைக் கலைப்பதற்காகக் கூட்டத்தை நோக்கிச் சுட்டனர். இதில் இருவர்க்குக் குண்டடிபட்டுக் காயங்கள் ஏற்பட்டன. விரும்பத்தகாத நிகழ்ச்சி ஒன்று பரேல் சாலையில் அன்று காலை பதினொரு மணிக்கு நடந்தது; யாரோ ஒருவர் முன்ஷியின் காரைத் தாக்கி அதன் கண்ணாடித் தடுப்புகளையும் திரைகளையும் அடித்து நொறுக்கிவிட்டார். அப்போது உள்துறை அமைச்சர் முன்ஷியுடன் சர்தார் பட்டேல், மதுரதாஸ் டிரிக்கம்ஜி, பவன்ஜி கிம்ஜி ஆகியோரும் காரில் இருந்தனர். ஆனால் ஒருவருக்கும் காயம் ஏதும் ஏற்படவில்லை. மொத்தத்தில் அன்று எழுபத்திரண்டு பேர் காயமடைந்தனர். அவர்களில் பதினொரு பேருக்குப் பலத்த அடிபட்டிருந்தது; முப்பத்தைந்து பேர் கைது செய்யப்பட்டனர். வேலை நிறுத்தம் அன்று முழுவதும் முழுவீச்சுடன் நடந்தது.

தொழிற்சங்கத் தலைவர்களின் வேண்டுகோளின்படி, பம்பா யில் வேலைநிறுத்தம் நடந்த அதே நாளில் தொழிற்சாலைகள்

அதிகம் இருந்த மற்ற மாவட்டங்களிலும் ஓரளவு வேலைநிறுத்தம் நடந்தது. அந்த மாவட்டங்களிலும் ஊர்வலங்கள் நடத்தப்பட்டன. அகமதாபாத், அமல்நர், ஜல்கான், சாலிஸ்கான், பூனா, தலியா முதலான நகரங்களில் தீவிரமாக மறியல் நடந்தது.

அந்த ஒரு நாள் வேலைநிறுத்தத்தின் முடிவில் பம்பாய்க் கம்கார் திடலில் தொழிலாளர்களின் மாபெரும் பேரணி ஒன்று அன்று மாலையில் நடத்தப்பட்டது. அக்கூட்டத்திற்கு ஜம்னாதாஸ் தலைமை தாங்கினார். கம்யூனிஸ்டு கட்சியின் சிறந்த தலைவர்களான பி.டி.ரணதிவே, பிரதான், நிம்கர், எஸ்.ஏ.டாங்கே, மிராஜ்கர் ஆகியோர் அக்கூட்டத்தில் கறுப்பு மசோதாவிற்கு எதிராகக் காங்கிரசு ஆட்சி மீது கடுந்தாக்குதல்களைத் தொடுத்தனர். அக்கூட்டத்தின் முடிவில் அந்தக் கறுப்பு மசோதாவின் கொடும்பாவிக்கு—அது உள்துறை அமைச்சரின் கொடும்பாவி என்றும் கருதப்பட்டது—தீயிடப்பட்டது. அம்பேத்கர் தீப்பொறிபறக்கப் பேசினார். அம்பேத்கர் தன் உரையின் தொடக்கத்தில் வேலைநிறுத்தத்தை வெற்றிகரமான முறையில் நடத்திக்கொடுத்ததற்காகத் தொழிலாளர்களுக்கு அவருடைய பாராட்டுதல்களைத் தெரிவித்தார். அரசினுடையவும் ஆலை முதலாளிகளினுடையவும் கைக்கூலிகளாக இருக்கின்ற பத்திரிக்கைகள் அன்று மாலைப் பதிப்பில் வேலைநிறுத்தம் தோல்வியடைந்தது என்று செய்தி வெளியிட்டிருப்பதற்காக அவற்றை அம்பேத்கர் கடுமையாகக் கண்டித்தார். வேலைநிறுத்தம் மாபெரும் வெற்றியைப் பெற்றுவிட்டது, கூட்டங்களில் கலந்து கொள்ளுவது, தொண்டை கரகரத்துக் கட்டிப் போகுமளவிற்கு முழக்கமிடுவது, கறுப்பு மசோதாவிற்கு எதிர்ப்பைத் தெரிவிப்பது போன்றவற்றுடன் உங்கள் கடமை முடிந்துவிடவில்லை. உங்கள் பிரதிநிதிகளைச் சட்டசபைக்குத் தேர்ந்தெடுத்து அனுப்புவதன் மூலம் அரசியலதிகாரத்தைக் கைப்பற்ற எத்தனிக்க வேண்டும்' என்று கூறினார். அவருடைய உரையின் இறுதியில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிராகக் காங்கிரசு உண்மையாகவே போராடத் தொடங்குமானால் அப்போது காங்கிரசில் சேருவேன் என்றும் கூறினார்.

தொழிற்சங்கத் தலைவர்கள் கெடுபிடியான முறைகளைக் கடைப்பிடித்ததாகச் சர்தார் பட்டேல் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார். சர்தார் பட்டேலின் அறிக்கை தொடக்கம் முதல் இறுதிவரை பொய்யான செய்திகளின் திரட்டாகவே உள்ளது என்று அம்பேத்கர் விடையளித்தார்.

இந்த வேலைநிறுத்தத்திலிருந்து இரண்டு உண்மைகள் புலனாயின. தொழிற்சங்கத் தளத்திலும் அம்பேத்கரால் சிறந்து விளங்க முடியும் என்பது எல்லாவகையிலும் மெய்ப்பிக்கப்பட்டது. அவருடைய கட்சிதான் இவ்வேலைநிறுத்தத்தில் முக்கியமான பெரும் பங்களிப்பைச் செய்தது; அதனுடைய சிறந்த திறமையை நிரூபித்துக்காட்டியது; தொழிற்சங்கத் தலைவர் என்ற தனிச் சிறப்பை நிலைநிறுத்தியது. எதிர்காலத்தில் அனைத்திந்தியத் தொழிலாளர்கள் பிரச்சினைகளோடு தொடர்புகொள்ளுவதற்கு இது ஒரு பின்புலமாக அமைந்தது. தொழிலாளர் நலன் குறித்த இப்பிரச்சினையில அம்பேத்கரும் கம்யூனிஸ்டுகளும் ஒரு அய்க்கிய முன்னணியாக இணைந்து செயல்பட்டனர். அவருடைய கட்சியையும் அமைப்பையும் கம்யூனிஸ்டுகளிடமிருந்து தனித்துக் கட்டமைப் போடும் செயல்படும் விதத்தில் மிகத் திறமையாகக் கட்டிக்காத்தார். இவ்வாறு இருப்பினும் தொழிலாளர் பிரச்சினையில் அவருடைய செல்வாக்கு மிகவும் மேலோங்கியிருந்தது.

பம்பாய்த் தொழிலாளர்களின் ஒரு நாள் வேலைநிறுத்தம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அதன் விளைவாக அய்க்கிய மாகாணங்களின் விவசாயிகளின் தலைவர் சுவாமி சகஜானந்தா 1938 டிசம்பர் 25ஆம் நாள் பம்பாயில் அம்பேத்கரை அவருடைய இல்லத்தில் சந்தித்தார். பம்பாயில் தொழிலாளர்கள் பிரச்சினை பற்றியும் பொதுவாக விவசாயச் சீர்திருத்தங்கள் குறித்தும் அம்பேத்கருடன் பேசினார். ஒரு முன்னணி அமைத்து ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் போராடுவதற்காக அம்பேத்கர் காங்கிரசில் சேர வேண்டும் என்று வற்புறுத்தினார். 'காங்கிரசுக் கட்சி பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடுவதென முடிவு செய்யுமானால், நான் மகிழ்ச்சியுடன் சுதந்திரத் தொழிற்கட்சியைக் கலைத்து விடுவேன். ஆனால் காங்கிரசுக் கட்சியோ அரசியலமைப்பு வழங்கியுள்ள அரசியல் இயந்திரத்தை, விவசாயிகளின் மற்றும் தொழிலாளர்களின் நலன்களைப் பலியிட்டு முதலாளிகளின், சுய நலச் சக்திகளின் நலன்களைப் பெருக்குவதற்காகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறது. ஆகவே நான் காங்கிரசில் சேர இயலாது' என்று விடை பகன்றார்.[87]

1938 டிசம்பர் மாதத்தின் கடைசி வாரத்தில் ஔரங்காபாத்தில், ஔரங்காபாத் மாவட்டத் தீண்டப்படாதார் வகுப்பு மாநாட்டிற்கு அம்பேத்கர் தலைமை தாங்கினார். அய்தராபாத் சமஸ்தானத்தில் நடைபெற்ற தீண்டப்படாத வகுப்பாரின் முதலாவது மாநாடு

இதுவேயாகும். வரவேற்புக்குழுவின் தலைவர் தீண்டப்படாத வகுப்பாரின் இன்னல்களை நிரல்படுத்திக் கூறினார். முகம்மதியர்கள் தீண்டப்படாத வகுப்பு மக்களை எவ்வாறெல்லாம் துன்புறுத்தி இஸ்லாத்திற்கு மதம் மாறச் செய்தனர் என்றும், தீண்டப்படாதவர்கள் பொதுக்குளங்களில் நீர் எடுக்கவும், கோயில்களில் நுழையவும் முயன்றபோது பார்ப்பனர்கள் முகம்மதியரின் துணையுடன் எவ்வாறு தடுத்தனர் என்றும் விளக்கினார். அய்தராபாத் தீண்டப்படாத மக்களிடம் சுயமரியாதை இயக்கத்தின் இன்றியமையாமையை வலியுறுத்தி அம்பேத்கர் உரையாற்றினார்.

சுயாட்சிக் கோட்பாடும் பாக்கிஸ்தான் பிரிவினையும்

1939 சனவரி 6ஆம் நாள் மகதில் நடைபெற்ற மாபெரும் விவசாயிகள் கூட்டம் ஒன்றில் அம்பேத்கர் உரையாற்றினார். அவர்களுடைய துன்பங்களைக் களைந்திட காங்கிரசு அமைச்சரவை தவறிவிட்டது என்பதை அவர்களுக்கு உணர்த்தினார். 'பிரதமர் கெர் அதிகாரத்தைச் செலுத்த இயலாத வெறும் தலைமைப் பதவியில் மட்டுமே இருக்கிறார். பம்பாய் மாகாண அரசின் மற்ற அமைச்சர்களோ சர்தார் பட்டேல் வீட்டு வாயிலின் முன் காத்துக் கிடக்கும் காவல் நாய்கள் போன்று உள்ளனர். பிரதமர் கெர் அவர்களுக்குக் குஜராத்தில் சர்தார் பட்டேல் ஒரு வரவேற்பு அளித்தார். அந்த வரவேற்பின்போது, காந்தியின் பக்தரான கெர் அவர்களை வரவேற்பதில் பெருமையடைகிறோம் என்றுதான், சர்தார் பட்டேல் கூறியிருக்கிறார். பிரதமராக அவரை அவர்கள் வரவேற்கவில்லை. கெர் காந்தியின் சீடராக இல்லாதிருந்தால் அவரை இழிவுபடுத்தி விரட்டியடித்திருப்பார்கள். இத்தகைய கொடிய அவமானத்தை ஒரு மராட்டியரான கெர் அவர்களுக்கு இழைத்ததற்காகப் பட்டேலை நான் பழிக்குப் பழி வாங்காமல் விடமாட்டேன். இது போன்ற அவமானத்தை எனக்கு இழைத்திட பட்டேல் துணிந்திருந்தால் அங்கேயே அவரைப் புரட்டிப்புரட்டி அடித்திருப்பேன்' என்று அம்பேத்கர் பேசியது நாடகத்தில் வரும் வீர வசனம் அன்று; மகத் பொதுக் கூட்டத்தில் அவர் ஆற்றிய வீர உரைதான் இது. ஏன் இவ்வளவு சீற்றம்? காங்கிரசுத் தலைவர்களின் முரட்டுத்தனமான மேலாதிக்க மனப்பான்மையைப் பல ஆண்டுகளாக அம்பேத்கரின் உள்ளம் வெறுத்து வந்தது. அதனால் தன்னுடைய மேலாண்மையைக் காட்டிட அவர் உள்ளம் உறுதிபூண்டது. ஆகவே அத்தகைய நெஞ்சத்திலிருந்து கடுஞ்சினம் கொப்பளித்து வெளிப்படல் இயல்பே!

அம்பேத்கர் பம்பாய் திரும்பியபின், 1939 சனவரி 8ஆம் நாள் பரேலில் நடந்த சுதந்திரத் தொழிற் கட்சித் தொண்டர்களின் ஆண்டு விழா அணி வகுப்பின்போது தொண்டர்கள் காட்டிய கடமை உணர்வையும் ஆற்றிய உயர்ந்த தொண்டினையும் அம்பேத்கர் மிகச் சிறப்பாகப் பாராட்டிப் புகழ்ந்தார். சர்தார் பட்டேலும் பிரதமர் கெர்ரும் சுதந்திரத் தொழிற் கட்சியின்

தொண்டர்களின் பணியையும் கட்டுப்பாட்டையும் புகழ்ந்துரைத் திருப்பதை அவர்களுக்குச் சுட்டிக் காட்டினார்.

அக்காலக்கட்டத்தில் இந்தியாவில் ஏற்படுத்தப்படவிருப்பதாகப் பேசப்பட்ட கூட்டாட்சி முறைபற்றிய விவாதம் இந்திய அரசியலில் மிகவும் முக்கியத்துவம் பெற்றதாக விளங்கியது. இந்திய வைசிராய் இங்கிலாந்தில் பிரிட்டிஷ் அரசியல் தலைவர்களுடன் கலந்து பேசிவிட்டு அப்போதுதான் இந்தியாவிற்குத் திரும்பியிருந்தார். விரைவில் கூட்டாட்சியை ஏற்படுத்த வேண்டும் என்பதே வைசிராய் இலண்டன் சென்று வந்ததன் நோக்கம் என்று கருதப்பட்டது. இந்தியச் சிற்றரசுகள் தங்களின் அரசுகளின் ஆட்சி முறையைச் சனநாயகப்படுத்தாமலேயே இந்தியக் கூட்டாட்சியில் பங்கேற்க லாம் என்ற கருத்தை இப்போது பிரிட்டிஷ் அரசியல் தலைவர்கள் ஆதரித்தனர். சுருக்கமாகச் சொல்வதானால், காங்கிரசில் இருந்த வலதுசாரிகள் ஏற்படுத்தப்படவுள்ள இந்தியக் கூட்டாட்சியில் சிற்றரசுகளின் பிரதிநிதிகளின் துணையுடன் பெரும் பான்மையைப் பெறுவதற்காக முயன்றுகொண்டிருந்தனர். ஆகவேதான் சிற்றரசு களிலும் பிரிட்டிஷ் இந்தியாவின் மாகாணங்களில் இருப்பது போன்று மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகள் அமைக்கப்பட வேண்டுமென்ற போராட்டத்தைத் தொடங்கினார்கள். காங்கிரசுக் கட்சியின் தலைவராக இருந்த சுபாஷ் சந்திர போசு கூட்டாட்சி அமைவதற்கு எதிர்ப்பாக இருந்தார். முகமதியர்களும் முழுமூச்சுடன் கூட்டாட்சி அமைப்புத் திட்டத்தை எதிர்த்தனர். இந்து மகா சபை கூட்டாட்சி அமைக்கப்படுவதை ஆதரித்தது. ஏனெனில் அப்போது தான் முகமதியரின் பிரிவினைப் போக்கினை முறியடித்து இந்தி யாவை ஒன்றுபடுத்த முடியும் என்று அது கருதியது.

பிரிட்டிஷாரால் ஏற்படுத்தப்படப் போவதாகக் கூறப்பட்ட கூட்டாட்சி முறையை அம்பேத்கர் மிகக் கடுமையாக எதிர்த்தார். 1938 டிசம்பர் மாதத்தில் ஓரிருமுறை பொதுக்கூட்டங்களில் கூட்டாட்சிபற்றிய அவருடைய கருத்துகளை வெளிப்படுத்தினார். கூட்டாட்சி முறைக்கு எதிராக ஒல்லும் வகையெல்லாம் வலிவாகத் தன் கருத்தை எடுத்துரைப்பதென முடிவுசெய்தார். அதற்கான வாய்ப்பு இப்போது அவரைத் தேடி வந்தது. கோகலே கல்விக் கழகத்தினர் நடத்தி வந்த அரசியல் பொருளாதாரத் துறை அமைப்பினர், அம்பேத்கரை, ஒரு சொற்பொழிவாற்றிட வேண்டி பூனாவிற்கு அழைத்தனர். 1939 சனவரி 29ஆம் நாள் பூனாவில் கூட்டாட்சிபற்றி இரண்டு மணி நேரம் உரையாற்றினார்.

'கூட்டாட்சித் திட்டம் இந்தியாவை விடுதலையை நோக்கி அழைத்துச் செல்வதற்கு மாறாக அதன் விடுதலைக்கான வழியை நிலையாக அடைத்துவிடும். ஏனெனில் கூட்டாட்சியில் பங்கேற்கும் பிரிட்டிஷ் இந்தியாவின் பிரதிநிதிகள் சுதந்திரமானவர்களாக இருப் பார்கள். ஆனால் அதே சமயத்தில் இந்தியச் சிற்றரசுகளின் பிரதிநிதிகளோ பிரிட்டிஷ் உயர் அதிகாரிகளின் கைப்பாவைகளாக இருப்பார்கள். பிரிட்டிஷ் அதிகாரிகளே கூட்டாட்சிக்குப் பிரதிநிதிக ளாக யாரை அனுப்பவேண்டும் என்று சிற்றரசர்களுக்குக் கட்டளை யிடுவார்கள் என்று அவ்வுரையில் விளக்கினார்.

அமைக்கப்படவுள்ள கூட்டாட்சி இந்தியர் அனைவர்க்கும் பொதுவான குடியுரிமையை வழங்காது. ஏனெனில் சிற்றரசுகளில் உள்ள மக்கள் அந்தந்தச் சிற்றரசுகளின் குடிமக்களாகவே இருப்பார் கள். ஆகவே கூட்டாட்சி அவர்களின் மீது நேரடியாக அதிகாரம் செலுத்த முடியாது. கூட்டாட்சித் திட்டத்தை நான் எதிர்க்கவில்லை. ஆனால் நாட்டுப்பற்று ஓர் ஒற்றை உறுப்பு அரசில்தான் செழித்து வளர இயலும். இந்தியாவிற்கு இன்று இன்றியமையாததாகத் தேவைப்படுவது நாட்டுப்பற்றே. ஆகவேதான் நான் ஒருறுப்பு அரசு அமையவேண்டுமென்று விரும்புகின்றேன். மேலும் கூட்டாட் சித் திட்டம் இந்தியா ஒன்றாக இணைவதற்கு உதவாது. ஏனெனில் கூட்டாட்சியில் எல்லாச் சிற்றரசுகளும் சேர்ந்திட வழி வகுக்கப்பட வில்லை; மேலும் கூட்டாட்சி ஒரு முழு அதிகாரம் வாய்ந்த அரசாக இருக்காது; இராணுவம், வெளிநாட்டு உறவு ஆகிய துறைகள் கூட்டாட்சியின் பொறுப்பில் இருக்கமாட்டா. எனவே கூட்டாட்சி பிரிட்டிஷ் இந்தியாவில் சனநாயகத்தை அழித்திடவே உதவும்' என்று கூறித் தன் உரையை முடித்தார்.

பூனாவில் அம்பேத்கர் உரையாற்றியபோது, இரானடேவின் காலத்தையும் காந்தியின் காலத்தையும் ஒப்பிட்டார். 'இரானடேவின் காலம் உண்மையைப் போற்றுவதாகவும் அறிவுத் தெளிவு கொண்டதாகவும் விளங்கியது. இரானடேயின் காலத்திய தலைவர் கள் இந்தியாவை நவீன மயமாக்கப் போராடினார்கள்; நன்கு உடுத்துவதில் கவனமுடன் இருந்தனர். அரசியல் கற்றறிந்திராத அரசியல்வாதி சமூகத்திற்குத் தொல்லையான ஓர் ஆள் என்றே கருதப்பட்டார். இரானடேவின் காலத்தில் அரசியலில் ஈடுபட்டிருந்த வர்கள் ஆழ்ந்து படித்தனர்; வாழ்வியல் உண்மைகளை ஆய்வு செய்தனர்; தங்களுடைய ஆராய்ச்சியின் விளைவாக அவர்கள் கண்டறிந்த நெறிகளின் அடிப்படையில் அவர்களுடைய

வாழ்க்கையை அமைத்துக்கொண்டனர்; நல்லியல்புகளைப் பேணினர். ஆனால் காந்தியின் காலத்திலோ அரை ஆடையுடன் இருப்பதில் பெருமை கொள்கின்றனர். இந்தியாவை மீண்டும் பழங்காலத்தின் ஒரு சின்னமாக உருவாக்கிட முயலுகின்றனர். அரசியல்வாதி என்பவன் கற்றறிந்தவனாக இருக்க வேண்டும் என்பது இன்று கட்டாயமாகக் கருதப்படவில்லை. ஆழ்ந்து படிப்பதையும் வாழ்வின் உண்மைகளை ஆய்வு செய்வதையும் அரசியல்வாதிகள் கைவிட்டுவிட்டனர். ஆகவே காந்தியின் காலம் இந்தியாவின் இருண்ட காலம் என்பதே என் கணிப்பாகும்' என்று கூறினார்.

பிப்பிரவரி மாதம் பம்பாய்ச் சட்டசபையில் மாகாண வரவு செலவுத் திட்டத்தைத் தக்க ஆதாரங்களை முன்வைத்துத் தாக்கிப் பேசினார். 'வருவாய் வழிபற்றிய கண்ணோட்டத்தில் இந்த வரவு செலவுத் திட்டம் நன்கு திட்டமிடப்படாததாக இருக்கிறது; செலவின நோக்கிலோ பொருத்தமற்றதாக உள்ளது. ஆவணப் பதிவுக்கான வரியை எதிர்த்து வந்தது காங்கிரசு; இப்போது அதன் ஆட்சியில் ஆவணப் பதிவு வரியை உயர்த்தியுள்ளது; மின்சாரப் பயன்பாட்டின் மீதான தீர்வை வரியை அதிகப்படுத்தியுள்ளது. இதனால் மறைமுகமாக மண்ணெண்ணெயின் பயன்பாட்டை அதிகமாக்கிவிட்டது. இது மக்களின் பொதுநலனுக்குக் கேடு தருவதாகும்' என்று கூறித் தன் எதிர்ப்பைத் தெரிவித்தார்.

'மதுவிலக்குக் கொள்கையால் ஏற்படும் வருவாய் இழப்பை ஈடுகட்டுவதற்காகவென்று ரூபாய் 125 இலட்சத்திற்கு அரசு புதிய வரியை விதித்துள்ளது. இதனால் வேறு பல சிக்கல்கள் தோன்றியுள்ளன. 125 இலட்சம் உருபாயை இதில் அரசு வீணாக்குகிறது என்பதே என் கருத்தாகும். சிக்கலின் உண்மையான தன்மை இதுதான். குடிப்பது ஒரு பிரச்சினையா? அது ஒரு பிரச்சினைதான் என்றால் அது ஒரு அவசரமாகத் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினையா? குடிப்பது கேடானது என்பதில் அய்யத்திற்கு இடமே இல்லை; குடிப்பதனால் தீய விளைவுகள் ஏற்படுகின்றன; குடிப்பது தீங்கானது என்று ஒத்துக்கொள்வதனாலேயே அதை ஒரு பிரச்சினையாக-ஒரு அவசரமான பிரச்சினையாக ஒத்துக் கொண்டதாகக் கருதிவிடக் கூடாது' என்று விளக்கினார். அதன்பின் கிரேட் பிரிட்டன், ஆஸ்திரேலியா, கனடா, அய்ரிஷ் மாகாணம், டென்மார்க், நார்வே ஆகிய நாடுகளில் கலால் வரிமூலம் கிடைக்கும் மொத்த வருவாயைப் புள்ளிவிவரங்களுடன் விளக்கி

விட்டு, பம்பாய் மாகாணத்தின் மொத்த மக்கள் தொகையான 180 இலட்சம் பேர்களிடம் 325 இலட்சம் உருபாயையே கலால் வரிமூலம் வருமானமாகப் பெறுவதால், இதை ஈடுகட்டுவதற்காக வேண்டி, குடிப்பது என்பதை ஒரு பிரச்சினையாகக் கொள்ள முடியாது என்று கூறினார்.

அதன்பின்னர் அமெரிக்காவில் அமல்படுத்தப்பட்ட மதுவிலக்குக் கொள்கையுடன் ஒப்பிட்டுப் பேசினார். பெல்டுமேன் என்பவர் எழுதியுள்ள, 'மது விலக்கு' என்ற நூலிலிருந்து இதற்கான மேற்கோள்களை எடுத்துக்காட்டினார். மதுவை விலக்குவது உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை என்று ஆட்சியாளர்கள் கூறுவது தவறான கருத்தாகும் என்பதை அம்பேத்கர் விளக்கிக்காட்டினார். 'குடிப்பது என்பதை, இரண்டு காரணங்களுக்காக, நம் நாட்டில் ஒரு பிரச்சினையாகக் கருதக்கூடாது. இந்தியாவில் உள்ள எல்லா மதங்களும் குடிப்பது ஒரு பாவம் என்பதை மதக்கட்டளையாகக் கொண்டு தடை விதித்துள்ளன. மதம் சமூகத்திற்குக் கேடான பலவற்றைச் செய்திருக்கலாம். ஆயினும் இந்தியர்கள் பின்பற்றும் இந்து மதமும், இஸ்லாமிய மதமும், பார்சிய மதமும் 'குடிக்கக்கூடாது' என்பதை மதக்கட்டளையாக விதித்துள்ளன என்பது அவை செய்துள்ள ஒரு நற்செயலே என்பதில் அய்யமில்லை. அம்மதக் கட்டளையை நம் மக்களில் பெரும்பாலோர் பின்பற்றி நடக்கின்றனர். அடுத்து நம் நாட்டிற்கும் மற்ற நாடுகளுக்கும் மதுக் கொள்கையில் ஒரு முக்கியமான வேறுபாடு இருக்கிறது. நம் நாட்டில் மட்டும்தான் சாராய வணிகம் முழுவதும் அரசின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. ஆகவே குடிப்பது நம் நாட்டில் ஒரு பிரச்சினையாக உருவாக முடியாது. இறுதியாக அரசை நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். மற்ற எல்லாப் பிரச்சினைகளையும் ஒதுக்கிவைத்து விட்டு, உடனடியாகத் தீர்க்க வேண்டிய முதல் பிரச்சினையாக இக் குடிப்பிரச்சினை இருக்கிறதா? மாகாணத்தின் ஒட்டுமொத்த நலன் கருதி அரசு தன்னுடைய மது விலக்குக் கொள்கையைக் கைவிட்டுவிட்டு, முதன்மை தர வேண்டிய பிரச்சினைகளை முறையாக வரிசைப்படுத்தி அதன்படிச் செயல்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்' என்று கூறித் தன் உரையை முடித்தார்.

II

1938 நவம்பர் 7ஆம் நாள் நடைபெற்ற வேலைநிறுத்தம் சட்டசபையில் இன்னும் எதிரொலித்துக்கொண்டிருந்தது. நவம்பர்

7ஆம் நாள் நடந்த துப்பாக்கிச் சூடுபற்றி விசாரிப்பதற்காக ஒரு குழுவை அரசு அமைத்திருந்தது. அக்குழு தன்னுடைய அறிக்கையில் கலவரம் நடந்ததற்குக் கம்யூனிஸ்டுகளும் அம்பேத்கரும் காரணம் என்று குற்றம் சாட்டியிருந்தது; காவல்துறையினர் சுட்டதை நியாயப்படுத்தியிருந்தது. அக்குழுவின் அறிக்கை சட்ட சபையில் விவாதத்திற்காக வைக்கப்பட்டபோது முன் எப்போதும் கண்டிராத அளவில் கடுமையான விவாதங்கள் கிளம்பின. ஜம்னாதாசு மேத்தா இந்த அறிக்கையை ஒருதலைச் சார்பானது என்று கூறினார். அறிக்கையில் கூறப்பட்டுள்ளவை கண்டறியப் பட்ட உண்மைகள் அல்ல; அக்குழுவினரே உருவாக்கிக்கொண்டவை என்று சொன்னார். தான் மேற்கொண்ட நிலைப்பாடு சரியே என்பதை விளக்கி அம்பேத்கர் வீறுமிக்க உரையாற்றினார். 'வேலைநிறுத்தப் போராட்டச் செயற்குழுவுடன் தொடர்புடையவன் என்ற முறையில் என் சார்பில் நான் பேச விரும்புகின்றேன். என் மீதான வழக்கு விசாரணையை நான் ஏற்றுக்கொள்ளத் தயார். துப்பாக்கிச்சூடு பற்றிய விசாரணைக் குழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளவை உண்மை என்று நம்புகின்ற எவருக்கேனும் துணிவோ, தன்னம்பிக்கையோ இருக்குமானால் முன்வந்து என்மீது வழக்குத் தொடுங்கள். துப்பாக்கிச் சூடு நடத்தியது சரியே என்றும் அதற்கான காரணங்கள் இருக்கின்றன என்றும் அக்குழு கூறுகிறது. நம்முன் உள்ள கேள்வி இதுதான்! அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டும் என்பதற்காகச் சுதந்திரத்தையும் உரிமையையும் கைவிட முடியுமா? சுயாட்சி என்பது ஒன்றுக்கும் உதவாதது என்று நான் நினைக்கிறேன். நம்முடைய அமைச்சர் நம் மக்களைச் சுட்டுத் தள்ளிக்கொண்டேயிருப்பார்; மற்றவர்கள் அதை வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்போம். அல்லது அவர் ஒரு குறிப்பிட்ட கட்சியைச் சேர்ந்தவர் என்பதற்காக அவரை ஆதரித்து நிற்போம் என்பதைத் தவிர - நான் கருதுவதைப் போலவே, சுயாட்சியால் ஒரு பயனும் விளையாது. ஆகவே சுயாட்சி என்பது இந்தியாவிற்கு ஒரு சாபக்கேடே தவிர அதனால் நன்மை ஏதும் ஏற்படாது' (கைத்தட்டல்) என்று கூறினார்.

விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசிய உள்துறை அமைச்சர் முன்ஷி, விசாரணைக் குழுவின் முன் சாட்சியம் கூறிட அம்பேத்கர் வரவேயில்லை; மேலும் வேலைநிறுத்தம் நடந்த அன்று முற்பகல் 11 மணிக்கு அம்பேத்கர் நீதிமன்றத்தில் ஒரு வழக்கில் வாதாடிக் கொண்டிருந்தார். அதன்பின் அன்று மாலை நடந்த பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டார் என்று கூறினார். விவாதத்திற்குக் கவர்ச்சி

மூட்டி அம்பேத்கர் பேசிய பத்து நிமிடங்களில், அவர் அள்ளிவீசிய தற்பெருமையான, பகட்டாரவாரமான விவேகமில்லாத சவால்கள் மிகவும் பழகிப்போனவை என்று ஏளனக் குரலில் முன்ஷி கூறினார். அதன்பின் அரசு நடவடிக்கை எடுக்கும்படியான பேச்சுகளை அம்பேத்கர் பேசினால், உயிர்த்தியாகம் செய்வதற்கான வேறு பல செயல்களை மேலும் அவர் செய்வாரானால், அவர்மீது வழக்குத் தொடுத்து அவரைத் தியாகியாக ஆக்கிவிடுவேன் என்று முன்ஷி முழங்கினார். ஆயினும் சர்.ஏ.எம்.கே. தலாலி ஒழுங்குப் பிரச்சினை எழுப்பியதன்பேரில் 'விவேகமில்லாத' என்ற சொல்லை முன்ஷி திரும்பப் பெற்றுக்கொண்டார். முன்ஷி பேசியபோது, அம்பேத்கர் குறுக்கிட்டு, வேலைநிறுத்தம் நடந்த அன்று வேலைக்கு வந்த தொழிலாளர்களின் மண்டைகளை வேலைநிறுத்தம் செய்த தொழிலாளர்களே பிளந்தார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ள தற்கு ஆதாரம் உங்களிடம் இருக்கிறது; இந்த ஆதாரத்தை வைத்துக்கொண்டு நீங்கள் ஏன் என் மீது வழக்குத் தொடுக்க வில்லை என்று கேட்டார். தொழிலாளர்களைத் தாக்கினார்கள் என்பதை நம்பாதீர்கள் என்று ஜம்னாதாசு குறுக்கிட்டுக் கூறினார்.

அம்பேத்கர் அவருடைய சட்டசபை வாதங்களில் மேலாளுமை மிக்கவராகவும் விட்டுக் கொடுக்காத தன்மையினராகவும் இருந்ததால் அமைச்சர்கள் அவரை வேறு வழியில் வாயடைக்க முயன்றனர். அம்பேத்கர் சட்டமன்றத்திற்குக் காலங்கடந்து வருவதையும், வந்தாலும் விரைவில் அவையை விட்டுப்போய் விடுவதையும் சுட்டிக் காட்டிக் குறை கூறினார்கள். ஆயினும், சில ஆண்டுகள் கழித்து, பிரதமர் கெர் சட்டசபை எதிர்கட்சித் தலைவர் என்ற முறையில் அம்பேத்கர் பயனுள்ள ஆக்கப்பூர்வமான விமர்சனங் களையும், கருத்துகளையும் வழங்கினார் என்று அம்பேத்கரைப் புகழ்ந்துரைத்தார். அம்பேத்கர் எத்தகைய சூழ்நிலையில் சட்டசபை யில் தன் கடமையை ஆற்றிவந்தார் என்பதையும் சட்டசபையில் எதிர்க்கட்சிகளிடம் காங்கிரசு அமைச்சரவை எவ்வாறு நடந்து கொண்டது என்பதையும்பற்றி ஜம்னாதாசு சட்டசபையில் பேசி யுள்ள ஒரு பேச்சிலிருந்து நாம் தெளிவாக அறிந்துகொள்ளலாம்.

'ஒளிமறைவு இன்றி நேரடியாக அரசை எதிர்க்கட்சியினராகிய நாங்கள் தாக்கினால், எதிர்க்க வேண்டும் என்பதற்காகவே நாங்கள் எதிர்ப்பதாகக் குறைகூறுகின்றனர். கொள்கை அளவில் ஆதரவு தெரிவித்து அதேசமயம் அதில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக் காட்டினாலோ, நாங்கள் தருவது ஆதரவே அன்று என்று

கூறுகிறார்கள். இதுபோன்ற போக்கினைப் பெரிதும் குறைத்துக் கொள்ளவேண்டும் என்று விரும்புகின்றேன்' என்று ஜம்னாதாசு குறிப்பிட்டிருந்தார்.

அரசியல் சீர்திருத்தங்கள் வேண்டும் எனக் கோரி வலிமையான போராட்டம் நடந்துகொண்டிருந்த ராஜ்காட் சிற்றரசில் 1939 பிப்பிரவரி மாதம் முதற்கொண்டு ஒரு நெருக்கடியான நிலை உருவாகிவந்தது. சுபாஷ் சந்திரபோஸ் காங்கிரசுக் கட்சியின் தலைவராகத் தன் விருப்பத்திற்கு எதிராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தால் தோல்வியும் ஏமாற்றமும் அடைந்திருந்த காந்தி, ராஜ்காட் சிற்றரசின் சிக்கலைத் தீர்ப்பதற்கென ராஜ்காட்டிற்கு விரைந்து சென்றார். ஆனால் காந்தியின் உள்நோக்கமோ, அச்சமயத்தில் சுபாஷ் சந்திரபோசின் தலைமையில் திரிபுராவில் நடைபெறவிருந்த காங்கிரசு மாநாட்டிற்கு ஒரு நெருக்கடியை ஏற்படுத்த வேண்டும் என்பதேயாகும். ராஜ்காட் சிற்றரசில் அமைக்கப்பட்ட அரசியல் சீர்திருத்தக் குழுவில் அச்சிற்றரசைச் சார்ந்த தீண்டப்படாத வகுப்பினரைச் சேர்க்கவில்லை என்பதால் தோன்றிய சிக்கலைத் தீர்த்து வைப்பதற்காக உடனடியாக வருமாறு வேண்டி அம்பேத் கரை அழைத்தனர். ஆகவே அம்பேத்கர் ஏப்பிரல் 18ஆம் நாள் விமானம்மூலம் ராஜ்காட் சென்று அன்று மாலையே மன்னர் தக்கோர் சாகிப்பைச் சந்தித்தார். அன்றிரவு அங்கு நடைபெற்ற தீண்டப்படாத வகுப்பினர் பொதுக்கூட்டத்தில் அரசியல் உரிமை களைப் பெறுவதற்காகத் தொடர்ந்து போராடுமாறு அம்பேத்கர் கேட்டுக்கொண்டார்.

அடுத்த நாள் காலை, அரசியல் சீர்திருத்தக் குழுவில் தீண்டப்படாத வகுப்பினர்களின் பிரதிநிதிகளும் சேர்க்கப்பட வேண்டும் என்பதுபற்றி அம்பேத்கர் காந்தியுடன் நாற்பத்தைந்து நிமிடங்கள் பேசினார். காந்திக்குத் திடீரென காய்ச்சல் ஏற்பட்டதால் அவருடன் எல்லாச் செய்திகளையும் விரிவாகப் பேசிட இயலாது போயிற்று என்று ராஜ்காட்டில் அளித்த பேட்டியொன்றில் அம்பேத்கர் குறிப்பிட்டார். மாற்றுத் திட்டமாகத் தான் முன்மொழிந் துள்ள திட்டத்தை, அரசியல் சட்ட வல்லுநரான சர் தேஜ் பகதூர் சாப்ரு போன்றவர்களின் கருத்தறிவதற்காக அனுப்ப வேண்டும் என்று கூறிய யோசனையைக் காந்தி ஏற்றுக் கொள்ளவில்லை என்பதையும் அம்பேத்கர் வெளிப்படுத்தினார். இறுதியில், அகிம்சை வழியில் மனமாற்றத்தை ஏற்படுத்திட காந்தி மேற் கொண்ட முயற்சியில் தோல்வியுற்றார். அதனால் வேறுவகையில்

நெருக்குதல் கொடுப்பதென முடிவுசெய்தார். ராஜ்காட் சிக்கலில் தலையிடுமாறு வைசிராய்க்குக் காந்தி வேண்டுகோள் விடுத்தார். மனமாற்றக் கோட்பாட்டின், அகிம்சையின் தூதரான காந்தி, 'என்னுடைய அகிம்சை முழுமையான சக்தியைப் பெற்றதாக இன்னும் வளரவில்லை' என்று வெளிப்படையாகவே ஒத்துக் கொண்டார். ஆகவே, 'என் நம்பிக்கைகள் சாம்பலாகிட - என் உடல் தளர்ந்து நொறுங்கிட ராஜ்காட்டிலிருந்து புறப்பட்டுச் செல்கிறேன்' என்று காந்தி குறிப்பிட்டார்.

இதற்குச் சிலநாள்கள் கழித்து, பெடரல் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியான சர்.மாரைஸ்கயர் ராஜ்காட் சிற்றரசில் எழுந்த தகராறு மீதான தன் தீர்ப்பை வழங்கினார். அத்தீர்ப்பில் சர் மாரைஸ் கயர் 'பரிந்துரை' என்ற சொல்லுக்கு அளித்துள்ள விளக்கத்திற்கு அம்பேத்கர் தன் எதிர்ப்பைத் தெரிவித்தார். 'தற்போது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ள சிக்கலைக் குறித்த திட்டவட்டமான முன்மாதிரிகள் இல்லை' என்பதன் அடிப்படை யில் கயர் அவருடைய முடிவினை அறிவித்திருப்பதாக அம்பேத்கர் கூறினார். அம்பேத்கர் தன்னுடைய நிலைப்பாட்டிற்கு ஆதாரமாக நால்ட்டுக்கும் காட்டீக்கும் இடையிலான வழக்கு மற்றும் ஜான்சனுக் கும் ரௌலண்ட்சுக்கும் இடையிலான வழக்குகளிலிருந்து சான்று களை எடுத்துக் காட்டினார்.

1939 சூலை மாதத்தின் முதல் வாரத்தில் சமார் வகுப்பினர் ரோகிதாஸ் கல்விக் குழுவின் சார்பில் பம்பாயில் ஆர்.எம்.பட் உயர்நிலைப்பள்ளி அரங்கில் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் அம்பேத்கர் கலந்துகொண்டார். அக்கூட்டத்தில் அம்பேத்கர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கதாகும். ஏனெனில் மதமாற்றம் குறித்த கருத்து வேறுபாடு காரணமாக சமார் வகுப்புத் தலைவர்க ளில் ஏறக்குறைய எல்லோரும் அம்பேத்கருடனான தொடர்பி லிருந்து விலகி நின்றனர். மேலும் 1937இல் நடந்த பொதுத் தேர்தலில், சமார் வகுப்பினர் அம்பேத்கரின் மதமாற்றக் கருத்தை ஆதரிக்கவில்லை என்ற காரணத்திற்காகச் சமார் வகுப்பைச் சேர்ந்தவர்களை வேட்பாளர்களாக அம்பேத்கர் நிறுத்தவில்லை என்பதால் அவருடன் தொடர்பினை அறுத்துக்கொண்டதாகச் சமார் வகுப்புத் தலைவர்கள் கூறினார்கள். அக்கூட்டத்தில் அம்பேத்கர் உரையாற்றியபோது தொடக்கம் முதலே தீண்டப்படாத எல்லா வகுப்பு மக்களின் உயர்வினுக்காகப் பாடுபட்டு வருவதாகவும், ஒருபோதும் ஒரு குறிப்பிட்ட பிரிவினரின் அல்லது ஓர்

உட்பிரிவினரின் உயர்வுக்கான கருத்துகளையோ அல்லது கொள்கையையோ தான் ஆதரித்தது இல்லை என்றும் கூறினார்.

'தீண்டப்படாதவர்களுக்குள் இருக்கின்ற உட்சாதிப்பிரிவுகளை ஒழித்துவிட வேண்டும் என்று நான் வலியுறுத்திக் கொண்டு வந்துள்ளேன்; அதற்காக ஈடுபாட்டுடன் பணியாற்றியிருக்கிறேன். கலப்புத் திருமணம் என்பதைக் கட்டாயத்தின் மூலம் செய்யமுடியாது. மந்திரக்கோலை ஆட்டி மாயம் செய்வதுபோல, ஒரு மகார் பெண்ணும் ஒரு சமார் இளைஞனும் அல்லது ஒரு மகார் பெண்ணும் ஒரு மாங் இளைஞனும் திருமணம் செய்துகொள்ள வற்புறுத்த முடியாது. கலப்புத் திருமணம் செய்துகொள்ளத் துணிவுடன் முன்வருவோரை ஊக்குவிக்க வேண்டியது நம்முடைய கடமையாகும்' என்று அம்பேத்கர் அக்கூட்டத்தில் கூறினார். அதன்பின் அரசியல் பிரச்சினையை விளக்கிப் பேசினார். தன்னுடைய கட்சிக்கு எதிராகச் சில தீண்டப்படாத வகுப்புத் தலைவர்களைத் தூண்டிவிடுவதன்மூலம் தீண்டப்படாத வகுப்பு மக்களிடையே பிளவை ஏற்படுத்திட காங்கிரசுத் தலைவர்கள் தந்திரமாக முயன்று வருவதாகக் கூறினார். ஆகவே காங்கிரசின் பொய்ப் பிரச்சாரத்திற்குச் செவிசாய்க்க வேண்டாம் என்று அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். அவர் காங்கிரசு முகாமில் இல்லை என்பதற்காகக் காங்கிரசுத் தலைவர்கள் சில அரிசனத் தலைவர்களைத் தட்டிக் கொடுத்து அவர்கள் பக்கம் ஈர்த்திட முயன்று வருவதாகக் குறிப்பிட்டார். சுதந்திரத் தொழிற் கட்சியில் மகார்கள் தான் பெரும்பான்மையினராக இருக்கின்றனர் என்பது உண்மை தான்; ஆனால் தீண்டப்படாத வகுப்பாரில் மகார்கள் பெரும்பான்மையினராக இருப்பது தன்னுடைய தவறன்று என்று கூறினார்.[88] தன்னுடைய உரையின் இறுதியில், தீண்டப்படாதவர்களிடையே இருக்கின்ற உட்பிரிவு வேறுபாட்டிலிருந்து விடுபடுவதற்கான ஒரே வழி மதமாற்றமே என்ற தன்னுடைய பழைய கருத்தினை மீண்டும் வலியுறுத்தினார்.

சில நாட்கள் கழித்து நாசிக்கில் ஹன்ஸ்ராஜ் பி.தாக்கர்சே கல்லூரி நிர்வாகம் அம்பேத்கருக்குத் தேநீர் விருந்து ஒன்று அளித்தது. அந்த விழாவில் எழுத்துமூலம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு அம்பேத்கர் விடைபகன்றார். அவ்வாறு ஒரு கேள்விக்குப் பதிலளித்த போது, அரசு வரிகள் மூலமாகத் திரட்டுகின்ற பணத்தை விவசாயிகளின் கடன்சுமையைக் குறைப்பதற்கும், வறுமையை ஒழிப்பதற்கும், கல்வியை அளிப்பதற்கும் பயன்படுத்த வேண்டும்;

ஆனால் இந்த அரசு இவ்வாறு செய்யாது. ஏனெனில் அரசு மதுவிலக்குக் கொள்கைக்கு முதன்மை தந்துகொண்டிருக்கிற வரை யில்-மற்ற அவசரமான பிரச்சினைகளைவிட மதுவிலக்கிற்கு முன்னுரிமை அளிக்கும் வரையில் அரசால் இப்பணிகளைச் செய்யமுடியாது என்று கூறினார். இந்தியாவைப் பல மண்டலங் களாகப் (Zones) பிரிப்பது தொடர்பாகச் சர்.சிக்கந்தர் ஹயத்கான் கூறியிருப்பதுபற்றி அம்பேத்கரிடம் கேள்விகேட்டபோது, இந்தி யாவை ஏழு மண்டலங்களாகப் பிரிப்பதைத் தான் ஏற்கவில்லை என்றும், பாகிஸ்தானை ஏற்படுத்த வேண்டும் என்ற குறிக்கோளை நோக்கி எடுத்து வைக்கப்படும் முதலாவது அடியாக இது அமைந்துவிடும் என்றும் கூறினார். பிரிட்டிஷ் ஆட்சியைப் பற்றிக் கருத்து கூறியபோது, பிரிட்டிஷ் ஆட்சியால் பலகுறைகளும் கேடுகளும் விளைந்திருப்பினும், அது இந்தியர்களுக்கு இரண்டு நன்மைகளை நல்கியுள்ளது; ஒன்று இந்தியர் அனைவர்க்குமான பொதுவான ஓர் மய்யப்படுத்தப்பட்ட அரசாங்கத்தை ஏற்படுத்தி யது. மற்றொன்று பல்வேறு மதங்களைச் சேர்ந்த மக்களிடையே தாங்கள் ஒரே அரசின் கீழ் உள்ள குடிகள் என்ற உணர்வை உருவாக்கியது என்று குறிப்பிட்டார்.

அச்சமயம் பம்பாய்ச் சட்டசபையில் நிதிச் சட்டத்தின் இரண்டாவது திருத்த மசோதா மீது அம்பேத்கர் பேசியபோது, இவ்வாறு திருத்தம் கொண்டுவந்திருப்பதற்காக ஆளுங்கட்சியின ரைக் கண்டித்தார். அய்ந்து சிறந்த வழக்குரைஞர்களை அமைச்சர் களாகக் கொண்டிருக்கின்ற அரசு இனி விதிக்கப்படப்போகும் அபராதம் முன் தேதியிலேயே நடைமுறைக்கு வந்துவிட்டதாகக் கருதும்படி மசோதாவை வடிவமைத்திருப்பது தனக்குப் பெரும் வியப்பை ஊட்டுவதாகக் குறிப்பிட்டார்.

III

போலந்து நாட்டின் பாதுகாப்பு என்ற பிரச்சினையை மய்யமாகக் கொண்டு அய்ரோப்பாவில் இரண்டாம் உலகப்போர் மூண்டது. செருமனியுடனான போரில் இந்தியாவும் ஈடுபடுத்தப்பட் டுள்ளதாகப் பிரிட்டிஷ் வைசிராய் அறிவித்தார். உலகப்போரைப் பற்றி இந்தியத் தலைவர்கள் பலரும் பல்வேறு கோணங்களில் கருத்துகளை வெளியிட்டனர். மிதவாதச் சிந்தனையுடைய இந்தியத் தலைவர்கள் பிரிட்டிஷ் அரசின் போர் நடவடிக்கைகளுக்குத் தங்களுடைய நிபந்தனையற்ற ஆதரவைத் தெரிவித்தனர். ஆனால் ஜின்னாவின் தலைமையில் இயங்கிய முஸ்லீம் லீக், இந்திய

முஸ்லீம் மக்களிடையே பிரிட்டிஷ் அரசு, இஸ்லாமியரின் நலன்கள் பாதுகாக்கப்படும் - இஸ்லாமியரின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படும் என்ற உறுதிப்பாட்டை அளிக்க வேண்டும் என்று கூறியது. சர்தார் பட்டேலும், அச்சமயம் சீனாவில் சியாங்கே ஷேக் ஆட்சிப்பகுதியில் எழுச்சியான சுற்றுப்பயணத்தை முடித்து விட்டு இந்தியா திரும்பிய ஜவகர்லால் நேருவும் மற்றும் பல தலைவர்களும் முதலில் அரசுக்கு நிபந்தனையற்ற ஆதரவினை அளிக்க முன்வந்தனர்; அரசுடன் பேரம் பேசுவதற்கான நேரம் இதுவன்று எனக் கூறினர்.

காந்தி பிரிட்டிஷ் வைசிராயைச் சந்தித்தபோது, இப்போரினால் பிரிட்டிஷ் பாராளுமன்றக் கட்டடமும் வெஸ்ட் மினிஸ்டர் மடாலயமும் அழிந்துவிடுமோ என்று எண்ணி மனங்கலங்கிய நிலையில் பேசினார். இந்தியாவை அடிமைத்தளையில் வைத்துக் கொண்டு, மானுடச் சுதந்திரத்தைப் பேணிடும் உயிர்க் கொள்கை களைப் பாதுகாப்பதற்காகவே போரில் ஈடுபட்டிருப்பதாகப் பிரிட்டன் கூறுவது ஓர் அரசியல் மோசடியாகும் என்று சாவர்க்கர் கூறினார்.

பெரும் விளைவுகளை உண்டாக்கிய ஒரு முக்கியமான அறிவிப்பு *1939* செப்டம்பர் *11*ஆம் நாள் வெளியாயிற்று. அரசின் இறுதியான நோக்கம் இந்தியாவில் கூட்டாட்சி அமைப்பதுதான் என்றாலும் தற்போதுள்ள சூழ்நிலையில் அதைத் தற்காலிகமாக நிறுத்திவைப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று வைசிராய் அறிவித்தார். இந்த அறிவிப்பை வைசிராய்க்கு அருகில் இருந்த வண்ணம் ஜின்னா மகிழ்ந்து கேட்டுக்கொண்டிருந்தார்.

சுதந்திரத் தொழிற் கட்சியின் தலைவரான அம்பேத்கர், போலந்தின் பக்கம் போதிய அளவுக்கு நியாயம் இல்லை; குறிப்பாக அது யூதர்களைத் தவறான முறையில் நடத்தியது என்று அவர் வெளியிட்டிருந்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார். போலந்தின் பிரச்சினை போரைத் தொடங்குவதற்கு ஒரு வாய்ப் பாகப் பயன்படுத்திக் கொள்ளப்பட்டது; தனக்கு இணங்காத நாடுகளின் மீது தன் ஆதிக்கத்தை நிலைநாட்டிடும் செருமனியின் போக்கு உலக நாடுகளுக்கே ஓர் அச்சுறுத்தலாகும் என்று அம்பேத்கர் கூறினார். இங்கிலாந்திற்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை இந்தியருக்குக் கிடைத்துள்ள நல்வாய்ப்பாகும் என்று கூறப்படும் கருத்தை ஏற்க மறுத்தார். ஆங்கிலேயர்களுக்குப் பதிலாக புதிய எஜமானர்களை இக்கட்டத்தில் இந்தியர்கள் தேடிக் கொள்ளக்கூடாது என்று கூறினார்.

போரில் ஈடுபடுவதை அறிவிப்பதிலும், அமைதியை ஏற்படுத்துவதிலும் அயல்நாட்டுக் கொள்கையின் உருவாக்கத்திலும் இந்தியாவிற்கு எத்தகைய அதிகாரமும் இல்லை என்பது அநீதியாகும் என்று அம்பேத்கர் அறிவித்தார். இந்தியா பிரிட்டிஷ் காமன்வெல்த் நாடுகளின் அமைப்பில் இருந்துகொண்டே சமஉரிமையுடைய கூட்டாளிநாடு என்ற தகுதியைப் பெற்றிடப் போராட வேண்டும் என்றும் கூறினார். தங்கள் தாய்நாட்டைப் பாதுகாப்பதற்காக இந்தியர்களை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று அரசுக்கு வேண்டுகோள் விடுத்தார். இந்தியாவைப் பாதுகாப்பது இந்தியர்களுக்குப் பொறுப்புடையது என்பதை வட்டமேசை மாநாட்டில் ஒத்துக் கொண்டதைப் பிரிட்டிஷ் அரசுக்கு அம்பேத்கர் நினைவூட்டினார். போர் முடிந்த பிறகு, பிரிட்டிஷ் பேரரசில் எத்தகைய தகுதியுடன் இந்தியா இடம் பெற்றிருக்கும் என்பதை இப்போதே உறுதிகூற வேண்டியது பிரிட்டனின் கடமையாகும் என வலியுறுத்தினார். எத்தகைய உயர்ந்த கொள்கைகளுக்காக இப்போர் நடக்கிறதோ, அந்தக் கொள்கைகளின் பயன்கள் போர் முடிந்த பின்னர் தங்கள் நாட்டுக்கும் கிடைக்கும் என்று உறுதியளிக்கப்பட்டாலன்றி, இந்தியர்கள் ஆர்வமுடனும் முழுமூச்சுடனும் போரில் ஈடுபடமாட்டார்கள் என்று அம்பேத்கர் வெளியிட்ட அறிக்கையின் இறுதியில் குறிப்பிட்டிருந்தார்.

செப்டம்பர் 14ஆம் நாள் காங்கிரசுத் தலைவர்கள் தங்கள் போக்கினை மாற்றிக் கொண்டனர். சுதந்திர சனநாயக இந்தியா மற்ற சுதந்திரமான நாடுகளுடன் இணைந்து ஒரு நாடு மற்றொரு நாட்டின் பாதுகாப்புக்கு உதவிடும் வகையில் செயல்படத் தயாராக இருக்கிறது; அதனால் பிரிட்டிஷ் அரசு இந்தியாவைப் பொறுத்த அளவில் சனநாயகம், ஏகாதிபத்தியம் குறித்த அதனுடைய போரின் நோக்கங்களைத் தெளிவாக அறிவிக்க வேண்டும் என்று காங்கிரசு கோரியது.

இதற்குச் சில நாட்கள் கழித்து சாவர்க்கர், கெல்கர், ஜம்னாதாசு, அம்பேத்கர், சர்.சிமன்லால் சத்தல்வாட், சர்.கவாஸ்ஜி ஜகாங்கிர், சர்.வி.என். சந்தவார்க்கர் ஆகிய ஏழு தலைவர்களும் கையெழுத்திட்டுக் கூட்டாக வெளியிட்ட ஓர் அறிக்கையில், காங்கிரசு இந்தியாவில் உள்ள எல்லாத் தரப்பினரையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்று காந்தி கூறியிருப்பது பாசிசப் போக்கேயாகும்; இப்போக்கினால் இந்தியச் சனநாயகத்திற்குப் பெருங்கேடு விளையும் என்று கூறியிருந்தனர்.

இந்தியாவின் வைசிராய் லின்லித்கோ பிரபு அக்டோபர் மாதத்தில் முதலாவது வாரத்திலும் இரண்டாவது வாரத்திலும் அய்ம்பத்திரண்டு இந்தியத் தலைவர்களுடன் போரைப்பற்றிக் கலந்து பேசினார். அவர்கள் பலதரப்பட்ட நோக்கங்களைக் கொண்டவர்களாகவும் பல கட்சிகளைச் சார்ந்தவர்களாகவும் இருந்தனர். அவ்வாறு வைசிராயைப் பேட்டி கண்டவர்களில் காந்தி, ஜின்னா, நேரு, சாவர்க்கர், பட்டேல், இராசேந்திரப்பிரசாத், சுபாஷ்சந்திரபோஸ், அம்பேத்கர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவராவர். அக்டோபர் 9ஆம் நாள் அம்பேத்கரின் பேட்டி நடந்தது. அப்போது கவர்னர் ஜெனரலிடம் அம்பேத்கர் இந்தியாவில் புதிய அரசியல மைப்புச் சட்டம் செயல்படும்போது அவருடைய வகுப்பினரின் நிலை என்ன என்பது பற்றித் தன் வகுப்பினர் கொண்டுள்ள கருத்தினை எடுத்துரைத்தார்; பூனா ஒப்பந்தத்தின் நிறைவேற்றப் பணி நிறைவளிப்பதாக இல்லை என்று குறை கூறினார்; ஆகவே அரசியல் சட்டத்தை அடுத்தமுறை திருத்தும்போது இப்பிரச்சி னையை எழுப்பப் போவதாகக் கூறினார்.

இந்தியத் தலைவர்களுடன் கலந்து பேசியபின், இந்தியாவைப் பற்றி இந்தியத் தலைவர்கள் கொண்டிருந்த எதிர்பார்ப்புகள், நோக்கங்கள் தொடர்பாகப் பிரிட்டிஷ் அரசின் நிலைபாட்டை விளக்கி வைசிராய் ஓர் அறிக்கையை வெளியிட்டார். போர் முடிந்தபின் இந்தியாவில் உள்ள எல்லா முக்கியக் கட்சிகளின் தலைவர்களுடனும் கலந்து பேசிய பிறகு இந்திய அரசியல் சட்டம் திருத்தி அமைக்கப்படும் என்று அவ்வறிக்கையில் கூறப்பட்டிருந் தது. இது முதன்மையான செய்தியாகும். மேலும் சிறுபான்மையின ரின் ஒப்புதல் இல்லாமல் அரசியலில் குறிப்பிடத்தக்க எந்த ஒரு மாற்றத்தையும் அரசு மேற்கொள்ளாது என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது. போர்க்காலத்தை முன்னிட்டு எல்லாக் கட்சிகளின் பிரதிநிதிகளையும் கொண்ட ஒரு ஆலோசனைக் குழு அமைக்கப்படும் என்று வைசிராய் அறிவித்தார். வைசிராயின் அறிக்கை எவ்வகையிலும் மனநிறைவளிப்பதாக இல்லை என்று காங்கிரசின் செயற்குழு அறிவித்தது. பிரிட்டனின் போர் நடவடிக் கைக்குச் செய்யப்படும் எந்த உதவியும் அதனுடைய ஏகாதிபத்தி யக் கொள்கையை ஆதரிப்பதாகவே கருதப்படும். என்றும் தெரிவித்தது. மாகாணங்களில் இருந்த காங்கிரசு அமைச்சரவைகளை உடனடியாகப் பதவி விலகுமாறு காங்கிரசு கேட்டுக் கொண்டது. அவ்வாறு பதவி விலகுவதால்; காங்கிரசுத் தலைவர்கள் எந்தக் கொள்கையை வெறுத்தனரோ அக்கொள்கையைப் பிரிட்டிஷ்

அரசு தன் விருப்பம்போல் செயல்படுத்துவதற்கு வழி ஏற்பட்டு விடும்.

அம்பேத்கர் தில்லியிலிருந்து ஓர் அறிக்கையை வெளியிட்டார். காந்தியும் காங்கிரசும் காங்கிரசுக் கட்சிக்கு வெளியே இருக்கின்ற தலைவர்களிடமும் கட்சிகளிடமும் கொண்டிருக்கிற அகம்பாவப் போக்கினையும், திமிரான நடப்பையும் கைவிட்டாலன்றி சிறுபான் மையினரின் சிக்கலைத் தீர்க்கவே முடியாது என்று அந்த அறிக்கையில் அவர் குறிப்பிட்டிருந்தார். நாட்டுப்பற்று என்பது காங்கிரசுக்காரர்களுக்கு மட்டுமே உரியதன்று; ஆகவே காங்கிரசுக்கு மாறுபட்ட கருத்தினைக் கொண்டிருப்பவர்களுக்கும் செயல்படு வதற்கான முழுஉரிமை இருக்கிறது; மதிக்கப்படுவதற்குரிய தகுதி கள் அவர்களிடமும் உள்ளன என்று மேலும் தெரிவித்திருந்தார். முஸ்லீம் பிரச்சினையைப் பற்றிக் குறிப்பிட்டு, காங்கிரசு ஆட்சி செய்யும் மாகாணங்களில் முகம்மதியர்கள் அடக்கி ஆளப்படுவதாக வும் அச்சுறுத்தப்படுவதாகவும் முஸ்லீம்கள் கூறுகின்ற குற்றச்சாட் டைத் தான் நம்பவில்லை என்று அம்பேத்கர் கூறியிருந்தார். மற்ற சிறுபான்மையினரைப் போலவே முஸ்லீம்களும் ஆட்சி அதிகாரத்தில் பங்கு கேட்கின்றனர். இந்தியாவைப் பிரிக்க வேண்டும் என்ற முஸ்லீம் லீக்கின் கோரிக்கை முஸ்லீம் மக்களிடையே செல்வாக்குப் பெற அனுமதிக்கப்படுமானால் ஒன்றுபட்ட இந்தியா உருவாகும் என்று எதிர்பார்ப்பதற்கு இடமே இல்லாது போய் விடும். தீண்டப்படாத வகுப்பு மக்கள் மற்றோர் முகாமிற்குச் செல்ல நேரிட்டதற்கான பழி காங்கிரசையே சாரும் என்று அம்பேத்கர் கூறினார்.

முன்னர் குறிக்கப்பட்டுள்ள ஏழு தலைவர்களின் கூட்டறிக்கை யும் தென்னிந்தியாவிலிருந்து காங்கிரசு அல்லாத தலைவர்கள் வெளியிட்டிருந்த கூட்டறிக்கையும் காங்கிரசுத் தலைவர்களைக் குழப்பமடையச் செய்தன. இவ்விரு அறிக்கைகளிலும் தீண்டப் படாத வகுப்புத் தலைவர்கள் கையெழுத்திட்டிருந்தனர். தீண்டப் படாத வகுப்பு மக்களின் கோரிக்கைகள் பற்றித் தெளிவாக அறிந்து கொள்ளும் நோக்குடன் காங்கிரசுக் கட்சியின் போர் தொடர்பான துணைக் குழுவின் தலைவராக இருந்த ஜவகர்லால் நேரு பம்பாயில் அக்டோபர் மாதத்தில் மூன்றாவது கிழமையில் அம்பேத்கருடன் இரண்டு நாள்கள் பேச்சு நடத்தினார்.[89] இதுதான் அம்பேத்கருக்கும் நேருவுக்கும் இடையே நடந்த முதலாவது சந்திப்பாகும். இச்சந்திப்பு பற்றிப் பின்னாளில் அம்பேத்கர் தனிப்பட்ட முறையில் பேசிய

போது, நேரு ஒரு ஒன்பதாம் வகுப்பு மாணவன் போல் இருந்ததாகக் குறிப்பிட்டார். அம்பேத்கரை நேருவிடம் அழைத்துச் சென்றவர் கெர் ஆவார். நேரு அம்பேத்கரைச் சந்தித்த பிறகு, காங்கிரசுத் தலைவர்களும், காங்கிரசின் செயற்குழு உறுப்பினர் களும் அம்பேத்கருடன் பம்பாய் மாகாணக் காங்கிரசின் தலைவர் புலாபாய் தேசாய் இல்லத்தில் மூன்று நான்கு நாள்கள் கலந்துரையா டினார்கள். இப்பேச்சுவார்த்தை, இதற்கென வார்தாவிலிருந்து வந்திருந்த காந்தியின் செயலாளர் மகாதேவ தேசாய் அவர்களின் முன்னிலையில் நடைபெற்றது. தேசாய் அம்பேத்கரின் கருத்து களைக் காந்திக்கும் காங்கிரசுக்கும் தெரிவிக்கும் பொறுப்பை ஏற்றிருந்தார். பம்பாய் மாகாணக் காங்கிரசு அமைச்சரவை பதவி விலகுதல் பற்றி மட்டுமே அவர்கள் பேசினர்.

பதவி விலகுமுன், மாகாணச் சட்டசபைகளில் போர் குறித்த தீர்மானத்தைக் காங்கிரசு அமைச்சரவைகள் கொண்டுவந்தன. அச்சமூட்டும் சூழ்நிலையில், பம்பாய் மாகாணச் சட்டசபையில் அத்தீர்மானம் கொண்டுவரப்பட்டது. 'பிரிட்டிஷ் அரசு, பிரிட்டனுக் கும் செருமனிக்கும் இடையிலான போரில் இந்திய மக்களின் ஒப்புதலைப் பெறாமலேயே இந்தியாவை ஈடுபடுத்தி விட்டது' என்று அத்தீர்மானம் குற்றஞ்சாட்டியது. மேலும் பிரிட்டிஷ் அரசு இந்தியர்களின் கருத்துகளுக்கு மதிப்பளிக்காமல் புதிய சட்டங்களை இயற்றியுள்ளது; இவற்றின்மூலம் மாகாண அரசுகளின் அதிகாரங் களையும் செயல்பாடுகளையும் குறைக்கின்ற வகையில் நடவடிக் கைகளை எடுத்துள்ளது என அத்தீர்மானம் கூறியது.

அத்தீர்மான வாசகத்திலிருந்த, 'and have further in .....Provincial Governments' என்ற சொற்களை நீக்கிடக்கோரி, அம்பேத்கர் ஒரு திருத்தத்தைக் கொண்டுவந்தார். போர் பற்றிய இத்தீர்மானத்தை, சட்டசபையில், நாட்டின் பெயரால் கொண்டுவராமல் காங்கிரசுத் தலைமையின் கட்டளைப்படிக் கொண்டு வந்திருப்பதற்காகப் பிரதமர் கெர் பேரில் அம்பேத்கர் குறை கூறினார். போர் குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையின் கருத்துகளை மீண்டும் வலியுறுத் தினார். தீண்டப்படாத வகுப்பு மக்களை அரசியலில் சூத்திரர்களாக ஆக்கக் கூடிய எத்தகைய அரசியல் அந்தஸ்தையும் ஏற்றுக் கொள்ள மாட்டோம்; சாதி இந்துக்கள், தீண்டப்படாத வகுப்பு மக்கள்மீது இதுவரையில் சமூகம், பொருளாதாரம், மதம் ஆகியவற் றில் ஆதிக்கம் செய்து வந்ததுபோல் அரசியலிலும் ஆதிக்கம் செய்ய முனைவார்களானால் அதை நான் பொறுத்துக் கொள்ள

மாட்டேன் என்று முழங்கினார். தொடர்ந்து பேசும் போது, ஸ்பானிஷ் பேரரசிலிருந்து ஸ்பானிஷ் அமெரிக்கக் குடியேற்ற நாடுகள் பிரிந்து சென்றபோது, அந்நாடுகளுக்கான அரசியல் சட்டத்தை எழுதுமாறு எவ்வாறு ஸ்பானிஷ் அரசு பிரிட்டனைச் சேர்ந்த ஜெர்மி பெந்தாமைக் கேட்டுக்கொண்டது என்றும், அதன்படியே பெந்தாம் குடியேற்ற நாடுகளுக்கான அரசியல் சட்டத்தை எழுதி இங்கிலாந்திலிருந்து கப்பலில் அவற்றை அனுப்பிவைத்ததுபற்றியும், அந்நாடுகளில் எவ்வாறு அந்த அரசியல் சட்டம் தோல்வியுற்றது என்றும் அதனால் அம்மக்கள் அதை எரிக்க நேரிட்டதுபற்றியும் விளக்கிக் கூறி, மனிதனுக்கு உடை எவ்வாறு பொருத்தமானதாக இருக்க வேண்டுமோ அது போல் நாட்டிற்கு அதனுடைய அரசியல் சட்டம் பொருத்தமானதாக இருக்க வேண்டும் என்று அம்பேத்கர் குறிப்பிட்டார்.

தீண்டப்படாத வகுப்பு மக்கள் தங்கள் முன்னேற்றத்திற்காக சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றைப் பெறுவதைப் பெரும்பான்மையினராக உள்ள இந்துக்கள் எவ்வாறு தடுத்துக் கொண்டிருக்கின்றனர் என்பதை அம்பேத்கர் விளக்கினார். தீண்டப்படாதவர்கள் மிகக் குறைந்த எண்ணிக்கையில்தான் அரசு உத்தியோகங்களில் இருக்கின்றனர் என்பதைப் புள்ளி விவரங்களுடன் சட்டமன்றத்தில் விளக்கினார். ஒரு நூறு மணியக்கார்களில் ஒரே ஒரு தீண்டப்படாதவர்தான் உள்ளார்; 34 மகல்காரிகளில் ஒருவர் கூடத் தீண்டப்படாதவர் இல்லை; அதேபோன்று 246 தலைமை எழுத்தர்களில் ஒருவர் கூடத் தீண்டப்படாதார் இல்லை. வருவாய்த் துறையில் உள்ள 2444 எழுத்தர்களில் 30 பேர் மட்டுமே தீண்டப்படாதவர்கள். பொதுப் பணித்துறையில் உள்ள 829 எழுத்தர்களில் 7 பேரும், சுங்கத் தீர்வைத் துறையில் 189 பேர்களில் 3பேரும், 538 போலீஸ் இன்ஸ்பெக்டர்களில் 2 பேரும், 33 உதவிக் கலெக்டர்களில் ஒருவரும் தீண்டப்படாத வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருக்கின்றனர் என்று ஆதாரங்களுடன் எடுத்துரைத்தார்.

'இந்நாட்டில் என் நிலைபாட்டை மற்றவர்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்பதை நான் அறிவேன். அடிக்கடி என்னைப் பற்றித் தவறாகப் புரிந்து கொள்கிறார்கள். ஆகவே என் நிலைபாட்டைத் தெளிவுபடுத்துவதற்காக இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள விரும்புகிறேன். என் சொந்த நலனா? நாட்டின் நலனா? என்ற கேள்வி என் வாழ்வில் ஏற்பட்ட

போதெல்லாம் என்னுடைய சொந்த நலன்களைப் புறந்தள்ளிவிட்டு நாட்டின் நலன்களைத் தூக்கிப் பிடித்திருக்கிறேன். நான் ஒருபோதும் என் சொந்த நலன் கருதிச் செயல்பட்டதே இல்லை. மற்றவர்கள் செய்வதைப் போல் என் நலன் கருதி வேறுவிதமாகச் செயல்பட்டி ருப்பின் நான் வேறோர் உயர்ந்த இடத்தில் இருந்திருப்பேன். அதைப்பற்றியெல்லாம் நான் இங்குச் சொல்ல முன்வரவில்லை. ஆனால் அதுபோல் தன்னலத்திற்காக நான் எதையும் செய்ய வில்லை என்று மட்டும் குறிப்பிட விரும்புகின்றேன். என்னோடு வட்டமேசை மாநாட்டில் கலந்துகொண்டவர்கள் இன்றும் இருக் கிறார்கள்; அவர்கள் நான் சொல்வதை ஆதரிப்பார்கள் என்று நம்புகின்றேன். நாட்டின் நலன்களை முன்னெடுத்துச் செல்வதில் நான் என்றுமே தயங்கிப் பின்வாங்கியதில்லை. வட்டமேசை மாநாட்டில் கலந்துகொண்ட அய்ரோப்பிய உறுப்பினர்களில் பலரும் என்னுடைய பேச்சுகள் காரணமாக, வட்டமேசை மாநாட்டில் கலந்துகொண்டவர்களிலேயே மிகத் தீவிரமாகப் பேசியவன் என்று என்னைக் கருதி மன உளைச்சல் கொண்டிருந்த னர் என்பதை அறிவேன்' என்று அழுத்தமாகத் தன் நிலைபாட்டை அம்பேத்கர் விளக்கினார்.

'இந்த நாட்டில் உள்ள மக்களுக்கு அய்யத்திற்கே இடமில்லாத வகையில் ஒன்றைத் தெளிவுபடுத்திட விரும்புகின்றேன். நான் செய்ய வேண்டிய மற்றொரு நன்றிக்கடன் இருக்கிறது; அதை என்றுமே என்னால் கைவிட முடியாது. அது எதுவெனில் நான் பிறந்து வளர்ந்த-நான் சார்ந்திருக்கிற தீண்டப்படாத வகுப்புக்கு நான் ஆற்ற வேண்டிய கடமையே ஆகும். அக்கடமையை நான் ஒருபோதும் கைவிடமாட்டேன் என்று நம்புகிறேன். இந்த அவையில் அழுத்தந்திருத்தமாக இந்த ஒன்றைத் தெரிவிக்க விரும்புகின்றேன். நாட்டின் நலனா? தீண்டப்படாதவர் நலனா? இரண்டில் எது முதன்மையானது என்ற நிலை ஏற்படும்போது, என்னைப் பொறுத்த வரையில், நாட்டின் நலனைவிடத் தீண்டப் படாதாரின் நலனையே நான் தூக்கிப் பிடிப்பேன். நாட்டின் பெயரால் பேசுகின்றனர் என்பதற்காகவே எமக்குக் கொடுமை இழைத்துவரும் சாதி இந்துப் பெரும்பான்மையினரை நான் ஆதரிக்க மாட்டேன். நாட்டின் பெயரால் பேசுகிறது என்பதற்காக ஒரு கட்சியை நான் ஆதரிக்க மாட்டேன், அவ்வாறு ஆதரிக்க மாட்டேன் என்பதை உறுதிபடக் கூறுகிறேன். இந்த அவையில் இருக்கின்ற-இந்த அவைக்கு வெளியே இருக்கின்ற ஒவ்வொருவ ரும் இதுதான் என் நிலைபாடு என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

தனிப்பட்ட நானா? அல்லது நாடா? என்ற கேள்வி எழும்போது நாட்டின் நலனையே முன்னிறுத்துவேன். நாடா? அல்லது தீண்டப்படாத வகுப்பு மக்களா? என்ற கேள்வி ஏற்படும் போது தீண்டப்படாத வகுப்பு மக்களின் நலனையே நான் உயர்த்திப் பிடிப்பேன். அப்போது நாட்டின் நலன் என்பது எனக்கு இரண்டாவதாகவே ஆகிவிடும். நான் கொண்டு வந்துள்ள இரண்டு திருத்தங்கள் தொடர்பாக நான் கூறவிரும்புவது இவ்வளவுதான்' என்று கூறினார்.

அம்பேத்கர் தன் உரையின் இறுதியில், காங்கிரசு பதவி விலகுவதற்காக, பிரதமர், என் அனுமதியைக் கேட்பது ஏன் என வினவினார். காங்கிரசு பதவி விலகுவதுபற்றி முடிவெடுக்க வேண்டியது என் கட்சியின் மேலிடத்துக் குழுதான் என்றார். அம்பேத்கர் ஒன்றரை மணி நேரம் உரையாற்றியதால் அவைத் தலைவர், மற்ற உறுப்பினர்களைச் சுருக்கமாக உரையாற்றுமாறு கேட்டுக் கொண்டார். அதிக நேரத்தை எடுத்துக் கொண்டதற்காக வருந்துவதாக அம்பேத்கர் கூறினார்.

IV

காங்கிரசுக் கட்சியின் மேலிடத் தலைமையின் கட்டளைக்கு இணங்க 1939 நவம்பர் முதல் கிழமையில் காங்கிரசு அமைச்சரவைகள் பதவி விலகின. காங்கிரசு அமைச்சரவைகளின் விலகல் ஜின்னாவைக் களிப்புக்கடலில் ஆழ்த்தியது. இதனால் இந்திய முஸ்லீம்களுக்கு மிகப் பெரும் ஆறுதல் கிடைத்திருப்பதாக ஜின்னா கூறினார். ஆகவே காங்கிரசு அமைச்சரவைகள் பதவி விலகிய நாளை 'விடுதலை நாளாகக்' (Deliverance Day) கொண்டாடுமாறு முஸ்லீம் சமூகத்தினருக்கு ஜின்னா வேண்டுகோள் விடுத்தார். காங்கிரசின் மதுவிலக்குக் கொள்கையால் பாதிக்கப்பட்டிருந்த பார்சிகள் பலர் காங்கிரசு ஆட்சியிலிருந்து விலகியது குறித்துத் தம் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள்; இஸ்லாமியர் அறிவித்த 'விடுதலை நாள்' கொண்டாட்டத்தில் தாங்கள் தனிப்பட்ட முறையில் பங்குகொள்வதாக உறுதி கூறினார்கள். ஜின்னாவின் விடுதலை நாள் கொண்டாட்டங்களில் தானும் பங்குகொள்ள விரும்புவதாக அம்பேத்கர் அறிவித்தார். 'ஜின்னாவின் அறிக்கையைப் படித்தேன். என்னை விட எல்லோருடைய கவனத்தையும் ஜின்னா கவர்ந்துவிட்டார்; கூர்மையான சொற்களுக்கும் வேகமான உணர்வுகளுக்கும் பெயர் பெற்றவன் நான். ஆனால் இவற்றை ஜின்னா என்னிடமிருந்து கொள்ளை கொண்டு விட்டாரே! இதற்காக

நான் நாணுகிறேன்' என்று குறிப்பிட்டு, ஜின்னாவின் விடுதலை நாள் அறிக்கையை அம்பேத்கர் புகழ்ந்துரைத்தார். 'முகம்மதியர்கள் ஒடுக்கப்படுவதாக ஜின்னா கூறிய நூறு குறிப்பிட்ட நிகழ்ச்சிகளில் அய்ந்தை மட்டுமே அவரால் மெய்ப்பிக்க முடியும். ஆனால் தீண்டப்படாதவர்கள் மீது இழைக்கப்பட்ட ஒடுக்குமுறைகளை நடுநிலையான எந்தவொரு நடுவர் மன்றத்தின் முன்னரும் நூற்றுக்கு நூறு நான் நிரூபித்துக்காட்டுவேன்' என்று மேலும் கூறினார். இவ்வாறு கூறுவது இந்து எதிர்ப்பு உணர்வினாலன்று; காங்கிரசு எதிர்ப்பு எண்ணத்தினால்தான்; ஆகவே இது அரசியல் அடிப்படையில் மட்டுமே கூறப்படுவதாகும்; தன்னுடைய இக்கூற்றை இந்துக்கள் தங்களுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட தாக்குதல் என்று கருதினால், காங்கிரசு இந்துக்களின் அமைப்பாக இருக்கிறது என்பது உண்மையாகிவிடும். அதன்பின் ஏற்படக்கூடிய விளைவுகளுக்கு அவர்களே பொறுப்பாளிகளாவர்' என்று மேலும் அம்பேத்கர் குறிப்பிட்டார்.

காந்திக்கும் காங்கிரசுக்கும் எதிரிகளான இரு பெரும் தலைவர்களான அம்பேத்கரும் ஜின்னாவும் பம்பாயில் பெண்டி பசாரில் நடந்த விடுதலை நாள்' விழாக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்; காங்கிரசின் தலைமையை, ஒரு பீரங்கியின் வாயிலில் வைத்துத் தாக்குவது போல் சாட்டினார்கள். விடுதலை நாள் கொண்டாட்டங்களில் இது குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும்.

இதற்கிடையில் அம்பேத்கர் வேறொரு பிரச்சினையில் ஒரு குறிப்பிடத் தகுந்த காலம் அவருடைய கவனத்தைச் செலுத்த வேண்டியதாயிற்று. மகார் வட்டன் நிலங்கள் மீது பம்பாய் அரசு கூடுதலாக வரி விதித்தது. மகார் வட்டன் பிரச்சினையில் 1927 முதற்கொண்டே அம்பேத்கர் போராடிக் கொண்டிருந்தார். அடிமைத் தளையிலிருந்து அந்த ஏழை மக்களை விடுவிப்பதற்குப் பதிலாக, வெந்த புண்ணில் வேலைப்பாய்ச்சுவது போல், அரசு கூடுதல் வரியை விதித்தது. மராட்டியத்திலும் கர்நாடகத்திலும் வாழ்ந்த தீண்டப்படாதவர்களான மகார்களும் மாங் பிரிவு மக்களும் வெத்தியர்களும் 1939 டிசம்பர் மாத மத்தியில், தங்களுடைய குறைகளை வெளிப்படுத்திட வேண்டி, அம்பேத்கரின் தலைமையில் ஹெரிகோனில் ஒரு மாநாட்டைக் கூட்டினார்கள் மகார்களும், மாங்குகளும், வெத்தியர்களுமாக 20,000 பேர் கலந்துகொண்ட அம்மாநாட்டில் அம்பேத்கர் உரையாற்றியபோது, துன்பத்திற்குள்ளாக்கும் இந்த வரிவிதிப்பு ஆணையை அரசு ரத்து செய்ய வேண்டும்; எத்தகைய ஊதியமும் வழங்காமல் இம்மக்களைக்

கசக்கிப் பிழிந்து வேலை வாங்குகிறது அரசு; இம்மாநாடு நடைபெறுகிற நாளிலிருந்து ஆறுமாத காலத்திற்குள் இக் கொடுமை களிலிருந்து இந்த ஏழை மக்களை அரசு விடுவிக்காவிட்டால், தங்களுக்கு இழைக்கப்படும் துன்பத்திற்கு எதிராக, ஊதியமில்லாப் பணிகளைச் செய்ய முடியாது என்று மறுப்பதைத் தவிர இம்மக்களுக்கு வேறு வழியில்லை என்று கூறி, அம்பேத்கர், அரசை எச்சரித்தார். அரசு ஊழியர்களுக்குச் சம்பளம் அளிப்பதைப் போலவே வட்டன்தார்களுக்கும் சம்பளம் கொடுக்க வேண்டும் என்றும் வட்டன்முறை அடிமைத்தனத்தை ஒழிக்குமாறும் அம்பேத் கர் அரசுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

1940 மார்ச்சு 19ஆம் நாளைத் தீண்டப்படாத வகுப்பு மக்கள் தங்களுடைய விடுதலை நாளாகக் கொண்டாடினார்கள். 1927 ஆம் ஆண்டு மார்ச்சு 19ஆம் நாள் மகதில் தீண்டப்படாதவர்களின் விடுதலைக்கான போராட்டத்தை அம்பேத்கர் தொடங்கியதால் அந்த நாளை விடுதலை நாளாகக் கருதினார்கள். 1940 மார்ச்சு 19ஆம் நாள் மகதில் பத்தாயிரம் மக்கள் கலந்துகொண்ட பேரணியில் அம்பேத்கர் உரையாற்றினார். இந்தியர்கள் அவர்களுடைய முதன் மையான சமூக, பொருளாதாரப் பிரச்சினைகளை மறந்துவிட்டு, நாட்டின் அரசியல் விடுதலையில் மட்டும் முழுக்கவனத்தைச் செலுத்திக் கொண்டிருப்பது முற்றிலும் தவறான போக்காகும். இந்துச் சமூகம் தன் பழைய கட்டமைப்பை உடைத்தெறிந்துவிட்டு இப்போதுள்ள காலத்திற்கு ஏற்பத் திருத்தியமைத்துக் கொள்ளுவதற் கான மிகச் சரியான வேளை இதுவேயாகும் என்றார். அன்றிரவு மகத் நகராட்சி அம்பேத்கருக்கு வரவேற்பு அளித்தது.

இதற்கிடையில் அரசியல் சூழ்நிலை மிகவும் தீவிரமடைந்தது. 1940 ஏப்பிரல் மாதம் ராம்காரில் நடைபெற்ற காங்கிரசுக் கட்சியின் ஆண்டு மாநாட்டில் இந்தியாவைப் பிளவுபடுத்துகின்ற எந்தவொரு திட்டத்தையும் ஏற்கமுடியாது; தாய்நாட்டைக் கூறுபோடுவதை அனுமதிக்க முடியாது என்று அறிவிக்கப்பட்டது; அதே நேரத்தில் லாகூரில் நடைபெற்ற முஸ்லீம் லீக்கின் ஆண்டு மாநாட்டில், முகமதியர் பெரும்பான்மையினராக உள்ள இந்தியாவின் வட மேற்கு மற்றும் கிழக்குப் பகுதிகளைச் சுதந்திரமான தனிநாடாக உருவாக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஒற்றுமையின் - அமைதியின் தூதராகக் கருதப்பட்ட ஜின்னா இப்போது இந்திய நாட்டின் ஒற்றுமையை உடைப்பவராக மாறினார்.

இந்திய அரசியலில் நடைபெற்றுக் கொண்டிருந்த இந்நிகழ்ச்சி களை அம்பேத்கர் கூர்ந்து நோக்கி ஆய்வு செய்து கொண்டிருந்தார். அவருடைய மக்களையும் அவர் வழி நடத்திக் கொண்டிருந்தார். மகார் பஞ்சாயத்தை அவர் உருவாக்கினார். 1940 மே மாதம் பம்பாயில் பந்த்ராவில் நடைபெற்ற மகார் பஞ்சாயத்து மாநாட்டில் உரையாற்றினார்.

அக்காலக் கட்டத்தில் ஹிட்லர் சிறிய நாடுகளையெல்லாம் கைப்பற்றிக் கொண்டிருந்தார். பிரிட்டனுக்கும் அதன் நேசநாடுகளுக் கும் போரின் அச்சுறுத்தல் அதிகமாயிற்று. காங்கிரசுத் தலைவர்கள் காந்தியின் தலைமையை ஒதுக்கி வைத்துவிட்டு, மத்தியில் முழுமையாகப் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய தேசிய அரசை அமைத்தால் பிரிட்டிஷ் அரசுக்குப் போரில் ஒத்துழைப்புத் தருவதாக அறிவித்தனர். பூனாவில் கூடிய காங்கிரசார் இக்கருத்தை மீண்டும் வலியுறுத்தினார்கள். ஆகவே, இது, 'பூனா ஒத்துழைப்பு' என்று அழைக்கப்பட்டது. ஆனால் ஜின்னா இதை எதிர்த்தார். தேசிய அரசு என்பது மத்திய ஆட்சியில் இந்துப் பெரும்பான்மை நிலையாக இருந்திட வழி வகுத்துவிடும் என்றார் ஜின்னா; வைசிராய் அவருடைய நிர்வாகக் கவுன்சிலை மேலும் விரிவுபடுத்த வும், போரை நடத்துவதில் உதவுவதற்காகப் போர் ஆலோசனைக் குழு ஒன்றை அமைக்கவும் வழிவகை செய்யும் புதியதொரு திட்டத்தை அவர் முன்மொழிந்தார். இந்தியாவின் நலன்களுக்கு முற்றிலும் எதிரானது என்று கூறி காங்கிரசு இப்புதிய திட்டத்தை ஏற்க மறுத்தது.

அப்போது காங்கிரசுத் தலைவர் பதவியிலிருந்து தூக்கி எறியப்பட்டிருந்த சுபாஷ் சந்திரபோசு மனங்கொதிப்படைந்தார். ஐரோப்பில் வாழ்வா, சாவா என்ற போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக, இந்தியாவில் உள்ள சக்திகளை ஒன்றுதிரட்ட முயன்றார். 1940 ஜூலை 22ஆம் நாள் போசு பம்பாய்க்கு வந்தார். அங்கு ஜின்னா, அம்பேத்கர், சாவர்க்கர் ஆகியோரைச் சந்தித்தார். கூட்டாட்சித் திட்டத்தை மிகக்கடுமையாக சுபாஷ் போசு எதிர்த்தார்; அம்பேத்கரும் அதை எதிர்த்தார். ஆகவே அவர்கள் இருவரும் ஒன்று சேர்ந்து செயல்படுவதற்கு இது ஒரு அடித்தளமாக இருப்பதாக சுபாஷ் போஸ் கருதியிருக்கக்கூடும். கூட்டாட்சித் திட்டம் பற்றிப் பேசிமுடித்த பின்னர், அம்பேத்கர், சுபாஷிடம் தேர்தலில் காங்கிரசுக்கு எதிராக உங்களுடைய வேட்பாளர்களை நிறுத்துவீர்களா என்று கேட்டார். அவ்வாறு

செய்யமுடியாது என்றார் போசு. அதன்பின் அம்பேத்கர் சுபாஷ் போசிடம், தீண்டப்படாதவர் பிரச்சினையில் அவருடைய கட்சியின் ஆக்கப்பூர்வமான நிலைபாடு என்ன என்பதை விளக்குமாறு கேட்டார். போசு கூறியவை அம்பேத்கருக்கு நிறைவளிக்கவில்லை. அத்துடன் அப்பேட்டி முடிந்தது. சாவர்க்கரின் எழுச்சிமயமான பேச்சுதான் சுபாஷ் போசின் சிந்தனைப் போக்கினையே மாற்றிய தாகத் தெரிகிறது. பிரிட்டிஷ் ஆட்சி எல்லைக்கு வெளியிலிருந்து கொண்டு இந்திய விடுதலைக்கான போரை நடத்துவதற்கான வாய்ப்புகள் பற்றி போசு சிந்திக்கத் தொடங்கினார்.

பிரிட்டிஷ் அரசுக்கு எதிராகப் போராடுவதற்காகக் காங்கிரசு மீண்டும் காந்தியின் சர்வாதிகாரத் தலைமையை ஏற்றுக் கொண்டது. 1940 அக்டோபர் மாதம் காந்தி தனிநபர் சத்தியாக்கிரக இயக்கத் தைத் தொடங்கினார். அகிம்சையின் அடிப்படையில் போரில் இந்தியா பங்கேற்கக் கூடாது என்று பிரச்சாரம் செய்து வந்தார். அதன் விளைவாக ஏறக்குறைய எல்லாக் காங்கிரசுத் தலைவர்களும் சிறையில் அடைக்கப்பட்டனர். காந்தியின் போக்கினை அம்பேத்கர் குறைகூறினார். போருக்காக இந்தியா ஆட்களை அனுப்புவதோ பணத்தை அளிப்பதோ கூடாது என்று காந்தி பிரச்சாரம் செய்து வருவது இந்தியப் பாதுகாப்புச் சட்டத்துடன் ஒத்துழைக்க மறுக்கிற சட்டமறுப்பாகும் என்று அம்பேத்கர் கூறினார். 'சிந்திக்கும் திறனுடைய அனைவருமே வன்முறையை வெறுக்கவேண்டும். ஆனால் வன்முறையை அடக்குவதற்காக வன்முறையைப் பயன் படுத்துவதற்கும், வன்முறையால் பெற்ற வெற்றியைத் தோற்றவர் களின் மீது இழிவான அநீதியான கட்டுப்பாடுகளைத் திணிப்பதற்கா கப் பயன்படுத்துவதற்கும் இடையில் உள்ள வேறுபாட்டைத் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும். ஆனால் இந்த வேறுபாட் டைக் கண்டறிய காந்தியால் முடியாது. தீமை என்பது வன்முறை யைக் கையாளுவதில் இல்லை; அதற்கு மாறாக வெற்றியைத் தவறாகப் பயன்படுத்துவதில்தான் வன்முறை இருக்கிறது என்று நான் கருதுகின்றேன். காந்தியும், போர் எதிர்ப்புக் கொள்கையின ரும், அகிம்சையில் நம்பிக்கை கொண்டிருப்போரும், போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டு அமைதி ஏற்படும்போது, தோற்றவர்கள் மீது இழிவான அநீதியான கட்டுப்பாடுகள் அமைதி ஒப்பந்தத்தின் பேரால் சுமத்தப்பட்டால், அதை எதிர்த்து அவர்கள் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொள்வாராயின் அதுவே அவர்கள் மானுடத் திற்குச் செய்யும் மாபெரும் தொண்டாக அமையும். போர் எதிர்ப்பாளர்கள் என்பவர் அவருடைய நோக்கத்தையே தவறாகப்

புரிந்து கொண்டிருக்கிறார் என்றே எனக்குத் தோன்றுகிறது. அப்படிப்பட்டவர் அமைதியின் பெயரிலான அநீதியை எதிர்த்துப் போராட வேண்டுமே தவிர, வன்முறையைப் பயன்படுத்துவதை எதிர்த்து அன்று. வன்முறையைப் பயன்படுத்துவதை விட்டொழிக்குமாறு மக்களைக் கேட்டுக் கொள்ளுவதன் மூலம்-அகிம்சையாளர், வெற்றிபெறுவதற்காக வன்முறையைப் பயன்படுத்துவோர்க்கு உதவி செய்பவராகிறார்!' என்று அம்பேத்கர் விளக்கினார். நான் வைசிராயாக இருந்திருப்பின் பழைய நிலையையே நீடிக்கச் செய்திருப்பேன் என்று இராசகோபாலாச்சாரி கூறியதாக வெளிவந்திருந்த செய்தியைப் பற்றி அம்பேத்கர் குறிப்பிட்டுவிட்டு, 'நாட்டின் நன்மைக்காகப் போராடுவதாகக் காங்கிரசு கூறுவது மோசடியான பேச்சாகும். ஆட்சி அதிகாரம் செய்வதற்கான திறவு கோல்களைத் தன் கைகளுக்கு மாற்றிக் கொள்வதற்காகவே காங்கிரசு போராடிக் கொண்டிருக்கிறது. ஓராண்டிற்கு முன் இந்தியப் பாதுகாப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டபோதே காந்தி ஏன் அவருடைய ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கவில்லை?' என்று அம்பேத்கர் வினவினார்.

V

1940ஆம் ஆண்டின் இறுதியில் அம்பேத்கரின் சிறந்த நூலான "பாக்கிஸ்தான் பற்றிய எண்ணங்கள்" (Thoughts on Pakistan) என்ற நூல் வெளிவந்தது. பாக்கிஸ்தான் பிரச்சினை எல்லோருடைய கவனத்தையும் ஈர்த்துநின்ற நேரத்தில் எழுதப்பட்ட இந்நூல் அப்போது நடைபெற்றுக் கொண்டிருந்த சூடான விவாதங்களின் மீது வெடிகுண்டை வீசியது போன்ற தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்தியரில் கற்றறிந்த மேதையான, அரசியல் சட்டத்தில் சிறந்த வல்லுனரான, பழுத்த அரசியல் அனுபவம் பெற்றிருந்த அம்பேத்கர் இந்தியாவின் அரசியல் பிரச்சினைகள் பற்றிய தன் எண்ணங்களை அந்நூலில் வெளிப்படுத்தினார். அந்நூலில் பெரும்பாலும் இந்துக்களை நோக்கியே அவருடைய கருத்துகளைக் கூறியிருந்தார். இந்துக்களின் முன்னேற்றம், அமைதி, விடுதலை ஆகியவற்றைக் கருதி இந்தியாவை இந்துஸ்தான் - பாகிஸ்தான் என்று இரண்டாகப் பிரித்திட வேண்டும் என்பதே இந்நூலின் திரண்ட மய்யக் கருத்தாகும்.

முஸ்லீம்கள் தனியான ஒரு தேசிய இனத்தவர் என்பதைப் போலியான இடக்கு மடக்கு இன்றி ஒத்துக்கொள்ளவேண்டும் என்று இந்நூலில் அம்பேத்கர் வலியுறுத்தியுள்ளார். பாக்கிஸ்தான்

தனியாகப் பிரிந்துவிட்டால் இந்தியாவிற்குப் பாதுகாப்பான எல்லைகள் இல்லாது போய்விடுமே என்று இந்துக்கள் அஞ்ச வேண்டியதில்லை; ஏனெனில் இன்றைய நவீன உலகில் தொழில் நுட்பம் வளர்ந்துவரும் காலக்கட்டத்தில் நாட்டின் எல்லைகள் போரில் தீர்மானிக்கக் கூடிய சக்திகளாக விளங்கவில்லை. பாக்கிஸ்தானை விட இந்துஸ்தானில் இயற்கை வளங்கள் மிக அதிக அளவில் செழித்துக் கிடக்கின்றன. ஆகவே பாக்கிஸ்தான் பிரிந்து செல்வதால் இந்துஸ்தானின் வளமை குன்றாது என்று அம்பேத்கர் எடுத்துரைத்தார். முகம்மதியர்களின் இந்திய நாட்டுப்பற்று எப்போதும் அய்யப்பாட்டுக்குரியதாகவே இருக்கிறது. ஆகவே இத்தகைய முஸ்லீம்களை இந்தியாவிலேயே வைத்துக்கொண்டு எதிரிகளாக ஆக்கிக் கொள்வதைவிட, இந்தியாவிற்கு வெளியே வைத்துக் கொண்டு எதிரிகளாக ஆக்கிக்கொள்ளுவது இந்துக்களுக்கு மேலானதல்லவா? பாதுகாப்பான எல்லையைக் கொண்டிருப்பதைவிட, முஸ்லீம்களை பெரும் எண்ணிக்கையில் கொண்டிராத ஓர் இராணுவத்தைப் பெற்றிருப்பது சிறந்ததல்லவா என்று இந்நூலில் அம்பேத்கர் வினவினார்.

பாக்கிஸ்தான் பிரிவினையால் ஏற்படக்கூடிய தீயவிளைவுகளுக்கு மாற்றுவழியையும் இந்நூலில் அம்பேத்கர் குறிப்பிட்டுள்ளார். நீடித்த அமைதியை ஏற்படுத்தவும், ஒரு நாட்டில் உள்ள மக்கள் ஒரே மதத்தினராக இருந்திடவும், பாக்கிஸ்தான் பகுதிகளில் உள்ள இந்துக்கள் அனைவரும் இந்தியாவிற்கு வந்துவிட வேண்டும்; இந்துஸ்தானில் உள்ள இஸ்லாமியர் முற்றாகப் பாக்கிஸ்தானுக்குப் போய்விடவேண்டும்; இதுபோல் மக்களைப் பரிமாறிக் கொண்டு துருக்கியும் கிரீசும் பல்கேரியாவும் தமக்குள் உட்பகை காரணமாக நடைபெற்ற போர்களை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்தன என்று அம்பேத்கர் கூறியுள்ளார். எம்.என்.ராய் எழுதிய, "வரலாற்றில் இஸ்லாத்தின் தாக்கம்" (Historical Role of Islam) என்ற நூலைப் போலன்றி, அம்பேத்கர் எழுதிய இந்நூல் சீர்திருத்தங்களுக்கு இடந்தர மறுக்கும் முஸ்லீம்களின் பழமைவாதப் போக்கினைக் கண்டித்தது. முகம்மதியரிடம் மேலோங்கி நிற்கும் இயல்பு சனநாயக நெறிப்பட்டதன்று; அவர்களிடம் விஞ்சிநிற்கும் இயல்பு மத உணர்ச்சியேயாகும்; அவர்களுடைய அரசியலும் சமயவழிப்பட்டதாகவே விளங்குகிறது. முகம்மதியர்கள் சமூகச் சீர்திருத்தத்தை எதிர்க்கின்றனர். உலகம் முழுவதிலும் முற்போக்குச் சிந்தனையற்றவர்களாகவே அவர்கள் இருக்கிறார்கள். இஸ்லாமிய மதத்தை உலக மதமாக முகம்மதியர்கள் கருதுகின்றனர்; எல்லா

மக்களுக்கும் எல்லாக் காலங்களுக்கும் எல்லாச் சூழ்நிலைகளுக்கும் ஏற்ற மதம் இஸ்லாமே என்றும் எண்ணுகின்றனர். இஸ்லாம் கூறுகின்ற சகோதரத்துவம் என்பது உலக மானுட சகோதரத்துவம் அன்று; அது முஸ்லீம்கள், முஸ்லீம்களிடம் மட்டும் காட்டும் சகோதரத்துவமே ஆகும். முகம்மதியர் அல்லாதவர்களிடம் அவர்கள் வெறுப்பையும் பகையையும் மட்டுமே கொண்டிருக்கின்றனர். ஒரு நாடு முஸ்லீமால் ஆளப்படும்போது மட்டுமே முஸ்லீம்கள் அந்நாட்டிற்கு விசுவாசமாக இருக்கிறார்கள்; முகமதியர் அல்லாதவரால் ஆளப்படும் நாட்டை எதிரி நாடாகவே எண்ணுகின்றனர். ஆகவே இஸ்லாமிய மதம் ஒரு விசுவாசமான முஸ்லீம் இந்தியாவை அவருடைய தாய்நாடாகக் கொள்ளவோ, இந்துக்களை அவருடைய உறவினர்களாகக் கருதவோ என்றுமே இடந்தராது. மற்றவர்கள் பேரில் ஆதிக்கம் செலுத்தவேண்டும் என்கிற குணம் முஸ்லீம்களிடம் இயல்பாக அமைந்ததுபோல் இருக்கிறது. ஆகவே இந்துக்களின் பலவீனத்தைத் தமக்குச் சாதகமானதாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர்; போக்கிரித்தனமான வழிமுறைகளைப் பின்பற்றுகின்றனர் என்று இந்நூலில் அம்பேத்கர் கூறியுள்ளார்.

முகம்மதியரின் பிற்போக்குத் தனமான சிந்தனைப் போக்குகளை விளக்குவதற்காக உள்ளம் எரிச்சல் கொள்ளுகின்ற தன்மையிலும் மிகவும் உறுத்துகின்ற வகையிலும் அம்பேத்கர் எழுதியிருந்த சில பகுதிகளை, அவருடைய கெழுதகை நண்பர்கள் கூறியதன் பேரில், அந்நூலிலிருந்து நீக்கிவிட்டார் என அறியமுடிகிறது. அப்படிப்பட்ட சில பகுதிகள் நீக்கப்படாமலிருந்தால், இலண்டனில் எச்.ஜி.வெல்ஸ் (H.G.Wells) இஸ்லாமியரின் தாக்குதலுக்கு ஆளாக நேரிட்டதுபோல், 'பாக்கிஸ்தான் பற்றிய எண்ணங்கள்' என்ற நூலை எழுதியதற்காக அம்பேத்கரும் முகம்மதியரின் கடுஞ்சீற்றத்திற்கு இலக்காகியிருப்பார்.

முஸ்லீம்கள் புதிய வாழ்வை அமைத்துக் கொள்வதற்காக இப்போது விழிப்புற்றெழுந்துள்ளனர். மேலும் தாங்கள் ஒரு தேசிய இனம் என எண்ணிவிட்டனர். இதுவரை அவர்கள் தங்களை ஒரு சிறுபான்மையினர் என்றும், ஒரு வகுப்பினர் என்றும் கூறிவந்தனர். ஆனால் இப்பொழுது தங்களுக்கு உரிய தீர்வு எதுவெனக் கண்டறிந்து விட்டனர். இஸ்லாமியருக்கு ஒரு தனிநாடு என்ற ஈர்ப்புக்கு ஆட்படாத ஒரு முஸ்லீம் மடையனே ஆவான். பாக்கிஸ்தான் பிரிவினைக் கோட்பாடு முஸ்லீம்களுக்கு ஒரு புதிய தீர்வு; ஒரு புதிய நோக்கு; அவர்களுடைய எதிர்காலம் செம்பரிதியாய்ச் சுடர் விட்டு ஒளிர்கிறது என்று அந்நூலில் குறிப்பிட்டுள்ளார்.

அதன்பின் அந்நூலில் பாக்கிஸ்தான் அமைய வேண்டியதற்கான தத்துவார்த்தமான நியாயங்களையும், புதிய நாட்டைச் சமைத்திட வேண்டுமென்று முகமதியரிடையே பாய்ந்து பெருகிக் கொண்டிருக்கும் வேட்கையையும் அம்பேத்கர் விளக்கிவிட்டு, இந்துக்களை நோக்கிச் சில கேள்விகளைக் கேட்டுள்ளார். ஒன்றுபட்ட இந்தியாவே குறிக்கோள் என்று போராடுவதில் சாரமிருக்கிறதா? எந்த ஒன்றையும் கட்டாயப்படுத்துவது ஒரு தீர்வாக அமையாது. நீங்கள் பிரிவினைக்கு ஒத்துக்கொண்டால் அடிமைப் படுத்தப்படுவோமோ என்ற அச்சத்திலிருந்தும் உரிமைகள் பறிக்கப் படுமோ என்ற கவலையிலிருந்தும் இந்துக்களுக்கும் விடுதலை கிட்டும்; முகமதியர்களுக்கும் விடுதலை கிடைக்கும். துருக்கி, கிரீஸ் போன்ற நாடுகளின் வரலாற்றை நீங்கள் ஆழ்ந்து கற்றறியும்போது தான் இதற்கான புரிதலை நீங்கள் பெறமுடியும். அப்போதுதான் உங்களால் இந்தியாவை இந்துஸ்தான் என்றும், பாக்கிஸ்தான் என்றும் பிரிவினை செய்வதை ஏற்றுக்கொண்டு, நிகழப் போகும் பேரழிவுகளைத் தடுத்திட முடியும். நடுக்கடலில் கப்பல் உடைபடுவதைத் தடுத்திட நீங்கள் அதிகச் சுமையாகிவிட்ட பொருள்களையெல்லாம் கடலில் தூக்கி எறிந்துவிட்டுக் கப்பல் இலகுவாகப் போக வழிகாண வேண்டும். வலிமையான மய்ய அரசு அமைய வேண்டுமாயின் இந்தியாவை இரண்டாகப் பிரித்திட வேண்டும். இவ்வாறு பிரிக்காவிட்டால் அதன் விளைவுகள் மிகவும் கொடுமையானவைகளாக இருக்கும். வலிந்து திணிக்கப்படும் ஒற்றுமை முன்னேற்றத்திற்கு முட்டுக் கட்டையாக இருக்கும்; சுதந்திர வேட்கையின் நம்பிக்கைகள் சிதறுண்டு போகும். இந்தியா ஒன்றுபட்ட நாடாகவே இருக்கவேண்டும் என்று வற்புறுத்தினால், இந்திய நாட்டின் எதிர்காலக்கனவுகள் அனைத்துமே சீரழிந்து சிதைந்துபோகும். கட்டாயத்தால் ஒரே நாடாக வைக்கப்படும் இந்தியா உயிரோட்டமானதாகத் திகழாது. மேலும் இதில் தொடர்புடைய மூன்றாவது நாடான பிரிட்டனின் பிரச்சினையும் இதனால் தீராது. இருவேறுபட்ட நிலை எனும் வைரஸ் இந்தியாவைப் பற்றிப் படரும். அதனால் இந்தியா தன் வலிமையை இழந்து நலிவடையும். உயிருள்ள பிணமாக இறந்த பின்னும் புதைக்கப் படாத உடலாக இந்தியா காட்சி தரும். இத்தகைய இரட்டை நிலையில் தோன்றக் கூடிய இருண்ட காட்சிகளையும், இந்தியாவைப் பாக்கிஸ்தான் இந்துஸ்தான் என்று பிரிக்கப்படுவதால் ஏற்படக் கூடிய நன்மைகளையும் ஒப்பிட்டுப் பாருங்கள். பிரிவினை என்பது அவரவர் நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயப்பதற்கான டொமினியன் அந்தஸ்துடன் இருப்பதா அல்லது முழுச்

சுதந்திர நாடாக ஆவதா என்பதற்கான புதிய வழியைக் காட்டும்' என்று அம்பேத்கர் இறுதியாகக் கூறியுள்ளார்.

'பாக்கிஸ்தான் பற்றிய எண்ணங்கள்' என்ற சிறந்த நூலை வெளியிட்ட பின்னர், இராசகோபாலாச்சாரி பாக்கிஸ்தான் பிரிவினை குறித்துக் கூறியிருந்த கருத்துகளை அம்பேத்கர் பின்வருமாறு விமர்சனம் செய்தார்.' இராசகோபாலாச்சாரி அரசியலில் செய்யும் வீர சாகசச் செயல்கள் எளிதில் மறக்க முடியாதவை. திடீரென்று அவர் முஸ்லீம் லீக் கட்சியின் தீவிரத் தொண்டராகி விட்டார். இதுநாள் வரை அவருடைய உறவினர்களாக, நண்பர்களாக இருந்த காங்கிரசார் மீது தாக்குதல் தொடுத்துள்ளார். எதற்காக இந்தத் தாக்குதல்? முகமதியரின் நியாயமான சில கோரிக்கைகளை நிறைவேற்றத் தவறினார்கள் என்பதற்காக அன்று; ஆனால் முஸ்லீம்களின் அதிதீவிர கோரிக்கையான பாக்கிஸ்தான் பிரிவினையை ஏற்க முன்வரவில்லை என்பதற்காக இராசகோபாலாச் சாரி காங்கிரசைச் சாடுகிறார்'[90] என்று அம்பேத்கர் இராசகோபாலாச் சாரியின் செயலைக் குறை கூறினார். அம்பேத்கர் சைமன் குழுவிடம் அளித்த அறிக்கை அவருடைய நாட்டுப் பற்றினையும் அறிவாற்றலையும் புலப்படுத்துவதாகப் போற்றப்பட்டது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். அவ்வறிக்கையில் முஸ்லீம் களின் தனிவாக்காளர் தொகுதி வேண்டுமென்ற கோரிக்கையை அம்பேத்கர் மிகக் கடுமையாகத் தாக்கி அம்பலப்படுத்தி எள்ளி நகையாடி இருந்தார். ஆனால் அவரே இப்போது அந்த முஸ்லீம் மக்களின் தனிநாடு கோரிக்கையை நியாயப் படுத்தி ஆதரித்தார்.

'பாக்கிஸ்தான் பற்றிய எண்ணங்கள்' என்ற நூலில் அம்பேத்கர் ஒரு மருத்துவருக்குரிய அமைதிமிக்க அறிவாற்றலுடன் இந்தியா வின் பிணிகளை அணுகி ஆராய்ந்திருந்தார். தீவிரமான சிந்தனை யோட்டமுடைய ஒருவர் எழுதிய நூல் உணர்ச்சிக்கு இடம் கொடாததாக இருக்க முடியாது. இந்நூல் நடுநிலை வழுவாததாக, தகுதி சான்றதாக, அறிவு செறிந்ததாக, துணிவும் சிறப்பும் நிறைந்ததாகத் திகழ்ந்தது. ஈடு இணையற்றதாக இந்நூல் அமைந் திருந்தது. இந்நூலில் அம்பேத்கரின் பரந்த படிப்பறிவும் உயர்ந்த சிந்தனை ஆற்றலும் சீரிய முறையில் இணைந்து மிகச் சிறப்பான தன்மையில் வெளிப்பட்டிருந்தன. அதனால் இந்நூல் படிப்போரைக் கவர்ந்திழுத்தது; மேலும் படிக்க வேண்டுமென்ற ஆவலைத் தூண்டுவதாக அமைந்திருந்தது; சொற்செறிவும் விறுவிறுப்பும் கொண்டிலங்கியது; சிந்தனையைக் குத்திக் கிளறும் தன்மையில்

இருந்தது. அறிவியல் முறையில் பிரச்சாரம் செய்வது எப்படி என்பதற்கு இந்நூல் மிகச் சரியானதோர் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தது.

அம்பேத்கர் பர்க் (Burke) என்பவரைத் தன் அரசியல் முன்னோடியாகக் கொண்டிருந்தார். அதனால் பர்க்கின் அரசியல் சிந்தனைகள் அம்பேத்கரின் பேச்சுகளிலும் எழுத்துகளிலும் விரவியிருந்தன. 'இன்றைய அதிருப்திகளுக்கான காரணம் பற்றிய என் எண்ணங்கள்' என்ற நூலைப் பர்க் எழுதியுள்ளார். இங்கிலாந்திலிருந்து பல நூற்றுக்கணக்கான மைல்களுக்கு அப்பா லிருந்த அமெரிக்கக் குடியேற்ற நாடுகள் பிரிட்டிஷ் அரசுடன் சமரசம் செய்து கொள்வதென்று எடுத்த நிலைபாட்டைப் பர்க் மிகத் தீவிரமாக ஆதரித்துப் பேசினார். ஆனால் அவர் ஸ்காட்லாந் தின் சுயாட்சிக் கோரிக்கையை ஆதரிக்கவில்லை. அம்பேத்கர் இந்தியாவை இரண்டாகப் பிளப்பதை ஆதரித்தார். 'பிரஞ்சுப் புரட்சி பற்றிய எண்ணங்கள்' என்ற நூலில் பர்க் பிரஞ்சுப் புரட்சியைப் பற்றித் தவறாகக் கணித்து, பழித்துரைத்து, அதைக் கடுமையாகத் தாக்கியிருந்தார். அவர் செய்த இத்தவறு பளிச்செனப் புலப்பட்டது. அம்பேத்கர் எழுதிய 'பாக்கிஸ்தான் பற்றிய எண்ணங்கள்' என்ற நூலிலும் இதே போன்ற தவறு செய்யப்பட்டிருப்பதாக எதிர்காலத் தில் வரலாற்று ஆசிரியர்கள் கருதுவார்கள். ஏனெனில் பாக்கிஸ்தான் பிரிவினைக் கோரிக்கையை ஆதரித்த இராசகோபாலாச்சாரியை அம்பேத்கர் எந்தச் சொற்களால் குற்றஞ்சாட்டினாரோ, அதே சொற்களால் 'பாக்கிஸ்தான் பற்றிய எண்ணங்கள்' என்ற நூலை எழுதிய அம்பேத்கரையும் வரலாற்று ஆசிரியர்கள் குற்றஞ் சாட்டுதல் கூடும்.

அம்பேத்கரின் இந்த நூல் மிகக் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியது; இந்து அரசியல்வாதிகள் பலருடைய சிந்தனையைச் சிதறடித்தது. இந்தியாவின் அன்றைய அரசியல் சமூக வரலாற்றின் பிழிவே இந்நூல் என்றும் புகழப்பட்டது. பத்தாண்டுக் காலத்திற்கு மேல் இந்நூல் இந்திய அரசியலை உலுக்கியது. முகமதியர்கள் தங்களுடைய பிரிவினைக் கோரிக்கைக்குக் கிடைத்த வலிமையான ஆதரவே இந்நூல் என எண்ணிக் களித்தனர். எந்தப் பிரச்சினை யிலும் ஏற்பதுமில்லை-எதிர்ப்பதுமில்லை என்ற தவறான பேராசை கொண்ட தத்துவத்தில் வளர்த்தெடுக்கப்பட்ட காங்கிரசுக்காரர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து விழித்தனர். இராசகோபாலாச்சாரி யின் பாக்கிஸ்தான் பிரிவினைப் பிரச்சாரத்திற்கு அம்பேத்கரின்

நூல் வலிமையூட்டுவதாக அமைந்தது. பாக்கிஸ்தான் கோரிக்கை யைத் தேசியத்தின் பேராலும் அறிவார்ந்த வாதங்களை முன் வைத்தும் முழுமுச்சுடன் எதிர்த்த இந்து மகா சபைத் தலைவர்களில் சிலரை இந்நூல் குழப்பத்தில் ஆழ்த்தியது. ஆனால் அவர்களுடைய தலைவர் சாவர்க்கர் இந்திய நாட்டின் ஒற்றுமைக்காக அவருடைய ஆற்றல் முழுவதையும் திரட்டி இந்தியாவைக் கூறுபோடும் கோட்பாட்டை வன்மையாக எதிர்த்தார். ஆபத்தை எதிர்த்து நிற்காமல் ஓடிப் போவதோ போரிடுவதை இடையில் கைவிட்டு எதிரிக்கு இணங்கிப் போவதோ ஆண்மையாகாது; அறிவுடைமை யும் அன்று எனச் சாவர்க்கர் குறிப்பிட்டார். மேலும் ஆதிக்க எண்ணங் கொண்டவர்களை ஒருபோதும் அமைதிப்படுத்தவோ திருப்திப்படுத்தவோ முடியாது. பிரிவினை என்பது இந்திய நாட்டின் தெளிவான எதிரிகளின் கைகளை மேலும் வலுப்படுத்தி விடும் என்றும் இந்துக்களை எச்சரித்தார். பிரிவினை இந்திய நாட்டின் அமைதிக்கும், பாதுகாப்புக்கும், சுதந்திரத்திற்கும், வளர்ச் சிக்கும் நிலையான அச்சுறுத்தலாகிவிடும் என்று சாவர்க்கர் கூறினார்.

அம்பேத்கரின் நூலை மறுத்து, அந்நூலில் இருந்தது போன்ற வாதத்திறமையும், ஆழ்ந்த அறிவுடைமையும், துணிவும், மதிநுட்ப மும் கொண்டதான ஒரு மறுப்புநூலை முன்னணியில் இருந்த இந்துத் தலைவர்களில் எவரும் எழுதவில்லை என்பது இரங்கத்தக்க தோர் உண்மையாகும். பூனாவில் இந்து மகாசபைச் சிந்தனைப் போக்குடைய ஓர் எழுத்தாளரும், மற்றும் காங்கிரஸ் ஆதரவாளராக இருந்த பம்பாய் வார இதழ் ஒன்றின் ஆசிரியரும் அம்பேத்கரின் இந்நூலுக்கு விடையளித்து எழுதினார்கள். ஆனால் அவர்களுடைய நூல்கள் மராத்தியில் எழுதப்பட்டன. மேலும் அவை அம்பேத்கரின் நூலைப் பற்றிய விமர்சனக் குறிப்புகளாக மட்டுமே அமைந்திருந் தன. அதன்பின்னர் டாக்டர் இராசேந்திரப் பிரசாத் ஒரு நூலை வெளியிட்டார். அதில் முட்டாள்தனமான வாதங்களே நிறைந்திருந் தன. முட்டாளாவதற்காக யாரும் புத்தகத்தைப் படிப்பதில்லை. அம்பேத்கரின் அழுத்தமான வாதங்களால் மனங்கலங்கிப் போயி ருந்த முஞ்சே அம்பேத்கருக்கு மறுப்பு தெரிவிக்க வேண்டியதன் உடனடித் தேவையை வலியுறுத்தி என்.சி. கெல்கருக்கு ஒரு கடிதம் எழுதினார்.[91] கெல்கரிடம் நேர்மையான உணர்விருந்தது; அதே நேரத்தில் ஊசலாட்டமான அறிவுப் போக்கிருந்தது. அதனால் அம்பேத்கரின் நூலுக்கு மறுப்பு எழுதுவதற்குத் தகுதி படைத்த வராக அவர் இல்லை. இந்தியா பிளவுபடுவதை எதிர்ப்பதில் முன்னணியில் நின்ற இந்துமகா சபையினர்தான் மறுப்பு நூல்

எழுதும் கடமையைச் செய்திருக்க வேண்டும். ஆனால் உரிய காலத்தில் அத்தகைய நூல் ஏதும் இந்துமகா சபையினரால் வெளியிடப்படவில்லை.

தொழிலாளர்களின் தலைவராக அம்பேத்கர் செயல்பட்ட இக்கட்டத்தில் மதமாற்றப் பிரச்சினை பின்னுக்குத் தள்ளப்பட்டிருந்தது. அம்பேத்கர் அவருடைய நண்பர்களை அவ்வப்போது சந்திப்பதுண்டு. பம்பாய் பைகுல்லா பகுதியில் வாழ்ந்து வந்த செல்வி டிரஸ்லரின் இல்லத்திற்கும் அவர் சென்று வருவது வழக்கம். அப்பெண் அமெரிக்க சர்ச்சு மிஷின் ஒன்றைச் சேர்ந்தவர். இந்தியாவில் அமெரிக்க இந்திய (மிஷின்) சேவை சங்கம் ஒன்றையும் ஏற்படுத்தியிருந்தார். சில வேளைகளில் அம்பேத்கர் அப்பெண்ணுடன் உணவு கொள்ளுவதுணடு. அம்பேத்கரின் அறிவாற்றலால் அப்பெண் ஈர்க்கப்பட்டிருந்தார்; ஆதலால் அவரிடம் பெருமதிப்பு கொண்டிருந்தார். அம்பேத்கர் புதிய நூலையோ அல்லது கட்டுரையையோ வெளியிடும்போதெல்லாம் அதை அப்பெண்ணுக்கு அனுப்பி வைத்தார். அம்பேத்கர் தொழிலாளர் நல அமைச்சராக ஆன பின்னர் அப்பெண்ணின் இல்லத்திற்குச் செல்வது என்பது பெரிதும் குறைந்து விட்டது.

உன்னத நிலைக்கு உயர்ந்தார்

1941 ஆம் ஆண்டின் முதல் காலாண்டுப் பருவத்தில் தீண்டப்படாதவர்களை - குறிப்பாகத் தீரமுடன் போரிடுவதில் வல்லவர்கள் என்று புகழ் பெற்றிருந்த மகார்களை இராணுவத்தில் பணியில் சேர்ப்பதற்கான முயற்சியில் அம்பேத்கர் ஈடுபட்டிருந்தார். அம்பேத்கர் பம்பாய் கவர்னரைச் சந்தித்தார். இராணுவத்தில் சேருவதற்குரிய வகுப்பு, சேருவதற்குரியதல்லாத வகுப்பு என்ற பொருளற்ற ஒரு பாகுபாட்டின் அடிப்படையில் மகார்களைப் படையில் சேர்த்திட மறுக்கும் இராணுவக் கோட்பாட்டிற்கு எதிரான அவருடைய குறைகளைக் கூறினார். கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சிக் காலத்தில் மகார்கள் இராணுவத்தில் ஆற்றிய பங்கு சிறப்பானதாகும். அதன்பின்னர், அவர்கள் படையில் சேருவது தடை செய்யப்பட்டது. ஆனால் மீண்டும் முதல் உலகப் போரின்போது தனி மகார் படைப்பிரிவு ஒன்று உருவாக்கப்பட்டது. அப்போர் முடிந்தவுடன் நிதிப்பற்றாக் குறையைக் காரணங் காட்டி தனி மகார் படைப்பிரிவு கலைக்கப்பட்டது என்கிற விவரங்களை அம்பேத்கர் கவர்னரிடம் எடுத்துரைத்தார். ஆகவே இராணுவத்தில் உடனடியாகத்தனிமகார் படைப்பிரிவை ஏற்படுத்து மாறு அரசுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

அதன்பின் அரசு தனி மகார் படைப்பிரிவை ஏற்படுத்திட முடிவு செய்தது. உங்களுடைய நலனையும் நாட்டின் நலனையும் கருத்தில் கொண்டு இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று மகார்களுக்கு அவர் அழைப்பு விடுத்தார். மிக விரைவிலேயே தனி மகார் படைப்பிரிவு உருவாக்கப்பட்டது. மகார் வகுப்பிலிருந்து பலர் அப்படைப் பிரிவில் சேர்ந்தனர். அவர்களில் பலர் இராணுவத்திற்கு ஆட்களைத் தேர்வு செய்யும் அதிகாரிகளாக அமர்த்தப்பட்டனர். அதிகாரிகளாக அமர்த்தப்பட்டவர்களில் அம்பேத்கரின் தளபதிகளில் ஒருவரான மதகெபுவா என்று அழைக்கப்பட்ட ஜதாவ் ஒருவர் ஆவார். இவர் அமைப்பைக் கட்டும் திறன் மிக்கவர். இந்துக்கள் போர்த் தொழில் புரியும் இனமாக மீண்டும் உருவெடுக்க வேண்டும் என்ற தணியாத வேட்கை கொண்டிருந்த சாவர்க்கர், அம்பேத்கரின் சிறந்த வழி காட்டுதலின்கீழ் மகார் சகோதரர்கள் அவர்களுடைய போர்த்திறனில் சிறப்புற்று விளங்குவார்கள் என்றும் அவர்கள் இராணுவத்தில் சேர்ந்துள்ளமை இந்தியாவின் ஒற்றுமைக்கு உதவும் என்றும் கூறினார்.

1941 ஜூலை மாதத்தின் கடைசி வாரத்தில் வைசிராய் இந்தியப் பிரதிநிதிகளாக எண்மரைப் புதியதாகச் சேர்த்து அவருடைய நிர்வாகக் கவுன்சிலை விரிவுபடுத்தினார். பாதுகாப்பு ஆலோசனைக் குழு என்ற ஒன்றையும் ஏற்படுத்தினார். இந்தப் பாதுகாப்பு ஆலோசனைக் குழுவில் அம்பேத்கர் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். ஜம்னாதாஸ் மேத்தா, ராம்ராவ் தேஷ்முக், எம்.சி.இராஜா மற்றும் புகழ் பெற்ற இந்தியத் தலைவர்களும், சிற்றரசர்களும் இதில் உறுப்பினர்களாக இடம் பெற்றனர். சீக்கியர்களும், தீண்டப்படாத வகுப்பினரும் தங்களுடைய பிரதிநிதிகள் வைசிராயின் நிர்வாகக் கவுன்சிலில் இடம் பெறவில்லை என்பது குறித்து அவர்களுடைய எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

தீண்டப்படாதவர்களின் நியாயமான கோரிக்கை ஏற்கப்படாததற்கு அம்பேத்கர் தன் எதிர்ப்பைத் தெரிவித்தார். வைசிராயின் நிர்வாகக் கவுன்சிலில் தீண்டப்படாத வகுப்பு மக்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்படாமை அவர்களுக்கு இழைக்கப்பட்ட தீங்காகும்; நம்பிக்கைத் துரோகமாகும் என்று இந்தியாவிற்கான செயலாளராக இருந்த அமெரிக்கு அம்பேத்கர் தந்தி அனுப்பினார். சாவர்க்கர் அம்பேத்கரின் கோரிக்கையை ஆதரித்தார். அம்பேத்கரை நிர்வாகக் கவுன்சிலில் சேர்க்க வேண்டுமென்று கோரி வைசிராயிக்குச் சாவர்க்கர் தந்தி அனுப்பினார்.

ஹரிகோனில் நடைபெற்ற மகார்களின் மாநாட்டில் வட்டன் நிலங்களின் மீது விதிக்கப்பட்ட கூடுதல் வரியை நீக்குமாறு விடுத்த வேண்டுகோளுக்கு அரசு செவி சாய்க்க மறுத்துவிட்டதால், 1941 ஆகஸ்டு மாத நடுவில் சின்னாரில் மகார்கள் மற்றொரு மாநாட்டைக் கூட்டினார்கள். அம்பேத்கர் அம்மாநாட்டில் உரையாற்றினார். அரசுக்குக் கோரிக்கை அறிக்கை ஒன்றை அனுப்பியிருப்பதாகக் கூறினார். அந்த அறிக்கையில், வட்டன் மானிய நிலம் பெற்றிருந்த தேஷ் பாண்டேக்களும், தேஷ்முக்குகளும் எவ்வாறு கட்டாய ஊழியம் செய்வதிலிருந்து விடுவிக்கப்பட்டனர், அவ்வாறு விடுவிக்கப்பட்ட பிறகு இன்று வரையிலும் அவர்கள் வட்டன் நிலங்களை வைத்துக் கொண்டிருப்பது ஏன்? என்று அரசிடம் கேட்டிருப்பதாகக் கூறினார். அரசின் பிடிவாதமான போக்கினால் சீற்றங்கொண்ட மகார்கள், தீவிர எதிர் நடவடிக்கையாக வரிகொடா இயக்கத்தை மேற்கொள்வதென இம்மாநாட்டில் முடிவு செய்தனர். ஆகவே வட்டன் நிலத்தின் மீதான கூடுதல் வரிவிதிப்பை அரசு கைவிடும் வரையில் பாதிக்கப்பட்ட மகார்கள் வரி செலுத்த வேண்டாம் என்று இம்மாநாடு கேட்டுக் கொண்டது.

அம்பேத்கர் பம்பாய் திரும்பியதும் மறுநாள் காலையில் அரசு மாளிகையில் கவர்னர் சர். லாரன்ஸ் ரோஜர் லும்லி அவர்களைச் சந்தித்தார். அம்பேத்கர் சின்னார் மாநாட்டில் ஆற்றிய உரை சிறந்த பத்திரிக்கை நிருபராக விளங்கிய அய்.ஏ. எசிகெயில் மூலமாக அன்று மாலைப் பதிப்புச் செய்தித்தாள்களிலேயே வெளியாயிற்று. எசிகெயில் பத்திரிக்கை உலகில் அம்பேத்கரின் ஆதரவாளராக இருந்தவர்; அவருடைய இயக்கத்தைப் பல ஆண்டுகளாகப் பத்திரிக்கை உலகில் ஆதரித்தவர். அச்சமயம் பம்பாய்க்கு வந்திருந்த கவர்னர் ஜெனரல் லின்லித்கோ பிரபு அன்றைய செய்தித்தாளில் அம்பேத்கரின் உரையைப் படிக்க நேர்ந்தது. தீண்டப்படாத வகுப்பு மக்கள் எதிர்முகாமிற்குச் செல்லும் அளவிற்கு அவர்களை அரசிடமிருந்து அந்நியப்படுத்தியதற்காகக் கவர்னரை அவர் கடிந்து கொண்டார். அதன்பின் சில நாள்களில் வட்டன் நிலங்களின் பேரிலான அநீதியான கூடுதல் வரிவிதிப்பு ஆணையைப் பம்பாய் அரசு நீக்கியது. அம்பேத்கர் வெற்றி கண்டார்.

இரண்டு வாரங்கள் கழித்து அம்பேத்கர் சில கூட்டங்களில் பேசினார். அக்கூட்டங்களில் இராணுவத்தில் மகார்கள் சேர வேண்டியதன் தேவையை வலியுறுத்தினார். பம்பாயில் அது போன்றதொரு கூட்டத்தில் அம்பேத்கர் பேசியபோது தீண்டப்படாதவர்களுக்கு வைசிராயின் நிர்வாகக் கவுன்சிலில் இடம் கிடைக்கவில்லை என்பதற்காக அரசுக்கு உதவி செய்யக்கூடாது என்று சிலர் நினைக்கிறார்கள்; அவ்வாறு கருதுபவர்கள் தற்போதுள்ள சூழ்நிலையின் முக்கியத்துவத்தை முறையாகக் கணிக்கத் தவறிவிட்டவர்கள் என்பதை வருத்தமுடன் தெரிவித்துக் கொள்கிறேன் என்று கூறினார். இட்லரின் நாஜிப் படைகள் இந்தியாவைக் கைப்பற்றிக் கொள்ளுமானால் அதன்பிறகு நிர்வாகக் கவுன்சிலை விரிவுபடுத்த வேண்டுமென்று போராட வேண்டிய நிலையே இருக்காது. ஆளுகின்ற எஜமானர்களை மாற்றுவதற்கான எந்தவொரு முயற்சியையும் நான் ஆதரிக்க மாட்டேன். அப்படிச் செய்தால் சுயாட்சி உரிமை கோரிப் போராட்டத்தை மீண்டும் அதன் தொடக்கத்திலிருந்து ஆரம்பிக்க வேண்டியிருக்குமென்று தன் எழுச்சிமிக்க உரையில் குறிப்பிட்டார். அப்பேச்சின் இறுதியில் மகார் இளைஞர்கள் அவர்களுடைய படிப்பை நிறுத்திவிட்டு இராணுவத்தில் சேர்ந்து சிறந்த வீர மரபினர் என்ற தம் வகுப்பின் புகழை நிலைநாட்டிட முன்வருமாறு அழைப்பு விடுத்தார்.

அம்பேத்கர் தீண்டப்படாதவர்களை இராணுவத்தில் சேரச் செய்யும் செயல்களில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். 1941 டிசம்பர் முதல்கிழமையில் நடைபெற்ற தேசியப் பாதுகாப்புக் குழுவின் இரண்டாவது கூட்டத்தில் கலந்துகொண்டார்; 1942 பிப்ரவரி மாதம் நடைபெற்ற மூன்றாவது கூட்டத்திலும் அம்பேத்கர் பங்கேற்றார்.

அச்சமயம் அம்பேத்கர் 'இந்துக்கள் நமக்குச் செய்தது என்ன?' (What the Hindus have done to us?) என்ற நூலை எழுதிக் கொண்டிருந்தார். இந்நூல் 'காங்கிரசும் காந்தியும் தீண்டப்படாதாருக்குச் செய்தது என்ன?' என்ற பெயரில் பின்னாளில் வெளியிடப்பட்டது. இந்நூலை 1942 பிப்பிரவரி 13ஆம் நாள் எழுதத் தொடங்கியதாகத் தெரிகிறது. ஓர் அமெரிக்க நிறுவனம் இந்நூலை வெளியிடுவது தொடர்பாக அம்பேத்கரிடம் பேசியது. வைசிராயின் நிர்வாகக் கவுன்சிலைத் திருத்தி அமைத்து, அதன் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கத் திட்டமிட்டிருப்பதாக அச்சமயம் செய்திகள் உலவின.

அரசியலில் ஏற்பட்டிருந்த முட்டுக்கட்டை தீர்க்கப்படாமல் அப்படியே நீடித்தது. காங்கிரசுத் தலைவர்கள் சிறையிலிருந்தனர். அவர்களுடைய ஒப்பற்ற மாபெரும் தலைவர் காந்தி வெளியிலிருந்தார். இந்து, முஸ்லீம் ஒற்றுமைக்காகக் காந்தி சாகும்வரையிலான உண்ணாநோன்பினைத் தொடங்குவார் என்று சில அரசியல்வாதிகள் கருதினார்கள். ஏனெனில் முஸ்லீம்கள் பாக்கிஸ்தான் கோரிக் கலவரங்கள் செய்யத் தொடங்கிவிட்டிருந்தனர். மனமாற்றம் ஒன்றே பதற்ற நிலையைத் தணிக்கும் என்று ஜின்னா சொன்னார். இந்து-முஸ்லீம் ஒற்றுமையின்றி நாட்டிற்கு விடுதலை வராது என்று கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக மக்களிடம் தான் கூறி வந்ததானது, வரலாற்றில் செய்த பிழை என்பதையும் அம்முழக்கம் பயன்படாது என்பதையும் காந்தி தெளிவாக உணர்ந்தார். முஸ்லீம்களின் ஆதரவு இல்லாமல் 'செய் அல்லது செத்து மடி' என்று போராட வேண்டிய ஒரு கட்டத்தில் காந்தி இருந்தார்.

II

1942 பிப்ரவரி மாத மத்தியில் பம்பாய் வக்லி அரங்கில் இளவேனிற் பருவத்தொடர்ச்சொற்பொழிவுகள் நடந்தன. அம்பேத்கரின் 'பாக்கிஸ்தான் பற்றிய எண்ணங்கள்' என்ற நூல் பற்றி விவாதிக்க மூன்று நாள்கள் ஒதுக்கப்பட்டன. இந்நூல் திறனாய்வு

செய்யப்பட்டபோது அம்பேத்கரும் அக்கூட்டத்திற்கு வந்திருந்தார். அக்கூட்டத்திற்கு ஆச்சார்யா எம்.வி. தண்டே தலைமையேற்றிருந்தார்; தண்டே அம்பேத்கரின் நண்பர்; இணைந்து செயல்படும் தோழர்; பம்பாய் மாகாணத்தின் சிறந்த கல்வியாளர். நூல் பற்றி நடைபெற்ற திறனாய்விற்கு விடையளிக்குமாறு தண்டே அம்பேத்கரை வேண்டினார். 'பாக்கிஸ்தான் விவாதிக்கப்பட வேண்டிய ஒரு பிரச்சினையே அல்ல என்று நினைப்பவர்களுக்கு நான் பதில் சொல்லப் போவதில்லை; அதில் என் முயற்சியை வீணாக்க விரும்பவில்லை. பாக்கிஸ்தான் கோரிக்கை நியாயமற்றது என்று எண்ணுபவர்களுக்குப் பாக்கிஸ்தான் பிரிந்து தனிநாடாக அமையப் போகிறது என்கிற நிலைமை நினைக்கவே துன்பமானதாக இருக்கும். உண்மை வரலாற்றை மறந்துவிடுமாறு மக்களிடம் சிலர் சொல்கிறார்கள்; வரலாற்றை மறந்தவர்களால் வரலாற்றை உருவாக்க முடியாது. இந்திய இராணுவத்தில் முகமதியர் பெரும் எண்ணிக்கையில் இருப்பதைக் குறைத்து இராணுவம் நம்பிக்கைக்குரியதாக ஆக்கப்பட வேண்டுமானால் பகைச் சக்தியாகக் கருதப்படும் முஸ்லீம்கள் பிரிந்து சென்றிட அனுமதிப்பதே அறிவுடைமையாகும். நம்நாட்டை நம்மால் பாதுகாத்துக்கொள்ள முடியும். பாக்கிஸ்தான் தன்னுடைய முஸ்லீம் பேரரசை இந்தியாவின் மீதும் படரச் செய்யும் என்ற தவறான எண்ணத்திற்கு இடந்தராதீர்கள். இந்துக்களால் அவர்களைப் புறமுதுகிட்டு ஓடச் செய்ய முடியும். சில செய்திகளில் நான் சாதி இந்துக்களுடன் மோத வேண்டிய நிலைமைகள் இருக்கின்றன என்பது உண்மைதான். ஆனால் நம்முடைய தாய்நாட்டிற்காக என் உயிரையும் தியாகம் செய்யத் தயாராக இருக்கிறேன் என்று உங்கள் முன்னிலையில் சூளுரை செய்கிறேன்' என்று அம்பேத்கர் முழங்கினார்.[92] அரங்கமே அதிரும் வண்ணம் மக்கள் அவருடைய பேச்சைக் கரவொலியெழுப்பி வரவேற்றனர்.

இச்சமயத்தில் சர். ஸ்டாஃபோர்டு கிரிப்ஸ் தன்னுடைய இரஷ்யப் பயணத்தை வெற்றிகரமாக முடித்துவிட்டு இங்கிலாந்திற்குத் திரும்பியிருந்தார். இந்திய அரசியலில் ஏற்பட்டிருந்த முட்டுக்கட்டையைத் தீர்க்கும் பொறுப்பு கிரிப்சிடம் அளிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. சர். ஸ்டாஃபோர்டு கிரிப்ஸ் இந்தியாவிற்கு வரவிருந்த வேளையில் அம்பேத்கர் அவருடைய திட்டத்தை வெளியிட்டார். சீனாவின் தலைவரான சியாங்கே ஷேக் உண்மையான அரசியல் அதிகாரத்தை இந்தியாவிற்கு உடனடியாக பிரிட்டன் வழங்க வேண்டும் என்று கருத்து கூறியிருப்பதுபற்றி அம்பேத்கர்

குறிப்பிட்டு, அரசியல் அதிகாரம் அளிப்பதில் ஏற்பட்டுள்ள சிக்கலைத் தீர்ப்பதற்கான வழியைச் சியாங்கே ஷேக் கூறவில்லை என்பதனைச் சுட்டிக் காட்டினார். உலகப் போர் முடிந்து அமைதி ஏற்படும் நாளிலிருந்து மூன்றாண்டுகளுக்குள் இந்தியாவை டொமினியன் அந்தஸ்துடைய நாடாக உயர்த்துவதாகப் பிரிட்டிஷ் அரசு உறுதியளிக்க வேண்டும். போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தான நாளிலிருந்து இந்தியாவிலுள்ள அரசியல் கட்சிகள் தமக்குள் ஓர் அரசியல் தீர்வை எட்ட முடியாவிட்டால், இந்தப் பிரச்சினையை அனைத்துலக நடுவர் மன்றத் தீர்ப்புக்கு விட வேண்டும். இந்தியாவிற்கான டொமினியன் அரசியல் சட்டத்தின் ஒரு பகுதியைச் செயல்படுத்துகிற வகையில் இவ்வாறு செய்யப்படும் என்ற உறுதி மொழியைப் பிரிட்டன் அளிக்கவேண்டும். இதுவே இந்திய அரசியல் நெருக்கடியைத் தீர்க்க அம்பேத்கர் முன்மொழிந்த திட்டமாகும்.

இந்தியத் தேசிய அரசில் ஜின்னா அய்ம்பது விழுக்காடு பிரதிநிதித்துவம் கேட்டிருப்பது நேர்மையற்றதாகும் என்று அம்பேத்கர் கூறினார். ஜின்னாவின் இக்கோரிக்கையை ஏற்க மறுத்ததற்காக லின் லித்கோ பிரபுவைப் பாராட்டினார். ஜின்னாவின் கோரிக்கையின்படி அய்ம்பது விழுக்காடு இடங்களை அளிப்பதாயின், தேசிய அரசு என ஒன்றை அமைக்க வேண்டியதில்லை என்றார்.

அம்பேத்கரின் இத்திட்டத்தைக் குறைகூறியவர்கள், வரலாற்றைக் கற்றுணர்ந்த-அரசியல் சட்டத்தில் வல்லுநரான அம்பேத்கர், அனைத்துலக நடுவர் மன்றத்தின் முடிவை முஸ்லீம் லீக் ஏற்கும் என்று எதிர்பார்ப்பது அவர்களுக்கு வியப்பளிப்பதாகச் சொன்னார்கள்.

இதற்கிடையில் உலகப் போரில் பிரிட்டன் சிங்கப்பூரை ஜப்பானிடம் இழந்தது. பிரிட்டிஷ் பேரரசில் என்றும் மறையாத சூரியன் மறையத் தொடங்கியது; பேரரசு ஆட்டங்காணத் தொடங்கியது. உலகப் போரில் கீழ்த்திசை நாடுகளின் போர் முனையில் ஏற்பட்ட தோல்விகளின் விளைவாகவும் அமெரிக்காவும் சீனாவும் கொடுத்த நெருக்குதலாலும், இந்திய அரசியல் நெருக்கடியை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதெனப் பிரிட்டிஷ் அரசு தீர்மானித்தது. இந்திய அரசியல் சிக்கலைத் தீர்ப்பதற்கான ஒரு திட்டத்துடன் சர். ஸ்டாஃபோர்டு கிரிப்ஸ் 1942 மார்ச்சு மாதம் மூன்றாவது கிழமையில் இந்தியாவிற்கு விரைந்து வந்தார். காங்கிரசு, முஸ்லீம் லீக், இந்துமகாசபை, சீக்கியர் அமைப்பு,

சிற்றரசர்களின் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகளிடம் அவருடைய திட்டத்தை முன்வைத்தார். 1942 மார்ச்சு 30ஆம் நாள் அம்பேத்கர், எம்.ஜி. இராசாவுடன் சென்று கிரிப்சைச் சந்தித்தார். போர் நிறுத்தம் ஏற்பட்டவுடனேயே ஓர் அரசியல் அமைப்புச் சபையைக் கூட்ட வேண்டும் என்பதே கிரிப்சின் திட்டமாகும். கிரிப்ஸ் திட்டத்தின்படி, இந்திய அரசியல் அமைப்பு அவை, இந்தியச் சிற்றரசுகளின் ஒத்துழைப்புடன் அரசியல் அமைப்புச் சட்டத்தை வடித்திட வேண்டும். ஆனால் இந்திய யூனியனில் சேருவது அல்லது சேராமல் இருப்பதற்கான உரிமை சிற்றரசுகளுக்கு வழங்கப்பட்டிருந்தது. அரசியல் அமைப்பு அவை பிரிட்டிஷ் அரசுடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும் என்றும் கிரிப்சின் திட்டத்தில் கூறப்பட்டிருந்தது.

கிரிப்சின் திட்டத்தைக் குறித்து 'இது ஒரு பின் தேதியிடப்பட்ட காசோலை' என்று காந்தி கூறினார். இத்திட்டம் முழுவதையுமே புறக்கணிப்பதாகச் சாவர்க்கர் கூறினார்; இந்தியாவைச் சிறுசிறுநாடுகளாகக் கூறுபோட வேண்டும் என்பதே கிரிப்ஸ் திட்டத்தின் நோக்கம் என்றார். மிதவாதிகளோ இத்திட்டம் சுயஆட்சிக் கோட்பாட்டைக் கேலிக்குரியதாக்கும் ஒரு போலி என்றனர். பாக்கிஸ்தான் கோரிக்கையைப் பற்றி உறுதியாகவும் அய்யத்திற்கு இடமில்லாத வகையிலும் இத்திட்டத்தில் எதுவும் சொல்லப்படாததால் இதை ஏற்க முடியாது என்று முஸ்லீம் லீக் கூறியது. ஆயினும் இத்திட்டத்தின் உள்ளடக்கம் பிரிவினைக்கு ஆதரவாக இருப்பதாகக் கருதியது. இந்தியா பல சிறிய நாடுகளாகப் பிரிந்து போகக் கூடிய நிலையைப் பற்றிக் கவலைப்படுவதைவிட ஆட்சி அதிகாரம் விரைவில் தம் கைக்கு வருவதில்தான் காங்கிரசுத் தலைவர்கள் குறியாக இருந்தனர்; ஆதலால் பிரிவினை என்ற கசப்பான தீர்வையும் ஏற்றுத் தீர வேண்டியவராயினர்; ஆயினும் பாதுகாப்புத்துறை பெருஞ் செலவினதாக ஆகிவிடுமே என மிகவும் கவலை அடைந்தனர்.

மற்ற மாகாணங்களின் தீண்டப்படாத வகுப்புத் தலைவர்களுடன் விரிவாகக் கலந்து பேசிய பின்னர் அம்பேத்கரும் கிரிப்ஸ் திட்டத்தை நிராகரித்தார். கிரிப்சின் திட்டத்தால் தீண்டப்படாதவர்களுக்குப் பெருங்கேடு விளையும் என்று அவ்வகுப்புத் தலைவர்கள் கருதினார்கள். இந்து ஆட்சியின் கீழ்த்தீண்டப்படாதவர்களை அடிமைப்படுத்தி முற்காலத்தில் அவர்கள்மீது இழைக்கப்பட்ட கொடுமைகளை மீண்டும் தொடர வழிவகுக்கும் என்று அஞ்சுவ

தாகக் கூறினார்கள். தீண்டப்படாதவர்கள் ஒப்புதல் அளிக்காத ஓர் அரசியல் சட்டத்தை அவர்கள் மீது திணித்தால் அதை ஒரு நம்பிக்கைத் துரோகச் செயலாகவே தீண்டப்படாதவர்கள் கருதுவார்கள் என்பதைப் பிரிட்டிஷ் பேரரசிடம் தெரிவிக்குமாறு கிரிப்ஸிடம் கேட்டுக்கொண்டனர்.

அம்பேத்கர் வெளியிட்ட மற்றொரு அறிக்கையில் பிரிட்டிஷ் அரசானது தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக மற்ற பிரிவினர்களின் கோரிக்கையை நிறைவு செய்திட வேண்டித் தீண்டப்படாதவர்களின் நலன்களைப் பலியிடும் போக்கினையே தொடர்ந்து கடைப்பிடித்து வருவதாகக் குறை கூறினார். கிரிப்ஸ் திட்டம் பாக்கிஸ்தானை உருவாக்கிக் கொள்வதற்கான உரிமையை முஸ்லீம் லீகிற்கு உறுதியாகவே வழங்கி இருக்கிறது என்று அம்பேத்கர் குறிப்பிட்டார். 'கிரிப்ஸ் அளித்த திட்டம் தன்னிலை தடுமாறிய தன்மையுடையது, கொள்கை என்பதை அறவே புறக்கணித்த ஒன்று. இது ஒரு நம்பிக்கை மோசடியானதாகும்; ஏற்கனவே கொண்டிருந்த கொள்கைக்கு நேர் எதிரானதாகும்' என்றார்.

III

தீண்டப்படாத வகுப்பினர் பிரச்சினை தொடர்பாகப் பிரிட்டன் மேற்கொண்ட புதிய கொள்கை, அண்மைக் காலத்தில் தொழிலாளர்களின் தலைவராக உருவாகியிருந்த அம்பேத்கரின் செயல்போக்கில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியது. அம்பேத்கர் கிரிப்ஸைப் பேட்டி கண்டபோது, 'நீங்கள் தொழிலாளர்களின் பிரதிநிதியாக வந்திருக்கிறீர்களா? அல்லது தீண்டப்படாதவர்களின் சார்பாக வந்திருக்கிறீர்களா?' என்று கிரிப்ஸ் அம்பேத்கரிடம் வினவினார். அவருடைய கட்சியின் எண்ணிக்கை பலம் பற்றியும் கேட்டார். இக்கேள்வி அவருடைய செயல்போக்கின் திசையைத் திருப்பியது. கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாகத் தீண்டப்படாதவர்களின் நலன்களுக்காகப் போராடி வந்ததுபோலவே மீண்டும் தீண்டப்படாதவர்களின் தலைமைப் பொறுப்பை ஏற்றுச் செயல்படுவதே சாலச் சிறந்தது என்று அம்பேத்கர் எண்ணினார். ஆகவே மார்ச்சு 30, 31 ஆகிய நாள்களில் தில்லியிலிருந்து தீண்டப்படாத வகுப்புத் தலைவர்களை அழைத்து ஒரு மாநாடு நடத்தினார்; கிரிப்ஸ் திட்டம் குறித்து அவர்களோடு கலந்தாய்ந்தார். அதுவரையில் அம்பேத்கருக்கு எதிர்ப்பாக இருந்து வந்த எம்.சி. இராஜா இப்பொழுது அம்பேத்கருடன் இணக்கமான உறவுகொண்டார். இதற்கு முன்பே ராஜ்போஜ் அம்பேத்கருடன் இணைந்து விட்டார். பத்தாண்டுகளுக்குப் பிறகு

இப்பொழுது மீண்டும் நாகபுரியில் 1942 சூலை மாதத்தில் அனைத்திந்தியத் தீண்டப்படாத வகுப்புகளின் மாநாட்டை நடத்துவது என்று முடிவெடுக்கப்பட்டது. தெளிவான கொள்கைகளும் நோக்கங்களும் கொண்ட ஓர் அனைத்திந்திய அமைப்பை, எல்லா மாகாணங்களிலும் உள்ள அனைத்துத் தீண்டப்படாத சக்திகளின் ஒத்துழைப்புடன் ஏற்படுத்த வேண்டும் என்பதே நாகபுரி மாநாட்டைக் கூட்டுவதன் நோக்கமாகும்.

அம்பேத்கரின் அய்ம்பதாவது பிறந்தநாள் 1942 ஏப்பிரல் 14ஆம் நாள் வந்தது. சுதந்திரத் தொழிற் கட்சியும் பம்பாயிலும் அதன் புறநகர்ப் பகுதிகளிலுமிருந்த நாற்பத்தைந்து பொதுஅமைப்புகளும், அம்பேத்கரின் பொன்விழாவை ஒன்பது நாள்களுக்குக் கொண்டாடத் திட்டமிட்டன. கொடியேற்றுதல், ஊர்வலங்கள் நடத்துதல், பொதுக்கூட்டங்கள் நடத்துதல் ஆகியவற்றிற்கு ஏற்பாடுகள் செய்தன. ஏப்பிரல் 12ஆம் நாள் பம்பாய் நகரின் எல்லா வட்டங்களிலும் புறநகர்ப் பகுதிகளிலும் பொன்விழாக் கொண்டாட்டங்கள் தொடங்கின.

பூனாவின் முக்கிய வீதிகளிலும் கண்டோன்மெண்ட் பகுதிகளிலும் அம்பேத்கரின் பிறந்தநாள் ஊர்வலங்கள் நடத்தப்பட்டன. ஷனிவார்வடாவில் பேராசிரியர் எஸ்.எம். மத்தே தலைமையில் பிறந்தநாள் விழாப் பொதுக்கூட்டம் நடந்தது. அக்கூட்டத்தில் எம்.சி. இராஜா, பி.என். ராஜ்போஜ் ஆகியோர் உரையாற்றினர். அக்கூட்டத்தில் பேசிய அனைவரும் தீண்டப்படாதவர்களின் மேம்பாட்டிற்காக அம்பேத்கர் ஆற்றிய அருந்தொண்டினைப் போற்றிப் புகழ்ந்தனர். அம்பேத்கர் நீண்ட ஆயுளும் நிறை மகிழ்ச்சியும் பெற்று வாழவேண்டுமென்று அக்கூட்டத்தில் வாழ்த்தினர். பூனா நகராட்சிக் கூட்ட மண்டபத்தில் நகராட்சியின் தலைவர் கன்பட்ராவ் நால்வடே தலைமையில் மாபெரும் பொன்விழாக் கூட்டம் நடந்தது. அதில் அம்பேத்கருக்குப் புகழ்மாலைகள் சூட்டப்பட்டன. அக்கூட்டத்தில் டாக்டர் மொகிலே, போபட்லால் ஷா, சவான், ஆர்.ஆர். போலே ஆகியோர் அம்பேத்கரின் திறமைகளையும் சாதனைகளையும் மிகவும் பாராட்டிப் பேசினார்கள். அம்பேத்கரின் பிறந்தநாள் கொண்டாட்டங்களின் தொடர்ச்சியாக மற்றொரு முக்கிய விழா பூனாவில் நடைபெற்றது. பூனாவின் மாவட்ட (உள்ளாட்சி) மன்றத் தலைவரான ஆட்டே, மக்களின் உணர்ச்சிப் பெருக்கிற்கும் மகிழ்ச்சி வெள்ளத்திற்குமிடையே அம்பேத்கரின் உருவப்படத்தைத் திறந்து வைத்தார். ‘மாவட்ட

மன்றம் அம்பேத்கரின் உருவப் படத்தைத் திறந்து வைப்பதில் பெருமை அடைகிறது; அம்பேத்கர் தீண்டப்படாத வகுப்பு மக்களின் ஒப்பற்ற தலைவராக மட்டும் இல்லை, இந்தியாவின் தலைசிறந்த தலைவர்களில் ஒருவராகவும் இருக்கிறார்' என்று ஆட்டே தன் பேச்சில் கூறினார். அம்பேத்கர் தன்னுடைய தன்னலமற்ற தொண்டின் மூலம் இந்த நாட்டு மக்களின் இதயங்களில் இடம் பெற்று விட்டார் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். அக்கூட்டத்தில் கேசவராவ் ஜதே, பாபுசாகிப் குப்தே ஆகியோரும் அம்பேத்கரின் சிறப்புகளைப் பாராட்டிப் பேசினார்கள்.

ஏப்பிரல் 19ஆம் நாள் காலை அம்பேத்கர் 'ரோகிதாசு தருண் சுதாரக் சங்கத்தின்' மகளிர் பிரிவைத் தொடங்கி வைத்தார். கல்யாணில் ஒரு திரைப்படக் கொட்டகையில் அத் தொடக்க விழா நடைபெற்றது. அந்நிகழ்ச்சியில் அம்பேத்கர் உரையாற்றிய போது, 'தீண்டப்படாத வகுப்பு இளைஞர்களே! இந்து நிறுவனங் களிடமிருந்தோ அல்லது செல்வர்களிடமிருந்தோ உதவிகளைப் பெறாதீர்கள். அவ்வாறு உதவி பெற்றால் உங்களுடைய சுதந்திர உணர்வை நீங்கள் தியாகம் செய்ய நேரிடும்' என்று அறிவுறுத்தி னார். எடுத்துக் கொண்ட இலட்சியத்தில் எவ்வாறு குறியாய் இருப்பது என்பதில், புராணக் கதையில் வரும் கச்சாவைப் (Kacha) பின்பற்றுங்கள் என்று அவர்களிடம் கேட்டுக் கொண்டார். அம்பேத்கர் தீண்டப்படாத மக்களின்முன் பேசும்போதெல்லாம் மகாபாரதத்தில் வரும் நிகழ்ச்சிகளை எடுத்துக்காட்டி எழுச்சியூட்டு வார். துரியோதனின் சுயமரியாதை, யயாதியின் கதை, கச்சாவின் இலட்சியப் பற்று போன்றவற்றை அவர் கூறுவது வழக்கம்.

அம்பேத்கரின் பொன்விழாக் கொண்டாட்டங்களில் மிகச் சிறந்த நிகழ்ச்சியாக 1942 ஏப்பிரல் 19ஆம் நாள் பம்பாய் சவ் பாத்தியில் நடத்தப்பட்ட நிகழ்ச்சி அமைந்திருந்தது. அக்கூட்டத்திற்கு எம்.ஆர். ஜெயகர் தலைமை வகித்தார். பம்பாய் நகரத்தின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் புறப்பட்ட ஊர்வலங்கள் கூட்டம் நடைபெறும் இடத்தை அடைந்தபோது மாபெரும் மக்கள் திரள் காணப்பட்டது. பொன்விழாக் குழுவின் தலைவர் ஆச்சாரிய தண்டே, அம்பேத்கர் இந்தியாவின் சிறந்த தலைவர்களில் ஒருவர் என்றும் அவர் இந்திய வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தைப் படைத்தவர் என்றும் கூறினார். தீண்டப்படாத வகுப்பு மக்களுக்காகப் பல ஆண்டுகளா கத் தொண்டாற்றிவரும் அம்பேத்கரை ஜெயகர் மிகச் சிறந்த புகழ்

மொழிகளால் பாராட்டினார். அம்பேத்கர் எவ்வாறெல்லாம் சுதந்திர மாகத் சிந்தித்தார், செயல்பட்டார் என்பதையும், அவற்றின் விளைவாகத் தீண்டப்படாதவர்களின் வாழ்நிலையில் குறிப்பிடத் தக்க என்னென்ன மாற்றங்கள் ஏற்பட்டன என்பதையும் ஜெயகர் விளக்கினார். அம்பேத்கரின் கட்டற்ற சிந்தனை தீண்டப்படாதவர் களிடம் தன்னம்பிக்கையை ஊட்டியது; சாதி இந்துக்களையும் விழிப்புறச் செய்தது என்று ஜெயகர் மேலும் கூறினார். வட்ட மேசை மாநாட்டிலும் பூனா ஒப்பந்தத்தின் போதும் அம்பேத்கர் ஆற்றிய அரும் பணிகளை ஜெயகர் பாராட்டினார். எனவே தீண்டப்படாத வகுப்பு மக்கள் அவருடைய பெருந்தலைவரான அம்பேத்கருக்கு முழு மன ஆதரவினை அளிக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தார். பம்பாய் நகர ஷெரீப் எம்.ஆர்.ஏ. பெய்க் அம்பேத்கரை ஒரு சிறந்த தலைவர் என்று புகழ்ந்துரைத்தார். அக்கூட்டத்தில் பேசிய என்.எம். ஜோஷி தன்னிடம் நான்காம் வகுப்பு படித்த மாணவன் இவ்வளவு பெரிய உயர்ந்த தகுதிகளைப் பெற்றிருப்பதைக் கண்டு பெருமையடைவதாகக் கூறினார். சிறந்த அறிவும் முன்னேற வேண்டுமென்ற வேட்கையும் உடைய மாணவராக அம்பேத்கர் இருந்தார் என்று ஜோஷி அவ்வமயம் குறிப்பிட்டார்.[93]

ஏப்பிரல் 21ஆம் நாள் எல்லா முக்கிய நாளேடுகளும் - குறிப்பாக மராட்டியத்தில் வெளியானவை - அம்பேத்கரின் சிறந்த தொண்டினையும் உயர்ந்த அறிவாற்றலையும் பாராட்டி வாழ்த்துத் தெரிவித்தன. தீண்டப்படாதவர்கள் தங்கள் வாழ்நிலையில் தற் போது பெற்றுள்ள சிறிதளவு உயர்வும் அம்பேத்கரின் கடுமையான முயற்சியால் விளைந்ததேயாகும். இதற்குத் தீண்டப்படாத வகுப்பு மக்கள் அம்பேத்கருக்குப் பெரிதும் கடமைப்பட்டவர்களாவர் என்று குறிப்பிட்டிருந்தன. பம்பாயிலிருந்து வெளிவரும் 'தி டைம்ஸ் ஆப் இந்தியா' ஏடு அரசியலிலும் பொருளாதார நிலையிலும் அரிசனங்கள் அதிகாரத்தைப் பெறாத வரையில், அவர்களால் சமூகச்சமத்துவத்தை எளிதில் பெற முடியாது. டாக்டர் அம்பேத்கர் இந்த உண்மையை உணர்ந்து அதன் அடிப்படையில் சிறப்பாகச் செயல்பட்டார்; அவருடைய பணி தொல்லையானதாக இருந்த போதிலும் அது கூர்த்த மதிநுட்பமும் ஈடிலா வேகமும் கொண்டு மிளிர்ந்தது. அவருடைய தாக்குதல் மொழிகள் பெரிதும் எதிரிகளைக் குத்திக் கிழிப்பனவாக இருக்கும். தீண்டாமையை ஒழிப்பது என்பது இந்துச் சமூகக் கட்டமைப்பை வலுப்படுத்தும். அதன்மூலம் இந்திய மக்களின் பொதுவான முன்னேற்றத்திற்கும்

அது உதவும். ஆகவே அரிசனங்களின் சார்பில் அம்பேத்கர் எடுக்கின்ற முயற்சிகளுக்கு ஆதரவளிக்க வேண்டும்' என்று எழுதியது.

'பம்பாய்க்கிரானிக்கிள்'பத்திரிக்கை, 'அம்பேத்கர் அவருடைய சமூகத்திற்கு ஆற்றிய ஒப்பற்ற தொண்டினைப் போற்றியது. அவருடைய மக்கள்மீது காலங்காலமாக இழைக்கப்பட்டுவரும் மனிதத்தன்மையற்ற கொடுமைகளை அல்லும் பகலும் எண்ணி எண்ணி வருந்தினார். அதனால் அவர் . அரிசனங்களிடம் எந்த அளவிற்குப் பற்று வைத்திருந்தாரோ, அதைவிட மிகுதியாக என்று சொல்ல முடியாவிட்டாலும் அதே அளவிற்கு அக்கொடுமைகளைச் செய்தவர்கள்மீது மனக்கசப்பு கொண்டிருந்தார் என்பதில் வியப் பதற்கொன்றுமில்லை' என்று குறிப்பிட்டிருந்தது. நாகபுரியிலிருந்து வெளிவந்த 'மகாராஷ்டிரா' என்ற பத்திரிக்கை, 'தங்களுடைய தனித்தன்மையான ஆளுமையால், போராட்டத்தால், தியாகத்தால், அறிவாற்றலால் இந்திய அரசியலில் மிக உயர்ந்த நிலையை எய்திய சில மராட்டியத் தலைவர்களில் அம்பேத்கரும் ஒருவர்' என்று எழுதியது. 'தீண்டப்படாத வகுப்பு மக்களுக்குத் தற்போது கிடைத்துள்ள அரசியல் உரிமைகள் அம்பேத்கரின் அயராத போராட்டத்தால் விளைந்தவையாகும்' என்று அந்த ஏடு மேலும் குறிப்பிட்டிருந்தது.

பூனாவின் 'தன்யனபிரகாஷ்' ஏடு, அம்பேத்கர் அஞ்சாமல் தன்னல நோக்கமின்றி அரசையும் அரசியல் தலைவர்களையும் தாக்கியதைக் குறிப்பிட்டுப் பாராட்டியது. 'அம்பேத்கரின் வாழ்க்கை தீண்டப்படாத வகுப்பு மக்களுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. வெற்றிபெற வேண்டுமென்பதற்காகத் தன் மனச் சான்றை என்றுமே தியாகம் செய்யாத ஒப்பரிய மனிதர் அவர்' என்று மேலும் புகழ்ந்தது. பூனாவிலிருந்து வெளியான 'கால்' என்ற மராத்தி நாளேடு, அம்பேத்கர் மராட்டியத்தின் சிறந்த தலைவர் என்று கூறியது. 'மற்ற மராட்டியத் தலைவர்களைப் போலவே, அம்பேத்கரும் திறமையும் அறிவாற்றலும் கொண்ட தலைவராக மட்டுமில்லாமல், சிறந்த எழுத்தாளராக, தன்னலமற்ற நெஞ்சத்தவராக, நேர்மைமிக்கவராக விளங்குகிறார்' என்று எழுதி யது. பம்பாயிலிருந்து வெளிவந்த மராத்தி நாளேடான 'பிரபாத்' நவீன இந்தியாவில் தோன்றிய ஒரு புரட்சிகரத் தலைவர் அம்பேத்கர் என்று புகழ்ந்தது. தயானந்த், காந்தி, சாவர்க்கர் ஆகியோர் தீண்டப்படாதவர்களின் உயர்வினுக்காகப் பாடுபட்ட

னர். ஆயினும் தீண்டப்படாத வகுப்பு மக்களுக்காக அம்பேத்கர் செய்த தொண்டு அவர்கள் செய்வதைக் காட்டிலும் உயர்ந்து நிற்கிறது என்று 'பிரபாத்' கூறியது.

பாராட்டுதல்கள் நிறைந்த சிறந்த மதிப்புரை சாவர்க்கரிடமிருந்து கிடைத்தது. அது மிகவும் குறிப்பிடத்தக்கதாக இருந்தது. ஓர் அரசியல் சமூகப் புரட்சியாளரான சாவர்க்கர் மற்றொரு புரட்சியாள ரான அம்பேத்கரின் செயல்களை மதிப்பீடு செய்திருந்தார். பொன்விழாக் காணும் அம்பேத்கரைச் சாவர்க்கர் மனதாரப் பாராட்டினார். 'அம்பேத்கரின் சிறந்த ஆளுமையும் மேதைத்தன்மை யும், வழிநடத்திச் செல்லும் திறமையும், மக்களை அணி திரட்டும் ஆற்றலும் அவர் இந்நாட்டின் பெறற்கரிய பெருஞ்செல்வம் என்பதை மெய்ப்பிக்கின்றன. தீண்டாமை ஒழிப்பில் அம்பேத்கர் ஆற்றியுள்ள அரும்பணி, மதிப்பிடமுடியாததாகும். கோடிக்கணக் கான தீண்டப்படாத வகுப்பு மக்களிடம் மனிதஉரிமை உணர்ச்சி பொங்கும் தன்னம்பிக்கையை ஊட்டியவர் அவர். இவ்வரிய செயல்கள் நாட்டுப்பற்றையும் மானுட நேயத்தையும் வளர்ப்பதை நோக்கமாகக் கொண்ட அழிவிலாதவையாகும். தீண்டப்படாத வகுப்பு மக்களிடையே ஒப்பாரும் மிக்காரும் இல்லாத இத்தகைய தலைவர் தோன்றியிருப்பது என்பது, தன்னம்பிக்கையிழந்த மனநிலையிலிருந்து இம்மக்களை மீட்டெடுத்து, புத்துயிரூட்டி, தாங்கள் உயர்ந்தவர்கள் என்று கூறிக் கொள்ளும் வீண் கர்வம் கொண்ட சாதி இந்துக்களின் சவால்களைச் சந்திப்பதற்குத் தயார் செய்வதற்காகவேயாகும்.[94] அம்பேத்கரையும் அவருடைய தொண் டினையும் நான் மிகவும் மதித்துப் போற்றுகின்றேன். அவர் நோய்நொடியின்றி நெடுங்காலம் வாழ்ந்து மேலும் சாதனைகளைப் படைக்க வேண்டும் என விரும்புகிறேன்' என்று வியந்துகூறிச் சாவர்க்கர் அம்பேத்கரைப் பாராட்டினார்.

பம்பாய் மாகாண இந்துசபை அம்பேத்கரின் பொன்விழாவை யொட்டி அவரைப் பாராட்டிச் சிறப்புத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது.

'பம்பாய் சென்டினல்' ஏட்டின் ஆசிரியர் பி.வி. ஆர்னிமன், அம்பேத்கரின் நுண்மாண்நுழைபுலமும், நாட்டிற்கும் அவருடைய சமூகத்திற்கும் அவர் செய்த தொண்டுகளும் அவரை இந்தியாவின் சிறந்த முன்னணித் தலைவர்களில் ஒருவராக உயர்த்தியுள்ளது என்று கூறினார். பொதுவாக உலகம் முழுவதிலும் மானுடத்துக்கு விடுதலை வர வேண்டும் என்று விரும்புகின்றவர்களும் - குறிப்பாக

இந்தியாவில் மானுட விடுதலைபற்றிக் கவலைப்படுவோரும் அம்பேத்கரின் பணியை மதித்து நன்றியுணர்வுடன் போற்றுவார்கள் என்று ஆர்னிமன் மேலும் குறிப்பிட்டார்.

பொன்விழாக் குழுவினர் ஏற்பாடு செய்திருந்த கடைசிக் கூட்டம் பம்பாயில் பரேலில் கம்கார் (தொழிலாளர்) திடலில் பொன்விழாக் குழுத் தலைவர் ஆச்சாரியா தண்டே தலைமையில் நடந்தது. அக்கூட்டத்தில் அம்பேத்கருக்கு ரூ.800 பணமுடிப்பாகத் தரப்பட்டது. அம்மாபெரும் கூட்டத்தில் அம்பேத்கர் பேசியபோது, அவருடைய பிறந்தநாளைக் கொண்டாடும் பழக்கத்தைக் கைவிடு மாறு மக்களைக் கேட்டுக் கொண்டார். 'எந்த ஒரு சமூகத்தில் ஒரு சாதாரண மனிதன் அளவுக்கு மீறி மதிக்கப்பட்டு வணங்கப் படத்தக்கவனாகவும் கடவுளுக்குச் சமமானவனாகவும் உயர்த்தப் படுகிறானோ, அச்சமூகம் அழிவுப்பாதையில் போய்க்கொண்டிருக் கிறது என்று அறிந்து கொள்ளலாம். எந்த ஒருமனிதனும் மனித சக்திக்கு மீறிய ஆற்றல்களையும் தெய்வத்தன்மைகளையும் பெற்றிருப்பதில்லை. ஒருவருடைய உயர்வுக்கும், தாழ்வுக்கும் அவரவருடைய செயல்களே காரணம்' என்று அம்பேத்கர் கூறினார்.

தீண்டப்படாதவர்கள் அடைந்துள்ள முன்னேற்றத்தை விளக்கி மேலும் பேசினார். தீண்டப்படாதவர்கள் அரசியல் சமூக பொருளா தார நிலைகளில் ஓரளவு முன்னேறியிருக்கிறார்கள். தீண்டப்படாத வர்கள் விருப்பத்தின்பேரிலோ விருப்பமின்றியோ இந்துச் சமூகத் தின் ஒரு அங்கமாக இருக்கின்றனர். சாதி இந்துக்கள் தீண்டப்படாத வர்களைச் சமத்துவமாக நடத்த வேண்டும் என்பதற்காக வேண்டி நான் மகதிலும் நாசிக்கிலும் போராட்டங்கள் நடத்தினேன். ஆனால் இவற்றால் எதிர்பார்த்த அளவிற்குப் பயன் விளையவில்லை. தீண்டப்படாத வகுப்பு மக்களின் நியாயமான விழைவுகளையும் உரிமைகளையும் கொண்டிராத எந்தவொரு திட்டத்தையும் எங்களு டைய எல்லா வகையான சக்திகளையும் திரட்டி எதிர்ப்போம் என்று பிரிட்டிஷ் அரசுக்கு எச்சரிக்கை விடுத்தார். இந்துக்கள் எங்களைச் சமத்துவமாக நடத்திட முன்வருவார்களாயின், அவர்களு டன் தோளோடு தோள் நின்று போரிடத் தீண்டப்படாத வகுப்பு மக்கள் தயாராக உள்ளனர் என அறிவித்தார்.

IV

வைசிராய் அவருடைய நிர்வாகக் குழுவை விரிவுபடுத்தப் போவதாக 1942 ஜுன் மாதத்தின் மூன்றாவது கிழமையில்

செய்திகள் வெளிவந்தன. சர்.சி.பி. இராமசாமி அய்யர், சர். முகம் மது உஸ்மான், டாக்டர் அம்பேத்கர், சர்.ஜெ.பி. ஸ்ரீவஸ்தவா, சர். ஜோகேந்திர சிங், எம்.என். ராய், ஜம்னாதாஸ் மேத்தா, சர். சண்முகம் செட்டியார் ஆகியோர் விரிவுபடுத்தப்படவுள்ள நிர்வாகக் குழுவில் இடம் பெறக்கூடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. சூலை 2ஆம் நாள் வைசிராய் நிர்வாகக் குழுவின் இந்திய உறுப்பினர்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டன. மேலே குறிப்பிட்டுள்ளவர்களில் கடைசியில் உள்ள மூவர்தவிர மற்றவர்கள் மேற்படி நிர்வாகக்குழுவில் இடம் பெற்றிருந்தனர். இதன்படி நிர்வாகக்குழுவில் மொத்தம் 14 இந்தியர்களும், 5 அய்ரோப்பியர்களும் இருந்தனர்.

அம்பேத்கர் நிர்வாகக் குழுவில் உறுப்பினராகச் சேர்க்கப்பட்டதற்குப் பகையுணர்வுடன் எதிர்ப்பு ஏதும் தெரிவிக்கப்படவில்லை. காங்கிரசுப் பத்திரிகைகளும் அம்பேத்கரின் நியமனம் தொழிலாளர்களுக்கு நலஞ்சேர்க்கக்கூடும் என்று கூறின; ஆனால் பட்டும் படாமல் அவருடைய நியமனத்தைக் குறை கூறின. நசுக்கப்பட்ட மக்களான தீண்டப்படாதவர்களின் குறைகளைக் களைந்திடத் தன் வாழ்நாளெல்லாம் முழுமூச்சுடன் களம்பல கண்ட தொழிலாளர்களின் உரிமைகளுக்காகப் போராடிய அம்பேத்கருக்கு தொழிலாளர் நலத்துறையைத் தந்திருப்பது மிகவும் பொருத்தமானதே என்று பம்பாய் 'சண்டே ஸ்டேண்டார்டு' பத்திரிக்கை எழுதியது. அம்பேத்கரின் சுதந்திரமான சிந்தனைப் போக்கினை ஒரு முள்ளாக அரசு கருதக்கூடிய நிலை ஏற்படலாம். ஆயினும் அதுவரை அம்பேத்கர் வெறும் ரப்பர் ஸ்டாம்பாகச் செயல்பட மாட்டார் என்று அப் பத்திரிக்கை மேலும் குறிப்பிட்டிருந்தது. இந்திய வரலாற்றில் தீண்டப்படாத இந்து ஒருவரை இந்திய அரசின் நிர்வாகக் கவுன்சில் உறுப்பினராக நியமனம் செய்திருப்பது இதுவே முதலாவதாகும் என்று பம்பாய் 'தி டைம்ஸ் ஆப் இந்தியா' நாளேடு கூறியது.

அம்பேத்கர் நிர்வாகக் குழுவில் உறுப்பினராக இடம்பெற்றமை உண்மையில் ஒப்பற்ற நிகழ்ச்சியேயாகும். இதற்குமுன் இந்திய வரலாற்றில் தீண்டப்படாத வகுப்பைச் சேர்ந்த ஒருவர் நாட்டை ஆளும் ஆட்சி அதிகாரத்தில் ஓர் உயர்ந்த பதவியைப் பெற்றதில்லை. ஆனால் பதினான்காம் நூற்றாண்டின் கடைசிக் கால்பகுதியின்போது தீண்டப்படாதவராயிருந்து இஸ்லாமியராக மதம் மாறிய கூஸ்ரோ (Khoosro) என்பவர் தில்லியில் கில்ஜி மன்னரிடம் சர்தாராகப் பதவியில் இருந்தார். அவர் தில்லியின் ஆட்சியைக்

கைப்பற்றியபின் மீண்டும் இந்துவாக மாறி, இந்து ராச்சியமாக அறிவித்து, முஸ்லீம்களைத் துன்புறுத்தினார். அம்பேத்கரின் நியமனம் மற்றொரு கண்ணோட்டத்திலும் தனிச்சிறப்பு வாய்ந்த தாய் இருந்தது. அவர்தான் வைசிராயின் நிர்வாகக் கவுன்சிலில் உறுப்பினராக அமர்த்தப்பட்ட முதலாவது மக்கள் தலைவராவார். தீண்டப்படாத ஒருவரை நிர்வாகக் குழுவில் உறுப்பினராக ஆக்கிட வேண்டுமெனக்கோரி தீண்டப்படாத வகுப்பினர் அரசை வற்புத்தி வந்தனர் என்பது மற்றொரு முதன்மை வாய்ந்த உண்மையாகும். அந்நாளில் நிர்வாகக் குழுவின் உறுப்பினராக ஏற்கனவே இருந்த இந்தியர்களில் எவரும் பெற்றிராத, தகுதிகளை அம்பேத்கர் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். உலகில் உள்ள தொழிலாளர் இயக்கங்கள், தொழிலாளர் சிக்கல்கள், மற்றும் இந்தியாவிலும் அய்ரோப்பாவிலும் அமெரிக்காவிலும் உள்ள தொழிலாளர் நலச் சட்டங்கள் ஆகியவற்றை அம்பேத்கர் ஆழமாகக் கற்றிருந்தார். எல்லாவற்றுக்கும் மேலாக, இந்திய நாட்டில் வைசிராயின் நிர்வாகக் கவுன்சிலில் உறுப்பினராக இடம்பெற்ற முதலாவது சமூகப் புரட்சியாளர் அம்பேத்கரே ஆவார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்னர் பம்பாய் உயர்நீதி மன்றத்தின் நீதிபதி பதவியைப் பெற்று, ஒரு சாதனையைப் படைப்பதற்கான வாய்ப்பு அம்பேத்கருக்குக் கிடைத்தது. அவர் உயர் நீதிபதியாகியிருந்தாராயின், உயர்நீதி மன்றத்தில் அவரைப் புறக்கணித்த வழக்குரைஞர்களின் வாதங்களை மதிப்பீடு செய்திடு வதற்கான நிலையிலிருந்திருப்பார். ஆனால் அம்பேத்கர் உயர் நீதிபதி பதவியை ஏற்றிட மறுத்துவிட்டார்.

தன் முயற்சியாலேயே தன்னை உயர்த்திக் கொண்டவர் அம்பேத்கர். அவர் மிகச் சாதாரண நிலையிலிருந்து தன் விடா முயற்சியால் மிக உன்னதமான நிலையை அடைந்தார். ஒப்பரிய சிறப்பியல்புகளும் உயர்ந்த நெறிகளும் இடையறாக் கடும் உழைப்பும் தொண்டுள்ளமும் தியாக மனப்பான்மையும் வீரஞ் செறிந்த ஒழுக்க நெறிகளும் தீண்டப்படாத வகுப்பு ஏழைச் சிறுவனாக இருந்த அம்பேத்கரைப் புகழின் உச்சிக்கு இட்டுச் சென்றன. செயல் வீறு மிக்க ஆளுமைப் பண்புகள் நிறைந்தவரான அம்பேத்கர் இந்தியாவின் சமூக அரசியல் சிந்தனைப் போக்கில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தினார். இந்துஸ்தானத்தில் ஒரு பெரும் மக்கள் திரளாக விளங்கும் தீண்டப்படாத வகுப்பு மக்களிடம் ஒப்பரிய செல்வாக்குப் பெற்றவராகத் திகழ்ந்தார்.

முக்கியமான தலைவர்களிடமிருந்தும் பொது வாழ்வில் ஈடுபட்டோரிடமிருந்தும் அம்பேத்கருக்கு நூற்றுக்கணக்கான பாராட்டு மடல்களும் தந்திகளும் வந்து குவிந்தன. சுதந்திர வீரர் சாவர்க்கர், சர். தேஜ் பகதூர் சாப்ரு, லோகநாயக் அனே, சர். சுல்தான் அகமத், பிக்கனீர் சிற்றரசர், பம்பாய் உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி, சர். சிமன்லால் சத்தால் வட், ராவ் பகதூர், எம்.சி. இராஜா மற்றும் பலர் தங்கள் பாராட்டுதல்களை அனுப்பியிருந்தனர். தேசியப் பாதுகாப்புக் கவுன்சில் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக உடனடியாக சூலை 5ஆம் நாள் அம்பேத்கர் தில்லிக்குப் பயணமானார். அதில் பங்கு கொண்டபின் சூலை 11 இல் பம்பாய்க்குத் திரும்பினார்.

பம்பாய்க்குத் திரும்பிய பிறகு அவருடைய நண்பர்களும், ஆர்வலர்களும் வானொலி மனமகிழ் மன்றத்தில் (Radio Club) அம்பேத்கருக்குத் தேநீர் விருந்தொன்று அளித்தனர். அக்கூட்டத்தில் பேசிய ஆச்சாரியா எம்.வி. தண்டே அம்பேத்கர் கடுமையாகப் பல ஆண்டுகள் உழைத்தபோது அவருடன் தானும் பணியாற்றிய நிகழ்ச்சிகளை நினைவு கூர்ந்தார். அம்பேத்கர் தீண்டப்படாத வகுப்பு மக்களின் அடிமைத் தளையைத் தகர்த்தெறிவார் என்றும், இந்தியாவில் பாட்டாளி மக்களின் துன்பங்களைப் போக்குவார் என்றும் தான் நம்புவதாகத் தண்டே கூறினார். அம்பேத்கர் தன் ஏற்புரையில் "நான் ஏழையாகப் பிறந்து, ஏழைகளின் மத்தியில் வளர்ந்து வாழ்ந்தவன். ஏழைகளைப் போலவே ஈரமான தரைமேல் சாக்குப் பையைப் போட்டு அதன்மீது படுத்துறங்கியவன். அவர்களுடைய துன்பங்களில் பங்கேற்றவன். ஆகவே என்னுடைய போக்குகளிலிருந்து என்றும் நான் மாறமாட்டேன் என்று உங்களுக்கும் மற்றவர்க்கும் உறுதி கூறுகின்றேன். தில்லியிலுள்ள என் வீட்டின் கதவுகள் என் நண்பர்களுக்காக என்றும் திறந்தேயிருக்கும்' எனக் கூறினார்.

அடுத்தநாள் சுதந்திரத் தொழிற்கட்சியும், பம்பாய் நகராட்சித் தொழிலாளர் சங்கமும் அம்பேத்கருக்குப் பாராட்டுவிழா நடத்தின. அக்கூட்டத்தில் கூடியிருந்த தொழிலாளர்களிடையே பேசிய போது 'நாட்டைப் பாதுகாப்பது என்பதுதான் நிர்வாகக் குழுவின் முதன்மையான பணியாகும். ஆகவே என்னால் என்ன செய்ய முடியும் என்பது பெரிதும் நிர்வாகக் குழுவில் உள்ள மற்ற உறுப்பினர்கள் அளிக்கும் ஒத்துழைப்பைப் பொறுத்ததாகும்' என்று சொன்னார். கொங்கணப் பகுதியில் இருந்த மாவட்டங்

களைச் சார்ந்த விவசாயிகள் மற்றும் சிற்றரசுகளில் இருந்த விவசாயிகள் பம்பாய் ஆர்.எம்.பட் உயர்நிலைப் பள்ளியில் நடத்திய பாராட்டுக் கூட்டத்தில் அம்பேத்கர் உரையாற்றியபோது, 'இந்தியாவில் உள்ள உழைப்பாளி வகுப்பு மக்களின் நலன்களைப் பாதுகாக்கவும் உயர்த்தவும் நான் மேற்கொண்டுள்ள முயற்சிகளில் ஒருபோதும் பணிந்துபோக மாட்டேன்' என்று கூறினார். ஆனால் அதேநேரத்தில் சிறிய அளவில் கருத்து வேறுபாடு தோன்றும்போதெல்லாம் அமைச்சரவையிலிருந்து விலகிவிடுவேன் என்று சக அமைச்சர்களை அச்சுறுத்தவும் மாட்டேன் என்று சொன்னார். 'தீண்டப்படாத வகுப்பினர்களுக்கென்று தனியாக ஓர் அமைப்பை வைத்துக் கொண்டிருப்பது, ஒட்டுமொத்தமாக உள்ள உழைக்கும் மக்களின் நலன்களுக்கும் ஒற்றுமைக்கும் முரணானது என்று சிலர் குற்றஞ்சாட்டுகின்றனர். சமூகத்தின் அடித்தளத்திலுள்ள உழைப் பாளி மக்களை உயர்த்துவதற்கான போராட்டம் எல்லாப்பிரிவுப் பாட்டாளி மக்களையும் மேலும் உயர்த்துவதற்கு உதவும். எவ்வாறெனில் ஒரு கட்டடத்தின் அடித்தளத்தில் உள்ள ஒரு கல்லை நீக்கினால் மேலேயிருக்கின்ற கட்டுமானம் நெக்குவிடு வதைப் போன்றதேயாகும். தீண்டப்பட்டாத வகுப்பு உழைப்பாளி களிடம் கொண்டிருக்கும் வெறுப்பைச் சாதி இந்துத் தொழிலாளர்கள் இன்றும் கைவிடவில்லை என்று அம்பேத்கர் கூறினார். அக்கூட்டத் திற்குத் தலைமை வகித்த ஆனந்தராவ் சித்ரே, அம்பேத்கர் அவருடைய தொழிலாளர் இயக்கத்தின் செல்வாக்கையும் செயல் பாட்டையும் தீண்டப்படாத வகுப்பினர் அல்லது உழைப்பாளி மக்கள் மத்தியிலும் கொண்டு சென்று, இந்தியாவில் உள்ள உழைக்கும் மக்கள் அனைவர்க்கும் தலைமை தாங்கி நடத்திச் செல்ல வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

மகார் பஞ்சாயத்து அம்பேத்கருக்கு அளித்த மற்றோர் வரவேற்பு விழாவில், அவர் சிறுவனாக இருந்தபோது வீட்டை விட்டு ஓடிப்போய், பம்பாயில் சத்தாராவில் ஒரு ஆலைத்தொழிலா ளியாக ஆக வேண்டும் என்று திட்டமிட்டதுபற்றியும், அதற்காக அவருடைய அத்தையின் பணச் சுருக்குப் பையைத் திருடிவிட முயன்று தோற்றுப் போனதுகுறித்தும் விரிவாக விளக்கினார். 'எனக்கு முன் பேசியவர்கள் குறிப்பிட்டது போன்று தீண்டப்படாத வகுப்பு மக்கள் அரசுக்குக் கொடுத்த நெருக்குதலின்பேரில்தான் அரசு என்னை நிர்வாகக் குழுவில் சேர்த்துக்கொண்டது என்பது உண்மைதான். ஆனால் அதே நேரத்தில் இன்னொரு உண்மையை யும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். தீண்டப்படாத

வகுப்பினர்களிடையே நிர்வாகக் கவுன்சிலின் உறுப்பினராவதற் குரிய பயிற்சியும் தகுதியும் உடையவர் ஒருவர்கூட இல்லை யெனில், அவர்களுடைய கோரிக்கையை அரசால் நிறைவேற்றி யிருக்க முடியாது' என்று குறிப்பிட்டார்.

1942 ஜூலை 18, 19 ஆகிய நாட்களில் அனைத்திந்தியத் தீண்டப்படாத வகுப்பினர் மாநாட்டை நடத்துவதற்கான ஏற்பாடு கள் நடைபெற்றன. அம்மாநாட்டிற்குத் தலைமை தாங்குவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த என்.சிவராஜ் அவர்களுடன் அம்பேத்கர் ஜூலை 18ஆம் நாள் காலை 9 மணிக்கு நாகபுரியை அடைந்தார். தங்களின் நெஞ்சங்கவர்ந்த தலைவரான அம்பேத்கரையும் மாநாட் டுத் தலைவரான என்.சிவராஜையும் அங்கே குழுமியிருந்த 40,000 மக்கள் கைதட்டி மகிழ்ச்சியாரவாரமுடன் வரவேற்றனர். பஞ்சாப், வங்காளம், சென்னை ஆகிய இடங்களிலிருந்து தீண்டப்படாத வகுப்புத் தலைவர்கள் அம் மாநாட்டிற்கு வந்திருந்தனர். நாகபுரியில் மோகன் பூங்காவில் அமைக்கப்பட்டிருந்த மாபெரும் பந்தலில் மாநாடு தொடங்கியது.

மாநாட்டிற்குத் தலைமை தாங்கிய என்.சிவராஜ் தன் உரையின் தொடக்கத்தில், அம்பேத்கர் அமைச்சராக உயர்வு பெற்றிருப்பதற் காகத் தீண்டப்படாத வகுப்பு மக்களின் சார்பில் பாராட்டுவதாகக் கூறினார்; அமைச்சர் பதவி கிடைத்ததன் மூலம் மக்களுக்குத் தொண்டு செய்வதற்கான புதிய வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

அம்பேத்கர் உரையாற்ற எழுந்தபோது அம்மாநாட்டில் கூடி யிருந்த 70,000 மக்கள் பெருத்த ஆரவார முழக்கங்களுடன் வரவேற்றனர். வட்டமேசை மாநாடுகள் நடைபெற்ற நாட்களி லிருந்து கிரிப்ஸ் அளித்த திட்டம் வரையிலான காலத்தில் தீண்டப்படாத வகுப்பினர் அரசின் முன் வைத்த கோரிக்கைகளைப் பற்றி முறையாக விளக்கினார்; கிரிப்சின் திட்டம் தீண்டப்படாத வகுப்பு மக்களுக்கு மாபெரும் துரோகம் செய்துவிட்டதாகக் கூறினார்.

முஸ்லீம் லீக் பாக்கிஸ்தான் கோருவதுபற்றி அம்பேத்கர் விளக்கிப் பேசினார். முகம்மதியர்கள் சிறுபான்மையினர் என்று ஜின்னா சொல்லிக் கொண்டிருந்த வரையில், மற்ற சிறுபான்மை சமூகத்தினர் ஒருவருக்கொருவர் உறுதுணையாகவும் அதனால் வலிமை கொண்டவர்களாகவும் விளங்கினர். ஆனால் இப்பொழுது

ஜின்னா முஸ்லீம்கள் தனியான ஒரு தேசிய இனம் என்று கூறித் தனிநாடு கேட்கிறார்; முகம்மதியர் பிரிந்து சென்று விட்டால் சிறுபான்மையினருக்காகத் தீண்டப்படாத வகுப்பினரே தனித்து நின்று போராட வேண்டியிருக்கும் என்று அம்பேத்கர் குறிப்பிட்டார். சிறுபான்மையினர் எனக் கூறித் தங்களின் நலன்களுக்குப் போராடிய இஸ்லாமியர்கள் மற்ற சிறுபான்மையினரின் நலன்களை முடுக்குபவராக மாறக்கூடும்; அப்போது தீண்டப்படாத வகுப்பு மக்கள் அவர்களுக்கு எதிராகப் போராட வேண்டி நேரிடலாம் என்றும் கூறினார்.

'தீண்டப்படாத வகுப்பினர் எல்லாத் துறைகளிலும் குறிப்பிடத் தக்க அளவில் முன்னேறியுள்ளனர் என்பது மனநிறைவு கொள்ளத் தக்கதாகும். எந்த வகுப்புகளிடத்தும் ஏற்பட்டிராத பெரும் அரசியல் விழிப்புணர்வு தீண்டப்படாத வகுப்பினரிடையே ஏற்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தீண்டப்படாத வகுப்பினர் கல்வியில் குறிப்பிடத்தக்க அளவு முன்னேறியுள்ளனர் என அம்பேத்கர் குறிப்பிட்டார்.

'அரசின் பொது ஊழியத்துறைகளில் உத்தியோகங்களில் தீண்டப்படாத வகுப்பு மக்கள் இடம் பெற்றுக் காலூன்றியிருக்கின்றனர். இவற்றையெல்லாம்விடத் தீண்டப்படாத வகுப்புப் பெண்கள் அடைந்துள்ள முன்னேற்றந்தான் ஊக்கமூட்டுவதாகவும், வியப்பளிப்பதாகவும் இருக்கிறது. இந்த முன்னேற்றம் குறித்து உண்மையில் நம் வகுப்புப் பெண்கள் பெருமிதம் கொள்ளலாம். இம்மேம்பாடு இந்துக்களின் கருணையினால் ஏற்பட்டதன்று. எம் உழைப்பின் நல்விளைவே இந்த உயர்நிலை. தீண்டப்படாதவர்கள் இந்துக்களில் ஒரு உட்பிரிவினர் அல்லர்; முகம்மதியரைப் போல் தெளிவான, வரையறுக்கப்பட்ட வகுப்பினராக இந்தியாவின் தேசிய வாழ்வில் இருந்து வருகின்றனர் என்பதே நாம் கொண்டிருக்கும் அரசியலின் அடிப்படையாகும். ஆகவே இந்துக்களுக்கு எதிராகத் தீண்டப்படாத வகுப்பினர்க்குத் தனித்த அரசியல் உரிமைகள் வேண்டுமென்று கோரிவருகிறோம். தீண்டப்படாத வகுப்பு மக்களின் பெரிய எதிரி காந்தி. வைசிராய் நிர்வாகக் கவுன்சிலில் தீண்டப்படாத வகுப்பினர்களுக்கு ஒரு இடம் கிடைத்தமை பார்ப்பனியத்தின் மீது விழுந்த மரண அடி ஆகும்' என்று மேலும் அவர் குறிப்பிட்டார்.

போரில் பிரிட்டிஷ் அரசுக்கு நிபந்தனையற்ற ஆதரவை அளிப்பதாகத் தெரிவித்தார். 'இது சர்வாதிகாரத்திற்கும், சனநாயகத்

திற்கும் இடையே நடக்கும்போர்; இந்தச் சர்வாதிகாரத்திற்கு அடிப்படையாக இருப்பது எந்த உயர்ந்த கோட்பாடும் இல்லை; அதற்கு மாறாக இனவெறி கொண்ட ஆணவமேயாகும். நாசிசம் மானுடத்தின் எதிர்காலத்திற்கே ஓர் அச்சுறுத்தலாகும். சனநாய கத்தை இவ்வுலகிலிருந்து அழித்தொழித்துவிடாமல் காப்பாற்ற வேண்டியது நம்முடைய கடமையாகும். மனிதர்களிடையே நல்லுறவை வளர்க்க வல்லது சனநாயகமே. ஆகவே சனநாயகப் பண்புகளின் அடித்தளத்தைக் காப்பாற்றுவதற்காக மற்ற சனநாயக நாடுகளுடன் நாமும் இணைந்து செயல்பட வேண்டும். சனநாயகம் அழியுமானால் அத்துடன் இந்தியரும் அழிந்து விடுவோம்' என்று அம்பேத்கர் அம்மாநாட்டில் கூறினார்.

'கற்பி! போராடு! ஒன்று சேர்!' என்பதே நான் உங்களுக்கு அளிக்க விரும்பும் தெளிந்த இலட்சிய முழக்கங்களாகும். தன்னம்பிக்கையுடன் இருங்கள்; நியாயம் நம் பக்கம் இருக்கிறது; ஆகவே நம்முடைய போராட்டத்தில் நாம் தோல்வி அடைய மாட்டோம் என்று கருதுகிறேன். என்னைப் பொறுத்த அளவில் போராட்டம் என்பது மகிழ்ச்சி தருவதாகும். சரியான கருத்தில் பார்த்தால் போராட்டம் என்பது ஆன்ம விடுதலை-மனித விடுதலையேயாகும். பொருளியல், சமூகவியல் ஏதும் இதில் இல்லை. நம்முடைய போராட்டம் செல்வத்தையும் அதிகாரத்தை யும் பெறுவதற்காக மட்டும் அல்ல. நம்முடைய போராட்டம் மனித விடுதலையை அடைவதற்கானதாகும். மனிதனின் மதிப்பை நிலைநாட்டுவதற்கே நாம் போராடுகின்றோம்' என்று அம்பேத்கர் அவருடைய உரையில் கூறினார்.

அனைத்திந்தியத் தீண்டப்படாத வகுப்புகளின் பேரவை உருவாக்கப்பட்டிருப்பதுபற்றி நாகபுரி மாநாட்டில் அறிவிக்கப்பட் டது. அரசின் செலவில் தீண்டப்படாத வகுப்பினர்களுக்கெனத் தனிக்குடியேற்றக் கிராமங்கள் ஏற்படுத்த வேண்டுமென்று அம் மாநாடு அரசுக்குக் கோரிக்கை விடுத்தது. மாநாட்டின் இறுதியில் அம்பேத்கர் உணர்ச்சி மிக்கதோர் உரையாற்றினார். 'நான் சமூகத்தோடு ஒட்டி உறவாடாமல் புத்தகங்களுக்கிடையே வாழ்ந்து வருவதாகச் சிலர் குறை கூறுகின்றனர். தனிப்பட்ட முறையில் யார்மீதும் எனக்கு மனவருத்தம் கிடையாது. எவரையும் மனம் நோகச் செய்யவேண்டுமென்று எண்ணியதில்லை. மிகக் குறுகிய கால எல்லைக்குள் அதிகபட்ச முன்னேற்றத்தை அடைய வேண்டும் என்று நான் கருதுகிறேன். இந்துக்களில் பலர் என்னை

அவர்களுடைய எதிரியாக எண்ணுகின்றனர். ஆனால் பார்ப்பனச் சமூகத்தில் கூட எனக்கு நண்பர்கள் இருக்கிறார்கள். ஆயினும் என்னுடைய மக்களை நாயைவிட, பூனையைவிட இழிவாக நடத்தி அவர்களின் முன்னேற்றத்தைத் தடுத்த பார்ப்பனர்களின் சமூக விரோதச் செயல்களை அடித்து நொறுக்கிட வேண்டிய பெரும் பொறுப்பு என்பேரில் சுமத்தப்பட்டிருக்கிறது'' என்று தன் உரையின் இறுதியில் குறிப்பிட்டார்.

'தி இந்து' நாளேடு அம்பேத்கரின் கருத்துகளைப் பாராட்டியது. அத்துடன் தீண்டப்படாத வகுப்பு மக்களுக்கு என்று தனிக்குடியேற்ற ஊர்களை ஏற்படுத்துவதால் வசதியான வீட்டமைப்பும், தூய்மையான சூழ்நிலையும் கிடைக்கும் என்பது உண்மையாயினும் தனிக் குடியேற்றம் என்பது தீண்டாமையை என்றென்றும் நிலைநிறுத்திடவே உதவும். ஆகையால் அம்பேத்கர் தனிக் குடியேற்றக் கோட்பாடு பற்றி மீண்டும் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று 'இந்து' நாளேடு அவரைக் கேட்டுக்கொண்டது.

நாகபுரியில் அதே மாநாட்டுப் பந்தலில் மேலும் இரண்டு மாநாடுகள் நடந்தன. அவ்விரு மாநாடுகளிலும் அம்பேத்கர் உரையாற்றினார். அவற்றில் ஒன்று தீண்டப்படாத வகுப்புப் பெண்கள் மாநாடு. அது அமராவதியைச் சேர்ந்த திருமதி சுலோசனாபாய் தோங்ரே தலைமையில் நடைபெற்றது. அம்மகளிர் மாநாட்டில் அம்பேத்கர் சொற்பொழிவாற்றினார். 'மகளிர் அமைப்புகள் மிகவும் தேவை என்று நம்புபவன் நான். உங்களுக்குச் சரி என்று நம்பிக்கை ஏற்பட்டுவிட்டால், இச்சமூகத்தையே நீங்கள் மாற்றிவிடுவீர்கள் என்பதை நான் அறிவேன். சமூகத்தில் தீமைகளைக் களைந்தெறிவதில் நீங்கள் அளித்த பங்களிப்பு மிகவும் சிறப்பானதாகும். ஒரு வகுப்பு எந்த அளவுக்கு முன்னேறியுள்ளது என்பதைக் கண்டறிவதற்கான அளவுகோல் அவ்வகுப்புப் பெண்கள் எந்த அளவிற்கு முன்னேறியிருக்கிறார்கள் என்பதேயாகும். நீங்கள் அடைந்துள்ள முன்னேற்றத்தைக் கண்டு மகிழ்ச்சியும் மனநிறைவும் அடைகிறேன். தூய்மையாக இருக்கக் கற்றுக் கொள்ளுங்கள்; தீய பழக்கங்களைக் கைவிடுங்கள்; உங்களுடைய பிள்ளைகளைப் படிக்கவையுங்கள்; உயரவேண்டும் என்கிற வேட்கையை அவர்களுக்கு ஊட்டுங்கள்; தங்களால் சிறந்தவர்களாக உயர முடியும் என்ற தன்னம்பிக்கையை அவர்களிடம் வளர்த்தெடுங்கள்; தாழ்வு மனப்பான்மையை அவர்களிடமிருந்து அறவே அகற்றுங்கள். பிள்ளைகளுக்குத் திருமணம் செய்துவிட வேண்டும்

என்று அவசரப்படாதீர்கள்; திருமணம் ஒரு சுமையாகும். திருமணத்திற்குப் பின் ஏற்க வேண்டிய கூடுதல் பொறுப்புகளைத் தாங்கிக் கொள்ளுமளவிற்கு வருவாய் ஈட்டக்கூடிய தகுதியை உங்கள் பிள்ளைகள் அடையும் வரையில் திருமணத்தை அவர்கள் மீது திணிக்காதீர்கள். அதிகமான பிள்ளைகளைப் பெற்றுக் கொள்வது ஒரு குற்றம் என்று கருதுங்கள். தங்கள்தங்கள் பெற்றோர்களிடமிருந்து தாங்கள் பெற்றதைவிடச் சிறந்த வாழ்க்கை யைத் தங்கள் பிள்ளைகளுக்கு அமைத்துத் தரும் பொறுப்பைத் தகப்பன்மார்கள் ஏற்றிட வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாகத் திருமணம் செய்துகொள்ளும் ஒவ்வொரு பெண்ணும் தன் கணவனுக்குச் சிறந்த வாழ்க்கைத் துணையாக விளங்க வேண்டும்; அத்துடன் கணவனுக்கு நல்ல நண்பனாகவும், இல்வாழ்வில் சமஉரிமை உடையவராகவும், அடிமையாக இருந்திட மறுப்பவராக வும் திகழ வேண்டும். என்னுடைய இந்த அறிவுரையை நீங்கள் பின்பற்றி நடந்தால் உங்கள் வாழ்வில் மதிப்பும் பெருமையும் அடைவீர்கள்' என்று அம்பேத்கர் கூறினார்.

தீண்டப்படாத வகுப்புப் பெண்கள் எந்த அளவிற்கு விழிப்புணர்வு பெற்றுள்ளனர் என்பதற்கு இம்மகளிர் மாநாடு ஒரு அடையாளமாகத் திகழ்ந்தது. பெண்தலைவர்களான இந்திராபாய் பட்டேல், கிருத்திபாய் பட்டேல் போன்றவர்களின் சலியாத உழைப்பே இப்பெண்கள் மாநாட்டின் வெற்றிக்குப் பெருங் காரணமாகும். பல மனைவியரை மணந்து கொள்ளும் முறையை ஒழிக்க வேண்டும் என்றும், பெண் தொழிலாளர்களுக்கு ஊதிய முடன் கூடிய விடுமுறையும், ஓய்வூதியமும் அளிப்பதற்கான அமைப்புகளை ஏற்படுத்த வேண்டும் என்றும் மகளிர் மாநாடு கோரியது.

மகளிர் மாநாட்டினை அடுத்து நடைபெற்ற சமதா சைனிக் தளம் (Samata Sainik Dal) மாநாட்டிற்குச் சர்தார் கோபால் சிங் O.B., தலைமை தாங்கினார். அம்மாநாட்டில் அம்பேத்கர் உரையாற்றி னார். 'அகிம்சைக் கொள்கையை நான் மனமார விரும்புகிறேன். ஆனால் அகிம்சைக்கும் மானமிழந்து அடிபணிகிற செயலுக்கு மிடையே வேறுபாடு இருக்கிறது. அடிபணிந்து குற்றேவல் செய்து ஆதரவற்ற ஒரு வாழ்க்கையை வாழ்வது ஒரு மனிதனுக்கு அழகன்று. தீயோரை அழிப்பதும் ஓர் அகிம்சை வழிதான் என்று துக்காராம் சொன்னார். என் கருத்தும் அதுவேயாகும். எல்லா உயிர்களிடத்தும் அன்புடனும் இரக்கமுடனும் இருக்க வேண்டு

மென்பது அகிம்சைக் கொள்கையின் ஒரு கூறாக இருந்த போதிலும், தீங்கு செய்வோரை அழிப்பதும் அகிம்சையின் கோட்பாடாகவே இருக்கிறது. அவ்வாறில்லாவிட்டால் அகிம்சை என்பது உயிரற்ற உடல் போன்றதேயாகும்; வெறுமையான இனிய கனவேயாகும். ஆண்மையும் நல்லொழுக்கமுமே தொண்டர் களின் விழுமிய நோக்கமாக இருக்க வேண்டும்' என்று கூறினார்.

நாகபுரியில் அம்பேத்கர் தங்கியிருந்தபோது லாலா ஜெய் நாராயண் என்பவர் அவருக்குத் தேநீர் விருந்தொன்றளித்தார். தில்லியிலிருந்து வைசிராயின் அதிகாரப்பூர்வமான பிரதிநிதி ஒருவர் நாகபுரிக்கு வந்து அம்பேத்கரைச் சந்தித்தார். நாகபுரியிலிருந்தவாறே 1942 சூலை 20ஆம் நாள் அம்பேத்கர் தந்தி மூலமாகத் தொழிலாளர் நலத் துறையின் பொறுப்பினை ஏற்றார். தில்லியிலிருந்து நாகபுரிக்கு வந்த வைசிராயின் பிரதிநிதி அங்குத் தீண்டப்படாத வகுப்பினர் மாநாடு எந்த இடத்தில் நடைபெறுகிறது என்று பலரிடமும் உசாவியபோது, தங்களை உயர்ந்தவர்கள் என்று சொல்லிக் கொண்ட சாதி இந்துக்கள் அவருக்குத் தகுந்த விடை சொல்லாதது டன் தம் பார்வைகளாலும், சொற்களாலும் வெறுப்பை அவரிடம் காட்டினர். அந்த அளவிற்கு இந்துக்களிடம் சாதிவெறி தலைக்கேறி யிருந்தது.

நாகபுரியிலிருந்து பம்பாய்க்குத் திரும்பியபின், பம்பாய் நகரத் தீண்டப்படாத வகுப்புப் பெண்கள் திருமதி தண்டே தலைமையில் அம்பேத்கருக்குப் பாராட்டு விழா நடத்தினார்கள். இப்பாராட்டு விழா வரிசையில் அம்பேத்கர் கலந்து கொண்ட கடைசிக் கூட்டம் இதுதான். படித்த தீண்டப்படாத வகுப்புப் பெண்கள் உயர்சாதி இந்து இளைஞர்களைத் திருமணம் செய்து கொள்ளக்கூடாது என்று இக்கூட்டத்தில் அறிவுரை புகன்றார். தீண்டப்படாத வகுப்புப்பெண் கள்-குறிப்பாக மகார் இனப் பெண்கள், மராத்தா, பந்தாரி, அகாரி இனத்துப் பெண்களைவிட அரசியல் நோக்கில் மிகவும் முன்னேறி யிருக்கிறார்கள். இந்நிலை மிகவும் மனநிறைவு தருவதாகும் என்று குறிப்பிட்டார்.

தொழிலாளர் நல அமைச்சர்

1942 ஜூலை 27ஆம் நாள் மாலை அம்பேத்கர் தில்லிக்குப் புறப்படுவதற்கு முன்னர் 'தி டைம்ஸ் ஆப் இந்தியா' பத்திரிக்கை யின் நிருபருக்குப் பம்பாயில் அளித்த பேட்டி ஒன்றில், காந்தி போருக்கு எதிராகத் தீவிரமாகக் காட்டிவரும் எதிர்ப்பு பொறுப்பற் றது, அறிவுகெட்டதனமானது, அரசியல் மதிநுட்பம் இல்லாதது, போர் தொடங்கியபின் சரிந்து விட்ட காங்கிரசின் பெருமையை மீண்டும் நிலைநாட்டுவதற்கான உள்நோக்கம் கொண்டது என்று கூறினார். இந்தியாவைக் கைப்பற்றி ஆள வேண்டும் என்பதற்காக இந்தியாவின் நுழைவாயிலில் காட்டுமிராண்டித்தனமான எதிரிகள் நிற்கிறபோது-இங்கே அமைதியையும் ஒழுங்கையும் குலைத்திட காந்தி மேற்கொண்டுள்ள முயற்சி பைத்தியக்காரத்தனமானதாகும். இந்தியர்களுக்கும் பிரிட்டிஷாருக்கும் இடையிலான தொடர்பு அதன் இறுதிக்கட்டத்தில் இருக்கிறது. இப்போரில் சனநாயகம் வென்றால், அதன்பின் இந்திய நாட்டின் விடுதலையை ஒருவராலும் தடுத்து நிறுத்திட முடியாது. தன் காலத்திலேயே மிக விரைவாகச் செய்து முடித்துவிட வேண்டும் என்று விரும்புகின்ற ஒரு முதியவரைப் போல் காந்தி இருக்கிறார் என்று அம்பேத்கர் கூறினார்.

காந்தியைப் பற்றி அம்பேத்கர் கூறிய கருத்துகளை விமர்சித்து காங்கிரசு ஏடுகள் தன்னைத் தொழிலாளர்நல அமைச்சராக ஆக்கியதற்குக் கைம்மாறாகத்தான் அம்பேத்கர் பிரிட்டிஷ் அரசின் கொள்கையைத் தூக்கிப் பிடிக்கிறார் என்று கடுமையாக இகழ்ந் துரைத்தன.

அம்பேத்கர் ஒருவர்மட்டுமே காந்தியின் போக்கை எதிர்க்க வில்லை. காங்கிரசு நடத்தவுள்ள போராட்டத்தில் கலந்து கொள்ளா தீர்கள் என்று முஸ்லீம் லீக் முகம்மதியரை எச்சரித்தது. இந்தியாவின் ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் கட்டாயம் பாதுகாப்போம் என்று காங்கிரசு உறுதியளித்தால்தான் காங்கிரசு தொடங்கவிருக்கும் போராட்டத்தில் இந்து மகாசபை கலந்து கொள்ளும் என்று சாவர்க்கர் நிபந்தனை விதித்தார். காந்தி அவருக்கே உரிய வழக்கப்படி, ஒரு பாக்கிஸ்தான் பிரிவதற்கு மட்டுமின்றி பல பாக்கிஸ்தான்கள் அமைவதற்கும் ஒத்துக் கொள்வார் என்று சாவர்க்கர் திடமாகக் கூறினார். இது வருமுன் உய்த்துணர்ந்ததாகும்.

அம்பேத்கர் அவருடைய புதிய பொறுப்பில் - அமைச்சர் என்ற நிலையில் தில்லியில் ஒருவாரங்கூட தங்கியிருக்கவில்லை. அச் சமயத்தில் காங்கிரசு அதனுடைய ஆகஸ்ட்டுப் போராட்டத்தைத் தொடங்கியிருந்தது.

வைசிராயின் நிர்வாகக் குழு உடனடியாகக் கூடியது. காங்கிரசின் ஆகஸ்ட்டுப் போராட்டம் அரசுக்கு விடுக்கப்பட்டுள்ள ஓர் அறைகூவலாகும். அராஜகத்தை ஏற்படுத்தி நாட்டைக் குழப்பத்தில் ஆழ்த்த வேண்டுமென்ற நோக்கம் கொண்டதாகும்; மானுட விடுதலைக்காகப் பிரிட்டிஷ் அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகளை முறியடிக்க வேண்டுமென்ற முட்டாள்தனமான எண்ணம் கொண்டதாகும் என்று அரசு கருதியது.

இந்தியா முழுவதிலும் காங்கிரசுத் தலைவர்கள் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டனர். அதன் விளைவாக மக்களிடையே அரசின் மீது கடும் வெறுப்பு ஏற்பட்டது. நாடு முழுவதும் கிளர்ச்சிகள் வெடித்தன. அவற்றை ஒடுக்கிட அரசு கடும் நடவடிக்கை எடுத்தது. அதனால் நாடே பெருங்குழப்பத்தில் மூழ்கியது. முகம்மதியர்கள் ஆகஸ்ட்டுப் போராட்டத்தில் கலந்து கொள்ளாமல் ஒதுங்கியிருந்தனர். இந்து மகாசபையினரும் ஆகஸ்ட்டுப் போராட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. அம்பேத்கர் இயக்கத்தினரும் இதில் பங்கு கொள்ளவில்லை. இராணுவத்தில் அதிக எண்ணிக்கையில் சேருவதில் தீண்டப்படாத வகுப்பினர் தீவிரம் காட்டினர்.

1942 ஆகஸ்ட்டு 23ஆம் நாள் தீண்டப்படாத வகுப்பினர் நலச்சங்கம் தில்லியில் அம்பேத்கருக்கு ஒரு பாராட்டுக் கூட்டம் நடத்தியது. அக்கூட்டத்தில் அம்பேத்கர் தன் நெஞ்சத்தில் தேக்கி வைத்திருந்த உணர்வுகளை வெளிப்படுத்தினார். 'இந்த அமைச்சர் பதவியில் இருக்க வேண்டுமென்ற ஆசை எனக்கு இல்லை. இப்பதவியின் மூலம் வெகு மக்களின் வாழ்வை உயர்த்திட நான் மேற்கொள்ளும் முயற்சிகள் பயனளிக்காதுபோகுமானால் இதை விட்டுவிட்டு, மகிழ்ச்சியுடன் என் பழைய வேலைக்கே திரும்பிப் போய்விடுவேன்' என்று அக்கூட்டத்தில் கூறினார். தீண்டப்படாத வகுப்புகளின் மக்கள் தொகை கிட்டத்தட்ட முகம்மதியரின் மக்கள் தொகைக்குச் சமமாக இருக்கிறது. ஆனால் வைசிராயின் நிர்வாகக் குழுவில் முகம்மதியருக்குத் தீண்டப்படாத வகுப்பினர்களுக்குத் தரப்பட்டதைப் போன்று மூன்று பங்கு இடங்கள் அளிக்கப்பட்டுள்ளன. இதனைத் தீண்டப்படாத வகுப்பு மக்கள் சரியென ஏற்கமாட்டார்கள் என்று அக்கூட்டத்தில் குறிப்பிட்டார்.

அம்பேத்கர் ஆட்சி அதிகாரத்தில் இருந்தபோதிலும், அவருடைய உள்ளத்தில் ஆழ்ந்த கவலை படர்ந்திருந்தது. அவருடைய மகனும் அண்ணன் மகனும் பம்பாயில் இருந்தனர். பம்பாய் முழுவதிலும் அச்சமயம் வன்முறையான அரசியல் கிளர்ச்சிகள் மூண்டிருந்தன. தொலைபேசி மூலம் அவர்களோடு தொடர்பு கொள்ள அவர் முயன்றார்; ஆனால் தொடர்பு கிடைக்கவில்லை. ஆகவே அவர்களுக்கு விரைவு அஞ்சல் ஒன்றை எழுதினார். 'என்மீது பழிதீர்த்துக் கொள்ள வேண்டுமென்பதற்காக உங்களைக் குறிவைத்துக் காங்கிரசார் தாக்கக்கூடும்; அதனால் மிகுந்த எச்சரிக்கையுடன் உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்' என்று அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

ஆகஸ்ட்டுக் கிளர்ச்சி தொடங்கிய பிறகு இந்தியாவில் தோன்றிய அரசியல் நிலைமையைக் குறித்து மத்தியச் சட்டசபை செப்டம்பர் மாதத்தில் விவாதித்தது. அம்பேத்கர் மத்தியச் சட்டசபையில் நடந்த விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசியபோது, கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளில் நான் கண்டறிந்த வரையில் அகிம்சைக் கொள்கைக்குப் பெரும் சரிவு ஏற்பட்டுவிட்டிருக்கிறது என்று கூறினார். தள்ளுபடி செய்யும் தனி அதிகாரம் (Veto) இங்கிலாந்தில் இருக்கும் இந்தியாவிற்கான செயலாளரிடம் இப்போது இருக்கிறது. இந்த அதிகாரம் இந்தியச் சட்டசபைகளுக்கு வழங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் புதிய தேர்தல்கள் நடைபெறாததால் தற்போதுள்ள சட்டசபைகள் போதிய அளவில் மக்கள் பிரதிநிதித்துவம் பெற்றுள்ளவைகளாகக் கருத முடியாது என்று அம்பேத்கர் குறிப்பிட்டார்.

தொழிலாளர் நல அமைச்சரான அம்பேத்கர் 1942 நவம்பர் 15ஆம் நாள் பம்பாய் வானொலி நிலையத்தில் 'போரும் இந்தியத் தொழிலாளரும்' என்ற தலைப்பில் சிந்தனையைத் தூண்டும்படியான உரை ஒன்றை நிகழ்த்தினார். உலக நாடுகளை மேலும் கூறுபோடுவதற்காக மட்டுமே நடக்கும் போர் அல்ல இது! அத்துடன்கூட மனிதர்களுக்கிடையேயும் நாடுகளுக்கு இடையேயும் இருக்கின்ற உறவுகளில் ஓர் அடிப்படை மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும் என்கிற புரட்சியுமன்று. மனிதர்களுக்கிடையில் இருக்கின்ற உறவு முறையைத் திருத்தியமைக்க வேண்டும் என்கிற-சமூகத்தை மாற்றியமைக்க வேண்டும் என்று கோருகின்ற ஒரு புரட்சியே இப்போர். ஆகவே இப்போரில் நாசிசத்தை வீழ்த்த வேண்டும் என்பதற்காகத் தொழிலாளர்கள் போராட முன்வர

வேண்டும். நாசிசம் வெற்றி பெற்றுவிட்டால் நாசிசக் கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்படும். அப்போது மக்களின் உரிமைகள் நசுக்கப்படும். சமத்துவம் மறுக்கப்படும், சகோதரத்துவம் தீங்கு தரும் கொள்கையாகக் கருதித் தூக்கி எறியப்படும் என்று விளக்கிக் கூறினார். போரில் நாம் வெற்றி பெற்றால் அதனால் விளையும் நற்பயன் சுதந்திரமும், புதிய சமூக அமைப்புமாக இருக்கும். ஆனால் சுதந்திரம் மட்டும் போதுமானதாகாது. சுதந்திரத்தின் மதிப்பு என்பது அதன்மூலம் எத்தகைய அரசு, எத்தகைய சமூகம் நிறுவப்படுகிறது என்பதைப் பொறுத்தே இருக்கிறது. ஆகவே தொழிலாளர்கள் 'வெள்ளையனே வெளியேறு!' என்ற கோரிக்கையில் நாட்டம் செலுத்துவதைவிட 'புதிய இந்தியாவை' உருவாக்குவதில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும். வன்முறை சக்திகளுக்கு அடிபணிந்து அதன் விளைவாகப் பெறுகின்ற அமைதி உண்மையான அமைதியாகாது. அது தற்கொலைக்கு ஒப்பானதேயாகும். ஏனெனில் அத்தகைய அமைதியானது சிறந்த மானுட வாழ்வை நடத்துவதற்குத் தேவையான, உயர்ந்த, இன்றியமையாத கோட்பாடுகள் அனைத்தையும் கொடிய காட்டுமிராண்டித்தனத்தின் முன் பலியிடுவது போன்றதேயாகும். நம்மை எதிரிகள் தாக்கும்போது நாம் எதிர்த்துப் போரிடாமல் இருப்பதன் மூலம் போரை ஒழித்துவிட முடியாது. போரை ஒழித்திட, போரில் வெற்றி பெற்று, உண்மையான அமைதியை நிலைநாட்டிட வேண்டும் என்று மேலும் தன் வானொலி உரையில் குறிப்பிட்டார்.

பசிபிக் நாடுகள் கமிட்டி கேட்டுக் கொண்டதன்பேரில், அது நடத்தவிருந்த கருத்தரங்கிற்காக, 'இந்தியாவில தீண்டப்படாத வகுப்பு மக்களின் பிரச்சினை' என்ற தலைப்பில் ஓர் ஆய்வுக் கட்டுரையை அம்பேத்கர் 1942 டிசம்பரில் எழுதினார். 1942 டிசம்பர் மாதத்தில் கியூபெக் என்ற இடத்தில் நடைபெற்ற அக்கருத்தரங்கில் அம்பேத்கரின் கட்டுரையை என்.சிவராஜ் படித்தளித்தார். உலகின் பல பகுதிகளிலும் அடிமை முறையும், கொத்தடிமைத்தனமும் பண்ணையடிமை முறையும் மறைந்துவிட்டபோதிலும், இந்தியாவில் தீண்டாமை நீடிப்பது வருத்துதற்குரியதாகும் என்று அக்கட்டுரையில் அம்பேத்கர் குறிப்பிட்டிருந்தார். காங்கிரசுக் கட்சியிலுள்ள இந்துக்கள் செய்யும் பிரச்சாரத்தை நம்ப வேண்டாம் என்று அமெரிக்க மக்களைக் கேட்டுக் கொண்டார். சுதந்திரத்திற்காக இந்துக்கள் நடத்தும் போர் இந்தியாவில் தீண்டப்படாதவர்களாகக் கருதப்படும் கோடிக்கணக்கான மக்களின் சுதந்திரத்திற்கு எதிரானதாக இருக்குமா? இல்லையா?

என்பதைப் பற்றி அமெரிக்க மக்களே சொந்தமாக ஆய்ந்தறிந்து முடிவு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

1943 சனவரி *17*ஆம் நாள் அம்பேத்கர் சூரத்தில் சிவில் பயோனியர் பேரணியில் (Civil Pioneer Rally) பேசியபோது இராணுவப் பயிற்சி பெறுவதன் முதன்மையை வலியுறுத்தினார். நாடு விடுதலையடைந்த பின் பயிற்சி பெற்ற இராணுவ வீரர்களும் சிவில் பயோனியர்களும் நம் நாட்டை எதிரிகளிடமிருந்து காப்பதில் உதவுவார்கள் என்று கூறினார்.

சூரத்திலிருந்து அம்பேத்கர் பம்பாய்க்கு வருகை தந்தார். அன்று மாலை மராத்தா மற்றும் அதோடு தொடர்புடைய வகுப்பு மக்கள் அம்பேத்கருக்கு ஒரு வரவேற்பு விழாவை ஆர்.எம்.பட் உயர் நிலைப் பள்ளியில் நடத்தினார்கள். வரவேற்பினை ஏற்று அம்பேத்கர் உரையாற்றினார். பம்பாய் மாகாணத்திலும், சென்னை மாகாணத்திலும் இருபது ஆண்டுகள் ஆட்சியில் இருந்த பார்ப்பனர் அல்லாத கட்சிகள் வீழ்ச்சியடைந்ததற்கான காரணங்களை அங்கு அவர் விளக்கினார். 'பார்ப்பனர் அல்லாத கட்சிகள் தம் ஆட்சி அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்திக் கொண்டன. அதாவது தங்களுக்கு வேண்டிய ஆட்களுக்கு மட்டும் வேலை கொடுத்தனர். இதைத்தவிர வேறொன்றும் செய்யவில்லை. அவர்களை ஆதரித்த, அவர்களின் கட்சியைப் பின்பற்றிய பொதுமக்களும் விவசாயிகளும், தொழிலாளர்களுமான வெகு மக்களுக்கு நன்மை தரவல்ல விரிவான கொள்கைகளோ, செயல் திட்டங்களோ அவர்களிடம் இல்லை. இதில் மிகவும் வருந்துதற்குரியது என்னவென்றால், பார்ப்பனர் அல்லாத கட்சிகளால் அரசு வேலைகளில் அமர்த்தப்பட்டவர்கள் தாம் எந்த வகுப்பிலிருந்து வந்தோம் என்பதை மறந்து விட்டு அந்நிய நாட்டினரைப் போல் இறுமாப்புடன் திமிராக நடந்து கொண்டனர். மேலை நாடுகளில் சனநாயகம் அதன் முழுப்பலனையும் அளிக்கத் தவறிவிட்டது; காரணம் என்ன வெனில் ஆட்சி பிற்போக்காளர்களின் கையில் இருப்பதேயாகும். இந்தியாவில் சிறுபான்மையினராக இருக்கின்ற பார்ப்பனர்களிடம் ஆட்சி அதிகாரம் அளிக்கப்பட்டால் அதே நிலைதான் இங்கும் ஏற்படும். ஓர் அரசியல் கட்சி வலிமை மிக்கதாக உருவாக வேண்டுமானால் முக்கியமான மூன்று கூறுகள் அதனிடம் இருக்க வேண்டும். முதலாவது, மற்ற கட்சிகளின் தலைவர்களுக்கு இணையாக ஒப்பிடக் கூடிய தகுதி வாய்ந்தவராக இக்கட்சியின் தலைவர் இருக்க வேண்டும். இரண்டாவது, கட்டுப்பாடு மிக்க

கட்சியாக இது விளங்க வேண்டும். மூன்றாவது, தெளிவான செயல் திட்டங்களை இக்கட்சி கொண்டிருக்க வேண்டும். சனநாயகத்தைப் பிற்போக்காளர்களிடமிருந்து மீட்கவும், அதை வெற்றியடையச் செய்யவும், இம்மூன்று இன்றியமையாத தகுதி களைக் கொண்டவையாக இந்தியாவில் அரசியல் கட்சிகள் இருக்க வேண்டும்' என்று அம்பேத்கர் கூறினார்.

இந்தியாவின் சிறந்த தேச பக்தரும், சீர்திருத்தவாதியுமான ரானடேயின் பிறந்தநாளையொட்டி 1943 சனவரி 19ஆம் நாள் பூனாவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் உரை நிகழ்த்த வேண்டி அம்பேத்கரை அழைத்திருந்தனர். அதற்காக அம்பேத்கர் பூனாவிற்குச் சென்றார். அங்கு அவர் ஆற்றிய சொற்பொழிவு அவர் வாழ்நாளில் நிகழ்த்திய முக்கியமான உரைகளில் ஒன்றாக அமைந்தது.

ஒரு மனிதனின் சிறப்பியல்புகளை மூன்று வெவ்வேறு தேற்றங்களின் அடிப்படையில் மதிப்பீடு செய்தல் வேண்டும் என்று உரையின் தொடக்கத்திலேயே கூறினார். ஆண்டவனின் புனிதத்திட்டத்தின்படிதான் வரலாறு நடந்து கொண்டிருக்கிறது; தீர்ப்பு நாளின்போது, இப்புனிதத் திட்டம் முடிவுக்கு வரும் வரையில் மனிதச் சமுதாயம் போர்களிலும், துன்பங்களிலும் உழன்று கொண்டுதானிருக்கும் என்பது ஆகஸ்டைன் (Augustine) கூறும் தத்துவம். இது இன்று மதவாதிகளின் நம்பிக்கையாக மட்டும் இருக்கின்றது. பக்ளியின் (Buckle) தத்துவம், வரலாற்றை நிலவியலும், இயற்பியலும் உருவாக்குகின்றன என்று சொல்கிறது. காரல் மார்க்சின் கம்யூனிசத் தத்துவமோ பொருளாதாரச் சக்திகளே வரலாற்றைத் தீர்மானிக்கின்றன என்று கூறுகிறது. இவ்விரண்டு தத்துவங்களும் முழுமையான உண்மைகளைக் கொண்டிருக்க வில்லை. மனிதனுக்கு வெளியே உள்ள சக்திகளே எல்லாவற்றை யும் தீர்மானிக்கின்றன என்றும், வரலாற்றின் நிகழ்வுகளை முடிவு செய்வதில் மனிதன் ஒரு சக்தியாக இல்லையென்றும் இவர்கள் கூறுவது முற்றிலும் தவறாகும். இரண்டு கூழாங்கற்களை உரசி அதிலிருந்து தீப்பொறியை உண்டாக்குவதற்கு மனிதனின் பங்க ளிப்பு தேவையானதாக இருக்கின்றது.

போர்த்திறன் மிக்க மாவீரர்கள் அவர்கள் ஆண்ட காலத்தில் இருந்ததைவிடச் சிறியதான நாட்டையே விட்டுச் சென்றனர். அவர்கள் சமூகத்தில் எத்தகைய பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. ஒரு மனிதனின் சிறப்பினை எதைக் கொண்டு வரையறை செய்வது என்பது பற்றி அம்பேத்கர் விளக்கினார்.

இதற்கு 'ஒருவனின் அர்ப்பணிப்பு என்பதே அளவுகோல்' என்கிறார் கார்லைல். 'துப்புரவுப் பணி செய்தல் தோட்டியின் இயல்பான வேலை; அதுபோல் இவ்வுலகைத் துப்புரவு செய்வதற் காகச் சிறந்த மனிதர்கள் தோன்றுகிறார்கள். தெய்வத் தண்டனையை நிறைவேற்றும் ஒரு கருவியாக இயல்பான பேராற்றல் வாய்ந்த அல்லது தெய்வாம்சம் பொருந்திய ஒரு உயர்ந்த மனிதன் இவ்வுலகில் படைக்கப்படுகின்றான்' என்று ரோஸ்பெரி கூறுகிறார். இந்த இலக்கண வரையறைகளில் ஓரளவே உண்மை உள்ளது. அவற்றில் ஒன்றுகூட முழுமை வாய்ந்ததாக இல்லை என்று அம்பேத்கர் விளக்கினார். அதன்பின் அவருடைய உரையின் திரண்ட கருத்தினை எடுத்துரைத்தார். சமூகத்தை உயர்த்த வேண்டும் என்ற விழுமிய நோக்கத்தால் உந்தப்படுபவரே உயர்ந்த மனிதர்; அவர் சமூகத்தின் கறைகளைக் கழுவிடும் தோட்டியாகவும் பாவங்களைப் போக்கிடுபவராகவும் திகழ வேண்டும். இந்த இலக்கணத்தின்படிப் பார்த்தால், ரானடே அவர் வாழ்ந்த காலத்தி லிருந்த தகுதிப்பாடுகளின்படி மட்டுமின்றி எல்லாக் காலங்களிலும் சிறந்த மனிதராகக் கருதப்படுவார். சமூக அநீதியையும், சமூகத் தீமைகளையும் எதிர்த்து, சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென்பதற்காக இடையறாது வாழ்நாள் முழுவதும் போராடி யவர் ரானடே; நொந்து நைந்துகிடந்த இந்துச் சமூகத்திற்குப் புத்துயிரூட்டவும் உரிய உரிமைகளைப் பெற்றுத் தரவும் சமூக சனநாயகத்தை உருவாக்கவும் ரானடே போராடினார் என்று மேலும் அம்பேத்கர் கூறினார்.

அம்பேத்கர் ரானடேவைக் காந்தியுடனும் ஜின்னாவுடனும் ஒப்பிட்டுப் பேசினார். தம்மைப் பற்றி அகந்தை பாராட்டுவதில் காந்திக்கும் ஜின்னாவுக்கும் இணையாக இரண்டு பேரைக்கூட நாம் பார்க்க முடியாது. இவர்கள் எதையுமே தம்முடைய உயர்வுக்காகவே பயன்படுத்திக் கொள்வார்கள். நாட்டின் நலன் என்பது இவர்களை உயர்த்திப் பிடிப்பதாக இருக்க வேண்டும். இச்சகம் பேசுவோர் இவர்களிடம் இறைஞ்சி நிற்கின்றனர். அதனால் இவர்கள் தங்களை வாய்மை வழுவாதவர்கள் என்று கூறிக் கொள்கிறார்கள்.

இந்தியாவில் பத்திரிக்கைத் துறை இதற்குமுன் ஒரு தொழிலாக இருநதது. ஆனால் இப்போது அது ஒரு வணிகமாகிவிட்டது. ஆகவே தங்கள் தலைவர்களின் பெருமையைப் பரப்பிட வெற்றுத்துதிபாடி காங்கிரசுப் பத்திரிக்கைகள் எழுதுகின்றன என்று கூறி அம்பேத்கர் கண்டித்தார்.

அம்பேத்கர் அவருடைய உரையின் இறுதியில் தலைவரிடம் ஒருவர் கொண்டுள்ள அளப்பரிய அன்பினை வெளிப்படுத்துவது என்பதற்கும், கண்மூடித்தனமாக அவரைப் பின்பற்றுவது என்பதற்கும் நிறைய வேறுபாடு இருக்கிறது என்று கூறினார்.

அம்பேத்கரின் இவ்வுரை 'ரானடே, காந்தி, ஜின்னா' என்று தலைப்பிடப்பட்டு நூலாக வெளியிடப்பட்டது. அந்நூலுக்கு அவர் எழுதிய முன்னுரையில் ஒருவர் கொள்கைகளில் தீவிரமான பற்றுதலோ கடுமையான எதிர்ப்பு உணர்வுகளோ உடையவராக இல்லாவிட்டால், அவருடைய வாழ்நாளில் எத்தகைய சாதனையையும் அவரால் படைக்க முடியாமல் போய்விடும்; உயர்ந்த கொள்கைகளுக்கான போராட்டங்களுக்கு எவ்வகையிலும் அவரால் உதவிட முடியாது என்று எழுதியுள்ளார். நான் அநீதியை, சர்வாதிகாரத்தை, பகட்டாரவாரத்தை, பித்தலாட்டத்தை வெறுக்கிறேன்; இத்திய குணங்களைக் கொண்டிருப்பவர்களை வெறுக்கிறேன். என்னைப் பற்றிக் குறை கூறுபவர்களுக்கு ஒன்று கூறிட விரும்புகின்றேன். 'நான் கொண்டுள்ள இத்தகைய வெறுப்புணர்வை என்னிடமுள்ள ஓர் உண்மையான ஆற்றலாக நான் கருதுகின்றேன். இந்த வெறுப்புணர்வு, நான் ஏற்றுக் கொண்டுள்ள உயர்ந்த கொள்கைகளிடம் எனக்குள்ள ஆழ்ந்த பற்றின் எதிர் விளைவே ஆகும். இதற்காக நான் வெட்கப்படவில்லை' என்று எழுதியுள்ளார். ஒரு தனிமனிதரைவிட நாடு உயர்ந்தது என்பதை என்றேனும் ஒருநாள் என் நாட்டு மக்கள் உணருவார்கள் என்று நம்புவதாக மேலும் அம்முன்னுரையில் குறிப்பிட்டிருந்தார்.

வெறுப்புணர்வு கொள்ளும் கோட்பாட்டை அம்பேத்கர் புத்தரின் கொள்கையிலிருந்து பெறவில்லை. பௌத்தத்துக்காக அர்ப்பணிப்புச் செய்யும் பணி அக்கட்டத்தில் அவரை ஆட்கொண்டிருக்கவில்லை. வெறுப்பை வெறுப்பின் மூலம் அகற்ற முடியாது. அதை அன்பினால் தான் மாற்ற முடியும் என்பது புத்தரின் அழிவிலாத் தத்துவம். அம்பேத்கர் அகிம்சைக் கொள்கையை அதன் முழுமையான தன்மையில் கடைப்பிடிக்க விரும்பினார்; ஆனால் அகிம்சையை நிலைநாட்டுவதற்காகத் தேவையான அளவில் வன்முறையைப் பயன்படுத்தலாம் என்ற கருத்தினையும் கொண்டிருந்தார். காந்தியின் அகிம்சைக் கொள்கை சமண சமயத் தத்துவத்தின்படி அமைந்ததாகும்; அது பௌத்தத்தின் பாற்பட்டதன்று. சமண சமயம் அகிம்சையை அதன் விளிம்பிற்கே கொண்டு சென்றிருக்கிறது. ஆனால் புத்தர் தன் அகிம்சைத் தத்துவத்தை அத்தன்மையில் போதிக்கவில்லை என்று அம்பேத்கர் கருதினார்.[95]

II

முறையாகத் திட்டமிடப்படாமல் ஒழுங்கற்ற முறையில் நடத்தப்பட்ட ஆகஸ்ட்டுப் புரட்சியாளர்களின் வன்முறைக் கலவ ரங்கள் வெடித்தன; வெகுமக்கள் சட்டம் ஒழுங்கை மீறினர்; வெறிச் செயல்களில் ஈடுபட்டனர். சில வாரங்களுக்குப் பின் ஆகஸ்ட்டுக் கிளர்ச்சி ஓய்ந்தது.

ஆகஸ்ட்டுப் புரட்சியின் பெருந்தோல்வியை உணர்ந்த காந்தி, 1943 பிப்ரவரி 10ஆம் நாள், இருபத்தொரு நாள் உண்ணா நோன்பினைத் தொடங்கினார். ஆகாகான் மாளிகையில் சிறை வைக்கப்பட்டிருந்த அவரை விடுதலை செய்ய வேண்டுமென்று அரசுக்கு ஒரு நெருக்குதலைக் கொடுக்க வேண்டுமென்பதே உண்ணா நோன்பின் உள்நோக்கமாகும். காந்தியின் உண்ணா நோன்பு இந்திய நாட்டையே உலுக்கியது. 'காந்தியை விடுதலை செய்!' என்ற முழக்கங்கள் நாடெங்கும் வீறிட்டு ஒலித்தன. வைசிராயின் நிர்வாகக் குழுவில் உறுப்பினர்களாக உள்ளவர்கள் உடனே பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்றது. அம்பேத்கரும், ஸ்ரீவத்ஸவாவும் இக்கோரிக்கையைப் பொருட்படுத் தவில்லை. ஆனால் இதன் நெருக்குதலுக்குப் பணிந்து ஆனே, மோடி, சர்க்கார் ஆகிய மூவரும் தம் பதவியைத் துறந்தனர். அவர்களுடைய பதவி விலகல் உண்ணாநோன்பு இருந்த மகாத் மாவை மகிழ்வித்தது. இச்சூழ்நிலை காரணமாக அம்பேத்கரின் புகழும் பெருமையும் பாதிக்கப்படவில்லை. காந்தியின் உண்ணா நோன்பு முடிந்த சில நாட்கள் கழித்து, அம்பேத்கரின் 51ஆவது பிறந்தநாளையொட்டிய செய்தியாக சர். சிமன்லால் சத்தல்வாட், இயல்பான அறிவாற்றலும், ஆள்வினையுடைமையும் துணிவும் கொண்ட ஈடு இணையற்ற ஒரு தலைசிறந்த மனிதராக அம்பேத்கர் விளங்குகிறார் என்று புகழ்ந்துரைத்தார்.

உழைக்கும் வகுப்பு மக்களின் நலன்களை மேம்படுத்த வேண்டுமென்பதில் அம்பேத்கர் ஆழ்ந்த ஈடுபாட்டுடன் செயலாற் றிக் கொண்டிருந்தார். அவர்களுடைய தேவைகளை, குறைபாடு களை, சிறப்புகளை, துன்பங்களை அம்பேத்கர் நன்கறிந்திருந்தார். அம்பேத்கருக்கு முன், தொழிலாளர் நல அமைச்சராக சர்.பிரோஸ் கான் நூன் இருந்த காலத்தில், முத்தரப்புத் தொழிலாளர் மாநாட்டின் போது தொழிலாளர் நலனுக்காக நிலைக்குழு ஒன்று அமைக்கப்பட் டது. அந்த நிலைக்குழுவின் மூன்றாவது கூட்டம் அம்பேத்கர் தலைமையில் 1943 மே 7ஆம் நாள் பம்பாயில் மாகாண அரசுத்

தலைமைச் செயலகத்தில் கூடியது. அக்கூட்டத்தில் ஆய்வு செய்து முடிவெடுக்கப்படுவதற்காகச் சில முக்கியமான முன்மொழிவுகள் கொண்டு வரப்பட்டிருந்தன. போர் தொடர்பான உற்பத்திப் பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிற்சாலைகள், தொழிற்பட்டறைகள் ஆகியவற்றில் மட்டுமே 'தொழிலாளர்-நிர்வாகத்தினர் கூட்டுக்குழுக் களை அமைக்க வேண்டும் என்பது அவற்றுள் ஒன்றாகும். அத்தகைய கூட்டுக்குழுக்கள் அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் ஏற்படுத்தப்பட்டிருந்தன. வேலை வாய்ப்புத் தேடித்தரும் அலுவல கத்தை ஏற்படுத்த வேண்டும் என்பது நிலைக்குழுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்படுவதற்காகக் கொண்டுவரப்பட்டிருந்த இரண்டா வது முக்கியச் செய்தியாகும். பல்வேறு திட்டங்களின்கீழ்த்தொழில் நுட்பப் பயிற்சி பெற்ற தொழிலாளர்களையும், ஓரளவே பயிற்சி பெற்ற தொழிலாளர்களையும் அவர்கள் பயிற்சியை முடித்தபின் வேலையின்றி வீதிகளில் தவிக்க விடப்படக்கூடாது; அவர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தரவேண்டும்; இதற்கு வேலை வாய்ப்புத் தேடித்தரும் அலுவலகம் உதவும் என்ற நோக்குட னேயே இத்திட்டம் கொண்டுவரப்பட்டிருந்தது.

பம்பாய் மாகாணத்தின் இந்தியத் தொழிலாளர் கூட்டமைப்பின் செயற்குழு தொழிலாளர் நல அமைச்சரான டாக்டர் அம்பேத்கருக் குப் பம்பாயில் *1943* மே *10* அன்று தேநீர் விருந்தொன்றை அளித்தது. அப்போது அம்பேத்கர் தொழிற்சங்கங்களின் நோக்கங் கள், அவற்றின் வலிமையற்ற நிலை ஆகியவற்றைப் பற்றித் திறனாய்வு செய்து பேசினார். தொழிற்சங்கங்கள் தமக்குள் பிளவுபட்டுக்கிடக்கும் இந்நிலையைச் சுட்டிக் காட்டினார். இந்தியா வில் தொழிலாளர் இயக்கம் செறிவற்றதாகவும், போதிய ஈடுபாடற்ற தாகவும் இருக்கிறது என்று கருதுவதாகச் சொன்னார். ஆகவே குறைகளைக் கண்டறிந்து அவற்றைக் களைந்திட முன்வருமாறு வேண்டுகோள் விடுத்தார். அவ்வுரையின் இறுதியில், 'தொழிலாளர் கள், இந்தியாவில் தொழிலாளர்களின் அரசை ஏற்படுத்துவதற்காகப் பாடுபட வேண்டும். இதுதான் என் நோக்கமாகும். இந்தியா சுதந்திரம் அடைவது மட்டும் போதாது; அதைவிட மிகவும் முக்கியமானது - அந்தச் சுதந்திரம் யாருடைய கையில் இருக்க வேண்டும் என்பதேயாகும்' என்று குறிப்பிட்டார்.

அதேநாளில், பம்பாய் வணிகச் சங்கத்தில் அம்பேத்கர் உரையாற்றினார். 'போரினால் உலகம் நலிவுற்றுக் கிடக்கிறது. இவ்வுலகம் மூன்று நோய்களால் தாக்குண்டுள்ளது. முதலாவது

நோய், ஒரு நாடு மற்றோர் நாட்டின்மீது செலுத்தும் ஏகாதிபத்திய மாகும்; இரண்டாவது நோய், மனிதன்பேரில் நிறத்தின் அடிப்படையில் கொண்டுள்ள இனவெறியாகும். இனவெறியை எதிர்த்துப் போராடி எவ்வகையிலேனும் அதை ஒழித்திட வேண்டும். அப்போதுதான் அமைதி மேலும் குலைவுறாமல் நீடித்து நிலவும். மூன்றாவது கொடிய நோய், வறுமையாகும்; நாடுகளுக்கு இடையே சமமான நிலையை ஏற்படுத்த வேண்டுமானால் நலிவுற்றிருக்கும் நாடுகளை வலிமை பெறச் செய்ய வேண்டும். இங்கிலாந்திலிருந்தும் மற்ற அய்ரோப்பிய நாடுகளிலிருந்தும் இந்தியாவிற்கு முதன்முதலில் வந்த அய்ரோப்பியர்கள் (மகாராட்டிர) பேஷ்வாக்களை நத்திப் பிழைத்தது ஏன் என்பதையும், ஆனால் அதன்பின் மேலைநாடுகள் தாம் மிக உயர்ந்தவை என்ற எண்ணத்துடன் கீழைநாடுகளை ஆதிக்கம் செய்ததற்குக் காரணம் என்ன என்பதையும் விளக்கி விட்டு, மேலைநாடுகளின் பொருளாதார மற்றும் தொழில் வலிமையே இதற்குக் காரணமாகும் எனக் கூறினார். ஆகவே இந்தியாவும் பொருளாதாரத்திலும் தொழில் துறையிலும் வலிமை பெற்ற நாடாக உருவானால்தான் ஏகாதிபத்தியச் சிக்கலையும் இனவெறிக் கொடுமையையும் தீர்க்க முடியும்' என்று விளக்கினார்.

மக்களின் வறுமை நிலையைப் பற்றி அவர் விளக்கியபோது, மனித நாகரிகத்தையே அழிக்கின்ற போருக்காக நாடுகள் கோடிக் கணக்கில் செலவிட்டுவரும் தொகை நாளுக்குநாள் மிக அதிகமாகி வருவது குறித்துக் குறிப்பிட்டு, தன் அச்சத்தையும் ஆழ்ந்த கவலையையும் தெரிவித்தார். 'பிரிட்டிஷ் போருக்காக ஒரு நாளைக்குப் பதினான்கு கோடி ரூபாய் செலவிடுகிறது, அமெரிக்காவும் அன்றாடம் கிட்டத்தட்ட இதே அளவு தொகையைச் செலவு செய்கிறது. . இந்தியாவும் பெருந்தொகையைச் செலவு செய்கிறது. இந்த நாடுகள் போரில்லாத அமைதிக்காலத்தில் வறுமையை ஒழித்திட, வெகுமக்களின் துன்பங்களைத் துடைத்திட வேண்டி- போர்க்காலத்தில் செலவிடும் இப்பெருந் தொகையில் பாதியளவு கூடச் செலவிடுவதில்லையே. இவ்வுலகம் தன்னைத் திருத்திக் கொள்ள வேண்டும். வறுமையை ஒழிப்பதற்காக நீண்டகாலமாகப் பேணிப் பின்பற்றிவந்த சில தனிச்சிறப்புரிமைகளை விட்டுக் கொடுக்க முன்வர வேண்டும்' என்று மேலும் கூறினார்.

இந்திய அரசியல் சிக்கலைத் தீர்ப்பதற்காக அம்பேத்கர் முன்வைத்த ஒரு திட்டம் குறித்த விவாதங்கள் செய்தித்தாள்கள் வாயிலாக அச்சமயத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்தன. 'எல்லை

வரையறைக் குழு' ஒன்றை அமைக்கவும், இரண்டு விதமான கருத்துக் கணிப்பு வாக்கெடுப்புகளை நடத்தவும் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் ஒரு சட்டம் இயற்றப்பட வேண்டும் என்பதே அம்பேத்கரின் திட்டமாகும். அதன்படி நாடுமுழுவதிலுமுள்ள முஸ்லீம்கள் தங்களுக்குப் பாக்கிஸ்தான் வேண்டும் என்கிறார்களா என்பதைத் தீர்மானிப்பதற்காக முதலாவது கருத்துக் கணிப்பும்; அமையவிருக்கும் பாக்கிஸ்தான் பகுதியில் வாழும் முகம்மதியர் அல்லாதார் பாக்கிஸ்தானிலேயே இருக்க விரும்புகின்றனரா இல்லையா என்பதைக் கண்டறிவதற்காக இரண்டாவது கருத்துக் கணிப்பும் நடத்த வேண்டும். முகம்மதியர் அல்லாதவர்கள் பாக்கிஸ்தானிலேயே இருந்திட விரும்பினால் இப்போது இருக்கின்ற எல்லைகளில் மாற்றம் ஏதும் செய்ய வேண்டியதில்லை. அவ்வாறின்றி அவர்கள் பாக்கிஸ்தானில் இருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தால், முகம்மதியர் எந்தெந்த மாவட்டங்களில் பெரும்பான்மையினராக வாழுகின்றனர் என்பதைக் கண்டறிந்து வரையறை செய்வதற்காக எல்லைக் குழு ஒன்றை அமைக்க வேண்டும். அதன்பின் இரண்டு ஆண்டுகள் கழித்து முகம்மதியர் தனியாகப் பிரிந்துபோக விரும்புகின்றனரா இல்லையா என்பதைப் பற்றி முடிவு செய்ய வேண்டும். இவ்வாறு அம்பேத்கர் தன் திட்டத்தில் கூறியிருந்தார்.

தொழிலாளர் முத்தரப்பு மாநாடு, தொழிலாளர் நல அமைச்சர் டாக்டர் அம்பேத்கர் தலைமையில், தில்லியில் *1943* செப்டம்பர் *6, 7* ஆகிய நாட்களில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் தொழிலாளர்களின் மேம்பாட்டிற்கான கோரிக்கைகளை அம்பேத்கர் முன்வைத்தார். உணவு, உடை, உறையுள், கல்வி, கலாச்சார மேம்பாட்டு வசதிகள், மருத்துவம் ஆகியவையே தொழிலாளர்கள் கோரும் தேவைகள் என அம்பேத்கர் விளக்கினார். தொழிலாளர்களின் கூலி மற்றும் வருவாய் விவரங்களைக் கண்டறியவும், அவ்வாறு திரட்டிய புள்ளி விவரங்களின் அடிப்படையில் தொழிலாளர்களின் வாழ்க்கைப் பாதுகாப்பிற்கான ஒரு கொள்கைத் திட்டத்தை உருவாக்கவும் அரசு முன்வர வேண்டும் எனக் கோரினார். ஒரு தீர்மானம் அம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

இம்பீரியல் கலந்தாய்வுக்குழு அமைக்கப்பட வேண்டுமெனக் கர்ட்டின் என்பவர் கூறிய கருத்துகள் மீதான தன்னுடைய எண்ணங்களை, அம்பேத்கர் செப்டம்பர் மாதத்தில் ஒரு பேட்டியின்போது வெளிப்படுத்தினார். குடியேற்ற நாடுகளின் நலன் கருதி, பிரிட்டிஷ் காமன்வெல்த் அமைப்பில் இந்தியாவும் தானாக

விரும்பிச் சேர்ந்திட வழி வகுக்கப்பட வேண்டும்; பிரிட்டிஷ் அரசு இந்திய மக்களை அடிமை மக்களாக வைத்திருப்பதாலும், பிரிட்டிஷாரோடு சமமான குடிமக்களாக நடத்தாததாலும் இந்தியர் களுக்குப் பிரிட்டிஷ் அரசின் கீழ் நீடித்திருக்க விருப்பம் இல்லை என்று அம்பேத்கர் சுட்டிக் காட்டினார்.

தீண்டப்படாத வகுப்பினர் இராணுவத்தில் உயர் அதிகாரிகளா கப் பதவி வகிக்கக் கூடாது என்று இருக்கின்ற தடையை நீக்க வேண்டும் என்று கோரி, அய்க்கிய மாகாணங்களைச் சேர்ந்த தீண்டப்படாத வகுப்பு உறுப்பினரான பியாரிலால் குரீல் தாலிப் மத்தியச் சட்டசபையில் கொண்டுவந்த தீர்மானம் 1943 அக்டோபர் மாதம் நிறைவேறியது.

தன்னுடைய முயற்சியால் மத்தியச் சட்டசபையிலும், மத்திய மேல் சட்டசபையிலும் தீண்டப்படாத வகுப்பினர்களுக்கான பிரதிநிதித்துவம் கூடுதலாக்கப் பெற்றதுபற்றி அம்பேத்கர் மன நிறைவு கொண்டார். தான் அமைச்சரான பிறகு தீண்டப்படாத வகுப்பினருக்காக அவர் பெற்றுத் தந்துள்ள நன்மைகளை 1943 நவம்பரில் தில்லியில் தீண்டப்படாத வகுப்புத் தலைவர்களிடமும் தொழிலாளர்களிடமும் விளக்கிப் பேசினார். தீண்டப்படாதவர் களுக்கு மத்திய அரசு உத்தியோகங்களில் $8^{1}/_{3}$விழுக்காடும், இலண்டனில் தொழிற்கல்விப் படிப்பில் தனி இட ஒதுக்கீடும், மத்தியச் சட்டசபையில் கூடுதலாக ஒரு இடமும், மாகாணங்கள் அவையில் புதியதாக ஒரு இடமும் புதிய உரிமைகளாகப் பெறப்பட்டுள்ளதை அம்பேத்கர் விளக்கினார்.

அரசு உத்தியோகங்களில் ஒரு குறிப்பிட்ட விழுக்காட்டளவிற் குத் தீண்டப்படாத வகுப்பினர்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கிட வேண்டுமென்று அம்பேத்கர் இரண்டு காரணங்களின் அடிப்படை யில் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார். அரசுப் பதவிகளில் சாதி இந்துக்களே பெரும்பான்மையினராக ஆதிக்கம் பெற்றிராமலிருந் தால், தீண்டப்படாத வகுப்பு மக்களுக்குச் சாதி இந்துக்கள் நீண்ட காலமாக இக்கொடுமைகளை இழைத்து வந்திருக்க முடியாது என உறுதியுடன் நம்புவதாக அம்பேத்கர் கூறினார். இரண்டாவதாக, அரசு உத்தியோகங்களில் இடம் பெறுவதால் அரசிடமிருந்து தீண்டப்படாத வகுப்பு மக்கள் தங்கள் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான வாய்ப்பு அதிகமாகிறது; மேலும் அவர்களுடைய பொருளாதார நிலை மேம்பாடு அடைகிறது என்று கருதுவதாகக் குறிப்பிட்டார்.

ஒருமுறை தில்லியில் பணிபுரிந்து கொண்டிருந்த தென்னிந்தியாவைச் சேர்ந்த ஓர் அரசு அதிகாரி அம்பேத்கரிடம் 'உங்களுடைய அரசியல் என்பது அரசு உத்தியோகங்களின் பதவி வேட்கையாக மட்டும்தானே இருக்கிறது' என்று பழித்துப் பேசினார். 'அப்படியானால், மொத்த இடங்களில் 90 பங்கு இடங்களை நீங்கள் கைப்பற்றிக் கொண்டிருப்பது ஏன்? அரசு உத்தியோகத்தின்மீது உங்களுக்கு அவ்வளவு வெறுப்பு இருப்பது உண்மையானால், இந்த வேலைகளை நீங்கள் விட்டுவிட்டு வெளியேறி எங்களுக்கு வழிவிடுங்கள்' என்று அம்பேத்கர் பதிலளித்தார்.

தொழிலாளர் நல நிலைக்குழு அம்பேத்கர் தலைமையில் 1944 சனவரி 26ஆம் நாள் மீண்டும் லக்னோவில் கூடியது. அங்கிருந்து அவர் கான்பூர் சென்றார். அங்கு சனவரி 29ஆம் நாள் தீண்டப்படாத வகுப்புகளின் பேரவையின் ஆண்டுவிழாக் கூட்டத்தில் கலந்து கொண்டார். அக்கூட்டத்திற்கு என்.சிவராஜ் தலைமை வகித்தார். தீண்டப்படாத வகுப்பு மக்கள், ஆட்சி அதிகாரம் ஆங்கிலேயரிடமிருந்து இந்தியர்களின் கைக்கு மாற்றப்படுவதை எதிர்க்கவில்லை; ஆனால் நாகபுரியில் 1942 சூலை மாதத்தில் நடத்தப்பட்ட தீண்டப்படாத வகுப்பினர் மாநாட்டின் கோரிக்கைகளை ஆட்சி அதிகாரம் மாற்றப்படுவதற்குமுன் நிறைவேற்றிட வேண்டும் என்று தன் தலைமை உரையில் கூறினார்.

அங்குப் பெருந்திரளாகக் கூடியிருந்த மக்கள்முன் அம்பேத்கர் உரையாற்றினார். இந்திய ஆட்சி அதிகாரத்தில் இந்துக்கள், முகம்மதியர்கள், தீண்டப்படாதவர்கள் ஆகிய மூன்று பிரிவினரும் இடம் பெற்றிருக்க வேண்டும். இந்திய ஆட்சியை நடத்திச் செல்வதில் தீண்டப்படாத வகுப்பினர்க்கு உரிய பங்கினை அளிக்காவிட்டால், அவர்கள் அதை அடைவதற்காகப் போராட்டம் நடத்துவார்கள் என்று அறிவித்தார். தொழிற்கல்வியிலும் மற்ற உயர்படிப்பிலும் அரசு அளித்துள்ள வாய்ப்புகளை மாணவர்கள் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று மாணவர்களுக்கு அறிவுரை கூறினார். வெல்ல முடியாத துணிவுடனும் தளரா ஊக்கமுடனும், நடுக்கமில்லாத நம்பிக்கையுடனும் போராடிய மூத்த தலைவர்களை இளைய தலைவர்கள் தவறாகப் புரிந்து கொள்ளக் கூடாது என்று வேண்டுகோள் விடுத்தார்.

1944 ஏப்பிரல் மாதத்தில், அம்பேத்கர் தொழிலாளர்களின் நலனை மேலும் உயர்த்துவதற்காகப் புதியதொரு நடவடிக்கையை மேற்கொண்டார். நிலையாக இயங்கிக் கொண்டிருக்கும் தொழிற்

சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்குச் சம்பளத்துடன் கூடிய விடுமுறை வழங்க வேண்டும் என்று கோரும் ஒரு திருத்த மசோதாவை மத்தியச் சட்ட சபையில் முன்மொழிந்தார்.

இதற்குச் சில நாட்கள் கழிந்தபின் பூனாவில் ஆகாகான் மாளிகையில் காவலில் வைக்கப்பட்டிருந்த காந்தி உடல் நலக் குறைவு காரணமாக விடுதலை செய்யப்பட்டார். சிறையிலிருந்து வெளிவந்ததும் காந்தி பஞ்ச்கானிக்குச் சென்றார். காவல் கைதியாக காந்தி உண்ணாநோன்பு இருந்தபோது அவரால் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஒரு புதிய திட்டத்தை ஜின்னாவுக்கு அனுப்பியிருப் பதாக இராசகோபாலாச்சாரி பஞ்ச்கானிலிருந்து அறிவித்தார். காந்தி-இராசகோபாலச்சாரியின் இந்தத் துரோகத் திட்டம்பற்றித் தேசியப் பத்திரிக்கைகள் தேள் கொட்டிய திருடனைப் போல் அமைதியாக இருந்தன. மிதவாதத் தலைவர்கள் இத்திட்டம் இந்தியாவின் பாதுகாப்பிற்கு ஆபத்தானதாகும் என்றனர். இத்திட்டத்திற்கு இராசகோபாலாச்சாரி மட்டுமே காரணமானவர் அல்லர் என்று சாவர்க்கர் கூறினார்.

III

இந்த அவலமான நிலையை அம்பேத்கர் அரசியல் சட்டக் கண்ணோட்டத்துடன் கூர்ந்து நோக்கி வந்தார். இராசகோபாலாச்சாரி யின் திட்டத்தைப் பற்றி, 'அது நல்லறிவை அவர் மீண்டும் பெற்றது போன்றதாகும்' என்று அம்பேத்கர் குறிப்பிட்டார். ஆனால் சில நாட்களுக்கு முன் பசிபிக் நாடுகள் தொடர்புக் குழுவிற்கு அளித்த அறிக்கையில் இராசகோபாலாச்சாரியின் இச் செயலை அம்பேத்கர் கண்டித்திருந்தார். இந்தியாவை இரண்டாகப் பிரிக்கும் கொள்கையைக் காந்தி ஏற்றுக் கொண்டுள்ளதை அம்பேத் கர் வரவேற்றார். காந்தியே முன்வந்து இத்திட்டத்தை முன்வைத் திருந்தால் - அது நிபந்தனையற்றதாகவும் இருந்திருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்கும் என்று கருதினார். கருத்துக் கணிப்புத் திட்டத்தை ஜின்னா ஏற்க மறுத்தது ஏன் என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை; கருத்துக் கணிப்பு பற்றிப் பயப்பட இடமிருக்கிறது; ஆனால் எப்படியிருப்பினும் மக்கள்தான் முடிவு செய்யும் நீதிபதிகளாக இருக்க வேண்டும் என்று அம்பேத்கர் கூறினார்.

இதுபற்றி முடிவெடுத்திட காந்தி இவ்வளவு நீண்டகாலம் எடுத்துக் கொண்டதற்காக அம்பேத்கர் அவரைக் குறை கூறினார்.

பாக்கிஸ்தான் கோரிக்கையைக் காந்தி உறுதியுடன் எதிர்ப்பதாக நம்பிய அவருடைய நண்பர்கள் பிரிவினையைத் தொடர்ந்து எதிர்த்து வந்தனர்; ஆனால் காந்தி இப்போது பிரிவினைக்குத் தன் இசைவைத் தெரிவித்துவிட்டதன் மூலம் பிரிவினையைத் தீவிரமாக எதிர்த்த அந்த நண்பர்களின் நிலை நட்டாற்றில் கைவிடப்பட்டது போலாகிவிட்டது என்று அம்பேத்கர் காங்கிரசுக் காரர்களை மட்டந்தட்டிப் பேசினார். காந்தியை நம்பியவர்களின் நிலையோ மக்கள் பார்வையில் மதிப்பிழந்துவிட்டது. இந்து மகாசபையின் தேச ஒற்றுமை முழக்கத்தை இந்துக்களால் நடத்தப்படும் பத்திரிக்கைகளே முடக்கிவிடும் என்று அம்பேத்கர் குறிப்பிட்டார். அம்பேத்கரின் கூற்று உண்மையாகிவிட்டது. இந்தியா பிளவுபடக் கூடாது என்பவர்களின் புகலிடமாக இந்து மகாசபை விளங்கியது. இந்துக்களின் பத்திரிக்கைகளைப் பற்றி அம்பேத்கர் கூறிய கருத்தும் உண்மையாகிவிட்டது. எப்படி யெனில் இந்துமகாசபையின் கருத்துகளை அவை இருட்டடிப்புச் செய்தன. 'பாக்கிஸ்தான் பற்றிய எண்ணங்கள்' என்ற அவருடைய நூலின் இரண்டாவது பதிப்பில் அம்பேத்கர் இப்பிரிவினைத் திட்டத்தை 'ஒரு சூழ்ச்சி வலை' என்றும் 'பிரச்சினையைத் தீர்க்காது' என்றும் குறிப்பிட்டிருப்பது வியப்புக்குரியதாகும்.

முஸ்லீம் லீக்கின் பிரிவினைக் கோரிக்கைக்குக் காந்தி தன் இசைவைக் குறிப்பால் உணர்த்தி வந்ததைக் கொண்டு, அம்பேத் கரும் காந்தியுடன் இணங்கிப் போக விரும்பும் தன் நல்லெண் ணத்தை வெளிப்படுத்தினார். முஸ்லீம் லீக்கின் பிரிவினைக் கோரிக்கைக்கு உடன்படும் மனநிலையில் காந்தி இருந்ததால் தீண்டப்படாத வகுப்பு மக்களின் கோரிக்கையையும் மறுக்காமல் ஏற்றுக் கொள்வார் என்று அம்பேத்கர் கருதினார். எனவே அம்பேத்கர் காந்திக்கு ஒரு கடிதம் எழுதினார். 'இந்தியா தன் அரசியல் குறிக்கோளை அடைய வேண்டுமானால் இந்து-முஸ்லீம் சிக்கலுக்குத் தீர்வு காண்பதைப் போலவே, இந்துக்கள்-தீண்டப்படாத வகுப்பினரின் பிரச்சினைக்கும் ஒரு தீர்வு காணப்பட வேண்டும்; எவற்றின் அடிப்படையில் அத்தகைய உடன்பாட்டை உருவாக்குவது என்று திட்டமிட நான் தயாராக இருக்கிறேன்' என்று அம்பேத்கர் அவருடைய மடலில் எழுதியிருந்தார். அக்கடிதத்திற்கு 1944 ஆகஸ்ட்டு 6ஆம் நாள் காந்தி பதில் எழுதினார். அதில் 'என்னைப் பொறுத்த மட்டில், தீண்டப்படாத வகுப்பினர்களின் பிரச்சினை என்பது மதம் மற்றும் சமூகச் சீர்திருத்தத்துடன் தொடர்புடையதாகும். உங்களுடைய திறமையை

நான் நன்கறிவேன். நீங்கள் என் கூட்டாளியாக இருக்க வேண்டும் என்பதும் நீங்கள் என்னோடு இணைந்து பணியாற்ற வேண்டும் என்பதும் என் விருப்பம். ஆனால் தீண்டப்படாத வகுப்பினர் களின் பிரச்சினையில் நீங்களும் நானும் மாறுபட்ட கருத்தினைக் கொண்டிருக்கிறோம். இது என் துரதிருஷ்டமான நிலையாகும்' என்று காந்தி எழுதியிருந்தார். எட்டி உதைப்பவரின் காலை முத்தமிடுவதும் பணிந்துபோவோரை எட்டி உதைப்பதும் உலக இயற்கை. அரசியல்வாதியான காந்தி இதற்கு விதிவிலக்கானவராக இல்லை.

1944 ஆகஸ்ட்டு இறுதியில் அம்பேத்கர் கல்கத்தாவுக்குச் சென்றார். அங்கே தீண்டப்படாத வகுப்பினர்களின் சாதிச் சங்கங்கள் அம்பேத்கருக்கு ஒரு வரவேற்பு அளித்தன. வரவேற் பினை ஏற்று அம்பேத்கர் உரையாற்றினார். அவ்வமயம் 'புதிய அரசியல் சட்டம் இந்தியாவிற்கு டொமினியன் அந்தஸ்தை அளிக்கும்; சுதந்திரம் கைக்கு எட்டும் தொலைவில்தான் இருக்கிறது; ஆகவே இவ்வேளையில் நாம் ஒற்றுமையுடன் இருக்க வேண்டும். ஆட்சி அதிகாரத்தை மாற்றி அளிப்பதற்கு முன் இந்துக்கள், முகம்மதியர்கள், தீண்டப்படாதவர்கள் ஆகிய மூத்தரப்பினரும் தமக்குள் ஒரு உடன்பாட்டை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்று வைசிராய் காந்தியிடம் கூற வேண்டும். தீண்டப்படாதவர் களின் கோரிக்கையை இந்து மகாசபை ஏற்றுக் கொண்டால் நான் இந்து மகாசபையில் சேருவேன்; காங்கிரசு ஏற்றுக்கொண்டால் காங்கிரசில் சேருவேன் என்று அம்பேத்கர் கூறினார்.

கல்கத்தாவில் அம்பேத்கர் இவ்வாறு பேசியதையொட்டி, டாக்டர் மூஞ்சே அம்பேத்கருக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் கல்கத்தாவில் அம்பேத்கர் பேசியதைச் சுட்டிக்காட்டி, தீண்டப் படாத வகுப்பினர்களின் கோரிக்கைகளைத் தெரிவிக்குமாறு கேட்டி ருந்தார். ஆனால் அம்பேத்கரிடமிருந்து இதற்குப் பதில் வரவில்லை. தீண்டப்படாத வகுப்பினரின் கோரிக்கைகளை என்றும் இந்து மகாசபை எதிர்த்ததில்லை.

பிறகு அம்பேத்கர் தக்காணத்திலுள்ள அய்தராபாத்திற்குச் சென்றார். அங்கே ஒரு கூட்டத்தில் பேசியபோது, தீண்டப்படாத வகுப்பு மக்கள் தனியான ஒரு பிரிவினரே என்ற தன் புதிய நிலைபாட்டை வலியுறுத்தினார். இந்திய நாடு விடுதலை அடைய வேண்டும் என்பதில் தீண்டப்படாத வகுப்பினர் மற்றெவர்க்கும் பின்தங்கியவர்கள் அல்லர்; ஆனால் நாடு விடுதலையடையும்

போதே அவர்களுடைய வகுப்பிற்கும் விடுதலை கிடைக்க வேண்டும் என்பதே அவர்களின் நோக்கமாகும் என்று அம்பேத்கர் கூறினார்.

அய்தராபாத்திலிருந்து அம்பேத்கர் சென்னைக்குச் சென்றார். சென்னையில் அம்பேத்கரிடம் தமிழ்நாடு தீண்டப்படாத வகுப்பினர் கிறித்தவச் சங்கம் ஒரு கோரிக்கை விண்ணப்பத்தைக் கொடுத்தது. 'தீண்டப்படாத வகுப்புகளிலிருந்து நாங்கள் கிறித்துவ மதத்திற்கு வந்துள்ளோம்; ஆனால் இந்து மதத்தில் இருக்கின்ற தீண்டப்படாத வகுப்பினர்களின் நிலையைப் போலவே எங்களுடைய சமூகப் பொருளாதார நிலைகள் இருக்கின்றன' என்று அந்த விண்ணப்பத்தில் கூறியிருந்தனர். மேல் சாதிகளிலிருந்து கிறித்தவர்களாக மதம் மாறியவர்கள் மதம் மாறிய பிறகும் தங்கள் சாதியை விட்டு விடாமல் இருக்கிறார்கள். மேல்சாதிக்கிறித்தவர்கள் தீண்டப்படாத வகுப்பிலிருந்து மதம் மாறிய கிறித்தவர்களை இழிவாக நடத்துகின்றனர். உயர்சாதிக் கிறித்தவர்களின் இந்த மேலாதிக்க மனப்போக்கினைப் பாதிரிகள் எவ்வகையிலும் போக்கிட முயலவில்லை. மேல்சாதி கிறித்தவர்களாலும் மற்றும் பிற சாதிகளாலும் அடிமைகளாக நடத்தப்படும் நிலையிலிருந்து தங்களை விடுவிக்க வேண்டும்' என்று அந்த விண்ணப்பத்தின் மூலம் அம்பேத்கரிடம் வேண்டுகோள் வைத்தனர்.

சென்னையில் *1944* செப்டம்பர் 22ஆம் நாள் ரிப்பன் கட்டடத்தில் சென்னை மாநகராட்சி அம்பேத்கருக்கு ஒரு வரவேற்பு அளித்தது. அந்த வரவேற்பு விழாவில் மாநகராட்சியின் காங்கிரசு உறுப்பினர்கள் கலந்து கொள்ளவில்லை. வரவேற்புக்குப் பதிலளித்து அம்பேத்கர் பேசுகையில், 'தேசிய அரசு அமைவதற்கோ, சுயராச்சியம் அடையவோ அல்லது சுதந்திரம் பெறவோ நான் எதிரியல்லன். வயது வந்த அனைவர்க்கும் வாக்குரிமை என்ற அடிப்படையில் நாடாளுமன்ற முறையிலான அரசு இந்தியாவில் அமைக்கப்பட்டு விடுவதனாலேயே எல்லோருடைய துன்பங்களும் நீங்கிவிடும் என்று நினைப்பதற்கு வரலாற்றில் ஆதாரம் ஏதும் இல்லை. ஒரே ஒரு சாதிக்கு மட்டுமே கல்வி கற்கவும், வளம் பெறவும் உரிமை உண்டு என்றும், மற்ற சாதியினர் அனைவரும் அடிமைகளாகப் பிறந்து அடிமைகளாக வாழ்ந்து அடிமைகளாகவே மடிய வேண்டும் என்றும் கருதுகின்ற ஆளும் வர்க்கத்தின் கையில் இந்திய நாட்டின் ஆட்சியதிகாரம் ஒப்படைக்கப்படுமானால், அந்த அரசு இப்போதுள்ள பிரிட்டிஷ் அரசைவிட எவ்வகையிலும் மேம்பட்டதாக இருக்காது' என்று கூறினார்.

அன்றுமாலை சென்னையில் ஆந்திர வணிகர் கழகம் அம்பேத்கருக்கு வரவேற்பளித்தது. தொழிலாளர் பற்றிய அரசின் கண்ணோட்டத்தில் ஒரு புதிய அணுகுமுறையை அம்பேத்கர் உருவாக்கினார். அதனால் தொழிலதிபர்களும் தொழிலாளர்களும் அரசும் ஒருவர் கருத்தை மற்றவர் புரிந்து கொள்ளும் இணக்கமான நிலை வளர்ந்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிடுவதாக அந்த வரவேற்புரையில் கூறப்பட்டிருந்தது. அந்நிகழ்ச்சி முடிந்தவுடன் தொழிலாளர் நல அமைச்சரான டாக்டர் அம்பேத்கருக்குச் 'செட்டிநாடு அரண்மனை'யின் புல்வெளியில் குமாரராஜா சர் முத்தையய செட்டியார் அம்பேத்கருக்குத் தேநீர் விருந்தளித்தார்.

அடுத்த நாள் மாலை எம்.அண்டு எஸ்.எம். இரயில்வேயின் (மெட்ராஸ் அண்டு தென்மராட்டா இரயில்வே) தீண்டப்படாத வகுப்பு மற்றும் தீண்டப்படாதவர் அல்லாத பிற சாதிகளின் தொழிலாளர்கள் அம்பேத்கருக்கு ஒரு வரவேற்பு அளித்தனர். அவ்வரவேற்பினை ஏற்று உரையாற்றிய அம்பேத்கர், 'தீண்டப்படாத வகுப்புத் தொழிலாளர்களும் பிற சாதிகளைச் சார்ந்த தொழிலாளர்களும் சென்னையில் முதன்முதலாக ஒன்றாக இணைந்திருப்பதைக் காண்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். நீங்கள் ஒன்றாக இணைந்து நின்று போராடி உங்கள் வறுமைக்கு ஒரு முடிவு கட்ட வேண்டும். தொழிற் சங்கங்கள் அமைப்பதைவிட அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவது மிகவும் முதன்மையானதாகும்' என்று கூறினார்.

1944 செப்டம்பர் 24ஆம் நாள் சென்னைப்பகுத்தறிவாளர் சங்கத்தின் சார்பில் பிரபாத் திரையரங்கில் நடத்தப்பட்ட கூட்டத்தில் அம்பேத்கர் பேசினார். அச்சமயம், பண்டைய நாளில் இந்தியாவில் இருந்தது போன்று வியப்பூட்டும்படியான செயல்திறன் மிக்க அரசியல் வாழ்க்கை உலகில் வேறு எந்த நாட்டிலும் இல்லை. இந்தியநாடு புரட்சிகளின் பிறப்பிடமாக இருந்தது. அந்நாளில் இந்தியாவில் ஏற்பட்ட புரட்சிகளுடன் பிரஞ்சுப் புரட்சியை ஒப்பிட்டால், பிரஞ்சுப் புரட்சி ஒரு சிறிய நிகழ்ச்சி போன்றதேயாகும். தொன்மைக் காலத்தில் பௌத்தம் இந்தியாவில் ஒரு புரட்சியைத் தோற்றுவித்தது. எதிர்ப் புரட்சியின் பிரதிநிதியான பார்ப்பனியத்திற்கும் பௌத்தத்திற்கும் பெரும் போராட்டம் நடந்தது. 'உண்மை என்பது எது?' எனக் கண்டறிவது பற்றியே அம்மோதல் இருந்தது. பதின்புலன்களில் ஏதேனும் ஒன்றினால் அறியக் கூடியதே உண்மையாகும், என்று புத்தர் கூறினார்.

ஆனால் பார்ப்பனர்களோ வேதங்களில் சொல்லப்பட்டிருப்பவை தான் உண்மை என்றனர். வேதங்களின் சில கூறுகளை ஆராய்ந்து பார்க்கும்போது, வேதங்களில் சில பகுதிகள் மோசடியானவை என்பதும், அவை பின்னாளில் இடையில் செருகப்பட்டவை என்பதும் தெரிகிறது. எத்தகைய சிறப்பும் இல்லாத வெறும் கேலிக்கூத்துக்கு இடமாக இருக்கின்ற இந்த வேதங்களை மிக உயரிய புனிதத்தன்மையுடனும் அதிகாரம் வாய்ந்த தன்மையுடனும் பிணைத்துவிட்ட பண்டை நாளைய பார்ப்பனர்களின் அறிவுக்கூர்மை வியப்பூட்டுவதாக இருக்கிறது. இன்று நாம் புரட்சிக்கு எதிரானவர்களின் பிடியில் இருக்கின்றோம்; இதிலிருந்து விடுதலையடைய நாம் விரைந்து செயல்படாவிட்டால் இந்திய நாட்டினை மேலும் பெரும் கேடுகள் சூழும் என்று அம்பேத்கர் எடுத்தியம்பினார்.[96]

அன்று பிற்பகல் பி.பாலசுப்பிரமணிய முதலியார் சென்னை கன்னிமரா ஓட்டலில் அளித்த விருந்தில் அம்பேத்கர் கலந்து கொண்டு உரையாற்றினார். அப்போது பார்ப்பனர் அல்லாதார் கட்சி (நீதிக்கட்சி)யின் வீழ்ச்சிபற்றி ஆய்வுத் தன்மையில் உரையாற்றினார். பார்ப்பனர் அல்லாதவர்களில் பெரும்பாலோர் இரண்டாம் நிலைப் பார்ப்பனர்களாகிட முயன்றனர்; அவர்கள் பார்ப்பனியத்தைக் கைவிடவில்லை; மாறாக அடிமை மனப்பான்மையுடன் பார்ப்பனர்களைப்போல் நடித்தனர்; பார்ப்பனியக் கோட்பாடுகளைத் தூக்கிப்பிடித்தனர் என்று தான் கருதுவதாக அம்பேத்கர் குறிப்பிட்டார். பார்ப்பனர் அல்லாத கட்சிக்குச் சிறந்த தலைவர், கட்டுக்கோப்பான அமைப்பு, தெளிவாக வரையறுக்கப்பட்ட கொள்கைகள் இருக்க வேண்டியதன் இன்றியமையாமையை அம்பேத்கர் வலியுறுத்தினார்.

அன்று மாலை பார்க்டவுன் மெமோரியல் ஹாலில் நடைபெற்ற கூட்டத்தில் பல தீண்டப்படாத வகுப்புச் சாதிச் சங்கங்களின் பேரவைகளும் தென்னிந்தியப் பௌத்தர் சங்கமும் அம்பேத்கருக்கு வரவேற்பு அளித்தன. அவ்வரவேற்புக்கு அம்பேத்கர் பதிலளித்துப் பேசியபோது, இந்தியத் தேசியச் சமுதாயத்தில் பல வகுப்புகள் இருப்பதை வைசிராய் ஏற்றுக் கொண்டு அறிவித்திருப்பதைத் தீவிரமாக ஆதரித்துப் பேசினார். அதன்பின், உலக அரங்கில் நடைபெறுகிற அமைதிக்கான பேச்சுகளின்போது அம்பேத்கர் இருப்பாராயின் இந்திய நாட்டின் நலனுக்கு அதுகேடானதாக அமையும் என்று வி.எஸ். சீனிவாச சாஸ்திரி கூறியிருந்ததற்கு

அம்பேத்கர் பதிலளித்துப் பேசினார். இந்தியாவின் பிரதிநிதியாக உலக அரங்கில் கூட்டங்களில் தான் கலந்து கொண்டதால் வெட்கப்படும்படியான நிலை இதுவரை அவருடைய பொதுவாழ் வில் எதுவும் ஏற்படவில்லை என்று கூறினார். ஆனால் சாஸ்திரி பிரிட்டிஷ் அரசின் மடியில் கிடக்கும் நாய் போன்றவர். அவர் செய்திருப்பதாகச் சொல்லப்படும் அருஞ்செயலும் அடைந்திருப் பதாகக் கருதப்படும் உலகப் புகழும் அவரை ஒரு கோமாளிப் பையனாகப் பிரிட்டிஷ் அரசு வேண்டுமென்றே தூக்கிப்பிடித்ததால் ஏற்பட்டவைகளாகும் என்று கூறிச் சாடினார்.[97] வட்டமேசை மாநாட்டின்போது நடந்த நிகழ்ச்சிகள் சிலவற்றை அம்பேத்கர் எடுத்துரைத்து, 'இந்தியாவின் நிலை தாழ்வுறும் வகையில் அங்கு நானோ அல்லது தீண்டப்படாத சாதியினரோ நடந்து கொண்ட தில்லை; ஆனால் காந்தியும் சாஸ்திரியும் மற்றவர்களும் அவ்வாறு நடந்து கொண்டனர்' என்று விளக்கினார். தீண்டப்படாத வகுப்பு மக்கள் தங்களுக்குப் பாதுகாப்பளிக்கும் கோரிக்கைகளைக் கேட்கும் அணுகுமுறையானது ஆயிரம் குறைபாடுகளுடையதாக இருக்க லாம்; அதன் காரணமாகவே 'உங்கள் கோரிக்கைகளை யார் ஏற்கமுடியும்' என்ற எட்வர்டு ஹட்சன் கடிந்து பேசியிருக்கலாம்; இருப்பினும் தீண்டப்படாத வகுப்பு மக்கள் விரிந்த மனப்பான்மை யுடன் தங்களின் நியாயமான பாதுகாப்புகளுக்காக உத்தரவாதத்துக் குரிய சாதாரண நிபந்தனையுடன் சுயாட்சிக் கோரிக்கைக்கு ஆதரவளிக்க முன்வந்தனர். கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாகப் பார்ப்பனிய ஆட்சியின் கீழ் தீண்டப்படாத வகுப்பு மக்கள் கொடுந்துன்பங்களுக்கு ஆளாக்கப்பட்டிருந்த போதிலும் அவர்கள் கொண்டுள்ள நாட்டுப்பற்றின் காரணமாக நியாயமான கோரிக்கை களை மட்டுமே கேட்கிறார்கள். ஆகவே இந்துச் சகோதரர்கள் தங்களின் மனநிலையைத் திருத்திக் கொள்ள வேண்டும்; நாம் ஓர் உடன்பாட்டிற்கு வந்து இச்சிக்கலைத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று அம்பேத்கர் வேண்டுகோள் விடுத்தார்.

சென்னையில் தங்கியிருந்தபோது நீதிக்கட்சியின் தலைவரான ஈ.வெ.இராமசாமியுடன் சென்னை மாகாண அரசியல் பிரச்சினைகள் பற்றி விரிவாகக் கலந்து பேசினார். அதன்பின் அம்பேத்கர் எல்லூர் (ஆந்திரா) சென்றார். அங்கே மாவட்டத் தீண்டப்படாத சாதிகள் பேரவை, கிறித்தவர் சங்கம், மேற்கு கோதாவரி மாவட்டக்கழகம், எல்லூர் நகராட்சி ஆகியவை அம்பேத்கருக்கு வரவேற்பு அளித்தன.

எல்லூர் நகராட்சி அளித்த வரவேற்புக்கு விடையளித்து அம்பேத்கர் பேசியபோது, காந்தியிடம் உள்ள குறைபாடுகளில் தொலைநோக்குப் பார்வை முற்றிலுமாக இல்லாமலிருப்பதும்

ஒன்றாகும் என்று குறிப்பிட்டார். இந்தியா தன்னுடைய இலட்சியத்தை அடையவிருக்கும் தறுவாயில் அது இரண்டாகப் பிளவுபடும் என்று காங்கிரசை நிறுவியவர்கள் அக்காலத்தில் கனவுகூடக் கண்டிருக்கமாட்டார்கள் என்றார். அதன்பின் அம்பேத்கர் சிறுபான்மையினரின் சிக்கல்பற்றி விளக்கினார். அமெரிக்காவில் அபிரகாம் லிங்கன் நீக்ரோக்களிடம் மேற்கொண்ட அணுகுமுறையையே காந்தி இந்தியாவில் கையாளுகிறார். அமெரிக்காவின் ஒற்றுமையை உயிராகக் கருதிய லிங்கன், வடஅமெரிக்காவின் வெற்றிக்காக நீக்ரோக்களின் உதவியைப் பெறும் நோக்குடன்தான் 1862இல் நீக்ரோ அடிமைகளுக்கான சுதந்திரப் பிரகடனத்தை அறிவித்தார்.[98] அதேபோன்று காந்திக்கு இந்தியச் சுதந்திரமும் வேண்டும்; நால் வருண தருமமும் நீடிக்க வேண்டும். எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய அரசியல் அமைப்புச் சட்டத்தை எழுத முடியுமாயின் அப்போது காந்தியின் கண்களுக்கு இந்தியாவின் ஏகப்பிரதிநிதியாகப் பிரிட்டிஷ் பிரதம மந்திரி மட்டுமே இருப்பதாகத் தென்படும் என்று அம்பேத்கர் கூறினார்.

கிரிப்ஸ் இந்தியாவை விட்டுச் சென்றபின் தீண்டப்படாத வகுப்பினர் இந்தியாவில் தனித்தன்மை வாய்ந்த ஒரு பகுதியினராக உள்ளனர் என்பதையும் இந்தியச் சமூகத்தில், சமூக, பொருளாதார, அரசியல் துறைகளில் அவர்களுக்குரிய அங்கீகாரத்தை அளிக்க வேண்டும் என்பதையும் இந்நாட்டு மக்களும் பிரிட்டிஷ் அரசும் உணரும்படிச் செய்வதற்காக அம்பேத்கர் தீவிரமாக உழைத்தார். அச்சமயம் அவர் மேற்கொண்ட நெடுந்தூர மற்றும் குறுகிய தூரச் சூறாவளிப் பிரச்சாரத்தின் நோக்கம் இதுவேயாகும். அம்பேத்கர் முன்வைத்த வாதங்களை வைசிராய் ஏற்றுக்கொள்ளும் படியா
யிற்று.

தீண்டப்படாத வகுப்பு மக்களின் வளர்ந்து வரும் போராட்டம் பற்றி 'தி டைம்ஸ் ஆப் இந்தியா' பத்திரிக்கை நடுநிலையுடன் சிந்தனையைக் கவரக்கூடிய ஒரு தலையங்கம் எழுதியது. அதில் 'தீண்டப்படாத வகுப்பு மக்களின்பால் அன்பு காட்டும் தன்மையில் நாடு தழுவிய அளவில் காந்தி காட்டிக் கொள்வது உண்மை நிலையை விடப் பகட்டு மிக்கதாகவே உள்ளது.[99] திடீரென வரும் புதுவெள்ளம்போல் காந்தி தீண்டப்படாதவர்களிடம் வெளிப்படுத்தும் நல்லெண்ணமானது அவருக்கு இவர்களிடம் ஈடுபாடு இருப்பதாகக் காட்டிக் கொள்வதற்காகத்தான்; உண்மையான அக்கறையின் வெளிப்பாடு அன்று அது என்பதைப் பழைய

அனுபவங்கள் நிரூபிக்கின்றன' என்று கூறப்பட்டிருந்தது. கோயில் நுழைவு, பொதுக் கிணறுகளில் நீர் எடுக்க அனுமதித்தல், பொதுச் சுடுகாடு போன்ற சீர்திருத்தங்கள் தீண்டப்படாதவர்களின் பிரச்சினையின் விளிம்பைக்கூடத் தொடமாட்டா. இப்பிரச்சினையைத் திசைதிருப்பிட எடுக்கப்படும் எந்தவொரு முயற்சியும் எதிர்காலத்தில் நாட்டின் நலன்களுக்குத் தீங்கு விளைவிப்பதாகவே முடியும்' என்று அந்த ஆசிரியவுரையில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்தது.

நவம்பர் மாதத்தின் கடைசி வாரத்தில் பூனாவில் ராஜ்போஜ் ஏற்பாடு செய்திருந்த பாராட்டு விழாவில் அம்பேத்கர் பங்கு கொண்டார். அந்த நிகழ்ச்சியில் அம்பேத்கர் பேசியபோது, பண்டைநாளில் எழுதப்பட்ட ஒவ்வொரு மதநூலும் அரசியலைப் பேசும் நூலாகவும் இருக்கிறது. எடுத்துக்காட்டாக 'வேதங்களின் கருத்துகளைத் தூக்கிப்பிடிப்பதையும் பார்ப்பனியத்தை உச்ச நிலைக்கு உயர்த்துவதையும் நோக்கமாகக் கொண்டு எழுதப்பட்ட அரசியல்நூல் தான் கீதை' என்று அவர் கூறினார்.

அதுசமயம் சாப்ரு குழு இந்திய அரசியலில் ஏற்பட்டிருந்த முட்டுக்கட்டையைத் தீர்த்திட வழி காண்பதில் தீவிரமாக ஈடுபட்டிருந்தது. அக்குழுவில் இருந்த உறுப்பினர் சிலர் நம்பிக்கைக்குரியவர் அல்லர் என்று அம்பேத்கர் எண்ணியதால் அக்குழுவுடன் அவர் ஒத்துழைக்கவில்லை.

அம்பேத்கர் 1945 சனவரி முதல் வாரத்தில் கல்கத்தா சென்றார். தீண்டப்படாத வகுப்பினரால் தொடங்கப்பட்ட 'பீப்பிள்ஸ் ஹெரால்டு (People's Herald)' என்ற வார இதழை வெளியிட்டு உரையாற்றினார். அவ்வமயம், 'காந்தியின் இறப்புக்குப் பின் காங்கிரசு துண்டுதுண்டாகச் சிதறிவிடும்' என்றார். தீண்டப்படாத சாதிகளின் பேரவையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். இந்த அமைப்பு இந்தியாவில் அரசியல் மற்றும் சமூகநீதிக் கண்ணோட்டத்தில் நிலைபேறுடையதாகத் திகழும் என்றார். ஏனெனில் இந்திய நாட்டில் ஒரு தலைவர் மேற்கொள்ளுவதற்குரிய மிகவும் மேன்மையான பணி தீண்டப்படாதவர்களை உயர்த்துவதேயாகும்; அதனால் தான் அப்பணிக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருப்பதாகக் கூறினார்.

கல்கத்தாவில் தங்கியிருந்தபோது அம்பேத்கர் டி.ஜி.ஜதாவின் வீட்டில் விருந்துண்டார். ஜதாவ் இரயில்வேயில் சமரசப்படுத்தும் அதிகாரியாக இருந்தார். இவரும் ஒரு தீண்டப்படாதவரே.

அப்படியிருந்தும் இவருடைய சமையல்காரரும் மற்ற வேலைக்காரர்களும் அம்பேத்கர் இவருடைய வீட்டில் முதல்நாள் விருந்து உண்டதால் அடுத்தநாள் காலை வேலை செய்ய மறுத்துவிட்டனர். இந்திய வைசிராயின் நிர்வாகக் கவுன்சிலில் அப்போது மாண்புமிகு அமைச்சராக அம்பேத்கர் இருந்தார் என்பது இங்குக் கவனத்திற் கொள்ள வேண்டியதாகும்.

புலாபாய் தேசாய்க்கும், லியாக்கத் அலிகானுக்கும் இடையில் ஏற்பட்ட சமரச ஒப்பந்தத்தின் அம்சங்கள் பற்றி விவாதிப்பதற்காக இந்திய வைசிராயான வேவல் பிரபு 1945 மார்ச்சு மாதம் இலண்டன் சென்றார். பின்னர் இந்த ஒப்பந்தத்தைச் சாப்ரு குழு ஆதரித்தது. சாப்ரு குழுவின் முடிவுகள் தந்தி மூலம் இலண்டனில் இருந்த வேவலுக்குத் தெரிவிக்கப்பட்டன.

IV

இதற்கிடையில், அம்பேத்கர், 'பாக்கிஸ்தான் பற்றிய எண்ணங்கள்' (Thoughts on Pakistan) என்ற தன்னுடைய நூலின் இரண்டாவது பதிப்பை வெளியிட்டார். முதல் பதிப்பு கொண்டிருந்த பகுதிகளுடன் மேலும் ஒரு அத்தியாயத்தைச் சேர்த்துப் பாக்கிஸ்தான் அல்லது இந்தியப் பிரிவினை (Pakistan or Partition of India) என்ற பெயரில் வெளியிட்டார். இந்தியாவின் பூகோள ஒற்றுமையையும் கலாச்சார ஒற்றுமையையும் அம்பேத்கர் ஒத்துக்கொண்டபோதிலும், ஒரே அரசியல் சட்டத்தின்கீழ் ஒன்றுக்கு மேற்பட்ட தேசிய இனங்கள் கனடா, சுவிட்சர்லாந்து, தென் ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில் வாழ்ந்தபோதிலும் - சுதந்திர இந்தியாவின் உறுதியான பாதுகாப்பு கருதியும், முஸ்லீம்கள் தங்களைத் தனித் தேசிய இனமாகக் கருதுவதாலும் அவர்களின் உணர்வுகளை நிறைவு செய்யும் பொருட்டும் பாக்கிஸ்தான் கோரிக்கையை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று அம்பேத்கர் கூறினார்.

அரசியல் முட்டுக்கட்டையை நீக்கிட இக்கட்டத்தில் தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பாக்கிஸ்தான் கோரிக்கைக்கு மாற்றாகப் பல்வேறுபட்ட குறிப்பிடத்தக்க தலைவர்களால் ஒன்பது திட்டங்கள் முன்வைக்கப்பட்டன. அவையாவன. கிரிப்ஸ் திட்டம், பேராசிரியர் ரெஜினால்டு கப்லேண்டு பிராந்தியத் திட்டம், சர் அர்தேஷிர் தலால் திட்டம், எம்.என்.ராய் திட்டம், டாக்டர் ராதா குமுத முகர்ஜித் திட்டம், சர். சுல்தான் அகமத் திட்டம் ஆகியவையும் மற்றவையும் ஆகும்.

பம்பாய் பரேலில் தீண்டப்படாத சாதிகளின் பேரவையின் ஆண்டு மாநாட்டில் **1945** மே 6ஆம் நாள் பேசும்போது, அம்பேத்கர் பாக்கிஸ்தான் பிரிவினைக்கு மாற்றான அவருடைய திட்டத்தை வெளியிட்டார். 'பெரும்பான்மையினரின் ஆட்சி என்பது கொள்கை அளவில் ஏற்றுக் கொள்ள முடியாததாகவும் நடைமுறையில் நியாயப்படுத்த இயலாததாகவும் இருக்கிறது. ஆகவே சட்டமன்றங்களில் சிறுபான்மை வகுப்பினருக்கு (விகிதாச் சாரத்திற்குக்) கூடுதலான இடங்களை அளிக்க வேண்டும் என்று அம்பேத்கர் கூறினார். பெயரளவில் பெரும்பான்மையைப் பெற்றி ருப்பதுடன் இந்துக்கள் நிறைவடைய வேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டார். அம்பேத்கரின் திட்டம் ஒன்றுபட்ட இந்தி யாவை முன்மொழிந்திருந்தது. இத்திட்டம் முஸ்லீம்களுக்கு நல்ல பாதுகாப்பையும், தனிச்சலுகைகள் நீடிப்பதையும் உறுதிசெய்வது டன் இந்துக்களின் ஆதிக்கத்தைப் பற்றிய அச்சத்திலிருந்து அவர்களை விடுவிப்பதாகவும் இருப்பதால் இத்திட்டத்தை முஸ்லீம் கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். இத்திட்டத்தில் மிகவும் குறிப்பிடத்தக்கது எதுவெனில் அரசியலில் தீர்மானிக்கும் சக்தியாகத் தீண்டப்படாதவர்கள் இருப்பார்கள் என்பதேயாகும். பழங்குடியினருக்கு எந்தவொரு பிரதிநிதித்துவமும் இவருடைய திட்டத்தில் வழங்கப்படவில்லை. ஏனெனில் பழங்குடி யினருக்கு அரசியல் விழிப்புணர்வு இல்லை என்று அம்பேத்கர் கருதினார். அரசியல் சட்டவரைவு அவையை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை இன்றைய நிலையில் பொருத்தமற்றது என்றும் தேவையற்றது என்றும் உள்நாட்டுப்போரை உண்டாக்கக்கூடிய அளவிற்கு ஆபத்தானது என்றும் அம்பேத்கர் திட்டம் கூறியது. அரசியல் சட்டத்திற்கு வேண்டியதன் பெரும்பகுதி 1935ஆம் ஆண்டைய சட்டத்தில் உள்ளது. அம்பேத்கர் திட்டம் சாப்ரு குழுவின் அறிக்கையை ஏற்காமல் ஒதுக்கித் தள்ளியது.

அம்பேத்கரின் திட்டத்தைப் பத்திரிக்கைகள் கடுமையாக விமர்சித்தன. இந்துக்கள் அல்லாதவர்களிடம் பாகுபாடு காட்டுவதில் பெயர் பெற்றிருந்த 'தி டைம்ஸ் ஆப் இந்தியா' நாளேடு, வெளியில் இருப்பவர்களுக்கு அம்பேத்கரின் திட்டம் கவர்ச்சிமிக்க, நியாயமான தொன்று எனத் தோன்றினாலும் அதிலுள்ள தீவிரவாதக் கண் ணோட்டம் பெருங்குறையாகும்; புதிய ஆளும் இனமாகத் தீண்டப்படாத வகுப்பினரை உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டி ருக்கிறது என்று எழுதியது. அம்பேத்கரின் திட்டம் ஒரு குறிப்பிட்ட அம்சத்தில் சாப்ருவின் கருத்துகளைவிடவும் விஞ்சி நின்றதால்

அது இந்துக்களின் பேரில் விழுந்த இன்னொரு அடிபோல் ஆயிற்று. பிரதம மந்திரியும் மற்ற சாதி இந்து அமைச்சர்களும் சிறுபான்மையினரின் பிரதிநிதிகளால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்; ஆனால் அதேநேரத்தில் அமைச்சரவைக்குச் சிறுபான்மை இனத்தைச் சார்ந்த பிரதிநிதிகளைச் சிறுபான்மையினரே தேர்ந்தெடுக்க வேண்டும் என்று அம்பேத்கரின் திட்டம் முன்மொழிந்திருந்தது. இந்தியாவில் சிறுபான்மையினரின் ஆதிக்கங்கொண்ட ஆட்சியை நிறுவ வேண்டும் என்பதே அம்பேத்கரின் நோக்கம் என்று அனைத்து இந்துப் பத்திரிக்கைகளும் ஒரே குரலில் கூறின. அம்பேத்கர் சாதி இந்துத் தலைவராக இருந்திருப்பின் இத்தகையதொரு திட்டத்தைத் தூள் தூளாக்கியிருப்பார்; ஆனால் எதிர்பாராவிதமாக அவர் எதிரணியில் இருந்தார். உலக வரலாற்றில் எங்குமே ஒரு நாட்டின் பெரும்பான்மையினராக இருப்பவர்கள் இதுபோன்ற திட்டத்தால் இழிவுபடுத்தப்பட்டதில்லை என்று பத்திரிக்கைகள் கூறின.

பழங்குடியினருக்கு அம்பேத்கர் தன் திட்டத்தில் பிரதிநிதித்துவம் அளிக்க மறுத்திருப்பதற்காக அம்பேத்கரைத் தாக்கர் குறைகூறினார். அதற்கு அம்பேத்கர் அளித்த விடையில், 'உலகில் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிற மாந்தர் அனைவர்க்கும் நான் தலைவன் என்று ஒருபோதும் கூறிக் கொண்டதில்லை. நான் பெற்றுள்ள குறைந்த அளவிலான வலிமை தீண்டப்படாதவர்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கே போதுமானதாக உள்ளது. மற்ற மக்கள் கூட்டத்தாரின் நலன்கள் தீண்டப்படாத வகுப்பினர்களின் கோரிக்கைகளைப் போல மேன்மையானவையல்ல என்று நான் கூறியதில்லை. ஒருவரின் வாழ்நாள் என்பது மிகவும் சுருங்கிய கால அளவினதாக இருப்பதால் அவர் ஒரு பிரச்சினைக்காக மட்டுமே செயலாற்ற முடியும். தீண்டப்படாதவர்களுக்குத் தொண்டு செய்வது தவிர வேறு எதிலேயும் ஈடுபட்டுச் செயல்பட வேண்டும் என்று நான் விரும்பியதில்லை' என்று கூறினார். தங்கள் நலனை வளர்த்தெடுப்பதற்குத் தேவைப்படுகிற அரசியல் அதிகாரத்தைக் கையாளுவதற்கான அரசியல் திறனைப் பழங்குடியினர் இன்றும் பெறாததால் அவர்களைத் தன்னுடைய திட்டத்தில் சேர்க்கவில்லை என்று அம்பேத்கர் மேலும் குறிப்பிட்டார். கீழ்ச்சாதியினர்க்கு - குறிப்பாகத் தீண்டப்படாத வகுப்பினர்க்கு வாக்குரிமை தரக்கூடாது என்பதற்கு இதே போன்ற வாதங்களைத் தான் மேல் சாதியினர் கூறிவந்தனர்.

தொழிலாளர் நல அமைச்சராக இருந்த அம்பேத்கருக்கு நண்பர் குழு ஒன்று மே 20ஆம் நாள் பம்பாயில் 'கேஃப் மாடல்' விடுதியில் ஒரு விருந்தளித்தது. 'இந்தியா சுதந்திர நாடாக இருப்பதைத் தக்க வைத்துக் கொள்ள முடியாது என்று தோன்றினால், முழுச்சுதந்திரம் கோருவதற்குப் பதிலாக டொமினியன் அந்தஸ்து கேட்பது நல்லது' என்று அந்நிகழ்ச்சியில் பேசும்போது அம்பேத்கர் குறிப்பிட்டார். அனைத்து நாடுகளின் சட்டப்படி டொமினியன் அந்தஸ்து என்பதும் முற்றான இறையாண்மை உடையதேயாகும் என்று விளக்கமளித்தார்.

1945 ஜுன் மாதம் அம்பேத்கரின் மற்றொரு குறிப்பிடத்தக்க நூல் வெளிவந்தது. 'காங்கிரசும் காந்தியும் தீண்டப்படாத வகுப்பினர்க்குச் செய்தது என்ன?' (What Congress and Gandhi have done to the Untouchables) என்பதே அந்நூலாகும். எதிரியைத் தாக்குவதில் சிறந்த வாதத்திறமையும், நடையில் தீவிரமான செழுமையும், அழுத்தமாக மற்றவர் கவனத்தை ஈர்த்திடும் ஆற்றலும், எவரும் ஏற்றுக் கொள்ளத்தக்க செறிவான பல புள்ளிவிவரங்களும், அடுக்கடுக்கான வாதங்களும் கொண்டிருந்த அந்நூல் காங்கிரசுக் கட்சியின் மீது ஒரு வெடிகுண்டாக விழுந்தது. அரிசனங்களின் மேம்பாட்டுக்குப் பணியாற்றுவதைத் தன் வேலைத் திட்டங்களில் ஒன்றாக 1917இல் காங்கிரசுக் கட்சி அறிவித்தது; தீண்டப்படாத வகுப்பினரின் இயலாமைகளை உண்மையில் நீக்கவேண்டும் என்பதைவிட, தீண்டப்படாத வகுப்பு மக்கள் இந்தியாவின் தேசிய வாழ்வில் தனியானதொரு சக்தியாக வளர விடாமல் தடுப்பதே காங்கிரசு கூறுகின்ற அரிசன மேம்பாட்டுப் பணி என்பதன் உள்நோக்கமாக இருந்தது. இக்கருத்துகளை மெய்யப்படுத்தியே அந்நூல் எழுதப்பட்டுள்ளது. காந்தியின் அரிசன நலப்பணிகளைக் குறைகூறிய அம்பேத்கர் சாமி சிரத்தானந்தாவைத் தீண்டப்படாத வகுப்பினரின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடும் பெருந்தலைவர் என்று அந்நூலில் புகழ்ந்துள்ளார். அந்நூலின் மிக முக்கியமானதொரு பகுதியில் காந்தியிடமும், காந்தியம் பற்றியும் எச்சரிக்கையாக இருக்குமாறு தீண்டப்படாதவர்களை அம்பேத்கர் அறிவுறுத்தியுள்ளார். காந்தியம் என்பது மீண்டும் கிராமிய வாழ்க்கைக்கும், இயற்கையின் போக்குக்கும், காட்டுமிராண்டித் தனமான வாழ்நிலைக்கும் இட்டுச் செல்வதாகும். இத்துடன் நவீனகால இயந்திரப் பயன்பாட்டை வெறுப்பது என்பதுதவிர காந்தியத்தில் வேறொன்றும் இல்லை என்று அம்பேத்கர் குறிப்பிட்டுள்ளார். காந்தியம் பொருளாதாரச் சமத்துவத்தைக் கொள்கையாகக்

கொண்டிருக்கவில்லை. அதனால் அது சமூக, பொருளாதாரக் கண்ணோட்டத்தில் ஒரு பிற்போக்குத்தனமான தத்துவமேயாகும். நம் முதாதையரின் காலத்திய வாழ்க்கை முறைக்குத் திரும்புவோம் என்ற முழக்கமுடன் பகட்டொளி வீசிக்கொண்டிருக்கிறது, 'காந்தி யம். மக்களைத் தவறான நம்பிக்கைகளிலும், போலியான பாதுகாப்பு' உணர்ச்சியிலும் மதிமயங்கச் செய்வதற்காக வேண்டி மதத்தை முழுமையாகப் பயன்படுத்திய த்த்துவம் ஏதேனும் ஒன்று உண்டென்றால் அது காந்தியமே. ஆகவே காந்தியம் தங்களை அண்டவிடாமல் தீண்டப்படாத வகுப்பினர் மிகவிழிப்புடன் இருக்க வேண்டும் என்று அம்பேத்கர் அந்நூலில் எச்சரித்திருக்கிறார்.

இந்தியாவில் உள்ள பழமைவாதிகள் சுதந்திரம் என்ற முழக்கத்தை உலகத்தாரை முட்டாள்களாக்கி, உண்மைகள் அவர்களுக்குத் தெரியாமல் மறைப்பதற்காகவே பயன்படுத்துகிறார்கள் என்பது குறித்து அமெரிக்காவிலும் பிரிட்டனிலும் உள்ள முற்போக்காளர்கள் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும் என்று அந்நூலின் இறுதியில் அம்பேத்கர் குறிப்பிட்டிருக்கிறார். காந்தி தீண்டாமை ஒழிப்பை மேடைப் பிரச்சாரத்திற்காக மட்டுமே கொண்டிருக்கிறாரே தவிர அதை ஒரு வேலைத்திட்டமாக மேற்கொள்ளவில்லை. எனவே காந்தி தீண்டப்படாத வகுப்பினர்க்கு விடுதலையோ, விமோசனமோ தேடிடப் பாடுபடுபவர் அல்லர் என்று அந்நூலில் அம்பேத்கர் கூறியுள்ளார். அம்பேத்கர் இலண்டனில் இருந்த காலத்தில் பைபிள் படித்திட உடனிருந்து உதவிய ஓர் ஆங்கிலேயப் பெண்மணிக்கு அந்நூலைக் காணிக்கையாக்கியுள்ளார்.

அந்நூல் கடுமையான விவாதத்தைக் கிளப்பியது. 'குட்டி காந்தி' (Deputy Gandhi) என்று கருதப்பட்ட இராசகோபாலாச்சாரி அம்பேத்கரின் நூலுக்கு மறுப்பு எழுதினார். ஆனால் அது சுத்தியலின் முன் ஒரு பேனாக்கத்தி போன்று இருந்தது. சந்தானத்திடமிருந்து இதைவிட நல்லதொரு மறுப்புரை வெளிவந்தது. ஆனால் அதில் அறிவுநுட்பமோ, சுயசிந்தனையோ, புள்ளிவிவர ஆதாரங்களோ இல்லை. அதனால் அம்பேத்கரின் நூல் அசைக்க முடியாத வாதங்கள் கொண்டதாகத் திகழ்ந்தது.

அம்பேத்கர் பகுத்தறிவின் அடிப்படையில் காந்தியத்தைக் கடுமையாக எதிர்ப்பது என்பது புதியதன்று. பத்து ஆண்டுகளுக்கு முன்பு, காந்தியத்தின்பால் பக்தி கொண்டிருந்த ஓர் அமெரிக்க அதிகாரியிடம், 'நீங்கள் ஒன்று பைத்தியக்காரராக இருக்க வேண்டும்

அல்லது கப்பட வேடதாரியாக இருக்க வேண்டும்', என்று சாடிவிட்டு, 'அமெரிக்கர்கள் ஏன் இராணுவத்தையும் கடற்படையை யும் கலைக்கவில்லை? தொழிற்சாலைகளையும் வானளாவி நிற்கும் கட்டடங்களையும் தகர்த்துத் தரைமட்டமாக்கி விட்டு காட்டுமிராண் டிக் காலத்து வாழ்க்கை முறையை ஏன் மேற்கொள்ளவில்லை? உங்களைப் போன்றவர்கள் உண்மையில் காந்தியத்தை நம்ப வில்லை. ஆனால் இந்தியர்களையும் அமெரிக்கர்களையும் தவறாக வழிநடத்துவதில்தான் உங்களைப் போன்றவர்கள் வெற்றியடைந் திருக்கிறீர்கள்' என்று கூறினார்.

ஒன்பது வாரங்கள் இலண்டனில் இருந்தபின், ஒரு திட்டத்து டன் வைசிராய் வேவல் பிரபு 1945 சூன்மாதம் முதல் கிழமையில் இந்தியாவிற்குத் திரும்பினார். அத்திட்டம் 'வேவல் திட்டம்' என்று அழைக்கப்பட்டது. வேவல் பிரபு காங்கிரசுத் தலைவர்களைச் சிறையிலிருந்து விடுதலை செய்தார். 1945 சூன்மாதத்தின் கடைசி வாரத்தில் சிம்லாவில் ஒரு கூட்டத்தைக் கூட்டினார். சிம்லா கூட்டத்திற்கு இந்துக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவதற்காக, காங்கிரசு, அதன் தலைவராக அப்போதிருந்த மௌலானா ஆசாத்தை அனுப்பி வைக்க வேண்டிய நிலைமைக்கு ஆளாகி இருந்தமை வருந்தத்தக்கது. முஸ்லீம்களின் சார்பில் ஜின்னா கலந்து கொண்டார். தீண்டப்படாத வகுப்பினரின் பிரதிநிதியாக என்.சிவ ராஜ் சென்றார். சீக்கியர்களின் சார்பில் சீக்கியர் சிலர் கலந்து கொண்டனர். மாகாணங்களில் பதவி வகித்த முன்னாள் பிரதம மந்திரிகளும் இக்கூட்டத்தில் பங்கேற்றனர். வெறும் தொந்தரவு தருவதாக இருக்கும் எனக்கருதி இந்துமகாசபை அழைக்கப்பட வில்லை. அம்பேத்கர் வைசிராய் நிர்வாக சபையின் உறுப்பினராக இருந்ததால் அவர் சிம்லா கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. ஆயினும் அவர் தீண்டப்படாத வகுப்பினரின் கோரிக்கைகள் பற்றிய அறிக்கையைத் தயாரித்தார். இடைக்கால மத்திய நிர்வாக சபையில் முகம்மதியருக்கு அய்ந்து இடங்கள் தரப்படுமானால், தீண்டப்படாதவர்களுக்கு மக்கள் தொகையின் அடிப்படையில் மூன்று இடங்கள் அளிக்கப்பட வேண்டும் என்று அம்பேத்கர் கோரினார். இடைக்கால அமைச்சரவையில் பதவி வகித்த முஸ்லீம் பிரதிநிதிகளை எந்தக் கட்சி தேர்ந்தெடுத்து அனுப்புவது என்பது தொடர்பாக எழுந்த சிக்கல் காரணமாகச் சிம்லா கூட்டம் முறிவடைந்தது. முஸ்லீம்களின் சார்பாக நிர்வாக சபைக்குத் தன்னுடைய பிரதிநிதிகளைத் தான் அனுப்ப வேண்டுமென்று காங்கிரசு வலியுறுத்தியது.

V

ஜூலை மாதத்தில் பிரிட்டனில் பொதுத் தேர்தல் நடந்தது. அதில் கன்சர்வேட்டிவ் கட்சி படுதோல்வி அடைந்தது; தொழிற்கட்சி ஆட்சிக்கு வந்தது. இரண்டாம் உலகப் போரில் சப்பான் சரணடைந்தது. பிரிட்டனின் ஆளும் வர்க்கத்தின் ஆதிக்கத்தை வீழ்த்திவிட்டதற்காகப் பிரிட்டிஷ் வாக்காளர்களின் துணிச்சலை அம்பேத்கர் பாராட்டினார்.

தொழிலாளர் நல அமைச்சரான அம்பேத்கர் பம்பாய்க்கு வந்து சிலநாள்கள் தங்கியிருந்தார். பம்பாயிலிருந்தபோது 1945 ஜூலை மாதத்தின் கடைசி வாரத்தில் டாடா நிறுவனத்தின் சமூக அறிவியல் பிரிவு மாணவர் சங்கத்தில் உரையாற்றினார். கட்டாய சமரச முறை அல்லது நடுவர் மன்றத் தீர்ப்பு என்பது தொழிலாளர்களுக்கு மிகவும் நன்மை பயப்பதாக இருக்கும். ஆகவே அதைத் தொழிலாளர் நலச்சட்டத்தில் நிலையான கோட்பாடாக ஆக்கிட விரும்புவதாகக் கூறினார். இந்திய அரசால் தொடங்கப்பட்ட எல்லாத் தொழில்நுட்பப் பயிற்சிப் பள்ளிகளையும் நாட்டின் கல்வித் திட்டத்தில் இணைந்த ஒரு பகுதியாக ஆக்கிட எண்ணங் கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

1945 ஆகஸ்டு மாத இறுதியில் தொழிலாளர் நிலைக்குழு தில்லியில் கூடியது. தொழிற்பேட்டைகளை அமைத்தல், தொழில் உரிமையாளர்களின் பொறுப்புகள், தொழிலாளர்களுக்கு ஊதியத்துடன் கூடிய விடுமுறை ஆகியவைபற்றி விவாதிக்கப்பட்டது. அம்பேத்கர் அக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.

இதற்கிடையில் இடைக்கால அரசு அமைப்பதுபற்றிக் கலந்து பேசுவதற்காக மீண்டும் வேவல் பிரபு 1945 ஆகஸ்டு மாதப் பிற்பகுதியில் இலண்டன் சென்றார்; செப்டம்பர் பிற்பகுதியில் இந்தியாவிற்குத் திரும்பியதும் இந்தியாவில் பொதுத்தேர்தல் நடைபெறும் என அறிவித்தார்.

எல்லாக் கட்சிகளும் தேர்தல் களத்தில் இறங்கின. பெரும்பண பலத்துடனும் தேர்தல் பணிக்கான வலிமை மிக்க தயாரிப்புடனும் 'இந்தியாவை விட்டு வெளியேறு!' என்ற முழக்கத்துடனும் காங்கிரசுக் கட்சி தேர்தலில் குதித்தது. ஜின்னாவுக்குப் பாக்கிஸ்தான் ஆதரவாளர்களின் பணமும், 'அடைந்தால் பாக்கிஸ்தான் இல்லையேல் இடுகாடு' என்ற முழக்கமும் துணைநின்றன. இந்து

மகாசபையின் முழக்கம் 'இந்தியாவின் சுதந்திரம் - இந்திய ஒற்றுமை' என்று ஒலித்தது. அம்பேத்கரின் கட்சியான 'தீண்டப் படாத சாதிகளின் பேரவைக்கு'த் தேர்தல் பணிகளைச் செய்வதற் கான அமைப்பு வசதியோ, பணபலமோ இல்லாமல் இருந்தது. அக்டோபர் 4ஆம் நாள் பூனாவில் அம்பேத்கர் தேர்தல் பிரச்சாரத்தைத் தொடங்கினார். அப்போது மூன்று கருத்துகளை அவர் வலியுறுத்தினார். காங்கிரசுக் கட்சியின் வழிகாட்டுதலைத் தீண்டப்படாத வகுப்பினர் நம்பக் கூடாது. ஏனெனில் அது அடிமைகளின் கூடாரமாக இருக்கிறது. முதலாளிகளின் மற்றும் சமூகப் பிரச்சினைகளைப் புறக்கணிக்கிறவர்களின் கையாளாகக் காங்கிரசு இருக்கிறது. தீண்டப்படாத வகுப்பினரின் இயலாமை களை நீக்கவோ, துன்பங்களைத் துடைக்கவோ ஒருபோதும் காங்கிரசு முயலவில்லை. எனவே தீண்டப்படாத வகுப்பினரின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது எனபது தீண்டப்படாத வகுப்பின ரின் கைகளில்தான் இருக்கிறது. ஆகவே தீண்டப்படாத வகுப்பினர் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும். இதுவே அவர்களின் உயிர்மூச்சாக இருக்க வேண்டும். தீண்டப்படாத வகுப்பினர் தங்களை ஆளும் இனமாக வளர்த்தெடுத்துத் தங்களுடைய உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். இல்லாவிடில் அவர்களுடைய உரிமைகள் வெறும் காகிதத்தில் மட்டுமே இருக்கும் என்று அம்பேத்கர் விளக்கினார். அதன்பின் அவர் அமைச்சராகப் பொறுப்பேற்ற குறுகிய காலத்தில் தீண்டப்படாதவர்களுக்காகப் பெற்றுத் தந்த நன்மைகளையும் உரிமைகளையும் நிரல்படுத்திக் கூறினார். உரையின் இறுதியில், 'இந்தத் தேர்தல் தீண்டப்படாத வகுப்பினர்க்கு வாழ்வா? சாவா? என்பது போன்றதாகும்; ஏனெனில் அரசியல் அமைப்பு அவை மாகாணச் சட்டசபைகளால் தேர்ந்தெடுக்கப்படவுள்ளது' என்று கூறினார்.

அம்பேத்கர் புதுதில்லிக்குத் திரும்பினார். தில்லியில் 1945 நவம்பர் 27ஆம் நாள் நடைபெற்ற இந்தியத் தொழிலாளர்களின் ஏழாவது மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார். அவருடைய தலைமை உரையில், '''போரின் செலவுகளுக்காகவென்று வரி செலுத்துவதுபற்றி நீங்கள் கவலைப்படாதபோது, தொழிலாளர் களின் நிலையை உயர்த்துவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கிறீர்களே, அது ஏன்? என்று தொழிலாளர்கள் பணம் படைத்த வகுப்பினரை நோக்கி நியாயமானதோர் கேள்வியைக் கேட்கக்கூடும். போருக்கா கச் செலவிட்ட பணத்தைப் பொதுமக்களின் நலத்திற்காகச் செலவிட்டிருந்தால், படிக்காதவர்களில் எத்தனையோ பேருக்குக்

கல்வியை வழங்கியிருக்கலாமே! நோயுற்றவர்களில் பலருக்கு மருத்துவம் செய்திருக்கலாமே'' என்று கூறினார்.

தீண்டப்படாத சாதிகளின் பேரவை மிகத் தீவிரமாகத் தேர்தல் பிரச்சாரத்தை முடுக்கிவிட்டது; தேர்தல் பணியைத் தீவிரப்படுத்துவதற்காக வேண்டி, *1945* நவம்பர் *29, 30* ஆகிய நாட்களில் அகமதாபாத்தில் மாகாண மாநாட்டை அப்பேரவை நடத்தியது. அம்மாநாட்டிற்குக் கோவிந்த் பர்மார் தலைமை தாங்கினார். அம்மாநாட்டில் கலந்துகொள்வதற்காக அம்பேத்கர் சென்றிருந்தார். எம்.என்.ராயின் ரேடிக்கல் டெமாக்ரட்டிக் கட்சி, கம்யூனிஸ்டு கட்சி, இந்து மகாசபை ஆகியவற்றின் தலைவர்கள் அம்பேத்கரைத் தொடர்வண்டி நிலையத்தில் சந்தித்தனர். அம்மாநாட்டையொட்டி அகமதாபாத்தில் அனைத்து ஆலைகளும் மூடப்பட்டன. சபர்மதி ஆற்றங்கரையில், புத்தா நகர் எனப்பெயரிடப்பட்டிருந்த மாபெரும் பந்தலில் நடைபெற்ற மாநாட்டில், அம்பேத்கர் உரையாற்றினார். மாநாட்டில், பெருந்திரளாகக் கூடியிருந்த தீண்டப்படாத வகுப்பு மக்களிடையே அம்பேத்கர் பேசியபோது, 'நீங்கள் தற்போது அனுபவித்து வரும் நன்மைகள் யாவும் என்னால் பெற்றுத்தரப்பட்டவையாகும்; அவற்றைக் காந்தி பெற்றுத்தரவில்லை. ஆனால் காந்தி தீண்டப்படாதவர்களின் கோரிக்கைகளை எதிர்ப்பதற்காக முகம்மதியரின் உதவியை நாடினார் என்பதைச் சுட்டிக்காட்டினார்.

நவம்பர் 30ஆம் நாள் அகமதாபாத் நகராட்சி அம்பேத்கருக்கு வரவேற்பளித்தது. வரவேற்புக்கு விடையளித்துப் பேசியபோது, '*1942* ஆகஸ்ட்டு மாதத்தில் அரசு கடுமையாக ஒடுக்கும் நடவடிக்கையை எடுக்காதிருந்திருப்பின், சப்பானியரும், செருமானியரும் இந்தியாவைக் கைப்பற்றிவிட்டிருப்பார்கள்' என்று சொன்னார். தனக்கு வரவேற்பு அளித்துப் பெருமைப்படுத்தியதற்காக அகமதாபாத் நகராட்சிக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார். இந்நிகழ்ச்சி அவருடைய சொந்தவாழிடமான பம்பாய் நகராட்சி மேற்கொண்ட நிலைக்கு நேர்எதிராக இருக்கிறது என்று கூறினார். ஏனெனில் பம்பாய் நகராட்சி அம்பேத்கருக்கு வரவேற்பு அளிப்பதற்கான தீர்மானத்தை அதனுடைய நிகழ்ச்சி நிரலில் சேர்த்திடவே மறுத்துவிட்டது.

1945 டிசம்பர் முதல் கிழமையில் பம்பாய் மாகாணத் தலைமைச் செயலகத்தில் மண்டலத் தொழிலாளர் ஆணையர்களின் மாநாட்டை அம்பேத்கர் தொடங்கி வைத்தார். அவருடைய தொடக்க உரையில், 'தொழில் தகராறுகளைக் குறைப்பதற்கும்

அல்லது தவிர்ப்பதற்கும் மூன்று நடவடிக்கைகள் முக்கியமாக மேற்கொள்ளப்படவேண்டும். முதலாவதாக, சமரசம் செய்து கொள்வதற்கான வழிமுறைகள் இருக்கவேண்டும், இரண்டாவதாக, தொழில் தகராறுகள் சட்டத்தைத் திருத்தவேண்டும்; மூன்றாவதாக, தொழிலாளர்களுக்கான குறைந்த பட்சக் கூலிநிர்ணயச் சட்டம் இயற்றப்படவேண்டும். முதலாவதாகச் சொல்லப்பட்டது இப்போது செயல்படுத்தப்படுகிறது. மற்ற இரண்டிற்கும் உரிய சட்டவடிவங்களை மிக விரைவில் அரசின் முன்வைப்பேன்' என்று உறுதி கூறினார்.

தொழில் துறைகளில் அமைதியை ஏற்படுத்துவதற்குள்ள வாய்ப்புகள்பற்றி அம்பேத்கர் விளக்கிப்பேசினார். இனிமேல், அதிகாரத்தைக் காட்டி மட்டுமே தொழில் துறைகளில் அமைதியை நிலைநாட்டிவிட முடியாது; சட்டத்தின் அடிப்படையில் அமைதியை உருவாக்குதல் இயலும்; ஆனாலும் அதுவும் உறுதியான பயனளிக்காமல் போகக்கூடும். சமூக நீதியின் அடிப்படையில் உருவாக்கப்படுவது மட்டுமே நம்பிக்கையானதாகவும் உறுதியானதாகவும் இருக்கும். தொழில்துறை அமைதி என்பது மூன்று திசைகளிலிருந்து அணுகப்படவேண்டிய ஒன்றாகும். முதலில், அது தொழிலாளர்களிடமிருந்து தொடங்குகிறது; தொழிலாளர்கள் தங்கள் கடமையை உணர்ந்து வேலை செய்யவேண்டும்; இதன்மூலமே பொறுப்பைத் தட்டிக்கழித்தல் என்பது இல்லை என்றாக முடியும். இரண்டாவதாக, தொழில் உரிமையாளர் தொழிலாளர்களுக்கு நியாயமான கூலியைத் தரவேண்டும்; வேலை செய்வதற்கான வசதியான சூழ்நிலைகளை உருவாக்கித்தரவேண்டும். இவற்றின் மூலம் தொழிலாளர்கள் சுரண்டப்படுவது அகலும்; சுரண்டல் ஒழியும்; தொழிலாளர் நலன் பெருகும். மூன்றாவதாக, அரசும் சமூகமும் தொழில்துறைகளில் அமைதியை நிலைநாட்டுவது என்பது தொழில் உரிமையாளர்களுக்கும், தொழிலாளிகளுக்கும் இடையிலான பிரச்சினை என்று எண்ணாமல், இதை ஒரு சமூகப் பிரச்சினை என்று கருதவேண்டும்.

அம்மாநாட்டில் வரவேற்புரை ஆற்றிய தலைமைத் தொழிலாளர் நல ஆணையர் எஸ்.சி.ஜோஷி, தொழில் தகராறுகள் தீர்வுக்கான அமைப்பானது தொழில் உரிமையாளர்களுக்கோ அல்லது தொழிலாளர்களுக்கோ சார்பானதாகவும் இராது; எதிர்ப்பானதாகவும் இராது எனக் குறிப்பிட்டார்.

VI

அதன்பின் அம்பேத்கர் மன்மத் சென்றார். அங்கே தீண்டப் படாத சாதிகள் பேரவை மாநாட்டில் உரையாற்றினார். தீண்டப் படாத வகுப்பு மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காகக் காங்கிரசுடன் ஓர் உடன்பாடு காண்பதற்காகப் பல்லாண்டுகளாகத் தான் எடுத்துக் கொண்ட முயற்சிகள் தோற்றுப்போயின என்று அம்பேத்கர் தெரிவித்தார். ஆகவே தீண்டப்படாத வகுப்பினர்க் கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடங்கள் அனைத்தையும் கைப்பற்றுவது தவிர வேறு வழியில்லை என்றார்.

பிறகு அக்கோலாவில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பேசினார். அங்கிருந்து நாகபுரி சென்றார். அங்கு டிசம்பர் 13ஆம் நாள் ஒரு பொதுக்கூட்டத்தில் உரையாற்றினார். அதுசமயம், வருங்காலத் தில் அமையவிருக்கின்ற சுயாட்சி அரசுபற்றிய காங்கிரசின் தெளிவான திட்டம் குறித்த ஓர் ஆவணத்தைக் காங்கிரசு அளிக்கவேண்டும் என்று அம்பேத்கர் கோரினார். தீண்டாமை ஒழிப்பதற்காகக் காங்கிரசு மேற்கொண்ட பிரச்சாரம் முற்றிலுமாகத் தோற்றுவிட்டது எவ்வாறு என்பதுபற்றி அம்பேத்கர் மேலும் விளக்கினார். அண்மையில் அவர் பூரிக்குச் சென்றிருந்தபோது புகழ்பெற்ற ஜெகன்னாதர் கோயிலை அருகில் சென்று பார்க்க இயலாமல் கோயிலுக்குப் பக்கத்தில் இருந்த ஒருவரின் வீட்டு மாடியிலிருந்துதான் காணமுடிந்தது என்பதைச் சுட்டிக் காட்டினார்.

அவருடைய கட்சியின் தேர்தல் பணிகளை ஊக்குவிப்பதற் காகத் தென்னிந்தியாவில் அம்பேத்கர் சுற்றுப்பயணம் மேற்கொண் டார். காங்கிரசுக் கட்சியின் தேர்தல் அறிக்கை எதிர்கால அரசியல் அமைப்புச் சட்டம் பற்றி எதுவுமே கூறவில்லை; அதனால் அது ஏமாற்றுத்தனமானது என்று சென்னையில் பேசும்போது குறிப்பிட் டார். அதன்பின் மதுரையில் ஒரு தேர்தல் கூட்டத்தில் பேசினார். பிறகு கோயம்புத்தூருக்குச் சென்றார். கோயம்புத்தூரில் பொதுக் கூட்டத்தில் பேசியபோது, நடைபெறவிருக்கும் தேர்தல் நாட்டின் அரசியல் அமைப்புச் சட்டத்தைத் தீர்மானிக்கப் போகிறது என்று கூறினார். தீண்டப்படாத வகுப்பினர்களுக்குச் சட்டசபைகளிலும் அரசின் உத்தியோகங்களிலும் உத்தரவாதம் செய்யப்பட்ட இட ஒதுக்கீடு, கல்வி கற்கப் போதிய நிதி வசதி, கிராமங்களிலுள்ள அரசு நிலங்களை அளித்தல் முதலிய கோரிக்கைகளை அங்கு மீண்டும் வற்புறுத்தினார். அம்பேத்கர் அமைச்சர் என்ற தன்மையில் தன் பதவியை முறைகேடாகப் பயன்படுத்திப் பொதுமக்களின்

வரிப்பணத்தில், தன்னுடைய கட்சியின் நலத்திற்காகப் பிரச்சாரம் செய்கிறார் என்று சில பத்திரிக்கைகளும் தலைவர்களும் குறை கூறினார்கள்.

சென்னைச் சுற்றுப் பயணத்திலிருந்து திரும்புமுன் சென்னை பார்க் டவுன் மெமோரியல் ஹாலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தென்னிந்தியர் நல உரிமைச் சங்கத்தின் கூட்டத்தில் பேசினார். காங்கிரசுக் கட்சியின் வரலாறு, அது பெற்றுள்ள செல்வாக்கு ஆகியவற்றைக் குறித்து அம்பேத்கர் விளக்கிக் கூறினார். கோகலே யின் லிபரல் கட்சியை மக்கள் தங்களுக்குப் பயன்பட்டமுடியாத அமைப்பாகக் கருதினார்கள். ஒரு புரட்சிகரக் கட்சி மக்களின் கவனத்தை ஈர்க்கக் கூடியதாக இருக்கும். ஆனால் புரட்சியாளர் களைப் போல் தியாகம் செய்ய எவருமே முன்வருவதில்லை. காங்கிரசுக் கட்சியின் வலிமை அதன் தலைவராகக் காந்தி இருப்பதில்தான் அடங்கியுள்ளது; அரசியலில் நாட்டமுடையவர் களை ஈர்ப்பதைப் போலவே மதச்சிந்தனை உடையவர்களையும் காந்தி கவர்ந்து நிற்கிறார் என்று அம்பேத்கர் தன் உரையில் விளக்கினார். நீதிக்கட்சி வெற்றிபெற வேண்டுமானால் அக்கட்சிக்கு ஒரு சரியான தலைவரும் திட்டமும் கட்டுப்பாடும் இருக்கவேண்டும் என்று கருத்துரைத்தார்.

அதே அரங்கில் பார்ப்பனர் அல்லாத வழக்கறிஞர் சங்கத்தின் இரண்டாவது ஆண்டு மாநாட்டைத் தொடங்கி வைத்து அம்பேத்கர் பேசினார். அப்போது மனுநீதியையும் மற்ற இந்துமதச் சாத்திரங் களையும் அம்பேத்கர் கடுமையாகத் தாக்கினார். அவருடைய இப்பேச்சு தென்னிந்தியாவில் சாதி இந்துக்களிடையே கடுஞ்சினத் தைக் கிளப்பியது. சினங்கொண்ட இந்துக்கள் பலரும் அம்பேத் கருக்குக் கண்டனக் கடிதங்களை அனுப்பினார்கள். அக்கடிதங்கள் சொல்லவோ எழுதவோ கூச்சமடையக் கூடிய இழிமொழியில் எழுதப்பட்டிருந்தன; அம்பேத்கரின் உயிருக்கே உலைவைக்கப் போவதாகவும் மிரட்டி இருந்தன.

சென்னையில் பேசிய பின்னர் நேரே தில்லிக்குத் திரும்பினார். 1946 சனவரி முதல் கிழமையில் பத்து உறுப்பினர்களைக் கொண்ட பிரிட்டிஷ் பாராளுமன்றக் குழு புதுதில்லிக்கு வருகை தந்தது. அவர்கள் தில்லியில் இருந்தபோது சனவரி 10ஆம் நாள் அம்பேத்கர், ஜின்னா, நேரு ஆகியோரைப் பேட்டி கண்டனர். ஜின்னாவுடன் இரண்டு மணிநேரம் அக்குழுவினர் பேசினர். அதன்பின் அவர்களில் எட்டுபேர் அம்பேத்கருடன் 90 நிமிடங்கள்

கலந்துரையாடினர். பிறகு நேருவுடன் பேசினர். நாட்டிலிருந்த மற்ற முக்கிய அரசியல் தலைவர்களுடன் அக்குழுவினர் பேசினர். அக்குழுவினர் நான்கு வாரங்கள் இந்தியாவில் சில இடங்களைச் சுற்றிப் பார்த்தனர்; அவர்களுடைய கண்ணோட்டத்திற்கு ஏற்ப ஆய்வு செய்தனர்; 1946 பிப்ரவரி 10ஆம் நாள் அக்குழுவினர் இங்கிலாந்துக்குத் திரும்பினர்.

பிரிட்டிஷ் குழுவினருடன் பேசியபின் 1946 சனவரி 13ஆம் நாள் அம்பேத்கர் பம்பாய்க்குத் திரும்பினார். அங்கிருந்து ஷோலாப்பூர் சென்றார். ஷோலாப்பூரில் மாவட்டக்கழகமும் நகராட்சியும் அவருக்கு வரவேற்பளித்தன. தீண்டப்படாதவர்களின் முன்னேற்றத்திற்காகச் செய்துள்ள பணிகளுக்காக மாவட்டக் கழகத்திற்கும் நகராட்சிக்கும் நன்றி தெரிவித்தார். நகராட்சியின் முன்னாள் தலைவர் டாக்டர் மூலே அவர்களைப் பற்றி நெஞ்சம் நெகிழக் குறிப்பிட்டுப் பேசினார். மூலே அவர்களின் ஒத்துழைப்புடன் இருபது ஆண்டுகளுக்கு முன் தான் பொதுவாழ்வைத் தொடங்கியதாக அப்போது அம்பேத்கர் குறிப்பிட்டார். அம்பேத்கர் ஷோலாப்பூரில் தீண்டப்படாத மாணவர்களுக்கான தங்கும் விடுதியை நடத்திட டாக்டர் மூலே உதவினார் என்பது இங்கு நினைவு கூரத்தக்கதாகும். ஷோலாப்பூரில் அம்பேத்கர் பொதுக்கூட்டத்திலும் உரையாற்றினார். தீண்டப்படாத சாதிகள் பேரவையின் வேட்பாளர்களை நீங்கள் வெற்றிபெறச் செய்யாவிட்டால் நான் காங்கிரசில் சரண் புகுந்து, கதர் குல்லாய் அணிந்து, காங்கிரசில் பணிபுரியப் போய்விடுவேன் என்று ஆவேசத்துடன் அறிவித்தார்.

சனவரி மாத இறுதியில் அம்பேத்கர் தில்லியில் தம் தலைமையிடத்திற்குத் திரும்பினார். பிப்பிரவரி 4ஆம் நாள் தில்லி மாகாண தீண்டப்படாத சாதிகள் பேரவையில் உரையாற்றினார். தீண்டப்படாதவர்களின் ஒப்புதலைப் பெறாத அரசியல் அமைப்புச் சட்டம் அவர்களைக் கட்டுப்படுத்தாது என்று அக்கூட்டத்தில் உரையாற்றினார். பிறகு தில்லியிலிருந்து புறப்பட்டு, சத்தாராவிலும் பெல்காமிலும் மற்ற இடங்களிலும் பல கூட்டங்களில் பேசினார். அக்கூட்டங்களில் தீண்டப்படாத சாதிகள் பேரவையின் வேட்பாளர்களை வெற்றிபெறச் செய்யுமாறு தீண்டப்படாத வகுப்பு மக்களிடம் கேட்டுக் கொண்டார். காங்கிரசுத் தலைவர்களுக்கு ஒரு எச்சரிக்கையை விடுத்தார். தீண்டப்படாத வகுப்பினர் அவர்களுடைய கூட்டங்களை நடத்த முடியாமல் காங்கிரசுக்காரர்கள் தொல்லை தருவார்களானால், காங்கிரசுக்காரர்களும் அவர்களுடைய

கூட்டங்களை அமைதியாக நடத்தவிடாமல் தீண்டப்படாத வகுப்பு மக்கள் செய்வார்கள் எனக்கூறி எச்சரித்தார்.

அம்பேத்கர் பம்பாய்க்குத் திரும்பியபோது ஒரு வரவேற்பு நிகழ்ச்சியில் பம்பாய் தீண்டப்படாத வகுப்பினர் அவருக்கு ஒரு பணமுடிப்பு அளித்தனர். அக்கூட்டத்திற்கு நுழைவுக் கட்டணம் விதிக்கப்பட்டிருந்தது. சுதந்திர இந்தியாவில் தீண்டப்படாத வகுப்பினரும் சரிசமமான உரிமைகளுடைய குடிமக்களாகத் திகழ்வதற்கு வழிகாண்பதற்காக உழைக்குமாறு அவருடைய மக்களைக் கேட்டுக் கொண்டார். தீண்டப்படாத வகுப்பு மக்கள் முகம்மதியரைப் போல், தங்களுக்கு என ஒரு பிரதேசத்தைப் பிரித்துத்தர வேண்டும் என்று கேட்கவில்லை; இலவசமான உதவி எதையும் கேட்கவில்லை; சமஉரிமைகள் வேண்டும் என்றுதான் கேட்கிறார்கள். தீண்டப்படாத வகுப்பினர்களின் கோரிக்கைகள் நியாயமற்றவை என்று காங்கிரசு கருதினால், இப்பிரச்சினையை ஓர் அனைத்துலக நடுவர் மன்றத்தின் தீர்ப்புக்கு விடட்டும்; அந்த நடுவர் மன்றத் தீர்ப்புக்குக் கட்டுப்படத் தயாராக இருக்கிறேன் என்று அம்பேத்கர் கூறினார்.

அம்பேத்கர் இக்கூட்டத்தில் பேசுவதற்குச் சில நாள்களுக்கு முன்பு சர்தார் வல்லபாய்பட்டேல் காங்கிரசு பதவிக்கு வந்தால் காங்கிரசு அமைச்சரவைகளின் முதன்மையான பணி சட்டத்தின் வலிமையைக் கொண்டு தீண்டாமையின் ஆணி வேரையே கல்லி எறிவதாக இருக்கும் என்று அறிவித்திருந்தார். அம்பேத்கர் அவருடைய சமூகத்திற்காகக் கோரும் கோரிக்கைகள் நியாயமானவை; ஆனால் அவற்றை அடைய அவர் கையாளும் வழிமுறைகள் தவறானவை என்றும் பட்டேல் கூறினார். பூனா ஒப்பந்தத்தினால் தீண்டப்படாதவர்கள் பயனடைந்திருந்தபோதிலும், அம்பேத்கர் காங்கிரசுக் கட்சியையும் காந்தியையும் தொடர்ந்து பழிதூற்றிக் கொண்டிருக்கிறார் என்று பட்டேல் மேலும் கூறினார்.

வல்லபாய் பட்டேலின் பேச்சுக்குப் பதிலளித்துத் தீண்டப்படாத சாதிகளைச் சார்ந்த படித்தவர்கள் பத்திரிக்கைகளில் தொடர்ந்து கடிதங்கள் எழுதினார்கள். பூனா ஒப்பந்தம் தீண்டப்படாத வகுப்பினர்களுக்கு எவ்வாறு தீங்கானதாக அமைந்துவிட்டது என்றும் அக்கடிதங்களில் அனைவரும் குறிப்பிட்டிருந்தனர்.

தன்னுடைய தில்லி அலுவலகத்தில் பதினைந்து நாள்கள், அம்பேத்கர் பணியில் ஈடுபட்டிருந்தார். 1946 மார்ச்சு 10ஆம்

நாள் ஆக்ராவில் நடைபெற்ற அய்க்கிய மாகாணங்கள் தீண்டப் படாத சாதிகள் பேரவையின் மாநாட்டில் கலந்துகொண்டார். அம் மாநாட்டிற்கு என்.சிவராஜ் தலைமை ஏற்றிருந்தார். சுயராஜ்ஜியம் என்பது பெரும்பான்மையினர் சிறுபான்மையினரின் இசைவுடனும் ஒத்துழைப்புடனும் அரசாங்கத்தை நடத்துவது என்பதாக இருப்பின் அதை வரவேற்பதாக அம்பேத்கர் அறிவித்தார்.

மாகாணச் சட்டசபைகளுக்கான தேர்தல்கள் நடந்தன. அம்பேத்கர் அறிவுறுத்தியிருந்தவாறு தீண்டப்படாத வகுப்பு மக்கள் வாக்குச் சாவடிகளுக்கு நடந்தே சென்று வரிசையில் நின்று காலை முதல் கடைசி நிமிடம்வரை வாக்களித்தனர். மிக்பெரும்பான்மையினரான சாதி இந்துக்களின் வாக்குகளின் துணையால் தீண்டப்படாத சாதிகள் பேரவையின் வாக்குகளை எண்ணிக்கையில் காங்கிரசு மிக எளிதாக விஞ்சிவிட்டது. இத்தேர்தலுடன் தீண்டப்படாத சாதிகள் பேரவைக்கு எல்லாமே ஒய்ந்துவிட்டது போன்ற நிலை ஏற்பட்டது. அம்பேத்கருடைய கட்சி (1946 தேர்தலில்) படு தோல்வி அடைந்தது. சாதி இந்துக்களின் வாக்குகளே கிடைக்காமற் போனமையும் சாதி இந்துக்களின் வாக்குகளைப் பெறவேண்டும் என்று முயலாமையும், அமைப்பு ரீதியாகக் கட்சி அமைக்கப்பட்டு இயங்காமையும் அம்பேத்கர் கட்சியின் தோல்விக்குக் காரணங்களாயின. பேரவையின் வேட்பாளர்கள் தோற்றால் காங்கிரசில் சேருவதாக அம்பேத்கர் ஷோலாப்பூரில் அறிவித்ததை இப்போது அவரால் காப்பாற்றிட முடியாத அவலநிலை ஏற்பட்டுவிட்டது. தலைவர் என்ற நிலையில் அவருடைய பெருமையின்மீது விழுந்த பேரிடியாக இத்தோல்வி அமைந்தது. இத்தோல்வி அவரை நம்பிக்கை இழக்கும் நிலைக்குத் தள்ளியது. கசப்படைந்த அவருடைய சிந்தனை தீவிரமான வழிகளைப்பற்றி எண்ணியது. காங்கிரசு அம்பேத்கரையும் இந்து மகாசபையையும் தோற்கடித்தது. முஸ்லீம் வாக்காளர்கள் காங்கிரசின் வீண் பெருமையை, தேசிய வாதத்தை முறியடித்தனர்; காங்கிரசைத் தோற்கடித்தனர்.

இந்தியத் தேசிய இராணுவப் புரட்சியும் அவர்கள் பேரில் தொடுக்கப்பட்ட வழக்கு விசாரணைகளும், பிரிட்டிஷ் இந்தியக் கடற்படையிலும் விமானப்படையிலும் பிரிட்டிஷாருக்கு எதிராக வெடித்த புரட்சிகளும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கட்டமைப்பையே உடைத்தெறியக்கூடிய அளவிற்கு இந்தியாவில் நாட்டு விடுதலை உணர்ச்சி வெள்ளம்போல் பெருக்கெடுத்தோடச் செய்தன. சுதந்திர உணர்ச்சியும் அதனை அடைந்தே தீரவேண்டு

மென்ற வேதனை தோய்ந்த வேட்கையும் இந்திய இராணுவத்தில் உருவாகிவிட்டிருக்கிறது என்பது மிகத்தெளிவாகப் புலப்பட்டது. அரசியல் சிந்தனையும் தேசிய உணர்வும் இந்தியப் படையில் இருந்த அனைத்து நிலையினரையும் ஆட்கொண்டு அவர்களுடைய உள்ளங்களைக் காந்தம்போல் ஈர்த்து நின்றன. எனவே இனியும் இந்தியாவைத் தொடர்ந்து அடிமைத்தளையில் பிணைத்து வைத்திருக்க முடியாது என்பதைப் பிரிட்டிஷார் உணர்ந்தனர். ஆகவே *மார்ச்சு 15ஆம் நாள் பிரிட்டிஷ் பிரதமமந்திரி கிளெமென்ட் அட்லி,* இந்தியா பிரிட்டிஷ் காமன்வெல்த் அமைப்பில் சேர்ந்திருக்க உடன்பட்டோ அல்லது உடன்படாமலோ முழுச் சுதந்திரம் பெற இந்தியர்க்கு உள்ள உரிமையை அங்கீகரிப்பதாக அறிவித்தார். ஒரு சிறுபான்மையினர் பெருபான்மையினரின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தும்வகையில் அதிகாரம் செலுத்துவதை அனுமதிக்க மாட்டோம் என்றும் அட்லி கூறினார்.

பிரிட்டிஷ் பிரதமர் அட்லி தன் அமைச்சரவையில் இருந்த மூன்று அமைச்சர்களைக் கொண்ட ஒரு குழுவை இந்தியாவில் உள்ள கட்சித்தலைவர்களுடன் விவாதம் மேற்கொண்டு இந்திய அரசியலில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டையை அகற்றுவதற்கு வழிகாண வேண்டி இந்தியாவிற்கு அனுப்பினார். அக்குழுவில் *சர் ஸ்டாஃபர்டு கிரிப்ஸ், ஏ.வி.அலெக்சாண்டர்,* இந்தியாவிற்கான செயலாளராக இருந்த லார்டு பெதிக் லாரன்சு ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். பிரிட்டிஷ் அமைச்சரவைக் குழு (British Cabinet Mission) *1946 மார்ச்சு 24ஆம் நாள் புதுதில்லியை அடைந்தது.* வைசிராயின் மாளிகையில் எண்ணற்ற பேட்டிகளும் உயர்மட்ட விவாதங்களும், கண்ணியம்மிக்க முறையிலான ஆய்வுகளும் நடைபெற்றன. நேரு, பட்டேல், காந்தி, ஜின்னா, டாக்டர் ஷியாம் பிரசாத் முகர்ஜி ஆகியோரின் கருத்துகள் கேட்டறியப்பட்டன. இந்த அரசியல் நடவடிக்கையில் மிகவும் சிறப்புக்குரியச்செய்தி - காங்கிரசுக்கட்சியின் பிரதிநிதியாக மௌலானா அபுல்கலாம் ஆசாத்தும், முஸ்லீம்லீக்கின் பிரதிநிதியாக ஜின்னாவும், இந்தியச் சிற்றரசுகளின் சார்பில் போபாலின் நவாபும் இருந்தனர் என்பதே ஆகும். அதாவது இந்தியா முழுவதையும் மூன்று முஸ்லீம் தலைவர்களே பிரதிநிதித்துவப் படுத்தினார்கள்.

இந்தச் சூழ்நிலையில் சிறுபான்மை வகுப்புகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் இருவரை ஏப்பிரல் 5ஆம் நாள் பிரிட்டிஷ் அமைச்சரவைக்குழு பேட்டிகண்டது. அம்பேத்கரும், மாஸ்டர் தாராசிங்கும் அவ்விரு தலைவர்களாவர். தேர்தலில் ஏற்பட்ட தோல்வி அம்பேத்கரின் நிலையை ஆட்டங்காணச் செய்துவிட்டிருந்தது. உண்மையில் அவர் திக்குமுக்காடிப் போயிருந்தார். தீண்டப்படாத சாதிகள் பேரவையினர் அம்பேத்கரைத் தங்களின் ஏகப்பிரதிநிதியாக அனுப்

பினர். பேட்டியின்போது அம்பேத்கர் தீண்டப்படாத வகுப்பு மக்களின் கருத்துகளையும் கோரிக்கைகளையும் மிக விளக்கமாக எடுத்துரைத்தார். இந்தியாவின் அரசியல் முன்னேற்றத்தைத் தீண்டப் படாத வகுப்பினர்கள் தடுத்து நிறுத்திட முயற்சிப்பதாகக் கூறப் படும் குற்றச்சாட்டை அம்பேத்கர் வன்மையாக மறுத்தார். தன் கோரிக்கைகளை மிகவும் வலியுறுத்தி வாதாடினார். அம்பேத்கர் அக்குழுவிடம் அளித்த கோரிக்கை விண்ணப்பத்தில் தீண்டப்படாத சாதியினர் தனிவாக்காளர் தொகுதி மூலம் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அரசியல் சட்டத்தில் வழிவகை செய்யப்படவேண்டும் என்று கேட்டிருந்தார். புதிய குடியிருப்புகளின் முக்கியத்துவத்தையும், செட்டில்மெண்ட் கமிஷன் ஒன்றை அமைக்க வேண்டியதன் தேவையையும் வலியுறுத்தினார். மத்திய - மாகாணச் சட்டசபை களிலும், மத்திய-மாகாண அரசுகளின் நிர்வாகத் துறைகளிலும், அரசுப்பொது ஊழியத்திலும் மத்திய மற்றும் மாகாண அரசுத் தேர்வாணைக் குழுக்களிலும் போதிய அளவில் தீண்டப்படாத வகுப்பினர்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும் என்று கோரினார். தீண்டப்படாத வகுப்பினர்களின் கல்விக்கெனத் தனியாக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்றும் கேட்டார். இக்கோரிக்கைகளைப் புதிய அரசியல் சட்டத்தில் சேர்த்திட வேண்டும் என்பதே அம்பேத்கர் அளித்த அறிக்கையின் முக்கிய நோக்கமாக இருந்தது.

பிரிட்டிஷ் அமைச்சரவைக் குழுவினர் 1946 மே 16ஆம் நாள் தம் முடிவுகளை அரசு அறிக்கை (State Paper) வடிவில் வெளியிட்டனர். மூன்றுவகையான தொகுப்புகளில் அடங்கிய மாகாணங்களை உள்ளடக்கியதும் - பெயரளவிலும், ஓரளவு அதிகாரங்களுடையதுமான இந்திய ஒன்றியம் அமைக்கப்படுவதும் அரசியல் அமைப்புச் சட்ட அவை அமைக்கப்படுவதும், ஓர் இடைக்கால அரசு நிறுவப்படுவதும் நிறைவேற்றிட எண்ணங் கொண்டிருப்பதாக அந்த அரசு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந் தது. அந்த அறிக்கையில் தீண்டப்படாத வகுப்பினரின் கோரிக்கை பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை.

தேர்தலில் வெற்றிபெற்ற கட்சிகளின் பிரதிநிதிகளைக் கொண்டு இந்தியாவில் புதிய அமைச்சரவையை அமைப்பது என்று பிரிட்டிஷ் அரசு முடிவெடுக்கும் நிலையில் இருந்தது. ஆதலின் வைசிராய் நிர்வாக சபையில் அமைச்சர்களாக இருந்த தன் சகாக்களைப் பதவி விலகுமாறு வைசிராய் கேட்டுக்கொண்டார். ஆகவே அம்பேத்கர் புதுதில்லியை விட்டுப் புறப்பட நேர்ந்தது. பம்பாய்க்கு 1946 மே மாதக் கடைசி வாரத்தில் அவர் வந்து சேர்ந்தார்.

அரசியலமைப்பு அவையில் ஆற்றிய அரும்பணி

அம்பேத்கர் பம்பாயை அடைந்ததும் அங்கு நிலைமை பதட்டமாகவும், நெருக்கடியானதாகவும் இருப்பதைக் கண்டார். அவருடைய ஆதரவாளர்களுக்கும், காங்கிரசிலிருந்த சாதி இந்துக் களுக்கும் இடையில் நகரில் மோதல்கள் நடந்திருந்தன. இவற்றின் விளைவாக அம்பேத்கருடைய மகன் நடத்திவந்த பாரத்பூஷன் அச்சகம் எரிக்கப்பட்டுவிட்டது. அந்த நிகழ்ச்சிகள் பற்றிப் பேரவையின் செயலாளரும் மற்ற உறுப்பினர்களும் அம்பேத்கரி டம் தெரிவித்தனர். 1946 சூன் மாதத்தின் முதல் கிழமையில் பம்பாயில் அவருடைய இல்லமான ராஜகிருகாவில் தீண்டப்படாத சாதிகள் பேரவையின் செயற்குழுக்கூட்டத்தை அம்பேத்கர் கூட்டி னார். அச்செயற்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், மே 16ஆம் நாள் பிரிட்டிஷ் அரசு அறிக்கையில் வெளியிட்ட கருத்துகள் தீய நோக்கம் உடையது என்று கண்டித்தது; அந்த அறிக்கையின் மூலம் தீண்டப்படாத வகுப்பினர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி களைக் களையாவிட்டால் நேரடி நடவடிக்கையில் இறங்கப் போவதாக அத்தீர்மானம் மேலும் அச்சுறுத்தியது. காங்கிரசுக் குண்டர்கள் தீண்டப்படாத வகுப்பு மக்கள் மீது நடத்திய கொடுஞ்செயல்களையும் அவற்றின் விளைவாக அம்பேத்கருடைய அச்சகம் எரிக்கப்பட்டதையும் அத்தீர்மானம் கண்டித்தது. அதன் பின் அம்பேத்கர் புதுதில்லிக்குச் சென்றார். வைசிராய் இடைக்கால அரசை அமைத்திட அணியமாக இருந்தார். ஆகவே நிர்வாகக் கவுன்சில் உறுப்பினர்கள் 1946 சூன் மாதத்தின் மூன்றாவது கிழமையில் வைசிராயிடமிருந்து விடைபெற்றுக் கொண்டனர். அமைச்சர் பொறுப்பை ஏற்றிருந்த காலத்தில், கடமையை உணர்ந்து பணியாற்றிய திறமையான தொழிலாளர் நல அமைச்சர் என்று அம்பேத்கர் நிரூபித்துக் காட்டினார் என்பது இங்குக் குறிப்பிடத்தக்க தாகும்.

மாறிக்கொண்டேயிருந்த இத்தகைய சூழ்நிலைக்களுக்கிடையே அம்பேத்கரின் நெடுநாளைய கனவு ஒன்று நனவானது. 1945 செப்டம்பர் 13ஆம் நாள் முதல் அவருடைய உள்ளத்தில் ஓர் எண்ணம் மேலோங்கி நின்றது. நவீன விஞ்ஞான சாதனங்களை யும், தகுதி சான்ற ஆசிரியர்களையும் கொண்ட ஒரு சிறந்த

கல்வி நிறுவனத்தை நிறுவவேண்டும் என்பது அவருடைய கனவாகும். கீழ்நிலையிலிருந்த நடுத்தர வகுப்பினருக்கு, குறிப்பாகத் தீண்டப்படாத சாதியினருக்கு உயர்கல்வியை வழங்கவேண்டும் என்பதே அவருடைய எண்ணமாகும். 'மக்கள் கல்விக் கழகம்' என்ற ஓர் அமைப்பை அம்பேத்கர் உருவாக்கினார். அக்கல்விக் கழகம் *1946* சூன் *20*ஆம் நாள் ஒரு கல்லூரியைத் தொடங்கியது. இந்தியாவிலேயே சிறந்த கல்லூரிகளில் ஒன்றாக அது திகழ்ந்தது. இம்முயற்சி குறித்து அம்பேத்கருடைய நண்பர்கள் கொண்டிருந்த அச்சமும் கணிப்பும் தவறாயின. நிதி திரட்டுவதிலும், திறமையாகவும் விருப்பமுடனும் பணியாற்றக்கூடிய அலுவலர்களைக் கண்டு அமர்த்துவதிலும் அம்பேத்கர் வெற்றிபெற்றார். அக்கல்வி நிறுவனத்திற்குச் "சித்தார்த்தா கல்லூரி" என்று பெயரிடப்பட்டது. புத்தரின் பெயர்களில் இதுவும் ஒன்றாகும்.

சூன் 25ஆம் நாள் அம்பேத்கர் பம்பாய்க்குத் திரும்பியபோது தீண்டப்படாத வகுப்பு மக்கள் தங்கள் தலைவருக்குப் பம்பாய் சென்ட்ரல் நிலையத்தில் ஆரவாரம் மிக்க ஒரு வரவேற்பளித்தனர். நீதியையும் மனித உரிமையையும் நிலைநாட்டிப் போராடுமாறும் தீண்டப்படாத வகுப்புமக்களின் உரிமைகளுக்கு எதிராகத் திட்டப் படுகின்ற சூழ்ச்சிகளையும் சதிகளையும் அம்பலப்படுத்துமாறும், அம்பேத்கர் தன் மக்களுக்கு எழுச்சிமிக்க ஓர் அறைகூவல் விடுத்தார். சுதந்திர இந்தியா பழைய மரபுகளுக்குத் திரும்பிச் சென்றுவிடும் என்று அவர் கருதினார். அந்நிலையில் அவருடைய மக்கள் வறுமைக் குழியில் தள்ளப்படுவர்; புறக்கணிக்கப்படுவர், சமூகத்திலிருந்தும் அரசுப் பொது ஊழியத்திலிருந்தும் தள்ளிவைக் கப்பட்டுவிடுவர் என்று அஞ்சினார். அவருடைய மக்களின் உரிமைகளையும் விருப்பங்களையும் நிலைநாட்டிக் கொள்வதற்கான கடைசி வாய்ப்பு இதுவாகும் என்பதை அவர் புரிந்து கொண்டிருந்தார்.

சூன் 29ஆம் நாள் இடைக்கால அரசு அமைப்புபற்றி அறிவிக்கப்பட்டது. மற்ற சிக்கல்களை வைசிராயே தீர்க்குமாறு விட்டு விட்டு, பிரிட்டிஷ் அமைச்சரவைக் குழு இலண்டனுக்குப் புறப்பட்டுச் சென்றது.

தீண்டப்படாத சாதியினரின் போராட்டம், பம்பாயில் அனைத்திந்தியக் காங்கிரசுக் கமிட்டியின் கூட்டம் நடைபெற்ற இடத்தை நோக்கி ஒரு பேரணியாகச் செல்வதில் தொடங்கியது. தீண்டப்படாத சாதிகளின் தலைவர்களும் தொண்டர்களும் காங்கிரசு மாநாட்டின்

பந்தலின் முன் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். சுதந்திர இந்தியாவில் தீண்டப்படாத வகுப்பினர்களின் உரிமைகள் மற்றும் பிரதிநிதித்துவம் ஆகியவை பற்றிய காங்கிரசின் நிலைபாடு என்ன என்பதைக் காங்கிரசுத் தலைவர்கள் விளக்க வேண்டும் என்று கோரினர். ராஜ்போஜ் பூனாவில் காந்தியைச் சந்தித்து, காங்கிரசில் இருக்கிற அரிசனத் தலைவர்கள் தீண்டப்படாதவர்களின் உண்மையான பிரதிநிதிகள் அல்லர் என எடுத்துரைத்தார். தீண்டப்படாத வகுப்பினரின் போராட்டம் பூனாவில் 1946 சூலை 15ஆம் நாள் தொடங்கியது.

அதேநாளில்தான் பம்பாய்ச் சட்டசபையின் கூட்டத்தொடரும் பூனாவில் தொடங்கியது. தீண்டப்படாதவர்களின் துன்பங்கள் பற்றிப் பேசுகின்ற, கருத்துக்கூறுகின்ற, அவர்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற உரிமைகளைத் தகாத முறையில் ஆக்கிரமித்துக் கொண்ட காங்கிரசுக்கு எதிரானதாகவே உண்மையில் அப்போராட்டம் இருந்தது. அணிஅணியாகத் தொண்டர்கள் பூனாவிற்கு வந்து குழுமினர். ஊர்வலங்களும் கூட்டங்களும் நடத்தக்கூடாது என்று மாவட்ட நீதிபதி விதித்திருந்த தடை ஆணையை அவர்கள் மீறினார்கள். பூனாச் சட்டமன்றக் கட்டடத்தின் முன் அவர்கள் அணிஅணியாகக் கைதாயினர். இந்த அகிம்சைப் போராட்டம் பூனாவில் தொடங்கியபோது அம்பேத்கர் பம்பாயில் இருந்தார்.

பூனாவிற்குப் புறப்படுவதற்குமுன் சூலை 17ஆம் நாள் அம்பேத்கர் பம்பாயில் அளித்த பேட்டியில், பிரிட்டிஷ் அமைச்சரவைக்குழுவின் கருத்துக்கு எதிராகத் தாங்கள் போராட்டம் நடத்துவதாகவும், போர்க்களத்தில் தளபதி இருக்க வேண்டும் என்பது கட்டாயமில்லை என்றும், போராட்டத்தில் அவரும் கலந்து கொள்ள வேண்டிய சூழ்நிலை உருவானால் சிறைக்குச் செல்லவும் தான் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார். அம்பேத்கரின் நிலைபாட்டை ஆதரித்துச் சிலதலைவர்கள் செய்தி அனுப்பினார்கள். ஆனால் காந்தியின் அரிசன சேவாசங்கத்தின் பொதுச் செயலாளர், அம்பேத்கர் அவருடைய போராட்டத்தைத் திரும்பப் பெறாவிட்டால், அப்போராட்டத்திற்கு எதிராகத் தாங்களும் போராட்டம் நடத்தநேரிடும் என்று எச்சரித்தார். தீண்டப்படாத சாதிகள் பேரவை ஒரே நேரத்தில் கான்பூரிலும் லக்னோவிலும் சத்தியாக்கிரகப் போராட்டத்தைத் தொடங்கியது.

அப்போது மாகாணச் சட்டசபைகள் அரசியல் சட்ட அவைக்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பின. பிரிட்டிஷ்

அமைச்சரவைக் குழுவின் திட்டப்படி அரசியல் அமைப்புச் சட்ட அவை தில்லியில் கூடுவதாக இருந்தது. காங்கிரசு அதனுடைய பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தனுப்பியது; அவர்களில் பெரும்பாலோர் அரசியல் சட்டத்தை உருவாக்குவதில் சிறந்த அறிவு பெற்றிருப்பவர்கள் என்பதற்காகத் தேர்ந்தெடுக்கப்படவில்லை; நாட்டு விடுதலைப் போராட்டத்தில் சிறைவாசம் அனுபவித்தவர்கள் என்ற அடிப்படையிலேயே தேர்ந்தெடுக்கப்பட்டனர். பம்பாய் மாகாணச் சட்டசபையில் அம்பேத்கரைத் தேர்ந்தெடுத்திட அவருடைய கட்சி உறுப்பினர்கள் யாரும் இல்லை. எனவே வங்காள மாகாணச் சட்டசபையில் இருந்த தீண்டப்படாத வகுப்பு உறுப்பினர்களின் ஆதரவைக் கொண்டு அரசியல் அமைப்புச் சட்ட அவைக்கு வேட்பாளராக அம்பேத்கர் போட்டியிட்டார்; முஸ்லீம் லீக்கின் ஆதரவுடன் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அம்பேத்கரின் வாழ்க்கை தொடர்ந்து ஒரு போராட்ட வாழ்க்கையாகவே இருந்து வந்தபோதிலும், அவருடைய மனஉறுதியை, தகுதியை, ஆற்றலை வெளிப்படுத்துவதற்கான தக்க வாய்ப்பு அமையும்போது அதை நழுவவிடாமல் கைப்பற்றுவதற்காக அச்சூழ்நிலைக்கு ஏற்ப ஒத்திசைவாக நடந்து கொள்ளவும் அவர் தவறவில்லை. அவருடைய சிந்தனை எப்பொழுதும் தெளிவாகவே இருந்தது; அவருடைய கணிப்பு மிகச் சரியானதாகவே இருந்தது.

சூலை 19ஆம் நாள் பம்பாய் மாகாணப் பிரதமர் கெர் அவருக்கே உரிய காந்தியப் போக்கில், தீண்டப்படாத சாதிகள் பேரவை நடத்துகின்ற சத்தியாக்கிரகத்திற்கான அடிப்படைக் காரணத்தை அறிந்துகொள்ள முடியவில்லை என்று கூறினார். தீண்டப்படாத வகுப்பினர்களின் மனக்குறை பிரிட்டிஷ் அமைச்சரவைக் குழு அவர்கள் கேட்டதைக் கொடுக்கவில்லை என்பதற்காகவா? அல்லது அண்மையில் நடந்த தேர்தலில் அம்பேத்கரும் அவருடைய கட்சியினரும் தோல்வியடைந்ததற்கு எதிர்ப்புக் காட்டுவதற்காகவா? அல்லது அவர்கள் நிலைகுலைந்து போயிருப்பதன் விளைவினாலா? என்று பிரதமர் கெர் குத்தலாக வினவினார்.

தன்னை நோக்கி ஏவப்பட்ட இத்தகைய குற்றச்சாட்டுகளுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் அம்பேத்கர் பூனாவில் பத்திரிக்கைக்கு அளித்த பேட்டியில் பதில் கூறினார். 'பிரிட்டிஷ் அரசு இந்தியாவை விட்டு வெளியேறுவது என்று முடிவு செய்துவிட்டது. பிரிட்டிஷாரின் அதிகாரங்களைச் சாதி இந்துக்களும் முஸ்லீம்களும் பெற இருக்கிறார்கள். ஆகவே இந்தியாவின் எதிர்கால அரசியல்

சட்டத்தில் ஆறுகோடி பேராக உள்ள தீண்டப்படாத வகுப்பு மக்களின் உரிமைகள், நலன்கள் பற்றிய தெளிவான திட்டத்தைக் காங்கிரசு அறிவிக்க வேண்டும் என்று கேட்பதற்குத் தீண்டப்படாத வகுப்பினர்களுக்கு உரிமை இருக்கிறது. பூனாவில் தொடங்கப்பட்டுள்ள சத்தியாக்கிரகம், தீண்டப்படாத வகுப்பினர் அவர்களுடைய நியாயமான அரசியல் உரிமைகளைப் பெறுவதற்காக நாடு தழுவிய அளவில் நடத்தப்படவுள்ள போராட்டத்தின் தொடக்கமே ஆகும். பூனாப் போராட்டம் உயர்ந்த அறநெறியைக் கடைப்பிடித்து நடத்தப்படுகிறது. அப்போராட்டத்தில் பெருந்திரளாகக் கலந்து கொண்ட தொண்டர்கள் கடைப்பிடித்த அகிம்சைப் பண்பானது, சத்தியாக்கிரகத்தில் தன்னைப் பெரிய நிபுணர் என்று கருதிக்கொண்டிருக்கின்ற காந்திக்கே பாடம் கற்பிப்பதாக உள்ளது. பூனா ஒப்பந்தம் தீண்டப்படாத வகுப்பினர்களின் உண்மையான பிரதிநிதிகளைச் சட்டசபைகளுக்குத் தேர்ந்தெடுத்து அனுப்பமுடியாமல் தடுக்கிறது. ஆகவே அது ஒழிக்கப்பட வேண்டும். உண்மையில் பூனா ஒப்பந்தம் தீண்டப்படாத வகுப்பினரின் வாக்குரிமையைப் பறிப்பதே ஆகும். தீண்டப்படாத வகுப்பினருடைய அறவழிப்பட்ட போராட்ட முறைகள் பயன்தராமற் போகுமானால், அவர்களுடைய எதிர்ப்பை வெளிப்படுத்திட, வேறு வழிமுறைகளைக் கையாள வேண்டியிருக்கும்' என்ற எச்சரிக்கையுடன் அம்பேத்கர் தீண்டப்படாத வகுப்பினரின் நிலைபாட்டை விளக்கினார்.

பூனாவில் நடைபெற்ற ஒரு மாபெரும் கூட்டத்தில், அம்பேத்கர், தீண்டப்படாத வகுப்பு மக்கள் தங்கள் போராட்டத்தை அதன் இறுதி முடிவுக்குக் கொண்டு செல்லும் வரையில் தொடர்ந்து போராடுமாறு அறிவுறுத்தினார். அம்பேத்கரின் உழைப்பின், போராட்டத்தின் பயன்களைக் காங்கிரசில் இருந்து கொண்டே அனுபவித்துக் கொண்டிருந்த அரிசனத் தலைவர்கள் அம்பேத்கரின் போராட்டத்துக்கு எதிராகப் பேசினார்கள். அரிசனங்களின் கோரிக்கைகளை எப்பொழுதும் எதிர்ப்பவர்களை அவர்கள் ஆதரித்தனர். இது ஊட்டி வளர்த்தவரை நோக்கி நாய் குரைப்பது போன்றதாகும்.

பூனாவில் நடைபெற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்தைப் பற்றி காந்தி 'அரிஜன்' பத்திரிகையில் எழுதினார். அம்பேத்கர் நடத்திக் கொண்டிருக்கின்ற சத்தியாகிரகம், சத்தியாக்கிரகப் போராட்ட முறையை நையாண்டி செய்வதாகவே உள்ளது; அம்பேத்கரின் வழிமுறைகள் வன்முறையற்றதாக இருந்தபோதிலும் அவருடைய

கோரிக்கை உண்மையில் தெளிவற்றதாகவே இருக்கிறது என்று காந்தி எழுதினார்.[100]

சத்தியாக்கிரகப் போராட்டம் தொடர்ந்து பதினைந்து நாட்கள் நடைபெற்றது. அதன் நெருக்குதல் காரணமாகப் பூனாவில் நடைபெற்றுக் கொண்டிருந்த சட்டசபைக் கூட்டத்தொடரை அரசு ரத்து செய்துவிட்டது. அம்பேத்கருடன் ஓர் உடன்பாடு காண வேண்டியதன் தேவையைக் காங்கிரசுத் தலைவர்கள் உணர்ந்தனர். எனவே பம்பாய் மாகாணக் காங்கிரசுக் கமிட்டியின் தலைவராக இருந்த எஸ்.கே.பாட்டீல் சித்தார்த்தா கல்லூரியில் அம்பேத்கரைச் சந்தித்தார். அதன்பின் அவர்கள் இருவரும் என்.எம்.ஜோஷியுடன் சூலை 27ஆம் நாள் சர்தார் பட்டேலைச் சந்தித்தனர். அவர்கள் எல்லோரும் ஒரு மணிநேரம் கலந்து பேசினர். அரசியல் சட்ட அமைப்பு அவையில் தீண்டப்படாத வகுப்பினரின் பிரதிநிதித்துவம் மற்றும் பூனாச் சத்தியாக்கிரகம் பற்றியே அவர்கள் பேசினர். எனினும் உடன்பாடு ஏற்படுவதாகத் தெரியவில்லை. ஆகவே ஆகஸ்டு 8ஆம் நாள் தீண்டப்படாதவர்கள் அவர்களுடைய முன்னணித் தலைவர்களான கெய்க்வாடு, ராஜ்போஜ் முதலானவர்களின் தலைமையில் வார்தாவில் நடைபெற்றுக் கொண்டிருந்த அனைத்திந்தியக் காங்கிரசுக் கமிட்டியின் மாநாட்டை நோக்கி ஊர்வலமாகச் சென்றனர்.

சில நாட்கள் கழித்து அம்பேத்கர் சர்தார் பட்டேலுக்கு ஒரு மடல் எழுதினார். அதில், 'இந்த நாடு எந்த ஒரு தனிப்பட்ட மனிதரைவிட - அவர் எவ்வளவு பெரிய மாமனிதராக இருப்பினும், உயர்ந்தது என்று எண்ணுகின்றேன். காங்கிரசுக்காரராக இல்லாமலேயே ஒருவர் சிறந்த தேசபக்தராக இருக்க முடியும். எந்தவொரு காங்கிரசுத் தலைவரை விடவும் நான் ஒரு சிறந்த தேசபக்தராக இருக்க இயலும். எந்தவொரு காங்கிரசுத் தலைவரை விடவும் நான் ஒரு சிறந்த தேசிய வாதியே என்று அம்பேத்கர் குறிப்பிட்டிருந்தார்.

ஆகஸ்ட்டு 24ஆம் நாள் இடைக்கால அமைச்சரவையில் பொறுப்பேற்கவுள்ள அமைச்சர்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டன. நேரு, பட்டேல், ஆசாத், இராசகோபாலாச்சாரி, சரத்சந்திர போசு ஆகியோரின் பெயர்களுடன் பீகாரின் தீண்டப்படாத வகுப்புத் தலைவரான ஜெகஜீவன்ராம் பெயரும் இடம் பெற்றிருந்தது. இடைக்கால அமைச்சரவையில் சேர முஸ்லீம் லீக் இணங்கவில்லை. அதனால் முஸ்லீம்களுக்கான இடங்களில்

முஸ்லீம் லீக் அல்லாத முஸ்லீம் தலைவர்கள் அமர்த்தப்பட்டனர். அவ்வாறு அமைச்சரான ஒரு முஸ்லீம் தலைவரை வெறிகொண்ட ஒரு முஸ்லீம் குத்திக் கொன்றுவிட்டார்.

அதே ஆகஸ்ட்டு 24ஆம் நாள் பூனாவில் நடைபெற்றுக் கொண்டிருந்த தீண்டப்படாத சாதிகள் பேரவையின் செயற்குழுக் கூட்டத்தில் அம்பேத்கர் கலந்துகொண்டார். அச்செயற்குழு அரசியல் நிலைமைகளை ஆய்வு செய்தது. இடைக்கால அமைச்சரவை பற்றிய வைசிராயின் அறிவிப்பு அம்பேத்கருக்கும் அவருடைய கட்சிக்கும் பெருத்த ஏமாற்றம் அளித்தது. மத்தியில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள அமைச்சரவையில் தீண்டப்படாத வகுப்பினர்க்குப் போதிய அளவில் பிரதிநிதித்துவம் அளிக்கப்படாமை குறித்து மிகப்பெரிய ஏமாற்றத்தை அம்பேத்கர் வெளிப்படுத்தினார். அமைச்சரவையில் தீண்டப்படாத வகுப்பினர்க்கென மேலும் ஓர் இடம் தரப்படவேண்டும் என்று கோரினார். ஆயினும் அமைச்சர்கள் பட்டியலில் ஜெகஜீவன்ராம் பெயர் இடம் பெற்றிருப்பது கண்டு வியப்படைந்தார். வைசிராயின் நிர்வாகக் கவுன்சிலில் தீண்டப்படாத வகுப்பினர்களுக்குப் போதிய அளவில் பிரதிநிதித்துவம் வழங்கப்படாமையை எதிர்த்து அம்பேத்கர் பிரிட்டிஷ் பிரதமருக்குத் தந்தி கொடுத்தபோது, தீண்டப்படாத வகுப்பினர்க்கு நிர்வாகக் கவுன்சிலில் அதிகப் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை ஜெகஜீவன்ராம் ஆதரித்தார். தீண்டப்படாத சாதிகள் பேரவையின் செயற்குழுக் கூட்டம் அமைச்சர் பதவியை ஏற்கவேண்டாம் என்று ஜெகஜீவன்ராமைக் கேட்டுக் கொண்டது. புதிய அரசு தங்களுடைய ஆதரவைப் பெறத் தகுதியற்றதாக இருக்கிறது என்றும், தீண்டப்படாத வகுப்புத் தலைவர்கள் பிரிட்டிஷ் அரசு அளித்துள்ள கவுரவப் பட்டங்களைத் துறக்கவேண்டும் என்றும் செயற்குழு கேட்டுக் கொண்டது.

1946 செப்டம்பர் மாதத்தின் முதல்வாரத்தில் தீண்டப்படாத சாதிகளின் பேரவை நாகபுரியில் சத்தியாக்கிரகத்தைத் தொடங்கியது. குறுகிய நேரத்திலேயே எண்ணூறு தொண்டர்கள் கைதாயினர்.

எதிர்ப்பு நடவடிக்கைகளும் ஆர்ப்பாட்டங்களும் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மட்டுமே பயன்தருகின்றன; அதனால் அவரே பிரிட்டனுக்குச் சென்று கடைசியாக ஒரு முயற்சியை மேற்கொண்டு, முடியுமாயின் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதை அப்போது அம்பேத்கர் உணர்ந்தார். இந்த அரசியல்

நோக்கினை நிறைவேற்றிட எண்ணி அக்டோபர் 15 ஆம் நாள் கராச்சி வழியாக இலண்டனுக்குப் பயணமானார். அம்பேத்கர் கராச்சியில் பத்திரிக்கைகளுக்கு, அளித்த பேட்டியில் தன்னுடைய இலண்டன் பயணத்தின் நோக்கத்தை வெளிப்படுத்திட மறுத்துவிட்டார். அம்பேத்கர் இலண்டனை அடைந்ததும், தொழிற்கட்சி தீண்டப்படாத வகுப்பினரைப் புறக்கணித்து விட்டது என்றும் அவர்களுடைய கோரிக்கைகளுக்குத் துரோகம் இழைத்துவிட்டது என்றும் அறிவித்தார். இடைக்கால அரசில் முஸ்லீம் லீக் சேர்ந்த பிறகு தில்லியில் ஏற்பட்டுள்ள அரசியல் நிலைமைபற்றி அம்பேத்கரிடம் இலண்டனில் கேட்கப்பட்டபோது, இரு வெவ்வேறு நாட்டினர் சேர்ந்து ஒரு நாட்டை ஆளுவது போன்றதாகும் இது என்றார். இந்தியா ஓர் உள்நாட்டுப் போரில் சிக்கிக் கிடக்கிறது என்று பத்திரிக்கையாளர்களிடம் வெளிப்படையாகக் கூறினார். பிரிட்டிஷ் அரசு 1935ஆம் ஆண்டைய சட்டத்தை நடைமுறைப் படுத்த வேண்டும் என்றும், இன்னும் பத்தாண்டுகள் கழித்து ஒன்றுபட்ட இந்தியாவை இந்தியாவிலுள்ள கட்சிகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் பிரிட்டிஷ் அரசுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

இலண்டனில் அம்பேத்கர் அவருடைய கோரிக்கை அறிக்கையை உடனடியாக அச்சிட்டுக் கொண்டு, இங்கிலாந்தின் ஆட்சிப் பொறுப்பை வகித்த அரசியல் தலைவர்களை அணுகினார். தீண்டப்படாத வகுப்பினரை இஸ்லாம் மதத்தில் சேருமாறு அறிவுரை கூறியிருக்கிறீர்களா என்று அம்பேத்கரிடம் ராய்ட்டர் செய்தி நிறுவனத்தின் அரசியல் நிருபர் கேட்டபோது, அவ்வாறு ஏதும் கூறவில்லை என்று அம்பேத்கர் பதிலளித்தார்.

அரசியலில் ஒரு செயலூக்கம் இழந்த நிலைக்கு அம்பேத்கர் ஆட்பட்டிருந்தார். தீண்டப்படாத வகுப்பினரின் நலன்களுக்காக அவர் தன் வாழ்நாள் முழுவதும் மேற்கொண்ட முயற்சிகளுக்குப் பெருத்தஅடியாக இது இருந்தது. தீண்டப்படாத வகுப்பினர்க்கு அரசு நிர்வாகத்துறைகளிலும் சட்டசபைகளிலும் உரிய பிரதிநிதித்துவம் தரப்பட வேண்டும் என்பது அவருடைய தலையாய குறிக்கோளாக இருந்தது. இந்த இலட்சியத்தை எப்படியும் அடைய வேண்டும் என்பதற்காக அவர் தன்னைமறந்து உழைத்தார். தான் மனந்தளர்ந்திருப்பதாக அவரே ஒத்துக் கொண்டார். அவருடைய உடல் நலன் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருப்பதாக அவருடைய நண்பர்களும் சொன்னார்கள்.

சோர்வுற்றிருந்த சூழ்நிலையை ஒரு செய்தி மாற்றியமைத்து வேகப்படுத்தியது. 1946 அக்டோபர் 26ஆம் நாள் இடைக்கால அரசில் முஸ்லீம் லீக் சேர்ந்தது; முஸ்லீம் லீகிற்கு ஒதுக்கப்பட்ட அமைச்சர் பதவிக்கு ஜோகேந்திர நாத் மண்டலை அது தேர்ந்தெடுத்தது. ஜோகேந்திரநாத் மண்டல் சட்ட அமைச்சராகப் பொறுப்பேற்றார். இதனால் மத்திய அமைச்சரவையில் தீண்டப் படாத வகுப்பினர் இருவர் இப்போது இடம் பெற்றிருந்தனர். மேலும் ஜோகேந்திரநாத் மண்டல் தீண்டப்படாத சாதிகள் பேரவையின் செயற்குழு உறுப்பினரும் ஆவார்.

1946 அக்டோபர். 31ஆம் நாள் இந்தியாவின் அரசியல் பிரச்சினைகளில் அக்கறையுள்ள முக்கியமான பிரிட்டிஷ் அரசியல் வாதிகளை அம்பேத்கர் சந்தித்துப் பேசினார். அவருடைய கோரிக்கை அறிக்கைபற்றி பிரிட்டிஷ் பிரதமர் அட்லி இந்தியாவிற் கான செயலாளர் ஆகியோருடன் விவாதித்தார்; சர்ச்சிலைச் சந்தித்தார். மற்றும் இந்தியாவிற்கான செயலாளராக இருந்தபோது சர் சாமுவேல் ஹோரே என்று பெயர் தாங்கியிருந்த டெம்பிள்உட் பிரபு என்பவரையும், மற்றவர்களையும் அம்பேத்கர் சந்தித்துப் பேசினார். நவம்பர் 5ஆம் நாள் பிரிட்டிஷ் மக்களவையிலிருந்த இந்திய விவகாரங்களுக்கான கன்சர்வேட்டிவ் கட்சிக் கமிட்டி உறுப்பினர்கள் கூட்டத்தில் உரையாற்றினார். இக்கூட்டத்தில் தொழிற்கட்சியைச் சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் கலந்துகொண்டனர். இக்கூட்டத்திற்குப் பத்திரிக்கையாளர்கள் அனு மதிக்கப்படவில்லை. இக்கூட்டம் கிட்டத்தட்ட ஒருமணி நேரம் நடந்தது. உண்மை நிலையை விளக்கும் புள்ளி விவரங்களை அம்பேத்கர் எடுத்துரைத்தார். ஆனால் அவருடைய கோரிக்கை வெற்றி பெறும் என்ற நம்பிக்கை அவருக்கு ஏற்படவில்லை. உதட்டளவிலான ஆதரவு மட்டுமே தெரிந்தது. இக்கோரிக்கைகளை ஆதரிப்பதுபோல் சிலர் நடந்துகொண்டனர். கன்சர்வேட்டிவ் கட்சிக் கமிட்டிக் கூட்டத்தில் தொழிற்கட்சி உறுப்பினர்கள் கலந்துகொண்ட மையானது, இந்தக் கடைசிக் கட்டத்தில் அம்பேத்கர் வகுப்புச் சிக்கலை மீண்டும் கிளப்புவதை அவர்கள் விரும்பவில்லை என்பதைக் காட்டிற்று. மாறியுள்ள சூழ்நிலைக்கு ஏற்பச் சரிசெய்து கொண்டு அம்பேத்கர் நடந்து கொள்ள வேண்டும் என்றும், அரசியல் சட்ட அமைப்பு அவையில் அவருடைய கோரிக்கைகளை முன்வைக்க முயல வேண்டும் என்றும் அறிவுரை வழங்கினார்கள். ஆகவே முற்றிலுமாக மனந்தளர்ந்த நிலையில் அம்பேத்கர் இலண்டனை விட்டுப் புறப்பட்டார்.

அம்பேத்கர் பம்பாய் வந்தடைந்ததும் குளோப் ஏஜென்சியின் நிருபருக்கு அளித்த பேட்டியில், நிறைவேற முடியும் என்ற நம்பிக்கை இல்லாத போதிலும், கலப்புத் திருமணம், சமபந்தி உணவு போன்ற உண்மையான, உறுதியான நடைமுறைகளின் அடிப்படையில் தீண்டப்படாத வகுப்பினர் இந்துச் சமூகத்தில் ஒன்றிணையவும் அல்லது கலந்துவிடவும் ஆயத்தமாக இருக்கிறார்கள் என்று கூறினார். இந்தப் பிரச்சினையில் கவனிக்க வேண்டிய செய்தி என்னவென்றால், சமூகத்தில் சாதி இந்துக்களுக்குச் சரிசமமான அந்தஸ்தைத் தீண்டப்படாத வகுப்பினர் பெற்றிட முடிந்தால்தான் இந்துச் சமூகத்துடன் தீண்டப்படாத வகுப்பினர் இணைதல் என்பது எளிதானதாகும் என்று அம்பேத்கர் மேலும் விளக்கினார். இந்து மதம் எதிர்காலத்தில் தீண்டப்படாத வகுப்பினர் ஏற்றுக் கொள்ளக் கூடிய தன்மையில் தன்னைத் திருத்திக் கொள்ளும் என்ற சிறிதளவு நம்பிக்கை தனக்கு இருப்பதாக அம்பேத்கர் தெரிவித்தார். அப்படிப்பட்ட நிலையில்தான் தீண்டப்படாத வகுப்பினர் இந்து மதத்திலேயே தொடர்ந்து இருந்திட விரும்புவார்கள் என்றும், மேலும் மனிதக் கூட்டத்தை ஓரிடத்திலிருந்து பெயர்த்தெடுத்து வேறோர் இடத்தில் நடுவது போன்று செய்வது இயலாதது ஆகும் என்றும் விளக்கினார்.

அருள்திரு லிவிங்ஸ்டன் தீண்டப்படாத வகுப்பினர் கிறித்தவ மதத்திற்கு மாறவேண்டும் என்று கூறியிருப்பதுபற்றி அம்பேத்கர் குறிப்பிட்டுக் "கிறித்தவர்களிடமும் கிறித்தவர் அல்லாத மற்றவர்களிடமும் மதம் என்பது பரம்பரையாகத் தொடர்ந்து பெறப்படும் ஒன்றேயாகும். கிறித்தவர்கள் அவர்களுடைய தந்தையின் சொத்தை வாரிசு உரிமையின் மூலம் பெறுகிறார்கள்; அத்துடன் தந்தையின் மதத்தையும் பெறுகிறார்கள். கிறித்தவர்கள் மற்ற மதங்களுடன் கிறித்தவ மதத்தை ஒப்பிட்டுப் பார்ப்பதை ஒருபோதும் நிறுத்துவதேயில்லை. அவர்கள் கிறித்தவ ஆன்மிகத் தத்துவத்தை மற்ற மதங்களின் ஆன்மிகத் தத்துவத்திற்கு ஒப்பிட்டுப் பார்த்துத் தாங்களே ஒரு முடிவை எடுக்கிறார்கள்" என அம்பேத்கர் கூறினார்.

அச்சமயம் அம்பேத்கர் எழுதிய 'சூத்திரர் யார்?' (Who were shudras?) என்ற நூல் வெளிவந்தது. அந்நூலை மகாத்மா ஜோதிராவ் புலேவிற்குக் காணிக்கையாக்கியிருந்தார். மிகச்சிறந்த சீர்திருத்தக்காரர்களில் ஒருவராகப் புலேவை அம்பேத்கர் போற்றினார். 'சூத்திரர் யார்?' என்ற நூல் ஓர் அறிவுக்களஞ்சியமாக அமைந்துள்ளது. நெடுங்காலமாக அவர் மேற்கொண்ட கடும் உழைப்பினாலும்

செய்த ஆய்வுகளாலும் உருவானதே இந்நூல். பல உண்மைகளை நிரல்படக் கோத்து நெஞ்சங்கவரும் தன்மையில் அமைக்கப்பட்டுள் ளது இந்நூல். மதிநுட்பம் வாய்ந்ததாகவும் அறிவுத் தெளிவையூட்டு வதாகவும் விளங்குவது இந்நூல். சூத்திரர்கள் என்பவர்கள் சத்திரியர்களே ஆவார்கள் என்பதே அம்பேத்கர் நிலைநாட்டிய கோட்பாடாகும். சூத்திரர்கள்தான் தாசர்கள் என்றும் தஸ்யூக்கள் என்றும் குறிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் சூரிய குலத்தைச் சேர்ந்த பல இனங்களில் ஒரு பிரிவினர். பார்ப்பனர்களுக்கும் சத்திரியர் களுக்கும் ஏற்பட்ட கடுமையான மோதல்களின் விளைவாக அவர்கள் தாழ்நிலைக்குத் தள்ளப்பட்டனர். சத்திரியர்களுக்குப் பூணூல் சடங்கு செய்திட பார்ப்பனர்கள் மறுத்துவிட்டனர்; சத்திரியர்களை நான்காவது சாதியாக-சூத்திரராக ஆக்கி இழிவுபடுத்தி விட்டனர். அதற்கு முன் நான்காவது வருணம் என்று ஒன்று இருந்ததில்லை.

நவம்பர் மாதத்தின் கடைசி வாரத்தில் இடைக்கால அரசில் சட்ட அமைச்சராக இருந்த ஜோகேந்திரநாத் மண்டல் பம்பாய்க்கு வந்தார். அவர் அளித்த பேட்டியில், அம்பேத்கரின் இலண்டன் பயணம் தனக்கு மனநிறைவளிப்பதாகவும், இடைக்கால அமைச்சர வையில் தான் அமைச்சராக ஆகியிருப்பதற்கு அம்பேத்கரின் முழு ஆதரவு இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

முஸ்லீம் லீக் புறக்கணித்தபோதிலும் அரசியல் சட்ட அமைப் புச் சட்டசபை திட்டமிட்டவாறு *1946* டிசம்பர் 9ஆம் நாள் கூடியது. இராஜேந்திரப் பிரசாத் அவையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தேவையான செயல்முறை விதிகளை உருவாக்குவதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டது. டிசம்பர் 13ஆம் நாள் பண்டித நேரு "குறிக்கோளை அறிவித்தல்" என்ற தீர்மானத்தை முன்மொழிந்து ஆற்றிய மிகச் சிறந்த உரை, அரசியல் சட்ட அமைப்பு அவையின் செயல்பாட்டின் தொடக்கமாய் அமைந்தது. நேரு இயல்பாகவே சிறந்த பேச்சாளர். கொள்கையில் தீவிரமான, முழுமையான ஈடுபாடு கொண்டவர்; தொலைநோக்கு டைய தலைவர். இத்தகைய சிறப்புகளையுடைய நேரு, வரலாற்றில் குறிப்பிடத்தக்க இக்கட்டத்தில் அரசியல் அமைப்புச் சட்ட அவையில் எதிர்கால இந்தியாவைப் பற்றி ஆற்றிய அரிய உரையின் மூலம் அவையில் இருந்த அனைவரின் உள்ளங்களை யும் கவர்ந்தார்; முழுமைபெற்ற மனிதராக உயர்ந்து நின்றார். அவருடைய வாழ்வில் பெருஞ்சிறப்பு வாய்ந்த நிகழ்ச்சியாக இஃது

அமைந்தது. சுதந்திரமான இறையாண்மையுடைய குடியரசாக இந்தியாவை நிறுவுவதே குறிக்கோள் ஆகும் என நேரு அறிவித்தார். நேருவின் தீர்மானத்தைப் புருஷோத்தமதாசு தாண்டன் வழிமொழிந்து சிறந்ததொரு உரையாற்றினார்.

இந்தியாவின் மிகச்சிறந்த சட்ட மேதையான, சமரசம் செய்து வைப்பதில் தனித்தன்மையான வல்லமை வாய்ந்தவராக விளங்கிய டாக்டர் எம்.ஆர்.ஜெயகர் நேருவின் தீர்மானத்திற்கு ஒரு திருத்தம் கொண்டு வந்தார். அரசியல் அமைப்புச் சட்ட அவையில் முஸ்லீம் லீக்கும், இந்தியச் சிற்றரசுகளின் பிரதிநிதிகளும் கலந்துகொள்ளும் வரையில் குறிக்கோள் குறித்த தீர்மானத்தை நிறைவேற்றுவதைத் தள்ளிப் போடவேண்டும் என்று அவர் கோரினார். நல்லெண்ணத்து டனேயே எம்.ஆர்.ஜெயகர் இவ்வாறு கூறினார்; ஆனால் இது காங்கிரசுத் தலைவர்களை எரிச்சலடையச் செய்தது. டாக்டர் ஜெயகர் வேண்டுமென்றே முட்டுக்கட்டை போடுகிறார் என்று குறைகூறி காங்கிரசு உறுப்பினர்கள் கெக்கலித்து ஏளனம் செய்தனர். இனிமையாக - ஆற்றொழுக்காக - கேட்போரைப் பிணிக்கும் வண்ணம் பேசும் ஆற்றல்படைத்த ஜெயகர் மேற் கொண்டு எதுவும் கூறாமல் அமைதியாக அமர்ந்துவிட்டார். அந்த அவையில் பிறகு அவர் எப்போதும் பேசவேயில்லை. ஆயினும் ஜெயகரின் தீர்மானம் பெரும் விவாதப் புயலைக் கிளப்பியது. எம்.ஆர்.மசானி நேருவின் தீர்மானம் ஒரு சனநாயக சோசலிசத் தீர்மானம் என்று கூறி ஆதரித்தார். ஃபிராங்க் அந்தோணி நேருவின் தீர்மானத்தின் முதன்மை வாய்ந்த தன்மையை ஏற்றுக் கொள்வதாகக் கூறினார்; ஆயினும் டாக்டர் ஜெயகரின் திருத்தத் தீர்மானத்தைச் சட்டத்தின் அடிப்படையிலும் பொருத்தமான நடைமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டியதன் அடிப்படையிலும் ஆதரிப்பதாகக் கூறினார். இந்து மகாசபையின் தலைவர் டாக்டர் எஸ்.பி.முகர்ஜி நேருவின் தீர்மானத்தின்மீது முடிவெடுப்பதைத் தள்ளிப் போடுவ தற்குரிய காரணம் இருப்பதாகத் தெரிய வில்லை என்றார்; மேலும் இத்தீர்மானம் நிறைவேற்றப்படுவதைத் தள்ளிப் போடுவதானது முஸ்லீம் லீக்கினால் அரசியல் அமைப்புச் சட்டஅவையில் கலந்து கொள்ளாமல் அதன் நடவடிக்கைகளைத் தடுத்திட ஊக்குவிக்கும் என்று அஞ்சுவதாகவும் குறிப்பிட்டார்.

பிறகு, அரசியல் அமைப்புச் சட்ட அவையின் தலைவர், எதிர்பாரா வகையில், அவையிலிருந்த உறுப்பினர் ஒருவரை அழைத்து அவருடைய கருத்தைக் கூறுமாறு கேட்டார். அந்த

அழைப்பினை ஏற்று, நீண்ட தலையும் உறுதியான முகவாய்க் கட்டையும் உருண்ட முகமும் கவரும் தோற்றமுமுடைய ஒருவர், ஜெயகரின் திருத்தத்தை ஆதரிப்பதற்காக அவருடைய இருக்கையிலிருந்து எழுந்து நின்றார். அவர்தான் டாக்டர் அம்பேத்கர்! காங்கிரசின் உலகறிந்த எதிரியாக இருந்தவர்; காங்கிரசின் கொள்கைகளைச் சாடியவர்; காங்கிரசின் தலைவரான காந்தியை ஊரறியவும் தனிப்பட்ட முறையிலும் ஏளனம் செய்தவர். ஆகையால் அரசியல் அமைப்புச் சட்டஅவையில் இருந்த அனைவரின் பார்வையும் அம்பேத்கர்மீது பதிந்திருந்தது. அம்பேத்கரின் கண்கள் ஒருகணம் அவையினரை வட்டமிட்டன. ஜெயகரின் திருத்தத்தை ஆதரிக்கின்ற ஆபத்தான பணியைச் செய்வதன் மூலம் அம்பேத்கருக்கும் ஜெயகருக்கு ஏற்பட்ட கதியே உண்டாகும் என்று அவையிலிருந்த எல்லோரும் எண்ணினார்கள். இந்திய நாட்டில் மிகவும் சக்தி வாய்ந்த தலைவர்களாக விளங்கிய காங்கிரசுக் கட்சியின் தலைவர்களுடைய விருப்பங்களுக்கும் நோக்கங்களுக்கும் எதிராக ஒருவர் செயல்படுவது என்பது தோல்வியைத் தழுவிக் கொள்வது போன்றதேயாகும். காங்கிரசார் அவர்களுடைய தீராப்பகையாளியான அம்பேத்கரை அடித்து நொறுக்கி வீழ்த்திடத் தயாராக இருந்தார்கள்.

அம்பேத்கர் தன்னைச் சுற்றிலும் சிறந்த அரசியல் தலைவர்கள் அமர்ந்திருப்பதை மனத்தில் கொண்டார். வெள்ளைக் கதராடை அணிந்துகொண்டு அங்கிருந்த காங்கிரசுக்காரர்களில் பெரும்பாலோர் அம்பேத்கரின் பேச்சை ஒருபோதும் கேட்டறியாதவர்கள். ஆனால் அவரைப் பற்றிப் பலபடக் கேட்டறிந்தவர்கள். வீறார்ந்த தன்மையில், கொட்டும் அருவி போன்ற மொழி நடையில், அஞ்சா நெஞ்சுரத்துடன் அம்பேத்கர் பேசத் தொடங்கினார். நேருவின் தீர்மானத்தின் முற்பகுதி விவாதத்திற்குரியதாக இருக்கிறது; ஆனால் எதிர்கால அரசியல் அமைப்புச் சட்டத்தின் குறிக்கோளைப் பற்றிக் கூறுகின்ற பிற்பகுதி விவாதத்திற்குரியதாக இல்லை; ஆயினும் இந்தப் பிற்பகுதியும் வெறும் மேதாவித்தனத்தைக் காட்டுவதாகவே இருக்கிறது. ஏனெனில் இதில் உரிமைகள் பற்றி மட்டும் விளக்கப்பட்டுள்ளதே தவிர, அநீதி இழைக்கப்பட்டவர்களுக்கான தீர்வுகள் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று அம்பேத்கர் கூறினார். இதைக்கேட்ட காங்கிரசு உறுப்பினர்கள் அசைவற்றிருந்தனர். அவையினரின் மனநிலையை உணர்ந்துகொண்ட அம்பேத்கர், கண்ணிமைப்பொழுதில் திருத்தத் தீர்மானத்தின் சிக்கலான பகுதி பற்றிப் பேசத் தொடங்கினார்.

'அரசியல் சமூகப் பொருளாதாரக் கோட்பாடுகளால் நம்மி டையே பிளவுகள் உள்ளன என்பதை நான் அறிவேன். போரிட்டுக்கொள்ளும் முகாம்களாக நாம் பிரிந்திருக்கின்றோம். போரிடும் முகாம்களின் தலைவர்களில் நானும்கூட ஒருவனாக இருக்கிறேன். இத்தகைய நிலைமைகள் இருப்பினும், சூழ்நிலை களும் காலமும் ஒத்துவருமானால், இந்தியநாடு ஒரே நாடாக உருவாவதை உலகில் உள்ள எந்தச் சக்தியாலும் தடுக்க முடியாது என நான் திட்டவட்டமாக நம்புகிறேன். நம்மிடையே பல சாதிகளும் மதங்களும் இருந்தபோதிலும் ஏதோ ஒரு வகையில் ஒன்றுபட்ட மக்களாக நாம் இருப்போம் என்பதில் எனக்கு எள்ளளவும் அய்யமில்லை' என்று அம்பேத்கர் தன் உரையில் குறிப்பிட்டார்.

'இந்தியாவைப் பிளவுபடுத்த வேண்டும் என்று முஸ்லீம் லீகினர் போராடுகிறார்கள் என்பது இன்று உண்மையாக இருந்தா லும், என்றேனும் ஒருநாள் முஸ்லீம் தலைவர்களுக்கே சரியான புரிதல் ஏற்படும்; அப்போது அவர்களும் ஒன்றுபட்ட இந்தியாதான் எல்லாருக்குமே நல்லது என்று எண்ணத் தொடங்குவார்கள் என்று நான் அறுதியிட்டுக் கூறுகின்றேன்' என்று கூறித் தொடர்ந்து பேசினார்.

மய்ய அரசின் வலிமை மிக்க அதிகாரங்களைக் குறைத்திட ஒப்புக் கொண்டதற்காகக் காங்கிரசை அம்பேத்கர் குறைகூறினார். அவ்வாறு தீர்மானிப்பதற்கு அர்சியல் அமைப்புச் சட்ட அவைக்கு அதிகாரம் இருக்கிறதா? இல்லையா? என்பதுபற்றி நான் கேட்க விரும்பவில்லை; அத்தகைய அதிகாரத்தை இந்த அவை பெற்றிருப் பதாகக் கொள்ளக்கூடும். நான் கேட்க விரும்புவது இதுதான். மய்ய அரசின் அதிகாரங்களைக் குறைத்திட ஒப்புக் கொண்டிருப் பது எச்சரிக்கை உணர்வுடன் எடுக்கப்பட்ட முடிவுதானா? இது மதிநுட்பம் நிறைந்ததா? அதிகாரத்தைப் பெறுதல் என்பது வேறு; மதிநுட்பம், வருமுன்காப்பு என்பவை வேறு வேறு என்பதை விளக்கினார். உடன்பாடு காணவேண்டி மீண்டும் ஒருமுறை முயற்சிக்குமாறு காங்கிரசு உறுப்பினர்களுக்கு உள்ளார்ந்த வேண்டு கோள் விடுப்பதாகக் கூறினார். ஒரு நாட்டு மக்களின் எதிர்காலத் தைத் தீர்மானிக்கிற முயற்சியில் தலைவர்களின் சிறப்பு அல்லது மற்றவர்களின் பெருமை அல்லது கட்சிகளின் உயர்வு என்பவை கணக்கில் கொள்ளப்படவே கூடாது என்று அம்பேத்கர் கூறினார்.

ஒரு சாரார் மற்றொரு சாரருடன் நிபந்தனையின்றி இணங்கிப் போதல், பேச்சு வார்த்தை மூலம் சுமுகமான தீர்வு காணல்

அல்லது போராடித் தீர்த்துக் கொள்ளல் முதலான மூன்று வழிகளில் ஏதேனும் ஒரு வழியில் இப்பிரச்சினைக்கு ஒரு முடிவு காணவேண்டும் என்று அவருடைய உரையின் இறுதியில் குறிப்பிட்டார். மோதிக் கொள்வது என்பதை நினைக்கவே அச்சமாக இருக்கிறது; அந்த மோதல் என்பது முகம்மதியர் மீது தொடுக்கப்படலாம்; அல்லது பிரிட்டிஷார் மீதும் முகம்மதியர் மீதும் ஒருசேரத் தொடுக்கப்பட்ட போராகவே அது இருக்கும் என்று அம்பேத்கர் எச்சரித்தார். அமெரிக்காவுடன் சமரசமாகப் போகுமாறு எட்மண்ட் பர்க் கூறிய புகழ்பெற்ற வரிகளை அம்பேத்கர் எடுத்துக் காட்டி, நெகிழ்ந்த தொனியில் பேசினார்:

'இச்சிக்கலை மோதல் மூலம் தீர்த்துவிட முடியும் என்றோ அல்லது முகம்மதியரை வென்றடக்கி அவர்கள் அறியாமலும் அவர்களுடைய ஒப்புதலைப் பெறாமலும் உருவாக்கப்படும் அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு அவர்களை அடிபணியச் செய்ய முடியும் என்றோ எவரேனும் நினைத்தால் அது இந்த நாடு முகம்மதியரை எதிர்த்துப் போரிடுவதிலேயே என்றென்றும் ஈடுபட்டுத் தீரவேண்டிய நிலையைத் தோற்றுவிக்கும். "அதிகாரத்தை அளிப்பது எளிது; ஆனால் அறிவுடைமையை ஊட்டுவது எளிதன்று'' என்று பர்க் கூறியிருக்கிறார். நம்மிடம் அதிகாரம் மட்டுமின்றி இந்நாட்டின் அனைத்துப் பிரிவு மக்களையும் இணைத்துச் செல்லுகின்ற சான்றாண்மையும் நமக்கு இருக்கிறது என்பதையும், அப்பாதையில் அவர்களை நடத்திச் செல்வதன் மூலம் நம்மிடையே ஒற்றுமையை உருவாக்க முடியும் என்பதையும் நம் நடத்தையின் மூலம் நாம் நிரூபித்துக் காட்ட வேண்டும்' என்றார்.

கேட்போரைத் தன் வயப்படுத்தும் தன்மையில் அமைதியான முறையில் உரையாற்றி அவர் விடுத்த வேண்டுகோளானது அரசியல் அமைப்புச் சட்ட அவையினரிடம் சிறந்ததோர் தாக்கத்தை ஏற்படுத்தியது. அம்பேத்கரின் பேச்சைக் காங்கிரசு உறுப்பினர்கள் அடிக்கடி கைதட்டி வரவேற்றனர். இதே கருத்தை டாக்டர் ஜெயகர் பேசியபோது எதிர்ப்பு எழுந்தது. ஆனால் அம்பேத்கரின் சிறந்த நாவன்மை அவர்களுடைய உள்ளங்களில் ஒத்துப்போக வேண்டும் என்ற உணர்வினை எழுப்பியது. அவரை அடித்து வீழ்த்த வேண்டும் என்று துடிதுடித்த அவர்களுடைய கைகள் இப்போது அவருடைய பேச்சைப் பாராட்டி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தன. அம்பேத்கரின் வியத்தகு வாழ்க்கை வரலாற்றில் அது பொன்

எழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய ஒரு நாளாக அமைந்தது. பழி தூற்றப்பட்ட அவர் ஆலோசனை வழங்குபவரானார்; நையாண்டி செய்யப்பட்ட அவர் நண்பரானார். இந்த அளவிற்கு அம்பேத்கரின் பேச்சு காங்கிரசாரிடம் மனமாற்றத்தை ஏற்படுத்தியது. ஒரு பேச்சாளரின் வாழ்வில் மிகச்சில பேச்சுகளே இத்தகைய திருப்புமுனையை ஏற்படுத்துகின்றன. நேருவின் தீர்மானத்தை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளுவது என்பதை 1947 சனவரி மாதத்தில் வைப்பதென, அடுத்த கூட்டத் தொடருக்குத் தள்ளி வைப்பதென முடிவு செய்யப்பட்டது. 1947 சனவரி 20ஆம் நாள் அத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மக்கள் கல்விக் கழகப் பணிகளைக் கவனிப்பதற்காக அம்பேத்கர் பம்பாய் திரும்பினார். அம்பேத்கரின் தொண்டர்களுக்கும் காங்கிரசாருக்கும் இடையிலான பகையுணர்ச்சி இன்னும் ஒரு முடிவுக்கு வரவில்லை. பம்பாயில் தீண்டப்படாத வகுப்புத் தலைவரான தியோருக்கர் 1947 சனவரி மாதத் தொடக்கத்தில் கத்தியால் குத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டார். பம்பாயில் சித்தார்த்தா கல்லூரியில் அம்பேத்கர் இருந்த சமயம், அவருடைய வீட்டைச் சுற்றிலும் குண்டர்கள் இருப்பதால் வீட்டிற்கு அவர் செல்ல வேண்டாம் என்று யாரோ ஒருவர் கூறியபோது, அவரைக் கடுமையாகச் சினந்து கொண்டார். உடனேயே, 'என் மகனும் அண்ணன் மகனும் என் உயிரனைய நூல்களும் ஆபத்தில் இருக்கும்போது என் உயிரைக் காப்பாற்றிக்கொள்வது பற்றி நான் கவலைப்பட மாட்டேன்'' என்றார். அவருடைய உயிருக்கு ஆபத்துச் சூழ்ந்திருந்த நிலையிலும் அவருடைய வீட்டிற்குச் சென்றார்.

1947 பிப்ரவரி 21ஆம் நாள் அம்பேத்கர் எம்.பி.சமார்த், ஜி.ஜெ.மனே, பி.டி. போரேல் ஆகியோரின் துணையுடன் தியோலாலியில் ஒரு இராணுவ ஜெனரல் நீதிமன்றத்தின் முன் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த 38 பேருக்காக வாதாடினார். குற்றஞ்சாட்டப்பட்டிருந்த இராணுவ வீரர்கள் பீகார் மாகாணத் தீண்டப்படாத சமூகங்களைச் சேர்ந்தவர்கள்.

III

இதற்கிடையில் பிரிட்டிஷ் அரசு 1948 சூன் மாதத்திற்குள் இந்திய ஆட்சியைப் பிரிட்டிஷ் இந்தியாவில் உள்ள ஏதேனும் ஓர் தன்மையில் அமையும் மத்திய அரசிடமோ அல்லது

தற்போதுள்ள மாகாணங்களில் உள்ள அரசுகளிடமோ ஒப்படைக்கப் போவதாக அறிவித்தது. இந்திய வைசிராய் வேவல் பிரபுவைப் பிரிட்டிஷ் அரசு இங்கிலாந்திற்குத் திரும்ப அழைத்துக் கொண்டது. வேவலின் கண்ணோட்டம் முஸ்லீம்களுக்குச் சார்பானதாகவே இருந்தது.

தக்க தருணத்தைக் கண்டறிவதில் வல்லவரான அம்பேத்கர் அரசியல் அமைப்புச் சட்டஅவையின் முன் அரசியலமைப்புச் சட்டம் பற்றிய அவருடைய கருத்துகளை வைப்பதற்கு இதுவே சரியான நேரம் என்பதை உணர்ந்தார். அதற்காக 1947 மார்ச்சு மாதம் ஒரு அறிக்கையைத் தயாரித்தார். தீண்டப்படாத வகுப்பினர்க்கென ஒதுக்கப்படும் இடங்களில் மட்டுமே தனி வாக்காளர் தொகுதி முறை இருக்க வேண்டும்; மற்ற இடங்களில் தீண்டப்படாத வகுப்பினர் மற்றவர்களோடு சேர்ந்து வாக்களிக்க வேண்டும் என்ற கருத்தை அவருடைய அறிக்கையில் முன்மொழிந்தார்.

அம்பேத்கர் அவருடைய அறிக்கையை 'அரசுகளும் சிறுபான்மையினரும்' (States and Minorities) என்ற தலைப்பில் சிறிய நூல் வடிவில் வெளியிட்டார். இந்திய யூனியனுக்காக அம்பேத்கர் தயாரித்த அரசியல் சட்டத்தின் நகல் இதுவேயாகும். அம்பேத்கரின் அரசியல் கோட்பாடுகளை அறிந்து கொள்வது ஆர்வமூட்டுவதாகவும் அறிவு புகட்டுவதாகவும் இருக்கும் என்பதால் அதைப்பற்றி மிகச் சுருக்கமாக இங்கே தரப்பட்டுள்ளது.

சனநாயகம் என்பது சாராம்சத்தில் சமூக அமைப்பின் ஒரு வடிவத்தைக் குறிப்பதாகும் என அம்பேத்கர் கருதினார். சனநாயகத்தின் முதலாவது கூறு ஒருவர் மற்றொருவரைப் பற்றிக் கொண்டுள்ள எண்ணம், மற்றவர்களிடம் காட்டும் மரியாதை, சமத்துவம் ஆகியவற்றின் தன்மையைக் குறிப்பதாகும். இரண்டாவது கூறு, மாற்றத்திற்கு இடமளிக்காத சமூகத் தடைகள் இல்லாத ஒரு சமூக அமைப்பைக் கொண்டிருப்பதாகும். ஒதுக்கி வைத்தல், தனித்திருத்தல் முதலானவற்றைக் கொண்டிருக்கும் சனநாயகம் முழுமையற்றதாகவும், முரண்பாடுடையதாகவும் இருக்கும். இவற்றின் விளைவாகத் தனி உரிமைகளை உடையவர்கள் என்றும், உரிமையற்றவர்கள் என்றும் வேறுபாடு தோன்றும். அங்கே மிகச் சிலருக்கே உரிமைகள் இருக்கும்; மிகப் பெரும்பான்மையினருக்கு இயலாமைகளே இருக்கும்.[101]

சனநாயக சமூகம் ஒவ்வொரு குடிமகனுக்கும் ஓய்வு கிட்டும் வாழ்க்கை முறையை உறுதி செய்ய வேண்டும். ஆகவே சனநாயகச்

சமூகத்தின் நோக்கம் இயந்திரமயமாதல், மேலும் மேலும் இயந்திரமயமாதல், நாகரிகம் அடைதல் என்றே இருக்க வேண்டும். எனவே உலகம் இயந்திரமயமாதலை அம்பேத்கர் வரவேற்றார். இயந்திரங்களும் நவீன நாகரிகமும் பல கேடுகளை உண்டாக்கியுள் என என்ற உண்மையை ஒத்துக் கொள்ளலாம். ஆனால் இக்கேடுகளை இயந்திரமயமாக்கலுக்கு எதிராகத் தொடுக்கப்படும் வாதங்களுக்காகப் பயன்படுத்த முடியாது. ஏனெனில் இக்கேடுகள் தவறான சமூக அமைப்பின் விளைவுகளாகும். இத்தவறான சமூக அமைப்பு தனியார் சொத்து சேர்த்துக் கொள்வதையும், தன் சுயலாபத்திற்காகத் தொழில் செய்வதையும் நியாயம் என்று அங்கீகரித்துள்ளதே இக்கேடுகளுக்குக் காரணம். இயந்திரமும் நவீன நாகரிகமும் எல்லோருக்கும் பயன்தரவில்லை என்றால் அதற்கான தீர்வு இயந்திரத்தையும் நாகரிகத்தையும் புறக்கணிப்பதில் இல்லை; சமூக அமைப்பை மாற்றுவதில்தான் இருக்கிறது. அவ்வாறு மாற்றப்படும்போது முன்னேற்றத்தின் பயன்கள் சிலரால் மட்டுமே கொள்ளப்படாமல் அனைவர்க்கும் சென்று சேரும்.

விலங்குகளின் பரிணாம வளர்ச்சியில் மனிதன் மிக் உயர்ந்த இடத்தைப் பெற்றுள்ளான். ஒருவனுடைய உடற்பசி தீரும்போது அவனுடைய விலங்குத்தனமான வாழ்வின் இலட்சியம் நிறைவேறி விடுகிறது. ஆனால் மனித வாழ்வில் குறிக்கோள் ஒருவனுடைய அறிவும் மனமும் முழுவளர்ச்சியடையாத வரையில் நிறைவேறுவ தில்லை. சுருக்கமாகச் சொல்வதாயின் பண்பாடு என்பதுதான் விலங்கிலிருந்து மனிதனைப் பிரித்துக் காட்டுகிறது. ஆகையால் ஒவ்வொரு மனிதனும் பண்பட்ட வாழ்வை நடத்துமாறு செய்வதே மனித சமூகத்தின் நோக்கமாக இருக்க வேண்டும்; அதாவது வெறும் உடலின்பத்துடன் மனநிறைவடைவதிலிருந்து வேறுபட்ட மன வெழுச்சியை வளர்ப்பதேயாகும். போதிய அளவிற்கு ஓய்வு நேரம் பெற்றிருந்தால்தான் ஒரு மனிதன் பண்பாடான வாழ்க்கையை உருவாக்கிக் கொள்ளமுடியும். மனிதனின் தேவைகளை நிறைவேற் றிக் கொள்வதற்கான பொருட்களை உற்பத்தி செய்வதற்குத் தேவைப்படும் உழைப்பைக் குறைத்திட ஏதேனும் வழிமுறை களைக் கண்டறியாத வரையில் ஓய்வு கிடைப்பது இயலாததாகவே இருக்கும். மனிதனின் இடத்தை இயந்திரம் நிரப்பும்போதுதான் ஓய்வு என்பது கிடைக்கும்.[102]

அதனால்தான் அம்பேத்கர் இயந்திரத்தை வெறுத்த காந்தி யத்தை எதிர்த்தார். காந்தியம் சாதாரண மனிதனை வறுமைக்கு

இட்டுச் செல்வதாகும். காந்தியம் பொருளாதாரச் சமத்துவத்தை ஏற்பதில்லை.

எதற்கெடுத்தாலும் மார்க்சையும், ஏங்கெல்சையும் மேற்கோள் காட்டிப் பேசுகின்ற கண்மூடித்தனமான மார்க்சியர்களையும் அம்பேத்கர் வெறுத்தார். அம்பேத்கர் புதிய கருத்துகளையும் புதிய அணுகுமுறையையும் வரவேற்றார். ஒரு தத்துவத்தை எழுதிவிட்டு அதுவே என்றைக்கும் தத்துவமாகக் கொள்ளப்பட வேண்டும் என்பது சரியன்று. எப்பொழுதும் தொடர்ந்து சமூகத்தை ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும். மார்க்சியத் தத்துவம் வயிற்றுப் பசியைத் தீர்க்கின்ற ஒன்றேயாகும்.[103] மார்க்சியம் ஒரு வழிகாட்டி நெறியே தவிர, மாற்றப்படக்கூடாத தத்துவம் அன்று என அம்பேத்கர் கருதினார். 'இரஷ்ய கம்யூனிசம் மோசடியானது' என்று ஒருதடவை அம்பேத்கர் குறிப்பிட்டார்.[104]

அம்பேத்கர் 'அரசு சோசலிசக் கொள்கை'யில் நம்பிக்கை கொண்டிருந்தார். "அரசு சோசலிசம் இந்தியா விரைந்து தொழில்மயமாவதற்கு இன்றியமையாததாகும். இந்தியாவைத் தொழில் மயமாக்குவதைத் தனியார்த்துறையினர் மேற்கொள்ளமாட்டார்கள். தனியார் அவ்வாறு செய்வதாலும் அய்ரோப்பாவில் தனியார் முதலாளித்துவம் உண்டாகியிருப்பதுபோன்று சொத்துடைமையில் பெரும் ஏற்றத் தாழ்வுகளை இங்கு ஏற்படுத்தும். இந்தியர்கள் இதை ஒரு எச்சரிக்கையாகக் கொள்ள வேண்டும். துண்டு நிலங்களை ஒன்றிணைப்பது, குத்தகையாளர் பாதுகாப்புச் சட்டம் போன்றவை இயற்றுவது சிறிதும் பயன்தராதவை. விவசாயத்தில் இவற்றின் மூலம் நல்ல முன்னேற்றத்தைக் கொண்டு வரமுடியாது. நிலங்களை ஒன்றிணைப்பதோ, குத்தகையாளர் சட்டமோ நிலமற்ற விவசாயக் கூலிகளாக இருக்கின்ற ஆறு கோடித் தீண்டப்படாதவர்களுக்கு எவ்வகையிலும் உதவாது. தீண்டப்படாதவர்களுக்குக் கூட்டுப் பண்ணை விவசாயம் மட்டுமே உதவுவதாக அமையும்" என்று அம்பேத்கர் கருதினார்.

அத்தியாவசியமான தொழில்கள் அரசுக்கே சொந்தமாக இருக்க வேண்டும் என்று அம்பேத்கர் கூறினார். "காப்பீட்டுறுதி ஏற்பாடு அரசிடம் மட்டுமே இருக்க வேண்டும். விவசாயம் அரசின் பொறுப்பில் உள்ள தொழிலாக இருக்க வேண்டும்; நிலமனைத்தும் அரசுக்கே சொந்தம்; சாகுபடி செய்வதற்காக நிலத்தைச் சாதி, மத வேறுபாடு இன்றி, கிராமங்களில் உள்ள எல்லா மக்களுக்கும் குத்தகைக்கு விடவேண்டும். அவ்வாறு நிலத்தைச் சாகுபடிக்காகத்

தரும்போது பெருநிலம் உடையவர், குத்தகையாளர், விவசாயக் கூலி என்ற வேறுபாடுகள் உருவாகிட இடந்தரக் கூடாது'' என்று கூறியுள்ளார்.

எப்படியிருப்பினும் அரசு சோசலிசம் அரசியல் அமைப்புச் சட்ட அதிகாரத்தின் மூலமே நிறுவப்பட வேண்டும் என்று அம்பேத்கர் விரும்பினார். அரசியல் அமைப்புச் சட்டத்தில் உறுதி செய்யப்படும் அரசு சோசலிசக் கோட்பாடு மூலமோ, நாடாளுமன் றத்தின் மூலமோ, சட்டமன்றங்களின் மூலமோ, நிர்வாகத் துறைகளின் மூலமோ எப்போதும் மாற்ற முடியாததாக இருக்க வேண்டும். நாடாளுமன்ற சனநாயகத்தின் மூலம் அரசு சோசலி சத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்; சமூகம் சுதந்திரமாக விளங்குவதற்கு நாடாளுமன்ற நெறியிலான குடியரசமைப்பே ஏற்றதாகும். இதன் மூலம் மட்டுமே சோசலிஷத்தை நிறுவுவது, நாடாளுமன்றச்சனநாயகத்தை நிலைபெறச் செய்வது சர்வாதிகாரத் தைத் தவிர்ப்பது முதலான மூன்று குறிக்கோள்களையும் அடைய முடியும் என்பதே அம்பேத்கரின் கொள்கையாகும்.

சனநாயகம் அதன் அடிப்படைக் கோட்பாடான மனிதர்கள் அனைவரும் சமமதிப்புடையவர்களே என்பதைச் செயல்படுத்த வேண்டுமானால், அரசியலமைப்புச் சட்டம் நாட்டின் அரசியல் கட்டமைப்பின் வடிவம், முறை ஆகியவைபற்றி மட்டும் சட்டம் இயற்றினால் போதாது; சமூகத்தின் பொருளாதாரக் கட்டமைப்பின் வடிவம், செயல்முறைபற்றியும் சட்டங்கள் செய்யப்பட வேண்டும் என்று அம்பேத்கர் கூறினார்.

ஆனால அம்பேத்கர் இந்தியச் சோசலிஸ்டுகளோடு ஒத்த கருத்தினைக் கொண்டிருந்தாரா? இந்தியச் சோசலிசவாதிகளின் கவனத்தைச் சமூகப் பிரச்சினையின்பால் ஈர்த்திட அம்பேத்கர் விரும்பினார். மனிதனின் செயல்பாட்டுக்குப் பொருளாதாரத் தேவை நிறைவேற்றம் மட்டுமே உந்துசக்தியாக இருப்பதில்லை. இவ்வுலகில் பொருளியியல் ஆதிக்க அதிகாரம் மட்டுமே இருக்கிறது என்பதை மனித சமூகத்தை ஆய்ந்தறிந்த எவரும் ஏற்க மாட்டார்கள். மதமும் அதிகாரம் செலுத்தும் வல்லமை வாய்ந்த ஒரு சக்தியாக இருக்கிறது என்பதை இந்நாட்டின் வரலாறு பலவகையிலும் தெளிவாகக் காட்டுகிறது என்று அம்பேத்கர் கூறினார். பண்டைய ரோமாபுரியில் வாழ்ந்த பிளெபியன்கள் (பொதுமக்கள்) தங்களின் பொருளாதார நலன்களைப் பெரிதாகக் கருதாமல் மதமே முதன்மை என்று கருதிக் கடுமையாகப் போரிட்ட வரலாற்றை அம்பேத்கர் எடுத்துக் காட்டினார்.

இன்றுள்ள அய்ரோப்பியச் சமூகத்தில் ஆதிக்கம் செலுத்துவதில் சொத்துடைமையே மேலோங்கி நிற்கிறது. இந்தியாவிலும் இந் நிலையே இருக்கிறது; முற்காலத்தில் அய்ரோப்பாவிலும் இதே நிலைதான் இருந்தது என்றெல்லாம் எண்ணுவதில்தான் இந்தியச் சோசலிஸ்டுகள் தவறு செய்கிறார்கள். ஆனால், உண்மையில் மதம், சமூக அந்தஸ்து, சொத்துடைமை ஆகிய மூன்றுமே ஆதிக்கமும் அதிகாரமும் செய்யும் சக்திகளாகும் என்றார், அம்பேத்கர்.

ஆகவே சொத்தைச் சமமாகப் பிரித்துத் தருவது ஒன்றே உண்மையான சீர்திருத்தம்; மற்றெதையும்விட முதலில் நடைபெற வேண்டியது இதுவேயாகும் என்று கூறிய சோசலிஸ்டுகளின் கருத்தை அம்பேத்கர் ஏற்க மறுத்தார். முதலில் சமூக அமைப்பில் ஒரு சீர்திருத்தத்தைக் கொண்டு வராமல் பொருளாதாரச் சீர்திருத் தத்தை எவ்வாறு ஏற்படுத்த முடியும் என்று சோசலிஸ்டுகளை நோக்கி அம்பேத்கர் வினவினார். மனங்கவரும் முழக்கங்களை ஓங்கி ஒலிப்பதுடன் சோசலிசவாதிகள் நிறைவடையாமல், சோசலி சத்தை உண்மையிலேயே நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும் என்று அவர்கள் விரும்புவார்களாயின், சமூக மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதுதான் அடிப்படையானது என்பதை ஏற்க வேண்டும்; இந்த உண்மை நிலையிலிருந்து அவர்கள் தப்பிக்கவே முடியாது. இதை ஏற்று அவர்கள் நடக்காத வரையில் அவர்களு டைய புரட்சியில் வெற்றி பெறமுடியாது. புரட்சிக்கு முன்பாக இல்லாவிட்டாலும், புரட்சிக்குப்பின் சாதியின் இருப்பைக் கணக்கில் எடுத்துக் கொள்ளுமாறு அவர்கள் கட்டாயப்படுத்தப்படும் நிலை ஏற்படும் என்று அம்பேத்கர் கூறினார்.[105]

IV

பிரிட்டிஷ் அரசு கடைப்பிடித்த தெளிவற்ற கொள்கை, முஸ்லீம்கள் செய்த அட்டூழியங்கள், சூழ்நிலையின் தேவைக்கு ஈடுகொடுத்துக் காங்கிரசின் தலைவர்கள் நடந்து கொள்ளாமை ஆகியவற்றால் இந்துக்கள் தங்களைத் தற்காத்துக் கொள்ள வேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டனர். அதனால் அவர்கள் பஞ்சாபையும் வங்காளத்தையும் பிரிக்குமாறு கேட்பதே அறி வுடைமை என்று எண்ணினர். இந்தப் புதிய மாற்றத்தைப் பற்றிப் புதுதில்லியில் அம்பேத்கர் அளித்த பேட்டியின்போது குறிப்பிட்டு, இப்பிரிவினை காரணமாக இடம் பெயர்ந்து வருகின்ற தீண்டப்படா தவர்களுக்காக என்ன திட்டம் வைத்திருக்கிறார்கள்; அவர்களை

எப்படிக் குடியமர்த்தப் போகிறார்கள் என்பதுபற்றிச் சாதி இந்துக்களிடமிருந்து அறிந்துகொள்ள விரும்புவதாக அம்பேத்கர் கூறினார். 1947 ஏப்பிரல் மாதம் கூடிய அரசியல் அமைப்புச் சட்ட அவையின் மூன்றாவது கூட்டத் தொடரில் அம்பேத்கர் கலந்து கொண்டார். அத்தொடரில் அரசியல் சட்ட ஆலோசனைக் குழு, அரசியல் சட்ட அடிப்படை உரிமைகள் குழு ஆகியவற்றின் அறிக்கைகளை அரசியல் அமைப்புச் சட்ட அவை ஏற்றுக் கொண்டது.

'எந்த வடிவத்தில் தீண்டாமை அனுசரிக்கப்படுவதும் ஒழிக்கப் படுகிறது. தீண்டாமையின் பெயரால் சுமத்தப்படும் எந்த ஒரு இயலாமையும் தண்டனைக்குரிய குற்றமாகும்' என்று 1947 ஏப்பிரல் 29ஆம் நாள் அரசியல் அமைப்புச் சட்ட அவை திட்டவட்டமாக அறிவித்தது. இத்தீர்மானத்தை முன்மொழியும் நற்பேறு சர்தார் பட்டேலுக்குக் கிடைத்தது. தீண்டாமை எனும் கறை கழுவப்படும் என்று இந்தியாவின் அதிகாரவர்க்கம் அறிவித்த அந்த நாள் இந்திய வரலாற்றில் பெருஞ்சிறப்புக்குரிய நாளாகும். இந்நிகழ்ச்சியை, தீண்டப்படாதவர்களின் சுதந்திர நாள்- அவர்ணஸ்தர்களின் அடிமைத் தளைகளை அறுத்தெறிந்த நாள்- தீண்டாமையைச் சட்டப்படி வேரறுத்த வரலாற்றுச் சாதனை- மானுட சுதந்திரத்திற்குக் கிடைத்த வெற்றி என்று பலபட உலகப் பத்திரிக்கைகள் போற்றின. 'நியூயார்க் டைம்ஸ்' ஏடு தீண்டப்படாத வர்களுடைய நெடுங்காலக் கறையைத் துடைத்தழிப்பதில் இப்பேறு பெற்றுள்ள வெற்றிக்கு ஒப்பாக அமெரிக்க நாட்டில் அடிமை முறையை ஒழித்ததையும், இரஷ்யாவில் அடிமைகள் விடுதலை செய்யப்பட்டதையும் மட்டுமே கூற முடியும்' என்று எழுதியது. 'வரலாற்றில் பெருஞ்சிறப்பு மிக்கதோர் சாதனை' என்று இலண்டனி லிருந்து வெளிவந்த 'நியூஸ் கிரானிக்கிள்' பத்திரிக்கை புகழ்ந்தது. 'இரண்டாம் உலகப் போருக்குப்பின் இவ்வுலகில் தோன்றிய தெளிவான புதிய ஒளியின் சுடர் இது', என்று 'நியூயார்க் ஹெரால்ட் டிரிப்யூன்' ஏடு கூறியது.

இந்தியாவில் இந்த மாபெரும் சாதனை நிகழ்ந்ததற்காக வெளிநாட்டுப் பத்திரிக்கைகள் காந்தியைப் பெரிதும் புகழ்ந்தன. தீண்டாமை ஒழிப்பைக் காங்கிரசுக் கட்சிதான் அறிவித்தது என்பது ஓர் உண்மையே; காங்கிரசுக் கட்சியின் முடிசூடா மன்னராகக் காந்தி திகழ்ந்தார். வெளிநாட்டுப் பத்திரிக்கை ஒன்றுகூட இச் சாதனை தொடர்பாக அம்பேத்கரின் பெயரைக் குறிப்பிடவில்லை.

அம்பேத்கரின் சக்தி வாய்ந்த செயல்பாட்டின் காரணமாகத்தான் இந்தியா இவ்வருஞ் சாதனையைக் கண்டது. டென்மார்க்கின், இளவரசனைப் பற்றி குறிப்பிடாமலேயே, 'ஹாம்லெட்' நாடகம் பற்றி விளக்குவதுபோல், அம்பேத்கரின் பங்களிப்பு பற்றிக் குறிப்பிடாமலேயே தீண்டாமை ஒழிப்புச் சாதனைக்குரியவர்பற்றி விதந்து பேசிக் கொண்டனர். அம்பேத்கரின் பெயரையே குறிப்பிடாதபோது, ஜோதிராவ் புலே, தயானந்தர், சிரத்தானந்தர், சாவர்க்கர் ஆகியோர் தீண்டாமை ஒழிப்புக்கான மூல காரணங்களாக குறிப்பிடப்பட வாய்ப்பேயில்லை அல்லவா?

அரசியல் அமைப்பின் தந்தை

புதிய வைசிராயான மௌண்ட் பேட்டன் பிரபு இந்தியாவில் நிலவிய சூழ்நிலையை ஆராய்ந்தபின் இலண்டனுக்குச் சென்றார். இந்தியாவிற்குத் திரும்பிய பின் 1947 சூன் 3ஆம் நாள் அவருடைய அரசியல் திட்டத்தை அறிவித்தார். இரண்டு மத்திய அரசுகள், இரண்டு அரசியல் அமைப்புச் சட்ட அவைகள், சில்ஹெட் மற்றும் வடமேற்கு மாகாணம் ஆகியவற்றிற்குக் கருத்துக்கணிப்பு நடத்துதல் முதலானவை இத்திட்டத்தில் இடம் பெற்றிருந்தன. காந்தியும் நேருவும் அவர்களுடைய செல்வாக்கு முழுவதையும் பயன்படுத்தி இந்தியாவை இரண்டாகப் பிரிப்பதை அனைத்திந்தியக் காங்கிரசுக் கமிட்டியைக் கட்டாயப்படுத்தி ஏற்குமாறு செய்தனர். எப்பொழுதும் சத்திய சோதனைக்கு ஆட்படுத்திக் கொண்டு தன்னுடைய ஆத்மா செலுத்துகிற வழியில் நடப்பதாகக் கூறிக் கொள்கிற காந்தி, இதுநாள்வரை பாக்கிஸ்தான் கோரிக்கை பாவமானது-பொய்மையின் சின்னம் என்று கூறிவந்தார். பாக்கிஸ்தான் வேண்டும் என்று கேட்டவர்களைப் பார்த்து, இந்தியாவைக் கூறுபோடுவதற்குமுன், என்னை வெட்டிக் கூறுபோடுங்கள் என்று முழங்கி வந்தார். ஆனால் இப்போது அரசியல்வாதியாகக் காந்தி மேலோங்கி நின்றார்; ஒன்றுபட்ட இந்தியா எனும் சவப்பெட்டியின் மீது கடைசி ஆணியை அவரே அடித்தார். சோசலிஸ்டுகள் மேற்கொண்ட நடுநிலையோ குறைகூறத்தக்கதாக இருந்தது. இந்துமகாசபையினர் வெறும் சலசலப்பு காட்டினர்.

அக்கட்டத்தில், திருவாங்கூர், அய்தராபாத், சிற்றரசுகள் 1947 ஆகஸ்ட்டு 15ஆம் நாள் இந்தியா ஒரு டொமினியன் நாடாக ஆகும்போது தங்கள் அரசுகள் தனிச் சுதந்திர அரசுகளாக ஆகப்போவதாக அறிவித்தனர். இந்நிலைபாடு பற்றி அம்பேத்கர் அவருடைய கருத்தை அறிவித்தார். சிற்றரசுகள் இந்திய யூனியனில் முழுமையாக இணைய வேண்டும்; தனி நாடாக இருந்துகொண்டு, அய்க்கிய நாடுகள் அவையின் அங்கீகாரத்தையும் பாதுகாப்பையும் பெறலாம் என்று அவர்கள் நம்பிக்கொண்டிருப்பது வெறும் கனவுலகில் வாழ்வது போன்றதேயாகும் என்று அம்பேத்கர் எச்சரித்தார்.

சூலை மாதத்தின் முதல் கிழமையில் புதிய இந்தியா மசோதா பற்றி அம்பேத்கர் தன் கருத்தைக் கூறினார். எந்த ஒப்பந்தத்தின்

பேரில் நிசாமினால் பீரார் பிரிட்டிஷ் அரசுக்குத் தரப்பட்டதோ அந்த ஒப்பந்தம் காலாவதியாகிவிட்டதால் பீராரை நிசாமுக்கே பிரிட்டிஷ் அரசு திருப்பித்தர வேண்டும் என்றார்.

1947 சூலை 3ஆம் நாள் அம்பேத்கர் பம்பாய்க்குத் திரும்பினார். அவர் அரசியல் அமைப்புச் சட்ட அவையின் கொடி வடிவமைப்புக் குழுவில் ஓர் உறுப்பினராக இருந்தார். அதனால் மராட்டியத் தலைவர்கள் சிலரும் பம்பாய் மாகாண இந்து மகாசபையின் தலைவர்களும் அம்பேத்கரை அவருடைய இல்லத்தில் சந்தித்தனர். அப்போது அவர்களிடம் அம்பேத்கர் இதில் ஆர்வம் கொண்டவர்களிடமிருந்து நெருக்குதலும் போராட்டமும் பெரிய அளவில் ஏற்பட்டால்தான், கெருவா கொடிக்கு (ஓம் பொறிக்கப்பட்ட காவிநிறக் கொடி) ஆதரவாகப் பேசமுடியும் என உறுதியளித்தார். சூலை 10ஆம் நாள் பம்பாய் விமான நிலையத்தில் மராட்டியத்தின் பலதரப்புத் தலைவர்களும் அம்பேத்கரை வழியனுப்பி வைத்தனர். விமானத்தில் அம்பேத்கர் அவருடைய இருக்கையில் அமரச் சென்றபோது பம்பாய் நகர இந்து மகாசபையின் தலைவர்கள் அம்பேத்கரிடம் கெருவா கொடியைக் கொடுத்தனர். அக்கொடியை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று போராட்டங்கள் வெடிக்குமாயின் அக்கொடிக்கு ஆதரவாகப் பேசுவதாக அம்பேத்கர் உறுதி கூறினார். எஸ்.கே. வோலே, ஆனந்தராவ் கட்ரே மற்றும் அங்கிருந்தவர்களைப் பார்த்து, 'மகார் வகுப்பு மைந்தன் ஒருவன் அரசியல் சட்ட அவையில் கெருவா கொடியை ஏற்றப் போகிறான் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்களா?' என்று அம்பேத்கர் சிரித்துக் கொண்டே வினவினார்.

சூலை 22ஆம் நாள் அரசியல் அமைப்புச் சட்ட அவை அசோகச் சக்கரத்துடனான மூவண்ணக் கொடியை இந்திய நாட்டின் தேசியக் கொடியாக ஏற்றுக்கொண்டது. அம்பேத்கர் கெருவா கொடிக்காகப் பரிந்துரைத்தார் எனத் தெரிகிறது. ஆனால் கெருவா கொடிக்கு ஆதரவாக மக்கள் போராட்டம் எதுவும் நடத்தப்படாததால் அசோகச் சக்கரம் பொறித்த மூவண்ணக் கொடிக்கு அவருடைய முழு ஆதரவையும் அளித்தார். சாவர்க்கரும் கொடிக்குழுவின் தலைவரான டாக்டர் இராசேந்திரப் பிரசாத்துக்குக் காந்தியத்தின் சின்னமான இராட்டைக்குப் பதிலாக அசோகச் சக்கரத்தை ஏற்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்திருந்தார். கை ராட்டைக்குப் பதிலாக அசோகச் சக்கரம் ஏற்றுக் கொள்ளப்பட்டதால் காந்தி மனம் நொந்து போனார். கொடியின் இன்றியமையாத

தன்மைகளான கதரையும் கைராட்டையையும் புறக்கணித்துவிட்ட பின் அக்கொடிக்கும் தனக்கும் எத்தகைய தொடர்பும் இல்லை என்று காந்தி அறிவித்தார்.

அடுத்து, எல்லை நிர்ணயக்குழு செய்ய வேண்டிய பணிகளில் இந்திய அரசு தன் கவனத்தை முழுமையாகச் செலுத்துமாறு அம்பேத்கர் செய்தார். 'நான் கொண்டிருக்கும் அச்சம் உண்மையாகி விடுமாயின், எல்லைக் குழுவினால் வரையப்படும் எல்லை இயற்கையானதாக அமையாவிட்டால், எல்லைகளைப் பாதுகாப்பதி லேயே இந்திய அரசின் பெரும்பகுதி முயற்சி பாழாகிவிடும்; இந்திய மக்களின் அமைதியான வாழ்விற்கும் பாதுகாப்புக்கும் இதனால் பேரிடர் உண்டாகும் என்று சொல்லுவதற்கு வேறு ஒரு தீர்க்கதரிசி வேண்டியதில்லை. இப்பொழுதே இதற்குக் காலங்கடந்துவிட்டதால், பாதுகாப்புத்துறை தன்னை வேகப்படுத்திக் கொண்டு மேலும் காலந்தாழ்த்தாமல் அதனுடைய கடமைகளைச் செய்ய வேண்டும்' என்று அம்பேத்கர் வலியுறுத்தினார். இது அம்பேத்கரின் உண்மையான நாட்டுப்பற்றையும், அரசியல் மேதைத்தன்மையையும் விழிப்புணர்வையும் புலப்படுத்துவதாகும். இருப்பினும் 'பாக்கிஸ்தான் பற்றிய எண்ணங்கள்' என்ற நூலில் அம்பேத்கர் இன்றைய நவீன தொழில் நுட்ப உலகில் நிலஇயல் எல்லைகள் தீர்மானிக்கும் சக்திகளாக இருக்கவியலாது என்று விளக்கியிருந்தார் என்பதையும் இத்துடன் நாம் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டியுள்ளது.

1947 சூலை 15ஆம் நாள், பிரிட்டிஷ் பாராளுமன்றம், இந்தியாவிற்குச் சுதந்திரம் வழங்கும் மசோதாவை நிறைவேற்றியது. ஆதலால் இப்போது முதற்கொண்டு அரசியல் அமைப்புச் சட்ட அவை முழு ஆதிபத்தியம் உள்ள ஓர் அமைப்பாக ஆயிற்று. முதலில் இந்த அவை இந்தியா முழுமைக்குமாக என்றே அமைக்கப்பட்டது; ஆனால் இப்போது பிளவுபட்ட இந்தியாவிற்கு மட்டும் சட்டம் இயற்றுவதற்கானது என்று ஆகிவிட்டது. வங்காளம் பிரிக்கப்பட்டது. அதனால் அரசியல் அமைப்புச் சட்ட அவைக்கு வங்காளத்திலிருந்து தேர்ந்தெடுக்கப் பெற்றிருந்த உறுப்பினர்களில் பலர் தங்கள் பதவிகளை இழந்தனர். வங்காளத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருந்த அம்பேத்கரும் இதனால் தம் இடத்தை இழக்க நேரிட்டது. டாக்டர் எம்.ஆர்.ஜெயகரின் பதவி விலகலால் ஏற்பட்ட காலியிடத்திற்குப் பம்பாய் மாகாணச் சட்டசபையின் காங்கிரசுக் கட்சி அம்பேத்கரைத் தேர்ந்தெடுத்தது.

1947 சூலை மாதத்தின் கடைசி வாரத்தில் சுதந்திர இந்தியாவின் முதலாவது அமைச்சரவையில் இடம் பெறும் அமைச்சர்களின் பெயர்கள் பற்றிய செய்திகள் உலவின. அப்பட்டியலில் சென்னை மாகாணத்தைச் சேர்ந்த வி.அய். முனுசாமிப் பிள்ளையின் பெயர் இருப்பதாகப் பத்திரிக்கைகளில் செய்தி வெளியாயிற்று. ஆனால் அம்பேத்கரும் அமைச்சரவையில் இடம் பெறுவார் என்று சூன் மாதம் முதலே செய்திகள் வெளிவந்திருந்தன. அம்பேத்கர் அப்போது புதுதில்லியில் இருந்தார். ஊழ்வினை ஒரு செப்படி வித்தையைச் செய்து கொண்டிருந்தது. காங்கிரசின் தலைவர்களான சர்தார் பட்டேலும், எஸ்.கே.பாட்டீலும் அம்பேத்கரை அமைச்சரவையில் சேர்க்க வேண்டும் என்று நேருவுடன் தொலைபேசியில் பேசினர். முன்னேற்பாடுகள் முடிந்தன. நேரு அம்பேத்கரை அவருடைய அலுவலக அறைக்கு அழைத்தார்; சுதந்திர இந்தியாவின் புதிய அமைச்சரவையில் சட்ட அமைச்சராகச் சேர ஒப்புகிறீர்களா என்று அம்பேத்கரிடம் கேட்டார். பிறகு திட்டம் அல்லது வளர்ச்சித் துறை அளிக்கப்படும் என்று அம்பேத்கருக்கு உறுதி கூறப்பட்டது; அம்பேத்கர் அமைச்சராவதற்கு ஒப்புக் கொண்டார். நேரு வங்கிக் காலனிக்குச் சென்று காந்தியிடம் அமைச்சர் பட்டியலை அளித்தார்; காந்தியும் அதற்குத் தன்னுடைய ஒப்புதலை வழங்கினார். பிரிட்டிஷ்காரர்களிடமிருந்து ஆட்சி அதிகாரத்தைப் பெறவிருந்த காங்கிரசின் தலைவர்கள் அம்பேத்கருடன் இப்போது நல்லிணக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள விரும்பினர். அதனால் அவர்கள் இசைவான பாராட்டுதலுக்கேற்ற மனநிலையில் செயல்பட்டனர். இதுவரை அவர்கள் அம்பேத்கரின் சீரிய திறமைகளையும் பயன்படுத்திக் கொள்ளாமல் புறக்கணித்து வந்தனர். இந்தியாவின் சுதந்திரத்தை வளப்படுத்துவதற்காக அவர்கள் இப்போது அம்பேத்கரின் ஒப்பரிய ஆற்றல்களைப் பயன்படுத்திக் கொள்வதென முடிவு செய்தனர். அதேபோன்று அம்பேத்கரும் பழைய பிணக்குகளை மறந்துவிட்டு நீட்டப்பட்ட நேசக்கரத்தை வரவேற்பதென முடிவு செய்தார். இந்து மகாசபையின் தலைவர் டாக்டர் மூகர்ஜி அமைச்சரவையில் சேருமாறு அழைக்கப்பட்டார்.

1947 ஆகஸ்ட்டு 3ஆம் நாள் சுதந்திர இந்திய அரசின் அமைச்சர்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டன. அதில் அம்பேத்கரின் பெயரும் இடம் பெற்றிருந்தது. அன்றைக்கு அம்பேத்கர் பம்பாயில் இருந்தார்; அங்குச் செம்பூரில் பம்பாய் கம்கார் சங்கம் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்தார். அக்கூட்டத்தில் கட்டட நிதிக்காக அம்பேத்கரிடம் இருநூறு ரூபாய்

நன்கொடை அளிக்கப்பட்டது. 1932 முதல் அம்பேத்கர் பம்பாயில் மய்ய அலுவலகத்திற்கான கட்டடம் ஒன்றைக் கட்ட வேண்டும் என்ற எண்ணங் கொண்டிருந்தார்.

புதிய இந்தியாவின் சட்ட அமைச்சராக அம்பேத்கர் ஆகப் போகிறார் என்பதை அறிந்ததும் அவருடைய நண்பர்களும் அவரைப் பின்பற்றுவோரும் பத்திரிக்கையாளர்களும் அவர் பெற்றுள்ள பெருமைக்காகத் தங்களின் நல்வாழ்த்துகளையும் பாராட்டுதல்களையும் பொழிந்தனர். உண்மையில் அம்பேத்கருக்கு இது மண்மேட்டிலிருந்து மாளிகைக்கு உயர்ந்தது போன்ற அரிய வெற்றியாகும். இந்திய வரலாற்றில் மக்களின்பேரால் அமைந்த மய்ய அரசில் ஒரு தீண்டப்படாத வகுப்பு இந்து அமைச்சராகியிருப்பது இதுவே முதலாவது நிகழ்ச்சியாகும். பிரிட்டிஷ்காரர்களின் கையாள் என்று இதுகாறும் பழிதூற்றிய அவருடைய எதிரிகளே இப்போது அம்பேத்கரைச் சிறந்த அரசியல் மேதை என்று புகழ்ந்தனர். 1947 ஆகஸ்ட்டு 6ஆம் நாள் பம்பாயில் வழக்கறிஞர் சங்கம் சுதந்திர இந்தியாவின் அமைச்சரானதற்காக அம்பேத்கருக்கு ஒரு பாராட்டுக்கூட்டம் நடத்தியது. இப்பொழுது அம்பேத்கர் வழக்கறிஞர் சங்கம் என்ற வட்டத்திற்கு அப்பால் மிகப்பெரிய வட்டத்தில் செயல்படச் சென்றுவிட்டார்.

1947 ஆகஸ்ட்டு 15ஆம் நாள் இந்தியா விடுதலையடைந்தது. அந்நாள் உலக வரலாற்றில் சிறப்பு மிக்கதோர் நாளாக அமைந்தது. விடுதலை பெற்ற இந்தியா, ஆசியாவில் மாபெரும் சக்தியாக எழுந்து நின்றது. ஆயினும் அதன் மகிழ்ச்சி ஒரு வகையில் முழுமையற்றதாக-முடம்பட்டதாக இருந்தது. இந்தியா கூறுபோடப் பட்டதால் குருதி பெருக்கெடுத்தோடியது. கூறுபட்ட இந்தியாவின் விலா எலும்புகளைக் கொண்டு இவ்வுலகிலேயே பெரிய முஸ்லீம் நாடான பாக்கிஸ்தான் உருவாக்கப்பட்டது.

அம்பேத்கர் ஈட்டிய இந்த வெற்றியைத் தொடர்ந்து நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி அம்பேத்கரைத் திறமைசான்ற புகழேணியின் உச்சிக்கே கொண்டு சென்றுவிட்டது. ஆகஸ்ட்டு 29ஆம் நாள் அரசியல் அமைப்புச்சட்ட அவை அம்பேத்கரைத் தலைவராகக் கொண்ட அரசியல் அமைப்புச் சட்ட வரைவுக் குழு ஒன்றை அமைத்தது. அதில் என். மாதவராவ், சையத் முகமது சாதுல்லா, சர். அல்லாடி கிருஷ்ணசாமி, டி.டி.கிருஷ்ணமாச்சாரி மற்றும் இருவர் உறுப்பினர்களாக இருந்தனர். சிறுவயதில் மாட்டு வண்டிகளிலிருந்து கீழே தள்ளப்பட்ட-பள்ளிகளில் தனியாக உட்கார

வைக்கப்பட்ட - பேராசிரியரான பின்னும் அவமதிக்கப்பட்ட- இளைஞராக இருந்தபோது தீண்டப்படாத மகார் என்று இழித்து இடந்தர மறுத்து தங்கும் விடுதிகளிலிருந்தும் உண்ணும் இடங்களி ருந்தும் முடிதிருத்தகங்களிருந்தும்-கோயில்களிலிருந்தும் விரட்டிய டிக்கப்பட்ட-ஆங்கிலேயரின் கைக்கூலி என்று பழிதூற்றப்பட்ட இரக்கமேயில்லாக் கொடிய அரசியல்வாதி என்று இகழப்பட்ட -நாக்கூசாமல் மகாத்மா காந்தியைத் திட்டுபவர் என்று வெறுக்கப் பட்ட-வெள்ளையர்கால நிர்வாகக் கவுன்சிலில் அமைச்சர் பதவிக்கு ஆசைப்பட்டவர் எனத் தூற்றப்பட்ட-தீண்டப்படாத வகுப்பினரான அம்பேத்கர், இப்போது, சுதந்திர இந்தியாவின் முதலாவது சட்ட அமைச்சராகிவிட்டார். இந்தியாவின் குறிக்கோள், நோக்கம், எதிர் காலம் ஆகியவற்றைத் தீர்மானிக்கப் போகிற அரசியல் அமைப்புச் சட்ட வரைவுக்குழுவின் தலைவராக அவர் அமர்த்தப்பட்டிருந்தார். இஃதோர் ஒப்பரிய சாதனையாகும். இந்திய வரலாற்றில் நிகழ்ந்த ஓர் அதிசயமாகும். நெடுங்காலமாகத் தீண்டாமையைக் கடைப் பிடித்த பாவத்திற்குக் கழுவாய் தேடும் தன்மையில், காலங்காலமாக விலங்கினும் கீழாய் நடத்தப்பட்டு ஒடுக்கப்பட்டு நசுக்கப்பட்டு வந்த தீண்டப்படாத சாதியொன்றில் தோன்றிய அம்பேத்கரைச் சுதந்திர இந்தியா தன் எதிர்கால அரசியல் சட்டத்தை வடிவமைப் பதற்காக-'புதிய மனுவாக' புதிய 'ஸ்மிருதியாளராக'த் தேர்ந்தெடுத் தது. இந்துக்களின் வாழ்வியல் கோட்பாட்டு நூலான மனுநீதியைச் சிலஆண்டுகளுக்கு முன் எரித்த ஒருவரிடம் புதிய இந்தியா தன்னுடைய சட்டங்களை உருவாக்கும் பணியை ஒப்படைத்தது. இதைப் பழித்தெய்வத்தின் திருவிளையாடல் என்பதா? அல்லது காலத்தின் கட்டாயம் என்பதா?

அம்பேத்கர் சட்ட அமைச்சராக இருந்த நிலையிலும், குழந்தைப் பருவத்திலிருந்த தன்னுடைய கல்வி நிறுவனமான சித்தார்த்தா கல்லூரியில் வளர்ச்சியில் இடையறாத தொடர்பு கொண்டிருந்தார். செப்டம்பர் 25ஆம் நாள் அவருடைய கல்லூரியில் மாணவர் நாடாளுமன்றப் பயிற்சிக்கழகத்தைத் தொடங்கி வைத்தார். அங்குச் சிந்தனையைத் தூண்டும்படியானதோர் உரையை நிகழ்த்தி னார். பேச்சாற்றலை வளர்த்துக் கொள்ள வேண்டியதன் தேவையை வருங்காலக் குடிமக்களான இளைஞர்களுக்கு உணர்த்தி னார். நாடாளுமன்ற அமைப்பில் இனிய அல்லது ஆழ்ந்த அறிவுத் திறமுடனும் ஆளுமைப் பண்புடனும் அவையினரை ஈர்க்க வல்லவரால் மட்டுமே வெற்றி பெறமுடியும். அத்தகைய ஆற்ற லைப் பெறுவதற்காக மாணவர்கள் பலவற்றிலும் தங்கள்

தகுதியைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். மாணவர்கள் தங்கள் சிந்தனையை, பார்வையை, எதைப்பற்றியும் சிந்திக்கும் ஆற்றலை விரிவுபடுத்திக் கொள்ள வேண்டும். சமூகம் எதிர்கொள்ளுகிற உண்மையான பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடிய திறமையைப் பெருக்கிக்கொள்ள வேண்டும் எனக்கூறினார். அதன்பின் நாடாளு மன்ற நடைமுறையின் பல்வேறுபட்ட கூறுகளை மாணவர்களுக்கு விளக்கினார். அரசாங்கம் என்பது தானே முடிவெடுத்துச் செயல்பட வேண்டும்; சமரசம் செய்துகொண்டு எடுக்கப்படும் முடிவு அரசாங்கத்தின் முடிவாகாது; அது இரண்டுங்கெட்டானாகவே இருக்கும். அத்தகைய அரசாங்கம் நல்லாட்சி செய்யும் அரசாங்க மாக விளங்க முடியாது.

1947 செப்டம்பர் முதல்நாள் பம்பாய் மாநகராட்சியில் பதவியிலிருந்த காங்கிரசுக் கட்சி பம்பாய்க்கு வருகை தரவிருந்த பண்டித நேரு, சர்தார் வல்லபாய் பட்டேல், டாக்டர் இராசேந்திரப் பிரசாத், மவுலானா அபுல் கலாம் ஆசாத் ஆகியோர்க்கு மாநகராட்சியின் சார்பில் வரவேற்பு அளிப்பதென முடிவெடுத்தது. மத்திய அமைச்சரவையில் இருந்த எல்லா அமைச்சர்களுக்கும் பம்பாயைச் சேர்ந்த அமைச்சர்களான அம்பேத்கர், காட்கில், பாபா ஆகியோர் உட்பட அனைவர்க்கும் மாநகராட்சி வரவேற்பு அளிக்க வேண்டுமென்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கோரினர். பம்பாய் காங்கிரசுக் கட்சியின் தலைவரான எஸ்.கே.பாட்டீல் மாநகராட்சி பெருமைப்படுத்த விரும்புகின்ற குறிப்பிட்ட நான்கு தலைவர்களும் மிகச்சிறந்த திறமையாளர்கள்-ஈடுஇணையற்ற தலைவர்கள்-தமக்கெனத் தகுந்ததோர் உயர்நிலையைப் பெற்றிருப்பவர்கள் என்று கூறினார். பம்பாய் காங்கிரசுக்காரர்கள் அவர்களுடைய அரசியல் தலைவர்களுக்குச் சமமானவராக அம்பேத்கரை மதிக்க விரும்பவில்லை என்பதும், மாறியுள்ள சூழ்நிலைக்கு ஏற்ப அவர்கள் தங்களை இன்னும் முழுமையாக மாற்றிக் கொள்ள வில்லை என்பதும் இதனால் புலப்படுகிறது. பழைய பகையு ணர்ச்சி எளிதில் மறைவதில்லை. பின்னாளில் பம்பாய் மாநகராட்சி அம்பேத்கருக்கு வரவேற்பு அளிப்பதென முடிவு எடுத்தது; இது தொடர்பாகப் பம்பாய் மேயர் எழுதிய கடிதத்திற்கு அம்பேத்கர் பதில்கூட எழுதாமல் விட்டுவிட்டார்.

அக்டோபர் மாதத்தின் முதல்கிழமையில் பம்பாயில் தீண்டப் படாத வகுப்பு இளைஞர் கூட்டத்தில் அம்பேத்கர் உரையாற்றினார். சுதந்திரம் எதிர்பாராத நேரத்தில் வந்துவிட்டது; அதனால் எவ்வாறு

செயல்படுவது என்ற தெளிவான திட்டம் அப்போது அவரிடம் இல்லை என்று குறிப்பிட்டார். எத்தகைய சூழ்நிலையிலும் தீண்டப்படாத சாதிகள் பேரவையினைக் கட்டிக் காத்திட வேண்டும் என்று வலியுறுத்தினார். இப்பேரவைக்காகத் தீவிரமாகச் செயல்படு மாறு இளைஞர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

II

இதற்கிடையில் இந்திய நாட்டின் பிரிவினையால் விளைந்த கொடிய நிகழ்ச்சிகள் நாட்டையே கடும் அதிர்ச்சிக்குள்ளாக்கின. அச்சமயம் தில்லியில் நடைபெற்ற மோதல்கள் பற்றி அம்பேத்கர் கமலகாந்த் சித்ரேவுக்கு எழுதிய கடிதமொன்றில், 'தில்லியில் நடந்தவற்றை வெறும் கலவரங்கள் என்று மட்டும் கூறிவிட முடியாது. மாபெரும் வன்முறைத் தாக்குதல் என்றுதான் அதைக் கூறவேண்டும். காயமடைந்தவர்கள், கொல்லப்பட்டவர்கள் ஆகி யோரின் எண்ணிக்கை தில்லி போன்ற ஒரு நகருக்கு, நினைத்துப் பார்க்க முடியாத அளவு அதிகமாகும்; கடந்த சில நாட்களாகவே இயல்பான வாழ்க்கைநிலை முற்றிலுமாக நின்று போய்விட்டது', என்று எழுதியிருந்தார். உள்நாட்டுப் போரையும் அதன் உடன் விளைவாக ஏற்படக்கூடிய உயிர்க்கொலைகளையும் தவிர்த்திடும் பொருட்டுப் பாக்கிஸ்தான் பகுதியில் உள்ள இந்துக்கள் அனை வரும் இந்தியாவிற்கும், இந்தியப் பகுதியிலிருக்கும் இஸ்லாமியர் அனைவரும் பாக்கிஸ்தானுக்கும் முற்றாக இடம் பெயர்ந்து சென்றுவிட வேண்டும் என்று அம்பேத்கர் முன்மொழிந்த பிரிவினைத் திட்டத்தில் கூறியிருந்தார். ஆபிரகாம் லிங்களைப் போல், சாவர்க்கர், இந்திய நாட்டின் ஒற்றுமைக்காகச் சில காலத்திற்கு உள்நாட்டுப் போரைச் சந்திக்கத் தயாராக இருந்தார். ஆனால், நாட்டை ஆளும் அதிகாரத்தைப்பெற்ற காங்கிரசின் தலைவர்களோ பிரிவினையையும், அதன் உடன்விளைவான கொலைகளையும் ஏற்றுக் கொண்டனர். மதச் சார்பின்மையின் பேரால் இந்துக்களும் முகம்மதியர்களும் முற்றாக இடம்பெயரும் கருத்தை ஏளனம் செய்தனர்; இவர்கள் பாக்கிஸ்தான் பிரிவினை யைக் கூட கடைசிவரையில் இப்படித்தான் எள்ளி நகையாடிக் கொண்டிருந்தார்கள். வழக்கம்போல, இவர்களுடைய இத்தகைய கொள்கையால் பாக்கிஸ்தான் பகுதியில் வாழ்ந்த இந்துக்களின் நிலைமை ஆபத்திற்குள்ளாயிற்று. இதில் அம்பேத்கரின் தொலை நோக்குக் கண்ணோட்டமும் அச்சமும் ஓர் எழுத்தும் பிசகாமல் உண்மையாயின.

இப்பேரழிவில் கோடிக்கணக்கான மக்கள் தாம் வாழ்ந்த இடங்களிலிருந்து விரட்டியடிக்கப்பட்டனர்; பல இலட்சம் பேர் பதைக்கப் பதைக்கக் கொலை செய்யப்பட்டனர்; சிறுவர்களும் பெண்களும் மானபங்கப்படுத்தப்பட்டனர்; கடத்திச் செல்லப்பட்டனர்; சிலர் கட்டாயப்படுத்தப்பட்டு இஸ்லாமியராக மதம் மாற்றப்பட்டனர். தெருக்களிளெல்லாம் மண்டை ஓடுகளும் சிதைக்கப்பட்ட உடல்களும் சிதறிக் கிடந்தன; குற்றுயிராகக் கிடந்த ஆண்களின், சிறுவர்களின், பெண்களின் துன்ப ஓலங்கள் வீதிகளில் எதிரொலித்தன. தீண்டப்படாத வகுப்பு மக்களும் இந்துக்களாக இருந்த காரணத்தால் அவர்களுக்கும் இதே கதிதான் ஏற்பட்டது. தீண்டப்படாத வகுப்பினர் ஜின்னாவை அவர்களுடைய மீட்பராகக் கருதவேண்டும் என்றும், இஸ்லாமியருடன் இணக்கமாக இருக்க விரும்புவதை மிகத் தெளிவாகப் புலப்படுத்தும் தன்மையில் ஒரு பேட்ஜ் அணிந்து கொள்ள வேண்டும் என்றும் கூறிவந்த பாக்கிஸ்தானில் சட்டம் மற்றும் தொழிலாளர் நலத்துறைஅமைச்சராக இருந்த தீண்டப்படாத வகுப்பைச் சார்ந்தவரான ஜோகேந்திரநாத் மண்டல் கண்ட இனிய கனவுகள் இப்படுகொலைகளால் இடிந்து நொறுங்கின. பாக்கிஸ்தானில் அவர் எண்ணியதற்கு எதிரான தன்மையில் நிகழ்ச்சிகள் நடப்பதைக் கண்டு அவர் மிகவும் வருந்தினார்.

பாக்கிஸ்தானில் நடந்தவை அம்பேத்கரைப் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கின. பாக்கிஸ்தான் அரசைக் கண்டித்து அம்பேத்கர் அறிக்கை ஒன்றை வெளியிட்டார். தீண்டப்படாத வகுப்பு மக்கள் இந்தியாவிற்கு வருவதற்கு அனுமதிக்கப்படாமல் கட்டாயப்படுத்தப்பட்டு இஸ்லாமியராக மதமாற்றம் செய்யப்படுகின்றனர் என்று அவ்வறிக்கையில் அம்பேத்கர் குற்றஞ்சாட்டினார். அய்தராபாத் சிற்றரசிலும் முகம்மதியரின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும் என்பதற்காகத் தீண்டப்படாத வகுப்பினர் கட்டாயத்தின் பேரில் மதமாற்றம் செய்யப்படுகின்றனர் என்று அவர் குற்றஞ்சாட்டினார். 'பாக்கிஸ்தானில் சிக்குண்டு கிடக்கும் தீண்டப்படாத வகுப்பு மக்களுக்கு நான் ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகின்றேன். எந்தெந்த வழிகளிளெல்லாம் உங்களால் இந்தியாவிற்குள் வரமுடியுமோ அந்த வழிகளையெல்லாம் பயன்படுத்தி இந்தியாவிற்கு வந்துவிடுங்கள். பாக்கிஸ்தானில் அல்லது அய்தராபாத் சிற்றரசில் இருக்கின்ற தீண்டப்படாத வகுப்பு மக்கள் இனியும் முஸ்லீம்களையோ அல்லது முஸ்லீம் லீக்கையோ நம்புவது என்பது பேரழிவில்தான் முடியும் என்பதைக் கூறிட விரும்புகிறேன்.

முகம்மதியர்கள் இந்துக்களை வெறுக்கிறார்கள் என்ற ஒரே காரணத்திற்காகத் தீண்டப்படாத வகுப்பு மக்கள் முஸ்லீம்களைத் தங்களுடைய நண்பர்களாகக் கருதுவது என்பது ஒரு வழக்கமாகி விட்டது. இது தவறான கருத்தாகும்' என்று அம்பேத்கர் அவ்வறிக்கையில் மேலும் கூறினார்.

தாக்கப்படுவதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கான எளிய வழி என்று கருதி இஸ்லாமியராக மாற்றப்படும் முயற்சிக்கு இரையாகாதீர் என்று பாக்கிஸ்தானிலும், அய்தராபாத்திலும் இருந்த தீண்டப்படாத வகுப்பு மக்களை அம்பேத்கர் கேட்டுக்கொண்டார். கட்டாயத்தினால் இஸ்லாமியராக மதமாற்றம் செய்யப்பட்ட தீண்டப்படாத வகுப்பு மக்களை மீண்டும் அவர்களுடைய பழைய மதத்திற்கே திரும்ப அழைத்துக் கொள்ளப்படுவதற்கும் மதமாற்றத்திற்குமுன் அவர்கள் நடத்தப்பட்டதுபோல சகோதரர்களாக நடத்தப்படுவதற்கும் வேண்டிய முயற்சிகளைச் செய்வதாக அம்பேத்கர் உறுதி கூறினார். இந்துக்கள் தீண்டப்படாதவர்கள் மீது எத்தகைய கொடுமைகளையும் ஒடுக்குமுறைகளையும் கட்டவிழ்த்து விட்டிருப்பினும் அவை தீண்டப்படாதவர்களின் கருத்தைத் திசை திருப்பி விடவோ அல்லது அவர்கள் ஆற்ற வேண்டிய கடமைகளிலிருந்து அவர்களைப் பிறழ்வுறவோ செய்யாவண்ணம் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்றார். அய்தராபாத் நிசாமை ஆதரிக்காதீர்கள்; 'இந்தியாவின் பகைவரான நிசாமை ஆதரிப்பது என்பது தீண்டப் படாத வகுப்பிற்குக் களங்கத்தை ஏற்படுத்தும்'[106] என்று அம்பேத்கர் தீண்டப்படாத வகுப்பு மக்களை எச்சரித்தார். பாக்கிஸ்தானிலிருந்து தீண்டப்படாத வகுப்பு மக்களை இந்தியாவிற்கு வர உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு அம்பேத்கர் பிரதம மந்திரியான நேருவைக் கேட்டுக் கொண்டார்.

அம்பேத்கரின் இந்நிலைபாட்டைக் குறித்து இந்தியத் தேசியப் பத்திரிக்கைகள் அனைத்துமே அவரைப் பாராட்டிப் புகழ்ந்தன. அம்பேத்கரிடம் ஏற்பட்டுள்ள இம்மாற்றத்தை எல்லாப் பத்திரிக்கைகளும் பெரிதும் பாராட்டின. சென்னையிலிருந்து வெளிவரும் 'இந்து' நாளேடு கடந்த காலங்களில் சாதி இந்துக்களால் தீண்டப்படாத வகுப்பினர் கொடுமையாக நடத்தப்பட்டார்கள் என்பதற்காகத் தீண்டப்படாத வகுப்பினர் இந்து மதத்தைக் கைவிட வேண்டும் என்று இனிமேல் அம்பேத்கர் கருத மாட்டார் என்று எழுதித் தன் மகிழ்ச்சியைத் தெரிவித்தது. இந்துச் சமூகத்திலிருந்து அவர்களைப் பிரித்திடத் தீவிரமான முயற்சிகள் பல மேற்கொள்ளப்

பட்டிருந்த போதிலும், அரிசனங்கள் அவர்களுடைய முன்னோர்கள் பின்பற்றி வந்த மத நம்பிக்கைகளின்பால் உள்ளார்ந்த ஈடுபாடும் பற்றுறுதியும் கொண்டுள்ளனர் என்பது தெளிவாகப் புலப்படுகிறது என்று 'இந்து' நாளேடு மேலும் குறிப்பிட்டது.

கடந்த இரண்டு மாத காலத்தில் பம்பாய் மாகாணத்தில் காங்கிரசு ஆட்சி சமூக அநீதியைக் களையும் தன்மையில் தீண்டப்படாத வகுப்பு மக்கள் கோயில்களுக்குள் அனுமதிக்கப்படுவதில் ஒரு குறிப்பிடத்தக்க அளவில் முன்னேற்றங் கண்டிருந்தது. 1947 செப்டம்பர் மாதத்தில் கோயில் நுழைவு மசோதாவைப் பம்பாய் மாகாணச் சட்டசபை நிறைவேற்றியது. இச்சட்டத்தின் விளைவாகப் பந்தர்பூரிலுள்ள புகழ்பெற்ற வித்தோபா கோயில், அவந்தியிலிருக்கும் தியானேசுவரர் கோயில், நாசிக்கிலுள்ள காலாராம் கோயில் ஆகியவை தீண்டப்படாத வகுப்பு மக்களுக்குத் திறந்து விடப்பட்டன. இது மாபெரும் சாதனையாகும். கோயில் நுழைவு உரிமைக்காகத் தீண்டப்படாத வகுப்பு மக்கள் பதினைந்து ஆண்டுகள் போராடினார்கள். கோயில் நுழைவுச் சட்டம் இந்துச் சமூகத்தின் அருவருப்பான கறையைக் கழுவியது; சமூகத்தில் புதிய ஒளியைப் பாய்ச்சியது. புதிய வாழ்வு தொடங்கிவிட்டது என்பதன் அறிவிப்பாக அது அமைந்தது.

அச்சமயம் அரசியல் அமைப்புச் சட்ட அவை சட்டங்களை உருவாக்கும் அவையாகச் செயல்படத் தொடங்கியது. நல்வாழ்வுத் துறை அமைச்சராக இருந்த ராஜ்குமாரி அமிர்த கௌர் அரசியல் அமைப்புச் சட்ட அவையில் பேசும்போது, 'ஏறக்குறைய எல்லா மாகாணங்களிலும் தீண்டப்படாதவர்களின் இயலாமைகளை அகற்றுவதற்கென்று சட்டங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால் உண்மையில் அவை நடைமுறைப்படுத்தப்படுவதைவிட மீறப்படுவதே அதிகமாக இருக்கிறது என்பதே பேருண்மையாகும்' என்று கூறினார்.

அம்பேத்கர், தான் எழுதிய 'பௌத்தத்தின் சாரம்'[107] (The Essence of Buddhism) என்ற நூலைப் பேராசிரியர் பி. இலட்சுமி நரசுவெளியிடுவதற்கான ஏற்பாடுகளை அக்கட்டத்தில் செய்தார். அதுவரையில் பௌத்தம்பற்றி வெளிவந்துள்ள நூல்களில் அந்நூல் தான் மிகச் சிறந்தது என்று அம்பேத்கர் கருதினார். இது பௌத்தம் பற்றிய முழுமையானதோர் நூல்; இதில் தெள்ளிய நடையில் கருத்துகள் சொல்லப்பட்டுள்ளன. அம்பேத்கர் இலட்சுமி நரசுவை ஒரு சமூகச் சீர்திருத்தவாதி என்றும், சிலைவழிபாட்டை மறுப்பவர் என்றும் புகழ்ந்தார்.

அம்பேத்கர் இப்போது அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்குவதில் முழுமையாக ஈடுபட்டிருந்தார். உடல் நலன் நலிவடைந்து கொண்டிருந்த நிலையிலும் தன்னிடம் ஒப்படைக்கப் பட்ட அப்பணியில் பெரிதும் தனி ஒருவராக நின்று தன்னுடைய சிந்தனை, ஆர்வம், உழைப்பு ஆகிய அனைத்தையும் முழுமையாகச் செலுத்தித் தீவிரமாக மூழ்கியிருந்தார். அம்பேத்கர் எந்த அளவிற்குக் கடுமையாக உழைத்தார்; அவரை அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கிய மேதை என்று ஏன் அழைக்கிறோம் என்பதை 1948 நவம்பர் 5ஆம் நாள் அரசியல் அமைப்புச் சட்ட அவையில் டி.டி.கிருஷ்ணமாச்சாரி ஆற்றிய உரையிலிருந்து நாம் அறிந்து கொள்ளலாம். அரசியல் அமைப்புச் சட்டத்தை வடிவமைத்திட இந்த அவையினால் நியமிக்கப்பட்ட ஏழுபேரில் ஒருவர் இந்த வரைவுக்குழுவின் உறுப்பினர் பதவியிலிருந்தே ராஜிநாமா செய்துவிட்டார். அவருக்குப் பதிலாக மற்றொருவர் நியமிக்கப்பட்டார். வேறு ஒருவர் இறந்துவிட்டார்; அவருக்குப் பதிலாக இன்னும் யாரையும் நியமிக்கவில்லை. இன்னொருவர் அமெரிக்காவுக்குச் சென்று விட்டார்; அவருடைய இடம் இன்னும் காலியாகவே இருக்கிறது. மற்றொரு உறுப்பினர் மாகாணங்கள் தொடர்பான வேலைகளில் ஈடுபட்டிருக்கிறார். இந்த அளவிற்கு அரசியல் அமைப்புச் சட்ட வரைவுக்குழுவின் உறுப்பினர் பதவிகள் காலியாக உள்ளன. மற்றவர்களில் ஓரிரு உறுப்பினர்களும் தில்லியிலிருந்து தொலைவான இடங்களில் இருக்கின்றனர். தில்லிக்கு வந்து வேலை செய்வதற்கு இவர்களின் உடல்நிலை ஒத்துழைக்கவில்லைபோலும். ஆகவே இறுதியில் அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கும் பெருஞ் சுமையான பொறுப்பினை அம்பேத்கர் ஒருவரே ஏற்க வேண்டியதாயிற்று. ஐயத்திற் கிடமில்லா வகையில் போற்றுதலுக்குரிய இவ்வரிய பணியை அம்பேத்கர் செய்து முடித்திருப்பதற்காக நாம் அவருக்கு நன்றி செலுத்த வேண்டும்' என்று டி.டி.கிருஷ்ணமாச்சாரி கூறினார். அரசியல் அமைப்புச்சட்ட வரைவுக் குழுவின் கூட்டங்கள் நடத்தப்பட்டபோது சில நேரங்களில் அம்பேத்கரும் அவருடைய செயலாளரும் மட்டுமே பங்கு பெற்றனர் என்பது அம்பேத்கரே முழுக்க முழுக்கத் தனி ஒருவராக அரசியல் சட்டத்தை எழுதினார் என்பதை மெய்ப்பிக்கிறது. வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இப்பணி விரைவில் முடியும் நிலையிலிருந்தது.

1948 சனவரி மாத நடுவில் அம்பேத்கர் பம்பாய்க்குத் திரும்பினார். பம்பாயிலிருந்தபோது டோபி டாலோ நைட்

பள்ளியின் பேச்சுப் போட்டிப் பரிசளிப்பு விழாவில் அம்பேத்கர் உரையாற்றினார். இந்த நிகழ்ச்சி சித்தார்த்தா கல்லூரியில் நடந்தது. சீரிய முறையில் முயற்சி செய்தால் சிறந்த பேச்சாற்றலை வளர்த்துக் கொள்ள முடியும் என்று மாணவர்களுக்கு அவர் உணர்த்தினார். சிறந்த பேச்சாளராக விளங்கிய கோபால கிருஷ்ண கோகலே, முதன் முறையாகப் பொதுக்கூட்டத்தில் பேசும்போது எவ்வாறு தடுமாற்றம் அடைந்தார் என்பதைப் பற்றி அம்மாணவர்களுக்கு அம்பேத்கர் எடுத்துரைத்தார். அதேபோல் புகழ்மிக்க பேச்சாளரான பெரோஸ்-ஷா-மேத்தா அவருடைய பேச்சாற்றலை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக அவருடைய அறையில் கண்ணாடியின் முன் நின்று பலமுறை பேசிப் பேசிப் பழகினார். கண்ணாடியில் அவருடைய மெய்ப்பாடுகளையும் கையசைவுகளை யும் பார்த்துப் பார்த்துத் தேவைக்கு ஏற்ப அவர் எப்படித் திருத்திக் கொண்டார். மேலும் அவருடைய உடையும் தோற்றமும் திருத்தமாகவும் மற்றவர் கவனத்தைக் கவருவதாகவும் இருக்க வேண்டுமென்பதில் எப்படி அதிக கவனம் காட்டினார் என்பவற் றையும் அம்பேத்கர் விளக்கினார். சிறந்த பேச்சாளரான சர்ச்சில் முன் தயாரிப்பு இல்லாமல் ஒருபோதும் பேசியதேயில்லை என்றும் கூறினார்.

பிரிவினையின் விளைவாக அதிர்ச்சி தரும் கொடிய நிகழ்ச்சிகள் தொடர்ந்து ஒன்றன்பின் ஒன்றாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. குருதியும் கண்ணீரும் கொப்பளிக்கும் கடலை நாடு கடந்து செல்ல வேண்டியிருக்கிறது என்பதை நேரு ஒத்துக் கொண்டார். மக்கள் காந்தியத்தின் மீதான தங்கள் நம்பிக்கையை இழக்கத் தலைப்பட்ட னர். காங்கிரசின் தலைவர்கள் காந்தியத்தின்பால் கொண்டிருந்த நம்பிக்கை குழப்பத்திற்கு உள்ளாயிற்று. ‘அகிம்சையை முழு அளவில் பின்பற்ற வேண்டும் என்ற காந்தியக் கொள்கைதான் இந்தியநாடு பிளவுபட்டதற்குப் பெருங்காரணமாகும்’ என்று தாண்டன் கூறினார். இந்திய நாட்டிற்குச் சுதந்திரம் கிடைப்பதற்கு இருபத்து நான்கு மணி நேரத்திற்கு முன்னர் கல்கத்தாவில் காந்தி தங்கியிருந்த வீட்டின்மீது கல்லெறிந்தனர்.

இந்து-முஸ்லீம் மோதல் உச்சக் கட்டத்தை அடைந்ததன் விளைவாகக் காந்தி 1948 சனவரி 13ஆம் நாள் உண்ணாநோன்பி னைத் தொடங்கினார். தில்லியில் தங்கள் வீடுகளிலிருந்து அஞ்சி ஓடிவிட்ட முஸ்லீம்கள் மீண்டும் அவர்களின் வீடுகளுக்குத் திரும்பிட வழிகாண வேண்டும்; வழிபாட்டுக்குப் பயன்படாமல்

செய்யப்பட்ட மசூதிகளை மீண்டும் முஸ்லீம்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற இரு கோரிக்கைகளையும் மற்றும் அய்ந்து கோரிக்கைகளையும் முன்வைத்துக் காந்தி உண்ணா நோன்பை மேற்கொண்டிருந்தார். இதன் விளைவாக இந்திய அரசு பாக்கிஸ் தானுக்கு அய்ம்பத்தைந்து கோடி ரூபாய் அளித்திட நேர்ந்தது. ஆனால் பாக்கிஸ்தானுக்கு இத்தொகையைத் தரக்கூடாது என்று எதிர்ப்புகளும் மறுப்புகளும் எழுந்தன.

குமுறலும், குழப்பமும் பேரழிவும் நாட்டைக் கவ்வியிருந்த நிலையில், 1948 சனவரி 30ஆம் நாள், நாதுராம் கோட்சே மகாத்மா காந்தியைச் சுட்டுக் கொன்றான்.

உலகில் இதுவரை தோன்றிய பெருந்தலைவர்களில் ஒருவரான காந்தியின் கொடிய துன்பமான திடீர் மறைவு உலகையே பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. ஆனால் ஒரு நூதனமான வகையில் மென்மையான உள்ளமும் கல்நெஞ்சத்தன்மையும் ஒருங்கே பெற்றிருந்த அம்பேத்கர் காந்தியின் கொலையைப் பற்றி எத்தகைய உணர்வையும் வெளிப்படுத்தவில்லை. இந்நூலில் முன்னர் சொல் லப்பட்டுள்ளதுபோல் காந்தி அம்பேத்கரிடம் நடந்து கொண்ட கடுமையான போக்குகள் அம்பேத்கரின் மனத்தைப் புண்படுத்தி யிருந்தன. காந்தியைப் பற்றிக் கொண்டிருந்த கசப்புணர்ச்சியும் மறையவில்லை. எனவே காந்தியின் கொடிய முடிவுபற்றி அம்பேத்கர் வெளிப்படையாக ஒரு சொல்லும் சொல்லவில்லை; அறிக்கையும் வெளியிடவில்லை. காந்தியின் இறுதி ஊர்வலத்தில் மட்டும் சிறிது நேரம் கலந்துகொண்டுவிட்டுத் தன் படிப்பறைக்குத் திரும்பி விட்டார். இந்தியச் சனநாயகம் சுதந்திரமாக வளர்ந்து உருவாவதற்குக் காந்தியின் பேராளுமை ஒரு பெருந்தடையாக இருந்தது என்று அம்பேத்கர் கருதினார்போலும். சீசர் கொலையுண் டபோது 'விடுதலையின் விடியல் வந்துவிட்டது' என்று சிசாரோ கூறிய பொருள் செறிந்த அதே கருத்தை காந்தி கொலையுண்டது பற்றியும் அம்பேத்கர் கொண்டிருந்தார் என்று கூறப்பட்டது.

1948 பிப்ரவரி மாதக் கடைசி வாரத்தில் அம்பேத்கர் அரசியல் அமைப்புச் சட்டத்தை எழுதி முடித்தார். அதை அரசியல் அமைப்புச் சட்ட அவையின் தலைவரிடம் அளித்தார். நாட்டினரின் கருத்தை அறிவதற்காக அந்த நகல் சட்டம் வெளியிடப்பட்டது. அரசியல் அமைப்புச் சட்ட நகலின் முன்னுரையில் 'குடியரசு' (Republic) என்ற சொல்லுக்குப் பதிலாக 'அரசு' (State) என்ற சொல்லைப் பயன்படுத்த வேண்டும் என்ற திருத்தத்தைக்

கொண்டுவர விரும்பினார். 'அரசு' என்ற சொல்லைப் பயன்படுத்த வேண்டும் என்று அவர் கருதியதன் நோக்கம், அரசியல் சட்டத்தில் உள்ள எதுவும் இந்தியாவுக்கும் பிரிட்டிஷ் காமன்வெல்த்துக்கும் இடையிலான உறவைத் தானாகவும் உடனடியாகவும் துண்டிப்பதாக இருக்கக் கூடாது என்பதேயாகும். 'அரசு' என்ற சொல் நடுநிலையானதாக இருக்கிறது; அயர்லாந்து, தென்னாப்பிரிக்கா போன்ற நாடுகளின் அரசியலமைப்புச் சட்டங்கள் 'அரசு' என்பதையே அடிப்படையாகக் கொண்டுள்ளன என்று கூறினார். ஆனால் பெரும்பாலான இந்தியத் தலைவர்களும், பத்திரிக்கைகளும் அம்பேத்கரின் இக்கருத்தை ஏற்கவில்லை.

III

அரசியல் அமைப்புச்சட்டத்தை உருவாக்கும் பணி முடிவடைந்ததும் கட்டாயம் ஓய்வு எடுக்க வேண்டும் என்கிற அளவுக்கு அம்பேத்கரின் உடல்நலன் குன்றி இருந்தது. எனவே மருத்துவம் செய்து கொள்வதற்காக அம்பேத்கர் பம்பாய்க்கு வந்தார். தான் முதுமை எய்தும் காலத்தில் தன்னைக் கவனித்துக் கொள்ள ஒரு துணை தேவை என்ற எண்ணம் அவருக்கு ஏற்பட்டது. பம்பாயில் மருத்துவமனையில் டாக்டர் செல்வி சாரதா கபீரைச் சந்திக்கும் வாய்ப்பு நேரிட்டது. 1947 ஆகஸ்டு முதலே அம்பேத்கர் அவருடைய உடல்நலம் பற்றி மிகவும் கவலை கொள்ளத் தொடங்கினார். அவருடைய உடல்நிலை சீர்கெட்டு வருவதாக அவரே கூறினார். 1947 ஆகஸ்டு மாதத்தில் அவர் எழுதிய கடிதம் ஒன்றில், 'கடந்த பதினைந்து நாட்களாகக் கண்ணிமைக்கும் நேரங்கூட நான் தூங்கவில்லை', என்று குறிப்பிட்டிருந்தார். எனவே இரவுகள் அவருக்கு அச்சமூட்டுவனவாயின. நாள்தோறும் நரம்பு வலி நள்ளிரவில் தொடங்கி விடியும்வரை நீடித்தது. அப்போது அவர் இன்சுலின் மருந்தையும், ஓமியோபதி மருந்தையும் பயன்படுத்தினார்; அவற்றில் எதுவுமே பயன்தரவில்லை. 'குணப்படுத்த முடியாத. ஒரு நோயைத் தாங்கிக் கொள்ளப் பழகிட வேண்டியதுதான்' என்று அம்பேத்கர் கூறினார். இதுபற்றி மருத்துவர்கள் என்ன கருதுகிறார்கள் என்று அறிந்துகொள்ள 1947 ஆகஸ்டில் அவாவினார்.

1948 சனவரியில், அம்பேத்கர், அவருடைய காலில் வலி மாலை நான்கு மணிக்குத் தொடங்கித் தொடர்ந்து இரவு முழுவதும் இருப்பதாகக் கூறினார். அதன்பின் ஒரு மாதங்கழித்துச் சித்ரேவுக்கு எழுதிய கடிதத்தில் அவருடைய உடல்நிலை திடீரென மோசமாகி

விட்டது என்றும், மீண்டும் பழைய நோய் வரும் போலிருக்கிறது என்றும் எழுதியிருந்தார். இரண்டு கால்களிலும் குடைந்து கொல்வதுபோன்ற கொடிய வலியுடன் நான்கு இரவுகள் இமைப் போதும் தூங்காமல் அவதிப்பட்டார். அவருடைய வேலைக்காரர் களும் இரவில் கண் விழித்திருந்து அவருக்குப் பணிவிடை செய்ய வேண்டியிருந்தது. 'மிகச் சிறந்த இரண்டு மருத்துவர்கள் என் உடல்நிலையை ஆய்வு செய்தனர். உடனடியாக என் உடல்நிலை யில் முன்னேற்றம் ஏற்படாவிட்டால் என் கால்களில் உள்ள வலித் தொல்லை மேலும் அதிகமாகித் தீர்க்க முடியாததாகி விடும் என்று கூறியிருக்கிறார்கள். நீங்கள் கூறியுள்ளவாறு, முன்பு நான் எண்ணியிருந்ததைக் காட்டிலும் என் உடல்நலனை மிகுந்த பரிவுடன் கவனித்துக்கொள்ள ஒருவரைத் துணையாக ஏற்றுக் கொள்வதுபற்றி நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன். டாக்டர் சாரதா கபீர் அவர்களை மணந்து கொள்வதென முடிவு செய்துள்ளேன். அவர்தான் எனக்குச் சிறந்த துணையாகத் தென்படுகிறார். சரியோ, தவறோ அவரை மணப்பது என்று முடிவு செய்துவிட்டேன்' என்று எழுதிவிட்டு சித்ரேவின் கருத்தைக் கூறுமாறு கேட்டிருந்தார்.

அவருடைய முதன்மையான தளபதியாக இருந்த பாவ்ராவ் கெய்க்வாடுக்குத் தான் திருமணம் செய்து கொள்ளவிருப்பது பற்றித் தெரிவித்தார். முதல் மனைவி இறந்த பின் மறுமணம் செய்து கொள்வதில்லை என்று அம்பேத்கர் உறுதிபூண்டிருந்தார். ஆனால் இப்போது மறுமணம் செய்து கொள்வதென முடிவு செய்தார். சமைக்கத் தெரிந்த-மருத்துவம் படித்த ஒரு பெண்ணைத் தேடினார். தீண்டப்படாத சாதிகளில் இத்தகைய பெண் கிடைக்க வாய்ப்பே யில்லை. அதனால் சரஸ்வத் பார்ப்பனப் பிரிவைச் சேர்ந்த ஒருவரைத் தேர்ந்தெடுத்தார்.[108]

அம்பேத்கர் சித்ரேவுக்கு எழுதிய கடிதத்தில், அவருடைய நெருங்கிய தோழர் ஒருவரே அவருடைய இரண்டாவது திருமணத் தையொட்டி அவருடைய மகன் யசுவந்தனுக்கும் தன்னை மணக்கப் போகும் பெண்ணுக்கும் இடையில் கலகம் மூட்டியிருக்கி றார் என்று எழுதினார். 'நான் பயந்ததைப் போலவே இத்திரும ணத்தை மேலும் தள்ளிப்போடுவது என்பது அதிக அளவில் விளம்பரமாவதற்கும் தீய நோக்கினர் கண்டபடி பேசுவதற்கும் இடந்தருவதாகும்; அதனால் 1948 ஏப்பிரல் 15ஆம் நாள் கட்டாயம் திருமணத்தை முடித்துவிடுவது என்று முடிவு செய்துள்ளேன்'

என்று குறிப்பிட்டிருந்தார். சித்ரேவை அவருடைய திருமணத்திற்கு வருமாறு அம்மடலில் அழைத்திருந்தார். 'நான் செய்வது ஒழுக்க நெறிக்குப் புறம்பானது என்று கருதவில்லை. யசுவந்தன் உட்பட, யாருக்குமே, இதுபற்றிக் குறை கூறுவதற்கு இடமேயில்லை. யசுவந்தனுக்கு நான் பணமாக ரூ.30,000 கொடுத்துள்ளேன்; அத்துடன் இன்று ரூ.80,000 பெறுமானம் உள்ளவீட்டையும் கொடுத்திருக்கிறேன்; நான் செய்திருப்பதைவிட எந்தவொரு தந்தையும் தன் மகனுக்குச் செய்துவிட முடியாது' என்று சித்ரேவுக்கு எழுதிய கடிதத்தில் அம்பேத்கர் குறிப்பிட்டிருந்தார்.

திருமணம் உறுதி செய்யப்பட்டது. டாக்டர் செல்வி சாரதா கபீர் பம்பாயிலிருந்து தில்லிக்கு விமானத்தில் வந்தார். 1948 ஏப்பிரல் 15ஆம் நாள் அம்பேத்கரின் அய்ம்பத்தாறாவது அகவையின் இரண்டாவது நாளில்-சருசத் பார்ப்பனப் பெண்ணான டாக்டர் செல்வி சாரதா கபீரைப் புதுதில்லியில் ஹார்டிஞ்ச் அவின்யூ எண் 1-இல் இருந்த அவருடைய இல்லத்தில் மணந்து கொண்டார். தில்லியின் துணை ஆணையர் இத்திருமணத்தைச் சிவில் திருமணச் சட்டத்தின்படி நடத்தி வைத்தார். இத்திருமணத்தில் அம்பேத்கரின் நண்பர்கள் சிலர் கலந்துகொண்டனர். திருமணம் முடிந்தபின் அவர்களுக்கு அம்பேத்கர் விருந்தளித்தார். 'சாதாரணமான ஒரு குடிமகன் ஒரு மன்னரின் மகளை மணந்து கொள்ளுவதை விடச் சிறப்பு வாய்ந்ததாக இருந்தது அம்பேத்கரின் திருமணம்'' என்று 'நியூயார்க் டைம்ஸ்' நாளேடு எழுதியது.

தன் மகனை ஏதாவதொரு தொழிலில் ஈடுபடுத்த வேண்டும் என்ற எண்ணம் கடந்த நான்காண்டுகளாகவே அம்பேத்கரின் உள்ளத்தில் உழன்று கொண்டேயிருந்தது. அதுபற்றி அவருடைய நண்பர் நேவல் பெத்தேனாவுக்கு மடல் எழுதினார். அவருடைய மகனும், அண்ணன் மகனும் எத்தொழிலை (industry) மேற்கொண்டால் நல்லது என்று பெத்தேனா கருதுகிறாரோ அத்தொழிலுக்கான திட்டத்தைத் தீட்டித் தருமாறு அம்பேத்கர் கேட்டுக்கொண்டார். 'அவர்கள் தங்கள் வாழ்க்கைக்குக் கௌரவமான-நல்லதொரு தொழிலைப் பெற்றுவிட்டால் மனஅமைதியுடன் நான் இறப்பேன்' என்று அம்பேத்கர் அம்மடலில் குறிப்பிட்டிருந்தார். ஒரு தந்தை தன் மகன்களின் முன்னேற்றத்தில் எந்த அளவிற்கு அக்கறை காட்டுவாரோ அதுபோல் தன்னுடைய மகனின் மற்றும் தன் அண்ணன் மகனின் வாழ்வில் ஈடுபாடுகொண்டு அவர்களுக்கு ஒரு நிலையான தொழிலைக் கற்றுத்தருமாறு அம்பேத்கர்

பெத்தேனாவுக்கு எழுதிய மடலில் கேட்டுக் கொண்டார். ஒரு தொழிலும் தொடங்கப்பட்டது. ஆனால் ஒரு தந்தை என்ற முறையில் அம்பேத்கருக்கு அது மனத்தைப் பாதிக்கிற அளவிற்கு ஏமாற்றமாகவே அமைந்தது.

அம்பேத்கரின் பிறந்தநாள் விழா வழக்கம்போல் எங்கும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பம்பாய் மாகாண முதலமைச்சர் பி.ஜி.கெர் அம்பேத்கருக்குப் புகழ்மாலை சூட்டினார். இந்திய நாட்டில் சிறந்த அறிவாளிகளாக விளங்குகின்ற அரசியல் தலைவர்களுள் அம்பேத்கர் ஒருவர் என்றும், அம்பேத்கர் பம்பாய் மாகாணத்திற்கு மட்டும் தலைவராக இல்லை; இந்தியா முழுமைக்கும் தலைவராக இருக்கிறார் என்றும் கெர் பாராட்டினார். பம்பாயில் செவரியில் நடந்த கூட்டத்தில் எஸ்.கே.பாட்டீல் பேசும்போது, அம்பேத்கர் உயர்ந்த மக்கள் தொண்டர், ஒப்பரிய ஆற்றல் வாய்ந்தவர்; அவர் ஒருவராகவே மத்திய அரசை நடத்திச் செல்ல முடியும் என்ற அளவிற்கு அவரிடம் திறமைகள் பொதிந்துள்ளன என்று புகழ்ந்தார். பம்பாய் மாகாணக் காங்கிரசின் தலைவரான பாட்டீல், அம்பேத்கரை எதிர்கால இந்தியாவின் சிற்பி என வர்ணித்தார்; இந்தியாவின் தலைசிறந்த மகனான அம்பேத்கர் மேலும் இருபத்தைந்து ஆண்டுகளேனும் நலமுடன் வாழ்ந்து இந்த நாட்டை வழிநடத்திச் செல்ல வேண்டுமென்று கடவுளிடம் வேண்டுவதாக அவர் கூறினார். பம்பாயிலிருந்து வெளிவந்த 'நேஷனல் ஸ்டாண்டர்டு' பத்திரிகை அம்பேத்கரின் சீர்திருத்தச் சிந்தனைகள் இந்து மறுமலர்ச்சிக்களம் முழுவதையும் ஆட்கொண்டு விட்டது என்றும், அம்பேத்கர் கூர்ந்த அரசியல் மதிநுட்பம் வாய்ந்த தலைவர் என்றும் புகழ்ந்தது. கொள்கைகளுக்காகப் போராடும் ஒரு வீரர்; அவருடைய கொள்கைகள்தான் சமூக அநீதியை ஒழித்திடவும் ஒடுக்கப்பட்டோரை உயர்த்திடவும் வழி வகுத்தன; சட்ட அமைச்சர் என்ற முறையில் மற்ற அமைச்சர்களுக்கு அம்பேத்கர் தோன்றாத் துணையாக விளங்குகிறார் என்று, 'நேஷனல் ஸ்டாண்டர்டு' பத்திரிக்கை மேலும் எழுதியது.

1948 ஏப்பிரல் மாதக் கடைசி வாரத்தில் அய்க்கிய மாகாணத் தீண்டப்படாத வகுப்பினரின் மாநாட்டில் அம்பேத்கர் உரையாற்றினார். அங்குப் பேசும்போது, 'எல்லா வகையான முன்னேற்றத்திற்கும் அரசியல் அதிகாரமே திறவுகோலாகும்; இந்த அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றினால்தான் தீண்டப்படாத வகுப்பினர் தங்கள் விடுதலையைப் பெற முடியும்; இதற்காகத் தீண்டப்படாத

வகுப்பினர் அனைவரும் ஒன்று திரண்டு மூன்றாவது அரசியல் அணியாக உருவாகிக்காங்கிரசுக் கட்சிக்கும் சோசலிஸ்டுக் கட்சிக்கும் இடையில் நடைபெறும் அரசியல் போராட்டத்தில் இந்தியாவின் அரசியல் போக்கை நிர்ணயக்கக்கூடிய சக்தியாகத் திகழ்ந்திட வேண்டும்' என்று கூறினார்.

'நான் மத்திய அரசில் பதவியில் சேர்ந்திருக்கிறேனே தவிர காங்கிரசுக் கட்சியில் சேரவில்லை. காங்கிரசுக் கட்சி பற்றி எரிந்து கொண்டிருக்கும் ஒரு வீடு போன்றது. அது இன்னும் சில ஆண்டுகளுக்குள் முழுமையாக அழிந்து போய்விடுமாயின் நான் வியப்படைய மாட்டேன். நான் காங்கிரசுக் கட்சியில் சேர்ந்தால், தண்ணீரில் போடப்பட்ட கல்போல் அப்படியே இருப்பேன்; ஆனால் என் எண்ணங்களைப் பின்பற்றும் நீங்கள் காங்கிரசில் சேர்ந்தால் நீரில் விழுந்த மண்ணாங்கட்டி போல் கரைந்தே விடுவீர்கள். ஆகவே நம்முடைய கட்சியின் ஒற்றுமையைக் கட்டிக் காப்பதில் விழிப்புடன் இருக்க வேண்டும்' என்று அம்பேத்கர் அக்கூட்டத்தில் கூறினார். அவருடைய இந்தப் பேச்சு குளவிக்கூட்டைச் சீண்டியது போலாயிற்று. 'என்னுடைய பேச்சு கடுமையான விவாதத்தைத் தோற்றுவித்தது. எனக்கும், பட்டேல், பண்டிதநேரு ஆகியோருக்கும் இடையில் சூடான வாக்குவாதங்கள் நடந்தன. என்னுடைய பேச்சு உங்களை இக்கட்டான நிலைக்கு ஆளாக்கி விடும் என்று நீங்கள் கருதினால் நான் ராஜிநாமா செய்யத் தயார் என்று கூறிவிட்டேன். அடுத்த சில நாட்களில் இப்பிரச்சினை ஏதேனும் ஒருவிதத்தில் முடிவுக்கு வந்துவிடும்' என்று அம்பேத்கர் சித்ரேவுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். ஆயினும் அம்பேத்கர் தில்லியிலிருந்து வெளியிட்ட ஓர் அறிக்கையில் அவருடைய பேச்சு எழுத்துவடிவில் அமையாத பேச்சு என்றும், மற்றவர்களால் அது தவறாகத் திரித்துக் கூறப்பட்டுள்ளது என்றும் கூறியிருந்தார். 'நிபந்தனை ஏதுமின்றி அழைப்பு வந்ததால்தான் நான் அமைச்சரவையில் சேர்ந்தேன். அமைச்சரவையில் சேருவதன் மூலம் தீண்டப்படாத வகுப்பு மக்களுக்கு மேலும் நன்முறையில் தொண்டாற்ற முடியும் என்று எண்ணினேன். எதிர்க்கவேண்டும் என்பதற்காகவே எல்லாவற்றையும் எதிர்க்கின்ற கொள்கையை நான் வெறுக்கிறேன்'' என்று அம்பேத்கர் அந்த அறிக்கையில் கூறியிருந்தார். இருப்பினும் இவ்விவாதம் எழுப்பிய சூடு 1948 ஆகஸ்ட்டு வரை கனன்று கொண்டேயிருந்தது. அம்பேத்கர் அவருடைய பம்பாய்ப் பயணத்தையே ரத்து செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. ஏனெனில் அப்போது மத்திய அரசில் மீண்டும் சில

அரசியல் சிக்கல்கள் தலைதூக்கி, அதனால் மத்திய அரசே கவிழ்ந்து விடலாம் என்ற நிலைமை இருந்தது என்று காரணம் கூறப்பட்டது.

'இந்திய இராணுவம்' (Army in India) என்ற நூலை எழுதிட அம்பேத்கர் ஏற்கனவே திட்டமிட்டிருந்தார். அதுபற்றி பரோடாவைச் சேர்ந்த ஜி.எம்.ஜதாவிடம் மிகுந்த ஆர்வமுடன் கலந்து பேசினார். ஜதாவிடம் இராணுவ விஞ்ஞானம், இந்தியாவின் இராணுவச் சிக்கல் பற்றிப் பல நூல்கள் இருந்தன. இராணுவ விஞ்ஞானத்தைக் கற்க விரும்புகின்ற மாணவர்களுக்காகப் புதிய வகுப்பு ஒன்று தொடங்கிட அம்பேத்கர் விழைந்தார். ஜதாவ் அவ்வகுப்பில் இராணுவ விஞ்ஞானத்தைக் கற்பிக்க வேண்டும் என்று அம்பேத்கர் விரும்பினார். இராணுவ விஞ்ஞான வகுப்பு நடத்த வேண்டும் என்பதில் அம்பேத்கர் மிகுந்த ஆர்வமும் ஈடுபாடும் கொண்டிருந்தார். அதனால் அச்சமயத்தில் அவர் சித்ரேவுக்கு எழுதிய கடிதத்தில், 'இராணுவ விஞ்ஞானத்தைக் கற்பிப்பதைக் கல்லூரி தன்னுடைய ஒரு சிறப்புத் துறையாக ஆக்கிக் கொள்ளவேண்டும் என்று விரும்புகிறேன். அவ்வாறு செய்வது இந்திய நாட்டிற்கு ஆற்றும் அரிய தொண்டாகும்; அத்துடன் தீண்டப்படாத வகுப்பு மக்களுக்கும் தொண்டு செய்வதாக அமையும்' என்று குறிப்பிட்டிருந்தார். ஆனால் அம்பேத்கரின் இந்த எண்ணம் ஈடேறவில்லை. இருப்பினும் அம்பேத்கரின் சித்தார்த்தா கல்லூரி ஜதாவிடமிருந்து சில நூல்களை வாங்கியது.

அக்கட்டத்தில், மத்திய அரசு மொழிவழி அடிப்படையில் மாநிலங்கள் அமைய வேண்டும் என்ற கோரிக்கையை ஆராய்ந்து அறிக்கை தருவதற்கென மொழிவாரி மாநில அமைப்பு ஆய்வுக்குழு ஒன்றை அமைத்தது. மகாராட்டிரத்தின் சார்பில் அக்குழுவின் முன் சாட்சியம் அளித்த முக்கியமானவர்களுள் அம்பேத்கரும் ஒருவர். அக்குழுவிடம் அளிப்பதற்காக அம்பேத்கர் வழக்கம்போல் ஆழ்ந்த அக்கறையுடனும் தெள்ளிய விளக்கங்களுடனும் அறிக்கை ஒன்றைத் தயாரித்திருந்தார்.

1948 அக்டோபர் 14ஆம் நாள் பம்பாயில் அக்குழுவிடம் அந்த அறிக்கையை அம்பேத்கர் அளித்தார். மொழிவழிப்பட்ட ஒரு மாகாணத்தில் சனநாயகச் செயல்பாட்டிற்குத் தேவையான-ஏறக்குறைய ஒரே தன்மையைக் கொண்ட சமூக அமைப்பு இருக்கும்; பலமொழிகள் பேசப்படும் ஒரு மாகாணத்தைவிட மொழிவழிப்பட்ட மாகாண அமைப்பில் சனநாயகம் செம்மையாக

இயங்கும். மொழிவழி மாகாணங்கள் அமைப்பதில் ஆபத்து ஏதுமில்லை. ஆனால் அந்தந்த மாகாண மொழியை ஆட்சி மொழியாகக் கொண்டு மொழிவழி மாகாணம் ஏற்படுத்துவதுதான் ஆபத்தானதாகும். இவ்வாறு செய்வது 'மாகாண, தேசிய இனங்களை (Provincial nationalities) உருவாக்குவதில் போய் முடியும். மாகாண மொழியை ஆட்சிமொழியாகப் பயன்படுத்தும்போது அம்மாகாணக் கலாச்சாரம் மட்டும் தனித்து உயர்த்திப் பிடிக்கப் பட்டு, ஒருமுகப்படுத்தப்பட்டுக் கடுமையானதாகி இறுக்கம் பெற்றுவிடும். அந்நிலையில் இந்தியா ஒரேநாடாக நீடிக்க முடியாமல் உடைந்துபோகும். இந்தியா அய்ரோப்பாவைப்போல் பலநாடுகளைக் கொண்டதாக ஆகிவிடும் என்று அம்பேத்கர் அவ்வறிக்கையில் கூறியிருந்தார்.

1947 ஏப்பிரல் *19*ஆம் நாள் அரசியல் அமைப்புச்சட்ட அவையில் இந்தியாவின் ஆட்சிமொழி பற்றிய விவாதத்தின்போது மற்றவர்களின் கருத்துடன் முரண்பட்டு நின்று, அவருடைய மதிப்புவாய்ந்த கருத்தைக் கூறினார் என்பதை இங்கு மனங்கொள்ள வேண்டும். மய்ய அரசிலும் மாநில அரசுகளிலும் ஒரே மொழியே ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்று மறுக்கவொண்ணா வகையில் அம்பேத்கர் வாதிட்டார். ஆனால் அரசியல் அமைப்புச் சட்ட அவை வேறுவகையில் முடிவெடுத்தது; அம்பேத்கரின் எச்சரிக்கையை அவையானது ஏற்கவில்லை.

மேலும் அம்பேத்கர் மகாராட்டிரம் முழுவதும் ஒரே மாநிலமாக இருக்க வேண்டும் என்று விரும்பினார். இதுபற்றி மொழிவழி மாநில அமைப்புக்குழுவிடம் அளித்த அறிக்கையில் மகாராட்டிரம் ஒரே மாநிலமாக அமைவதால் அது சிறப்புடன் இயங்கக்கூடிய மாநிலமாக இருக்கும் என்பதுடன், நிலப்பரப்பு, மக்கள் தொகை, வருவாய் ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு வலிமையான மாநிலமாகவும் திகழும் என்றும் கூறியிருந்தார். மகாராட்டிரமும் பம்பாயும் ஒன்றையொன்று சார்ந்தவையாக மட்டும் இல்லை; உண்மையில் அவை பிரிக்கமுடியாதவாறு ஒன்றிணைந்துள்ளன. பைபிளில் கூறப்படும் முறையில் சொல்வதானால், பம்பாயும் மகாராட்டிரமும் கடவுளாலேயே பிணைக்கப்பட்டுள்ளன. பம்பாயும் மகாராட்டிரமும் ஒன்றாக இருக்க வேண்டுமா என்பதைத் தீர்மானிக்க இப்பிரச்சினையை நடுவர் தீர்ப்புக்கு விடவேண்டுமென்ற கருத்து, சொர்க்கத்தில் தீர்மானிக்கப்பட்ட திருமண உறவை நடுவர் தீர்ப்புக்கு உட்படுத்துவது போன்றதேயாகும். பம்பாய்

இந்தியா முழுமைக்குமான வணிக நகரமாக இருக்கிறது என்று காரணங்காட்டி பம்பாய் மீதான மகாராட்டிரத்தின் உரிமையை மறுக்கக் கூடாது. ஒவ்வொரு துறைமுகமும் அது அமைந்துள்ள நிலப்பகுதியைத் தாண்டி அதிகமான பரபரப்புடன் வணிகத் தொடர்பு கொண்டுள்ளது. கல்கத்தாவில் வங்காளியர் எண்ணிக்கையில் சிறுபான்மையினராக இருக்கின்றனர்; கல்கத்தாவில் உள்ள தொழிற்சாலைகளும் வணிகமும் அவர்களுக்குச் சொந்தமானவையாக இல்லை என்று காரணத்தைக்கூறி கல்கத்தாவை வங்காள மாநிலத்திலிருந்து தனியாகப் பிரித்து விடமுடியுமா? பீகாரில் உள்ள நிலக்கரிச் சுரங்கங்கள் பீகாருக்குச் சொந்தம் என்று ஆகிவிடுமா? அல்லது நிலக்கரிச் சுரங்கங்களின் உரிமையாளர்களாக இருக்கின்ற குசராத்தியர்களுக்கும் கத்தியவார்காரர்களுக்கும் அல்லது அய்ரோப்பியர்களுக்கும் அவை உரியவை என்று ஆகிவிடுமா? பம்பாயின் வணிகமும் தொழில்களும் அய்ரோப்பியர்களால் மகாராட்டிரர்களின் உழைப்பை முதன்மையாகக் கொண்டே கட்டப்பட்டன. வேறு கெட்ட நோக்கத்தின் தூண்டுதலினால் மராட்டியர்கள் பம்பாய் நகரைக் கோரவில்லை. மராட்டியர்கள் வணிகச்சமூகத்தினர் அல்லர். மற்ற சமூகத்தினரைப்போல மராட்டியருக்குப் பண ஆசை கிடையாது. மராட்டியரின் சிறந்த குணங்களில் இதுவும் ஒன்று என்று எண்ணுபவர்களில் நானும் ஒருவன். பணத்தைக் கடவுளாக மராட்டியர்கள் ஒருபோதும் கருதியதில்லை; அது அவர்களுடைய பண்பாட்டின் ஒரு கூறாக இல்லை. அதனால்தான் மகாராட்டிரத்திற்கு வெளியே இருந்துவந்த மற்ற எல்லாவகுப்பினரும் மகாராட்டிரத்தில் வணிகத்தையும் தொழில்களையும் முழுமையாகக் கைப்பற்றிக்கொள்ள இடந் தந்துவிட்டனர் என்று அம்பேத்கர் அவ்வறிக்கையில் மேலும் கூறியிருந்தார்.

1948 அக்டோபர் மாதத்திலேயே அம்பேத்கர் 'தீண்டப்படாதவர்கள்' (The Untouchables) என்ற பெயரில் அவருடைய சிறந்த நூலை வெளியிட்டார். தீண்டப்படாத வகுப்பினர் (பல இனக்குழுக்களிலிருந்து பிரிந்து) சிதறுண்ட மனிதர்கள் என்பதை ஆழ்ந்த ஆராய்ச்சித்திறனுடன் அழுத்தமாக அந்நூலில் அம்பேத்கர் நிறுவியுள்ளார். இந்த ஏழை மக்கள் மாட்டிறைச்சி உண்பதையும் பௌத்த மதத்தையும் கைவிடாததால் இவர்கள் 'தீண்டப்படாதவர்களாக' நடத்தப்பட்டனர் என்று கூறுகிறார். கி.பி.400 வாக்கில் தான் தீண்டாமை உருவெடுத்தது என்பதற்கான நிகழ்ச்சிப் போக்குகளை இந்நூலில் குறிப்பிட்டுள்ளார். பௌத்தத்திற்கும் பார்ப்பனியத்திற்கும் இடையில் நடந்த மேலாதிக்கப் போராட்டத்தின் விளைவாகத்

தான் தீண்டாமை தோன்றியது என்று அம்பேத்கர் அவருடைய அளப்பரிய அறிவாராய்ச்சி நுட்பத்திறனுடன் இந்நூலில் நிறுவியுள் ளார். பௌத்தத்தின் பெரும் செல்வாக்கு காரணமாக- பார்ப்பனர்கள் இழந்த பெருமையையும் அதிகாரத்தையும் மீண்டும் அடைய வேண்டும் என்ற நோக்குடன் பார்ப்பனர்கள் மாட்டிறைச்சி தின்பதைக் கைவிட்டு, பௌத்த நெறிமுறைகளை மேற்கொண்டொழு கத் தலைப்பட்டனர் என்று அம்பேத்கர் இந்நூலில் விளக்கியுள்ளார். கர்னல் ஆல்காட் 'ஏழைப் பறையன்' (The Poor Pariah) என்ற நூலிலும், பாபு நாகேந்திரநாத் பாசு 'ஒரிசாவில் நவீன பௌத்தமும் அதைப் பின்பற்றுவோரும்' (Modern Buddhism and its Followers in Orissa) என்ற நூலிலும் இந்துமத மறுமலர்ச்சியில் கலந்து கொள்ள மறுத்த பௌத்தர்களே 'தீண்டப்படாதவர்கள்' என்று சில ஆண்டுகளுக்கு முன்பே கூறியிருப்பது இங்குக் குறிப்பிடத்தக்க தாகும்.

அவருடைய மற்ற நூல்களைப் போலவே இந்நூலையும், டாக்டர் ஜான்சனைப் போன்று, அம்பேத்கர் உந்திப்பாயும் செறிந்த மொழிநடையில் -வலிமை மிக்க சிந்தனை வளத்துடன்-ஆற்றல் படைத்த அவருடைய எழுதுகோலைத் திறம்படப் பயன்படுத்தி எழுதியிருந்தார். அம்பேத்கரின் எழுத்துகளில் தனித்தன்மை வாய்ந்த எளிமையும் சொல்ல வேண்டியதை நேர்படக் கூறும் திறமையும் மிளிர்ந்தன. அவருடைய எழுத்துநடை ஈட்டிமுனை போன்று கூரியதாக இருந்தது; அதில் ஆழ்ந்த வாதத்திறனும் நடுநிலை நோக்கும் ஒளிர்ந்தன; அவருடைய எழுத்துநடையில் சொல்வன்மையும், தெளிவும், உணர்ச்சிப்பெருக்கும் பல நேரங் களில் பாய்ந்தோடின. வியத்தகு வாதத்திறமை அதனுள் புதைந்து கிடந்தது. நுட்பமான விளக்கவுரைகளும், சிந்தனையைத்தூண்டும் சொற்றொடர்களும், ஓவியக்காட்சி போன்ற புலப்பாடுகளும் அம்பேத்கரின் எழுத்துகளில் நிரம்பியிருந்தது.

அம்பேத்கரின் அறிவு மிக விரிந்தது; பல்துறை சார்ந்தது; எல்லையற்றது; களஞ்சியம் போன்றது. அவர் கல்வி. அறிவு பிறரை வழி நடத்தியது; அவருடைய சிந்தனைகள் சிந்திக்கத் தூண்டின. சிந்தனையாளர்களுக்காகவும் எழுத்தாளர்களுக்காகவும் அவர் எழுதினார். ஆயினும் அவர் ஒரு கலைஞனைப்போல் சொற்களைப் பயன்படுத்தாமல் ஒரு போர்வீரனைப் போல் சொற்களைக் கையாண்டார். இலக்கியப் புகழுக்காக அவர் நூல்களை எழுதவில்லை; உயர்ந்த குறிக்கோள்களுக்காகவே

எழுதினார். அதனால் சில திறனாய்வாளர்கள் சுட்டிக்காட்டியிருப் பதுபோல், 'ஒரு வரலாற்று ஆசிரியர் என்ற வகையில் திகழும் அம்பேத்கரின் எழுத்துகள் கடுமையானவைகளாக இருக்கின்றன' என்ற குற்றச்சாட்டிற்கு இடந்தருவனவாக உள்ளன. வரலாற்று ஆசிரியர் என்பதைவிட அவர் ஓர் இலட்சியவாதி என்பதே அவருடைய எழுத்துகளில் மேலோங்கி நிற்பதாகும். எதிரிகளின் வாதங்களை முறியடிப்பதுடன் மட்டும் அவர் மனம் நிறைவடை வதில்லை; அவருடைய எதிரி மயங்கிவிழுகின்ற வரையில் கடுமையாகத் தாக்கினார். இவ்வாறு செய்வது அவருக்குத் தவிர்க்கமுடியாததாக இருந்தது. ஏனெனில் அறுவை செய்யும் போது கட்டாயம் இரத்தம் சிந்தியே தீரும். 'தீண்டப்படாதவர் தோற்றம்' பற்றிய அம்பேத்கரின் தோற்றம் புதுமையானதாக இருப்பினும் நம்பும்படியானதாக இருக்கிறது என்று திறனாய்வாளர் கள் கூறினார்கள்.

அரசியல் அமைப்புச்சட்ட வரைவு நகல் ஆறுமாதகாலம் பொதுமக்களின் கருத்தறியும் பொருட்டு முன்வைக்கப்பட்டிருந்தது. இறுதியில் அரசியல் சட்ட அறிமுக நாள் வந்தது. 1948 நவம்பர் 4ஆம் நாள் அரசியல் அமைப்புச் சட்ட அவையில் அரசியல் அமைப்புச்சட்ட நகலை அம்பேத்கர் அறிமுகப்படுத்தினார். அரசி யல் சட்ட நகல் 315 விதிகளையும், 8 அட்டவணைகளையும் கொண்டதாக இருந்தது. ஒப்பற்ற ஆவணம் இந்த அரசியல் சட்ட நகல் என்று கூறிச் செம்மாந்த, தெளிந்த, விரிவான அவருடைய உரையில் அரசியல் சட்டத்தின் அடிப்படையான கூறுகளையும் சிறப்பான தன்மைகளையும் அவையில் விளக்கினார். அரசியல் அமைப்புச்சட்ட அவையில் இருந்த அனைவரும் மெய்மறந்து அம்பேத்கரின் அவ்வுரையைக் கேட்டனர். தவறான புரிதலின் அடிப்படையில் விதிகளைப்பற்றிப் போதிய தன்மையில் அறிந்து கொள்ளாமலும் அரசியல்சட்டம் பற்றிக் கூறப்பட்ட குற்றச்சாட்டு களுக்குத் தக்க பதில் தந்து அவற்றைப் புறந்தள்ளினார்.

அரசியல் அமைப்புச் சட்டப்படி அமையவிருக்கும் அரசின் அமைப்புத் தன்மைபற்றி அம்பேத்கர் முதலில் விளக்கினார். 'அமெரிக்காவின் அரசியல் அமைப்பு குடியரசுத் தலைமை ஆட்சிமுறை என்று அழைக்கப்படுகிறது. அங்குக் குடியரசுத் தலைவர் அரசியலமைப்பு முறையில், அரசின் தலைமை நிர்வாகி யாக, குடியரசுத்தலைவர் இருக்கிறார். ஆனால் இந்திய அரசியல் அமைப்புச் சட்டவிதிகளின்படி, குடியரசுத்தலைவர், பிரிட்டிஷ்

அரசியலமைப்புச் சட்டத்தில் அந்நாட்டு மன்னருக்கு உள்ள அந்தஸ்தில் இருப்பவர். குடியரசுத் தலைவர் இந்திய அரசின் தலைவராக இருப்பார்; ஆனால் நிர்வாகத்தின் தலைவராக இருக்கமாட்டார். அவர் இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்துவார்; ஆனால் இந்திய நாட்டை ஆள்பவராக இருக்கமாட்டார்' என்று அம்பேத்கர் கூறினார்.

அதன்பின், நிர்வாக அமைப்புப்பற்றி விளக்கினார். 'அமெரிக்க நாட்டு அரசின் நிர்வாகம் நாடாளுமன்றத்தைச் சார்ந்து இயங்காததா கும். அதாவது நாடாளுமன்றத்தின் பெரும்பான்மையின் முடிவை எதிர்பார்த்து அங்கு நிர்வாகம் இயங்குவதில்லை. ஆனால் பிரிட்டிஷ் ஆட்சி அமைப்பு நாடாளுமன்ற நிர்வாக முறையைக் கொண்ட தாகும்; அது நாடாளுமன்றத்தின் பெரும்பான்மையை நம்பியிருப்ப தாகும். அமெரிக்காவில் அரசு நிர்வாகம் நாடாளுமன்றத்தைச் சாராததாக இருப்பதால், அமெரிக்க நாடாளுமன்றம் அமெரிக்க நிர்வாக அதிகாரத்தைப் புறக்கணிக்க முடியாது. அதனால் நிர்வாகம் நாடாளுமன்றத்திற்குப் பொறுப்பானதாகச் செயல்படுவது என்பது குறைந்த அளவினதாகவே அங்கு இருக்கும். ஆனால் நாடாளுமன்ற நிர்வாக முறையே அதிக அளவில் பொறுப்பு உள்ளதாக இருக்கும். இந்திய அரசியல் அமைப்புச்சட்ட நகல் இக்காரணங்களால் அதிகப்பொறுப்புள்ள ஆட்சி முறையையே விரும்புகிறது' என்று கூறினார்.

பிறகு, அரசியல் சட்ட நகலின் மற்ற இன்றியமையாத கூறுகளை விளக்கி அம்பேத்கர் உரையாற்றினார். அரசியல் அமைப்புச்சட்ட நகலின்படி மத்திய அரசு-மாநில அரசுகள் என இருவகை அரசமைப்புகள் இருப்பினும் இந்தியா முழுமைக்கும் ஒரே குடியுரிமைதான் உண்டு; இந்தியா முழுமைக்கும் ஒருங்கி ணைக்கப்பட்ட ஒரே நீதித்துறைதான் இருக்கும்; அரசியல் சட்டம், உரிமையியல் சட்டம், குற்றவியல் சட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் ஏற்படும் எல்லா வழக்குகளையும் இந்த நீதித் துறையே விசாரித்துத் தீர்ப்பளிக்கும்; முக்கியமான நிர்வாகப் பதவிகளுக்கு உரியவர்களைத் தெரிவுசெய்யப் பொதுவான அனைத்திந்தியச் சிவில் சர்வீஸ் இருக்கும். ஆனால் அமெரிக்கச் சட்டத்தில் இரட்டைக் குடியுரிமை உள்ளது. ஒன்று அமெரிக்க அய்க்கிய நாட்டுக் குடியுரிமை; மற்றது அந்தந்த மாநிலக் குடியுரிமை. அதேபோன்று, கூட்டாட்சிக்கான நீதித்துறை, மாநில நீதித்துறை என அங்கு உள்ளன; அய்க்கிய சிவில்

சர்வீஸ்-மாநில சிவில் சர்வீஸ் என்றும் தனித்தனியாக உள்ளன. குடியாட்சி அரசு முறைக்குக் குந்தகம் இல்லாத வகையில், அமெரிக்காவில் உள்ள ஒவ்வொரு மாநிலமும் தனக்கெனத் தனியான அரசியல் சட்டத்தை உருவாக்கிக் கொள்ள உரிமை பெற்றிருக்கிறது. ஆனால் இந்திய ஒன்றியத்தினுடைய அரசியல் சட்டமும் மாநிலங்களுடைய அரசியல் சட்டமும் ஒரே ஆவணத்தில் அமையப் பெற்றிருப்பதால் மய்ய அரசோ, மாநில அரசுகளோ இதிலிருந்து விலக முடியாது; இதற்கு உட்பட்டுத்தான் இரண்டு அரசுகளும் இயங்கிட வேண்டும் என்று அம்பேத்கர் விளக்க[illegible] கூறினார். அரசியல் சட்டம் இறுக்கம் வாய்ந்ததாக கூறப்படுகிறது என்று கூறப்படுவதைக் குறிப்பிட்டு, 'சாதாரணக் காலங்களில், மாநில அரசுகளுக்கெனத் தனிப்படவுள்ள அதிகாரங்களைத் தவிர மற்றவற்றிற்கான சட்டத்தை இயற்றும் அதிகாரம் நாடாளுமன்றத் திற்கு வழங்கப்பட்டுள்ளது; மேலும் அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கான வழிமுறைகளும் கூறப்பட்டுள்ளன; இவற்றினால் இந்த இறுக்கம் நெகிழக்கூடியதாக அமைக்கப்பட்டுள்ளது. இது அரசியல் சட்டத்தின் சிறப்பான அம்சமாக இருக்கிறது. ஆகவே இது நெகிழ்ந்து தரவல்ல கூட்டாட்சியே ஆகும் என்று அம்பேத்கர் விளக்கினார்.

இந்த அரசியல் சட்டத்தில் புதுமையானது ஏதுமில்லை என்று கூறப்பட்ட குற்றச்சாட்டுக்கு அம்பேத்கர் பதிலளித்துப் பேசினார். 'உலகில், எழுத்து வடிவில் முதலாவது அரசியல் சட்டம் எழுதப்பட்டு ஒரு நூற்றாண்டிற்கு மேலாகிவிட்டது. எழுத்து வடிவில் அரசியல் சட்டம் இயற்றுவது என்பதைப் பின்பற்றிப் பல நாடுகள் தங்கள் நாடுகளுக்கான அரசியல் சட்டத்தை எழுத்து வடிவில் அமைத்துக் கொண்டன. நாட்டின் அரசியல் சட்டம் எவற்றையெல்லாம் கொண்டிருக்க வேண்டும் என்பது நெடுங்காலத் திற்கு முன்பே தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதைப்போலவே ஒரு நாட்டின் அரசியல் சட்டத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பது உலகம் முழுவதும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த விவரங்களைக் கணக்கில் எடுத்துக் கொண்டு பார்த்தால் எல்லா நாடுகளின் அரசியல் சட்டங்களும் அவற்றின் முக்கியமான அடிப்படை அம்சங்களில் ஒன்று போலவே இருப்பதைக் காணலாம். ஆகவே இன்றைய காலக் கட்டத்தில் உருவாக்கப்படும் அரசியல் சட்டங்களில் புதிய கூறுகள் என்று எவையேனும் இருக்குமானால் அவை ஏற்கெனவே உள்ள சில குறைபாடுகளை நீக்குவதற்காகவும் நாட்டின் தேவைகளை

நிறைவு செய்வதற்காகவும் என்று ஏற்படுத்தப்பட்டவையாக இருக்கும். இந்த அரசியல் சட்டம் 1935 ஆம் ஆண்டின் இந்திய அரசுச் சட்டத்தின் பெரும்பகுதியை எடுத்துக் கொண்டிருக்கிறது. இதற்காக நான் வருத்தம் தெரிவிக்கப் போவதில்லை. இவ்வாறு முன்பே உள்ளதிலிருந்து எடுத்துப் பயன்படுத்திக் கொள்ளுவதற் காக வெட்கப்படத் தேவையில்லை. இதைக் 'கருத்துத் திருட்டு' என்று கூறமுடியாது. ஓர் அரசியல் சட்டத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் தங்களுக்கே தனிக்காப்புரிமை உடையவை என்று எந்த நாடும் கோரமுடியாது என்று அம்பேத்கர் கூறினார்.

அடுத்து, கிராம இராச்சியம் ஏற்படுத்தப்படவேண்டும் என்ற கோரிக்கை பற்றிக் குறிப்பிட்டுப் பேசினார். கிராமம் என்பது உள்ளூர்ப்பிரச்சினைகளில் மட்டுமே ஊறிக் கிடப்பது; அறியாமை யும் குறுகிய நோக்கும் சாதி உணர்ச்சியும் நிறைந்த இருண்ட குகை. இத்தகைய கிராமக் குடியரசுகள்தான் இந்தியாவின் அழிவிற்கே காரணமாகும். ஆகவே அரசியல் அமைப்புச்சட்ட நகல் கிராமத்தை ஓர் அடிப்படை அலகாக ஏற்காமல் புறக்கணித் திருப்பதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன்' என்று கூறினார்.

'இந்த அரசியல் அமைப்புச் சட்டம் திறமையாகச் செயல்படும் தன்மையது, நெகிழ்ந்து தரவல்லது, அமைதிக் காலத்திலும் போர்க்காலத்திலும் இந்த நாட்டின் ஒற்றுமையைக் காத்திடும் வல்லமை வாய்ந்தது என்று நான் கருதுகிறேன். புதிய அரசியல் சட்டத்தின் கீழ்த் தவறுகள் நடக்குமானால் அதற்கான காரணம் நாம் ஒரு மோசமான அரசியல் சட்டத்தைப் பெற்றிருக்கிறோம் என்பதன்று; இதைச் செயற்படுத்தும் மனிதர்கள் செய்யும் தவறே காரணமாகும் என்றே நாம் சொல்லவேண்டும்' எனக்கூறி இந்திய அரசியல் அமைப்புச்சட்ட நகலை அம்பேத்கர் முன்மொழிந்தார்.

IV

அம்பேத்கர் மீது பொழியப்பட்ட மிகச்சிறந்த பாராட்டுரை களால் அரசியல் சட்ட அவையே ஒளிர்ந்தது. அடுத்தடுத்துப் பேசிய ஒவ்வொருவரும் அம்பேத்கரின் தெளிவான, திறன் சான்ற, செஞ்சீரான பேச்சினையும், அரசியல் சட்டத்தை மிக நுட்பமாக ஆய்வுக் கண்ணோட்டத்தில் உரைத்ததையும் பெரிதும் பாராட்டிப் பேசினர். பேராசிரியர் கே.டி.ஷா, பண்டிட் இலட்சுமிகாந்த் மித்ரா, அரசியல் அமைப்புச்சட்ட வரைவுக் குழுவின் உறுப்பினரான டி.டி.கிருஷ்ணமாச்சாரி ஆகியோர் அம்பேத்கரைப் பெரிதும்

பாராட்டினார். டாக்டர் பஞ்சாப்ராவ் தேஷ்முக், அம்பேத்கர் அரசியல் சட்ட உருவாக்கத்தில் ஆற்றியுள்ள அரும்பணிக்காகவும் அதைப் பற்றி மனங் கவ்வும் தன்மையில் அளித்த விளக்கவுரைக்காகவும் தன் மனம் நிறைந்த மகிழ்ச்சியைத் தெரிவிப்பதாகக் கூறினார். அம்பேத்கருக்கு வாய்ப்புத் தரப்பட்டிருந்தால், அவர் வேறு வகையிலான அரசியல் சட்டத்தை உருவாக்கியிருக்கக்கூடும் என்றும் தேஷ்முக் கூறினார்.

காஸி சையத் கம்ருதீன் அம்பேத்கர் அரசியல் சட்டத்தை அறிமுகம் செய்து வைத்ததற்காகப் புகழ்ந்துரைத்தார். மாபெரும் அரசியல் சட்ட வல்லுநர் என்று நம் வழித்தோன்றல்களால் அம்பேத்கர் போற்றப்படுவார் என்பது உறுதி என்றும் அவர் கூறினார்.

பிறகு, அரசியல் அமைப்புச் சட்ட அவையில் அரசியல் சட்ட விதிகள் ஒன்றன்பின் ஒன்றாக விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டன. 'தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது' என்று குறிக்கும் விதி 11, பெருத்த மகிழ்ச்சி ஆரவாரத்திற்கிடையே, 1948 நவம்பர் 29ஆம் நாள் நிறைவேறியது.

1948 டிசம்பர் 18ஆம் நாள் அம்பேத்கர் பம்பாய் திரும்பினார். தீண்டப்படாத சாதிகள் பேரவையின் தொண்டர்களும் தலைவர்களும் கலந்துகொண்ட ஒரு கூட்டத்தில் அங்கு உரையாற்றினார். மன்மத்தில் 1949 சனவரி 15ஆம் நாள் அம்பேத்கருக்கு ஒரு பணமுடிப்பு வழங்கப்பட்டது. அக்கூட்டத்தில் பேசியபோது, விவசாயிகள் தொழிலாளர்களின் ஆட்சியின்கீழ் அவருடைய மக்கள் இந்த நாட்டில் உண்மையான சோசலிசத்தை நிறுவுவார்கள் என்று அறிவித்தார். ஒரு சமூகத்தின் முன்னேற்றம் என்பது அச்சமூகத்தினர் கல்வியில் எந்த அளவிற்கு முன்னேறியிருக்கிறார்கள் என்பதைப் பொறுத்திருக்கிறது என்ற கருத்தை அங்கு வலியுறுத்தினார். அவுரங்காபாத்தில் அவர் தொடங்க எண்ணியிருந்த கல்லூரி தொடர்பான வேலைகளைக் கவனிப்பதற்காக அம்பேத்கர் சில நாட்கள் அய்தராபாத்தில் தங்கியிருந்தார். அவர் அங்குத் தங்கியிருந்த போது அருகிலிருந்த அகழ்வாராய்ச்சி இடங்களைச் சென்று பார்த்தார். அத்துடன் 1949 சனவரி மாத மூன்றாவது வாரத்தில் அவருடைய கட்சிக் கூட்டத்திலும் கலந்து கொண்டார். அதன்பின் புதுதில்லிக்குத் திரும்பினார். 1949 மார்ச்சு மாதத்திலும், மே மாதத்திலும் இருமுறை பம்பாய்க்கு வந்தார். மக்கள் கல்விக் கழகம் தொடர்பான வேலைகளைக் கவனித்தல், மற்றும் தனக்கான

மருத்துவ ஆலோசனை பெறுதல் ஆகியவற்றின் காரணமாகத்தான் அம்பேத்கர் பம்பாய்க்கு அடிக்கடி விமானத்தில் வந்து திரும்பினார்.

மே 26ஆம் நாள் அரசியல் அமைப்புச் சட்ட அவை மீண்டும் தன் பணியைத் தொடங்கியது. சூன் 10ஆம் நாள் கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்பட்டது. சூலை 7ஆம் நாள் அம்பேத்கர் பம்பாய்க்குத் திரும்பினார். அச்சமயம் பம்பாய் நகராட்சித் தொழிலாளர்களின் கம்கார் சங்கம் தொடங்கியிருந்த வேலை நிறுத்தம் நெருக்கடியான கட்டத்தை எட்டியிருந்தது. அச்சங்கத்தின் தலைவர் என்ற முறையில் அம்பேத்கரின் நிலை குழப்பமானதாக இருந்தது. மாண்புமிகு அம்பேத்கர் இப்பிரச்சினையில் தலையிட்டுத் தீர்த்து வைக்க விரும்புவதாகக் கூறியபோது, அவர் மாநகராட்சியின் கம்கார் சங்கத் தலைவர் பதவியைத் துறக்க வேண்டும் அல்லது மத்திய அமைச்சர் பதவியிலிருந்து விலகவேண்டும் என்ற நிபந்தனை அவரிடம் விதிக்கப்பட்டது. அம்பேத்கர் அவருடைய அமைச்சர் பதவியைத் துறக்க வேண்டாம் என்று அவரிடம் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளப்பட்டது. 'அமைச்சர் பதவியில் அவர் இருந்தால் இந்தியாவில் உள்ள தீண்டப்படாத சாதியினர் அனைவர்க்கும் அதிக அளவில் நன்மைகள் செய்ய வாய்ப்பாக இருக்கும்'[109] என அனைத்திந்திய நகராட்சி ஊழியர்களின் பேரவைச் செயலாளர் ஓர் அறிக்கையை வெளியிட்டார்.

தேசிய மொழி குறித்து மிகக் கடுமையான வாக்குவாதம் நடந்தது. இறுதியில் ஒரு வாக்கு வேறுபாட்டின் அடிப்படையில் (காங்கிரசுக் கட்சியில்) தேவநாகரி வரிவடிவம் கொண்ட இந்தி இந்தியாவின் தேசிய மொழியாக இருக்கும் என அறிவிக்கப்பட்டது.

அரசியல் அமைப்புச் சட்ட வரைவுக்குழுவின் தலைவர் என்ற முறையில் அம்பேத்கர் அரசியல்சட்டஅவையில் சட்டத்தில் உள்ள சிக்கலான பல செய்திகளையும் நுட்பமான பகுதிகளையும் விளக்கிப் பேசவேண்டியிருந்தது. மய்ய அரசின் அதிகாரங்களைப் பற்றி விளக்கியபோது, 'மய்ய அரசின் அதிகார வலிமை என்பது அதனால் சுமக்கக்கூடிய அளவிற்கு மட்டுமே இருக்க வேண்டும்; அளவுக்கு அதிகமாக வலிமையுடையதாக ஆக்குவது மடமை யாகும். ஏனெனில் அதன் பளுவையே அது தாங்க முடியாமல் விழுந்து விடும்' என்று எச்சரித்தார்.

அடிப்படை உரிமைகள் குறித்து நாடாளுமன்றத்திற்கும் உச்சநீதி மன்றத்திற்கும் உள்ள அதிகாரங்கள் பற்றி வரையறுத்துக்

கூறும் விதி 32 அரசியல் சட்டத்தின் உயிராகவும் இருதயமாகவும் இருக்கிறது என்று கூறினார்.

இந்திய யூனியனின் குடியரசுத் தலைவரின் அதிகாரங்கள் பற்றி விளக்கினார். 'இந்திய யூனியனின் குடியரசுத் தலைவர் பொதுவாக அமைச்சரவையின் அறிவுரைப்படி நடக்கக் கடமைப் பட்டவராவார். அவர் அமைச்சரவையின் அறிவுரைக்கு முரணாகவோ அல்லது அமைச்சரவையின் ஆலோசனையைப் பெறாமலோ எதையும் செய்ய முடியாது.[110] குடியரசுத்தலைவருக்குத் தன்னிச்சையாகச் செயல்படும் அதிகாரம் இல்லை. ஆனால் அவருக்குச் சில தனிச்சிறப்புரிமைகள் உள்ளன' என்று அம்பேத்கர் கூறினார்.

1949 சூலை 30 முதல் அக்டோபர் 17 வரை உள்ள காலத்தில், இடையில் செப்டம்பரில் பதினைந்து நாட்கள் தவிர மற்றெல்லா நாட்களிலும், அரசியல் அமைப்புச் சட்ட அவையின் கூட்டம் தொடர்ந்து நடந்தது. செப்டம்பர் மாதத்தில் அம்பேத்கர் ஸ்ரீநகரில் சில நாட்கள் ஓய்வெடுத்தபின் 1949 அக்டோபர் 3ஆம் நாள் தில்லிக்குத் திரும்பினார். செப்டம்பர் மாதத்தில் ஆர்.எஸ்.எஸ். இன் தலைவர் எம்.எஸ்.கோல்வால்கர் புதுதில்லியில் அம்பேத்கரைச் சந்தித்தார். அரசியல் அமைப்புச் சட்ட அவையின் இத்தொடர் கூட்டத்தின்போது அரசியல் அமைப்புச் சட்ட நகலின் பேரிலான இரண்டாவது சுற்று விவாதம் நடந்து முடிந்தது. உடல்நலம் குன்றியிருந்தபோதிலும், அம்பேத்கர் கடுமையாக உழைத்தார். ஒவ்வொரு விதியிலும் உள்ள முக்கியச்செய்திகளைத் தெளிவாக விளக்கியும் விவாதங்களுக்கு விடையளித்தும் அவற்றை அவையில் முன்மொழிந்தார்.

1949 நவம்பர் முதல் கிழமையில் மருத்துவ ஆலோசனையைப் பெறவும், மருத்துவம் செய்து கொள்வதற்காகவும் பம்பாய்க்கு வந்தார். நவம்பர் 10ஆம் நாள் புதுதில்லிக்குத் திரும்பினார். நவம்பர் 14ஆம் நாள் முதற்கொண்டு அரசியல் அமைப்புச்சட்ட அவையில் அரசியல் அமைப்புச் சட்டம் குறித்த மூன்றாவது சுற்று வாதம் தொடங்கியது. அன்று, அம்பேத்கர், 'அரசியல் அமைப்புச்சட்ட அவை உருவாக்கியுள்ளபடி அரசியல் அமைப்புச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டும்' என்று கேட்டுக்கொண்டார். இதனையொட்டி அம்பேத்கர் உரை நிகழ்த்துவார் என்று எதிர்பார்த்து அவையின் உறுப்பினர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்; ஆனால் அம்பேத்கரோ மற்ற உறுப்பினர்களை முதலில் பேசுமாறு கேட்டுக்

கொண்டார். முதலில் வி.அய். முனுசாமிப்பிள்ளை பேசினார். அரிசனச் சமூகம் சிறந்த பக்தரான நந்தனாரை, உயர்ந்த வைணவத்துறவியான திருப்பாணாழ்வாரை, சிறந்த தத்துவ மேதை யான திருவள்ளுவரைத் தோற்றுவித்திருக்கிறது; இப்போது அம் பேத்கரை இச்சமூகம் அளித்துள்ளது. தீண்டப்படாத சாதியினரும் உயர்நிலை எய்தி உலகிற்குத் தொண்டாற்ற முடியும் என்பதை அம்பேத்கர் நிரூபித்துள்ளார் என்று முனுசாமிப்பிள்ளை கூறினார். அரசியல் சட்டத்தை உருவாக்கித் தந்தமைக்காகவும், அவையின் உறுப்பினர்கள் அவர்பால் வைத்த நம்பிக்கைக்கு ஏற்ப இப் பணியை முடித்துத் தந்தமைக்காகவும் அவையின் துணைத் தலைவர் அம்பேத்கரைப் பாராட்டினார். பண்டிட் தாகூர்தாஸ் பார்க்காவா, 'இப்போது அம்பேத்கர் காங்கிரசாரின் நெஞ்சங்களில் இடம் பெற்றவராகத் திகழ்வதால், அவர் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து, நாடு முழுமைக்குமான தலைவராக ஆக வேண்டும் என்று அழைப்பு விடுத்தார்.

அரசியல் அமைப்புச்சட்டம் உருவாக்கப்பட்டுள்ள விதம் எல்லா உறுப்பினர்களுக்கும் நிறைவளித்தது என்று கூறிட முடியாது. அவையின் சில உறுப்பினர்களிடமிருந்து மறுப்புரை களும் வெளிப்பட்டன. மாநிலங்களின் நிலையை மாநகராட்சிகளின் நிலைக்கு இறக்கி அதிகாரமற்றவையாக ஆக்கியிருக்கும் இந்த அரசியல் சட்டம் பயனற்றது என்று ஓர் உறுப்பினர் கூறினார். காந்தி கூறிவந்ததுபோன்று அதிகாரத்தைக் கீழ்மட்டம் வரை பரவலாகப் பகிர்ந்தளிக்காமல், அக்கருத்தை அம்பேத்கர் புறக்கணித் துவிட்டார் என்று கூறித் தன் ஆற்றாமையை ஓர் உறுப்பினர் புலப்படுத்தினார். மற்றொரு உறுப்பினர் பசுவைக் கொல்வதைத் தடுப்பதற்கான சட்டம் அரசியல் அமைப்புச்சட்டத்தில் இடம் பெறாமைக்காகத் தன் வருத்தத்தைத் தெரிவித்தார். உலகில் உள்ள அரசியல் அமைப்புச் சட்டங்களின் கலவை இது என்றும், வழக்குரைஞர்கள் அவரவர் விருப்பத்துக்கு ஏற்ப விளக்கம் அளித்திட இது இடந்தருவதாகும் என்றும் சில உறுப்பினர்கள் குறை கூறினார்கள். இது மாபெரும் அரசியல் அமைப்பு ஆவணம் என்பது உண்மைதான்; ஆனால் காந்தியின் சமூக, பொருளாதாரக் கொள்கைகளை நடைமுறைப்படுத்த ஏற்றதன்மையில் இது அமை யவில்லையே என்று மற்றுஞ் சில உறுப்பினர்கள் கூறினர். இதுபோன்ற குறைகள் சொல்லப்படக் கூடும் என்பதை முன் கூட்டியே உணர்ந்திருந்த அம்பேத்கர் இவற்றிற்கான பதில்களை அவருடைய அறிமுக உரையிலேயே கூறிவிட்டார்.

ஓர் உறுப்பினரின் முக்கியமான பேச்சுபற்றி இங்கே குறிப்பிட வேண்டியுள்ளது. அரசியல் சட்ட வரைவுக் குழுவின் உறுப்பின ரான எம்.சாதுல்லா ஓர் உண்மையை வெளிப்படுத்தினார். அரசியல் அமைப்புச் சட்ட வரைவுக்குழு சுதந்திரமாகச் செயலாற்ற முடியாமல் இருந்தது; பல சூழ்நிலைக் காரணங்களால் தன் விருப்பம்போல் செயல்பட இயலாத நிலைக்கு ஆட்பட்டிருந்தது. சனநாயகக் கோட்பாட்டுக்கு எதிரான பலவிதிகளை வரைவுக்குழு இச்சட்டத்தில் சேர்க்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது; இதற்குக் காரணம் இந்நாட்டில் இயங்கும் மேலாதிக்க சக்திகளேயாகும் என்று அவர் கூறினார்.

அரசியல் சட்டத்தை உருவாக்கிய முதன்மைச் சிற்பியான அம்பேத்கர் அரசியல் சட்டம் குறித்து நடந்த மூன்றாவது சுற்று விவாதத்திற்குப் பதிலளித்து *1949* நவம்பர் 25ஆம் நாள் அவையில் பெருத்த கரவொலிக்கிடையே உரையாற்றத் தொடங்கினார். எடுத்த எடுப்பிலேயே, 'தீண்டப்படாத வகுப்பு மக்களின் உரிமைகளைக் காப்பதற்காகவே நான் அரசியல் சட்ட அவையில் நுழைந்தேன்' என்று அம்பேத்கர் கூறினார். 'அரசியல் சட்ட அவை என்னை வரைவுக் குழுவிற்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுத்தபோது நான் வியப்படைந்தேன்; வரைவுக்குழு என்னை அதன் தலைவராகத் தேர்வு செய்தபோது நான் எல்லையற்ற வியப்படைந்தேன். என்பால் இந்த அளவிற்கு நல்லெண்ணமும் நம்பிக்கையும் கொண்டு என்னை இப்பணியை முடிப்பதற்கான பொறுப்பாளராகத் தெரிவு செய்தமைக்காகவும், இதன் மூலம் இந்த நாட்டிற்குத் தொண்டாற்றிட எனக்கு வாய்ப்புத் தந்தமைக்காகவும் அரசியல் அமைப்புச் சட்ட அவைக்கும், வரைவுக் குழுவிற்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சர்.பி.என்.ராவ் அவர்களும் செயலக அலுவலர்களும் அளித்த ஒத்துழைப்பிற்கும், எம்.வி. காமத், டாக்டர் பஞ்சாப்ராவ் தேஷ்முக், சக்சேனா, கே.டி.ஷா, பண்டிட் தாக்கூர்தாஸ், ஆர்.கே.சித்வா, எச்.என்.குன்ஸ்ரு முதலான உறுப்பினர்கள் அவையின் நடவடிக்கைகளில் காட்டிய ஆர்வத்திற்கும் என் இனிய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்' என்று கூறினார்.

அரசியல் சட்டத்தின் சிறப்புகள்பற்றி அம்பேத்கர் கூறியபோது, அரசியல் சட்டம் கொண்டுள்ள கோட்பாடுகள் இன்றைய தலைமுறையினரின் கருத்துகளைப் பிரதிபலிப்பவையாகும். இக் கூற்று மிகைப்படுத்திக் கூறப்படுவதாகக் கருதப்பட்டால், இக்கோட்

பாடுகள் இந்த அவையினுடைய உறுப்பினர்களின் கருத்து எனக் கொள்ளவேண்டும் என்று குறிப்பிட்டார். ஒரு நாட்டின் அரசியல் சட்டம் எவ்வளவுதான் நல்லதாக இருந்தபோதிலும் அதை நடைமுறைப்படுத்துவோர் தீயவர்களாக அமைந்துவிட்டால் அரசியல் சட்டமும் கேடானதாகிவிடும் என்பது உறுதி; அரசியல் சட்டத்தை நடைமுறைப்படுத்துவோர் நல்லவர்களாக இருப்பின் அது நன்மைகள் செய்வதாக அமையும் என்று அம்பேத்கர் கூறினார்.

நாட்டின் எதிர்காலத்தை நோக்கும்போது அவருக்கு ஏற்படும் கவலையைப் பற்றிக் குறிப்பிட்டுப் பேசினார். என்னை மிகவும் கலக்கமடையச் செய்யும் நிலைமை எதுவென்றால் இந்தியா இதற்குமுன் ஒரே ஒருதடவை மட்டும் தன் சுதந்திரத்தை இழக்கவில்லை. இந்திய மக்களே செய்த துரோகத்தாலும் காட்டிக் கொடுக்கும் கயமைத்தனத்தாலும் இந்தியா தன் சுதந்திரத்தைப் பல தடவை இழந்தது. முகமது பின் காசிம் சிந்துவின் மீது படையெடுத்தபோது சிந்துவின் மன்னன் தாகிரின் படைத்தளபதிகள் முகம்மது பின் காசிமின் கையாட்களிடம் கையூட்டு பெற்றுக் கொண்டு அவர்களுடைய அரசருக்காகப் போரிட மறுத்தனர். ஜெயச்சந்திரன் முகம்மது கோரியை இந்தியா மீது படையெடுத்து வந்து பிருதிவிராஜனுக்கு எதிராகப் போரிடுமாறு அழைத்தான்; அவனுடைய உதவியையும் சோலங்கி மன்னர்களின் உதவியையும் அளிப்பதாகக் கோரிக்கு உறுதி கூறினான். சிவாஜி இந்துக்களின் விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருந்தபோது, மற்ற மராட்டியத் தலைவர்களும் இராசபுத்திர அரசர்களும் முகலாயப் பேரரசின் பக்கம் நின்று சிவாஜிக்கு எதிராகப் போரிட்டனர். பிரிட்டிஷார் சீக்கிய அரசர்களுக்கு எதிராகப் போரிட்டபோது, சீக்கியர்களின் தலைமைத் தளபதி செயல்படாமல் வாளாவிருந்தார். சீக்கிய அரசைக் காத்திட அவர் உதவவில்லை. 1857இல் இந்தியாவின் பெரும் பகுதியில் ஆங்கிலேயருக்கு எதிராகச் சுதந்திரப் போராட்டம் நடந்தபோது சீக்கியர்கள் எதும் செய்யாமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர் என்று அம்பேத்கர் தன் மனக்கலக்கத்திற்கான காரணங்களை வரலாற்றுச் சான்றுகளுடன் விளக்கினார். வரலாறு மீண்டும் திரும்புமா? என்று அவையினரை நோக்கி வினவினார்.

சாதிகள், மதங்கள் முதலான பழைய பகைச் சக்திகளுடன் தற்போது வெவ்வேறான மற்றும் எதிரெதிரான கொள்கைகளைக்

கொண்ட கட்சிகள் பல உருவாகியிருப்பது மேலும் கவலை கொள்ளச் செய்கிறது என்றார். ஆகவே நாட்டின் நலனைவிடத் தங்கள் தங்கள் கட்சியின் நலனை இக்கட்சிகள் முன்னிறுத்தாதவாறு இந்திய மக்கள் மனத்திட்பத்துடன் கண்காணிக்க வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் நாட்டின் சுதந்திரம் இரண்டாவது முறையாக இடருக்குள்ளாகிவிடும்; மீண்டும் மீட்கவே முடியாத நிலை ஏற்பட்டுவிடக் கூடும். கடைசிச் சொட்டு இரத்தம் இருக்கும்வரை நம்முடைய சுதந்திரத்தைக் காத்திடுவோம் என்று நாம் உறுதி பூணுவோம் என்று பலத்த கரவொலிக்கிடையே அம்பேத்கர் முழங்கினார்.

அதன்பின் சனநாயகம் நீடித்து இயங்குவதற்கான வழிமுறைகளை அம்பேத்கர் விளக்கினார். முதலாவதாக, நம்முடைய சமூக, பொருளாதார நோக்கங்களை அடைவதற்கு அரசியல் சட்டம் வகுத்தளித்துள்ள வழிமுறைகளையே உறுதியுடன் நாம் பின்பற்ற வேண்டும்; சட்டத்தை மீறுதல், ஒத்துழையாமை, சத்தியாக்கிரகம் போன்ற முறைகளைக் கைவிட வேண்டும். ஏனெனில் இவை சட்டத்திற்குக் கட்டுப்பட மறுக்கும் அராஜகத்தின் தெளிவான வடிவங்களேயாகும் என்று அவர் கூறினார்.

தலைவர் வழிபாடு என்பது மற்றொரு ஆபத்தாகும் என்று அம்பேத்கர் குறிப்பிட்டார். 'சனநாயகத்தைப் பாதுகாக்க விரும்புகின்றவர்களே! உங்களுடைய உரிமைகளை மிக உயர்ந்த மனிதன் என்பவனின் காலடியில் கூடக் கிடத்திவிடாதீர்கள்; அத்தகையவனிடம் அதிகாரங்களை ஒப்படைத்து விடாதீர்கள்; அந்த அதிகாரங்களை அவன் சனநாயக அமைப்பையே குலைக்கப் பயன்படுத்தி விடுவான்' என்று ஜான் ஸ்டூவர்ட் மில் அவர்களின் கூற்றை அம்பேத்கர் மேற்கோளாக எடுத்தியம்பினார். நாட்டில் நிலவுகின்ற பகுத்தறிவுக்கு ஒவ்வாத குருட்டுத்தனமான தலைவர் வழிபாடு பற்றி எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றார். தன் வாழ்நாள் முழுவதும் நாட்டிற்காகத் தொண்டாற்றிய உயர்ந்த மனிதர்களிடம் நன்றியுடன் இருப்பது தவறன்று. ஆனால் நன்றி செலுத்துவதற்கும் ஓர் எல்லை இருக்கிறது. தன்னுடைய மானத்தை இழந்து ஒவ்வொரு மனிதனும் நன்றியுடன் இருக்க இயலாது; எந்தவொரு பெண்ணும் நன்றி செலுத்துவதற்காகத் தன் கற்பை இழக்கமாட்டாள்; தன் உரிமையைப் பறிகொடுத்துவிட்டு எந்தவொரு நாடும் நன்றி செலுத்தாது என்று அய்ரிஷ் விடுதலை வீரர் டேனியல் ஓ கன்னல் மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறார்.

இந்த எச்சரிக்கை மற்ற நாடுகளைவிட இந்தியாவிற்கு இன்னும் அதிக அளவில் தேவைப்படுகிறது. ஏனெனில் இந்திய அரசியலில் பக்தி செலுத்துவது என்பது பெரும் செல்வாக்கைப் பெற்றுள்ளது. உலகிலுள்ள வேறு எந்த நாட்டின் அரசியலிலும் இந்த அளவிற்குப் பக்தி செலுத்துவது இவ்வளவு செல்வாக்கு பெற்றதாக இல்லை. பக்தி ஆன்மாவின் விடுதலைக்கான ஒரு வழியாக இருக்கக்கூடும்; ஆனால் அரசியலில் பக்தியோ அல்லது தலைவர் வழிபாடோ வீழ்ச்சிக்கும் சர்வாதிகாரத்திற்கும் வழிவகுக்கும் என்பது உறுதி என்றார்.

மூன்றாவதாக, இந்திய சனநாயகத்தைக் காப்பதற்காக மக்கள் என்ன செய்ய வேண்டுமென்றால், வெறும் அரசியல் சனநாயகத்துடன் மனநிறைவடைந்துவிடாமல், இந்த அரசியல் சனநாயகத்தைச் சமூக, பொருளாதாரச்சனநாயகமாக உருவாக்க வேண்டும் என்று அம்பேத்கர் கூறினார். சுதந்திரம், சமத்துவம், சகோரத்துவம் ஆகியவற்றைக் குறிக்கோள்களாகக் கொண்ட சமூக சனநாயகத்தை அடித்தளமாகப் பெற்றிராத அரசியல் சனநாயகம் நீடித்து நிற்காது. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய மூன்றும் ஒன்றிலிருந்து மற்றொன்றைப் பிரிக்க முடியாதவையாகும். சமத்துவம் இல்லாத சுதந்திரம் பலபேர்மீது ஒருசிலர் ஆதிக்கம் செலுத்திட வழிசெய்யும்; சுதந்திரம் இல்லாத சமத்துவம் தனி மனிதனின் தன்னெழுச்சியான இயல்புகளைக் குலைவுறச் செய்யும்; சகோதரத்துவம் இல்லாத சுதந்திரமும் சமத்துவமும் இவை இயற்கையாகக் கொண்டிருக்கவேண்டிய தன்மைகளைப் பெற்றிருக்கமாட்டா.சமூகச் சமத்துவம், பொருளாதாரச்சமத்துவம் ஆகிய இரண்டும் இந்தியச் சமூகத்தில் அறவே இல்லை என்ற உண்மையை நாமனைவரும் ஒத்துக்கொள்ள வேண்டும் என்று கூறினார்.

அம்பேத்கர் தொடர்ந்து உரையாற்றுகையில், *1950* சனவரி 26ஆம் நாள் முரண்பாடுகளுடைய ஒரு வாழ்வியல் சூழலில் அடியெடுத்துவைத்திட உள்ளோம். அப்போது அரசியலில் நாம் சமத்துவத்தைப் பெற்றிருப்போம். ஆனால் சமூக மற்றும் பொருளாதார வாழ்விலோ சமத்துவமற்ற நிலையைப் பெற்றிருப்போம். வெகு விரைவில் இந்த முரண்பாட்டை நாம் களைந்திட வேண்டும். அப்படிக் களைந்திடத் தவறுவோமானால், இந்த அரசியல் சட்ட அவை அரும்பாடுபட்டு உருவாக்கியுள்ள அரசியல் சனநாயகக் கட்டமைப்பையே சமத்துவமின்மையால் பாதிப்புக்கு ஆளாகிறவர்கள் அடியோடு தகர்த்து விடுவார்கள் எனச் சூழ்நிலையின் கொடி நிலையை விளக்கி ஓர் எச்சரிக்கை விடுத்தார்.

அவருடைய உரையின் இறுதியில், இந்தியர்கள், நாடு என்ற சொல்-உளமார்ந்த உணர்வு நிலையிலும் சமூக நிலையிலும் எந்த அர்த்தத்தில் சொல்லப்படுகிறதோ அதே தன்மையில் இந்தியர்களாக உண்மையில் இருக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். இதற்காகச் சமூக வாழ்வில் மக்களிடையே பிளவை ஏற்படுத்தி, ஒரு சாதிக்கும் இன்னொரு சாதிக்கும் இடையே பொறாமையையும் வெறுப்பையும் வளர்த்துள்ள சாதிகளைக் கைவிட வேண்டும் என்றார்.

தெளிந்த, எழுச்சிமிக்க, எதிர்காலத்தை உய்த்துணர்ந்து உரைத்த அம்பேத்கரின் அந்த நாற்பது நிமிடப் பேச்சை அவையினர் ஆழ்ந்த அமைதியுடன் கேட்டனர்; இடையிடையே கைத்தட்டல் ஒலி மட்டுமே கேட்டது. இந்தியாவில் நிலவிய அரசியல் நிலைகளை உள்ளது உள்ளபடியே படம் பிடித்துக் காட்டுவதுபோல் அம்பேத்கரின் பேச்சு இருந்தது என்று பின்னர், அவையின் உறுப்பினர்கள் விவரித்தனர். அடுத்த நாள் பொங்கிடும் மகிழ்ச்சியுட னும் பெருமிதத்துடனும் பத்திரிக்கைகள் அம்பேத்கரின் உரையை வெளியிட்டன; அவருடைய அறிவுரைகளையும் எச்சரிக்கைகளை யும் பாராட்டி அவர்மீது புகழ் மழை பொழிந்தன.

1949 நவம்பர் 26ஆம் நாள் இந்திய மக்களின் பெயரால், 395 விதிகளையும், 8 அட்டவணைகளையும் கொண்ட அரசியல் அமைப்புச் சட்டத்தை அரசியல் சட்டஅவை நிறைவேற்றியது. அரசியல் அமைப்புச்சட்ட அவையின் தலைவரான டாக்டர் இராசேந்திரப் பிரசாத், அவருடைய முடிவுரையில், 'இந்த இருக்கையில் அமர்ந்துகொண்டு நாள்தோறும் அவையின் நடவடிக் கைகளைக் கூர்ந்து கவனித்த நான் ஒன்றை நன்கு உணர்ந்தேன். அரசியல் அமைப்புச்சட்ட வரைவுக்குழு உறுப்பினர்களையும், சிறப்பாக நலிவுற்ற உடல் நிலையிலும் ஓய்வறியாது பணியாற்றிய அதன் தலைவரான அம்பேத்கர் அவர்களையும் தவிர வேறு எவராலும் - எந்த அளவிற்கு ஆர்வமுடனும் ஈடுபாட்டுடனும் பணியாற்றியிருப்பினும், இதை எழுதி முடித்திருக்க இயலாது (கைதட்டல்). அம்பேத்கரை வரைவுக்குழுவில் இடம்பெறச் செய்ததுடன் அதன் தலைவராகவும் நாம் அமர்த்தியது போன்ற தொரு சிறந்த முடிவை நாம் இதற்கு முன்பும் எடுத்ததில்லை; இனியும் எடுக்கப்போவதில்லை. அவ்வாறு அவரைத் தேர்ந்தெடுத் தது மிகவும் சரியே என்பதை மட்டுமே அவர் நிரூபித்துக்காட்டிட வில்லை - அதற்கும் மேலாக அவரிடம் ஒப்படைத்த பணியை மிகத்திறம்பட முடித்துள்ளார்' என்று கூறிப் பாராட்டினார்.

அரசியல் அமைப்புச்சட்ட அவை இரண்டு ஆண்டுகள் பதினொரு மாதங்கள் பதினொரு நாட்கள் கடுமையாகப் பணியாற்றியது. அரசியல் சட்ட வரைவு நகலின்பேரில் 7600 திருத்தங்கள் முன்மொழியப்பட்டன. அவற்றுள் 2473 மட்டும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, அவற்றின் மீது முடிவுகள் எடுக்கப் பட்டன.

காந்தியக் கொள்கைச் சார்புடைய ஒரு வார ஏடு, அம்பேத்கரை உபாலியுடன் ஒப்பிட்டது. புத்தர் மகாபரிநிர்வாண நிலையை அடைந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் கூடிய பௌத்தத் துறவியர் மாநாட்டில் பௌத்தத் துறவிகளுக்குப் புத்தரின் கொள்கைகள் அடங்கிய விநயபிடகத்தைத் தொகுத்துரைத்திட உபாலியைத் தெரிவுசெய்ததுபோல், அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கிட அம்பேத்கர் தெரிவு செய்யப்பட்டார் என வியந்து பாராட்டியது.

ஆட்சி செய்யும் முழு ஆதிபத்தியம் மக்களுக்கு வழங்கப்பட்டிருப்பதுதான் இந்திய அரசியல் சட்டத்தின் முதன்மையான கூறாகும்; ஆனால் நாடாளுமன்றம் மக்களின் பிரதிநிதிகளைக் கொண்டதாக இருப்பதால் ஆட்சி செய்யும் முழு ஆதிபத்தியம் அதனிடம் இருக்கிறது. சமூக மற்றும் பொருளாதாரச்சனநாயகமே நம்முடைய குறிக்கோள் என்று அரசின் வழிகாட்டும் கோட்பாடுகளில் குறிக்கப்பட்டுள்ளது. 'நவீன அரசியல் சட்டங்கள் (Modern Constitutions) என்ற நூலில் கே.சி.வீர் (K.G.Wheare) குறிப்பிட்டிருப்பதுபோல் தேவைக்கு ஏற்பத் திருத்தங்களை ஏற்று இயங்கக்கூடிய ஒரு சமநிலையை இந்திய அரசியல் சட்டம் பெற்றுள்ளது.

பௌத்தத்தை நோக்கி...

அரசியல் அமைப்புச்சட்ட அவையில் மாபெரும் வெற்றியை ஈட்டியபின் அம்பேத்கர் 1950 சனவரி 2ஆம் நாள் விமானம் மூலம் பம்பாய் திரும்பினார். விமான நிலையத்தில் அவருடைய முன்னணித் தோழர்களும் நகரின் மற்ற முக்கியத்தலைவர்களும் அம்பேத்கருக்குச் சிறப்பான வரவேற்பளித்தனர்.

அரசியல்சட்ட உருவாக்கத்தில் அவருடைய பணி முடிந்துவிட்டது; ஆயினும் அம்பேத்கர் ஒரு புதிய போர்க்களத்தை இப்போது எதிர்கொண்டார். அதுதான் இந்துச் சட்டத் திருத்த மசோதா தொடர்பானதாகும். இந்துச் சட்டத்தைத் திருத்தியமைத்து, 1948 அக்டோபரில், அரசியல்சட்ட அவையிடம் அளித்திருந்தார். இந்துச் சட்டத்தைத் திருத்துவதற்கான திருத்தத்திற்கு வடிவமைக்கின்ற பணி கடந்த பத்தாண்டுகளாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. இந்துச் சட்டத்திருத்த மசோதாவை உருவாக்குவதற்காக இந்திய அரசு 1941இல் பி.என்.ராவ் (B.N.Rau) தலைமையில் ஒரு குழுவை அமைத்தது. அக்குழு நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து பலதரப்பினரின் கருத்துகளையும் கேட்டறிந்து இந்துச் சட்டத்திருத்த மசோதா ஒன்றை உருவாக்கித் தந்தது. 1946 முதல் மத்தியச் சட்டசபையிலும் மக்கள் மத்தியிலும் இதுபற்றிய விவாதம் நடைபெற்று வந்தது. அம்பேத்கர் இந்த மசோதாவின் வடிவை மாற்றியமைத்தார்; இத்திருத்த மசோதாவில் கூட்டுக்குடும்பம், பெண்களின் சொத்துரிமைபற்றி வடிவமைக்கப்பட்டிருந்த விதிகளைக் கண்டு தேர்வுக்குழுவின் பெரும்பாலான உறுப்பினர்கள் அதிர்ச்சியடைந்தனர்; பழமைவாத மனங்கொண்ட எதிரிகள் பேரதிர்ச்சியடைந்தனர்.

அம்பேத்கர் இந்துச்சட்டத்தில் திருத்தங்கள் செய்து, அதனை முன்வைத்துப் பேசத் தொடங்கியதும் நாடு முழுவதிலுமிருந்த இந்துச் சமய அறிவாளிகள் இரு முகாம்களாகப் பிரிந்தனர். ஒரு பிரிவினர் இத்திருத்தங்களைக் கடுமையாகக் கண்டித்தனர்; மற்றொரு பிரிவினர் இவற்றைப் புகழ்ந்து போற்றினர். பழமைக் கருத்துகளும் புதுமைச்சிந்தனைகளும் நேருக்கு நேர் மோதிக்கொண்டன. புனிதத்தைப் போற்றும் போக்கும் சமூக முன்னேற்ற விழைவும் மோதிக் கொண்டன. மத, சாத்திர அறிவாளிகள்

புரட்சிகரச் சிந்தனையாளர் மீது ஏவிவிடப்பட்டனர். இருதரப்பின ருமே சாத்திரங்களை மேற்கோள் காட்டினர். ஓர் அணியினரால் மனு முன்னிறுத்தப்பட்டார்; மற்றோர் அணியின் தலைவராக அம்பேத்கர் விளங்கினார். இந்துச் சட்டத்திருத்த மசோதாவின் சீர்திருத்தங்களை வெறுத்தவர்கள் பல காரணங்களைக் காட்டி எதிர்த்தனர். முதலாவது பொதுத்தேர்தல் முடிந்தபிறகுதான் இந்துச் சட்டத் திருத்த மசோதாபற்றி முடிவெடுக்க வேண்டும் என்று சிலர் வாதிட்டனர். புதிதாக இந்தியாவுடன் இணைக்கப்பட்ட பகுதியிலுள்ள மக்கள் முன் இது வைக்கப்பட வேண்டும் என்று சிலர் வாதிட்டனர். இந்துச் சமய பழக்க வழக்கங்களையும் மரபுகளையும் முற்றாக ஒழித்துக்கட்டுவதே இத்திருத்தங்களின் நோக்கம் என்று சிலர் குறை கூறினர். அரசியல் சட்டத்தில் உள்ள அடிப்படை உரிமைகளை மற்றும் சிலர் சுட்டிக்காட்டினர்.

பம்பாயில் சித்தார்த்தா கல்லூரியின் நாடாளுமன்றத்தின் இரண் டாவது கூட்டத்தொடரில் 1950 சனவரி 11ஆம்நாள் அம்பேத்கர் பேசியபோது இந்துச்சட்டச் சீர்திருத்தத்திற்கு எதிரானவர்கள் மீது போர் தொடுத்தார். 'இந்துச்சட்ட மசோதாவை முற்போக்கானது என்றோ புரட்சிகரமானது என்றோ கூறுவது தவறாகும். முன்னேற் றத்திற்கான புது வழிகளுக்கு இந்துச் சட்டத் திருத்த மசோதா ஒப்புதல் அளிக்கிறது. ஆனால் அதே நேரத்தில் வைதிகப் பழக்கங்களை அது எதிர்க்கவில்லை. நாடு முழுமைக்கும் நலந்தரும் தன்மையிலான ஓர் உரிமையியல் சட்டத்தை அரசு உருவாக்கிட முயற்சிக்க வேண்டும் என்று இந்தியக் குடியரசின் புதிய அரசியல் அமைப்புச் சட்டம் ஆதரித்து நிற்கிறது. இந்துச்சட்டத்தின் சில பிரிவுகளை வடிவமைப்பதும் மாற்றியமைப்பதும்தான் இந்துச் சட்டத் திருத்த மசோதாவின் நோக்கம். நாட்டின் ஒற்றுமைக் கண்ணோட்டத்தில் இம்மசோதா நன்மை பயப்பதாகும். இந்தியா முழுவதும் இந்துச் சமூக சமய வாழ்வைப் பொறுத்து ஒரே வகையான சட்டங்களே அதிகாரம் வாய்ந்தவையாக இருக்க வேண்டும் என்று கூறி மசோதாவின் முக்கியக் கூறுகளை விளக்கினார். இந்துக்கள் எதிர்க்கக்கூடிய வலிமையற்றவர்கள் என்பதற்காக இந்துச் சட்டத்தைத் திருத்தவில்லை; அது இந்துக்கள் அனைவர்க்கும் பொருந்தக்கூடிய ஒரே தன்மையுடையதாக இருக்க வேண்டும் என்பதே அதன் நோக்கமாகும்' என்று மேலும் தெளிவுபடுத்தினார்.

இந்துச் சட்டத்திருத்த மசோதா, பொதுவானதோர் உரிமை யியல் சட்டத்தை நோக்கி எடுத்து வைக்கப்படும் சரியான

முதலாவது தப்படியாகும். சட்டங்கள் என்பவை எளிதில் புரிந்து கொள்ளக் கூடியவையாகவும் பிரதேசப் பாகுபாடின்றி இந்தியா முழுமைக்கும் பொருந்துவனவாகவும் இருக்க வேண்டும். மேலும் ஓர் இந்து, சமூகத்திலிருந்து எவரையும் தன் வாரிசாக ஆக்கிக் கொள்ள உரிமையிருக்கிறது; தன் மகளுக்குச் சொத்து தர மறுத்து உயில் எழுதி வைக்கவும் இடமிருக்கிறது', என்றும் சுட்டிக் காட்டினார்.

இந்துச் சட்டத்தில் செய்யப்பட்டுள்ள மாற்றங்கள் இந்துச் சமய சாத்திரங்கள், ஸ்மிருதிகள் ஆகியவற்றின் அடிப்படையில்தான் மேற்கொள்ளப்பட்டன என்பதை அம்பேத்கர் விளக்கினார். சொத்துரிமை இந்துச் சட்டத்தின் தாயபாகப் பிரிவுப்படி உருவாக்கப்பட்டது; பித்ரிசவர்ன்யா வழக்கப்படி ஒரு குழந்தை தந்தையின் சாதியையே சார்ந்ததாகிறது. கௌடல்ய அர்த்தசாஸ்திரமும், பராசர ஸ்மிருதியும் மணவிலக்கை ஆதரிக்கின்றன. பிருகஸ்பதி ஸ்மிருதி பெண்ணுக்குச் சொத்துரிமை உண்டு என்று கூறுகிறது என்பவற்றையும் அம்பேத்கர் விளக்கினார்.

பம்பாய் தீண்டப்படாத சாதிகள் பேரவையினர் பம்பாயில் பரேலில் 1950 சனவரி 11ஆம் நாள் மாலை நடத்திய பாராட்டுக் கூட்டத்தில் அம்பேத்கருக்கு இந்திய அரசியல் அமைப்புச்சட்டத்தின் நகல் புத்தகம் ஒன்று வைக்கப்பட்ட தங்கப் பேழையைப் பரிசாக அளித்தனர். 'தீண்டப்படாத வகுப்பு மக்களின் நலன்களைக் காக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காகத் தான் அரசியல் அமைப்புச் சட்ட அவையில் உறுப்பினரானேன்; அரசியல் சட்டத்தை எழுத வேண்டும் என்ற ஆசையினால் அல்ல' என்று அக்கூட்டத்தில் அவர் கூறினார். 'சில சூழ்நிலைகள் காரணமாக, அரசியல் சட்டத்தை எழுதும் பணி என்னிடம் தரப்பட்டது; அரசியல் சட்டத்தை உருவாக்கியவர்களில் நானும் ஒருவன் என்ற வகையில் நான் பெருமைப்படுகிறேன். ஏனெனில் ஒருவருடைய வாழ்நாளில் ஒரே ஒரு தடவை மட்டும் கிடைக்கும் ஒப்பரிய வாய்ப்பாகும் இது' என்று அங்குக் கூறினார்.

'கடந்த இருபது ஆண்டுகளாக நான் ஒரு முஸ்லீம் ஆதரவாளன் என்றும் பிரிட்டிஷ் சார்பாளன் என்றும் முத்திரை குத்தப்பட்டிருக்கிறேன். நான் இந்திய அரசியல் அமைப்புச் சட்ட உருவாக்கத்திற்காக ஆற்றியுள்ள பணி இந்துக்கள் என்னைப் பற்றிப் புரிந்துகொள்ள உதவும் என்று நம்புகிறேன்; மேலும் என்மீது முன்பு சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகள் முற்றிலும்

பொய்யானவை என்பதை அவர்களுக்கு இது உணர்த்தும் என்று எண்ணுகிறேன்' என்று மேலும் கூறினார்.

எதிர்காலம் பற்றிய அவருடைய திடநம்பிக்கைகளால் ஊக்கம் பெற்றிருந்த அம்பேத்கர் குறுகிய கண்ணோட்டத்தைக் கைவிட்டு விட்டு, நாட்டின் ஒட்டுமொத்த நலன், முன்னேற்றம் என்ற தன்மையில் சிந்திக்கவேண்டும் என்று அவருடைய மக்களைக் கேட்டுக் கொண்டார்.[111] நாட்டின் எதிர்காலம் பற்றிய எண்ணம் இதுவரை அவர்களுடைய சிந்தனையில் இடம்பெறவில்லை; ஆனால் இப்போது நாடு முழுமைக்கும் நலந்தரும் விரிந்த பார்வையில் நாம் சிந்திக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது என்று கூறினார். ஆகவே அவருடைய மக்களிடம், 'உங்களுடைய தனித்தன்மையை இனிக் கடைப்பிடிக்காதீர்கள்; இந்தியாவில் உள்ள எல்லா அரசியல் கட்சிகளின் அரவணைப்பையும் பெற முயற்சி செய்யுங்கள்' என்று கேட்டுக் கொண்டார். அவர் மேற்கொண்ட நிலைபாடு அவருடைய செல்வாக்கைச் சாய்த்துவிட்டது என்று எதிரிகளால் கூறப்பட்டதை இம்மாபெரும் பொதுக்கூட்டம் பொய் யாக்கிவிட்டது என்றும் அவருடைய செல்வாக்கு முன்னைவிட இப்போது மேலும் உறுதியுடனும் வலிமையுடனும் இருப்பதையே இக்கூட்டம் காட்டுகிறது என்றும் குறிப்பிட்டார்.

புதுதில்லியில் இருந்த மராட்டிய நிறுவனங்கள் 1950 சனவரி 29ஆம் நாள் அம்பேத்கருக்குப் பாராட்டுவிழா ஒன்றை நடத்தின. அக்கூட்டத்தில் பாராட்டுதல்களுக்குப் பதிலளித்து அம்பேத்கர் பேசியபோது மராட்டியர்கள் மிகுந்த ஈடுபாட்டுடன் செயல்படுபவர் கள்; நாட்டிற்கு அவர்கள் ஆற்றவேண்டிய கடமைகளை அறிந் தொழுகுபவர்கள்; நாட்டிற்காகத் தியாகம் செய்ய எப்போதும் தயாராக இருப்பவர்கள் என்று கூறினார். மத்திய அமைச்சரவையில் மராட்டியர் இருவர் பதவியிலிருப்பதையும், ரிசர்வ் வங்கியின் கவர்னராக ஒரு மராட்டியரே இருப்பதையும் எண்ணிப் பெருமை அடைவதாகச் சொன்னார். அரசியலில், கல்வியில், தியாகத்தில் மராட்டியர்கள் மற்றவர்களைவிட மிகவும் முன்னிலையில் இருக் கிறார்கள் எனப் பெருமிதத்துடன் கூறினார்.

அம்பேத்கர் இப்போது புகழின் உச்சியில் இருந்தார். எனவே 1950 ஏப்பிரல் மாதத்தில் அவருடைய பிறந்தநாள் விழாக்களில் பம்பாய் உயர்நீதி மன்றத்தின் தலைமை நீதிபதியாக இருந்த சாக்ளா போன்ற அறிஞர் பெருமக்கள் கலந்துகொண்டனர். பம்பாய் நய்கானில் நடைபெற்ற அம்பேத்கர் பிறந்தநாள் கூட்டத்தில் நீதிபதி

சாக்ளா கலந்து கொண்டார். பாரத நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் அவனுடைய உரிமைகளை அனுபவிக்கும்போது நன்றியுடன் அம்பேத்கரின் பெயரை நினைப்பான் என்று சாக்ளா கூறினார். 'நான் இந்த விழாவில் கலந்து கொள்வதற்குக் காரணம் அம்பேத்கர் தீண்டப்படாத வகுப்பு மக்களின் தலைவர் என்பதற்காக மட்டு மன்று; அவர் இந்தியா முழுவதற்குமான தலைவர் என்று நான் கருதுவதாலேயேயாகும்' என்று சாக்ளா குறிப்பிட்டார்.[112]

இந்தியாவின் தலைசிறந்த புகழ்பெற்ற நீதிபதியான சாக்ளா அம்பேத்கருடனான தன்னுடைய தொடர்பினைப் பெருமையுடன் நினைவுகூர்ந்து பேசினார். இங்கிலாந்தில் சட்டப்படிப்பை ஒரே நேரத்தில் அவரும் அம்பேத்கரும் படிக்க நேர்ந்தது என்றும், இருவரும் ஒரே சமயத்தில் வழக்கறிஞர் தொழிலைத் தொடங்க நேர்ந்தது என்றும், பம்பாய் சட்டக்கல்லூரியில் இருவரும் எவ்வாறு வகுப்புகளில் பாடங்களைக் கற்பித்தனர் என்பதையும் விளக்கினார். அரசியல் அமைப்புச் சட்டத்தில் தலைசிறந்த வல்லுநர்களில் ஒருவர் என்ற முறையில் அம்பேத்கரின் பெயர் உலகம் முழுவதும் நன்கு பரவியுள்ளது என்றும், அம்பேத்கர் அரசியலிலும் வ்ல்லுநராக விளங்குகிறார் என்றும் மேலும் அவர் கூறினார்.

புதுதில்லியில் நடைபெற்ற அம்பேத்கர் பிறந்தநாள் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினரான கே.அனுமந்தய்யா பேசியபோது வருங்காலத் தலைமுறையினர் அம்பேத்கரை ஒடுக்கப்பட்டோரின் விடுதலை வீரராகவும், அரசியல் சட்ட மேதையாகவும் கொண்டாடு வார்கள்; நாட்டின் தலைமைப் பதவியாக விளங்கும் இந்தியப் பிரதமர் பதவியில் அம்பேத்கர் அமருவதை இந்திய மக்கள் பார்க்கக்கூடிய நாள் விரைவில் வரும் என்று கூறினார். நாடாளுமன்றத்தின் மற்றொரு உறுப்பினரான ஆர்.கே.சித்வா, தீண்டப்படாதவர்களின் அரசியல் உரிமைகளுக்காகக் காந்தி சிலவற் றைச் செய்திருப்பதற்கு உண்மையில் அம்பேத்கரே காரணமாவார் என்று கூறினார். அம்பேத்கர் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலை் வீரர், வருவதை உய்த்துணர்ந்து உரைக்கும் சிறந்த அறிஞர் என்று மேலும் புகழ்ந்துரைத்தார்.

அம்பேத்கர் மீண்டும் சிலை வழிபாட்டு எதிர்ப்புப் பிரச்சாரத் தைத் தொடங்கினார். புதுதில்லியில் நடைபெற்ற புத்தர் பிறந்த நாள் விழாவில் பேசியபோது இந்துமதத்தில் கடவுளின் அவதாரம் என்று சொல்லிக் கொள்பவர்கள் மீது கடுந்தாக்குதல் தொடுத்தார். பௌத்த சமயம் நல்லொழுக்கத்தை அடிப்படையாகக் கொண்டது; பௌத்தம் நன்னெறிகளை அடித்தளமாகக் கொண்டது. புத்தர்

தன்னைக் கடவுளாகக் கருதாமல் ஒரு வழிகாட்டியாகவே வாழ்ந்து காட்டினார். ஆனால் கிருஷ்ணனோ கடவுள்களுக்கெல்லாம் கடவுள் நானே என்றார். ஏசுகிறிஸ்து தன்னைக் கடவுளின் மகன் என்று கூறிக் கொண்டார். கடவுளின் கடைசித்தூதன் என்று முகம்மது பைகாம்பர்(நபி) சொல்லிக் கொண்டார். புத்தர் தவிர மற்ற மதங்களின் நிறுவனர்களெல்லாரும் தங்களை மோட்சத்திற்கு அழைத்துச் செல்லும் தூதுவர்களாகவே கருதினார்கள். புத்தர் மட்டும் தன்னை நன்னெறியைக் காட்டுபவர் என்று கூறிக் கொள்வதுடன் மனநிறைவடைந்தார். நல்லொழுக்க நெறியே புத்தரின் சமயமாகும். பௌத்தத்தில் கடவுள் என்கிற இடத்திற்குப் பதிலாக நல்லொழுக்க நெறியே இடம் பெற்றுள்ளது. தருமம் என்ற சொல்லுக்குப் புத்தர்தான் மிகவும் புரட்சிகரமான பொருளைக் கண்டார். பார்ப்பனர்களுக்குத் தருமம் என்பது வேள்விகள் செய்வதும் கடவுளுக்குப் பலியிடுவதுமே ஆகும். கருமம் என்பதற்குப் பதிலாக நல்லொழுக்க நெறியையே தருமத்தின் சாரமாகப் புத்தர் இடம் பெறச் செய்தார். இந்து சமயத்தின் சமூகக் கோட்பாடு சமத்துவமின்மையைப் போற்றுகிறது. ஆனால் பௌத்தமோ சமத்துவத்தைப் பேணுகிறது. பகவத்கீதை நால் வருணத்தைத் தூக்கிப்பிடிக்கிறது, என அம்பேத்கர் அக்கூட்டத்தில் விளக்கினார்.

மகாபோதி சங்கத்தின் பத்திரிகையின் மே மாத இதழுக்குப் 'புத்தரும் அவருடைய மதத்தின் எதிர்காலமும்' என்று தலைப்பிடப் பட்ட ஒரு கட்டுரையை அம்பேத்கர் எழுதியிருந்தார். அம்பேத்கர் பௌத்தம் பற்றிய அவருடைய கருத்துகளை அக்கட்டுரையில் பின்வருமாறு வடித்துத் தந்திருந்தார்.

1. சமூகம் சட்டத்தின் வழியே இயங்குவதாக அல்லது நல்லொழுக்க நெறியில் நடப்பதாக அமைதல் வேண்டும். இவ்விரண்டில் ஒன்றேனும் இல்லாவிட்டால் சமூகம் உடைந்து துண்டுதுண்டாகச் சிதறிவிடும் என்பது உறுதி.

2. மதம் செம்மையாகச் செயல்பட வேண்டுமானால் அது பகுத்தறிவின் அடிப்படையில் இயங்க வேண்டும். இந்தப் பகுத்தறிவின் மற்றொரு பெயர்தான் விஞ்ஞானம்.

3. ஒரு மதம் நல்லொழுக்கக் கோட்பாடுகளை மட்டும் கொண்டிருந்தால் போதாது; அது சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் முதலான அடிப்படைத் தத்துவங்களை ஏற்றுக் கொண்டதாக இருக்க வேண்டும்.

4. மதம் வறுமையைப் புனிதமானது என்றோ மேன்மை பொருந்தியது என்றோ கருதக் கூடாது.

மேற்குறித்துள்ள விதிகளின்படி பௌத்தமதம் அமைந்துள்ளது. ஆகவே தற்போதுள்ள மதங்களில் இவ்வுலகம் ஏற்றுக்கொள்ளத் தக்க மதமாகப் பௌத்தம் மட்டுமே இருக்கிறது என்று அம்பேத்கர் கருதினார். பௌத்தத்தைப் பரப்புவதற்குப் பௌத்தக் கொள்கை விளக்க நூல் ஒன்று தேவைப்படுகிறது என்று உணர்ந்தார். இன்றுள்ள பௌத்தத் துறவியருள் பெரும்பாலோர் பௌத்தத்தைக் கற்றுணராதவர்களாகவும் தொண்டு மனப்பான்மை இல்லாதவர்களாகவும் இருக்கின்றனர் என்று கூறினார்.

புயலைக் கிளப்பிய இப்பேச்சுக்குப் பின்னர் புதுதில்லியிலிருந்து 1950 மே 5ஆம் நாள், அம்பேத்கர் பம்பாய்க்கு வந்தார். அம்பேத்கரின் மகன் யசுவந்தராவ் அம்பேத்கர் ஆசிரியராக இருந்து நடத்திய 'ஜனதா' வார ஏட்டின் நிருபர் அம்பேத்கரிடம் 'நீங்கள் பௌத்த மதத்தில் சேர்ந்து விட்டீர்களா?' என்று நேரிடையாகக் கேட்டார். பௌத்த மதத்தின் கோட்பாடுகள் பின்பற்றத்தக்கனவாகவும் சமத்துவத்தின் அடிப்படையிலும் இருப்பதால் பௌத்தத்தின்பால் நான் நாட்டம் கொண்டிருப்பது உண்மைதான்; ஆனால் நான் இன்னும் பௌத்த மதத்தில் சேரவில்லை; என் தொண்டர்களையும் அதில் சேருமாறு கூறவில்லை என்று பதிலுரைத்தார்.

அவுரங்காபாத்தில் அவர் தொடங்கவிருந்த கல்லூரி தொடர்பான பணியை முன்னிட்டு, 1950 மே 19ஆம் நாள் அம்பேத்கர் அய்தராபாத்திற்குச் சென்றார். அய்தராபாத்தில் அவர் தங்கியிருந்த போது கொழும்புவில் பௌத்த இளைஞர் சங்கம் ஏற்பாடு செய்துள்ள பௌத்த மாநாட்டிற்குத் தான் அழைக்கப்பட்டிருக்கின்ற செய்தியைத் தெரிவித்தார். அய்தராபாத்தில் போட்கிளப்பில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் உரையாற்றியபோது 'மதச் சார்பின்மை என்பது மதத்தை ஒழிப்பது அன்று' என்று அம்பேத்கர் கூறினார்.

1950 மே 25ஆம் நாள் தன் மனைவியுடனும் தன் கட்சியின் செயலாளர் ராஜ்போஜ்வுடனும் அம்பேத்கர் விமானம் மூலம் கொழும்பு போய்ச் சேர்ந்தார். அங்குப் பத்திரிகையாளர்களிடம் பேசியபோது புத்தமதச் சடங்குகளையும், சம்பிரதாயங்களையும் பார்ப்பதற்காகவும் புத்தச் சமயம் எந்த அளவிற்கு நடப்பில் இருக்கிறது என்பதை அதன்மூலம் கண்டறிவதற்காகவும் கொழும்புவிற்கு வந்திருப்பதாகக் கூறினார்.

கண்டியில் நடைபெற்ற பௌத்த மாநாட்டில் மாநாட்டிற்கு அழைக்கப்பட்ட பிரதிநிதி என்கிறபேரில் பேசிட மறுதலித்து விட்டார். அம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட சில தீர்மானங்கள் ஏற்றுக் கொள்ள முடியாதவை என்றும் கூறினார். மேலும் அந்த பௌத்த மாநாட்டில் அவர்கள் சங்கமாகக் கூடியிருப்பது மட்டும் போதாது என்றும் பௌத்தச் சமயத்தைப் பரப்பிடவும், அதற்காகத் தியாகம் செய்யவும் தயாராக இருக்கிறோம் என்று அறிவிக்க வேண்டும் என்றும் அம்பேத்கர் வலியுறுத்தினார். 'நான் இந்தச் சங்கத்தில் உறுப்பினராகச் சேரவில்லையாயினும் நான் பயணம் மேற்கொண்டு இங்கு வந்திருப்பதற்கு இதனினும் உயரிய குறிக்கோள் ஒன்றிருக்கிறது' என்று அம்பேத்கர் சொன்னார்.

கொழும்புவில் பௌத்த இளைஞர் சங்கத்தின் பிரதிநிதிகள் மாநாட்டில் அம்பேத்கர் 'இந்தியாவில் பௌத்தத்தின் எழுச்சியும், வீழ்ச்சியும்' என்ற தலைப்பில் உரையாற்றினார். இந்தியாவில் பௌத்தம் அழிந்து விட்டது என்று கூறிய எல்லாத் தரப்புக் கருத்துகளையும் அம்பேத்கர் மறுத்தார். பௌத்தம் அதனுடைய பருண்மையான (Material) வடிவில் மதமாக இந்தியாவில் இல்லை என்பது உண்மைதான். ஆனால் அது ஒரு ஆன்மீக சக்தியாக இன்னும் இருந்துகொண்டிருக்கிறது என்று கூறினார். இந்து மதத்தைப் பொறுத்தமட்டில் வேதகால மதம், பிராமணமதம், (இப்போதுள்ள) இந்துமதம் என்ற மூன்று கட்டங்களாக வளர்ந்து வந்துள்ளது என்று கூறினார். பிராமணீயக் காலக்கட்டத்தில்தான் பௌத்தம் தோன்றியது. பிராமணீயம் ஏற்றத்தாழ்வைப் பிரச்சாரம் செய்தது. பௌத்தமோ சமத்துவத்தைப் பிரச்சாரம் செய்தது. ஆதிசங்கரருக்குப் பிறகு இந்தியாவில் பௌத்தம் அழிந்துவிட்டது என்று கூறப்படுவது உண்மையன்று. ஏனெனில் பௌத்தத்தின் வீழ்ச்சி என்பது பல ஆண்டுகளாகவே நடைபெற்று வந்தது. ஆதிசங்கரரும் அவருடைய குருவும் பௌத்தர்களாக இருந்தனர் என்பதே உண்மையாகும் என்று அம்பேத்கர் கூறினார்.

இந்தியாவில் பௌத்தம் தாழ்நிலையுற்று வீழ்ச்சியடைந்ததற்கான காரணங்களை ஆராய்ந்து கொண்டிருக்கிறேன். அதற்கான ஆதாரங்களைத் தேடிக் கொண்டிருக்கிறேன் என்று கூறிய அம்பேத்கர், அவர் கண்டறிந்த சில விவரங்களை எடுத்துரைத்தார். பௌத்தத்திற்கு எதிராகத் தீவிரமாகப் பிரச்சாரம் செய்த வைணவமும், சைவமும் பௌத்த சமயத்தின் சில சடங்குகளையும், நடைமுறைகளையும் ஏற்றுப் பின்பற்றத் தொடங்கின. அல்லாவு

தீன் கில்ஜி படையெடுத்தபோது பீகாரில் ஆயிரக்கணக்கான பௌத்தத் துறவிகள் படுகொலை செய்யப்பட்டனர். அதன் விளைவாக அவர்களில் சிலர் உயிருக்கு அஞ்சி, திபெத், சீனா, நேபாளம் ஆகிய நாடுகளுக்கு ஓடினர். இதற்கிடையில் பௌத்தர் களில் பெரும்பாலோர் இந்து மதத்தில் சேர்ந்து விட்டனர். பௌத்தம் பின்பற்றுவதற்குக் கடுமையானதாக இருந்தது. ஆனால் இந்துமதம் அவ்வாறானதாக இல்லை என்பது மூன்றாவது காரணமாகும். நான்காவது காரணம், இந்தியாவில் நிலவிய அரசியல் சூழ்நிலை பௌத்தத்தின் வளர்ச்சிக்கு ஆக்கந் தருவதாக இல்லாமலி ருந்தது என்று விவரித்தார்.[113]

இந்து சமய அறிஞர்கள், சிந்தனையாளர்கள், சில வெளிநாட்டு வல்லுநர்கள் முதலானோர் பௌத்தத்தின் வீழ்ச்சிக்குப் பல்வேறு காரணங்கள் இருப்பதாகக் கருதினர். பௌத்தம் உலகம் முழுவதும் தழைத்தோங்கிட விழைந்ததால் பல நாடுகளிலும் பரவியது. ஆனால் தனக்கென எந்தவொரு நிலப்பகுதியையும் மய்யமாகக் கொண்டிருக்கவில்லை. எல்லா நாடுகளிலும் அந்தந்த நாட்டுக்குரிய கடவுள்களையும் கடவுளின் அவதாரம் எனப்பட்டவர்களையும் பௌத்தம் புறக்கணித்தது; எல்லாக் கடவுள்களைக் காட்டிலும் புத்தரே தலைசிறந்தவர் என்று போற்றியது. கண்மூடித்தனமான தலைவர் வழிபாட்டை எதிர்த்து புத்தர் புரட்சி செய்தார். ஆனால் புத்தரைப் பின்பற்றியவர்களோ அந்தக் கண்மூடித்தனமான பக்தியை முழுமையாகக் கடைப்பிடிப்பதுபோல் அவருடைய பல், மயிர், சாம்பல் முதலானவற்றை ஊர்வலமாக எடுத்துச்சென்று விழாக் கொண்டாடினார்கள். இந்தியாவில் அது ஒரு சீர்திருத்த இயக்கமாக இருந்த காலம் வரையில் பௌத்தம் காலூன்றி வளர்ந்தது. நாட்டில் பெரும்பான்மையினரின் மதமாக இருந்த வேத மதத்தைப் பௌத்தம் எதிர்க்கத் தொடங்கியதும் பௌத்தம் தான் பெற்றிருந்த ஆதரவை இழந்தது. வைதீக இந்துக்கள் முஸ்லிம்களுடன் தீவிரமாகப் போரிட்டனர். வேறு எந்த நாட்டிற் கும் அவர்கள் ஓடிப்போகவில்லை. பௌத்தர்கள் தமக்கென்று சொந்தமாக எந்தவொரு இடத்தையும் மய்யமாகப் பெற்றிராத காரணத்தால் பல நாடுகளுக்கு ஓடினர். இந்துக்கள் அல்லாதவர்கள் இந்தியா மீது படையெடுத்ததை இரு கை நீட்டி வரவேற்றனர் என்றும் கூறப்படுகிறது. மேலும் கடவுள் இல்லை என்ற அதனுடைய தத்துவம், பகைவர்க்கும் அருள வேண்டும் என்பதை அதிகமாக வற்புறுத்தியமை, துன்பம் நோற்றல், உலக நடப்புகள் பற்றிக் கவலைப்படாமை, குடும்பத்தைத் துறத்தல் போன்றவை

பௌத்தத்தை வளர்ப்பதற்கு மாறாக அதன் வளர்ச்சிக்குத் தடைகளாக இருந்தன.

தீண்டப்படாத வகுப்பு இந்துக்கள் பௌத்த மதத்திற்குச் சென்றால் இந்தியாவுக்கு வெளியே உள்ள பௌத்தர்கள் இவர்களுடைய நல்வாழ்விற்காகத் தங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்துவார்கள் என்று தீண்டப்படாத வகுப்பினர் கருதினால் இதைவிட ஒரு பெருந்தவறு அல்லது தப்புக்கணக்கு வேறொன்றும் இருக்க முடியாது என்று இந்துத் தலைவர்கள் எச்சரித்தனர். இந்தியாவுக்கு வெளியே உள்ள நாடுகளில் பௌத்தத்தைப் பரப்புவதில் ஆர்வம் காட்டப்பட்டதால் பௌத்தம் இந்தியாவில் தன் செல்வாக்கையும் ஆதரவையும் இழந்தது.

கொழும்புவில் டவுன்ஹாலில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் அம்பேத்கர் பேசினார். அங்கிருந்த தீண்டப்படாத வகுப்பு மக்களை நோக்கி பௌத்த மதத்தில் சேருமாறு வேண்டுகோள் விடுத்தார். அவர்களுக்கெனத் தனியான அமைப்பு எதுவும் வைத்துக்கொள்ளத் தேவையில்லை என்றார். இலங்கையில் இருந்த தீண்டப்படாத வகுப்பு மக்களை ஏற்றுக்கொண்டு பெற்றோர்களைப் போன்று அவர்களின் நலன்களைப் பேணுமாறு இலங்கையில் இருந்த பௌத்தர்களை அவர் கேட்டுக் கொண்டார். இலங்கை மாநாடு முடிந்த பின்னர் அம்பேத்கர் இந்தியாவிற்குத் திரும்பியபோது திருவனந்தபுரத்திற்கும் சென்னைக்கும் சென்றார். திருவனந்தபுரத்தில்* சட்டசபைக் கட்டடத்தில் அவர் பேசியபோது, அரசியல் அமைப்புச் சட்டத்தைவிட அரசியல் சட்ட நெறிமுறைகளைப் பிறழாமல் பின்பற்றுவதே இன்றியமையாததாகும் என்றார். இந்தியாவில் சனநாயகம் வெற்றி பெற வேண்டுமானால் இந்திய மக்களும் அரசும் சில ஒழுக்க நெறிகளையும் மரபுகளையும் கடைப்பிடிக்க வேண்டும் என்று மேலும் கூறினார். நடுநிலையான நிர்வாகம் நடத்தப்பட வேண்டும் என்பது பற்றியும் விளக்கினார். இதற்கு பிரிட்டனை எடுத்துக்காட்டாகக் கூறி அத்துடன் இந்தியாவில் ஆளுங்கட்சியானது ஒரு சார்பாக நடந்து கொண்டதற்குப் பல நிகழ்ச்சிகளையும் எடுத்துக் காட்டினார்.

அம்பேத்கர் அதன்பின் திருவனந்தபுரம் அரசு விருந்தினர் மாளிகையில் கேரள முதலமைச்சர், அட்வகேட் ஜெனரல், தலைசிறந்த வழக்கறிஞர்கள், ஓய்வுபெற்ற நீதிபதிகள் ஆகியோருடன் இந்துச்சட்ட மசோதாவின் பொதுவான கோட்பாடுகள் குறித்துக் கலந்துரையாடினார். திருவனந்தபுரத்தில் தங்கியிருந்த

போது நகரிலிருந்த சில கோயில்களுக்கு அம்பேத்கரை அழைத்துச் சென்றனர். அங்குக் கோயில்களையும் பார்ப்பனப் புரோகிதர்களை யும் கூர்ந்து கவனித்த பின்னர் அம்பேத்கர் 'எவ்வளவு பெரிய செல்வமும் உணவும் இவற்றால் வீணாகின்றன?' என வியப்பு மேலிடக் குறிப்பிட்டார்.

பம்பாய்க்குத் திரும்பியபின் அம்பேத்கர் ராயல் ஆசிய சங்கத்தின் பம்பாய்க்கிளை சூலை 25ஆம் நாள் நடத்திய கூட்டத்தில் உரையாற்றினார். பௌத்த மதத்தைப் பற்றிய அவருடைய கருத்துகளைச் சமயத்திற்கேற்ப அவர் மாற்றிக் கொள்கிறார் என்று அவர்மீது கூறப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு அக்கூட்டத்தில் பதிலளித்தார். அவர் சிறுவனாக இருந்தது முதலே பௌத்தத்தில் ஆர்வங் கொண்டிருந்ததாகக் கூறினார். அதே கூட்டத்தில் பேசிய டாக்டர் வி. எம். கைக்கினி தற்கால இந்துமதம் என்பது மகாயான புத்தமதத்தின் ஒரு பிரிவே தவிர வேறொன்று மில்லை; இத்துடன் சில நம்பிக்கைகளும் சடங்குகளும், சாதிமுறை யும் சேர்க்கப்பட்டு விட்டன என்று கூறினார். இக்கூட்டத்திற்குப் பேராசிரியர் என். கே. பகவத் தலைமை தாங்கினார்.

புதுதில்லியில் அவருடைய தலைமையகத்திற்கு அம்பேத்கர் திரும்பினார். ஆகஸ்ட்டு மாத நடுவிலும் செப்டம்பரிலும் அவருடைய கண்ணுக்கு மருத்துவம் செய்து கொள்வதற்காக அம்பேத்கர் பம்பாய்க்குச் சென்று வந்தார். செப்டம்பர் மாதம் பம்பாய்க்குச் சென்றிருந்தபோது ஓர்லியில் புத்தர் கோயிலில் செப்டம்பர் 29ஆம் நாள் ஓர் உரை நிகழ்த்தினார். தீண்டப்படாத வகுப்பினர் அவர்களுடைய துன்பங்களுக்கு ஒரு முடிவு கட்டுவதற் காகப் பௌத்தத்தைத் தழுவ வேண்டும் என்று அக்கூட்டத்தில் கூறினார். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் இருந்ததுபோலவே இந்து மதம் இன்றும் இருக்கிறது என்றார். இத்தகைய இந்து மதமே பௌத்த மதமாகும். ஆனால் முகமதியரின் படையெடுப்பினாலும் மற்ற பிற காரணங்களாலும் இந்துமதம் தன் தூய்மையை இழந்தது; அதில் பல மாசுகள் கலந்தன என்று கூறினார். இனி எஞ்சியுள்ள தன்னுடைய வாழ்நாளை இந்தியாவில் பௌத்தத்தின் மறுமலர்ச்சிக் கும் பரவலுக்கும் செலவிடப் போவதாக அறிவித்தார்.

அரசியலைக் கைவிட்டுவிட்டுச்சமயப்பணிக்குச் செல்ல இருப்ப தாக இவ்வாறு அம்பேத்கர் அறிவித்தது குறித்துப் பம்பாய் 'டைம்ஸ் ஆப் இந்தியா' ஏடு தன் வருத்தத்தைத் தெரிவித்து எழுதியது. கற்றறிந்த அறிஞரும், அஞ்சாத்தக்க போர்வீரருமான

அம்பேத்கரின் சமூகப் பொருளாதாரக் கருத்துகளை அறிந்தவர்கள் அவர் அரசியலில் தலைமை ஏற்று முற்போக்கான ஒரு கட்சியை அமைப்பதில் முன்னணியில் நிற்பார் என்பது பற்றித் தெளிவாகவே அறிந்துள்ளனர் என்று எழுதியது. ஆனால் அம்பேத்கரின் தற்போதைய அறிவிப்பு அரசியல் மீது அவருக்கு ஏற்பட்டுவிட்ட வெறுப்பினால் விளைந்தது ஆகும் என்று காரணங்காட்டியது. 'சங்கர்ஸ் வீக்கிலி' என்ற வார ஏடு தனக்கேயுரிய நையாண்டிப் பாணியில், அம்பேத்கரும் ஒரு இந்தியராகவே இருக்கிறார்; ஏனெனில் பதவி, அதிகாரம் என்பனவற்றைக் காட்டிலும் துறவுதான் அவரை மிகவும் ஈர்த்து நிற்கிறது என்று எழுதியது. ஹால்டஸ் ஹக்சிலி, அரவிந்தர் ஆகியோரின் வரிசையில் அம்பேத்கரைச் சேர்த்துவிட்டு அவரைப் 'பிக்கு பீமராவ்' என்று அழைக்க வேண்டும் என்று ஆழ்ந்த வருத்தத்துடன் அவ்வார ஏடு எழுதியது.

அம்பேத்கர் தில்லிக்குத் திரும்பிச் சென்றார். அவருடைய அளப்பரிய ஆற்றல் முழுவதையும் அச்சமயம் வடிவமைக்கப் பட்டுக்கொண்டிருந்த இந்துச் சட்ட மசோதாவை உருவாக்குவதில் செலுத்தினார். தற்கால நிலைமைகளுக்கும் காலத்துக்கும் ஏற்ப இந்துச் சமூகத்தின் அடித்தளக் கட்டமைப்பை மேலும் தாராளமாக உரிமைகளைத் தரும் தன்மையுடையதாகச் சட்டத்தின் மூலம் மாற்றியமைப்பதற்கான கிடைத்தற்கரிய பொன்னானதொரு வாய்ப்பு அவர்முன் இருந்தது. இந்துச் சமூகத்தின் அடித்தளத்தை எவ்வாறு மாற்றியமைப்பது என்ற சிந்தனையைத் தூண்டும் ஒரே நோக்கத்துடன் தீண்டப்படாத வகுப்பான மகார் சாதியில் பிறந்த அம்பேத்கர் சில மாதங்கள் மூழ்கியிருந்தார். இந்த மசோதாவைத் தயாரிப்பதற்காக அம்பேத்கர் இந்துமதச்சாத்திரங்களை விரிவாகப் படித்தார்; பல பண்டிதர்களுடனும் சட்ட வல்லுநர்களுடனும் கலந்துரையாடினார். அவருடைய அறை முழுவதும் அவர் திரட்டிய பல ஆதாரங்களும், புத்தகங்களும், கைப்பிரதிப்படிகளும் நிரம்பி யிருந்தன. அவருடைய உடல்நலக் குறைவையும், பார்வை பழுதுபடுவதையும் பொருட்படுத்தாமல் அவர் இடையறாது வருந்தி உழைத்தார். அவருடைய மருத்துவர்கள் அவர் படிக்கவோ எழுதவோ கூடாது என்று தடை விதித்திருந்ததையும் மீறி இப்பணியை மேற்கொண்டார்.

மருத்துவம் செய்துகொள்வதற்காக அக்டோபர் மாத இறுதியில் பம்பாய்க்குச் சென்றார்; நவம்பரில் தில்லிக்குத் திரும்பினார். நாட்டின் பல இந்துமத அமைப்புகளிடமிருந்து பெறப்பட்ட

கருத்துகளின் அடிப்படையில் சட்ட அமைச்சகம் இந்துச் சட்ட மசோதாவில் திருத்தியமைக்கப்படவிருக்கும் மாற்றங்களின் தன்மை, நோக்கம் ஆகியவை அடங்கிய 39 பக்கச் சிறுநூல் ஒன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவர்க்கும் அனுப்பப் பட்டது. இந்துச்சட்ட மசோதா நாடாளுமன்றத்தில் விரைவில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று அப்போது எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் 1950 டிசம்பர் வரையிலும் கூட அது விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. 1950 டிசம்பர் மாதம் சட்ட அமைச்சரான அம்பேத்கர் நாடாளுமன்றத்தில், '1950ஆம் ஆண்டைய மக்கள் பிரதிநிதித்துவ மசோதா' (எண் இரண்டு)வைக் கொண்டு வந்தார். நாடாளுமன்றத்திலும், மாகாண சட்டசபைகளிலும் உறுப்பினராவதற்கான தகுதிகள், தகுதியின்மை கள், தேர்தல்களை நடத்துவது பற்றிய விதிகள் மற்றும் இவை தொடர்பான பிற விதிகள் இம்மசோதாவில் அடங்கியிருந்தன.

டிசம்பர் 22ஆம் நாள் நாடாளுமன்றக் கூட்டத்தொடர் 1951 பிப்ரவரி 5ஆம் நாள் வரை தள்ளி வைக்கப்படுவதாக அறிவிக்கப் பட்டது. எனவே அம்பேத்கர் பம்பாய்க்குத் திரும்பினார். அந்நாட்களில் அம்பேத்கரின் பம்பாய் வருகை என்பது மக்கள் கல்விக் கழக வேலையாகவோ அல்லது மருத்துவம் செய்து கொள்வதற்காகவோ என்றிருந்தது. சனவரி 14ஆம் நாள் பம்பாயில் ஒர்லியில் புத்தவிகார் முன்னர் உரையாற்றினார். இந்தியாவில் பௌத்தம் 1200 ஆண்டுகள் தழைத்தோங்கியிருந்தது எனக் குறிப்பிட்டார். அந்த வாரத்தில் பம்பாய் துறைமுகத் தொழிலாளர் கள் அம்பேத்கருக்குப் பணமுடிப்பு வழங்குவதற்காக ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தனர். ஆனால் காலில் கடும் வலி ஏற்பட்ட காரணத்தால் அம்பேத்கர் அந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ளவில்லை. அவருடைய சார்பில் ஆர்.ஆர். போலே விழா வில் பங்கேற்றுப் பணமுடிப்பைப் பெற்றுக் கொண்டார்.

அமைச்சர் பதவியைத் துறந்தார்

இந்துச் சட்ட மசோதா தொடர்பான விவாதப் போர் தொடங்கியது. அம்மசோதாவை எதிர்த்தவர்கள் அனைவரும் ஓரணியில் திரண்டனர். அம்மசோதா மிகப் பரவலான - கடுமையான விவாதத்தைக் கிளப்பியிருந்தது. சமூகப் பிற்போக்காளர்கள் மதத்தின் பெயரால் பெருங்கூப்பாடு போட்டனர். காங்கிரசின் அரசியல் எதிரிகள் இம்மசோதாவிற்கு மக்களின் ஒப்புதல் பெறப்படவில்லை; ஆகவே இதை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற முயலுவது முறையற்றதாகும் என்று முழங்கினார்கள். அம் மசோதாவைக் கொண்டுவருவதற்கு அது ஏற்ற நேரமன்று என்று கூறிச் சிலர் எதிர்த்தனர். அந்த மசோதாவை அதே வடிவில் நிறைவேற்றினால் இந்துச் சமூகம் சிதறுண்டு போகும் என்று மற்றுஞ் சிலர் ஆருடம் கூறினர். காங்கிரசின் அரசியல் எதிரிகள், 1945ஆம் ஆண்டைய காங்கிரசுக் கட்சியில் தேர்தல் அறிக்கையில் இந்துச் சட்ட மசோதா பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை; மாகாணச்சட்டசபைகளில் மறைமுகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த நாடாளுமன்றத்திற்கு மக்களின் முக்கியப் பிரச்சினைகள் குறித்து முடிவு எடுக்க அதிகாரமில்லை; தன்னை ஓர் இடைக்கால அரசு என்று சொல்லிக் கொள்ளும் இந்த அரசு இதைச் செய்யக் கூடாது என்று கூறி வாதிட்டனர். மதச்சார்பின்மை என்பதற்குத் தன்னுடைய சமூக அமைப்பைக் குலைக்கின்றவற்றில் கூட இந்துச் சமூகத்திற்குக் கருத்துகளைக் கூறிட உரிமை இல்லை என்பது பொருளாகாது என்று கூறி வாதிட்டார்.

இந்துச் சட்ட மசோதாவை முன்வைத்து காங்கிரசுக் கட்சியிலும் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டன. பிரதமர் நேரு, அமெரிக்காவிலிருந்து திரும்பியதும், இந்துச் சட்ட மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேறாது போனால் அவருடைய அரசு ராஜிநாமா செய்யும் என்று அறிவித்தார்; அதன் தீவிர ஆதரவாளராகத் திகழ்ந்தார். காங்கிரசுக் கட்சியில் மற்றொரு தலைவரான சர்தார் பட்டேல் அம்மசோதாவை முற்றிலுமாக எதிர்த்தார்; அம்மசோதா நாடாளுமன்றத்தின் ஆய்வுக்கே எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது என்று அறிவித்தார். அதுவரையில் நேரு அம்மசோதாவின் முழு ஆதரவாளராக இருந்தார். சர்தார் பட்டேலும், டாக்டர் இராசேந்திர பிரசாத்தும் அதை எதிர்த்தனர். இந்து மகாசபையின் தலைவர் வீர சாவர்க்கர்

அம்மசோதா உண்மையிலேயே நாட்டிற்கு நலம் சேர்க்குமாயின் அதைக் காங்கிரசின் தலைவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்; அதே சமயத்தில் தேர்தல் நோக்கத்திற்காக அவர்கள் அதை ஏற்பது என்பதோ கைவிடுவது என்பதோ இருக்கக் கூடாது என்றார்.

அத்தகைய சூழ்நிலையில் 1951 பிப்ரவரி 5ஆம் நாள் அம்பேத்கர் அம்மசோதாவை நாடாளுமன்றத்தில் முன்மொழிந்தார். பண்டிட் தாக்கூர்தாஸ் பார்க்கவா அம்மசோதாவிலிருந்து பஞ்சாபிற்கு விலக்கு அளிக்க வேண்டும் என்று கூறினார். சீக்கியரின் பிரதிநிதியான சர்தார் ஹுக்கம் சிங், சீக்கியச் சமூகத்தை இந்து மதத்திற்குள் இணைப்பதற்கான ஒரு மறைமுகமான முயற்சியே அம்மசோதா என்று குறை கூறினார். இதற்கான ஒப்புதலை மக்களிடம் இந்த அவையின் உறுப்பினர்கள் பெற்றிருக்கவில்லை என்று மற்றொரு உறுப்பினர் சொன்னார்.

இவ்வாறு எழுப்பப்பட்ட தடைகளுக்கு விடையளித்து அம்பேத்கர் பேசினார். அம்மசோதா நிறைவேற்றப்படுவதால் இந்துச் சட்டம் இந்தியா முழுமைக்கும் ஒரே சீரானதாக இருக்கும் என்றார். சீக்கியரின் எதிர்ப்பைக் குறிப்பிட்டு அவர் பதில் கூறியபோது, 'இந்துச் சட்டத்தைச் சீக்கியர், பௌத்தர், சமணர் முதலானோர்க்கும் அமல்படுத்துவது என்பது வரலாற்றுப் போக்கில் நிகழ்ந்துவிட்ட ஒன்றாகும். சமூகக் கண்ணோட்டத்தில் இப்போது இதை எதிர்ப்பது என்பது மிகவும் காலங்கடந்துவிட்ட ஒன்றாகும். வேதகாலப் பிராமணர்களோடு புத்தர் முரண்பட்டு நின்றபோது பிராமணியக் கோட்பாடுகள் பற்றி மட்டுமே அவர் மாறுபட்ட கருத்தினைக் கொண்டிருந்தார்; இந்து மதச் சட்டக் கட்டமைப்பைப் பற்றி அவர் ஏதும் கூறவில்லை. புத்தர் அவருடைய தொண்டர் களுக்குத் தனியானதோர் சட்டத்தை உருவாக்கித் தரவில்லை. மகாவீரரும் சீக்கியக் குருமார்கள் பதின்மரும் புத்தரின் இத்தகைய நிலைபாட்டையே கொண்டிருந்தனர். 1830 களிலேயே பிரிட்டனின் பிரிவி கவுன்சில் சீக்கியர்கள் இந்துச் சட்டத்தின்படி ஆளப்படுவர் என்று வரையறுத்துள்ளது'[114] என்று விளக்கினார். உரிமையியல் சட்டம் வேண்டும் என்று கேட்டவர்களுக்கு அம்பேத்கர் பதிலளித்தார். இந்துச் சட்ட மசோதாவை எதிர்க்கின்றவர்கள் ஒரே நாளில் உரிமையியல் சட்டத்தின் தீவிர ஆதரவாளர்களாக மாறிவிட்டது எனக்கு வியப்பளிக்கிறது என்றார். இந்த நாட்டிற்கு நல்லதோர் சட்டம் தேவை என்பதில் அவர்கள் காட்டுகின்ற ஆழ்ந்த ஈடுபாடும், கொண்டிருக்கும் பற்றுறுதியும் அய்யுறத்தக்கனவாக உள்ளன

என்று கூறினார். மதச் சார்பின்மையைப் பற்றிக் குறிப்பிட்டுப் பேசிய அம்பேத்கர் மதச்சார்பற்ற அரசு என்று அரசியல் சட்டத்தில் எழுதப்பட்டுள்ளதன் நோக்கம் மதத்தை ஒழிப்பது அன்று; எந்தவொரு குறிப்பிட்ட மதத்தையும் மக்கள் மீது அரசு திணிக்கக்கூடாது என்பதே இதன் பொருளாகும் என்று கூறினார். இந்துச் சட்ட மசோதா மீது மக்களின் கருத்துக் கணிப்பு நடத்த வேண்டும் என்ற கோரிக்கைப் பற்றிப் பேசிய அம்பேத்கர் நாடாளுமன்றம் முழுஆதிபத்திய அரசியலதிகாரம் வாய்ந்ததாக இருப்பதால் இதற்குச் சட்டங்களை இயற்றவும் நீக்கவும் உரிமை உண்டு என்பதால் கருத்துக் கணிப்பு தேவையில்லை என்று கூறினார்.

இந்துச் சட்ட மசோதா மீது தொடர்ந்து மூன்று நாட்கள் விவாதம் நடந்தது. 1951 செப்டம்பரில் நாடாளுமன்றம் மீண்டும் கூடும்போது இம்மசோதாவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதென அறிவித்துத் தள்ளிப்போடப்பட்டது.

அதேசமயத்தில் அம்பேத்கர் கல்கத்தாவிலிருந்து வெளிவந்த 'மகாபோதி' மாத இதழில் 'இந்துப் பெண்களின் எழுச்சியும் வீழ்ச்சியும்' என்ற தலைப்பில் விரிவான கட்டுரை ஒன்றை எழுதினார். 'ஈவ்ஸ் வீக்கிலி' என்ற ஏட்டில் இந்தியாவில் பெண்களின் வீழ்ச்சிக்குப் புத்தரே காரணம் என்று குற்றஞ்சாட்டி எழுதப்பட்ட ஒரு கட்டுரைக்குப் பதிலளித்து அம்பேத்கர் இக்கட்டுரையை எழுதினார். இக்கட்டுரையில் அம்பேத்கர் கடுமையாகத் தாக்கியிருந்தார். புத்தர்மீது ஒருதடவை சொன்னதையே அடிக்கடி சொல்லுகிற இழிந்த குற்றச்சாட்டாகும் இது என்று அம்பேத்கர் கூறினார்.

ஈவ்ஸ் வீக்கிலியின் கட்டுரையாளர் தன்னுடைய முடிவுகளுக்கு ஆதாரமாக எடுத்துக் காட்டியுள்ள பகுதி பார்ப்பனப் புத்தப் பிக்குகளின் பிற்கால இடைச்செருகலேயாகும்; புத்தர் பெண்களை வெறுத்தொதுக்கவில்லை அல்லது ஏளனமாக இகழவும் இல்லை. புத்தருக்கு முன் ஒவ்வொரு மனிதனுக்கும் பிறப்புரிமையான கல்வியைப் பெறவும் ஆன்மிகச் சிறப்புத் தகுதி அடையவும் பெண்களுக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. பெண்களுக்கு இழைக்கப்பட்ட பெருங்கொடுமையாகும் இது. பெண்களும் துறவு வாழ்க்கையை (Parivrajaka) மேற்கொள்ளலாம் என்று ஆக்கியதன் மூலம் பெண்களுக்கு விதிக்கப்பட்டிருந்த இரண்டு தடைகளையும் புத்தர் நீக்கினார். புத்தர் பெண்களுக்குக் கல்வி கற்கும்

உரிமையையும் ஆண்களைப் போலவே ஆன்மிகச் சிறப்புத் தகுதிகளை அடையும் உரிமையையும் வழங்கினார். பெண்களுக் குச் சுதந்திரத்தையும் மரியாதையையும் அளித்த இச்செயல் இந்தியாவில் பெண்களின் விடுதலைக்கு வழிவகுத்த புரட்சிகரமான ஒன்றாகும். பௌத்தத்தின் மாபெரும் எதிரியான 'மனு' பௌத்தம் பரவுவதைத் தடுத்து இந்து மதத்தைக் காத்திடக் கருதினார். அதனால் பெண்களுக்குக் கடுந் தடைகளை விதித்தார்; அவர்கள்மீது பல சமத்துவ மறுப்புவிதிகளைச் சுமத்தினார். ஆகவே இந்தியாவில் பெண்களின் தாழ்ச்சிக்கும் வீழ்ச்சிக்கும் புத்தர் காரணமல்லர். மனுதான் காரணமாவார் என்று கூறி அம்பேத்கர் அக்கட்டுரையை முடித்திருந்தார்.[115]

அவருடைய நூலகத்தில் அவர் இருந்த நேரத்தில் தவிர, வெளியில் இருந்த போதெல்லாம் மாபெரும் எதிர்ப்பாளராகவும் புயலைக் கிளப்புபவராகவும் அம்பேத்கர் திகழ்ந்தார். 1951 ஏப்பிரல் மத்தியில் புதுதில்லியில் அம்பேத்கர் பவன கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டிய விழாவில் அம்பேத்கர் தீண்டப்படாத வகுப்பு மக்களின் உரிமையைப் பற்றி மத்திய அரசு அக்கறையற்று இருக்கிறது என்று குற்றஞ்சாட்டிக் கடுமையாகத் தாக்கிப் பேசினார். பல வேட்டுக் குழாய்களை வரிசையாக நிறுத்தி ஒரே நேரத்தில் சுட்டது போன்ற கடுமையான விளைவை அம்பேத்கரின் அப்பேச்சு ஏற்படுத்தியது; இந்தியாவின் சிந்தனை உலகையே அது உலுக்கி யது; அது காங்கிரசுக் கட்சியைப் பெரிதும் கலக்கியது. அம்பேத்கரின் பேச்சு குறித்த தன் மனக்கசப்பைப் பிரதமர் நேருவும்கூட வெளிப்படுத்தினார். அமைச்சரவையின் கொள்கை களுடன் ஒத்துப்போக முடியாத அம்பேத்கர் தொடர்ந்து அமைச்ச ராக இருந்திட அனுமதிக்கக் கூடாது என்று சில காங்கிரசுத் தலைவர்கள் கூறினர். அம்பேத்கரின் ஆதரவாளர்கள் அம்பேத்கரின் அப்பேச்சு தவறாகப் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டுள்ளது என்று இயம்பினர். மேலும் காங்கிரசு அல்லாத கட்சிகளின் தலைவர்கள் சுதந்திரமாகக் கருத்துக் கூறும் உரிமை அம்பேத்கருக்கு உண்டு; குறிப்பாக அவருடைய சொந்தச் சமூகத்தைப் பாதிக்கக் கூடிய பிரச்சினைகளில் அந்த உரிமை அவருக்கு உண்டு என்று சொன்னார்கள். அமைச்சரவை தன்னுடைய கூட்டுப்பொறுப்பு முறையைப் பின்பற்றுகிறதா? அல்லது தனிப்பட்டவர் பொறுப்பு என்ற முறையைப் பின்பற்றுகிறதா என்று சில பத்திரிகைகள் கேள்வியை எழுப்பின.

அடிக்கல் நாட்டுவிழா நிகழ்ச்சியில் பேசியபின் இரண்டு நாட்கள் கழித்து, அம்பேத்கர் நாடாளுமன்றத்தில் மக்கள் பிரதிநிதித்துவச் சட்ட மசோதாவைக் கொண்டுவந்தபோது, ஞாயிறன்று அவர் நிகழ்த்திய வெடிப்பேச்சின் விளைவுகள் நாடாளுமன்றத்தில் எதிரொலித்தன. ஜெ. ஆர். கப்பூர் அந்த மசோதாவைப் பற்றிப் பேசியபோது 'அம்பேத்கர் பொதுத் தேர்தலில் முழுஅளவில் ஆதாயம் அடைய வேண்டும் என்கிற நோக்கத்துடன் தீண்டப் படாத வகுப்பு மக்களின் விடுதலை வீரராகத் தன்னைக் காட்டிக் கொள்ளுவதற்கு நடத்துகிற ஒரு மோசடி நாடகமே இந்த மசோதா'' என்று தீயுமிழும் சொற்களால் சாடினார். இதற்கு மறுப்புத் தெரிவித்து அம்பேத்கர் பேசியபோது ஞாயிறன்று கடுந்தாக்குதல் பேச்சைத் தொடுப்பதற்கு முன்னரே அம்மசோதா நாடாளுமன்றத் தில் கொண்டுவரப்பட்டிருந்தது என்று கூறினார். மேலும் கப்பூரின் பேச்சால் கொதிப்படைந்த அவர், 'கப்பூர் அவர்களே! நீங்கள் இதுபோலவே தொடர்ந்து பேசலாம்; கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக நான் இவற்றையெல்லாம் தாங்கித் தாங்கிப் பழகிப் போய்விட்டேன்' என்று குறிப்பிட்டார். அம்பேத்கர் துணிச்சலான முரட்டுத்தனமான மனிதர்; அதனால்தான் அவருடைய சக அமைச்சர்களையும், சக நாடாளுமன்ற உறுப்பினர்களையும் குற்றஞ்சாட்டுகிறார் என்று கப்பூர் மேலும் தொடர்ந்து பேசினார். இவற்றால் கசப்புணர்ச்சி மேலும் வளர்ந்தது. நேரு நாடாளுமன்றத் தின் அக்கூட்டத்தொடர் முடிந்ததும் குடியரசுத் தலைவரிடம் தன் அமைச்சரவையின் ராஜிநாமாவைக் கொடுத்துவிட்டு அதன்பின் அமைச்சரவையைத் திருத்தியமைக்கப் போவதாகவும்பேசிக் கொள் ளப்பட்டது. உங்களுடைய குற்றச்சாட்டுகளைத் திரும்பப் பெற்றுக் கொள்ள நீங்கள் தயாராக இல்லையானால், அமைச்சர் பதவியை ராஜிநாமா செய்யுங்கள் என்று நேரு அம்பேத்கரிடம் கூறினார் எனவும் பேசப்பட்டது. நிலைமை உண்மையிலேயே அந்த அளவிற்கு முற்றிவிட்டிருந்தது. 1951 ஏப்பிரல் மாத இறுதியில் அம்பேத்கர் பம்பாயில் தங்கி இருந்தார். அப்போது அவருடைய நெருங்கிய நண்பர்கள் வட்டாரத்தில், வரும் பொதுத்தேர்தலுக்கு முன் நாடாளுமன்றத்தில் இந்துச் சட்ட மசாதாவை நிறைவேற்றிட வேண்டும் என்ற தீவிரமான ஆவல் காரணமாகத்தான் அம்பேத்கர் இன்னும் அமைச்சரவையில் இருக்கிறார் என்று கூறப்பட்டது.

மே மாதம் தில்லிக்குத் திரும்பியதும் சட்ட அமைச்சரான அம்பேத்கர் நாடாளுமன்றத்தில் மக்கள் பிரதிநிதித்துவ மசோதாவைக் கொண்டுவந்தார். அவர் ஆற்றிய 90 நிமிட உரையில் அம்மசோதா

பற்றி எழுப்பப்பட்ட ஐய்யங்களுக்கும், சிக்கல்களுக்கும் பொறுமையுடன் விளக்கமளித்தார். சிலவற்றிற்கு உடனுக்குடன் சுடச்சுட பதிலளித்தார். நாடாளுமன்ற உறுப்பினராவதற்கான தகுதிபற்றி அம்பேத்கர் விளக்கியபோது, நாடாளுமன்றம் என்பது அரசுக்கு எப்போதும் விசுவாசத்துடன் 'ஆமாம் போடும்' அளவிற்கு குழுஇசைபாடும் பெண்களின் நிலைக்குத் தாழ்ந்துவிட அனுமதிக்கக் கூடாது என்றார். நாடாளுமன்றத்தில் நடந்த கடும் விவாதங்களுக் கிடையே நகைச்சுவையான நிகழ்ச்சிகளும் அரும்பின. அறிவு சார்ந்த நுட்பங்கள் நிறைந்த விளக்கவுரைகளின் இடையில் அவையில் அவ்வப்போது நகைச்சுவைகளும் ஒளிர்ந்தன. ஒரே நேரத்தில் நாடாளுமன்ற உறுப்பினராகவும் ஆக வேண்டும். பெர்மிட்டும் வைத்துக் கொண்டிருக்க வேண்டும் என்று உறுப்பினர் களில் யாரேனும் விரும்பினால் இரண்டில் ஒன்றைத் தேர்வு செய்துகொள்ள வேண்டும் என்று அம்பேத்கர் கூறியபோது வங்காள மாகாண உறுப்பினரான இலட்சுமிகாந்த மயித்ரா குறுக்கிட்டு இரண்டில் எது இலாபகரமானதாக இருக்குமோ அதைத் தேர்வு செய்து கொள்ளலாம் என்று குத்தலாகக் கூறினார்.

விவாதத்தின்போது டாக்டர் பார்மர் நாடாளுமன்றத்தின் உறுப் பினராவதற்குச் சிற்றரசர்களுக்குத் தடை விதிக்கப்படுமா என்று அம்பேத்கரிடம் வினவினார். அதற்கு அம்பேத்கர் முதலாவது ஆங்கில அகராதியைத் தொகுத்த டாக்டர் ஜான்ஸன் அரசியல் ஓய்வூதியம் பெறுவோர் அரசாங்கத்தின் அடிமைகள் என்று ஒரு வரையறையைக் கூறியிருந்தார். ஆனால் அவரே பின்னாளில் அரசிடம் ஓய்வூதியம் பெற்றுக் கொண்டார். அதனால் அளவுக்கு அதிகமாக அறிவாராய்ச்சியில் இறங்குவது பயனற்றதாகும் என்று பதில் கூறினார். அதன்பின் டாக்டர் பார்மர், 'இங்கிலாந்தில் மக்களவையின் உறுப்பினராவதற்கு அரசியல் ஓய்வூதியம் பெறு வோர்க்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதா என்று கேட்டதற்கு அம்பேத்கர் 'இல்லை'. பிரபுக்களுக்கும் பைத்தியக்காரர்களுக்கும் மட்டும் தடையிருப்பதாக அவர்கள் கூறிக்கொள்ளுகிறார்கள் என்று உடனே பதிலளித்ததும் அவையில் வெடிச்சிரிப்புகள் தோன்றின.

இதற்கிடையில் உயர்நீதிமன்றங்களில் சில முடிவுகளும் உச்ச நீதிமன்றத்தின் ஒரு முக்கியத்தீர்ப்பும் அரசியல் சட்ட விதி 15(1) விதி 29(2) ஆகியவைபற்றி முக்கியத்துவம் வாய்ந்த வாதங்களைக் கிளப்பின. மாணவர்களைக் கல்லூரியில் சேர்த்தல், அரசு ஊழியத் தில் சேருதல் தொடர்பான சென்னை மாகாண அரசின் வகுப்புவாரி

ஆணை செல்லாது என்று உச்சநீதிமன்றம் அறிவித்துவிட்டது. பேச்சுரிமை தொடர்பான அரசியல் சட்ட விதி 19(2) சொத்துரிமை தொடர்பான விதி 31 ஆகியவற்றை நீதிமன்றங்களின் பல்வேறு தீர்ப்புகள் செயலற்றவையாக்கிவிட்டிருந்தன. ஆகவே மத்திய அரசு நாடாளுமன்றத்தில் அரசியல் சட்டத் திருத்த மசோதா ஒன்றைக் கொண்டு வந்தது. அரசியல் சட்டத்தின் உள்ளடக்கமாக உணர்த்தப் பட்டிருப்பதைச் சரியாகத் தெளிவுபடுத்த வேண்டும் என்பதும் அரசியல் விதியின் நோக்கத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதும் அம்மசோதாவின் நோக்கம் என்று கூறப்பட்டது. அம்பேத்கரின் உரையை அவையினர் ஆவலோடு எதிர்பார்த்திருந்த னர். அத்திருத்தத்தை ஆதரித்து அம்பேத்கர் பேச முற்பட்டார். பம்பாய் 'தி டைம்ஸ் ஆப் இந்தியா' ஏட்டின் சிறப்பு நிருபர் அம்பேத்கரின் அந்த உரையைப் பற்றிப் 'பிறகு மெதுவாகவும் ஆர்ந்தமைந்த தன்மையிலும் - ஆனால் அவையில் மிகப்பெரும் பெரும்பான்மை இருப்பதால் இம்மசோதா கட்டாயம் நிறைவேறும் என்ற உறுதியான வலிமையுடனும் - டாக்டர் அம்பேத்கர் அம்மசோதாவின் உண்மையான நோக்கத்தையும் பொருளையும் விளக்கினார். நேரு நாடாளுமன்றத்தில் அத்திருத்த மசோதாவை முன்மொழிந்து படித்த அறிக்கையில் பெரும்பகுதியை எதிரிகளின் வாதங்கள் தவிடுபொடியாக்கி விட்டது போல் தோன்றிய நிலையில் தான் அம்பேத்கர் பேச எழுந்தார். அம்பேத்கர் எதிரிகளின் வாதங்களை அடித்து நொறுக்கினார்' என்று விவரித்திருந்தார்.

சாதிகளுக்கிடையே வேறுபாட்டைக் காட்டுகிறது என்ற அடிப் படையில் சென்னை மாகாண அரசின் வகுப்புவாரி ஆணையை உச்சநீதிமன்றம் செல்லாது என்ற தீர்ப்பளித்திருப்பது எவ்வகை யிலும் சரியானதன்று; அரசியல் சட்ட விதிகளின் அடிப்படை யிலும் அது அமைந்திருக்கவில்லை என்று அம்பேத்கர் கூறினார். அம்பேத்கரின் இக்கூற்று நாடாளுமன்றத்தில் பெரும் கூச்சலையும் குழப்பத்தையும் ஏற்படுத்தியது. அவையில் அமைதி ஏற்பட்டபின், அம்பேத்கர் அரசியல் சட்டவிதி 29(2) மதம், இனம், சாதியின் பெயரை மட்டும் காரணங்காட்டி எந்தஒரு குடிமகனுக்கும் எந்த ஒரு கல்வி நிலையத்திலும் சேர்ந்திட அனுமதி மறுக்கக் கூடாது என்பதில் உச்ச நீதிமன்றம், 'மட்டும்' என்ற சொல்லை கவனத்திற் கொள்ளத் தவறிவிட்டது. விதி 46இல் ஒடுக்கப்பட்ட வகுப்பினரின் நலன்களை அரசு பாதுகாக்க வேண்டும் என்று அறிவுறுத்தப் பட்டுள்ளது. விதி 46இன் நோக்கத்தை நிறைவேற்ற வேண்டு மானால் விதி 16(4) விதி 29(2) ஆகியவற்றைத் திருத்த வேண்டும்.

விதி 19(2)க்கான திருத்தம் என்பது பேச்சுச் சுதந்திரம், கருத்தைக் கூறும் உரிமை; பொது அமைதி காத்தல்; குற்றமிழைக்கத் தூண்டுதல்; அயல்நாடுகளுடனான நட்புறவு ஆகிய மூன்று தலைப்பினங்களோடு தொடர்புடையதாக இருக்கிறது. இவற்றிலும் திருத்தங்கள் கொண்டுவருவதை ஆதரிக்கின்றேன்' என்று கூறினார்.

நேரு முன்மொழிந்த அரசியல் சட்டத் திருத்தத் தீர்மானம் அவையின் ஆய்வுக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டது. அம்மசோதா தேர்வுக்குழுவின் ஆய்வுக்காக அனுப்பப்பட்டது. அத்தீர்மானத்திற்கு மிகப்பெரும்பான்மையினர் ஆதரவளிக்க அம்பேத்கர் ஆற்றிய நாவன்மை நிரம்பிய நெஞ்சங் கவர்ந்த உரையே காரணமாகும். மிகவும் இடர்ப்பாடான, நுட்பமான அரசியல் சட்டம் மற்றும் சட்டங்கள் குறித்த சிக்கல்கள் பற்றி விளக்கிக் கூர்த்த அறிவு நுட்பமுடனும் தெளிவுடனும் அம்பேத்கர் ஆற்றிய அவ்வுரை நாடாளுமன்றத்தில் அதுவரையில் நிகழ்த்தப்பட்ட வாதத்திறன் மிக்க சிறந்த உரைகளிலெல்லாம் தலைசிறந்ததாகத் திகழ்ந்தது என்று 'தி டைம்ஸ் ஆப் இந்தியா' நிருபர் மேலும் குறிப்பிட்டிருந்தார்.[116]

அதேசமயத்தில் கண்ணியமற்ற வேகத்துடன் அரசு செயல்படுவதாகப் பத்திரிகைகள் தாக்கின. பேச்சுரிமையின், கருத்துரிமையின் காவலர்கள் என்று சொல்லிக் கொண்டவர்கள் ஆட்சி அதிகாரத்தில் அமர்ந்து விட்ட பிறகு அந்த உரிமைகளின் மீதே கடுமையான கட்டுப்பாடுகளை விதிக்கின்றனர் என்று பத்திரிகைகள் குற்றஞ் சாட்டின. அரசியல் சட்டத் திருத்தத்தை நிறைவேற்றிட அன்றைய நாடாளுமன்றத்திற்கு உரிமை இருக்கிறதா? என்ற அய்யத்தைச் சில பத்திரிகைகள் எழுப்பின. அத்திருத்தத் தீர்மானத்தை ஆதரித்ததற்காக அம்பேத்கரையும் குறைகூறின.

II

1951 மே மாதம் புதுதில்லியில் நடைபெற்ற புத்தர் பிறந்தநாள் விழாவின்போது அம்பேத்கர் இந்து மதத்தின்மீது மீண்டும் ஒரு வெடிகுண்டை வீசினார். இந்துக்களிடம் காணப்படும் வன்முறை, ஒழுக்கக்கேடு மற்றும் அரசாங்க ஊழியர்களிடம் உள்ள இலஞ்ச ஊழல் போன்ற இழிவுகளுக்குக் காரணம் இந்து மதத்தின் சீரழிவுகளே என்று அம்பேத்கர் அவருடைய உரையில் கூறினார். மக்கள் பௌத்த மதத்தைத் தழுவினால்தான் இந்தியாவிற்கு உண்மையான விடுதலை கிடைக்கும் என்றார். அக்கூட்டத்திற்குப்

பிரான்ஸ் நாட்டின் அரசுத் தூதர் தலைமை தாங்கினார். கிட்டத்தட்ட எல்லா நாடுகளின் அரசுத் தூதர்களும் அக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். தன்னுடைய சக்தி முழுவதையும் செலுத்தி இந்துச் சட்டத் திருத்த மசோதாவைத் தொகுத்துக் கொண்டிருந்த அம்பேத்கர் - அப்பணியை முடிக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காகவே அமைச்சராக இருந்து கொண்டிருப்பதாகச் சொல்லப்பட்ட அம்பேத்கர் ஒவ்வொரு சமயத்திலும் இந்துக்களைப் பகைத்துக் கொள்வது மிகவும் புதிராக இருக்கிறது என்று திறனாய்வாளர்கள் கூறினார்கள். அப்பேச்சின் காரணமாகப் பத்திரிகைகள் அம்பேத்கரைக் கடுமையாகத் தாக்கியெழுதின. இந்து மதம் பற்றிய அம்பேத்கரின் குற்றச்சாட்டு வரலாற்று அடிப்படையில் உண்மையானதன்று என்று எழுதின. அம்பேத்கரின் பேச்சு சிறந்த இந்துத் தலைவர்கள் மீது எத்தகைய தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. அடுத்தடுத்துக் கேட்கும் இடியோசை அச்சத்தை ஏற்படுத்துவதில்லை. அது ஒரு சிறிய ஒலியாகவே தோன்றும். அத்தன்மையில் அம்பேத்கரின் அச்சுறுத்தல்களையும் இந்துத் தலைவர்கள் எடுத்துக் கொண்டனர் போலும்.

1951 சூலை-ஆகஸ்டு மாதங்களில் அம்பேத்கர் அவருடைய கல்வி நிறுவன வேலைகளில் பெரிதும் ஈடுபட்டிருந்தார். அவுரங்காபாத்தில் ஒரு புதிய கல்லூரியைத் தொடங்கினார். அக்கல்லூரியில் புதிய கட்டடம் ஒன்றைக் கட்டுவதற்கான அடிக்கல்லைச்செப்டம்பர் முதல்நாள் இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் இராசேந்திர பிரசாத் நாட்டினார். அந்நிகழ்ச்சியில் அம்பேத்கரின் ஆழ்ந்த கல்வியறிவு, ஏழை எளிய வகுப்பு மக்களிடையே கல்வியைப் பரப்ப வேண்டுமென்பதில் அவர் கொண்டுள்ள தணியாத ஆர்வம் ஆகியவற்றைச் சுட்டிக்காட்டி இராசேந்திரப்பிரசாத் அம்பேத்கரைப் பெரிதும் பாராட்டிப் பேசினார். மக்கள் கல்விக் கழகத்தின் நோக்க்ங்களையும் கொள்கைகளையும் இராசேந்திர பிரசாத் பெரிதும் போற்றிப் புகழ்ந்தார்.

அம்பேத்கர் அச்சமயம் சோர்ந்து காணப்பட்டார். *1951* ஆகஸ்டு 10ஆம் நாள் பிரதமர் நேருவுக்கு எழுதிய கடிதத்தில், 'என் உடல் நலன் எனக்கும், எனக்கு வைத்தியம் செய்யும் மருத்துவர்களுக்கும் கவலையளிப்பதாக இருக்கிறது. நான் மருத்துவம் செய்து கொள்வதற்கு முழுமையாக நேரத்தை ஒதுக்க நேரிடுமுன் இந்துச் சட்ட மசோதாவை நிறைவேற்றிட வேண்டும் என்று மிகவும் கவலைப்படுகிறேன்' என்று எழுதியிருந்தார்.

ஆதலால் அம்மசோதாவிற்கு மிகவும் முன்னுரிமை தந்து ஆகஸ்டு 16ஆம் நாள் அதை நாடாளுமன்றத்தில் ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு செப்டம்பர் முதல் நாளுக்குள் நிறைவேற்றிட வேண்டும் என்று பிரதமர் நேருவை அக்கடிதத்தில் கேட்டிருந்தார். இந்த மசோதாவிற்கு நான் எந்த அளவிற்கு முதன்மை தருகிறேன் என்று பிரதமருக்கே தெரியும். இந்த மசோதாவை நிறைவேற்றுவதற்காக என் உடல்நலக் குறைவில் ஏற்படக்கூடிய எத்தகைய பாதிப்பைப் பற்றியும் கவலைப்படாமல் எந்த அளவிற்கும் உழைக்கத் தயாராக இருக்கிறேன்' என்று கூறியிருந்தார். அம்பேத்கரின் மடலுக்கு அன்றே பிரதமர் விடை எழுதினார். இம்மசோதா பற்றி மனத்தை வருத்திக் கொள்ளாமல் இயல்பாக எடுத்துக் கொள்ளுங்கள்; இந்துச் சட்ட மசோதாவிற்கு நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியே யும் எதிர்ப்பு இருப்பதால் 1951 செப்டம்பர் மாதத்தின் தொடக்கத்தில் இதை நாடாளுமன்றத்தில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளுவதென அமைச்சரவை முடிவு செய்துள்ளது என்று நேரு அவருடைய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

அவ்வாறே நேரு செப்டம்பர் முதல் கிழமையில் காங்கிரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் இந்துச் சட்ட மசோதாமீது விரைவில் ஒரு முடிவெடுக்க வேண்டும் என்று வற்புறுத்தினார். அதுதான் நாடாளுமன்றத்தின் கடைசிக் கூட்டத் தொடராகும். காங்கிரசு நாடாளுமன்றக் கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் அம்மசோதாவை எதிர்த்தனர். புதிய நாடாளுமன்றம் அமைக்கப்படும் வரையில் அதைத் தள்ளி வைக்க வேண்டும் என்றனர். எனவே நாடாளுமன்றத்தில் அம்மசோதாவின் பேரில் கட்சி உறுப்பினர்கள் அவரவர் விருப்பம்போல் வாக்களிக்க உரிமை வழங்கப்பட்டது. செப்டம்பர் மாத முதல் கிழமையில் அம்மசோதா விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. அதன்பின் இந்துச் சட்ட மசோதாவில் உள்ள திருமணம் மற்றும் மணவிலக்கு பற்றிய ஒரு பிரிவை மட்டும் செப்டம்பர் 17ஆம் நாள் நாடாளுமன்றத்தில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளுவதென்றும் நேரம் இடந்தருமாயின் சொத்துரிமை தொடர்பான மற்ற பிரிவுகளையும் விவாதத்திற்கு எடுத்துக் கொள்வதெனவும் காங்கிரசுக் கட்சிக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

செப்டம்பர் 17 பிறந்தது. நாடாளுமன்றத்தில் நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட இந்துச் சட்ட மசோதாமீது அன்று காலை விவாதம் தொடங்கியபோது நாடாளுமன்றத்திற்கு வெளியே

நிறுத்தப்பட்டிருந்த பலத்தப் போலீசுப்படை அம்மசோதாவிற்கு எதிராகப் பெண்கள் நடத்திய உணர்ச்சி மிக்க ஆர்ப்பாட்டத்தைக் கட்டுப்படுத்துவதில் ஈடுபட்டிருந்தது.

நாடாளுமன்றத்தில் அந்த மசோதாவை எதிர்த்தவர்களால் கடுந் தாக்குதல் தொடுக்கப்பட்டது. இந்த இந்துச் சட்ட மசோதா பெருமை மிகு இந்துக் கலாச்சாரக் கட்டமைப்பைக் குலைத்துவிடும். பல நூற்றாண்டுக் காலமாக ஏற்பட்ட மாற்றங்களுக்கு ஏற்ப ஈடுகொடுத்துத் தன் போக்கினை நெறிப்படுத்திக்கொண்டு இயங்கி வரும் இந்துச்சமய வாழ்வினை நகைப்பிற்கிடமாக்கி விடும் என்று டாக்டர் முகர்ஜி கூறினார். இருப்பினும் இந்துச் சட்ட மசோதாவில் கூறப்பட்டுள்ள கோட்பாட்டினை மானுடத்திற்கான பொதுச் சட்ட அடிப்படையில் எல்லா மதத்தினருக்கும் உரியது என்று ஆக்கிட் வேண்டும்; சமயச் சார்பின்மையை நடைமுறைப்படுத்துவதற்கு இஃதோர் நல்வாய்ப்பாகும் என்று முகர்ஜி குறை கூறிப் பேசினார். என். வி. காட்கில் அம்மசோதாவை ஆதரித்து உணர்ச்சி பொங்கிடப் பேசினார். இக்காலப் பொது ஒழுக்க நெறிகளுக்கு ஏற்பச் சட்டத்தை அமைத்திட இத்திருத்த மசோதா கட்டாயம் தேவைப்படுகிறது என்று அவர் கூறினார். இது ஒரு மதமாற்றச் சட்டம் என்று சர்தார் போபேந்திர சிங் மான் வருணித்தார். புதிய மனுவான அம்பேத்கரிய மதத்தைத் தன்மீது திணிக்கக் கூடாது என்று மேலும் அவர் குறிப்பிட்டார். பண்டிட் குன்ஸ்ரு அவருக்கே உரித்தான பக்குவமான பேச்சின் மூலம் அம்மசோதாவை ஆதரித்தார். சட்டத்தை மதிக்கின்ற கட்டுமானத்தைக் குலைத்திட வேண்டாம் என்று பண்டிட் மாளவியா அரசை எச்சரித்தார். நாடாளுமன்றப் பெண் உறுப்பினர்கள் அவர்கள் அரசியல் சட்டத்தில் கொண்டுள்ள நம்பிக்கைக்கு ஓர் இறுதி விருப்ப ஆவணம் போல இந்த மசோதா இருக்கிறது என்று கூறினர்.

நாடாளுமன்றத்தில் இந்த மசோதா மீதான விவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, நேரு இதை ஆதரிப்பதில் அவர் கொண்டிருந்த உறுதிப்பாட்டைக் கைவிட்டார். அதன் காரணமாக ஒரு சமரச யோசனையை அவர் சொன்னார். அம்மசோதாவில் உள்ள மணவிலக்கு மற்றும் திருமணம் பற்றிய பிரிவை ஒரு தனி மசோதாவாக ஆக்கிவிடலாம் என்றார். அதன்படி செப்டம்பர் 19ஆம் நாள், அம்பேத்கர் இக்கூட்டத் தொடரின் நேர நெருக்கடி காரணமாக இந்துச் சட்ட மசோதாவின் பகுதி II தவிர மற்றவற்றை நிறைவேற்றிட முடியாத நிலை இருக்கிறது; ஆகவே இந்த

இரண்டாம் பகுதி திருமணம் மற்றும் மணவிலக்கு மசோதாவாகக் கருதப்படும் என்று கூறினார்.

இவ்வாறு வெட்டிக் குறுக்கப்பட்ட அந்த மசோதாமீதும் எதிரிகள் சூடான விவாதங்களை எழுப்பினார்கள். அதை எப்படியும் நிறைவேற்ற விடாமல் செய்துவிட வேண்டும் என்பதில் அவர்கள் உறுதியுடன் இருந்தனர். காங்கிரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக் கட்சிக் கொறடா மூலம் கட்டளை ஏதும் தரப்படவில்லை. உறுப்பினர்களின் பேச்சுகளுக்குக் கால எல்லையை வரையறை செய்யவில்லை. இரண்டாவது உட்பிரிவின் மீது மட்டும் கடந்த கூட்டத் தொடரில் மூன்று நாட்களும் இக்கூட்டத் தொடரில் நான்கு நாட்களும் விவாதம் நடந்தது. இந்த மெத்தனமான முன்னேற்றமும் எல்லையற்ற நீண்ட விவாதங்களும் அம்பேத்கருக்கு ஏமாற்றமளித்தன. 20ஆம் நாள் எதிர்த்தாக்குதல் தொடுக்குந் தன்மையில் வீறுமிக்கதோர் உரையை நிகழ்த்தினார். அவ்வுரையில் அவர் இராமன் சீதையைப் பற்றிய கதையைக் குறிப்பிட்டுப் பேசியதால் அவையில் பெரும் எதிர்ப்புக் கிளம்பியது; பொதுமக்கள் இம்மசோதாவிற்கு அளித்த ஆதரவையும் அந்நியப்படுத்தி விட்டது. அம்பேத்கரின் உரை சில இந்து உறுப்பினர்களின் ஆழ்ந்த மத உணர்வுகளைப் புண்படுத்தியது. அத்தகைய உறுப்பினர்களில் ஒருவர் எழுந்து நின்று, 'நாங்கள் முற்போக்கை ஆதரிக்கின்றோம்; இந்து மதத்தை இழித்து வசை மாரிப் பொழிகின்ற சட்ட அமைச்சரின் சொற்பொழிவைக் கேளாமலேயே நாங்கள் இதற்கு வாக்களிக்கத் தயாராக இருக்கிறோம்' என்று கூவினார். 'உறுப்பினர் கூறியதுபோல் செய்திருந்தால் என்னுடைய பேச்சு தேவையற்றதாக ஆகிவிட்டிருக்கும்' என்று அம்பேத்கர் பதிலளித்தார். ஆயினும் எவருடைய உணர்வையும் புண்படுத்த வேண்டும் என்று ஒரு சிறிதும் கருதியதில்லை; என்னுடைய கவனக்குறைவில் அவ்வாறு நான் செய்திருப்பின் அதற்காக மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுகிறேன் என்று அம்பேத்கர் கூறினார். அம்பேத்கர் உரையில் பிரச்சினைக்குரிய பகுதியை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிட வேண்டும் என்று ஒரு உறுப்பினர் வேண்டுகோள் விடுத்ததற்கு அம்பேத்கர் அவருடைய ஒப்புதலைத் தெரிவித்தார்.

விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசிய சட்ட அமைச்சர் அம்பேத்கர், டாக்டர் முகர்ஜி கூறியவை தீவிரக் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளத் தகுதியற்றவையாகும்; ஏனெனில் அவர்

அமைச்சராக இருந்தபோது இம்மசோதாவை எதிர்க்கவில்லை; இப்போது எதிர்க்க வேண்டும் என்பதற்காகவே எதிர்க்கிறார் என்று கூறினார். இந்துச் சட்டத்தைத் திருத்தும் வகையில் இதற்கு முன் செய்யப்பட்ட சட்டங்கள் அனைத்தும் சீக்கியருக்கும் பொருந்து வதாக ஏற்படுத்தப்பட்டுள்ளன; சட்டத்தைப் பொறுத்த அளவில் இதுவரையில் உரிமையியல் சட்டத் தொடர்பானவற்றில் சீக்கியர் கள் இந்துக்களாகவே கருதப்பட்டு வந்துள்ளனர் என்று உறுதிபட உரைத்தார். சர்தார் போபேந்திர சிங் மான் பேச்சு முரண்பாடாக இருக்கிறது என்று அம்பேத்கர் கூறியபோது அவையில் மீண்டும் பெருங்கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டது. 'உங்களுடைய பேச்சு தான் இந்த அவை முழுவதற்குமே முரண்பாடாக இருக்கிறது' என்று குரல்கள் அம்பேத்கரை நோக்கி ஒலித்தன.

இராமன்-சீதை மீது தொடுத்த தேவையற்ற தாக்குதலும் குத்தலும் வெறுப்பும் தொனித்த பேச்சும் சூழ்நிலையை மோசமாக் கின. பெரும்பாலான உறுப்பினர்களை அவர் பேரில் வெறுப்பு கொள்ளச் செய்தன. அம்பேத்கர் குளவிக் கூட்டில் கை வைத்தது போன்ற நிலைக்கு ஆளானார். குளவிக் கூட்டிலிருந்து பாய்ந்து புறப்பட்ட சில குளவிகள் நேருவைக் கொட்டின. அதனால் அவர் முற்றிலுமாக மனத்திட்பத்தை இழந்தார். இத்தகைய குழப்பமான நிலையில், இந்துச்சட்ட மசோதாவைக் கைவிடுமாறு நேரு அம்பேத்கரிடம் கேட்டுக் கொண்டார். நேருவுக்கு அப்போது இருந்த மனநிலையை ஒரு பத்திரிகை நிருபர், புகழ்மிக்க ஆங்கிலக் கவிஞன் கோல்ட் ஸ்மித்தின் கல்லறை மீது பொறிக்கப்பட்டுள்ள, 'ஒரு அழகிய தேவதையைப் போல் எழுதினார். ஆனால் ஒரு கிளிப்பிள்ளையைப் போல் பேசினார்' என்று கேரிக்கினுடைய (Garrick) வாசகத்திற்கு ஒப்பிட்டு எழுதினார்.

1951 செப்டம்பர் 22ஆம் நாள் நான்காவது உட்பிரிவின் மீதான விவாதம் முடிவுற்றது. செப்டம்பர் 24ஆம் நாள் மீண்டும் விவாதம் தொடங்கியது. டாக்டர் அம்பேத்கரை மனுவோடு ஒப்பிடுகின்றனர். ஆனால் மனுவை எல்லோரும் ஏற்றுக் கொண்டி ருக்கின்றனர்; மனு சட்டத்தை இயற்றியபோது போலீசு காவல் காத்து நிற்கவில்லை என்று இராமநாராயண் என்ற உறுப்பினர் கூறினார். செப்டம்பர் 25ஆம் நாள் அம்மசோதாவின் நான்காவது உட்பிரிவு ஆர்வமோ எதிர்ப்போ எதுவுமின்றி நிறைவேற்றப்பட்டது. அதன்பின்னர் மற்ற மசோதாக்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பட்டதால் பார்வையாளர் பகுதியில் கூட்டம் குறைவாக இருந்தது.

'இந்துச் சட்ட மசோதாவின் திருமணம் மற்றும் மணவிலக்கு பற்றிய பகுதிகூட நிறைவேற்றப்படாமல் நின்றுவிட்டது; மிகவும் வருந்துதற்குரிய முறையில் அது கைவிடப்பட்டது. நான்கு உட்பிரிவுகளை நிறைவேற்றியபின் அம்மசோதா கொல்லப்பட்டு எவரும் கண்ணீர் சிந்தாமல் கதறியழாமல் புதைக்கப்பட்டுவிட்டது' என்று துன்பந்தோய்ந்த சொற்களால் அம்பேத்கர் கூறினார். இந்துச் சட்ட மசோதாவை நாடாளுமன்றம் கைவிடுவதற்குச் சில மாதங் களுக்கு முன், புகழ்பெற்ற சட்ட வல்லுநரும் சமஸ்கிருத அறிஞருமான பம்பாய் உயர்நீதிமன்ற நீதிபதி கஜேந்திர கட்கர் கர்னாடகப் பல்கலைக்கழகத்தில் மாணவர்களிடையே இந்துச் சட்ட மசோதா பற்றி உரையாற்றியபோது, 'டாக்டர் அம்பேத்கர் இந்துக்களாகிய நமக்கு இந்துச் சட்டத்தை ஏற்படுத்தித் தந்துவிட் டால் அவருடைய சாதனை வரலாற்றில் கருத்தாழம் மிக்க சிறந்ததோர் நீதிநெறியாக நிலைத்து நிற்கும்' என்று கூறினார். ஆனால் நவீன மனு என்ற முழுப்பெருமையை அம்பேத்கருக்கு அளித்திட விதி விரும்பவில்லை போலும்!

ஏமாற்றத்தால் அம்பேத்கரின் உள்ளம் மிகவும் புண்பட்டிருந் தது; கடுகடுப்புடன் தனக்குள் மனம் புழுங்கினார். அம்பேத்கரின் ராஜினாமாச் செய்தி எல்லா நாளேடுகளிலும் முதன்மை தந்து வெளியிடப்பட்டது. செப்டம்பர் 27ஆம் நாள் அமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார். பிரதமருக்கு அம்பேத்கர் எழுதிய ராஜினாமாக் கடிதத்தில் 'அமைச்சரவையிலிருந்து பதவி விலகவேண்டும் என்று நீண்ட காலமாக நான் நினைத்துக் கொண்டிருந்தேன். தற்போதைய நாடாளுமன்றத்தின் ஆயுள் முடிவடைவதற்குள் இந்துச் சட்டத் திருத்த மசோதாவை நிறைவேற்றிவிட இயலும் என்ற நம்பிக்கை தான் என்னை ராஜினாமா செய்யாதவாறு இதுவரை தடுத்து வந்தது. இந்த மசோதாவை வெட்டிக் குறைத்துத்திருமணம் மற்றும் மணவிலக்கு பற்றிய மசோதாவாக மட்டும் சுருக்கிடவும் நான் ஒத்துக் கொண்டேன். அந்த அளவிற்கேனும் என்னுடைய உழைப்பு பயன்தராதா என்ற விருப்பத்தினால் நான் இதற்கு இணங்கினேன். ஆனால் மசோதாவின் அப்பகுதிகூட நிறைவேற்றப் படாமல் கைவிடப்பட்டுவிட்டது. இந்நிலையில் அமைச்சரவையில் நான் இனியும் தொடர்ந்து அமைச்சராக நீடிப்பதில் அர்த்தமே யில்லை' என்று எழுதியிருந்தார்.

ஆயினும் நாகரிகம் கருதி அம்பேத்கர் அவரால் முன்மொழியப் பட்டிருந்த மசோதாக்களும் தீர்மானங்களும் நாடாளுமன்றத்தில்

விவாதிக்கப்படும் வரையில் தான் அமைச்சராக நீடிப்பதாக பிரதமருக்கும் அமைச்சரவைக்கும் தெரிவித்தார். அவர் பெயரில் உள்ள மசோதாக்களுக்கு முன்னுரிமை தந்து விரைவில் முடிக்கு மாறும் வேண்டினார். இந்துச் சட்டத்திருத்த மசோதாவை உருவாக் கிட அம்பேத்கர் நல்கிய கடும் உழைப்பை நேரு பாராட்டினார். விதியும், நாடாளுமன்றத்தின் நடைமுறை விதிகளும் இம்மசோதா விற்கு எதிராக இருந்தன என்று நேரு கூறினார். நாடாளுமன்றத்தின் நடப்புக் கூட்டத் தொடரின் கடைசி நாளிலிருந்து அம்பேத்கரின் ராஜினாமாவை ஏற்றுக் கொள்வதாக நேரு தெரிவித்தார். அம்பேத்கர் ஆற்றப்போகும் உரையின் நகலை முன்னதாகவே தருமாறு கேட்டுக் கொண்டார். நேருவின் இக்கடிதத்திற்கு அம்பேத்கர் அக்டோபர் 4ஆம் நாள் பதில் எழுதினார். பேசுவதற்கான உரையை எழுத்து வடிவில் தயாரித்தால் அதன் நகலைத் தருவதாகவும்; அவர் பெயரில் உள்ள மசோதாக்களின் மீது நாடாளுமன்ற நடவடிக்கைகள் முடிந்தபின் அக்டோபர் 11ஆம் நாள் தன்னுடைய நிலைப்பாட்டை விளக்கிக் கூறிட நாடாளுமன்றத்தின் துணைத்தலை வரிடம் ஒப்புதலைப் பெற்றிருப்பதாகவும் அக்கடிதத்தில் அம்பேத் கர் குறிப்பிட்டிருந்தார்.

தசரா விடுமுறை முடிந்த பின்னும் அம்பேத்கர் அமைச்சராக இருந்தார். 1951 அக்டோபர் 11ஆம் நாள் நாடாளுமன்றம் மீண்டும் கூடியது. அன்று கேள்வி நேரம் இல்லை. தொகுதிப் பிரிவினை ஆணைகள் பற்றிய மசோதா முதலில் எடுத்துக் கொள்ளப்பட்டது. அது முடிந்ததும் துணைத்தலைவர், தொழில் வளர்ச்சி மற்றும் ஒழுங்குமுறை மசோதாவை முன்மொழியுமாறு எச்.கே.மகதாப் அவர்களை அழைத்தார். அவ்வேளையில் அம்பேத்கர் எழுந்து நின்று அவர் பேசிட முதலில் வாய்ப்பளிக்க வேண்டும் என்று கோரினார். அம்பேத்கர் படிக்கவுள்ள அறிக்கையின் நகலை முன்னரே என்னிடம் அளித்திருப்பின் அவரைப் பேச அனுமதித் திருப்பேன் என்று துணைத்தலைவர் கூறியதைக் கேட்டு அம்பேத் கர் வியப்படைந்தார். ஆயினும் அம்பேத்கர் மாலை 6 மணிக்குப் பேசலாம் என்று துணைத்தலைவர் தெரிவித்தார். அம்பேத்கர் தன் உரையின் அறிக்கையை முன்னதாகவே தரவேண்டும் என்பது முன்தணிக்கை செய்வதாகாதா என்று குன்ஸ்ருவும், காமத்தும் வினவினர். வேறொரு கேள்விக்கு விடையளித்த துணைத்தலைவர், நாடாளுமன்றத்தின் உரிமைகளையும், பெருமைகளையும் கட்டிக் காக்கும் பொறுப்பில் தான் இருப்பதால், இங்கே படிக்கப்படும் அறிக்கையில் பொருத்தமற்றதோ, அவதூறானதோ ஏதுமில்லை

என்பதைத்தான் பார்க்க வேண்டியிருக்கிறது என்று கூறினார். அதன்பின் துணைத்தலைவர் அம்பேத்கரை நோக்கி 'மாண்புமிகு அமைச்சர் அவர்களே! .... என்று கூறித் தொடர்ந்து அவர் பேசுவதற்கு முன்னர், அம்பேத்கர் குறுக்கிட்டு 'இப்போது நான் அமைச்சராக இல்லை; இத்தகைய சர்வாதிகாரப் போக்கிற்கு நான் அடிபணியமாட்டேன்' என்று கூறி அவர் கொண்டு வந்திருந்த குறிப்புத்தாள்களை எடுத்துக் கொண்டு, தன் எதிர்ப்பைத் தெரிவிக் குந் தன்மையில் அவையை விட்டு வெளியேறினார். அரசியல் சட்டத்தை உருவாக்கிய தலைவரான அம்பேத்கர் அமைச்சர் பதவியைத் துறந்தவுடன் இத்தன்மையில் நாடாளுமன்றத்தை விட்டு வெளியேற நேரிட்டது.

இவ்வாறெல்லாம் நிகழ்ந்துவிட்டதைக் கண்டு பெரும்பாலான உறுப்பினர்கள் வருந்தினார்கள். அவர்கள் அம்பேத்கரின் பேச்சைக் கேட்க வேண்டுமென்று ஆவலுடன் இருந்தனர். அவர் அவையை விட்டு வெளியேறும்போது, அவரைப் பாராட்டும் வகையில் அவர்கள் கையொலி எழுப்பினர்.

நாடாளுமன்ற நடைமுறை விதி பிரிவு *128*இல், ஒரு அமைச்சர் பதவி விலகும்போதோ அல்லது மற்ற நேரத்திலோ நாடாளுமன்றத் தில் அறிக்கையைப் படிக்க விரும்பினால் அறிக்கையின் நகலை முன்னதாகவே அவைத் தலைவரிடம் அளிக்க வேண்டும் என்று திட்டவட்டமாகக் குறிப்பிடப்படவில்லை. அன்று மாலை *6* மணிக்குத்துணைத்தலைவர், அம்பேத்கர் அவருடைய அறிக்கை யின் நகலை ஆய்வு செய்வதற்காக வேண்டி முன்னதாகவே கொடுக்காமல் இருந்திருந்தால் கூட, இப்போது அவருடைய அறிக்கையை அவர் படிக்க அனுமதித்திருப்பேன் என்று கூறினார். காலை *10-15* மணிக்கு முன்தணிக்கை செய்ய வேண்டியது கட்டாயம் என்றிருந்த நிலைமையானது மாலை 6 மணிக்குத் தேவையில்லை என்று எவ்வாறு மாறிவிடும் என்பது எங்களுக்குப் புரியவில்லை என்று உறுப்பினர்கள் கூறினார்கள். அடுத்த நாளைய கூட்டத்தில் நாடாளுமன்றம், அம்பேத்கரை எதிர்க்கட்சித் தலைவராக வரவேற்றது.

அம்பேத்கர் நாடாளுமன்றத்திலிருந்து வெளிநடப்பு செய்த உடனேயே அவருடைய அறிக்கையைப் பத்திரிகைகளுக்கு அளித்தார். அய்ந்து காரணங்களால் அவர் அமைச்சரவையோடு மாறுபடுவதாக அவ்வறிக்கையில் குறிப்பிட்டிருந்தார். தனக்குச்சட்ட அமைச்சர் பதவியை அளிக்க முன்வந்தபோது, பிறகுதிட்ட

அமைச்சர் பதவியை அளிப்பதாக வாக்களித்த நேரு, ஒவ்வொரு அமைச்சரவைக் குழுவிலும் எவ்வாறு தன்னைச் சேர்க்காமல் விட்டுவிட்டார் என்பதை அம்பேத்கர் அவ்வறிக்கையில் விளக்கி யிருந்தார். தீண்டப்படாத வகுப்பினரின் முன்னேற்றத்தில் அரசு அக்கறையற்று இருக்கிறது என்று அவர் குற்றஞ்சாட்டியிருந்தமை இரண்டாவது செய்தியாகும். காஷ்மீர் குறித்த இந்திய அரசின் கொள்கையுடன் அவர் முரண்பட்டு நின்றார். 'காஷ்மீர் பிரச்சினை யைத் தீர்ப்பதற்குச் சிறந்த வழி காஷ்மீரைப் பிரிப்பதேயாகும்; இந்தியா-பாகிஸ்தான் பிரிவினையின்போது செய்தது போலவே இந்துக்களும் பௌத்தர்களும் வாழும் பகுதிகளை இந்தியாவுடனும், முஸ்லீம்கள் வாழும் பகுதிகளை பாகிஸ்தானுடனும் இணைத்திட வேண்டும் என்று கூறினார். நண்பர்களைவிட எதிரிகளையே அதிகமாக உருவாக்கும் இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை அம்பேத்கர் முரண்பட்ட நான்காவது செய்தியாகும். தவறான அயல்நாட்டுக் கொள்கையின் விளைவாக இதற்கெனக் கிடைத்த மொத்த ஒதுக்கீடான 350 கோடி ரூபாயில் 108 கோடி ரூபாயை இராணுவத்திற்காகச் செலவிட வேண்டியுள்ளது; எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய நெருக்கடி நிலையின் போது உதவிக்காகச் சார்ந்து நிற்பதற்கு இந்தியாவிற்கு நண்பர்களே இல்லாத காரணத்தால்தான் இந்த அளவிற்குப் பெருந்தொகையை இராணுவத்திற்காக இந்தியா செலவிடுகிறது என்று கூறினார். இந்துச் சட்டத்திருத்த மசோதாவின் பால் நேரு கொண்டிருந்த அக்கறையின்மையே அய்ந்தாவது குற்றச்சாட்டாகும். நேருவுக்கு இந்துச் சட்டத்திருத்த மசோதாவின் பால் ஈடுபாடு இருந்தபோதிலும் அதை எப்படியும் நிறைவேற்றிட வேண்டும் என்ற ஆர்வமோ மனத்திட்பமோ அவரிடம் இல்லாதிருந் தது என்று அம்பேத்கர் கூறினார். என்னுடைய உடல்நலிவு காரணமாக நான் அமைச்சரவையிலிருந்து விலகவில்லை; எனக்கு ஏற்பட்ட ஏமாற்றமே விலகலுக்குக் காரணமாகும்; என்னுடைய உடல் நலன் பாதிக்கப்பட்டிருக்கிறதே என்பதற்காகக் கடமையைக் கைவிடுகிற மனிதருள் கடைசி ஆளாகத்தான் நான் இருப்பேன் என்று அவர் கூறினார்.

அம்பேத்கரின் ராஜிநாமா பற்றிப் பத்திரிகைகளின் கருத்தும் மக்களின் கருத்தும் அவருக்கு ஆதரவாகவேயிருந்தன. 'தி டைம்ஸ் ஆப் இந்தியா' ஏடு அதன் தலையங்கத்தில் 'நவீன மனு என்கிற மணிமுடியை டாக்டர் அம்பேத்கர் இழந்துவிட்டார்; ஆயினும் அமைச்சர் பதவியைத் துறக்கும்போது வேறு எவரும் அம்பேத்கர் அளவிற்குச் சாதனைகளைத் தன் வாரிசாக விட்டுச் சென்றிருக்க

மாட்டார்கள்; அமைச்சரவையில் திறமையாளர்கள் அளவுக்கு மீறிய எண்ணிக்கையில் இல்லை; தெளிவாக உய்த்துணரக் கூடிய அறிஞரும் பொதுநலப் பணிகளில் பேரார்வத்துடன் ஈடுபட்டுக் கடுமையாக உழைக்கக் கூடியவருமான அம்பேத்கர் அமைச்சரவை யிலிருந்து விலகியதால் அமைச்சரவையின் அறிவொளிதான் மங்கியதேயன்றி வேறொன்றுமில்லை. அரசியலில் ஏற்பட்ட பழைய நிகழ்ச்சிகள் பற்றிய நினைவுகள் நீண்டகாலம் நீடிப்ப தில்லை என்பது உண்மையேயாயினும், அம்பேத்கர் பழைய பகை உணர்வுகளை மறந்துவிட்டுத்தான் ஏற்றுக்கொண்ட புதிய பொறுப்புகளுக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப ஈடுகொடுத்துத்தன்னால் உயர்ந்து நிற்க முடியும் என்பதைக் காட்டினார். இத்தகைய திறமை சான்ற அரசியல்வாதியை இந்தியா இழந்திடக் கூடாது; நாட்டின் நிர்மாணச் செயல்பாடுகளிலிருந்து விலகி டாக்டர் அம்பேத்கர் மீண்டும் வகுப்புவாத அரசியலுக்குள் புகுவாராயின் அஃது அவருக்கும் இந்நாட்டிற்கும் பேரிழப்பாகவே முடியும்; டாக்டர் அம்பேத்கர் வலிமைசான்ற நண்பராக இருப்பதைப் போலவே எளிதில் வெல்ல முடியாத எதிரியாகவும் திகழ்கிறார். அவருடைய ஒப்பரிய திறமையைக் கடந்த சில ஆண்டுகளாக நாம் பார்த்து வருகிறோம். அவர் இதே தன்மையில் தொடர்ந்து செயல்பட்டால் இந்த நாடும் அவருடைய வகுப்பு மக்களும் பயனடைவார்கள் என்று குறிப்பிட்டிருந்தது.

பம்பாயிலிருந்து வெளிவந்த 'நேஷனல் ஸ்டாண்டர்டு' பத்தி ரிகை, திட்டம் அல்லது நிதி அல்லது வணிகம் மற்றும் தொழில் அமைச்சராகப் பொறுப்பு வகிப்பதற்கு டாக்டர் அம்பேத்கருக்கு இணையானவர்கள் மிகச் சிலரே உள்ளனர்; அம்பேத்கர் அமைச்சர் பதவியிலிருந்து விலகியிருப்பதால் நாட்டுக்கு ஏற்படும் இழப்பு அவர் எதிர்க்கட்சியில் இருந்தவாறு செய்யும் ஆக்கப்பூர்வமான பணிகளால் ஈடு செய்யப்பட்டு விடும்' என்று எழுதியது. பம்பாய் 'ப்ஃரி பிரஸ் ஜெர்னல்' பத்திரிக்கை, இதுபோன்று வருந்தத்தக்க முறையில் தகுதி சான்ற அம்பேத்கரை அமைச்சரவையிலிருந்து வெளியேறுமாறு செய்ததற்காகத் தன் வருத்தத்தை. வெளிப்படுத்தி எழுதியது. நாடாளுமன்றத்தின் துணைத் தலைவர் அம்பேத்கர் அவருடைய பதவி விலகல் பற்றிய அறிக்கையைப் படிக்கக் கூடாது என்று தன் விருப்பத்திற்கு அளித்த தீர்ப்பு பற்றி இப்பத்திரிகை 'மேலும் துணைத்தலைவர் நடுநிலை பிறழ்ந்து நடந்து கொண்டார். பொருத்தமற்ற, அவதூறான, முறைகேடான அறிக்கை களை அவையில் படிப்பதைத் தடுத்து நிறுத்திடும் அதிகாரம்

அவைத் தலைவருக்கு உண்டு என்று அவர் கூறியது அம்பேத்கரின் அறிக்கையைப் பழிதூற்றிட முயல்வது போன்றதாகும். இது அமைச்சரின் மீது வேண்டுமென்றே எடுக்கப்பட்ட கடுமையான நடவடிக்கையாகும். திட்டமிட்டிருந்தவாறு சட்ட அமைச்சரான அம்பேத்கரின் அறிக்கையைப் படித்திட அனுமதித்திருக்க வேண்டும்' என எழுதியது.

இச்சமயத்தில் மகாராட்டிரத்தில் இருந்த விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சியின் தலைவர்களுக்கும், தீண்டப்படாத சாதிகள் பேரவையின் தலைவர்களுக்கும் இடையே தேர்தல் உடன்பாடு காண்பது பற்றிப் பேச்சு வார்த்தை நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதே போன்று சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் களுக்கும் தீண்டப்படாத சாதிகள் பேரவையின் தலைவர்களுக்கும் இடையில் இன்னொருபக்கம் பேச்சுவார்த்தை நடைபெற்றது. இப்பேச்சு வார்த்தைகள் சில மாதங்கள் தொடர்ந்து நடந்தன. செயப்பிரகாச நாராயணனும், அசோக் மேத்தாவும் ஆச்சாரிய தாண்டே மூலம் அம்பேத்கருடன் தொடர்பு கொண்டனர். ஆச்சாரிய தாண்டே தில்லியில் அம்பேத்கரைச் சந்தித்தார். சங்கர்ராவ் மூரே தலைமையில் இயங்குகின்ற விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி இரஷ்யாவின் கொள்கைகளை ஆதரிப்பதாக இருப்பதுடன் வகுப்புவாத நோக்கங்கொண்ட ஒரு முதன்மையான மராட்டிய அமைப்பாக இருக்கிறது என்று அம்பேத்கர் கருதினார். ஆகவே விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சியுடன் எத்தகைய தொடர்பும் வைத்துக் கொள்ள அவர் மறுத்துவிட்டார். மேலும் மூரே கம்யூனிஸ்ட்டுகளின் ஆதரவாளராக இருக்கிறார் என்று செயப் பிரகாச நாராயணனும் அம்பேத்கரிடம் கூறியிருந்தார்.[117]

தீண்டப்படாத சாதிகள் பேரவை அதனுடைய தலைவரான அம்பேத்கர் மிக நுட்பமாகத் தயாரித்திருந்த தேர்தல் அறிக்கையை ஆய்வு செய்வதற்காகப், புதுதில்லியில், 1951 அக்டோபர் மாதம் முதல் கிழமையில் கூடியது. தீண்டப்படாத சாதிகள் பேரவை யானது தேர்தலில் காங்கிரசு இந்து மகாசபை, கம்யூனிஸ்டு கட்சி ஆகிய எவற்றுடனும் உடன்பாடு வைத்துக் கொள்ளாது என்று அறிவித்தது. ரேடிக்கல் டெமாக்கரெட்டிக் கட்சியினரின் கருத்து குறிப்பிடத்தக்கதாகும். திருமதி மணிபென் கரா ஆச்சாரிய தாண்டேவிடம் தீண்டப்படாத சாதிகள் பேரவையின் தேர்தல் அறிக்கையை எம். என். ராய் பாராட்டுவதாகக் கூறினார். காஷ்மீர் பிரச்சினை குறித்து அம்பேத்கர் கொண்டுள்ள கருத்துகள் சரியே என்று ராய் கூறினார்.

அம்பேத்கர் அமைச்சர் பதவியைத் துறந்து விட்டதால் இப்போது சுதந்திரமாகச் செயல்படும் நிலையில் இருந்தார். எனவே மீண்டும் அரசியலில் இறங்கிச் செயல்படலானார். அக்டோபர் மாதக் கடைசி வாரத்தில் ஜலந்தரில் ஒரு பொதுக் கூட்டத்தில் அவர் பேசினார். தீண்டப்படாத சாதியினரின் நலனில் காங்கிரசுக் கட்சிக்கு உள்ளார்ந்த அக்கறை இல்லை; நேரு முசுலீம்களை நிறைவு செய்வதில் மட்டுமே அளவிற்கு மீறிய ஆர்வமுடன் இருக்கிறார். அவர் தீண்டப்படாத மக்களைப் பற்றிக் கவலைப்படு வதே இல்லை என்று அக்கூட்டத்தில் அம்பேத்கர் கூறினார். அதன்பின் சில நாட்கள் கழித்து அம்பேத்கர் லக்னோ பல்கலைக் கழகக் கூட்டமொன்றில் உரையாற்றினார். பிற்படுத்தப்பட்ட மக்கள்பால் இந்நாடு அக்கறையற்று இருப்பது குறித்து அவர் எச்சரித்தார். சமத்துவமான நிலையை அடைவதற்காக அவர்கள் எடுக்கும் முயற்சியில் வெற்றிபெற முடியாத நிலைக்கு அவர்கள் தள்ளப்படுவார்களானால் அதன்பின் அவர்கள் கம்யூனிச வழியைத் தான் மேற்கொள்ள வேண்டியதாயிருக்கும்; இதனால் இந்த நாட்டின் போக்கே சிதறிச் சின்னாபின்னமாகி விடும் என்று எச்சரித்தார். அக்கூட்டத்தில் காஷ்மீர் சிக்கல் குறித்துப் பேசிய அம்பேத்கர் காஷ்மீர் முழுவதையும் நம்மால் காப்பாற்ற முடியாவிட் டாலும், அங்குள்ள நம்முடைய உடன்பிறப்புகளாக உள்ளவர் களையேனும் நாம் காப்பாற்றிட வேண்டும்; இருக்கின்ற உண்மை யான நிலையின் தன்மை இது; இதை மூடி மறைப்பதில் பயனில்லை என்று குறிப்பிட்டார்.

1951 நவம்பர் 18ஆம் நாள் அம்பேத்கர் பம்பாயில் அவருடைய வழக்கமான தங்குமிடத்திற்குத் திரும்பினார். அவர் பம்பாயை அடைந்தபோது அவருக்கு விக்டோரியா டெர்மினசில் தீண்டப்படாத சாதிகள் பேரவையும் சோசலிஸ்ட் கட்சியும் இணைந்து மாபெரும் வரவேற்பளித்தன. அந்த இனிய வரவேற்பு நிகழ்ச்சிக்குப் பின்னர் அம்பேத்கரைச் சித்தார்த்தா கல்லூரிக்கு ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். பம்பாயில் இருக்கும் நாட்களில் அம்பேத்கர் சித்தார்த்தா கல்லூரியில் தங்குவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். பம்பாயை அடைந்தபின் தேர்தலுக் காகத் தன் கட்சியைத் தயார்படுத்தும் பணியில் ஈடுபட்டார். தேர்தலில் காங்கிரசுக்கு எதிரான ஒரு முன்னணியை உடனே உருவாக்கினார். பம்பாய் சௌபாத்தியில் நடைபெற்ற கூட்டத்தில் 'இந்தியாவுக்குச் சுதந்திரம் வாங்கிக் கொடுத்தவர் சுபாஸ் சந்திர போஸ்தானே தவிர காங்கிரசுக் கட்சி அல்ல' என்று கூறினார்.

அடுத்த நாள் மாலை சர் கவாஸ்ஜி ஜகாங்கீர் அரங்கில் தீண்டப்படாத சாதிகள் பேரவையும் சோஷலிஸ்ட் கட்சியும் இணைந்து நடத்திய கூட்டத்தில் அம்பேத்கர் பேசினார். காங்கிரசு அமைச்சரவைகள் மக்களுக்குத் தூய்மையான ஆட்சியை அளிக்கத் தவறிவிட்டன. காங்கிரசுக் கட்சியின் தலைவராக இருக்கின்ற நேரு இந்திய ஆட்சியில் உள்ள ஊழல் உடனடியாகத் தலையிட்டுக் களையுமளவிற்குப் பெருங்கேடானதாக இல்லை என்று கூறியிருப்பது மிகவும் வேதனை தருவதாக இருக்கிறது என்று அக்கூட்டத்தில் அம்பேத்கர் கூறினார். காங்கிரசுக் கட்சிக்கு நன்றி மறந்தவராக அம்பேத்கர் ஆகிவிட்டார் என்று கூறப்பட்ட குற்றச்சாட்டுக்கு அவர் பதிலளித்தபோது 'எந்தவொரு மனிதனும் தன் சுயமரியாதையை இழந்து நன்றி செலுத்த மாட்டான். எந்தவொரு நாடும் தன் சுதந்திரத்தை இழந்து நன்றி செலுத்தாது; எந்தவொரு பெண்ணும் தன் கற்பை இழந்து நன்றி செலுத்த மாட்டாள்' என்ற அய்ரிஷ் தத்துவ மேதையின் மேற்கோளை எடுத்துக்காட்டிப் பேசினார்.

மற்றொரு கேள்விக்கு அம்பேத்கர் பதிலளித்தபோது, எஸ். கே. பாட்டீலின் முயற்சியால்தான் அவர் அமைச்சரவையில் சேர்க்கப்பட்டார் என்று கூறப்படுவது உண்மையன்று என்று கூறினார். அரசமைப்புச் சட்ட அவையில் நான் இடம் பெறுவதை மிகக் கடுமையாக காங்கிரசு எதிர்த்த நிலையில், நான் அமைச்சரானது என் வாழ்வில் நடந்த பெரும் வியப்பான நிகழ்ச்சிகளில் ஒன்றாகும் என்று அக்கூட்டத்தில் கூறினார். நேரு என்னை அவருடைய அறைக்கு அழைத்தார்; அமைச்சர் பதவியை அளித்தார் என்று அவர் மேலும் கூறினார். இது ஒரு தேர்தல் பிரச்சாரப்பேச்சு என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். அம்பேத்கர் அமைச்சரவையில் சேர்க்கப்படுவது பற்றி சர்தார் வல்லபாய் பட்டேலும், எஸ். கே. பாட்டீலும், ஆச்சாரிய தாண்டேவும் கூடிப்பேசி முயற்சித்தனர் என்று கூறப்படுவது உண்மையேயாகும்.

பம்பாயில் நரே பூங்காவில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் அம்பேத்கர் உரையாற்றினார். தீண்டப்படாத வகுப்பு மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களின் நலன்களில் காங்கிரசு அக்கறை செலுத்தாமல் இருக்கிறது என்று அக்கூட்டத்தில் கூறினார். 1951 நவம்பர் 25ஆம் நாள் பம்பாயில் சிவாஜி பூங்காவில் இரண்டு இலட்சம் மக்கள் கலந்து கொண்ட மாபெரும் கூட்டத்தில்

அம்பேத்கர் பேசியபோது, நேரு சோசலிஸ்ட் கட்சியில் சேர்ந்து இந்த நாட்டை வழிநடத்திச் செல்ல வேண்டும் என்று ஒரு வேண்டுகோள் விடுத்தார். இந்தியாவில் வளரும் நிலையில் உள்ள சனநாயகத்தை வலுவாகக் கட்டியமைப்பதற்கும், ஆளுங்கட்சி வரம்பு மீறிப்போகாமல் பார்த்துக் கொள்வதற்கும் ஒரு எதிர்க்கட்சி இருக்க வேண்டியதன் தேவையைக் குறித்து அக்கூட்டத்தில் வலியுறுத்தினார்.

பம்பாயிலும் சென்னையிலும் நேரு சூறாவளித் தேர்தல் பிரச்சாரப் பணியை மேற்கொண்டார். இங்குப் பேசிய கூட்டங்களில் சோசலிஸ்ட் கட்சியும் தீண்டப்படாத சாதிகள் பேரவையும் தேர்தல் கூட்டு வைத்துக் கொண்டிருப்பது சிறிதும் பொருத்தமற்றது என்று நேரு கண்டித்தார். அம்பேத்கர் கிட்டத்தட்ட நான்கு ஆண்டுகள் அமைச்சராக இருந்தார். ஆனால் அரசினுடைய வெளிநாட்டுக் கொள்கையை அமைச்சரவைக் கூட்டம் எதிலும் அவர் எதிர்க்கவில்லை; இப்போது அயல்நாட்டுக் கொள்கை பற்றி அம்பேத்கர் குறை கூறுவது எனக்கு வியப்பாகவும் புதிராகவும் இருக்கிறது; இந்துச் சட்டத் திருத்த மசோதா பற்றிய விவாதத்தின் போது டாக்டர் முகர்ஜிக்கு தான் அளித்த பதில் அம்பேத்கருக்கு நினைவில் இருக்கும் என்று நம்புகின்றேன் என்று நேரு கூறினார்.

காங்கிரசை முனைப்பாக எதிர்த்திட வேண்டும் என்ற துடிப்பில் அம்பேத்கர் பம்பாயில் முக்மதியர்களிடையே பேசிய ஒரு கூட்டத்தில் முசுலிம்களுக்குத் தனி வாக்காளர் தொகுதி இருக்க வேண்டியதன் இன்றியமையாமையை வலியுறுத்திக் கூறினார். அரசியல் சட்டத்தின் தந்தையான அம்பேத்கரே இதுபோல் பேசுவது வருந்துதற்குரியதாகும் என்று அவருடைய ஆதரவாளர்களில் பலரும் கருதினர்.

காங்கிரசுக் கட்சிதான் அப்போது நாட்டில் மிகப் பழைய கட்சியாகவும், சிறந்த முறையில் கட்டியமைக்கப்பட்ட வலுவான கட்சியாகவும் இருந்தது. முறையாகவும் எழுச்சி ததும்பும் வகையிலும் காங்கிரசுக் கட்சி தன் தேர்தல் பிரச்சாரத்தைப் பல மாதங்களாகச் செய்து வந்தது. மேலும் அது ஆளுங்கட்சியாகவும் இருந்தது. தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுத்தித் தன் கட்சியைச் சரியான முறையிலும் அதிக அளவிலும் இயக்கிட அம்பேத்கரால் இயலவில்லை. நலிவுற்றிருந்த உடல்நிலை காரணமாகத் தேர்தல் பிரச்சாரத்திற்காகப் பம்பாயை விட்டு அவர் வெளியே செல்ல முடியவில்லை. அம்பேத்கர் முதலில் தொழிலாளர் நலத்துறை

அமைச்சராகவும் அதன்பின் நேருவின் அமைச்சரவையில் சட்ட அமைச்சராகவும் இருந்ததால் கடந்த பத்து ஆண்டுகளாகத் தில்லியிலேயே இருக்க நேரிட்டதால் அவருடைய கட்சியுடன் நெருக்கமான தொடர்பை வைத்துக்கொள்ள முடியாது போயிற்று. மேலும் அவருடைய கட்சியினுடையவும் சோசலிஸ்ட் கட்சியினுடையவும் ஆன வலிமையையும் திறமையையும் பற்றி அம்பேத்கர் சரியாகக் கணிக்க முடியாத நிலையிலிருந்தார். 1952 சனவரி மாதம் நாடாளுமன்றத்திற்கும் மாகாணச் சட்டசபைகளுக்கும் தேர்தல்கள் நடந்தன. நேருவின் தலைமையில் காங்கிரசு மாபெரும் வெற்றியைக் குவித்தது. அம்பேத்கரும் சோசலிஸ்ட் கட்சியினரும் தேர்தல் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டனர். அம்பேத்கர் 1,23,576 வாக்குகள் பெற்றார். அவரை எதிர்த்து நின்று வெற்றி பெற்ற காங்கிரசு வேட்பாளரான என்.எஸ்.கஜ்ரோல்கர் 1,37,950 வாக்குகள் பெற்றார். ஒதுக்கப்பட்ட இடத்திற்காக அளித்திருக்கப் பட வேண்டிய 50,000 வாக்குகள் திட்டமிட்டே வீணாக்கப் பட்டன.

இது அம்பேத்கருக்கு மாபெரும் தோல்வியாகும். வானத்திலிருந்து தலைகுப்புற விழுந்ததுபோல் அம்பேத்கரின் தோல்வி இருந்தது. அரசியலில் நன்றியுணர்ச்சிக்கு இடமே இல்லை என்பது இதன்மூலம் மீண்டும் நிரூபணமாயிற்று. அம்பேத்கரின் மீது புகழ்மாரி பொழிந்த அதே சமூகம் இப்போது அவருக்கு நன்றி காட்டக்கூட முன்வரவில்லை. காஷ்மீரைப் பிரித்திட வேண்டும் என்று அவர் கருத்துரைத்தமையும், முசுலிம்களுக்குத் தனி வாக்காளர் தொகுதி வேண்டும் என்று பம்பாயில் முகமதியரின் கூட்டத்தில் பேசியமையும், தேர்தல் கூட்டங்களில் ஆக்கபூர்வமான கருத்துகளை முன்வைக்காமையும், முக்கியமாக முறையாகக் கட்டப்படாத அவருடைய கட்சியின் வலிமையின்மையும் அவருடைய கட்சி அத்தேர்தலில் படுதோல்வி அடைந்ததற்குக் காரணங்களாகும். அம்பேத்கரின் தோல்வியைப் பற்றி எழுதிய ஒரு பத்திரிகை, அம்பேத்கர் அவருடைய தேர்தல் பிரச்சாரம் முழுவதிலும் காங்கிரசு அரசின் குறைகளை வலியுறுத்திப் பேசினாரே தவிர, அதற்கு மாற்றாக, அவருடைய கட்சியின் ஆக்கப்பூர்வமான திட்டங்கள் என்ன என்பதைக் கூறவில்லை என்று எழுதியது. அம்பேத்கரின் சொல்லாற்றல் மிக்க தளபதியான ராஜ்போஜ் நாடாளுமன்றத்திற்கும், இளம் தளபதியான பி. சி. காம்ளே பம்பாய் மாகாணச் சட்டசபைக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்கள் இருவரைத் தவிர அவருடைய கட்சி வேட்பாளர்கள் அனைவரும் தேர்தலில் தோற்றனர்.

தேர்தல் முடிந்ததும் முடிவுகள் அறிவிக்கப்படுவதற்கு முன்பே அம்பேத்கர் பம்பாயிலிருந்து தில்லிக்குச் சென்றார். சனவரி 5ஆம் நாள் தில்லியிலிருந்து அவர் வெளியிட்ட அறிக்கையில் தேர்தலின் போது பம்பாய் பொதுமக்கள் காட்டிய பேராதரவு இந்த அளவிற்குப் பொய்யாகப் போயிருப்பதால் இதைத் தேர்தல் கமிஷன் விசாரணை செய்ய வேண்டும்' என்று கோரியிருந்தார். சோசலிஸ்ட் கட்சித் தலைவரான செயப்பிரகாச நாராயணன் கல்கத்தாவிலிருந்து வெளியிட்ட அறிக்கையில், பம்பாயில் சோச லிஸ்டுகளுக்குப் பேராதரவு இருந்தது என்பது எல்லா வகையிலும் தெளிவாகத் தெரிந்தது. அவ்வாறிருக்கத் தேர்தல் முடிவில் இப்பெருந் தோல்வி ஏற்பட்டிருக்கிறது. டாக்டர் அம்பேத்கரைப் போலவே இத்தோல்வியை என்னால் புரிந்துகொள்ள முடிய வில்லை என்று கூறியிருந்தார். பம்பாய் நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டபோது, அம்பேத்கர் தில்லியில் இருந் தார். அம்பேத்கரின் தோல்வி அரசியல் வட்டாரத்தில் வருத்தத்தை யும், பெருவியப்பையும் ஏற்படுத்தியது. இத்தோல்வியைச் சந்திக்க நான் தயாராகவே இருந்தேன். அதனால்தான் இதைப்பற்றி மிகவும் வருந்தவில்லை என்று அம்பேத்கர் கூறினார். எஸ். ஏ. டாங்கே மேற்கொண்ட சூழ்ச்சி வேலைகளால்தான் அவர் தோற்றதாகக் கருதினார்.

IV

தேர்தலில் அம்பேத்கர் தோற்றபோதிலும் பொதுத்தொண்டு செய்வதற்கான வழியைக் கண்டறிய முடியும் என்ற நம்பிக்கையை அவர் இழக்கவில்லை. எனவே மாநிலங்கள் அவைக்கு அவர் தேர்ந்தெடுக்கப்படுவதற்காக அதற்குச் சம்பந்தப்பட்டவர்களையும் கட்சிகளையும் கண்டு பேசுமாறு கமலகாந்த் சித்ரேவை அம்பேத்கர் கேட்டுக் கொண்டார். அம்பேத்கரின் மனைவி இதுபற்றி கமலகாந்த் சித்ரேவுக்கு ஒரு கடிதம் எழுதினார். மொரார்ஜி தேசாய்க்குக் காங்கிரசுக் கட்சியினர் என்ன செய்கிறார்களோ அதை அம்பேத் கருக்கு அவருடைய கட்சியினர் செய்ய வேண்டும் என்று அக்கடிதத்தில் அம்பேத்கரின் மனைவி கோரியிருந்தார். உள்ளத் தைத் தொடும்படியான முறையில் எழுதப்பட்ட அக்கடிதத்தில் அம்பேத்கரின் மனைவி, 'அரசியல்தான் டாக்டர் அம்பேத்கருக்கு உயிர்மூச்சு போன்றதாகும்; அரசியலே அவருடைய மனநலத்திற் கும் உடல் வளத்திற்கும் மிகச் சிறந்த டானிக் போன்றதாகும். நாடாளுமன்றப் பணிகளில் ஈடுபடுவதுதான் அவருக்குப் பேரின்பம்

தருவதாகும். அவருடைய உடல்நலிவு என்பது அவருடைய மனத்தியல்போடு மிகவும் தொடர்புடையதாக உள்ளது. அதனால் அவர் இந்தியாவின் பிரதம மந்திரியாக ஆக்கப்பட்டால் (இது நடப்பது குதிரைக் கொம்புதான்) இப்போது நடப்பதற்கே துன்பப்படும் அவர் துள்ளி எழுந்து ஓடுவார் என்று நான் துணிந்து கூறுவேன். இந்தியாவின் பிரதமராக வேண்டும் என்பது அவருடைய விருப்பம். அவருடைய விருப்பம் என்றேனும் ஒருநாள் நிறைவேறட்டும் என்று நாம் பிரார்த்திப்போம்' என்று உயிர்த்துடிப் போடும், உண்மையான ஈடுபாட்டுடனும் எழுதியிருந்தார். 'தற்போது ஏற்பட்டுள்ள தோல்வியை அவர் தாங்கிக் கொண்டாரெனினும், கடந்த காலத்திய அரசியல் நிகழ்ச்சிகள் அவர் உடல்நலனைப் பாதித்து விட்டன; நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுச் சென்றதும் பலவற்றைச் செய்ய வேண்டும் என்று டாக்டர் அம்பேத்கர் திட்டமிட்டிருந்தார். உயர்ந்த தகுதியும் திறமையும் கொண்டுள்ள அம்பேத்கர் கட்டாயம் நாடாளுமன்றத்தில் இருக்க வேண்டியவராவார். அவருடைய நம்பிக்கைக்குரிய தளபதியான நீங்கள் செயலில் இறங்க வேண்டிய நேரம் இதுவேயாகும். இப்பணியை மேற்கொண்டு ஏமாற்றத்திற்கு இடமில்லாத வகையில் முடிப்பீர்கள் என்று நம்புகிறேன்' என்று அம்பேத்கரின் மனைவி சித்ரேவுக்கு எழுதிய கடிதத்தில் மேலும் குறிப்பிட்டிருந்தார்.

அம்பேத்கரின் மனைவி கேட்டிருந்தவாறு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. 1952 மார்ச் மாத நடுவில் அம்பேத்கர் பம்பாய் மாகாணத்திற்கென ஒதுக்கப்பட்ட மாநிலங்கள் அவைக்கான 17 இடங்களில் ஒன்றில் போட்டியிடுவதற்கான வேட்பாளர் விண்ணப்பத்தை அளித்தார். அம்மாத இறுதியில் அவர் மாநிலங்கள் அவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது. ஏப்பிரல் மாதம் அம்பேத்கருடைய பிறந்தநாளை அவருடைய வகுப்பு மக்கள் வழக்கம்போல் பேரார்வமுடன் கொண்டாடினர். அம்பேத்கர் காங்கிரசுக் கட்சியையும் இந்து மதத்தையும் கடுமையாகத் தாக்கி வந்ததால் காழ்ப்பு கொண்ட படித்த கூட்டம் கிராமங்களில் உள்ள தீண்டப்படாத வகுப்பு அப்பாவி மக்களிடையே அம்பேத்கரைப் பற்றிப் பொய்ப் பிரச்சாரம் செய்தது. 'உங்களுடைய பெருமைக்குரிய டாக்டர். அம்பேத்கர் சோர்ந்து போய்விட்டார். தில்லியிலிருந்துகொண்டு அரசியல் பண்ண வழியில்லாமல் பம்பாய்க்குத் திரும்பிவிட்டார். பம்பாயிலும் அவரால் தாக்குப் பிடித்து நிற்க முடியவில்லை; தோற்கடிக்கப்பட்டார். அவரால் இனி அரசியலில் செயல்பட முடியாது' என்று நயவஞ்சக

மனத்தினர் கூறினர். ஆனால் இவ்வாறு பழிதூற்றியவர்கள் மீது தீண்டப்படாத வகுப்பு ஏழை எளிய மக்கள் தம் சினத்தை உமிழ்ந்தனர்.

அம்பேத்கர் அவருடைய கல்விப் பணிகள் தொடர்பாகப் பல வேலைகளைச் செய்ய வேண்டியிருந்தது. அவுரங்காபாத்தில் இருந்த கல்லூரி தொடர்பாக மக்கள் கல்விக் கழகக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக அவர் அவுரங்காபாத் சென்றார். அங்கு அளித்த பேட்டியொன்றில் உஸ்மானியப் பல்கலைக் கழகத்தை ஓர் இந்துப் பல்கலைக் கழகமாக மாற்றிட எடுக்கப்படும் நடவடிக்கை மிகவும் தவறானதாகும்; மத்திய அரசு இதற்காக வடஇந்தியாவில் உள்ள ஏதேனும் ஒரு பல்கலைக் கழகத்தைத் தேர்ந்தெடுத்திருக்க வேண்டும் என்று கூறினார்.

1952 மே மாதத்தின் கடைசி வாரத்தில் தொடங்க இருந்த மாநிலங்கள் அவையின் கூட்டத்தொடரில் கலந்து கொள்வதற்காக அம்பேத்கர் தில்லிக்குச் சென்றார். மாநிலங்கள் அவையில் இந்திய அரசின் பாதுகாப்புத்துறை வரவு-செலவுத் திட்டத்தைக் கடுமையாகத் தாக்கிப் பேசினார். நாட்டின் முன்னேற்றத்திற்கு இந்தப் பாதுகாப்புத்துறை வரவு-செலவுத் திட்டம் பெருந்தடையாக இருக்கிறது. நாட்டின் நலப்பணிகளுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டிய நிதியை இராணுவம் விழுங்கிக் கொண்டிருக்கிறது. இராணுவ பட்ஜெட்டில் அய்ம்பது கோடி ரூபாயைக் குறைத்தால் அது நாட்டிற்குப் பல வகையிலும் நன்மை பயக்கும். இந்தியாவின் அயல்நாட்டுக் கொள்கை நட்பையும், அமைதியையும் நோக்கமாகக் கொண்டதாக இருக்குமானால், பெரிய இராணுவத்தை வைத்துக் கொண்டிருக்க வேண்டிய அளவிற்கு எதிரிகள் என்று எவரேனும் இருப்பார்களா என்று அம்பேத்கர் கேட்டார்.

அவ்வேளையில் உத்திரப் பிரதேச ஜமீன்தாரி ஒழிப்பு மற்றும் நிலச்சீர்திருத்தச் சட்டம் தொடர்பான வழக்கில் உத்திரப் பிரதேச ஜமீன்தார்கள் சார்பில் உச்சநீதிமன்றத்தில் அம்பேத்கர் வாதாடினார். இச்சட்டத்தை இயற்றுவதற்கு உத்தரப் பிரதேசச்சட்டமன்றத்திற்குப் போதிய அதிகாரம் இல்லை என்றும், இதில் பொதுநல நோக்கம் இல்லை என்றும் அம்பேத்கர் வாதிட்டார். ஆனால் உச்சநீதிமன்றம் இவ்வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டது.

அப்போது ஜுன் 5ஆம் நாள் கொலம்பியாப் பல்கலைக் கழகத்தில் நடைபெறவிருந்த பட்டமளிப்பு விழாவின்போது

அம்பேத்கருக்கு 'டாக்டர் ஆஃப் லாஸ்' என்ற பட்டம் அளிக்கப்படவுள்ள செய்தி பொதுத்தேர்தலுக்கு முன்பே வெளி யாகியிருந்தது. கற்றோர்க்கு உலகம் முழுவதும் மரியாதை கிடைக்கிறது என்பதற்கு இது ஒரு சான்றாகும்.

இந்த டாக்டர் பட்டத்தை அம்பேத்கருக்குக் கொலம்பியா பல்கலைக்கழகத்தின் தலைவராக இருந்த ஜெனரல் ஐசனோவர் அளிப்பதாக இருந்தது. அப்போது அவர் வகித்த அமைச்சர் பதவிப் பொறுப்புகளும் அதன் பின்னர் தேர்தல் வேலைகளும் அம்பேத்கர் இப்பயணத்தை மேற்கொள்வதற்குத் தடைகளாக இருந்தன. டாக்டர் பட்டத்தை அம்பேத்கரே நேரில் வந்து பெற்றுக் கொள்ள இயலாத நிலையில் அப்பட்டத்தை வழங்கிட அது தயங்கியது. போதிய அளவிற்கு அந்நியச் செலாவணி இல்லாததால் நியூயார்க்கிற்குத் தன்னுடைய மனைவி உடன்வர முடியவில்லை என்று அம்பேத்கர் கூறினார்.

மே 31ஆம் நாள் சனியன்று அம்பேத்கர் தில்லியிலிருந்து பம்பாய்க்குத் திரும்பினார். அன்றிரவு பம்பாயில் இந்தியக்கிரிக்கெட் கிளப்பில் சித்தார்த்தா கல்லூரியின் முதல்வர் டாக்டர் வி.எஸ். பதங்கரும், பதிவாளர் கே. வி. சித்ரேவும் அம்பேத்கருக்கு விருந்தளித்துப் பாராட்டினர். அந்நிகழ்ச்சியில் பேசிய டாக்டர் பதங்கர், இந்தியாவில் உள்ள ஒவ்வொரு பல்கலைக் கழகமும் இந்திய அரசியல் சட்டத்தின் தந்தையான டாக்டர் அம்பேத்கரைக் கௌரவிக்க வேண்டும் என்று இதுவரை நினைக்காதது வியப்பாக இருக்கிறது. அம்பேத்கர் மாணவராக இருந்த பம்பாய் பல்கலைக் கழகம்கூட இதற்காக எந்தவொரு முயற்சியையும் மேற்கொள்ள வில்லை; இந்நிலையில் ஓர் அயல்நாட்டுப் பல்கலைக் கழகம் அவரைக்கௌரவிக்கும் முதல் வாய்ப்பைப் பெற்றுள்ளது என்று கூறினார். அப்பாராட்டுரைக்குப் பதிலளித்து அம்பேத்கர் பேசினார். 'கடுமையாகத் தாக்கிப் பேசும் இயல்புடையவன் என்று என்னைப் பற்றி மற்றவர்கள் கூறியபோதிலும், அதிகாரத்தில் இருப்பவர் களோடு பல வேளைகளில் நான் மோதியிருந்த போதிலும், நான் இந்தியாவிற்கு எதிராகக் கடுமையாக ஏதேனும் சொல்வேனோ என்று எவரும் அச்சங் கொண்டிருக்க மாட்டார்கள். எந்தவொரு நிகழ்ச்சியின் போதும் இந்தியாவிற்கு நான் துரோகம் செய்ததில்லை; நாட்டின் நலனையே முதன்மையானதாகக் கருதி எப்பொழுதும் நான் நடந்து கொண்டிருக்கிறேன். வட்டமேசை மாநாட்டில் கூட நாட்டின் நலன்களைக் காப்பதில் காந்தியைவிட இருநூறு மைல்கள் நான் முன்னதாகச் சென்றிருந்தேன், என்று கூறினார்.

1952 ஜுன் முதல்நாள் அம்பேத்கர் பம்பாயிலிருந்து டி.டபிள்யூ.ஏ. விமானத்தில் நியூயார்க்குக்குப் புறப்பட்டுச் சென்றார். அவருடைய தொண்டர்களும் ஆதரவாளர்களும் சாந்தா குரூஸ் விமான நிலையத்திற்குப் பெருந்திரளாக வந்திருந்து அவரை வழி அனுப்பி வைத்தனர். ஜுன் 5ஆம் நாள் பட்டமளிப்பு விழா நடந்தது. கொலம்பியாப் பல்கலைக் கழகம் சட்டத்தில் கௌரவ டாக்டர் பட்டத்தை (Doctor of Laws) ஆறு பேருக்கு வழங்கியது. அப்பல்கலைக்கழகம் தன்னுடைய 198ஆவது பட்டமளிப்பு விழாவில் அம்பேத்கருக்குக் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கிய போது, அம்பேத்கரை, 'இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை வரைந்தவர்; அமைச்சராக இருந்தவர்; மாநிலங்களவையின் உறுப்பினர்; இந்தியாவில் முன்னோடியாகத் திகழும் சிறந்த குடிமக்களில் ஒருவர்; மாபெரும் சமூகச்சீர்திருத்தவாதி; மனித உரிமைகளுக்காக தீரமுடன் போராடும் வீரர்' என்று கூறிப் பாராட்டியது. கொலம்பியா பல்கலைக் கழகத்தைச் சார்ந்த பதினேழு பள்ளிகளையும், கல்லூரிகளையும் சேர்ந்த 6848 பேருக்குப்பட்டமளிக்கப்பட்ட அந்நிகழ்ச்சிகள் பெருந்திரளாகக் கூடியிருந்தோர் முன்னிலையில் அம்பேத்கர் டாக்டர் பட்டத்தைப் பெற்றுக்கொண்டார். கனடா நாட்டின் அயல்நாட்டு அமைச்சகச் செயலாளர் லஸ்டர். பி. பியர்சனுக்கும், பிரான்சு நாட்டின் புகழ்மிக்க இலக்கிய வரலாற்று ஆசிரியர் எம். டேனியல் மோர்னட்டுக்கும் அவ்விழாவில் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது.

ஜுன் 14ஆம் நாள் அம்பேத்கர் பம்பாய் திரும்பினார். அடுத்த நாள் பத்திரிகையாளர்க்கு அம்பேத்கர் அளித்த பேட்டியொன்றில் அமெரிக்க நாட்டு மக்கள் பாகிஸ்தானுக்கு ஆதரவாக இருப்பதாகவே எனக்குத் தோன்றுகிறது என்று கூறினார். இந்த நிலை எவ்வாறு உருவாயிற்று என்று நான் அமெரிக்காவில் கேட்டபோது, பாகிஸ்தான் அயல்நாட்டுப் பணிக்கெனப்பிரதிநிதிகளையும் தூதுவர்களையும் தேர்ந்தெடுப்பதில் எப்பொழுதும் மிகுந்த கவனம் செலுத்துகிறது. இந்தியாவோ அநுபவமில்லாதவர்களை அயல் நாடுகளுக்கு அனுப்புகிறது என்று கூறினார்கள்', என அம்பேத்கர் அப்பேட்டியின்போது குறிப்பிட்டார். இந்தியாவில் இந்திய மாணவர்கள் பெறும் கல்வி தரமற்றதாக இருக்கிறது. நல்ல வழிகாட்டுதலையோ சிறந்த அறிவையோ இக்கல்வி வழங்காது. இக்கல்வியிலிருந்து ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்ற வேட்கையையோ சுதந்திரச் சிந்தனையையோ பெறமுடியாது என்று இந்தியாவிற்கு வந்து சென்ற அமெரிக்க நாட்டுப் பேராசிரியர்கள் கருதுகிறார்கள் என்று அம்பேத்கர் தெரிவித்தார்.

V

சில நாட்கள் கழித்து அம்பேத்கரும் சோசலிஸ்ட் கட்சித் தலைவர் அசோக் மேத்தாவும் தேர்தல் வழக்குகளைத் தொடுத்தனர். இரட்டை உறுப்பினர் தொகுதியில் வாக்காளர்கள் அவர்களுடைய இரண்டு வாக்குகளையும் ஒரே வேட்பாளருக்கே அளிக்குமாறு செய்யப்பட்ட பிரச்சாரம் தேர்தல் மோசடியாகும். அதனால் இத்தேர்தல்கள் செல்லாது என்று அறிவிக்கப்பட வேண்டும் என்று கோரியிருந்தனர். இவ்வழக்கில் எஸ். ஏ. டாங்கே, டாக்டர் தேஷ்முக், டாக்டர் வி. பி. காந்தி, கஜ்ரோல்கர் மற்றும் சிலர் பிரதிவாதிகளாகச் சேர்க்கப்பட்டிருந்தனர்.

அம்பேத்கர், அசோக்மேத்தா ஆகியோரின் தேர்தல் வழக்கு விசாரணை 1952 அக்டோபர் மாதம் முதல் வாரத்தில் பம்பாயில் தேர்தல் நடுவர் குழுவின் முன்னிலையில் தொடங்கியது. இவ்வழக்கில் தனக்காக அம்பேத்கரே வாதாடினார். வாக்குகளை வீணாக்குமாறு செய்யப்பட்ட தேர்தல் பிரச்சாரம் சட்டத்திற்குப் புறம்பானதாகும்; வாக்காளர்களிடையே வகுப்புவாத உணர்ச்சியைத் தூண்டி விடுவதற்காக வேண்டுமென்றே சட்டத்தை மீறிய செயலாகும் இது என்று அம்பேத்கர் வாதிட்டார். ஆயினும் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

தீண்டப்படாத சாதிகளின் அமைப்புகள் பம்பாயில் நரே பூங்காவில் ஏற்பாடு செய்திருந்த ஒரு பொதுக்கூட்டத்தில் அம்பேத்கர் உரையாற்றினார். அக்கூட்டத்தில் அவர் கட்டட நிதிவசூல் பொறுப்பாளர்களைக் குறைகூறியதுடன் அவர்கள் உடனடியாக வசூல் கணக்குகளை ஒப்படைக்க வேண்டும் என அறிவுறுத்தினார். அவருடைய வகுப்பைச் சார்ந்த படித்தவர்களிடம் அவர் கொண்டிருந்த நம்பிக்கையை இழந்துவிட்டதாகவும், படிக்காதவர்களையே நம்பியிருப்பதாகவும் கூறினார். அம்பேத்கர் எந்த அளவிற்குச் சினங்கொண்ட உள்ளத்தோடு இருந்தாரெனில், அவர் பத்து நிமிடங்கள் பேசிய நிலையில் மேடையில் யாரோ ஒருவர் முணுமுணுப்பதைக் கேட்டதும், 'இதை நான் பொறுத்துக் கொள்ள மாட்டேன்; நாளையே என்னிடம் கட்டட நிதிக் கணக்குகளை ஒப்படைக்க வேண்டும், என்று உறுதிபடக் கூறினார். அம்பேத்கர் இவ்வாறு பேசியமை அவருடைய நெருங்கிய தோழர்களிடையே ஒரு படபடப்பை ஏற்படுத்தியது. கட்டட நிதி வசூல் 1931ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. ஆனால் நிதி திரட்டுவது அதுவரை முடிவடையாமலிருந்தது.

அம்பேத்கர் நவம்பர் முதல் கிழமையில் புதுதில்லிக்குச் சென்றார்; டிசம்பர் மாதம் பம்பாய்க்குத் திரும்பினார். 1952 டிசம்பர் 16ஆம் நாள் எல்பின்ஸ்டன் கல்லூரியில் மாணவர்களின் ஆண்டு விழாவில் 'தற்கால மாணவர்களின் பிரச்சினைகள்' என்ற தலைப் பில் உரையாற்றினார். இன்றைய நவீன உலகின் தேவைகளுக்கு ஏற்பப் பல்கலைக் கழகக் கல்வி திருத்தியமைக்கப்பட வேண்டும் என்றும், பல்கலைக் கழகம் வெறும் எழுத்தர்களை உருவாக்கும் ஒரு மய்யமாக இருக்கக்கூடாது என்றும் அம்பேத்கர் அவ்வமயம் குறிப்பிட்டார்.

1952 டிசம்பர் மாதம் பூனா மாவட்டச் சட்ட நூலக உறுப்பினர்கள் எல். ஆர். கோகலேவின் உருவப்படத்தைத் திறக்கவும், அவர் அந்நூலகத்திற்காக அளித்திருந்த நூல்கள் அடங்கிய பிரிவைத் தொடங்கி வைக்கவும் வேண்டி அம்பேத்கரை அழைத்திருந்தனர். 1952 டிசம்பர் 22ஆம் நாள் பூனாவில் அம்பேத்கர் அந்த நூலகத்தில் கோகலேவின் படத்தைத் திறந்து வைத்தார்; நூலகத்தில் புதிய பகுதியையும் தொடக்கி வைத்தார். அந்நிகழ்ச்சியில் 'சனநாயகம் செம்மையாகச் செயல்படுவதற்கான முன்தேவைகள்' என்ற தலைப்பில் அம்பேத்கர் உரையாற்றினார். அன்று அவர் ஆற்றிய அரிய சொற்பொழிவில், 'சனநாயகம் எப்பொழுதும் தன் வடிவத்தை மாற்றிக் கொண்டேயிருக்கிறது; ஒரு நாட்டில் அது எப்போதும் மாறாத ஒன்றாக இருப்பதில்லை; தேவைகளுக்கு ஏற்ப சனநாயகத்தின் வடிவம் மாறுதலடைகிறது என்று குறிப்பிட்டார். நவீன சனநாயகத்தின் குறிக்கோள் சர்வாதிகார அரசினை ஒடுக்குவது என்றில்லை; மாறாக மக்களுக்கு நல்வாழ் வளிப்பதே அதன் நோக்கமாக இருக்கிறது என்று அம்பேத்கர் மேலும் கூறினார். சனநாயகம் என்பது கலந்து பேசுவதன் மூலம் நடத்தப்படும் அரசு என்று வால்ட்டர் பெக்ஹாட் என்பவரும், மக்களால் மக்களுக்காக மக்களே ஆளுவது என்பதே சனநாயகம் என்று ஆபிரஹாம் லிங்கனும் இலக்கணம் வகுத்துள்ளதை அம்பேத்கர் எடுத்துக்காட்டிப் பேசினார். குருதி சிந்தாமல் மக்களின் பொருளாதார, சமூக வாழ்வில் புரட்சிகரமான மாற்றங்களைக் கொண்டுவரவல்ல வடிவமைப்பும் செயல்முறையும் கொண்டதாக வுள்ள அரசுதான் உண்மையான சனநாயகத்தைப் பெற்றிருப்ப தாகும் என்பதே நான் கொண்டுள்ள இலக்கணம் ஆகும் எனக் குறிப்பிட்டார்.

அம்பேத்கர் நவீன சனநாயகம் பற்றி மேலும் விரிவாக விளக்கினார். சனநாயகம் வெற்றிகரமாகச் செயல்படுவதற்கான முதலாவது தேவை சமூகத்தில் சகிக்க முடியாத அளவில்

சமத்துவமற்ற நிலைகள் இருக்கக் கூடாது; அங்கே ஒடுக்கப்பட்ட வகுப்போ அல்லது நசுக்கப்பட்ட வகுப்போ இருக்கக்கூடாது. அரசு தவறு செய்கிறதா என்பதைச் சுட்டிக் காட்டுவதற்கு ஓர் எதிர்க்கட்சி இருக்க வேண்டும் என்பது இரண்டாவது தேவையாகும். சட்டத்தின் முன்னும் நிர்வாகத்திலும் சமத்துவம் இருக்க வேண்டும் என்பது மூன்றாவது தேவையாகும்; அரசியல் சட்ட நெறிமுறைப்படி ஆட்சி நடத்துவது நான்காவதாகும். சனநாயகத்தில் நாட்டில் சமூக ஒழுக்க நெறிமுறைகள் கடைப்பிடிக்கப்படும் என நம்பப்படுகிறது, எனவே சமூக ஒழுக்க நெறிகளை அரசு பேணுவது அய்ந்தாவது தேவையாகும். மக்களின் விழிப்புணர்ச்சி இன்றியமையாததாகும்; இது சனநாயகத்தின் ஆறாவது தேவையாகும் என்று அம்பேத்கர் விளக்கினார். சிந்தனையைத் தூண்டும்படியான இப்பேச்சின் மீது பத்திரிகைகளில் பல நாட்கள் விவாதங்கள் நடந்தன.

அம்பேத்கர் கோல்காப்பூர் சென்றார். அங்கே 1952 டிசம்பர் 24ஆம் நாள் இராசாராம் கல்லூரியில் மாணவர் ஆண்டுவிழாவில் உரையாற்றினார். மனித வாழ்க்கையின் அடித்தளம் அறிவே ஆகும். மாணவர்களின் அறிவாற்றலை வளர்த்திடவும் அறிவு வேட்கையைத் தூண்டி விடவும் எல்லாவகையான முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று கூறினார். மாணவர்கள் சிந்திக்கும் ஆற்றலைப் பெருக்கிக் கொள்ள வேண்டும்; பெற்ற அறிவைப் பயன்படுத்திட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். டாக்டர் சவிதா அம்பேத்கர் அவ்விழாவில் பரிசுகளை வழங்கினார்.

கோல்காப்பூரில் ஆயிரக்கணக்கான பெண்கள் அணிதிரண்டு அம்பேத்கருக்கு ஒரு வரவேற்பு விழா நடத்தினார்கள். தனக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்கு அம்பேத்கர் பதிலளித்துப் பேசினார். அப்போது இந்துச் சட்டத் திருத்த மசோதா குறித்து அவருடைய கருத்தைக் கூறினார். இந்தியாவில் முன்னணியில் உள்ள பெண் தலைவர்களில் யாருக்குமே இந்தியப் பெண்களின் சமூக முன்னேற்றம் பற்றி உண்மையான அக்கறை இல்லை; ஒருதுளி நஞ்சு பட்டதால் கெட்டுவிட்ட ஒரு குடம் பால் போன்று இப்போது இந்துச் சட்டத் திருத்த மசோதாவின் நிலைமை ஆகிவிட்டது. இந்துச் சட்டத் திருத்த மசோதா அதனுடைய பழைய வடிவில் நிறைவேற்றப்பட வேண்டுமானால் இரண்டு பெண்கள் உண்ணாவிரதம் இருந்தால் போதும் என்று அம்பேத்கர் அக்கூட்டத்தில் கூறினார்.

பெல்காம் மாவட்டத் தீண்டப்படாத சாதிகள் பேரவையின் சார்பில் 50,000 மக்கள் கலந்து கொண்ட பேரணியில் அம்பேத்கர் உரையாற்றியபோது, ஆளுங்கட்சிக்கு ஓர் எச்சரிக்கை விடுத்தார். அடுத்த பொதுத் தேர்தலுக்குள் தீண்டப்படாத வகுப்பு மக்களின் வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படுத்தாவிட்டால், தீண்டப்படாத சாதிகள் பேரவை கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள நேரிடும்; அந்நடவடிக்கைகளால் அரசின் இயக்கமே நிலைகுலைந்து போகும்; பெருங்குழப்பம் விளையும் என்று ஆவேசமாகக் கூறினார். கடந்த காலத்தில் பிரெஞ்சுப் புரட்சியின்போதும் இரஷ்யப் புரட்சியின்போதும் ஏற்பட்ட பயங்கரமான விளைவு களை எடுத்துக் காட்டி, 'என்னுடைய வகுப்பு மக்களின் துயரங்கள் துடைக்கப்படும் என்று நான் இன்னும் ஒரு சில ஆண்டுகள் வரை அல்லது அடுத்த பொதுத் தேர்தல் வரை காத்திருப்பேன். பேச்சுவார்த்தைகளின் மூலம் என் வகுப்பு மக்களின் துன்பங்களை நீக்குவதற்கான புதிய திட்டங்களை உருவாக்காவிட்டால் நான் தீவிரமான நடவடிக்கைகளில் இறங்குவேன்'[118] என்று அம்பேத்கர் முழங்கினார். இப்பேச்சு தீண்டப்படாத வகுப்பு மக்களின் எதிர்காலம் பற்றிய பிரச்சினையை முழுமையாக நாட்டின்முன் கிளத்தியது.

எல்லாப் பத்திரிகைகளும் அம்பேத்கரின் இப்பேச்சைக் குறை கூறின. ஆயினும் அம்பேத்கர் இவ்வாறு பொறுமையிழந்து பேசுவதற்கான காரணத்தையும் நிலைமையையும் சில பத்திரிகை கள் உணர்ந்திருந்தன. அம்பேத்கர் இதுபோன்ற எச்சரிக்கைகளை அவ்வப்போது விடுப்பது அவருக்கு வழக்கம் என்பதால், அவர் இப்போது விடுத்துள்ள எச்சரிக்கையைப் பெரிதுபடுத்தாமல் விட்டுவிட வேண்டுமென்று பல பத்திரிகைகள் கருத்துரைத் திருந்தன.

தக்காணத்திலுள்ள அய்தராபாத் உசுமானியாப்பல்கலைக்கழகம் 1953 சனவரி 12ஆம் நாள் அம்பேத்கரின் சிறப்புகளையும், சாதனைகளையும் மதித்துப் போற்றுகின்ற வகையில், அவருக்கு இலக்கியத்தில் சிறப்பு டாக்டர் பட்டம் வழங்கியது. அம்பேத்கரின் மேதைத் தன்மையையும் உயர்வினையும் அங்கீகரித்து அவர் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை வகுத்தளித்த தந்தை என்பதைப் போற்றி அவருக்கு டாக்டர் பட்டம் வழங்கிய பெருமையை இந்தியாவிலேயே இப்பல்கலைக்கழகம்தான் பெற்றது.

சப்பானில் இந்திய-சப்பானிய கலாச்சாரச்சங்கத்தின் துணைத் தலைவராக இருந்த எம். ஆர். மூர்த்திக்கு, தில்லியில் 1953 பிப்ரவரி மாதம் பி. என். ராஜ்போஜ் நடத்திய வரவேற்பு விழாவில் அம்பேத்கரும் கலந்து கொண்டார். அந்நிகழ்ச்சியில் அம்பேத்கர் பேசியபோது, 'இன்றைய தலைமுறையினராயினும் அல்லது வருங்கால வழித்தோன்றல்களாயினும் புத்தர் கொள்கை, காரல் மார்க்சு கொள்கை ஆகிய இரண்டில் ஒன்றைத்தான் இனி தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டியிருக்கும் என்று நான் உறுதியாக நம்புகின்றேன்'[119] எனக் குறிப்பிட்டார். மேலை நாடுகளைவிட கீழை நாடுகள் இப்போது முக்கியத்துவம் பெற்றவைகளாக ஆகிவிட்டன. ஆதலால் புத்த நெறிகளைப் பின்பற்றாவிட்டால் அய்ரோப்பிய வரலாற்றில் நடந்த மோதல்கள் ஆசியாவிலும் நடக்குமோ என்று நான் அஞ்சுகிறேன் என்றும் கூறினார்.

அம்பேத்கர் விடுத்த எச்சரிக்கை வீணாகிவிடவில்லை. 1953 ஏப்பிரல் மாதம் நாடாளுமன்றத்தில் தீண்டாமையை அகற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கோரி உறுப்பினர்கள் ஆரவாரம் செய்தனர். இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான விரிவானதும் தெளிவானதுமான சட்டத்தை உருவாக்க வேண்டும் என்ற கோரும் ஒரு தீர்மானம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இந்த விவாதத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்களில் சிலர் 'தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்று ஏட்டில் மட்டும் இருக்கிறதே தவிர, அது நடப்பில் இல்லை' என்று குற்றஞ்சாட்டினர். தீண்டாமைக் குற்றங்களைத் தண்டிப்பதற்குக் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதே இப்போதுள்ள மிக அவசரமான பணியாகும் என்று உணரப்பட்டது. அரிசன வகுப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், அரிசன வகுப்பு சட்டமன்ற உறுப்பினர் ஒருவரும் தானும் ஓர் உணவு விடுதியில் காப்பி குடித்தபின், அந்த உணவு விடுதியின் உரிமையாளர் எவ்வாறு காலிக் குவளைகளைக் காலால் உதைத்துத் தள்ளினார் என்பதை அவையில் விளக்கினார். அய்தராபாத்தைச் சார்ந்த அரிசன வகுப்பு அமைச்சர் ஒருவர் கோயிலுக்குள் நுழைய முயன்றபோது தடியேந்திய மக்களால் எவ்வாறு மிரட்டப்பட்டார் என்றும், தில்லியில் அரிசன வகுப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர்க்கு முடிதிருத்தும் கடையில் முகம் மழிக்க மறுக்கப்பட்டது பற்றியும் நாடாளுமன்றத்தில் எடுத்துரைக்கப்பட்டது. ஆயினும் சாதி இந்துத் தலைவர்கள் அம்பேத்கர் இன்னமும் வெறுப்புடனேயே இருக்கிறார்; பழையனவற்றை அவர் மறக்கவில்லை என்று குறைபட்டுக் கொண்டனர்.

1953 மே மாதத்தில், பம்பாயில் அம்பேத்கர் பௌத்தத்தைப் பெரிதும் புகழ்ந்து ஓர் உரையாற்றினார். பௌத்தத்தில் அவருக்குள்ள நம்பிக்கையையும் பௌத்தத்தைப் பிரச்சாரம் செய்வதில் அவருக்குக்குள்ள ஈடுபாட்டையும் அப்போது வலியுறுத்தினார். இதற்குச் சில நாட்கள் கழித்து ஒலிபரப்புவதற்கான ஒரு தொடருக்கு கிரௌலி என்பவருக்கு அம்பேத்கர் பேட்டியளித்தார். அப்பேட்டியில் அம்பேத்கர் சமூக அமைப்பை மாற்றியமைக்காவிட்டால், இப்போதுள்ள சமூக அமைப்பு மிக விரைவில் தகர்ந்துவிடும் என்று கூறினார். இந்தியாவில் சனநாயகம் சரியாகச் செயல்படாவிட்டால் அதற்கு மாற்றுவழி கம்யூனிசம் போன்றதொன்றாகவே இருக்கும் என்று அவர் மேலும் கூறினார்.[120]

சூலை ஆகஸ்ட் மாதங்களில் அம்பேத்கர் அவருடைய கல்லூரிகளின் வேலைகளில் முழுமையாக ஈடுபட்டிருந்தார். அம்மாதங்களில் பெரும்பாலான நாட்களில் அவர் அவுரங்காபாத்தி லேயே தங்கியிருந்தார். அங்கே அய்தராபாத் தீண்டப்படாத சாதிகள் பேரவையின் தொண்டர்களும் தலைவர்களும் கலந்து கொண்ட ஒரு கூட்டத்தில் உரையாற்றினார். நாட்டின் வாழ்வில் அரசியலே எல்லாம் என்றும் அரசியலே முடிவானது என்றும் இல்லை; ஆகவே தீண்டப்படாத வகுப்பினர் தளராத ஊக்கத்துடன் இந்தியப் பிரச்சினையை அரசியல், சமூகம், மதம், பொருளாதாரம் என்கிற அனைத்துக் கோணங்களிலும் ஆய்வு செய்யவேண்டும். அதன்பின் ஒரு மனதாக ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காகப் போராடவேண்டும் என்று அக்கூட்டத்தில் கூறினார். அவருடைய வகுப்பு மக்களுக்கு அம்பேத்கர் ஓர் எச்சரிக்கையையும் அக்கூட்டத்தில் விடுத்தார். இந்துக்கள் போற்றுகிற புண்ணிய இடங்களுக்கு, வழிபடுவதற்காகச் செல்லுகிற தீண்டப்படாத வகுப்பு மக்கள் சாதிவிலக்கம் செய்யப்படுவார்கள்; இத்தகைய புனிதப் பயணங்கள் அவர்களுக்கு எந்தவொரு நன்மையையும் தராது என்று எடுத்துக் கூறினார்.

அவுரங்காபாத்தில் அம்பேத்கர் இருந்தபோது பத்திரிகையாளர் களுக்கு அளித்தபேட்டி ஒன்றில், மொழிவழி மாநிலங்களின் விளைவுகள் எப்படியிருந்த போதிலும், மொழிவழிப்பட்ட ஆந்திர மாநிலம் அமைக்கப்பட்டதும் மற்ற மொழிவழி மாநிலங்களும் உருவாகும் என்று கூறினார். நல்ல முறையில் நிர்வாகம் நடைபெற உதவியாக இருக்குமென்றால் மராத்தி பேசுகின்ற இரண்டு மாநிலங்கள் அமைக்கப்படுவதை வரவேற்பதாக அம்பேத்கர்

சொன்னார். அச்சமயம் காஷ்மீரில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் பற்றி அம்பேத்கர் கருத்துரைத்தார். காஷ்மீர் மக்களின் பாதுகாப்பிற்காக இந்தியர்கள் கோடிக் கணக்கில் பணம் செலவிட்டிருப்பதால், காஷ்மீர் மக்கள் இந்தியாவுடன் இணையப்போகிறார்களா இல்லையா என்று கேட்பதற்கு இந்தியர்களுக்கு முழுஉரிமை இருக்கிறது என்று கூறினார். அவுரங்காபாத்தில் அவர் தங்கியிருந்த போது, தன்னைச் சந்திக்க வருபவர்களுக்கு கல்லூரியின் பரந்த வளாகத்தில் ஒரு மரக்கன்றை நடவேண்டும் என்பதை ஒரு விதியாக வைத்திருந்தார். அதனால் நூற்றுக்கணக்கான மரக்கன்றுகள் நடப்பட்டன. இதற்குமுன் ஒருமுறை மகத்தில் தங்கும் விடுதியின் வளாகத்தில் அம்பேத்கர் முன்னின்று தன் தோழர்களுடன் கோடாரி, களைக்கொட்டு, கடப்பாரை ஆகியவற்றுடன் சுத்தம் செய்துள்ளார்.

இக்காலக் கட்டத்தில் ஒரு புயலால் அமைதி திடீரென்று குலைந்தது. புதிய ஆந்திர மாநிலத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட ஆந்திரமாநில மசோதா தொடர்பாகவே இப்புயல் எழுந்தது. இம்மசோதா மீது 1953 செப்டம்பர் 2ஆம் நாள் மாநிலங்கள் அவையில் அம்பேத்கர் பேசியபோது மொழிவழி மாநிலங்களை அமைப்பதில் ஊசலாட்டமான கொள்கையைக் கொண்டிருப்பதற்காக அரசைக் கண்டித்தார். மொழி அடிப்படையில் மாநிலங்களைத் திருத்தி அமைப்பதால் இந்தியா சிதறுண்டு போகும் என்ற கருத்தை அம்பேத்கர் வன்மையாக மறுத்துப் பேசினார். ஆந்திர மாநிலம் உருவாக்கப்பட வேண்டும் என்பதற்காக பொட்டி ஸ்ரீராமுலு அவருடைய உயிரைத் தியாகம் செய்திருக்கிறார்; ஒரு கட்சியினால் முன்பே ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு கொள்கையை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கோரி எந்த நாட்டிலேனும் எவரேனும் உயிர்த்தியாகம் செய்திருந்தால் அந்நாட்டு மக்கள் அந்த அரசையே தூக்கியெறிந்திருப்பார்கள் என மேலும் கூறினார்.

பெரும்பான்மையினராக உள்ளவர்களின் அடக்குமுறைகள், ஒடுக்குமுறைகள், சாதியக் கொடுமைகள் ஆகியவற்றிலிருந்து தீண்டப்படாத வகுப்பு மக்களின் உரிமைகளைப் பாதுகாத்திட தீண்டாமை ஒழிப்பு மசோதாவில் வழிவகை செய்யப்படவில்லை என்பதற்காக அம்பேத்கர் உள்துறை அமைச்சர் கட்ஜீவின் பேரில் குற்றஞ்சுமத்தினார். சிறுபான்மையினரின் நலன்களைப் பாதுகாப்பதற்கென மாநிலங்களின் ஆளுநர்களுக்குத் தனி அதிகாரம் இருக்கும் வகையில் அரசியல் அமைப்புச் சட்டத்தில் ஓர் ஏற்பாடு

இல்லாமைக்காக வருந்துவதாக அம்பேத்கர் குறிப்பிட்டார். மேலும் பேசும்போது 'நம்மிடையே ஒரு மரபு இருக்கிறது; நீங்கள்தானே அரசியல் சட்டத்தை உருவாக்கிய தந்தை என்று என்னிடம் எப்போதும் பலரும் சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். இதற்கு என்னுடைய பதில் இதுதான். நான் ஒரு வாடகைக் குதிரை போல் பயன்படுத்தப்பட்டேன்; என்னை என்ன செய்யச் சொன்னார்களோ, அதை என் விருப்பத்திற்கு மாறாகத்தான் செய்தேன்' என்று கூறினார்.

அம்பேத்கர் இவ்வாறு கூறியபோது, மாகாணங்கள் அவையில் பலர் குறுக்கிட்டுக் கடுமையாகப் பேசினார்கள். அதனால் விவாதம் மேலும் சூடானதாகவும் காரசாரமானதாகவும் மாறியது; உணர்ச்சி கள் கொப்பளித்துப் பொங்கின. 'நீங்கள்தானே அரசியல் அமைப் புச் சட்ட அவையில் இந்த அரசியல் சட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று வாதாடினீர்கள்? என்று ஒரு உறுப்பினர் பழித்துரைப்பது போல் கூறி, அம்பேத்கரின் மனக்கொதிப்பை மேலும் தூண்டிவிட்டார். உள்துறை அமைச்சர் கட்ஜூவும் அம்பேத்கரை நோக்கி 'நீங்கள் தானே அரசியல் அமைப்புச் சட்டத்தை வரைவு செய்தீர்கள்'? என்று கூறி எரிகிற நெருப்பை மேலும் கொழுந்துவிட்டெரியச் செய்தார். வழக்கறிஞர்கள் என்ற தன்மையில் நாங்கள் பலவற்றிற்காக வாதாடுகின்றோம் என்று முதல் குற்றச்சாட்டிற்கு அம்பேத்கர் விடையளித்தார். இரண்டாவது குற்றச்சாட்டிற்கு அவர் பதிலளித்தபோது உங்களுடைய குறை களுக்காக என்னைக் குற்றஞ்சாட்ட விரும்புகிறீர்கள் என்று குறிப்பிட்டுவிட்டு, பேரிடி இடிப்பதுபோல், 'நான்தான் இந்த அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கியதாக நண்பர்கள் என்னிடம் சொல்கிறார்கள்; ஆனால் இங்கே நான் ஒன்றைச் சொல்லத் தயாராக இருக்கிறேன். இந்த அரசியல் அமைப்புச் சட்டத்தைக் கொளுத்துகின்ற முதல் ஆளாக நான் இருப்பேன். இந்த அரசியல் அமைப்புச் சட்டம் எனக்கு வேண்டாம். யாருக்குமே இது பொருந்தாததாக இருக்கிறது. ஆனால் இந்த அரசியல் அமைப்புச் சட்டம் எப்படிப்பட்டதாக இருப்பினும் அதையே வைத்துக் கொள்வது என்று நம்மக்கள் விரும்பினால் பெரும்பான்மையினர் - சிறுபான்மையினர் என்று இந்தியாவில் இருப்பதை அவர்கள் நினைவிற் கொள்ளவேண்டும். சிறுபான்மை யினரை அங்கீகரிப்பது என்பது சனநாயகத்திற்கு ஊறு விளைவிக் கும் என்று கூறி, அதன்பேரால் சிறுபான்மையினரை ஒதுக்கிவிட முடியாது. சிறுபான்மையினர்க்குத் தீங்கு இழைக்கப்பட்டால்

மாபெரும் தீய விளைவுகள் இங்கே ஏற்படும் என்று நான் கூறவிரும்புகின்றேன். எங்களுடைய பம்பாய் மாகாணத்தில் சிறுபான்மையினர் இப்போது நடத்தப்படுவதைப் போலவே தொடர்ந்து நடத்தப்படுவார்களானால் - நான் குறுகிய பிரதேச நோக்கமுடையவனாக இருக்க விரும்பவில்லை; இறுதியில் என்ன விளைவுகள் ஏற்படுமோ என்பது எனக்குத் தெரியாது. என்னை ஒரு மராட்டியன் என்று சொல்லிக் கொள்ளவும் விரும்பாத நிலை ஏற்படுமோ என்று சிலபோது நான் அஞ்சுகிறேன். நான் இந்தியை விரும்புகின்றேன்; ஆனால் அதில் உள்ள சிக்கல் என்னவென்றால், இந்தி பேசும் மக்கள் இந்திக்கு எதிரிகளாக இருக்கிறார்கள்' என்று உணர்வு மேலிடத் தொடர்ந்து பேசினார்.

அம்பேத்கர் வெதும்பிய மனத்துடன் கடைசியாகக் கூறிய இரண்டு சொற்றொடர்கள் அவருடைய கடுஞ்சினப் புயல் அவருடைய உள்ளம் என்ற பாய்மரத்தை அடியோடு சாய்த்துவிட்டது என்பதையே காட்டுகின்றது. கடுமையாக அலைக்கழிக்கப் பட்ட கப்பல்போல் அவருடைய நிலைமை இருந்தது. அம்பேத்கரை அமைதிப்படுத்திட விரும்பிய அவைத்தலைவர், "டாக்டர் அம்பேத்கர் அவர்களே! நீங்கள் பேசுவது வரம்பு மீறியதாகும்" என்று கூறியதும் டாக்டர் அம்பேத்கரும், 'ஆம்! வரம்பு மீறிய பேச்சுத்தான்!' எனத்திருப்பிக் கூறினார்.

அம்பேத்கர் அன்று சாடியது அரசியல் அமைப்புச் சட்டத்தின் பேரில் நஞ்சை உமிழ்வது போன்றிருந்தது. முற்றிலுமாக மனக்கசப்புற்ற நம்பிக்கையிழந்த மனநிலையின் காரணமாகத் தான் அன்று அரசியல் அமைப்புச் சட்டத்தின் மீது சொல்மாரி பொழிந்து மிகக் கடுமையாகத் தாக்கினார். அவருடைய நியாயமான கோபத்துடன் பொறுமையிழந்த மனநிலையும் சேர்ந்து கொண்டதால் விளைந்ததே யாகும் இது. அம்பேத்கரின் கோப ஆவேசப் பேச்சுகள் பற்றி பத்திரிகைகள் தங்கள் வருத்தத்தைத் தெரிவித்தன. அரசியல் அமைப்புச் சட்ட அவையில் அரசியல் சட்ட மூன்றாவது சுற்று விவாதத்தின் முடிவில், அரசியல் சட்டத்தை நிறைவேற்றக் கோரி அம்பேத்கர் ஆற்றிய பெருமைக்குரிய பேச்சினை பத்திரிகைகள் அவருக்கு நினைவூட்டின. சிறுபான்மையினர்க்கு அரசியல் சட்டத்தில் மேலும் பாதுகாப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று அம்பேத்கர் கேட்பதைக் குறைகூறிப்பேசிய பி.கோதண்டராவ், 'நம்முடைய நவீன மனுதன்னை ஒரு தீண்டப்படாதவராக வரித்துக் கொள்வது மிகவும் வருந்துதற்குரியதாகும்' என்று கூறினார். தான்

பெற்ற குழந்தையையே மறுதலித்து, அக்குழந்தையின் கைகால் களைப் பிய்த்தெறிந்திட அனைவரையும் அழைக்கின்ற ஒரு தாய்போல் அம்பேத்கர் இருப்பதாகச் சிலர் பேசினார்கள்.

ஆயினும் இதற்கு அடுத்த வாரத்தில், இந்திய அரசே, சந்தடியின்றி அரசியல் சட்ட வரம்பை மீறியபோது அம்பேத்கரின் கோபமான மனநிலை மாறிவிட்டிருந்ததாகத் தெரிந்தது. அரசியல் சட்டத்தின் 356வது விதியைப் பயன்படுத்தி பெப்சூவில் குடியரசுத் தலைவர் ஆட்சியை மேலும் நீட்டித்திருப்பதற்காக அம்பேத்கர் அரசாங்கத்தைக் கடுமையாகக் கண்டித்தார். இது போன்ற செயல்கள் அரசாங்கத்தின் பெயருக்குக் களங்கம் ஏற்படுத்தும்; இது ஒரு தவறான செயலாகும்; இதைக் கட்டாயம் அரசு செய்திருக்கக் கூடாது என்று குறிப்பிட்டார். இராசகோபாலாச்சாரி யையும், மொரார்ஜிதேசாயையும் இரண்டு மாகாணங்களில் முதல மைச்சர்களாக ஆக்கியிருப்பதை அம்பேத்கர் அப்பேச்சின்போது கண்டித்தார். இராசகோபாலாச்சாரி சென்னை மாகாண மேலவை உறுப்பினர்; மொரார்ஜி தேசாய் பொதுத்தேர்தலில் தோற்கடிக்கப் பட்டவர்; இவ்விருவரையும் முதலமைச்சர்களாக அமர்த்தியிருப்பது இந்திய அரசாங்கம் அரசியல் அமைப்புச் சட்டத்தின் மீது தொடுத்துள்ள மிகக் கடுமையான தாக்குதலாகும் என்று கண்டனம் செய்தார்.

இதற்குச் சிலநாட்கள் கழித்துச் சிறப்புத் திருமண மசோதா விவாதத்திற்கு வந்தது. இதன்மீது மாநிலங்கள் அவையில் அம்பேத்கர் பேசியபோது, இந்துச் சட்டத்திருத்தத்தைப் பகுதிபகுதி யாகக் கொண்டு வந்துநிறைவேற்றுவது என்பது, சீர்திருத்தத்தை ஏற்படுத்துவதைவிட அதிகக் குழப்பத்தையே ஏற்படுத்தும் என்று கூறி எச்சரித்தார். 1872 ஆம் ஆண்டைச் சட்டத்தை முற்றிலுமாக அகற்றிவிட்டிருப்பதற்குப்பதிலாக, அதற்கு ஒரு திருத்த மசோ தாவை மட்டும் கொண்டுவந்திருக்க வேண்டும் என்று கருத்துரைத் தார். இந்துச் சமூகம் வைதீகமானது; அதனால் அரசு வாய்ப்புகளை நழுவவிடாமல் எச்சரிக்கையுடன் பயன்படுத்திக் கொள்ளவேண் டும்; எந்தெந்த மாற்றங்களை இந்துச் சமூகம் ஆதரிப்பதாகத் தோன்றுகின்றதோ அவற்றை உடனே நிறைவேற்றிடவேண்டும் என்று அவருடைய உரையின் இறுதியில் குறிப்பிட்டார்.

1953 செப்டம்பர் 18ஆம் நாள் அம்பேத்கர் மாநிலங்கள் அவையில் மரணவரி மசோதா மீது பேசியபோது, மரணவரி

விதிப்பதிலிருந்து கிடைக்கின்ற வருவாய் மரணவரிச் சட்டத்தை அமல்படுத்துவதற்கும், வரியை வசூலிப்பதற்கும் ஆகின்ற செல வைக்கூட ஈடுகட்டும் அளவிற்கு இருக்காது என்று கூறி இந்திய அரசை எச்சரித்தார். சில நாடுகளில் சிலவற்றைச் செய்திருக்கிறார்கள் என்பதற்காக அதை அப்படியே இங்கும் செய்யவேண்டும் என்ற பித்து இந்தியாவைப் பிடித்திருக்கிறது. கண்மூடித்தனமாக இந்தியா அய்ரோப்பாவைப் பின்பற்றக்கூடாது. அய்ரோப்பாவிற்கு நன்மை தரவல்லது, இந்தியாவிற்கு நன்மை தராததாகவும் இருக்கும். இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முன்னர் அய் ரோப்பியர்கள் அடைந்துள்ள வாழ்க்கைத் தரத்தினை இந்தியர்களும் பெற்றிருக்கிறார்களா என்று நாம் ஆய்வு செய்யவேண்டும் என்று அம்பேத்கர் கூறினார்.

இந்தியா ஒரு கம்யூனிச நாடாக இருந்திருப்பின் நிலைமையே வேறுவிதமாக இருந்திருக்கும். விரைவில் இந்தியா ஒரு கம்யூனிச நாடாக ஆகிவிடும் என்பதில் எனக்கு அய்யமேயில்லை என்று ஏளனத்தொனியில் அம்பேத்கர் குறிப்பிட்டார். ‘இந்தியா இரஷ்ய முறையைப் பின்பற்றாத வரையில் இந்தியாவில் மூலதனம் உருவாவதைத் தடுக்கின்ற எந்தவொரு நடவடிக்கையையும் எடுக் கக்கூடாது. நான் இந்த மசோதாவை எதிர்க்கவில்லை. ஆனால் இந்திய மக்களால் வெறுக்கப்படுகின்ற முதலாளிகளுக்கும் மூலதனத் திற்கும் இடையேயுள்ள வேறுபாட்டைத் தெளிவுபடுத்திட வேண் டும். இதனாலேயே நான் முதலாளிகளுக்கு ஆதரவாக இருக்கிறேன் என்று கருதக்கூடாது’ என்று அம்பேத்கர் மேலும் கூறினார்.

மராத்வாடாவில் தரிசு நிலங்களைக் கைப்பற்றுவதற்காகத் தீண்டப்படாத சாதிகள் பேரவையினர் தொடங்கியிருந்த சத்தியாக்கிர கத்தை அம்பேத்கர் 1953 நவம்பர் மூன்றாவது வாரத்தில் திரும்பப் பெற்றுக் கொண்டார். நிலத்தைக் கைப்பற்றுவதற்கான இப்போராட் டத்திற்குப் பேராதரவு கிடைத்ததைக் கருத்திற்கொண்டு இதனைத் திரும்பப் பெற்றுக் கொண்டார். சுமார் 1700 சத்தியாக்கிரகிகள் கைதாயினர்; இவர்களில் 1100 பேர் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட்டனர். இப்போராட்டத்தின்போது சில சத்தியாக்கிரகிகள் மரங்களை வெட்டியதற்காக அம்பேத்கர் தன் வருத்தத்தைத் தெரிவித்தார்.

அம்பேத்கர் அரசுமீது தொடுத்த கடுந்தாக்குதல்கள் எதிர்பார்த்த பயனை அளித்தன. அரசு 1953 டிசம்பர் மாத முதல் கிழமையில், தீண்டாமைச் (குற்றங்கள்) சட்டம் 1953’ என்ற தலைப்பிட்ட

மசோதாவை வெளியிட்டது; 1954 மார்ச்சு மாதம் இதை நாடாளுமன்றத்தில் முன்மொழிந்தது. தீண்டாமையை அடியோடு அகற்றுவதை நோக்கமாகக் கொண்ட இந்த மசோதா தீண்டாமையைக் கடைப்பிடித்தால் சிறைத் தண்டனை அளித்தல், அபராதம் அளித்தல், வணிக உரிமம், தொழில் உரிமம், வேலை பெறுதல் போன்றவற்றை ரத்து செய்தல் ஆகிய தண்டனைகள் அளிக்கப்படும் என்று அறிவித்தது. மேலும் இம்மசோதா இந்துக்கள் அல்லாதவர்களுக்கும் பொருந்தும் என்றும் கூறியது. அரசின் இந்த மசோதாவிற்குப் பொதுவான வரவேற்பும் ஆதரவும் இருந்தன. சிலநாட்கள் கழித்து இம்மசோதா மீது அம்பேத்கர் உரையாற்றிய போது பல ஆலோசனைகளைக் கூறினார்.

II

அம்பேத்கரின் உடல்நிலை மீண்டும் நலிவுற்றது. பம்பாயில் மீராபெல்லி ஓட்டலில் இரண்டு மாதங்களுக்கு மேல் தங்கியிருந்து அவர் தீவிர சிகிச்சை பெற்றுக் கொண்டார். நோய்வாய்ப்பட்டுப் படுக்கையில் இருந்தபோதிலும் அம்பேத்கர் 1954 சனவரி 4ஆம் நாள் ஞாயிறன்று பம்பாயில் ஃபேமஸ் ஸ்டுடியோவில் 'அட்ரே பிக்ச்சர்ஸ்' மராத்தி மொழியில் தயாரிக்கவிருந்த 'மகாத்மா புலே' என்ற திரைப்படத்தின் படப்பிடிப்பைத் தொடங்கி வைத்தார். மகாத்மா புலே திரைப்படத்தின் தயாரிப்பாளரான ஆச்சார்யா பி.கே.அட்ரேவின் முயற்சி வெற்றிபெறவேண்டும் என்று வாழ்த்திப் பேசிய அம்பேத்கர், இன்று எல்லோரும் அரசியலையும் திரைப்படத்தையும் தொழிலாக நாடிச் செல்கிறார்கள்; ஆனால் சமூக சேவைதான் மிகவும் மதிப்புடையதாகும். ஏனெனில் அதுதான் ஒருவருடைய பண்பை வளர்க்கிறது. நம்முடைய மிகச்சிறந்த சமூகச் சீர்திருத்தவாதிகளில் ஒருவரான ஜோதிபா புலேவின் நினைவுகளை அட்ரேயின் திரைப்படம் நமக்கு மீட்டளிக்கும் என்று கூறினார். ஆச்சாரியா அட்ரே எண்ணற்ற துறைகளில் திறமைகள் கொண்டவர்; அவர் தயாரித்த 'ஷியாம்சி ஆய்' என்ற திரைப்படத்திற்காகக் குடியரசுத் தலைவரின் தங்கப்பதக்கம் பெற்றவர். அத்தகைய அட்ரே புலேவின் வாழ்க்கையை உயிரோட்டமான முறையில் மிகச் சிறப்பானதொரு திரைப்படமாகத் தயாரித்தார். மிக முக்கியத்துவம் வாய்ந்த, வரலாற்றுச்சிறப்பு மிக்க இப்படத்தை அரும்பாடுபட்டு உருவாக்கியதற்காகக்குடியரசுத் தலைவரின் வெள்ளிப்பதக்கம் அட்ரேவுக்கு வழங்கப்பட்டது. இதற்கு முந்தைய ஞாயிற்றுக்கிழமை அம்பேத்கர் பம்பாயில் செயின்ட் சேவியர் கல்லூரித்

திடலில் அனைத்திந்தியச் சாயிபாபா பக்தர்கள் மாநாட்டைத் தொடக்கி வைத்து உரையாற்றினார். இன்று நம்முடைய மதத்தில் கடவுளும் இல்லை; ஒழுக்கமும் இல்லை. நம்முடைய சிந்தனையின் சீரழிவினால்தான் இந்த நிலை ஏற்பட்டது என்பதில் எனக்கு எள்ளளவும் அய்யமில்லை. மதத்தைத் தூய்மையானதாகவும் உயரிய நோக்கங் கொண்டதாகவும் மீட்டாக்கம் செய்ய வேண்டியது எதிர்காலச் சந்ததியினர் மேற்கொள்ள வேண்டிய பணியாகும். சாதுக்கள், துறவிகள், அல்லது மாய ஜாலங்கள் நிகழ்த்துவோர் போன்றவர்களின் உருவங்களை வழிபடுவது என்பது தவிர உண்மையான மதம் இன்று இந்தியாவில் இல்லை. மதம் அதன் தொடக்க காலத்தில் மனிதனின் ஆன்ம விடுதலையையே நோக்கமாகக் கொண்டிருந்தது. அதனுடைய இரண்டாவது கட்டத்தில், மனிதர்கள் ஒருவரிடம் மற்றவர் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்கிற ஒழுக்க விதிகளின் அடிப்படையில் சகோதரத்துவத்தைப் பேணுவதாக அமைந்திருந்தது. மூன்றாவது கட்டத்தில், மனிதர்கள் தங்களுடைய தேவைகளை நிறைவேற்றுவோரை வணங்கத் தலைப்பட்டனர். அதனுடைய இறுதிக்கட்டத்தில் மாயாஜாலம் செய்வோரை மக்கள் வழிபடலாயினர். மகான்களின் பெயரால் திரட்டப்படும் நிதியை மருத்துவமனைகள், கல்வி நிறுவனங்கள் அமைத்தல், ஏழைகளுக்கும் விதவைகளுக்குமான சிறு தொழில்கள் நிறுவுதல் போன்றவற்றுக்குச் செலவிடவேண்டும். நான் சாயிபாபாவின் பக்தன் அல்லன்; அவரை நான் சந்தித்ததும் இல்லை என்று அம்பேத்கர் அவருடைய உரையின் தொடக்கத்திலேயே குறிப்பிட்டார்.

1954 மார்ச்சு மாத நடுவில் மாநிலங்கள் அவையின் கூட்டத் தொடரில் கலந்துகொள்வதற்காக அம்பேத்கர் தில்லிக்குத் திரும்பினார். ஆனால், விரைவிலேயே, பந்தாரா மக்களவைத் தொகுதிக்கான இடைத்தேர்தலில் போட்டியிடுவதற்காக 1954 ஏப்பிரல் மாதம் கடைசி வாரத்தில் நாகபுரிக்குச் சென்றார். அங்குத் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களில் பேசினார். 'நாடு சீரழிந்து கொண்டிருக்கிறது; நான் தேர்ந்தெடுக்கப்பட்டுச் சென்றால், மக்களுக்காக எதிர்க்கட்சி வரிசையிலிருந்துகொண்டு மாற்றுக் கொள்கைகளைக் கூறுவேன்; அதற்காகத்தான் நான் தேர்தலில் நிற்கிறேன். காங்கிரசுடன் சமரசம் செய்துகொண்டால் நான் மக்களவையில் எளிதில் இடம் பெற்றுவிட முடியும்' என்று அத்தேர்தல் பிரச்சாரத்தின்போது கூறினார். நேருவின் அரசையும் தலைமையையும் அம்பேத்கர் கடுமையாகச் சாடினார். நேருவின் அயல்நாட்டுக் கொள்கை இந்தியாவை நட்பு

நாடுகளைப் பெற்றிராத ஒன்றாக ஆக்கிவிட்டது. நேரு காஷ்மீர் பிரச்சினையில் பெருந்தவறு செய்துவிட்டார்; அயோக்கியர்களுக்கு அடைக்கலம் அளித்துவிட்டார். இந்தியாவின் ஒருபுறத்தே இசுலா மிய நாடுகள் ஓர் அணியில் சூழ்ந்து நிற்கின்றன; மறுபுறத்தே ஆசியாவை வென்றெடுக்க வேண்டும் என்ற வேட்கையுடன் ரஷ்யாவும் சீனாவும் இந்தியாவைக் கம்யூனிச நாடாக்கிட எண்ணங் கொண்டுள்ளன என்று அம்பேத்கர் குறிப்பிட்டார்.

'நீங்கள் பயனுறு வகையில் விளங்க வேண்டுமானால், நயமான முறையில் பேசுவதை விட்டொழித்து விட்டு, தீவிரமாக வும், வேகமாகவும் செயல்பட வேண்டும்; தெளிவான உறுதியான ஒரு முடிவை நீங்கள் எடுக்க வேண்டும். நாடாளுமன்ற முறை அரசாங்கம் வேண்டும் என்று எண்ணுகிறீர்களா? இல்லையா? இதுவே இன்றுள்ள அரசியல் சூழ்நிலையில் நடுநாயகமாக விளங்கும் கேள்வியாகும். நாடாளுமன்ற அரசுமுறை வேண்டு மாயின், நாடாளுமன்ற அரசமைப்பினை ஏற்றுக்கொண்டுள்ள - மற்றும் இதற்கு எதிரான தாக்குதல்களிலிருந்து நாடாளுமன்ற முறையைக் காத்திட விரும்புகின்ற நாடுகளுடன் நாம் நட்பாக இருக்க வேண்டும். நாடாளுமன்றமுறை அரசமைப்பு வேண்டாமெ னில், நாளையே நாம் ரஷ்யாவுடனும், சீனாவுடனும் சேர்ந்துவிட வேண்டும். அவர்களுடனான நட்பை வளர்த்துக் கொள்ள வேண்டும்' என்று அம்பேத்கர் தன்னுடைய தேர்தல் பிரச்சாரத்தின் போது கூறினார். இந்த ஆட்சியின் செயல்பாட்டுக்கு நீண்ட காலம் வாய்ப்புத் தந்த பிறகும், எந்தவொரு பிரச்சினையையும் தீர்க்காத இந்த அரசாங்கத்தை மாற்றிவிட வேண்டியது மக்களின் நீங்காக் கடமையாகும் என்று கூறினார்.

கடந்த பொதுத் தேர்தலில் சோசலிஸ்ட் கட்சியின் வேட்பாளர் கள் அடியோடு தோற்றுவிட்டமை அம்பேத்கருக்கு மிகுந்த ஏமாற்றமளித்திருந்தது. சோசலிஸ்டுகளுக்கு எங்குமே அடித்தளம் இல்லை; நகரங்களில் அவர்கள் வளருவதற்கு வாய்ப்பு உள்ளது; ஆனால் கிராமப்புறங்களில் அவர்கள் வளருவதற்கு உள்ள வாய்ப்பு மிகவும் குறைவேயாகும்; கிராமப்புறங்களில் ஆதரவைப் பெற்றிறாத எந்தவொரு கட்சிக்கும் எதிர்காலம் இருக்காது என்று மேலும் அம்பேத்கர் கூறினார். சோசலிஸ்ட் கட்சியின் திட்டங்கள் கிராமப்புற மக்களின் நலன்களோடு தொடர்பற்றவைகளாகவும், நடுத்தரத்திற்குக் கீழேயுள்ள வகுப்பு மக்களுக்குக் கவலையூட்டுவன வாகவும் உள்ளதால் இவர்களுடைய ஆதரவைப் பெற முடியாது;

இப்படிப்பட்டவர்களைத் தவிர வேறு யாருடைய ஆதரவைச் சோசலிஸ்டுகள் பெற முடியும் என்று அம்பேத்கர் வினவினார். அதனால் அவருடன் இடைத்தேர்தலில் பொதுத் தொகுதியில் போட்டியிடுபவர் சோசலிஸ்ட் கட்சியைச் சாராத ஒரு சுயேச்சை வேட்பாளராக இருக்க வேண்டும் என்று விரும்பினார். ஆயினும் சோசலிஸ்ட் கட்சியைச் சார்ந்த அசோக்மேத்தாவை அவர் ஆதரித்தார்; அசோக் மேத்தா ஒரு சிறந்த வேட்பாளர் என்று அதற்குக் காரணம் கூறினார். 1954 மே முதல் வாரத்தில் பந்தாரா தொகுதிக்கான இடைத்தேர்தல் நடைபெற்றது. அம்பேத்கர் காங்கிரசு நிறுத்தியிருந்த அரிசன வேட்பாளரிடம் 8,381 வாக்குகள் வேறுபாட்டில் தோற்றார். அம்பேத்கருக்கு 1,32,483 வாக்குகள் கிடைத்திருந்தன. ஆயினும் அம்பேத்கருடன் இணைந்துநின்ற அசோக் மேத்தா காங்கிரசின் வேட்பாளரைத் தோற்கடித்தார்; மக்களவை உறுப்பினரானார்.

இடைத்தேர்தலின் முடிவுகள் அறிவிக்கப்படுவதற்கு முன்பு அம்பேத்கர் புத்தர் பிறந்தநாள் விழாவில் கலந்து கொள்வதற்காக இரங்கூனுக்கு விமானத்தில் சென்றார். அவர் தில்லியிலிருந்து இரங்கூனுக்குப் புறப்படுவதற்கு முன்னர், அவருடைய நம்பிக்கைக்குரிய தோழரான கே. வி. சித்ரேவுக்கு எழுதிய கடிதத்தில், 'இடைத்தேர்தலில் நான் தோற்றுவிடுவேன் என்று சில வட்டாரங்களிலிருந்து வந்த தகவல்கள் தெரிவிக்கின்றன; இது நிகழ முடியாத ஒன்றல்ல; அதற்கும் நான் தயாராக இருக்கிறேன்' என்று குறிப்பிட்டிருந்தார். அவருடைய தேர்தல் தோல்வியை இரங்கூனில் இருந்தபோது செய்தித்தாளில் படித்துத் தெரிந்துகொண்டார். இரங்கூனில் பதினைந்து நாட்கள் இருந்தபின் தில்லிக்குத் திரும்பினார்.

அம்பேத்கரின் உடல்நலம் தொடர்ந்து சீரற்றதாகவே இருந்தது. ஆயினும் அவர் மாநிலங்கள் அவையின் கூட்டத்தொடரில் கலந்துகொண்டார். 1956 ஆகஸ்டு 26ஆம் நாள் அம்பேத்கர் இந்தியாவின் அயல்நாட்டுக் கொள்கைபற்றி சிந்திக்க வைக்கும்படியான சிறந்ததோர் உரையாற்றினார். 'ஓ! கொள்கை இல்லாத அமைதியை எங்களுக்குத் தாருங்கள்' என்று வேண்டி வெளியுறவு அமைச்சர்கள் ஆடிப்பாடுவது போன்று லோ (Low) என்பவர் தீட்டியிருந்த கேலிச் சித்திரம் ஒன்றை அவையிலிருந்த உறுப்பினர்களின் கவனத்திற்கு அம்பேத்கர் கொண்டுவந்தார். சில குறிக்கோள்களின் அடிப்படையில் பிரதமர் இந்தியாவின் வெளியுறவுக்

கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக அவருடைய மகிழ்ச்சியைத் தெரிவித்தார். நேருவின் வெளியுறவுக் கொள்கை மூன்று கோட்பாடுகளை அடித்தளமாகக் கொண்டிருக்கிறது; முதலாவது அமைதி; இரண்டாவது கம்யூனிசத்திற்கும் சுதந்திர சனநாயகத்திற்கும் இடையிலான இணக்கம்; மூன்றாவது 'சீட்டோ' (SEATO) [South-East Asian Treaty Organisation] அமைப்பிற்கான எதிர்ப்பு என்று அம்பேத்கர் கூறினார். இரஷ்யா பத்து அய்ரோப்பிய நாடுகளைத் தன் நாட்டுடன் இணைத்துக் கொண்டது. மேலும் சீனா, மஞ்சூரியா, கொரியா ஆகிய நாடுகளின் சில நிலப்பரப்புகளையும் கைப்பற்றிக் கொண்டிருக்கிறது என்று அம்பேத்கர் கூறியபோது, கம்யூனிஸ்ட் உறுப்பினர் ஒருவர் அதை மறுத்துக் குரலெழுப்பினார். நாடுகளைப் பிரிப்பதன் பெயராலோ அல்லது நாடுகளைப் பிரித்துத் தனிமைப்படுத்துவதாலோ அமைதி விலை கொடுத்து வாங்கப்படுகிறது என்று அம்பேத்கர் குறிப்பிட்டார்.

இரஷ்யாவைப் பற்றி அம்பேத்கர் பேசியபோது "இரஷ்யா, பல நாடுகளை இல்லாமல் ஆக்குவதில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது; விடுதலை அளிப்பது என்ற கோட்பாட்டின் அடிப்படையில் மற்ற நாடுகளைத் தன் நாட்டுடன் சேர்த்துக் கொள்கிறது; மற்ற நாடுகளுக்கு இரஷ்யா வழங்கும் விடுதலை என்பது, விடுதலையின் பேராலான அடிமைத்தனம் என்பதாகவே இருக்கிறது. விடுதலைக்குப் பிறகு அங்கே சுதந்திரம் முகிழ்ப்பதில்லை. இத்தகைய அமைதியினால் எந்தவொரு பயனும் விளைவதில்லை; மாறாக இரஷ்யப் பூதம் வாயைத் திறந்து இரை கேட்கும் போதெல்லாம் அதற்குப்பிற நாடுகள் பலியாக்கப்படுகின்றன" என்று கூறினார்.

இரஷ்யா இந்தியா மீதும் இதேபோல் கை வைக்குமா? என்ற கேள்வியை மறந்துவிடாமல் - புறக்கணித்துவிடாமல் இந்தியர்கள் நினைவில் கொண்டிருக்க வேண்டும் என்று அம்பேத்கர் எச்சரித்தார். 'கம்யூனிசமும் சுதந்திரமான சனநாயகமும் ஒன்றிணைந்து செயல்படும் என்று கூறப்படுவது அறிவுக்குப் பொருந்தாக் கூற்று என்பதே என் கருத்தாகும். ஏனெனில், கம்யூனிசம் ஒரு காட்டுத்தீயைப் போன்றதாகும்; தன்னை எதிர்ப்படும் எல்லாவற்றையும் எரித்து அழித்துவிடும்' என்று அம்பேத்கர் கூறினார். காட்டுத்தீ போன்று விளங்கும் இரஷ்யாவிற்கு அருகிலுள்ள நாடுகளுக்கு ஆபத்து ஏற்படும் வாய்ப்புள்ளது. ஒரு நாட்டின் வெளியுறவுக் கொள்கையை வகுக்கும்போது அந்நாட்டின் நிலவியல்

அமைப்பைக் கணக்கில் எடுத்துக்கொள்ள மறந்துவிடக் கூடாது என்று அம்பேத்கர் சுட்டிக் காட்டினார்.

ஒருநாட்டின் அயல்நாட்டுக் கொள்கை உருவாக்கத்தில் அந்நாட்டின் நிலவியல் அமைப்பு முக்கிய பங்கு வகிக்கிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அந்தந்த நாட்டின் அயலுறவுக் கொள்கையும் அந்தந்த நாட்டின் நிலவியல் அமைப்புக்கேற்ப மாறுபடும். இங்கிலாந்திற்கு நன்மைதரும் வெளியுறவுக் கொள்கை இந்தியாவிற்குப் பொருத்தமானதாக இருக்க முடியாது. ஆகவே பிரதமர் நன்கு ஆழ்ந்து எண்ணிப்பார்க்காமல் கூட்டுச்சேராக் கொள்கையைக் கடைப்பிடித்து வருகிறார் என்றே கருதுகின்றேன் என்று அம்பேத்கர் கூறினார். இட்லரை எதிர்த்த போரில் வெற்றி பெறவேண்டும் என்பதற்காகவே பல நாடுகளின் உரிமைகளைப் பறித்தது மாபெரும் தவறு என்றுகூறி சர்ச்சில் வருந்தியதை அம்பேத்கர் நினைவூட்டினார். அடிமைப்பட்டிருக்கும் நாடுகளுக்கு விடுதலை வழங்க வேண்டியது அமெரிக்கா, பிரிட்டன் முதலான நாடுகளின் கடமையாகும்; ஆனால், அத்தகைய அருஞ்செயலைச் செய்வதற்கான விருப்பமோ அல்லது மன உறுதியோ அந்நாடுகளிடம் இல்லை என்று அம்பேத்கர் கூறினார்.

இரஷ்யாவும் சீனாவும் இவ்வுலகில் சுதந்திரமாகவுள்ள மற்ற நாடுகளை ஆக்கிரமிப்புச் செய்து கைப்பற்றிக் கொள்வதைத் தடுப்பதற்காக 'சீட்டோ' (SEATO) என்ற அமைப்பை உருவாக்கிட அமெரிக்காவும், பிரிட்டனும் திட்டமிட்டன என்று அம்பேத்கர் கூறினார். 'சீட்டோ' அமைப்பு எந்தவொரு நாட்டின்மீதும் ஆக்கிரமிப்பு செய்யும் நோக்கத்திற்காக அமைக்கப்பட்டதன்று; மாறாக சுதந்திர நாடுகளின்மீது ஆக்கிரமிப்புச் செய்யப்படுவதைத் தடுப்பதே அதன் குறிக்கோளாகும் என்று அம்பேத்கர் விளக்கினார். சீட்டோ அமைப்பின்பால் காட்டப்படுகின்ற வெறுப்பு, நேருவிற்கு அமெரிக்காவிடம் ஏதோ ஒருவகையில் ஏற்பட்ட மனவேறுபாடு காரணமாகவும், இந்தியா சீட்டோ அமைப்பில் சேர்ந்து விட்டால் இரஷ்யா என்ன நினைக்குமோ என்ற அச்சத்தினாலும் தோன்றியதாகும் என்று அம்பேத்கர் மேலும் கூறினார். இந்தியாவை ஒருபுறத்தில் பாகிஸ்தானும், மற்ற இசுலாமிய நாடுகளும் சூழ்ந்திருப்பதையும், இன்னொரு பக்கத்தில் சீனா லாஸா பகுதியைக் கைப்பற்றிக் கொள்ள அனுமதித்திருப்பதையும் அம்பேத்கர் அவையின் கவனத்திற்குக் கொண்டுவந்தார். 'சீனா அதனுடைய எல்லையை இந்தியாவின் எல்லைவரையில் கொண்டுவந்துவிட

பிரதமர் அனுமதித்துவிட்டார். இந்த உண்மைகளையெல்லாம் ஒருசேர நினைக்கும்போது, உடனடியாக என்று கூற முடியா விடினும் எதிர்காலத்தில் இந்தியா ஆக்கிரமிப்புக்குள்ளாகும் அபாயம் இருக்கிறது; இந்த ஆக்கிரமிப்பை யார் செய்வார்களெனில் ஆக்கிரமிப்புச் செய்வதையே வழக்கமாக்கிக் கொண்டவர்கள் செய்வார்கள்' என்று அம்பேத்கர் உறுதிபடக் கூறினார்.

பிரதமர் நேரு மாசேதுங் ஒப்புக்கொண்ட பஞ்சீலக் கொள்கை யையோ, ஒருநாடு மற்ற நாட்டின்மீது ஆக்கிரமிப்புச் செய்யக் கூடாது என்று திபெத்தில் செய்து கொண்ட ஒப்பந்தத்தையோ நம்பக்கூடாது என்று அம்பேத்கர் அவருடைய உரையில் குறிப்பிட்டார். பௌத்தச்சமயத்தின் முக்கிய அம்சமாக விளங்கும் பஞ்சசீலக் கொள்கையின்பால் உண்மையில் மாசேதுங்கிற்கு நம்பிக்கையிருக்குமானால் அவருடைய நாட்டில் பௌத்தர்களை இப்போது நடத்துவதுபோல் கொடுமையாக நடத்தியிருக்க மாட் டார். அரசியலில் பஞ்சசீலக் கொள்கைக்கு இடமேயில்லை; கம்யூனிச நாட்டின் அரசியலில் பஞ்சசீலக் கொள்கை இடம்பெறவே முடியாது. கம்யூனிச நாடுகள் இரண்டு கொள்கைகளின் மீதே எப்போதும் செயல்படுகின்றன என்பது நாம் அனைவரும் அறிந்ததே. கம்யூனிச நாடுகளில் ஒழுக்கநெறி என்பது மாறிக் கொண்டேயிருக்கும்; ஆகவே ஒழுக்கநெறி என்ற ஒன்றே இருக்காது; இன்று ஒழுக்கநெறியாகக் கருதப்படுவது அடுத்த நாளே ஒழுக்கநெறிக்குரியதாக இல்லாமல் ஆகிவிடும். ஆசியா ஒரு போர்க்களமாக ஆகிவிட்டது. ஆசியாவில் பாதிக்கு மேற்பட்டவை கம்யூனிச நாடுகளாக இருக்கின்றன. கம்யூனிச நாடுகள் மாறுபட்ட வாழ்வியல் கோட்பாடுகளையும், வேறுபட்ட அரசமைப்பு முறை யையும் பின்பற்றுகின்றன. ஆகவே நமக்குச் சுதந்திரத்தில் நம்பிக்கையிருக்குமாயின் சுதந்திர நாடுகள் என்று கருதப்படும் நாடுகளுடன் நாம் கூட்டு வைத்துக் கொள்வது நல்லது என்று அம்பேத்கர் கூறினார்.

நம்முடைய அயல்நாட்டுக் கொள்கையின் தலையாய நோக்க மாக இருப்பது எதுவென்றால், நம்முடைய நாட்டில் சிக்கல்களைத் தீர்ப்பது அன்று - மற்ற நாடுகளின் பிரச்சினைகளைத் தீர்ப்பதேயா கும் என்பதை அம்பேத்கர் வலியுறுத்திக் கூறினார்.

அடுத்து, அம்பேத்கர், கோவா பிரச்சினையைப் பற்றிப் பேசினார். இந்தியா கோவாவைக் கைப்பற்றிக் கொள்ள முடியும்; அல்லது விலைகொடுத்து வாங்கிக் கொள்ளலாம்; அல்லது

குத்தகைக்கு எடுத்துக் கொள்ளலாம். சிறிய அளவிலான ஒரு போலீஸ் நடவடிக்கை மூலமே இந்திய அரசு கோவாவைக் கைப்பற்றிக் கொள்ள முடியும். ஆனால் நேரு போர்ச்சுக்கல் நாட்டிற்கு எதிராக முழக்கமிடுகிறாரே தவிர எதையும் செயலில் காட்டவில்லை என்று அம்பேத்கர் கூறினார். அம்பேத்கர் அவருடைய உரையின் இறுதியில், சேம்பர்லினுடைய 'திருப்திப் படுத்தும் கோட்பாட்டின்' விளைவுகளைப் புறக்கணிக்காதீர் என்று நேருவுக்கு எச்சரிக்கை விடுத்தார்.

III

தீண்டப்படாத சாதிகள் மற்றும் பழங்குடிகளுக்கான ஆணையர் அளித்த அறிக்கைமீது 1954 செப்டம்பர் 6ஆம் நாள் அம்பேத்கர் பேசியபோது, தீண்டப்படாத சாதிகள் குறித்து அரசு கொண்டுள்ள கொள்கையையும், சாதி இந்துக்களின் மனப்போக்கினையும் கடுமையாகத் தாக்கினார். நினைத்தபோதெல்லாம் அரசியல் சட்டத் தைத் திருத்தும் போக்கினை நான் எதிர்க்கின்றேன்; ஆனால், எல்லாத் தரிசு நிலங்களையும் மத்திய அரசின் அதிகார வரம்புக்குள் கொண்டு வருவதற்காக அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று விரும்புகின்றேன் என்று அம்பேத்கர் கூறினார். உப்பு வரியை மீண்டும் விதிக்க வேண்டும் என்றும், தீண்டப்படாத வகுப்பு மக்களின் மேம்பாட்டிற்காகக் காந்தி அறக்கட்டளை நிதியை ஏற்படுத்த வேண்டும் என்றும் மிகவும் வலியுறுத்தினார். இந்த நிதியைத் தீண்டப்படாத வகுப்பு மக்களைத் தரிசு நிலங்களில் குடியமர்த்துவதற்குப் பயன்படுத்தலாம் என்றார். நில உடைமைக்கு உச்சவரம்பு விதித்து, அதன்மூலம் கிடைக்கும் உபரி நிலத்தை அரசு தீண்டப்படாதவர்கள் குடியிருப்புக்காகக் கொடுக்கலாம். அல்லது தீண்டப்படாதவர்கள் விலைகொடுத்து நிலத்தை வாங்கு வதற்குக் காந்தி அறக்கட்டளை நிதியிலிருந்து உதவி செய்யலாம். உப்பு வரி மூலம் இருபது கோடி ரூபாய் வருமானம் கிடைக்கும். காந்தியின் நினைவைப் போற்றும் வகையில் உப்பு வரி நீக்கப்பட்டது; நானும் காந்தியை மதிக்கிறேன்; தீண்டப்படாதவர் களைக் காந்தி மிகவும் நேசித்தார் என்பது நாம் எல்லோரும் அறிந்ததொன்றே. ஆகவே உப்பு வரியை மீண்டும் கொண்டுவந்து அதனால் கிடைக்கும் பணத்தைத் தீண்டப்படாத வகுப்பு மக்களுக் காகச் செலவிட்டால் காந்தி மேலுலகத்திலிருந்து கட்டாயம் நம்மை வாழ்த்துவார் என்று அம்பேத்கர் கூறினார்.

நேரு தீண்டப்படாத வகுப்பினர்பால் அக்கறையற்றவராக இருப்பது மட்டுமின்றி அவர்களுக்கு எதிரானவராகவும் இருக்கிறார்

என்ற குற்றச்சாட்டை அம்பேத்கர் மீண்டும் வலியுறுத்தினார். காங்கிரசுக் கட்சியில் உள்ள அரிசனங்கள் தனியாக ஒரு மாநாடு கூட்டுவதை நேரு எதிர்த்தார் என்று அம்பேத்கர் கூறினார். தீண்டாமை ஒழிப்பிற்காக அரசு செய்யும் பிரச்சாரம் வீணானது என்றார். கொடியதோர் செயலுக்கும் நன்னோக்கம் கற்பிப்பதில் திறமைசான்ற சி. இராசகோபாலாச்சாரி மத்திய அரசில் கல்வி அமைச்சரானதும் தீண்டப்படாத வகுப்பு மாணவர்கள் அயல் நாடுகளுக்குச் சென்று கல்வி பெறுவதற்கென்று ஏற்கனவே இருந்த ஏற்பாட்டை எவ்வாறு நீக்கிவிட்டார் என்பதை அம்பேத்கர் சுட்டிக் காட்டினார். இவ்வாறு அம்பேத்கர் பேசியபோது, உள்துறை அமைச்சர் டாக்டர் கட்ஜூ குறுக்கிட்டு, 'அச்சமயத்தில் அயல்நாட்டுக் கல்வி உதவித்தொகை மூலம் தீண்டப்படாத வகுப்பு மாணவர்கள் வெளிநாடுகளுக்குப் படிப்பதற்காக அனுப்பப்பட்டதை அம்பேத்கர் அறியார் போலும்!' என்று கூறினார்.

சினமூட்டப்பட்ட நிலையில் - இந்த அரசியல் சட்டத்தைக் கொளுத்தும் முதல் ஆளாக நான் இருப்பேன் என்று கூறிய தீப்பிழம்பான நிலையைத் தணித்திட அம்பேத்கர் விரும்புவது போல் தோன்றியது. ஆகவே, அரசியல் சட்டத்தைத் திருத்திட அரசு முயன்றபோதெல்லாம் அம்பேத்கர் அரசியல் சட்டத்தின் நிலைத்தன்மையையும் புனிதத்தையும் ஆதரித்து வாதிட்டதன் மூலம் இதற்குமுன் அரசியல் சட்டத்திற்கு எதிராக அவர் மேற்கொண்ட நிலைப்பாட்டிலிருந்து பின்வாங்கினார். அச்சமயத்தில், அரசு, அரசியல் அமைப்புச் சட்டத்தின் ஏழாவது அட்டவணையில் சட்டசபைகளுக்கான அதிகாரப் பட்டியலில் ஒரு திருத்தம் செய்வதற்காக அரசியல் அமைப்புச் சட்ட மூன்றாவது திருத்த மசோதாவைக் கொண்டுவந்தது. உற்பத்தியைக் கட்டுப்படுத்துவதற்காக வாணிகம் மற்றும் தொழில் அமைச்சகத்திற்குச் சட்ட அதிகாரம் அளிப்பதே இம்மசோதாவின் நோக்கமாகும்.

மக்களின் இசைவைப் பெறாமலேயே அடிக்கடி அரசியல் சட்டத்தைத் திருத்தும் அரசின் போக்கினை அம்பேத்கர் குறைகூறிக் கடிந்துரைந்தார். 'அரசியல் அமைப்புச் சட்டம் நடப்பிற்கு வந்து நான்கு ஆண்டுகளும் சில மாதங்களும்தான் ஆகிறது; ஆனால் இதற்குள் இரண்டு முறைகள் அது திருத்தப்பட்டுவிட்டது; இப்போது மூன்றாவது திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது. உலகில் வேறு எந்தவொரு அரசியல் அமைப்புச் சட்டமும், பதவி வகிக்கும் அரசால், இந்த அளவிற்கு வேகமாகவும் கண்மூடித்தனமாகவும் திருத்தப்பட்டதாக எனக்குத் தெரியவில்லை. அரசு நாடாளுமன்றத்தில் தன் கட்சிக்கும் பெரும்பான்மை இருப்பதனால்,

எந்தவொரு சட்டத்தையும் இயற்றும் அதிகாரம் தனக்கு இருக்கிறது என்று எண்ணுவதுடன் மட்டும் நிற்காமல் - அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்தும் அதிகாரம் - அதுவும் திருத்துவதற்கான நோக்கத்தைப் பற்றி மக்களுக்கு முன்கூட்டியே அறிவிக்காமல் திருத்துகின்ற அதிகாரம் இருப்பதாகவும் நினைப்பது தவறாகும்.

அரசு அரசியல் அமைப்புச் சட்டத்தின்பால் பெரும் அவமதிப்பும், மிகக்குறைந்த அளவிலான மதிப்பும் மரியாதையும் மட்டுமே கொண்டிருப்பதை நான் கவனித்து வருகிறேன். அரசியலமைப்புச் சட்டத்திற்கும், சாதாரணச் சட்டத்திற்கும் இடையே உள்ள இன்றியமையாத வேறுபாட்டை அரசு உணர வேண்டும். அரசியல் அமைப்புச் சட்டத்தை இன்னும் மிகுந்த மரியாதையுடன் நோக்கிட வேண்டும்' என அம்பேத்கர் உறுதிபடக் கூறினார். இம்முறை அம்பேத்கர், அரசின் அவசரப் போக்கினை சம்மட்டியால் அடிப்பதுபோல் தாக்கினார். அவருடைய நிலைப்பாட்டை இந்தியாவின் முன்னணி நாளேடுகள் ஆதரித்தன. அவர் பெற்றெடுத்த அரசியல் அமைப்புச் சட்டம் எனும் குழந்தையை ஆளும் கட்சியினர் அவர்களின் விருப்பங்களுக்கும், கோட்பாடுகளுக்கும், திட்டங்களுக்கும், ஏற்ப மாற்றி அமைப்பதற்காகக் கொடுமையான முறையில் திருத்தியபோதெல்லாம் பெற்ற தாய் போன்ற அவர் பெரிதும் மனம் நொந்தார்.

1954 செப்டம்பர் 16ஆம் நாள் மாநிலங்கள் அவையில் தீண்டாமைக் குற்றங்கள் மசோதாமீது அம்பேத்கர் பேசியபோது, குறைந்த அளவிலேனும் சிறைத்தண்டனை விதிக்கப்படும் என்று மசோதாவில் சேர்க்காவிட்டால் தீண்டாமை என்ற கொடுமையை அகற்றிட முடியாது என்று கூறினார். சமூக விலக்கம் செய்வோரையும் தண்டிக்க வேண்டும் என்று கோரினார். மேல்சாதி இந்துக்கள் தங்களிடம் உள்ள பொருளாதார ஆதிக்கத்தின் மூலம் தீண்டப்படாத வகுப்பு மக்களுக்கு அரசியல் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள உரிமைகளை அவர்கள் அனுபவிக்க முடியாமல் தடுக்கின்றனர் என்று அம்பேத்கர் கூறினார். பஞ்சாப் மாகாணச்சட்டம் தீண்டப்படாதவர்களுக்கு எதிரானதாக இருக்கிறது; பஞ்சாபில் தீண்டப்படாதவர்களும் தாழ்ந்த வகுப்பினரும் நிலையான வீடுகளைக் கூடப் பெற்றிருக்க முடியாதபடி தடுக்கிறது; எனவே, பஞ்சாப் மாகாணத்தில் இருப்பது போன்று மற்ற மாகாணங்களிலும் இருக்கின்ற கொடிய சட்டங்களைத் திருத்துவதற்காக மத்திய அரசு தன் அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று கூறினார். மத்திய உள்துறை அமைச்சகமும், சட்ட அமைச்சகமும் சோம்பிக் கிடக்கின்றன என்று அம்பேத்கர் குற்றஞ் சாட்டினார்.

தீண்டாமையை ஒழிக்க வேண்டுமென்ற வேட்கையோ ஆர்வமோ அவர்களிடம் இல்லை; இத்தகைய கொள்கையும் அவர்களுக்கு இல்லை என்றார். ஒருமணி நேரம் ஆணித்தரமாக ஆற்றிய உரையின் இறுதியில் அம்பேத்கர், இம்மசோதாவிற்குச் 'சிவில் உரிமைகள் (தீண்டப்படாத வகுப்பினர் பாதுகாப்பு) சட்டம்' என்று பெயரிட்டிருக்க வேண்டும் என்றார். தீண்டப்படாத வகுப்பினர் அவர்களுடைய உரிமையியல் மற்றும் அரசியல் சட்டப்படிக்கான உரிமைகளை அனுபவிப்பதற்குத் தடையாக உள்ள எதையும் நீக்குவதே இம்மசோதாவின் நோக்கம் என்பதை மிகத் தெளிவாக இம்மசோதாவில் உள்துறை அமைச்சர் சேர்த்திருந்தால் மேலும் சரியானதாக இருந்திருக்கும் என்று சுட்டிக் காட்டினார். 'என்னுடைய வாழ்க்கைத் தத்துவம்' என்ற தலைப்பில், அனைத்திந்திய வானொலி நடத்திய ஒலிபரப்புத் தொடரில், 1954 அக்டோபர் 3ஆம் நாள் அம்பேத்கர் உரையாற்றினார். 'ஒவ்வொரு மனிதனும் வாழ்க்கையைப் பற்றி ஒரு தத்துவத்தைக் கொண்டிருக்க வேண்டும்; ஏனெனில் ஒவ்வொரு மனிதனுக்கும் அவனுடைய நடத்தையைப் பற்றி அளந்தறிந்திட ஒரு தத்துவம் தேவைப்படுகிறது. தத்துவம் என்பது தன்னை அளந்தறிவதற்கான ஓர் அளவுகோலேயாகும்' என்று அம்பேத்கர் கூறினார். 'தத்துவத்தை எதிர்மறையில் நோக்கும்போது, பகவத்கீதையில் முன்மொழியப்பட்டுள்ள இந்துச் சமூக வாழ்க்கைத் தத்துவத்தை நான் ஏற்கமாட்டேன். பகவத்கீதையில் சொல்லப்பட்டுள்ள தத்துவம், சாங்கியத் தத்துவத்தின் முக்குண அடிப்படையில் அமைக்கப்பட்டதேயாகும். சாங்கியத் தத்துவமோ கொடிய திரிபுக்கு உள்ளாக்கப்பட்டுச் சிதைக்கப்பட்ட கபிலரின் தத்துவமே ஆகும் என்பது என் கருத்து. பகவத்கீதைதான் சாதி அமைப்பு முறையையும், படிநிலை முறையிலான ஏற்றத்தாழ்வுகளையும், இந்துச் சமூக வாழ்வின் சட்டமாக ஆக்கியது' என்று கூறினார்.

'நேரிடையாகவே கூறுவதாயின் என்னுடைய சமூகத் தத்துவம் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற மூன்று சொற்களில் பொதிந்துள்ளது. இந்த மூன்று சொற்களைக் கூறுவதாலேயே பிரெஞ்சுப் புரட்சியிலிருந்து என்னுடைய தத்துவத்தைக் கடன் வாங்கியிருப்பதாக யாரும் நினைக்காதீர்கள். நான் அவ்வாறு கடன் வாங்கவில்லை. ஏனெனில் என்னுடைய தத்துவத்தின் வேர்கள் மதத்தில் இருக்கின்றன; அவை அரசியல் விஞ்ஞானத்தில் இல்லை. என்னுடைய தத்துவத்தை என் ஆசான் புத்தரிடமிருந்து நான் பெற்றேன். என்னுடைய தத்துவத்தில் சுதந்திரம் சமத்துவம் ஆகிய இரண்டும் இடம் பெற்றுள்ளன. ஆனால், கட்டுப்பாடு இல்லாத

சுதந்திரம் சமத்துவத்தை அழிக்கிறது. அதேபோன்று, முழுமையான சமத்துவம் என்பதில் சுதந்திரத்திற்கு இடம் இருப்பதில்லை. எனவே என்னுடைய தத்துவத்தில் சட்டமும் ஓர் இடத்தைப் பெற்றுள்ளது. சுதந்திரமும், சமத்துவமும் மீறப்படாமல் சட்டம் பாதுகாக்கிறது. ஆனால் சுதந்திரத்தையும் சமத்துவத்தையும் தவறாகப் பயன்படுத்துவதைச் சட்டமே தடுத்து நிறுத்திவிடும் என்று நான் நம்பவில்லை. சகோதரத்துவம்தான் மிகவும் உயர்ந்ததாகும். ஏனெனில் சுதந்திரம் அல்லது சமத்துவம் அல்லது சகோதரத்துவம் ஆகியவற்றைப் பெறுவதற்கு வழிகோலுவதும் அரணாக இருப்பதும் சகோதரத்துவமேயாகும். அதாவது சகோதரத்துவத்தின் மற்றொரு பெயர் மனிதத்தன்மை; மனிதத்தன்மை என்பது மதத்திற்குள்ள மற்றொரு பெயராகும்' என்று வானொலியில் நிகழ்த்திய உரையில் அம்பேத்கர் விளக்கினார்.

'சட்டம் சமயச்சார்பற்றது; அதை எவராலும் மீற முடியும். ஆனால் சகோதரத்துவம் அல்லது மதம் புனிதமானது; அதை ஒவ்வொருவரும் மதிக்க வேண்டும். என்னுடைய தத்துவம் விழுமிய நோக்கங் கொண்டதாகும். நான் மதமாற்றத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதற்காகத் திரிகுண கோட்பாட்டைப் பின்பற்றுவோரை அதைக் கைவிட்டுவிட்டு என்னுடைய தத்துவத்தை ஏற்குமாறு செய்ய வேண்டும். இந்தியர்கள் இன்று இருவேறுபட்ட கோட்பாடுகளால் ஆளப்படுகின்றனர். அவர்களுடைய அரசியல் கோட்பாடு அரசியலமைப்புச் சட்டத்தின் முகவுரையில் குறிக்கப்பட்டுள்ளது. அது சுதந்திரமான, சமத்துவமான, சகோதரத்துவமான வாழ்வை உறுதி செய்கிறது. ஆனால், அவர்களுடைய மதத்தில் உள்ள சமூகக் கோட்பாடோ இவற்றை மறுக்கிறது' என்று அம்பேத்கர் மேலும் விளக்கிக் கூறினார்.

பெரும்பாலான இந்தியர்களின் அரசியல் கோட்பாடாக இருப்பது, எல்லோருடைய சமூகக் கோட்பாடாக ஆகும் என்று அம்பேத்கர் பெரிதும் நம்பினார். அலிகர் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஒரு முசுலிம் பட்டதாரி அம்பேத்கரின் இப்பேச்சைப் பாராட்டினார். பெரும்பான்மை மக்களின் சமூக மற்றும் மதத் தத்துவத்தில் உள்ள முரண்பாட்டைச் சுட்டிக் காட்டியதற்காக அம்பேத்கரை அவர் புகழ்ந்தார்.

1954 அக்டோபர் 29ஆம் நாள் பம்பாய் நகரத் தீண்டப்படாத சாதிகள் பேரவை அம்பேத்கருக்கு 1,18,000 ரூபாயைப் பணமுடிப்பாக வழங்கியது. அவருடைய மணிவிழாவை 1954 ஏப்பிரல் 14ஆம் நாள் கொண்டாடுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச்

செய்வதற்கென்று சில மாதங்களுக்கு முன்பே ஒரு குழு அமைக்கப்பட்டது. ஆனால் காலங்கடந்து இந்த மணிவிழா நடத்தப்பட்டது. பம்பாயின் தீண்டப்படாத சாதிகள் பேரவையின் தலைவர் ஆர்.டி. பந்தாரே இப்பணமுடிப்பை அம்பேத்கரிடம் வழங்கினார். ஓர் அரங்கத்தையும் நூலகத்தையும் ஏற்படுத்துவதற்காகத் தாதரில் கட்டப்பட்டு வரும் கட்டடத்திற்கு இப்பண முடிப்புத்தொகை செலவிடப்படும் என்று அம்பேத்கர் அவருடைய மக்களுக்கு உறுதி கூறினார்.விரைவில் என்னுடைய வாழ்க்கை வரலாற்றை எழுதுவேன் என்றும் அடக்கம், ஒழுக்கம், அறிவு ஆகியவற்றில் நம்பிக்கை உடையவன் என்றும் தெரிவித்தார். தீண்டப்படாதவனாகப் பிறந்திருப்பதில் பெருமிதம் கொள்வதாகக் கூறினார். நான் சாதித்துள்ள சாதனைகளெல்லாம் என்னுடைய சமூகம் அளித்த வலிமையான ஒத்துழைப்பினால் விளைந்தவை களேயாகும் எனக் குறிப்பிட்டார்.

முதுமையில்

அம்பேத்கருக்கு அகவை அறுபத்து மூன்று ஆகியிருந்தது. நிலமற்றவர்களாக, உடம்பில் சட்டையில்லாதவர்களாக, காலில் செருப்பில்லாதவர்களாகப் பசியால் வாடிக்கொண்டிருந்த அவருடைய வகுப்பு மக்களுக்கு அரசியல் சட்டத்தின் மூலம் என்னென்ன நன்மைகளையெல்லாம் பெற்றுத்தர வேண்டும் என்று அவர் எண்ணினாரோ அந்த அளவிற்குப் பெற்றுத்தருவதற்காக, அரசியல் சட்டத்தை எவ்வாறெல்லாம் பயன்படுத்துவது என்று கிளர்ந்தெழுந்து துடித்துக் கொண்டிருந்த அவருடைய சிந்தனையின் ஓட்டத்திற்கு, நலிவடைந்துவிட்ட அவருடைய உடல்நிலை ஈடு கொடுக்க முடியவில்லை. அவர் காண விரும்பிய அவருடைய மக்களுக்கான சிறந்த எதிர்காலம் என்பதில் இன்னும் பெரும்பகுதி நிறைவேறாமல் இருக்கின்ற உண்மையை அம்பேத்கர் அறிந்திருந்தார்; அதற்காக வருந்தினார். அவ்வப்போது அம்பேத்கர் எரிமலையாகி எதிரிகளைத் தாக்குவதுபற்றி கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். அம்பேத்கர் வேண்டுமென்றே அடிக்கடி இவ்வாறு தாக்குதல் தொடுத்தார் என்று கூறுவது உண்மைக்குப் புறம்பானதாகும். நிலமற்ற மக்களின் சமூக, பொருளாதார பிரச்சினைகளில் அரசு ஆர்வமோ அக்கறையோ காட்டவில்லை; இவர்களுடைய பிரச்சினையால் நாட்டின் அமைதிக்கும் இந்தியச் சனநாயகத்திற்கும் ஏற்படக்கூடிய ஆபத்தை உய்த்துணரவில்லை. அம்பேத்கர் அரசின்மீது சாட்டிய குற்றச்சாட்டின் சாரம் இதுவேயாகும்.

தீண்டப்படாத வகுப்பு மக்களுக்காக அம்பேத்கர் வென்றெடுத்த சாதனை என்ன? தீண்டப்படாத வகுப்பு இந்துக்களின் கடந்த கால வரலாறு கரிய இருள் நிறைந்ததாகும். ஆறு கோடி மக்களாக இருக்கின்ற தீண்டப்படாத வகுப்பினர் நீக்ரோக்களை விடத் தாங்கொணாத் துன்ப நிலையில் இருக்கின்றனர்; ஏனெனில் நீக்ரோக்கள் தீண்டப்படாதவர்களாக நடத்தப்படுவதில்லை. வெள்ளையரின் வீடுகளில் நீக்ரோக்கள் வேலைக்காரர்களாகவேனும் இருக்கின்றனர். எகிப்தில் உள்ள இஸ்ரேலியர்களின் வாழ்க்கை, அல்லது அமெரிக்காவில் உள்ள நீக்ரோக்களின் வாழ்க்கை, அல்லது ஜெர்மனியில் உள்ள யூதர்களின் நிலையானது இந்தியாவில் இருக்கின்ற தீண்டப்படாதவர்களின் வாழ்க்கையைவிட மேலானதாக இருக்கிறது என்பது மிகைப்படுத்தப்பட்ட கூற்றன்று.

கடந்த 2500 ஆண்டுக் கால வரலாற்றில் முதன் முறையாகத் தீண்டப்படாத வகுப்பினரின் எதிர்கால நல்வாழ்வுக் கதிரவனாக அம்பேத்கர் தோன்றினார். தீண்டப்படாத வகுப்பில் பிறந்து அவர்களிடையே வளர்ந்த அம்பேத்கர் தீண்டப்படாத வகுப்பு மக்களின் குடியுரிமை, சமூக மற்றும் அரசியல் உரிமைகள், சுதந்திரம் ஆகியவற்றின்மீது உலகின் கவனத்தை ஈர்த்தார்; தீண்டாமையைக் கொழுந்து விட்டெரியும் பிரச்சினையாக மாற்றி உலக அளவில் இதை முக்கியத்துவம் பெற்ற பிரச்சினையாகத் தூக்கிப்பிடித்தார்; உலகம் முழுவதும் அறியப்படும்படி பிரச்சாரம் செய்தார். அவருடைய இடையறாத வலிமைமிக்க போராட்டமும், எதிரிகள்பால் ஈவிரக்கமின்றி அவர் தொடுத்த தாக்குதல்களும் தீண்டப்படாதவர்களுக்குப் புதிய பாதையை ஏற்படுத்தின. இவையெல்லாம் ஒளியும் சுதந்திரமும் மிளிரும் புதிய வரலாற்றைத் தொடங்கி வைத்தன. தீண்டப்படாத வகுப்பினரிடையே மனிதனின் மதிப்பும், சுயமரியாதை உணர்வும் விழித்தெழச் செய்தார்; அடிமைத்தனத்தைவிடக் கொடியதான தீண்டாமைமீது அவர்களுக்குக் கடுமையான வெறுப்பேற்படும்படிக் கற்பித்தார். சமூகத்தின் அடித்தளச்சேற்றில் மனத்தளர்ச்சியுற்றுத் தன்னம்பிக்கையிழந்து வீழ்ந்து கிடந்தோரை அம்பேத்கர் கைதூக்கிவிட்டார்; அவர்களுக்குப் புதிய நம்பிக்கையை ஊட்டினார். வாழ்விழந்து மனித உரிமைகள் மறுக்கப்பட்டிருந்த அவர்களின் வாழ்வில் துணிவையும் புதிய வாழ்க்கையைப் பற்றிய எழுச்சியையும் பாய்ச்சினார்; அவர்களுடைய உள்ளொளியைப் பெருக்கினார்; உணர்வுகளைப் புதுப்பித்து ஊக்குவித்தார். இதன் விளைவாகத் தீண்டப்படாத வகுப்பினர் தங்களுடைய துன்பங்களைத் துணிவுடன் வெளிப்படுத்தினர்; நீதி, சமத்துவம், சுதந்திரம் ஆகியவற்றை அடைவதற்காகப் போராட முன்வந்தனர். அம்பேத்கர் தீண்டப்படாத வகுப்பினர்க்குத் தலைமை ஏற்பதற்கு முன் அவர்கள் விலங்கினும் கீழாய் நடத்தப்பட்டனர். அம்பேத்கர் தீரமுடன் போராடியதன் விளைவாக அரசியல் தளத்தில் இந்தியாவில் உள்ள மற்ற வகுப்பினர்க்கு இணையாக தீண்டப்படாத வகுப்பினரும் உயர்ந்தனர். கம்யூனிஸ்டுகள் தவிர, பாதிரிகளும், மௌல்விகளும் பட்டினிப் பட்டாளமாக பெருந்திரளாக இருந்த தீண்டப்படாத வகுப்பு மக்களைத் தங்களுடைய அரசியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்த வேண்டும் என்று கொண்டிருந்த நம்பிக்கையை அம்பேத்கரின் அனல் கக்கும் போராட்டங்கள் சுக்குநூறாக்கிவிட்டன. இவைதாம் தீண்டப்படாத வகுப்பினர்க்கு அம்பேத்கர் ஆற்றிய அரும்பணிகளாகும்.

இந்தியாவில் நம்பிக்கையிழந்த நாணத்தக்க நிலையில் உழன்ற தீண்டப்படாத வகுப்பினரின் இருண்ட காலம் நீங்கிவிட்டது;

பழமையின் பாழடைந்த சுவர்கள் நொறுங்கி விழத்தொடங்கி விட்டன. இமயமலையின் சாரலில் புதியதொரு இந்தியா புலர்ந்து கொண்டிருந்தது. புழுதியில் வீழ்ந்துகிடந்த தீண்டப்படாத வகுப்பினர் எழுச்சி பெற்று வாழ்வில் உயர்வடையத் தொடங்கினர். அரசு உத்தியோகங்கள், காவல்துறை, நீதிமன்றங்கள், இராணுவம், கடற்படை, விமானப்படை முதலானவற்றில் தீண்டப்படாத வகுப்பினர் படிப்படியாக இடம் பெற்றனர். கடந்த சில ஆண்டுகளில் தீண்டப்படாத வகுப்பினர் அடைந்துள்ள முன்னேற்றம் மிகுந்த ஊக்கமளிப்பதாகும். பணிகளுக்கேற்ற உடையணிவதில், பழக்கவழக்கங்களில், தூய்மையைப் பேணுவதில் அவர்களுக்கே உரிய தன்மையில் தீண்டப்படாத வகுப்பு மக்கள் முன்னேற்றமடைந்துள்ளனர்; அரசியலில் முழுமையான அளவில் விழிப்புணர்வு பெற்றுள்ளனர்; வழிகாட்டுவதற்காகவோ தலைமைக்காகவோ அவர்கள் மற்றவர்களைச் சார்ந்திருக்கவில்லை. அவர்களுடைய அமைப்புகளில் பொறுப்பில் இருப்பவர்கள் பெரிய மாநாடுகளையும் மாபெரும் கூட்டங்களையும் நடத்துகின்றனர். அவர்களுடைய தலைவர்கள் குறிப்பிடத்தக்க அளவில் முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்களை அமைத்துள்ளனர். தீண்டப்படாத சாதிகளிலிருந்து உயர்நிலைமைகளை எய்தியவர்களில் பெரும்பாலோர் தீண்டப்படாத வகுப்பு மக்களின் நலன்களைப் பற்றிக் கவலைப்படாதவர்களாகவே இருப்பது மிகவும் வருந்தத் தக்கதாகும். இத்தகையவர்கள் இரண்டாந்தரப் பார்ப்பனர்களாக ஆகிவிட முயலுகின்றனர்.

ஆயினும் கிராமப்புறங்களில் தீண்டப்படாத வகுப்பு மக்கள் இன்னமும் சமூக, பொருளாதாரக் கொடுமைகளுக்கு ஆளாகி வருகின்றனர்; நில உரிமையையும் நீதியையும் பெறமுடியாத தடைகளுக்கு ஆளாகின்றனர் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். மற்ற காரணங்களுக்காக உலகநாடுகளுக்குப் பல குழுக்களை அனுப்புகின்ற, பல்வேறு திட்டங்களைத் தீட்டுகின்ற அரசு, கிராமப்புறங்களில் வாழும் தங்களுடைய துன்பங்களைத் துடைத்திடவோ, அடிமை வாழ்விலிருந்தும் பொருளாதார நலிவுகளிலிருந்தும் மீட்டிடவோ மற்றவர்களுக்குச் சமமான மனித உரிமைகளைப் பெற்றுத்தரவோ தீவிரமாக முயற்சிக்கவில்லை என்று கடையருள்ளும் கடையராகக் கிடக்கும் தீண்டப்படாத வகுப்பு மக்கள் கருதினர். எல்லா மாநில அரசுகளும் துணிவுமிக்க முற்போக்கான விவசாயக் கொள்கையை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று இவர்கள் விரும்புகின்றனர். நிலமில்லாதவர்களாக - ஆனால்

நிலத்தில் உழைப்பவர்களாக இருக்கும் இவர்களுக்கு உரிய கணக்கெடுப்பின்படி உபரி நிலங்களை அளிக்க வேண்டும் என்று அறிஞர்கள் கூறுகின்றனர். சாதி இந்துக்களின் உணவகங்களில் உண்ணவும் விடுதிகளில் தங்கவும் இவர்கள் அனுமதிக்கப்பட வேண்டும்; இதை எந்த வடிவில் மீறுவதும் தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்பட வேண்டும். அப்போதுதான் உணவகங் களின் - தங்கும் விடுதிகளின் உரிமையாளர்கள் அவர்களாக இட்டுக்கட்டிக் கூறுகிற சாக்குப் போக்குகளைக் காட்டித் தீண்டப் படாத வகுப்பு மக்களை விரட்ட மாட்டார்கள். தீண்டப்படாத வகுப்பு மக்களுக்குக் கிராமங்களில் குடிநீர் வசதி செய்துதரப் படவேண்டும். கிராம வாழ்வில் இவர்களுடைய பெருந்துன்பங் களில் ஒன்று குடிநீர் கிடைக்காமையாகும்.

குட்டையான மண்சுவர்களின்மீது தகரம் அல்லது தென்னங்கீற் றால் மூடப்பட்ட சிறிய குடிசைகளில் தீண்டப்படாத வகுப்பு மக்கள் நெரிசலோடு வாழ்வதால் அவர்களுடைய பழக்கவழங்கங் களும் உடல்நலமும் பாதிக்கப்படுகின்றன என்று ஆராய்ச்சியாளர் கள் கூறுகின்றனர். ஒதுக்குப்புறமாகத் தனியாகத் தீண்டப்படாதவர் களின் குடியிருப்புகள் இருப்பது என்பதை ஒழித்திட வேண்டும். ஊருக்குள்ளும் நகருக்குள்ளும் கிடக்கும் காலி மனைகளில் தீண்டப்படாத வகுப்பினர்களைக் குடியமர்த்த வேண்டும். உத்தி யோகங்கள் தகுதியின் அடிப்படையில் தரப்பட வேண்டுமாயினும், ஆலைகளிலும், தொழிற்சாலைகளிலும், இரயில்வே துறையிலும் எக்காரணத்தைக் காட்டியும் தீண்டப்படாத வகுப்பினர்க்குப் பதவி உயர்வு மறுக்கப்படக்கூடாது. தீண்டப்படாத வகுப்பினர்க்கு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள இடஒதுக் கீடு விழுக்காட்டை அரசு கொஞ்சமும் வழுவாமல் நடைமுறைப் படுத்த வேண்டும். கிராமங்களிலும் நகரங்களிலும் இவர்கள் மிகக் கொடிய வறுமையில் உழன்று கொண்டிருக்கின்றனர். கொல்லும் இக்கொடிய வறுமை இவர்களைப் பிச்சை எடுக்கும் நிலைக்கும் தள்ளிவிடுகிறது; இதனால் இவர்களின் நாகரிகமான நடப்பும் சுயமரியாதைச் சிந்தனையும் சிதைவுறுகின்றன; மதமாற்றத் தூண்ட லுக்கு இணங்கிடும் நிலை இதனால் ஏற்படுகிறது. தீண்டப்படாத வகுப்பினர் தங்கள் மானத்தை மறைத்துக் கொள்ளக் கந்தலாடையும் பெற்றில்லாத போது - துவைத்து உடுத்திட மாற்றுடையும் பெற்றிராத நிலையில் - இன்றைய நாகரிகத்தின் எல்லா வசதிகளையும் துய்த்து மகிழ்ந்து கொண்டிருக்கின்றவர்கள், தீண்டப் படாத வகுப்பினரைப் பார்த்து அழுக்கேறிய ஆடையுடன் இருக்கிறார்களே என்று முணுமுணுப்பது அருவருப்பானதேயாகும்.

ஆயினும் இப்போது தீண்டாமை எனும் நோய் படிப்படியாக நீக்கப்பட்டு வருகிறது; தீண்டாமை மெல்ல மெல்ல மறைந்துவரு கிறது. இருப்பினும், தீண்டாமையிலிருந்து தீண்டப்படாத வகுப்பி னர் விடுதலைபெற்றுவிட்டதாக எந்தவொரு இந்துவும் போலியாகக் கருதக்கூடாது. சாதியின் பிறழ்ச்சியால் உருவான தீண்டாமை சிதைந்து கொண்டிருக்கிறதே தவிர அது இன்னும் மறையவில்லை. தீண்டாமையை அகற்ற வேண்டுமென்பதில் அக்கறையின்றி இப்பிரச்சினையைக் கிடப்பில் போட்டுவிட்டுத் தம் பொறுப்பைத் தட்டிக் கழிக்கிறவர்கள் ஒரு நீக்ரோ பெண் கூறியிருப்பதை நினைவில் கொள்ள வேண்டும். இட்லருக்கு ஏற்ற தண்டனை எது எனக் கூறுமாறு இப்பெண்ணிடம் கேட்கப்பட்டபோது, 'இட்லரை நீக்ரோவாக மாற்றி அமெரிக்காவில் வாழுமாறு செய்யுங் கள்' என்று பதிலளித்தாள். விடுதலைபெற்ற இந்தியாவில் தீண்டாமையை விரைவில் ஒழித்திட வேண்டுமென்று இடைவிடா மல் குரல் கொடுத்துக் கொண்டிருந்தார் ஒரு தலைவர்; அவர்தான் வீரசாவர்க்கர். மரணவாயிலில் உள்ள தீண்டாமையைக் குழி தோண்டிப் புதைக்காவிட்டால் - இந்தச் சாபக்கேட்டை நீக்காவிட் டால் - இது மீண்டும் புத்துயிர் பெற்று இந்நாட்டையே அழித்துவிடும் என்று சாவர்க்கர் தொடர்ந்து இந்துக்களை எச்சரித்துக் கொண்டேயிருந்தார். தன் நாட்டைக் காத்திடும் போரில் வெற்றிபெற வேண்டும் என்று ஒரு படைத்தலைவன் எந்த அளவிற்கு விரும்புவானோ அதைவிடத் தீண்டாமையை ஒழிக்க வேண்டும் என்பதில் சாவர்க்கர் பெருவிருப்பங் கொண்டிருந்தார்.

தீண்டப்படாத வகுப்பினரின் பொருளாதாரப் பிரச்சினை, மற்ற வகுப்பினர்க்கும் பொதுவானதாக இருக்கின்ற வறுமை, வேலை யின்மை ஆகியவற்றோடு தொடர்புடையதே என்று அம்பேத்கரின் எதிரிகள் கூறுவது நேர்மையான கருத்தன்று. வறுமையை ஒழிக்கும்போது தீண்டாமையும் தானாகவே நீங்கிவிடும் என்று கருதி இச்சிக்கலைத் தள்ளிப் போடுவது ஆபத்தானதாகும். தீண்டாமை எனும் பேயை ஒழித்திட ஒரே நேரத்தில் பொருளாதார, சமூகத் தளங்களில் முற்போக்கான திட்டங்களை நடைமுறைப் படுத்த வேண்டும் என்றும் கருதப்படுகிறது. தீண்டாமையை அகற்றுவதற்காக அரசு ஏற்படுத்தியுள்ள சட்ட விதிகளின்படி நடக்க மறுக்கின்ற கிராமங்கள்மீது அரசு கூட்டு அபராதம் விதிக்க வேண்டும். சமூகச்சீர்திருத்தவாதிகளுக்கு அரசு எல்லா வகையிலும் உதவி செய்து ஊக்குவிக்க வேண்டும்.

அமெரிக்காவைச் சேர்ந்த டாக்டர் ஜெ.எச். ஹோம்ஸ் ஒரு சமயம் பம்பாயில் பேசியபோது, ''இந்தியாவில் தீண்டப்படாத வகுப்பினர் இருப்பதைப் போலவே, அமெரிக்காவிலும் தீண்டப்ப டாதார் இருக்கின்றனர். அமெரிக்காவில் தீண்டப்படாதவர்கள் 1.4 கோடி மக்களாக இருக்கின்றனர்'' என்று கூறியதை இந்திய அரசு ஒரு வழிகாட்டியாகக் கொள்ள வேண்டும். அமெரிக்காவின் அரசியலமைப்புச் சட்டத்தில் பல ஆண்டுகளுக்கு முன்னரேயே, அடிமைமுறை ஒழிக்கப்பட்டு விட்டதாகக் கூறப்பட்டுள்ளது. அமெரிக்காவில் நீக்ரோ அமைப்பு ஒன்றின் இயக்குநரான கிளாரன்ஸ் மைக்கேல் என்பவர், அமெரிக்க நாட்டின் பாதுகாப்புத் துறைச் செயலாளருக்கு விடுத்த வேண்டுகோளில், இராணுவப் பதவிகளுக்கான பயிற்சிப் பள்ளிகளில் நீக்ரோ மாணவர்களைத் தனியாகப் பிரித்து வைத்திருப்பதை உடனடியாகக் கைவிட வேண்டும் என்று கோரியிருந்தார். இந்தியஅரசு இதிலிருந்து ஒரு பாடம் கற்றுக்கொள்ள வேண்டும். மாலன் என்பவரின் மறுப்புரை களும் கண்டனங்களும் தீண்டாமைப் பிரச்சினையை மிகத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகின்றன. பிற உலக நாடுகளின் நடப்புகள்பற்றிய சிந்தனையில் மூழ்கிக்கிடக்கும் இந்திய ஆட்சி யாளர்கள் தம் சொந்த நாட்டில் ஆறு கோடி மக்கள் தாழ்ந்து கிடக்கும் அவலநிலையைப்பற்றி ஒரு நொடிப் பொழுதும் சிந்திப்பதில்லை என்று தீண்டப்படாத வகுப்புகளின் தலைவர்கள் கூறுகின்றனர். இந்நிலை நீடிப்பது மிகவும் வருந்தத்தக்கதாகும். நகரங்களையும் பேரூர்களையும் மின்னொளி மயமானதாக ஆக்கு வதற்குப் பதிலாக, பன்னெடுங்காலமாகத் தங்கள்மீது திணிக்கப்பட் டுள்ள சுமைகளை அரசு முதலில் அகற்றிட வேண்டும் என்று தீண்டப்படாத வகுப்பினர் எண்ணுவது மிகவும் சரியானதேயாகும்.

II

மனிதனின் மேன்மையை நிலைநாட்டுவது, தீண்டப்படாத வகுப்பு மக்களிடையே சுயமரியாதை உணர்வை வளர்ப்பது, தங்கள் விடுதலையைத் தாங்களே போராடிப் பெறுவது, இவையே அம்பேத்கருடைய வாழ்வின் குறிக்கோளாகும். சுருங்கக்கூறின், இது மனிதனைப் புதியவனாக உருவாக்குவதேயாகும். கற்பிப்பதில் அம்பேத்கர் சிறந்த ஓர் ஆசிரியராகத் திகழ்ந்தார். சாதாரணமான மனிதனும் தன்னிடம் பொதிந்துள்ள செயல்வீறுமிக்க ஆற்றலை அறியும்படி அவர் செய்தார்; அந்த ஆற்றலைத் தட்டி எழுப்பி, வளர்த்தெடுத்து, தன் சொந்தக்காலிலேயே நிற்கும்படியான

நிலையை உருவாக்கினார். தனக்கென எத்தகைய மதிப்பும் இல்லை என்றோ, தன்னால் எதையும் சாதிக்க முடியாது என்றோ, ஓடும் நீரில் மிதந்து செல்லும் மரக்கட்டை போன்று ஆதரவற்ற நிலையில் இருப்பதாகவோ எந்தவொரு மனிதனும் நினைக்கக்கூடாது என்று அம்பேத்கர் அறிவுறுத்தினார்.

தீண்டப்படாத வகுப்பு மக்களுக்கு - குறிப்பாக இளைஞர் களுக்கு அம்பேத்கர் கூறியுள்ள அறிவுரைகள் மிகச் சிறந்த முன்மாதிரியாகத் திகழ்கின்றன. உங்களை நம்பி - உங்களுடைய சொந்த முயற்சிகளை நம்பிச் செயல்படுங்கள்; உங்களுடைய சொந்த அறிவுத்திறனை நம்பி, பகுத்தறிவையே துணையாகக் கொண்டு செயல்படுங்கள்; என்று கூறி, அம்பேத்கர் தீண்டப்படாத வகுப்பு மக்களுக்குத் தெளிவையும் எழுச்சியையும் ஊட்டினார். கற்பதைவிடப் புனிதமானது வேறொன்றுமில்லை என்பது அம் பேத்கரின் அழுத்தமான கருத்தாகும். இயற்கை யாரையும் அடிமையாகப் படைக்கவில்லை. பிறக்கும்போதே யாரும் மூடனா கப் பிறப்பதில்லை. ரானடே, திலகர், கோகலே முதலானோரின் பெருமைமிகு மரபுகளையும், அயர்விலாத கடும் உழைப்பையும், உயர்ந்த குறிக்கோள்களையும், பொது வாழ்வில் அவர்கள் பின்பற்றிய விழுமிய நெறிகளையும்பற்றி அம்பேத்கர் நினைவு கூர்ந்து மாணவர்களிடம் விளக்கினார். கிரேக்கப்புராணக் கதையில் வரும் பெண் தெய்வமான டெமிட்டர் ஒரு குழந்தையிடம் மனித சக்திக்கு அப்பாற்பட்ட மாபெரும் சக்தியை உண்டாக்க வேண்டும் என்பதற்காக அன்றாடம் எவ்வாறு அக்குழந்தையை நெருப்பில் நிறுத்தி வந்தாள் என்ற கதையை அம்பேத்கர் தீண்டப்படாத வகுப்பு மக்களுக்கு விளக்கிக் கூறி வந்தார்.

'சிறந்ததோர் எதிர்காலத்தைச் சமைப்பதற்காகத் தற்போதைய இன்பங்களைத் தியாகம் செய்து இடையறாது செயல்படுங்கள். உங்களுடைய குறிக்கோளை அடையும்வரை தீப்போல் சுடும் துன்பங்களை ஏற்றுத் தியாகம் செய்ய முன்வாருங்கள். உங்களு டைய இலட்சியத்தின் ஈடிலா மேன்மையில் அழுத்தமான நம்பிக்கை கொள்ளுங்கள். உங்களுடைய குறிக்கோள் உயர்ந்தது; விழுமியது; நீங்கள் மேற்கொண்டுள்ள பணி பெருமைக்குரியது. எந்த மக்களிடையே பிறந்தோமோ அம்மக்களுக்காகப் பணியாற்ற வேண்டியது நம் கடமை என்று விழிப்புணர்வு பெற்று வீறு கொண்டெழுந்தவர்கள் வாழ்த்துக்குரியவர்கள். தங்களுடைய நேரத்தை, திறமைகளை, மற்றுமுள்ள அனைத்தையும் அடிமை

விலங்கை உடைப்பதற்காக அளிப்பவர்கள் பெருமைக்குரியவர்கள். ஒடுக்கப்பட்ட மக்கள் தங்கள் மனித உரிமைகளைப் பெறும்வரையில், பெருந்துன்பங்களுக்கும், அச்சுறுத்தும் ஆபத்துகளுக்கும் இடையில் செயலாற்றி - அடிமைப்படுத்தப்பட்டுக் கிடக்கும் மக்களின் விடுதலைக்காகத் தொடர்ந்து போராடுபவர்கள் பெரும் புகழுக்குரியவர்கள்'' இவையே அம்பேத்கர் அவருடைய வகுப்பு மக்களுக்கு அறிவுறுத்திட விரும்பிய கருத்துகளாகும்.

பசித்துக் கிடக்கும் அவருடைய வகுப்பு மக்கள் பக்தி என்ற வலையிலோ, வழிபாட்டு மரபுகளிலோ, தம்மால் எதுவும் செய்ய இயலாது என்ற சிந்தனையிலோ சிக்கிக் கொள்ளக் கூடாது என்று அம்பேத்கர் விரும்பினார். உங்கள் தலைவிதி இது என்று எண்ணி அடங்கி அமைதியாக இருக்காதீர்கள்; உங்கள் இழிநிலையை ஆண்டவனின் கட்டளை என்று கருதாதீர்கள் என்று கூறி, சாதாரணமான மனிதனுக்கும் அறிவு புகட்டினார். அறியாமை நிறைந்த மக்கள்தான் தங்கள் தலைவிதி முன்னரே நிர்ணயிக்கப்பட்டது என்றும் அதை மாற்ற முடியாது என்றும் நம்புகின்றனர். தீண்டப்படாத வகுப்பு மக்களின் மனங்களிலிருந்து இச்சிந்தனையை வேருடன் கல்லியெறிந்திட அம்பேத்கர் விழைந்தார். தீண்டப்படாதவர்களைச் செயலற்றவர்களாக்கிவிட்ட இத்தகைய மூட பக்திவழிச் சிந்தனை முட்டாள்தனமானது என்று, விவேகானந்தரைப் போலவே அம்பேத்கரும் கூறினார். ஏனெனில் மூடபக்தி ஒருவரின் செயல்படும் உணர்வைக் குன்றச்செய்து கோழையாக்கி எளிதில் எதற்கும் பணிந்து போகும் நிலைக்கு ஆளாக்கிவிடுகிறது.

இறப்புக்குப் பின்னர் அடையப்போவதாகக் கருதப்படும் மேலுலகம்பற்றிய சிந்தனையிலிருந்து தீண்டப்படாத வகுப்பு மக்களை விடுவித்து இவ்வுலகில் அவர்களுக்கு இருக்கின்ற இழிந்த வாழ்க்கை நிலைகளைப் பற்றிச் சிந்திக்குமாறு செய்திட அம்பேத்கர் முயன்றார். இம்மண்ணுலக இன்பங்களை இவர்கள் துய்க்க வேண்டும் என்றும் பெரும்பான்மையினராக உள்ள மற்ற மக்களுக்குச் சமமாக கலாச்சாரத்தில் இவர்களை உயர்த்திட வேண்டும் என்றும் அம்பேத்கர் எண்ணினார். தங்களின் தாழ்நிலை கடவுளின் கட்டளையே என்ற எண்ணத்தில் தோய்ந்து கிடக்கும் தீண்டப்படாத வகுப்பு மக்களின் தன்னிலையிழந்த - மாந்த நிலையிலிருந்து கீழே தள்ளப்பட்ட சிந்தனைக்கு அம்பேத்கரின் கூற்று சிறந்த மாற்று மருந்தாக அமைந்தது. அதே சமயத்தில் மிக முன்னேறிய மனிதர்களையும் சமூகங்களையும் நோக்கி,

அம்பேத்கர் பொருள் வழிப்பட்ட வசதி வாய்ப்புகள் மட்டுமே மனித வாழ்வின் எல்லாத் துன்பங்களையும் தீர்த்துவிட மாட்டா என நயமான தன்மையில் எச்சரித்தார். மனிதன் பண்பாட்டின் ஒரு வடிவம்; அவன் உண்ணுவதற்காக மட்டுமே உயிர் வாழ்வதில்லை என அம்பேத்கர் கூறினார்.

நவீன இந்தியாவின் சிறந்த இந்துச் சமயச்சீர்திருத்தவாதிகளுள் ஒருவரான அம்பேத்கரின் வாழ்க்கை இந்துச் சமய மறுமலர்ச்சியில் - இந்துச் சமூக அமைப்பைத் திருத்தியமைப்பதில் - ஓர் காலக்கட்டமாகும் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். இந்துச் சமயத்தில் உபநிடதங்கள் முதலாவது மறுமலர்ச்சியைத் தோற்றுவித்தன. உபநிடதங்கள் புதிய சிந்தனை வீச்சுடன் வந்தபோது கடவுள்களும், புரோகிதர்களும் யாகங்களும் பின்னுக்குத் தள்ளப்பட்டன. வைதிகப் புரோகிதர்களும், வேள்விகளின் மேன்மையும் மீண்டும் முன்னைவிட மேலாதிக்கம் பெற்றபோது சீர்கேடுகள் வேகமாக நிகழ்ந்தன. இக்காலக்கட்டத்தில் புத்தர் தோன்றி இந்துக்களின் சமூக மத அமைப்பு முறைகளுக்குப் புத்துயிரூட்டிப் புதுப்பித்தார். புத்தர் புரோகிதப் புரட்டை, வேள்வி முறையை எதிர்த்தார்; சமூகத்தில் உள்ள பிரிவினைகள் ஒழிக்கப்பட வேண்டும் என்றார்.

ஆதிசங்கரரின் காலத்தில் இந்துமதம்கைத்தேர்ந்த சூழ்ச்சியுடன் பௌத்தசமயக் கோட்பாடுகளைத் தன் வயப்படுத்திக் கொண்டது; ஆனால் வருணாசிரம அமைப்பின்மீதும் தலைவிதித் தத்துவத்தின் மீதும் தன் பிடியை மேலும் இறுக்கியது. இராமானுசர், சக்ரதார், கபீர், இராமநந்தர், குருநானக், சைத்தன்யர், நாமதேவ் மற்றும் மராட்டியத்தைச் சேர்ந்த சமயக் குரவர்களின் மத போதனைகள் மற்றுமோர் மறுமலர்ச்சி இயக்கத்தைத் தோற்றுவித்தன. இந்துச்சமய மறுமலர்ச்சியின் நான்காவது கட்டம் ராஜாராம்மோகன்ராய், ஜோதிபா புலே, இரானடே, தயானந்தர், விவேகானந்தர் ஆகியோரின் காலத்தில் உருவாயிற்று. இதைப் பகுத்தறிவின் அடிப்படையில் சாவர்க்கர் மேற்கொண்டு செயல்படுத்தினார். இம்மறுமலர்ச்சி இயக்கத்திற்குக் காந்தியோ சமூக அமைப்பின் அடிப்படையில் இல்லாமல் மனிதநேய நோக்கில் தன் பங்களிப்பை நல்கினார்.

இந்துச்சமய மறுமலர்ச்சியில் - இந்துச் சமூக அமைப்பைச் சீர்திருத்தியமைப்பதில் அம்பேத்கரின் இயக்கம் ஐந்தாவது கட்டத்தை உருவாக்கியது. இந்துச் சமயத்திற்கும் இந்துச் சமூக அமைப்பிற்கும் எதிராக அவர் தொடுத்த தாக்குதல் எரிமலை

போன்றதாகும். புத்தர் முதல் வீரசாவர்க்கர் வரை தோன்றிய புரட்சியாளர்கள் தொடுத்த தாக்குதல்களிலிருந்து அம்பேத்கரின் தாக்குதல் வேறுபட்டதாக இருந்தது. இரண்டாயிரம் ஆண்டுகளாக அடிமைகளாக நசுக்கப்பட்டுக் கிடந்த, ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களின் வரலாற்றில் அவர்களிடையிலேயே தோன்றிய முதலா வது புரட்சிகரமான தலைவர் அம்பேத்கரேயாவார். இந்துச் சமயத்தின் மீதும் இந்துச்சமூக அமைப்பின்மீதும் மட்டும் அம்பேத்கர் போர் தொடுக்கவில்லை; இந்து மதத்தைத் தூய்மை செய்து புரட்சிகரமானதாக ஆக்கிட - இந்துச் சமூகத்தைத் திருத்தியமைத்து அதற்குப் புத்துயிர் ஊட்டிட - அது மேலும் தரங்கெட்டுத் தாழ்ச்சியடைவதைத் தடுத்திட, இந்துச்சமய வரலாற் றில் முன் எப்போதும் இல்லாத தன்மையில், சிந்தனையில் ஒரு புரட்சியை உருவாக்கினார். ஆகவே இந்துச் சமயத்திற்கும் இந்தியாவிற்கும் அம்பேத்கர் ஆற்றிய அரும்பணி நவீன இந்தியா வின் இந்துத் தலைவர்களான ராஜாராம்மோகன்ராய், தயானந்தர், விவேகானந்தர் ஆகியோரின் தொண்டினைவிட உயர்ந்ததாகக் கருதப்படும். ஏனெனில் அவர்களைப் போலல்லாமல், அம்பேத்கர் அரசியலமைப்புச் சட்டம், மற்றும் அரசியல் குறித்த சிந்தனைகளுக் குச் செழுமையூட்டினார்; நாட்டின் முன்னேற்றத்திற்காகக் கடுமை யாக உழைத்தார்.

சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றின் அடிப் படையில் இந்துச் சமூக அமைப்பைத் திருத்தியமைக்க வேண்டும் என்று அம்பேத்கர் விரும்பினார்; அதாவது சமூக சமத்துவம், சனநாயகம் ஆகியவற்றின் அடிப்படையில் இந்துச் சமூகம் இருக்க வேண்டும் என்று கருதினார். இந்துச் சமூகத்தை வருணாசிரமத்தி லிருந்தும் புரோகிதப் புரட்டுகளிலிருந்தும் விடுவிக்க வேண்டும் என்றார். இந்துக்கள் அம்பேத்கரின் கொள்கைகளை ஏற்றுச் செயல்பட்டால் அவர்கள் சுதந்திர மக்களாக, - உயிரோட்டமான - இயங்கக் கூடிய மக்கள் திரளாக - செயல்படும் ஒரு சமூகமாக உருவாவார்கள். அம்பேத்கரின் சமூகக் கோட்பாட்டின்படி, எந்த வொரு இந்துவுக்கும் தன் மதத்தைச் சேர்ந்த மற்றவர்களுடன் வாழ்வில் நீதியான வழிகள் அனைத்திலும் சரிநிகர் சமானமாக இருந்திட உரிமை வேண்டும். இந்துக்கள் தமக்கெனப் பொதுவான தோர் இந்துச் சமூகச் சட்டத்தை உருவாக்கிக் கொள்ளவேண்டும். தமக்குள் சாதித்தடைகள் ஏதுமின்றித் திருமணம் செய்து கொள்ளு வதற்கும், ஒன்றாக அமர்ந்து உண்பதற்கும், வாழ்வின் எல்லாத் துறைகளிலும் ஒன்றாக இருந்து வேலை செய்வதற்கும் இந்துக்

களுக்குச் சுதந்திரம் இருக்குமானால் அவர்கள் ஒன்றுபட்ட மக்களாக உருவாவார்கள்; மேலும் வளருவதற்கான வலிமை ஏற்படும்; புதியவர்களைத் தம் மதத்தில் சேர்த்துக் கொள்ள முன்வருவார்கள்.

இந்தி மட்டுமே இந்தியாவின் தேசிய மொழியாக இருக்க வேண்டும்; அதுவும் தேவநாகரி வரிவடிவில்தான் எழுதப்பட வேண்டும் என்ற கருத்தினை அம்பேத்கர் கொண்டிருந்தார். எல்லா வகுப்பு மக்களும் சுயமாகச் சிந்திக்க வேண்டும் என்று அவர் எதிர்பார்த்தார். அறிவைக் கட்டிக் காப்பவர்கள் தாங்களே என்று உரிமை கொண்டாடுகின்ற ஒரு பிரிவினரிடம், உங்கள் நலனுக்காகச் சிந்திக்கிற பணியை விட்டுவிடாதீர்கள்; உங்களுடைய நல்வாழ்வை, மதத்தை, நாட்டைப் பாதிக்கக்கூடிய பிரச்சினைகள் பற்றி சிந்திக்கின்ற ஆற்றலை வளர்த்துக் கொள்ளுங்கள் என அறிவுறுத்தினார்.

இவ்வாறாக, அம்பேத்கர் வகுத்த சமூகத் தத்துவம், இந்து மதத்தை விடுதலை செய்யுங்கள்; இந்துச் சமூகத்தை ஒன்றுபடுத்துங்கள்; இந்து மதச் சிந்தனைக்குப் புத்துயிரூட்டுங்கள்; சாதி முறையையும் தீண்டாமையையும் ஒழித்துக் கட்டுங்கள் என்று இந்துக்களுக்கு வேண்டுகோள் விடுத்தது. காரல் மார்க்சு கண்டறிந்து கூறிய வர்க்கப் போராட்டத் தத்துவம் உலகம் முழுவதும் எதிரொலித்ததுபோல், வருணாசிரம ஒழிப்பை அம்பேத்கர் வலியுறுத்தியமையும் பெரும் சிறப்புக்குரியதாகும். அம்பேத்கரின் சாதி ஒழிப்புத் தத்துவமும் உலகம் முழுவதும் எதிரொலித்தது. எனவே, அம்பேத்கர் தொடுத்த போரானது இந்து மதத்திற்காக - இந்திய நாட்டிற்காக - மானிட நலனுக்காக என்பது தெளிவாகப் புலனாகிறது. ஆகவே அம்பேத்கர் தீண்டப்படாத வகுப்பு இந்துக்களுக்கு ஆற்றிய தொண்டு என்பது இவ்வுலகில் ஏழையருள் ஏழையராக உள்ளவர்களுக்காகச் செய்த தொண்டேயாகும்.

III

அம்பேத்கர் வாழ்ந்த கடைசி ஆண்டுகள் அவருடைய தனிச்சிறப்புகளாய்த் திகழ்ந்த வீறார்ந்த அமைதிக்கும் மேதகைமைக்கும் மேலும் ஒளியூட்டின. உறுதியான, பருத்த, அச்சந்தரத்தக்க, ஆற்றல்மிக்க உருவமாக விளங்கிய அம்பேத்கரின் முகம் முரட்டுத்தனமாக இருப்பதுபோல் தோற்றமளித்தது. தலையின் உச்சியில் இருந்த வழுக்கை அவருடைய மேதகையைக் காட்டுவது போலிருந்தது. அம்பேத்கர் அய்ந்தடி ஏழு அங்குல உயரமிருந்தார்; அவருடைய எடை நூற்று எண்பது பவுண்டுகளாக இருந்தது.

கம்பீரமான ஒளிபொருந்திய அவருடைய நெற்றி அவர் அடைய விரும்பிய உயர்ந்த குறிக்கோளை உணர்த்தும் ஓர் அடையாளமாகத் திகழ்ந்தது. அக்குறிக்கோளுக்கு இந்தியாவில் உள்ள மிக உயர்ந்த பதவி எதுவும் ஈடாகாது என்று அவர் கூறுவது வழக்கம். நீண்டு வளர்ந்திருந்த அவருடைய முகாவாய்க்கட்டை எதையும் எதிர்த்து நிற்கத்தயார் என்று கூறுவது போலிருந்தது; வானமே இடிந்து வீழ்ந்திடினும் எடுத்த செயலை முடித்திடும் ஒப்பற்ற துணிவை அது காட்டியது. எதிரிகள் காட்டிய கொடிய வெறுப்பு முழுவதையும் தன் வளைவில் புதைத்துக் கொள்ளக்கூடிய பேராற்றலை அவருடைய முகவாய்க்கட்டை பெற்றிருப்பது போல் தோற்றமளித்தது. சவால் விடுவது போன்றிருந்த அவருடைய மூக்கு புயலில் சிக்கிய கப்பலின் சுக்கான் போல் விளங்கியது. அவருடைய கண்கள் ஊடுருவிப்பார்க்கக் கூடியவைகளாக - உயிர்த்துடிப்பானவைகளாக ஒளிர்ந்தன; ஆனால் அக்கண்களில் அய்யுறவு கொள்ளும் ஒருவகையான பார்வையும் இருந்தது. சினங்கொள்ளும்படியான நிலைக்கு அவரை ஆளாக்கிடும்போது, ஊடுருவிப்பாயும் ஆற்றல் மிக்க அவருடைய கண்கள் காலங்காலமாகத்தீண்டப்படாத வகுப்பு மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் முழுவதையும் பார்த்தன.

அதனால் தீண்டப்படாத வகுப்பினரின் உள்ளங்களில் குடியேறியிருந்த வெறுப்பை அவருடைய வாய் நெருப்புச் சொற்களாக உமிழ்ந்தது. அவர் ஒரு ஜமதக்னியாக விளங்கினார். ஆயினும் அவர் கலகலப்பாக இருக்கும் நேரங்களில் அவருடைய முகம் ஒரு கலங்கரை விளக்குபோல் ஒளி வீசியது. சூரியனைப்போல் ஒளிவீசக் கூடியவர்கள், சொந்தமாக ஒளிவீசும் திறனற்ற கோள்கள் போல், மற்றவர்களைப் பின்பற்றமாட்டார்கள்.

இயல்பில் அவர் புயல் போன்றவராக இருந்தார். சிறுகாரணம் போதும், அவர் சினந்து சீறுவதற்கு. அவருடைய மேசைமீது அடுக்கிவைக்கப்பட்டிருந்த நூல்களின் ஒழுங்கில் சிறிய மாற்றம் ஏற்பட்டிருப்பினும் எரிச்சல் கொள்வார். உடனே, "இங்கே வைத்திருந்த தாள்களும் நூல்களும் எங்கே? அவற்றை இங்கிருந்து யார் எடுத்தது?" என்று உறுமுவார். இதனால் அவருடைய மனைவி சவிதாவும், வேலைக்காரர்களும் அஞ்சுவர். அதன்பின் யாரேனும் ஒருவர் மெல்ல அவருடைய அறைக்குள் நுழைந்து, 'நீங்கள் தாள்கள் காணவில்லை என்று கூறுகிறீர்களே, அவை என்ன? இல்லை என்பது புத்தகமா? அல்லது குறிப்பேடா?

அது எந்த நிறம்? புத்தகத்தின் அளவு எவ்வளவு இருக்கும்?' என்று அம்பேத்கரிடம் நயமுடன் கேட்பர். அதன்பின் அந்தப் புத்தகமோ அல்லது குறிப்பேடோ கிடைக்கும் வரையில் தேடல் நடக்கும். அதைத் தேடிக் கண்டெடுத்து அவரிடம் கொடுத்ததும் அவர் மகிழ்ச்சித் துள்ளளுடன் 'ஓ! இதுவேதான்; இது எங்கே இருந்தது?' என்று கேட்பார். அடுத்த நொடியே அவருடைய சினம் தணிந்துவிடும்.

அம்பேத்கர் குடும்பத்திலேயே கட்டுண்டு கிடக்கும் மனிதராக இல்லை என்று எவரேனும் சொன்னால் அது உண்மைக்குப் புறம்பானது அன்று. மேலும் மற்றவர்களுடன் கூடிக்கலந்து பழகும் இயல்பு தன்னிடம் இல்லை என அவரே கூறிக்கொள்வதுண்டு. ஓயாத சுற்றுப்பயணங்கள், இடைவிடாத படிப்பு, எண்ணற்ற பொது நிகழ்ச்சிகள் முதலானவற்றிலேயே பெருந்தலைவர்கள் முழுநேரமும் மூழ்கியிருக்க நேரிடுகிறது. இத்தகையதொரு தலைவர் தன்னுடைய குடும்பத்திற்கும் இயல்பாகவே தலைவராக இருக்கிறார். இத்தன்மையில் விளங்கிய அம்பேத்கர் தன்னுடைய மகனுக்கும் தன் அண்ணன் மகனுக்கும் தலைவராக விளங்கினார். இருப்பினும், தன் ஒரே மகனுடைய திருமணத்தில்கூட அவர் கலந்துகொள்ள முடியாது போயிற்று. ஆயினும் அவருடைய மனைவி சவிதாஅம்பேத்கர் இத்திருமணத்தில் ஆர்வத்துடன் கலந்துகொண்டார்.

கடுகடுப்பான முகத்தோற்றம், ஓய்வறியா உழைப்பு ஆகியவை மற்றவர்களோடு அவர் நெருக்கமாகக் கலந்துறவாடுவதற்குத் தடைகளாக இருந்தன. அவருடன் பணியாற்றியவர்களுள் எவரும் ஏதேனும் ஒரு சமயத்திலேனும் அவருடைய கடிந்துரைக்கு ஆளாகாமல் தப்பியதில்லை. அவர் காலத்திய சிறந்த தலைவர்கள் சிலர் அம்பேத்கரைப் 'பிரிட்டிஷ் புல் டாக்' (Bull Dog) என்று வருணித்தனர். கவிக்குயில் சரோஜினி நாயுடுவோ அம்பேத்கரை ஒரு முசோலினி என்றார். அம்பேத்கரின் பேராற்றலும் கொள்கைப் பற்றுறுதியும் - பெருங்கல்வியும் எண்ணிறந்த தியாகங்களும் எவரிடத்தும் அவர்பால் ஈடுபாட்டையும் நம்பிக்கையையும் ஊட்டுவனவாகும். ஆயினும் மேலாதிக்கத்தொனிமிக்க அவருடைய வாழ்க்கை மறதியாலும் அலட்சியத்தாலும் பல நகரங்களை இழந்துவிட்ட ஒரு பேரரசைப் போன்றதாக இருந்தது.

அவருடைய போராட்டத்தில் அவருக்கு உற்றதுணையாக விளங்கியவர்களின் அல்லது அவருடைய கொள்கைகளில்

ஈடுபாட்டுடன் இருந்தவர்களின் நலன்களில் அம்பேத்கர் அக்கறை காட்டி வந்தார் என்பது அய்யத்திற்கிடமில்லாத உண்மையாகும். ஆனால் குறிப்பிட்டவர்களிடம் ஆர்வத்தைத் தூண்டும்படியான ஈடுபாட்டை அவர் காட்டியதில்லை; அவர்களே வியந்து பாராட்டிய துமில்லை. அவருடைய எதிரிகள் சில சமயம் அம்பேத்கருடன் நல்லிணக்கமுடன் இருக்க வேண்டும் என்று முயன்றிடினும், பொதுவாக அவரிடம் அவர்கள் கடுமையாகவே நடந்து கொண்ட னர். அதனால் அம்பேத்கரும் அவருடைய எதிரிகளிடம் ஈவிரக்கங் காட்டாமல் நடந்து கொண்டார்.

அம்பேத்கரின் நேர்மை அவருடைய எதிரிகளைக் கதிகலங்கச் செய்தது. உண்மை கசப்பானது; அதுபோன்று அவர் கரடுமுரடான வராகவே தென்பட்டார். மற்ற மாமனிதர்களைப்போலவே அம்பேத்கரும் ஒப்பரிய ஆற்றலின் ஊற்றாகத் திகழ்ந்தார்; நேரத்தைப் பொன்போற் கருதிச் செயல்பட்டார். புத்தரைப்போன்று தொலைநோக்குக்கொண்டவராக இலங்கினார். ஆனால் அவருடைய சிறப்பியல்புகளில் அடக்கமுடைமை இடம் பெறாதிருந்தது; ஆயினும் அதற்காக அம்பேத்கரை எவரும் என்றுமே குறைகூறிய தில்லை. தன்னுடைய அசைவிலாத் தன்னம்பிக்கையின்மீது அவர் கொண்டிருந்த பெருமித உணர்ச்சி கிட்டத்தட்ட தற்பெருமையாகப் பேசுவது போன்றிருந்தது. அவருடைய தகுதிகள்பற்றி அவர் வெளிப்படையாகக் கொண்டிருந்த பெருமிதம் நியாயமானதே என்பதை அம்பேத்கர் இந்நாட்டிற்கு ஆற்றிய அருந்தொண்டுகள் புலப்படுத்துகின்றன. ஒருவரையொருவர் வரவேற்கும் போது 'ஜெய் பீம்' என்று கூறிக்கொள்ளும் புதியமுறை அவருடைய தொண்டர்களிடையே அறிமுகமாகிப் பரவிக் கொண்டிருந்தது. 'ஜெய்பீம்' என்று வீரவணக்கம் செய்து அவருக்கு எழுதப்பட்ட கடிதங்களுக்குப் பதில் கடிதம் எழுதும்போது அக்கடிதத்தின் கடைசியில் அம்பேத்கரும் 'ஜெய்பீம்' என்று எழுதினார்.

ஒருவர் மிக உயர்வான நிலையை அடைய அடைய அவர் தனிமைப்பட்டுப் போகிறார் என்று உலக வழக்கில் சொல்லப்படு கிறது. அம்பேத்கர் வாழ்விற்கும் இது பொருந்துமாயினும் ஓய்வான நேரங்களில் மகிழ்ச்சியான மனநிலையில் நெடுநேரம் பேசுவார். அவருடைய பேச்சு அவரைக்காண வந்தவர்களுக்குப் பெருமகிழ்ச் சியை ஊட்டுவதாகவும்,வாதப் பிரதிவாதங்களைக் கிளப்புவதாகவும் அமையும். யாரையேனும் அவர் குத்தலாகப் பேசும் நேரங்களில் அவர் வாய்விட்டு வயிறு குலுங்கச் சிரிப்பார்; குத்தலுக்கு இலக்கானவரின் மறுப்புரையும் கூட அம்பேத்கரின் பெருஞ்

சிரிப்பில் மறைந்துவிடும்; இதுபோன்ற நேரங்களில் லுங்கியும் சட்டையும் உடுத்திக் கொண்டிருப்பார்; அவரிடம் களிப்பும், சிரிப்பும் வெளிப்பட்டு இனிமை கூட்டும். அவருடைய கலந்துரையாடலில் நகைச்சுவை மேலோங்கித் ததும்பும், அத்துடன் நாட்டுப்புறக் கிண்டல்களையும் பழமொழிகளையும் கூறுவதில் அவருக்குத் தணியாத ஆர்வமிருந்தது. ஆனால் இந்த நகைச்சுவைகளும் பழமொழிகளும் கடுமையானவைகளாக, கரடுமுரடானவைகளாக, குத்தலானவைகளாக, கழி மகிழ்ச்சியூட்டுவனவாக இருந்தன. இத்தகைய நகைச்சுவைத் துணுக்குகளையும் பழமொழிகளையும் கேட்பவர்கள் இவற்றிற்கான மறுப்புரையைக் கூறவேண்டும் என்பதையும் மறந்து விலா நோகச் சிரித்துக் களிப்பர். அவருடைய நகைச்சுவை உள்ளத்தைப் புண்படுத்துவதாகவும், பல சமயங்களில் முரட்டுத்தனமானதாகவும் இருந்ததற்கு அவருடைய இளமைப் பருவத்தில் பம்பாயில் பண்பாடற்ற குழுக்களோடு பழக நேர்ந்தமை காரணமாக இருக்கக்கூடும். இதில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியது யாதெனில், மற்ற எல்லா அரசியல் தலைவர்களிடமிருந்தும் அய்ந்தாண்டுகளில் பெறக்கூடிய நகைச்சுவைத் துணுக்குகளைவிட அதிகமானவற்றை அம்பேத்கர் ஒரே மணிநேரத்தில் கூறிடக்கேட்கலாம் என்பதேயாகும். ஆனால் அவை பெரும்பாலும் கதிரவனின் ஒளியைப் போன்று நீடிக்காமல் மின்னலைப் போன்று தோன்றி மறைந்தன.

மகிழ்ச்சித் துள்ளலுடனும் ஆர்வத்துடனும் மற்றவர்களிடம் பேசுவது என்பது அவருடைய உடல்நிலை நலிவடைய, நலிவடைய அருகிக் கொண்டே வந்தது. முதுமையில் காலடி வைத்துக் கொண்டிருந்த காலக்கட்டத்தில் அவருடைய மேதைமை மேலும் பெருஞ்சிறப்புடன் திகழ்ந்தது. அவரைச் சந்திப்பதற்காகக் காத்திருப்பவர்களிடம், அம்பேத்கர் அவர்களைச் சந்திக்கத் தயாராகி விட்டார் என்று முன்னறிவிப்புச் செய்யப்படும். சில சமயங்களில் இறுக்கமான பைஜாமாவும் பூத்தையல் வேலைப்பாடுகள் செய்யப் பட்ட மேல் ஜிப்பா (குர்த்தா)வும் உடுத்தியிருப்பார்; நாற்காலியில் சாய்ந்தவாறு அம்பேத்கர் அமர்ந்திருக்க, அவருடைய கால்களின்கீழ் வைக்கப்படும் திண்டுத் தலையணைகளை அவருடைய பணியாளர்கள் சரிசெய்ய, அவரைச் சந்திக்கக் காத்திருப்பவர்கள் மெதுவான குரலில் தமக்குள் பேசிக்கொண்டிருப்பார்கள்.

சுவை மிகுந்த பருப்புகள் கரடு முரடான ஓடுகளுக்குள் தான் உள்ளன. தோற்றத்தில் அச்சந்தரத் தக்கவராகவும் முரட்டுத்தனமானவராகவும் அம்பேத்கர் இருந்தபோதிலும், உணர்வுகளின் வற்றாத

ஊற்றாக அவர் விளங்கினார். திரைப்படங்களில் கழிவிரக்கக் காட்சிகள் வர நேர்ந்தால், தன் மனத்துயரைத் தாங்கமாட்டாமல், திரைப்படக் காட்சியின் இடையிலேயே எழுந்து வீட்டிற்குச் சென்றுவிடுவார். அவர் அன்பு பாராட்டி வளர்த்த நாய் ஒருமுறை நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தபோது, ஒரு நாளைக்கு இரண்டு தடவைகள் அவரே மருத்துவமனைக்குச் சென்று அதன் உடல்நிலை பற்றிக் கேட்டறிந்தார். அந்நாய் இறந்துவிட்டது என்று அவரிடம் சொன்னபோது குழந்தையைப் பறிகொடுத்தத் தாய்போல் நாற்காலியிலேயே துடிதுடித்தார். நாய் செத்துப்போன செய்தியைச் சொல்லவந்தவரோ பெரும்பாடுபட்டுத் தன் சிரிப்பை அடக்கிக் கொள்ள வேண்டியிருந்தது.

ஒருமுறை ஒரு ஏழைப்பெண்மணி இரவு இரண்டு மணிக்கு அம்பேத்கர் வீட்டின் வாயிற்கதவைத் தட்டினார். ஒரு மருத்துவம னையின் பெயரைச் சொல்லி, மரணத்துடன் போராடிக் கொண்டிருக் கும் தன் கணவனை அம்மருத்துவமனையில் சேர்க்க பன்னிரண்டு மணி நேரமாக முயன்றும் முடியவில்லை என்று கூறிக் கதறியழு தார். அம்பேத்கர் அப்பெண்மணியையும் அவருடைய கணவரை யும் தன் காரில் ஏற்றிச் சென்று அம்மருத்துவமனையில் சேர்த்தார். அம்மருத்துவமனைக்கு அருகில் குடியிருக்கும் அவருடைய நண்பரான ஆச்சாரிய எம்.வி. தண்டே வீட்டிற்கு விடியற்காலை நான்கு மணிக்குச் சென்று, கதவைத்தட்டி எழுப்பி தனக்குத் தேநீர் வேண்டும் என்று கேட்டார். பல சமயங்களில், கட்டணம் எதுவும் வாங்காமலேயே அவர் சட்ட ஆலோசனைகளை வழங்கினார்; ஏழைகள் பாதிப்புக் குள்ளாகியிருந்த வழக்குகளில் கட்டணம் பெறாமலேயே வாதாடினார்.

அவருடைய கடைசி மகன் இறந்தபோது அம்பேத்கர் ஆற்றொணாத்துயரில் மூழ்கினார். அதனால் இறந்த குழந்தையின் உடலையும் அடக்கம் செய்வதற்காக எடுத்துச் செல்ல மறுத்திடும் அளவிற்கு அவர் மீளாத்துன்பத்தில் ஆழ்ந்திருந்தார். அவருடைய மகன் இறந்த அறைக்குள் நுழையவும் விரும்பாமல் பல நாட்கள் துன்பத்தில் தவித்தார். அவருடைய முதல்மனைவி ராமாபாய் இறந்தபோது எல்லையிலாத் துன்பக்கடலில் அழுந்திப் போனார். வேதனைத் தீயில் துடிதுடித்தார்.

ஒருமுறை கடுமையான கண்நோய் அவரைப்பற்றிக் கொண்டு துன்புறுத்தியது; அதனால் கண்பார்வை போய்விடுமோ என்று எண்ணிக்கண்ணீர்விட்டுக் கதறியழுதார். கண்பார்வையை இழந்த

பின் தன்னால் உயிர்வாழ இயலாது என்று கூறினார். இடுகாட்டில் தன் நண்பர் ஒருவரின் இறந்த உடலைக் கடைசியாகப் பார்த்தபோது இரங்கத்தக்க வகையில் தேம்பித்தேம்பி அழுதார்.

இடையறாத பணிகளில் ஈடுபாட்டுடன் செயல்படல்-போராட்டங்களை நடத்தல் என்பதாகவே அம்பேத்கரின் வாழ்க்கை அமைந்திருந்தது. ஆயினும் அவருடைய மூப்புக்காலத்தில் இசையைக் கேட்டு இன்புற அவருக்கு நேரம் கிடைத்தது. இசையின்பால் அவர் பெருவிருப்பங்கொண்டிருந்தார். ஒவ்வொரு மனிதனும் இசையில் இலங்கிடும் பண்நயத்தையும் கலைகளில் பொலிந்திடும் எழிலையும் துய்த்து இன்புற வேண்டும் என்று அம்பேத்கர் கருதினார். தன் முதுமையின் தொடக்கக் காலத்தில் அம்பேத்கர் வயலின் வாசிக்கக் கற்றுக் கொண்டார். இங்கிலாந்தில் பிரதமராக இருந்த சர்ச்சிலைப் போல, அம்பேத்கரும் ஓவியங்களை வரைந்தார். அவர் தீட்டிடும் ஓவியங்கள் உயிர்த்துடிப்பானவைகளாக உள்ளன என்று அவருடைய பணியாளர்கள் அவரிடம் கூறும் போது அகமகிழ்ந்தார். அம்பேத்கர் தொடர்ந்து பலநாட்களுக்கு நூல்களைப் படிப்பதிலேயே மூழ்கிவிடும் போது, மருத்துவராக இருந்த அவருடைய மனைவியும் பணியாளர்களும் தந்திரமாக அவருடைய கவனத்தை ஓவியந்தீட்டுவதிலும் பிறகலைகளில் ஈடுபடுவதிலும் திசைதிருப்பிவிடுவார்கள். உயர்ந்த ஓவியங்களும், கலைத்திறன் மிளிரும் பொருட்களும் அம்பேத்கரை ஈர்த்தன. கலைகளைப் பாராட்டுவது என்பதுகூட இந்தியாவில் சாதி அடிப்படையில் இருக்கிறதே என்று குறைபட்டுக் கொண்டார். ஏதேனும் ஒரு கலையைப் பின்பற்றும் சாதியில்தான் எந்தவொரு மனிதனும் பிறந்திருப்பான்; ஆதலால் ஒவ்வொரு மனிதனும் தன் மனவிருப்பத்தின்படி செயல்பட முடியாததால் இந்தியாவில் கலைகளின் வளர்ச்சி பாதிக்கப்பட்டுவிட்டது என்று கூறினார்.

அம்பேத்கரின் இல்லம் தனித்துக்கிடக்கும் மாளிகையன்று. அவருடைய வீட்டில் மாபெரும் நூலகமும், அவருடைய உயர்ந்த உடைகளும், எண்ணற்ற எழுதுகோல்களும், அழகிய மகிழுந்தும், பெரும் எண்ணிக்கையில் பலவகையான பூட்சுகளும், காலணிகளும், அரிய ஓவியங்களும் இருந்தன. பலவற்றிலும் அம்பேத்கர் ஆர்வங்கொண்டிருந்தார் என்பதன் அடையாளங்களாக மட்டும் அவை இருக்கவில்லை; வாழ்வில் எதிர்ப்பட்ட தடைகளையெல்லாம் தகர்த்தெறிந்து வெற்றிபெற்ற அவருடைய மேலாளுமையின் வாழும் சின்னங்களாக அவை விளங்கின; இவ்வுலகில் தன்னால்

எதை எதையெல்லாம் வெற்றி கொள்ளமுடியும் என்று அவர் கருதினாரோ அவற்றை அடையும் வரையில் அவர் இடையறாது போராடிக் கொண்டேயிருந்தார். கலை நுட்பமும் எழிலும் மிளிரும் அவ்வரிய பொருட்கள் வெறும் பொருட்களாக மட்டும் அங்குக் காட்சியளிக்கவில்லை; ஒப்பரிய மனத்திட்பம் கொண்ட ஒருவர் தன்னுடைய உயர்நிலையை, சீர்மையை, ஆற்றலை, அறிவாண் மையை நிலைநாட்டிட எவ்வாறெல்லாம் உறுதியுடன் செயல்பட் டார் என்பதற்குச் சாட்சி கூறும் சின்னங்களாக அவை விளங்கின. பல்லாண்டுகள் பட்டினியிலும் குப்பைக் கூளங்களுக்கு இடையி லும் வாழ்ந்த ஒருவரின்-முடிதிருத்தகங்களிலிருந்து விரட்டியடிக்கப் பட்ட, மாட்டு வண்டிகளிலிருந்து உருட்டிவிடப்பட்ட, உணவகங் களிலிருந்து வெளியேற்றப்பட்ட, கல்லூரிகளிலும், நீதிமன்றங்களி லும், அலுவலகங்களிலும் ஒதுக்கி வைக்கப்பட்ட ஒருவரின் வாழ்க்கைப் பாதையில் அவர் ஈட்டிய வெற்றிகளின் அடையாளங் களாக அப்பொருள்கள் காட்சியளித்தன. பல்வேறுபட்ட இழிவு களுக்கு ஆளாகியிருந்தபோதிலும் என்றேனும் ஓர் நாள் செல்வச் செழிப்பில் திகழ வேண்டும் என அவர் பூண்டிருந்த உறுதி நிறைவேறியது.

பெரிய அளவிலான, பல்வேறு வகையிலான மையூற்று எழுதுகோல்களின்மீது அம்பேத்கர் அடங்கா ஆசை கொண்டிருந் தார். உயர்ந்த உடை மீதும் அழகாகத் தைக்கப்பட்ட ஆடைகள் மீதும் அவருக்குத் தனி விருப்பம் உண்டு. ஆடை பாதி, ஆள் பாதி என்பது போல் உயர்ந்த உடைகளை அழகான முறையில் உடுத்தித் தன்னை நேர்த்தியான மனிதராகக் காட்டிக் கொள்ளுவதில் உள்ளூர அவர் மகிழ்ந்ததாகத் தெரிகிறது. ஆயினும் வாழ்வின் மற்றெல்லா நிலைகளிலும் அவர் சிக்கனமானவராகவே இருந்தார். இளமைப் பருவத்தில் வறுமையின் காரணமாக மிகவும் சிக்கனமாக வாழ்ந்து பழகிய பழக்கம் அவருடைய வாழ்நாள் முழுவதும் அவரிடம் இலங்கியது.

அம்பேத்கர் புகைபிடித்ததில்லை; மது அருந்தியதுமில்லை. நூல்களைப் படிப்பதிலேயே பெரும்பகுதி நேரம் ஆழ்ந்திருக்கும் இயல்பினராக அவர் இருந்ததால் சமூகத்தில் நடக்கும் அன்றாட நிகழ்ச்சிகளில் நாட்டமின்றி இருந்தார். எப்போதேனும் ஒருமுறை அவர் திரைப்படத்திற்குச் செல்வார். தன்னுடைய முதல் மனைவியு டன் 'அங்கிள் டாம்' (Uncle Tom) என்ற திரைப்படத்தைப் பார்த்தார். தீண்டப்படாத வகுப்பினரை மய்யமாக வைத்து எடுக்கப்பட்ட

'அச்சுயுத் கன்யா' (Achhyut Kanya) என்ற திரைப்படத்தைப் பார்த்தபோது உணர்ச்சி வயப்பட்டவராகவும் சோகம் கப்பியவராக வும் காணப்பட்டார். அவருடைய இரண்டாவது மனைவியுடன் 'ஆலிவர் டுவிஸ்ட்' (Oliver Twist) என்ற திரைப்படத்தைப் பார்த்தார். துன்பத்தில் உழல்பவர்களின், ஏழைகளின், நசுக்கப்பட்ட மக்க ளின் வாழ்க்கை பற்றிய காட்சிகள் அவருடைய உள்ளத்தைத் துடிக்கச் செய்தன. அவர் சிறுவனாக இருந்தபோது கிரிக்கெட் விளையாடினார். அவருடைய முதல் மனைவி உடல்நலம் பெறும்பொருட்டு இடமாற்றங்கருதி தார்வாருக்குச் சென்றிருந்த போது, அங்கே தீண்டப்படாத வகுப்பு மாணவர்களுக்காக அம்பேத்கர் நடத்தி வந்த மாணவர் விடுதியைச் சேர்ந்த மாணவர்களுடன் கிரிக்கெட் விளையாடினார். தன் இருபதாம் அகவையின் தொடக்க ஆண்டுகளில் சீட்டாட்டம் ஆடுவதில் மகிழ்ச்சி கொண்டார். சீட்டாட்டத்தில் பிரிஜ் (Bridge) வகை ஆட்டம் ஆடுவதில் பெருவிருப்பம் கொண்டிருந்தார். வழக்கமான பணிகளி லிருந்து விடுபடுவதற்கான சிறந்த மாற்றாகவும், உடற்பயிற்சியாக வும் கருதி நாள்தோறும் கடலில் நீராடினார்.

சமையல் செய்வதில் அவரே வல்லவராகயிருந்த போதிலும், குறிப்பிட்ட வகை உணவுதான் வேண்டுமென்று அம்பேத்கர் ஒருபோதும் வற்புறுத்தியதில்லை. சிலபோது அவர் நூலகத்திலேயே உணவு உண்பார். குடும்பத்தினர் பேரில் அவர் சினங்கொள்ளும் நேரங்களில் ஒரு சொல்லும் பேசாமல், உண்ணாமல் சிலைபோல் அமர்ந்திருப்பார்; பிறகு என்னை எளிதில் இணங்கச் செய்துவிட முடியாது என்று முணுமுணுப்பார்.

பல்லாண்டுகள் விடாமுயற்சியுடன் அம்பேத்கர் நடத்திய போராட்டங்கள், தீண்டப்படாத வகுப்பு மக்களின் முன்னேற்றத்திற் காக மேற்கொண்ட கடும் முயற்சிகள், அதனால் அவர் சந்தித்த இடர்ப்பாடுகள் அவருடைய வாழ்வில் குறிப்பிட்ட ஆபத்துகள் முதலானவை ஒளிவீசும் அவருடைய முகத்தில் எத்தகைய கீறலையும் களைப்பையும் ஏற்படுத்த முடியவில்லை. சிறிதுகாலம் குடல்வால் அழற்சி நோயினாலும், குருதி அழுத்தத்தினாலும் துன்புற்றார். வாழ்நாளின் பிற்பகுதியில் நீரிழிவு நோயால் அவருடைய உடல்நிலை பெரிதும் நலிவுற்றது. அம்பேத்கரின் வலுவான உடல் நீரிழிவு நோய்க்கு எளிதில் இலக்காகிவிட்டபோதி லும், அவருடைய உள்ள உரன் உறுதிகுலையாமல் நின்றது; மற்ற முக்கியமான உடலுறுப்புகள் பழுதுபடாமல் இருந்தன.

கால்களில் இருந்த வலித்தொல்லைக்காக 1954ஆம் ஆண்டின் தொடக்கத்தில் மின்அதிர்ச்சி மருத்துவம் செய்து கொண்டார்; அவருடைய பருத்த உடலைத் தாங்கிடும் வலிமையை அப்போது அவருடைய கால்கள் இழந்துவிட்டன. கைத்தடியின் துணையுடனோ அல்லது தனிச்செயலாளரின் அல்லது மற்றவர்களின் தோள்மீது அவருடைய கையைப் போட்டுக் கொண்டே துன்பமுடன் மெல்ல அடியெடுத்து வைத்து நடந்தார்.

அம்பேத்கரின் கையெழுத்து மிகவும் நேர்த்தியானதாக இருந்தது. மன உறுதியை, சிந்தனைத் தெளிவை, பொலிவை அது புலப்படுத்தியது. அழகிய நாய்களை அம்பேத்கர் விரும்பி வளர்த்தார். கண்ணைக் கவரும் புதிய இன நாய் ஒன்றை நாட்டின் எந்த மூலையில் பார்த்தாலும் அதை வீட்டிற்குக் கொண்டு வந்துவிடுவார்.

அம்பேத்கருடனான சந்திப்பு என்பது பேசும் அருங்காட்சியகத்திற்குள் நுழைந்தது போன்றிருக்கும். அவருடைய கலந்துரையாடல் தெளிவூட்டுவதாகவும், தன்வயப்படுத்துவதாகவும், விறுவிறுப்பானதாகவும், பல செய்திகளை எடுத்துரைப்பதாகவும் இருக்கும். வியத்தகு அருங்காட்சியகம் போன்று அறிவுக்களஞ்சியமாகத் திகழ்ந்த அவருடைய மூளையில் பல்துறை அறிவையும் சேர்த்து வைத்திருந்தார். அதனால் அவர் கலந்துரையாடும்போது அவருடைய பேச்சு பலதுறைகளிலும் தோய்ந்து வெளிப்படும். அவருடைய பேச்சை எதிரில் இருந்து கொண்டு கேட்பவர்க்கு, பழைய இருண்ட காலத்தை, வரலாறு எனும் விளக்கைக் கையில் ஏந்தியவாறு கடந்து வருவது போலவும், உலகத்தின் உயரமான உச்சியாகத் திகழும் பாமிர் முடியிலிருந்து உலகம் முழுவதையும் காண்பது போலவும் தோன்றும். கடந்த காலத்தைப்பற்றிய பொருள் விளக்கத்தைத் தருவதாகவும், புராண இலக்கியத்தின் முக்கியத்துவம் குறித்த உண்மைகளைப் புலப்படுத்துவதாகவும், பண்டைய மற்றும் நவீனத் தத்துவங்கள், சமயக்கோட்பாடுகள், கொள்கைகள் பற்றிய அறிவு விளக்கமாகவும் அம்பேத்கரின் உரையாடல் அமைந்திருக்கும். அம்பேத்கரின் உரையாடலைக் கேட்பவர் அவருடைய ஈர்ப்புக்கு ஆளாவதிலிருந்து தப்பிக்கவே முடியாது. நம்முடைய காலத்தில் வாழும் மிகச்சிறந்த அறிஞருடனான இனிய சந்திப்பு என்று எண்ணி மகிழும்படியாகச் அச்சந்திப்பு இருக்கும்.

தொழிலாளர் நலத்துறை அமைச்சராக அம்பேத்கர் பொறுப்பேற்பதற்கு முன்பு, அன்றாடம் செய்ய வேண்டிய வழக்கமான

பணிகள் என்று எதுவும் இல்லாமலிருந்தது. அந்நாட்களில் விடியற்காலையில் எழுந்துவிடுவார்; அல்லது இரவு முழுவதும் படித்துவிட்டு விடியற்காலை படுத்து காலைவரையில் தூங்கியபின் எழுவார்; சிறிதளவு உடற்பயிற்சி செய்வார்; குளிப்பார்; காலைச்சிற்றுண்டி உண்பார். செய்தித்தாள்களைப் படித்தபின், பகல் உணவை உண்டபின் அவருடைய மகிழுந்தில் நீதி மன்றத்திற்குச் செல்வார். மகிழுந்தில் போகும்போது அன்று காலை அஞ்சலில் வந்த புதிய புத்தகத்தை வேகமாகப் புரட்டிப்பார்ப்பார். பிற்பகலில் வழக்கில் வாதாட வேண்டியிருந்தால் சிலசமயம் பகல் உணவை உணவு விடுதியிலேயே உண்பார். நீதிமன்றத்தில் வேலைகள் முடிந்தபின்னர், புத்தகக் கடைகளுக்குச் சென்று நோட்டமிடுவார்; புதிய புத்தகங்கள் கொண்ட கட்டுகளுடன் வீடு திரும்புவார்; அல்லது வீட்டிற்குத் திரும்பும் வழியில் அவருக்கு அறிமுகமானவர்களின் வீட்டிற்குச் செல்வார். இவ்வாறு செல்வது அரிதாகவே நிகழும். அப்படிச் சந்திக்கச் செல்லும் நண்பரிடம் உள்ள கிடைத்தற்கரிய ஒரு நூலைப்பெற்றுக் கொண்டு வரவேண்டுமென்ற நோக்கத்துடன் செல்லுவதாகவே அது இருக்கும். ஏதேனுமொரு நூலைப் படித்தவாறே தனியாக இரவு உணவை உண்பார். அதன்பின் முடிவிலாத படித்தல் தொடரும்.

அம்பேத்கர் படிப்பதில் ஆழ்ந்திருக்கும்போது, அவரைச் சந்திப்பதற்காக வந்திருப்பவரிடம் பேசிட அவருக்கு நேரம் இருக்காது; உண்ணாமல் இருப்பதையும் மறந்து படிப்பதில் தொடர்ந்து மூழ்கியிருப்பார்; யாரிடமேனும் சினங்கொண்டிருக்கும் நேரங்களிலும் உண்ணாமல் தொடர்ந்து படித்துக் கொண்டிருப்பார். அவரைச் சந்திக்க வந்திருப்பவரை ஒருமுறை ஏறெடுத்துப் பார்த்துவிட்டு மீண்டும் படிப்பதில் ஆழ்ந்துவிடுவார்; சந்திக்க வந்தவர் காத்துக் கொண்டிருப்பார்; அம்பேத்கரின் படிப்பிற்குத் தடையாக இருப்பதை உணர்வார்; அம்பேத்கர் தொடர்ந்து ஊன்றிப்படிப்பதற்கும் ஆழ்ந்து சிந்திப்பதற்கும் தொல்லையாக இருக்கக்கூடாது என்று கருதி மாடியிலிருந்து இறங்கிவந்து வீட்டைவிட்டுச் சென்றுவிடுவார். "மூன்று துப்பாக்கி வீரர்கள்" (The three Musketeers) என்ற நூலை எழுதிய புகழ்பெற்ற எழுத்தாளரான அலெக்சாண்டர் டுமாஸ் தன்னைச் சந்திக்க வந்த நண்பரிடம் இடது கையை நீட்டி வரவேற்றவாறே வலது கையால் தொடர்ந்து எழுதிக்கொண்டேயிருந்தார். அம்பேத்கர் இதுபோல் செய்யவில்லை. ஆனால், இது போன்ற சமயங்களில் அம்பேத்கர் கண்களையும் இமைக்காமல் தொடர்ந்து படித்துக் கொண்டே

இருப்பார். படுக்கச் செல்லுமுன் ஒரு குவளை பால் அருந்துவார். அவருடைய இரண்டாவது திருமணத்திற்குப்பின், மருத்துவராக இருந்த அவருடைய மனைவி அம்பேத்கரின் அன்றாடப்பணிகளை ஒழுங்குபடுத்திட முயன்றார். இது தீர்க்க முடியாத ஒரு நோய் என்று அவர் கண்டறிந்திருப்பார் போலும்!

நேரத்தின் அருமையைக்கருதி அம்பேத்கர் தன்னுடைய வாழ்வில் எவ்வாறெல்லாம் நடந்து கொண்டார் என்பதற்கான நிகழ்ச்சிகள் கதை இலக்கியமாகிவிட்டன. அவருடைய நேரத்தை எவராலும் பறித்திட முடியாது. நேரமே எல்லாவற்றையும் முடிவு செய்கிறது என நெப்போலியன் கருதினார். ஒரு பெருவணிகருக்கோ நேரம் என்பது பணமேயாகும்; ஆனால், அம்பேத்கருக்கோ நேரம் என்பது அறிவாக இருந்தது. நம் காலத்தில் வாழ்ந்த இருபெரும் இந்தியத் தலைவர்கள் மட்டுமே தங்கள் வாழ்வின் ஒவ்வொரு நொடிப்பொழுதையும் பெரும் புதையலாகக் கருதிப் பயன்படுத்தி னார்கள். காந்தியும், அம்பேத்கருமே அவ்விரு தலைவர்களாவர். ஒவ்வொரு நொடிப்பொழுதின் அருமையையும் அவர்கள் அறிந்தி ருந்தனர். காலம் ஒரு தங்கச்சுரங்கம் என்றே அவர்கள் கருதினர். அம்பேத்கர் உறுதியான குறிக்கோள்களுடன் பொறுமையுடன் உழைத்து, நேரத்தைத் திட்டமிட்டுக் கொண்டார்; செயல்திறனை வளர்த்துக் கொண்டார். இந்த அளவிற்கு அறிவையும் செயல் திறனையும் வளர்த்துக் கொள்வதற்குச் சாதாரணமான மனிதர்களுக் குப் பத்துப்பிறவிகள் தேவைப்படும். நம்முடைய காலத்தில் அம்பேத்கரைப்போன்று இத்தகைய ஆற்றலை வளர்த்துக் கொண்ட தலைவர்கள் சிலரேயாவர். அம்பேத்கர் நூல்கள்பால் விடுதல் அறியா விருப்புடன் இருந்ததற்குக் காரணம் கற்றறிவதற்கும், தன்னை வளர்த்துக் கொள்ளுவதற்கும் மிகச்சிறந்த சாதனங்களாக நூல்கள் இருப்பதாக அவர் கருதியதேயாகும். நூல்களை மிக உயர்ந்த தன்மையிலான புத்துணர்ச்சியூட்டும் சாதனங்களாகவும், இன்பத்தின் ஊற்றாகவும் அவர் கருதினார். 'எனக்கு எது அறிவூட்டுவதாக உள்ளதோ அதுதான் எனக்கு மகிழ்ச்சி தருவதாக வும் இருக்கிறது' என்றார்.

இடையறாது நூல்களைப்படிப்பது என்பது அம்பேத்கருக்கு வாழ்வின் உயரிய இன்பத்தையும் முழுமையான தனிமையையும் தந்தது. மேலே குறிப்பிட்டுள்ளவாறு இரவு உணவை உண்டபின்ன ரும் இடையீடின்றிப் படிப்பார்; இரவும் கழிந்து காலைப்பொழுதும் புலரத்தொடங்கும்; பக்கத்திலிருந்து கட்டடங்களில் அரைகுறைத்

தூக்கமுடன் எழுந்து கொண்டவர்களின் முணுமுணுப்பு ஒலி கேட்கும். அந்நேரத்தில்கூட அறிஞர் அம்பேத்கர், அவருடைய ஆன்மீக முதாதையர்களாகக் கருதிய உலகின் மாபெரும் சிந்தனை யாளர்களும் அறிஞர்களும் எழுதிய நூல்களில் ஏதாவதொன்றைப் படித்துக் கொண்டிருப்பார். அவருடைய நாய் பீட்டர் காலைப் பொழுதில் அவருடைய நீவலை எதிர்நோக்கி அவர் காலடியில் நிற்கும்; தன் நாயைக் கண்டதும் இது காலைப்பொழுது என்பதை அம்பேத்கரும் அறிவார். அறிஞரான அம்பேத்கர், மணிகளின் பெருத்த ஓசையிலிருந்தும், வண்டிகளின் கடகட ஒலியிலிருந்தும், சம்மட்டியடிகளின் சத்தத்திலிருந்தும், கார்களின் பேரிரைச்சல்களி லிருந்தும் விலகியிருந்திடவே விரும்பினார்.

உலகின் கல்வி ஞானம் முழுவதையும் தனதாக்கிக் கொள்ள வேண்டும் என்பதே அம்பேத்கரின் குறிக்கோள். ஒரு பேரரசை நிறுவ வேண்டுமென்ற பேரவாவினையொத்த வேட்கையை, அறிவை அகழ்ந்தெடுத்தலில் அவர் கொண்டிருந்தார். எல்லாக் காலங்களிலும் வாழ்ந்த தலைசிறந்த சிந்தனையாளர்களும் மனித வாழ்வியல் சட்டங்களை வகுத்த தத்துவமேதைகளும் எழுதிய நூல்களைக் கொண்ட ஒரு நூலகத்தை அடர்ந்த ஒரு காட்டின் நடுவில் அமைத்து அங்கேயே அமர்ந்து இடையறாது படித்துக் கொண்டேயிருக்க வேண்டும் என்பதே அம்பேத்கரின் இறுதியான ஆசையாக இருந்தது. இவ்வாறு அம்பேத்கர் விரும்பியது தெய்வ ஒளியைத் தேடிக் கண்டறிவதற்காகவா? அல்லது மனித மனத்தின் இரகசியங்களை, பெருமையை, நீதியை, அல்லது தன்னலத்தை ஆராய்வதற்காகவா?

தன்னுடைய முதலாவது பெருவிருப்பம் இலக்கியத்தேடலே என்று கூறினார் ஜெஃபர்சன். இந்தியாவின் முதலாவது மக்கள் தலைவரான திலகர் 'சுதந்திர இந்தியாவில் நான் ஒரு கணிதப் பேராசிரியராக இருப்பேன்' என்றார். சில நேரங்களில், சிறந்த மனிதர்கள் நீதி, உரிமை ஆகியவற்றின்பால் அவர்கள் கொண்டிருக்கின்ற பற்றுக்கோட்டின் காரணமாக அரசியல் சுழலில் தள்ளப்படுகின்றனர். ஆயினும் அவர்களுக்குக் கிடைக்கின்ற முதல் வாய்ப்பைப் பயன்படுத்தி அன்றாட வாழ்வின் ஆரவாரங்களி லிருந்து விலகி, அறிவுத்தேடலில் ஈடுபடுகின்றனர். இந்திய நாட்டின் சுதந்திர வேட்கை திலகரை அரசியலில் நுழையச் செய்தது. தீண்டப்படாத வகுப்பு மக்களின் நலனில் கொண்டிருந்த அக்கறை அம்பேத்கரை அரசியலில் ஈடுபடச் செய்தது. இல்லாவிடில் சட்டசபை எப்படி இருக்கிறது என்று எட்டிப்பார்க்கவும்

அம்பேத்கர் விரும்பியிருக்க மாட்டார். அவர் கற்றறிந்த ஒரு மேதையாக, ஒரு மெய்யியல் அறிவாளராக, தியானேஸ்வரர் போன்ற ஒரு ஞானியாக விளங்கியிருப்பார். அம்பேத்கர் பரோடா சிற்றரசில் பணியாற்றியபோது அங்கிருந்த அதிகாரிகளும் ஏவல் பணியாளர்களும் அம்பேத்கரின் மனம் புண்படும்படி நடந்து கொள்ளாதிருந்திருப்பின், ஒருவேளை இந்திய அரசியலும், உலகப் பிரச்சினையாக இருந்த அடிமைமுறையும் ஆற்றல் மிக்க அருந்திறல் பல கொண்ட விடுதலை வீரராக அம்பேத்கரைப் பெற்றிருக்க முடியாமற் போயிருக்கக்கூடும்.

நாம் ஒன்றைப்பற்றி அளவாக அறிந்திருக்கும்போது அதைத் தெளிவாகவே அறிந்திருக்கிறோம்; ஏனெனில் அதிகமாக அறிந்திட அறிந்திட நம்முடைய அய்யங்களும் அதிகமாகின்றன என்று கதே (Goethe) கூறுவார். ஆனால் அம்பேத்கருக்கோ ஒன்றைப்பற்றி அதிகமாக அறிய அறியத்தான் துல்லியமான தெளிவு தோன்றும். சாவர்க்கரிடமோ அல்லது நேருவிடமோ இருந்ததுபோன்று எப்போ தேனும் மின்னலிடும் கருத்துப்பாய்ச்சல் அம்பேத்கரிடம் இல்லை. ஆனால் அம்பேத்கர் அவருடைய கருத்தை நிலைநாட்டிட வாதிடும்போது அக்கருத்தைப் பற்றி உலகின் மாபெரும் சிந்தனை யாளர்கள் கூறியிருப்பதை மேற்கோளாக அடுக்கடுக்காக எடுத்து உரைப்பார். அப்போது அவர் ஆளுமை மிக்கவராக, மறுக்க முடியாதவராக, வெல்லப்பட முடியாதவராகக் காட்சியளிப்பார். ஜான்சன் எந்த ஒரு நூலையும் அதன் தொடக்கம் முதல் இறுதிவரையில் படித்ததே இல்லை; அதுபோல் யாருமே ஒரு எழுத்தையும் விடாமல் ஒருநூலைப் படிப்பதில்லை என்றும் அவர் எண்ணினார். ஆனால் அம்பேத்கரோ அவர் படித்த எந்தவொரு நூலின் அட்டையின் நிறத்தையும் அதன் ஒவ்வொரு அத்தியாயத் தையும் நினைவு கூர்ந்திடும் அளவிற்கு நினைவாற்றல் மிக்கவராகத் திகழ்ந்தார். நூல்களைப் படிக்க வேண்டுமென்ற அவருடைய வேட்கை வற்றாது பாய்ந்தோடிக் கொண்டிருக்கும் கங்கையைப் போல் பெருக்கெடுத்துப் பாய்ந்து கொண்டேயிருந்தது. அவர் ஆயிரக்கணக்கான நூல்களை வாங்கினார்; கிடைத்தற்கரிய சில நூல்களையும் தேடித்திரட்டி வைத்திருந்தார். பண்டித மதன் மோகன் மாளவியா ஒருமுறை அம்பேத்கரின் நூலகத்தை இரண்டு இலட்சம் ரூபாய்க்கு வாங்கிட முன்வந்தார். நூலகத்தை விட்டுப்பிரிவது என்பது என் உயிர் பிரிவது போன்றதாகும் என்றுகூறி நூலகத்தை விற்க அம்பேத்கர் மறுத்துவிட்டார். டாக்டர் ஜான்சனைப்போலவே டாக்டர் அம்பேத்கரும் தன்னுடைய நூல்களை மற்றவர்களுக்குப்

படித்திடத் தரமறுத்துவிடுவார். இதில் இவ்விருவரும் ஒரே தன்மையினரே.

அம்பேத்கர் தன்னுடைய நூலகத்தில் உள்ள எந்தவொரு நூலையும் எவரும் தொட அனுமதிக்க மாட்டார். 'ஒருவேளை என்னுடைய போதாதகாலத்தின் காரணமாக என் நூலகத்தைக் கைப்பற்றிஎடுத்துச் செல்வதற்காக வருகின்ற அரசு அதிகாரியை (அமீனா) அவர் நூலகத்தின் முதல் புத்தகத்தின்மேல் கைவைப்பதற்குள் அந்த இடத்திலேயே கொன்றுவிடுவேன்' என்று அம்பேத்கர் ஒருமுறை குறிப்பிட்டுள்ளார். அந்த அளவிற்குப் புத்தகங்கள் அவருடைய உயிர்மூச்சாக இருந்தன. புத்தகங்களுக்கிடையே வாழ்வதற்காக என்னிடமுள்ள அனைத்தையும் இழக்கத் தயாராக இருக்கிறேன் என்று சிசரோ (Cicero) சொல்லியுள்ளார். இந்தியாவின் செல்வமனைத்தையும் எனக்கு அளித்தாலும், புத்தகத்தின் பேரில் நான் கொண்டுள்ள பற்றினை அதற்கு ஈடாகக்கருத நூல்களைத் தரமாட்டேன் என்றார் கிப்பன் (Gibbon). நூல்களைப் படித்திட அனுமதிக்கப்பட மாட்டாது என்ற நிபந்தனையுடன் அரசர் பதவியே அளிக்கப்பட்டாலும் எனக்கு வேண்டாம் என்று மெக்காலே கூறினார். சர் வால்ட்டர் ஸ்காட் வாழ்நாளெல்லாம் நண்பர்களாகக் கருதிப் பேணிய சிந்தனையாளர்களின் நூல்களை விட்டுப் பிரிந்தபோது கண்ணீர் விட்டுக் கதறியழுதார். அம்பேத்கரும் தன் கண்பார்வை பறிபோய்விடுமோ என்று எண்ணி ஒருமுறை தேம்பித்தேம்பி அழுதார்; ஏனெனில் கண்பார்வையை இழந்தபின் வாழ்க்கை அர்த்தமற்றதாகிவிடும் என்று அவர் கருதினார். கண்பார்வை இழக்க நேர்ந்தால் என் உயிரையே மாய்த்துக் கொள்வேன் என்றும் அவர் கூறினார்.

ஒவ்வொரு நூலை எழுதும்போதும் அம்பேத்கர் அகம் மகிழ்ந்தார். அவருடைய எண்ணங்களைஅச்சு வடிவத்தில் நூலாகக் காணும்போதெல்லாம் கங்குகரையிலாக் களிப்பெய்தினார். அவருடைய சிந்தனையிலிருந்து பிறந்த ஒவ்வொரு புதிய நூலும் அவருடைய நான்கு குழந்தைகள் பிறந்தபோது அவர் பெற்ற மகிழ்ச்சியைவிடப் பேரின்பமூட்டியது.

ஜெஃபர்சன் தான்பட்டிருந்த கடன்களை அடைப்பதற்காக அமெரிக்க அரசுக்குத் தன்னுடைய நூலகத்தை விற்றார். அம்பேத்கர் நிறுவிய மக்கள் கல்விக் கழகத்தின் மறுக்க முடியாத வேண்டுகோளுக்கிணங்க அவருடைய உயிரனைய நூலகத்தைச் சித்தார்த்தா கல்லூரிக்கு அளித்தார். விலை மதிப்பிலா அவருடைய நூலகத்திற்

காகப் பிர்லா அளிக்க முன்வந்த தொகையில் பாதியளவையே மக்கள் கல்விக்கழகம் அம்பேத்கருக்கு அளித்தது. அதன்பிறகுகூட, வழக்கம்போல், அம்பேத்கர் நூல்களை வாங்கினார். அதனால் தில்லியில் அலிப்பூர் சாலையில் 26ஆம் எண் இல்லத்தில் மீண்டும் ஒரு நூலகம் முகிழ்த்தது.

IV

மனிதர்களிடம் பொதிந்துள்ள சிறப்புகளெல்லாம் உழைப்பின் மூலமே வெளிப்படுகின்றன. அம்பேத்கர் ஒரு முறை ஒரு பத்திரிகையாளரிடம், 'நான் எந்த அளவிற்குத் துன்பங்களை ஏற்றேன்; கடுமையாக விடாமுயற்சியுடன் உழைத்தேன் என்பதைப்பற்றி உங்களுக்கு எதுவும் தெரியாது; என்னுடைய இடத்தில் நீங்கள் இருந்திருப்பின், இருக்கும் இடமே தெரியாமல் மறைந்து விட்டிருப்பீர்கள்' என்று சொன்னார். ஒரு குறிக்கோளை நிறைவேற்றிட வேண்டுமென்று ஒருவர் செயலில் ஈடுபடும்போது, அது அவருக்கு ஓர் உந்துவிசையையும் ஒப்பரிய அறநெறிசான்ற ஆளுமையையும் அளிக்கிறது. அம்பேத்கர் தன் வாழ்நாள் முழுவதும் தன்னுடைய தகுதிப்பாடுகளை வளர்த்துக் கொள்வதற்காகக் கடுமையாக உழைத்தார். இவ்வாறு வளர்த்தெடுத்த ஆற்றல்கள் முழுவதையும் அவருடைய மக்களின் விடுதலைக்காகவே அர்ப்பணித்தார். தீண்டப்படாத வகுப்பு மக்களின் விடுதலையையே அவருடைய உயிர் மூச்சாகவும் நாடிநரம்புகளில் துள்ளியோடும் குருதியின் துடிப்பாகவும் இருந்தது. இக்குறிக்கோளை நோக்கியே அவருடைய அறிவு முழுவதையும் ஆற்றல்கள் அனைத்தையும் எல்லாவகையான இன்பங்களையும் எல்லா முயற்சிகளையும் செலவிட்டார். அம்பேத்கர் ஒரு சிந்தனையாளராகவும் இருந்தார்; அதேவேளையில் ஒரு செயல்மறவராகவும் திகழ்ந்தார்; சிறந்த அறிஞராக விளங்கிய அவர் வினையாண்மை மிக்கவராகவும் இருந்தார். இத்தகைய பண்புகள் விந்தையான முறையில் இணைந்திருந்த ஓர் உயர்ந்த மனிதராக அம்பேத்கர் இலங்கினார். செயல்பாடு இல்லாத அறிவு பார்வையில்லாத கண்களைப் போன்றதாகும். ஆனால் அம்பேத்கரோ சிந்தனை வளம் செறிந்தவராகவும் வினையாண்மை மிக்கவராகவும் விளங்கினார். எழுத்துலகிலும் அரசியலிலும் அம்பேத்கர் எழுச்சியை உண்டு பண்ணினார். வியக்கத்தக்க வண்ணம் அறிவை அவர் சேர்த்து வைத்திருந்தார்; பலதுறைகளில் சிறந்த அனுபவமும் கூர்ந்த மதிநுட்பமும் கொண்டிருந்தார்.

அம்பேத்கரின் வாழ்விலும் செயல்களிலும் மூன்று மாமனிதர் களின் செல்வாக்கு மேலோங்கி நின்றது. சிறுவனாக இருந்தபோது ஆர்வமுடன் மகாபாரதக் கதைகளையும் இராமாயணக் கதைகளை யும் அவர் கேட்டமை அவருடைய உள்ளத்தில் பதிந்திருந்தபோதி லும், அம்பேத்கர் தன்னைச் சிறந்த மனிதராக உருவாக்கி வளர்த்துக் கொண்டதில் புத்தரின் வாழ்வும், கபீரின் போதனைகளும், புலேவின் போராட்டங்களும் பெரும் பங்காற்றின. இம்மூன்று மாமனிதர்கள்தாம் அம்பேத்கரின் உள்ளவலிமையின் ஊற்றாகத் திகழ்ந்தார்கள். மேலைநாட்டில் அவர் பெற்ற கல்வி அவருக்கு அறிவாயுதங்களை வழங்கியது.

கொள்கைகளையும் நடைமுறை வாழ்வையும் இணைப்பதில், அறிவையும் அனுபவத்தையும் ஒன்று சேர்ப்பதில் - அம்பேத்கர், இந்திய நாட்டின் பெருமையைக் கல்வியிலும் ஆராய்ச்சியிலும் உலகளாவிய தன்மையில் நிலைநாட்டிய இரானடே, பந்தார்க்கர், திலகர், தலாங் முதலானோரின் மரபு வழியில் வந்தவராக விளங்கினார். இத்தலைவர்களிடம் வாழ்வும் கல்வியும் இனிய தன்மையில் இணைந்திருந்தன. தாகூரின் கீதாஞ்சலி, சர். சி.வி. இரா மனின் ஒளியின் தாக்கம் பற்றிய கண்டுபிடிப்பு, பிரெஃபுல்ல சந்திர ராயின் அறிவியல் ஆராய்ச்சிகள், தாவரங்களின் செயல்பாடு குறித்த ஜே.சி. போசின் ஆய்வுகள், எஸ். இராதாகிருஷ்ணனின் தத்துவங்கள் இவ்வுலகை அணிசெய்து மேலும் செழுமையூட்டின. இவர்கள் மாறுபட்ட — ஒரு தன்மையினராவர். அறிஞராகவும் அதேபோது அரசியல்வாதியாகவும் திகழ்ந்த தலைமுறையில் கடைசித்தலைவராக அம்பேத்கர் மட்டுமே எஞ்சியிருந்தார். இத் தன்மை கொண்ட தலைவர்கள் இந்திய அரசியலில் பெரிதும் மறைந்து வந்ததால், இந்திய அரசியலில் ஒரு வெறுமை தோன்றத் தொடங்கியது. வழக்கறிஞராகவும் அத்துடன் அரசியல்வாதியாகவும் விளங்கிய சாப்ரு, ஜெயகர், சாஸ்திரி போன்றவர்கள் இந்திய அரசியலில் அவர்கள் வாழ்ந்த காலத்தில் சிறந்தவர்களாகத் திகழ்ந்தனர். ஆனால் இப்பொழுதோ வீரதீரச் செயல்கள் புரிவதில் நாட்டம் மிக்க அரசியல்வாதிகளும், ஆதாயம் தேடும் அரசியல்வாதி களும் ஒன்று சேர்ந்துகொண்டு அரசியலைக் கைப்பற்றிக்கொண்டு விட்டனர்.

கற்றறிந்த அறிஞராகவும் அரசியல்வாதியாகவும் விளங்கியவர் களில் திலகரைத்தவிர மற்ற தலைவர்களைக் காட்டிலும் அம்பேத்கர் ஒருவகையில் மேலும் உயர்ந்து நின்றார். அம்பேத்கர் புயல்

போன்றதோர் அரசியல்வாழ்வை மேற்கொண்டார்; பல அரசியல் போராட்டங்களையும் வன்முறையற்ற எதிர்ப்பு இயக்கங்களையும் தொடங்கி வழி நடத்தினார். தேவையேற்படும்போதெல்லாம் அம்பேத்கர் இப்போராட்டக் களங்களில் முன்னணியில் நின்றார். விளைவைப் பற்றிக் கவலைப்படாமல் விளக்கின் ஒளியை நோக்கிப் பாயும் விட்டில் பூச்சி போன்றதன்று வாழ்க்கை என்று அம்பேத்கர் கருதினார். அதனால் கொடூரமான தாக்குதல்களை அவர் சந்தித்தார்; அதே நேரத்தில் ஈவிரக்கமின்றி எதிரிகளைத் திருப்பித் தாக்கினார். ஆனால் எப்போது? இத்தகைய கட்டாயத்திற்கு ஆட்படும்போது மட்டுமே அவர் இதுபோல் செயல்பட்டார்; தீண்டப்படாத வகுப்பு மக்களின் நலன்கள் பாதிக்கப்படக்கூடும் என்று அவர் கருதிய சமயங்களிலும், நூல்களைப் படிப்பதில் ஆழ்ந்திருக்கும் அவரை வேண்டுமென்றே கவனத்தைக் குலைக்கும் வேளைகளிலும் அம்பேத்கர் தன் எதிரிகள்மீது கடுமையான தாக்குதல்களைத் தொடுத்தார். நூல்களின் வாயிலாகப்பண்டைக் காலத்துத் தத்துவ அறிஞர்களுடன் நவீன காலத்திய சிந்தனையாளர்களுடனும் அம்பேத்கர் உறவாடிக் கொண்டிருக்கும் நிலையிலிருந்து உசுப்பி விட்டு, அவர் செயலில் இறங்கும்படியான நிலைக்கு ஒரு நெருக்குதல் தரப்படும்போது, ஒரு நொடிப்பொழுதில் போரை எவ்வாறு தொடங்க வேண்டும் என்பதை அறிந்து வெகுண்டெழு வார்; பேராற்றல் படைத்த பீமனைப்போல் எதிரிகளின் முகாம்கள் மீது இடியேறுகளை எறிவார். அதனால்தான் அவர் மிகச்சிறந்த அறிஞர்களுள் ஒருவராக மதிக்கப்படுகிறார்; இறும்பூதெய்தக்கூடிய பன்னிரண்டுபேரில் ஒருவராகக் கருதப்படுகிறார்; இந்தியாவின் துணிவுமிக்க புதல்வர்களில் ஒருவராகத் திகழ்கிறார்; உலகில் உள்ள மிகச்சிறந்த அறிவாளிகளுக்குள் ஒருவராக அம்பேத்கரைச் சிலர் கணித்துக் கூறியுள்ளனர். கதையில் வரும் லில்லிப்புட்களுக்கு நடுவில் நின்ற கலிவரைப்போல் உண்மையில் அம்பேத்கர் மாபெரும் மனிதராக உயர்ந்து நின்றார். அம்பேத்கரைப் பற்றி ஒருவர் நினைக்கும்பொழுதே அளவிடற்கரிய மாபெரும் அறிவின் களஞ்சியமாக அவர் விளங்கியதுதான் உடனே நினைவில் வரும். இந்தியாவின் சிறந்த மைந்தரான அம்பேத்கர் அவர் காலத்தில் வாழ்ந்த எந்தவொரு பெரிய தலைவருக்கும் சமமானவராகக் கல்வியிலும் அரசியலிலும் உயர்ந்து நின்றார். கல்வியில் கரைக்கண்ட தாகவும் அரசியலைக் கரைத்துக் குடித்ததாகவும் தற்பெருமை அடித்துக் கொண்டவர்கள் அம்பேத்கரின் இராஜகிரகத்திற்கு ஒரு முறை சென்று அங்கு அறிவுச்சுடர் விட்டுக் கொண்டிருக்கும் தூங்கா மணிவிளக்கின்முன் தத்தமுடைய அறிவு விளக்குகளை ஒப்பிட்டுப் பார்த்தபின் தமக்குள் நாணிக்கொண்டு திரும்பினார்கள்.

மேடைகளிலும் நாடாளுமன்றத்திலும் அம்பேத்கர் தன் கருத்துகளை எடுத்துரைப்பதில் பேராற்றல் மிக்க பேச்சாளராக விளங்கினார். அவருடைய பேச்சைக் குறைகூறுபவர்கள்மீது மின்சாரம் பாய்வதுபோல் தாக்கித் திக்குமுக்காடச் செய்வார்; சுழல் துப்பாக்கியிலிருந்து குண்டுகள் பாய்வதுபோல் எதிரிகளின் மீது தாக்குதல்களை ஏவுவார். அவர்/ அரசியல் குருவாகக் கருதிய எட்மண்ட் பர்க் அளவிற்கு அம்பேத்கர் நாவன்மையைப் பெற்றிருக் காவிடினும், அவருடைய பேச்சு எளிமையானதாகவும், நேரானதாக வும் கூரியதாகவும் அதற்கெனத் தனியானதோர் எழில் பொருந்திய தாகவும் இருந்தது. அவருடைய பேச்சில் இருந்த அஞ்சாமை அவர் ஓயாது படித்ததன் மூலம் பெற்ற தன்னம்பிக்கையினாலும் அனுபவத்தினாலும் மேலும் கூர்மையடைந்தது. அவர் எதை நம்பினாரோ அதையே அவர் சொன்னார்; அது தெய்வவாக்காகத் திகழ்ந்தது. அவருடைய பேச்சின் தாக்குதலுக்கு இலக்கானவர் களோ, ஆவேசமானதாகவும், தாக்குந்தன்மையதாகவும் இருந்த பேச்சு எல்லையற்ற முரட்டுத்தனம், வாய்ந்ததாக அமைந்திருந்தது எனக் குறை கூறினர்.

தனிச் சிறப்பியல்புகளும் விழுமிய குறிக்கோளும் கொண்டி ருந்த மற்றெல்லாச் சிறந்த மனிதர்களுக்கு இருந்ததுபோன்றே, பெருமைக்குரிய பண்புகளும் சிறுமை இயல்புகளும் இருந்தன. அம்பேத்கரைப் போற்றி வழிபடுவோரும், தூற்றி இகழ்வோரும் இருந்தனர். தனிமனிதர் என்ற முறையில் அம்பேத்கர் நாணயம் மிக்கவர் என்றும், அஞ்சாமை செறிந்த அறிவுநேர்மையினர் என்றும் போற்றப்பட்டார். ஆயினும் அவர் வாங்கிய பொருள்களுக்கான பணத்தைத் தரும்போது நெடிய தவணை முறையிலும் கஞ்சத்தன மாகவும் தருவார் என்பதும் உண்மையேயாகும். தங்களுக்குச் சேரவேண்டிய பணத்தைக் கணக்குத் தீர்த்துக் கொடுக்குமாறு யாரேனும் அம்பேத்கரை அணுகும்போது, பணத்தை ஏற்கனவே கொடுத்தாகிவிட்டதே என்று கூறுவார்; அம்பேத்கர் அவ்வாறு சொல்வதில் சில நேரங்களில் உண்மையிருக்கும். ஆனால் பணம் எவ்வாறு அளிக்கப்பட்டது என்பதிலும், எந்தச் சூழலில் கொடுக்கப் பட்டது என்பதிலும்தான் பெரும்பாலும் சிக்கல் இருக்கும். மாசுமறுவற்ற பொதுவாழ்வை அம்பேத்கர் நடத்தினார். எனினும், அவரிடமும் சில குறைபாடுகள் இருந்தன. சிலை வணக்க மறுப்பாளர்கள் எல்லோருமே தம்முடைய முந்தைய தலைமுறையி னர் வணங்கிய சிலைகளை உடைத்தனர்; ஆனால் அச்சிலைகளுக் குப் பதிலாக அக்கோயில்களில் அவர்களே சிலைகளாக அமர்ந்து

கொண்டனர். புத்தரும் சிலை வழிபாட்டை மறுப்பவராக இருந்தார்; ஆனால் அவருக்குப் பிறகு அவரே வழிபாட்டுக்குரியவராக ஆக்கப்பட்டு, கடவுளின் அவதாரமாக சிலைவைத்து வணங்கப்பட்டார். அம்பேத்கரின் சொல்லே அவருடைய வகுப்பு மக்களுக்கு சட்டமாக விளங்கியது; அவர்களுக்கு அம்பேத்கரின் கூற்று தெய்வ வாக்காக இருந்தது; அவர்கள் அம்பேத்கரை வழிபடுதலுக்குரியவ ராக ஆக்கினர்; ஒவ்வொரு ஆண்டும் அவருடைய பிறந்த நாளின்போது அவருடைய உருவப்படத்தை அலங்கரிக்கப்பட்ட வண்டியிலும், பல்லக்கிலும் ஊர்வலமாக எடுத்துச் சென்றனர். இராமர், கிருஷ்ணர், புத்தர், திலகர், காந்தி, சாவர்க்கர், நேரு ஆகியோரின் பிறந்தநாள்களைப் போலவே அம்பேத்கரின் பிறந்த நாளும் பக்தியுடனும், நம்பிக்கையுடனும் கொண்டாடப்பட்டது.

அம்பேத்கர் தீண்டப்படாத வகுப்பு மக்கள்மீது கொண்டிருந்த செல்வாக்கு யாராலும் அசைக்க முடியாததாகத் திகழ்ந்தது. இந்த உண்மையை ஒரு நிகழ்ச்சி உறுதிப்படுத்தும். இந்துக் கடவுள்களை வணங்காதீர்கள் என்று அம்பேத்கர் தீண்டப்படாத வகுப்பு மக்களைக் கேட்டுக்கொண்டபோது சிறிதுகாலம் அவர்கள் அவ்வாறே வணங்காமல் இருந்தனர். ஆனால் வழக்கங்களும் மரபுகளும் மனிதனின் இரத்த நாளங்களில் படிந்துவிட்டவைகளாகும்; அதனால் அவற்றை அகற்றுதல் எளிதன்று. அறியாமை எப்போதும் மக்களிடம் அச்சத்தைக் கிளப்பிவிட்டுவிடக் கூடியது. எனவே சிறிது காலம் கழித்து, தீண்டப்படாத வகுப்பு மக்களின் உள்ளங்களில் இந்துக் கடவுள்களை வணங்காமல் இருப்பதுபற்றிய பயம் மேலோங்கியது; அதனால் அவர்களில் பெரும்பாலோர் பிறருக்குத் தெரியாமல் பழையபடியே இந்துக் கடவுள்களை வணங்கத் தொடங்கிவிட்டனர். பக்தி உணர்வு நிரம்பிய ஒரு முதியவர் அவருடைய 'பாபா சாகிப்' அவர்களிடம் சென்று, இந்துக் கடவுளான கணபதியின் உருவத்தை மீண்டும் தன்னுடைய வீட்டிற்குள் கொண்டு வருவதற்கு அனுமதிக்க வேண்டும் என்று கெஞ்சிக் கேட்டார்; கடவுளுக்குத் தான் முன்பு செய்த வேண்டு தலை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது என்றும் அம்பேத்கரிடம் அம்முதியவர் கூறினார். அம்முதியவரின் கள்ளங் கபடற்ற உள்ளத்தைக்கண்ட அம்பேத்கர், புன்சிரிப்புடன், 'நான் கடவுளை நம்பாதவன் என்று உங்களிடம் யார் சொன்னது? உங்கள் விருப்பம்போல் போய் வழிபடுங்கள்' என்று உரத்த குரலில் அம்முதியவரிடம் அம்பேத்கர் கூறினார். அவ்வாறே அம்முதியவரும் தன்னுடைய வேண்டுதலை நிறைவேற்றிக் கொண்டார்.

மற்றொரு நிகழ்ச்சியைக் காண்போம். காங்கிரஸ் அமைச்சர் ஒருவர் அம்பேத்கரின் தொண்டராக இருந்த ஒருவர்க்குக் காவலர் வேலையைத்தர முன்வந்தார். அப்படி வேலை பெற்றவரின் மகன் அதை அறிந்தவுடன், 'நம்முடைய வயிற்றுப் பிழைப்புக்காக நம் பாபாசாகிப் அவர்களின் எதிரிகளின் பக்கம் சேர்ந்துவிடுவதா?' என்று கூறித் தன் தந்தையைக் கடிந்து கொண்டார். அதன்பின்னர் தீண்டப்படாத வகுப்பைச் சேர்ந்த அந்த முதியவர் காங்கிரஸ் அமைச்சரிடம் சென்று, தழுதழுத்த குரலில், 'நீங்கள் தந்த காவலர் வேலையை நான் ஏற்க இயலாதவனாக இருக்கிறேன்; பிச்சை எடுப்பது போல் இப்பதவியை நான் பெற்றால் எங்களுடைய 'ராஜா அம்பேத்கருக்கு நான் துரோகம் செய்தது போலாகும்' என்று கூறி மறுதலித்துவிட்டார்.

எளிதில் எவர்க்கும் எந்நிலையிலும் அடங்கிப் போகாமை, எதிர்த்துத் தாக்குதல் ஆகிய இரண்டும் அம்பேத்கரிடம் மிகவும் அற்புதமான முறையில் இணைந்திருந்தன; இது அம்பேத்கரிடம் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய இயல்பாக இருந்தது. கிடைக்கின்ற ஒவ்வொரு வாய்ப்பையும் நழுவ விடாமல் பயன்படுத்திக் கொள்ளும் திறன் மிக்கவராக அவர் இருந்தார்; இத்தகைய திறமைதான் அரசியலில் வெற்றியைத் தேடித் தருவதாகும். சூழ்நிலைக்கு ஏற்றவாறு நடந்து கொள்வது என்பதைவிட அவருடைய எதிர்த்துத் தாக்கும் ஆற்றல்தான், அவர் தன் கொள்கையையோ அல்லது மனச்சான்றையோ விட்டுக்கொடுக்காமல் அவருடையபிடிவாதத்தனத்தைக் கைவிடுவதற்குக் காரணமாக' இருந்தது. ஒரு மனிதனைத் தூக்கத்திலிருந்து எழுப்பிட ஒரு நாளில் இரண்டு தடவைகள் காலைப்பொழுது புலராது என்பதை அவர் தெளிவாக அறிந்திருந்தார். பந்து துள்ளியெழும்போதே அதைக் கைப்பற்றிப் பிடித்துக் கொள்வதுபோல், கிடைக்கின்ற ஒவ்வொரு வாய்ப்பையும் வழுவவிடாமல் பற்றிக் கொள்ளும் அருங்கலையை அவர் கற்றிருந்தார்.

அம்பேத்கர் இருபது வயது இளைஞராக இருந்தபோதே அவருடைய தந்தையின் நண்பருக்கு அமெரிக்காவிலிருந்து எழுதிய கடிதத்தில், 'கடலலை மேலெழும்பி கீழே வீழ்வது போல், மனித வாழ்விலும் உயர்ச்சியும் தாழ்ச்சியும் வருவது இயல்பே; ஆயினும் வெள்ளத்தை எதிர்த்து நீந்திச் செல்பவனே வாழ்வில் வெற்றி பெறுவான்' என்ற ஷேக்ஸ்பியரின் புகழ்மிக்க வரிகளை எடுத்துக் காட்டி, தன் வாழ்வின் குறிக்கோளை உணர்த்தியிருந்தார். சைமன்

குழுவுடன் அம்பேத்கர் ஒத்துழைத்து ஆற்றிய பணி அவரிடம் பொதிந்திருந்த மதிநுட்பத்தை அரசியல்வானில் அறிமுகப்படுத்தியது. வட்டமேசை மாநாடுகளில் தன் மனச்சான்றின்படி அவர் ஆற்றிய அரும்பணியும், அங்கு அரசியல் அமைப்புச்சட்ட உருவாக்கத்திற்கு அவர் தந்த பங்களிப்பும் அம்பேத்கரை ஓர் அரசியல் சட்ட வல்லுநராக உலகிற்கு உணர்த்தின. வைசிராயின் நிர்வாகக்குழுவில் அம்பேத்கர் வகித்த அமைச்சர் பதவி தொழிலாளர் களின் சிக்கல்களைத் தீர்ப்பதிலும் அவர்களின் வாழ்நிலையை உயர்த்துவதிலும் அவர் கொண்டிருந்த அளவிறந்த ஈடுபாட்டைக் காட்டுவதற்கு நல்வாய்ப்பாக அமைந்தது; அமைச்சர் என்ற முறையில் பல்வேறுபட்ட அனுபவங்களை அம்பேத்கர் பெற்றார். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கிய தலைமைச்சிற்பி என்ற நிலையில் அவர் ஈந்த கடும் உழைப்பும், தன் திறமைகளனைத்தையும் திரட்டி அவர் அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கியமையும், உலக அளவில் புகழ்பெற்ற அரசியல் சட்ட வல்லுநராக அவரைப் புகழின் உச்சிக்கே இட்டுச்சென்றன; - தீண்டப்படாத வகுப்பைச் சேர்ந்த இந்து ஒருவரால் எதையும் சாதிக்க முடியும் என்று காட்டின; உலகில் உள்ள மிகச்சிறந்த எந்தவொரு அறிஞருடனும் அம்பேத்கரால் சரிநிகராகச் செயல்படமுடியும் என்பதை மெய்ப்பித்தன. தானாகவே திட்டமிட்டுத்தன் சொந்த முயற்சியாலேயே முன்னேறிய அவருடைய வாழ்வின் தொடக்கக்கால ஆண்டுகள் துன்பம் நிறைந்தவைகளாக இருந்தன; அதன்பின் வந்த அவருடைய நடுவயதுப் பருவமோ பெருமை பொருந்தியதாக ஒளிர்ந்தது; முதுமையின் தொடக்க ஆண்டுகள் மாலைப்பொழுதின் மேற்றிசை வானம்போல் பொன்னொளி பரப்பின.

அம்பேத்கர் பகவத் கீதையை ஒருபோதும் ஒப்புக் கொண்டதே யில்லை. கீதை, நன்னெறிகள்பற்றிப் பொறுப்பற்ற முறையில் எழுதப்பட்ட நூல் என்றும், எல்லாவகையான தவறுகளையும் நியாயப்படுத்தி எழுதப்பட்ட நூல் என்றும் அம்பேத்கர் கருதினார். மனிதனுக்கு மதம் தேவை என்றும் நம்பினார். கடும்பசியுடன் இருக்கும் ஓர் ஏழை சட்டத்திற்காகப் பயந்து கொண்டு திருடாமல் இருக்கவில்லை; திருடுவது பாவம் என்று அவனுக்கு மதம் கற்பித்திருப்பதற்கு அஞ்சியே அவன் திருடாமல் இருக்கிறான். மதம் மனித மனத்தோடு நேரிடையாகத் தொடர்புடையதாகத் திகழ்கிறது; சட்டங்களோ பகுத்தறிவின் அடிப்படையில் அமைந் துள்ளன என்று அம்பேத்கர் கருதினார். வாழ்வில் உணர்வு

என்பது, முதன்மையான பங்கினை வகிக்கிறது. எனவே மனிதனை உருவாக்குவதில் மதம் இன்றியமையாத சக்தியாக இருக்கிறது. 'என்னிடம் இருக்கின்ற எல்லா நல்லியல்புகளும் மதத்தினால் விளைந்தவைகளேயாகும்' என்று அம்பேத்கர் அடிக்கடி கூறுவதுண்டு.

மனித வாழ்வைப் புலன்களுக்கு அப்பால் அறிய முடியாததாக உள்ள ஏதோ ஒரு சக்தி இயக்குகிறது என்ற கருத்தில் அம்பேத்கர் கடவுள் நம்பிக்கையாளராக இருந்தார். அறியமுடியாத ஒரு சக்தியிடம் அவருக்கிருந்த இந்த நம்பிக்கையைப்பல சமயங்களில் அவர் வெளிப்படுத்தியிருக்கிறார். ஒரு நாள் கிராமப்புறத்தில் அவருடைய காரில் ஒரு பாலத்தைக் கடந்து கொண்டிருந்தபோது அவருடைய கார் கீழே ஓடிக் கொண்டிருந்த ஆற்றில் விழ இருந்து நூலிழையில் தப்பியது. காரின் முன்சக்கரங்கள் இரண்டும் ஆற்று நீருக்குமேல் அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருந்தன; பின் சக்கரங்களைப் பாலத்தில் இருந்த நீண்ட பெரிய கல் மேற்கொண்டு நகரவிடாமல் தடுத்து நிறுத்திக் கொண்டிருந்தது. சுவர்க் கடிகாரத்தின் ஊசல் குண்டு போல் பாலத்திலிருந்து தொங்கிக் கொண்டிருந்த கார் அப்படியும் இப்படியும் அசைந்து கொண்டிருந்தது. அம்பேத்கரும் காரோட்டியும் காரிலிருந்து மின்னல் போல் வெளிப்பட்டு, கார் பாலத்திலிருந்து தொங்கிக் கொண்டிருப்பதைக் கண்டதும், வியப்பினாலும் அதிர்ச்சியாலும் அசைவற்று நின்றனர். இந்த ஆபத்திலிருந்து தன்னைக் காப்பாற்றியதற்காக அம்பேத்கர் கடவுளுக்கு நன்றி தெரிவித்தார். அங்கிருந்து பம்பாய்க்குத்தன் வீட்டிற்குத் திரும்பியதும், தன் மகனையும், அண்ணன் மகனையும் அழைத்து அவர்களை மார்போடு ஆரத்தழுவி, 'கார் விபத்து விதியின் விளையாட்டே; கடவுளின் அருள்தான் என்னைக் காப்பாற்றியது' என்று உணர்ச்சி வசப்பட்டுக்கூறி, சிறுகுழந்தையைப் போல் அழுதார். கடவுளை நம்புவதில்லை, மதத்தை நம்புவதில்லை என்று சொல்பவரின் நேர்மையை அம்பேத்கர் எப்பொழுதும் அய்யுற்றார். அரசியலில் அம்பேத்கரை வெறுத்த - கடவுளைப்பற்றிக் கவலைப்படாத பௌத்தத்தைப் பின்பற்றியவர்களைத் தம் கேள்விகளால் திக்குமுக்காடச் செய்த சோசலிஸ்டுகளுக்கு மதம் பற்றி அம்பேத்கர் கொண்டிருந்த இத்தகைய நிலைபாடு புரியாத புதிராக இருந்தது. பௌத்த மறுமலர்ச்சியில் அம்பேத்கர் ஆழ்ந்த ஈடுபாட்டினைக் காட்டத் தொடங்கியபின் அவருடைய கடவுள் நம்பிக்கை மேலும் இறுகி வலுப்பெற்றது. அவர் புத்தரின் உருவத்தை வழிபடத் தொடங்கினார்; புத்தரின்

சிலைமுன் மண்டியிட்டுக் காலையிலும், மாலையிலும் பிரார்த்தனை செய்தார். இந்தியாவின் முன்னணித் தலைவர்களில் ஒருவராக விளங்கிய அம்பேத்கர் மாகாண நலனை மட்டும் கருத்திற்கொண்ட வாதப்பிரதிவாதங்களிலிருந்து ஒதுங்கியிருந்தார். ஆயினும் அப்பிரச் சினை மீது விவாதங்கள் நடைபெறும்போது, அவருக்கே உரிய தனித்தன்மையில், வெளிப்படையாகத் தன் கருத்தைக் கூறினார். மராட்டியர்கள் இந்நாட்டிற்கு இரண்டகம் செய்யும் தன்மையில் ஒருபோதும் நடந்து கொண்டதேயில்லை என்று அச்சமயங்களில் குறிப்பிட்டார்; இலண்டனில் நாட்டுப்பற்று மிக்க மராட்டிய மாணவர்கள் பாராட்டுக்குரிய முறையில் நடந்துகொண்டதுபற்றி எடுத்துரைத்தார். பாக்கிஸ்தான் பிரிவினையைப்பற்றி அச்சம் கொள்ளுகிற கடைசி ஆட்களாக மராட்டியர்கள்தான் இருப்பார்கள்; ஏனெனில் கடந்த காலங்களில் ஒவ்வொரு போரிலும் மராட்டியர் கள் முஸ்லீம் படைகளைச் சிதறடித்துள்ளனர் என்று அதே தொனியில் கூறினார். மகாராட்டிர மாநிலத்துடன்தான் பம்பாய் மாநகரம் இருக்க வேண்டும் என்று அம்பேத்கரைப்போல் அந்த அளவிற்கு வேறு எவரும் ஆணித்தரமாக வலியுறுத்தவில்லை. அந்நிலைப்பாட்டிலிருந்து இம்மியளவும் மராட்டியர்கள் விட்டுத்தரக் கூடாது என்று கூறினார்.

அம்பேத்கர் மக்கள் தலைவராகத் திகழ்ந்தார். மிதவாதத் தலைவர்கள் சமுதாயத்தின் மேல்தட்டு வகுப்பினரிடம் செல்வாக்கு பெற்றிருந்தனர். நவீன இந்தியாவின் முதலாவது மக்கள் தலைவராக விளங்கிய திலகர் நடுத்தர வகுப்பு மக்களை ஈர்த்தார்; அதன்பின் திலகரின் செல்வாக்கு வெகுமக்களிடம் பரவியது. காந்தி பாமர மக்களின் நெஞ்சங்களை ஈர்த்து நின்றார். அம்பேத்கரோ சமூகத்தின் அடித்தட்டு மக்களைக் கவர்ந்தவராக விளங்கினார். அம்பேத்கர் இந்தியா முழுவதும் இடைவிடாமல் சுற்றுப்பயணம் செய்து கொண்டேயிருந்தார். திலகர், காந்தி, நேரு, சாவர்க்கர், சுபாஸ் சந்திர போஸ் ஆகியோரைப் போன்றே அம்பேத்கரின் பேச்சுக்கும் மக்களிடையே பெரும் செல்வாக்கு இருந்தது. உயர்ந்த குறிக்கோள் களை நிறைவேற்றுவதற்காகவே வாழ்ந்த தலைவர்களின் வரிசை யில் வைத்து மதிக்கத்தக்கவராக அம்பேத்கர் விளங்கினார். அவர் ஒரு கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தினார் என்பதைவிட அவர் ஒரு கொள்கையின் பிரதிநிதியாகவே திகழ்ந்தார் என்பதே சரியாகும். 'தலைவர் என்பவர் மக்களின் போக்கிலான விருப்பங்களுக்கு இடந்தருபவராக இருக்கக்கூடாது; விடுதலைக்கான சரியான பாதை இதுதான் என்று துணிவுடன் மக்களிடம் எடுத்துரைக்க வல்லவராக

இருக்க வேண்டும்' என்று அம்பேத்கர் கூறினார். அத்தகைய தலைமைதான் மக்களைக் கவர்ந்திழுக்க வல்லதாகும்; அது கட்சி நலனை நோக்கமாகக் கொண்டிருப்பதைவிடக் கொள்கை நிறைவேற்றத்தையே இலட்சியமாகக் கொண்டிருக்கும்.

நவீன காலத்தில் ஒரு அரசியல் கட்சியை எத்தன்மையில் அமைக்க வேண்டுமோ அத்தன்மையில் அம்பேத்கர் அவருடைய கட்சியின் அமைப்பைக் கட்டவில்லை. தனி நிறுவனமாகத் தன் கட்சியைப் பெருமளவில் வளர்த்தெடுக்க வேண்டுமென்பதில் அவருடைய நாட்டம் செல்லவில்லை. அவருடைய கட்சி முறையாக ஆண்டு மாநாடுகளையோ அல்லது பொதுமாநாடுகளையோ நடத்தவில்லை. அம்பேத்கர் இருக்கும் இடமே மாநாடு நடைபெறும் இடமாகவும் முடிவெடுக்க வேண்டிய நேரமாகவும் கருதப்பட்டது. அவருடைய கட்சியின் தலைவர் அல்லது செயலாளர் அல்லது செயற்குழு உறுப்பினர்கள் ஆகிய அனைவருமே அம்பேத்கர் கூறும் திட்டத்தின்படியே செயல்பட வேண்டியவர்களாக இருந்தனர். அவருடைய நேர்மை, திறமை, தியாகம், மேதகைமை ஆகியவற்றின் காரணமாக அம்பேத்கரின் தொண்டர்கள் அவர்பால் ஈர்க்கப்பட்டிருந்தனர். தனக்குத் துதிபாடும் குழுக்களை ஏற்படுத்திக்கொள்வது, பத்திரிக்கைகளில் தன்னைப் புகழுமாறு எழுதிடச் செய்வது, ஒரு தலைவருக்கு எதிராக மற்றொரு தலைவரைச் சூழ்ச்சியாக ஏவிவிடுவது போன்ற அரசியல் தந்திரங்கள் அம்பேத்கரைக் கவரவில்லை. அவருடைய தலைமையின் கீழ் அவருடைய வகுப்பு மக்களை அணிதிரட்ட வேண்டுமென்று அவர் எப்பொழுதெல்லாம் நினைக்கிறாரோ, அப்போதெல்லாம் அவருடைய வகுப்பு மக்களை நோக்கி எழுச்சியானதோர் அறைகூவல் விடுப்பார். மழைக்குப்பின் மண்ணிலிருந்து முளைத்துக் கிளம்பும் தாவரங்களைப் போல அவருடைய கட்சி உடனே விரைந்து செயலில் இறங்கும். கோடையில் நிலத்தில் புல்பூண்டும் இல்லாதிருப்பதுபோல், அம்பேத்கரின் அறைகூவல் இல்லாத காலங்களில், கட்சிக்கொடி அவருடைய நூலகத்தின் ஓர் மூலையில் கிடக்கும். மக்கள் தத்தம் வீடுகளில், கடமைகளில் திளைத்திருப்பார்கள்.

பௌத்த மறுமலர்ச்சி

டாக்டர் அம்பேத்கர் அவருடைய வாழ்வின் கடைசி ஆண்டு களில், பௌத்தச் சமயத்திற்குப் புத்துயிரூட்ட வேண்டுமென்று உறுதி பூண்டார். தான் தோன்றிய மண்ணிலிருந்து கடந்து, கடந்த ஆயிரத்து இருநூறு ஆண்டுகளாக அயல்நாடுகளிலேயே பின்பற்றப் பட்டுக் கொண்டிருந்த பௌத்த மதத்தை மீண்டும் இந்தியாவில் நிலைநாட்டிட வேண்டும் என்று தீர்மானித்தார். இதற்கான அறைகூவலை அவருடைய வகுப்பு மக்களை நோக்கி விடுத்தார். அவர்களும் அணிதிரண்டு வந்தனர். இவ்வாறாக அவருடைய வாழ்வின் இறுதிப்போரைத் தொடங்கினார்.

1954ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தின் தொடக்கத்தில் அம்பேத்கர் மூன்றாவது உலகப் பௌத்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இரங்கூனுக்குச் சென்றார். அவருடைய மனைவி யும் அவருடைய தனிச் செயலாளர் எஸ்.வி. சவத்கரும் அவருடன் சென்றனர். அவருடைய உடல்நலம் தொடர்ந்து சீர்கெட்டேயிருந் தது. ஆயினும் அவர் அம்மாநாட்டில் உரையாற்றினார். அவர் பேசுவதற்குச் சில மணித்துளிகளுக்கு முன்னர் மிகவும் மனம் நெகிழ்ந்தவராகக் காணப்பட்டார்; கண்ணீர்த்துளிகள் அவருடைய கன்னங்களில் வழிந்தோடின. அறிவு நிலையிலும், உள்ளத்தளவி லும், ஆன்மநேய நிலையிலும் அவர் அப்போது கசிந்துருகி நின்றார். ஆனால் அவர் பேசத் தொடங்கிய பின்னர் அவருடைய முகம் ஒளிபொருந்தியதாக மலர்ந்தது. பௌத்தச் சமயத்தின் குறிக்கோள், அதைப் பரப்ப வேண்டிய பணி ஆகியவை குறித்து அம்பேத்கர் சிந்தனையைத் தூண்டும்படியாக ஆற்றிய உரையை மாநாட்டினர் அசைவற்றுக் கேட்டனர். 'பௌத்தச் சமய நாடுகளில் இலங்கையும் பர்மாவும் முன்னணி நாடுகளாகத் திகழ்கின்றன. பௌத்தச் சமய விழாக்களின் கொண்டாட்டங்களின்போது அலங் காரம் செய்வதற்கென்று ஒரு பெருந்தொகையான பணம் வீணாகச் செலவழிக்கப்படுகிறது. பௌத்தச் சமயத்தில் பகட்டாரவாரத்திற்கு இடமே இல்லை. பர்மாவிலும் இலங்கையிலும் உள்ள பௌத்தர் கள் இப்பணத்தைப் பௌத்தத்தின் மறுமலர்ச்சிக்காகவும் பிறநாடு களில் பௌத்தச் சமயத்தைப் பரப்புவதற்காகவும் செலவிட வேண்டும்' என்று அம்மாநாட்டில் கூறினார். பிறரின் சிந்தனையைக் கிளறிவிடக் கூடிய ஆற்றல் வாய்ந்த கற்றறிவாளரான அம்பேத்கர்,

பௌத்தச் சமயத்தை எதிர்ப்பவர்களைத் தன்னுடன் வாதிட வருமாறு அறைகூவல் விடுத்தார்; இந்த வாதத்தில் எல்லாப் பண்டிதர்களையும் தன்னால் தோற்கடிக்க முடியும் என்றார். பௌத்தம் இந்துச் சமயத்தின்மீது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. பசு பாதுகாப்பு என்பது பௌத்தக் கொள்கையான அகிம்சைக்குக் கிடைத்த வெற்றியேயாகும் என்று அவ்வுரையில் குறிப்பிட்டார்.

பௌத்தச் சமயத்தைப் பரப்புவதற்கான வழிவகைகளை அமைத்துக் கொண்டபின், இந்தியாவில் பௌத்தத்தைப் பரப்பப் போவதாக அம்மாநாட்டில் அம்பேத்கர் அறிவித்தார். அரசியல் சட்டத்தை உருவாக்கியபோதே, அம்பேத்கர், பௌத்தத்தின் பரவலுக்காகப் பலவற்றைச் சாதித்திருந்தார். புத்தர் பேசிய பாலி மொழியை ஆய்வு செய்வதற்காக அரசியல் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டிருப்பதையும், புதுதில்லியில் குடியரசுத் தலைவரின் எழிலார்ந்த மாளிகையின் முகப்பில் புத்தரின் மணிமொழிகள் பொறிக்கப்பட்டுள்ளதையும், பாரதத்தின் சின்னமாக அசோகச் சக்கரம் ஏற்கப்பட்டுள்ளதையும் சுட்டிக்காட்டி, இவையனைத்தும் தன்னுடைய சொந்த முயற்சியினால் விளைந்த சாதனைகளாகும் என்று கூறினார். அம்பேத்கரின் முயற்சியினால்தான் இந்திய அரசு புத்தர் பிறந்தநாளை அரசு விடுமுறை நாளாக அறிவித்தது. இத்தகைய வியப்பூட்டும் மாற்றங்களை எத்தகைய எதிர்ப்பும் இல்லாமல் நிகழச் செய்ததுபற்றிப் பெருமையுடன் அவர் குறிப்பிட்டார். அந்த அளவிற்கு அவர் நாடாளுமன்றத்தில் அப்போது ஆற்றிய உரை தெளிவானதாகவும் கவரக்கூடியதாகவும் இருந்தது. இரங்கூன் மாநாட்டில் கலந்துகொண்ட பதினெட்டு நாடுகளில் எந்தவொரு நாட்டிலும் தான் சுட்டிக்காட்டியது போன்ற மாற்றங்கள் நிகழவில்லை என்று கூறினார். நான் பம்பாயில் ஒரு கல்லூரியையும், அவுரங்காபாத்தில் ஒரு கல்லூரியையும் ஏற்படுத்தியிருக்கிறேன். இவற்றில் 3400 மாணவர்கள் படிக்கின்றனர். இக்கல்லூரிகளில் பௌத்தச் சமயத்தைக் கற்குமாறு ஊக்குவிக்க முடியும். ஆயினும் தான் பிறந்த மண்ணிலிருந்து பௌத்தம் மறைந்து விட்டிருப்பது வருந்துதற்குரியதாகும். போதுமான அளவில் நிதி கிடைக்குமானால், இந்தியாவில் பௌத்தத்தைப் பரப்பிட முடியும். பௌத்தத்தைப் பரப்புவதற்கான அடித்தளம் இப்போது அங்கு அமைக்கப்பட்டிருக்கிறது. நிதி உதவி கிடைத்தாலும், கிடைக்காவிடினும் என்னுடைய இலட்சியத்தை அடைந்தே தீருவேன்' என்று அம்மாநாட்டில் சூளுரைத்தார்.

இந்தியாவுக்குத் திரும்பியதும் அம்பேத்கர், பூனாவுக்கு அருகில் தெகு சாலையில், புதியதாகக் கட்டப்பட்ட பௌத்த மடாலயத்தில் புத்தர் சிலையைத் திறந்து வைத்தார். அந்தப் புத்தரின் சிலையை அம்பேத்கர் இரங்கூனிலிருந்து கொண்டு வந்திருந்தார். அவ்விழா வில் அம்பேத்கர் பேசியபோது, 'இந்தியாவில் பௌத்தம் வீழ்ச்சியுற்ற பிறகு ஆயிரத்து இருநூறு ஆண்டுகள் கழித்துப் புத்த பகவானின் சிலையை நிறுவிய பெருமை தீண்டப்படாத வகுப்பு மக்களையே சாரும். இது மிகவும் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும். இந்நிகழ்ச்சி வரலாற்றில் பொறிக்கப்படும் என்பதில் அய்யமேயில்லை. பௌத்தக் கொள்கைகளை இந்தியாவில் பரப்பு வதற்காக நான் இனி என் வாழ்நாளை அர்ப்பணித்துவிடப்போகி றேன்' என்று அறிவித்தார். அங்கே ஆண்களும், பெண்களுமாகக் குழுமியிருந்த 20,000 மக்களின் முன்னிலையில், 'பௌத்தத் தத்துவங்களைச் சாதாரணமான மக்களும் புரிந்துகொள்ளக்கூடிய தன்மையில் எளிய மொழிநடையில் ஒரு நூலை எழுதிக் கொண்டிருக்கிறேன். இதை எழுதி முடித்திட ஓராண்டுக் காலமாகும். இந்நூலை எழுதி முடித்தபிறகு நான் பௌத்த மதத்தில் சேருவேன்' என்று அறிவித்தார்.

அந்நிகழ்ச்சியில் அம்பேத்கர் மேலும் தொடர்ந்து பேசியபோது, 'பந்தர்பூரில் உள்ள விட்டோபா கடவுளின் சிலையானது உண்மையில் புத்தரின் சிலையேயாகும். இதைப்பற்றி நான் ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையை எழுதிடத் திட்டமிட்டுள்ளேன். அதை எழுதி முடித்தபிறகு பூனாவில் உள்ள பாரதிய இதிகாச ஆராய்ச்சி நிறுவனத்தின்முன் படித்துக் காட்டுவேன். பந்தர்பூரில் உள்ள கடவுளின் பெயரான பாண்டுரங் என்பது புண்டலிக் என்பதி லிருந்து தோன்றியதாகும். புண்டலிக் என்றால் தாமரை என்று பொருள். பாலி மொழியில் தாமரையின் பெயர் பாண்டுரங் என்று வழங்கப்படுகிறது. எனவே பாண்டுரங் கடவுள் என்பது புத்தரே யாகும்' என்று விளக்கிக் கூறினார்.

இலட்சுமண் சாஸ்திரி ஜோஷி என்பவர் எழுதிய கட்டுரை ஒன்றில் அம்பேத்கரின் தொண்டு ஒரு முடிவுக்கு வந்துவிட்டது என்று எழுதியிருந்தார். அம்பேத்கர் அக்கூட்டத்தில் பேசியபோது அதைப்பற்றிக் குறிப்பிட்டு, 'ஜோஷி போன்ற பண்டிதர் ஒருவர் அவ்வாறு எழுதியிருப்பது வருந்தத்தக்கதாகும்; என் வாழ்வின் தொண்டு விரைவில் இன்னும் தீவிரமான தன்மையில் செயல்படப் போகிறது' என்று கூறினார். அம்பேத்கர் இந்த ஆராய்ச்சிக்

கட்டுரையை 1955 மார்ச்சு மாதத்தில் லோனாவ்லாவில் எழுதத் தொடங்கினார். ஆனால் அங்கு அய்ந்து பக்கங்கள் மட்டுமே எழுதியதாகத் தெரிகிறது.

1955ஆம் ஆண்டு பிறந்தது; அத்துடனேயே அம்பேத்கர் பௌத்தச் சமயத்தைத் தழுவப்போகிறார் என்ற செய்தியும் வெளியாயிற்று. கல்கத்தாவிலுள்ள இந்திய மகாபோதி சங்கத்தின் செயலாளர் டி. வலின்சின்ஹா, அம்பேத்கர் 1956 மே மாதத்தில் பௌத்த மதத்தில் சேருவதென எடுத்துள்ள முடிவினை நெஞ்சார வரவேற்றுப் பாராட்டினார். மானுடத்திற்குத் தொண்டாற்றிய மிகச்சிறந்த மனிதர்களுள் ஒருவராக அம்பேத்கரின் பெயரும் வரலாற்றில் இடம் பெறும் என்று வலின்சின்ஹா குறிப்பிட்டிருந் தார். இந்தியாவில் தீண்டப்படாத வகுப்பினராக உள்ள ஆறுகோடி மக்களும் பௌத்தச் சமயத்தில் சேர்ந்து விட்டால், இந்நாட்டிற்குப் புதிய வாழ்வு உண்டாகும்; இந்நாடு மிக விரைந்து முன்னேறிட அது உதவும் என்று வலின்சின்ஹா மேலும் கூறினார்.

பௌத்தத்தைத் தூக்கிப் பிடிப்பதெனத் துணிந்து இப்போது அம்பேத்கர் முன்நின்றதால் நாட்டின் பல பகுதிகளிலிருந்த பௌத்த அமைப்புகளிடமிருந்து அங்கெல்லாம் உரையாற்ற வருமாறு அம்பேத்கருக்கு அழைப்புகள் வந்தன. அம்பேத்கர் பௌத்தச் சமயத்தில் சேருவதென்று முடிவு செய்து அறிவித்திருந்தமையானது பௌத்த அமைப்புகளுக்குப் புத்துணர்ச்சி ஊட்டியது. அய்ரோப்பா வில் இருந்த ஒரு கிறித்துவப் பாதிரி, அம்பேத்கரின் தொண்டுகள் பற்றியும் அவருடைய சிறப்பியல்புகள் பற்றியும் கேட்டறிந்திருந் தார். 'காங்கிரசும் காந்தியும் தீண்டப்படாதவர்களுக்குச் செய்தது என்ன?' என்ற அம்பேத்கரின் நூலை அப்பாதிரி படிக்க நேர்ந்தபோது, அந்நூல் நேர்மையுடனும் வெளிப்படையாகவும் எழுதப்பட்டுள்ளதில் தன் உள்ளத்தைப் பறிகொடுத்திருந்தார். அப்பாதிரி ஏசு கிறித்துவின் கொள்கைகள் தூய்மையானவையாக வும் பேரொளி வாய்ந்தவையாகவும் இருப்பதால் கிறித்துவ மதத்தில் சேருவதுபற்றி எண்ணிப் பார்க்குமாறு அம்பேத்கருக்கு வேண்டு கோள் விடுத்தார்.

பௌத்தத்தைப் பரப்பும் முயற்சிகளில் இப்போது அம்பேத்கர் தீவிரமாக ஈடுபட்டார். அம்பேத்கர் டி. வலின்சின்ஹாவுக்கு ஒரு கடிதம் எழுதினார். பௌத்தச் சமயத்தில் சேரும்போது ஒவ்வொரு வரும் மேற்கொள்வதற்காக வேண்டி, சில குறிப்பிட்ட சடங்கு களைத் தான் தொகுத்து உருவாக்கியிருப்பதாகவும், அதற்குத்

'தம்ம தீட்ச சடங்குகள்' என்று பெயரிட்டிருப்பதாகவும் அக்கடிதத்தில் அம்பேத்கர் குறிப்பிட்டிருந்தார். மதமாற்றத்தின்போது ஒவ்வொருவரும் செய்ய வேண்டிய சடங்குகளை அம்பேத்கர் உருவாக்கியதற்குக் காரணம், மதக்கோட்பாடுகள்பற்றி எதுவும் அறியாத பொது மக்கள் ஒட்டுமொத்தமாக மதம் மாறுவது என்பது ஒரு மதமாற்றமாகாது என்றும், அது பெயரளவில் மட்டுமே மதம் மாறியதாக இருக்கும் என்றும் அம்பேத்கர் திடமாகக் கருதியதே யாகும். பௌத்த மதத்தில் இருந்த பொதுமக்கள் புத்தரை வழிபடுவதுடன் நிற்காமல், பௌத்தத்தை அழிக்க வேண்டுமென்பதற்காகப் பார்ப்பனர்கள் உருவாக்கியிருந்த கடவுளர்களையும், கடவுளச்சிகளையும் ஊசலாட்ட மனப்பான்மையுடன் வணங்கி வந்ததால்தான் பௌத்தம் அழிந்துவிட்டது என்று அம்பேத்கர் கருதினார். அதனால்தான் பௌத்த மதத்தில் சேருவோர் ஒவ்வொருவரையும் சடங்குகளுக்கு உட்படுத்த வேண்டும் என்று அவர் எண்ணினார்.

அச்சமயத்தில், ஒவ்வொரு மாகாணத்திலும் கல்லூரிகளுக்கு அரசு நிதி வழங்குவது பற்றிய விதிமுறைகளை அம்பேத்கர் பொறுமையுடன் திரட்டிக் கொண்டிருந்தார். எல்லா மாகாண விதிகளையும் பற்றி ஓர் ஒப்பீட்டாய்வைச் செய்திட எண்ணிக் கொண்டிருந்தார். அதற்காக எல்லா மாகாண அரசுகளுடனும் தொடர்பு கொண்டு அதுபற்றிய விவரங்களை அனுப்புமாறு கேட்டார். விடாமுயற்சியுடன் ஈடுபட்டு, ஆய்வு செய்து உழைத்தாலன்றி, எவரும் உன்னதமான உயர்நிலையை அடையமுடியாது. அவ்வாறு உயந்தவர்தான் அம்பேத்கர்!

1955ஆம் ஆண்டின் தொடக்கத்தில் அம்பேத்கர் செய்த மற்றொரு அறிவிப்பு இந்தியாவில் பௌத்தச்சமயத்தைப் பரப்புவதற்கெனப்பிரச்சாரகர்களுக்கு (பிக்குகளுக்கு)ப் பயிற்சி அளிப்பதற்காகப்பெங்களூரில் ஒரு பௌத்தச்சமயப் பயிற்சிப் பள்ளியை நிறுவுவது பற்றியதாகும். 1954ஆம் ஆண்டு சூன் மாதத்தில் பெங்களூரில் மைசூர் மகாராசாவை அம்பேத்கர் சந்தித்தபோது, மைசூர் மன்னர் அய்ந்து ஏக்கர் நிலத்தை அதற்காக நன்கொடையாக வழங்கினார். அம்பேத்கர் பர்மாவுக்கு இரண்டு தடவைகள் சென்று வந்ததன் தொடர் விளைவே இதுவாகும். அதாவது பர்மாவிலிருந்து உலகப்பௌத்தச்சங்கமும், பௌத்த சாசன சங்கமும் தேவையான நிதி உதவியையும் சமயஞ்சார்ந்த பிற உதவிகளையும் அளிப்பதாக அம்பேத்கருக்கு உறுதி கூறியிருந்தன. கையில் பிச்சைப்பாத்திரம் ஏந்தி பொது மக்களிடம் நிதி உதவி கோரி விரைவில் வரப்போவதாகவும் அம்பேத்கர் அறிவித்தார். பௌத்தச்சமயப்

பயிற்சிப் பள்ளியில் கோயில்களும் வகுப்பறைகளும் அமைக்கப் படும்; ஒரு பெரிய நூலகமும், ஆசிரியர்களும் மாணவர்களும் ஆராய்ச்சியாளர்களும் தங்குவதற்கான தங்கும் விடுதிகளும் ஏற் படுத்தப்படும்; உலகம் முழுவதிலும் பௌத்தம் பற்றி எழுதும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட மிகச்சிறந்த அறிஞர்கள் எழுதிய நூல்களை அச்சிடுவதற்காக ஒரு அச்சகமும் நிறுவப்படும் என்று அம்பேத்கர் கூறினார்.

பெங்களூரில் பௌத்தச்சமயப்பயிற்சிப் பள்ளியை நிறுவுவது பற்றி அம்பேத்கர் அறிவிப்பதற்கு முன்பு, டோக்கியோவிலிருந்த டாக்டர் ஃபெலிக்ஸ் வல்யி என்பவருடன் கடிதத் தொடர்பு கொண்டிருந்தார். இந்தியத்தத்துவச் சிந்தனையின் தோற்றம் குறித்து குறிப்பாக பௌத்தம், சமணம் குறித்து, டோக்கியோவில் நடைபெறவுள்ள வட்டமேசை மாநாடுகளில் அம்பேத்கர் கலந்து கொள்ள வேண்டுமென்று ஃபெலிக்ஸ் விரும்பினார். பன்னாட்டுப் பண்பாட்டு உறவுகள் சங்கத்தின் (Kakkusai Banka Shimkokie) சார்பில் இம்மாநாடுகள் ஜப்பான் அரசின் ஆதரவுடன் டோக்கியோ வில் நடைபெற்றன. டாக்டர் ஃபெலிக்ஸ் வல்யி, அம்பேத்கருக்கு எழுதிய கடிதத்தில், 'நாங்கள் நடத்தும் வட்டமேசை மாநாட்டில் நீங்கள் கலந்துகொள்வது என்பது பெரும் சிறப்புக்குரியதாக அமையும். இந்தியாவில் விளங்கும் பௌத்தத் தலைவர் என்ற தன்மையில் ஜப்பானில் உங்களுடைய பெயர் பெருமளவில் பரவியுள்ளது. உலக அளவில் நீங்கள் பெற்றுள்ள புகழ் எங்கள் பணியை உலக முக்கியத்துவம் வாய்ந்ததாக ஆக்கும்' என்று குறிப்பிட்டிருந்தார்.

'உங்களுடைய பௌத்தச் சமயப் பணிகளுக்காகப் பணம் தந்து உதவிட முன்வந்துள்ள அமெரிக்கப் பெண்மணி அப்பணத் தைப் பண்பாடுகளின் வரலாறு, தத்துவம், மதம் - ஆகியவை குறித்து ஒப்பீட்டாய்வு செய்வதற்கெனப் பெங்களூரில் ஏற்படுத்தப் படவுள்ள நிறுவனத்தை அமைப்பதற்காகப் பயன்படுத்திக்கொள்ள அனுமதிப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்' என்றும் அம்மடலில் ஃபெலிக்ஸ் மேலும் எழுதியிருந்தார். மைசூர் மன்னரிடமிருந்து அம்பேத்கர் இதற்குரிய நிலத்தைப் பெற்றுவிட் டாரா என்பதைப் பற்றியும் கேட்டு அம்மடலில் எழுதியிருந்தார்.

ஜப்பானிய வெளியுறவு அமைச்சகத்தின் ஆலோசனையின் பேரில், பம்பாயில் இருந்த ஜப்பானியத் தூதுவர், அம்பேத்கருக்கு ஒரு கடிதம் எழுதினார். ஜப்பானுக்கும் இந்தியாவுக்கும் இடையே

பௌத்த அறிஞர்களைப் பரிமாற்றம் செய்துகொள்வதற்கான வாய்ப்புபற்றியும், இப்பரிமாற்றத்தையொட்டி ஜப்பான் நாட்டில் ஆகும் செலவை ஜப்பான் பன்னாட்டுப் பண்பாட்டுச் சங்கம் ஏற்றுக்கொள்ளும் என்றும், இந்தியாவில் ஆகும் செலவை பெங்களூரில் அம்பேத்கரின் துணையுடன் அமையவுள்ள இந்திய-ஜப்பானியப் பண்பாட்டு நிறுவனம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஜப்பானியத் தூதுவர் எழுதிய அடுத்த கடிதத்தில், டாக்டர் ஃபெலிக்ஸ் வல்யி அவர்கள் ஜப்பானில் தங்கியிருந்த விடுதிக்கான செலவுகளுக்கும் அவர் இந்தியாவுக்கு வருவதற்கான வழிச்செலவுக்கும் பணம் தந்து உதவுமாறு கேட்டிருந்தார். டாக்டர் ஃபெலிக்ஸ் வல்யிக்கு உதவும் நிலையில் தான் இல்லை என்றும், இந்திய நாட்டில் பௌத்தத்தின் பால் பக்தியுடன் இருப்பவர் மிகச் சிலரேயாதலின், அவ்வாறு உதவக்கூடியவர்கள் வேறு யாரேனும் இருப்பதாகத் தனக்குத் தெரியவில்லை என்றும் அம்பேத்கர் பதில் எழுதினார்.

தனக்கு உதவுவதாகக் கூறிய அந்த அமெரிக்கப் பெண்மணி பௌத்தச் சமயத்தைச் சார்ந்தவரோ அல்லது பௌத்தத்தில் ஈடுபாடு உடையவரோ அல்லர் என்று டாக்டர் அம்பேத்கர் டாக்டர் ஃபெலிக்சுக்குத் தெரிவித்தார். அதன்பின் டாக்டர் ஃபெலிக்ஸ், பௌத்தப் பயிற்சிப்பள்ளியைப் பூனாவில் நிறுவ வேண்டுமென்று தொடர்ந்து வற்புறுத்திக்கொண்டிருந்த ரத்தன்சந்த் ஹீராசந்த் என்பவருடன் தொடர்புகொள்ளுமாறு அம்பேத்கருக்கு ஆலோசனை வழங்கினார். பூனா வைதிகப் பார்ப்பனர்களின் தலைமைக்கூடாரமாக இருப்பதால் அது ஏற்ற இடமாக இருக்க முடியாது என்று டாக்டர் ஃபெலிக்ஸ் அஞ்சினார். ஜப்பானில் ஏற்படுத்தியிருப்பதைப் போலவே, இந்தியாவிலும், இந்திய-ஜப்பானிய நிறுவனத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதை டாக்டர் ஃபெலிக்ஸ் நோக்கமாகக் கொண்டிருந்தார். எனவே இதுபற்றிப் பிரதமர் நேருவுக்கும், டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணனுக்கும் அவர் கடிதங்கள் எழுதினார்.

ஜப்பான் வங்கியின் கவர்னராகவும், டோக்கியோ இந்திய-ஜப்பானியச் சங்கத்தின் தலைவராகவும் இருந்த ஹிசட்டோ இச்சினடோ டாக்டர் ஃபெலிக்சுக்கு எழுதிய கடிதமொன்றில், இரண்டாம் உலகப் போரின்போது பிரிட்டிஷ் அரசு கைப்பற்றிக் கொண்ட ஜப்பானியரின் சொத்துகளை, அச்சொத்துகளின் ஒரு பகுதி இந்தியாவிற்கும் ஜப்பானுக்கும் இடையிலான கலாச்சார

உறவுகளை வளர்ப்பதற்காக இந்தியாவில் வைத்துக் கொள்ளப் படும் என்ற நிபந்தனையின் பேரில், அச்சொத்துகளின் சொந்தக் காரர்களான ஜப்பானியர்களுக்குத் திருப்பித் தருவதுபற்றி இந்தியா வின் பிரதமர் ஆலோசித்து வருவதுகுறித்து இந்திய-ஜப்பானியச் சங்கம் மகிழ்ச்சியடைவதாகக் குறிப்பிட்டிருந்தார். இதுகுறித்து டாக்டர் அம்பேத்கர் டாக்டர் ஃபெலிக்சுக்குப் பதில் எழுதியபோது, கடந்த காலத்தில் நடந்துகொண்டது போலவே இந்தியா இப்போ தும் பௌத்தத்தின்பால் அன்பு பாராட்டாத தன்மையிலேயே நடந்துகொள்கிறது என்று குறிப்பிட்டிருந்தார்.

1955ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் டாக்டர் ஃபெலிக்ஸ் இரண்டு ஜப்பானிய இலக்கியவாணர்களுடன் இந்தியாவிற்கு வந்தார். அவர் அம்பேத்கரைச் சந்தித்தார். டாக்டர் ஃபெலிக்ஸ் பம்பாய்க்கு வருகை தந்தபோது நடைபெற்ற ஒரு முக்கியமான நிகழ்ச்சி இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். பம்பாயில் சித்தார்த்தா கல்லூரியில் மாணவர்களிடையே டாக்டர் ஃபெலிக்ஸ் பௌத்தம் பற்றி உரையாற்றியபொழுது தெரிவித்த சில கருத்துகள் குறித்து, அக்கல்லூரியில் வரலாற்றுத்துறைப் பேராசிரியராக இருந்த டாக்டர் கெனி தன்னுடைய நன்றியுரையில் தன் பேச்சின் போக்கில் திறனாய்வுத்தன்மையில் சில கருத்துகளைக் கூறினார். சித்தார்த்தா கல்லூரியை நடத்திய மக்கள் கல்விக்கழகத்தின் தலைவராக இருந்த டாக்டர் அம்பேத்கர் டாக்டர் கெனியை வேலையிலிருந்து நீக்க நேரிட்டது. இதற்கு, அப்பேராசிரியர் நன்றியுரை கூறியபோது விருந்தினரிடம் நாகரிக மரபை மீறி நடந்தமை காரணமா அல்லது அப்பேராசிரியர் பௌத்தத்தை விமர்சனம் செய்ததை அம்பேத் கரால் பொறுத்துக்கொள்ள முடியாமற் போனமை காரணமா என்பது விவாதிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

அரசியல் சட்டத்திருத்த மசோதா ஒன்றின்மீது மாநிலங்கள் அவையில் கோவிந்த்'வல்ல'பபந்த்துக்கும் டாக்டர் அம்பேத்கருக்கும் கடுமையான வாக்குவாதம் நடைபெற்றது. பொதுநலன் கருதித் தனியார் நிலத்தைக் கையகப்படுத்திக்கொள்ளுவது தொடர்பான மேல் அதிகாரம் வருவாய்த்துறைக்கா அல்லது காவல்துறைக்கா என்பதைத் திட்டவட்டமாக வரையறை செய்வதே அத்திருத்த மசோதாவின் நோக்கமாகும்.

டாக்டர் அம்பேத்கர் அத்திருத்த மசோதாவை அற்பமானது என்றும் முக்கியத்துவமற்றது என்றும் வருணித்தார். இவ்வாறு அடிப்படை உரிமைகளைப் பறிப்பதைவிட, இப்போதுள்ள

சட்டத்திற்குப் பதிலாக, நிலங்களைக் கையகப்படுத்துவதற்கான ஒரு சட்டத்தை அரசு தனக்கு ஏற்ற தன்மையில் உருவாக்கி நிறைவேற்றிக்கொள்வதன்மூலம், இழப்பீட்டுத்தொகை தருவது பற்றி முடிவெடுக்கும் முழு அதிகாரத்தையும் அரசு தன்னிடமே வைத்துக்கொள்ளலாமே என்று கூறினார். அரசியல் சட்டத்தை அடிக்கடி மாற்றுவது தவறாகும்; ஏனெனில் அவ்வாறு செய்வது உறுதியற்ற தன்மையைத் தோற்றுவிக்கும்; சமூக மதிப்புகளைக் குலைக்கும் என்று அம்பேத்கர் கூறினார். அரசியல் சட்டத்தில் உள்ள விதி 31 அரசியல் அமைப்புச்சட்ட வரைவுக்குழுவால் உருவாக்கப்பட்டதன்று; பட்டேல், நேரு, பந்த் முதலான மூன்று முக்கியத் தலைவர்களுக்கிடையே ஏற்பட்ட சமரசத் திட்டத்தினால் விளைந்ததாகும்; பட்டேல் முழு அளவில் இழப்பீடு வழங்கப்பட வேண்டும் என்றார்; நேரு முற்றிலுமாக இழப்பீடு தரப்படக்கூடாது என்றார்; பந்த் இடைப்பட்ட நிலையை ஆதரித்தார் என்று அம்பேத்கர் மாநிலங்கள் அவையில் எடுத்தியம்பினார்.

முதலாவது அரசியல் சட்டத்திருத்தத்தின்போது டாக்டர் அம்பேத்கர் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையிலிருந்து சில பகுதிகளைத் தனக்கு ஆதரவாகப் பந்த் எடுத்துக்காட்டி, 'எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருக்கும் டாக்டர் அம்பேத்கரிடம் குற்றம் காண்பதைவிடச், சட்ட அமைச்சரான டாக்டர் அம்பேத்கரிடம் குற்றம் காண்பதையே நான் விரும்புகிறேன்' என்று குத்தலாகக் குறிப்பிட்டார். 'இச்சட்டத்திருத்தத்தின்மீது டாக்டர் அம்பேத்கர் கடுமையான தாக்குதலைக் தொடுத்துத் தீவிரமாக உரையாற்றியமை மனநிறைவளிப்பதாக உள்ளது; அவருடைய உடல்நலக்குறைவு நீங்கி நலம் பெறுவார் என்று நம்புகிறேன். அதேபோல் மற்றவகையிலுங்கூட அவர் விரைவில் குணமடைவார்' என்று மனம் புண்படும்படிக் கூறினார்.

1955 மே மாதம் முதற்கொண்டு அம்பேத்கரின் உடல் நலம் மேலும் வேகமாக நலிவுறத் தொடங்கியது. மருத்துவ ஆலோசனை யின்பேரில், இதற்கு முன்பே, அவருடைய பற்கள் அகற்றப்பட்டு விட்டன. வீட்டில் எழுந்து நிற்பதற்கும், நடப்பதற்கும் கூட மற்றவர்களின் உதவி அவருக்குத் தேவைப்பட்டது. மூச்சு விடுவதிலும் அவருக்குத் தொல்லை ஏற்பட்டது. அதனால் ஆக்சிஜன் சிலிண்டர் ஒன்று வாங்கப்பட்டது. அவ்வப்போது அம்பேத்கருக்கு ஆக்சிஜன் செலுத்தப்பட்டது. அம்பேத்கருக்கு ஆக்சிஜன் அளிக்கப்படுவதுபற்றி மற்றவர்கள் அறியாதவாறு

வைக்கப்பட்டது. இதைப்பற்றி அவருடைய தொண்டர்கள் அறிந்தால் அஞ்சுவார்களே என்று அம்பேத்கர் நினைத்ததுதான் இது இரகசியமாக வைக்கப்பட்டதற்குக் காரணமாகும். பிறகு வாரத்தில் இரண்டு நாட்கள் அம்பேத்கருக்கு ஆக்சிஜன் செலுத்தப்பட்டது. குளிர்காலத்தில் மின்கணப்பின் உதவி கொண்டு அவருடைய உடலுக்குக் கதகதப்பு ஊட்டப்பட்டது; சிலபோது அவருக்கு மின்னொளிக்குளியல் அளிக்கப்பட்டது. தொடக்க நாள்களில் அம்பேத்கருக்கு ஆக்சிஜன் தரப்படுவதுபற்றி அவருடைய மனைவியும், அவருடைய தனி மருத்துவருமான டாக்டர் மௌலங்கரும் மட்டுமே அறிந்திருந்தனர். அவருடைய தனிச்செயலாளரும் நெருங்கிய தொண்டர்கள் சிலரும் நலிவுற்றிருக்கும் அவருடைய உடல்நிலையைப்பற்றி அறிந்திருந்தனர். அம்பேத்கர் மறுத்தபோதிலும், அவரை வற்புறுத்தி, குளிர்காலத்தில் சிறிதளவு பிராந்தியும் கோடையில் பீரும் இரவு உணவுடன் அவருக்குத் தரப்பட்டது. அவர் உடல்நலம் பெற வேண்டுமென்பதற்காகவே மருத்துவ ஆலோசனையின் பேரில் இவ்வாறு பிராந்தியும் பீரும் தரப்பட்டன.

அவருடைய உடல்நலனுக்கு ஏற்றதாக இருக்கும் எனக் கருதி மேலைநாட்டு முறை உணவை அவருக்கு அளித்தனர். ஆனால் அதன் சுவை அவருக்குப் பிடிக்கவில்லை. அதனால் மேலைநாட்டு முறை உணவைச் சமைப்பதற்காகச் செய்திருந்த ஏற்பாட்டைக் கைவிட்டனர். அவருடைய உடலின் எடை மிகவும் குறைந்துவிட்டது. கம்பீரமான அவருடைய தோற்றம் இப்போது சுருங்கி மெலிந்துவிட்டது. அதனால் அவருடைய கம்பளி ஆடைகளையும் பிற உடைகளையும் திருத்தித் தைக்க வேண்டியதாயிற்று. அவருடைய உடல் நலனை ஆய்வு செய்வதற்காக ஒரு மருத்துவர் குழுவை ஏற்படுத்த வேண்டும் என்ற அவருடைய நெருங்கிய நண்பர்களின் அக்கறை மிகுந்த ஆசை நிறைவேறாமலேயே போயிற்று.

அம்பேத்கர் இத்தகைய மனநிலையிலும் உடல் நலிவிலும் இருந்த சமயத்தில் அவருக்குப் பல்லாண்டுகள் உற்ற துணையாக விளங்கியவர்களுள் அவருடன் கடைசியில் எஞ்சிநின்ற ஒருவராக இருந்த கமலகாந்த் சித்ரேவுடனான உறவை அம்பேத்கர் விரும்பத்தகாத தன்மையில் அறுத்தெறிந்தார். முப்பது ஆண்டுகளுக்கு மேலாகச் சித்ரே அம்பேத்கரின் நம்பிக்கைக்குரிய தோழராகத் திகழ்ந்தவராவார். அம்பேத்கரின் கொள்கைகள்மீதும் தனிப்பட்ட முறையில் அவரிடமும் சித்ரே முழு ஈடுபாடு கொண்டிருந்தார்;

தன்னலங்கருதாமல், இரவு பகல் பாராமல், உயர்விலும் தாழ்விலும் அம்பேத்கருக்காக உழைத்தவர் அவர். மனவேறுபாடு காரணமாக அம்பேத்கரின் தோழர்களில் சிலர் முன்னரே அவருடனான நட்பை முறித்துக்கொண்டிருந்தனர். மற்றவர்கள் அம்பேத்கரின் முரட்டுத் தனத்தால் எதிரிகளாக ஆக்கப்பட்டுவிட்டனர். இப்போது அவருடைய தலைமைத் தளபதியாக விளங்கிய சித்ரேவும் வெளியேற்றப் பட்டுவிட்டார். அவரிடம் முழு விசுவாசத்துடன் இருந்த பழைய தோழர்களுடனான உறவுச் சங்கிலியின் கடைசிக் கரணையையும் துண்டித்துவிட்டார். உடல் நலிவுற்றிருந்த காலத்தில், இறுதி நாட்களில், பேராசை கொண்டவர்களும் சதிகாரர்களுமே அம்பேத்கரைச் சூழ்ந்து முற்றுகையிட்டிருந்தனர். அதனால்தான் சித்ரே பழிவாங்கப்பட்டார். மிகச்சிறந்த மனிதர் ஒருவருக்கு மனைவியாக இருப்பது என்பது தொல்லையானதேயாகும். பெருந்தலைவர் ஒருவரிடம் செயலாளராகப் பணியாற்றுவது உண்மையில் பெரும் சோதனை போன்றதேயாகும்; இதனால் அவர் கடும் வேதனைக்கு ஆளாவார்; அல்லது தவறாகப் புரிந்துகொள்ளப்படுவார். அடிக்கடி இவ்விரு தண்டனைகளுமே அவருக்குக் கிடைக்கும்.

உடல்நிலை நலிவுற்றிருந்த சமயத்திலும் அவருடைய கல்லூரிகளை நடத்துவதற்கும், மற்ற பல்வேறு பணிகளின் செயற்பாட்டிற்கும் தேவையான நிதியை எவ்வாறு பெறுவது என்று கவலைப் பட்டுக்கொண்டிருந்தார். மருத்துவம் செய்துகொள்வதற்காக பம்பாய்க்கு அழைத்துவரப்பட்டிருந்தபோது, 1955 ஆகஸ்டு 5ஆம் நாள் பிரதமர் நேருவுக்கு ஒரு கடிதம் எழுதினார். மக்கள் கல்விக் கழகத்திற்கு நிதி வழங்கும்படிக் கோரி, அவர் கையெழுத்திட்ட அறிக்கை ஒன்றை அனுப்புமாறு நேருவை அம்மடல் வாயிலாக அம்பேத்கர் கேட்டுக்கொண்டார். நேருவும் தன் கையொப்பம் இட்ட வேண்டுகோள் அறிக்கையை அம்பேத்கருக்கு அனுப்பினார். ஆயினும், அவ்வேண்டுகோள் அறிக்கையில் அம்பேத்கர் கேட்டுக் கொண்டுள்ளவாறு ஒரு புதிய பத்தியைச் சேர்த்தெழுதி அனுப்பு மாறு கேட்டு நேருவுக்கு மீண்டும் எழுதினார். இரஷ்யாவிலிருந்து நேரு நலமுடன் இந்தியா திரும்பியதற்காக, அதேமடலில் தன் வாழ்த்துகளை நேருவுக்குத் தெரிவித்திருந்தார். அம்பேத்கரின் கல்லூரியில் முன்பு பேராசிரியராக இருந்த பௌத்த அறிஞரான டாக்டர் பி.ஜி. கோகலே என்பவர் அவ்வமயம் அமெரிக்காவில் இருந்தார். 1955 நவம்பர் மாதத்தில் அம்பேத்கர் கோகலேவுக்கு எழுதிய கடிதத்தில், அவருடைய கல்லூரிகளுக்கு நிதி உதவி பெறும் பொருட்டு அமெரிக்காவிலுள்ள சில அறக்கட்டளை

நிறுவனங்களோடு தொடர்புகொள்ளுமாறு அவரைக் கேட்டிருந்தார். 'நிதி உதவி தருமாறு கோரிப் பல அமெரிக்க அறக்கட்டளைகளை ஏற்கனவே கேட்டுள்ளேன். ஆனால் அவற்றை இணங்கச் செய்வது எளிதாக இல்லை. ஒருவேளை நீங்கள் நேரில் சென்று பேசுவது பயனளிக்கலாம் என்று கருதுகின்றேன்' என்று அம்மடலிலேயே அம்பேத்கர் குறிப்பிட்டிருந்தார். அம்பேத்கர் அவுரங்காபாத்தில் சில நாட்கள் தங்கியிருந்தார். உடல் நலக்குறைவு காரணமாக மாநிலங் கள் அவையின் தொடர்க்கூட்டத்தில் அக்கட்டத்தில் அவர் கலந்துகொள்ளவில்லை. அவருடைய வேண்டுகோளின்படி, மாநிலங்கள் அவையின் ஒன்பதாவது கூட்டத்தொடரில் அம்பேத்கர் கலந்துகொள்ளாமல் இருப்பதற்கான விதிவிலக்கு, 1955 மார்ச்சு 29ஆம் நாள் அளிக்கப்பட்டது.

தீண்டப்படாத சாதிகள் பேரவையின் செயற்குழு அதனுடைய தலைவர் டாக்டர் அம்பேத்கரின் தலைமையில் கூடியது. நாடாளு மன்றத்திலும், மாநிலச் சட்டசபைகளிலும், மாவட்ட மன்றங்களி லும் தீண்டப்படாத வகுப்பினர்க்கென ஒதுக்கப்பட்டுள்ள இடங் களை ரத்துசெய்ய வேண்டுமென்று 1955 ஆகஸ்டு 27ஆம் நாள் அச்செயற்குழு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. இட ஒதுக்கீட் டைக் கைவிடுவதற்கான வேளை வந்துவிட்டதால், இனி இந்தத் தனி ஒதுக்கீடு ஏற்பாடு நீடிக்கத் தேவையில்லை என்று கருதியே அச்செயற்குழு இவ்வாறு தீர்மானித்தது. தீண்டப்படாத சாதிகள் பேரவையின் வேட்பாளர்கள் 1952 பொதுத்தேர்தலில் சந்தித்த படுதோல்வி அவர்களைத் திகைப்படையச் செய்திருந்தது. காங்கிர சுக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட அரிசன வேட்பாளர்கள் செல்வாக்கில்லாதவர்களாகச் சுண்டெலி போன்றவர்களாக இருப்பி னும், சிங்கத்தை அதன் குகையிலேயே வீழ்த்துவதுபோல், செல்வாக்குப் பெற்றிருந்த தீண்டப்படாத சாதிகள் பேரவையின் வேட்பாளர்களைத் தோற்கடித்துவிட்டனர்.

தீண்டப்படாத சாதிகள் பேரவை, கோவா இந்தியாவுடன் இணைக்கப்படுவதை ஆதரித்தது. பேரவைக்குப் புதிய அமைப்புச் சட்ட விதிகளை இயற்றி நிறைவேற்றியது. இராஜபாவ் கோபர்க் கெடேவை பேரவையின் செயலாளராக அமர்த்தியது. வெளிப் படையாகப் பேசும் இயல்புடைய ராஜ்போஜ் அவர்களும் அவருக்கே உரிய தன்மையில் பத்தாண்டுகள் கடுமையாக உழைத்தபிறகு, தன் தலைவர் அம்பேத்கரை விட்டுப் பிரிந்தார். அம்பேத்கரின் சர்வாதிகாரப் போக்கினையும், பேரவையின் சட்ட

விதிகளுக்குப் புறம்பாகப் பேரவையின் தலைவருக்குள்ள அதிகாரங் களை அம்பேத்கர் தானே ஆக்கிரமித்துக்கொண்டதையும் கண்டித்து ராஜ்போஜ் பிரிந்து சென்றார். அம்பேத்கர் அவருடைய இரண்டா வது திருமணத்திற்குப் பிறகு பேரவைத் தலைவர்களுடைய நட்பை முறித்துக்கொண்டார் என்று ராஜ்போஜ் குறைகூறினார். என். சிவ ராஜ் அம்பேத்கரிடம் ஆழ்ந்த பற்று கொண்டிருந்த போதிலும் அம்பேத்கரின் செயல்கள்குறித்துக் குறைபட்டுக்கொண்டார்; அம்பேத்கர் என். சிவராஜையும் புறக்கணித்துவிட்டார்.

II

புத்தர் பற்றியும், பௌத்தம் குறித்தும் அம்பேத்கர் எழுதத் தொடங்கிய விளக்க நூல் *1956*ஆம் ஆண்டின் தொடக்கத்தில் எழுதி முடிக்கப்படும் நிலையில் இருந்தது. அம்பேத்கர் *1951* நவம்பர் மாதத்தில் இந்நூலை எழுதத் தொடங்கினார். இந்நூலை எழுதிக்கொண்டிருந்தபோதே, இந்நூலினைச் சரியாகப் புரிந்து கொள்ள உதவும் தன்மையில் இந்தியாவில் புரட்சியும் எதிர்ப்புரட்சி யும்; (Revolution and Counter- revolution in India) என்ற நூலையும், 'புத்தரும் காரல் மார்க்சும்' (Buddha and Karl Marx) என்ற நூலையும் எழுதத் தொடங்கினார். *1956* மார்ச்சு வரையிலும் புத்தரும் காரல் மார்க்சும் என்ற நூல் எழுதி முடிக்கப்படாமலேயே இருந்தது. இந்நூலை முடித்திட இன்னும் ஒரு அத்தியாயம் மட்டுமே எழுதப்பட வேண்டியிருந்தது. இந்தியாவில் புரட்சியும் எதிர்ப்புரட்சி யும் என்ற நூலை முடித்திடவும், அதன் சாராம்சத்திற்கு மேலும் செழுமை சேர்த்திடவும், இன்னும் சில அத்தியாயங்களை எழுத வேண்டியிருந்தது. ஆனால் இவ்விரு நூல்களும் முழுமை பெறாமலேயே நின்று போயின. புத்தரைப்பற்றியும் பௌத்தம் குறித்தும் எழுதப்பட்ட நூல் மட்டும் முழுவதுமாக எழுதி முடிக்கப்பட்டது. *1954* டிசம்பர் மாதம் மூன்றாவது கிழமையில் 'இந்து மதத்தின் புரட்டுகள்' (The Riddle of Hinduism) என்ற நூலை எழுதத் தொடங்கினார். இந்தியாவின் குடியரசுத் தலைவரான டாக்டர் இராசேந்திரப் பிரசாத் கங்கை ஆற்றின் கரையில் பார்ப்பனப் புரோகிதர்களின் காலைக் கழுவியதுபற்றி இந்நூலில் அம்பேத்கர் விளக்கியுள்ளார்.

புத்தர்பற்றியும் பௌத்தம்பற்றியும் அம்பேத்கர் எழுதியவற் றைத் தட்டச்சு செய்து பல தடவை பிழைதிருத்தம் செய்யப்பட் டது; பத்திகள் பிரிக்கப்பட்டுப் பலதடவை நிரல்படுத்தப்பட்டன; பத்திகளுக்கான எண்கள் தரப்பட்டன; இது பலமுறை திருத்தி

அமைக்கப்பட்டது. இறுதியில் பத்திகள் தனியாக வெட்டப்பட்டு அவ்வவற்றிற்குரிய இடங்களில் ஒட்டப்பட்டன. சிலபோது, ஓர் அத்தியாயம் முழுவதுமே திருத்தியமைக்கப்பட்டது. இது ஒப்பரிய கடும் பணியாக இருந்தது. சம்பளம் பெறாமல் அவருடைய தனிச்செயலாளராக இருந்த நானக்சந்த் ராட்டு என்பவரும், அம்பேத்கரின் தோழரான பிரகாஷ் சந்த் என்பவரும் இக்கடும் பணியைப் பல மாதங்கள் தொடர்ந்து செய்தனர். ராட்டு அவருடைய இரவு உணவை நள்ளிரவுக்கு முன் உண்டதேயில்லை என்கிற அளவிற்குக் கடுமையாக உழைத்தார்.

புத்தர்பற்றியும் பௌத்தம்குறித்தும் அம்பேத்கர் எழுதிய நூல் இறுதியில் தனிச்சுற்றுக்கெனப் 'புத்தரும் அவருடைய தத்துவமும்' (The Buddha and His Gospel) என்ற தலைப்பின்கீழ் அச்சிடப்பட்டது. இந்நூலைப்பற்றிய கருத்தை அறிவதற்காக இந்நூலின் படிகள் சுமார் அய்ம்பது பேர்களுக்கு அனுப்பப்பட்டன. 1956 பிப்ரவரி யில் 'கடவுள் என்பது இல்லை', 'ஆத்மா என்பது இல்லை' என்ற இரு அத்தியாயங்கள் இந்நூலுடன் இணைக்கப்பட்டன.

அம்பேத்கரின் உடல்நிலை நலிவுற்றிருந்த அந்நிலையிலும் அவர் பெரிய அளவில் செயல்பட்டார். மணிக்கணக்கில் சேர்ந்தாற் போல் அவருடைய மேசைமுன் அமர்ந்தவண்ணம் எழுதிக் கொண்டேயிருந்தார். 1956ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் ஒரு சனிக்கிழமை இரவு, அம்பேத்கர் அவருடைய தனிச் செயலாளரான ராட்டுவிடம், 'மறுநாள்-ஞாயிறு காலையே வந்துவிடுங்கள்' என்று கூறினார். 1956 பிப்ரவரி மாதம் அவர் எழுதி முடித்த இந்த நூலுக்கு முன்னுரையும் அறிமுகவுரையும் அப்போது எழுதிக் கொண்டிருந்ததாகத் தெரிகிறது. அம்பேத்கர் கூறியவாறே ராட்டு மறுநாள் காலை அம்பேத்கரின் இல்லத்திற்கு வந்தார். அம்பேத்கர் முதல்நாள் இரவு அமர்ந்திருந்த இடத்தில் அந்த நாற்காலியிலேயே அமர்ந்தவண்ணம் ஆழ்ந்து எழுதிக் கொண்டிருப்பதைக் கண்டு வியப்படைந்தார்; சுமார் அய்ந்து நிமிடங்கள் அவருடைய நாற்காலிக்கு அருகில் சென்று நின்றார்; அப்போதும் அம்பேத்கர் எழுதுவதிலேயே மூழ்கியிருந்தார். எனவே அம்பேத்கரின் கவனத்தை ஈர்க்கும் பொருட்டு அவருடைய மேசைமீது இருந்த சில நூல்களை ராட்டு இடம் மாற்றிவைத்தார். அப்போதுதான் அம்பேத்கர் தன் தலையை உயர்த்தி, ராட்டுவைப் பார்த்தார். உடனே நீங்கள் இன்னும் வீட்டிற்குப் போகவில்லையா?' என்று கேட்டார். 'சனிக்கிழமை இரவு வீட்டில் இருந்தேன்; இது ஞாயிறு

காலை வேளை; வேலைகளை முன்னதாகவே தொடங்கலாம் என்பதற்காக வந்தேன்' என்று ராட்டு பதில் சொன்னார். 'நீங்கள் வீட்டிற்குப் போகாமல் இங்கேயே இருப்பதாக நினைத்துக் கொண்டேன்; பொழுது விடிந்ததை நான் கவனிக்கவேயில்லை; நான் இந்த இடத்தைவிட்டு அசையாமல் எழுதிக்கொண்டேயிருந் தேன்' என்று கற்றறிந்த ஞானியாக விளங்கிய அம்பேத்கர் இயம்பினார். அதன்பின் அம்பேத்கர் புத்தரின் சிலைமுன் காலைப் பிரார்த்தனையைச் செய்தார். இரும்புக் குழாய்களின் மேல் சிறிது உடற்பயிற்சி செய்தார்; தேநீர் அருந்திவிட்டு மீண்டும் எழுதத் தொடங்கினார்.

1956ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 15ஆம் நாள் அம்பேத்கர் இந்நூலுக்கு அவர் கைப்பட முன்னுரை எழுதினார்; பிறகு அவர் சொல்லச் சொல்ல ராட்டு தட்டச்சு செய்தார்.

அதே காலக்கட்டத்தில் மாநிலங்கள் அவையில் அம்பேத்கர் தன் அரசியல் சம்மட்டியைக்கொண்டு பேரொலி எழுப்பிக் கொண்டிருந்தார். மொழிச்சிக்கல் குறித்து 1956ஆம் ஆண்டு மே முதல் நாளன்று அம்பேத்கர் தன் கருத்தை நிலைநாட்டிட மக்கள் அவையில் மிகுந்த ஆவேசமுடன் பேசினார். இம்மசோதாமீது நடைபெற்றுக்கொண்டிருக்கும் விவாதத்தில் பம்பாய்ப் புயலின் மையம் போலாகிவிட்டது என்று அவர் கூறினார். 'இந்நாட்டிற்கு அரசியலையும் குடியாட்சி முறைகளையும் கற்றுத்தந்த பம்பாய் இந்தியாவின் முதன்மைவாய்ந்த நகராக விளங்குகிறது; ஆனால் இத்தகு கீர்த்தி மிக்க பம்பாய் நகரம் மய்ய அரசின் ஆட்சிப் பிரதேசமாக ஆக்கப்பட்டு அந்தமான் தீவுகளின் நிலைக்குத் தாழ்த்தப்பட்டுவிட்டிருக்கிறது. பம்பாய் மராட்டியர்களுக்கு உரிய தாகும். பம்பாயின் ஆதிகுடிமக்கள் கோலி வகுப்பினர் (Kolis) ஆவர். இந்நகரம் தௌகர் இலட்சுமிபாய்க்குச் சொந்தமாக இருந்தது. அவரிடமிருந்து போர்ச்சுக்கீசியர்கள் இந்நகரைக் குத்த கைக்கு வாங்கினார்கள்; அதன்பின் அவர்கள் தங்களுடையதாக்கிக் கொண்டனர். மகாராட்டிரத்தில் பம்பாயைச் சேர்க்கவேண்டும் என்று கோருகின்ற மற்ற மராட்டியர்களிடமிருந்து நான் மாறுபட்ட கருத்தினைக் கொண்டிருக்கிறேன். எவ்வாறெனில் ஒன்றுபட்ட மகாராட்டிரம் என்ற கருத்துக்கு எதிரானவன் நான். இது எல்லாத்தரப்பினரையும் நிறைவுபடுத்தாது' என்று கூறினார். அதன்பின்னர் பதினைந்து நாட்கள் கழித்து, இதுகுறித்து மற்றொரு திட்டத்தை முன்மொழிந்தார். ஷயாதிரிஸ் பகுதியை எல்லைக்

கோடாகக் கொண்ட இரு மகாராட்டிர மாநிலங்களை ஏற்படுத்த வேண்டும் என்பதே அவருடைய அத்திட்டமாகும். எப்படியிருப்பி னும் ஒன்றுபட்ட மகாராட்டிர மாநிலத்தின் தலைநகரமாகப் பூனா அல்லது நாகபுரி இருப்பதற்குப் பதிலாக அவுரங்காபாத் இருக்க வேண்டும் என்று கருத்துரைத்தார்.

இலண்டன் பிரிட்டிஷ் வானொலி நிலையத்திலிருந்து (British Broadcasting Corporation) 1956ஆம் ஆண்டு மே மாதத்தில் டாக்டர் அம்பேத்கரின் ஓர் உரை ஒலிபரப்பப்பட்டது. 'பௌத்தத்தை நான் ஏன் விரும்புகின்றேன்; இன்றைய சூழ்நிலையில் அது உலகிற்கு எவ்வாறு பயனளிப்பதாய் விளங்குகிறது' என்ற தலைப்பில் அம்பேத்கரின் உரை அமைந்திருந்தது. 'நான் பௌத்தத் தைத் தேர்ந்தெடுத்ததற்குக் காரணம் அதில் மூன்று கொள்கைகள் ஒருசேர இணைந்திருப்பதேயாகும். பௌத்தம் மூட நம்பிக்கை களுக்கு எதிராகப் 'பிரஜ்னா'வை (Prajna - மூடநம்பிக்கைக்கும், இயற்கைக்கு அப்பாற்பட்ட தெய்வசக்திக்கும் எதிரான புரிதல்)யும், 'கருணை'யை (அன்பு)யும் 'சமாத்தா'வை (சமத்துவம்)யும் போதிக் கிறது. வேறு எந்த மதத்திலும் இதுபோல் இக்கொள்கைகள் இணைந்திருக்கவில்லை. ஒரு மனிதன் சிறந்த மகிழ்ச்சியான வாழ்க்கையை நடத்துவதற்குத் தேவையானவை இவைகளேயா கும். கடவுளோ அல்லது ஆத்மாவோ சமூகத்தைக் காப்பாற்றப் பயன்படமாட்டாது. மார்க்சியமும் கம்யூனிசமும் எல்லா நாடுகளி லும் சமய நெறிமுறைகளை ஆட்டங்காணச் செய்துவிட்டன. பௌத்தம்தான் மார்க்சுக்கும் அவர் அளித்த கம்யூனிசத்திற்கும் சரியான மாற்றாகும். கம்யூனிசத்திற்கு மாறியுள்ள பௌத்த நாடுகள் கம்யூனிசம் என்றால் என்ன என்பதையே சரியாகப் புரிந்து கொள்ளாமல் இருக்கின்றன. இரஷ்யாவில் இருக்கின்ற கம்யூனிச முறை கம்யூனிசத்தை இரத்தப்புரட்சியின்மூலம் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. பௌத்த வழிப்பட்ட கம்யூனிசமோ இரத்தம் சிந்தாத புரட்சியின்மூலம் கம்யூனிசத்தை ஏற்படுத்த விரும்புகிறது. தென்கிழக்கு ஆசிய மக்கள் இரஷ்யாவின் வலையில் விழாமல் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும். அவர்கள் செய்ய வேண்டிய பணியெல்லாம் புத்தரின் கொள்கைகளுக்கு அரசியல் வடிவம் தரவேண்டியதேயாகும். இந்நாடுகளில் வறுமை இருக்கி றது; வறுமை என்பது என்றும் இருக்கும். இரஷ்யாவில்கூட ஏழ்மை இருக்கிறது. வறுமையை ஒரு காரணமாகக் காட்டி மனிதச் சுதந்திரத்தைப் பலியிட்டு விடக்கூடாது. 'பௌத்தம் சமூக உயர்வுக்கான ஒரு தத்துவம் என உணரத்தொடங்கிவிட்டால்,

பௌத்த மறுமலர்ச்சி என்பது நீடித்த நிலைபேறு உடையதாக ஆகிவிடும்' என்று அம்பேத்கர் பிரிட்டிஷ் வானொலி உரையில் குறிப்பிட்டுள்ளார்.

அதே காலக்கட்டத்தில் அம்பேத்கர் அமெரிக்க வானொலி நிலையத்திற்காக (வாய்ஸ் ஆஃப் அமெரிக்கா) ஆற்றிய உரையில், இந்தியாவில் சனநாயகத்தின் எதிர்காலம் எவ்வாறிருக்கும் என்பது குறித்து விளக்கினார். "சனநாயகம் என்பது குடியரசுத்தலைவர் ஆட்சி முறைக்கோ அல்லது நாடாளுமன்ற ஆட்சி முறைக்கோ சமமானது என்று கருதப்படக்கூடாது. சனநாயகத்தின் வேர்கள் நாடாளுமன்ற ஆட்சி முறையிலோ அல்லது மற்றவகையான ஆட்சி முறையிலோ கால்கொண்டிருக்கவில்லை. கூடிவாழுகின்ற ஒரு நெறிமுறையைக் குறிப்பதே சனநாயகமாகும். சனநாயகத்தின் வேர்கள் சமூக உறவுகளில் - அதாவது சமூகத்தில் மக்களிடையே உள்ள உறவுகளில் கால் கொண்டுள்ளனவா என்று நம்மால் காணப்படவேண்டும். இந்தியச் சமுதாய அமைப்பு சாதிகளை அடித்தளமாகக் கொண்டுள்ளது; சாதிகள் ஒன்றுடன் மற்றொன்று கலக்காதவாறு தனித்து இயங்குகின்றன. வாக்களிப்பதற்கும் வேட்பாளர்களைத் தேர்வு செய்வதற்கும் சாதியே அடிப்படையாகக் கொள்ளப்படுகிறது. தொழில் நிறுவனங்களிலும் தொழிலதிபர் களின் சாதியைச் சார்ந்தவர்களே மிக உயர்ந்த பதவிகளில் அமர்த்தப்படுகின்றனர். வணிக நிறுவனங்களும் குறிப்பிட்ட சாதியினர் கூடாரங்களாகவே இருக்கின்றன. தானதர்மங்கள் செய்வதும் சாதிபார்த்தே செய்யப்படுகிறது. சாதிப் படிமுறையில், கீழே வரவர இழிவின் அளவும் அதிகமாக இருக்கும் தன்மையில் சாதிமுறை அமைந்துள்ளது. உண்மையில் சாதியும் வர்க்கமும் ஒரு தன்மையில் வேறுபட்டவைகளாக இருக்கின்றன. சாதி அமைப்பில் முற்றிலுமாக ஒதுக்கி வைத்தல் என்பது இருக்கிறது; ஆனால் வர்க்கச் சமூகத்திலோ இதுபோன்று ஒதுக்கி வைத்தல் என்பது இல்லை" என்று கூறி விளக்கினார்.

"சாதி அமைப்பைத் தகர்த்திட வேண்டும் என்பதில் அக்கறை கொண்டிருக்கின்ற, இந்தியச் சமூகத்தின் கீழ்த்தட்டில் உள்ள மக்களுக்கு நீங்கள் கல்வியைக் கொடுத்தால், அவர்கள் சாதி அமைப்பைத் தகர்த்துவிடுவார்கள். ஆனால் தற்போது இந்திய அரசாங்கமும் அமெரிக்காவின் தொண்டு நிறுவனங்களும் சீர்தூக்கிப் பார்க்காமல் கல்விக்காக அளித்துவரும் உதவி சாதி அமைப்பை மேலும் வலுப்படுத்தக்கூடியதாகவே உள்ளது. சாதி அமைப்பை

அழித்திட வேண்டும் என்கிற பிரிவினருக்குக் கல்வியை அளித்தால் இந்தியச் சனநாயகம் மேலும் வளம்பெறும்; சனநாயகத்தைப் பாதுகாக்கக் கூடியவர்களிடம் ஒப்படைப்பதாக அது அமையும்' என்று அம்பேத்கர் மேலும் கூறினார்.

அம்பேத்கர், 'குடியரசுக்கட்சி' என்ற பெயரில் ஓர் அரசியல் கட்சியை விரைவில் தொடங்குவதாக இருந்தார். அவருடைய உடல்நலம் சற்றுத் தெளிந்ததும் அப்பணியில் ஈடுபடப் போவதாகக் கூறினார். பம்பாயில் சித்தார்த்தா கல்லூரியில் நூலகராக இருந்த எஸ்.எஸ். ரீஜ் என்பவருக்கு 1956 மே 5ஆம் நாள் அம்பேத்கர் ஒரு கடிதம் எழுதினார். அதில், "நீங்கள் உடனடியாக ஒரு பணியை மேற்கொள்ள வேண்டும் என்று விரும்புகின்றேன். 'புத்தரும் அவருடைய தம்மமும்' (The Buddha And His Dhamma) என்ற என்னுடைய நூலை வெளியிடும் பணியை நீங்கள் மேற்கொள்ளவேண்டும்" என்று அம்பேத்கர் குறிப்பிட்டிருந்தார். "என்னுடைய நூலை வெளியிட விரும்புகின்றேன். அந்நூல் ஜென்யி வாங் எழுதியுள்ள 'புத்தரும், அவருடைய வாழ்வும் கொள்கைகளும்' (Buddha: His Life And Teachings) என்ற நூலை மாதிரியாகக் கொண்டு, அதே அளவில் அமைய வேண்டும். எனவே அந்த நூலை ஜி. கிளாரிட்ஜ் கம்பெனியாரிடம் காட்டி அதே அளவுள்ளதாக என் நூலை அச்சிட எவ்வளவு செலவாகும் என்று மதிப்பீடு செய்து கூறுமாறு கேளுங்கள். இப்பணியை மிகவும் விரைவில் முடிக்கவேண்டும் என்று விரும்புகிறேன். எவ்வளவு தாமதப்பட்டாலும் வரும் செப்டம்பர் மாதத்திற்குள் இந்நூலை வெளியிட்டுவிடவேண்டும் என்று எண்ணுகின்றேன். அச்சிடுவோர் இந்நூலை அச்சிடத் தொடங்கத் தயாரானதும் நான் இந்நூலை அவர்களிடம் அச்சிடத்தருவேன். நூலை அச்சிடுவதற்காக அவர்கள் கூறும் மதிப்பீட்டுப் புள்ளியைத் தந்திமூலம் எனக்குத் தெரிவியுங்கள். இது 2000 படிகள் அச்சிடப்படவேண்டும்" என்று அக்கடிதத்தில் எழுதியிருந்தார்.

ரீஜின் மேற்பார்வையின் கீழ்ப் 'புத்தரும் அவருடைய தம்மமும்' என்ற நூலை அச்சிடும் பணி நடைபெறத் தொடங்கியது. அச்சுமெய்ப்பில் பிழைகளைத் திருத்தும் பணியில் அம்பேத்கர் முழுமையாக ஈடுபட்டிருந்தார். அவ்வாறு அவர் பிழைதிருத்தம் செய்தபோது சிலவரிகளையே மாற்றியமைத்து மீண்டும் அச்சுக் கோப்பதற்காக அனுப்பினார். இக்கடும் பணியை ரீஜ் ஏற்றுச் செய்ய வேண்டியிருந்தது. பம்பாய் சர் தொராப்ஜி டாட்டா

அறக்கட்டளையினர் அம்பேத்கரின் இந்நூலை வெளியிடுவதற்காக ரூ.3000 நிதி உதவி அளித்தனர்.

இந்தியாவில் உள்ள சனநாயகச் சக்திகளை ஊக்குவிக்க வேண்டும் என்ற நோக்குடனும் அவர் தொடங்கவுள்ள குடியரசுக் கட்சியில் புதியவர்களைச் சேர்க்கவேண்டும் என்ற எண்ணத்துட னும், அம்பேத்கர் அரசியலில் நுழைய விரும்புவோர்க்கான ஒரு பயிற்சிப் பள்ளியை ஏற்படுத்துவது என்று முடிவு செய்தார். இந்நோக்கத்துடன் இதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் தயாரிப்பு வேலைகளையும் எஸ்.எஸ். ரீஜின் துணையுடன் அம்பேத்கர் செய்யத் தொடங்கினார். சட்டசபையில் உறுப்பினராகிட விரும்பு வோர்க்குப் பயிற்சி தருவதே அத்திட்டத்தின் நோக்கம். இந்திய நாட்டில் ஏற்படுத்தப்பட்ட முதலாவது அரசியல் பயிற்சிப் பள்ளியாக அது இருந்தது. அப்பயிற்சிப் பள்ளியின் முதல்வர் பதவியில் பொருத்தமான ஒருவரை அமர்த்திட வேண்டுமென்று அம்பேத்கர் விரும்பினார். ஒருவர் முதல்வராக இருக்கவேண்டுமா யின் அவர் ஆளுமை மிக்கவராக இருக்கவேண்டும்; ஒருவர் ஆசிரியராக ஆகவேண்டுமானால், அவர் அவருக்குரிய பாடத்தில் தெளிந்த அறிவும், திறம்படக் கற்பிக்கும் திறமையும், மாணவர் களைக் கவரக்கூடிய தோற்றமும் கொண்டவராக இருக்க வேண்டும் என்று அம்பேத்கர் கருதினார். ஒரு பள்ளியின் புகழ் என்பது ஆசிரியர்களின் திறமையையும், அவர்களுடைய கற்பிக்கும் ஆற்றலையும் பெரிதும் சார்ந்திருக்கிறது என்று அம்பேத்கர் கூறினார். இந்த அரசியல் பயிற்சிப் பள்ளி எஸ்.எஸ். ரீஜைப் பதிவாளராகக்கொண்டு, பதினைந்து மாணவர்களுடன் 1956 சூலை முதல் நாள் செயல்படத் தொடங்கி, 1957 மார்ச்சு மாதம் வரை நடந்தது. இப்பள்ளியின் நிறுவனரும் இயக்குநருமான டாக்டர் அம்பேத்கருக்கு இப்பள்ளியை நேரில் பார்க்கும் வாய்ப்பே அமையாது போயிற்று. இறுதியில் ஆதரிப்பார் யாருமின்றி இப்பயிற்சிப் பள்ளி மூடப்பட்டுவிட்டது.

1956ஆம் ஆண்டு மே மாதத் தொடக்கத்தில் அம்பேத்கர் பம்பாய்க்கு வந்தார். மே 24ஆம் நாள் நரே பூங்காவில் புத்தர் பிறந்த நாள் விழாவில் அம்பேத்கர் உரையாற்றியபோது, 1956 அக்டோபர் மாதத்தில் அவர் பௌத்தச் சமயத்தில் சேரப்போவதாக அறிவித்தார். பௌத்தச் சமயம் போதித்துள்ள அகிம்சைத் தத்துவம் குறித்து வீர சாவர்க்கர் எழுதிய தொடர் கட்டுரைகளைப்பற்றி அம்பேத்கர் அவருடைய உரையில் மிகவும் கடுமையாகத் தாக்கிப்

பேசினார். 'சாவர்க்கர் பௌத்தத்தின் அகிம்சை குறித்து என்ன சொல்லவிரும்புகிறார் என்பதுபற்றி எனக்குத் தெளிவாகத் தெரியுமானால் அப்போது அவருக்கு நான் பதிலளிப்பேன்' என்று கடுஞ்சீற்றத்துடன் அம்பேத்கர் கூறினார். சாவர்க்கரின் மற்ற கட்டுரைகளைப் போலவே அவர் பௌத்தத்தின் அகிம்சை குறித்து எழுதிய கட்டுரைகளும் அறிவார்ந்தவைகளாக, ஆணித்தரமானவைகளாக, சிந்தனையைத் தூண்டக்கூடியவைகளாக இருந்தன. சுயசிந்தனை மிக்க ஒரு தலைவர் வெளியிடும் கருத்துகளாகவே அவை இருந்தன. எனினும் அம்பேத்கர் அக்கூட்டத்தில் பேசுவதற்காகப் புறப்பட்டபோதும், கூட்டமேடையிலும் அவர் அருகில் இருந்த இச்சகம் பேசுவோரும் துதிபாடுவோரும் சாவர்க்கருக்குப் பதில்கூறுமாறு கடுப்பூட்டி அம்பேத்கரைத் தூண்டிவிட்டனர். இந்துத் தலைவர்களுக்கும் பௌத்தத் தலைவர்களுக்கும் இடையே மீண்டும் கடுமையான வாதப்போர் தொடங்கும் போல் தெரிந்தது. 'தீண்டப்படாத வகுப்பு மக்களின் முன்னேற்றத்திற்காக உழைப்பவர்களுக்கு மட்டுமே அவர்களை விமர்சனம் செய்வதற்கு உரிமை உண்டு. என்னைக் குறைகூறுவோர் என்னைப்பற்றி எதுவும் சொல்லாமல் விட்டுவிட வேண்டும். பள்ளத்தில் விழுவதாயினும் அவ்வாறு விழுவதற்கு எனக்கும் என் வகுப்பு மக்களுக்கும் உரிமை இருக்கவேண்டும். என் வகுப்பு மக்கள் என்னால் வழிநடத்தப்படும் ஆடுகள் போன்றவர்களே; நான் அவர்களுடைய மேய்ப்பன் ஆவேன். என்னைப் போன்ற சிறந்த தத்துவ வழிகாட்டி அவர்களுக்கு வேறுயாருமில்லை. எனவே அவர்கள் என்னைப் பின்பற்றி வரவேண்டும்; அவர்கள் மெல்ல மெல்ல அறிவு விளக்கம் பெறுவார்கள்' என்று புத்தர் பிறந்த நாள் விழாக் கூட்டத்தில் உரைத்தார்.

பௌத்தம் இந்துச் சமயத்திலிருந்து வேறுபட்டதாகும் என்பதை அக்கூட்டத்தில் அம்பேத்கர் விளக்கினார்: "இந்து மதம் கடவுளை நம்புகிறது; பௌத்தம் கடவுளை நம்புவதில்லை. இந்து மதம் ஆத்மாவை நம்புகிறது; பௌத்தத் தத்துவத்தின்படி ஆத்மா என்பது இல்லை. இந்து மதம் நால்வருண அமைப்பையும் சாதி முறையையும் நம்புகிறது; பௌத்தத்திலோ சாதி முறைக்கும் நால்வருணத்திற்கும் இடமேயில்லை" என்று விளக்கிக் கூறினார். அக்கூட்டத்தில் 'புத்தரும் அவருடைய தம்மமும்' என்ற நூல் வெளிவர இருப்பதுபற்றித் தம் வகுப்பு மக்களுக்கு அறிவித்தார். 'பௌத்த அமைப்பில் உள்ள ஓட்டைகளை எல்லாம் நான் அடைத்துவிட்டேன்; இப்போது அதை நான் வலிமைப்படுத்த

உள்ளேன். அதன்பின் இந்தியாவில் பௌத்தத்துக்கு உள்ள ஏற்றம் என்றும் குறையாமலிருக்கும். கம்யூனிஸ்டுகள் பௌத்தத்தைக் கற்கவேண்டும். அப்போதுதான் மனித வாழ்வின் துன்பங்களை அகற்றுவது எவ்வாறு என்பதை அவர்கள் அறிந்துகொள்வார்கள்' என்று மேலும் எடுத்துரைத்தார்.

அக்கூட்டத்தில் அம்பேத்கர் பேசியபோது, எகிப்திலிருந்து தன்னுடைய மக்களை விடுவித்துச் சுதந்திர பூமியான பாலஸ்தீனத்திற்கு வழிநடத்திச் சென்ற மோசசுடன் அம்பேத்கர் தன்னை ஒப்பிட்டுக் கூறினார். 'ஒரு மதத்தின் வீழ்ச்சிக்கு மூன்று காரணங்கள் இருக்கின்றன. அழிவிலாத் தத்துவங்கள் அம்மதத்தில் இல்லாமை; பலதுறைகளிலும் அறிவு சான்ற - வென்றெடுக்கும் நாவன்மை படைத்தவர்கள் இல்லாமை; எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் தத்துவங்கள் சொல்லப்படாமை முதலானவையே அம்மூன்று காரணங்களாகும், என்று அவர் கூறினார். புத்தருக்கு மிகச் சிறந்ததோர் கோயிலைக் கட்டப்போவதாகவும் அறிவித்தார். பம்பாயில் அம்பேத்கர் உரையாற்றிய கடைசிக்கூட்டம் அதுவேயாகும்.

அம்பேத்கர் பைபிளை ஆழ்ந்த ஈடுபாட்டுடன் கற்றிருந்தார். விவிலிய இலக்கிய நூல்களைப் பெருமளவில் அவர் திரட்டி வைத்திருந்தார். அதனால்தான் மோசசுடன் தன்னை அவர் ஒப்பிட்டுக்கொண்டார். அவ்வாறு அவர் ஒப்பிட்டுக்கொண்டது மிகவும் பொருத்தமேயாகும். கசக்கிப் பிழியப்பட்டுக் கடுமையாக வேலை வாங்கப்பட்டு மீளா அடிமைத்தளையில் பிணைக்கப்பட்டிருந்த இஸ்ரேலியர்களை விடுதலை செய்திட வேண்டும் என்பதை மோசஸ் நோக்கமாகக் கொண்டிருந்தார். மோசசை ஓர் இளவரசி வளர்த்தெடுத்தார்; அவரே கல்வி அளித்தார். அம்பேத்கர் கல்வி கற்பதற்கான வசதிகளை ஓர் இளவரசர் வழங்கினார். பண்டைநாளில் மிகவும் புகழ் வாய்ந்ததாகத் திகழ்ந்த ஓன் பல்கலைக்கழகத்தில் மோசஸ் பயின்றார். உலகப்புகழ் பெற்ற மூன்று பல்கலைக்கழகங்களில் கேள்வி வேட்கையுடனும், ஆராய்ச்சி நோக்குடனும், உயர்கல்வியைப் பெற்றிட வேண்டுமென்ற உறுதிப்பாட்டுடனும் அம்பேத்கர் கல்வியைப் பெற்றார். மோசசைப் போலவே அம்பேத்கரும் வலிமை சான்றவராக, உள்ள உரன் வாய்க்கப் பெற்றவராக, துணிவுமிக்கவராக விளங்கினார். மோசஸ் கடவுளிடம் கொண்டிருந்த பக்தியின் மூலமும் கடவுளை வணங்கியதன் வாயிலாகவும் அடக்கத்தைப் பயின்றார். ஆனால் அம்பேத்கரோ

இப்பண்பினை அவரால் கடவுளாகக் கருதப்பட்ட புத்தரிடம் கற்றார். மோசஸ், அம்பேத்கர் ஆகிய இருவருமே தத்தம் மக்களை அடிமைத்தளையிலிருந்து விடுவித்து வழி நடத்தினார்கள்; அவர்களுடைய மக்களுக்கு அவர்களே உருவாக்கிய மதத்தையும் சட்டத்தையும் அளித்தார்கள்; சுதந்திரப் பூமியின் வாயிலுக்கு அவர்களை அழைத்துச் சென்றார்கள். தன்னுடைய மக்களை அடிமைத்தளையிலிருந்து மீட்டபோது மோசசுக்கு எண்பது வயதாகியிருந்தது; அம்பேத்கரோ அறுபத்தைந்து வயதினராக இருந்தார். மோசசைப் போன்றே அம்பேத்கரும் நாட்டின் சட்டங்களை நிரல்படுத்தி விரிவுபடுத்தி விளக்கங்கள் அளித்தார்.

III

1956ஆம் ஆண்டு சூன் முதல் அக்டோபர் வரை அம்பேத்கர் தில்லியில் அலிப்பூர் சாலையில் 26ஆம் எண்ணுடைய அவருடைய இல்லத்தில் தங்கியிருந்தார். சூன், சூலை மாதங்களில் அம்பேத்கர் மிகவும் தளர்ச்சியுற்றிருந்தார், மனம் வெதும்பியிருந்தார். அவருடைய பருத்த உடலைத் தாங்கிடும் வலிமையைக் கால்கள் இழந்திருந்தன; கண் பார்வையும் விரைவாக மங்கி வந்தது; வீட்டில் அவராகவே தனித்து நடமாட முடியவில்லை; அந்நிலையில் அவரால் வெளியிலும் செல்ல இயலவில்லை. கடந்த பத்தாண்டுகளாக அவருடைய உடல்நலம் இயல்பான நிலையில் இல்லாமல் இருந்து வந்தது. தொடர்ந்து மருந்தை உட்கொள்ளும் பழக்கம் கேடு பயப்பதாகும்; அம்பேத்கர் இப்பழக்கத்திற்கு ஆட்பட்டுவிட்டார். இடைவிடாமல் எப்படியாவது உடலைத் தேற்றவேண்டும் என்ற ஆவலால் அம்பேத்கர் பல்வேறுபட்ட நண்பர்களிடமிருந்து மருந்தைப் பெற்றிட முயன்றார். அவ்வாறு மருந்தோ, அல்லது மூலிகையோ பெறப்படும்போது அவற்றை அம்பேத்கர் உட்கொள்ளுவது அவருடைய உடல் நலனுக்கு ஏற்றதன்று என்று, மருத்துவரான அவருடைய மனைவி கருதியிருக்கக்கூடும். தன் உடல்நிலை நலம்பெறும் என்ற நம்பிக்கையை அவர் முற்றாக இழந்துவிட்டார்.

பிரான்சு நாட்டைச் சேர்ந்த ஒரு பெண் மருத்துவர் அண்டவெளியிலிருந்து வரும் மின்காந்தச் சிற்றலைகளைச் செலுத்தி அம்பேத்கரின் கால்களிலும் தண்டுவடத்திலும் நைந்து விட்டிருக்கும் செல்களின் செயல்பாட்டைப் புதுப்பிக்கும் நோக்குடன் அவருக்கு மருத்துவம் செய்ய விரும்பினார். சிறந்த மருத்துவர் என்று பெயர் பெற்றிருந்த அம்பேத்கரின் மனைவி இத்தகைய

வைத்தியம் பயன்தராது என்று வெறுப்புடன் கூறிப் புறக்கணித்து விட்டார். சிலபோது அம்பேத்கர் அவருடைய மனைவியிடம் சினந்துகொண்டார். 'உன்னைப் போன்ற மருத்துவர்களால் கடந்த எட்டு ஆண்டுகளாக என்னுடைய நோயைக் குணப்படுத்த முடியாதபோது, மற்றவர்கள் எனக்கு மருத்துவம் செய்வதை நீ ஏன் தடுக்கிறாய்?' என்று மனைவியிடம் கேட்டார். அதன்பின் அவர் உணவு உண்ணாமல் அல்லது மருந்தை உட்கொள்ளாமல் சினத்துடன் இருப்பார். அவருடைய சிறப்புத் தனிச்செயலாளரின் உதவியுடனோ அல்லது அவருடைய நெருங்கிய தொண்டரின் மூலமாகவோ அம்பேத்கரின் சினத்தைத் தணியச்செய்து அவர் உணவையும் மருந்தையும் உட்கொள்ளுமாறு செய்துவந்தனர்.

அவருடைய கால்கள் நடக்க முடியாதவாறு, செயலிழந்து விட்டன. அந்நிலைமை அம்பேத்கரை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டது. தன் வாழ்வின் குறிக்கோளை நிறைவேற்ற முடியவில்லையே என்று எண்ணி மனம் வருந்தினார்; அப்போதெல்லாம் துயருற்று அழுதார். அவருடைய வாழ்நாளுக்குள்ளாகவே அவருடைய வகுப்பு மக்களை ஆளும் வகுப்பினராக ஆக்கிட வேண்டும் என்று விழைந்தார். ஆனால் எண்ணியவண்ணம் செயல்பட முடியாதவாறு நோய் அவரைப் படுக்கையில் வீழ்த்திவிட்டது. அவருடைய முயற்சியால் ஈட்டப்பட்ட சாதனைகளைத் தீண்டப் படாத வகுப்பினரின் படித்த சிலரே அனுபவித்துக்கொண்டிருக்கின்றனர்; கிராமப்புறங்களில் பெரும் எண்ணிக்கையினராக உள்ள படிக்காத, தீண்டப்படாத வகுப்பு மக்களின் பொருளாதார வாழ்வில் எத்தகைய முன்னேற்றமும் ஏற்படவில்லை. அவர்களுக்காக ஏதாவது செய்ய வேண்டுமென்று அம்பேத்கர் விரும்பினார். ஆனால் வாழ்நாள் சுருங்கி வருவதை உணர்ந்தார். இச்சூழ்நிலைக்கு ஈடுகொடுக்க உரிய தகுதியுடன் இப்பொறுப்பினை ஏற்றிட தீண்டப்படாத வகுப்பில் ஒரு தலைவரும் இல்லையே என்று நொந்தார். அவருடைய தளபதிகளில் பெரும்பாலோர் தலைமைப் பதவிக்காகவும் அதிகாரத்திற்காகவும் தங்களுக்குள் சண்டைபோட்டுக் கொண்டனர் என்று அம்பேத்கர் வருத்தமுடன் குறிப்பிட்டார்.

திட்டமிட்டிருந்தவாறு அவர் எழுதத் தொடங்கிய நூல்களை முடிக்கமுடியவில்லையே என்று தன் இயலாமையை நினைத்து நெடிது வருந்தினார். 'புத்தரும் காரல் மார்க்சும்', 'இந்தியாவில் புரட்சியும் எதிர்ப்புரட்சியும்', 'இந்துமதத்தின் புரட்டுகள்' முதலான நூல்களை எழுதிமுடித்து வெளியிட வேண்டியிருந்தது. அவருக்குப் பின் வேறு எவராலும் இந்நூல்களை எழுதி முடிக்க முடியாது.

'இந்திய நாட்டிற்காக இன்னும் அதிக அளவில் தொண்டாற்றிட விரும்புகின்றேன். ஆனால் நாட்டின் முன்னேற்றத்தில் தொடர்ந்து ஈடுபடுவது என்பது இன்றுள்ள சூழ்நிலையில் கடினமானதாக இருக்கிறது. ஏனெனில் இந்நாட்டின் பிரதம மந்திரி கொண்டுள்ள கருத்திற்கு மாறுபட்ட கருத்தை யார் சொன்னாலும் அதைக் கேட்க மக்கள் தயாராக இல்லை. இத்தகைய முற்சாய்வு எண்ணங்கொண்ட மக்கள் வாழும் நாட்டில் நான் பிறந்தது ஒரு பாவமாகும். இருப்பினும், எல்லாத் தரப்பினரிடமிருந்தும் என்மீது இழிமொழிகள் வீசப்பட்டபோதிலும்கூட, நான் மிக அதிகமாகவே சாதித்துள்ளேன். என் இறுதி மூச்சு நிற்கும்வரையில் இதுபோல் நான் செயல்படு வேன்' என்று (ராட்டுவிடம்) கூறினார். இவ்வாறு அம்பேத்கர் கூறியபோது அவர் கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தோடியது.

ஒருநாள், அம்பேத்கர், தன்னுடைய சிறப்புச் செயலாளரான ராட்டுவிடம், 'நான் இதுவரை செய்துள்ள சாதனைகள், என் வாழ்நாள் முழுவதும் கொடிய துன்பங்களுக்கும் முடிவில்லாத தொல்லைகளுக்கும் ஈடுகொடுத்து ஆற்றிய செயல்களாலும், என் எதிரிகளுடன் நடத்திய போர்களினாலும் விளைந்தவைகளேயாகும் என்பதை என் வகுப்பு மக்களிடம் கூறுங்கள். இன்று நீங்கள் காணுகின்ற - உரிமைக்குப் போராடத் துணிந்துவிட்ட இப் பெருங் கூட்டத்தைப் பெரிய தொல்லைகளுக்கிடையேதான் நான் வழி நடத்தினேன். அதன் வழியில் தடைகள் எதிர்ப்பட்டபோதிலும் இந்த மக்கள்திரள் தொடர்ந்து முன்னேறிச் செல்ல வேண்டும். என்னுடைய தளபதிகளால் அவர்களை முன்னோக்கி நடத்திச் செல்ல முடியாதுபோனால், இப்போது இருக்கும் இடத்திலேயே விட்டுவிடட்டும். ஆனால் எக்காரணங்கொண்டும் அவர்கள் பின் னோக்கிச் செல்ல அனுமதிக்கக்கூடாது. இதுவே என் வகுப்பு மக்களுக்கு நான் கூறவிரும்பும் செய்தியாகும்' என்று கூறினார். தாங்க முடியாத துயரமும் கடும் வேதனையும் அம்பேத்கரை இவ்வாறு தனக்குத்தானே கூறிக்கொள்ளச் செய்தன.

உண்ணும் விருப்பமின்றி, மனவேதனையுடன், கண்களில் நீர்வழிய படுக்கையில் நீண்ட நேரம் படுத்திருப்பார். அந்நிலையில் அம்பேத்கரைப் பார்க்க வந்த சிறந்த அரசியல்வாதிகள், அவருடைய முகத்தில் சாவின் நிழல் படர்ந்திருப்பதாகக் கூறினார்கள்; அந்த அளவிற்கு அம்பேத்கரின் உடல்நிலை மோசமாகிவிட்டிருந்தது. ஆயினும் அவர்கள் அம்பேத்கரின் மன உறுதியைக் கண்டு வியப்படைந்தனர். நீரிழிவு நோய் அம்பேத்கரின் உடல்நலனைப் பையப்பைய அரித்து அழித்துவிட்டிருந்தது. அவருடைய உடல்

செயல்படும் ஆற்றலை முழுவதுமாக இழந்துவிட்டிருந்தது; ஆயினும் அவருடைய உள்ள உரனால் அவருடல் விசையூக்கம் பெற்றது. அவருடைய உணர்வுகள் முன்னோக்கிப் பாய்ந்து இயங்கின - சுழன்றுகொண்டிருக்கும் மின் விசிறியின் பொத்தானை நிறுத்திய பிறகும் அது சிறிது நேரம் சுழல்வதைப்போல!

பௌத்த மதத்தில் சேருவதற்காக அம்பேத்கர் குறித்திருந்த 1956 அக்டோபர் 14ஆம் நாளும் மிக வேகமாக நெருங்கிக் கொண்டிருந்தது. அவருடைய நம்பிக்கைக்குரிய தளபதிகள் அக்டோபர் 14ஆம் நாள் மதம் மாறுவது குறித்து அம்பேத்கருடன் மிகுந்த ஆர்வமுடன் அடிக்கடி கலந்து பேசினார்கள். அம்பேத்கர் பால் எல்லையற்ற பற்றுக்கொண்டிருந்த அவருடைய தளபதிகளில் ஒருவரான சங்கரானந்த் சாஸ்திரி என்பவருடன் அம்பேத்கர் ஆகஸ்டு மாதத்தின் முதல் கிழமையில் கலந்து பேசினார். அப்போது, சாஸ்திரியிடம், மதமாற்றச் சடங்கு நிகழ்ச்சியைப் பம்பாய், சாரநாத், அல்லது நாகபுரியில் நடத்திட எண்ணங் கொண்டிருப்பதாக அம்பேத்கர் கூறினார். அந்நிகழ்ச்சி நாகபுரியில் நடத்தப்பட வேண்டும் என்பதே தன்னுடைய விருப்பம் என்றார். ஏனெனில் நாகபுரி பௌத்த வரலாற்றில் முக்கியமான நகரமாக இடம் பெற்றுள்ளது. பண்டை நாளில் பௌத்தத் துறவிகளான நாகர்கள் நாகபுரியில் வாழ்ந்தனர் என்று கூறினார். புத்தரின் தருமச்சக்கரத்தை மீண்டும் சுழலச் செய்யப்போவதாகவும், அவருடைய கொள்கைகளை உலகின் எல்லாப் பகுதிகளிலும் பரவச் செய்யப் போவதாகவும் குறிப்பிட்டார்.

'நீங்கள் மதம் மாறும்போது உங்களைப் பின்பற்றி உங்களுடைய தொண்டர்கள் ஒட்டுமொத்தமாக மதம் மாறாவிட்டால், அது அதிர்ச்சியூட்டுவதாகவும், நோக்கத்தையே தகர்ப்பதாகவும், கேடு பயப்பதாகவும் அமைந்துவிடுமோ என்று அஞ்சுகிறேன்' என்று அம்பேத்கரின் தொண்டர்களில் ஒருவர் அவரிடம் கூறினார். இதற்கு அம்பேத்கர் ஆழ்ந்த கவலையுடன் பதிலளித்தார். 'மதமாற்றத்தால் ஏற்படக்கூடிய சிக்கல் குறித்து மிக நீண்ட காலமாகவே நான் சிந்தித்துக்கொண்டிருக்கிறேன். அதனால்தான் மதமாற்றத்தை மேற்கொள்வதைத் தள்ளிப்போட்டுக்கொண்டே வந்தேன்; ஆனால் இப்போது என் உடல் நாளுக்குநாள் மிக வேகமாகச் சரிந்து வருகிறது. என் வாழ்வின் இறுதியை நெருங்கிக் கொண்டிருப்பதாக உணருகின்றேன். ஆகவே நான் மதம் மாறுவது என்பதை இந்தத் தடவை தள்ளிப்போடப் போவதில்லை.

என்னுடன் மதம் மாற விரும்புகிறவர்களை நான் வரவேற்கிறேன். மத மாற்றத்தை ஆதரிக்காதவர்கள் அவர்களுடைய விருப்பம்போல் நடந்துகொள்ளலாம். அவ்வாறு நடந்துகொள்ள அவர்களுக்கு உரிமை இருக்கிறது' என்று மன அயர்வுடன் கூறினார்.

அம்பேத்கர் டபிள்யு.எம். காட்போலே அவர்களைத் தில்லிக்கு வரும்படி அழைத்தார். காட்போலே பாரதியப் பௌத்த ஜன சங்கத்தின் செயலாளராக இருந்தார். மிக அண்மையில்தான் அம்பேத்கர் இச்சங்கத்தை நிறுவியிருந்தார். அம்பேத்கர், காட்போலேவிடம், நாகபுரியில் மதமாற்ற நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகள் குறித்து விவாதித்தார். அந்நிகழ்ச்சி மிகச்சிறந்த முறையில் அமைய வேண்டும் என்று அம்பேத்கர் விரும்பினார். பாரதியப் பௌத்த ஜன சங்கம், மதமாற்ற நிகழ்ச்சிக்கு வெள்ளுடை பூண்டு பெரும் எண்ணிக்கையில் வருமாறு தீண்டப்படாத வகுப்பு மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தது.

'தசரா நாளான 1956 அக்டோபர் 14ஆம் நாள் காலை 9 மணி முதல் 11 மணிக்குள் நாகபுரியில் பௌத்தச் சமயத்திற்கு மதம் மாறும் நிகழ்ச்சி நடைபெறும்' என்று செப்டம்பர் 23ஆம் நாள் அம்பேத்கர் பத்திரிக்கைகள் வாயிலாக அறிவித்தார்.

அக்டோபர் 14ஆம் நாள் பௌத்தச் சமயத்திற்கு மதமாற்றம் செய்வதற்கான சடங்கை நடத்துவதற்காக, கோரக்பூர் மாவட்டத்தில் குசினாரா என்ற ஊரில் இருந்த ரெவரண்ட் பிக்கு சந்திராமணியை அம்பேத்கர் அழைத்தார். 'மதமாற்றச் சடங்கினை நீங்கள் நடத்தி வைக்க வேண்டும் என்று நாங்கள் மிகவும் விரும்புகின்றோம். இந்தியாவிலுள்ள பிக்குகளில் நீங்கள்தான் மூத்தவர் என்பதால் இந்த மதமாற்றச் சடங்கினை நீங்கள் நடத்தி வைப்பது சாலப் பொருத்தம் என்று நாங்கள் கருதுகின்றோம்' என பிக்கு சந்திராமணிக்கு எழுதிய அழைப்பு மடலில் அம்பேத்கர் குறிப்பிட்டிருந்தார். நாகபுரிக்கு வந்து செல்வதற்கான விமானக் கட்டணம் அல்லது தொடர்வண்டிக் கட்டணத்தை அளிக்க விரும்புவதாகவும், அவரைக் குசினாராவிலிருந்து நாகபுரிக்கு அழைத்துவர உதவியாக ஒருவரை அனுப்புவதாகவும் அம்பேத்கர் அம்மடலில் மேலும் எழுதி இருந்தார்.

அக்டோபர் 11ஆம் நாள் தில்லியிலிருந்து புறப்பட்டுச் செல்வதற்காக அம்பேத்கர் தனக்கும் தன் மனைவிக்கும் ராட்டுவுக்கும் விமானப் பயணச்சீட்டு பதிவு செய்து கொண்டார். இந்திய

மகாபோதிச் சங்கம் மதமாற்ற நிகழ்ச்சியில் பங்கேற்க வேண்டும் என்ற தன் விருப்பத்தை டி. வலின்சின்ஹாவுக்கு மடல் வழியாக அம்பேத்கர் தெரிவித்தார். 'மதமாற்ற நிகழ்ச்சியின்போது செய்யப்படவுள்ள சடங்குகள்பற்றி எனக்குத் தெளிவாக எதுவும் தெரியாது. அவ்வாறு செய்யப்படும் நிகழ்ச்சிகளுடன் தம்ம தீட்சைச் சடங்கின் போது ஒரு பிக்குவோ அல்லது சாதாரணமான பௌத்தர் ஒருவரோ மதமாற்றத்தை மேற்கொள்பவர்க்குப் பிரமாணம் செய்து வைக்க வேண்டிய உறுதிமொழிகளைக் கொண்ட ஒரு முக்கியமான நடைமுறையை உருவாக்கியுள்ளேன். நீங்கள் மத மாற்ற நிகழ்ச்சியில் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும். உங்களுடைய நண்பர்களிடமிருந்தும் இதில் ஆர்வம் கொண்டவர்களிடமிருந்தும் நன்கொடை பெறுவதற்கு வாய்ப்பிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்' என்று அம்மடலில் அம்பேத்கர் எழுதி இருந்தார். அக்டோபர் 5ஆம் நாள் அம்பேத்கர் வலின்சின்ஹாவிற்கு மீண்டும் ஒரு கடிதம் எழுதினார். 'மதமாற்ற நிகழ்ச்சியின்போது நடத்தப்படும் சடங்குகள் குறித்து உங்களுக்கும் எனக்கும் இடையில் ஏதாவது சிறு கருத்து வேறுபாடு இருப்பதாகக் கருதுவீர்களானால், நீங்கள் நாகபுரிக்கு முன்னதாகவே வந்துவிட்டால், அதை நான் தீர்த்து வைப்பேன்' என்று அம்பேத்கர் அம்மடலில் குறிப்பிட்டிருந்தார்.

பௌத்தச் சமயத்தை அம்பேத்கரும் அவருடைய வகுப்பு மக்களும் விரைவில் தழுவவிருப்பது குறித்து இந்தியாவின் புகழ்பெற்ற பௌத்தப் பத்திரிக்கையான 'மகாபோதி' தன்னுடைய பெருமகிழ்ச்சியை வெளிப்படுத்தியது. ''வரவிருக்கும் விஜயதசமி நாளில் சிங்கத்தை நிகர்த்த நெஞ்சுரம் வாய்க்கப் பெற்ற தலைவரான அம்பேத்கரும் அவரைப் பின்பற்றி நடப்போரும் மேற்கொள்ளவுள்ள மாபெரும் சிறப்புக்குரிய அந்நிகழ்ச்சி, பௌத்தச் சாதுக்களின் முப்பெரும் முழக்கங்கள் (புத்தம் சரணம் கச்சாமி! தம்மம் சரணம் கச்சாமி! சங்கம் சரணம் கச்சாமி!) உலகில் பௌத்தக் கொள்கைகள் பரவியுள்ள எல்லாத் திசைகளிலிருந்தும் வீறிட்டு எழும்பும்; இம் முழக்கங்கள் தேவலோகத்திலுள்ள தேவர்களாலும் ஏற்கப்பட்டு விண்ணுக்கும் மண்ணுக்கும், இடையே எதிரொலிக்கும்; இந்த எதிரொலி இறுதியாகப் புத்தர் ஞானோதயம் பெற்ற பீடத்தைச் சென்றடையும்; அங்கே பௌத்தத்தைப் பரப்புவதில் ஈடுபட்டு வருந்தி உழைத்துக் கொண்டிருப்பவர்கள் இந்தப் பௌத்த மறுமலர்ச்சி முழக்கங்களைக் கேட்டு, 'இதோ பௌத்த மறுமலர்ச்சி பொங்கி எழுகிறது' எனப் புளகாங்கிதம் அடைவார்கள் என்று 'மகாபோதி' ஏடு எழுதியிருந்தது. தேவலோக மகிழ்ச்சி குறித்து இந்துமத வாதிகள் கருதுவது போன்றதே இக் கூற்றாகும்.

1956 அக்டோபர் மாதம் 11ஆம் நாள் காலை அம்பேத்கரும் அவருடைய மனைவியும், ராட்டுவும் தில்லியிலிருந்து விமானம் மூலம் புறப்பட்டு நண்பகல் நாகபுரியை அடைந்தனர். நாகபுரியில் அவர்கள் தங்குவதற்காக ஷியாம் ஓட்டலில் இடம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நாகபுரியில் பெருந்திரளாகக் கூடியிருந்த அவருடைய வகுப்பு மக்கள் தங்களுடைய மீட்பரின் பாதங்களைத் தொட்டு வணங்கிட விரும்பினர். ஆனால் அவர் பாதம் பட்ட இடத்திலிருந்து மண்ணை எடுத்துத் தங்கள் நெற்றியில் இட்டுக் கொண்டு மனநிறைவடைந்தனர்.

IV

மதமாற்றத்தை மேற்கொள்வதற்கெனக் குறிக்கப்பட்ட நாளுக்கு ஒருவாரத்திற்கு முன்பிருந்தே தீண்டப்படாத வகுப்பினர்-குறிப்பாக மகார் வகுப்பினர் மத்திய மாகாணங்கள் மற்றும் பீகார் மாகாணம் ஆகியவற்றின் மராத்தி பேசும் பகுதிகளிலிருந்தும், பம்பாய் மாகாணத்திலிருந்தும் ஆண்களும் பெண்களும் குழந்தைகளுமாக மணிதோறும் ஆயிரக்கணக்கில் நாகபுரி நகருக்குள் தொடர் வண்டிகளிலும் பேருந்துகளிலும் வந்துகொண்டே இருந்தனர். ஏழைகளான அவர்கள் தங்களுடைய பயணச் செலவிற்காகவும் தங்களுடைய தலைவர் கூறியுள்ளவாறு வெள்ளை நிறச் சேலை களையும் சட்டைகளையும் வாங்குவதற்காகவும் தங்களிடம் இருந்த சிறு நகைகளை விற்றுவிட்டு வந்தனர். பேருந்துகளில் பயணம் செய்வதற்கு வசதியற்றவர்கள், 'பகவான் புத்தருக்கு ஜே' 'பாபா சாகிப்பிற்கு ஜே' என்று முழக்கமிட்டவாறே நூற்றுக்கணக்கான மைல் கால்நடையாகவே நடந்து வந்தனர். சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு வீடு நோக்கித் திரும்பும் சுற்றுலாப் பயணிகள் போல் அவர்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் காணப்பட்டனர். மதமாற்ற நிகழ்ச்சியில் பங்கேற்க வந்தவர்கள் நாகபுரியில் பள்ளிக்கூடங்களில் தங்க வைக்கப்பட்டனர். மிகப்பெரிய அளவிலான தொண்டர்ப் படையினர் அவர்களுக்குப் பொறுப்புடன் உதவிகளைச் செய்த னர். வந்த மக்களில் சிலர் உணவு விடுதிகளில் உண்டனர். மற்றவர்களோ திறந்த வெளியில் சமைத்துக் கொண்டனர். பௌத்தச் சமய பக்தி உணர்ச்சி அங்கு பெருக்கெடுத்தோடியது. பௌத்தச் சமயத்தின் மாபெரும் மேதையாகவும் தலைவராகவும் விளங்கிய நாகார்ஜுனர் பண்டை நாளில் நாகபுரியில் வாழ்ந்ததால் அந்நகரம் புனிதம் பெற்றது; இப்பொழுதோ மதமாற்றத்தை மேற்கொள்வதற்கான இடமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதால் வரலாறு,

கலாச்சாரம், மதம் ஆகியவற்றின் அடிப்படையில் மாபெரும் முக்கியத்துவம் வாய்ந்த புண்ணிய பூமியாகக் காட்சியளித்தது. பெரும் எண்ணிக்கையில் நாகபுரியை நோக்கி அணியணியாக வந்து கொண்டிருந்த மக்கள் 'பாபாசாகிப்பின் சங்கநாதம் கேட்கிறது! அனைவரும் பௌத்தத்தில் சேருவோம்!'; 'விண்ணகமும் மண்ணகமும் எதிர்த்திடினும், மீறி, பௌத்தத்தைத் தழுவுவோம்' என்று முழங்கிய வண்ணம் வந்தனர்.

சிரத்தானந்தாப் பேட்டையில் தடுப்பூசி மருந்து தயாரிக்கும் நிலையத்திற்கு அருகில், 14 ஏக்கர் பரப்புக்கொண்ட திறந்த வெளி, பெருஞ்செலவு செய்யப்பட்டு மாபெரும் அரங்கமாக மாற்றப்பட்டிருந்தது. அதன் வடக்குக் கடைசிப் பகுதியில் சுற்றிலும் வெள்ளைத் துணியால் அலங்கரிக்கப்பட்ட பெரிய மேடை அமைக்கப்பட்டிருந்தது. அதனருகில் சாஞ்சி ஸ்தூபியின் மாதிரி வடிவங்கொண்ட கம்பம் நாட்டப்பட்டிருந்தது. மேடைக்கு எதிரில் ஒருபுறத்தில் ஆண்களுக்கென ஒரு பந்தலும், இன்னொரு புறத்தில் பெண்களுக்கென ஒரு பந்தலும் போடப்பட்டிருந்தன. நீலம், சிவப்பு, பச்சை நிறக் கோடுகள் கொண்ட பௌத்தக் கொடிகள் எங்ஙனும் பறந்து கொண்டிருந்தன. மதமாற்ற நிகழ்ச்சி அரங்கினை நோக்கிச் செல்லும் எல்லா வழிகளிலும் வீதிகளிலும் துணியாலான அலங்காரத் தோரணங்கள் பறந்துகொண்டிருந்தன.

அக்டோபர் 13ஆம் நாள் மாலை அம்பேத்கர் பத்திரிக்கையாளர் கூட்டம் ஒன்றை நடத்தினார். 'நான் மேற்கொள்ள உள்ள பௌத்தம், பகவான் புத்தர் போதித்த கொள்கைகளின்படி இயங்கும். பண்டை நாளில் பௌத்த மதப் பிரிவுகளான ஹீனயானம், மகாயானம் ஆகியவற்றிற்கு இடையே ஏற்பட்ட கருத்து முரண்பாட்டில் என் மக்களை ஈடுபடுத்த மாட்டேன்' என்று பத்திரிக்கையாளர்களிடம் கூறினார்.

என்னுடைய பௌத்தச் சமயம் ஒருவகையான புதிய பௌத்தமாக அல்லது 'நவயானா'வாக இருக்கும் என்று கூறினார். நீங்கள் ஏன் புத்த மதத்தைத் தழுவுகிறீர்கள் என்று பத்திரிக்கையாளர்கள் அவரிடம் கேட்டபோது அவர் சினங்கொண்டு, 'நான் இந்துச் சமயத்தை விட்டுவிட்டுப் பௌத்தத்தை ஏன் தழுவுகிறேன் என்ற கேள்வியை நீங்களே உங்களுக்குள் கேட்டுப் பாருங்கள்; உங்களுடைய மூதாதையர்களிடமும் இதைக் கேளுங்கள்' என்று கூறினார். 'என்னுடைய வகுப்பு மக்கள் அரிசனங்களாக இருந்து கொண்டு இடஒதுக்கீடு போன்ற 'நன்மைகளை'ப் பெறுவதோடு

நின்று விடவேண்டும் என்று நீங்கள் ஏன் கருதுகிறீர்கள்? அப்படியானால் இடஒதுக்கீடு போன்ற நன்மைகளைப் பெற்றுக் கொண்டு தீண்டப்படாதவர்களாக இருப்பதற்குப் பார்ப்பனர்கள் சம்மதிப்பார்களா? நாங்கள் முழுமையான மனிதர்களாக ஆவதற்கு முயற்சிக்கிறோம். நான் ஒருமுறை காந்தியிடம் பேசிக்கொண்டிருந்த போது தீண்டாமை ஒழிப்பு குறித்து உங்களுடைய கருத்துடன் நான் மாறுபட்ட கருத்தைக் கொண்டிருப்பினும் தீண்டாமையை ஒழிப்பதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டிய நேரம் வரும்போது இந்நாட்டிற்கு மிகக்குறைந்த அளவில் கேடு தரக்கூடிய வழியையே நான் தேர்ந்தெடுப்பேன் என்று அவரிடம் கூறியிருக் கிறேன். அத்தன்மையில் இப்போது நான் பௌத்த மதத்தைத் தழுவுவதன் மூலம் இந்நாட்டிற்கு பெரும் நன்மையை நல்குவதா கவே நினைக்கிறேன். ஏனெனில் பௌத்தம் பாரத நாட்டுக் கலாச்சாரத்தின் பிரிக்க முடியாத ஒரு கூறாக இருக்கிறது. என்னுடைய மதமாற்றத்தால் இந்நாட்டின் கலாச்சார மரபுகளும் வரலாறும் பாதிக்கப்படக் கூடாது என்பதில் மிகுந்த எச்சரிக்கையு டன் செயல்பட்டுள்ளேன்' என்று பத்திரிக்கையாளர்களிடம் மேலும் விளக்கினார்.

'அடுத்த பத்துப் பதினைந்து ஆண்டுகளில் பெரும் எண்ணிக் கையில் மக்கள் பௌத்த மதத்தைத் தழுவுவது என்பது நாடு முழுவதும் பரவும். அதனால் இந்தியா ஒரு பௌத்த நாடாக ஆகிவிடும். பௌத்த மதத்தில் சேருபவர்களில் பார்ப்பனர்கள்தான் கடைசியானவர்களாக இருப்பார்கள்; அவ்வாறே அவர்கள் கடைசி யில் சேரட்டும். ரோமப் பேரரசு வீழ்ச்சியுற்றதும் சமூகத்தில் கீழ்த்தட்டில் இருந்த பாமர மக்கள்தான் முதலில் கிறித்தவ மதத்தில் சேர்ந்தனர் என்பதை எண்ணிப் பாருங்கள். என்னைப் பின்பற்று வோர் அறியாமை உள்ள மக்களாக இருக்கின்றனர் என்பது உண்மைதான். என்னுடைய நூல்கள் வாயிலாகவும் மத போதனை கள் மூலமும் பௌத்தக் கோட்பாடுகளை அவர்களுக்குக் கற்பிப் பேன். நாங்கள் உணவைவிட மானத்தையே பெரிதென மதிக்கின் றோம். இருப்பினும் எங்களின் பொருளாதார நிலையை உயர்த்தி டத் தீவிரமாக முயற்சி செய்வோம்' என்று கண்களில் ஒளிவீசிட அம்பேத்கர் விளக்கிக் கூறினார்.

'அடுத்த பொதுத் தேர்தலுக்கு முன் குடியரசுக் கட்சி என்ற பெயரில் ஓர் அரசியல் கட்சியைத் தொடங்கிட எண்ணியுள்ளேன். சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் எனும் மூன்று வழிகாட்டிக்

கொள்கைகளையும் ஏற்றுக் கொள்ளும் எவரும் இக்கட்சியில் சேரலாம். எனக்கு வாய்ப்புள்ள ஒரு தொகுதியிலிருந்து நாடாளு மன்றத் தேர்தலுக்குப் போட்டியிடுவேன். குஜராத்தையும் மகாராட் டிரத்தையும் இணைத்து இருமொழிகொண்ட ஒரு புதிய மாநில மாகப் பம்பாய் மாகாணத்தை ஆக்குவதைத் தடுத்து நிறுத்திட நான் போராடுவேன். எனவே ஒன்றுபட்ட மகாராட்டிர மாநிலம் அமைக்கப்பட வேண்டும் என்பதற்காகப் போராடி வரும் சம்யுக்த மகாராட்டிர சமிதிக்கு என்னுடைய முழுஆதரவையும் அளிப்பேன்' என்று அம்பேத்கர் மேலும் பத்திரிக்கையாளர்களிடம் கூறினார்.

அன்றுமாலை அம்பேத்கர் மற்றுமோர் பேட்டியளித்தார். அம்பேத்கரைப் போன்று கட்டளையிடும் மனப்பான்மை கொண்ட வர்கள் பத்திரிக்கை நிருபர்களின் கூட்டங்களில் வெற்றிகரமாகத் திகழ்வதில்லை. இதுபோன்ற பேட்டிகளின்போது சிலசமயம் அம்பேத்கர் உணர்ச்சி வயப்பட்டுவிடுவார். அதனால் மேற் கொண்டு விவாதம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுவிடும். பத்திரிக்கையாளர்கள் நீண்ட காலமாக நான் போகுமிடங்களுக்கெல் லாம் என்னைப் பின்தொடர்ந்து வருகின்றனர். ஆனால் அவர்களால் எனக்கு எத்தகைய கேட்டையும் உண்டாக்க முடியவில்லை என்று கூறினார்.

அக்டோபர் 13ஆம் நாள் இரவு அம்பேத்கருக்கும் அவருடைய நெருங்கிய தளபதிகள் சிலருக்கும் இடையே, வரவிருக்கும் பொதுத்தேர்தல் வரையில் மதமாற்றத்தைத் தள்ளி வைக்கலாமா என்பது குறித்து விவாதம் நடந்தது. அவர்களுக்குள் கருத்து வேற்றுமை ஏற்பட்டது. அதனால் அம்பேத்கர் கடுமையான தடுமாற்றத்திற்குள்ளானார். நீங்கள் இதுபோல் பொறுப்பைத் தட்டிக் கழித்து அஞ்சிப் பின்வாங்கினால் கடுமையான விளைவுகளைச் சந்திக்க வேண்டியிருக்கும்' என்று கூறி அம்பேத்கர் அவர்களை அச்சுறுத்தினார். திசைதவறிக் கத்துகின்ற ஆடுகளைப்போல் அவர்கள் அம்பேத்கர் தங்கியிருந்த ஓட்டலிலிருந்து குமுறலுடன் வெளியேறினர்.

அம்பேத்கர் 1956 அக்டோபர் 14ஆம் நாள் விடியற் காலையிலேயே எழுந்து விட்டார். குளிப்பதற்கு வெந்நீர் ஏற்பாடு செய்யுமாறு ராட்டுவிடம் கூறினார்; நிகழ்ச்சிக்கான பந்தலில் எல்லா ஏற்பாடுகளும் முறையாகச் செய்து முடிக்கப்பட்டுள்ளனவா என்று பார்த்துவிட்டு வருமாறும் கூறினார். ராட்டுவும் அவ்வாறே சென்று பந்தலில் செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகளை அறிந்து கொண்டு திரும்பினார்.

விடியற்காலை முதலே மக்கள் வெள்ளம் போல் 'தீட்சாபூமியை' நோக்கி வந்தவண்ணம் இருந்தனர். தீட்சை பெறும் இடத்தை நோக்கிச் செல்லும் வீதியை, தெருக்கூட்டுவோர், வைகறைப் பொழுதிலேயே பெருக்கிச் சுத்தம் செய்தனர்; அவர்களுடைய மீட்பரான அம்பேத்கர் அவ்வழியே செல்லவிருப்பதால் அந்த வீதியைத் தூய்மை செய்வது தங்களின் நற்பேறு என அவர்கள் எண்ணினர். 'புத்தருக்கு ஜே', 'அம்பேத்கருக்கு ஜே' என்ற முழக்கங்கள் விண்ணை அதிரச் செய்தன.

டாக்டர் அம்பேத்கர் வெள்ளைப்பட்டு வேட்டியும் வெள்ளைக் கோட்டும் அணிந்துகொண்டார். அவர் தங்கியிருந்த விடுதியிலிருந்து ராட்டுவுடனும் தன்னுடைய மனைவி திருமதி சவிதா அம்பேத்கருடனும் காரில் காலை எட்டரை மணிக்குப் புறப்பட்டார். அவருடைய மனைவியும் வெள்ளைச் சேலை உடுத்தி இருந்தார்.

நிகழ்ச்சிக்காகச் செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகள் அங்குத் திரண்ட பெரும் மக்கள் கூட்டத்திற்குப் போதுமானவையாக இல்லாததால் அவை பயனற்றவை ஆயின. அம்பேத்கர் பந்தலை வந்தடைந்தபோது அங்கே கடல் போல் காத்திருந்த மக்கள் மகிழ்ச்சி ஆரவாரமுடன் அவரை வரவேற்றனர். அம்பேத்கர் மேடைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அம்பேத்கர் ஒரு கையால் தடியை ஊன்றியவாறும் மற்றொரு கையை ராட்டுவின் தோளின்மீது போட்டுக் கொண்டும் மேடையில் நின்றார். மக்கள் பெருத்த கரவொலி எழுப்பினர். அப்போது மணி காலை ஒன்பதேகால் ஆகியிருந்தது. புகைப்படக்காரர்கள் சுறுசுறுப்பாகப் படமெடுத்துக் கொண்டிருந்தனர். பத்திரிக்கை நிருபர்கள் நேரில் பார்த்தவற்றை எழுதிக் கொண்டிருந்தனர். மேடையில் ஒரு மேசையின்மீது இரண்டு புலிகள் பக்கத்தில் காவல் காத்து நிற்பது போன்ற வெண்கலத்தால் செய்யப்பட்ட புத்தரின் சிறிய சிலை ஒன்று வைக்கப்பட்டிருந்தது. புத்தரின் சிலைக்குமுன் சாம்பிராணி புகைந்து கொண்டிருந்தது. மேடையில் வணக்கத்துக்குரிய டி. வலின் சின்ஹா, எம். சங்ரத்னா தேரா, எச். சதா திஸ்ஸ தேரா, பன்னானந்த் தேரா முதலானோர் அமர்ந்திருந்தனர். அம்பேத்கரைப் புகழ்ந்து ஒரு பெண்மணி மராத்தியில் பாடிய ஒரு பாடலுடன் நிகழ்ச்சி தொடங்கியது. டாக்டர் அம்பேத்கரின் தந்தையின் நினைவுநாளான அன்று அன்னாருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் அங்குக் கூடியிருந்த மக்கள் அனைவரும் ஒரு நிமிடம் எழுந்து நின்று மரியாதை செய்தனர். அதன்பின்னர் மதமாற்றச்

சடங்கு நடைபெறத் தொடங்கியது. எண்ணற்ற புகைப்படக்காரர்கள் படமெடுப்பதற்காக மேடையை நோக்கி விரைந்தனர். பம்பாய் மாகாணத்தின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் அங்கே மூன்று இலட்சத்திற்கு மேல் பெருந்திரளாகக் கூடியிருந்த மக்கள், அம்பேத்கர் பௌத்தச் சமயத்திற்கு மாறும் காட்சியை ஆவலுடன் கண்டனர். குசினாராவிலிருந்து வந்திருந்த எண்பத்து மூன்று வயதுடைய மகாஸ்தவீர் சந்திராமணியும் காவி உடையிலிருந்த அவருடைய தொண்டர்களான நான்கு பிக்குகளும் புத்தரின் சிலைக்குமுன் குனிந்து வணங்கிக் கொண்டிருந்த டாக்டர் அம்பேத்கருக்கும் அவருடைய மனைவிக்கும் பாலி மொழியில் உறுதிமொழி செய்து வைத்தனர். புத்தம் சரணம், தம்மம் சரணம், சங்கம் சரணம் என்ற மூன்று சரணங்களையும், கொல்லாமை, கள்ளாமை, பொய்யாமை, களவுப் புணர்ச்சி விரும்பாமை, கள்ளுண்ணாமை முதலான அய்ந்து நன்னெறிகளையும் மந்திரங்களாகப் பாலி மொழியில் சொல்லப்பட்டவற்றை அம்பேத்கரும் அவருடைய மனைவியும் மராத்தி மொழியில் கூறி உறுதி மொழி ஏற்றனர். அதன்பிறகு அவர்கள் புத்தர் சிலை முன் மூன்று முறை குனிந்து கைகூப்பி வணங்கினார்கள். புத்தர் சிலைக்கு முன் வெள்ளைத் தாமரை மலர்கள்ளக் காணிக்கையாக்கினார்கள். இவை முடிந்த நிலையில் அம்பேத்கர் பௌத்த மதத்தில் சேர்ந்துவிட்டார் என்று அறிவிக்கப்பட்டது. அங்கே மாபெரும் கூட்டமாகக் குழுமியிருந்த மக்கள் 'பாபாசாகிப் அம்பேத்கர் வாழ்க', 'பகவான் புத்தர் வாழ்க' என்று விண்ணதிர முழக்கமிட்டனர். அந்நிகழ்ச்சி முழுவதும் திரைப்படமாக எடுக்கப்பட்டது. அப்போது முற்பகல் மணி ஒன்பதே முக்கால் ஆகியிருந்தது.

அம்பேத்கர் பௌத்தச் சமயத்தைத் தழுவியதையொட்டி அவருடைய நெருக்கமான தொண்டர்கள் பலர் அவருக்கு மாலைகள் அணிவித்தனர். டி. வலின் சின்ஹா டாக்டர் அம்பேத்கருக்கும் திருமதி சவிதா அம்பேத்கருக்கும் புத்தர் சிலைகளை அளித்தார். அதன் பின்னர் அம்பேத்கர் உரையாற்றினார். 'சமத்துவமின்மையையும், ஒழுக்கமின்மையையும் கொள்கையாகக் கொண்டிருந்த என்னுடைய பழைய மதத்தைக் கைவிட்டதன் மூலம், இன்று, நான் புதுப்பிறவி எடுத்துள்ளேன். கடவுள் அவதாரம் எடுக்கிறார் என்ற தத்துவத்தில் எனக்கு நம்பிக்கை இல்லை. விஷ்ணுவின் அவதாரம்தான் புத்தர் என்று கூறுவது தவறானதும் விஷமத்தனமானதும் ஆகும். இனி நான் எந்த ஒரு இந்துக் கடவுளுக்கோ அல்லது கடவுளச்சிக்கோ பக்தன் அல்லன்.

நான் முதாதையர்க்குச் சிரார்த்தம் (திதி) செய்ய மாட்டேன். புத்தரின் எட்டு நெறிகளை உறுதியுடன் பின்பற்றுவேன். பௌத்தம் உண்மையானதோர் மதமாகும். நல்லறிவு, நன்னெறி, நற்கருணை எனும் மூன்று கோட்பாடுகளின் வழிகாட்டுதலின்படி என் வாழ்வில் நடப்பேன்' என்று தன் உரையில் குறிப்பிட்டார்.

இந்துக் கடவுளைத் தொழுவதில்லை என அம்பேத்கர் உறுதிமொழி எடுத்தார். 'நான் இந்து மதத்தைக் கைவிடுகிறேன்' என்று அறிவித்தபோது மாபெரும் தலைவரான அம்பேத்கர் ஒருமுறை மிகவும் மனம் நெகிழ்ந்தவராகக் காணப்பட்டார். அவருடைய குரல் தழுதழுத்தது. இந்து மதத்தைக் கைவிடுவதாக அறிவிக்கும் இருபத்திரண்டு உறுதிமொழிகளை அம்பேத்கர் உருவாக்கியிருந்தார். இந்து மதத்தை அதனுடைய வழக்கங்களை, மரபுகளை அம்பேத்கர் கைவிட்டார். இக்கணம் முதற்கொண்டு மனிதர்களுக்கிடையே சமத்துவத்தைக் கொண்டுவரப் பாடுபடப் போவதாக அறிவித்தார்.

இப்போது, பௌத்தராகிவிட்ட டாக்டர் அம்பேத்கர் அங்கே கூடியிருந்த மக்களை நோக்கி, 'உங்களில் பௌத்த மதத்தைத் தழுவ விரும்புபவர்கள் எழுந்து நில்லுங்கள்' என்று கூறினார். அங்கே குழுமியிருந்த அனைவருமே எழுந்து நின்றனர். மூன்று சரணங்களையும் அய்ந்து நன்னெறிக் கட்டளைகளையும் மற்ற பலவகையான உறுதிமொழிகளையும் அம்பேத்கர் அவர்களுக்குப் பிரமாணமாகச் செய்வித்தார். மகிழ்ச்சியான உரத்த குரலில் அவர்கள் சரணங்களையும் உறுதிமொழிகளையும் கூறினார்கள். அன்று அவருடைய தொண்டர்கள் கிட்டத்தட்ட மூன்று இலட்சம்பேர் பௌத்தச் சமயத்தைத் தழுவினர். அம்பேத்கர் ஒருமுறை தன்னை மேய்ப்பர் என்று ஒப்பிட்டுக் கூறிக்கொண்டது போலவே, ஒரே சமயத்தில் பெரும் எண்ணிக்கையில் தம்மக்களைப் பௌத்த மதத்தில் சேர்த்தார். கிறித்தவர்களுக்கும் கிறித்தவர்கள் அல்லாதவர்களுக்கும் மதம் என்பது பரம்பரையாகப் பெறும் ஒன்றாகவே இருக்கிறது என்று அம்பேத்கர் எப்போதும் குறைகூறி வந்தார். அவர்களுடைய தந்தையின் சொத்துடன் மதத்தையும் அவர்கள் வாரிசு முறையில் பெற்று வந்தனர் என்று கூறினார். உண்மையில் மிகச் சிலரே பல்வேறு மதங்களையும் ஒப்பிட்டு ஆய்வு செய்தவர்கள். ஆனால் அவ்வாறு ஆய்வு செய்ததன் விளைவாக ஒரு மதத்தைத் தெரிவு செய்து அதில் நம்பிக்கை வைத்தவர் யாருமில்லை. நாகபுரி உயர்நீதி மன்றத்தின் முன்னாள் தலைமை

நீதிபதி டாக்டர் எம்.பி. நியோகியும் மற்றும் மராட்டியத்தைச் சேர்ந்த அம்பேத்கரின் முன்னணித் தளபதிகளும் அன்று அம்பேத் கருடன் பௌத்த மதத்தில் சேர்ந்தனர். டாக்டர் அம்பேத்கர் பௌத்தச் சமயத்தைத் தழுவியபோது 'இந்து மதத்தைக் கைவிடுவ தாக' அவர் உறுதி மொழி கூறிய சடங்கு, தொன்மை பௌத்தச் சடங்குகளில் இடம் பெற்றிருக்கவில்லை என்று டாக்டர் நியோகி குறிப்பிட்டார். முற்பகல் பதினொன்று ஆவதற்குப் பத்து மணித்து ளிகள் இருந்தபோது அம்பேத்கரின் மதமாற்றச் சடங்கு நிகழ்ச்சி முடிவுற்றது.

மாபெரும் தலைவரான அம்பேத்கரும் அவருடைய தொண்டர் களும் பௌத்த மதத்தில் சேர்ந்ததை வரவேற்றுப் பர்மாவின் பிரதமர் ஊபாஸ்வே, பர்மாவின் முன்னாள் பிரதமர் ஊநூ கல்கத்தாவைச் சேர்ந்த டாக்டர் அரவிந்த் பருவா, கொழும்புவைச் சேர்ந்த எச்.டபிள்யூ. அமர்சூரியா முதலானோர் செய்தி அனுப்பி னார்கள். நேரு, டாக்டர் இராதாகிருஷ்ணன், சி. இராசகோபாலாச் சாரி, டாக்டர் இராசேந்திரபிரசாத் போன்ற எந்தவொரு இந்தியப் பெருந்தலைவரும் வரவேற்புச் செய்தி அனுப்பவில்லை என்பது இங்கு முதன்மையாகக் குறிப்பிட வேண்டியதாகும். வீரசாவர்க்கர் இதை வரவேற்றுச் செய்தி அனுப்புவார் என்று எதிர்பார்க்க இடமில்லை. இந்தியத் தத்துவம், மதம், சனநாயகம் ஆகிய மூன்றுக்கும் இடையே முரண்பாடு ஏதுமில்லை என்று நேரு கருதினார். 'இந்துமதம் எல்லோரும் பின்பற்றத்தக்க சிறப்பான தன்மையைக் கொண்டிருக்கிறது; மாற்றத்திற்கு ஏற்பத் தன்னைச் சரிசெய்து கொள்ளக் கூடியது; பல்வேறுபட்ட நம்பிக்கைகளையும், முரண்பாடுகளையும் கொள்கைகளையும் உடையவர்கள் அதில் இருப்பதற்கு இடந்தரும் அளவிற்குத் தாராள மனப்பான்மை கொண்டதாக இருக்கிறது' என்று நேரு கருத்து கொண்டிருந்தார். 'மக்களின் பொதுவான நலன்களைப் பேணும் தன்மையில் இந்துமதம் தன்னைத் தகவமைத்துக் கொள்ளும்; ஆனால் இவ்வாறு தன்னை மாற்றி அமைத்துக் கொள்வதற்கும் சிறிது காலமாகும். இதற்குமுன் இந்துமதம் இப்படிப் பல பெரிய மாற்றங்களை ஏற்றுக் கொண்டிருக்கிறது. பௌத்தம் இந்தியாவில் தோன்றிய போது இந்துமதம் அதற்குப் போட்டியாக எதிர்த்து நிற்கவில்லை; ஆனால் பௌத்தத்தைத் தன்வயப்படுத்திக்கொண்டது'[121] என்று நேரு கூறியுள்ளார். தூய்மையான இந்துச் சமயத்தை உருவாக்க வேண்டும் என்று புத்தர் முயன்றார் என்று எஸ். இராதாகிருஷ்ணன் குறிப்பிட்டுள்ளார்.[122]

அடுத்தநாள் அம்பேத்கர் அதே இடத்தில் பெரும் எண்ணிக்கையில் அவருடைய தொண்டர்கள் பௌத்தத்தில் சேருவதற்கான சடங்கினை நடத்தி வைத்தார். அச்சமயத்தில் அம்பேத்கர் பேசிய போது, 'நீங்கள் பௌத்த மதத்தில் சேர்ந்து விட்டதால் உங்களுடைய உரிமைகளை இழக்க மாட்டீர்கள். நீங்கள் இப்போது அரசியல் அமைப்புச் சட்டத்தின் மூலம் அனுபவித்துவரும் உரிமைகள் என்னுடைய உழைப்பால் பெறப்பட்டவையாகும். எனவே நீங்கள் அவற்றைத் தொடர்ந்து பெறுவதற்கானவற்றைச் செய்திட என்னால் முடியும். நான் ஒரு இந்துவாகப் பிறந்த போதிலும் இந்துவாக இறக்க மாட்டேன் என்று 1935ஆம் ஆண்டு நான் உரைத்த சூளுரையை உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். அச்சூளுரையை நான் இப்போது நிறைவேற்றி விட்டேன். இறுதியிலேனும் இந்துமதம் என்னும் நரகத்திலிருந்து வெளிவந்து விட்டதற்காக ஆத்ம திருப்தி அடைகிறேன். அவசரப்பட்டுச் செயலில் இறங்கிட நான் விரும்பவில்லை. அதனால்தான் இதுபற்றி இருபது ஆண்டுகளுக்குமேல் எண்ணிப் பார்த்துச் சிறப்பானதோர் முடிவை எடுத்தேன்' என்று கூறினார்.

அம்பேத்கர் காரல் மார்க்சின் தத்துவத்தைக் குறித்து விளக்கிப் பேசினார். 'மனிதன் தனக்கு உணவு மட்டுமே போதும் என மனநிறைவடைந்து உயிர் வாழமுடியாது. அவனுக்கு உள்ளம் என்ற ஒன்றும் இருக்கிறது; உள்ளத்தில் தோன்றும் எண்ணங்களையும் அவன் நிறைவு செய்ய வேண்டி இருக்கிறது. மதம் மனிதனிடத்தில் நம்பிக்கையூட்டி அவ்வனைச் செயலில் ஈடுபடச் செய்கிறது. இந்துமதம் ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களின் செயலூக்கத்தை அடியோடு அழித்துவிட்டது. எனவே என் சொந்த மதத்தை மாற்ற வேண்டியதன் தேவையைக் கண்டறிந்தேன். பௌத்த மதத்தைத் தழுவினேன்' என்று கூறினார். 'பௌத்தம் காலத்தையும் இடத்தையும் கடந்து நிற்கவல்லது; எந்த நாட்டிலும் செழித்தோங்கும் ஆற்றல் பெற்றது. எந்த நாட்டு மக்கள் பண்பாட்டு வளர்ச்சி, மனவளர்ச்சிக்கு முதன்மை தராமல், வறுமை ஒழிப்புக்கு முதன்மை தருகிறார்களோ அவர்களோடு தொடர்பு வைத்துக்கொள்ள நான் விரும்பமாட்டேன். இந்து மதம் தீண்டப்படாத வகுப்பு மக்கள் ஆயுதங்கள் வைத்துக் கொள்ளும் சுதந்திரத்தை வழங்கியிருந்தால், இந்நாடு எவராலும் அடிமைப்படுத்தப்பட்டிருக்காது' எனவும் அவ்வமயம் குறிப்பிட்டார்.

'பௌத்தத்தைத் தூக்கிப் பிடிக்க வேண்டிய மாபெரும் பொறுப்பு நமக்கு இப்போது இருக்கிறது என்பதை உணர்ந்து எச்சரிக்கையுடன் நடந்து கொள்ளுங்கள். பௌத்தக் கொள்கைகளை

உறுதியுடனும் உயரிய தன்மையிலும் பின்பற்றி நடக்காவிட்டால் மகார்கள் பௌத்தத்தை மிகவும் இழிநிலைக்குத் தள்ளியவர்களாக ஆகிவிடுவார்கள். ஒப்பிட முடியாத அளவிலான பெரும் பொறுப்பு இப்போது எனக்கு இருப்பதுபோல் இவ்வுலகில் வேறு யாருக்கும் இல்லை' என்று தன் உரையின் இறுதியில் குறிப்பிட்டார்.

அம்பேத்கர் நாகபுரியில் தங்கியிருந்தபோது ஷியாம் ஓட்டலில் அவருடைய கட்சியினர் கூட்டம் ஒன்றில் பேசினார். அக்கூட்டத்தில் அவர் உரையாற்றியபோது, 'நீங்கள் மதத்தைவிட அரசியலில் அதிக ஆர்வமுடன் இருக்கிறீர்கள்; ஆனால் நானோ அரசியலைவிட மதத்தில் மிகுந்த நாட்டம் உடையவனாக இருக்கிறேன். தீண்டப்படாத சாதிகள் பேரவை, தீண்டப்படாத வகுப்பு மக்களுக்குச் சுயமரியாதை உணர்வை ஊட்டியுள்ளது. ஆனால் அதே வேளையில் அது தீண்டப்படாத வகுப்பினருக்கும் மற்ற வகுப்பினருக்கும் இடையில் ஒரு தடுப்பையும் எழுப்பியுள்ளது. அதனால் மற்ற வகுப்பு மக்கள் தீண்டப்படாத வகுப்பைச் சார்ந்த வேட்பாளர்களுக்குத் தேர்தலில் வாக்களிப்பதில்லை என்ற அளவுக்கு நிலைமை உருவாகிவிட்டது. அதேபோல் தீண்டப்படாத வகுப்பு மக்கள் மற்ற வகுப்பு வேட்பாளர்களுக்கு வாக்களிப்பதில்லை என்றும் ஆகிவிட்டது. ஆகவே தீண்டப்படாத வகுப்பு மக்கள் தங்களின் நலனில் அக்கறை கொண்டுள்ள மற்ற வகுப்பினரின் உதவியுடன் ஒரு அரசியல் கட்சியை உருவாக்க வேண்டும். நாம் மற்ற வகுப்புத் தலைவர்களுடன் இணைந்து பணியாற்றிட முயற்சிக்க வேண்டும்' என்று கருத்துரைத்தார்.

'தீண்டப்படாத வகுப்பு மக்களின் முன்னேற்றம் குறித்து முழுமையாக மறுஆய்வு செய்ய வேண்டிய வேளை வந்துவிட்டது' என்று அம்பேத்கர் மேலும் கூறினார். இதுவே அவர் நிகழ்த்திய இறுதியான அரசியல் சொற்பொழிவாகும். சுதந்திரத் தொழிற்கட்சி கலைக்கப்பட்டுப் பதினான்கு ஆண்டுகள் கழிந்த பின்னரே, அதுவரையில் அவர் கொண்டிருந்த நிலைபாட்டை மறுஆய்வு செய்ய வேண்டும் என்பதை உணர்ந்தார். அவருடைய கட்சியினரையோ அல்லது அவரைப் பின்பற்றுபவர்களையோ மற்ற வகுப்பினருடன் கலந்து பழகுவதற்கு அம்பேத்கர் எப்போதும் ஊக்குவிப்பதில்லை. ஆனால் இதற்கு விதிவிலக்காக ஒரே ஒரு சமயத்தில் குறுகிய கண்ணோட்டத்தைக் கைவிட்டு நாட்டின் ஒட்டுமொத்த நலனையும் முன்னேற்றத்தையும் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். இந்திய அரசியல்

அமைப்புச் சட்டத்தின் தலைமைச் சிற்பி என்ற நிலையில் அம்பேத்கர் மீது பாராட்டுதல்களும் புகழ்மொழிகளும் பொழியப் பட்ட காலக்கட்டத்தில்தான் அம்பேத்கர் மேலே குறிப்பிட்டுள்ள கருத்தைக் கூறியுள்ளார்.

அம்பேத்கர் பௌத்தச் சமயத்தைத் தழுவியதை இந்நாட்டின் பெருந்தலைவர்கள் கண்டும் காணாததும்போல் இருந்தபோதிலும் முன்னனி நாளேடுகள் ஆழமாகவும் கவலையுடனும் இதைப் பற்றித் திறனாய்வு செய்தன. பம்பாய் 'இந்தியன் எக்ஸ்பிரசு' நாளேடு, அம்பேத்கர் பௌத்த மதத்தில் சேர்ந்து மதரீதியாக ஒரு மறுபிறப்பு எடுத்துள்ளதால் நல்லதோர் இருபிறப்பாளராக துவிஜாவாக ஆகியிருப்பதற்குத் தன் பாராட்டுதல்களைத் தெரிவித் தது.

முதாதையர் வழி வந்த இந்து மதத்தைவிட்டு விலகிய போதிலும்-சீக்கியம், பிரம்மசமாஜம், ஆரிய சமாஜம் போன்றே இந்திய மரபு வழிப்பட்டதான பௌத்தத்தை அவர் தேர்ந்தெடுத்துள் ளார். பௌத்தம் இந்துச் சமயத்திலிருந்து சிறிது மாறுபட்டுக் கிளைத்ததேயாகும். எனவே அம்பேத்கர் பௌத்தத்தைத் தெரிவு செய்தது குறித்து மகிழ்ச்சி கொள்ள வேண்டும்' என்று அந்நாளேடு மேலும் எழுதி இருந்தது. நாகபுரியிலிருந்து வெளிவந்த ஹிதவாட் (Hitawad) பத்திரிக்கை, "அம்பேத்கரின் மதமாற்றம் இருபதாம் நூற்றாண்டில் மிகவும் முக்கியத்துவம் பெற்ற ஒரு நிகழ்ச்சியாகத் திகழும். மிக உயர்ந்த பகுத்தறிவுச் சிந்தனையாளரான, எதையும் அறிவியல் நோக்கில் சிந்திக்கின்ற டாக்டர் அம்பேத்கர் பௌத்தத் தைப் புரந்து போற்றிய அசோகப் பேரரசைப் போலவும் மற்றவர்களைப் போலவும் வரலாற்றில் அவர்களுடைய வரிசையில் குறிப்பிடக்கூடிய இடம் பெற்றிருப்பது புதிரான ஒன்றாகும். நாகபுரியில் தீண்டப்படாத வகுப்பு மக்கள் பௌத்த மதத்திற்கு மாறிய நிகழ்ச்சியானது இந்துச் சீர்திருத்தவாதிகளுக்கு விடப்பட் டுள்ள ஓர் எச்சரிக்கையாகும்' என்று எழுதியது.

இந்தியாவைத் தன் தாயாகவும் புனித பூமியாகவும் கருது பவனே இந்து என்று இலக்கணம் வகுத்த வீர சாவர்க்கர் டாக்டர் அம்பேத்கரின் மதமாற்றம் உண்மையில் இந்து மதத்தில் இணைத் துக் கொண்டது போன்றதேயாகும் என்றும், பௌத்த அம்பேத்கர் என்பதும் இந்து அம்பேத்கர் என்பதும் ஒன்றேயாகும் ' என்றும் கூறினார். வேதங்களை மறுக்கின்ற ஆனால் இந்துத் தத்துவத்தின் வட்டத்திற்குள் இயங்குகின்ற ஒரு மதத்தையே அம்பேத்கர்

தேர்ந்தெடுத்துள்ளார்; ஆகவே இதை ஒரு மதமாற்றமாகக் கருதமுடியாது என்றும் சாவர்க்கர் கூறினார். ஒரு மதத்திலிருந்து இன்னொரு மதத்திற்கு மாறுவது என்பது பிரச்சினைகளைத் தீர்க்காது என்று அவர் மேலும் குறிப்பிட்டார். அம்பேத்கர் பௌத்தத்தைத் தழுவியதையொட்டி மகாஸ்தவீர் சந்திராமணியும் மற்ற பிக்குகளும் வெளியிட்டிருந்த ஒரு துண்டறிக்கையில் 'இந்து மதமும் பௌத்தமும் ஒரே மதத்தின் கிளைகள் போன்றவை' என்று கூறி இருந்தமை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

ஒரே நாளில் இலட்சக்கணக்கானவர்கள் பௌத்தத்துக்கு மாறியமை, நவீன இந்தியாவின் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தோற்றுவித்திருப்பதாகப் பௌத்தர்கள் கருதினார்கள். ஆனால் ஒரு பௌத்த எழுத்தாளர் 'பௌத்தத்தை ஏற்றுக் கொள்வதை மதமாற்றம் என்ற சொல்லால் குறிப்பது பொருத்தமானதாக இல்லை; ஏனெனில் கட்டாயப்படுத்துதல், தூண்டுதலுக்கு ஆளாகுதல் ஆகியவற்றின் மூலமே மதமாற்றம் மேற்கொள்ளப்படுகிறது' என்று கருத்துரைத்தார். இந்த மதமாற்றம் என்பது தன் மதத்தைக் கைவிட்டு ஒரு பிறநாட்டு மதத்தைத் தழுவியது அன்று; தன் உள்ளத்தளவில் உணர்ந்து தான் அதுவரை பின்பற்றி வந்த மதத்தைக் கைவிட்டுவிட்டு, இந்நாட்டின் பிறிதோர் மதத்தை ஏற்றதேயாகும் என்று அந்த எழுத்தாளர் மேலும் கூறியிருந்தார். அஞ்சாமை மிக்க தலைவரான அம்பேத்கர் தருமச்சக்கரத்தைச் சுழலவிட்டிருக்கிறார் என்றும், நவீன இந்தியா கண்ட மாபெரும் மதப்புரட்சி இது என்றும் மற்ற பௌத்தர்கள் கூறினார்கள்.

V

அடுத்தநாள் - அக்டோபர் 15 அன்று நாகபுரி மாநகராட்சியினர் நகராட்சி மண்டபத்தில் டாக்டர் அம்பேத்கருக்கு ஒரு வரவேற்பு அளித்தனர். அம்பேத்கர் அவருடைய ஏற்புரையில், 'காங்கிரசுக் கட்சி அரசியலைச் சீர்குலைத்துவிட்டது. நீண்ட காலத்திற்குக் காங்கிரசுக் கட்சியே ஆட்சியிலிருக்குமானால் நாட்டினைப் பெருங் கேடு சூழும். அரசியல் சட்டத்தை உருவாக்கியவன் என்ற வகையில் இது எவ்வாறு செயல்படுகிறது என்றும் இந்நாட்டின் உண்மையான ஜனநாயகத்தை இதனால் ஏற்படுத்த முடியுமா என்றும் நான் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். 'அரசியல் சட்டத்தை உருவாக்கியவன்' என்று என்னை நான் குறிப்பிட்டுக் கொள்வதற்கு என் அகம்பாவ உணர்வு காரணமன்று. ஏனெனில் இந்நாட்டில் கற்றறிந்த அறிஞர்கள் பலர் இருந்தனர்; அவர்களால் இத்தகைய

அரசியல் சட்டத்தை எழுதி இருக்க முடியும். நேருவுடன் நான் நெருக்கமாகப் பழகிப் பார்த்தவன் என்ற முறையில் அவருடைய போக்குகள் மிகவும் கண்டிக்கத்தக்கவையாய் உள்ளன என்பதை அறிந்துள்ளேன். படித்த பெண்கள் நெறி பிறழ்ந்து நடக்கிறார்கள்; தேர்தலில் போட்டியிட வேட்பாளராகத் தெரிவு செய்யப்பட வேண்டும் என்பதற்காக எத்தகைய தவறையும் செய்யத் தயாராக இவர்கள் இருக்கிறார்கள்' என்று அம்பேத்கர் அங்குக் கூறினார். சமூகச் சீர்திருத்தவாதியாக தத்துவமேதையாக, கற்றறிந்த சட்ட வல்லுநராக விளங்குகின்ற அம்பேத்கரை வரவேற்பதில் மகிழ்ச்சி கொள்வதாக நாகபுரி மாநகராட்சியின் வரவேற்புரையில் குறிக்கப்பட்டிருந்தது. *1956* அக்டோபர் *16*ஆம் நாள் சாந்தா என்ற இடத்தில் மதமாற்ற நிகழ்ச்சியில் அம்பேத்கர் கலந்துகொண்டார். அங்குத் தீண்டப்படாத வகுப்பு மக்கள் பெரும் எண்ணிக்கையில் அம்பேத்கர் கூறிய உறுதிமொழிகளைத் திரும்பக்கூறி பௌத்த மதத்தில் சேர்ந்தனர். பிறகு டாக்டர் அம்பேத்கர் சாந்தாவிலிருந்து தில்லிக்குத் தொடர்வண்டியில் புறப்பட்டுச் சென்றார். பெரும் எண்ணிக்கையில் தீண்டப்படாத வகுப்பு மக்கள் பௌத்தச் சமயத்தில் சேர்ந்த நிகழ்ச்சி குறித்து நாளேடுகள் பலவற்றிலும் வெளியாகி இருந்த செய்திகளைத் தொடர் வண்டிப் பயணத்தில் ராட்டு அம்பேத்கருக்குப் படித்துக் காட்டினார். ஆனால் தொடர் வண்டி மூலம் நாகபுரியை அடைந்ததும், அம்பேத்கரும் அவருடன் வந்தவர்களும் அங்கிருந்து விமானம் மூலம் தில்லிக்குச் சென்றனர். அம்பேத்கர் சோர்ந்தும், களைப்புற்றும் காணப்பட்டபோதிலும் மிகுந்த உற்சாகத்துடன் இருந்தார். மூன்று நாட்கள் முழுமையாக ஓய்வெடுத்த பின்னர் அவர் புத்துணர்ச்சியும் எழுச்சியும் பெற்றார். சில நேரங்களில் வாய்விட்டு உரக்கப் பாடினார். அவர் பாடிய பாடல்களில் கபீரின் கவிதையும் இடம் பெற்றிருந்தது. புகழ் பெற்ற 'ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்' (His Master's Voice) கம்பெனியின் இசைத்தட்டுப் பாடல்கள் வீட்டில் கிராமஃபோனில் ஒலித்துக் கொண்டிருந்தன.

அம்பேத்கரின் உடல் நலங் குன்றி இருந்தபோதிலும், அவருடைய முகம் பெருமிதத்தினாலும் மகிழ்ச்சியினாலும் ஒளிவீசியது. ஆம், உண்மையில் வரலாறு படைத்த ஒரு நிகழ்ச்சியின் நாயகர் அவர்! மாபெரும் செயலைச் செய்து முடித்த புனிதமானதொரு மனநிறைவில் அவர் திளைத்திருந்தார். புத்தரின் தர்மச் சக்கரத்தை மீண்டும் இயங்கச் செய்ததன் மூலம் இந்தியாவில் பௌத்த மறுமலர்ச்சியை அவர் ஏற்படுத்தினார். *1881*-இல்

சர். வில்லியம் ஹன்ட்டர் 'இந்தியாவில் பௌத்த மறுமலர்ச்சி ஏற்படுவதற்கு வாய்ப்பிருக்கிறது என்று கருதுகிறேன்',[123] எனக் கணித்துக் கூறியதை அம்பேத்கர் மெய்யானதாக ஆக்கிக் காட்டிவிட்டார். புத்தரின் வருகைக்காகக் காத்திருப்பதாகக் கூறி இரவீந்திரநாத் தாகூரும், இதற்கு முன்பே பின்வரும் ஒரு கவிதையை இயற்றியிருந்தார்.

தங்கள் நாடாய்த் தாம்பிறந்து
  தவஞ்சேர் புனித நாடென்றே
எங்கும் எல்லா நாட்டவரும்
  இயம்ப வைத்த திருப்பெயரை
மங்காதே மற்றொரு முறையும்
  வளரச் செய்க போதிநிழல்
பொங்கி எழுந்த பெருஞானம்
  பொலியச் செய்க பூரணமாய்

அடைத்த கதவும் திறக்கட்டும்
  ஆர்த்தெழு சங்கம் முழங்கட்டும்
திடபா ரதத்தின் வாயில்முனர்
  திகழ்ந்தும் வரவு அறையட்டும்
பிடக நூலாம் பெருஞானப்
  பெருநூல் எண்ணறிகருகுரலால்
அட்டா! அளவில் அன்புடனே
  அகில மெங்கும் முழங்கட்டும்![124]

இறுதிப் பயணம்

கிளர்ச்சி யூட்டப்பட்ட மனநிலையில் இருந்த அம்பேத்கர் மதமாற்ற நிகழ்ச்சியின்போது எடுக்கப்பட்ட நிழற்படங்களை அவருடைய நண்பர்களுக்குக் காட்டி மகிழ்ந்தார். தில்லி, உத்திரப் பிரதேசம், பஞ்சாப், பம்பாய் முதலான பகுதிகளில் மதமாற்ற நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும் என்ற தன்னுடைய விருப்பத்தை அவர்களிடம் கூறினார். மதமாற்ற நிகழ்ச்சியைப் பற்றி அவர்களுடைய நண்பர்களிடமும் மகிழ்ச்சி ததும்பிய ஆர்வமுடன் விரிவாக விளக்கிக் கூறினார்.

அச்சமயத்தில் பம்பாய் எல்ஃபின்ஸ்டன் கல்லூரியின் முதல்வர், டாக்டர் அம்பேத்கருக்கு ஒரு கடிதம் எழுதினார். அக்கல்லூரியின் நூற்றாண்டு விழாவினையொட்டி வெளியிடப்படவுள்ள விழா மலருக்காக அம்பேத்கர் விரும்புகின்ற ஒரு தலைப்பில் ஒரு கட்டுரை எழுதி அளிக்க வேண்டுமென்று அக்கல்லூரியின் முதல்வர் அக்கடிதத்தில் கோரியிருந்தார். டாக்டர் அம்பேத்கர் அந்த அழைப்பினை ஏற்றுக்கொண்டார். 'சனநாயகம் என்பது என்ன? இந்தியாவில் சனநாயகத்தின் எதிர்காலம் எப்படி இருக்கும்?' என்ற தலைப்பில் பேச விரும்புவதாக அக்கல்லூரியின் முதல்வருக்குத் தெரிவித்தார். தன்னுடைய கண்பார்வை குறைந்திருப்பதாலும் உடல் நலங் குன்றியிருப்பதாலும் தன்னால் அங்கு வந்து சொற்பொழிவாற்ற இயலுமா என்பதைப்பற்றி உறுதியாகக் கூற முடியவில்லை என்று அம்பேத்கர் தெரிவித்திருந்தார். அக்கல்லூரிக்கு நிதிஉதவி அளிக்கக் கோரும் வேண்டுகோள் அறிக்கையில் அம்பேத்கர் கையொப்பம் இட்டு முதல்வருக்கு அனுப்பினார். ஆயினும் தன்னுடைய கையொப்பமிட்ட வேண்டுகோள் அறிக்கை எந்த அளவிற்கு மதிப்புடையதாகக் கருதப்படும் என்று நினைத்து வியப்புற்றார். கல்லூரி நிர்வாகத்தினர் தன்னைக் கட்டாயம் வரவேண்டுமென்று வலியுறுத்தினால் தில்லியிலிருந்து பம்பாய்க்குச் செல்ல அவர் தனியான பயண ஏற்பாட்டைச் செய்துகொள்ள வேண்டியிருக்கும் என்றும் மடலில் குறிப்பிட்டிருந்தார்.

டி. வலின் சின்ஹா 1956 அக்டோபர் 25ஆம் நாள் அம்பேத்கருக்கு ஒரு கடிதம் எழுதினார். அக்கடிதத்திற்கு அம்பேத்கர் அக்டோபர் 30இல் எழுதிய பதிலில் 'நாகபுரி மதமாற்ற

நிகழ்ச்சி ஒரு மாபெரும் சம்பவமாகும். பௌத்த மதத்தில் சேருவதற்காக அங்கு வந்திருந்த மக்களின் எண்ணிக்கை என் எதிர்பார்ப்பை விஞ்சி நின்றது. எல்லாம் நல்லபடியாக நடந்ததற்காகப் புத்தருக்கு நன்றி செலுத்த வேண்டும். புத்தரின் தர்மத்தை ஏற்றுக் கொண்டுள்ள மக்களுக்குப் பௌத்தம் பற்றிய அறிவைப் புகட்டுவதற்கான வழிமுறைகளை நாம் கண்டறிய வேண்டும். என் சொற்படி அதை அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள். பௌத்தச் சங்கம் இப்போது கொண்டுள்ள அணுகுமுறையை மாற்றியமைத்துக் கொள்ள வேண்டியிருப்பதாகவே நான் கருதுகிறேன். சமூகத்திலிருந்து ஒதுங்கி வாழும் துறவிகளாக இல்லாமல், பௌத்தப் பிக்குகள் கிறித்துவச் சமயப் பரப்புநர்களைப் போல் சமுதாயத் தொண்டர்களாகவும் சமூகப்பிரச்சாரகர்களாகவும் ஆகிட வேண்டும்'' என்று அதில் எழுதியிருந்தார்.

அம்பேத்கர் உடல்நலம் நலிவுற்றிருந்தபோதிலும் அவருடைய நெருங்கிய நண்பர்களில் சிலர் நேபாள நாட்டின் தலைநகரான காட்மண்டுவில் நடைபெறவுள்ள உலகப் பௌத்தர் மாநாட்டில் கலந்து கொள்ளவேண்டும் என்று அவரை இணங்கச் செய்து, அவருடைய பயணத்திற்கான ஏற்பாடுகளை ஆர்வமுடன் செய்து கொண்டிருந்தனர். நேபாளத்தில் அம்பேத்கர் தங்குவதற்கான ஏற்பாடுகள் கல்கத்தாவிலிருந்த எம். ஜோதி மூலம் செய்யப்பட்டன. அம்பேத்கருக்கு மருத்துவம் பார்த்துவந்த டாக்டர் மௌலங்கர் அம்பேத்கருடன் காட்மண்டுக்குச் செல்வதற்காகப் பம்பாயிலிருந்து தில்லிக்கு வருமாறு அழைக்கப்பட்டார். அம்பேத்கர் எழுதி முடிக்கப்படாமல் இருந்த தன் புத்தகங்களுக்கான சில கையெழுத்துப் படிகளைக் காட்மண்டுப் பயணத்தின்போது தொடர்ந்து எழுதுவதற்காக எடுத்துக் கொண்டார். அம்பேத்கர் பாட்னாவுக்குச் சென்று அங்கிருந்து விமானம் மூலம் காட்மண்டுவிற்குச் செல்வதாக இருந்தது. ஆனால் அதற்குமுன் அவர் பணநெருக்கடியைச் சந்திக்க வேண்டியதாயிற்று. பம்பாயில் அவருடைய சொந்த வீடான இராஜகிரகத்தை விரிவுபடுத்திக் கட்டிய வகையில் பெருந்தொகையான பணத்தைத் தரவேண்டியுள்ளது எனக்கூறி கட்டட ஒப்பந்தக்காரர்கள் பம்பாய் உயர்நீதிமன்றத்தில் அம்பேத்கர்மீது வழக்குத் தொடுத்தனர். அம்பேத்கர் தில்லியில் இருந்த தன் நண்பர் ஒருவரிடம் ஒரு தொகையைப் பெற்றார். உயர்நீதி மன்றத்தில் அவர் செலுத்த வேண்டிய ரூ.40,000க்கு மேற்கொண்டு தேவைப்பட்ட பணத்தைப் பம்பாயில் திரட்டிட ஏற்பாடு செய்தார். திருமதி சவிதா அம்பேத்கர் பம்பாய்க்கு வந்து உரிய பணத்தை உயர்நீதி

மன்றத்தில் செலுத்திவிட்டுத் தில்லிக்குத் திரும்பினார். பிறகு பாட்னாவிலிருந்து 1956 நவம்பர் 14ஆம் நாள் அம்பேத்கரும் அவருடைய குழுவினரும் விமானத்தில் காட்மண்டுக்குச் சென்றனர். அவுரங்காபாத் மிலிந்த் மகாவித்யாலயாவின் முதல்வரான எம்.பி. சிட்னிசும், பி.எச். வராலேயும் அம்பேத்கருடன் சென்றனர்.

உலகப் பௌத்தச் சங்க நாலாவது மாநாடு காட்மண்டுவில் கூடியது. 1956 நவம்பர் 15ஆம் நாள் சிங்க தர்பார் கலைக்கூட அரங்கில் நேபாளத்தின் மன்னர் மகேந்திரா இம்மாநாட்டைத் தொடக்கி வைத்தார். இந்து அரசான நேபாள அரசு 1956 நவம்பர் 15ஆம் நாள் அரசு விடுமுறை நாளாக அறிவித்தது. இந்துச் சமயம் மற்ற மதங்களின்பால் காட்டி வருகிற தாராள மன்பான்மையின் மரபிற்கிணங்க இந்தியாவில் பௌத்தத்தை வேரறுத்த ஆற்றல் பொருந்திய மதத் தலைவரான சங்கராச்சாரியின் வாழ்க்கையைப் பற்றி எடுக்கப்பட்ட இந்தியத் திரைப்படம் காட்மண்டுவில் அன்று காட்டப்படுவதற்குத் தடை விதிக்கப்பட்டது. அத்திரைப்படத்தில் பௌத்தத்திற்கு எதிராகச் சில காட்சிகள் இருப்பதாகக் குற்றஞ் சாட்டப்பட்டது. வழிவழியாகப் பின்பற்றி வந்த சமய சமரசக் கோட்பாட்டின்படி, மன்னர் மேற்கொண்ட இந்தச் செயலுக்கு எதிர்ப்பைத் தெரிவிப்பதுபோல், காட்மண்டுவிலிருந்த இந்துப் புரோகிதர்கள் பசுபதிநாத் கோயிலுக்குள் பௌத்தர்கள் நுழைவதற்காக அண்மையில் வழங்கிய உரிமையைத் திரும்பப் பெற்றுக் கொண்டனர். அம்பேத்கர் அம்மாநாட்டிற்கு வந்திருந்த பௌத்தப் பிரதிநிதிகளுடன் அமர்ந்து கொண்டிருந்தபோது மேற்படி அறிவிப்பு வெளியானமை மிகவும் விந்தையானதோர் ஒற்றுமையாகும்.

அம்மாநாட்டில் அம்பேத்கர் உரையாற்றியபோது 'நான் இம்மாநாட்டில் கலந்துகொள்ள வந்திருப்பதன் நோக்கம், எல்லா மதங்களைவிட பௌத்த மதந்தான் சிறந்ததாக இருக்கிறது என்று நான் கண்டறிந்ததை உலகிற்கு அறிவிப்பதற்கேயாகும். ஏனெனில் பௌத்தம் ஒரு மதமாக மட்டும் இல்லை. அது மிகச்சிறந்த சமூகத் தத்துவமாகவும் இருக்கிறது' என்று கூறினார். மாநாட்டின் தொடக்கவிழாவின்போது, அம்பேத்கர் உரையாற்றுவதற்காக எழுந்தபோது அம்மாநாட்டில் கூடியிருந்த அனைவரும் தம் கைகளை அசைத்து மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

அம்மாநாட்டின் தலைவரான டாக்டர் மல்லல சேகரா, டாக்டர் அம்பேத்கர் ஒரு மாதத்திற்கு முன் அய்ந்து இலட்சம் மக்களுடன்

பௌத்த மதத்தில் சேர்ந்தமை மதமாற்ற வரலாற்றில் மாபெரும் ஒப்பற்ற நிகழ்ச்சியாகும் என்று குறிப்பிட்டார். நவம்பர் 20ஆம் நாள் "பௌத்தத்தில் அகிம்சை' என்ற தலைப்பில் பேசுமாறு டாக்டர் அம்பேத்கர் கேட்டுக்கொள்ளப்பட்டார். ஆனால் மாநாட்டுப் பிரதிநிதிகளில் பெரும்பாலோர் அவரைப் 'புத்தரும் காரல் மார்க்சும்' என்ற தலைப்பில் பேசுமாறு வற்புறுத்தினர். அவ்வாறே பேசுவதாக அம்பேத்கரும் ஒத்துக்கொண்டார். 'பௌத்த நாடுகளில் உள்ள பௌத்த இளைஞர்கள் வணங்கப்படுவதற்குரிய வழிகாட்டியாகக் காரல் மார்க்சை மட்டுமே கருதுகின்றனர். அதனால் அந்த இளைஞர்களின் எதிர்காலம்பற்றி நான் அதிகம் கவலைப்படுகிறேன். புத்தரின் குறிக்கோளும் காரல் மார்க்சின் குறிக்கோளும் ஒன்றே! தனியுடைமைதான் துன்பங்களுக்கு அடிப்படை என்கிறார் காரல் மார்க்சு. அதன் விளைவாகத்தான் சுரண்டப்படுவதும், ஒடுக்கப்படுவதும், அடிமைப்படுத்தப்படுவதும் ஏற்பட்டன. புத்தரும் துக்கத்தை ஒழிக்க வேண்டும் என்றார். பௌத்தச் சமய நூல்களில் 'துன்பம்' என்பது சொத்து என்ற பொருளில்தான் வழங்கப்பட்டுள்ளது. எல்லாமே நிலையற்றவை என்பது புத்தரின் கோட்பாடு. அதனால் அங்கே சொத்துக்கான போராட்டம் இல்லை. பிக்குகள் தனியாகச் சொத்து வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவதில்லை. புத்தர் அவருடைய மதத்தைக் கடவுள் அல்லது ஆத்மா என்பதன் அடிப்படையில் அமைக்கவில்லை. எனவே சமூகத்தில் தனியாகச் சொத்து வைத்துக் கொள்வதற்கான உரிமையை மறுத்தல் என்ற கொள்கையை நடைமுறைப்படுத்தும்போது, தனியுடைமை ஒழிப்புப் பாதையில் புத்தர் கொள்கை இடையூறாக இருக்காது" என்று தன் உரையில் அவர் கூறினார்.

அம்பேத்கர் மேலும் தொடர்ந்து பேசியபோது, 'பௌத்தமும் கம்யூனிசமும் அவற்றின் கொள்கை நிறைவேற்றத்திற்காக மேற்கொள்ளும் வழிமுறைகளில் கடுமையான முரண்பாடு கொண்டுள்ளன. தனியுடைமையை ஒழிப்பதற்காகக் கம்யூனிசம் வன்முறை வழியைப் பின்பற்றுகிறது. பௌத்தம் அதனுடைய கொள்கையை அடைவதற்காக அகிம்சை முறையைக் கையாள்கிறது. மார்க்சு கூறியுள்ள வழிமுறை உடனடியாகத் பயனைத் தருகிறது. புத்தரின் வழிமுறை சோர்வடையச் செய்வதாயினும் அது வன்முறை இல்லாதது; இருப்பினும் உறுதியான நீடித்த விளைவைத் தருவது அதுவேயாகும். மனிதனின் உள்ளத்தையும் உலகின் மனப்போக்கினையும் திருத்தாத வரையில் இவ்வுலகைத் திருத்தியமைக்க முடியாது. மனந் திருந்திவிட்டால் அதன் பிறகு பிரச்சினையே

இருக்காது; அந்நிலையில் பெறப்படும் சாதனைகளும் நீடித்து நிற்கும். மார்க்சிய நெறி 'கட்டாயப் படுத்தல்' என்னும் அடித்தளத்தின்மீது இயங்குகிறது. இரஷ்யாவில் சர்வாதிகாரம் தோல்வியடையும்போது அரசாங்கத்தின் சொத்தைப் பங்கு போட்டுக் கொள்வதற்காக மக்கள் இரத்தம் சிந்தும் வகையில் தமக்குள் போரிட்டுக் கொள்வார்கள். மேலும் பௌத்த நெறி என்பது சனநாயக நெறிமுறையினதாகும்; அதே வேளையில் கம்யூனிச முறை சர்வாதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டிருப் பதாகும். ஆகவே பௌத்த நெறியே பாதுகாப்பானதும் உறுதியான துமாகும். பௌத்தத் துறவிகள், கிறித்தவப் பாதிரிகள் கையாளும் சில முறைகளைப் பின்பற்றிப் பௌத்த மக்களிடையே புத்த நெறியைப் பரப்பிட வேண்டும்' என்று கூறி அம்பேத்கர் தன் உரையை முடித்தார்.

'கடவுளும் பைபிளும் இல்லாமல் இவ்வுலகில் நல்லாட்சியை நடத்த முடியாது' என்று ஜார்ஜ் வாஷிங்டன் கூறினார். 'புத்தரும் அவருடைய தம்மமும் இல்லாமல் அமைதியாகவும் அறவழியிலும் இவ்வுலக மக்களால் வாழ முடியாது' என்று அம்பேத்கர் கருதினார்.

அம்பேத்கர் மீது கட்டட ஒப்பந்தக்காரர்கள் பம்பாய் உயர்நீதி மன்றத்தில் தொடுத்த வழக்கில் அம்பேத்கரின் சார்பில் பம்பாயைச் சேர்ந்த வழக்குரைஞர் கே.ஜெ. கலே வாதாடினார். கலே பம்பாயிலிருந்து அனுப்பிய தந்தியை ராட்டு காட்மண்டுவில் இருந்த அம்பேத்கருக்கு அனுப்பி வைத்தார். அம்பேத்கர் காட்மண்டுவி லிருந்து தில்லிக்குத் திரும்பும் வழியில், பனாரஸ் இந்துப் பல்கலைக் கழகத்திலும், காசி வித்தியா பீடத்திலும் அவருக்கே உரிய அறைகூவல் விடும் தன்மையில் உரையாற்றினார். அறிவை வெற்றி கொள்ளுவதில் அவருக்கு அழுத்தமான நம்பிக்கை இருந்தது. பண்டை நாளில் ஆதிசங்கரர் இந்து மதத்திற்கு உயிரூட்டியது போலவே பௌத்தத்திற்கு இப்போது தன்னால் உயிரூட்ட முடியும் என்று அம்பேத்கர் எண்ணினார். பனாரஸ் இந்துப் பல்கலைக்கழக மண்டபத்தில் அம்பேத்கர் ஆதிசங்கரரின் தத்துவம் குறித்து உரையாற்றினார். அப்போது ஆதிசங்கரரின் தத்துவ நூற்பாவில் கூறப்பட்டுள்ளவற்றை எடுத்துக்காட்டிப் பேசினார். 'பிரம்மம் சத்தியம்; ஜெகன் மித்தியம்' - (பரம்பொருள் அழியாதது; உலகம் அழியக்கூடியது) என்று ஆதிசங்கரரின் தத்துவம் கூறுகிறது. எல்லாவற்றிலும் பரம்பொருள் நிறைந்திருப்பது உண்மையானால் ஒரு பிராமணனும் ஒரு தீண்டப்படாதவனும் சமமாகத் தானே

இருக்க வேண்டும்? ஆனால் ஆதிசங்கரர் இக்கோட்பாட்டைச் சமூக வாழ்வில் நடைமுறைப்படுத்திக் காட்டவில்லை. வேதாந்த விவாதங்களுடன் மட்டும் இதை நிறுத்திக்கொண்டார். எல்லாவற்றிலும் கடவுள் நீக்கமற நிறைந்திருக்கிறார் என்ற தத்துவத்தை ஆதிசங்கரர் சமூக வாழ்வுக்கும் பொருத்திக் காட்டியிருந்தால், சமூக சமத்துவக் கொள்கையைப் பிரச்சாரம் செய்திருந்தால், இவ்வுலகம் ஒரு மாயை என்ற அவருடைய தவறான நம்பிக்கை ஒருபுறம் இருப்பினும், இத்தத்துவம் அறிவாழம் மிக்கதாகவும் மதிப்பு வாய்ந்ததாகவும் ஆகியிருக்கும்' என்று அம்பேத்கர் தன் உரையில் திறனாய்வு செய்தார்.

'மாணவமணிகளே! புருஷ சுத்தாவில் (Purusha Sukta) கற்பிக்கப்பட்டுள்ள வருண அடிப்படையிலான சமத்துவமின்மையைப் போற்றுகின்ற இந்துச் சாத்திரங்களைப் பின்பற்றப் போகிறீர்களா? அவ்வாறு பின்பற்றுவதன் மூலம் சமூகத்தில் உள்ள சமத்துவமின்மைக்கு மதமுத்திரையைக் குத்தப்போகிறீர்களா? அல்லது அரசியலமைப்புச் சட்டத்தில் வகுக்கப்பட்டுள்ள சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் முதலான கோட்பாடுகளின்படி நீங்கள் நடக்கப் போகிறீர்களா? அவ்வாறு நடப்பதன்மூலம் ஒரு குலத்துக்கு ஒரு நீதி என்ற அநீதியைக் கற்பிக்கும் இந்துச் சாத்திரங்களை நீங்கள் எதிர்க்கப் போகிறீர்களா?' என்று அம்பேத்கர் அவ்வுரையில் மாணவர்களை நோக்கி வினவினார்.

அதன்பின் அம்பேத்கர் பௌத்தப் புண்ணிய இடங்களை இரண்டாவது தடவையாகச் சென்று பார்த்துவிட்டுக் குசிநராவி லிருந்து புறப்பட்டு 1956 நவம்பர் 30ஆம் நாள் விமானம் மூலம் தில்லியை அடைந்தார். விமான நிலையத்திலிருந்து வீட்டிற்குத் திரும்பும் வழியில் ராட்டுவிடம் அம்பேத்கர் கேட்ட முதல் கேள்வி, சில நாட்களுக்கு முன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த அவருடைய நாயின் உடல்நிலை எப்படி இருக்கிறது என்பதேயாகும். அடுத்து, பம்பாய் உயர்நீதி மன்றத்தில் அவர்மீது தொடுக்கப்பட்டுள்ள வழக்குபற்றிக் கேட்டார்.

அம்பேத்கர் வீடு திரும்பியபின் வருத்தமுடனும் கவலையுடனும் மனத்தளர்ச்சியுடனும் காணப்பட்டார். திருமதி சவிதா அம்பேத்கரின் தந்தையும் சகோதரனும் டாக்டர் மௌலங்கரும் அம்பேத்கர் வீட்டிலேயே தங்கியிருந்தனர். மிகவும் களைப்புற்று இருந்ததால் அம்பேத்கர் ராட்டுவை அன்றிரவு தன் வீட்டிலேயே தங்குமாறு கேட்டுக்கொண்டார். ராட்டுவும் அவ்வாறே அம்பேத்

கரின் வீட்டில் அன்றிரவு தங்கினார். டிசம்பர் முதல்நாள் அன்று காலை 7-15 மணிக்கு அம்பேத்கர் கண் விழித்தார்; தேநீர் அருந்தினார்; புத்துணர்வுடன் காணப்பட்டார். அன்று மாலை மதுரா சாலையில் நடைபெற்ற ஒரு கண்காட்சியைக் காணச் சென்றார். அக்கண்காட்சியில் புத்தரின் கலைக்கூட அரங்கினை மிகுந்த ஆர்வமுடன் பார்த்தார். கண்காட்சியிலிருந்து வெளிவந்ததும் அவருடைய காரில் அமர்ந்து கொண்டார். அப்போது அம்பேத்கரின் நெருங்கிய ஆர்வலர் ஒருவர், புத்தர் சிலைகளின் தோற்றம் ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொருவிதமாக இருப்பது ஏன் என்று அம்பேத்கரிடம் கேட்டார். 'புத்தர் மகா பரிநிர்வாண நிலையை அடைந்த (இறந்த) பிறகு அறுநூறு ஆண்டுகள்வரை புத்தருடைய உருவ ஓவியமோ அல்லது உருவச்சிலையோ இல்லை. அதன் பிறகு யாரோ ஒருவர் புத்தரின் சிலையை அவருடைய கற்பனையில் நினைத்தவாறு வடிவமைத்தார். பின்னர் பௌத்தம் பரவியிருந்த எல்லா நாடுகளிலும் அந்தந்த நாடுகளில் நிலவிய அழகியல் நிலைகளுக்கு ஏற்ப, புத்தரின் சிலைகள் வடிக்கப்பட்டன' என்று அம்பேத்கர் விடை பகன்றார்.

வீட்டிற்குத் திரும்பும் வழியில் கன்னாட் பிளேஸில் இருந்த புத்தகக் கடை ஒன்றில் புதியதாக வந்துள்ள புத்தகங்களைப் பார்க்கச் சென்றார். அவற்றுள் சில நூல்களைத் தெரிவு செய்து வீட்டிற்கு அனுப்புமாறு கூறினார்.

1956 டிசம்பர் 2ஆம் நாள் அசோக் விகாரில் தலாய் லாமாவுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு நிகழ்ச்சியில் அம்பேத்கர் கலந்து கொண்டார். புத்தர் மகாபரிநிர்வாண நிலையை அடைந்து 2500 ஆண்டுகள் ஆவதையொட்டி புத்த கயாவில் நடைபெறவிருந்த 'குளிர்கால விழா'க்களில் கலந்து கொள்வதற்காகத் தலாய் லாமா இந்தியாவிற்கு வந்திருந்தார். அன்று மாலை அம்பேத்கர் அவருடைய வீட்டு முற்றத்தின் முன் இருந்த புல்வெளியில் அமர்ந்த வண்ணம் அவருடைய தொண்டர்கள் சிலருடன் உரையாடிக் கொண்டிருந்தார்; இரவு உணவையும் அங்கேயே உண்டார்; இரவு 10.30 மணிக்குப் பிறகு படுக்கச் சென்றார்; விரைவில் ஆழ்ந்து தூங்கிவிட்டார். அடுத்த நாள் - டிசம்பர் 3ஆம் நாள் மாலை உடல் சோர்வுற்றிருப்பதாக உணர்ந்தார்; அவருடைய மனைவி சவிதா அம்பேத்கரின் சகோதரர் பாலு கபீர் நிழற்படம் எடுக்க விரும்பியதால், அதற்குத் தேவையான நாற்காலிகளைக் கொண்டு சென்று புல்வெளியில் போடுமாறு அவருடைய பணியாளர்களிடம்

கூறினார். ஒரு குழுவினராக நிற்க வைத்துப் பாலு கபீர் எடுத்த அந்நிழற் படத்தில் திருமதி சவிதா அம்பேத்கர், டாக்டர் அம்பேத்கர், சவிதா அம்பேத்கரின் தந்தை கே.பி. கபீர், டாக்டர் மௌலங்கர் முதலானோர் இருந்தனர்.

அன்றிரவானதும் அம்பேத்கர் ஒரு கையால் தடியை ஊன்றிய வாறும் மறு கையை ராட்டுவின் தோளின்மீது போட்டவாறும் நடந்து சென்று நோயுற்றிருந்த அவருடைய வீட்டு வேலையாள் ஒருவரின் (மாலி சாதியைச் சேர்ந்தவர்) உடல் நலம் குறித்து உசாவச் சென்றார். முதியவரான அம் 'மாலி' மூன்று நாள்களாகக் காய்ச்சல், இருமலால் படுக்கையில் கிடந்தார். அவருடைய படுக்கையின் அருகில் அவருடைய மனைவி நின்றிருந்தார். தான் நோயாளியாகி விட்டதால் தன் வேலையை இழக்க நேரிடுமோ என்றும், தான் இறந்துவிட்டால் தன் மனைவி ஆதரவற்றவராகி விடுவாரே என்றும் அம்முதியவர் அஞ்சினார். படுக்கையில் படுத்திருந்த அம்முதியவர் தன் எசமானரான அம்பேத்கரைக் கண்டதும் முகத்தில் புன்னகை படர இரு கைக்கூப்பி வரவேற்றார். பின் முதியவரின் கண்கள் நீரால் குளமாயின. அவருடைய எசமானர் காட்டிய பேரன்பினால் முதியவரின் உள்ளம் உருகியது. பெருமூச்சு விட்டவாறே அழுகை தோய்ந்த குரலில், 'கடவுளே, உங்களை நேரில் அனுப்பி என்னை வாழ்த்திவிட்டார்; ஆனால், எசமானே, நான் உயிர் பிழைப்பேன் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. என் மனைவி என்ன ஆவாளோ...' என்று கூறி அதற்குமேல் பேசமுடியாமல் அம்முதியவர் இரங்கத்தக்கவாறு தேம்பித் தேம்பி அழுதார். அம்பேத்கர் அவருக்கு ஆறுதல் கூறினார். 'அழாதே! எல்லோரும் என்றேனும் ஒருநாள் சாகத்தான் போகிறார்கள். நானும் ஒருநாள் சாகத்தான் போகிறேன். பயப்படா மல் துணிவுடன் இரு; மருந்தை உட்கொள்; நான் மருந்து கொடுத்து அனுப்புவேன். உன் நோய் நீங்கி நீ நல்லபடியாக ஆகிவிடுவாய்' என்று ஆறுதல் கூறினார். பிறகு ராட்டுவை நோக்கி, 'இப்பெரியவர் சாவைப் பற்றி எப்படிப் பயப்படுகிறார் பார்த்தாயா?... ஆனால் நான் பயப்படவில்லை... சாவு எப்பொழுது வேண்டுமானாலும் வரட்டும்!' என்று கூறினார். அம்பேத்கரைக் கடந்த இரண்டு ஆண்டுகளாக நிழல்போல் தொடர்ந்து வந்துகொண்டிருந்த சாவு அம்பேத்கர் இவ்வாறு சவால்விட்டுக் கூறியதைக் கேட்டுக் கொண்டிருந்ததோ!

1956 டிசம்பர் *16*ஆம் நாள் பம்பாயில் அம்பேத்கர் அவருடைய தொண்டர்கள் பௌத்த மதத்தில் சேருவதற்கான சடங்கினை நடத்தி வைக்கும் பொருட்டு, டிசம்பர் 14ஆம் நாள்

பம்பாய்க்குப் புறப்பட்டுச் செல்வதற்காகத் தொடர் வண்டியில் பயணச்சீட்டுப் பதிவு செய்வது குறித்துத் தொடர் வண்டி நிலையம் சென்று விசாரித்து வருமாறு ராட்டுவிடம் கூறினார். அம்பேத்கர் அவருடைய நூலகத்திலிருந்து காரல் மார்க்சு எழுதிய 'டாஸ் கேபிடல்' (மூலதனம்) என்ற நூலை எடுத்தார். 'புத்தரும் காரல் மார்க்சும்' என்று அவர் எழுதிக் கொண்டிருந்த நூலின் கடைசி அத்தியாயத்தை அன்றே எழுதி முடித்தார். அந்நூலுக்கான கட்டுரையைத் தட்டச்சு செய்வதற்காகக் கொடுத்தார்.

1956 டிசம்பர் 4ஆம் நாள் அம்பேத்கர் மாநிலங்கள் அவையில் சிறிது நேரம் அமர்ந்திருந்தார்; மாநிலங்கள் அவையின் வராந்தாவில் (Lobby) அமர்ந்து அம்பேத்கர் சிலருடன் பேசிக்கொண்டிருந்தார். இதுதான், நாடாளுமன்றத்திற்கு, அம்பேத்கரின் கடைசி வருகையாக இருக்கும் என்று எவரும் நினைத்துப் பார்க்கவுமில்லை.

அன்று மாலை அவர் சொல்லச்சொல்ல இரண்டு முக்கியக் கடிதங்கள் எழுதப்பட்டன. ஒரு கடிதம் ஆச்சாரியா பி.கே. அட்ரே வுக்கும், மற்றொரு கடிதம் எஸ்.எம். ஜோஷிக்கும் எழுதப்பட்டது. இவ்விருவரும் மகாராட்டிரத்தில் ஆளும் கட்சியான காங்கிரசுக்குச் சட்டசபையில் சிறந்த எதிர்க்கட்சித் தலைவர்களாக இருந்தனர்; சம்யுக்த மகாராட்டிரத்தை அமைக்க வேண்டும் என்ற போராட்டத் தில் முன்னணித் தலைவர்களாகவும் இவர்கள் இருந்தனர். இவர்கள் இருவரும் அம்பேத்கர் தொடங்கவிருந்த குடியரசுக் கட்சியில் சேர வேண்டும் என்பதே அம்பேத்கர் இவர்களுக்குக் கடிதம் எழுதியதன் நோக்கமாகும். பாரிஸ்டரான எம்.பி. சமார்த்தாவுக்கும் அவர் கூறிட மற்றவர் எழுதிய கடிதம் ஒன்று அனுப்பப்பட்டது. அம்பேத்கர் பம்பாயில் தங்குவதற்காகச் சமார்த்தாவின் தம்பியினுடைய வீடு கிடைக்குமா என்று அக்கடிதத்தில் கேட்டு எழுதியிருந்தார்.

அம்பேத்கரும் அவருடைய குழுவினரும் *1956* டிசம்பர் 14ஆம் நாள் பம்பாய்க்குச் செல்வதற்காகப் பயண ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் அப்பயண ஏற்பாடு மாற்றியமைக் கப்பட்டது. திருமதி சவிதா அம்பேத்கரின் தந்தை, சகோதரர், மற்றும் ஜதாவ் முதலானோர் டிசம்பர் 4ஆம் நாள் மாலை தொடர் வண்டியில் பம்பாய்க்குப் புறப்பட்டுச் சென்றனர். தொடர் வண்டிப் பயணத்தைத் தன்னால் தாங்கிக் கொள்ள முடியாது என்று அம்பேத்கர் கருதியதால் டிசம்பர் 14ஆம் நாள் விமானத்தில் பம்பாய்க்குச் செல்வதென முடிவு செய்தார். அன்றிரவு ஒன்றரை மணி வரை ராட்டு தட்டச்சு வேலையைச் செய்துவிட்டு

அம்பேத்கரின் இல்லத்திலேயே தங்கிவிட்டார். டிசம்பர் 5ஆம் நாள் காலை முன்னதாகவே எழுந்துவிட்ட ராட்டு அம்பேத்கர் இன்னும் தூங்கிக்கொண்டிருப்பதைக் கண்டார். அம்பேத்கர் காலை எட்டேமுக்கால் மணிக்கு எழுந்தார். ராட்டு அம்பேத்கரிடம் விடைபெற்றுக்கொண்டு மிதிவண்டியில் அவருடைய அலுவலகத் திற்குச் சென்றார். அலுவலகத்திற்குச் செல்லும் வழியிலிருந்த ஓர் உணவு விடுதியில் உணவு கொண்டார்.

II

1956 டிசம்பர் 5ஆம் நாள் பகல் ஒன்றரை மணிக்கு, கடையில் சில பொருட்களை வாங்குவதற்காக, குடும்ப மருத்துவரான டாக்டர் மௌலங்கருடன் சவிதா அம்பேத்கர் வெளியே சென்றார். அவர்கள் போனபிறகு நீண்ட நேரங்கழித்து, அம்பேத்கர் அழைப்பு மணியடித்து அவருடைய மனைவி வீட்டிற்கு வந்துவிட்டாரா என்று இரண்டு மூன்று தடவை கேட்டார். ஆனால் அவர் அதுவரையில் திரும்பவில்லை. சமையல்காரர் வீட்டின் மின் விளக்குகளைப் போட்டார். அம்பேத்கரைக் குளியல் அறைக்கு அழைத்துச் சென்றார். பிறகு அம்பேத்கர் தேநீர் அருந்தினார். மீண்டும் அம்பேத்கர் அழைப்பு மணியை அடித்தார். அவருடைய முகம் திடீரென்று சிவந்து காணப்பட்டது. ராட்டு மாலை 5.30 மணிக்கு அம்பேத்கரின் வீட்டிற்கு வந்தார்; அச்சமயம் அம்பேத்கர் பெரிதும் மனங்குலைந்திருப்பதைக் கண்டார். தட்டச்சு செய்வதற் கெனச் சிலவற்றை அம்பேத்கர் ராட்டுவிடம் கொடுத்தார். அப்போ துதான் சவிதா அம்பேத்கர் டாக்டர் மௌலங்கருடன் வீட்டிற்குள் நுழைந்தார். சவிதா அம்பேத்கர் அம்பேத்கரின் அறைக்குள் மெல்ல எட்டிப் பார்த்தார். சினமுடன் இருந்த அம்பேத்கர் அவரைக் கூரிய கடுஞ்சொற்களால் கடிந்தார். அம்பேத்கரைச் சமாதானப்படுத்துமாறு ராட்டுவிடம் சவிதா அம்பேத்கர் கேட்டுக்கொண்டார்.

அன்றிரவு எட்டுமணியளவில் அம்பேத்கரின் சினம் ஓரளவு தணிந்தது. முன்னரே சந்திக்க வருவதற்கான ஏற்பாட்டைச் செய்து கொண்டிருந்தவாறு சமண சமயத் தலைவர்கள் அடங்கிய குழுவினர் அப்போது அம்பேத்கரைக் காண வந்தனர். அக்குழு வினரை அடுத்த நாளைக்கு வரச் சொல்லலாமா என்று அம்பேத்கர் எண்ணிக் கொண்டிருந்தார்; ஆனால் அக்குழுவினர் வந்துவிடவே அவர்களைச் சந்திப்பதாகக் கூறினார். இருபது நிமிடங்கள் கழித்து அம்பேத்கர் குளியலறைக்குச் சென்றார். ராட்டுவின் தோள்மீது கையைப் போட்டவாறே வரவேற்பறையிலிருந்து வெளியே வந்து சோபாவில் அமர்ந்து கண்களை மூடியவண்ணம் இருந்தார்.

அம்பேத்கருக்கு மரியாதை தெரிவிக்கும் தன்மையில் சமணத் தலைவர்கள் எழுந்து நின்றனர்; பின் அமர்ந்தனர். சில மணித்துளி கள் அங்கே பேரமைதி நிலவியது. சமணத் தலைவர்கள் அம்பேத்கரின் முகத்தைக் கூர்ந்து நோக்கியவண்ணம் இருந்தனர். பிறகு அம்பேத்கர் தன் தலையைச் சிறிது நிமிர்த்தி அவர்களுடைய வருகையின் நோக்கம் என்ன என்று கேட்டார். மரியாதை காட்டும் மரபுப்படி அம்பேத்கரின் உடல்நலம் குறித்து அவர்கள் உசாவினர். 'ஏதோ இருக்கிறேன்...' என்று அம்பேத்கர் பதிலளித்தார். பௌத்தம்-சமணம் பற்றிய சில பிரச்சினைகள் குறித்து அவர்கள் சிறிது நேரம் விவாதித்தனர். சமணத் தலைவர்கள் மனநிறைவடைந்த தாகத் தெரிந்தது. டாக்டர் அம்பேத்கரிடம் 'ஜைனமும் புத்தமும்' (Jain aur Budha) என்ற நூலை அன்பளிப்பாக வழங்கினர். அடுத்த நாள் காலை நடைபெறவுள்ள நிகழ்ச்சியொன்றில் அம்பேத்கர் கலந்துகொள்ள வேண்டும் என்று அவர்கள் வற்புறுத்தினார்கள்; அப்போது அங்கு அவர்களுடைய முனியுடன் அம்பேத்கர் சிலவற்றைக் குறித்துப் பேச வேண்டும் என்றும் கேட்டுக்கொண்ட னர். தன்னுடைய உடல் நலம் இடந்தருமாயின் அந்நிகழ்ச்சியில் கலந்துகொள்வதாக அவர்களிடம் அம்பேத்கர் கூறினார். அதன்பின் அவர்கள் அம்பேத்கரின் இல்லத்திலிருந்து புறப்பட்டுச் சென்றனர். அம்பேத்கர் வாழ்வில் கடைசியாக அவரைச் சந்தித்தவர்கள் அச்சமணத் தலைவர்களேயாவர். அம்பேத்கர் சமணத் தலைவர்களு டன் பேசிக்கொண்டிருந்தபோது - அவர் வீட்டில் தங்கிய கடைசி விருந்தாளியான - டாக்டர் மௌலங்கர் அம்பேத்கரின் இல்லத்தி லிருந்து புறப்பட்டு அன்றிரவு விமானம் மூலம் பம்பாய்க்குச் சென்றார்.

ராட்டு அம்பேத்கரின் கால்களை அமுக்கிவிட்டுக் கொண்டிருந் தார். தன்னுடைய தலையில் எண்ணெய் தடவித் தேய்க்குமாறு ராட்டுவிடம் அம்பேத்கர் கூறினார். ராட்டுவும் அவ்வாறே செய்தார். அதனால் சிறிது புத்துணர்ச்சி பெற்றதாக அம்பேத்கர் உணர்ந்தார். திடீரென மெல்லிய இனிய இசைபோன்ற குரல் கேட்டது. அது அம்பேத்கரின் பாடுங்குரல் என்பதை உடனே ராட்டு அறிந்து கொண்டார். அம்பேத்கர் கண்களை மூடியவண்ணம் ஒரு பாடலைப் பாடிக் கொண்டிருந்தார்; சோபாவின் கைப்பிடிமீது அம்பேத்கரின் வலது கைவிரல்கள் தாளம் போட்டுக் கொண்டிருந் தன. அவருடைய பாட்டுக்குரல் மெல்லமெல்ல தெளிவாகவும் சத்தமாகவும் கேட்டது. புத்தம் சரணம் கச்சாமி என்ற வரி தெளிவாகவும் உறுதியாகவும் ஒலித்தது. தனக்குப் பிடித்தமான

ஒரு பாடலைக் கிராமபோனில் போடுமாறு ராட்டுவிடம் கூறினார். பதிவு செய்யப்பட்டு ஒலித்துக்கொண்டிருந்த அப்பாடலின் இசையில் பக்தி உணர்வால் அம்பேத்கர் தோய்ந்திருந்தார்.

அச்சமயத்தில் சமையற்காரர் சுதாமா வந்து இரவு உணவு தயாராகிவிட்டது என்று தெரிவித்தார். கொஞ்சம் சோறு தவிர வேறு எதுவும் வேண்டாம் என்று அம்பேத்கர் கூறினார். அம்பேத்கரின் சிந்தனை இன்னும் அப்பாடலிலேயே படர்ந்திருந்தது. சமையற்காரர் மீண்டும் வந்தார். அம்பேத்கர் உண்ணும் அறைக்குச் செல்வதற்காக எழுந்தார். ராட்டுவின் தோள்மீது கைபோட்டுக்கொண்டு நடந்து சென்று அவருடைய நூலகத்தில் பல அலமாரிகளிலிருந்து சில நூல்களை எடுத்தார். அங்கிருந்த மற்ற நூல்களையும் ஒருமுறை நோக்கினார். அவர் அலமாரிகளிலிருந்து எடுத்த நூல்களை அவருடைய படுக்கைக்கு அருகில் உள்ள மேசைமீது வைக்குமாறு ராட்டுவிடம் கூறினார். தன்னுடைய வாழ்நாள் முழுவதும் சிறந்த உண்மையான நண்பர்களாக அவர் கருதிய நூல்களை மீண்டும் ஒருமுறை கூர்ந்து நோக்கினார்; பிறகு உண்ணும் அறைக்குள் சென்றார். சமையலறையைப் பார்த்தவாறு போடப்பட்டிருந்த நாற்காலியில் ராட்டுவின் உதவியுடன் அமர்ந்தார்; சிறிதளவே உண்டார். தன்னுடைய தலையை நீவிவிடுமாறு ராட்டுவிடம் கூறினார்; தன் கையில் இருந்த தடியை ஊன்றியவாறு 'உன்னுடைய சிந்தனைகள் கடல்போல் ஆழமானது' என்ற கபீரின் பாடலைப் பாடியவாறே எழுந்தார். அப்பாடலைப் பாடிக்கொண்டே சமையலறையை ஒட்டியிருந்த படுக்கை அறையினுள் சென்றார்.

படுக்கையில் அமர்ந்ததும் இருபது மணித்துளிகளுக்கு முன் நூலகத்திலிருந்து அவர் தெரிவு செய்து எடுத்த நூல்களை ஒவ்வொன்றாகப் புரட்டினார். பிறகு அவற்றை மேசை மீது வைத்தார்.

படுக்கையில் படுத்தார்; தன்னுடைய கால்களை மெதுவாக அழுத்திவிடுமாறு ராட்டுவிடம் கூறினார். அப்போது மணி 11.15 ஆகியிருந்தது. ராட்டு அதற்கு முந்திய இரவுகூட அவருடைய வீட்டிற்குச் செல்லவில்லை. அம்பேத்கரின் கண்களைத் தூக்கம் கப்பிக் கொண்டிருப்பதைக் கண்டதும் வீட்டிற்குப் போகலாமே என்று ராட்டு எண்ணினார்; எனவே அம்பேத்கரின் கவனத்தை ஈர்ப்பதற்காக மேசைமீதிருந்த நூல்களை இடம்மாற்றி வைத்தார்.

அம்பேத்கர் நிமிர்ந்து ராட்டுவைப் பார்த்தார். ராட்டு அம்பேத்கரிடம் விடை பெற்றுக்கொண்டார்; வீட்டிற்குச் செல்வதற்காக மிதிவண்டியை எடுத்தார். ராட்டுவுக்கோ கடும்பசி; அதனால் அவர் சோர்ந்திருந்தார். தன்னுடைய மனைவி தன் வரவு நோக்கி காத்திருப்பாரே என்றும் எண்ணினார். ராட்டு அம்பேத்கர் வீட்டின் வெளிவாயிலைச் சென்றடைவதற்கு முன்னரே அம்பேத்கரின் வீட்டு வேலையாள் சுதாமா பின்தொடர்ந்து ஓடிவந்து, பாபாசாகிப் திரும்பவும் அழைப்பதாகக் கூறினார். ராட்டு அம்பேத்கரின் படுக்கையறைக்கு வந்தார். 'புத்தரும் அவருடைய தம்மமும்' என்ற நூலுக்காக அவர் எழுதியுள்ள முன்னுரை மற்றும் அறிமுகவுரை ஆகியவற்றின் தட்டச்சு செய்யப்பட்ட நகல்களையும் ஆச்சாரியா அட்ரே, எஸ்.எம். ஜோஷி ஆகிய இருவருக்கும் அனுப்புவதற்காகத் தட்டச்சு செய்யப்பட்டுள்ள கடிதங்களையும், பர்மா அரசுக்கு அனுப்புவதற்காக எழுதியுள்ள கடிதத்தையும் அவருடைய அலமாரியிலிருந்து கொண்டுவந்து அவருடைய மேசைமீது வைக்குமாறு ராட்டுவிடம் அம்பேத்கர் கூறினார். ராட்டு அம்பேத்கர் கூறிய கடிதங்களையும், அறிமுகவுரை மற்றும் முன்னுரையின் தட்டச்சு நகல்களையும் எடுத்துவந்து அம்பேத்கரின் படுக்கைக்கு அருகில் இருந்த மேசைமீது வைத்துவிட்டு அதன்பின்னர் அவருடைய வீட்டிற்குப் புறப்பட்டார். 'அம்முன்னுரையையும் அறிமுகவுரையையும், இரவு படித்துப் பார்ப்பேன்; அட்ரேவுக்கும் ஜோஷிக்கும் பர்மிய அரசுக்கும் நாளைக்கே அக்கடிதங்களை அனுப்ப வேண்டியிருப்பதால் அவற்றையும் படித்துப் பார்ப்பேன்' என்று அம்பேத்கர் ராட்டு புறப்படும்முன் கூறினார். அம்பேத்கரின் படுக்கைக்கு அருகில் சுதாமா வழக்கம்போல் தர்மாஸ் குடுவையில் காபியையும், இனிப்புகள் கொண்ட பாத்திரத்தையும் வைத்தார். கடந்த எட்டு ஆண்டுகளாக அம்பேத்கரின் உயிரைக் காப்பாற்றுவதற்காக அரும்பாடுபட்டு வந்த மருத்துவரான அவருடைய மனைவியோ, அம்பேத்கரின் பணியாளர்களோ மரணம் அம்பேத்கரின் படுக்கையிலேயே காத்துக்கொண்டிருந்ததை மிகச்சிறிய அளவில்கூட அறிந்திருக்கவில்லை.

1956 டிசம்பர் 6ஆம் நாள் காலை சவிதா அம்பேத்கர் வழக்கம்போல் எழுந்தார். 6.30 மணியளவில் அம்பேத்கரின் படுக்கைமீது தன் பார்வையைச் செலுத்தினார். அம்பேத்கரின் கால் திண்டுமீது இருப்பதைக் கண்டார். வழக்கம்போல் தோட்டத்தைச் சுற்றிவிட்டு வந்தபிறகு எப்போதும்போல் அம்பேத்கரை எழுப்புவதற்காகச் சென்றார். அம்பேத்கரை எழுப்பிட முயன்றார்.

ஆனால் அவருடைய கணவர் இவ்வுலக வாழ்வை விட்டுப் பிரிந்துவிட்டார் என்பதைக் கண்டு பேரதிர்ச்சியடைந்தார். ராட்டுவை அழைத்து வருமாறு தன் காரை அனுப்பினார்; ராட்டுவும் வந்து சேர்ந்தார்; ராட்டுவைக் கண்டதும் சவிதா அம்பேத்கர், 'பாபா சாகிப் இவ்வுலகத்தைவிட்டுப் போய்விட்டாரே!' என்று கதறிக் கொண்டு நிலைகுலைந்து சோபாவில் வீழ்ந்தார். அம்பேத்கர் இறந்துவிட்டார் என்ற செய்தியை ராட்டுவால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. நடுங்கும் குரலில், 'என்ன! பாபா சாகிப் இறந்து போய்விட்டாரா?' என்று கூறியவாறே கதறினார். மூச்சு நின்று விட்ட அம்பேத்கரின் இதய ஓட்டத்தைத் தூண்டுவதற்காக அவருடைய கைகால்களை அழுந்தத் தேய்த்தும் அப்படியும் இப்படியுமாக அசைத்தும், அவருடைய உதிரவிதானத்தை மேல் நோக்கி அழுத்தியும் பலரும் செய்த முயற்சிகளையும் அவருடைய வாயில் ஒரு தேக்கரண்டி பிராந்தியை ஊற்றியதையும் கண்ட ராட்டுவால் அக்காட்சியைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. ஆனால் அவ்வாறு செய்யப்பட்ட முயற்சிகள் பயன்தரவில்லை. அம்பேத்கர் அவருடைய தூக்கத்திலேயே இறந்துவிட்டார்.

நீரிழிவு நோய் காரணமாக அவருடைய நரம்பு மண்டலம் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது. கடந்த இரண்டு ஆண்டுகளாக மிகவும் மெலிவுற்று வந்த அவருடைய இருதயம் துடித்து இயங்க இயலாமல் நின்றுவிட்டது.

தன் கணவரின் இறப்பைத் தாங்க முடியாமல் சவிதா அம்பேத்கர் ஓலமிட்டு அழுதார். 'ஓ! பாபா சாகிப், இதோ நான் வந்திருக்கிறேன், எனக்கு வேலை கொடுங்கள்' என்று ராட்டு துடிதுடித்தழுதார்.

சிமன்லால் ஷா என்பவர் யோகம், மற்றும் ஆன்மீகம் பற்றி ஆழ்ந்து கற்றிருந்ததால் அம்பேத்கரின் நெருங்கிய நண்பரானார்; அவர் அம்பேத்கரின் இல்லத்திலேயே தங்கியிருந்தார்.

அம்பேத்கர் இறப்பதற்குப் பத்தாண்டுகளுக்கு முன், 1946இல், "தீண்டப்படாத வகுப்பு மக்களின் முன்னேற்றத்திற்காக எவ்வளவு காலத்திற்கு என்பணி தேவைப்படுகிறதோ அவ்வளவு காலத்திற்கு என் ஆயுள் நீடிக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது" என்று கூறியிருந்தார். இந்த நம்பிக்கைதான் ஏமாற்றங்களுக்கும் உடல்நலக் குறைவுகளுக்கும் நடுவிலுங்கூட அம்பேத்கர் தொடர்ந்து பணிபுரிவதற்கு உந்துவிசையாக இருந்தது. 'அதிக

நீண்ட ஆயுளைத் தராவிடினும் என்னுடைய பணியை முடிப்பதற் குத் தேவையான காலம்வரையிலேனும் நான் உயிர் வாழ்வதற்கு அருள்புரிக' என்று அம்பேத்கர் ஆண்டவனிடம் பிரார்த்தனை செய்ததுண்டு. சிறந்த மனிதன் தன்னுடைய குறிக்கோளை அடைந்ததும் இறந்துவிடுகிறான் என்று அம்பேத்கர் எண்ணியிருந்த மையால் கடவுளிடம் இவ்வாறு வேண்டியிருக்கலாம். அவருடைய தலைமைத் தளபதியாகத் திகழ்ந்த பாவ்ராவ் கெய்க்வாடுக்கு நான்கு ஆண்டுகளுக்குமுன் எழுதிய கடிதத்தில், 'நான் நீண்ட காலம் உயிர் வாழமாட்டேன்; என் மறைவால் ஏற்படக்கூடிய நிலைமை யைச் சமாளிப்பதற்கு உங்களை நீங்கள் தயார்படுத்திக் கொள்ளுங் கள்' என்று குறிப்பிட்டிருந்தார்.

III

பேரதிர்ச்சி தரும் அம்பேத்கரின் மறைவுச் செய்தியை, ராட்டு, அம்பேத்கரின் மிக நெருங்கிய நண்பர்களுக்கும், மற்றும் மத்திய அரசின் அமைச்சர்களுக்கும் தெரிவித்தார். அம்பேத்கர் இறந்துவிட்ட செய்தி காட்டுத்தீப் போல் தில்லி முழுவதும் பரவியது.

அம்பேத்கரின் பற்றாளர்களும் தளபதிகளும் தொண்டர்களும் தில்லியில் அலிப்பூர் சாலையில் 26ஆம் எண்ணில் இருந்த அவருடைய இல்லத்திற்கு விரைந்தோடினர். தங்களின் மாபெரும் தலைவரை, கடைசியாக ஒருமுறைக் காணவேண்டும் என்பதற்காக, பெருந்திரளாக மக்கள் அவருடைய இல்லத்தின் முன் கூடிவிட்டார் கள். அம்பேத்கருக்கு மிகவும் நெருக்கமானவர்களாகப் பம்பாயில் இருந்தவர்களுக்குப் பம்பாய் சித்தார்த்தா கல்லூரி மூலம் அம்பேத்க ரின் இறப்புச் செய்தி தெரிவிக்கப்பட்டது; அன்றிரவு அம்பேத் கரின் உடல் பம்பாய்க்குக் கொண்டுவரப்படவுள்ளது என்பதும் அவர் களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

அயல்நாட்டினரிடம் அம்பேத்கரை அறிமுகப்படுத்த நேர்ந்த போதெல்லாம், 'என் அமைச்சரவையில் உள்ள ஒரு மாணிக்கம்' என்று பிரதமர் நேரு கூறுவதுண்டு. நாடாளுமன்ற வராந்தாவிலோ அல்லது மற்ற நிகழ்ச்சியிலோ அம்பேத்கரைச் சந்திக்கும் போதெல் லாம் அம்பேத்கரின் உடல் நலன் குறித்துக் கனிவுடன் நேரு உசாவி வந்தார். அத்தகைய நேரு இப்போது அம்பேத்கரின் உடலைக் காண அவருடைய இல்லத்திற்கு விரைந்தார்; சவிதா அம்பேத்கரிடம் பரிவுடனும் கவலையுடனும் துக்கம் விசாரித்தார். அம்பேத்கரின் இறுதிச் சடங்கிற்காக அவருடைய தொண்டர்கள்

செய்ய விரும்பும் ஏற்பாடுகள் பற்றிக் கேட்டறிந்தார். உள்துறை அமைச்சர் கோவிந்த வல்லப பந்த், செய்தித்துறை அமைச்சர் ஜெகஜீவன் ராம், மாநிலங்கள் அவையின் துணைத்தலைவர் முதலானோர் நேரில் வந்து மறைந்த தலைவருக்குத் தங்கள் இறுதி அஞ்சலியைச் செலுத்தினார்கள். அம்பேத்கரின் உடலைப் பம்பாய்க்கு எடுத்துச்செல்ல வேண்டியிருப்பது பற்றித் தெரிவிக்கப் பட்டபோது, அம்பேத்கரின் உடலை விமானத்தின்மூலம் எடுத்துச் செல்ல ஜெகஜீவன்ராம் ஏற்பாடு செய்தார்.

இதற்குள் ஆயிரக்கணக்கான மக்கள் அலிப்பூர் சாலையில் கூடிவிட்டனர். அச்சாலையைச் சுற்றியிருந்த பகுதி முழுவதிலும் போக்குவரத்து நின்றுவிட்டது. அம்பேத்கரின் உடல் ஒரு வண்டியில் அமைக்கப்பட்டிருந்த மேடைமீது வைக்கப்பட்டது. 'பாபா சாகிப் புகழ் நீடூழி வாழ்க' போன்ற முழக்கங்களுடன் தில்லியில் அவருடைய இறுதி ஊர்வலம் புறப்பட்டது. அந்த ஊர்வலம் சென்ற வீதிகள் நெடுகிலும் மக்கள் வரிசையாக நின்று தலைகளைத் தாழ்த்தி அப்பெருந்தலைவருக்கு மரியாதை செய்தனர். ஊர்வலம் தில்லி விமான நிலையத்தை அடைய அய்ந்து மணி நேரமாயிற்று. அப்போது மணி இரவு ஒன்பது. நேரு ஒரு தனித் தூதுவர் மூலம் அனுப்பிய மலர் வளையம் அம்பேத்கரின் உடல்மீது வைக்கப்பட்டது. மக்களவை மற்றும் மாநிலங்கள் அவையின் செயலாளர்கள் மிகச்சிறந்த நாடாளுமன்றச் சனநாயக வாதியான அம்பேத்கரின் உடலுக்கு மாலை அணிவித்தனர். நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும், முன்னணி வழக்கறிஞர்க ளும், சிறந்த அறிஞர்களும் மிக உயர்ந்த அறிஞராகவும் அரசியல் மேதையாகவும் திகழ்ந்த அம்பேத்கருக்குத் தங்கள் இறுதி மரியாதையைச் செலுத்தினார்கள். அம்பேத்கரின் உடலைச் சுமந்து கொண்டு இரவு 9.30 மணிக்கு விமானம் பம்பாய்க்குப் புறப்பட்டது. சங்கரானந்த் சாஸ்திரி, பிக்கு ஆனந் கௌசல்யாயன், சவிதா அம்பேத்கர், ராட்டு, சுதாமா, சங்கர்லால் சாஸ்திரி முதலானோரும் மற்றும் சிலரும் அம்பேத்கரின் உடலுடன் விமானத்தில் வந்தனர்.

பம்பாய் சாந்தா குருஸ் விமான நிலையத்தில் டிசம்பர் 7 விடியற்காலை 3 மணிக்கு அம்பேத்கரின் பூத உடலை ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருந்து பெற்றுக் கொண்டனர். பம்பாய் தாதர் பகுதியில் இருந்த அவருடைய இல்லமான இராஜ கிரகத்திற்கு அமைதியான ஊர்வலமாக அவருடலை எடுத்துச்

சென்றனர். தங்களுடைய விடுதலை வீரரை, கடைசியாக ஒருமுறை காண்பதற்காக, இலட்சக்கணக்கான மக்கள் திரண்டுவிட்டனர்; அதற்காகப் பத்துமணி நேரத்திற்கு மேல் வரிசையில் காத்திருந்தனர். பல அரசியல் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களும் தொழிற்சங்கத் தலைவர்களும் இராஜ கிரகத்திற்கு வந்து அம் மாபெரும் தலைவருக்குத் தங்கள் மரியாதையைச் செலுத்தினார்கள். பம்பாய் நகரமே துக்கத்தில் மூழ்கியிருந்தது. டிசம்பர் 7ஆம் நாள் காலை பம்பாய்த் தொழிற்சாலைகள், துறைமுகங்கள், இரயில்வே பணி மனைகள், நெசவாலைகள் அனைத்தும் மூடப்பட்டன; பம்பாய் நகராட்சியின் துப்புரவுத் தொழிலாளர்கள் அன்று துக்கம் அனுசரித் துப் பணிக்கு வரவில்லை; பள்ளிகள், கல்லூரிகள், திரையரங்குகள் ஆகியவை மூடப்பட்டன. மகாராட்டிரத்தில் ஷோலாப்பூர், நாகபுரி போன்ற நகரங்களில் தன்னெழுச்சியாகக் கதவடைப்புகளும் மவுன ஊர்வலங்களும் நடந்தன. அகமதாபாத்திலும் நெசவாலைகள் மூடப்பட்டன. அம்பேத்கர் இறந்த அதிர்ச்சியால் பலர் நிலைகுலைந் தனர்; எண்ணற்றவர் மயங்கி வீழ்ந்தனர்.

டிசம்பர் 7 நண்பகல்வாக்கில் இறுதி ஊர்வலத்திற்கான ஏற்பாடுகள் அனைத்தும் செய்து முடிக்கப்பட்டன. மலர்களாலும், மலர் வளையங்களாலும் அலங்கரிக்கப்பட்ட வண்டியின்மீது அம்பேத்கரின் உடல் வைக்கப்பட்டது. அம்பேத்கரின் தலைக்கு அருகில் புத்தரின் சிறிய வடிவிலான சிலை ஒன்று வைக்கப்பட்டிருந் தது; அவருடைய உடலைச் சுற்றிலும் எரிந்துகொண்டிருந்த மெழுகுவத்திகள் வைக்கப்பட்டிருந்தன. வண்டியின் நான்கு மூலைகளிலும் சாம்பிராணி புகைந்து கொண்டிருந்தது. பகல் ஒன்றரை மணிக்கு ஊர்வலம் புறப்பட்டது. இறுதி ஊர்வலம் நத்தை நகருவதுபோல் - பின்னாளில் டாக்டர் பாபா சாகிப் அம்பேத்கர் சாலை என்று பெயரிடப்பட்ட - வின்சட் சாலை, போய்பாவ்தி, எல்ஃபின்ஸ்டன் பாலம், சயானி சாலை, கோகலே சாலை ஆகியவற்றின் வழியாக தாதர் இந்து இடுகாட்டை நோக்கிச் சென்றது. வடக்கு பம்பாய் முழுவதும் அய்ந்து மணிநேரம் போக்குவரத்து முற்றிலுமாக நின்றுவிட்டது. இறுதி ஊர்வலத்தின் வழிநெடுகிலும் மக்கள் வரிசையாக நின்றிருந்தனர். மக்கள் மரங்களின் உச்சியில் ஏறி அம்மாமனிதரின் உடலைப் பார்க்க முயன்றனர். பக்கத்து மாவட்டங்களிலிருந்து நூற்றுக்கணக்கில் வந்திருந்த மக்கள் இரண்டு மைல் நீள இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். அம்பேத்கரின் உடலைச் சுமந்துகொண்டு சென்ற வண்டியின்மீது மக்கள் பூவிதழ்களையும் மலர்

தேம்பித்தேம்பி அழச்செய்தது; அவர்களின் கண்கள் கண்ணீர்க் குளங்களாயின.

அநீதியை, ஒடுக்கு முறையை, சமத்துவமின்மையை எதிர்த்துப் போராடியவர் அம்பேத்கர். 'அவர் இந்து மதத்தை எதிர்த்துப் போராடவில்லை; ஆனால் அதைச் சீர்திருத்திட முயன்றார்' என்று அட்ரே அவருடைய உரையில் குறிப்பிட்டார்.

பம்பாய் மாகாணச் சட்டசபையின் தலைவர் எஸ்.எல். சிலம், பம்பாய் மாகாண அரசின் தலைமைச் செயலாளர், சவிதா அம்பேத்கர், அம்பேத்கரின் தமையனார் மகன் முகுந்தராவ் அம்பேத்கர், ராவ்பகதூர் போலே, அம்பேத்கரின் தளபதிகளான பி.எஸ். கெய்க்வாடு, ஆர்.டி. பந்தாரே, பி.சி. காம்ளே, பி.டி. போரலே, அம்பேத்கரின் நெருங்கிய தோழரான எம்.வி. தாண்டே முதலானோர் இறுதிச் சடங்கு நிகழ்ச்சியின்போது அங்கு இருந்தனர்.

1956 டிசம்பர் 7ஆம் நாள் அம்பேத்கரின் பூத உடல் எரியூட்டப்பட்டு மறைவுற்றது. அதே நாளில்தான் புத்தரின் 2500ஆவது ஆண்டு பிறந்த நாள் விழாவை ஒட்டி எட்டு நாட்கள் நடைபெற்ற நிகழ்ச்சிகள், சாஞ்சியில் முடிவுற்றன என்பது குறிப்பிடத்தக்கதோர் ஒற்றுமையான நிகழ்ச்சியாகும்.

IV

அம்பேத்கரின் மறைவு கருதி நாடு முழுவதும் துக்கம் அனுசரிக்கப்பட்டது. அம்பேத்கரின் மறைவால் இந்தியா தன் சிறந்த புதல்வர்களில் ஒருவரை இழந்துவிட்டது என்று எல்லாக் கட்சிகளும் கருத்துத் தெரிவித்தன. கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக நாட்டின் நலன்களைப் பற்றித் தீர்மானிக்கின்ற செயல்பாடுகளில் பல துறைகளிலும் இன்றியமையாத தன்மையில் தீவிரமான முறையில் தன் பங்களிப்பை அளித்துவந்த அம்பேத்கர் இப்போது அரசியல் வானில் இல்லை. அம்பேத்கரின் மறைவால் உலகச் சனநாயகமே குறிப்பிடத்தக்க இழப்புக்குள்ளாகிவிட்டது. சனநாயகத் தத்துவம் தன்னுடைய தன்னேரிலாத் தலைவனை இழந்துவிட்டது. அம்பேத்கர் இந்திய நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்தின் உருவாக்கத்திலும் இந்துச் சட்டதிருத்தத்தை வடிவமைத்ததிலும் ஆற்றிய பெருந்தொண்டினை நினைவுகூர்ந்து பிரதமர் நேரு மக்களவையில் பேசியபோது, 'இந்துச் சமூகத்தின் எல்லா வகையான ஒடுக்கு முறைகளுக்கும் எதிரான புரட்சியின் சின்னமாக

டாக்டர் அம்பேத்கர் பெரிதும் நினைவில் நிற்பார். இந்த ஒடுக்கு முறைகளுக்கு எதிராக அவர் மிகக் கடுமையான முறையில் தொடுத்த தாக்குதல் மக்களின் சிந்தனையை எப்போதும் விழிப்புடன் இருக்குமாறு செய்தது. அவர் மிகுந்த விவாதத்திற்குரிய மனிதராக இருந்தபோதிலும் அரசின் செயல்பாடுகளில் ஆக்கப்பூர்வமான, மிக முக்கியமான பங்கினை வகித்தார். ஒவ்வொருவரும் எதிர்க்க வேண்டிய அநீதிகளை அவர் விடாப்பிடியாக எதிர்த்துக் கொண்டே இருந்தார். டாக்டர் அம்பேத்கர் மிக உயர்ந்த மனிதர்களின் வரிசையில் வைத்து எண்ணத் தக்கவராதலின் இந்த அவை இன்றைக்கு மேற்கொண்டு வேறு எந்த அலுவலையும் எடுத்துக் கொள்ளாமல் தள்ளி வைக்கப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்' என்று கூறினார்.

உண்மையில் இந்தியா ஒரு மாபெரும் மனிதனை இழந்து விட்டது என்றார் வீர சாவர்க்கர். பம்பாய் உயர்நீதி மன்றத்தின் தற்காலிகத் தலைமை நீதிபதியாக இருந்த கோயாஜி டாக்டர் அம்பேத்கர் ஒரு குறிக்கோளுடன் வாழ்வை நடத்தியவர்; ஒடுக்கப்பட்ட மக்களின் மேம்பாட்டிற்காக மிக உயரிய குறிக்கோள் களைக் கொண்டு இருந்தவர்; அக்குறிக்கோள்களை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காகத் தன் வாழ்நாள் முழுவதும் பாடுபட்டவர் என்று கூறினார். இந்தியக் குடியரசின் தலைவர் டாக்டர் இராசேந்திரப் பிரசாத், டாக்டர் அம்பேத்கர் அரசியல் அமைப்புச் சட்டத்தின் சிற்பி; பலதுறைகளிலும் அவர் ஆற்றிய அரும்பணி - குறிப்பாகத் தீண்டப்படாத வகுப்பு மக்களின் உயர்வினுக்காக அவர் செய்த தொண்டு ஈடு இணையில்லாததாகும் என்று கருத்துரைத்தார்.

சி. இராசகோபாலாச்சாரி அவருடைய இரங்கல் அறிக்கையில், 'அம்பேத்கர் பௌத்தத்திற்கு மதம் மாறியமை அவர் இந்து மதத்தின் பேரில் கொண்டிருந்த சினத்தின் கடைசி வெளிப்பாடே யாகும். அவருடைய மதமாற்றம் அன்பையும், ஆன்மீக உறுதியை யும் கொண்டிலங்கும் பௌத்தத்தை ஏற்பது என்பதைவிட இந்து மதத்தை எதிர்ப்பது என்பதாகவே இருந்தது. ஆயினும் அம்பேத்கர் வாய்மை வழுவா நெறியாளர்; சட்ட இயலில் நுண்ணிய அறிவு படைத்தவர்; பெருமிதம் மிக்க எதற்கும் வளைந்து கொடுக்காத உள்ள உரன் மிக்கவர்; கல்வியில் கடல் போன்றவர். நல்லெண்ணத் துடன் அணுகும்போது உயரிய நட்பு பாராட்டியவர். இத்தகைய பண்பினரான அம்பேத்கர் தன் வாழ்நாள் முழுவதும் கடுமையாக

உழைத்தபின் இப்போது மீளாத்துயில் கொண்டுவிட்டார்' என்று குறிப்பிட்டிருந்தார்.

பத்திரிக்கை உலகம் டாக்டர் அம்பேத்கரைத் தீண்டப்படாத வகுப்பு மக்களுக்காக வெல்ல முடியாத வலிமையுடன், தீரமுடன், இடைவிடாது போராடியவர் என்று வருணித்திருந்தது. அம்பேத்கர் இந்திய நாட்டின் அருந்தவப் புதல்வர், ஒப்பற்ற அறிஞர், சட்ட இயல் வல்லுநர், உலகப் புகழ்பெற்ற அரசியல் சட்ட மேதை, மிகச்சிறந்த நாடாளுமன்ற அரசியல்வாதி என்பதை எல்லோரும் ஒத்துக் கொண்டனர். ஆனால் அவர்களில் பெரும்பாலோர் அம்பேத்கரைக் கடுமொழியாளர், போர்க்குணம் கொண்டவர், வளைந்து கொடுக்காதவர் என்றும் தீண்டாமை எனும் இழிவை நீக்கிட சமூக நிலையிலும் சட்டத்தின் மூலமும் இந்தியா மேற்கொண்டு வந்துள்ள தீவிரமான முயற்சிகளைப் புறக்கணித்தவர் என்றும் கூறினார்கள். 'தி டைம்ஸ் ஆப் இந்தியா' நாளேடு, அம்பேத்கர் ஆற்றல் மிக்க, அருந்திறன் வாய்க்கப் பெற்ற பல்துறை வல்லுநராக விளங்கினார்; இதைவிட நல்ல சூழ்நிலை அவருக்கு வாய்த்திருப்பின், இந்நாட்டிற்கும் அவருடைய வகுப்பு மக்களுக்கும் இன்னும் சிறந்த முறையில் அவர் தொண்டாற்றியிருப்பார் என்று எழுதியது. அம்பாலாவிலிருந்து வெளிவந்த டிரிப்யூட் (Tribute) அம்பேத்கரை ஒத்தவர்கள் தனித்து நின்று போராடுவார்களாயின், அவர்களுடைய உயிர்ப்பாற்றலையே அரித்து அழிக்கக் கூடிய மனக் கசப்பிற்கும், நம்பிக்கையற்ற நிலைக்கும் ஆளாகி விடுவார்கள் என்று எச்சரித்தது. 'இந்துஸ்தான் டைம்ஸ்' நாளேடு, அம்பேத்கர் இந்நாட்டிற்கு ஆற்றிய அருந் தொண்டுகள் அழியாத நினைவுச் சின்னங்களாக என்றும் வாழும்; அவர் காலத்தில் வாழ்ந்தவர்களின் நெஞ்சங்களில் அவருடைய ஒள்ளிய பல்துறை சான்ற பண்புகள் நிலைத்து நிற்கும் என்று குறிப்பிட்டிருந்தது. 'தி ஃபிரீ பிரஸ் ஜெர்னல்' அநீதிகளை எதிர்த்து நேர்மையுடன் போராடியவர் அம்பேத்கர் என இந்நாடு நெடுங்காலத்திற்கு அவரைப் போற்றும் என்று எழுதியது.

இணையிலாத அறிவாண்மையுடன் வெல்ல முடியாத உள்ள உரனுடன் போராடிய ஒரு வீரனின் வரலாறே அம்பேத்கரின் வாழ்க்கை என்று கல்கத்தா "ஸ்டேட்ஸ் மேன்" நாளேடு வருணித்தது. அவர் கொண்டிருந்த ஆழ்ந்த கல்வியறிவும், சட்டம், பொருளியல், சமூகவியல், தொழிலாளர் நலன், அரசியல் போன்ற பல்வேறுபட்ட துறைகளில் அவர் பெற்றிருந்த அனுபவமும்

அவருக்கு இன்னும் நல்லிணக்கமான சூழ்நிலை வாய்க்கப் பெற்றிருப்பின், எழுத்துலகிற்கு மேலும் ஒப்பரிய பங்களிப்பை அவர் ஈந்திருப்பார் என்று 'ஸ்டேட்ஸ்மேன்' மேலும் குறிப்பிட்டிருந்தது. 'அமிர்த பசார் பத்திரிகா' அம்பேத்கரின் வியத்தகு வாழ்வை உயர்த்திப் போற்றியது. அநீதியின் மீது கட்டப்பட்டு மனித உரிமைகளை மறுத்த பழைய அமைப்பை உடைத்தெறிவதற்காகப் படைத் தளபதிபோல் போராடியவர் அம்பேத்கர்; அவருடைய திடீர் மறைவு, அவருடைய பெருஞ் சிறப்பியல்புகளாலும் ஈடிலா நாட்டுப் பற்றினாலும் இந்தியப் பெருங்கண்டத்தின் மதிப்பு மிக்க மகனாக அவர் உயர்ந்தார் என்பதை மீண்டும் இந்நாட்டு மக்களுக்கு நினைவூட்டுகிறது என்று எழுதியது.

'நியூயார்க் டைம்ஸ்' ஏடு, தீண்டப்படாத வகுப்பு மக்களின் விடுதலைக்காகப் போராடும் தலைவர் என்ற முறையில்தான் அம்பேத்கரை அனைவரும் அறிந்திருக்கிறார்கள்; மதிக்கிறார்கள்; ஆனால் இந்தியாவிற்கான பெரும்பகுதிச் சட்டங்களின் உருவாக்கத்தில் அவர் மாபெரும் பங்களிப்பை அளித்திருக்கிறார் என்பது இன்றும் பரவலாக அறியப்படாமல் இருக்கிறது என்று எழுதியிருந்தது. இலண்டன் 'டைம்ஸ்' ஏடு, பிரிட்டிஷ் ஆட்சியின் இறுதி ஆண்டுகளில் இந்தியாவில் ஏற்பட்ட சமூக அரசியல் மாற்றங்கள் குறித்து எழுதப்படும் எந்தவொரு வரலாற்றிலும் அம்பேத்கரின் பெயர் முதன்மையாக இடம் பெற்றிருக்கும். அவர் கொண்டிருந்த உறுதிப்பாடும், துணிவும், பருத்த உடலும் கண்ணாடி அணிந்திருந்தமையும் அவருடைய இயல்புகளில் பெரிதும் மேலோங்கியிருக்கின்றன. ஆனால் விடா முயற்சியுடன் மூன்று கண்டங்களில் அவர் கல்வி கற்றுப் பெற்றிருந்த மேதைமை அவர் பிறரிடம் நடந்து கொண்ட முறைகளிலோ நிகழ்த்திய சொற்பொழிவுகளிலோ சிறிதும் வெளிப்படவில்லை; ஏனெனில் அவர் கற்றறிந்த அளவிற்கு அதற்கு மெருகூட்டும் கலையைக் கற்க அவர் தவறிவிட்டார் என்று குறிப்பிட்டிருந்தது.

பர்மா நாட்டின் பிரதமர் ஊ நூ (U Nu) அம்பேத்கருக்குச் சூட்டிய புகழுரை கடைசியானதாக அமைந்தது. 'மாறுதலுக்கான போக்குகளும் சூழ்நிலைகளும் இந்திய மக்களின் வாழ்வின்மீதும் சமூக அமைப்பின் மீதும் பெருந் தாக்கத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்த காலக் கட்டத்தில், இந்திய வரலாற்றின் போக்கைத் தீர்மானித்த சிறந்த இந்தியத் தலைவர்களுள் அம்பேத்கரும் ஒருவர் என்பது அய்யத்திற்கு இடமில்லாத பேருண்மையாகும்.

இந்திய நாட்டின் சமூக மாற்றத்தை நோக்கிய முயற்சிகளை முடுக்கிவிட்ட தலைவர்களில் அம்பேத்கரும் ஒருவர். இவ்வாறு அவரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையால் இலட்சக்கணக் கான கோடிக்கணக்கான மக்கள் தங்களுக்கு நல்ல மகிழ்ச்சியான எதிர்காலம் அமையும் என்று எதிர்பார்க்கக் கூடிய நிலை உருவாகியிருந்தது[125] என்று பர்மாவின் பிரதமர் மேலும் கூறினார்.

அம்பேத்கர் இறந்த பதினோராம் நாள் அம்பேத்கரின் தொண்டர்கள் தில்லியில் கூட்டிய மாபெரும் கூட்டத்தின் வாயிலாக, அம்பேத்கர் எத்தகைய சூழ்நிலையில் இறந்தார் என்பது குறித்து அரசு முழுமையாகப் புலனாய்வு செய்ய வேண்டும் என்று கோரினார்கள். அவர்கள் ஒரு தூதுக் குழுவாகச் சென்று பிரதமர் நேரு, உள்துறை அமைச்சர் பந்த், குடியரசுத் தலைவர் இராஜேந்திரப் பிரசாத் ஆகியோரைச் சந்தித்து, அம்பேத்கரின் இறப்பு குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்று கோரினர். அம்பேத்கரின் மகன் தில்லியில் காவல் துறையிடம் தன் தந்தையின் இறப்பு குறித்து ஒரு புகார் கொடுத்தார். ஆகவே மத்திய அரசு அம்பேத்கர் இறந்த சூழ்நிலை குறித்து விசாரணை செய்ய ஓர் ஆணை பிறப்பித்தது. 1957 ,நவம்பர் 27ஆம் நாள் உள்துறை அமைச்சர் பந்த், தில்லியின் காவல்துறை துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல் நடத்திய விசாரணையின்படி, டாக்டர் அம்பேத்கரின் மரணம் இயற்கையானதாகும் என்று நாடாளுமன்றத்தில் அறிவித் தார்.

சிறந்த சட்ட வல்லுநரான டாக்டர் அம்பேத்கர் 'புத்தரும் அவருடைய தம்மமும்' என்று அவர் எழுதியுள்ள நூலின் முன்னுரையில் தன் நன்றிக் கடப்பாடு குறித்து எழுதியிருக்கும் ஒரு பகுதியை உலகம் அறிய முடியாமல் போயிற்று. 'கடந்த அய்ந்தாண்டுகளில் என் உடல் நிலையில் பல ஏற்றங்களும் இறக்கங்களும் இருந்தன. 'அணையப் போகும் விளக்கு' என்று மருத்துவர்கள் என்னைப்பற்றிப் பேசிக் கொள்ளும் அளவுக்குச் சில சமயம் என் உடல்நிலை மோசமாயிற்று. அந்த அளவுக்கு நலிவடைந்து விட்டிருந்த என் உடல்நிலைக்கு என் மனைவியும், என் குடும்ப மருத்துவரான டாக்டர் மௌலங்கரும் அவர்களுடைய மருத்துவத் திறமையால் உயிர்ப்பூட்டி வந்தனர். அவர்களுக்கு நான் மிகவும் நன்றிக் கடன் பட்டுள்ளேன். அவர்களுடைய உதவியால்தான் என்னால் இந்நூலை எழுதி முடிக்க முடிந்தது' என்று நன்றிப்பெருக்குடன் தன் மனைவியைப் பற்றி அம்

முன்னுரையில் அம்பேத்கர் எழுதியிருந்தார். இந்த முன்னுரை குறிப்பாக மேலே குறிப்பிட்டுள்ள பகுதி அவருடைய நூலில் ஏன் இடம் பெறவில்லை என்பது ஒரு புதிராகும்.

காட்மண்டுவில் நடைபெற்ற பௌத்த மாநாட்டில் புத்தரும் காரல் மார்க்சும் என்ற தலைப்பில் அம்பேத்கர் உரையாற்றிய போது, பௌத்தச் சமய நூல்களில் 'துக்கம் என்பது சொத்து' என்ற பொருளிலேயே குறிக்கப்பட்டுள்ளது என்று கூறியுள்ளார். சொத்துத் தகராறை முன்னிட்டுத் திலகரின் குடும்பம் நீதிமன்றத்திற்குச் சென்றதுபோல், தன் குடும்பத்தினர் நீதிமன்றத்திற்குப் போக மாட்டார்கள் என்று நம்பிக்கையுடன் அம்பேத்கர் எப்போதும் கூறுவார். ஆனால் இதில் அவருடைய நம்பிக்கை பொய்த்து விட்டது. சொத்தில் பாகப்பிரிவினை கோரி அவருடைய மகனும், மனைவியும் நீதிமன்றத்திற்குச் சென்றனர். ஆயினும் இறுதியில் நீதிமன்றத்திலேயே சமரசம் செய்துகொண்டனர்.

V

அம்பேத்கர் இறந்தபிறகு அவருடைய வாழ்க்கையுடன் நெருக்கமாகத் தொடர்புடைய குறிப்பிடத்தக்க சில நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மகாராட்டிர மாநிலத்தின் முதலமைச்சராக இருந்த யசுவந்தராவ் சவான், மதிநுட்பமும், நடுநிலையான போக்கும் உடையவர் என்று அவர் பெயர் பெற்றிருந்ததற்கு ஏற்ப, அம்பேத்கரின் பிறந்த நாளை மகாராட்டிர அரசு விடுமுறை நாளாக அறிவிக்க வேண்டும் என்று பரவலாக விடுக்கப்பட்ட வேண்டு கோளை ஏற்று, அம்பேத்கர் பிறந்த நாளை அரசு விடுமுறை நாளாக அறிவித்தார். 1956 அக்டோபர் 14ஆம் நாள் நாகபுரியில் அம்பேத்கர் பௌத்தச் சமயத்தில் தீட்சை பெற்ற இடத்தில் நினைவு மண்டபம் கட்ட வேண்டும் என்பதற்காக மகாராட்டிர அரசு பதினொரு ஏக்கர் நிலத்தைப் பௌத்தச் சங்கத்திற்கு வழங்கியது; மேலும் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலை வீரரான அம்பேத்கரின் உடல் எரியூட்டப்பட்ட தாதர் இந்து இடுகாட்டில் நினைவு மண்டபம் கட்டுவதற்காக ஒரு சிறு துண்டு நிலத்தையும் மகாராட்டிர அரசு அளித்தது. பம்பாயில் பழைய தலைமைச் செயலகத்திற்கு அருகில் ஒரு முதன்மை வாய்ந்த இடத்தில் அம்பேத்கரின் உருவச்சிலை நிறுவப்பட்டது. பம்பாய் தாதரில் சௌபாத்தி சைத்திய பூமியில் (Chaitya-Bhoomi) பெரிய கற்றூண் ஒன்று அமைக்கப்பட்டது.

டாக்டர் அம்பேத்கர் காட்டிய நெறியில் குடியரசுக் கட்சி உருவாக்கப்பட்டது. ஆனால் தீண்டப்படாத சாதிகள் பேரவைக்குக் 'குடியரசுக் கட்சி' என்று பெயரளவில் ஒரு மாற்றம் செய்யப்பட்டது போன்றதாகவே இது இருந்தது. ஆயினும் தனி மகாராட்டிர மாநிலம் அமைக்கப்பட்டதும் குடியரசுக் கட்சி இரண்டாகப் பிளவுபட்டது. இதில் ஒரு பிரிவு கம்யூனிசக் கொள்கையில் பற்று கொண்டிருந்தவர்களின் ஆதிக்கத்திலிருந்த சம்யுக்த மகாராட்டிர சமிதி என்ற அமைப்புக்குத் தோழமை அமைப்பாக ஆயிற்று. மற்றொரு பிரிவு டாக்டர் அம்பேத்கர் தோழமைக் கட்சியாகக் கருதிய பிரஜா சோசலிஸ்டு கட்சியுடன் உறவு பூண்டது. குறிப்பிட்டுச் சொல்லப்படக்கூடிய தலைவர் எவரும் குடியரசுக் கட்சியில் சேரவில்லை, எனவே குடியரசுக் கட்சி என்பது வெறும் பெயர் மாற்றமே தவிர வேறொன்றும் இல்லை என்ற கருத்து உறுதியாயிற்று.

அம்பேத்கரின் குறிப்பிடத்தக்க நூலான 'புத்தரும் அவருடைய தம்மமும்' என்ற நூல் அவருடைய மறைவுக்குப் பின்னர் வெளியிடப்பட்டது. பௌத்தக் கொள்கைகளுக்கு அம்பேத்கர் அளித்த விளக்கங்களை அல்லது பௌத்தம் பற்றி அவர் கொண்டிருந்த கருத்துகளைக் கொண்டதாக இந்நூல் இலங்குகிறது. அவர் கூற விரும்பிய கருத்து இந்நூலில் விரிவாகவும் நேராகவும் சொல்லப்பட்டிருக்கிறது; ஒரு நூல் எப்படி எழுதப்பட வேண்டும் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது இந்நூல். கருத்து வளஞ்செறிந்த மொழிநடையில் இது எழுதப்பட்டுள்ளது. அறிவு நுட்பம் வாய்ந்த விவாதங்கள் மிளிரும் உயரிய ஆய்வு நூல் இது! எந்தவொரு சிறந்த நூலிலும் அதை எழுதியவரின் சிறப்புக் கூறுகளும் இழையோடியிருக்கும். 'புத்தரும் அவருடைய தம்மமும்' என்ற நூல் உண்மையிலேயே அம்பேத்கரின் உயரிய திறமைகளும் புத்தரின் தத்துவமும் கலந்து இணைந்து உருவான ஒன்றேயாகும். திலகரின் தனிச்சிறப்புகளும் பகவத் கீதையும் இணைந்து 'கீதா இரகசியம்' என்ற நூல் உருவாகி இருப்பது போல!

இவை எப்படியிருப்பினும் இந்தியாவில் புகழ்பெற்ற பௌத்த மாத இதழான 'மகாபோதி', அம்பேத்கரின் 'புத்தரும் அவருடைய தம்மமும்' என்ற நூலை மிகவும் ஆபத்தான நூல் என்று கருத்துரைத்தது. 'தலைவிதித் தத்துவம்', அகிம்சைத் தத்துவம் குறித்து அம்பேத்கர் கூறியுள்ள விளக்கங்களும், பௌத்தம் என்பது

ஒரு சமூக அமைப்பு முறையைக் குறிப்பதேயாகும் என்ற
அம்பேத்கரின் கோட்பாடும் பௌத்தத்தின் உண்மையான கருத்
தைப் பிரதிபலிப்பவையாக இல்லை; அவை தன் விருப்பத்திற்கு
ஏற்பப் பௌத்தத்திற்கு அம்பேத்கரால் அளிக்கப்பட்ட விளக்கங்
களேயாகும். புதிய பௌத்தர்களான தீண்டப்படாத வகுப்பு மக்கள்
தங்களுக்குள் வளர்த்து வெளிப்படுத்தி வந்த வெறுப்பும் எதிர்ப்பு
ணர்ச்சியும் இந்நூல் முழுவதும் விரவியுள்ளன. அம்பேத்கர் கூறும்
பௌத்தமோ வெறுப்பின்மீது கட்டப்பட்டுள்ளது; ஆனால் பௌத்
தமோ அன்பின்மீது நிறுவப்பட்டதாகும். அம்பேத்கர் இந்நூலில்
கூறியிருப்பவற்றுள் எதை நாம் புத்தரின் கொள்கையாக ஏற்கப்
போகிறோம் என்பதே நம் முன் உள்ள மிக முக்கியமான
ஒன்றாகும்' என்று மகாபோதி இதழில் இந்நூல் பற்றிய
மதிப்புரையில் எழுதப்பட்டிருந்தது.

இந்நூலின் பெயர் 'புத்தரும் அவருடைய தம்மமும்' என்றிருப்
பதற்குப் பதிலாக 'அம்பேத்கரும் அவருடைய தம்மமும்' என்று
மாற்றிட வேண்டும்; ஏனெனில் அவருடைய அரசியல் நோக்கங்க
ளுக்காகவும், சமூகச் சீர்திருத்தங்களுக்காகவும் தம்மம் அல்லாதவற்
றைத் தம்மம் என்று அவர் ஏற்றிக் கூறியுள்ளார் என்று அந்நூலுக்கு
'மகாபோதி'யில் மதிப்புரை எழுதியவர் குறிப்பிட்டிருந்தார்.[126]

இரங்கூனிலிருந்து வெளிவந்த 'தம்மத்தின் ஒளி' (The Light
of the Dhamma) என்ற ஏடு 'சிறந்த மனிதரான அம்பேத்கரால்
இந்நூல் எழுதப்பட்டுள்ள போதிலும் இது ஒரு சிறந்த நூலாக
இல்லை என்பது மாபெரும் துரதிர்ஷ்டமேயாகும். இந்நூலாசிரிய
ரான அம்பேத்கரிடம் பல்துறை சார்ந்த திறமைகள் நிறைந்திருந்த
போதிலும் அவரிடம் இத்தகைய நூலை எழுதுவதற்கான தகுதி
இல்லை. கற்றறிவாளரான அம்பேத்கர் பௌத்தச் சமய நூல்களின்
மூலக் கருத்தைச் சிதைத்துக் கூறியுள்ளார். அவருடைய நோக்கத்
திற்கு ஒத்துவராத பௌத்தக் கருத்துகளைப் பின்னாளில் பிக்குகள்
சேர்த்த இடைச்செருகல் என்று கூறியுள்ளார். அம்பேத்கர் சிறந்த
உயர்ந்த மனிதர். ஆனால் அவர் எழுதியுள்ள இது சிறந்த
நூலாகவோ உயர்ந்த நூலாகவோ இல்லை என்பது மிகவும்
வருந்துதற்குரியதாகும்' என்று அம்மதிப்புரையின் இறுதியில்
கூறப்பட்டிருந்தது.[127]

இந்நூலைப் பற்றித் திறனாய்வாளர்கள் என்ன கூறியிருப்பி
னும், பிரம்ம சமாஜம், சத்திய சோதக் சமாஜம், ஆரிய சமாஜம்,
பிரார்த்தனா சமாஜம் முதலானவற்றைப் போலவே அம்பேத்கரின்

பௌத்தக் கோட்பாடும் சீர்திருத்தத்தை நோக்கமாகக் கொண்ட ஒரு கொள்கையேயாகும். பௌத்தத்தில் சென் (Zen) பிரிவு என ஓர் உட்பிரிவு உள்ளது. மேலும் தன் தாயகத்தின் வழிபாட்டு மரபுகளின்படி வளர்த்தெடுக்கப்பட்ட பர்மிய பௌத்தப் பிரிவு இருக்கிறது. மகாயான பௌத்தம், ஹீனயான பௌத்தம் என்ற பிரிவுகள் உள்ளன. அம்பேத்கர் புராட்டஸ்டெண்ட் இந்து மதத்தை ஏற்படுத்த வேண்டும் என முயன்றார். பௌத்தம் பற்றிய அவருடைய கொள்கைகளை 'அம்பேத்கரிய பௌத்தம்' என்றோ 'பௌத்தர்களின் புதிய ஏற்பாடு' என்றோ எப்படி வேண்டுமானா லும் அழைக்கலாம். எப்பெயரிட்டு அதை அழைத்தாலும் அது விநோதமான இந்திய மரபு வழிப்பட்ட புதிய பௌத்தமாகவே உருவாகும். அம்பேத்கரின் பௌத்தமும் புத்தரை வழிபடுவதாக இருக்கும்; இந்தியச் சிந்தனையை அடித்தளமாகக் கொண்ட சமயச் சடங்குகளையும் மரபுகளையும் அது பின்பற்றும். இந்து மதமும், பௌத்தச் சமயமும் ஒரே மதத்தில் கிளைத்தவையாகும். கிறித்தவ மதத்தில் கத்தோலிக்கப் பிரிவு, புராட்டஸ்டெண்ட் பிரிவு என்று இருப்பது போல! ஆகவே இந்தியாவில் புத்தரை வழிபடுவோர் டாக்டர் ரைஸ்டேவிஸ் கூறி இருப்பதை நினைவில் கொள்ளுதல் வேண்டும். 'கௌதம புத்தர் ஓர் இந்துவாகப் பிறந்து, இந்துவாக வளர்க்கப்பட்டு, இந்துவாக வாழ்ந்து மறைந்தார் என்பதை நாம் ஒருபோதும் மறத்தல் கூடாது. புத்தரின் போதனை தொலைநோக் கும் சுயசிந்தனையும் கொண்டவை. ஆயினும் அன்று இந்தியாவில் நிலவிய இந்து மதத்தின் அடித்தளத்திலிருந்தே அது கிளைத்தது... இந்துக்களின் மிகச் சிறந்த மனிதராகவும், அறிஞராகவும் புத்தர் திகழ்ந்தார் என்று டேவிஸ் கூறியுள்ளார்.[128]

'பாரத்' எனும் ஒட்டுச்சொல் தனித்ததோர் அழகும் ஈர்ப்பும் உடைய சொல்லாக அம்பேத்கருக்கு இருந்தது. அம்பேத்கர் தன்னுடைய வார இதழ் ஒன்றுக்குப் 'பகிஷ்கிரித் பாரத்' (தீண்டப்படாத இந்தியா) என்று பெயரிட்டார். அவருடைய அச்சகத்தின் பெயர் 'பாரத் பூஷன் பிரிண்டிங் பிரஸ்' என்பதாகும். கோயில் நுழைவு உரிமைக்காகவும், இந்துச் சட்டத்தைத் திருத்துவ தற்காகவும் அவர் நடத்திய போராட்டங்கள் இந்து மதத்தைச் சீர்திருத்த வேண்டுமென்பதில் அவர் கொண்டிருந்த ஆழ்ந்த பற்றினைப் புலப்படுத்துகின்றன. லார்டு ஹாலிஃபாக்ஸ் அயல் மதத்தைத் தழுவி விட்டார் என்ற செய்தியை வேண்டுமானால் நீங்கள் நம்பக்கூடும், ஆனால் அந்நிய நாட்டு மதம் ஒன்றில் சேர்ந்து விடுவது என்ற கருத்தில் அம்பேத்கர் மதம் மாறிவிட்டார்

என்பதை நாம் நம்ப முடியாது. தீண்டப்படாத வகுப்பு மக்களைப் புராட்டஸ்டெண்ட் இந்துக்கள் என்றோ அல்லது இந்து மதத்தைப் பின்பற்றாத இந்துக்கள் என்றோ அழைக்கப்பட வேண்டும் என்று அம்பேத்கர் வட்ட மேசை மாநாட்டில் வலியுறுத்தினார். 'சாதி இந்துக்கள் பலவகையிலும் என்னை இழிவாக நடத்தியதன் காரணமாக வெறுப்பும், பழிவாங்கும் உணர்வும் என் சிந்தனையில் மேலோங்கியிருந்திருப்பின், அய்ந்தாண்டுக் காலத்திற்கு உள்ளா கவே இந்திய நாட்டைப் பேரிடரில் நான் ஆழ்த்தியிருப்பேன்' என்று முன்னொரு சமயம் அம்பேத்கர் உறுதிப்பட உரைத்தமை அவருடைய உள்ளத்தின் ஆழத்தில் அவர் கொண்டிருந்த எண்ணத்தின் வெளிப்பாடேயாகும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

இந்தியக் கலாச்சாரத்துக்குள்ளேயே தொடர்ந்து இருக்க வேண் டும் என்று அவர் கொண்டிருந்த கவலையும், தீண்டப்படாத வகுப்பு மக்கள் தங்களுடைய தேசியத் தன்மையை இழக்கக்கூடிய அல்லது இந்திய நாட்டின் பண்டைய கலாச்சாரத்திற்கு ஊறு விளைவிக்கின்ற எந்த ஒரு மதத்தையும் மதமாற்றத்திற்காகத் தெரிவு செய்ய மாட்டேன் என்று வெளிப்படையாக அவர் கூறி வந்தமையும், ஒரு மதத்திற்கும் அந்நாட்டின் கலாச்சாரம், வரலாறு, மரபுகள் முதலானவற்றிற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது என அம்பேத்கர் கருதினார் என்ற உண்மையைப் புலப்படுத்து கின்றன. அம்பேத்கரின் கருத்துப்படி மதமும் அரசியலும் நெருங்கிய தொடர்பு கொண்டவைகளாக இருந்தன. அதனால்தான் பௌத்தச் சமயத் திறனாய்வாளர்கள், அம்பேத்கர் கூறும் தம்மம் த்தரால் போதிக்கப்பட்ட பௌத்தம் அன்று - அது அம்பேத்கரி யமே ஆகும் என்று கூறுகின்றனர். இக்கூற்று மிகவும் சரியானதே யாகும். 'தவிர்க்க முடியாத நிலைமை ஏற்படும்போது கொலையும் செய்யலாம்' என்று அம்பேத்கரின் பௌத்தத் தம்மம் கூறுகிறது. இந்திய நாட்டின் சுதந்திரத்தைக் காத்திட கடைசிச் சொட்டு இரத்தம் உள்ளவரை போராடுவோம் என்று இந்தியர்கள் சூளுரை மேற் கொள்ள வேண்டும் என்பதே அம்பேத்கர் இந்திய மக்களுக்கு விடுத்துள்ள கட்டளையாகும்.

மனித உரிமைகளுக்காகப் போராடிய ஒரு தலைவரின் வரலாறாகவே டாக்டர் அம்பேத்கரின் வாழ்வு அமைந்துள்ளது. அவருடைய மறைவையொட்டி நாடு முழுவதும் நடத்தப்பட்ட இரங்கற் கூட்டங்கள் வாயிலாக அவர் நடத்திய மனித உரிமைப்

போராட்டங்கள் மக்களின் மனக்கண்முன் கொண்டுவந்து நிறுத்தப் பட்டன. மனிதனின் சுயமரியாதைக்காகவும் ஒடுக்கப்பட்ட மக் களின் விடுதலைக்காகவும் தீரமுடன் போராடியவர் அம்பேத்கர் என்பதை அனைவரும் ஏற்றுக் கொண்டனர். எழுச்சிமிக்க, பல்துறை சார்ந்த, வீரஞ்செறிந்த, வியப்பூட்டும்படியான வாழ்வை அம்பேத்கர் வாழ்ந்து காட்டியது போன்று இந்திய நாட்டில் உள்ள எந்தவொரு மனிதனோ வேறு எந்தவொரு நாட்டிலும் உள்ள மனிதனோ வாழ்ந்து காட்டவில்லை.

குப்பை மேட்டில் பிறந்து, தீண்டப்படாதவராக வாழ்க்கையைத் தொடங்கி, சிறுவனாக இருந்தபோது தொழுநோயாளிபோல் ஒதுக்கப்பட்டு, இளமைப் பருவத்தில் முடித்திருத்தகங்கள், உணவு விடுதிகள், தங்கும் விடுதிகள், கார்கள், கோயில்கள், அலுவலகங் கள் முதலானவற்றில் நுழையவும் விடாமல் விரட்டியடிக்கப்பட்டு, இழிவாக நடத்தப்பட்ட அம்பேத்கருக்கு இவை யாவும் வாழ்வில் அதிர்ச்சி தரும் அனுபவங்களாயின. ஆலைகளில் பணிபுரிந்த தன் அக்கம்பக்கத்தினர்க்குரிய உணவைச் சிறுவயதில் தூக்குப் பாத்திரத் தில் சுமந்து சென்று கொடுத்தவர். பணவசதியின்மையால் பட்டினி கிடந்து படித்தேனும் உலகப் புகழ் பெற்றிருந்த பல்கலைக் கழகங்களில் மிக உயர்ந்த பட்டங்களைப் பெற்றிட வேண்டும் என்று உறுதி பூண்டவர், தன் நேரம் முழுவதையும் படிப்பதற்கா கவே செலவிட்டவர், வாழ்க்கையில் எடுத்து வைத்த ஒவ்வொரு அடியின் முன்னேற்றத்திற்கும் கடுமையாகப் போராட வேண்டிய நிலைக்கு ஆளானாவர், தீராப்பிணியை அறுவை செய்து அகற்றும் மருத்துவர்போலச் சமூகத் தீமைகளைப் புரட்சி எனும் ஆயுதமேந்தி ஈவிரக்கமின்றி எதிரிகளைத் தாக்கியவர், தன் குடும்பத்தின் வளத்திற்காகவும் தன்னுடைய அரசியல் ஆதாயத்திற்காகவும் என்றெண்ணி எதையும் செய்யாமல் தன் வகுப்பு மக்களின் நலனுக்காக, நாட்டின் உயர்வினுக்காக என்று எண்ணியே வாழ்நாள் முழுவதும் பாடுபட்டவர், சமூகத்தில் பெரும் இடர்ப்பாடுகளையும் அரசியலில் கடும் எதிர்ப்புகளையும் சந்தித்தவர் அவர். அம்பேத்கர் நடத்திய இத்தகைய வாழ்வு பெருஞ்சிறப்புக்குரியது; துணிவு மிக்கது; வரலாற்றில் பொறிக்கத்தக்கது.

கட்சிப் பத்திரிக்கையாலோ அல்லது கட்சியின் ஆர்வமிக்க கையாட்கள் போன்றவர்களாலோ போற்றித் துதிபாடி உயர்த்துதல் என்ற உதவியின்றியே தன் பெயரை, புகழை, முதன்மையை நாட்டில் நிலைநாட்டியவர் அம்பேத்கர். பிரிட்டிஷ் ஆட்சிக்

காலத்தில் வட்டமேசை மாநாட்டின் விளைவாக அமைக்கப்பட்ட
வாக்குரிமைக் குழு, பொருளாதாரக் குழு, அரசியலமைப்புக் குழு,
ஆகியவற்றில் இடம்பெற்று அரும்பணி ஆற்றியவர்; பிரிட்டிஷ்
ஆட்சியில் தொழிலாளர் நல அமைச்சராகவும், சுதந்திர இந்தியாவின்
முதலாவது சட்ட அமைச்சராகவும் திகழ்ந்தவர்; இந்திய அரசியல்
அமைப்புச் சட்டத்தை உருவாக்கிய தலைமைச் சிற்பி; தன்
இளமைப் பருவத்தில் தன்னுடைய வாழ்வையே சிதைப்பதற்கு
எதிரிகளுக்கு ஆதாரமாக விளங்கிய அரசியல் சட்டத்தை மாற்றி
யமைக்கும் நிலைக்கு உயர்ந்தவர்; ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக
நசுக்கப்பட்டுத் துன்பத்தில் ஆழ்த்தப்பட்டிருந்த தீண்டப்படாத
வகுப்பு மக்களின்பேரில் சுமத்தப்பட்டிருந்த தீண்டாமை எனும்
கறையைத் துடைத்தவர்; அவர்களுடைய அடிமைத் தளைகளை
அறுத்தெறிந்து அடிமை நிலையிலிருந்து மீட்டெடுத்து விடுதலை
வழங்கிய வீரர் அவர். ஆம், உண்மையிலேயே உலக மானிடத்தின்
போராட்ட வரலாற்றில் ஈடு இணையற்ற சாதனை புரிந்தவர் அவர்.
இந்துத் தீண்டப்படாத வகுப்பில் தோன்றி இத்தகைய அருஞ்செயல்
கள் புரிந்த அம்பேத்கர் பழமை வாய்ந்த இந்திய வரலாற்றில்
கல்வியாளராக, பொருளியல் வல்லுநராக, எழுத்தாளராக, பேராசிரி
யராக, வழக்கறிஞராக, மக்கள் தலைவராக, பேரொளியாக, புதிய
சட்டத்தை உருவாக்கியவராக, அரசியல் சட்டத்தை வகுத்தளித்தவ
ராக், சமூகச் சமத்துவவாதியாக, விடுதலை வீரராக என்றென்றும்
திகழ்வார்.

அம்பேத்கர் பல பத்திரிக்கைகளின் ஆசிரியராக இருந்தார்.
பொருளாதாரம், சமூகவியல், வரலாறு, அரசியல், குறித்துப் பல
நூல்களை எழுதியுள்ளார். தீண்டப்படாத வகுப்பு மாணவர்களுக்
கெனத் தங்கும் விடுதிகளையும், படிப்பகங்களையும் நிறுவி
நடத்தினார். சட்டக்கல்லூரியின் முதல்வராகத் திகழ்ந்தார். நூற்றுக்
கணக்கான அரசியல் மற்றும் சமூக, அரசியல், தொழிலாளர்
இயக்கங்களை நடத்திய மக்கள் தலைவராகத் திகழ்ந்தார். அரசியல்
கட்சிகளை நிறுவினார்; கல்லூரிகளை அமைத்தார். அரசியல்
மேதைத் தன்மையும், தலைவருக்குரிய தகுதிப்பாடுகளும், படைத்
தளபதியின் துணிவும், தியாகியின் துன்பந்தாங்கிடும் பேராற்றலும்,
கற்றறிந்த அறிஞரிடம் பொலிந்திடும் நுண்மான் நுழைபுலமும்,
அம்பேத்கரின் வாழ்வில் மிளிர்ந்தன. தன்னுடைய அறிவாற்றலால்,
சனநாயகச் சிந்தனை வளத்தால், மனிதனின் சுயமரியாதை மற்றும்
உரிமைகள்பால் கொண்டிருந்த பற்றினால் அவர் வகித்த மிக
உயர்ந்த அரசியல் பதவிகளுக்குப் பெருமை சேர்த்து அணி
செய்தார். தீண்டப்படாத வகுப்பில் தோன்றிய அம்பேத்கர்

ஒய்வறியாப் படிப்பின் மூலம் பல துறைகளில் குவித்திருந்த ஆழ்ந்த அறிவும், படைத்த சாதனைகளும், மேதைமையும் நவீன இந்தியாவின் வரலாற்றில் வேறு எவரும் தன் வாழ்வில் நிகழ்த்தாத ஈடு இணையிலா அருஞ்சாதனைகளாகும்.

மாமனிதர்கள் மாளிகையிலும் பிறக்கிறார்கள்; மண் குடிசையிலும் தோன்றுகிறார்கள். செருப்பு தைக்கும் தொழிலாளி, தையல்காரர், கசாப்புக் கடைக்காரர், குயவர், கருமார் போன்றவர்களின் வீடுகளிலும் மாபெருந் தலைவர்கள் பிறக்கின்றனர். ஆனால் அம்பேத்கரோ சமூகத்தில் மிக இழிவாகக் கருதப்பட்ட ஒரு வகுப்பில் பிறந்தவர்; பன்னெடுங்காலமாக இந்நாட்டில் நாயினும் கீழாய் இழிவுடன் நடத்தப்பட்ட - தொட்டாலோ அல்லது நிழல்பட்டாலோ புனிதம் கெட்டுவிடும், மேன்மை அழிந்துவிடும் என்று கருதப்பட்ட - ஒரு சாதியில் பிறந்த அம்பேத்கர் புழுதி போன்ற தாழ்நிலையிலிருந்து புகழின் உச்சிக்கு உயர்ந்தவர் என்பது தனிச்சிறப்புக்குரியதாகும்.

அம்பேத்கரின் பெயர் அழிக்க முடியாதவாறு இந்திய வரலாற்றோடு இரண்டறக் கலந்து நிற்கும். அம்பேத்கரின் கோட்பாடுகளில் பெரும்பாலானவை அரசியலமைப்புச் சட்டத்தில் இடம்பெற்றுள்ளன. அம்பேத்கர் மனுவை எதிர்த்தார்; இந்திய நாட்டை ஆளும் சட்டத்தை இயற்றியவர் என்ற புகழ் அரியாசனத்திலிருந்த மனுவை அம்பேத்கர் தூக்கி எறிந்துவிட்டார். பழம் பெருமை வாய்ந்த இந்திய வரலாற்றில் அம்பேத்கர் ஈட்டிய இவ்வெற்றி இணையில்லாததாகும். தன் வாழ்வின் இலட்சியத்தை அரசியல் அமைப்புச் சட்டத்தின் மூலம் அடைந்துவிட்டார். தீண்டப்படாத வகுப்பில் பிறந்த வேறு எவராலும் கனவிலும் கருதமுடியாத அருஞ்செயலாகும் இது. நம் காலத்தில் வாழ்ந்த தலைசிறந்த தலைவர்களுள் முதல் வரிசையைச் சேர்ந்தவர் அம்பேத்கர். ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காகப் பாடுபட்ட தலைவர்களின் தலைமுறையைச் சார்ந்தவர் அம்பேத்கர். ஆறு கோடி மக்களின் வாழ்வை வழிநடத்தி உருவாக்கியவர் அவர். தான் வாழ்ந்த காலத்தின்மீது தன் தனி முத்திரையைப் பதித்தவர். இந்திய நாட்டின் எதிர்கால வரலாற்றிலும் மானுட விடுதலைக்கான போராட்ட வரலாற்றிலும் தன் பெயர் நிலைத்திருக்குமாறு செய்துவிட்டவர் அவர்.

இந்தியாவில் தீண்டப்படாத வகுப்பினரிடம் வீறுகொண்டெழுந்து செயல்படக் கூடிய ஆற்றல் இன்னும் மடியாமல் இருக்கிறது என்பதை அம்பேத்கரின் வாழ்க்கை நிருபித்தது.

தீண்டப்படாத வகுப்பு மக்களின் ஆண்மைக்கு, வீரத்திற்கு, நற்பண்புகளுக்கு ஓர் உறுதியான சான்றாக அம்பேத்கருடைய வாழ்வு இலங்கியது. வகுப்பு, சாதி, சிறப்புரிமை, செல்வம், முதலானவற்றின் பேரால் எத்தகைய தடைகள் எழுப்பப்படினும், ஒருவர் தளரா உழைப்புடனும், தணியாத ஈடுபாட்டுடனும், ஈடற்ற துணிவுடனும், தன்னலமற்ற தியாகத்துடனும், தன்னைச் சிறந்த தோர் மனிதனாக உருவாக்கிக் கொள்ளவேண்டும் என்று உறுதி பூண்டு முயன்றால் அவ்வாறே ஆகமுடியும் என்பதற்குத் தீண்டப்படாத வகுப்பு மக்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாகவும், உந்து விசையாகவும் அம்பேத்கரின் வாழ்வு ஒளிர்கிறது. சமூகத்தில் தனிச்சிறப்புரிமை பெற்றுள்ள சாதியில் பிறந்த சிலரால் மட்டுமே தங்களுடைய தனி முயற்சியால் உயர்நிலை எய்தமுடியும் என்று இறுமாப்புக் கொண்டிருந்தவர்களின் எண்ணத்தை அம்பேத்கர் தவிடு பொடியாக்கினார். இனி அண்மைக்காலத்தில் அம்பேத்கரைப் போன்ற ஒருவரை நாம் காண்பதரிது. 'மாமனிதர்கள் பிறக்கும் போதே அவர்களின் எதிர்காலத்தை இயற்கை வடிவமைக்கிறது' என எமர்சன் கூறியுள்ளார். 'நான் எந்த வகுப்பில் பிறந்தேனோ அவ்வகுப்பு மக்கள் காலங்காலமாக வேதனையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்களுடைய இத்துன்பத்திற்குக் காரண மாக இருக்கின்ற இழிந்த அடிமை நிலையையும், மனிதத் தன்மையற்ற அநீதியையும் களைந்தெறியாவிட்டால், என்னையே நான் துப்பாக்கியால் சுட்டு மாய்த்துக் கொள்வேன்' - இது அம்பேத்கர் மேற்கொண்ட சிறப்புமிக்க சூளுரையாகும். சுதந்திர பாரத நாட்டின் அரசியல் அமைப்புச் சட்டத்தின் மூலம் தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது. இதன்மூலம் அம்பேத்கர் மேற்கொண்ட சூளுரை நிறைவேறிவிட்டது; அவர் கண்ட கனவு நனவாகிவிட்டது; அவருடைய இலட்சியம் ஈடேறிவிட்டது; அடிமைநிலை ஒழிக்கப் பட்டுவிட்டது. 'தீண்டாமையை ஒழிப்பேன்' என அவர் சூளுரைத் தார்; அவ்வாறே சாதித்தார்.

பாரத் பூஷன்* (பாரத் ரத்னா) அம்பேத்கரின் ஒப்பரிய வாழ்க்கை இவ்வாறாக அவரைப் பின்பற்றி நடப்போர்க்குப் புதிய கல்விக் களஞ்சியமாகவும், ஊக்கத்தின் ஊற்றாகவும் இலங்குகிறது. அம்பேத்கரின் வாழ்க்கையிலிருந்து ஒரு புதிய தெய்வம் தோன்றி யுள்ளது; அத்தெய்வத்தின் கோயிலில் எரியும் விளக்கை இந்நாட் டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் இவ்வுலகில் எவ்வளவு தொலைவி லிருந்தும் மக்கள் காணலாம்.

அறிவின் புதிய கல்விக் கூடம்; கவிதையின் புதிய ஊற்று; புண்ணியப் பயணத்திற்கான புதிய இடம்; இலக்கியத்திற்குப் புதிய வாயில் - இதுவே அம்பேத்கரின் வாழ்வு!!

★

அடிக்குறிப்புகள்

அடிக்குறிப்பு எண்	நூலின் பக்க எண்	குறிப்பு
1	4	டாக்டர் பி.டி. போரலே எழுதிய 'இந்தியாவில் ஒதுக்கி வைத்தலும் ஒன்றாக்குதலும் - ஒரு சமூகச் சட்ட ஆய்வு' என்ற நூல் பக்கம் 62-63
2	5	மகாராட்டிரிய தியான கோஷ், தொகுதி VII பக்கம் 644
3	6	1840-41ஆம் ஆண்டிற்கான கல்விக் கழக அறிக்கை, பக்கம் 24.
4	6	ஏ.பி. வத்தே எழுதிய 'கோல்ஹாப்பூர் சாகு மகாராசாபற்றிய நினைவுக்குறிப்புகள்' பக்கம் 135.
5	6	டி.ஜி. வைத்தியா எழுதிய 'நாராயண் கணேஷ் சந்தவார்க்கர்' மராத்தி நூலின் பக்கம் 61-62.
6	7	டாக்டர் ஜி.எஸ். குரியீ எழுதிய 'இந்தியாவில் சாதியும் வகுப்பும்', பக்கம் 166.
7	8	எம்.ஜி. பகத் எழுதிய 'மகாராட்டிராவின் தீண்டப்படாத வகுப்புகள்', பக்கம் 31-32.
8	11	ஜனதா ஏட்டின் தலையங்கம், 1933 சனவரி 7
9	14	1947 ஏப்பிரல் 13ஆம் நாள் நவயுகம் வெளியிட்ட அம்பேத்கர் சிறப்பு மலரில் பேராசிரியர் சத்தியபோத் ஹட்விகர் எழுதியது.
10	17	1937 நவம்பர் 20, ஜனதா ஏட்டில் வெளியான அம்பேத்கரின் பேச்சு.
11	21	1942 சனவரி 20, பம்பாய் செண்டினல் ஏட்டில் வெளியான அம்பேத்கரின் பேச்சு

12	24	1934 ஏப்பிரல் 14, ஜனதா இதழில் எஸ்.என். சிவ தாக்கர் எழுதியது.
13	25	1947 ஏப்பிரல் 13ஆம் நாள் நவயுகம் வெளியிட்ட அம்பேத்கர் சிறப்பு மலரில் பேராசிரியர் சத்திய போத் ஹட்லிகர் எழுதியது.
14	36	சி.பி. காயர்மோடே மராத்தியில் எழுதிய டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் (1923 வரையிலான) வாழ்க்கை வரலாற்று நூல், பக்கம் 66-67.
15	38	(The Indian Antiquity) 1917 மே இதழ், பக்கம் 81-95.
16	46	1936 மே 23ஆம் நாள் ஜனதா இதழில் அம்பேத்கரின் உரை.
17	48	'பிரிட்டிஷ் இந்தியாவில் மாகாண நிதியின் வளர்ச்சிக் கோட்பாடு' என்ற அம்பேத்கர் எழுதிய நூல், பக்கம் 207.
18	49	அனைத்திந்தியத் தீண்டாமை எதிர்ப்பு இயக்க அறிக்கை, பக்கம் 22.
19	49	மகாராட்டிரிய தியான கோஷ், தொகுதி VII பக்கம் 647.
20	51	இந்தியப் பொருளாதாரச் சங்கப் பத்திரிக்கை (The Journal of the Indian Economic Society) தொகுதி I எண் III
21	54	தி டைம்ஸ் ஆப் இந்தியா, 1919 சனவரி 16
22	55	பகிஷ்கிரித் பாரத், 1927 மே 20
23	57	1933 ஏப்பிரல், ஜனதா சிறப்பிதழில் எஸ்.என். சிவதார்க்கர் எழுதியது.
24	61	பிரபாகர் பாத்யே எழுதிய 'பிரகாஷ்தில் வியாக்தி' (மராத்தி) பக்கம் 30.
25	74	யங் இந்தியா, 1920 செப்டம்பர் 8

26	76	பகிஷ்கிரித் ஹிதகாரணி சபையின் அமைப்புச் சட்ட விதிகள், பக்கம் 1.
27	91	1933 ஏப்பிரல் ஜனதா சிறப்புமலர்
28	105	டாக்டர் ஜி.எஸ். குரியே எழுதிய இந்தியாவில் சாதியும் வகுப்பும், பக்கம் 11.
29	113	1927 ஜூலை 29, பகிஷ்கிரித் பாரத், தலையங்கம்.
30	119	1927 மே 20, பகிஷ்கிரித் பாரத்
31	119	1927 ஜூலை 1, பகிஷ்கிரித் பாரத்
32	126	1927 நவம்பர் 27, பகிஷ்கிரித் பாரத் தலையங்கம்.
33	132	1927 நவம்பர் 27, பகிஷ்கிரித் பாரத்
34	148	டி.வி. பராட்டே எழுதிய 'ஸ்ரீ கிட்டாலேல்பே முலக்கஹத்தி' (மராத்தி) நூல், பக்கம் 58-59
35	158	பம்பாய் மாகாணச் சட்டசபை விவாதங்கள், தொகுதி XXII பகுதி XI பக்கம் 708-721
36	159	1929 ஆகஸ்டு 16, பகிஷ்கிரித் பாரத் ஏட்டின் தலையங்கம்.
37	160	அனைத்துக்கட்சி மாநாட்டு அறிக்கை 1928, பக்கம் 59-60
38	162	இந்திய நிலைக்குழு அறிக்கை, தொகுதி XVI பக்கம் 37-47
39	164	இந்திய நிலைக்குழு அறிக்கை, தொகுதி XVI பக்கம் 52-57
40	170	இந்திய நிலைக்குழு அறிக்கை, தொகுதி XVI பக்கம் 56
41	171	இந்திய நிலைக்குழு அறிக்கை, தொகுதி XVI பக்கம் 87-156

42	185	பகிஷ்கிரித் பாரத், 1929 மே 31
43	190	பூனாவில் உள்ள பொதுக்கல்வி இயக்குநருக்கு அம்பேத்கர் 1929 டிசம்பர் 8ஆம் நாள் எழுதிய கடிதம்
44	192	பம்பாய்க் கிரானிக்கிள் ஏடு, 1929 நவம்பர் 8
45	207	கேசரி, 1930 ஆகஸ்டு 30
46	211	எஸ்.சி. போஸ் எழுதிய இந்தியச் சுதந்திரப் போராட்டம், பக்கம் 41
47	218	வட்டமேசை மாநாடு 1930-31, கூட்ட நடவடிக்கை அறிக்கை, பக்கம் 123-29
48	224	1930 டிசம்பர் 19இல் அம்பேத்கர் எழுதிய கடிதம்.
49	227	1931 சனவரி 31 அன்று அம்பேத்கர் எழுதிய கடிதம்
50	242	1947 ஏப்பிரல் 13இல், நவயுகம் அம்பேத்கர் சிறப்பு மலர்
51	243	நவஜீவன் பப்ளிஷிங் ஹவுஸ் வெளியிட்டுள்ள மகாதேவ தேசாயின் நாட்குறிப்பு, தொகுதி I பக்கம் 52
52	254	கூட்டாட்சி அமைப்புக்குழு மற்றும் சிறுபான்மையினர் குழு ஆகியவற்றின் கூட்ட நடவடிக்கை, பக்கம் 527
53	256	கூட்டாட்சி அமைப்புக்குழு மற்றும் சிறுபான்மையினர் குழு ஆகியவற்றின் கூட்ட நடவ டிகை, பக்கம் 534
54	260	தி டைம்ஸ் ஆப் இந்தியா, 1931 நவம்பர் 4
55	265	போல்ட்டன், கிளார்னி எழுதிய 'காந்தியின் அவல நிலை' என்ற நூல், பக்கம் 266-67
56	266	தி இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி ஆப் இந்தியா, 1936 சனவரி 14

57	266	எட்வர்ட், தாம்சன் எழுதிய 'இந்தியச் சுதந்திரத்திற்கான ஆதரவு திரட்டுதல்' நூல், பக்கம் 75
58	268	டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் எழுதிய 'தீண்டப்படாதவர்களுக்குக் காங்கிரசும் காந்தியும் செய்தது என்ன?' என்ற நூல், பக்கம் 55
59	274	கூட்டாட்சி அமைப்புக்குழு மற்றும் சிறுபான்மையினர் குழுவின் கூட்ட நடவடிக்கை அறிக்கை, பக்கம் 563-64
60	281	ஜனதா, 1932 சனவரி 30.
61	291	ஜனதா, 1932 சனவரி 25
62	296	பம்பாய்க் கிரானிக்கிள், 1932 ஆகஸ்டு 18.
63	311	பியாரிலால் எழுதிய 'The Epic Fast', பக்கம் 186
64	311	பியாரிலால் எழுதிய 'The Epic Fast', பக்கம் 189
65	340	ஜனதா, 1933 மார்ச் 11.
66	343	விவித விரிட்டா, 1933 மார்ச் 26
67	365	என்.சி. கெல்கர் எழுதிய தன் வரலாறு, (மராத்தி) பக்கம் 950.
68	371	தி டைம்ஸ் ஆப் இந்தியா, 1935 அக்டோபர் 18
69	373	தி டைம்ஸ் ஆப் இந்தியா, 1935 அக்டோபர் 16
70	375	விவித விரிட்டா, 1935 நவம்பர் 3
71	378	தி டைம்ஸ் ஆப் இந்தியா, 1935 நவம்பர் 30
72	383	1951 ஏப்பிரல் 14, ஜனதா ஏட்டில் எம்.வி. டோன் எழுதியது.

73	386	எஸ்.டி. கெ்ஷரசாகர் எழுதிய கோமண்டாக் சத்தி இயக்க வரலாறு, (மராத்தி) இணைப்பு I பக்கம் 32
74	391	'சர்தார் வல்லபாய் பட்டேலுக்குக் காந்தி எழுதிய கடிதங்கள்' என்ற நூல், பக்கம் 115
75	402	டாக்டர் கோகுல்சந்த் நராங் எழுதிய 'உண்மையான இந்துமதம்' என்ற நூல், பக்கம் 13
76	409	தி டைம்ஸ் ஆப் இந்தியா, 1936 சூலை 24
77	410	தி டைம்ஸ் ஆப் இந்தியா, 1936 ஆகஸ்டு 8
78	411	லூயி பிஷர் எழுதிய 'பேரரசு' என்ற நூல், பக்கம் 27
79	413	டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் எழுதிய 'பாக்கிஸ்தான் பற்றிய எண்ணங்கள்', பக்கம் 241
80	420	தி டைம்ஸ் ஆப் இந்தியா, 1941 அக்டோபர் 28
81	420	தி இந்து ஹெரால்டு, 1936 நவம்பர் 26
82	437	தி டைம்ஸ் ஆப் இந்தியா, 1938 சனவரி 4
83	438	ஜனதா, 1938 பிப்பிரவரி 15
84	440	ஜனதா, 1938 சனவரி 15
85	444	தி டைம்ஸ் ஆப் இந்தியா, 1938 பிப்பிரவரி 14
86	456	என்.சி. கெல்கரின் தன் வரலாறு (மராத்தி) பக்கம் 734
87	464	ஜனதா, 1938 டிசம்பர் 31
88	475	ஜனதா, 1939 சூலை 8
89	480	தி டைம்ஸ் ஆப் இந்தியா, 1939 அக்டோபர் 30
90	493	அம்பேத்கர் எழுதிய, 'காந்தியும் தீண்டப்படாத வகுப்பினர் விடுதலையும்' என்ற நூல், பக்கம் 60-61

91	495	என்.சி. கெல்கரின் கடிதங்கள்
92	501	'The Lokamanya' 1942 பிப்பிரவரி 20
93	507	தி டைம்ஸ் ஆப் இந்தியா, 1942 ஏப்பிரல் 20
94	509	'ஃபிரீ இந்துஸ்தான்' ஏட்டில் 1946 ஏப்பிரல் 14 அன்று பிதே குருஜி எடுத்தாண்டுள்ள மேற்கோள்
95	528	எச்.வி.தேசாய் எழுதிய 'மோதியஞ்சய முலக்க ஹத்தி' (மராத்தி)
96	540	ஃபிரீ பிரஸ் ஜர்னல், 1944 செப்டம்பர் 26
97	541	ஃபிரீ பிரஸ் ஜர்னல், 1944 செப்டம்பர் 26
98	542	தி இந்து, 1944 செப்டம்பர் 29
99	542	தி டைம்ஸ் ஆப் இந்தியா, 1944 செப்டம்பர் 26
100	566	அரிஜன், 1946 ஆகஸ்டு 9
101	577	அம்பேத்கர் எழுதிய 'இரானடே, காந்தி, ஜின்னா' என்ற நூல், பக்கம் 36-37
102	578	'தீண்டப்படாத வகுப்பினர்க்குக் காங்கிரசும் காந்தியும் செய்தது என்ன?'' என்ற அம்பேத்கரின் நூல், பக்கம் 283-284
103	579	எச்.வி.தேசாய் எழுதிய மோதியஞ்சய முலக்க ஹத்தி (மராத்தி)யில் பக்கம் 26
104	579	1947 ஏப்பிரல் 13, நவயுகம் அம்பேத்கர் சிறப்பு மலர்
105	581	டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் எழுதிய சாதி ஒழிப்பு, பக்கம் 17-19
106	593	ஃபிரீ பிரஸ் ஜர்னல், 1947 நவம்பர் 28
107	594	தாக்கர் அண்ட் கோ, பம்பாய்
108	599	எஸ்.ஆர். கரத் எழுதிய டாக்டர் பாபாசாகிப் அம்பேத்கரன்ஜி பேட்ரன் (மராத்தி) பக்கம் 266

109	612	அனைத்திந்திய நகராட்சிப் பணியாளர் கூட்டமைப்புச் செயலாளரின் அறிக்கை
110	613	எம்.வி. பைலீ எழுதிய இந்திய அரசியல் சட்டம், பக்கம் 169-172
111	624	தி டைம்ஸ் ஆப் இந்தியா, 1950 சனவரி 12
112	625	ஜனதா, 1950 ஏப்பிரல் 22
113	629	ஜனதா, 1950 சூன் 10
114	635	தி டைம்ஸ் ஆப் இந்தியா, 1951 பிப்பிரவரி 7
115	637	மகாபோதி, 1951 மே, சூன் இதழ்
116	641	தி டைம்ஸ் ஆப் இந்தியா, 1951 மே 19
117	652	எஸ்.ஆர். கரத் எழுதிய டாக்டர் பாபாசாகிப் அம்பேத்கரன்ஜி பேட்ரன் (மராத்தி), பக்கம் 280
118	665	தி டைம்ஸ் ஆப் இந்தியா, 1952 டிசம்பர் 29
119	666	ஃபிரீ பிரஸ் ஜர்னல், 1953 பிப்பிரவரி 16
120	667	தி இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி ஆப் இந்தியா, 1953 சூலை 12
121	755	நார்மன் கசின்ஸ் எழுதிய 'நேருவுடன் சந்திப்பு', பக்கம் 10-11
122	755	தி டைம்ஸ் ஆப் இந்தியா, 1956 பிப்பிரவரி 7
123	761	ஹண்டர் எழுதிய 'பண்டைய இந்தியா', பக்கம் 175
124	761	இரவீந்திரநாத் தாகூர் எழுதிய புத்ததேவ், பக்கம் 17
125	784	மகாபோதி, 1958 சனவரி
126	787	மகாபோதி, 1959 டிசம்பர்
127	787	தம்ம ஒளி (The Light of Dhamma), 1959 சனவரி
128	788	டாக்டர் ரைஸ் டேவிஸ் எழுதிய 'பௌத்தம்' என்ற நூல், பக்கம் 116-117

வாழ்க்கைக் குறிப்புகள்

1848	டாக்டர் பி.ஆர். அம்பேத்கரின் தந்தை ராம்ஜி மாலோஜி சக்பால் பிறந்தார்.
	ஜோதிராவ் புலே பூனாவில் பெண்களுக்கான ஒரு பள்ளியைத் தொடங்கினார். பெண்களுக்கென மகாராட்டிரத்தில் தொடங்கப்பட்ட முதலாவது பள்ளி இதுவே.
1851-52	ஜோதிராவ் புலே பூனாவில் தீண்டப்படாத மாணவர்களுக்கென ஒரு பள்ளியைத் தொடங்கினார்.
1854	அம்பேத்கரின் அன்னை பீமாபாய் பிறந்தார்.
1866	ராம்ஜி மாலோஜி சக்பால் இராணுவத்தில் தூசிப்படைப் பிரிவில் சேர்ந்தார்
1867	ராம்ஜி மாலோஜி சக்பால் பீமாபாயை மணந்தார்.
24.9.1873	ஜோதிராவ் புலே சத்திய சோதக் சமாஜத்தை (உண்மை நாடுவோர் சங்கம்) நிறுவினார். சூத்திரர்களைப் பார்ப்பன ஆதிக்கத்திலிருந்தும், சாத்திர, புராண சூழ்ச்சிகளிலிருந்தும் விடுவிப்பதே இச்சங்கத்தின் நோக்கமாகும்.
26.7.1874	அம்பேத்கர் வெளிநாட்டில் கல்வி கற்பதற்கு உதவிய கோல்ஹாப்பூர் சிற்றரசர் சாகு சத்ரபதியின் தோற்றம்.
1882	பரோடா மன்னர் சாயாஜிராவ் கெய்க்வாடு தீண்டப்படாத வகுப்பு மாணவர்களுக்கெனப் பள்ளிகளைத் தொடங்கினார்.
14.4.1891	பீமாராவ் ராம்ஜி அம்பேத்கர் மோவ் (MHOW) என்ற இடத்தில் பிறந்தார். M.H.O.W. - Military Headquarters Of War)
1894	சுபேதார் இராம்ஜி இராணுவப் பணியிலிருந்து ஓய்வு பெற்றார். குடும்பத்தை மத்திய இந்தியாவிலிருந்து தபோலிக்குக் கொண்டு சென்றார்.
1896	தபோலியில் இராமாபாய் பிறந்தார்.

	பீம் தபோலியில் பள்ளியில் தன் கல்வியைத் தொடங்கினார்.
7.1.1900	சத்தாராவில் அரசினர் நடுநிலைப் பள்ளியில் ஆறாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த பீமின் பெயர் பள்ளிப் பதிவேட்டில் 'பீமாராவ் ராம்ஜி அம்பவடேகர்' என்று இருந்தது; பீமின் ஆசிரியரான 'அம்பேத்கர்'என்பவர் 'அம்பவடேகர்' என்பதை 'அம்பேத்கர்' என்று பள்ளிப் பதிவேட்டில் அவராகவே மாற்றிவிட்டார்.
1901	சுபேதார் இராம்ஜி தன் குடும்பத்தைச் சத்தாராவிலிருந்து பம்பாயில் கீழ் பரேல் பகுதிக்கு மாற்றினார். பீம் மராத்தா உயர்நிலைப் பள்ளியில் சேர்க்கப்பட்டார்; உடனேயே எல்பின்ஸ்டன் உயர்நிலைப் பள்ளியில சேர்ந்தார்.
26.7.1902	கோல்ஹாப்பூர் சிற்றரசர் சாகு சத்திரபதி தன் ஆட்சியின் கீழ் உள்ள அரசுப் பதவிகளில் 50 விழுக்காட்டினைப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்க்கென ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்தார்.
1906 ஏப்பிரல்	அம்பேத்கர் இராமாபாயை மணந்தார்.
1907	அம்பேத்கர் மெட்ரிகுலேஷன் தேர்வில் வெற்றி பெற்றார். அதற்காக எஸ்.கே. போலே தலைமையில் அவருக்கு ஒரு பாராட்டுக் கூட்டம் நடத்தப்பட்டது. அப்போது கெலுஸ்கர் தான் எழுதிய, 'பகவான் புத்தரின் வரலாறு' என்ற நூலை அம்பேத்கருக்குப் பரிசாக வழங்கினார்.
3.1.1908	அம்பேத்கர் பம்பாய் எல்பின்ஸ்டன் கல்லூரியில் சேர்ந்தார்.
5.4.1910	அம்பேத்கர் பரோடா மன்னரைச் சந்தித்துப் பேசினார். அதன் விளைவாக அவருக்குப் பரோடா மன்னரால் மாதம் ரூ.25 கல்வித் தொகையாக வழங்கப்பட்டது.
1912 சனவரி	அம்பேத்கர் பி.ஏ. தேர்வில் வெற்றி பெற்றார்.
12.12.1912	அம்பேத்கரின் மூத்தமகன் யசுவந்தன் பிறந்தான்.
23.1.1913	அம்பேத்கர் பரோடா சென்று மன்னரிடம் பணியில் சேர்ந்தார். அங்குப் பதினோரு நாட்களே பணியில் இருந்தார். தன் தந்தைக்கு உடல்நலமில்லை என்று தந்தி வந்ததால் பம்பாய்க்குத் திரும்பினார்.

2.2.1913	அம்பேத்கரின் தந்தை இராம்ஜி தன் 65ஆம் வயதில் இறந்தார்.
1913	பரோடா மன்னர் அமெரிக்காவில் கொலம்பியாப் பல்கலைக் கழகத்தில் மேற்படிப்புப் படிப்பதற்காக மாணவர்களை அனுப்புவது என்று முடிவு செய்திருப்பதாக அறிவித்தார்.
4.4.1913	பரோடா மன்னர் அம்பேத்கருக்கு மூன்று ஆண்டுகளுக்கு *(15.6.1913 முதல் 14.6.1916 வரை)* மாதந்தோறும் 11.50 டாலர் கல்வி உதவித்தொகையை அளிப்பதற்கான ஆணையைப் பிறப்பித்தார்.
18.4.1913	அயல்நாடு சென்று படிப்பதற்கான பரோடா அரசின் ஒப்பந்தத்தில் அம்பேத்கர் கையொப்பம் இட்டார்.
23.4.1913	டாக்டர் பி.ஆர். அம்பேத்கரின் வாழ்வும் தொண்டும் என்று ஆங்கிலத்தில் அவருடைய வரலாற்றை எழுதிய-புகழ்பெற்ற எழுத்தாளரான தனஞ்சய்கீர் பிறந்தார்.
20.7.1913	அம்பேத்கர் நியூயார்க் சென்றடைந்தார். கொலம்பியாப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார்.
1913	அம்பேத்கரின் மகன் ரமேஷ் குழந்தைப் பருவத்திலேயே இறந்தான்.
2.6.1915	அம்பேத்கர் கொலம்பியாப் பல்கலைக் கழகத்தில் எம்.ஏ. தேர்வில் தேறினார். முதன்மையான பாடமாகப் பொருளாதாரத்தையும், துணைப்பாடங்களாகச் சமூகவியல், வரலாறு, தத்துவம், மாந்தவியல், அரசியல் ஆகியவற்றையும் பயின்றார்.
9.5.1916	'இந்தியாவில் சாதிகள்' என்ற சிந்தனையைத் தூண்டும்படியான கட்டுரையை ஒரு கருத்தரங்கில் படித்தார். அச்சு வடிவில் வெளிவந்த அம்பேத்கரின் முதலாவது நூல் இதுவேயாகும்.
1916 மே	இலண்டனில் பொருளாதாரத்தில் எம்.எஸ்., ஆய்வுப் பட்டத்தையும், மற்றும் டி.எஸ்., உயர் ஆய்வுப் பட்டத்தையும் பெறுவதற்காகவும், பாரிஸ்ட்டர் பட்டம் பெறுவதற்காகவும் அமெரிக்காவிலிருந்து புறப்பட்டார்.
1917	கொலம்பியாப் பல்கலைக்கழகம் அம்பேத்கரின் பிஎச்.டி., (Ph.D) பட்டத்திற்கான ஆய்வுக் கட்டுரையை ஏற்றுக்கொண்டது.

21.8.1917	பரோடா அரசிடமிருந்து கல்வி உதவித்தொகை பெறுவதற்கான காலம் முடிந்து விட்டதால் இலண்டனிலிருந்து இந்தியாவிற்குத் திரும்பினார்.
1917 செப்டம்பர்	பரோடா அரசில் இராணுவச் செயலாளர் பதவியில் சேர்ந்தார். தன் அண்ணனுடன் பார்சி விடுதி ஒன்றில் தங்கியிருந்தார். தீண்டப்படாதவர் என்ற காரணத்தால் இழிவாக நடத்தப்பட்டுத் துன்புறுத்தப்பட்டதால் பம்பாய்க்குத் திரும்பிவிட்டார்.
1917 நவம்பர்	அம்பேத்கரின் சிற்றன்னை ஜீஜாபாய் இறந்தார். அம்பேத்கரின் அண்ணன் ஆனந்தராவ் மறைந்தார்.
1918 மார்ச்சு	பெர்ட்ரண்ட் ரசல் எழுதிய 'சமூகத்தை மாற்றியமைப்பதற்கான கோட்பாடுகள்' என்ற நூல் குறித்து அம்பேத்கர் எழுதிய திறனாய்வுக் கட்டுரை இந்தியப் பொருளாதார இதழில் வெளியிடப்பட்டது.
11.11.1918	பம்பாய் சைடன்ஹாம் கல்லூரியில் அம்பேத்கர் அரசியல் பொருளாதாரத் துறையில் பேராசிரியராக நியமிக்கப்பட்டார். (இப்பதவியில் 11.3.1920 வரை இருந்தார்).
1918	'இந்தியாவில் சிறு நிலங்களும் அவை பற்றிய தீர்வுகளும்' என்ற அம்பேத்கரின் கட்டுரை இந்தியப் பொருளாதாரச் சங்க ஏட்டில் (Vol.I Nos.2 & 3) வெளியிடப்பட்டது. அம்பேத்கரின் மகன் கங்காதர் பிறந்தான்.
16.1.1919	அம்பேத்கர் 'தி டைம்ஸ் ஆப் இந்தியா' ஏட்டிற்கு 'மகார்' என்ற புனைப்பெயரில் ஒரு கட்டுரை எழுதினார். அக்கட்டுரையில், சுயாட்சி என்பது பார்ப்பனர்களின் பிறப்புரிமையாக இருப்பதைப்போலவே மகார்களின் பிறப்புரிமையாகவும் இருக்கிறது; ஆயினும் முதலில் தீண்டப்படாத வகுப்பினரை உயர்த்திட வேண்டும் என்று எழுதினார்.
27.1.1919	சவுத்பரோ குழுவிடம் வாக்குரிமை குறித்துத் தன் கருத்துகளை எடுத்துரைத்தார்.
1919	கோல்ஹாப்பூர் சிற்றரசர் தன் ஆட்சியின் கீழ் பள்ளிகள், அலுவலகங்கள், பொதுக்கிணறுகள், சத்திரங்கள் மற்றும் இன்னபிற இடங்களில் தீண்டாமையைக் கடைப்பிடிக்கக்கூடாது என்று ஆணை பிறப்பித்தார். தீண்டப்படாதவர்களுக்கென்று தனியாக இருந்த பள்ளிகளை மூடினார்.

31.1.1920	'மூக்நாயக்' (ஊமைகளின் தலைவன்) என்ற வார இதழை அம்பேத்கர் தொடங்கினார்.
15.3.1920	இலண்டனில் உயர்கல்வியைத் தொடருவதற்காகச் சைடன்ஹாம் கல்லூரியின் பேராசிரியர் வேலையிலி ருந்து விலகினார்.
20.3.1920	கோல்ஹாப்பூர் சிற்றரசில் மன்கோன் என்ற ஊரில் நடைபெற்ற மாநாட்டிற்கு அம்பேத்கர் தலைமை ஏற் றார். அம்மாநாட்டில் சாகு சத்திரபதி உரையாற்றிய போது, 'தீண்டப்படாத வகுப்பு மக்களின் முன்னேற்றம் என்ற இலட்சியத்தை அடையும்வரை அம்பேத்கர் ஓயமாட்டார்; இந்த நாட்டையே அம்பேத்கர் வழிநடத் திச் செல்லக்கூடிய காலம் வரும் என்று நான் உறுதியாக நம்புகின்றேன்' என்று குறிப்பிட்டார்.
30.5.1920 1.6.1920	நாகபுரியில் நடைபெற்ற அனைத்திந்தியத் தீண்டப்ப டாத வகுப்பினரின் முதலாவது மாநாட்டில் அம்பேத்கர் கலந்து கொண்டார். இம்மாநாட்டிற்கு சாகு சத்திரபதி தலைமை தாங்கினார்.
5.7.1920	தன் கல்வியைத் தொடருவதற்காக இலண்டனுக்குப் பயணமானார்.
1.8.1920	பால கங்காதர திலகர் மறைந்தார்.
30.9.1920	அம்பேத்கர் இலண்டனில் பொருளாதாரம் மற்றும் அரசியல் விஞ்ஞானத்திற்கான கல்வி நிறுவனத்திலும், 'கிரேஸ் இன்' சட்டக் கல்லூரியிலும் தன் படிப்பைத் தொடருவதற்காகச் சேர்ந்தார்.
1920	தான் எழுதிய 'சமூக மாற்றத்திற்கான கோட்பாடுகள்' என்ற நூல் குறித்து விவாதிப்பதற்காகப் பெர்ட்ரண்ட் ரசல் அம்பேத்கரை அழைத்தார்.
1922 மார்ச்சு	அம்பேத்கர் டாக்டர் பட்டம் பெறுவதற்காக எழுதிய ளித்திருந்த 'ரூபாயின் சிக்கல்' என்ற ஆய்வுக் கட்டுரை யில் பிரிட்டிஷ் அரசுக்கு எதிராக எழுதப்பட்டுள்ள வற்றை மாற்றியமைக்கும் பொருட்டு அவருடைய ஆசிரியரும் பேராசிரியருமான எட்வின் கனான் அம் பேத்கரை அழைத்தார்.

1922 ஏப்பிரல்	அம்பேத்கர் செருமனியில் இருந்த பான் பல்கலைக் கழகத்தில் மேற்படிப்புப் படிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யும் பொருட்டுச் சென்றார். அங்கு ஒரு மாதம் தங்கியிருந்தபின் இலண்டன் திரும்பினார்.
1922 நவம்பர்	தீண்டப்படாத வகுப்பு மாணவர்கள் தங்கிப் படிப்பதற்கென மாணவர் விடுதிகளை பூனாவில் அரசு தொடங்கியது. மகாராட்டிரத்தில் தீண்டப்படாத வகுப்பு மாணவர்களுக்கெனத் தொடங்கப்பட்ட முதலாவது மாணவர் விடுதி இதுவேயாகும்.
3.4.1923	அம்பேத்கர் இலண்டனிலிருந்து இந்தியாவிற்குத் திரும்பினார்.
1923	'ரூபாயின் சிக்கல்' என்ற தன்னுடைய ஆய்வுக் கட்டுரையைத் திருத்தியெழுதி மீண்டும் இலண்டன் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பினார்.
5.7.1923	பம்பாயில் பாரிஸ்டராக வழக்குரைஞர் தொழிலைத் தொடங்கினார்.
4.8.1923	'அரசால் கட்டப்பட்ட அல்லது நிர்வகிக்கப்படுகின்ற எல்லாப் பொதுக்குடிநீர் நிலைகளையும், கிணறுகளையும், தரும சத்திரங்களையும், மற்றும் பள்ளிகளையும், நீதிமன்றங்களையும், அலுவலகங்களையும், மருத்துவமனைகளையும் தீண்டப்படாத வகுப்பு மக்கள் பயன்படுத்திட அனுமதிக்க வேண்டும்' என்று எஸ்.கே. போலே கொண்டுவந்திருந்த தீர்மானத்தைப்பம்பாயில் மாகாணச் சட்டசபை நிறைவேற்றியது.
11.9.1923	போலேவின் தீர்மானத்திற்கு ஏற்ப அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டன.
1923 நவம்பர்	ரூபாயின் சிக்கல் என்ற அம்பேத்கரின் ஆய்வுக் கட்டுரையை இலண்டன் பல்கலைக்கழகம் ஏற்றுக்கொண்டது; டி.எஸ்., (Doctor of Science) என்ற உயர் ஆய்வுப் பட்டத்தை அவருக்கு வழங்கியது.
9.3.1924	தீண்டப்படாத வகுப்பு மக்களின் உயர்வினுக்காகப் போராடுவதற்காகப் 'பகிஷ்கிரித் ஹித்தகாரணி சபா' என்ற அமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக அம்பேத்கர் பம்பாய் தாமோதர் அரங்கில் ஒரு கூட்டத்தைக் கூட்டினார்.

1924 மார்ச்சு	தீண்டாமை ஒழிப்புக்காக, வைக்கம் சத்தியாக்கிரகத்தை டி.கே. மாதவன், கேளப்பன், ஈ.வெ. இராமசாமி ஆகியோர் தொடங்கினார்கள்.
1924 ஏப்பிரல்	மூக்நாயக் இதழ் நிறுத்தப்பட்டது.
15.6.1924	அம்பேத்கரின் மகன் இராஜரத்னா பிறந்தான்.
22.6.1924	சத்ராவில் பள்ளியில் பீமாராவ் அம்பேத்கருக்கு ஆசிரியராக இருந்த அம்பேத்கர் டாக்டர் பி.ஆர். அம்பேத்கரைப் பல ஆண்டுகள் கழித்துச் சந்தித்தார்.
20.7.1924	பம்பாய் தாமோதர் அரங்கில் அம்பேத்கர் கூட்டிய கூட்டத்தில் 'பகிஷ்கிரித் ஹித்தகாரணி சபை'யைத் தொடங்குவது என்று முடிவு செய்யப்பட்டது. அதன் கொள்கைகள் வரையறுக்கப்பட்டன.
4.1.1925	பகிஷ்கிரித் ஹித்தகாரணி சபை ஷோலாப்பூரில் தீண்டப்படாத வகுப்பு மாணவர்கள் தங்கிப் படிப்பதற்கான விடுதி ஒன்றைத் தொடங்கியது.
1925 மார்ச்சு *10, 11*	பெல்காம் மாவட்டத்தில் நிப்பானியில் நடைபெற்ற பகிஷ்கிரித் ஹித்தகாரணி சபையின் மாநாட்டிற்குத் தலைமை தாங்கி உரையாற்றினார். முதலில் மேற்கொள்ளப்பட வேண்டியது அரசியல் மாற்றத்தைவிட சமூக மாற்றமே என்பதை வலியுறுத்தினார். வைக்கம் சத்தியாக்கிரத்தை எடுத்துக்காட்டிப் பேசினார்.
	கொலம்பியா பல்கலைக்கழகத்தில் தத்துவஇயலில் டாக்டர் பட்டம் பெறுவதற்காக அம்பேத்கர் எழுதிய பிரிட்டிஷ் இந்தியாவில் மாகாண நிதியின் பரிணாம வளர்ச்சி என்ற ஆய்வுக் கட்டுரையை இலண்டனிலிருந்த பி.எஸ். கிங் அண்ட் சன்ஸ் கம்பெனி நூலாக வெளியிட்டது. அம்பேத்கருக்குக் கொலம்பியாப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருந்த எட்வின் ஆர்.ஏ. செலிக்மேன் இந்நூலுக்கு முன்னுரை எழுதியுள்ளார். இந்நூலை அம்பேத்கர் தன்னுடைய உயர்கல்விக்கு உதவிய பரோடா மன்னர் சாயாஜிராவ் கெய்க்வாடு அவர்களுக்குக் காணிக்கையாக்கியுள்ளார்.
10.6.1925	பட்லிபாய் கணக்கியல் பயிற்சி நிறுவனத்தில் அம்பேத்கர் பகுதிநேர விரிவுரையாளராகச் சேர்ந்தார். 31.3.1928 வரை இந்நிறுவனத்தில் கற்பித்தார்.

27.8.1925	இந்திய நாணயம் (Indian Currency) குறித்து ராயல் கமிஷன் அமைக்கப்பட்டது.
15.12.1925	இந்திய நாணயம் குறித்த ராயல் கமிஷன் முன் அம்பேத்கர் சாட்சியம் அளித்தார்.
1.4.1926	பகிஷ்கிரித் ஹித்தகாரணி சபா பதிவு செய்யப்பட்டது.
19.7.1926	அம்பேத்கரின் மகன் இராஜரத்னா குழந்தைப் பருவத்திலேயே இறந்தார்.
5.8.1926	4.8.1923இல் நிறைவேற்றப்பட்ட போலேவின் தீர்மானத்தின்படி செயல்படாத நகராட்சிகளுக்கு அரசின் உதவித்தொகை நிறுத்தப்படும் என்ற போலேவின் திருத்தத் தீர்மானம் பம்பாய் மாகாணச் சட்டசபையில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.
1926 அக்டோபர்	எம்.சி. இராஜா அனைத்திந்தியத் தீண்டப்படாத வகுப்பினர் சங்கத்தை ஏற்படுத்தினார்.
1926 டிசம்பர்	அம்பேத்கரும், பி.ஜி. சோலங்கியும் பம்பாய் மாகாணச் சட்டசபையின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர்.
24.2.1927	பம்பாய் மாகாணச் சட்டசபையில் அம்பேத்கர் தன் கன்னிப்பேச்சை நிகழ்த்தினார்.
16.3.1927	மகத் சத்தியாக்கிரகத்தில் கலந்து கொள்வதற்காக விசைப் படகில் பம்பாயிலிருந்து புறப்பட்டார்.
1927 மார்ச்சு 19, 20	மகத் நகரில், சவுதார் குளத்திலிருந்து தீண்டப்படாத வகுப்பு மக்கள் நீர் எடுக்கும் உரிமையை நிலைநாட்டுவதற்காக மகத் சத்தியாக்கிரகத்தை முன்னின்று நடத்தினார். மார்ச்சு 20ஆம் நாள் அம்பேத்கர் சவுதார் குளத்தில் இறங்கி நீரை அள்ளிப் பருகினார். அதன்பின் சாதி இந்துக்கள் மகத் மாநாட்டிற்கு வந்திருந்த தீண்டப்படாத வகுப்பு மக்களைத் தாக்கினார்கள்.
21.3.1927	அம்பேத்கரும் அவருடைய தொண்டர்களும் சவுதார் குளத்தின் நீரைத் தொட்டதால் அக்குளம் தீட்டாகிவிட்டது என்று கருதிய பார்ப்பனர்கள் அதற்குத் தீட்டுக் கழிப்புச் சடங்கைச் செய்தனர்.

3.4.1927	மாதம் இருமுறை இதழாகப் 'பகிஷ்கிரித் பாரத்' என்ற இதழை அம்பேத்கர் தொடங்கினார். இதன் ஆசிரியராக அம்பேத்கர் இருந்தார்.
3.5.1927	கல்யாணுக்கு அருகில் பத்லபூரில் நடைபெற்ற சிவாஜி யின் பிறந்தநாள் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார்.
6.6.1927	மகத் மாநாட்டின்போது தீண்டப்படாத வகுப்பு மக்க ளைத் தாக்கியதற்காகச் சாதி இந்துக்கள் அய்ந்து பேர் களுக்கு நீதிமன்றம் தண்டனை விதித்தது.
3.7.1927	மகத் சத்தியாக்கிரகத்தின்போது தீண்டப்படாத வகுப்பு மக்கள் தாக்கப்பட்டதைக் கண்டிப்பதற்காகப் பகிஷ்கிரித் ஹித்த காரணி சபையின் சார்பில் கவாஸ்ஜி ஜகாங்கீர் அரங்கில் அம்பேத்கர் தலைமையில் ஒரு கூட்டம் நடத்தப்பட்டது.
	அக்கூட்டத்தில் தீபாவளி கழித்து மகதில் ஒரு மாநாட் டைக் கூட்டி மீண்டும் சத்தியாக்கிரகம் நடத்துவதுபற்றி முடிவு செய்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.
	தீண்டப்படாத வகுப்பு மக்களின் குறைகளைக் கவனிப் பதற்கெனச் சென்னை மாகாணத்தில் தனியாக ஒரு துறையை அரசு ஏற்படுத்தியிருப்பதுபோல் பம்பாய் மாகாணத்திலும் ஏற்படுத்த வேண்டும் என்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
26.7.1927	தீண்டப்படாத வகுப்பு மக்கள் அமராவதி கோயில் நிர்வாகத்தினர்க்கு ஒரு காலக்கெடு கொடுத்தனர்.
4.8.1927	தீண்டப்படாத வகுப்பினர் பொதுக்குடிநீர் நிலைகளில் தண்ணீர் எடுக்க அனுமதிப்பது என்று 5.1.1924இல் நிறைவேற்றிய தீர்மானத்தை மகத் நகராட்சி திரும்பப் பெற்றுக்கொண்டது. இதன்மூலம் சவுதார் குளத்தில் தீண்டப்படாத வகுப்பு மக்கள் நீர் எடுப்பதற்கான உரிமை மறுக்கப்பட்டது.
21.8.1927	அமராவதி கோயில் நிர்வாகம் தீண்டப்படாத வகுப்பு மக்களைக் கோயிலுக்குள் நுழைய அனுமதிக்காது என அறிவித்தது.
11.9.1927	பம்பாயில் தாமோதர் அரங்கில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் மகதில் மீண்டும் சத்தியாக்கிரகம் நடத்துவ தற்கான ஒரு குழு அமைக்கப்பட்டது.

15.9.1927	மகத் சத்தியாக்கிரகக் குழு டிசம்பர் 25, 26 ஆகிய நாட்களில் மகதில் சத்தியாக்கிரகம் நடத்தப்படும் என அறிவித்தது.
1927 செப்டம்பர்	அம்பேத்கரின் வாழ்க்கை வரலாற்றை மராத்தியில் எழுதிய புகழ்பெற்ற சி.பி.காயர்மோடே (C.B. Khairmoday) என்பவர் அம்பேத்கரைப் 'பாபாசாகப்' என்றும் அம்பேத்கரின் துணைவியார் இரமாபாய் அவர்களை 'ஆயிசாகப்' என்றும் அழைக்க வேண்டும் என்று கருத்துரைத்தார். (1930 முதல் இவ்வாறு அழைப்பது என்பது நடைமுறைக்கு வந்தது).
12.11.1927	அம்பேத்கரின் அண்ணன் பலராமன் தன் 56ஆம் அகவையில் மறைந்தார். இச்செய்தி அமராவதியில் இருந்த அம்பேத்கருக்குத் தந்தி மூலம் தெரிவிக்கப்பட்டது.
1927 நவம்பர் 13, 14	அமராவதி கோயில் நுழைவுப் போராட்டம் குறித்து இறுதியானதோர் முடிவெடுப்பதற்காக அம்பேத்கர் தலைமையில் அமராவதியில ஒரு மாநாடு நடைபெற்றது.
17.11.1927	அம்பேத்கரின் எதிரிகள் மகத் சத்தியாக்கிரகத்தை முறியடிக்க வேண்டும் என்பதற்காக மகதில் வீரேசுவரர் கோயிலில் ஒரு கூட்டத்தைக் கூட்டினர். ஆனால் அக்கூட்டம் பெருங் குழப்பத்தில் முடிந்தது.
7.12.1927	கொலாபா மாவட்ட ஆட்சித் தலைவர் மகத் சென்று இருதரப்பினரிடமும் பேசினார். தீண்டப்படாத வகுப்பு மக்கள் சவுதார் குளத்திலிருந்து நீர் எடுப்பதற்குத் தடைவிதிக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்க மறுத்துவிட்டார்.
12.12.1927	மகதின் சாதி இந்துக்கள் சவுதார் குளத்தில் தீண்டப்படாத வகுப்பினர் நீர் எடுப்பதற்குத் தடைஆணை பிறப்பிக்கக் கோரி மகத் உரிமையியல் நீதிமன்றத்தில் அம்பேத்கர் மீதும் மற்றவர்கள்மீதும் வழக்குத் தொடுத்தனர்.
14.12.1927	மகத் உரிமையியல் நீதிமன்றம் சவுதார் குளத்திலிருந்து தீண்டப்படாத வகுப்பினர் நீர் எடுப்பதற்கு இடைக்காலத் தடை ஆணையைப் பிறப்பித்தது.

19.12.1927	முக்கிய அரசு அதிகாரிகள் மகதில் முகாமிட்டனர். சவுதார் குளத்தைச் சுற்றிலும் காவல்துறையினர் காவல் புரிந்தனர்.
24.12.1927	மகத் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அம்பேத்கர் தன் தோழர்களுடன் பம்பாயிலிருந்து கடல்வழியாகப் புறப்பட்டார்.
25.12.1927	மாலை 4 மணிக்கு மகத் மாநாடு தொடங்கியது. அன்றிரவு 7.30 மணிக்கு மாநாட்டில் மனுஸ்மிருதி எரிக்கப்பட்டது.
26.12.1927	நீதிமன்ற ஆணையைத் தீண்டப்படாத வகுப்பினர் மதிக்க வேண்டும் என்று கோரிய மாவட்ட ஆட்சித் தலைவரின் கடிதம் மாநாட்டில் படிக்கப்பட்டது. அன்று மாலை மாவட்ட ஆட்சித் தலைவர் மாநாட்டில் பேசினார்.
27.12.1927	நீதிமன்றத்தில் வழக்கு முடியும்வரை மகத் சத்தியாக்கிரகத்தைத் தள்ளி வைப்பதென மாநாடு முடிவு செய்தது.
28.12.1927	அம்பேத்கரும் அவருடைய தோழர்களும் மகதிற்கு அருகில் உள்ள பௌத்தக் குகைகளைப் பார்வையிட்ட பின் சிவாஜியின் தலைநகராக விளங்கிய ராய்காட்டைக் காணச் சென்றனர்.
1927	அப்பாதுரை என்பவர் கோலார் தங்கவயலில் தென்னிந்தியப் பௌத்தச் சங்கத்தை நிறுவினார். இவர் தென்னிந்தியாவில் அம்பேத்கரின் கருத்துகளைப் பரப்பினார். பின்னாளில் தீண்டப்படாத சாதிகள் பேரவையை அமைப்பதற்கு உதவினார்.
3.2.1928	சைமன் குழு இந்தியாவிற்கு வந்தது.
29.5.1928	தீண்டப்படாத வகுப்பு மக்களின் கல்வி, வேலை வாய்ப்பு, அரசியல் தொடர்பான பிரச்சினைகள் குறித்து அச்சிடப்பட்ட அறிக்கையை அம்பேத்கர் சைமன் குழுவிற்கு அனுப்பினார்.
21.6.1928	பம்பாய் சட்டக் கல்லூரியில் பேராசிரியராக நியமிக்கப்பட்டார்.

29.6.1928	'சமதா' என்ற பெயரில் மாத இதழ் ஒன்று தொடங்கப் பட்டது. இதன் ஆசிரியர் தியோராவ் விஷ்ணு நாயக்.
3.8.1928	'மகார் வட்டன்' முறையை ஒழிப்பதற்கான ஒரு மசோதாவை அம்பேத்கர் பம்பாய் மாகாணச் சட்டசபையில் முன்மொழிந்தார்.
5.8.1928	பம்பாய் மாகாணச் சட்டசபை சைமன் குழுவுடன் செயல்படுவதற்கான குழுவிற்கு அம்பேத்கரைத் தேர்வு செய்தது.
1928 அக்டோபர்	பம்பாய் நெசவாலைத் தொழிலாளர்களின் முதலாவது வேலைநிறுத்தம். இதில் 1,50,000 தொழிலாளர்கள் கலந்து கொண்டனர். தீண்டப்படாத வகுப்பைச் சார்ந்த தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டனர். தொழிற்சங்கங்கள், தொழிலாளர் நலன்களை உயர்த்துவதற்காக என்பதைவிட, தங்களின் அரசியல் நோக்கங்களுக்காகவே வேலைநிறுத்தங்களைப் பயன்படுத்துகின்றன என்று அம்பேத்கர் கூறினார்.
23.10.1928	அம்பேத்கர் பூனாவில் சைமன் குழு முன் சாட்சியம் கூறினார். சவர்னஸ்தர்களான (சாதி) இந்துக்களிலிருந்து தீண்டப்படாத வகுப்பினர் முற்றிலும் வேறுபட்டவர்கள் என்றும், பம்பாய் மாகாணச் சட்டசபையில் தீண்டப்படாத வகுப்பு மக்களுக்கென 22 இடங்கள் ஒதுக்கப்பட வேண்டும் என்றும் கூறினார்.
1929 மார்ச்சு	பம்பாய் சட்டக் கல்லூரியில் அம்பேத்கரின் பேராசிரியர் பதவிக் காலம் முடிந்தது.
13.4.1929	அம்பேத்கரின் தமக்கை துல்சா மறைந்தார்.
1929 ஏப்பிரல்	சிப்ளன் மாநாட்டில் அம்பேத்கர் தலைமை தாங்கினார். தீண்டப்படாத வகுப்பு மக்களுக்குப் பூணூல் அணிவிக்கப்பட்டது.
17.5.1929	தீண்டப்படாத வகுப்பினரின் அரசியல் உரிமைகளை வலியுறுத்திச் சைமன் குழுவிடம் அம்பேத்கர் தனியாக அறிக்கை அளித்தார்.

2.6.1929	பன்னிரண்டு மகார்கள் பௌத்த மதத்தைத் தழுவினர்.
13.6.1929	மகத் சத்தியாக்கிரக வழக்கில் தீண்டப்படாத வகுப்பினர்க்கு ஆதரவாக நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கப்பட்டது.
22.9.1929	பூனாவில் பார்வதிக்கோயில் சத்தியாக்கிரகப் போராட்டக்குழு அமைக்கப்பட்டது. இக்குழுவின் தலைவர் சிவராம் ஜென்ப காம்ளே. செயலாளர் பி.என். ராஜ்போஜ்.
2.10.1929	கோயில் நுழைவு சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்த இருப்பது பற்றி சிவராம் ஜென்ப காம்ளே பார்வதி கோயில் நிர்வாகிகளுக்குக் காலக்கெடு குறிக்கப்பட்ட அறிக்கையை அனுப்பினார்.
6.10.1929	பார்வதிக் கோயில் நிர்வாகிகள் சிவராம் ஜென்ப காம்ளேயின் அறிக்கையில் கூறப்பட்டிருந்த கருத்தை ஏற்க மறுத்துப் பதிலனுப்பினார்.
13.10.1929	பார்வதிக்கோயில் சத்தியாக்கிரகம் தொடங்கியது.
16.10.1929	அம்பேத்கர் பார்வதிக் கோயில் சத்தியாக்கிரகத்தை ஆதரித்தார்.
22.10.1929	சென்னையில் நடைபெற்ற தீண்டப்படாத வகுப்பினர் மாநாட்டில் என். சிவராஜ் பூனாவின் பார்வதிக்கோயில் சத்தியாக்கிரகத்தை ஆதரித்தார்.
24.10.1929	பூனாவின் மாவட்ட ஆட்சித் தலைவர் பார்வதி கோயிலுக்குச் செல்லும் எல்லாப் பாதைகளையும் சாதிவேறுபாடு கருதாமல் பயன்படுத்தலாம் என்று அறிவித்தார்.
8.11.1929	பம்பாய்க் கிரானிக்கிள் ஏட்டில், புரோகித சூழ்ச்சி எதிர்ப்புச் சங்கம் ஒன்று வேண்டும் என்ற கட்டுரையை அம்பேத்கர் எழுதினார்.
15.11.1929	'பகிஷ்கிரித் பாரத்' கடைசி இதழ் வெளியான நாள்.
2.3.1930	நாசிக்கில் காலாராம் கோயில் சத்தியாக்கிரகம் தொடங்கப்பட்டது.

3.3.1930	நாசிக் காலாராம் கோயில் சத்தியாக்கிரகத்தை அம்பேத்கர் ஆதரித்தார். ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது. அன்று நடைபெற்ற மாநாட்டில் அம்பேத்கர் உரையாற்றினார்.
28.3.1930	காலாராம் கோயில் சத்தியாக்கிரகம் தொடர்பானவற்றில் மாவட்ட ஆட்சித் தலைவர் நடந்துகொள்ளும் போக்கிற்கு எதிர்ப்புத் தெரிவித்துப் பம்பாய் மாகாண கவர்னருக்கு அம்பேத்கர் கடிதம் எழுதினார்.
2.4.1930	மகத் சௌதார் குளம் வழக்கில் அம்பேத்கர் சாட்சி கூறினார்.
9.4.1930	நாசிக் காலாராம் கோயிலின் தேரை இழுத்துச் செல்வதில் சாதி இந்துக்கள் சூழ்ச்சி செய்தனர்.
1930 மே	சைமன் குழு அறிக்கை வெளியிடப்பட்டது.
8.8.1930 *9.8.1930*	நாகபுரியில் கம்தேயில் நடைபெற்ற அனைத்திந்தியத் தீண்டப்படாத வகுப்பினர் மாநாட்டிற்கு அம்பேத்கர் தலைமை தாங்கினார். அம்மாநாட்டில் உரையாற்றியபோது 1. இந்தியாவில் மத்தியச் சட்டசபையிலும் எல்லா மாகாணச் சட்டசபைகளிலும் தீண்டப்படாத வகுப்பினர்க்குப் போதிய அளவில் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும் என்றும் 2. நாட்டில் அரசு ஊழியத்தில் வேலைவாய்ப்பில் போதிய அளவில் இடஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்றும் கூறினார். நாட்டின் அரசியல் சட்டச் சிக்கலைத் தீர்ப்பதற்கு வட்டமேசை மாநாடு நடத்தப்படுவது சிறந்த தீர்வாகும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
9.9.1930	இலண்டன் வட்டமேசை மாநாட்டிற்கான அழைப்பை அம்பேத்கர் பெற்றார்.
11.9.1930	இலண்டன் வட்டமேசை மாநாட்டிற்கு அழைக்கப்பட்டிருப்பவர்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டன.
1930 செப்டம்பர்	அம்பேத்கரின் வீடான 'இராஜகிரக'த்திற்கும் 'சார்மினாரு'க்கும் கடைக்கால் போடப்பட்டது.

2.10.1930	வட்டமேசை மாநாட்டில் கலந்து கொள்வதற்காகச் செல்லும் அம்பேத்கருக்கு ஒரு பாராட்டு விழா நடத்தப்பட்டது. இக்கூட்டத்திற்குப் பி.ஜி. சோலங்கி தலைமை ஏற்றார்.
4.10.1930	வட்டமேசை மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அம்பேத்கர் 'இந்திய வைஸ்ராய்' என்ற கப்பலில் இலண்டனுக்குப் புறப்பட்டார்.
18.10.1930	அம்பேத்கரும் சென்னை இரட்டைமலை சீனிவாசனும் இலண்டனை அடைந்தனர்.
12.11.1930	வட்டமேசை மாநாட்டைப் பிரிட்டிஷ் பேரரசர் அய்ந்தாம் ஜார்ஜ் தொடக்கி வைத்தார்.
24.11.1930	'பகிஷ்கிரித் பாரத்' என்ற ஏட்டிற்குப் பதிலாக 'ஜனதா' என்ற இதழ் தொடங்கப்பட்டது.
1930 டிசம்பர்	இலண்டனில் அம்பேத்கர் கோரிக்கை அறிக்கைகள் இரண்டினைத் தயாரித்தார். 1. தீண்டப்படாத வகுப்பினரின் அரசியல் கோரிக்கைகள் 2. இராணுவத்தில் தீண்டப்படாத வகுப்பினரைச் சேர்க்க வேண்டும் என்பது. இவற்றை இரண்டாயிரம் படிகள் அச்சிட்டார்.
19.1.1931	முதலாவது வட்டமேசை மாநாடு முடிவுற்றது. அம்பேத்கரின் உயர்கல்விக்கு உதவிய பரோடா மன்னர் வட்டமேசை மாநாட்டில் அம்பேத்கர் ஆற்றிய சீரிய பணியைக் கண்டு மனநிறைவும் மகிழ்ச்சியும் கொண்டார்.
13.2.1931	அம்பேத்கர் இலண்டனிலிருந்து இந்தியாவுக்குப் பயணமானார்.
27.2.1931	அம்பேத்கர் பம்பாய் வந்தடைந்தார்.
5.3.1931	சிம்லாவில் இர்வின்-காந்தி ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று. இது காங்கிரசுக்கட்சி வட்டமேசை மாநாட்டில் கலந்து கொள்வதற்கு வழிவகுத்தது.
10.3.1931	அம்பேத்கர் நாசிக் மாநாட்டில் உரையாற்றினார். சட்ட வழியிலும் அரசியல் சட்டத்தின் மூலமும் சமூகச் சுதந்திரத்தை அடைவதற்காகத் தொடர்ந்து போராட வேண்டியதன் தேவையை வலியுறுத்தினார்.

1931 மார்ச்சு	தீண்டப்படாத வகுப்பினர் காவல்துறையில் சேருவதற்கான அரசாணை பிறப்பிக்கப்பட்டது.
1931 ஏப்பிரல்	எம்.என். ராய் (டாக்டர் முகமது என்ற புனைப்பெயரில்) அம்பேத்கரைச் சந்தித்தார்.
19.4.1931	பம்பாய் பரேலில் லவ்ஜி மாளிகையில் (கோகலே கல்விக்கழக உயர்நிலைப்பள்ளி) அனைத்திந்தியத் தீண்டப்படாத வகுப்புத் தலைவர்களின் கூட்டம் ஒன்றை அம்பேத்கர் கூட்டினார்.
1931 சூலை	இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் கலந்துகொள்பவர்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டன. இதில் அம்பேத்கரின் பெயர் இடம் பெற்றிருந்தது.
14.8.1931	பம்பாய், மலபார் ஹில், மணிபவனில் காந்தியை அம்பேத்கர் சந்தித்தார். இதுவே இவ்விருவரின் முதலாவது சந்திப்பாகும். அம்பேத்கருடன் சிவதார்க்கர், நாயக், பிரதான், பி.கே. கெய்க்வாடு, கதிரேக்கர் முதலானோர் சென்றனர்.
15.8.1931	இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் கலந்துகொள்வதற்காக அம்பேத்கர் இலண்டனுக்குப் பயணமானார்.
29.8.1931	அம்பேத்கர் இலண்டனை அடைந்தார்.
	காந்தி இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் கலந்துகொள்ளுவதற்காகப் பம்பாயிலிருந்து இலண்டனுக்குப் புறப்பட்டார்.
7.9.1931	இரண்டாவது வட்டமேசை மாநாடு *(7.9.1931-1.12.1931)* தொடங்கியது.
12.9.1931	காந்தி இலண்டனை அடைந்தார்.
28.9.1931	வட்டமேசை மாநாட்டில் சிறுபான்மையினர் குழு கூடியது. (இதையடுத்து *1.10.31, 8.10.31, 13.11.31* ஆகிய நாட்களிலும் கூடியது.)
6.10.1931	தீண்டப்படாத வகுப்பினரின் தனிவாக்காளர் தொகுதிக் கோரிக்கையை முறியடிப்பதற்காக காந்தியும் முகம்மதியரும் இரகசிய ஒப்பந்தம் செய்துகொண்டனர்.

8.10.1931	அம்பேத்கர் சிறுபான்மையினர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்.
5.11.1931	நாசிக் காலாராம் கோயில் நுழைவு சத்தியாக்கிரகம் மீண்டும் தொடங்கியது. அய்ந்தாம் ஜார்ஜ் மன்னர் வட்டமேசை மாநாட்டுப் பிரதிநிதிகளைத் தேநீர் விருந்திற்கு அழைத்தார்.
10.11.1931	இலண்டனில் பன்னாட்டு நடப்புகளுக்கான நிறுவனத்தில் அம்பேத்கர் உரை நிகழ்த்தினார்.
21.11.1931	குருவாயூர் கோயில் நுழைவு சத்தியாக்கிரகத்தைக் கேளப்பன் தொடங்கினார். இது ஓராண்டுக் காலம் நடந்தது.
1.12.1931	இரண்டாவது வட்டமேசை மாநாடு ஒத்தி வைக்கப்பட்டது.
5.12.1931	இரண்டாவது வட்டமேசை மாநாடு முடிந்த பின்னர் அம்பேத்கர் தன்னுடைய பழைய ஆசிரியர்களைச் சந்திப்பதற்காக இலண்டனிலிருந்து நியூயார்க் சென்றார்.
27.12.1931	இந்திய வாக்குரிமைக் குழு லோதியன் பிரபு தலைமையில் அமைக்கப்பட்டது. அம்பேத்கர் இக்குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.
28.12.1931	காந்தி இரண்டாவது வட்டமேசை மாநாட்டிலிருந்து பம்பாய்க்குத் திரும்பினார். தீண்டப்படாத வகுப்பு மக்கள் காந்திக்குக் கறுப்புக் கொடி காட்டித்தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர்.
1.1.1932	நாசிக் காலாராம் கோயில் நுழைவுப் போராட்டம் மீண்டும் தொடங்கியது.
4.1.1932	அம்பேத்கர் நியூயார்க்கிலிருந்து இலண்டன் திரும்பினார். காந்தியும் வல்லபாய் பட்டேலும் கைது செய்யப்பட்டு எரவாடா சிறையில் அடைக்கப்பட்டனர்.
15.1.1932	அம்பேத்கர் இலண்டனிலிருந்து இந்தியாவிற்குப் புறப்பட்டார்.

29.1.1932	அம்பேத்கர் பம்பாய் வந்தடைந்தார். அவருடன் வகுப்புரிமைக் குழுவின் பிரிட்டிஷ் உறுப்பினர்களும் ஷவுகத் அலியும் வந்தனர். தீண்டப்படாத வகுப்பு மக்கள் அம்பேத்கருக்கும் ஷவுகத் அலிக்கும் உற்சாக மான வரவேற்பு அளித்தனர். அவ்விருவரையும் ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். அன்று மாலை பரேலில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அம்பேத்க ருக்கு வரவேற்பிதழ் ஒன்று படித்து அளிக்கப்பட்டது.
1932 பிப்ரவரி முதல் ஏப்பிரல் வரை	அம்பேத்கர் வாக்குரிமைக்குழுவுடன் பீகாரிலிருந்து கல்கத்தா வரையிலும் மற்றும் பிற இடங்களுக்கும் சென்றார்.
28.2.1932	அம்பேத்கருக்கு மகிழ்ச்சி ஆரவாரமான வரவேற்பு சென்னையில் அளிக்கப்பட்டது.
1932 பிப்ரவரி	சமாஜ் சமத்தா சங்கம் எஸ்.டி. நட்கர்னி எழுதிய 'இராம இராஜ்ஜியமும் அடிமை மனப்பான்மையும்' என்ற நூலை வெளியிட்டது.
1.3.1932	தில்லியில் எம்.சி. இராஜாராம் டாக்டர் மூஞ்சேவும் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டனர். இந்த ஒப்பந்தம் தீண்டப்படாத வகுப்பு மக்களுக்குக் கூட்டு வாக்காளர் தொகுதியையும், அவர்களின் மக்கள் தொகை விழுக் காட்டிற்கு ஏற்ப இட ஒதுக்கீடும் அளிக்கப்பட வேண்டும் என்று கோரியது.
11.3.1932	எரவாடா சிறையிலிருந்து காந்தி, தீண்டப்படாத வகுப்பினர்க்குத் தனி வாக்காளர் தொகுதி ஏற்படுத்தப் படுவதை எதிர்த்து சர். சாமுவேல் ஹோரேவுக்கு ஒரு கடிதம் எழுதினார். தீண்டப்படாத வகுப்பு மக்களுக்குத் தனிவாக்காளர் தொகுதி முறையை ஏற்படுத்துவது என்று எடுக்கப்பட்டுள்ள முடிவை இரத்து செய்யாவிட்டால் தான் சாகும்வரை உண்ணா நோன்பு இருக்கப் போவதாக அக்கடிதத்தில் தெரிவித்தி ருந்தார்.
14.4.1932	நாசிக் காலாராம் கோயில் நுழைவு சத்தியாக்கிரகம் தன் மூன்றாவது கட்டப் போராட்டத்தைத் தொடங்கி யது. போராட்டக் குழுவின் தலைவர் தாதாசாகிப் கெய்க்வாடும் அமிர்தராவ் இரணகாம்பேவும் கைது

செய்யப்பட்டனர். (இந்நிலை அம்பேத்கரைக் கவலை கொள்ளச் செய்தது. கோயில் நுழைவுக்காகப் போராடுவதைவிட அரசியல் உரிமைகளைப் பெறுவதற்காகப் போராட வேண்டியதே முதன்மையாகும் என்று அம்பேத்கர் கருதினார்.)

1.5.1932	அம்பேத்கர் வாக்குரிமைக் குழுவின் கருத்துடன் மாறுபட்டு, தன்கருத்தைத் தனி அறிக்கையாக வாக்குரிமைக் குழுவிடம் அளித்தார்.
4.5.1932	சிம்லாவிலிருந்து பம்பாய் திரும்பினார்.
1932 மே 7 8	நாகபுரியில் நடைபெற்ற அனைத்திந்தியத் தீண்டப்படாத வகுப்பினர் மாநாட்டில் அம்பேத்கர் கலந்து கொண்டார். இம்மாநாட்டிற்கு முனுசாமிப்பிள்ளை தலைமை ஏற்றார். இராஜா-முஞ்சே ஒப்பந்தத்தை இம்மாநாடு கண்டித்தது. சிறுபான்மையினர் ஒப்பந்தத்தில் அறிவிக்கப்பட்டுள்ள தனிவாக்காளர் தொகுதி தீண்டப்படாத வகுப்பு மக்களின் மிகக் குறைந்தபட்சக் கோரிக்கையேயாகும் என்று மாநாடு கருதியது.
22.5.1932	பூனாவில் அம்பேத்கருக்கு மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. அவரை ஊர்வலமாக முக்கிய வீதிகள் வழியாக அழைத்துச் சென்றனர். அன்று 'அகல்யாசிரமம்' என்ற இடத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் அம்பேத்கர், 'இப்போதுள்ள அரசியல் ஆரவாரங்கள் அடங்கியபின், எதிர்கால வரலாற்று ஆசிரியர்கள் வட்டமேசை மாநாட்டின் நடவடிக்கைகளை நடுநிலையுடன் ஆய்வு செய்யும்போது, வருங்கால இந்துத் தலைமுறையினர் என்னுடைய தொண்டினைப் போற்றிப் புகழ்வார்கள்' என்று கூறினார். 'எந்தத் தீண்டப்படாத வகுப்பில் பிறந்தேனோ, வளர்ந்தேனோ, வாழ்கின்றேனோ, அவர்களுடைய முன்னேற்றத்திற்காகத் தொண்டு செய்யும் நிலைமையிலேயே நான் மடிய வேண்டும்' என்பதே என் சூளுரையாகும்' என்று மேலும் கூறினார்.
26.5.1932	தன் பயணம் பற்றி வெளியில் அறிவிக்காமல் பிரிட்டிஷ் பிரதமரையும் அமைச்சர்களையும் சந்திப்பதற்காக அம்பேத்கர் இலண்டனுக்குப் பயணமானார்.

7.6.1932	அம்பேத்கர் இலண்டனை அடைந்தார். 22 பக்கங்கள் தட்டச்சு செய்யப்பட்ட கோரிக்கை அறிக்கையைப் பிரிட்டிஷ் பிரதமரிடம் அளித்தார்.
1932 சூன்-சூலை	செருமனியில் டிரஸ்டனில் டாக்டர் மொல்லரின் மருத்துவமனையில் அம்பேத்கர் ஒருமாதம் தங்கியிருந்து மருத்துவம் செய்துகொண்டார்.
4.8.1932	பிரிட்டிஷ் பிரதமர் வகுப்புவாரித் தீர்ப்பை அறிவித்தார். இதன்படி, தீண்டப்படாத வகுப்பு மக்களுக்குத் தனிவாக்காளர் தொகுதி வழங்கப்பட்டது.
17.8.1932	அம்பேத்கர் இங்கிலாந்திலிருந்து இந்தியாவிற்குத் திரும்பினார்.
18.8.1932	வகுப்புவாதத் தீர்ப்பை எதிர்த்துக் காந்தி, சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை அறிவித்தார்.
19.9.1932	காந்தி சாகும்வரை உண்ணாநோன்பு சத்தியாக்கிரகத்தைத் தொடங்குவதற்கு முதல்நாள் பம்பாயில் மதன் மோகன் மாளவியா தலைமையில் இந்துத் தலைவர்கள் கூடினார்கள்.
	காந்தி சாகும்வரை உண்ணாநோன்பு இருக்கப் போவதாக எடுத்துள்ள முடிவு குறித்து அம்பேத்கர் ஓர் அறிக்கையை வெளியிட்டார்.
20.9.1932	காந்தி சாகும்வரை உண்ணாநோன்பு சத்தியாக்கிரகத்தைத் தொடங்கினார். காந்தி, பி.என். ராஜ்போஜ் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில், இந்து மதத்தைப் பொறுத்த அளவில் தனி வாக்காளர் தொகுதி என்பது மதத்தை இரண்டாகப் கூறுபோடுவது போன்றதேயாகும் என்று குறிப்பிட்டிருந்தார்.
21.9.1932	அம்பேத்கர், மாளவியா, எம்.சி. இராஜா முதலானோர் காந்தியை எரவாடா சிறையில் சந்தித்தனர். காந்தியின் உண்ணாநோன்பினை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதற்கான அம்சங்கள் குறித்து விவாதித்தனர்.
22.9.1932	அம்பேத்கர் காந்தியை மீண்டும் சந்தித்தார். அம்பேத்கருடன் எம்.ஆர். ஜெயகர், பிர்லா, சுனிலால் மேத்தா, சி. இராசகோபாலாச்சாரி ஆகியோர் சென்றிருந்தனர்.

24.9.1932	மாநாட்டில் தலைவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அம்சங்களுக்குக் காந்தி தன் ஒப்புத லைத் தெரிவித்தார். அன்று மாலை 5 மணிக்கு அம்பேத்கரும் காந்தியும் பூனா ஒப்பந்தத்தில் கையொப்பம் இட்டனர். இதன்படி தீண்டப்படாத வகுப்பு மக்களுக்குத் தனிவாக்காளர் தொகுதி கோருவ தைக் கைவிட அம்பேத்கர் ஒப்புக் கொண்டார். காந்தி தன் உண்ணாநோன்பினை முடித்துக் கொண்டார்.
26.9.1932	பூனா ஒப்பந்தத்தைப் பிரிட்டிஷ் பிரதமர் ஏற்றுக் கொண்டார்.
30.9.1932	தீண்டாமை எதிர்ப்புக் கழகம் அமைக்கப்பட்டது. (இதன் பெயர் பிறகு 'தீண்டப்படாதவர்களின் தொண் டர்கள் சங்கம்' என்றும் இறுதியில் 'அரிஜன சேவா சங்கம்' என்றும் மாற்றப்பட்டது)
1.10.1932	குருவாயூர் கோயில் நுழைவுக்காக 21.9.1932 அன்று கேளப்பன் உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங் கியிருந்தார். அவருடைய உண்ணாநோன்பினை முடித் துக் கொள்ள வேண்டும் என்று காந்தி கேளப்பனுக்கு மடல் எழுதினார்.
6.10.1932	அம்பேத்கர் பம்பாய் மாகாணச் சட்டசபையில் கிராமப் பஞ்சாயத்துத் திருத்தச் சட்ட மசோதா மீது உரையாற் றினார்.
19.10.1932	அம்பேத்கர் காந்தியை எரவாடா சிறையில் சந்தித்தார். தீண்டாமை எதிர்ப்புக் கழகத்தின் கமிட்டியில் தீண்டப் படாத வகுப்பினரை இன்னும் அதிக எண்ணிக்கையில் உறுப்பினர்களாகச் சேர்த்திட வேண்டும் என்று காந்தியிடம் கூறினார்.
28.10.1932	ருஷி சமாஜம் பம்பாயில் கவாஸ்ஜி ஜகாங்கீர் அரங்கில் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் அம்பேத்கர் உரை யாற்றினார். 'கோயில் நுழைவு இயக்கம், சமபந்தி விருந்து போன்றவற்றில் மட்டுமே தீவிர நாட்டம் செலுத்தாதீர்கள்; ஏனெனில் இவை உங்களுடைய பசிப்பிணியை நீக்கமாட்டா' என்று கூறி, தீண்டப்ப டாத வகுப்பு மக்களை எச்சரித்தார்.

'உங்களுடைய துன்பங்கள் பூர்வஜென்ம விதியால் நிர்ணயிக்கப்பட்டவை என்று நம்புகின்ற முட்டாள்தன மான எண்ணத்தை எவ்வளவு விரைவில் கைவிடுகிறீர் களோ அந்த அளவிற்கு நன்மை உண்டாகும். உங்களுடைய வறுமை தவிர்க்க முடியாதது; உங்கள் கூடவே பிறந்தது; உங்களிடமிருந்து பிரிக்க முடியா தது என்று நீங்கள் எண்ணுவது முற்றிலும் தவறானதா கும்' என்றார்.

4.11.1932	அம்பேத்கர் மூன்றாவது வட்டமேசை மாநாட்டில் கலந்து கொள்வதற்காகப் புறப்படுவதற்கு முன், மெக்வால் சமூகத்தினர் அம்பேத்கருக்கு ஒரு பாராட்டு விழா நடத்தினார்கள்.
7.11.1932	மூன்றாவது வட்டமேசை மாநாட்டில் கலந்து கொள்வ தற்காக அம்பேத்கர் பம்பாயிலிருந்து புறப்பட்டார்.
17.11.1932	மூன்றாவது வட்டமேசை மாநாடு தொடங்கியது.
24.12.1932	மூன்றாவது வட்டமேசை மாநாடு தன் பணிகளை முடித்தது.
1932 டிசம்பர்	ரங்கா அய்யர் மத்தியச் சட்டசபையில் தீண்டாமை ஒழிப்பு மசோதாவை முன்மொழிந்தார்.
24.1.1933	அம்பேத்கர் இங்கிலாந்திலிருந்து பம்பாய் திரும்பினார்.
30.1.1933	அம்பேத்கர் இந்திய வைஸ்ராயைத் தில்லியில் சந்தித் தார். வட்டமேசை மாநாட்டில் கலந்து கொண்ட அனைத்து உறுப்பினர்களுக்கும் இதுபோன்ற அழைப்பை வைஸ்ராய் அனுப்பியிருந்தார்.
	சௌதார் குளம் வழக்குத் தொடர்பாகச் சாதி இந்துக்கள் தாணா நீதிமன்றத்தில் செய்திருந்த மேல்மு றையீடு தள்ளுபடி செய்யப்பட்டது. எனவே உயர்நீதி மன்றத்திற்கு மேல்முறையீடு செய்வது என்று சாதி இந்துக்கள் முடிவு செய்தனர்.
4.2.1933	காந்தியிடமிருந்து வந்த தொலைவரிச் செய்தியின்படி அம்பேத்கர் காந்தியை எரவாடா சிறையில் சந்தித்தார். 'கோயில் நுழைவு மட்டுமே தீண்டப்படாத வகுப்பு மக்களை நிறைவு செய்துவிடாது; அவர்களை உள்ளத் தளவிலும் சமூக நிலையிலும் கல்வியிலும்

உயர்த்திட வேண்டியது கோயில் நுழைவைவிடப் பன்மடங்கு முக்கியமானதாகும்' என்று காந்தியிடம் கூறினார்.

காந்தி தொடங்கிய அரிஜன் ஏட்டிற்கு அம்பேத்கர் அனுப்பிய செய்தியில் 'சாதிகள் இருக்கும்வரை தீண்டாமை நீடிக்கும். சாதிகளை ஒழிக்காதவரை தீண்டப்படாதவர்களைச் சமூகத்தில் உயர்த்த முடியாது' என்று குறிப்பிட்டிருந்தார்.

12.2.1933	பம்பாய் மாகாணச் சட்டசபையில் கிராமப் பஞ்சாயத்து மசோதாமீது உரையாற்றினார். கோயில் நுழைவு மசோதா குறித்து முக்கியமானதோர் அறிக்கையை வெளியிட்டார். 'சமூக சமத்துவம் உடையதாக இந்து மதத்தை ஆக்க வேண்டுமானால், கோயில் நுழைவுக்காக மட்டும் இந்துச் சட்டத்தைத் திருத்தினால் போதாது; இந்து மதத்தின் நால்வருணக் கோட்பாட்டையே அடியோடு ஒழிக்க வேண்டும்; எல்லாவகையான சமத்துவமின்மைக்கும் நால்வருண அமைப்பே ஆணி வேராகும்; சாதிமுறைக்கு இதுவே மூலமாகும். எனவே தீண்டப்படாத வகுப்பு மக்கள் கோயில் நுழைவுடன் மட்டும் மனநிறைவடைந்து விடுவது என்பது தீமையுடன் சமரசம் செய்து கொள்வது போன்றதேயாகும்' என்று அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.
24.3.1933	ரங்கா அய்யர் மத்தியச் சட்டசபையில் கோயில் நுழைவு மசோதாவைக் கொண்டு வந்தார்.
1933 ஏப்பிரல்	அம்பேத்கர் காந்தியுடன் பூனா ஒப்பந்தத்தைத் திருத்தியமைத்தல், பௌத்தத்தின் சாரம் என்ற நூலை எழுதிய பேராசிரியர் பி. இலட்சுமி நரசுவின் மறைவு ஆகியவை குறித்து உரையாடினார்.
14.4.1933	அம்பேத்கரின் பிறந்தநாள் முதன்முதலாக பொதுவிழாவாகப் பம்பாய், நாசிக், பூனா ஆகிய இடங்களில் கொண்டாடப்பட்டது.
24.4.1933	அம்பேத்கர் இலண்டனுக்குப் புறப்பட்டுச் சென்றார்.
6.5.1933	இலண்டனை அடைந்தார்.

11.7.1933 - 28.7.1933 & 3.10.1933 - 7.11.1933	வின்லித்தோ பிரபுவின் தலைமையில் அமைக்கப்பட்ட பாராளுமன்றக் கூட்டுக் குழுவின் கூட்ட நடவடிக்கை களில் அம்பேத்கர் கலந்து கொண்டார்.
23.10.1933	அம்பேத்கர் வின்சன்ட் சர்ச்சிலைப் பேட்டி கண்டார். இந்தி இராணுவம் என்ற நூலை எழுதுவதற்காக இலண்டனில் ஆதாரங்களைத் திரட்டும் பணியில் தீவிரமாக ஈடுபட்டார்.
1933	அம்பேத்கரின் 'இராஜகிரகா' வீடு கட்டி முடிக்கப் பட்டது.
8.1.1934	அம்பேத்கர் இலண்டனிலிருந்து பம்பாய் வந்து சேர்ந்தார்.
3.3.1934	நாசிக் காலாராம் கோயில் நுழைவு சத்தியாக்கிரகத்தைக் கைவிடுமாறு அம்பேத்கர் தாதாசாகிப் கெய்க்வாடுக்கு மடல் எழுதினார்.
1934 ஜூன்	பம்பாய் அரசினர் சட்டக் கல்லூரியில் பகுதிநேரப் பேராசிரியராக நியமிக்கப்பட்டார்.
14.10.1934	கெலுஸ்கர் மறைந்தார்.
27.5.1935	இராமாபாய் மறைந்தார்.
1.6.1935	பம்பாய்ச் சட்டக்கல்லூரியின் முதல்வராக அம்பேத்கர் நியமிக்கப்பட்டார். இரண்டு ஆண்டுகளுக்கு மேல் இப்பதவியில் இருந்தார்.
1935 ஜூலை	தன் மனைவி இராமாபாயின் மறைவினால் ஆறாத்துய ருற்ற நிலையில் பொது வாழ்விலிருந்து முழுவதுமாக விலகிவிடலாமா என்று அம்பேத்கர் எண்ணினார்.
13.10.1935	முற்பகலில் இயோலா நகராட்சி அம்பேத்கருக்கு வரவேற்பளித்தது. அதன்பின் அன்று நடைபெற்ற இயோலா மாநாட்டில் இந்து மதத்தை விட்டு நீங்கி, மற்றோர் மதத்தில் சேரப் போவதாக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அறிவிப்பை வெளியிட்டார். 'இந்து மதத்தில் உள்ள சமத்துவமின்மைதான் நான் இந்து மதத்தை விட்டு வெளியேற வேண்டும் என்று

	எண்ணுவதற்குக் காரணமாகும். துர்அதிர்ஷ்டவசமாகத் தீண்டாமை எனும் கறையுடன் நான் பிறந்து விட்டேன்; அது என் தவறன்று; ஆனால் நான் ஒரு இந்துவாக இறக்க மாட்டேன்; இவ்வாறு செய்வது என் சக்திக்கு உட்பட்டதாகும்' என்று இயோலா மாநாட்டில் கூறினார்.
25.10.1935	அம்பேத்கரைச் சந்திப்பதற்காகச் சங்கராச்சாரி டாக்டர் குற்றக்கோட்டி தன்னுடைய பிரதிநிதிகளை அனுப்பி னார். இந்த நாட்டின் நலன்களுக்கு எத்தகைய கேடும் நேரிடாத தன்மையில் தன்னுடைய மதமாற்றம் அமைந்திருக்கும் என்று அவரைச் சந்திக்க வந்த பிரதிநிதிகளிடம் கூறினார்.
27.10.1935	பேராசிரியர் தர்மானந்த் கோசாம்பி இராஜகிரகத்தில் அம்பேத்கரைச் சந்தித்தார்.
10.11.1935	நாசிக் சாலையில் தீண்டப்படாத வகுப்பினர் மாநாடு நடந்தது. இந்துக் கடவுள்களை, சாத்திரங்களை, புரோகிதர்களை, புனிதப் பயணங்களைப் புறக்கணிப் பது என்றும், கோயில் நுழைவுப் பிரச்சாரத்தை நிறுத்திவிடுவது என்றும் அம்மாநாட்டில் முடிவு எடுக்கப்பட்டது. அதன்படி நாசிக்கில் சிலர் தம் வீடுகளில் இருந்த இந்துக் கடவுள்களின் உருவப் படங்களையும், இந்துமத நூல்களையும் தீயிட்டுக் கொளுத்தினர்.
12.12.1935	லாகூர் ஜாட்-பட்-தோடக் மண்டல் (சாதி ஒழிப்புச் சங்கம்) நடத்தவுள்ள மாநாட்டிற்குத் தலைமை ஏற்க வருமாறு அம்பேத்கரை அழைத்தது.
1935	இலண்டன் பல்கலைக் கழகத்தில் அம்பேத்கரின் ஆசிரியராக இருந்த பேராசிரியர் கனான் மறைந்தார்.
1936 சனவரி 11, 12	பூனாவில் 'அகல்யாசிரமத்தில்' என். சிவராஜ் தலைமையில் நடைபெற்ற மாநாட்டில் அம்பேத்கர் இந்து மதத்தை விட்டு விலகுவது என்ற தன்னுடைய முடிவை மீண்டும் வலியுறுத்தினார்.
1936 ஏப்பிரல்	சீக்கியர் கழகம் நடத்திய மாநாட்டில் அம்பேத்கர் கலந்து கொண்டார்.

27.4.1936	ஜாட்-பட்-தோடக் மண்டல் நடத்தும் மாநாட்டிற்குத் தலைமை ஏற்க வரமுடியாது என்றும், தான் தயாரித்துள்ள தலைமை உரையில் ஓர் எழுத்தையும் மாற்ற முடியாது என்றும் அம்பேத்கர் அச்சங்கத்திற்குத் தெரிவித்தார்.
15.5.1936	ஜாட்-பட் -தோடக் மண்டல் மாநாட்டிற்காக எழுதியிருந்த தலைமை உரையைச் 'சாதி ஒழிப்பு' (The Annihilation of Caste) என்ற பெயரில் நூலாக வெளியிட்டார்.
30.5.1936 - 2.6.1936	இயோலா மாநாட்டின் மதமாற்றத் தீர்மானத்திற்கு மகார்கள் தரும் ஆதரவைக் கணிப்பதற்காகத் தாதரில் மகார்களின் மாநாடு ஒன்றை அம்பேத்கர் கூட்டினார்.
1936 சூன்	இத்தாலிய பௌத்தப் பிக்குவான போகாநந்தா அம்பேத்கரைப் பௌத்தராக ஆக்கிட வேண்டுமென்ற நோக்கத்துடன் அவரைப் பம்பாயில் சந்தித்தார்.
18.6.1936	தீண்டப்படாத வகுப்பினரின் மதமாற்றம் குறித்து, பம்பாயில் அம்பேத்கரும் முஞ்சேவும் கலந்துரையாடினார். தீண்டப்படாத வகுப்பினர் சீக்கிய மதத்தில் சேருவதை முஞ்சே ஆதரித்தார்.
28.6.1936	மதமாற்ற எதிர்ப்புச் சங்கம் ஏற்பாடு செய்திருந்த ஒரு பொதுக்கூட்டம் பூனாவில் போக்கர்வாடி பகுதியில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சங்கராச்சாரி குற்றக்கோட்டியைப் பாராட்டிப் போற்றினார். இந்நிகழ்ச்சியை அம்பேத்கர் செய்தித்தாளில் படித்து எரிச்சலுற்றார்.
1936 சூலை	அம்பேத்கர் தன்மகன் யசுவந்தனையும், அண்ணன் மகன் முகுந்தராவையும் சீக்கிய மதத்தைப் பற்றிக் கற்பதற்காக அமிர்தசரசில் இருந்த சீக்கியக் குருத்துவாராவிற்கு அனுப்பினார்.
15.8.1936	1935ஆம் ஆண்டைய இந்திய அரசியல் சட்டத்தின்படி நடைபெற இருந்த பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காகச் சுதந்திரத் தொழிற்கட்சியை நிறுவினார்.
15.9.1936	அம்பேத்கர் பதினாறு பேர்களைச் சீக்கியத்தைப் பற்றிக் கற்பதற்காக அமிர்தசரசில் இருந்த ஒரு சீக்கியக் கழகத்திற்கு அனுப்பினார். ஆனால் அவர்கள் அங்குச் சீக்கிய மதத்தில் சேர்ந்து விட்டனர்.

17.9.1936	பம்பாய் மாகாணச் சட்டசபையில் 'கோட்டிமுறை ஒழிப்பு' மசோதாவை முன்மொழிந்தார்.
1936 செப் டம்பர்	பம்பாயில் அவருடைய 'சார்மினார்' கட்டடத்தை, நூல்கள் வாங்கிய வகையில் ஏற்பட்ட கடனை அடைப்பதற்காக விற்றார்.
11.11.1936	ஜெனிவா வழியாக இலண்டனுக்குச் சென்றார். தீண்டப்படாத வகுப்பு மக்கள் மற்றோர் மதத்தில் சேர்ந்த பிறகு ஏற்படக் கூடிய சட்டச்சிக்கல் குறித்து இலண்டனில் அரசியல் சட்ட வல்லுநர்களின் கருத்தை அறிவதற்காக இப்பயணத்தை மேற்கொண்டார்.
12.12.1936	திருவிதாங்கூர் மன்னர் தன்னுடைய ஆட்சியின் எல்லைக்குள் உள்ள எல்லாக் கோயில்களையும் தீண்டப்படாத வகுப்பு மக்களுக்குத் திறந்து விடுவதாக அறிவித்தார். தற்கால இந்தியாவில் ஒரு அரசால் அறிவிக்கப்பட்ட முதலாவது அறிவிப்பு இதுவேயாகும்.
30.12.1936	இந்து மகாசபையின் 17ஆவது மாநாட்டில் கலப்புத் திருமணம், சமபந்தி விருந்து குறித்து டாக்டர் எம்.ஆர். ஜெயகர் கொண்டுவந்திருந்த தீர்மானத்தைப் பண்டித மதன்மோகன் மாளவியா தனக்குள்ள தனியதிகாரத்தைப் (Veto) பயன்படுத்தித் தள்ளுபடி செய்துவிட்டார்.
14.1.1937	அம்பேத்கர் இங்கிலாந்திலிருந்து பம்பாய் திரும்பினார்.
17.2.1937	1935ஆம் ஆண்டைய சட்டத்தின்படி இந்தியாவில் பொதுத்தேர்தல் நடைபெற்றது. (பம்பாய் மாகாணச் சட்டசபையில் மொத்தம் இருந்த 175 இடங்களில் ஒதுக்கப்பட்ட இடங்கள் 15. அம்பேத்கரின் சுதந்திரத் தொழிற்கட்சியின் வேட்பாளர்கள் 17பேர் வெற்றி பெற்றனர். சுதந்திரத் தொழிற்கட்சியின் சார்பில் நின்று வெற்றி பெற்றவர்களில் அம்பேத்கர், பி.கே. கெய்க்வாடு, ஆர்.ஆர், போலே, டி.ஜி. ஜதாவ் முதலானோர் குறிப்பிடத்தக்கவர்கள்.
17.3.1937	மகத் சௌதார் குளம் வழக்கில் நீதிபதிகள் புரும்ஃபீல்டு, என்.ஜெ. வாடியா ஆகிய இருவரும் தீண்டப்படாத வகுப்பினருக்கு ஆதரவாகத் தீர்ப்பளித்தனர்.

19.3.1937	தேர்தலில் வெற்றி பெற்ற காங்கிரசுக் கட்சி பம்பாய் மாகாணத்தில் பதவி ஏற்றது. பி.ஜி. கெர் பிரதமரானார்.
23.8.1937	அமைச்சர்களின் சம்பளம் குறித்துப் பம்பாய் மாகாணச் சட்டசபையில் அம்பேத்கர் பேசினார்.
17.9.1937	பம்பாய் மாகாணச் சட்டசபையில் கோட்டி முறை ஒழிப்புக் குறித்து உரையாற்றினார். மகார் வட்டன் நிலமானிய ஒழிப்பு மசோதாமீதும் உரையாற்றினார்.
31.12.1937	பந்தர்பூரில் தீண்டப்படாத வகுப்பினர் மாநாட்டில் சொற்பொழிவாற்றினார்.
1.1.1938	ஷோலாப்பூரில் மாங் வகுப்பினர் மாநாட்டில் உரை நிகழ்த்தினார்.
4.1.1938	ஷோலாப்பூர் நகராட்சி அம்பேத்கருக்கு வரவேற்பளித்தது.
18.1.1938	பம்பாய் மாகாணச் சட்டசபையில் உள்ளாட்சி மன்றங்கள் சட்டத் திருத்த மசோதா மீதான விவாதத்தின் போது, அம்மசோதாவில் தீண்டப்படாத வகுப்பு மக்களைக் குறிப்பதற்காக *'அட்டவணைப்படுத்தப் பட்ட சாதி'* (Scheduled caste) என்பதற்குப் பதிலாக 'அரிஜன்' என்ற சொல்லைப் பயன்படுத்தியிருப்பதற்குப் பி.கே. கெய்க்வாடு எதிர்ப்புத் தெரிவித்து வாதிட்டார். அம்பேத்கரும் கெய்க்வாடுக்கு ஆதரவாக வாதிட்டார். ஆயினும் காங்கிரசுக்கட்சி தனக்குள்ள பெரும்பான்மை காரணமாக 'அரிஜன்' என்ற சொல்லையே ஏற்றுக் கொள்வதென முடிவு செய்தபோது அம்பேத்கரும் அவருடைய கட்சி உறுப்பினர்களும் சட்டசபையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.
20.1.1938	பம்பாய் மாகாணச் சட்டசபையில் நன்னடத்தை காரணமாகப்புதுக்குற்றவாளிகளுக்கு விடுதலை அளிக்கும் மசோதா (Probation of Offenders Bill) மீது அம்பேத்கர் உரையாற்றினார்.
23.1.1938	அகமத் நகரில் விவசாயிகள் மாநாட்டில் உரை நிகழ்த்தினார்.

1938 பிப்பிர வரி 12, 13	மன்மத் (நாகபுரி மாவட்டம்)தில் நடைபெற்ற தீண்டப் படாத இரயில்வே தொழிலாளர் மாநாட்டில் தலைமை தாங்கினார். பார்ப்பனியம், முதலாளியம் எனும் இரண்டு பகைசக்திகளை ஒன்றுபட்டு எதிர்க்க வேண்டி யதன் தேவையை வலியுறுத்திப் பேசினார்.
2.3.1938	வரவு செலவுத் திட்டத்தின்மீது பம்பாய் சட்டசபையில் உரையாற்றினார்.
27.4.1938	பம்பாய் மாகாணச் சட்டசபையில் காவல்துறைத் திருத்தச் சட்ட மசோதாமீது உரையாற்றினார். 'கடைசிச் சொட்டு இரத்தம் உள்ளவரை தீண்டப்படாத வகுப்பு மக்கள் சுரண்டப்படுவதை எதிர்ப்பேன்' என்றார்.
1938 ஏப்பிரல்	கர்னாடகம் தனியாகப் பிரிவதை எதிர்த்தார்.
1938 மே	பம்பாய் சட்டக்கல்லூரியின் முதல்வர் பதவியிலிருந்து விலகினார்.
1938 மே 13 முதல் 21 வரை	கொங்கண மாவட்டங்களில் சுற்றுப் பயணம் செய் தார். கன்கவலி (14.5.38) தியோருக், ஆரவல்லி, சிப்ளன் (16.5.38) குகார், கேத், தபோலி, மகத் முதலான இடங்களில் கோட்டி நிலமானிய முறையை ஒழித்திட முன்வருமாறு மக்களுக்கு அறைகூவல் விடுத்தார்.
11.9.1938	பூனாவில் 'அகல்யாசிரமத்தில்' தீண்டப்படாத மாண வர்கள் விடுதியின் பதினோராவது ஆண்டு விழாவில் அம்பேத்கர் கலந்துகொண்டு உரையாற்றினார்.
1938 செப் டம்பர்	பம்பாய் மாகாணச் சட்டசபையில், தொழில் தகராறு மசோதாமீது உரையாற்றினார். தொழிலாளர்களின் உரிமைகளையும் சுதந்திரத்தையும் இம்மசோதா பறிக்கி றது எனக்கூறி இம்மசோதாவை மிகக் கடுமையாக எதிர்த்துப் பேசினார்.
6.11.1938	அறுபது தொழிலாளர் சங்கங்கள் ஜம்னாதாஸ் மேத்தா வின் தலைமையின் கீழ்க் கூடின. அக்கூட்டத்தில் அம்பேத்கர், எஸ்.ஏ. டாங்கே, ஷாம்ராவ் பருலேக்கர் ஆகியோரும் கலந்துகொண்டனர். வேலை நிறுத்தம் வெற்றிகரமாக நடைபெறும் வகையில் செயல்படுமாறு அம்பேத்கர் அவருடைய கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்களைக் கேட்டுக் கொண்டார்.

	கம்கார் மைதானத்தில் ஜம்னாதாஸ் மேத்தா தலைமையில் தொழிலாளர் பேரணி ஒன்று நடந்தது.
7.11.1938	தொழிலாளர் வேலைநிறுத்தம் நடந்தது. தொழிலாளர் பேரணியில் அம்பேத்கர் உரையாற்றினார்.
10.11.1938	அம்பேத்கர் அறிவுறுத்தியதற்கு ஏற்ப, அவருடைய கட்சி உறுப்பினரான பி.ஜெ. ரோஹம் பம்பாய் மாகாணச் சட்டசபையில் குடும்பக்கட்டுப்பாடு மசோதாவைக் கொண்டு வந்தார்.
1938 டிசம்பர்	நைசாம் ஆட்சியின் கீழ் இருந்த அய்தராபாத்தில் தீண்டப்படாத வகுப்பினரின் முதலாவது மாநாட்டில் அம்பேத்கர் உரையாற்றினார்.
18.1.1939	அம்பேத்கர் ராஜ்காட் சிற்றரசுக்கு அரசின் விருந்தாளியாக விமானத்தில் சென்றார். அங்கே தீண்டப்படாத வகுப்பினரின் பிரச்சினைகள் பற்றி ஆராய்ந்தார்.
19.1.1939	அம்பேத்கர் காந்தியைச் சந்தித்தார். 'மாகாணங்கள் சீர்திருத்தக் குழுவில்' தீண்டப்படாத வகுப்பினர்கள் சேர்க்கப்படாதது குறித்துக் காந்தியுடன் விவாதிக்க வேண்டும் என்று எண்ணியிருந்தார். ஆனால் திடீரென காந்திக்குக் காய்ச்சல் ஏற்பட்டதால் அம்பேத்கர் அவருடன் முழுமையாக விவாதிக்க முடியாது போயிற்று.
29.1.1939	பூனாவில் கோகலே மண்டபத்தில் 'கூட்டாட்சியும் சுதந்திரமும்' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார்.
6.2.1939	பரோடா மன்னர் சாயாஜிராவ் கெய்க்வாடு பம்பாயில் இறந்தார்.
17.3.1939	பம்பாய்ச்சட்டசபையில், பம்பாய் ஆலைத் தொழிலாளர்கள்மீது காவல்துறையினர் துப்பாக்கிச்சூடு நடத்தியது குறித்து அம்பேத்கர் பிரச்சினையைக் கிளப்பினார்.
1939 சூலை	பம்பாய் ஆர்.எம். பட் உயர்நிலைப் பள்ளியில் ரோஹிதாஸ், ஹிக்ஷன் சமாஜம் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் அம்பேத்கர் உரையாற்றினார். 'தீண்டப்படாத வகுப்பினரிடையே உள்ள பல பிரிவுகளுக்கு இடையே கருத்து வேற்றுமை இருப்பது வருந்தத்தக்க

	தாகும்; என்னுடைய பணி என்பது ஒரு குறிப்பிட்ட பிரிவின் நலனை மட்டும் நோக்கமாகக் கொண்டதன்று; தீண்டப்படாத வகுப்பினரின் ஒட்டுமொத்த நலனையே குறிக்கோளாகக் கொண்டதாகும்' என்று கூறினார்.
1939	இரண்டாம் உலகப் போர் தொடங்கியது.
11.9.1939	கூட்டாட்சி முறையை (Federation) இரத்து செய்வதாக வைஸ்ராய் அறிவித்தார்.
25.10.1939	பம்பாய் மாகாணச் சட்டசபையில் இரண்டாம் உலகப் போரில் இந்தியா கலந்து கொள்வது குறித்துப் பிரதமர் கெர் கொண்டு வந்திருந்த தீர்மானத்தின் மீது அம்பேத்கர் பேசினார்.
1939 அக்டோபர்	லின்லித்தோ பிரபு இந்தியத் தலைவர்களைச் சந்தித்துப் பேசினார். அம்பேத்கர் அக்டோபர் 9ஆம் நாள் லின்லித்தோ பிரபுவைச் சந்தித்தார்.
1939 அக்டோபர் மூன்றாவது வாரம்	காங்கிரசுக் கட்சியின் போர்த்துணைக் குழுவின் தலைவராக இருந்த ஜவஹர்லால் நேரு பம்பாயில் அம்பேத்கரைச் சந்தித்து இரண்டு நாட்கள் பேசினார். (இவ்விருவரும் நேருக்கு நேர் முதன்முறையாக இப்போதுதான் சந்தித்துக் கொண்டனர்).
	காங்கிரசு அமைச்சரவை பதவி விலகுவது குறித்துக் காங்கிரசின் தலைவர்களும் அம்பேத்கரும் இரண்டு நாட்கள் பேசினர். அரசியலில் சூத்திரர்களாக இருக்கும் நிலையைத் தீண்டப்படாத வகுப்பினர் ஏற்கமாட்டார்கள் என்று அம்பேத்கர் கூறினார்.
1939 நவம்பர்	இந்திய மாகாணங்களில் பதவி வகித்த காங்கிரசு அமைச்சரவைகள் பதவி விலகின.
16.12.1939	ஹரிகானில் நடைபெற்ற 'மகார் வட்டன்தார் மாநாட்டிற்கு' அம்பேத்கர் தலைமை தாங்கினார்.
	மகார் வட்டன் நிலங்கள் மீதான வரியை அதிகப்படுத்தியிருப்பதை இம்மாநாடு கடுமையாக எதிர்த்தது.
27.12.1939	பெல்காம் நகராட்சி அம்பேத்கருக்கு வரவேற்பளித்தது.

	அம்பேத்கருக்குக் கொலம்பியாப் பல்கலைக் கழகத்தில் ஆசிரியராக இருந்த பேராசிரியர் ஆர்.ஏ. செலிக்மேன் இறந்தார்.
8.1.1940	பம்பாயில் பெரியார் ஈ.வெ.ராமசாமியின் குழுவினரும், அம்பேத்கரும் ஜின்னாவை அவருடைய வீட்டில் சந்தித்தனர்.
26.3.1940	முஸ்லீம் லீக், லாகூர் மாநாட்டில் பாக்கிஸ்தான் பிரிவினை கோரும் தீர்மானத்தை நிறைவேற்றியது.
1940 மே	அம்பேத்கர் மகார் பஞ்சாயத்தை ஏற்படுத்தினார்.
22.7.1940	சுபாஷ் சந்திரபோஸ் அம்பேத்கரைப் பம்பாயில் சந்தித்துப் பேசினார்.
11.1.1941	சிவராம் ஜன்ப காம்ளே மறைந்தார்.
1941 சனவரி	மகார்களை இராணுவத்தில் பணியில் சேர்ப்பது குறித்து அம்பேத்கர் முயற்சிகளை மேற்கொண்டார். 49 ஆண்டுகள் கழித்து இராணுவத்தில் மகார் தனிப்படைப் பிரிவு மீண்டும் ஏற்படுத்தப்பட்டது.
7.5.1941	புத்தர் பிறந்தநாள் தொடர்பாக அம்பேத்கர் எழுதிய தலையங்கம் ஒன்றில், 'பார்ப்பனியம் சனநாயகத்தை மறுக்கிறது; பார்ப்பனியம் சனநாயகத்துடன் முரண்பாடு கொண்டுள்ளது; சனநாயகத்தை ஏற்படுத்த வேண்டுமானால், நால்வருணத்தை ஒழித்தேயாக வேண்டும்' என்று குறிப்பிட்டார்.
1941 சூலை	இந்திய அரசின் பாதுகாப்பு ஆலோசனைக் குழுவில் அம்பேத்கர் உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.
1941 ஆகஸ்டு	நாசிக் மாவட்டம் சின்னாரில் நடைபெற்ற 'மகார் வட்டன்கள் மாநாட்டில்' மகார் வட்டன் நிலங்கள் மீது அதிக வரி விதித்திருப்பதை எதிர்த்தனர். அம்பேத்கர் வரிகொடா இயக்கத்தைத் தொடங்கினார். பம்பாய் மாகாணக் கவர்னரை அம்பேத்கர் சந்தித்துப் பேசினார். மகார் வட்டன்மீதான அதிக வரிவிதிப்பு விலக்கிக் கொள்ளப்பட்டது.
30.3.1942	சர். ஸ்டாஃபோர்டு கிரிப்சை அம்பேத்கர் சந்தித்துப் பேசினார்.

1942 ஏப்பிரல்	அனைத்திந்தியத் தீண்டப்படாத சாதிகள் பேரவையை அம்பேத்கர் நிறுவினார். இதன் தலைவர் என். சிவராஜ், பொதுச் செயலாளர் பி.என். ராஜ்போஜ்.
1942 சூலை 17-20	நாகபுரியில் அனைத்திந்தியத் தீண்டப்படாத சாதிகள் பேரவையின் மாநாட்டில் அம்பேத்கர் உரையாற்றினார். அங்கு நிறைவேற்றப்பட்ட அரசியல் கோரிக்கை பற்றிய தீர்மானங்களை, கியூபெக்கில் மௌண்ட்டிரம்பிளாண்ட்டில் நடைபெற்ற பசிபிக் நாடுகள் உறவு மாநாட்டில், அம்பேத்கர் அளித்த அறிக்கையில் சேர்த்தார். (பிறகு இது, 'காந்தியும் தீண்டப்படாதாரின் விடுதலையும்' என்ற பெயரில் நூலாக வெளியிடப்பட்டது).
20.7.1942	வைஸ்ராயின் நிர்வாகக் குழுவில் தொழிலாளர் நல அமைச்சராக அம்பேத்கர் சேர்ந்தார். இப்பதவியில் 1946 சூன் மாதம் வரை இருந்தார்.
1942	தீண்டப்படாத வகுப்பு மாணவர்கள் அயல்நாடுகளுக்குச் சென்று கல்வி கற்பதற்காகக் கல்வி உதவித் தொகை பெறும் திட்டம் உருவாக்கப்படுவதற்கு மூலகர்த்தாவாக இருந்தார். (இத்திட்டத்தை 1946இல் இராஜாஜி தலைமையிட்டின் பேரில் காங்கிரசு ஆட்சி கைவிட்டது).
9.8.1942	வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த 'வெள்ளையனே வெளியேறு' என்ற தீர்மானம் பம்பாய் காங்கிரசு மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.
13.11.1942	'இந்தியத் தொழிலாளரும் போரும்' என்ற தலைப்பில் பம்பாய் வானொலியில் அம்பேத்கர் உரை நிகழ்த்தினார்.
18.1.1943	பூனாவில் கோகலே மண்டபத்தில் மகாதேவ கோவிந்த இரானடேவின் 101ஆவது பிறந்த நாள் விழா நிகழ்ச்சியில் அம்பேத்கர் சொற்பொழிவாற்றினார். (அம்பேத்கரின் இச்சொற்பொழிவு ஏப்பிரல் மாதத்தில் 'இரானடே, காந்தி, ஜின்னா' என்ற பெயரில் நூலாக வெளியிடப்பட்டது).
1943 அக்டோபர்	வேவீஸ் பிரபு வைஸ்ராயாக நியமிக்கப்பட்டார்.

	தீண்டப்படாத வகுப்பு மக்களை இராணுவப் பணிக ளில் சேருவதற்கு இருந்த தடைகள் மத்தியச் சட்டசபையின் தீர்மானத்தின் மூலம் நீக்கப்பட்டன.
	'தொழிலாளரும் பாராளுமன்றச் சனநாயகமும்' என்ற தலைப்பில் அம்பேத்கர் சொற்பொழிவாற்றினார்.
1943	அம்பேத்கர் மகாஸ்தவீர் சந்தராமணியைக் குசிநராவில் சந்தித்தார்.
1944	'பம்பாய் தீண்டப்படாத வகுப்பினர் முன்னேற்ற அறக்கட்டளை' பம்பாயில் அமைக்கப்பட்டது.
1945 பிப்ரவரி	அம்பேத்கர் எழுதிய 'பாக்கிஸ்தான் அல்லது இந்தியப் பிரிவினை' என்ற நூலைத் தாக்கர் அண்ட் கோ என்ற நூல் வெளியீட்டு நிறுவனம் வெளியிட்டது. ('பாக்கிஸ்தான் பற்றிய எண்ணங்கள்' என்ற அம்பேத் கரின் நூல் மேலும் விரிவுபடுத்தப்பட்டு இப்போது இப்பெயரில் இரண்டாவது பதிப்பாக வெளிவந்தது).
8.5.1945	பம்பாய் பரேல் பகுதியில் தீண்டப்படாத சாதிகள் பேரவையின் ஆண்டு மாநாடு நடந்தது. அம்மாநாட் டில் அம்பேத்கர், 'வகுப்புவாரிச் சிக்கல்; அதைத் தீர்ப்பதற்கான வழி' என்ற தலைப்பில் உரையாற்றி னார்.
1945 சூன்	'காங்கிரசும் காந்தியும் தீண்டப்படாதவர்களுக்குச்செய் தது என்ன?' என்ற அம்பேத்கரின் நூல் வெளியிடப் பட்டது.
1945 சூலை	அம்பேத்கர் 'மக்கள் கல்விக் கழகத்தைப்' பம்பாயில் அமைத்தார்.
10.1.1946	பிரிட்டிஷ் பாராளுமன்றத் தூதுக்குழுவின் முன் அம்பேத்கர் சாட்சியம் அளித்தார்.
3.3.1946	பம்பாய் நரே பூங்காவில் தீண்டப்படாத சாதிகள் பேரவை ஏற்பாடு செய்திருந்த தேர்தல் கூட்டத்தில் அம்பேத்கர் பேசினார்.
12.3.1946	சென்னையிலிருந்து வெளிவந்த 'ஜெய்பீம்' ஏட்டில் 'தீண்டப்படாதவர்களைப் புறக்கணித்திட காங்கிரசு மேற்கொள்ளும் முயற்சிகள்' என்ற அம்பேத்கர் எழுதிய கட்டுரை வெளிவந்தது.

23.3.1946	பிரிட்டிஷ் அமைச்சரவைத் தூதுக்குழு தில்லியை வந்தடைந்தது.
30.3.1946 31.3.1946	பம்பாய் ஓர்லியில் காந்தி தங்கியிருந்தபோது தீண்டப்படாத வகுப்பு மக்கள் அவருக்குக் கறுப்புக்கொடி காட்டி ஆர்ப்பாட்டம் செய்தனர்.
5.4.1946	பிரிட்டிஷ் அமைச்சரவைத் தூதுக்குழுவினரிடம் அம்பேத்கர் தன் கருத்துகளை எடுத்துரைத்தார்.
1946 மே	பம்பாயில் அம்பேத்கரின் தொண்டர்களுக்கும் சாதி இந்துக்களுக்கும் ஏற்பட்ட மோதல்கள் காரணமாக அம்பேத்கருக்குச் சொந்தமான பாரத்பூஷண் அச்சகம் சாதி இந்துக்களால் எரிக்கப்பட்டது.
16.5.1946	பிரிட்டிஷ் அமைச்சரவைத் தூதுக்குழு அதனுடைய திட்டத்தை வெளியிட்டது. அதில் தீண்டப்படாதவர்களின் கோரிக்கைகள் பற்றி எதுவுமே கூறப்படாமல் புறக்கணிக்கப்பட்டிருப்பதைக் கண்டு அம்பேத்கர் சினங் கொண்டார்.
28.5.1946	இரண்டாம் உலகப் போர் முடிவுற்றது.
17.6.1946	தீண்டப்படாத வகுப்பினர்க்குப் போதிய பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும் என்று கோரி பிரிட்டிஷ் பிரதமருக்கு அம்பேத்கர் தந்தி அனுப்பினார். 'பிரிட்டிஷ் அமைச்சரவைத் தூதுக்குழுவின் திட்டம் ஒரு திறனாய்வு' என்ற தன்னுடைய அறிக்கையையும் பிரிட்டிஷ் பிரதமருக்கு அனுப்பினார்.
20.6.1946	அம்பேத்கர் பம்பாயில் நிறுவிய சித்தார்த்தா கல்லூரி செயல்படத் தொடங்கியது.
30.6.1946	அமைச்சரவைத் தூதுக்குழு இலண்டனுக்குத் திரும்பியது.
1946 ஜூன்	வைஸ்ராயின் நிர்வாகக் குழுவிலிருந்து அம்பேத்கர் விலகினார்.
21.7.1946	பூனாவில் காங்கிரசுக்கு எதிராகத் தீண்டப்படாத சாதிகள் பேரவை சத்தியாக்கிரகத்தைத் தொடங்கியது.
	அங்குப் பேரவையின் கூட்டத்தில் அம்பேத்கர் உரை நிகழ்த்தினார்.

24.8.1946	மத்திய அரசில் இடைக்கால அமைச்சரவை அறிவிக்கப் பட்டது.
13.10.1946	அம்பேத்கர் எழுதிய 'சூத்திரர்கள் யார்?' என்ற நூல் வெளியிடப்பட்டது.
4.11.1946	அம்பேத்கர் வின்சன்ட் சர்ச்சிலை அவருடைய கிராமப் புற வீட்டில் சந்தித்தார். இலண்டனில் பிரதமர் அட்லியைச் சந்தித்தார்.
5.11.1946	இங்கிலாந்தில் மக்கள் சபையின் கன்சர்வேட்டிவ் கட்சியின் இந்தியாவுக்கான கமிட்டியின் உறுப்பினர் கள் கூட்டத்தில் அம்பேத்கர் உரையாற்றினார். அக் கூட்டத்தில் பூனா ஒப்பந்தத்தை இரத்து செய்ய வேண்டும் என்றும், மெக்டொனால்டு வழங்கிய வகுப்புவாரி ஒதுக்கீடு முறையை மீண்டும் கொண்டு வரவேண்டும் என்றும் கூறினார்.
1946 நவம்பர்	அம்பேத்கர் அரசியலமைப்புச் சட்ட அவைக்கு வங்காளத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார்.
15.11.1946	இலண்டனிலிருந்து திரும்பினார்.
15.12.1946	அரசியலமைப்புச் சட்ட அவையில் அம்பேத்கர் முதன்முதலாக ஆற்றிய உரையை அவையின் அனைத்து உறுப்பினர்களும் வெகுவாகப் பாராட்டிப் புகழ்ந்தனர்.
27.3.1947	இந்தியாவின் புதிய வைஸ்ராய் மௌண்ட்பேட்டன் பிரபு இந்தியாவிற்கு வந்தார்.
1947 மார்ச்சு	அம்பேத்கர் எழுதிய 'மாகாணங்களும் சிறுபான்மையி னரும்' என்ற நூல் வெளியாயிற்று.
29.4.1947	'எந்தவொரு வடிவத்திலும் தீண்டாமையைக் கடைப்பி டிப்பது என்பது ஒழிக்கப்பட்டுவிட்டது' எனும் அரசியலமைப்புச் சட்ட விதி 17 நிறைவேற்றப் பட்டது.
7.5.1947	அம்பேத்கர் எழுதிய 'உருபாயின் சிக்கல்' என்ற நூல், இரண்டாம் பதிப்பாக 'Hisotry of Indian currency and Banking' என்ற பெயரில் பம்பாய் தாக்கர் அண்ட் கோ கம்பெனியால் வெளியிடப்பட்டது.

14.7.1947	மௌண்ட்பேட்டன் பிரபு அரசியலமைப்புச் சட்ட அவையைத் தொடக்கி வைத்தார்.
22.7.1947	எம்.ஆர். ஜெயகர் பதவி விலகியதால் ஏற்பட்ட காலி இடத்திற்கு அம்பேத்கர் அரசியல் அமைப்புச்சட்ட அவையின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
3.8.1947	சுதந்திர இந்தியாவின் மத்திய அமைச்சரவையின் அமைச்சர்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டன. அம் பேத்கர் சட்ட அமைச்சராக அமைச்சரவையில் இடம் பெற்றார்.
15.8.1947	இந்தியா சுதந்திர நாடாயிற்று; அத்துடன் பாக்கிஸ்தா னும் தனிநாடாக உருவாயிற்று.
29.8.1947	அம்பேத்கரைத் தலைவராகக் கொண்ட அரசியல் சட்ட வரைவுக்குழு அமைக்கப்பட்டது.
12.1.1948	பாக்கிஸ்தானுக்கு இந்தியா 55 கோடி ரூபாய் அளிக்க வேண்டும் என்று கோரிக் காந்தி தன் உண்ணாநோன்பி னைத் தொடங்கினார்.
15.1.1948	இந்தியா பாக்கிஸ்தானுக்கு 55 கோடி ரூபாய் கொடுத்தது.
18.1.1948	காந்தி தன் உண்ணாநோன்பினை முடித்துக் கொண் டார்.
25.1.1948	தீண்டப்படாத சாதிகள் பேரவையின் மாநாட்டினை அம்பேத்கர் லக்னோவில் கூட்டினார்.
30.1.1948	காந்தி, நாதுராம் கோட்சே என்பவரால் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டார்.
1948 பிப்ரவரி	அம்பேத்கர் அரசியல் அமைப்புச் சட்ட நகலை எழுதி முடித்தார்.
9.4.1948	இந்துச் சட்டத் திருத்த மசோதாவை ஆய்வு செய்வதற் காக அம்பேத்கர் தலைமையில் ஒரு தேர்வுக்குழு அமைக்கப்பட்டது.
15.4.1948	அம்பேத்கர் சாரதா கபீரைத் திருமணம் செய்து கொண்டார். அம்பேத்கரின் இரண்டாவது திருமணம் இது.

21.7.1948	குடியரசுத் தலைவர் இராஜேந்திரப் பிரசாத் இந்துச் சட்டத் திருத்த மசோதாவிற்கு எதிர்ப்புத் தெரிவித்தார்.
22.7.1948	பிரதம மந்திரி நேரு இந்துச் சட்டத் திருத்த மசோதவை ஆதரித்து இராஜேந்திரப் பிரசாத்துக்குக்கடிதம் எழுதி னார்.
11.9.1948	பாக்கிஸ்தான் ஜனாதிபதி எம்.ஏ. ஜின்னா மறைவுற்றார்.
14.10.1948	மொழிவழிப்பட்ட மாநிலமாக மகாராட்டிரம் அமைவது பற்றி அம்பேத்கர் தன்னுடைய அறிக்கையைத் தார் கமிட்டியிடம் அளித்தார்.
18.10.1948	அம்பேத்கர் எழுதிய 'தீண்டப்படாதவர்கள்' என்ற நூலைத் தில்லியைச் சேர்ந்த அமிர்த் புக் அண்ட் கோ நிறுவனம் வெளியிட்டது.
4.11.1948	அம்பேத்கர் அரசியலமைப்புச் சட்ட வரைவு நகலை அரசியலமைப்பு அவையில் முன்மொழிந்தார்.
28.11.1948	தன்னுடைய அரசு இந்துச் சட்டத் திருத்த மசோதாவை நிறைவேற்றுவதை இலட்சியமாகக் கொண்டுள்ளது என்று நேரு நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.
17.11.1949	அரசியலமைப்புச் சட்ட மசோதா மீதான மூன்றாவது சுற்று விவாதம் தொடங்கியது.
25.11.1949	அரசியலமைப்புச் சட்ட அவையில் அம்பேத்கர் தன் முடிப்புரையை நிகழ்த்தினார். அவருடைய உரை உறுப்பினர்களின் பெரும் பாராட்டுதலைப் பெற்றது.
26.11.1949	அரசியலமைப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.
19.12.1949	பிரதமர் நேரு இந்துச் சட்டத் திருத்த மசோதாவிற்கான தன் ஆதரவை மீண்டும் உறுதி செய்தார்.
2.5.1950	பௌத்தம் குறித்து அம்பேத்கர் முதல் தடவையாகப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றினார்.
1950 மே	'புத்தரும் பௌத்தத்தின் எதிர்காலமும்' என்ற தலைப் பில், கல்கத்தாவின் மகாபோதி ஏப்பிரல்-மே இதழுக்கு ஒரு கட்டுரை அனுப்பினார்.

26.5.1950	அம்பேத்கர் இலங்கையில் கண்டிக்குச் சென்றார்.
6.6.1950	அம்பேத்கர் இலங்கையில் உள்ள கொழும்புவிற்குச் சென்றார். அங்குப் பௌத்த இளைஞர் சங்கத்தில், 'இந்தியாவில் பௌத்தத்தின் எழுச்சியும் வீழ்ச்சியும்' என்ற தலைப்பில் உரையாற்றினார்.
5.2.1951	அம்பேத்கர் அரசின் சார்பில் இந்துச் சட்டத் திருத்த மசோதாவை நாடாளுமன்றத்தில் முன்மொழிந்தார்.
1951 பிப்ரவரி	கல்கத்தா 'மகாபோதி' இதழுக்கு 'இந்துப் பெண்களின் எழுச்சியும் வீழ்ச்சியும்' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை அனுப்பினார்.
1951 ஏப்பிரல்	தில்லியில் 'அம்பேத்கர் பவனுக்கு' அடிக்கல் நாட்டினார்.
1951மே	மக்கள் பிரதிநிதித்துவ மசோதாவை நாடாளுமன்றத்தில் முன்மொழிந்தார்.
1951 சூலை	பாரதியப் புத்த ஜன சங்கத்தை ஏற்படுத்தினார்.
10.8.1951	பிரதமர் நேரு இந்துச் சட்டத்திருத்த மசோதா தொடர்பாக அம்பேத்கரின் நிலைப்பாட்டை ஆதரிக்காமல் கைவிட்டுவிட்டார்.
19.9.1951	திருமணம் மற்றும் மணவிலக்கு மசோதா நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டது.
11.10.1951	இந்துச் சட்டத் திருத்த மசோதா தொடர்பாக அம்பேத்கர் மிகுந்த ஏமாற்றத்திற்குள்ளானார். எனவே நேருவின் அமைச்சரவையிலிருந்து விலகினார்.
26.11.1951	'இந்துச் சட்ட மசோதா ஒரு சொட்டுக் கண்ணீரும் சிந்தாமல் சாகடிக்கப்பட்டுவிட்டது' என்றார் அம்பேத்கர்.
5.1.1952	தீண்டப்படாத சாதிகள் பேரவையின் சார்பில் பொதுத் தேர்தலில் பம்பாய் நாடாளுமன்றத் தொகுதியில் வேட்பாளராகப் போட்டியிட்ட அம்பேத்கரைக்காங்கிரசுக் கட்சியின் வேட்பாளரான என்.எஸ். கஜ்ரோல்கர் தோற்கடித்தார்.

9.3.1952	பம்பாய் மாகாணத்திலிருந்து மாநிலங்கள் அவைக்கு அம்பேத்கர் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
5.6.1952	அமெரிக்காவில் கொலம்பியாப் பல்கலைக் கழகம் அளித்த கௌரவ டாக்டர் பட்டத்தை (Doctor of Laws and Letters) நேரில் பெற்றார்.
15.6.1952	நியூயார்க்கிலிருந்து பம்பாய்க்குத் திரும்பினார்.
22.12.1952	பூனாவில் வழக்கறிஞர் சங்கத்தில் 'சனநாயகம் வெற்றி கரமாகச் செயல்படுவதற்கான முன்தேவைகள்' என்ற தலைப்பில் உரையாற்றினார்.
12.1.1953	உசுமானியப் பல்கலைக்கழகம் அம்பேத்கருக்குக் கௌரவ டாக்டர் பட்டத்தை வழங்கியது.
1953 ஏப்பிரல்	தீண்டாமை (குற்றங்கள்) மசோதா நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டது.
1954 சனவரி	பெரியார் ஈ.வெ. இராமசாமி தென்னிந்தியாவில் புத்தரின் கொள்கைகளைப் பரப்புவதற்காக ஈரோட்டில் பௌத்தர் மாநாட்டைக் கூட்டினார்.
4.1.1954	அட்ரே பிக்சர்ஸ் தயாரித்த ஜோதிராவ் புலே என்ற திரைப்படத்தின் படப்பிடிப்பை அம்பேத்கர் தொடக்கி வைத்தார்.
1954 ஏப்பிரல்	பந்தாரா நாடாளுமன்றத் தொகுதியில் இடைத்தேர்தலில் அம்பேத்கர் போட்டியிட்டார்.
1954 மே	புத்தர் பிறந்தநாள்விழா நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக அம்பேத்கர் இரங்கூன் சென்றார். பந்தாரா நாடாளுமன்றத் தொகுதியில் இடைத்தேர்தலில் அம்பேத்கர் தோல்வியடைந்தார். இச்செய்தியை இரங்கூனில் நாளேட்டில் படித்துத் தெரிந்து கொண்டார்.
12.9.1954	அம்பேத்கர் மாநிலங்கள் அவையில் தீண்டாமை (குற்றங்கள்) மசோதாமீது பேசினார்.
3.10.1954	அனைத்திந்திய வானொலியில் 'என்னுடைய தத்துவம்' என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார்.

1954	அம்பேத்கர் சென்னைக்கு வந்திருந்தபோது பேராசிரியர் நரசு 'நவீன பௌத்தர்களின் மதம்' என்று எழுதிய நூலின் கையெழுத்துப் பிரதிகளைப் பெற்றுச் சென்றார்.
1954 டிசம்பர்	மூன்றாவது பௌத்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அம்பேத்கர் இரங்கூன் சென்றார்.
3.1.1955	இரங்கூனில் பெரியார் ஈ.வெ.ரா.வும் அம்பேத்கரும் உரையாடினர்.
14.1.1955	'பர்மாவில் பௌத்தம் குறித்து நான் கண்டது என்ன?' என்ற தலைப்பில் பம்பாயில் சொற்பொழிவாற்றினார்.
24.5.1955	1956 அக்டோபர் மாதத்தில் பௌத்த மதத்தில் சேரப்போவதாக அம்பேத்கர் பம்பாயில் அறிவித்தார்.
25.12.1955	தில்லியில் தெகு சாலையில் புத்தரின் சிலையை அம்பேத்கர் நிறுவினார்.
1955	'பிரபுத்த பாரத்' என்ற ஏடு அம்பேத்கர் மகன் யசுவந்தராவை ஆசிரியராகக் கொண்டு தொடங்கப்பட்டது. ('ஜனதா' ஏடே 'பிரபுத்த பாரத்' என்று பெயர் மாற்றம் பெற்றது).
1956 பிப்ரவரி	'புத்தரும் அவருடைய தம்மமும்', 'பண்டைய இந்தியாவில் புரட்சியும் எதிர்ப்புரட்சியும்', 'புத்தரும் மார்க்சும்', என்ற நூல்களை அம்பேத்கர் எழுதி முடித்தார்.
1.5.1956	மாநிலங்கள் அவையில் மொழிவழி மாநிலங்களின் பிரச்சினைகள் பற்றிப் பேசினார்.
1956 மே	'நான் ஏன் பௌத்தத்தை விரும்புகிறேன்' என்ற அம்பேத்கரின் உரை இலண்டன் பி.பி.சி. வானொலி நிலையத்தில் (B.B.C.)ஒலிபரப்பப்பட்டது. 'இந்தியாவில் சனநாயகத்தின் எதிர்காலம்' என்ற உரை 'வாய்ஸ் ஆப் அமெரிக்காவி'ல் ஒலிபரப்பாயிற்று.
23.9.1956	தான் பௌத்த மதத்திற்கு மதம் மாறுவது குறித்து அம்பேத்கர் ஒரு அறிக்கையை வெளியிட்டார்.
30.9.1956	குடியரசுக் கட்சியைத் தொடங்க எண்ணங் கொண்டிருப்பதுபற்றி அறிவித்தார்.

14.10.1956	அம்பேத்கர் பௌத்த மதத்திற்கு மதம் மாறிய நிகழ்ச்சி நாகபுரியில் நடைபெற்றது. அம்பேத்கருக்கும் அவருடைய மனைவி சவிதா அம்பேத்கருக்கும் காலை 9.30 மணிக்கு மகாஸ்தவிர் சந்தராமணி பௌத்த மதத்தில் சேருவதற்கான உறுதிமொழிகளைக் கூறிட, அவற்றை அம்பேத்கரும் அவருடைய மனைவியும் திரும்பக் கூறினர். அதன்பின், அம்பேத்கர் அங்குக் கூடியிருந்த இலட்சக்கணக்கான மக்களுக்குப் பௌத்த மதத்தில் சேருவதற்காக அவர் உருவாக்கிய 22 உறுதி மொழிகளைக் கூறி மக்களை உறுதிமொழி ஏற்கச் செய்தார்.
15.11.1956	அம்பேத்கர் உலகப் பௌத்த மாநாட்டில் அதன் பிரதிநிதியாகக் கலந்து கொள்வதற்காகக் காட்மண்டு சென்றார். அங்குப் 'புத்தரும் காரல் மார்க்சும்' என்ற தலைப்பில் உரையாற்றினார்.
6.12.1956	மாபெரும் மனிதராகத் திகழ்ந்த அம்பேத்கர் தில்லியில் அலிப்பூர் சாலையில் அவருடைய இல்லத்தில் மறைந்தார். இரவு 9 மணிக்கு விமானம் மூலம் தில்லியிலிருந்து பம்பாய்க்கு அவருடைய உடல் எடுத்துச் செல்லப்பட்டது.
7.12.1956	பம்பாயில் தாதரில் இலட்சக்கணக்கான அவருடைய தொண்டர்களும் பற்றாளர்களும் மக்களும் தேம்பியழுதிட, அம்பேத்கரின் பூத உடல் எரியூட்டப்பட்டது. அம்பேத்கர் புகழுடம்பு எய்தினார்.

டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் நூல்கள்

1915 'கிழக்கிந்தியக் கம்பெனியின் நிர்வாகமும் நிதிக்கோட்பாடும்' (கொலம்பியாப் பல்கலைக்கழகத்தில் எம்.ஏ. பட்டத்திற்காக அம்பேத்கர் அளித்த ஆய்வுக்கட்டுரை) அம்பேத்கர் தொகுப்பு நூல் வரிசை எண் 6இல் இவ்வாய்வுக் கட்டுரை வெளியிடப்பட்டுள்ளது.

1916 'இந்தியாவில் சாதிகள்: அவற்றின் இயக்கமும் தோற்றமும் வளர்ச்சியும்' — என்ற கட்டுரை பேராசிரியர் கோல்டன் வெஸ்கர் நடத்திய மாந்தவியல் கருத்தரங்கில் அம்பேத்கரால் படிக்கப்பட்டது. இது 1917ஆம் ஆண்டு 'Indian Antiquary'இல் மே மாத இதழில் வெளியிடப்பட்டது. இப்போது அம்பேத்கர் தொகுப்பு நூல் வரிசை எண் 1இல் வெளியிடப்பட்டுள்ளது.

1917 The National Dividend of India: A Historical & Analytical study (கொலம்பியாப் பல்கலைக்கழகத்தில் Ph.D. பட்டத்திற்காக அளிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை இது. 1925இல் இவ்வாய்வுக்கட்டுரை 'பிரிட்டிஷ் இந்தியாவில் மாகாண நிதியின் வளர்ச்சிக் கோட்பாடு' என்ற பெயரில் நூலாக வெளியிடப் பட்டது.

1918 'சமுதாய மாற்றத்திற்கான கோட்பாடுகள்' என்று பெர்ட்ரண்ட் ரசல் எழுதிய நூலுக்கு அம்பேத்கர் எழுதிய திறனாய்வுக் கட்டுரை (இது இந்தியப் பொருளாதாரச் சங்கத்தின் பத்திரிக்கையில் 1918 மே மாதம் (தொகுதி I. எண். I) வெளியிடப்பட்டது.)

1918 'இந்தியாவில் சிறு நிலவுடைமையும் அதற்கான தீர்வுகளும்'

1919 சௌத்பரோ வாக்குரிமைக் குழுவிடம் அளித்த அறிக்கை (அம்பேத்கர் தொகுப்பு நூல் வரிசை எண் 1)

சம்பாகி ஆட்சிக் காலத்தில் நிலவிய சமுதாய நிலைமைகள்.

1923 'ரூபாயின் சிக்கல்' (இலண்டன் பல்கலைக்கழகத்தில் டி.எஸ். (பொருளாதாரம்) பட்டம் பெறுவதற்காக அளித்த ஆய்வுக் கட்டுரை. 1925இல் இது நூலாக அச்சிடப்பட்டது. இது

மீண்டும் *1947*இல் History of Indian Currency & Banking என்ற பெயரில் வெளியிடப்பட்டது.) இப்போது அம்பேத்கர் தொகுப்பு நூல் வரிசை எண் 6இல் இடம் பெற்றுள்ளது.

1923 'இந்தியாவில் பொறுப்பு வாய்ந்த அரசாங்கத்தின் பொறுப்புகள்'

1925 ஹில்டன் யங் தலைமையிலான இந்திய நாணயக் குழுவின் முன் அளித்த சாட்சியம்.

1928 பம்பாய் மாகாணத்தில் தீண்டப்படாத வகுப்பினரின் கல்வி நிலைபற்றிய அறிக்கை (பகிஷ்கிரித் ஹித்தகாரணி சபையின் சார்பில் சைமன் குழுவிடம் அளித்த அறிக்கை) இப்போது அம்பேத்கர் தொகுப்பு நூல் வரிசை எண் 2இல் இடம் பெற்றுள்ளது.

1929 'புரோகிதச் சூழ்ச்சி எதிர்ப்புச் சங்கம் ஒன்று தேவை' (*8-11-1929*இல் பம்பாய்க் கிரானிக்கிள் ஏட்டில் வெளியான கட்டுரை)

1930 ''தீண்டப்படாத வகுப்பினரின் அரசியல் உரிமைகள்'' (வட்டமேசை மாநாட்டு நடவடிக்கைத் தொகுப்பு III, இணைப்பு III, சிறுபான்மைத் துணைக்குழுவின் கூட்ட நடவடிக்கை எண் III) அம்பேத்கர் தனிப்பட்ட முறையில் இந்த அறிக்கையை 2000 படிகள் அச்சிட்டார்.

1930 சுயாட்சி அரசில் அமைய உள்ள எதிர்கால இந்தியாவிற்கான அரசியல் சட்டத்தில் தீண்டப்படாத வகுப்பு மக்களின் பாதுகாப்பிற்காக ஏற்படுத்தப்பட வேண்டிய அரசியல் பாதுகாப்புத் திட்டம் (முதல் வட்டமேசை மாநாடு, இணைப்பு II, தொகுதி III பக்கம் *168-176*, சிறுபான்மைத் துணைக்குழுவின் கூட்ட நடவடிக்கை) (அம்பேத்கர் தொகுப்பு நூல் வரிசை எண் *2)*

1936 'சாதி ஒழிப்பு' (அம்பேத்கர் தொகுப்பு நூல் வரிசை எண் *1)*

1939 கூட்டாட்சியும் சுதந்திரமும் (அம்பேத்கர் தொகுப்பு நூல் வரிசை எண் *1)*

1940 'பாக்கிஸ்தான் பற்றிய எண்ணங்கள்' (இது மேலும் விரிவுபடுத்தப்பட்டுப் 'பாக்கிஸ்தான் அல்லது இந்தியப் பிரிவினை' என்ற பெயரில் 1945இல் வெளியிடப்பட்டது. (அம்பேத்கர் தொகுப்பு நூல் வரிசை எண் 8)

1942 'தீண்டப்படாத வகுப்பு மக்களின் பிரச்சினைகள்' (கியூபெக் மவுண்ட் டிரம்பிளாண்டில் பசிபிக் உறவு நாடுகள் கருத்தரங்கில் அம்பேத்கர் படித்த ஆய்வுக்கட்டுரை. பிறகு 'காந்தியும் தீண்டப்படாத வகுப்பு மக்களின் விடுதலையும்' என்ற பெயரில் நூலாக வெளியிடப்பட்டது)

1943 இரானடே, காந்தி, ஜின்னா

1945 காங்கிரசும் காந்தியும் தீண்டப்படாத வகுப்பு மக்களுக்குச் செய்தது என்ன?

1945 வகுப்பு வாரிச் சிக்கல்: அதைத் தீர்ப்பதற்கான ஒரு வழி

1946 சூத்திரர்கள் யார்? (அம்பேத்கர் தொகுப்பு நூல் வரிசை எண் 7)

1946 பிரிட்டிஷ் அமைச்சரவைத் தூது குழுவும் தீண்டப்படாதவர்களும்

1947 மாநிலங்களும் சிறுபான்மையினரும்

1948 தீண்டப்படாதவர் (அம்பேத்கர் தொகுப்பு நூல் வரிசை எண் 7)

1948 மொழிவழிப்பட்ட மாநிலமாக மகாராட்டிரம் (அம்பேத்கர் தொகுப்பு நூல் வரிசை எண் 1)

1950 புத்தரும் அவருடைய மதத்தின் எதிர்காலமும்

1950 இந்துப் பெண்களின் எழுச்சியும் வீழ்ச்சியும்

1956 புத்தரும் அவருடைய தம்மமும்

1982 இராமனின் புரட்டுகள் (அம்பேத்கர் தொகுப்பு நூல் வரிசை எண் 4)

1979 அம்பேத்கர் தொகுப்பு நூல் வரிசை எண் 1

1982 அம்பேத்கர் தொகுப்பு நூல் வரிசை எண் 2

1987 அம்பேத்கர் தொகுப்பு நூல் வரிசை எண் 3

1987 அம்பேத்கர் தொகுப்பு நூல் வரிசை எண் 4

1989 அம்பேத்கர் தொகுப்பு நூல் வரிசை எண் 5

1989 அம்பேத்கர் தொகுப்பு நூல் வரிசை எண் 6

1990 அம்பேத்கர் தொகுப்பு நூல் வரிசை எண் 7

1990 அம்பேத்கர் தொகுப்பு நூல் வரிசை எண் 8

1991 அம்பேத்கர் தொகுப்பு நூல் வரிசை எண் 9

1991 அம்பேத்கர் தொகுப்பு நூல் வரிசை எண் 10

பெயர்க் குறிப்பு அகராதி

அக்பர் ஹைதரி, சர் 208

அசோக் மேத்தா - பார்க்க மேத்தா

அட்ரே, பி.கே. 673, 770, 774, 779, 780

அட்லி, கிளெமென்ட் 559, 569

அட்லி, (மேஜர்) கிளெமென்ட் 170, 171

அந்தோணி, ஃபிராங்க் 572

அமெரி 498

அயசக்ஃபுட் 227

அர்ச்சுனன் 126

அலெக்சாண்டர், ஏ.வி. 559

அனுமந்தய்யா, கே 625

அன்னிபெசன்ட், டாக்டர் 249

அஸ்நாட்கர் 60

ஆகர்கர், ஜி.ஜி. 9

ஆகஸ்டைன் 526

ஆகாகான் 208, 253, 281

ஆசாத், மௌலான அபுல்கலாம் 173, 549, 559, 566, 590

ஆதிசங்கரர் 694, 766, 767

ஆர்னிமன், பி.வி. 509, 510

ஆனந்தராவ் 13, 26

ஆனந்த் கௌசல்யாயன் 777, 779

ஆனே, லோகநாயக் 513, 529

இட்லர் 499, 678, 690

இந்து 91

இராசகோபாலாச்சாரி 303, 304, 309, 310, 311, 407, 409, 410, 489, 493, 494, 535, 548, 566, 671, 681, 781

இராதாகிருஷ்ணன் 712, 727

இராமகிருஷ்ண பரமஹம்சர் 414

இராமசாமி, பெரியார் ஈ.வெ 87, 541

இராமசாமி அய்யர், சர்.சி.பி. 208, 215, 419, 511

இராமசாமி முதலியார், சர்.ஏ. 235, 251

இராமதாஸர் 153

இராமனந்தர் 694

இராமன், சர்.சி.வி. 712

இராமாபாய் 58, 59, 91, 356, 361, 362

இராமானுஜர் 4, 284, 694

இராஜரத்தினா 91, 92

இராஜா, எம்.சி. 258, 259, 266, 282, 283, 284, 292, 293, 294, 301, 304, 305, 405, 407, 409, 410, 413, 419, 498, 503, 504, 505, 513

இராஜாஜி - பார்க்க இராசகோபாலாச்சாரி

உபாஷம், எஸ்.ஏ. 431

உஸ்மான், சர். முகம்மது 511

ஊநூ 755

ஊபாஸ்வே 755

எசிகெயில், அய்.ஏ. 499

எட்வின் கன்னான் 42

எமர்சன் 793

ஏங்கெல்ஸ் 579

ஏசுநாதர் 5, 626

ஐசனோவர், ஜெனரல் 660

கங்காதரன் 59

கட்கர் 65

கட்ரே, ஆனந்தராவ் 585

கட்ஜூ 668, 669, 681

கதிரேக்கர், பாஸ்கர ராவ் 347

கதே 709

கத்ரே, ஆனந்தராவ் 389

கபீர் 5, 12, 694, 712

கப்பூர், ஜெ.ஆர். 638

கரே, டாக்டர் 456

கலே, கே.ஜெ. 766

கல்வங்கர், டாக்டர் சதானந்த் 362, 375

கவாய், ஜி.ஏ. 132, 357

கனான், எட்வின் 67

கனேகர், பி.ஜி. 303

கஜேந்திர கட்கர், ஏ.பி. 30, 647

கஜ்ரோல்கர், 276, 279, 379, 656, 662

காட்கி, சுபேதார் 143

காட்கில், என்.வி. 193, 590, 644

காட்டு, பி.ஜி. 181

காட்போலே, டபிள்யு.எம். 746

காந்தி, மகாத்மா 59, 65, 66, 74, 75, 81, 82, 106, 127, 144, 195, 202, 205, 229, 230, 235, 237, 238, 245, 246, 247, 248, 249, 250, 251, 252, 253, 254, 255, 256, 257, 258, 259, 260, 261, 262, 272, 274, 275, 276, 277, 278, 280, 281, 283, 296, 297, 298, 300, 301, 302, 304, 305, 306, 307, 308, 309, 310, 311, 313,

314, 320, 326, 327, 328, 329, 333, 336, 345, 357, 371, 374, 382, 391, 407, 409, 413, 456, 457, 468, 474, 489, 500, 503, 508, 516, 521, 527, 528, 529, 535, 536, 537, 541, 542, 543, 547, 548, 552, 555, 557, 559, 563, 565, 573, 582, 584, 586, 587, 589, 596, 597, 614, 680, 694, 707, 715, 719

காப்பர்டே, ஜி.எஸ். 49, 134

காமத், எச்.வி. 648

காம்ப்ளே, சிவராம்ஜன்பா 28, 131, 193, 199

காம்ப்ளே, பி.சி. 656, 780

கார்லைல் 527

கார்வே, டி.கே. 11

கிப்பன் 710

கிரிப்ஸ், சர்.ஸ்டாஃபோர்டு 501, 502, 503, 504, 515, 542, 554

கிருஷ்ணமாச்சாரி, டி.டி. 588, 595, 610

கிருஷ்ணசாமி, சர். அல்லாடி 588

கிருஷ்ணா (பகவான்) 626

கீதை, பகவத் 717, 683

குதிராம் போஸ் 106

குருநானக் 694

குளோர்னி போல்ட்டன் 264

குன்றக்கோட்டி, டாக்டர் 410

குன்ஸ்ரு, எச்.என் 615, 644, 648

கூஸ்ரோ 511

கெய்க்வாடு, பாபுராவ் 139, 195, 229, 285, 566, 599, 776, 780

கெய்க்வாடு, மன்னர் சாயாஜிராவ் 5, 29, 39, 46, 49, 77, 219

கெர், பி.ஜி. 76, 196, 481, 564, 601

கெலுஸ்கர் 46, 91, 347

கெலுஸ்கர், கிருஷ்ணாஜி அர்ஜுன் 26, 28, 29

கெல்கர், என்.சி. 495

கெனி, டாக்டர் 728

கேளப்பன் 314, 315

கோகலே, எல்.ஆர். 663

கோகலே, கோபால கிருஷ்ண 15, 28, 377, 596, 692

கோகலே, பி.ஜி. 731

கோட்சே, நாதுராம் 597

கோதண்டராவ், பி. 670

கோபர்க்கெடே, ராஜபால் 732

சோயாஜி, டாக்டர் 781

கோலாப், டி.டி. 64, 72

கோல்வால்கர், எம்.எஸ். 613

சகரதார் 5, 694

சங்கரானந்த் சாஸ்திரி 745

சண்முகம் செட்டியார், சர்.ஆர்.கே. 511

சத்தலால் வாட், சர்.சிமன்லால் ஹரி லால் 76, 200, 207, 235, 513, 529

சந்தவர்க்கர், சா. நாராயண் கணேஷ் 28, 44, 47, 49

சந்தானம், கே. 548

சந்திராமணி, மகாஸ்தவீர் 746, 753, 759

சமார்த்தா, எம்.பி. 431, 576, 770

சரோஜினி நாயுடு 235, 246, 247, 248, 698

சர்க்கார் என்.என். 529

சர்ச்சில், சர். வின்ஸ்டன் 248, 350, 569, 678, 702

சவத்கர், எஸ்.வி. 721

சவத்கர், சுபேதார் 96

சவான், டாக்டர் வி.பி. 76

சவான், யசுவந்தராவ் 785

சவிதா அம்பேத்கர், டாக்டர் 664, 697, 698, 752, 753, 763, 767, 768, 769, 770, 771, 775, 777, 780

சவுகத் அலி, மௌலானா 91

சாகு, மகாராசா கோல்ஹாப்பூர் 53, 56, 57, 58, 77

சாக்ளா, எம்.சி. 624, 625

சாசிதார் பந்தோபாத்தியா 5

சாதுல்லா 615

சாப்ரு, சர்.தேஜ் பகதூர் 207, 211, 213, 220, 225, 233, 235, 245, 303, 306, 311, 513, 543, 544, 545, 712

சாயிபாபா 674

சாரதா கபீர்-பார்க்க சவிதா அம்பேத்கர்

சார்தா கபீர், டாக்டர் செல்வி 598, 599, 600

சாவர்க்கர், வீர 22, 30, 59, 60, 74, 75, 81, 82, 109, 148, 149, 188, 285, 302, 333, 371, 372, 412, 413, 495, 497, 498, 503, 508, 509, 513, 521, 583, 585, 591, 634, 690, 694, 695, 709, 715, 719, 739, 740, 758, 759, 781

சாஸ்திரி 200, 235

சாஸ்திரி, சீனிவாச 712

சிசாரோ 597, 710

சிட்னிசு, எம்.பி 764

சித்ரே 598, 599, 600, 602, 603, 730

சித்ரே ஆனந்த்ராவ் 96, 105, 136, 514

சித்ரே, கமலகாந்த் 591, 657, 658, 660, 676

சித்ரே, கே.வி. 431

சித்வா, ஆர்.கே. 625

சிந்தாமணி, சி.தேய் 208

சியாங்கே ஷேக் 502

சிரத்தானந்தா, சாமி 547, 583

சிவதார்க்கர், எஸ்.என் 63, 65, 76, 87, 136, 139, 177, 196, 210, 227, 246, 247, 277, 292, 328, 347

சிவராஜ் என். 232, 381, 515, 524, 534, 549, 558, 733

சிவாஜி 118, 150, 616

சீசர் 597

சீனிவாச சாஸ்திரி, வி.எஸ். 208, 540, 541

சீனிவாசன், ராவ்பகதூர் இரட்டை மலை 208, 224, 246, 273, 277, 290, 333, 373

சுதாமா, 773, 777

சுபாஷ் 454

சுபாஷ் சந்திரபோஸ்-பார்க்க போஸ்

சுப்பராயன், டாக்டர் 328, 336

சுர்வே, ஆனந்தராவ் 72

செத்தல்வாட் 220

செலிக்மேன், எட்வின் ஆர்.ஏ. 37, 39, 41

சேம்பர்லின் 680

சைடன்ஹாம் பிரபு 52

சைத்தன்யர் 5, 694

சைமன், சர்.ஜான் (சைமன்குழு) 159, 164

சைமன் குழு 493, 717

சையத் முகமது சாதுல்லா 588

சொக்கமேளா 5, 134, 152, 153

சோலங்கி, டாக்டர் பி.ஜி. 115, 130, 189, 209, 382

டாங்கே, எஸ்.ஏ. 460, 657, 662

டால்ஸ்டாய் 322

டிரஸ்லர், செல்வி 496

டூமாஸ், அலெக்சாண்டர் 706

டேனியல் ஓ கன்னல் 617

தக்கர், ஏ.வி. (தக்கர் பாபா) 49, 298, 299, 320, 546

தண்டே, ஆச்சார்யா, எம்.வி. 501, 506, 510, 513, 652, 654, 701, 780

தயானந்தர் 5, 508, 583, 694, 695

தலாங் 712

தலாய்லாமா 768

தாகூர், இரவீந்திரநாத் 49, 312, 349, 712, 761

தாண்டன், புருஷோத்தம தாஸ் 572, 596

தாராசிங், மாஸ்டர் 559

திம்னிஸ், சுரேந்திரநாத் 96

தியோராவ் நாயக் 183, 196, 226

தியோருக்கர் 427

திருவள்ளுவர் 414

திலகர், பாலகங்காதர 9, 11, 22, 25, 30, 49, 55, 59, 65, 66, 113, 140, 377, 692, 708, 712, 715, 719, 785, 786

திலாங், கே.டி. 9

துக்காராம் 5, 134

தேசாய், புலாபாய் 544

தேவதாஸ் காந்தி 252, 308

தேஷ்முக், பஞ்சாபராவ் 132, 133, 611, 615

தேஷ்முக், ராமராவ் 498

நட்கூலி, கே.ஜி. 199

நபி, முகம்மது 626

நரசு, பி. இலட்சுமி 594

நாமதேவ் 694

நாரிமன், ஜி.கே. 76

நிசாம், 403, 585, 593

நியோகி, டாக்டர் எம்.பி. 755

நிஸ்சீம், மேயர் 76

நூன், பிரோஸ்கான் 529

நெப்போலியன் போனபார்ட் 93, 179

நேரு 200, 234, 247, 392, 420, 454, 481, 555, 556, 559, 566, 571, 572, 584, 587, 590, 593, 596, 602, 634, 637, 638, 640, 641, 642, 643, 644, 646, 648, 650, 653, 654, 655, 656, 674, 675, 677, 678, 679, 680, 681, 709, 715, 719, 727, 729, 731, 755, 760, 776, 777, 784

பக்கலோ, ஆர்.ஆர். 185, 225

பக்டே, கே.பி. 88

பக்ளி 526

பசவர் 5

பட்டாபி சீதாராமய்யா 230

பட்டாணி, சர்.பிரபா சங்கர் 244, 247

பட்டேல், சர்தார் வல்லபாய் 247, 463, 557, 559, 566, 582, 587, 590, 602, 634, 654, 729

பட்டேல் வித்தல் 49, 63, 258

பண்டல் ஜோகே 592

பதங்கர், டாக்டர் வி.எஸ். 660

பத்தானா நேவல் 35, 59, 62, 70, 600, 60

பந்தர்கர், டாக்டர் ஆர்.ஜி. 9, 712

பந்தாரே, ஆர்.டி. 685, 780

பந்துர்கர், எஸ்.பி. 95

பந்த், கோவிந்த வல்லப 405, 406, 728, 729, 777, 784

பந்த்சே 18

பரஞ்சிபய் 11, 76, 91

பருலேக்கர், ஷியாமராவ் 185

பர்க், எட்மண்ட் 218, 494, 575

பர்ஷா, சங்கர் ராவ் எஸ். 209

பலராம் 13

பல்வன்கர் 426

பவார், தாத்தோபா 54, 92

பஜாஜ், ஜமனாலால் 392

பஸ்லுல் ஹக் 208

பாட்கே, வாசுதேவ பல்வந்த் 8

பாட்டீல், எஸ்.கே. 566, 587, 590, 601, 654,

பாத்ரோ, ஏ.பி. 208

பாபா, எச்.ஜே. 590

பார்க்காவா, பண்டிட் தாகூர்தாஸ் 614, 635

பார்மர், டாக்டர் 639

பார்வே, விநாயகராவ் 181, 183

பாலசுப்பிரமணிய முதலியார், பி. 540

பாலாசாகிப், பலராம் அம்பேத்கர் 135

பாலு, பி. 53

பாலுகபீர் 768, 769

பால், கே.டி. 208

பிபின் சந்திரபால் 49

பிரகாஷ்சந்த் 734

பிரசாத், டாக்டர் இராசேந்திர 297, 301, 303, 304, 372, 495, 571, 585, 590, 619, 634, 642, 733, 781, 784

பிரதான், ஆர்.ஜி. 382

பிரபாகர் பத்தே 61

பிரபுல்ல சந்திர ராய் 712

பிராங்கிளின், பெஞ்சமின் 62

பிர்லா, ஜி.டி. 248, 303, 711

பீமாபாய் 13

புக்கர் டி. வாஷிங்டன் 34, 39, 40, 179

புத்தர், கௌதம 4, 12, 284, 528, 539, 625, 626, 629, 635,

636, 637, 666, 683, 694, 695, 699, 712, 718, 722, 723, 725, 733, 736, 741, 742, 749, 763, 765, 766, 768, 786, 787, 788

புலே. மகாத்மா ஜோதிபா 5, 16, 570, 583, 673, 694, 712

பெதிக் லாரென்ஸ் பிரபு 559

பெலிக்ஸ் வல்யி 726, 727, 728

பொட்டி ஸ்ரீராமுலு 668

போபட்கர், எல்.பி. 88, 108, 425

போரலே, பி.டி. 780

போரேல், பி.டி. 576

போலே, 154, 326, 345

போலே, ராவ்பகதூர் 780

போலே, ஆர்.ஆர். 505

போலே, எஸ்.கே. 26, 72, 73, 88, 89, 156, 169, 189

போஸ், சரத்சந்திர 566

போஸ், சுபாஷ் 106, 211, 653, 719

போஸ், ஜே.சி. 712

மகாதேவ் தேசாய் 345

மகாராசா, மைசூர் 725

மகாவீரர் 635

மகேந்திரா, மன்னர் 764

மசானி, எம்.ஆர். 60, 572

மசூர்கர் மகராஜ் 375

மட்டே, எஸ்.எம். 365

மணிபென் சுரா 652

மண்டல், ஜோகேந்திரநாத் 569, 571

மத்தே, பேராசிரியர் எஸ்.எம். 505

மல்லல சேகரா, டாக்டர் 764

மனு 622, 637, 792

மனே, ஜி.ஜெ. 576

மாசேதுங் 679

மாண்டேகு 43, 63

மாதவராவ், என். 588

மார்க்ஸ், கார்ல் 60, 267, 526, 579, 666, 696, 736, 756, 765

மார்ட்டின் லூதர் 141

மாலோஜி சக்பால் 11

மாளவியா, பண்டிட் மதன்மோகன் 235, 245, 247, 248, 297, 301, 311, 336, 644, 709

மான், டாக்டர் ஹெரால்டு எச் 49, 131

மிராஜ்கர் 459

மிர்ஸா இஸ்மாயில், சர் 208, 235

மில், ஜான் ஸ்டுவர்ட் 617

முகம்மது அலி, மௌலானா 74

முகர்ஜி, டாக்டர் ஷியாம்பிரசாத் 559, 572, 587, 644, 645, 655

முகுந்தராவ் 780

முசோலினி 698

முத்தைய்ய செட்டியார், குமார ராஜா சர் 539

முருகேசன் 87

முரே, சங்கர்ராவ் 652

முலே, டாக்டர் வி.வி. 556

முல்லர். பேராசிரியர் 29

முனுசாமிப் பிள்ளை, வி.அய். 587, 614

முன்ஷி, கே.எம். 121, 449, 458, 462, 472

மூஞ்சே, டாக்டர் பி.எஸ். 208, 211, 213, 214, 220, 222, 229, 246, 247, 282, 301, 349, 405, 412, 495, 537

மெக்காலே 710

மேத்தா, அசோக் 652, 662, 676

மேத்தா, பெரோஸ் ஷா 596

மேத்தா, ஜம்னாதாஸ் 452, 461, 498, 511

மொரார்ஜி தேசாய் 657, 671

மோசஸ், 741, 742

மோடி 529

மௌண்ட் பேட்டன் பிரபு 584

மௌலங்கர், டாக்டர் 730, 767, 769, 771, 772, 784

யசுவந்தராவ் (யசுவந்தன்) 59, 92, 627, 779

யசுவந்தன் 599, 600

ரங்கா அய்யர் 328, 336, 337

ரசல், பெர்ட்ரண்ட் 50, 51

ரணதிவே, பி.டி. 463

ரமேஷ் 59

ராட்டு, நானக்சந்த் 734, 735, 744, 746, 748, 751, 752, 760, 766, 767, 769, 770, 771, 772, 773, 774, 775, 776, 777

ராமசே மாக்டொனால்டு 213

ராமாபாய் (இராமி) 27

ராமாபாய் அம்பேத்கர் 701

ராம் மோகன் ராய், ராஜா 5

ராம்ஜி சக்பால் 11, 13, 14, 15, 16, 21, 23, 26, 27, 29, 30, 32

ராய்.எம்.என். 234, 446, 460, 511, 652

ராவ், சர்.பி.என். 615, 621

ரானடே, மகாகோவிந்த் 9, 16, 20, 77, 203, 377, 468, 526, 527, 528, 692, 694, 712

ரான் காம்பே 285

ராஜாராம் மோகன்ராய் 694, 695

ராஜ்குமாரி அமிர்த கௌர் 594

ராஜ்போஜ், பி.என். 126, 130, 196, 197, 289, 290, 427, 504, 505, 543, 563, 566, 627, 656, 666, 732, 733

ரீஜ், எஸ்.எஸ். 738, 739

ருஸ்தம்ஜி ஜின்வாலா 76

ரைஸ்டேவிஸ், டாக்டர் 788

ரோகிதாசு 5, 134

ரோஸ்பெரி 527

லத்தே, ஏ.பி. 290, 291

லஸ்கி, ஹெரால்டு ஜெ 67, 258

லஸ்லி வில்சன் (கவர்னர்) 154

லாலா லஜபதிராய் 37, 41

லிங்கன், ஆபிரகாம் 34, 39, 542, 591, 663

லியாக்கத் அலிகான் 544

லிவிங்ஸ்டன் 570

லின்லித்கோ, பிரபு 499, 502

லும்லி, சர்.லாரன்ஸ் ரோஜர் 499

லெனின் 60, 267, 446

லோ 676

வசிஷ்டர் 134

வலங்கர், கோபால் பாபா 5

வலங்கர், (பிக்கு) 27

வலின்சின்ஹா, டி. 724, 747, 752, 753, 762

வாடியா, என்.எம். 178

வால்சந்த் ஹீராசந்த் 298, 301

வால்ட்டேர் 149, 267

வால்மீகி 134

வாஷிங்டன், ஜார்ஜ் 766

விவேகானந்தர் 414, 693, 694, 695

வீர், கே.ஜி. 620

வேவல் பிரபு 544, 549, 550, 577

வோலே, எஸ்.கே. 585

ஜதாவ் 770

ஜதாவ், என்.டி. 76

ஜதாவ், கே.எம். 120

ஜதாவ், டி.ஜி. 543

ஜதாவ், பாஸ்கர் ராவ் 497

ஜதாவ், ஜி.எம். 603

ஜதெ, கேசவராவ் 84, 124, 142, 193, 506

ஜவால்கர், தினகர்ராவ் 88, 124, 142, 143, 230

ஜான்சன், டாக்டர் 606, 709

ஜான்சன், து 639

ஜின்னா, முகம்மது அலி 208, 213, 220, 235, 484, 485, 487, 500, 502, 515, 516, 527, 528, 535, 549, 550, 555, 559, 592

ஜெஃபர்சன் 708, 710

ஜெகஜீவன்ராம் 566, 567

ஜெயகர், எம்.ஆர். 25, 49, 207, 211, 213, 214, 220, 235, 245, 405, 506, 507, 572, 573, 575, 586, 712

ஜெயப்பிரகாச நாராயண் 34, 652, 657

ஜோகேந்திர சிங், சர். 511

ஜோஷி, என்.எம். 60, 214, 237, 425, 507, 566

ஜோஷி. எஸ்.எம். 770, 774

ஜோஷி, பாபுராவ் 110

ஜோன்ஸ், மார்டி 132

ஜோஷி என்.எம். 214

ஷவுகத் லி, மௌலானா 279

ஷா, கே.டி. 610, 615

ஷா, சிமன்லால் 775

ஷிண்டே, வி.ஆர். 28, 49, 54, 57, 77

ஸ்காட், சர்.வால்ட்டர் 710

ஹர்ஜர் 134

ஹாட்சன், ஜெ.இ.பி. 122

ஹார்னிமன், பி.ஜி. 299

ஹிட்லர்-பார்க்க இட்லர்

ஹோம்ஸ், ஜே.எச். 691

ஹோரே, சர். சாமுவேல், 248, 296, 569

ஸ்ரீதர் பந்த் 130, 131

ஸ்ரீவத்ஸா 529

★